RLS

தீங்கியல் சட்டம்
Law of Tort

C. ரஃபேல் ரோமன், M.A.LL.M., PGDPM.,
வழக்குரைஞர், மற்றும் உறுதிமொழி ஆணையர்,
சேலம்.

மு(எ)ன்னுரை

அன்பானவர்களுக்கு,

என் எழுத்து முயற்சிகளுக்கு தொடர்ந்து நல் ஆதரவு அளித்து வரும் மாணவ மாணவியர், சட்டப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வழக்குரைஞர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது வெளியிடும் 'தீங்கியல் சட்டம்' எனும் எனது எட்டாவது நூலுக்கும் நீங்கள் ஆதரவு அளிப்பீர்கள் என்று நம்பிக்கை எனக்கு உண்டு. தீங்கியல் சட்டம் என்பது மக்களின் பிரதிநிதிகளால் இயற்றப்படாத, வழக்கு தீர்ப்புகள், நீதிபதிகளின் கருத்துகளின் அடிப்படையில் வளர்ந்த தீர்ப்புவழிச் சட்டமாகும். இதன் காரணமாகவே தீங்கியல் சட்டத்தை நீதிபதிகள் இயற்றிய சட்டம் என்றும் சில நேரங்களில் குறிப்பிடப்படுவதுண்டு. தீர்ப்பு வழி அடிப்படையில் அமைந்த சட்டம் என்பதால், இப்பாடப் பிரிவில் வழக்குத் தீர்வுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எனவே இந்நூலில் நானூறுக்கும் மேற்பட்ட வழக்குகளை சுட்டியுள்ளேன். இந்திய தீங்கியல் சட்டம், ஆங்கில தீங்கியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கிலாந்து நாட்டு மக்கள் இயல்பாகவே தங்களின் குடிமையியல் உரிமைகளில் காட்டும் முனைப்பு, செலவு குறைவான மற்றும் விரைவான நீதி உள்ளிட்ட முக்கிய காரணிகள் ஆங்கில தீங்கியல் சட்டத்தின் விரைவான வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி நிலைக்கு காரணமாக இருந்து வருகிறது. இதற்கு மாறாக, இந்திய மக்களின் சகிப்புத்தன்மை, நீதியைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம், கணிசமான செலவு போன்ற காரணிகள் இந்திய தீங்கியல் சட்ட வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. இருப்பினும், போபால் விஷ வாயுக் கசிவு பேரிடருக்குப் பின், இந்திய தீங்கியல் சட்டத்தில் முன் எப்போதும் இல்லாத வளர்ச்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல. தீங்கியல் சட்டம், தனிநபர்களின் குடிமையியல் உரிமைகளை அங்கீகரிப்பதன் வாயிலாக ஓர் விழிப்புணர்வு மிக்க சமுதாயம் உருவாகுவதற்கு முக்கிய பங்காற்றுகிறது.

இத்தருணத்தில் என் எழுத்துப் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் என் இனிய நண்பர் வழக்குரைஞர் & உறுதிமொழி ஆணையர் திரு. C.கோபால் B.Com., B.L., D.L.L., அவர்களுக்கும் இப்புத்தகத்தை நன்முறையில் கணினி தட்டச்சு செய்த S.செந்தில்குமார், ஹர்சினிபிரியா DTP சென்டர், சேலம் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, இப்புத்தகம் தொடர்பான மாணவ மாணவியரின் கருத்துகள் வரவேற்கப்படுகிறது.

வாழ்த்துக்களுடன்

C. ரஃபேல் ரோமன்.
4/682, அகரம் காலனி,
அன்னதானப்பட்டி (P.O), சேலம் - 636 002.
கைப்பேசி : 97880 22188

சேலம்
இந்திய விடுதலைத் திருநாள் 2020

Dr. AMBEDKAR LAW UNIVERSITY

LAW OF TORTS (SYLLABUS)

Unit - I : General Principles : Orign and Development of Torts - Definition of Tort - Distinction between Tort and Crime - Tort and Contract, Tort and breach of Trust - Foundation of Tortious Liability - Fault as a condition of liability. Essential condition of Liability in Tort - Duty of Care - Damnum sine injuria, Injuria sine damno - Relevance of malice - The impact of Insurance on Tort liability - Individual and Collective - Motor Accidents claims.

Unit - II : General Defences : Volenti - Non fit injuria - Inevitable Accident - Necessity - Private Defence - Mistake, Statutory Authority - Act of God.

Unit - III : Parties and their capacity : The State and its Subordinate Officers of State - Minors, Lunatic and Drunkards - Married Women, Corporation, Union, Corporate Bodies - Foreign Amabassadors.

Unit - IV : Masters and Servants : Servant Independent Contractors, Course Employment and Common Employment - Master's Duties to Servant Vice versa.

Unit - V : Joint Tort Feasors

Unit - VI : Remedies

Unit - VII : Remoteness of Damage: Novus Actus Interveniens

Unit - VIII : Successive actions on the same facts: Effect of merger and Death

Unit - IX : Specific Torts:

(a) Wrong to persons and Reputation - Death, Assault, Battery, False imprisonment, Nervous shock, Defamation, Status.

(b) Wrongs to property to Land and Chattels.

(c) Negligence

(d) Nuisance - Nuisance and Injury of servitude's Highways etc.

(e) Strict and Absolute Liability - Liability for dangerous chattels and animals and structrues or premises

(f) conspiracy, interference with freedom of contractual and business relationship - Injurious falsehood, Slander of title or of goods - Passing off - Abuse of legal procedure.

(g) Foreign Torts - Miscellaneous and Doubtful Torts, Invasion of Privacy.

Unit - X : Discharge of Torts

தீங்கியல் சட்டம்

அலகு	பொருளடக்கம்	பக்கம்
I.	தீங்கியலின் பொதுவான கோட்பாடுகள்.	1 - 56
II.	பொதுவான எதிர்வாதங்கள்.	57 - 82
III.	தரப்பினர்கள் மற்றும் அவர்களின் தகுதிகள்.	83 - 106
IV.	பணித்தலைவர்கள் மற்றும் பணியாளர்கள்.	107 - 129
V.	கூட்டாக தீங்கிழைத்தோர்.	130 - 142
VI.	தீர்வழிகள்.	143 - 156
VII.	சேதத்தின் சேய்மை.	157 - 172
VIII.	அடுத்தடுத்து வழக்கிடல்.	173 - 176
IX.	குறித்தவகை தீங்குகள்.	177 - 404
	♦ நபருக்கு எதிரான அத்துமீறல்	177 - 197
	♦ தாக்க முனைவு மற்றும் தாக்குதல்	177 - 185
	♦ முறையின்றி சிறைப்படுத்தல்	186 - 189
	♦ மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சி	189 - 195
	♦ அவதூறு	197 - 223
	♦ சொத்தின்மீதான அத்துமீறல்	224 - 239
	♦ கவனமின்மை	239 - 274
	♦ தொல்லை	275 - 302
	♦ கடும் பொறுப்பு நிலை மற்றும் முழுப் பொறுப்பு நிலை	302 - 324
	♦ அபாயகரமான விலங்குகளை வைத்திருப்பதன்பேரிலான பொறுப்பு நிலை	325 - 331
	♦ ஆபத்தான கட்டிடங்களால் ஏற்படும் பொறுப்பு நிலை	331 - 338
	♦ ஆபத்தான பொருள்களால் ஏற்படும் பொறுப்பு நிலை	339 - 350
	♦ சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்தல்	357 - 367
	♦ தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளைப் பாதிக்கும் தீங்குகள்	367 - 378
	♦ பொருட்களின்மீதான அத்துமீறல்	378 - 381
	♦ அயல்நாட்டு தீங்குகள்	394 - 397
	♦ சந்தேகத்திற்குரிய தீங்குகள்	397 - 404
X.	தீங்கு முடிவடையும் முறைகள்.	405 - 415
	பிரச்சனைகளும் தீர்வுகளும்.	416 - 442
	பல்கலைக்கழக வினாத்தாள்கள்.	443 - 455

உள்ளே ...

Part - A/B வினாக்கள்

I. தீங்கியலின் பொதுவான கோட்பாடுகள்

வ.எண்		பக்கம்
1.	இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி ஆராய்க.	1
2.	'தீங்கு' என்பதன் பொருள், வரையறை மற்றும் இயல்பினைக் குறித்து எழுதவும்.	5
3.	"தீங்கு ஒன்று அமைவதற்கு தவறான செயலால் சட்ட ஊறு ஏற்பட்டு அதனால் சட்டத் தீர்வழி பெறும் நிலை ஏற்பட வேண்டும்"-விவாதிக்க. - Nov-2012.	9
4.	தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான பரந்த மற்றும் குறுகிய புனை கருத்துருக்கள் யாவை? அவை ஏன் இவ்வாறு அழைக்கப்படுகின்றன? - May-2013(v), May-2017(v).	12
5.	"சட்டப்படியான இழப்பு உண்மையான இழப்போ அல்லது பண இழப்போ அன்று"-இவ்வாக்கியத்தை இரண்டு முதுமொழிகளின் துணைகொண்டு முடிவு செய்யப்பட்ட முக்கியமான வழக்குகளுடன் விரிவாக விவாதிக்கவும். May-2016	16
6.	"ஊறனைத்தும் இழப்பினைத் தெரிவிக்கும் ஆனால் இழப்பனைத்தும் ஊறாகாது"-இக்கூற்றை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் துணையுடன் விவாதிக்கவும். - May-2017.	19
7.	"ஓர் தீங்கு என்பது குடிமை ஊறாகும். ஆனால் எல்லா குடிமை ஊறுகளும் தீங்கு ஆகாது"- விவாதிக்கவும். - May-2018(v), May-2019.	22
8.	தீங்கிற்கான பொறுப்பு நிலை என்பதை வரையறு. இதனைக் குற்ற பொறுப்பு நிலை மற்றும் ஒப்பந்த மீறலுக்கான பொறுப்புநிலை ஆகியவற்றில் இருந்து வேறுபடுத்திக்காட்டுக. Nov-2013.	27
9.	'தீங்கு' என்பதனை வரையறுத்து அதன் மூலக்கூறுகளை விவரிக்க. தீங்கியல் பொறுப்படைவை ஒப்பந்தப் பொறுப்படை-விலிருந்து வேறுபடுத்தவும். - Nov-2018(v).	31
10.	"ஓர் தீங்கியல் தவறு என்பதை ஒப்பந்த சார்பற்றது, உரிமையியல் வழக்கிட்டு நிவாரணம் பெறக்கூடியது"-விளக்குக. - May-2014(v) .	32
11.	"ஓர் தீங்கு என்பது மன்று சுட்டிய உரிமைக்கு ஊறு விளைப்பது" - விரிவாக விவாதிக்கவும் – Nov-2017(v).	35

12. "இன்றைய நிலையில் தீங்கியல் பொறுப்பு நிலைக்கு" தவறுகை இன்றியமையாத மூலமாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை" இக்கூற்றை திறனாய்வு செய்க. - Nov-2017. 37

13. "உள்நோக்கம் தீங்கியல் சட்டத்திற்கு தொடர்பற்றது"- இக்கூற்றை ஆராய்க. - May-2017. 41

14. தீங்கியலில் தீங்கெண்ணம் இயைபுடையதல்ல. தீர்வழிச் சட்டங்-களுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் விவரிக்கவும். - Nov-2018. ... 44

15. தீங்கியல் சட்டத்தின் அடிப்படையான மற்றும் பொதுவான கோட்பாடுகள் யாவை? - May-2019(v). 48

II. பொதுவான எதிர்வாதங்கள்

16. 'இசைந்தேற்பது தீங்கல்ல' என்ற சட்ட முதுமொழியினை தொடர்-புடைய வழக்குகளுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் விவரிக்க. May-2018. 57

17. எந்த சூழ்நிலைகளில் மற்றும் எந்த எல்லைவரை தீங்கியல் சட்டத்தில் தவிர்க்க முடியாத விபத்து என்ற எதிர்வாதத்தை வாதிடலாம்? - Nov-2015. 65

18. முழுமையான சட்ட அதிகாரமைவு மற்றும் நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகார அமைவு இவற்றை வேறுபடுத்தி விளக்குக. Nov-2011. 69

19. தீங்கியல் பொறுப்படைவிற்கு எதிரான பொது எதிர்வாதங்களை விவரிக்கவும். - Nov-2018. 71

III. தரப்பினர்கள் மற்றும் அவர்களின் தகுதிகள்

20. தீங்கியல் சட்டத்தில் அரசு ஊழியர்களின் செயலுக்கு ஒரு அரசின் பொறுப்பு நிலையைப் பற்றி விளக்கவும். - Nov-2018(v). 83

21. தீங்கியல் சட்டத்தில் எந்தவொரு நபர்மீதும் வழக்கிட முடியும் என்ற விதியின் பல்வேறு விதிவிலக்குகளை விவாதிக்க. Nov-2014. 90

22. "தீங்கிழைத்தவர் அனைவர் மீதும் வழக்கிடலாம், தீங்குற்றவர் அனைவரும் வழக்கிடலாம்"-இக்கூற்றை ஆராய்ந்து அதன் விதிவிலக்குகளைக் கூறுக. - May - 2013(v). 93

IV. பணித்தலைவர்கள் மற்றும் பணியாளர்கள்

23. பகரப் பொறுப்பை நியாயப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய அனைத்து காரணங்களையும் விளக்குக. - Nov-2016. 107

24. பகரப் பொறுப்பின் மூலக்கூறுகளை கூறி விளக்குக. - May-2018. 112

25. தீங்கியல் சட்டத்தில் தனது பணியாள்களது செயல்களுக்கு பணி வழங்குநரின் பொறுப்படைவை விளக்குக. - Nov-2018. 116

26. பணியாள் என்பதை வரையறு. பணியாளின் செயலுக்கு பணித்-தலைவர் எப்பொழுது பொறுப்பாகமாட்டார் என்பதை விவாதிக்கவும். - May-2014. 121

V. கூட்டாக தீங்கிழைத்தோர்

27. கூட்டாகத் தீங்கிழைத்தோர் என்பவர் யாவர்? கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலையை விளக்கி, தனித்து தீங்கிழைத்தோரை வேறுபடுத்தவும். - Nov-2017(v). 130

28. கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் யாவர்? அவர்களின் பொறுப்பு நிலையின் தன்மையை விவாதிக்க. மெர்ரிவெதர் எதிர் நிக்சன் என்ற வழக்கில் கூறப்பட்ட விதியையும் அதற்கான விதிவிலக்கு களையும் கூறி விவாதிக்க. - May-2012. 135

29. கூட்டாகத் தீங்கிழைத்தோர் என்பவர் யார்? அவர்களது பொறுப்பு நிலை 1935-லிருந்து எவ்வாறு மாற்றப்பட்டுள்ளது? - May-2019(v) 137

30. கூட்டாகவும் தனித்தனியாகவும் தீங்கிழைப்பவர்களை வகைப்படுத்திக்கூறுக. ஒவ்வொரு தீங்கிழைப்பவரும் என்னென்ன சூழ்நிலைகளில் பிறருக்கு எதிராக ஈட்டுறுதியும் பங்களிப்பும் கோரலாம்? - Nov-2014(v). 138

VI. தீர்வழிகள்

31. 'தீங்கியல் சட்டத்தில் தீர்வழிகள் இருவகைப்படும் – நீதித்துறை வழியன மற்றும் நீதித்துறை புறத்தன'- இரு தீர்வழிகளையும் விரிவாக விவாதிக்கவும். - Nov-2017, May-2019. 143

32. தீங்கியல் சட்டத்தின்கீழ் வழங்கப்பெறும் நீதித்துறை வழி தீர்வுகளை விளக்குக. - Nov-2018. 154

VII. சேதத்தின் சேய்மை

33. இழப்பீட்டின் சேய்மை சம்பந்தமான கருத்துரைகளைக் கூறுக. Nov-2019(v). 157

34. "எதிர்வாதியைத் தவிர மற்ற நபர் 'இடையில் குறுக்கிடும் புதிய செயல்' செய்ததனால் இழப்பீடு மிக சேய்மையாக ஆகலாம்"- வழக்குகளுடன் விளக்குக. - Nov-2010. 166

VII. ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்கிடல்

35. ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்பட முடியுமா? ஆம் எனில் அத்தகைய நேர்வுகளை விளக்குக. 173

IX(a) உடலுரிமை மற்றும் நற்பெயருரிமைக்கு விளைவிக்கும் தீங்குகள்

36. 'தாக்க முனைவு' மற்றும் 'தாக்குதல்' ஆகியவற்றின் மூலக்கூறுகளைப் பற்றி விளக்குக. Nov-2018. 177

37. தாக்க முனைதலையும் தாக்குதலையும் வேறுபடுத்திக் காட்டவும். May-2019. 183

38. முறையின்றி சிறையில் அடைத்தல் பற்றி ஓர் குறிப்பு வரைக. Nov-2019. 186

39. எந்த சூழ்நிலைகளில் ஒரு நபர் மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு இழப்பீடு பெற முடியும்? - May-2014(v). 189

40. நபருக்கு எதிரான அத்துமீறல் பற்றி நீவிர் அறிவது யாது? நபருக்கு எதிரான அத்துமீறலின் வகைகளை எடுத்தியம்புக. May-2015. 195

அவதூறு

41. அவதூறுக்கான முக்கிய உட்கூறுகளை விவரிக்கவும். Nov-2017(v). 197

42. நிலையுறு அவதூறு என்பது யாது? நிலையுறு அவதூறுக்கான வழக்கில் வெற்றி பெற வாதி மெய்ப்பிக்க வேண்டிய மூலங்கள் யாவை? - May-2018. 203

43. 'அவதூறு வெளியிடுபவர்களின் உட்கருத்து பொறுத்து பொறுப்பு அமைவதில்லை, மாறாக, அவதூறினைப் பொறுத்தே அமைகிறது' நீதிபதி ரசூல் – ஆராய்க. May-2012(v), Nov-2014. .. 204

44. அவதூறுக்கான எதிர்வாதங்கள் யாவை? May-2019(v). 208

45. 'அவதூறுத் தீங்கு ஒருவரது புகழினைக் காக்கும். அதன் எதிர்வாதங்கள் பேச்சுரிமையைக் காக்கின்றன'-விளக்குக. Nov-2012(v), May-2015(v). 215

46. மறைமுக அவதூறு என்றால் என்ன? விளக்கவும். 217

IX(b) நிலம், சொத்து மற்றும் அசைவியல் பொருட்கள் குறித்த தீங்குகள்

47. "ஒரு சொத்தின் மீதான எல்லை மீறல் எவ்வளவு மிகச் சிறியதாக இருந்தாலும் அத்துமீறல் ஆகும்"-விமர்சிக்கவும் – Nov-2015. 224

48. நிலத்திடல் அத்துமீறல் என்ற தீங்கை அதற்குண்டான எதிர்-வாதங்களுடன் விளக்குக. May-2012, May-2019. 230

49. "ஒரு சொத்தின் மீதான எல்லைமீறல் எவ்வளவு மிகச் சிறியதாக இருந்தாலும் அத்துமீறல் ஆகும்" – விமர்சிக்க. தீங்குற்ற நபருக்கான தீர்வழிகள் யாவை?- Nov-2016. 232

50. அடிமுதல் அத்துமீறல் என்பதனை விவரிக்கவும். - May-2019. ... 235

IX(c) கவனமின்மை

51. கவனமின்மையை விளக்கவும். தீங்கியல் சட்டத்தின்கீழ் கவனமின்மையின் இன்றியமையான கூறுகள் யாவை? May-2011, May-2015. 239

52. டொனாக் எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கின் பொருண்மையையும் வழக்குத் தீர்ப்பால் உருவாக்கப்பட்ட விதியையும் ஆராய்க. Nov-2019. 246

53. 'டோனாகு எதிர் ஸ்டீவன்சன்' என்ற வழக்கில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளைப் பற்றி விளக்குகு.-Nov-2018(v). 251

54. கவனமின்மையினை வரையறு. டானாக் எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கில் பெருமகனார் அட்கின் அவர்களால் ஆக்கப்பட்ட நெறிமுறைகள் யாவை? - May-2018(v). 251

55. டானாகு எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கில் அட்கின் பெருமகனார் வழங்கியிருக்கும் 'கருத்தமைவு கடமையினையும்', 'அயலவர் கொள்கையையும்' திறனாய்வு செய்க. - May-2013(v). 251

56. 'செயலே செப்பும் பொருளே புகலும்' என்ற கோட்பாட்டை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்க. Nov-2014(v). 254

57. கவனமின்மை என்றால் என்ன? தன்பாற் கவனமின்மையைப் பற்றி விவாதிக்கவும். - May-2018. 259

58. இறுதி வாய்ப்பு கருத்தமைவினை சுட்டிக்காட்டி தன்பாற் கவனமின்மை என்னும் விதியினை தெளிவு படுத்துக. Nov-2014, May-2019. 261

59. தன்பாற் கவனமின்மை என்றால் என்ன? தன்பாற் கவனமின்மையைக் கட்டுப்படுத்தும் பொதுவிதிகள் குழந்தைகளுக்குப் பொருந்துமா? - May-2014. 267

IX(d) தொல்லை

60. 'தொல்லை என்பதன் பொருள் மற்றும் வரையறையைக் குறிப்பிடுக. தொல்லையை அத்துமீறலிலிருந்து வேறுபடுத்துக. ... 275

61. பொதுத் தொல்லையையும் தனித்தொல்லையையும் வேறுபடுத்துக. தொல்லை நடவடிக்கைக்கு எதிரான எதிர்வாதங்கள் யாவை? Nov-2012, May-2014. 277

62. 'தொல்லையின்' முக்கியக் கூறுகளை ஆராய்க. 284

63. 'உங்களை அடுத்திருப்பவரின் சொத்திற்கு தீங்கு ஏற்படா-வண்ணமே உங்கள் சொத்தினை அனுபவிக்கலாம்' விவாதிக்க. ... 289

64. பொதுத் தொல்லையைப் பொறுத்து எப்பொழுது ஒரு தனிநபர் நடவடிக்கை எடுக்கும் உரிமையைக் கோர இயலும்? Nov-2019. .. 290

65. தொல்லைத் தீங்கிற்காக வழக்கிடும் தகுதி கொண்ட நபர்கள் யாவர்? தொல்லைத் தீங்கிற்காக எவர்மீது வழக்கிட முடியும்? 293

IX(e) கடும் பொறுப்புநிலை மற்றும் முழுப் பொறுப்பு நிலை

66. ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் விதியைப் பற்றிக் கூறுக. May-2018. 302

67. தீங்கியல் சட்டத்தின் கடும் பொறுப்பு விதியிலை விளக்குக. அதன் வரையறைகள் யாவை? - May-2012(v). 305

68. கடும் பொறுப்பு நிலை என்பதை விளக்கி அதன் விதிவிலக்குகளைக் கூறுக. - May-2017(v). 309

69. கடும் பொறுப்பு நிலையானது எவ்வாறு தற்போதைய சூழ்நிலைகளை சமாளிக்க முடியாமல் உள்ளது? விளக்கவும். May-2019(v). 313

70. M.C.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா, AIR 1987 SC 1086 வழக்கின் பொருண்மைகளையும், வழக்கில் வகுக்கப்பட்ட விதியையும் விவரிக்க. 317

71. தற்போதைய காலங்களில் கடும் பொறுப்பைவிட முழுப்பொறுப்பே முக்கியத்துவம் பெறுகிறது. அதற்கான காரணங்களை அண்மைக் கால வழக்குகளுடன் விளக்கவும்.- Nov-2019(v). 320

72. கடும் பொறுப்பு நிலைக் கோட்பாட்டினை விளக்கவும். இதனை முழுப் பொறுப்புநிலைக் கோட்பாட்டோடு வேறுபடுத்தி தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக. - Nov-2017(v). 323

அபாயகரமான விலங்குகள்

73. விலங்குகள் இழைத்த ஊறுக்கு அதன் உரிமையாளரின் பொறுப்படைவு நோக்கெல்லையை விவரிக்க. - May-2016, May-2018(v). 325

ஆபத்தான கட்டிடங்கள்

74. "பார்க்க வருபவர்களின் இயல்பை பொறுத்து நில உடைமையாளரின் பொறுப்பு நிலையானது வேறுபடுகிறது எனக் கூறப்படுகிறது"-அவ்வாறு பார்க்க வருபவர்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறார்கள்? அவர்கள் ஒவ்வொருவரும் குறித்த பொறுப்புநிலை என்ன? எடுத்துக்காட்டுகள் தருக. -Nov-2015. 331

ஆபத்தான பொருள்கள்

75. ஆபத்தான பொருட்கள் என்பது யாது? ஆபத்தான பொருட்களின் உரிமையாளர்களின் பொறுப்பு நிலையை விவரிக்க. 339

76. ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் விதி எவ்வாறு தப்பி வெளியேறும் கொடிய விலங்குகளுக்கும் ஆபத்தான செயல்பாடுகளுக்கும் பொருந்துகிறது என்பதனை விளக்குக. - May-2013(v). 346

IX(f) சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்துதல்

தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளைப் பாதிக்கும் தீங்குகள்

77. 'சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்துதல்' பற்றி ஓர் கட்டுரை வரைக. 357

78. சட்ட இயலான நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறப்படும் கோரிக்கையில் தீய நோக்குடைய குற்றவழக்கை மெய்ப்பிப்பதற்கு உள்ள இன்றியமையாத கூறுகளை விவாதிக்க. 361

79. தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளைப் பாதிக்கும் தீங்குகள் பற்றி பொருத்தமான வழக்குகளுடன் விளக்குக. 367

80. பொருட்களின்மீதான அத்துமீறல் பற்றிக்கூறுக. May-2019(v). ... 378

IX(g) அயல்நாட்டு தீங்குகள் மற்றும் ஐயத் தீங்குகள்

81. அயலகத் தீங்கை வரையறு. வெளிநாட்டில் நடந்த தீங்கிற்கு இந்தியாவில் எந்தச்சூழ்நிலைகளில் வழக்கிடலாம் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. May-2016. 394

82. தீங்கென உறுதியாகக் கூற முடியாத தீங்குகள் பற்றி நீவீர் அறிவதென்ன? அது குறித்து விளக்கவும். 397

X தீங்கு முடிவடையும் முறைகள்

83. தீங்கியல் பொறுப்பில் இருந்து எந்தெந்த வகைகளில் விடுவிக்கப்படலாம் என்பதை விரிவாகக் கூறவும். Nov-2019. 405

84. தீங்கிலிருந்து விடுப்பு பெறும் பல்வேறு முறைகளை எடுத்தியம்பி 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' என்ற முதுமொழியை விவாதிக்க. - May-2017. 411

SHORT NOTES

1.	தீர்வழி உண்டெனில் உரிமை உண்டு / ubi remedium ibi jus. .	1
2.	உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு / ubi jus ibi remedium ..	1
3.	சட்டப்படியான இழப்பு / Legal damage.	9
4.	புறாக் கூட்டறைக் கொள்கை / Pigeon hole theory. - May-2016(v), Nov-2018, May-2019(v).	12
5.	சேதமில்லா தீங்கு / Injuria Sine damnum. - May-2019(v), Nov-2017	16
6.	தீங்கில்லா ஊறு மற்றும் ஊறில்லாத் தீங்கு / Damnum sine injuria and injuria sine damno. - May-2016(v).	16
7.	தீங்கில்லா ஊறு / Damnum sine injuria. - Nov-2012(v), May-2018(v).	19
8.	தீங்கும் ஒப்பந்தமும் / Tort and Contract. - Nov-2015	22
9.	தீங்கியல் மற்றும் நம்பிக்கை மோசடி / Tort and breach of trust. - May-2017.	22
10.	தீங்கும் ஒப்பந்த போல்வும் / Tort and quasi-contract	22
11.	தீங்கும் ஒப்படைவும் / Tort and bailment	22
12.	தீங்கு மற்றும் குற்றம் / Tort and crime. - Nov-2012, May-2016, Nov-2017(v).	27
13.	ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர் / Rylands Vs Fletch.- Nov-2016	37
14.	வெளிப்படையான தீங்கெண்ணம்/Express malice.- Nov-2018(v).	44
15.	தீங்கியல் சட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்கள் / Purpose and functions of Law of Tort.	51
16.	தீங்கு / Injuria.	53
17.	இழப்பீடுகள் கோரும் தீர்ப்பாயம் / Claims Tribunal, Nov-2019	53
18.	ஓரலகு பொறுப்படைவு கருத்தியல் / Unity theory of Liability. - Nov-2019.	56
19.	'இசைந்தேற்பது தீங்காகாது' / Volenti non fit injuria.- May-2015, May-2016.	57
20.	மீட்சி வழக்குகள் / Rescue cases. - May-2017, May-2017(v)	57
21.	தவிர்க்க இயலாத விபத்து / Inevitable accident. - May-2016(v), Nov-2017.	65
22.	சட்ட அதிகாரம் / Statutory Authority. - Nov-2015, Nov-2018 ..	69

23.	பொதுவான எதிர்வாதங்கள் / General defences, May-2014(v)	71
24.	தெய்வச்செயல் அல்லது இயற்கை இடர் / Act of God or Vis. Major. - May-2018(v), Nov-2018, Nov-2018(v).	71
25.	அரசின் செயல் / Act of State. - Nov-2015(v), Nov-2017(v)	71
26.	தற்காப்பு உரிமை / Right of Private defence.- Nov-2013, May-105(v).	80
27.	நீதிபதிகள் (பாதுகாப்புச்) சட்டம், 1985 / Judges (Protection) Act, 1985. - Nov-2017	81
28.	தீங்கிற்கான அரசின் பொறுப்பு நிலை / Govt's liability for torts.- May-2014, May-2017(v).	83
29.	கூட்டு நிறுவனத்தின் தீங்கியல் பொறுப்புநிலை / Tortious liability of corporation. - May-2010	96
30.	தீங்கியலில் இளவரின் பொறுப்பு நிலை / Minor's Liabiltiy in tort	98
31.	பித்து நிலையரின் வழக்கிடும் தகுதி / Capacity of the lunatic to sue. - May-2012.	100
32.	தீங்கியலில் கணவன் மற்றும் மனைவியின் தகுதி நிலை / Husband and wife capacity for tort. - Nov-2017.	102
33.	கருவில் இருக்கும் குழந்தை / Child in the womb.- Nov-2012, May-2017(v).	104
34.	பிறர்வழி செய்தலும் தானே செய்ததாகும் / Quifacit per allium facit per se / Nov-2014 (v), Nov-2015.	107
35.	பணியமர்த்தியவரின் பொறுப்பு நிலை / Employer's liability Nov-2017.	112
36.	உயிர் போக்கிடத்தக்க விபத்துகள் சட்டம் / Fatal Accidents Act, - Nov-2017, May-2019.	125
37.	பொதுவான தொழில் கோட்பாடு / Doctrine of Common employment. - May-2016, May-2018(v), Nov-2018(v).	127
38.	கூட்டாக தீங்கிழைப்பவர்கள் / Joint Tortfeasors. - May-2014, May-2018.	130
39.	நீதிமுறை நிவாரணங்கள் / Judicial remedies.- May-2012, Nov-2012.	143
40.	இழப்பீடுகளின் வகைகள் / Kinds of damages. - Nov-2015 ...	143
41.	உண்மையான தீங்கீடு / Real damages. - May-2012.	143
42.	அற்பத் தீங்கீடு / Contemptuous damages. - May-2013.	143

43.	புற நீதிமன்ற தீர்வழிகள் / Extra-judicial remedies.- Nov-2016(v), May-2018(v).	143
44.	பொதுவான இழப்பீடுகள் / General damages.- Nov-2017, May-2018(v).	154
45.	குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பீடுகள் / Specific or special damages	155
46.	சேதத்தின் சேய்மை / Remoteness of damage.- Nov-2011. ...	157
47.	ஸ்காட் எதிர் ஷெப்பர்ட் / Scott Vs Shepherd.- May-2012.	157
48.	வேகன் மவுண்டு-1/Wagon Mound-I. - May-2016, Nov-2016	157
49.	முன்னறிய முடியும் சோதனை / Test of forseeability,- May-2016.	157
50.	புதிய செயல்களின் இடையீடு / Novus Actus Interveniens.- Nov-2018., Nov-2018 (v), Nov-2019(v).	166
51.	தாக்க முனைதல் / Assault. - Nov-2014, May-2015(v).	177
52.	தாக்குதல் / Battery., May-2014, May-2018(v).	177
53.	தாக்க முனைதலும் தாக்குதலும் / Assault and Battery., May-2016(v), May-2017.	183
54.	முறையின்றி சிறை வைத்தல் / False imprisonment., May-2018(v).	186
55.	நரம்பு மண்டல அதிர்ச்சி / Nervous shock., Nov-2018.	189
56.	நபருக்கு எதிரான அத்துமீறல் / Trespass to person.	195
57.	முடமாக்குதல் / Mayhem.	195
58.	அவதூறு / Defamation.	197
59.	நிலைவடிவ அவதூறு / Libel	203
60.	நேரிய விமர்சனம் / Fair comment., May-2014(v), May-2015.	208
61.	வரம்பில்லா சிறப்புரிமை / Absolute Privilege., May-2017, Nov-2019.	208
62.	வரம்பில்லா மற்றும் வரம்புடைய சிறப்புரிமை / Absolute and qualified privilege., Nov-2011(v), Nov-2017.	208
63.	மறைமுக அவதூறு / Innuendo., Nov-2016, May-2017.	217
64.	வாய்மொழி அவதூறு / Slander.	220

65. நிலை வடிவ அவதூறுக்கும் நிலையா வடிவ அவதூறுக்கும் இடையேயான வேறுபாடுகள் / Distinction between Libel and slander. 222

66. தொடர்ந்திருக்கும் அத்துமீறல் / Continuing Trespass 224

67. சேதம் விளவித்ததைக் கைப்பற்றுதல் / Distress damage feasant. 232

68. அடிமுதல் அத்துமீறல் / Trespass ab initio., Nov-2017, May-2018, May-2019(v) 235

69. மூன்றாம் நபர் உரிமை / Jus tertii. 238

70. கடமை மீறுகை / Breach of Duty. 239

71. டொனாக் எதிர் ஸ்டீவன்சன் / Donoghue Vs Stevenson., Nov-2016., May-2019. 246

72. டோனாகு எதிர் ஸ்டீவன்சன் விதி / Rule in Donoghue Vs Stevenson., May-2018 247

73. செயலே செப்பும் பொருளே புகலும் / Res ipsa loquiter., May-2016, May-2017(v), May-2019 254

74. தன்பாற் கவனமின்மை / Contributory negligency., Nov-2017(v), Nov-2018(v), May-2019(v). 259

75. இறுதி வாய்ப்பு கோட்பாடு / Doctrine of last opportunity., May-2012, Nov-2012. 261

76. கூட்டுக் கவனமின்மை / Composite negligence. 270

77. கவனமின்மையில் நிரூபிக்கும் சுமை / Burden of Proof in negligence., Nov-2017. 272

78. இரு அபாயங்களில் ஒன்றை தேர்வு செய்தாக வேண்டிய நிலை எனும் கோட்பாடு / Doctrine of Alternative danger. 273

79. தனித்தொல்லை / Private nuisance., May-2012(v). 277

80. பொதுத்தொல்லை / Public nuisance. 277

81. தனித்தொல்லை மற்றும் பொதுத்தொல்லை / Private and public nuisance., May-2015, Nov-2018(v). 277

82. தொல்லைக்கான எதிர்வாதங்கள் / Defences to nuisance., ... 278

83. ரோஸ் எதிர் மைல்ஸ் / Rose Vs Miles., May-2019(v). 290

84. தொல்லை தீங்கிற்காக வழக்கிடும் நபர் யார்? / Who can sue for nuisance? Nov-2011. 293

85. தொல்லைக்கும் கவனமின்மைக்கும் இடையேயான வேறுபாடுகள்/ Difference between nuisance and negligence. 297

86. நெடுஞ்சாலையில் ஏற்படும் தொல்லை / Nuisance on Highways. 299
87. தொல்லைக்கான தீர்வழிகள் / Remedies for nuisance., Nov-2015, Nov-2018. 300
88. கடும் பொறுப்பு விதி / Rule of Strict liability. 302
89. வெளியேற்றம் இல்லை என்றால் பொறுப்பும் இல்லை / No escape no liability., May-2012. 305
90. முழுப் பொறுப்பு நிலை / Absolute liability., May-2012(v), Nov-2015 (v). 317
91. கடும் பொறுப்பு நிலைக்கும் முழுப் பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடுகள் / Difference between strict liability and Absolute liability. 323
92. தெரிவுறு நிலை விதி / Scienter rule, May-2016(v), May-2019(v) 325
93. விலங்குகளின் வகைப்பாடு / Category of animals, May-2019. 325
94. மூர்க்க விலங்குகள் / Animals ferae naturae., Nov-2014., ... 325
95. ஆபத்தான பொருட்கள் / Dangerous things, Nov-2015 (v), May-2018. 339
96. போபால் விஷவாயு விபத்து / Bhopal Gas Leak Tragedy., ... 350
97. போபால் வளி கசிவு பேரழிவு சட்டம், 1985 / The Bhopal Gas Leak Disaster Act, 1985., Nov-2019. 351
98. ஆபத்தான கால்நடைகள் / Dangerous Chattels., May-2014, May-2015. 352
99. உடைமையாளர்கள் பொறுப்பு நிலைச் சட்டம், 1957 / Occupiers Liability Act, 1957. 353
100. குழந்தைகள் தொடர்பான பொறுப்பு நிலை / Liability towards Children., Nov-2010. 355
101. சட்ட நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்துதல் / Malicious legal process., Nov-2011, Nov-2012. 357
102. வழக்கு பராமரிப்பும் பங்குவிழை வழக்குதவியும் / Maintenance and Chamberty. 357
103. தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் / Malicious Prosecution., May-2017, May-2018. 361

104. ஒப்பந்த மீறுகையைத் தூண்டுதல் / Inducing breach of contract. 367
105. ஏமாற்றுதல் / Deceit., May-2018 (v), May-2019, Nov-2019(v). 367
106. மிரட்டுதல் அல்லது அச்சுறுத்தல் / Intimidation., ... 367
107. சதி (அ) கூட்டுச்சதி / Conspiracy., May-2012, Nov-2015 367
108. தீங்கிழைக்கும் பொய்மை / Injurious falsehood., Nov-2017(v) 367
109. வணிகப்போலி / Passing off., May-2016, May-2018. 367
110. பொருட்களின் மீதான அத்துமீறல் / Trespass of goods. 378
111. சொத்துரிமை பற்றிய பொய்மை / Slander of title 382
112. பொருள்கள் பற்றிய பொய்மை / Slander of goods 383
113. உருமாற்றம் / Conversion., May-2016(v). 384
114. உருமாற்றும் முறைகள் / Conversion methods., May-2012(v) 386
115. பொருளாதாரத்தீங்கு / Economic Tort, May-2017(v), May-2019. 388
116. தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் மற்றும் முறையின்றி சிறைப்படுத்தலுக்கு இடையேயான வேறுபாடு / Difference between Malicious Prosecution and False imprisonment . 390
117. வணிகப்போலி மற்றும் ஏமாற்றுதல் / Passing off and deceit. 392
118. கையாடலும் வணிகப் போலியும் / Conversion and passing off., May-2013(v), May-2015(v) 393
119. அயலகத் தீங்குகள் / Foreign torts.,May-2016 (v), May-2017. 394
120. ஐயத் தீங்குகள் / Doubtful torts., Nov-2015, Nov-2018 398
121. தனிமைக்கான உரிமை / Right to privacy., Nov-2010, May-2011., ... 402
122. ஒத்திசைவும் உளநிறைவும் / Accord and satisfaction., Nov-2015(v), Nov-2017(v). 405
123. ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் / Actio personalis moritur cum persona., May-2013(v), Nov-2013, May-2017(v). 411

வழக்குகளின் பட்டியல்

(A)

Abbot Vs Sullivan., ... 400
Abirchand Vs Mahick Ramnarain 403
Abrath Vs N.E. Rly Co., ... 366
A.C.Cama Vs. H.F Morgan., 178
Acton Vs Blundell., ... 20
Adams Vs L&Y Rly. Co., ... 274
Adamson Vs Jarvis., ... 141
Alkens Vs Wisconsin., ... 14
Alderworth Vs Steward., ... 75
Alexander Vs N.E. Rly., ... 210
Alka Vs Union of India., ... 270
Ambergate Vs Midland Rly., 153,234
Andrews Vs Hopkins., ... 346
Armory Vs Delamirie., ... 379
Arneil Vs Paterson., ... 427
Ashby Vs White.,..... 11,18, 145
Asher Vs Whitlock., ... 238
Assn.of victims of uphaar vs UOI 322
Attorney Genl. Vs Stone 296
Austin Vs G.W.N. Rly. Co. 401

(B)

Baker Vs Bolton., ... 125,411
Baker Vs Snell.,..... 328
Baker Vs T.E.Hopkins., ... 64
Baker Vs Willoughby., ... 175
Balak Glass Vs U.I. Insurance., 47
Bartonshill Coal Co. Vs. Reid., 128
Barwick Vs J.S.Company., .. 119
Basava K.S.Patel Vs State of Mysore., ... 88
Bates Vs Stone Parish Council., 356
Baton case., ... 301
Baviseti V.S. Rao Vs. N.Muthayya., ... 180
Bayley Vs Monchester., ... 118
Bebee Vs Sales., ... 100
Beckem Vs Drake., ... 96
Behrens Vs Bertrum Mills Circus 326
Bhagwandas Vs Mohd. Arif., 148
Bhimsingh Vs State of J&K., 18,146
Bhogillal Vs Municipality of Ahmedabad., 421
Bidhubhushan Vs Royal Nepal Film., ... 92
Bird Vs Halbrook., ... 81
Bird Vs Jones., ... 187
Birbal Khalifa Vs Emperor.,. 179
Blackman Vs Railway Executive.,335
Bland Vs Yates., ... 289
Blyth Vs Birmingham., ... 241
Boden Vs Roscol., ... 235
Bonomie Vs Backhouse., ... 290
Bottomley Vs Bannister., ... 333
Bourhill Vs Young.,..... 190,194,242
Bowater Vs Rowley Regis Corpn., ... 60
Box Vs Jubb., ... 312
Bradlaugh Vs Gosett., ... 11
Brijbala Prasad Vs Patna Mnpl. Corpn., ... 302
Brinsmead Vs Harrison., ... 132
British Columbia Elect. Co. Vs Laoch., ... 263
Brojendra Kishore Vs M.A. Lufferman., ... 237
Broom Vs Morgan., ... 111
Brunsden Vs Humprey., ... 174
Brown Vs Cotterill., ... 345
Brown Vs Harrison., ... 300
Brown Vs Kendall., ... 420
Buckle Vs Holmes., ... 328
Burnelt Vs British Water Ways., 61
Bush Vs Steinman., ... 109
Butterfield Vs Forrester., ... 260
Byrne Vs Boadle., ... 435
Byrne Vs Deane., ... 432

(C)

Cambridge Water Co Vs Eastern countries., ... 315
Campbell Vs Paddington corpn., 98
Canadian Pacific Vs Lockhart., 119

Carpenter Vs Haymarket Hotel., 437
Carter Vs Thomas., ... 75
Cartstairs Vs Taylor., ... 313
Cassidy Vs
Daily Mirror Newspaper., .. 40,207
Cates Vs Mongini Bros., ... 243
Century Insurance Vs
N.I.Road Transport., ... 117
Chadwick Vs
British Railway Board., ... 65
Chaplin Vs Boys., ... 395
Chapman Vs Picker., ... 13
Charan Lal Sahu Vs UOI., .. 352
Chaurasiya & Co. Vs
Smt. Pramila Rao., ... 169
Chesmore Vs Richards., ... 20
Christie Vs Davey., ... 286
Clark Vs Chambers., ... 168
Clarke Vs Army & Navy
Co-op. Society., ... 342
Clark Vs Malyneux., ... 215
Colchester Vs Brooke., ... 300
Cole Vs Turner., ... 180
Collector of Ghanjan Vs
Chandrama Das., ... 258
Compania Naviera Vs.
S.S.Christina., ... 91
Consolidated Co., Vs Curtis., 39,74
Constantine Vs
Imperial London Hotels., . 428
Cook Vs S., ... 437
Coopoosamy Vs Duraisamy., 401
Corr Vs IBC Vehicle., ... 170
Coughlin Vs Gillison., ... 342
Coward Vs Baddely., ... 181
Cox Vs Burbidge., ... 329
Crowhurst Vs
Amsterdam Burial Board., 307
Crabtree Vs Dawson., ... 73
Crump Vs Lambert., ... 289

(D)

Daborn Vs. Bath Tramways., 244
Dann Vs Hamilton., ... 62
Darley Main Colliery Vs Mitchell., 174
Davidsyme Vs Canavan 202
Davies Vs Swann Motor Co., 265
Davies Vs Mann., ... 262
Dawson Vs White., ... 75
Derry Vs Peek., ... 371
Dhadphale Vs Gurav., ... 33
Dhannalal Vs
Thakur Chittar Singh., ... 302
Dharni Dhar Vs
Chandra Sekhar., ... 134
Dickson Vs Reuters Telegraph., 244
Dixon Vs Bell., ... 343
Dixon Vs Holden., ... 199
Dollman Vs Hillman., ... 296
Donoghue Vs Stevenson., .. 41,242
D.P.Choudhrey Vs.
Kumari Manjulatha., ... 220
Drinkwater Vs Kimber., ... 140
Dr.M.Mayi Gowda Vs.
State of Karnataka., ... 327
Dr.Ram Raj Singh Vs. Bapulal., 292
Dr.Tokugha Vs. Apollo Hospital., 436
Dulieu Vs White., ... 105,192
Duncan Vs Finlater., ... 111
Dunn Vs Birmingham Canal Co.,312
Dunster Vs Abbott., ... 337

(E)

Eastern & South African Vs
Capetown., ... 349
Edward Vs Mallan., ... 401
E.Hulton & Co. Vs Jones., .. 202
Elias Vs Pasmore., ... 237
Elizabeth Vs Sec. of State., .. 128
Ellis Vs Loftus Iron & Co., ... 225
Ellostion Vs Feetham., ... 283
Entick Vs Carrington., ... 224

(F)

Fairman Vs
Perpetual Investment., ... 336
Fardon Vs Harcourt Ravington., 243
Farewell Vs Boston., ... 111
Fay Vs Prentice., ... 289
Farrant Vs Barness., ... 344
Ferror Vs Nelson., ... 314

Filmistan Vs Hansaben., ... 358
Fetter Vs Beat., ... 173
Fitzgerald Vs North Cote., ... 79
Fowler Vs Lanning., ... 229
Francis & Cockerell., ... 439

(G)

Garikipati Vs
Araza Bicksham., ... 188,431
General Medical Council Vs
Spackman., ... 400
George Bell Vs
Royal Western., ... 401
Gibson Vs O'Keeney., ... 99
Gifford Vs Dent., ... 229
Gillmore Vs L.C.C., ... 333
Girija Shankar Vs Gopalji., .. 77
Glasgow Corpn., Vs
Taylor.,.....245,268,355
Gloucester Vs
Grammar School., ... 20
Gokal Prasad Vs Radho., ... 402
Gomberg Vs Smith., ... 331
Governor Gen. Council Vs.
Constance zena., ... 129
Govindan Nair Vs
Achutha Menon., ... 397
Groves Vs Winborne., ... 128
Green Vs Chelsea Waterworks., 309
Gregory Vs Piper., ... 116
Greig Vs Insole., ... 369
G.Sreedhara Murthy Vs
Bellary Munpl. Corpn., ... 145

(H)

Hall Vs
Brooklands Auto Racing Club., 58
Hansbrook Vs Stokes Bros., 192
Hanburry Vs Hanburry., ... 100
Harbhans Singh Vs UOI., ... 93
Hare & Co Vs Mc Alphine., .. 306
Harnam Singh Vs
Aar Pee Auto Aid., ... 68
Harris Vs James., ... 296
Harrison Vs Duke of Rutland., 229
Harrold Vs Watney., ... 268
Haynes Vs Harwood., ... 64
Heath Vs Mayor of Brighton., 286
Heaven Vs Pender., ... 252
Hemmings Vs Stoke Pages., 233
Hern Vs Nichols., ... 108
Herring Vs Boyle., ... 188
Herrington Vs.
British Railway Board., ... 356
Hicks Vs Faulkner., ... 365
Hillier Vs Air Ministry., ... 310
Hira Devi Vs Bhabakant Das., 271
Holmes Vs Ashford., ... 345
Holmes Vs Mathur., ... 66
Hollywood Silver Fox Vs
Emmett., ... 287
Hudson Vs Nicholson., ... 228
Hudson Vs Roberts., ... 328,353
Hurst & Picture
Theatres Ltd., ... 183,196
Huth Vs Huth., ... 201
Hyman Vs Nye., ... 341

(I)

Ilford U.D.C. Vs Beal., ... 310
Imamam Vs UOI., ... 336
Imperial Chemical Vs Shatwell., 110
Indermaur Vs Dames., ... 334
Indian Council For Enviro
Legal Vs UOI., ... 321
Innes Vs Wylie., ... 182

(J)

Jagan Mohan Vs.
Kalipad Ghosh., ... 212
Jaylaxmi Vs State of Gujarat., 321
Jehangir Vs Sec. of State., .. 76
Jennings Vs Rundall., ... 98,99
Jiwan Mal Vs Lachman Das., 213
Joblin Vs Associated Dairies., 176
Johnstone Vs Pedlar., ... 95
Jones Vs Boyce., ... 274
Jones & Co., Vs
Warring and Gillow., ... 109

(K)

Kallulal Vs Homchand., ... 73
Kasturi Lal Vs UOI., ... 87
Kaye Vs Robertson., ... 404
K.C.Kumaran Vs.
Vallabha Das., ... 272
Keppel Bus Co., Vs
Sa'ad Bin Ahmed., ... 122
Khushrao Vs Guzdar., ... 134,426
King Vs Phillips., ... 161,194
Kirk Vs Gregory., ... 378
K.K.Kulkarni Vs. S.M.Kulkarni., 301
Klaus Mittelbachert Vs.
E.I.Hotels., ... 246,321
Komathi Vs. Gurunada., ... 403
Krehal Vs Burrel., ... 149
Kushal Rao Vs Babu Ram., 134

(L)

Lane Vs Holloway., ... 151,179
Langridge Vs Levy., ... 343
Latimer Vs A.E.C. Ltd., ... 245
Lavis Vs Kent C.C., ... 300
Lawrence Vs. Obee., ... 227
Leigh Vs. Gladstone., ... 75
Le Fanu Vs Malcolmson., ... 203
Le Lievre Vs Gould., ... 252
Lickbarrow Vs Manson., ... 108
Limpus Vs
London General Omnibus., 117
Lloyd Vs Grace Smith & Co., 119
Loachgelly Iron Vs Mullen., . 241
London Vs Pacific Steam., .. 168
London Graving Dock Vs
Horton., ... 335
Lumley Vs Gye., ... 15,368
Lynch Vs Nurdin., ... 268

(M)

Maclenan Vs. Segar., ... 333
Madras Rly. Co. Vs. Zamindar
of Carvatenagaram., ... 310
Mahendra Ram Vs Harnandan., 201
Malachy Vs Soper., ... 376
Malcolm Vs Broad Hurst., ... 191
Malone Vs Laskey., ... 294
Manishankar Vs Trikam Narsi., 403
Manjappa Mooly Vs.
Rama Bhandary., ... 156
Marlor Vs Bale., ... 313
Marzetti Vs Williams., ... 18
Mason Vs Levy Auto Parts., . 349
May Vs Burdett., ... 326,347
Mayor of Bradford Vs Pickles., 21,46
Mayor of Manchester Vs Lyons., 399
Mc Carey Vs
Associate Newspapers., . 147
M.C.Mehta
Vs Union of India.,.....15,40,317
Mc Pherson Vs Daniels., ... 209
Mee Vs Cruikshank., ... 187
Meering Vs. Graham White., 188
Mercy Docks Trustees Vs
Gibbs., ... 97
Merrivale Vs Carson., ... 211
Merryweather Vs Nixon., ... 132
Metropolitan Asylum Dt. Vs
Hill., ... 71
Migell Vs Sultan of Johore., 92
Minister of health Vs Bellotti., 227
Mitchell Vs Crassweller., ... 124
Mirza Ali Vs United Arab
Republic 92
M.Madppa Vs K.Kariappa., .. 349
Mogul Steamship Vs.
Mc Gregor, Gow., ... 21,45
Mohammed Vs Madras Corpn., 70
Mokshada S.Ghose Vs UOI., 440
Monson Vs Tussauds Ltd., . 404
Montreal Tramways Vs Levellie., 106
Morgan Vs Launchburry., ... 110
Morris Vs Baron & Co., ... 408
Morris Vs Marsdon., ... 100
Morris Vs Nugent., ... 81
Morrison Vs Ritihie & Co., ... 219
Motias Costa Vs
Roque A. Jacinto., ... 269
Mourton Vs Poulter., ... 355
Mouse's Case., ... 75
M.P.Electricity Board Vs
Shalikumari., ... 322

M&SM Rly. Co. Vs Jayammal., 269
Mullen Vs A.G.Barr & Co., ... 252
Municipal Board of Agra Vs Asharfi Lal., ... 18
Municipal Corpn. Delhi Vs. Subhagwanti., ... 242,256

(N)

Nagendranath Vs Basanta Das., ... 363
Nawal Kishore Vs Rameshwar., 134
Neville Vs London., ... 360
Newstead Vs. London Express Newspaper., ... 206
Newton Vs Edgerley., ... 100
Newton Vs Hardy., ... 103
Nichols Vs Marshland., ... 73
Nitro-Phosphate Vs London., 72
N-Nagendra Rao Vs Sec. of State., ... 88
Noblin Chunder Dey Vs Sec. of State., ... 86
Noble Vs Harrison., ... 295,300
North Western Utilities Vs London Guarantee., ... 312
Nugent Vs Smith., ... 72

(O)

Oakley Vs Lyster., ... 387
O'Brien Vs Mc Namee., ... 98
O'Connell Vs Jackson., ... 265
Ogilvie Vs Punjab Akhabarat., 200
O'Gorman Vs O'Gorman., .. 307
Olga Tellies Vs Bombay Munpl. Corpn., ... 229
Oriental Fire & G.I. Co. Vs Manjit Kaur., ... 266
Osborne Vs Chockqueel., .. 328
Otto Vs Bolten and Norris., . 333
Overseas Tanks Vs Mirts Dock (Wagon Mound-1)., ... 163
Overseas Tanks Vs The Miller (Wagon Mound-2)., ... 164
Owners of Leisbosch Vs Owners of Steamship., ... 163

(P)

Padmavati Vs Dugganaika., 67
Palmer Vs Wick & P.S.Shipping., 139
Pakkle Vs Aiyasami Ganapathi., 288
P.A. Narayanan Vs. Union of India., ... 257
Permeshwari Das Vs Soman Devi., ... 257
Parish Vs Judd., ... 299
Parrot Vs Wells Fargo & Co., 65
Pasley Vs Freeman., ... 15
Payne Vs Rogers., ... 297
Peek Vs Gurney., ... 371
Performing Right Society Vs Mitchell., ... 113
Petrie Vs Lamont., ... 131
Philips Vs Eyre., ... 396
Philips Vs Western Union Telegraph., ... 123
P.Kader Vs. K.A.Alagarswami., 183
Poland Vs Parr & Sons., ... 118
Polemis & Furners., In Re., 162
Ponting & Noakes., ... 312
P.O.Steam Vs Sec. of State., 85
Poulton Vs London & S.W.Rly., 97
Pratap Daji Vs B.B. & C.I.R., 183
Priestly Vs Fowler., ... 128
P.Sankunni Vs Swaminatha., 79
Punjab Vs Modern Cultivaters., 314
P.V.Rao Vs Khushal Das., ... 76
Powell Vs Fall., ... 349

(Q)

Quarts Hill Gold Mining Vs Eyre., 96
Quinn Vs Leathem., ... 374

(R)

R Vs Bottrill., ... 76
R Vs Donovan., ... 60
R Vs Williams., ... 59
Radhe Shyam Tiwar Vs Eknath., 210
Radhey Shyam Vs Gur Prasad., 285
Radley Vs L&N.W. Rly., ... 262
Rainham Chemical Vs Belvedre., ... 348

Raja Venkata Vs Sri Poosapathy., ... 361
Ramalinga Nadar Vs Narayanan., ... 73
Ramdhara Vs Phulwati Bai., 201
Ramcoomar Vs Chunder Canto., ... 361
Ramnath Vs Kalanath., ... 349
Ram Prasad Vs Gopi Ram., 294
Ranganagulu Vs Mullackal Devaswan., ... 101
Ransom Vs Kitner., ... 74
Rapier Vs London Tramways., 283
Ratcliffe Vs Evans., ... 375
Raymond Vs Honey., ... 94
Read Vs Coker., ... 429
Read Vs Edwards., ... 328
Read Vs Lyon & Co., ... 307,315
Ready Mixed Concreat Vs. Minister., ... 114
Rehana Vs Ahmedabad Munpl. Corpn., ... 266
Rickards Vs Lothian., ... 308
Ricketts Vs Thomas Tilling Ltd., 425
Rigby Vs Cannol., ... 400
R.K.Karanjia Vs Thackersay., 214
Robert Vs Ramsbottom., ... 67
Robinson Vs Kilvert., ... 286
Roe d haldane Vs Harvey., .. 238
Rooks Vs Barnard., ... 15,372
Rooplal Vs Union of India., . 120
Rose Vs Ford., ... 413
Rose Vs Miles., ... 292
R.P.Ghosh Vs. Bengal & N.W.Rly., ... 335
Rudulsah Vs State of Bihar., 188
Ryan Vs Fildes., ... 79
Ryan Vs Young., ... 67
Rylands Vs Fletcher., ...15,37,303

(S)

Sadleigh Denfield Vs O'Callaghan., ... 284
Saltere Case., ... 75
S.Alwar Chetty Vs. Madras Elec. Corpn., ... 294
Samatha Vs State of AP., ... 215
Sarju Prasad Vs. Mohandeo Prasad., ... 308
Scott Vs London & St. Catherine., .. 255
Scott Vs Seymour., ... 396
Scott Vs Shepherd., ... 161
Searle Vs Wallbank., ... 330
Sec. of State Vs Hari Bhanji., 86
Sec. of State Vs Kamatchee Boye., ... 76
Sec. of State Vs Rukminibai., 129
Shanmugavel Chettiar Vs Sri Ram Kumar., ... 285
Sheikh Meeram Vs Ratnavelu., ... 364
Shelfer Vs City of London., .. 283
Sherrington's Case., ... 412
Shivsagar Vs Matadin., ... 409
Shyam Sunder Vs. State of Rajasthan 274
Sim Vs Stretch., ... 200
S.K.Batcha Vs Alagappan Servai., ... 301
Skinner Vs London, Britain., 256
Skinner & Co. Vs Shew & Co., 14
Smith Vs Baker., ... 61
Smith Vs London & S.W.Rly., ...70,144,162
S.N.M. Abidi Vs. P.K.Mahanta., 201
Sochack Vs Sas., ... 308
Soltau Vs De Held., ... 291
Sorrel Vs Paget., ... 153
South India Co Vs. Ramakrishna., ... 200
South Indian Indl. Ltd., Vs. Alamalu Ammal., ... 63
South Port Coprn. Vs. ESSO Petroleum., ... 227
South Wales Miners Fedn. Vs Glamorgan., ... 42
S.Ramalingam Vs Dhanalakshmi., ... 403
Stanley Vs Powell., ... 67

State of Punjab Vs Mst Champa., ... 256
State of Rajasthan Vs Vidhyawati., ... 86
State of U.P. Vs. Tulsiram., .. 423
Steamor Vs Clive., ... 106
Stephen Vs Myres., ... 179
Stern Vs Prentice., ... 314
Stevenson Jordon Vs Mac Donald., ... 113
St.Helden's Smelting Vs Tripping., ... 288
Stockey Vs Horridge., ... 46
Stowell Vs Rly. Executive., ... 335
Sturges Vs Bridgeman., ... 281
S.Vedantacharya Vs. Highways Dept., ... 68
Swadeshi Cotton Mills Vs UOI., 79

(T)

Tand Brockle Bank Vs Noor Ahmode., ... 129
T.C.Balakrishna Vs T.R.Subramania., ... 62
Theaker Vs Richardson., ... 431
Theyer Vs Purnell., ... 329
Thomad Vs Bradburry., ... 211
Thomas Vs Winchester., ... 344
Thompson Vs London C.C. 131
Thorpe Vs Burmfit., ... 282
Tillet Vs Ward., ... 331
Tolby Vs J.S Fry & Sons., ... 219
Town Area Committee Vs Prabhu Dayal., ... 22
Twin Vs Beans Express., ... 122

(U)

Union Carbide Corpn Vs UOI., ... 106
Union of India Vs Rajendra Mills., ... 257
United Zinc Chemical Vs Van Britt., ... 356
Uxbridge Building Society Vs. Polland., ... 120

(V)

Vaughan Vs Taff Valde Rail., 69,282
Vaux Vs Newsman (Six Carpenter Case)., ... 236
Vedhachala Vs Rangaragu., 133
Vellapandi Vs Manicka Thai., 199
Verchures Vs Hull and Netherlands., ... 407
Victorian Rly. Vs Coultas., ... 190
Vidya Devi Vs MP State Transport., ... 266
Visakha Vs State of Rajasthan., 197
Vishnu Vasudeo Vs Smith Pearse., ... 43
V. Narayana Vs E.Subbanna., 213
V. Krishna Naidu Vs UOI., ... 338

(W)

Walker Vs. G.N. Rly of Ireland., 105
Walmsley Vs Humenick., ... 99
Ward Vs Hobbs., ... 341
Ware Vs Garsten Haulage., 299
West Vs Bristol Tramways., 349
Western Engraving Vs Film Laboratories., ... 313
West Leigh Colliery Vs Tumnicliff., ... 175
Wetripp Vs Beldock., ... 226
Wheeler Vs. Mertor Board Mills., 61
Whittaker Vs Minister of P&N Ins., ... 113
Wilkinson Vs Downtown., ... 43
William Case., ... 278
Williams Vs Hays., ... 101
Wilson Vs United Countries Bank., ... 96
Winterbottom Vs Loard Derby., 293
Wray Vs Essex C.C., ... 340

(Y)

Yachuk Vs Oliver Blais Co., . 269
Yard Vs Ford., ... 399
Yates Vs The Queen., ... 364

(Z)

Zargham Abbas Vs Harichand., 414

அலகு - I

தீங்கியலின் பொதுவான கோட்பாடுகள்
General Principles of Tort

PART - A/B

1. இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி ஆராய்க. (Trace out the origin and development of Law of Torts in England and India).

SN - 1 தீர்வழி உண்டெனில் உரிமை உண்டு / ubi remedium ibi jus

SN - 2 உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு / ubi jus ibi remedium

விடைச்சுருக்கம்: (அ) இங்கிலாந்தில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி - அ(i) அத்துமீறல் நீதிப்பேராணை - அ(ii)வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை - அ(iii) அத்துமீறல் நீதிப்பேராணை மற்றும் வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணைக்கு இடையேயான வேறுபாடு - அ(iv) தீர்வழி உண்டெனில் உரிமை உண்டு - அ (v) உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு - (ஆ) இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி.

(அ) இங்கிலாந்தில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி (Origin and development of Law of Torts in England):

தீங்கியல் சட்டத்தின் முதன்மை ஆதாரம் இயற்றாச் சட்டமாகும் (Common law). இதன்பொருள், தீங்கியல் சட்டம் பெரும்பாலும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகள் மற்றும் நீதிபதிகளின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது என்பதாகும். தொடக்கத்தில் (கி.பி.14 ஆம் நூற்றாண்டில்), பல்வேறு தவறுகளுக்கிடையே (wrongs) அதாவது, குற்றம் (crime), தீங்கு (tort) அல்லது ஒப்பந்த மீறுகை (breach of contract) உள்ளிட்டவற்றிற்கு இடையே வேறுபாடு இல்லாமலும், உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம், ஒப்பந்த சட்டம் எனத் தனித்தனியே பிரிக்கப்படாமலும் இருந்தது. அக்காலத்தில் நீதிப்பேராணைகளே (Writs) [அத்துமீறல் நீதிப்பேராணை (Writ of trespass) மற்றும் வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை (Writ of trespass on the case)] அன்றைய வழக்குகளை ஆளுமை செய்தன. இவற்றுள் குறிப்பாக அத்துமீறல் நீதிப்பேராணையில் இருந்தே. தீங்கியல் சட்டத்தின் பெரும்பகுதி வளர்ச்சியடைந்தது. எனவே தீங்கியல் சட்டத்தின் தோற்ற வளர்ச்சியை அறிந்து கொள்ள இவ்விரு நீதிப்பேராணைகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

அ(i) அத்துமீறல் நீதிப்பேராணை (writ of trespass): பொதுவாக, இந்நீதிப்பேராணை, நபர் மற்றும் சொத்திற்கு ஏற்படுத்தும் தீங்குகளினால்

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பலனுள்ள பரிகாரம் அளிப்பதற்காக அரசவை நீதிமன்றத்ததால் (King's Court) வழங்கப்பட்டது. அரசர்கள் தங்களின் அதிகாரத்தை வலிமைப்படுத்தியதன் காரணமாக, அமைதியை பராமரிக்கும் அவர்களின் எல்லையும் மற்றும் அதிகாரவரம்பின் எல்லையும் (jurisdiction) விரிவடைந்தது. நாளடைவில், பலம் பொருந்திய குற்றவாளிகளுக்கு எதிரான பாதுகாப்பினுக்கு ஒரு கருவியாக நீதிப்பேராணைகள் தொடர்ந்து பரவலான வரவேற்பைப் பெற்றது. நடைமுறையில் இருந்த வட்டார நீதிமன்றங்களில் கிடைக்கும் தீர்வழியைவிட, நீதிப்பேராணைகள் வாயிலான நடவடிக்கைகள் கூடுதல் ஆதாயமளித்ததும் அதன் புகழுக்கு மேலும் காரணமாயிற்று. அக்காலத்தில் (கி.பி.14–ஆம் நூற்றாண்டில்) நபர் மற்றும் சொத்திற்கு ஏற்படுத்தும் கடுமையான தீங்குகளுக்கு 'பழி தீர்த்துக் கொள்ளல்' (அதாவது, குற்றமிழைத்தவரை, அவர் எம்முறையில் குற்றச்செயல் புரிந்தாரோ அதே முறையிலான செயலின் மூலம் பழிதீர்த்துக் கொள்ளுதல்) அல்லது 'இரத்தப்பகையை தீர்த்துக் கொள்ளல்' (blood-feud) போன்ற ஆதிகாலத்திய முறைகள் நீதிமன்றத்தின் ஒப்புதல் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் மேற்கொள்ளப்பட்டது. நாளடைவில், அத்தகைய முறைகள் நீதிதொடர்பான நாகரீக கருத்துருவிற்கு உடன்படாததால் மக்களால் விரும்பப்படவில்லை. அத்துமீறல் நீதிப்பேராணையின் மூலமான புதிய தீர்வழி, பழிதீர்த்துக் கொள்ளல், இரத்தப்பகையை தீர்த்துக் கொள்ளல் போன்ற முறைகளில் இருந்த குறைகள் இல்லாமலும், கூடுதல் ஆதாயம் அளிப்பதாகவும் இருந்தது. சான்றாயத்தினரால் (Jury) நடத்தப்படும் புதிய விசாரணைமுறை, தவறிழைத்தவருக்கு தண்டனை அளிப்பதுடன், தீங்குற்றவருக்கு இழப்பீடு அளிக்கப்படவும் வழி செய்தது. மேலும் புதிய முறையில், பிரதிவாதி (தீங்கிழைத்தவர்) பிடிக்கப்படவும் மற்றும் விசாரணைக்கு ஆஜராகத் தவறினால் சிறையிடுவது மற்றும் அவரை கண்டுபிடிக்க முடியாவிடில், அவரின் சட்டப் பாதுகாப்பை இழக்கச் செய்வது போன்ற விரைவான நடைமுறை மற்றும் பலனுள்ள தீர்வழி அளிப்பதாக இருந்தது.

அத்துமீறல் நீதிப்பேராணையின் மூலமான புதிய வழக்கிடல் முறை பிரசித்தி பெற்றிருந்த அதே காலத்தில் புதிய தீர்வழியின் எல்லையும் (scope of new remedy) விரிவடைந்தது. நாளடைவில் அது, குறைந்த அளவு வன்தாக்கு (little force) அல்லது வன்தாக்கு இல்லாத சூழ்நிலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. ஒரு நபர் சாதாரணமாக மற்றொரு நபரின் உடைமையில் உள்ள நிலத்தினுள் நுழைவது அல்லது மற்றொரு நபரின் உடல் அல்லது பொருள்களைத் தொடுவது போன்றவைகளும் கூட, இவ்வழக்கிடல் முறையை பயன்படுத்தும் நோக்கத்திற்காக அத்துமீறல்களாக கருதப்பட்டது.

அ(ii) வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை (Writ of trespass on case): காலப்போக்கில் பல்வேறு வகையான தவறுகளுக்கு தீர்வழி அளிக்க வேண்டிய தேவை அரசவை நீதிமன்றத்திற்கு எழுந்தது. எடுத்துக்காட்டாக, ஓர் நபர் தன் சொந்தப் பயன்பாட்டிற்கென கொண்டுள்ள அசைவியல் சொத்தை (chattel), மற்றொரு நபரின் உடைமையில் ஒப்படைத்திருக்கும்போது, அந்நபரின்

அலட்சியம் காரணமாக, அப்பொருளுக்கு ஊறு ஏற்படும்பொழுது, பொருளின் உரிமையாளருக்கு எவ்வித பரிகாரம் அளிப்பது என்பது போன்ற சூழ்நிலைகள் தொடக்கத்தில் எழுந்தது. அத்தகைய சூழ்நிலைகளில் வன்தாக்கு (force) பயன்படுத்தப்படாததால் அல்லது மற்றொருவரின் உடைமைக்கு இடையூறு விளைவிக்காததால், அலட்சியமாக இருந்த நபருக்கு எதிராக அத்துமீறல் நீதிப்பேராணை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. அதன்பின்னரே, அரசவை நீதிமன்றம், தான் கொண்டிருந்த அதிகாரத்தின் பேரில் 'ஒத்த வழக்குகளுக்கான நீதிப்பேராணைகளை (writs of like cases) அளித்து வழக்கு தொடருவதற்கு வழி செய்தது. இதுவே வழக்கின் மீதான அத்துமீறல் (trespass on the case) அல்லது வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை என அழைக்கப்படலாயிற்று.

அ(iii) அத்துமீறல் நீதிப்பேராணை மற்றும் வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணைக்கு இடையேயான வேறுபாடு (Difference between writ of trespass and writ of trespass on the case): இங்கிலாந்தில் 14-ஆம் நூற்றாண்டில் இருந்து 19-ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை நடைமுறையில் இருந்த முறையின்படி, ஓர் நபரின் தீங்கான செயலின் நேரடி விளைவால் இழப்பிற்கு உள்ளான நபர் 'அத்துமீறல் நீதிப்பேராணை' வழக்கிடும் முறையை மேற்கொண்டு இழப்பீடு பெறலாம். அதே நேரத்தில், தீங்கான செயலின் நேரடி விளைவாக அல்லாமல், மறைமுக விளைவால் இழப்பிற்கு உள்ளாகும் நபர், 'வழக்கின்மீதான நீதிப்பேராணை' முறையை மேற்கொண்டு மட்டுமே இழப்பீடு பெற முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு நபர், நெடுஞ்சாலையின் குறுக்கே மரத்துண்டு (log) ஒன்றை வீசுவதாகக் கொள்வோம். அந்நபர் மரத்துண்டை வீசிய நேரத்தில், எவரேனும் நபர்மீது பட்டு காயத்தை ஏற்படுத்தினால், காயமுற்ற நபர் அத்துமீறல் நீதிப்பேராணை வழக்கிட்டு இழப்பீடு பெறலாம். ஆனால் மரத்துண்டை வீசிய பின்னர், எவரேனும் நபர் நெடுஞ்சாலையில் கிடக்கும் மரத்துண்டினால் தடுக்கி விழுந்து காயமுற்றால், காயமுற்ற நபர் இழப்பீடு பெறுவதற்கு வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை முறையின்கீழ் வழக்கிட வேண்டும்.

அ(iv) தீர்வழி உண்டெனில் உரிமை உண்டு (ubi remedium ibi jus): இங்கிலாந்தில் ஏறத்தாழ 19-ஆம் நூற்றாண்டின் மையக்காலம் வரையில், ஓர் வழக்கின் வெற்றி, கிடைக்கக் கூடிய நீதிப்பேராணையின் அடிப்படையைச் சார்ந்திருந்தது. சூழ்நிலைக்கேற்ப பல்வேறு வகையான நீதிப்பேராணைகள் பெறும்நிலை நடைமுறையில் இருந்தது. இருப்பினும் பிரதிவாதியின் செயலால் தீங்குற்ற நபர் (வாதி) அதற்கான இழப்பீட்டினைப் பெறுவதற்கு சரியான அல்லது பொருத்தமான நீதிப்பேராணையை தேர்வு செய்ய வேண்டும். மேலும், தீங்கிற்கான இழப்பீடு பெறுவதற்கான நீதிப்பேராணை ஏதும் நடைமுறையில் இல்லை எனும் சூழ்நிலைகளில், வாதி, தன் தரப்பை நியாயப்படுத்தினாலும்கூட வழக்கில் வெற்றி பெற முடியாத நிலை இருந்தது. ஏனெனில் 'தீர்வழி உண்டெனில் உரிமை உண்டு'

('ubi remedium ibi jus' - i.e., where there is remedy there is right) என்பதே அப்போதைய சட்டத்தின் நிலையாக இருந்தது.

அ(v) 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' (ubi jus ibi remedium): இயற்றாச் சட்ட நீதிமன்றங்கள் (Common Law Courts), நாகரீக வளர்ச்சிக்கேற்ப, புதிய வகையான தவறுகள் மற்றும் தீங்குகளுக்கு நிவாரணம் வழங்கும் அவசியத்திற்காக அவ்வப்போது அத்துமீறல் நீதிப்பேராணை அல்லது வழக்கின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணையை அனுமதித்தன. இவ்வாறாக அவதூறு, ஏமாற்றுதல், தீய எண்ணத்துடன் வழக்கிடுதல், தொல்லை, கவனமின்மை, நபர் மற்றும் சொத்துக்கு ஏற்படுத்தும் தீங்குகள், பொருள்களின் உருமாற்றம் (conversion of goods) உள்ளிட்ட தீங்குகளுக்கு வழக்குகளின் மீதான அத்துமீறல் நீதிப்பேராணை அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு ஒரு வழக்கின் வெற்றியை தீர்மானிக்கும் நீதிப்பேராணையை பெறுவதற்கு வலியுறுத்தும் போக்கு 500 ஆண்டுகளாக தொடர்ந்தது. 1832 மற்றும் 1833-ஆம் ஆண்டுகளில் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக 1852 ஆம் ஆண்டின் இயற்றாச் சட்ட நடைமுறைச் சட்டத்தின் (Common Law Procedure Act, 1852) மூலம், வழக்கிற்கு பொருந்தும் நீதிப்பேராணையை தேர்வு செய்யும் முறை ஒழிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1873-ஆம் ஆண்டின் நீதி வழங்கு அதிகாரச் சட்டம் (Judicature Act, 1873), தரப்பினர்கள் சார்ந்துள்ள பொருண்மைகளின் சுருக்கத்தை மட்டும் வழக்குரையில் குறிப்பிட்டால் போதுமானது என்பதை தெரிவித்தது. இச்சட்டம், வாதியின் சட்டப்படியான உரிமை மீறப்பட்டுள்ளது என நீதிமன்றம் நம்பும்பொழுது அதற்கான தீர்வினை அளிக்க வழி செய்தது. அதாவது 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' ('ubi jus ibi remedium' - i.e., Where there is a right, there is remedy) என்கிற சட்டநிலை உருவானது.

(ஆ) இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி (Evolution of Law of Torts in India)

இந்தியாவில், இந்தியச் சூழலுக்குப் பொருத்தமான மற்றும் இந்திய சட்டமன்றத்தினால் திருத்தம் செய்யப்பட்ட ஆங்கிலத் தீங்கியல் சட்டமே நிருவகிக்கப்பட்டது. இந்திய தீங்கியல் சட்டத்தின் தோற்றம், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலநீதிமன்றங்களுடன் தொடர்பு கொண்டதாகும். ஆங்கில நீதிமன்றங்களின் மூலமாகவே இந்தியாவில் தீங்கியல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை ஆகிய மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட மேயர் நீதிமன்றங்களே (Mayor's Courts), முதலில் ஏற்படுத்தப்பட்ட ஆங்கில நீதிமன்றங்களாகும். இந்நீதிமன்றங்கள் 18-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்நீதிமன்றங்களை ஏற்படுத்திய சாசனங்கள் (charters), ஆங்கில இயற்றாச் சட்டத்தையும் மற்றும் இயற்றுச் சட்டத்தையும் (Statute law) அறிமுகப்படுத்தியது. 'நீதி' மற்றும் 'சரிநிலைத்தன்மை' (Justice and right) என்பதற்கேற்ப இந்நீதிமன்றங்கள் தீர்ப்புரை வழங்கவும் மற்றும்

தண்டனை விதிக்கவும் சாசனம் அதிகாரமளித்தது. இதன் பின்னர், இம்மூன்று நகரங்களில், மேயர் நீதிமன்றத்திற்கு பதிலாக உச்சநீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், மேயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒத்த அதிகார வரம்பு வழங்கப்பட்டது. பின்னர், இம்மாகாணங்களில் இருந்த உச்சநீதின்றத்திற்கு பதிலாக உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட உயர்நீதிமன்றங்கள், கீழமை நீதிமன்ற ஆணைக்கு எதிராகச் செய்யப்படும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரவரம்பு போன்று அல்லாமல், முதல்நிலை அதிகாரவரம்பை (original jurisdiction) செயற்படுத்துவதன் வாயிலாகவே இயற்றாச் சட்டத்தை பொருந்தச் செய்தன. பிற நீதிமன்றங்களைப் பொறுத்தவரை (மற்ற உயர்நீதிமன்றங்கள் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் அனைத்தும்) ஆங்கில இயற்றாச் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு வெளிப்படையான வகையங்கள் ஏதுமில்லாமல் இருந்தது. இந்நீதிமன்றங்கள் சட்டத்தின்மூலமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்நீதிமன்றங்களை ஏற்படுத்தியிருந்த சட்டத்தின் ஓர்பிரிவு, எந்தவொரு குறிப்பிட்ட சட்டம் (speecific law), வழக்கச் சட்டம் (customary law) அல்லது வழக்காறு (usage) ஏதும் இல்லாதபோது, 'நீதி', 'தகைமை நெறி' மற்றும் 'நன்மனச் சான்றுக்கு' (Justice, equity and good conscience) ஏற்ப செயல்படுமாறு குறிப்பிட்டிருந்தது. 'நீதி', தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்று' என்ற கூற்று, இந்தியச் சமுதாயம் மற்றும் சூழலுக்குப் பொருந்தும் அளவு வரையிலான ஆங்கிலச் சட்டவிதிகளைக் குறிக்கும் என்பதாக 'பிரிவி கவுன்சில்' (Privy Council) பொருள் விளக்கம் அளித்தது. இவ்வாறு பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்கள் தங்கள் அசல் அல்லது முதல்நிலை ஆள்வரம்பின் மூலம் நிருவகித்த தீங்கியல் சட்டம், இயற்றாச் சட்டத்தீங்கியலின் ஓர் பகுதியாகும். இந்தியாவிலுள்ள பிற நீதிமன்றங்கள், நீதி. தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்று என்ற கொள்கையின் வாயிலாக ஆங்கில இயற்றாச் சட்டத்தை பொருந்தச் செய்தன.

இந்தியாவில் தீங்கியல் சட்டம் இன்றுவரை, தொகுக்கப்படாமலும், இந்திய நீதிமன்றங்கள் ஆங்கில இயற்றாச் சட்டத்தையே பொருந்தச் செய்தும் வருகின்றன. விடுதலைக்குப்பின், உறுப்பு - 372-ல் பயன்படுத்தப்பட்டுள்ள வாசகத்தின் அடிப்படையில் இருந்து, இந்திய அரசமைப்புச் சட்டம், இயற்றாச் சட்ட தீங்கியலுக்கு சட்ட அடிப்படை (legal basis) வழங்கியிருப்பதை புரிந்து கொள்ளலாம்.

2. 'தீங்கு' என்பதன் பொருள், வரையறை மற்றும் இயல்பினைக் குறித்து எழுதவும். (Write about the meaning, definition and nature of 'Tort')

விடைச்சுருக்கம்: (அ) 'தீங்கு' என்பதன் பொருள் - (ஆ) 'தீங்கு'-வரையறை - (இ) தீங்கின் இயல்பு

(அ) 'தீங்கு' என்பதன் பொருள் ('Tort' - Meaning):

கி.பி.1066-ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் மீதான நார்மன் வெற்றிக்கு (Norman conquest) பின்னர், பிரெஞ்சு மொழி, இங்கிலாந்தின் நீதிமன்ற பேச்சு மொழியாகவும், நீதிமன்ற நடவடிக்கைகளின் மொழியாகவும் இருந்தது. இந்நிலை கி.பி.1650 வரையில் நீடித்தது. இதன் அடிப்படையில் 'tort' என்ற பிரெஞ்சு சொல் நேரடியாக ஆங்கில மொழியில் சேர்க்கப்பட்டது. 'tort' என்றச் சொல் 'tortum' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். 'tortum' என்றச் சொல் முறையற்ற, நெறிபிறழ்ந்த, நேர்மையற்ற, முரண்பட்ட அல்லது சட்டத்திற்கு புறம்பான நடத்தையை குறிப்பதாகும். இது ஆங்கில மொழியில் 'தவறு' (wrong) என்ற சொல்லலுக்கு சமமான பொருளைக் குறிக்கும். ஓர் நபர், மற்றொரு நபரிடம் சேர்ந்தடைந்துள்ள சில சட்ட உரிமைகளை மீறுகின்ற அத்தகைய பல்வேறு வகையிலான தவறான செயல்களை உள்ளடக்கிய சட்டத்தின் பிரிவே தீங்கியல் சட்டமாகும். இது அடிப்படையில் ஒப்பந்தத்தின் மூலம் அல்லாத சில கடமைகளை மீறுவதால், இழப்பீடு பெறத்தக்க உரிமையியல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வழிவகுப்பதைக் குறிக்கும். எனவே 'தீங்கு' என்பதை 'ஒப்பந்தம் அல்லாத பொருத்தமான தீர்வழியாக, அறுதியிடப்படாத (unliquidated) இழப்பீட்டிற்காக நடவடிக்கை எடுக்கத்தக்க ஓர் உரிமையியல் தீங்கு' எனப்பொருள் கொள்ளலாம்.

(ஆ) 'தீங்கு' – வரையறை ('Tort' - Definition):

தீங்கியல் சட்டம், அடிப்படையில், பிற சட்டங்களைப் போன்று ஓர் தொகுப்புச் சட்டமன்று. இந்திய தீங்கியல் சட்டம், நீதிமுறைத் தீர்ப்புகளின் அடிப்படையில் உருவான இங்கிலாந்தின் இயற்றாச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்திய தீங்கியல் சட்டத்தின் எல்லையினுள் இயற்றப்பட்ட சட்டம் என்பது மிகக் குறைவேயாகும். ஓர் செல்லத்தக்க ஒப்பந்தத்திற்கு என்னென்ன கூறுகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுவதுபோல் 'தீங்கு' என்பதனுள் அடங்கும் குறிப்பிட்ட கூறுகளை உள்ளடக்குமாறு இதுவரையில் வரையறுக்கப்படவில்லை. இதற்கு முக்கியக் காரணம் தீங்கு என்பதனுள் பன்முக இனங்களைக் கொண்ட வேறுபட்ட அதாவது ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான தனித்தன்மையான வரலாற்றுப் பின்னணி கொண்டுள்ள தவறுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகும். மேலும் தீங்கியல் பொறுப்புநிலை (tortious liability) எண்ணற்ற வழிகளில் எழும் என்பதாலும் அதன் எண்ணிக்கை மிக அதிக அளவில் இருப்பதாலும், இழப்பீடு செலுத்துவதற்கு பொறுப்பேற்கச் செய்யக்கூடிய, பிரதிவாதியின் தரப்பில் செய்யப்படும் ஒவ்வொரு செயலையும் குறிப்பிடுவது கிட்டதட்ட இயலாது என்பதுமே இதற்கான காரணமாகும். இனி 'தீங்கு' என்பதன் ஒரு சில முக்கிய வரையறைகளைக் காண்போம்.

சால்மண்ட் (Salmond) :

தீங்கு என்பது "முழுமையாக ஒப்பந்த மீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகை அல்லது சாதாரண தகைமை நெறியிலான கடப்பாட்டின் மீறுகை அல்லாத மற்றும் இயற்றாச் சட்டத்தின்கீழ் அறுதியிடப்படாத இழப்பீடு கோரி வழக்கிடும் தீர்வழி

கொண்ட ஓர் உரிமையியல் தீங்காகும்". ("It is civil wrong for which the remedy is a common law action for unliquidated damages and which is not exclusively the breach of contract or the breach of a trust or other merely equitable obligation")

கிளார்க் மற்றும் லிண்ட்செல் (Clerk and Lindsell):

"'தீங்கு' என்பது ஒப்பந்தத்தினின்று தனித்த (வேறுபட்ட) இயற்றாச் சட்டத்தின்கீழ் பொருத்தமான தீர்வழி பெறத்தக்க ஓர் தவறுகை ஆகும்." ("Tort is a wrong independent of contract for which the appropriate remedy is a common law action").

ஃபிரேசர் (Fraser):

"தீங்குற்ற நபர் தொடரும் வழக்கில் இழப்பீடு பெறும் ஓர் உரிமை அளிக்கின்ற, ஓர் தனிப்பட்ட நபரின் பொதுமுக உரிமையின்மீதான ஓர் மீறுகையே தீங்காகும்: ("It is an infringement of a right in rem of a private individual giving a right of compensation at the suit of the injured party")

வின்ஃபீல்ட் (Winfield):

"சட்டத்தினால் முதன்மையாக நிர்ணயிக்கப்பட்ட கடமை மீறுகையினின்று தீங்கியல் பொறுப்புநிலை எழுகிறது; இக்கடமை பொதுவாக நபர்கள் அனைவருக்குமானதும் மற்றும் இதன்மீறுகை, அறுதியிடப்படாத இழப்பீட்டிற்கான ஓர் வழக்கின் மூலம் தீர்வுபெறத்தக்கதுமாகும்." ("Tortious liability arises from the breach of a duty primarily fixed by the law; this duty is towards persons generally and its breach is redressable by an action for unliquidated damages")

1963-ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டம், பிரிவு-2(m) [Section-2(m), the Limitation Act, 1963] "தீங்கு என்பது, முழுமையான ஓர் ஒப்பந்த மீறுகையாக அல்லது பொறுப்புரிமை மீறுகையாக அல்லாத ஓர் உரிமையியல் தவறாகும்." ("Tort means a civil wrong which is not exclusively a breach of contract or breach of trust").

(இ) தீங்கின் இயல்பு (Nature of tort):

மேற்கண்ட வரையறைகளை ஆய்வு செய்கையில், தீங்கு என்பது பின்வரும் இயல்புகளை அல்லது தன்மைகளை கொண்டிருப்பது தெரியவருகிறது:

(1) தீங்கு என்பது ஓர் உரிமையியல் தவறாகும்;

(2) தீங்கு என்பது ஒப்பந்த மீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகையாக இல்லாதது; மற்றும்;

(3) தீங்கு என்பது அறுதியிடப்படாத இழப்பீட்டிற்கான நடவடிக்கையின் மூலம் நிவாரணம் பெறத்தக்கது.

இனி, மேற்குறிப்பிட்டுள்ள தீங்கின் கூறுகளை சுருக்கமாகக் காண்போம்;

(1) தீங்கு என்பது உரிமையியல் தவறாகும் (Tort is a civil wrong): 'தவறு' என்பது உரிமையியல் தொடர்பானதாகவோ அல்லது குற்றவியல் தொடர்பானதாகவோ இருக்கலாம். ஆனால் தீங்கு என்பது உரிமையியல் தன்மையுள்ள தவறுகளுடன் தொடர்பு கொண்டதாகும். ஓர் உரிமையியல் அல்லது குடிமை தவறுக்காக (civil wrong), பாதிக்கப்பட்ட நபர், தவறிழைத்த நபருக்கு எதிராக உரிமையியல் வழக்கு தொடரவும் மற்றும் இழப்பீட்டிற்கான பரிகாரம் (தீர்வழி) பெறவும் முடியும். இவ்வாறு பிரதிவாதி, வாதிக்கு ஏற்படுத்திய தீங்கிற்காக இழப்பீடு செலுத்தும் பொறுப்புக்கு உட்படுத்தப்படுகிறார். ஆனால் குற்றவியல் தொடர்புடைய தவறுகளில் (criminal wrong) குற்றம் செய்த நபருக்கு எதிராக, அரசு, குற்றவியல் நடவடிக்கையை மேற்கொள்கிறது. மேலும் தீர்வழியாக, தவறிழைத்தவருக்கு தண்டனை அளிக்கப்படுமே தவிர, இழப்பீடு செலுத்துவதாகாது. ஒருவேளை, ஒரு செயலின் விளைவு உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இரண்டின் கீழான தவறாக அமைந்தால், ஒரே நேரத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் தீர்வுகளை பெறமுடியும்.

(2) தீங்கு என்பது ஒப்பந்த மீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகையாக இல்லாதது (Tort is other than breach of contract or breach of trust): ஓர் தவறு 'தீங்கு' என்பதாகுமா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு பின்வரும் படிநிலைகளை (steps) பின்பற்றலாம்:

(i) தவறு, உரிமையியல் தன்மை கொண்டதா அல்லது குற்றவியல் தன்மையுடையதா என்பதைக் காண வேண்டும்;

(ii) தவறு, உரிமையியல் தன்மை கொண்டதாக இருப்பின், மேற்கொண்டு அத்தவறு, ஒப்பந்த மீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகை போன்று நன்கு அங்கீகரிக்கப்பட்ட பிற உரிமையியல் தவறுகளின் வகையைச் சார்ந்ததா என்பதை நோக்க வேண்டும்;

(iii) தவறு, ஒப்பந்தமீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகை போன்ற எதனையும் சாராதிருந்தால் மட்டுமே அது தீங்கு (tort) ஆகும்.

(3) தீங்கு என்பது அறுதியிடப்படாத இழப்பீட்டிற்கான நடவடிக்கையின்மூலம் பரிகாரம் பெறத்தக்கது (Tort is redressable by action for unliquidated damages): தீங்கிற்கான மிக முக்கிய பரிகாரம் இழப்பீடு பெறுவதாகும். தவறு செய்துவிட்ட பின்னர், அத்தவறினால் ஓர் நபருக்கு முன்னரே ஏற்பட்டுள்ள பாதிப்பை அதன்பின்னர், இல்லாமல் செய்ய முடியாது. இதுபோன்ற சூழ்நிலைகளில், பாதிப்புற்ற நபருக்கு பண அளவிலான இழப்பீடு மட்டுமே வழங்கப்படும். எடுத்துக்காட்டாக, ஓர் நபரின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்திய பின்னர், அதனால் அந்நபர் இழந்த புகழை அல்லது நற்பெயரை மீண்டும் பெற்றிட (அதாவது களங்கம் ஏற்படுத்துவதற்கு முன்பிருந்த நிலைக்கு கொணர முடியாது) எதுவொன்றும் செய்ய முடியாது. இருப்பினும், இதுபோன்ற சூழ்நிலைகளில் புகழுக்கு இழைத்த களங்கத்திற்கு, பாதிக்கப்பட்ட நபருக்கு பண அளவிலான இழப்பீடு வழங்கப்படுகிறது. அறுதியிடப்படாத இழப்பீடு என்பது,

தரப்பினர்களால் முன்பே நிர்ணயிக்கப்படாத அல்லது ஒப்புக் கொண்டிராத ஆனால் நீதிமன்றத்தின் சுயவிருப்பத்தின் பேரில் முடிவு செய்வதற்கு விடப்படுகின்ற அத்தகைய இழப்பீட்டினைக் குறிக்கும். இத்தகைய அறுதியிடப்படாத இழப்பீடே, தீங்கினை, ஒப்பந்த மீறுகை மற்றும் பொறுப்புரிமை மீறுகை ஆகியவற்றினின்று வேறுபடுத்துகிறது. ஏனெனில், ஒப்பந்த மீறுகை அல்லது பொறுப்புரிமை மீறுகைக்கான இழப்பீடு, அறுதியிடப்பட்டதாக (liquidated) அல்லது தரப்பினர்களால் முன்பே முடிவு செய்யப்பட்டதாக அல்லது ஒப்புக்கொண்டதாகவும் இருக்கலாம்.

3. "தீங்கு ஒன்று அமைவதற்கு தவறான செயலால் சட்ட ஊறு ஏற்பட்டு அதனால் சட்டத்தீர்வழி பெறும் நிலை ஏற்பட வேண்டும்" விவாதிக்க. ("To constitute a tort, the wrongful act must result in legal damage that give rise to legal remedy" - Discuss) - Nov-2012.

✦ **தீங்கியல் பொறுப்புநிலைக்கான கூறுகள் யாவை? (What are the components of tortious liability?)**

SN - 3 **சட்டப்படியான இழப்பு / Legal damage.**

விடைச்சுருக்கம்: (அ) தவறான செயல் அல்லது தவிர்ப்பு - (ஆ) சட்டப்படியான சேதம் - (இ) சட்டத்தீர்வழி

தீங்கு என்று ஒன்று அமைவதற்கு, முதலாவதாக ஒரு நபர் தவறான செயலை செய்திருக்க வேண்டும். தவறான செயல் என்பதனுள் செய்ய வேண்டிய செயலை, செய்யாமல் தவிர்ப்பதும் (omission) உள்ளடங்கும். இரண்டாவதாக, அத்தகைய செயல் அல்லது செயல் தவிர்ப்பின் விளைவாக மற்றொரு நபருக்கு சட்டப்படியான இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். மூன்றாவதாக, தவறான செயல் அல்லது செயல் தவிர்ப்பிற்காக வாதி, சட்டத் தீர்வழி பெறுகின்ற நிலை இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் தீங்கின் இன்றியமையாக் கூறுகளை சுருக்கமாக பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்;

(அ) தவறான செயல் அல்லது செயல் தவிர்ப்பு;

(ஆ) சட்டப்படியான சேதம்; மற்றும்;

(இ) சட்டத்தீர்வழி.

இனி மேற்குறிப்பிட்டுள்ள கூறுகளை சுருக்கமாறு பின்வருமாறு காண்போம்.'

(அ) தவறான செயல் அல்லது செயல் தவிர்ப்பு (Wrongful act or omission):

தீங்கு என்று ஒன்று அமைவதற்கான அடிப்படைக் கூறுகளுள் முதன்மையானது, ஓர் நபர் தவறான செயலை செய்திருக்க வேண்டும் அல்லது

செய்ய வேண்டிய செயலை செய்யாமல் தவிர்த்திருக்க வேண்டும். இதனை வேறு முறையில் குறிப்பிடுவது எனில், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அத்தகைய கடமையை மீறிய செயல் ஒன்றை செய்திருக்க வேண்டும். சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடமை (duty fixed by law) என்பது ஓர் சமநிலை அறிவு கொண்ட அல்லது சராசரி அறிவு கொண்ட நபர் (reasonable man), குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொண்டிருப்பாரோ அத்தகைய நடத்தையை, அதை ஒத்த சூழ்நிலைகளில் பின்பற்ற வேண்டும் என்று ஒரு நபரின் நடத்தையின்மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு அல்லது தடையைக் குறிக்கும். இத்தகைய கடமையை ஒரு நபர் பின்பற்றாமல் இருப்பின், அவர் தவறான செயல் புரிந்ததாகக் கருதப்படும். தவறான செயல் என்பது கவனமின்மை (negligence) காரணமாகவோ அல்லது அறிந்திருந்தே செய்ததாகவோ (intentional) அல்லது கண்டிப்பான கடமையை மீறுவதன் (breach of strict duty) மூலமாகவோ செய்யப்படலாம். கண்டிப்பான கடமை மீறல் என்பது, ஒரு நபர் தன் தரப்பில் எவ்வித தவறும் செய்யாது இருந்தாலும் கூட பொறுப்பு நிலைக்கு உள்ளாக்கப்படுவதைக் குறிக்கும். இருப்பினும் சாதாரணமாக ஒழுக்கநெறி அல்லது சமயக்கடமையை மீறுவது ஓர் தீங்கு ஆகாது; மாறாக, அது சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடமை மீறலாக இருக்க வேண்டும்.

அனைத்து சூழல்களிலும், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடமை என்பது, தீங்கு ஒன்று அமைவதற்கான முதன்முக்கியக் கூறு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், ஓர் நபர் மிகவும் ஆபத்தான அல்லது இக்கட்டான சூழ்நிலையில் தன்னையறியாமல் செய்யும் செயல் தீங்காக கருதப்படமாட்டாது. [எ-டு: ஓர் திருடனைப் பிடிப்பதற்காக துரத்திச் செல்லும் காவல் அலுவலர் 'X' என்ற நபரின் நிலத்தில் அத்துமீறி நுழைதல் (trespass)].

(ஆ) சட்டப்படியான சேதம் (Legal damage):

சட்டப்படியான சேதம் அல்லது இழப்பு என்பது, ஒருவர் கொண்டுள்ள சட்ட உரிமையை மற்றொருவர் மீறியதால் ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பைக் குறிக்கும். வாதியே, தன் சட்ட உரிமையை பிரதிவாதி மீறியதன் விளைவாக சேதம் அல்லது இழப்பு ஏற்பட்டுவிட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். சட்ட உரிமை மீறப்பட்டிருந்தால் மட்டுமே தீங்கியல் சட்டத்தின்கீழ் வழக்கு தொடரமுடியும். மேலும் ஓர் நபரின் சட்ட உரிமை மீறப்பட்டிருந்து, அதன் விளைவாக அந்நபருக்கு எவ்வித இழப்போ அல்லது சேதமோ ஏற்படாமல் இருந்தாலும்கூட தீங்கியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். இதனையே 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' (ubi jus ibi remedium) எனும் சட்ட முதுமொழி (legal maxim) குறிப்பிடுகிறது. இருப்பினும் சட்ட உரிமை (legal right) என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். "சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட நலன்களே உரிமைகள்" ('Rights are legally protected interests') என்று உரிமைகளை மிக எளிமையாக அறிஞர் ஜரிங் (Ihering) வரையறுக்கிறார். இவற்றினின்று, உரிமை என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட நலன் எனக் கூறமுடியும். எனவே ஓர்

சட்டப்படியான உரிமை மீறுகையின் விளைவாக, ஓர் தனிப்பட்ட நபரின் உரிமை மீறப்பட்டிருக்க வேண்டும் என்பது தீங்கு ஒன்று அமைவதற்கு மிகவும் இன்றியமையாதது என்பதை புரிந்து கொள்ளலாம்.

சட்ட உரிமை மீறப்படுதல் அதன் விளைவாக சேதம் அல்லது இழப்பு ஏற்படுதல் என்பதன் முக்கியத்துவத்தை மேலே கண்டோம். இருப்பினும், ஒரு நபர் மற்றொரு நபரின் சட்ட உரிமையை மீறாமல் அல்லது தனது சட்ட உரிமையை செயல்படுத்தும்போது மற்றொரு நபருக்கு இழப்பு நேரிடலாம். எவ்வாறிருப்பினும் அத்தகைய செயல் தீங்கு ஆகாது. இதனையே 'தீங்கில்லா சேதம்' (Damnum sine injuria - i.e., damage without infringement of legal right) எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாக, ஒரு நபரின் செயலினால் மற்றொரு நபரின் சட்ட உரிமை மீறப்பட்டிருந்து, அத்தகைய செயலின் விளைவாக, உண்மையில் அந்நபருக்கு எவ்வித சேதமோ அல்லது இழப்போ ஏற்படாவிட்டாலும்கூட, அச்செயல் 'தீங்கு' என்பதாகவே அமையும். இதனையே 'சேதமில்லாத் தீங்கு' (Injuria sine damno - i.e., Injury without damage) எனும் சட்டமுதுமொழி குறிப்பிடுகிறது. பொதுவாக, தீங்கியல் பொறுப்புநிலை இவ்விரு சட்ட முதுமொழிகளின் அடிப்படையில்தான் அமைகிறது.

(இ) சட்டத்தீர்வழி (Legal remedy):

'தீங்கு' என்பது உரிமையியல் தீங்காகும். (A Tort is a civil injury). ஆனால் உரிமையியல் தீங்குகள் அனைத்துமே தீங்காகாது. ஓர் தவறான செயல் என்பது, உரிமையியல் நடவடிக்கை மேற்கொண்டு (வழக்குதொடர்ந்து) கண்டிப்பாக தீர்வழி பெறத்தக்க அத்தகைய வகையிலான தவறுகளில் உள்ளடங்குவதாக இருக்க வேண்டும். **Ashby Vs. White, (1703) 2 Ld. Rayon 938.,** என்ற வழக்கில் "வாதி ஓர் உரிமையை கொண்டிருக்கிறார் எனில், அவசியம் ஏற்படும்போது அதனை மெய்ப்பிப்பதற்கும் மற்றும் அத்தகைய உரிமையை செயல்படுத்தும்போது அல்லது அனுபவிக்கும்போது அவர் தீங்குற்றால், தீர்வழி பெறுவதற்கான வழிமுறையையும் கொண்டிருக்க வேண்டும். தீர்வழி இல்லாமல் ஓர் உரிமை இருப்பதாக கற்பனை செய்வது என்பது வெறும் தற்பெருமையே என்று தலைமை நீதிபதி ஹோல்ட் (Holt, CJ) கூறியிருப்பது கவனிக்கத்ததக்கதாகும். மேலும் **Brad laugh Vs. Gosett, (1884) 12 QBD 271.,** என்ற வழக்கில், நீதிபதி. ஸ்டீபன், "பொதுவாகக் குறிப்பிடுவதெனில், சட்டத்தில் தீர்வழி இல்லாமல் எந்தவொரு உரிமையும் இல்லை; மற்றும் ஓர் உரிமையை செயல்படுத்துவதற்கான அனைத்து தீர்வழிகளும் பயனற்றதாகிவிடின், உண்மையில் அத்ததகைய உரிமை நடைமுறையில் இருப்பது முடிவுக்கு வந்துவிட்டது என்றே பொருளாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக, ஓர் தீங்கிற்கான முதன்மைத்தீர்வழி, இழப்பீடு பெறுவதற்கான உரிமையியல் வழக்கு தொடருவதாகும். இருப்பினும், தீங்கிற்கு எதிரான பிறவழித் தீர்வுகளும் உள்ளன. உறுத்துக்கட்டளை (injunction), குறித்த சொத்தை மீளப்பெறுதல் (Specific restitution of property) அல்லது நீதிமன்றத்திற்கு

செல்லாமல் வாதி, தானே தன்னுதவி (self-help) நடவடிக்கை மேற்கொள்ளல் போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். ஓர் தீங்கியல் செயலுக்கு ஒரேயொரு தீர்வழி என்பதும் அனைத்து சூழலுக்குமான விதியல்ல. எடுத்துக்காட்டாக, பசுவின் உரிமையாளரிடமிருந்து, தவறான செயலின் மூலம் அதன்மீதான உடைமையை இழக்கச் செய்திருந்தால் பசுவின் உரிமையாளர், பசுவைத் திரும்பப் பெறுவதுடன் (குறித்த சொத்தை மீளப்பெறுதல்) இழப்பீடு பெறுவதற்கும் தகுதி பெற்றவராவார்.

4. **தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான பரந்த மற்றும் குறுகிய புனை கருத்துருக்கள் யாவை? அவை ஏன் இவ்வாறு அழைக்கப்படுகின்றன? (What are the wider and narrower theories of tortious liability? Why are they so called?) - May-2013(v), May-2017 (v).**

- ✦ **"ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தீங்குகளே உள்ளன. அவற்றுக்கு வெளியே தீங்கியலின் பொறுப்புநிலை இல்லை"- தெளிவுபடுத்துக. ("There is definite number of torts, outside which the liability in tort does not exist"- Elucidate) - Nov-2015, May-2016(v).**
- ✦ **தீங்கியல் என்பது தீங்கியல் சட்டமா? அல்லது தீங்குகளின் சட்டமா? அதுபற்றிய இரண்டு கருத்துரைகளை விவாதிக்கவும். (Is it Law of Tort or Law of Torts? Commet on the two theories about it) - Nov-2016.**
- ✦ **தீங்கியல் பொறுப்பின் ஆதாரமாக விளங்கும் இரு போட்டிக் கொள்கைகளை விவாதிக்க. (Discuss the two competing theories with regard to foundation of tortious liability) - Nov-2014.**

SN - 4 **புறாக் கூட்டறைக் கொள்கை, May-2019(v) / புறாக் கூட்டறை கருத்தியல், Nov-2018 / புறாக் கூட்டமைப்பு புனைக் கருத்துரு, May-2015, May-2016(v) / Pigeon hole theory.**

விடைச்சுருக்கம்: (அ) தீங்கியல் பொறுப்பின் இரு போட்டிக் கொள்கைகள் - (ஆ) தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான பரந்த கொள்கை - (இ) தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான குறுகிய கொள்கை அல்லது புறாக் கூட்டறைக் கொள்கை - (ஈ) திறனாய்வு - (உ) முடிவுரை

(அ) தீங்கியல் பொறுப்பின் இரு போட்டிக் கொள்கைகள் (Two competing theories of tortious liability)

தீங்கியல் பொறுப்படைவின் அடிப்படை தொடர்பாக, சட்ட

அறிஞர்களுக்கிடையே இரு வேறுபட்ட கருத்துகள் விவாதப் பொருளாக இருந்து வருகிறது. பேராசிரியர் வின்ஃபீல்ட், தீங்கியல் பொறுப்பு நிலையை தீர்மானிப்பது தொடர்பாக பின்வரும் போட்டிக் கொள்கைகளை குறிப்பிடுகிறார்:

(1) ஏதேனும் எதிர்வாதம் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அன்றி, ஒரு நபர் பிறருக்கு செய்யும் அனைத்து ஊறுகளும் தீங்குகளாகும்;

(2) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தீங்குகளே உள்ளன. அவற்றிற்கு வெளியே தீங்கியலில் பொறுப்புநிலை எழுவதில்லை.

இனி இவ்விரு கொள்கைகள் பற்றி பின்வருமாறு காண்போம்.

(ஆ) தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான பரந்த கொள்கை (The wider principle of tortious liability):

முதல் கொள்கையை பொல்லாக், வின்ஃபீல்ட் மற்றும் புகழ்பெற்ற நீதிபதிகள் பலர் ஏற்று ஆதரிக்கின்றனர். சிக்கலான சமுதாயத்தின் அன்றாட வளர்ச்சி, புதிய வகையிலான தீங்குகள் எழுவதற்கு காரணமாக உள்ளதென்றும், ஒவ்வொரு வழக்கிலும் பிரதிவாதியின் பொறுப்புநிலையை நீதிபதிகள் முடிவு செய்கிறார்கள் என்றும் பொல்லாக் குறிப்பிடுகிறார். பேராசிரியர் வின்ஃபீல்ட், "நான் என் பக்கத்தது வீட்டிலிருப்பவருக்கு ஊறு ஏற்படுத்தினால், எனது அத்தகைய ஊறு ஏற்படுத்திய செயல் தாக்க முனைதல் (assault), உடலைத் தாக்குதல் (battery), ஏமாற்றுதல் (deceit) போன்ற குறிப்பிட்ட பெயருடைய தீங்காக இருந்தாலும் அல்லது இத்தகைய பெயர் ஏதுமில்லாமல் இருந்தாலும்கூட, அவர் என்மீது வழக்கு தொடர முடியும்" என்கிறார். தீங்கியல் சட்டம், வெறுமனே நடைமுறையில் குறிப்பிட்ட பெயரைக் கொண்ட தீங்குகளை மட்டுமின்றி சட்டப்படி நியாயப்படுத்த முடியாத அனைத்து ஊறுகளையும் உள்ளடக்கிய பரந்த கொள்கை கொண்டது என்பதே வின்ஃபீல்டின் கருத்தாக உள்ளது. வின்ஃபீல்டின் இத்தகைய கருத்து, சட்டப்படி நியாயப்படுத்தக்கூடிய காரணமின்றி இழைக்கப்படும் அனைத்து ஊறுகளும் தீங்கியல் பொறுப்புநிலைக் கொண்டதே என்பதைக் குறிப்பிடுவதால், இக்கொள்கை, **தீங்கியல் பொறுப்புநிலையின் பரந்த கொள்கை** என அழைக்கப்படுகிறது. மேலும் நடைமுறையில் உள்ள குறிப்பிட்ட பெயரைக் கொண்ட தீங்குகளை மட்டுமின்றி, சட்டப்படி நியாயப்படுத்த முடியாத அனைத்து ஊறுகளையும் உள்ளடக்குவதால், இது தீங்கியல் சட்டமே (Law of Tort) அன்றி குறிப்பிட்ட பெயரைக் கொண்ட தீங்குகளின் சட்டம் (Law of Torts) அல்ல என்பதே அறிஞர் வின்ஃபீல்டின் கருத்தாகும்.

தீங்கியல் பொறுப்புநிலைக் குறித்த வின்ஃபீல்டின் பரந்த கொள்கையை புகழ்பெற்ற நீதிபதிகளும் ஆதரித்துள்ளனர். **Chapman Vs. Picker S.Gill, (1762) 2 Wills 145.,** என்ற வழக்கில் "தீங்குகள் ஓர் எல்லைக்குள் அல்லது வரம்பிற்குள் உட்பட்டிராத முடிவற்ற வகையிலானவை" ('Torts are infinitely various, not limited or confined') என நீதிபதி பிரட் (Pratt, C.J) கூறியுள்ளார். நீதிப்பிரபு போவன் (Bowe L.J), "எப்பொழுதெல்லாம் ஒரு நபர் நியாயமான காரணமின்றி, அறிந்திருந்தே மற்றும் வேண்டுமென்றே மற்றொருவருக்கு

இழப்பை ஏற்படுத்துகிறாரோ, அப்பொழுதெல்லாம் இயற்றா சட்டத்தில் வழக்குமூலம் (cause of action) உள்ளது" என்பதை **Skinner & Co., Vs. Shew & Co., (1873) 1 Ch 413.**, என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க நீதிபதி ஹோம்ஸ் (Holmes J), **Alkens Vs. Wisconsin, (1901) 195 US 199.**, என்ற வழக்கில் வின்ஃபீல்டின் தீங்கியல் பொறுப்புநிலைக்குறித்த பரந்த கொள்கையை ஏற்பு செய்துள்ளார்.

(இ) தீங்கியல் பொறுப்படைவு தொடர்பான குறுகிய கொள்கை அல்லது புறாக்கூட்டறைக் கொள்கை (The narrowwer theory of tortious liability or Pigeon-hole theory)

இரண்டாவது கொள்கை, தீங்கியல் பொறுப்புநிலையின் குறுகியக் கொள்கை என்றும் புறாக் கூட்டறைக் கொள்கை என்றும் குறிப்பிடப்படுகிறது. இக்கொள்கை, தீங்கியல் சட்டம், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புறாக் கூட்டறைகளைக் கொண்டதாக அதாவது, ஒவ்வொன்றும் ஓர் குறிப்பிட்ட தீங்கினை உள்ளடக்கிய ஓர் கூண்டுக்கு ஒப்பானதாகக் கருதுகிறது. எடுத்துக்காட்டாக, தாக்கமுனைதல், உடலைத் தாக்குதல், ஏமாற்றுதல், நிலை வடிவ அவதூறு அல்லது பிற பெயரிடப்பட்ட தீங்கு ஆகிய ஒவ்வொன்றையும் புறாக்கூண்டின் ஒவ்வொரு அறையிலும் இடம் பெற்றுள்ளதாகக் கருதுகிறது. பிரதிவாதியின் தவறு, இத்தகைய புறாக் கூட்டறைகளில் ஏதேனுமொன்றில் பொருந்தாவிடில் அவர் தீங்கும் ஏதும் புரியவில்லை என்பதாம். இதனையே வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், இழப்பிற்கு அல்லது தீங்கிற்கு உள்ளான வாதி, தன்னுடைய வழக்கு புறாக் கூண்டிலுள்ள ஏதாவதொரு அறையில் அதாவது பெயரிடப்பட்ட ஏதேனுமொரு தீங்காகும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதன் பொருட்டு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் தீங்கின் அடிப்படையில் வாதி வழக்குத் தொடர வேண்டும். இவ்வாறு ஏற்கனவே தீங்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெயரிடப்பட்ட தீங்குகளின் அடிப்படையில் இருந்து மட்டுமே தீங்கியல் பொறுப்புநிலை எழுகிறது என்பதைக் குறிப்பிடுவதால், இக்கொள்கை, தீங்கியல் பொறுப்பு நிலையின் குறுகியக் கொள்கை என அழைக்கப்படுகிறது.

அறிஞர் சால்மண்ட் இக்கொள்கையின் முதன்மை ஆதரவாளர் ஆவார். அறிஞர் சால்மண்ட்-ஐப் பொறுத்தவரை, குற்றவியல் சட்டம் எவ்வாறு குறிப்பிட்ட குற்றங்களை உள்ளடக்கியதோ, அதேபோன்று தீங்கியல் சட்டமும் குறிப்பிட்ட ஊறுகளை (injuries) ஏற்படுத்தும் விதிகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது என்பதாகும். சால்மண்ட், தீங்கியலின் சிலக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தீங்குகளே உள்ளது அவற்றினைத் தாண்டி தீங்கியலின் பொறுப்புநிலை எழாது என உறுதிபடக் கூறுகிறார். எனவேதான் சால்மண்ட் தான் எழுதி புத்தகத்திற்கு 'தீங்குகளின் சட்டம்' (Law of Torts) எனப் பெயரிட்டார்.

(ஈ) திறனாய்வு (Criticism)

வின்ஃபீல்டின் தீங்கியல் பொறுப்புநிலைத் தொடர்பான பரந்த கொள்கை, பல்வேறு சட்ட அறிஞர்கள் மற்றும் நீதிபதிகளின் ஆதரவைப் பெற்றது. பொதுவாக

சட்டமானது மாறி வரும் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொருந்தக்கூடியதாகவும் மற்றும் சட்ட வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும். புதிய வகைத் தீங்குகளை அங்கீகரித்து அதற்கான தீர்வழியை அளிப்பதற்கு பரந்த கொள்கையே துணைபுரியும். மேலும் ஒரு நபர் மற்றொரு நபருக்கு ஊறு விளைவிக்க வேண்டும் அல்லது இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கருதியே செய்யப்படுகின்ற செயல்களை சட்டம் தடுத்து நிறுத்தவும் அல்லது அத்தகைய செயல்கள் செய்யப்பட்டிருப்பின், பாதிக்கப்பட்டவருக்கு பரிகாரம் வழங்குவதும் தகைமை நெறியின் அடிப்படை சாராம்சமாகும். தீங்கியல் பொறுப்பு நிலையின் பரந்த கொள்கை இதனை நிறைவேற்றுவதாக உள்ளது.

அறிஞர் சால்மண்ட் முன் வைக்கும் தீங்கியல் பொறுப்பு நிலையின் குறுகிய கொள்கை சட்ட வளர்ச்சிக்கு தடையை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும் இக்கொள்கை சட்டத்தில் உள்ள குறைகளை (அதாவது ஓர் குறிப்பிட்ட தவறான செயலை தீங்கு என அங்கீகரிக்கப்படாது இருத்தல்) பயன்படுத்தி, ஓர் நபர் அறிந்திருந்தே மற்றொரு நபருக்கு தீங்கிழைக்கவும் மற்றும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கும் ஒட்டு மொத்தமாக தகைமை நெறிக்கு முரணாகவும் உள்ளது.

(உ) முடிவுரை (Conclusion):

சட்ட வளர்ச்சி மற்றும் தகைமை நெறியை பின்பற்றல் ஆகியவற்றின் காரணமாக வின்ஃபீல்டின் பரந்த கொள்கையே சட்ட அறிஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக, பல புதிய வகை தீங்குகளை நீதிமன்றங்கள் அங்கீகரித்தே வந்துள்ளன. இன்றைய நிலையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏமாற்றுதல் **[Pasley Vs Freeman, (1789) 3.T.R.51],** ஒப்பந்த முறிவைத் தூண்டுதல் (inducement of breach of contract) **[Lumley Vs Gye, (1853) 2 E&B 216],** கடும் பொறுப்பு நிலை **[Rylands Vs Fletcher, (1868) L.R.3 HL, 330],** மிரட்டுதல் **[Rooks Vs. Barnard, (1964) AC 1129]**, முழுப் பொறுப்பு நிலை **[M.C. Mehta Vs Union of India, AIR 1987 SC 1086]** உள்ளிட்ட தீங்குகள் வின்ஃபீல்டின் பரந்த கொள்கைக்கு வலுவூட்டும் சான்றுகளாகும்.

சால்மண்ட் எழுதிய 'தீங்குகள் சட்ட' நூலின் 17-வது பதிப்பின், பதிப்பாசிரியர் ஹியுஸ்டன் (Heuston), சால்மண்டின் விமர்சகர்கள் அவரை தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என்றும், தீங்குகளின் சட்டம், பல புதிய தீங்குகளை உள்ளடக்கமுடியாத மற்றும் விரிவுபடுத்த முடியாத ஓர் மூடப்பட்ட அமைப்பு என்பதான நிலைப்பாட்டினை அவர் எப்பொழுதும் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அறிஞர் வின்ஃபீல்டும் குறுகிய மற்றும் நடைமுறை நோக்கிலிருந்து பார்க்கும்போது, இரண்டாவது கொள்கை போதுமானதாக இருக்கும். ஆனால் பரந்த முறையில் பார்க்கும்போது முதலாவது கொள்கை செல்லுந்தன்மை பெறும் எனக் குறிப்பிட்டிருப்பதன்மூலம் தற்போது அவர் தனது நிலைப்பாட்டினை மாற்றிக் கொண்டுவிட்டார்.

நாம் தீங்கியல் சட்டத்தை, அதன் கடந்த கால மற்றும் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொள்ளாமல், நடைமுறையில் செயல்படுத்தப்படும் தீங்கியல் சட்டத்தை

கண்டிப்பான உணர்வில் (strict sense) நோக்கும்போது அது இரண்டாவது கொள்கையுடன் தொடர்பு கொண்டிருப்பதையும், அதே நேரத்தில், தீங்கியல் சட்டத்தை பரந்த பார்வையில் அதாவது அது பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளதையும் தொடர்ந்து வளர்ந்து வருவதையும் கவனத்தில் கொள்ளும்போது, அது முதல் கொள்கையுடன் தொடர்பு கொண்டிருப்பதையும் புரிந்து கொள்ளலாம். ஆக மொத்தத்தில் இரண்டு கொள்கைகளும் தீங்கியல் பொறுப்பு நிலைக் குறித்த சரியான நிலையை எடுத்தியம்புவதாக இல்லை. இதற்கு காரணம், தீங்கியலில் பொறுப்பு நிலையை தீர்மானிப்பதற்கு என்று, அனைத்து நேர்வுகளுக்கும் பொருந்தக்கூடிய உறுதியான விதிகள் (Concrete rules) ஏதுமில்லை என்பதாகும்.

5. "சட்டப்படியான இழப்பு உண்மையான இழப்போ அல்லது பண இழப்போ அன்று" - இவ்வாக்கியத்தை இரண்டு முதுமொழிகளின் துணை கொண்டு முடிவு செய்யப்பட்ட முக்கியமான வழக்குகளுடன் விரிவாக விவாதிக்கவும். ("Legal damage is neither identical with actual damage nor it is pecuniary" - Discuss this statement in detail with the help of two maxims along with leading case laws) - May-2016.

✦ **'சேதமில்லாத் தீங்கு வழக்கு தொடரத்தக்கதே, ஆனால் தீங்கில்லா சேதம் வழக்கு தொடரத்தக்கதல்ல'. இக்கூற்றை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும். ('Injuria sine damnum is actionable, but damnum sine injuria is not' - Explain the statement with reference to decided cases).**

SN - 5 **சேதமில்லா தீங்கு / Injuria sine damnum, May-2019(v), Nov-2017, Nov-2016, Nov-2014(v).**

SN - 6 **தீங்கில்லா ஊறு மற்றும் ஊறில்லாத் தீங்கு / Damnum sine injuria and Injuria sine damno., - May-2016(v)**

விடைச்சுருக்கம்: (அ) சட்டப்படியான இழப்பு - (ஆ) சேதமில்லாத் தீங்கு - (இ) தீங்கில்லா சேதம்

(அ) சட்டப்படியான இழப்பு (Legal damage)

'சட்டப்படியான இழப்பு' என்பது தீங்கியல் பொறுப்பு நிலையை தீர்மானிக்கும் ஓர் முக்கிய கூறாகும். சட்டம், சமுதாயத்தில் உள்ள தனிநபர்களுக்கு பல உரிமைகளை வழங்கியுள்ளது. சட்டம் அங்கீகரித்து பாதுகாக்கும் தனிப்பட்ட நபர்களின் சிலக்குறிப்பிட்ட நலன்களே சட்ட உரிமை என்பதாகும். நபர்களிடம் சேர்ந்தடைந்துள்ள இத்தகைய சட்ட உரிமைகளை அனைவரும் மதிக்க கடமை கொண்டுள்ளனர். தீங்கியல் பொறுப்பு நிலையை வரையறுக்கும் பேராசிரியர் வின்ஃபீல்ட், "சட்டத்தால் முதன்மையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமை

மீறுகையினின்றே தீங்கியல் பொறுப்பு நிலை எழுகிறது" என்பதைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நபர், மற்றொரு நபர்பால் கொண்டுள்ள சட்டக் கடமையை மீறும்போது அந்த மற்றொரு நபருக்கு சட்டப்படியான இழப்பு ஏற்படுகிறது. சட்டப்படியான இழப்பு தன்னிலையிலேயே (perse - i.e., itself) வழக்கு தொடரத்தக்க தீங்காகும். அதாவது சட்டப்படியான இழப்பு என்பது, பிரதிவாதியின் செயல் வாதியின் உரிமையை மீறியதாக இருந்தாலே போதுமானது; இங்கு வாதிக்கு உண்மையான இழப்போ அல்லது பணரீதியிலான இழப்போ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இந்நிலைக்கு முற்றிலும் மாறாக, ஒரு நபர் தன்னுடைய சட்டப்படியான உரிமையை செயல்படுத்தும்போது மற்றொருவருக்கு ஏற்படும் இழப்பு சட்டப்படியான இழப்பாகாது என்பதுடன் அந்நபரை தீங்கியல் பொறுப்புநிலைக்கும் உட்படுத்த முடியாது. சட்டப்படியான இழப்பு குறித்த தீங்கியல் சட்டத்தின் இவ்விரண்டு நிலைகள்தாம் முறையே 'சேதமில்லாத் தீங்கு' (Injuria sine damno., i.e., Injury without damage) மற்றும் 'தீங்கில்லா சேதம்' (Damnum sine injuria - i.e., damage without infringment of legal right) எனக் குறிப்பிடப்படுகிறது.

(ஆ) சேதமில்லாத் தீங்கு (Injuria sine damno)

ஓர் நபரின் செயல் மற்றொரு நபருக்கு இழப்பு அல்லது சேதத்தை விளைவிக்காமல் இருந்தாலும்கூட, அத்தகைய முதலாம் நபரின் செயல், இரண்டாம் நபரின் சட்ட உரிமையை மீறியிருந்தாலே, முதலாம் நபர் தீங்கியல் பொறுப்புநிலைக்கு உட்படுத்தப்படுவார். சுருக்கமாக, ஒருவருக்கு இழப்பு / சேதம் ஏதும் விளைவிக்காமல் அவரது சட்ட உரிமைக்கு ஊறு விளைவிப்பதே 'சேதமில்லாத் தீங்கு' எனப்படும். இச்சட்ட முதுமொழியின்படி, பிரதிவாதியின் செயல், வாதியின் சட்ட உரிமையை மீறியிருந்தாலே போதுமானது; வாதிக்கு உண்மையில் எவ்வித சேதமோ அல்லது பணஅளவிலான இழப்போ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மேலும் சேதமில்லாத் தீங்கு தன்னிலையிலேயே வழக்கிடத் தக்கதாகும்; அதாவது வாதி, தனக்கு ஏற்பட்ட இழப்பை மெய்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை; மாறாக, பிரதிவாதியின் தீங்கான செயலை (வாதியின் சட்ட உரிமையை மீறிய செயலை) மெய்ப்பித்தாலே போதுமானது. சேதமில்லாத் தீங்கில், வாதிக்கு உண்மையான இழப்போ அல்லது பண அளவிலான இழப்போ ஏற்படாவிட்டாலும்கூட, வாதிக்கு இழப்பு ஏற்பட்டதாக சட்டமே அனுமானிக்கும்.

Injuria sine damno எனும் இலத்தீன் முதுமொழியில் இடம் பெற்றுள்ள சொற்களின் பொருள்கள் பின்வருமாறு: Injuria - ஓர் சட்ட உரிமையை மீறுதல் (Infringement of a legal right);

Sine - 'இன்றி' அல்லது 'இல்லாமல்' (without); மற்றும் Damnum or Damno - உண்மையான இழப்பு அல்லது சேதம் அல்லது கெடுதி (Substantial loss or damage or harm).

இனி சேதமில்லா தீங்கு தொடர்பான சில முக்கிய வழக்குகளைக் காண்போம்.

Ashby Vs White., (1703) 2 Ld. Raym. 938., எனும் வழக்கில், வாதி. பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியை பெற்றிருந்தும், பிரதிவாதியான தலைமை தேர்தல் அலுவலர், வாக்கு செலுத்துவதற்கு வாதியை அனுமதிக்கவில்லை. பிரதிவாதியின் தவறான செயலால் (வாதியை வாக்களிக்க அனுமதிக்காதது) வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. ஏனெனில் வாதி. எவருக்கு வாக்களிக்க விரும்பினாரோ, அவரே வெற்றியும் பெற்றார். இருப்பினும் வாதி, தனது சட்ட உரிமைமீறப்பட்டதற்கு இழப்பீடு கோரி வழக்குத் தொடர்ந்தார். பிரதிவாதியின் சட்டவிரோத நடத்தையின் விளைவாக வாதிக்கு உண்மையான இழப்போ அல்லது பண அளவிலான இழப்போ ஏற்படவில்லை என்றும், இதன்பொருட்டு நடவடிக்கை எடுப்பதற்கு முன்தீர்ப்பு நெறி ஏதுமில்லை என்பதால் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல எனவும் பிரதிவாதியின் தரப்பில் வாதிடப்பட்டது. தலைமை நீதிபதி ஹோல்ட் (Holt CJ), வாதியின் சட்ட உரிமை மீறல் கண்டிப்பாக பரிகாரம் பெறத்தக்க ஓர் தீங்கு என்றும் பணமுறையிலான இழப்பை மெய்ப்பிக்காமலேயே நடவடிக்கை எடுக்கத்தக்கதென்றும் குறிப்பிட்டு பிரதிவாதியின் பொறுப்புநிலையை உறுதி செய்தார்.

Marzetti Vs. Williams, (1830) 1 B&Ad 415., வங்கித் தொழில் புரிபவர், வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் போதிய தொகை இருந்தும், வாடிக்கையாளர் காசோலையில் குறிப்பிட்டிருந்த தொகையை வழங்க மறுத்தார். அதனால் வாடிக்கையாளருக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றாலும்கூட, நீதிமன்றம் சேதமில்லாத் தீங்கு கொள்கையை பயன்படுத்தி, வாடிக்கையாளர் இழப்பீடு பெறுவதற்கு தகுதி பெற்றவரே என்பதைக் குறிப்பிட்டது.

Municipal Board of Agra Vs. Asharfi Lal (1921) 44 All 202., அஷார்ஃபி லால் (வாதி) என்பவர் வாக்காளராக, வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தார். வாக்காளர் பட்டியலில் தவறுதலாக அவரின் பெயர் விடுபட்டு விட்டதன் காரணமாக அவரின் வாக்களிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. இதனை எதிர்த்து வாதி தொடர்ந்த வழக்கில், வாக்காளர் பட்டியலில் வாதியின் பெயர் விடப்பட்டது, அவரின் வாக்களிக்கும் உரிமையை இழக்கச் செய்ததால், அவரின் சட்ட உரிமையை இழக்கச் செய்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அலகாபாத் உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

Bhim Singh Vs. State of J&K., AIR 1986 SC 496., என்ற வழக்கில், ஜம்மு-காஷ்மீர் சட்டமன்ற உறுப்பினரான பீம்சிங், சட்டமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக செல்லும்போது, தவறான முறையில் காவலர்களால் காவலில் வைக்கப்பட்டார். மேலும் சட்டப்படியான காலத்திற்குள் அவரை நடுவர்முன் முன்னிலைப்படுத்தவில்லை. இதன்விளைவாக, சட்டமன்ற கூட்டத்தொடரில் ஒரு உறுப்பினராக கலந்து கொள்ளும் அவரின் அரசமைப்புச் சட்ட உரிமையும் இழக்கச் செய்யப்பட்டது. இதுதவிர, அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 21-ன்கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள 'தனிநபர் சுதந்திரம்' எனும் அடிப்படை உரிமையும் மீறப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் மனு முடிவு செய்யப்பட்ட நேரத்தில் பீம்சிங் விடுவிக்கப்பட்டிருந்தாலும்கூட, விளைவுறு பரிகாரம் என்பதன் வாயிலாக (by way of consequential relief) ரூபாய் 50,000/- எச்சரிக்கை இழப்பீடாக வழங்க ஆணையிடப்பட்டது.

(இ) தீங்கிலா சேதம் (Damnum sine injuria)

(அடுத்துவரும் வினாவிற்கான விடையில் காண்க)

6. "ஊறனைத்தும் இழப்பினைத் தெரிவிக்கும் ஆனால் இழப்பனைத்தும் ஊறாகாது" – இக்கூற்றை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் துணையுடன் விவாதிக்கவும். ('Every injury imparts damage, but every damage is not injury' - Discuss the statement in the light of decided cases) - May-2017.

- **'சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிமை மீறப்படாத இடத்தில் பொறுப்புநிலை ஏற்படுவதில்லை' - விவாதிக்க. ('There is no liability if no infringement of legal right is proved' - Discuss) - May-2013.**
- **பல்வேறு செயல்கள் ஊறு விளைவிக்கக்கூடியதாக இருப்பினும், அவை தீங்குகளும் அல்ல; அவை பற்றி வழக்கிடும் உரிமையும் இருப்பதில்லை – கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் உடன் எடுத்துக்காட்டுகளும் காட்டி நிறுவுக.(There are many acts which, though cause injury, are not wrongful and give no right of action. Justify with principles and illustrations).**

SN - 7 **தீங்கில்லா ஊறு / Damnum sine injuria - May-2018(v), Nov-2012(v).**

விடைச்சுருக்கம்: (அ) வினாவிற்கான விளக்கம் அல்லது தீங்கில்லா ஊறு (ஆ) தீர்வுற்ற வழக்குகள்

(அ) வினாவிற்கான விளக்கம் அல்லது தீங்கில்லா ஊறு (Explanation or Damnum sine injuria)

தீங்கியல் சட்டத்தின் பின்னணியில் உள்ள அடிப்படைக் கொள்கை, 'எவரொருவரையும் சொல்லாலும் செயலாலும் ஊறு விளைவிக்கலாகாது' ('alterum non leadre' - i.e., 'to hurt no one by word or deed') என்பதாகும். நபர்கள் தங்களின் உடல், சொத்து, நற்பெயர் (புகழ்) உள்ளிட்டவை தொடர்பாக, சட்டப்படி பாதுகாக்கப்பட்டுள்ள தங்களின் உரிமைகளை அமைதியான மற்றும் கண்ணியமான முறையில் துய்ப்பதை அனுமதிப்பதே தீங்கியல் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சட்டம், சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனிநபருக்கும் அங்கீகரித்துள்ள இத்தகைய உரிமைகளை ஒவ்வொருவரும் மதித்து பின்பற்ற

கடமை கொண்டுள்ளனர். எனவே எவரேனும் ஒருவர், மற்றொருவரின் சட்ட உரிமையை மீறினால் தீங்கியல் பொறுப்பு நிலைக்கு உட்படுத்தப்படுவார். இதனை வேறு முறையில் கூறுவதெனில், சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிமை மீறப்படாத இடத்தில் பொறுப்புநிலை ஏற்படுவதில்லை. இங்கு முக்கியமாக நோக்க வேண்டியது சட்ட உரிமை மீறப்பட்டுள்ளதா என்பதாகும். சட்ட உரிமைக்கு தீங்கு ஏதும் விளைவிக்காத செயலால் ஒரு நபருக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டிருந்தாலும், அச்செயல் தீங்காகாது. தீங்கியல் சட்டத்தின் இத்தகைய நிலையையே 'தீங்கில்லா சேதம்' (Damnum sine injuria - i.e., damage without infringement of legal right) எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகிறது.

இனி 'தீங்கில்லா சேதம்' அல்லது 'தீங்கில்லா ஊறு' தொடர்பான சில முக்கியமான தீர்வுற்ற வழக்குகளைக் காண்போம்.

(ஆ) தீர்வுற்ற வழக்குகள் (Case Laws):

Gloucester Vs. Grammar School, (1410) YB 11 Henry IV 47., என்ற வழக்கில் பிரதிவாதியான ஆசிரியர், வாதியின் பள்ளி அருகே போட்டியாக தனது பள்ளியை துவக்கினார். போட்டியின் காரணமாக, வாதி தனது பள்ளியில் படிக்கும் மாணவர்கள் செலுத்தும் காலாண்டுக் கட்டணத்தை 40 பென்ஸ்-ல் (Pence) இருந்து 12 பென்ஸ் ஆக குறைக்க வேண்டியதாயிற்று. வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பரிகாரம் ஏதும் பெற இயலாது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. பிரதிவாதி தனது சட்ட உரிமையை செயல்படுத்தியதன் காரணமாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டாலும்கூட, வழக்குத்தொடர முடியாது என்பதைக் குறிப்பிட்ட நீதிபதி ஹேங்க்ஃபோர்ட் (Hankford J.), தீங்கில்லா ஊறு விளைவிக்கமுடியும் என்பதை விளக்கினார்.

Acton Vs Blundell, (1843) 12 M & W 324., என்ற வழக்கில், பிரதிவாதிகள் நிலக்கரிச் சுரங்கம் தோண்டியதன் காரணமாக, சுமார் ஒரு மைல் தொலைவிலிருந்த வாதியின் கிணற்றுக்குச் செல்லும் நீரூற்று தடைபட்டது. நீதிமன்றம், பிரதிவாதிகள் தீங்கியல் பொறுப்புக்கு உள்ளாகமாட்டார்கள் என்று குறிப்பிட்டது. மேலும் "மேற்புறத்தை சொந்தமாகக் கொண்டிருக்கும் நபர், அங்கு தோண்டவும் மற்றும் அங்கு காணக் கிடைக்கும் அனைத்தையும் தன்னுடைய இயல்பான மற்றும் மனமகிழும் நோக்கங்களுக்கு பயன்படுத்தவும் மற்றும் அத்தகைய உரிமையை செயல்படுத்தும்போது, அருகில் உள்ளோரின் கிணற்றுக்குச் செல்லும் நிலத்தடி ஊற்றினுள் சேர்ந்துள்ள நீரை தடுப்பது அல்லது முழுதாக வற்றச் செய்வது போன்று, அவருக்கு அருகில் வசிப்பவருக்கு ஏற்படும் இத்தகைய அசௌகரியம், நடவடிக்கை எடுப்பதற்கு காரணமாக அமைய முடியாத தீங்கில்லா ஊறு என்று விவரிப்புனுள் அடங்கும்" என்பதை விளக்கியது.

Chesmore Vs Richards., (1859) 7 HLC 349., என்ற வழக்கில் நீராலையின் உரிமையாளரான வாதி, 60 ஆண்டுகளுக்கும் மேலாக அருகிலிருந்த 'வாண்டில்' ஆற்றின் (river wandle) தண்ணீரை பயன்படுத்தி வந்தார். நிலத்தடி ஊறும் மழை நீரே ஆற்றின் முதன்மை ஆதாரமாக இருந்தது. பிரதிவாதியான

கிராய்டன் உள்ளாட்சி சுகாதார வாரியம் (Local Board of Health of Croydon), கிராய்டன் நகரத்தின் நீர் தேவைக்காக, வாதியின் நிலத்தடி செல்லும் நீரூற்று தடைபடும் அளவிற்கு மிகவும் ஆழமான கிணறு தோண்டி அதிகளவில் நீர் எடுத்தனர். ஆற்று நீரின் முதன்மை ஆதாரமான நிலத்தடி நீரை பிரதிவாதிகள் அதிகளவில் பயன்படுத்தியதால், வாதியின் நீராலை தொடர்ந்து இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதுதொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், நிலத்தின் உரிமையாளர் தன்னுடைய இடத்தில் கிணறு தோண்டவும், நிலத்தடி நீரை பெறவும் உரிமை கொண்டுள்ளனர் என்றும், இது ஓர் தீங்கில்லா ஊறு வழக்கு (a case of damnum sine injuria) என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Mogul Steamship Co. Vs Mcgregor Gow & Co., (1892) AC 25., என்ற வழக்கில் சீனாவில் இருந்து இங்கிலாந்திற்கு தேயிலையை எடுத்து வரும் 'A', 'B', 'C', மற்றும் 'D' எனும் நான்கு கப்பல் உரிமையாளர்கள் ஒருங்கிணைந்து 'F' என்ற போட்டிக் கப்பல் உரிமையாளரை வணிகத்திலிருந்து விரட்டுவதற்காக, 'F'-ஐ தவிர்த்து தங்கள் கப்பல்களில் சரக்கை ஏற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளை அளித்தார்கள். 'F'-க்கு பெருத்த நட்டம் ஏற்பட்டதன் காரணமாக, தனக்கு எதிராக A, B, C மற்றும் D ஆகியோர் கூட்டுச்சதியில் (conspiracy) ஈடுபட்டு இழப்பு ஏற்படுத்தியதாக வாதிட்டார். மேன்முறையீட்டு நீதிமன்றமும் மற்றும் பிரபுக்கள் அவையும் (House of Lords), பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான செயல் எதுவும் செய்யவில்லை என்பதைக் குறிப்பிட்டன. பிரதிவாதிகள், வாதிக்கு இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் கூட, தங்களின் தொழிலை விரிவுபடுத்தவும் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்குமான செயலையே செய்துள்ளனர் என்றும் உண்மையில் பிரதிவாதிகளுக்கு இடையேயான ஒற்றுமை வணிகம் மற்றும் போட்டியின் நோக்கமாக இருக்கும்வரை 'சட்டத்திற்கு முரணான' (illegality) என்றக் கூறு எதுவுமில்லை என்றும் பிரபுக்கள் அவை தனது தீர்ப்பில் விளக்கம் அளித்தது.

Mayor of Bradford Vs. Pickles, (1895) AC 587., என்ற வழக்கில் வாதியான 'பிராட்ஃபோர்டு' நகராட்சி, பிரதிவாதியின் நிலத்தை ஒட்டியுள்ள தனது இடத்தில் நீரேற்று நிலையம் அமைத்து நகரில் வசிக்கும் மக்களுக்கு நீர் விநியோகம் செய்து வந்தது. பிரதிவாதி தனது நிலத்தில் ஆழ்துளைக்கிணறு தோண்டியதன் காரணமாக, வாதியின் நிலத்தில் நீரோட்டம் குறைந்ததுடன் நீரின் நிறமும் மாறியது. பிரதிவாதி, தனது நிலத்தை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று கோரியதை வாதி மறுத்த காரணத்திற்காக, வாதிக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஆழ்துளைக்கிணறு தோண்டினார் என்பதால் அதனை தடை செய்து உறுத்துக்கட்டளை (injunction) பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தில் வாதி தரப்பில் கோரப்பட்டது. பிரதிவாதி தனது சட்ட உரிமையை செயல்படுத்தியுள்ளதால், அவரது செயல் வாதிக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்கிற தீய எண்ணத்துடன் செய்யப்பட்டிருந்தாலும்கூட அவருக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என்று பிரபுக்கள் அவை தீர்ப்பளித்தது.

Town Area Committee Vs Prabhu Dayal., AIR 1975 All 132., என்ற வழக்கில், சாலையின் மீது நீட்டித்து கட்டப்பட்டிருந்த தன்னுடைய கட்டுமானத்தை உரிய அறிவிப்பின்றி நகர்ப்பகுதிக்குழு (town area committee) இடித்துவிட்டதற்காக இழப்பீடு கோரி வாதி வழக்கிட்டார். நீதிமன்றம், வாதி நகர்ப்பகுதி குழுவிடமிருந்து உரிய அனுமதி பெறாமல் கட்டடம் கட்டியதன் மூலம் தாமே சட்டத்திற்கு புறம்பான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதைக் குறிப்பிட்டது. மேலும் அனுமதி பெறாத கட்டிடத்தை இடிப்பது உரிமையாளரின் சட்ட உரிமையை மீறிய செயலாகாது (not injuria). ஆகவே பிரதிவாதிகள் செயல் வாதிக்கு இழப்பை ஏற்படுத்தியிருந்தாலும்கூட, அதற்கான இழப்பீட்டை பெறமுடியாது என்பதையும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் விளக்கியிருந்தது.

7. **"ஓர் தீங்கு என்பது குடிமை ஊறாகும். ஆனால் எல்லா குடிமை ஊறுகளும் தீங்கு ஆகாது" - விவாதிக்கவும். ("A Tort is a civil injury, but all civil injuries are not tort" - Discuss). - May-2019 (அல்லது)**

✦ **"ஓர் தீங்கு என்பது உரிமையியல் ஊறு ஆகும். ஆனால் அனைத்து உரிமையியல் ஊறுகளும் தீங்கு ஆகாது" - விளக்குக. ("A Tort is a civil injury, but all civil injuries are not torts") - May-2018(v).**

✦ **"தீங்கு ஒரு குடிமை தவறாக இருப்பினும் அது ஏனைய குடிமை தவறுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது" - விவாதிக்க. ("Though tort is a civil wrong, it completely differs from other civil wrongs"- Elucidate) - May-2018**

SN - 8 **தீங்கும் ஒப்பந்தமும் / Tort and Contract, Nov-2015 அல்லது தீங்கும் ஒப்பந்த மீறுகையும் / Tort and breach of contract.**

SN - 9 **தீங்கியல் மற்றும் நம்பிக்கை மோசடியை வேறுபடுத்துக / Distinguish between tort and breach of trust, May-2017 (அல்லது) தீங்கும் பொறுப்புரிமை மீறலும் / Tort and breach of trust.**

SN - 10 **தீங்கிற்கும் ஒப்பந்த போலமைக்கும் இடையேயான வேறுபாடு / Distinction between tort and quasi contract (அல்லது) தீங்கும் ஒப்பந்த போல்வும் / Tort and quasi - contract.**

SN - 11 **தீங்கும் ஒப்படைவும் / Tort and bailment**

விடைச்சுருக்கம்: (அ) தீங்கும் ஒப்பந்தமும் - (ஆ) தீங்கும் பொறுப்புரிமை மீறலும் அல்லது தீங்கும் நம்பிக்கை மோசடியும் (இ) தீங்கும் ஒப்பந்த போலமையும் - (ஈ) தீங்கும் ஒப்படைவும்

'தீங்கு' ஓர் உரிமையியல் தவறாக இருந்தாலும், இது, ஒப்பந்தம், ஒப்பந்த போலமை, பொறுப்புரிமை, ஒப்படைவு போன்ற பிற உரிமையியல் தவறுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. எனவே தீங்கியல் சட்டத்தை முறையாகப் புரிந்து கொள்வதற்கு, இதனை பிற உரிமையியல் அல்லது குடிமை தவறுகளோடு வேறுபடுத்திக் காண்பது மிகுந்த பயனளிக்கும்.

(அ) தீங்கும் ஒப்பந்தமும் (Tort and contract):

சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்குமான பல்வேறு உரிமையியல் உரிமைகளை அல்லது குடிமை உரிமைகளை தீங்கியல் சட்டம் அங்கீகரித்துள்ளது. உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இருப்பக்கங்கள் போன்றவையாகும். எனவே சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனி நபர்களின் உரிமைகளை மீறக்கூடாது என்கிற கடமை சமுதாயத்தில் உள்ள பிற அனைத்து உறுப்பினர்களுக்கும் உண்டு. எவரேனும் ஒருவர், மற்றொருவரின் சட்டப்படியான உரிமையை மீறினால், அந்நபர் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடமையை மீறுவதாகிறது. சட்டப்படியான கடமையை மீறிய நபருக்கு எதிராக, பாதிக்கப்பட்டவர், அறுதியிடப்படாத இழப்பீடு வழங்கக்கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரத்தக்கதே தீங்கு ஆகும். இதற்கு மாறாக ஒப்பந்தம் என்பது, 1872-ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு-2(h)-ல் குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தினால் நடைமுறைப்படுத்தக்கூடிய ஓர் உடன்பாடே ஒப்பந்தமாகும். மேலும் இச்சட்டத்தின் பிரிவு-10, ஓர் செல்லத்தக்க ஒப்பந்தத்தின் அடிப்படைக்கூறுகளை எடுத்துரைக்கிறது. ஒப்பந்தத்தில் ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் தாங்களாகவே, தங்களுக்கு பொருந்தும் நிபந்தனைகள், உரிமைகள் மற்றும் கடமைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். தரப்பபினர்களில் ஒருவரின் உரிமை மற்றொருவரின் கடமையாகிறது. எனவே ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிபந்தனையை ஒரு தரப்பு மீறும்போது, மற்றொரு தரப்பு அறுதியிட்ட இழப்பீடு கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர உரிமை கொண்டுள்ளார்.

அ(i) தீங்கிற்கும் ஒப்பந்தம் அல்லது ஒப்பந்த மீறுகைக்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between tort and contract or breach of contract): தீங்கு மற்றும் ஒப்பந்தம் (அல்லது ஒப்பந்த மீறுகை) ஆகிய இரண்டுமே உரிமையியல் தவறுகளாகும். இரண்டிலுமே பாதிக்கப்பட்ட நபர்கள்தாம் வழக்குத் தொடுக்கின்றனர். மேலும் இத்தகைய வழக்குகளில் தவறிழைத்த நபரிடமிருந்து இழப்பீட்டுத் தொகையே பரிகாரமாக கோரப்படுகிறது. இத்தகைய ஒத்தத்தன்மை இவற்றினுக்கு இடையே இருந்தாலும் பின்வரும் பரந்த வேறுபாடுகள் உள்ளது.

1.கடமையை நிர்ணயித்தல் (Fixation of duty):

தீங்கியலில், கடமை சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

ஒப்பந்தத்தில் ஒப்பந்தத்தின் தரப்பினர்களே கடமையை நிர்ணயிக்கின்றனர்.

2. கடமைத் தொடர்பு (Attribution of duty):

தீங்கியலில், சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் மற்ற நபரின் சட்ட உரிமையை மீறக்கூடாது எனும் கடமைத் தொடர்பு உள்ளது.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நபர்/நபர்கள் குறித்த கடமைத் தொடர்பு மட்டுமே இருக்கும்.

3. உரிமை மீறுகை (Violation of Right):

தீங்கு என்பது ஓர் மன்று சுட்டிய உரிமை மீறுகையாகும் (violation of right in rem). அதாவது ஓர் நபர் கொண்டுள்ள சட்ட உரிமையை உலகிலுள்ள அனைத்து நபர்களுக்கு எதிராக செயல்படுத்தக்கூடிய பொதுமுக உரிமையாகும்.

ஒப்பந்த மீறுகை என்பது ஓர் நபர் சுட்டிய உரிமை மீறுகையாகும் (violation of right in personam). அதாவது ஒப்பந்தத்தினின்று எழும் உரிமையை குறிப்பிட்ட நபர் அல்லது தரப்புக்கு (party) எதிராக மட்டுமே செயல்படுத்தக்கூடிய தனிமுக உரிமையாகும்.

4. அங்கீகரிக்கப்பட்ட சட்ட உறவின் அவசியம் (Need of Privity):

தீங்கிற்கான வழக்கில், அங்கீகரிக்கப்பட்ட சட்ட உறவு அவசியமல்ல அல்லது அதனை மெய்ப்பிக்கத் தேவையில்லை.

ஒப்பந்த மீறுகைக்கான வழக்கில், தரப்பினர்களுக்கு இடையேயான ஒப்பந்த உறவை (Privity of contract) மெய்ப்பிப்பது அவசியமாகும்.

5. உள்நோக்கம் (Motive):

தீங்கியலில் உள்நோக்கம் சில நேர்வுகளில் கவனத்தில் கொள்ளப்படும்.

ஒப்பந்த மீறுகையில் உள்நோக்கம் தொடர்பற்றது.

6. இழப்பீடுகள் (Damages):

தீங்கியலில் இழப்பீட்டின் அளவு, பெயரளவிலான இழப்பீடு அல்லது எச்சரிக்கை இழப்பீடு போன்று வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறாக இருக்கும்.

ஒப்பந்த மீறுகையில் வழங்கப்படும் இழப்பீடு பண அளவில் அடைந்த நட்டத்திற்கேற்ப இருக்கும்.

7. மூன்றாம் தரப்பினர் வழக்கிடுதல் (Suit by third party):

தீங்கியலில் தீங்கு ஏற்படுத்துபவருக்கும் மற்றும் தீங்கிற்கு உள்ளாகும் நபருக்கும் இடையே ஒப்பந்தம் ஏதும் இல்லாமல் இருந்தாலும்கூட, மூன்றாம் தரப்பினர் ஒருவர் வழக்கிட முடியும்.

ஓர் ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்த மீறுகைக்காக மூன்றாம் தரப்பினர், சில அரிதான சூழ்நிலைகள் தவிர, பொதுவாக வழக்கிட முடியாது.

8. தொடர்பு (Concern):

தீங்கியல் சட்டம் இழப்புகளுடன் (loses) தொடர்பு கொண்டது.

ஒப்பந்தச் சட்டம் உறுதியுரைகளுடன் (promises) தொடர்பு கொண்டது.

9. காலவரையறை (Period of limitation):

தீங்கியலில், இழப்பு அல்லது சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து காலவரையறை தொடங்கும்.

ஒப்பந்த மீறுகையில், கடப்பாடு மீறப்பட்ட தேதியிலிருந்து காலவரையறை தொடங்கும்.

(ஆ) தீங்கும் பொறுப்புரிமை மீறலும் (Tort and breach of trust) (அல்லது) தீங்கிற்கும் நம்பிக்கை மோசடிக்கும் இடையேயான வேறுபாடு (Distinction between tort and breach of trust)

ஓர் பொறுப்புரிமை அமைப்பு (Trust) என்பது, நம்பகத்தன்மை உறவின் அடிப்படையில் (fiduciary relationship), பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்துபவர் (trustor), பொறுப்புரிமையர் (trustee) என அழைக்கப்படும் மற்றொருவருக்கு, பயனாளிகள் (beneficiaries) என அழைக்கப்படும் மூன்றாம் தரப்பினரின் ஆதாயத்திற்காக சொத்தின் அல்லது சொத்துகளின் உரிமை மூலத்தை கொண்டிருப்பதற்கான உரிமையை அளிப்பதைக் குறிக்கும். இங்கு பயனாளிகளின் ஆதாயத்திற்காக சொத்துகளை வைத்திருப்பதற்கும் அல்லது நிருவகிப்பதற்கும் பொறுப்புரிமையரிடம் அவை ஒப்படைக்கப்படுகிறது. சாதாரணமாக, பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்த விரும்புவோர், தமது நம்பிக்கைக்கு உரிய நபரையே பொறுப்புரிமையராக நியமிப்பர். பொறுப்புரிமை ஏற்படுத்திய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பொறுப்புரிமையர், சொத்துகளை நிருவகிக்க கடப்பாடு கொண்டுள்ளார். தவறும்பட்சத்தில் பொறுப்புரிமை மீறல் புரிந்தவராகுவார். எனவே பொறுப்புரிமை மீறல் என்பதும் நம்பிக்கை மோசடியேயாகும்.

அடிப்படையில் தீங்கிற்கும் பொறுப்புரிமை மீறலுக்கும் இடையே மூன்று முக்கிய வேறுபாடுகள் உள்ளது. முதலாவதாக, தீங்கு மற்றும் பொறுப்புரிமை மீறல் என்ற வகைப்பாடு (classification) வரலாற்று அடிப்படையில் எழுந்ததாகும். தீங்கியல் சட்டம் இயற்றாச் சட்டத்திலிருந்து (common law) தோன்றியதாகும். இங்கிலாந்தில் தீங்கிற்கு எதிரான இழப்பீட்டிற்காக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். ஆனால் பொறுப்புரிமை மீறலுக்கு 'சேன்சரி' (chancery) நீதிமன்றத்தில்தாம் பரிகாரம் பெற முடியும்.

இரண்டாவதாக, பொறுப்புரிமை மீறலில், பொறுப்புரிமையை மீறிய பொறுப்பாண்மையருக்கு எதிராக, பொறுப்புரிமை சொத்திற்கு (trust property) ஏற்படுத்திய இழப்பிற்கு ஏற்ப பயனாளி இழப்பீடு கோர முடியும். அதாவது பயனாளி வழக்கிடுவதற்கு முன்னரே இழப்பீட்டுத்தொகையை கணக்கிட்டு வழக்கு தொடர முடியும். எனவே பொறுப்புரிமை மீறலுக்கு எதிராக வழங்கப்பெறும் இழப்பீடு, அறுதியிட்ட இழப்பீடாகும் (liquidated damage). ஆனால் தீங்கிற்காகப் பெறும் இழப்பீடு அறுதியிடா இழப்பீடாகும் (unliquidated damage)

மூன்றாவதாக, பொறுப்புரிமையமைப்பு சட்ட முழுமையும் சொத்துரிமைச் சட்டத்தின் ஓர் பிரிவாகும். ஆனால் தீங்கியல் சட்டம் சொத்துரிமைச் சட்டத்தின் ஓர் பிரிவாக கருதப்படுவதில்லை.

(இ) தீங்கும் ஒப்பந்த போலமையும் (Tort and quasi-contract) (அல்லது) தீங்கிற்கும் ஒப்பந்த போலமைக்கும் இடையேயான வேறுபாடு (Distinction between tort and quasi - contract):

ஒப்பந்த போலமை என்பது உண்மையில் ஓர் ஒப்பந்தமே அல்ல. சில சிக்கலான வழக்குகளில் தகைமை நெறியின் அடிப்படையில் முடிவு காண்பதற்காக நீதிபதிகள் உருவாக்கியதே ஒப்பந்த போலமை ஆகும். தரப்பினர்களுக்கு இடையே ஒப்பந்தம் ஏதும் இல்லாதபோது, அவர்களுக்கு இடையே இருந்த சூழ்நிலை, உறவு மற்றும் நடத்தையின் அடிப்படையில், ஓர் ஒப்பந்தம் இருந்தது போல் கருதுவதே ஒப்பந்த போலமையாகும். எடுத்துக்காட்டாக, X என்ற வியாபாரி, Y என்பவர் வீட்டில் தனது பொருள்களை தவறுதலாக வைத்து விடுவதாகவும், Y அவற்றை தன்னுடைய பொருளாகக் கருதி பயன்படுத்திக் கொண்டுவிட்டதாகவும் கருதிக் கொள்வோம். இங்கு X-க்கு நியாயமற்ற முறையில் இழப்பும் அதே நேரத்தில் Y-க்கு நியாயமற்ற முறையில் ஆதாயம் பெறுவதாவும் உள்ளது. எனவேதான் சட்டம், X-ன் பொருளை Y பயன்படுத்திக் கொண்டு, அதற்கு சமமான தொகையை கொடுப்பதாக அவர்களுக்கு இடையே ஓர் ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதாக கருதிக் கொள்வதன் பேரில் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. இது ஒப்பந்தம் போன்றது என்ற பொருளில் ஒப்பந்த போல்வு என்றும், நபர்களுக்கு இடையே இருந்த உறவை ஒப்பந்தம் போல் அமைந்ததாக கருத வேண்டும் என்ற பொருளில் ஒப்பந்த போலமை (ஒப்பந்தம் + போல் + அமை) என்றும் குறிப்பிடப்படுகிறது. இது, "எவரொருவரும் நியாயமற்ற முறையில் மற்றொருவரின் செலவில் தன்னை வளமான நிலைக்கு உயர்த்திக் கொள்ளலாகாது" ("No one shall enrich himself unjustly at the expense of another") எனும் சீரிய நோக்கத்தினை செயல்படுத்துகிறது.

தீங்கு மற்றும் ஒப்பந்தபோல்வு ஆகிய இரண்டிலும் சட்டமே கடமையை விதிக்கிறது என்பதன் அடிப்படையில் ஒத்தத்தன்மை உள்ளது. இருப்பினும் சிலக்குறிப்பிட்ட சூழ்நிலைகளில், தீங்கு ஒன்று செய்யப்பட்டிருந்து, பாதிப்புற்ற நபர், இழப்பீட்டிற்காக, தீங்கியல் வழக்கு தொடருவதற்குப் பதிலாக, தவறிழைத்தவர் பெற்ற ஆதாயத்தின் மதிப்பை திரும்பப் பெறுவதற்காக, ஒப்பந்த போல்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டிட விருப்புரிமை (choice) கொண்டுள்ளார். தீங்குற்ற தரப்பினர், தீங்கியல் அடிப்படையில் அல்லாமல் ஒப்பந்தப் போல்வு என்பதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதை தேர்வு செய்தால், அவர் தீங்கியல் அடிப்படையிலான தனது உரிமையை துறந்துவிட்டதாக (waived) கருதப்படும். இனி இவ்விரண்டிற்குமான வேறுபாட்டைக் காண்போம்.

இழப்பீடுகள் (damages): தீங்கியல் சட்டத்தின்கீழான இழப்பீட்டின் உரிமை கோரிக்கை (claim) எப்பொழுதுமே அறுதியிடப்படாத தொகைக்காக இருக்கும். ஒப்பந்தப் போல்வின் கீழான இழப்பீட்டிற்கான கோரிக்கை, அறுதியிடப்பட்ட தொகைக்காக இருக்கும்.

கடமைத்தொடர்பு (Attribution of duty): தீங்கியல் சட்டத்தின்கீழான கடமை, பொது நபர்கள் தொடர்பானதாக இருக்கும். ஒப்பந்தப் போல்வில், கடமைத்தொடர்பு ஓர் குறிப்பிட்ட நபரைக் குறித்ததாக இருக்கும்.

(ஈ) தீங்கும் ஒப்படைவும் (Tort and bailment):

ஒப்படைவு என்பது, ஒரு நபர் மற்றொருவரிடம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு பொருளை ஒப்படைத்து, அந்நோக்கம் நிறைவேறியதும் அதனை தம்மிடமோ அல்லது தாம் குறிப்பிடுகின்ற நபரிடமோ திரும்பத்தரவேண்டும் என்பதாக செய்து கொள்ளும் ஒப்பந்தத்தைக் குறிக்கும். இந்த ஒப்பந்தத்தில், பொருளைத் தருபவரை 'ஒப்படைவு செய்பவர்' (bailor) என்றும் அப்பொருளை ஏற்றுக் கொள்பவரை 'ஒப்படைவு பெறுபவர்' (bailee) என்றும் இவ்விரு நபர்களுக்கு இடையேயான ஒப்பந்தம், 'ஒப்படைவு ஒப்பந்தம்' (contract of bailment) என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஒப்படைவில், ஒப்படைவு செய்பவர் மற்றும் ஒப்படைவு பெறுபவர் ஆகிய இருவரும் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட உறவின் அடிப்படையில் கடமை எழுகிறது. ஆனால் தீங்கியலில் சட்டம் பொதுவாக நபர்களுக்கான கடமையை விதிக்கிறது. ஒப்படைவில் நபர்களுக்கு கிடைக்கும் உரிமை நபர் சுட்டிய உரிமையாகும். தீங்கியலில் நபர்களுக்கு கிடைக்கும் உரிமை மன்று சுட்டிய உரிமையாகும். ஒப்படைவுக் கடமை மீறுகையில் வாதிக்கு கிடைக்கும் இழப்பீடு அறுதியிடப்பட்ட இழப்பீடாகும். தீங்கியலில் வாதிக்கு கிடைக்கும் இழப்பீடு அறுதியிடப்படாத இழப்பீடாகும். சில நேர்வுகளில் ஒப்படைவின்கீழும், தீங்கியலின் கீழும் ஒரே சமயத்தில் பொறுப்புநிலை எழலாம். எடுத்துக்காட்டாக 'A' என்னும் நபர், 'B' என்பவருக்கு தனது 'காரை' (car) வாடகைக்கு அளிப்பதாகக் கொள்வோம். இங்கு 'B', 'A'-ன் காருக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல், குறிப்பிட்ட நேரம் முடிந்தவுடன், ஒப்படைவு பெற்றபோது இருந்த நிலையில் ஒப்படைக்க வேண்டும். 'B' தான் வாடகைக்கு பெற்ற காரில், கிராணைட் கற்களை ஏற்றிச் சென்று, காருக்கு கணிசமான சேதத்தை விளைவிப்பின், 'A' ஒப்பந்தவியல் சட்டத்தின்கீழ் அறுதியிட்ட இழப்பீட்டிற்காகவும், கவனமின்மையால் சேதம் விளைவித்ததற்காக, தீங்கியல் சட்டத்தின்கீழ் அறுதியிடப்படாத இழப்பீட்டிற்காகவும், 'B'-ன்மீது ஒரே சமயத்தில் வழக்கிடமுடியும். ஏனெனில் தீங்கியல் பொறுப்புநிலை, ஒப்படைவின் கீழான பொறுப்பு நிலையுடன் உடன் இணைந்ததாகவும் (coexist) இருக்கலாம்.

8. **தீங்கிற்கான பொறுப்புநிலை என்பதை வரையறு. இதனைக் குற்றப்பொறுப்பு நிலை மற்றும் ஒப்பந்த மீறலுக்கான பொறுப்பு நிலை ஆகியவற்றில் இருந்து வேறுபடுத்திக் காட்டுக. (Define tortious liability. Distinguish it from criminal and contractual liability) - Nov-2013**

SN - 12 **தீங்கு மற்றும் குற்றம் / Tort and crime, Nov-2017(v), May-2016, Nov-2012**

விடைச்சுருக்கம்: (அ) 'தீங்கியல் பொறுப்புநிலை' - வரையறை - (ஆ) தீங்கு மற்றும் குற்றம் அல்லது தீங்கியல் பொறுப்புநிலைக்கும் குற்றப் பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு - (இ) தீங்கியல் பொறுப்பு நிலைக்கும் ஒப்பந்த மீறலுக்கான பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு.

(அ) 'தீங்கியல் பொறுப்பு நிலை' - வரையறை ('Tortious liability' - Definition):

தீங்கியல் பொறுப்புநிலைக்கான மிகச்சிறந்த வரையறை பேராசியர் P.H.வின்ஃபீல்டின் வரையாகும். இவர் தீங்கியல் பொறுப்புநிலையை பின்வருமாறு வரையறுக்கிறார்:

"சட்டத்தினால் முதன்மையாக நிர்ணயிக்கப்பட்ட ஓர் கடமை மீறுகையினின்று பொறுப்பு நிலை எழுகிறது, இக்கடமை பொதுவாக நபர்கள் அனைவருக்குமானதும் மற்றும் இதன் மீறுகை அறுதியிடப்படாத இழப்பீட்டிற்குமான ஓர் வழக்கின்மூலம் தீர்வு பெறத்தக்கதுமாகும்."

மேற்கண்ட வரையறை, (i) தீங்கியல் பொறுப்புநிலை எப்போது எழுகிறது? (ii) எத்தகைய கடமை மீறுகையால் எழுகிறது? (iii) அக்கடமைக்கு கீழ்ப்படிய வேண்டிய நபர்கள் எவர்? (iv) தீர்வுக்கான வழி எது? மற்றும் (v) தீர்வினால் வாதிக்கு கிடைக்கும் இழப்பீட்டின்தன்மை எத்தகையது என்பது போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக உள்ளது.

(ஆ) தீங்கு மற்றும் குற்றம் அல்லது தீங்கியல் பொறுப்புநிலைக்கும் குற்றப்பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு (Tort and crime or difference between tortious liability and criminal liability)

வரலாற்று அடிப்படையில் பார்க்கும்போது, குற்றவியல் சட்டம் என்பது ஓர் அண்மைக்கால வளர்ச்சியே ஆகும். முற்காலச் சமுதாயங்களில், பொதுத் தீர்ப்பாயத்தின்மூலமான நீதி என்ற கருத்துரு (idea) என்பதைவிட தனிப்பட்ட நபர்கள் பழிக்குப்பழி வாங்குதல் (private vengeance) மற்றும் சுய உதவி (self-help) போன்ற கருத்துருவே ஓங்கியிருந்தது. நாடு என்பது உருவாகுவதற்கு முன், எவரின் உரிமைகள் மீறப்பட்டதோ, அத்தகைய தனி மனிதர்களே சட்டத்தை நடைமுறைப்படுத்தினர். இதற்கு அவர்களின் குடும்ப மற்றும் குழு உறுப்பினர்கள் உதவினர். மிகக்கடுமையான உடலளவிலான காயங்களினால் பாதிக்கப்பட்டவருக்கு (அதாவது தற்காலத்தில் கண்டிப்பாக ஓர் கடுமையான குற்றமாக வகைப்படுத்தக் கூடியவற்றிற்கு) அல்லது அவரின் உறவினருக்கு பொதுவாக பண அளவிலான தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டது. காயமுற்றவர் இறக்க நேர்ந்தாலும்கூட அவரின் உறவினர்களுக்கு தொகை செலுத்தும் முறையே பின்பற்றப்பட்டது. எனவேதான் சர்.ஹென்றி மெயின் (Sir Henry Maine), "முற்காலச் சமுதாயத்தின் தண்டனைச் சட்டம் குற்றங்களுக்கான சட்டமாக இல்லை; அது தவறுகளுக்கான சட்டமாக அல்லது ஆங்கில பதத்தை பயன்படுத்த

வேண்டுமெனில், தீங்கியல் சட்டமாக இருந்தது" எனக் குறிப்பிட்டார். முற்காலச் சமுதாயத்தினர் தங்களின் இயல்பான நிலையிலிருந்து நவீனநிலைக்கு, நிலை மாற்றம் அடைந்ததில் உள்ள ஓர் மிக முக்கியகூறு என்னவெனில் தங்களுக்கு இழைக்கப்பட்ட காயங்களுக்காக தனிப்பட்ட நபர்கள், தீர்வாகவும் மற்றும் அதற்கு தண்டனையாகவும் தங்களின் பலத்தை பயன்படுத்துவதற்கு மாற்றாக, முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் பலமாக மாற்றப்பட்டதாகும். தனிப்பட்ட நபர்கள் பழிக்குப்பழி வாங்குவது குற்றவியல் நீதி நிர்வாகத்தினுள் மாற்றப்பட்டது. இதேபோன்று வன்முறையிலான சுய உதவியை, உரிமையியல் நீதி எடுத்துக் கொண்டது. இன்றைய காலத்தில், கொலை (murder), மனிதக்கொலை (man slaughter), கொள்ளை (robbery), கன்னமிடுதல் (burglary), தீவைப்பு (arson) உள்ளிட்ட கிட்டதட்ட அனைத்து கடுமையான குற்றங்களையும் கட்டுப்படுத்தும் முழுமையான அதிகாரத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. இத்தகைய அனைத்து குற்றங்களிலும் குறிப்பிட்ட தனிநபர்களுக்கு ஊறு ஏற்படுத்துவதுடன், பொதுமக்கள் அல்லது அரசுக்கு எதிரான கடமை மீறுகை உள்ளது. இனி தீங்கியல் பொறுப்பு நிலைக்கு குற்றப்பொறுப்புநிலைக்கும் இடையேயான வேறுபாட்டினை பின்வரும் பொருள்களின்கீழ் காண்போம்.

1.தவறின் இயல்பு (Nature of wrong):

தீங்கு என்பது தனிமத் தவறாகும் (private wrong). தனிமத் தீங்கு அல்லது தனிப்பட்ட தீங்கு என்பது ஓர் தனிப்பட்ட நபரின் உரிமையியல் உரிமையின் (civil right) மீறுகையாகும். இது குற்றச் செயலைவிடக் கடுமை குறைவானது (less serious) மற்றும் உரிமையியல் தவறு எனக் குறிப்பிடப்படுவதாகும்.

குற்றம் என்பது ஓர் பொதுமுகத் தீங்காகும் (Public wrong). பொதுமுகத்தீங்கு என்பது, சமுதாயம் முழுமையும் பாதிக்கக்கூடிய உரிமைகள் மற்றும் கடமைகளின் மீறுகையாகும். இது ஓர் மிகக் கடுமையான தவறாகும் (more serious wrong).

2.தீர்வழியின் தன்மை (Nature of remedy):

தீங்கியல் சட்டத்தின் தீர்வழி இழப்பீடாகும். ஆனால் குற்றத்திற்கு எதிரான தீர்வழி தண்டனையாகும்.

3.வழக்கின் தரப்பினர்கள் (Parties to suit):

தீங்கியல் வழக்கில், பாதிக்கப்பட்ட அல்லது தீங்கிற்கு உள்ளான நபரால் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. குற்ற வழக்கில், அரசின் பெயரால் குற்றமுறையீடு (Criminal Complaint) தாக்கல் செய்யப்படுகிறது.

4.வழக்கினை திரும்பப் பெறல் (Withdrawal of suit):

தீங்கியல் வழக்கில், வழக்கை எந்நேரத்திலும் திரும்பப் பெறலாம் என்பதுடன் தவறிழைத்தவருடன் ஒத்திசைவும் (compromise) செய்து கொள்ள முடியும்.

குற்ற வழக்கைப் பொறுத்தவரை, சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகள் தவிர, எஞ்சிய அனைத்து சூழ்நிலைகளிலும் குற்றமுறையீட்டை திரும்பப் பெறமுடியாது.

[குற்ற விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு-320 உட்பிரிவு (1) மற்றும் (2)-ல் சமரசத்திற்குரிய அல்லது ஒத்திசைவு செய்து கொள்ளக்கூடிய குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது].

5.சட்டத் தொகுப்பு (Codification):

தீங்கியல் சட்டத்தில், சட்டத்தொகுப்பு ஏதுமில்லை. தீங்கியல் சட்டம், இயற்றாச் சட்டத்தையே அதாவது, பெரும்பாலும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளையும், நீதிபதிகளின் கருத்துகளையுமே அடிப்படையாகக் கொண்டது. தீங்கு குறித்து தனியே எந்தவொரு சட்டமும் இல்லை.

குற்றவியல் சட்டம் தொகுக்கப்பட்ட சட்டமாகும்.

6. காலவரம்புத் தடை (Bar of Limitation):

தீங்கியல் சட்டத்தில் வழக்கிடுவதற்கு காலவரம்புத் தடை உள்ளது. ஆனால் குற்றவழக்கு தொடருவதற்கு காலவரம்புத்தடை இல்லை.

7. வழக்கு நடப்பில் தொடர்ந்திருக்கும் நிலை (Survival of action):

தீங்கிழைத்தவர் இறக்க நேர்ந்தால், அவதூறு, மரணத்தை ஏற்படுத்தாத தனிப்பட்ட காயம் குறித்த தீங்கிற்கான வழக்குகள் தவிர, எஞ்சிய வழக்குகள் அனைத்திலும் அவரது சட்டமுறை பிரதிநிதிகள்மீது வழக்குத் தொடரலாம். குற்ற வழக்கில், குற்றவாளி இறப்பின் வழக்கு முடிவுக்கு வந்துவிடும்.

8. நோக்கம் அல்லது எண்ணம் (Intention):

தீங்கியலில் நோக்கம் முக்கியமானதே, இருப்பினும் இது அனைத்து தீங்குகளுக்கும் அல்ல. எ-டு: கவனமின்மை வழக்குகள். அனைத்து குற்றங்களுக்கும் நோக்கம் அல்லது எண்ணமே அடிப்படையாகும்.

தீங்கியல் பொறுப்பு நிலைக்கும், குற்றப் பொறுப்பு நிலைக்கும் மேற்குறிப்பிட்ட வேறுபாடுகள் இருந்தாலும்கூட, உறுத்துக்கட்டளை (injunction) தீங்கியல் வழக்கிலும், குற்ற வழக்கிலும் வழங்கப்படலாம். மேலும் தீங்கியல் சட்ட எல்லைக்குட்பட்ட பல தவறுகள் குற்றவியல் சட்ட எல்லைக்குள்ளும் அடங்கும். எ-டு: தாக்க முனைதல், அவதூறு, கவனமின்மை, தொல்லை. சதி.

(இ) தீங்கியல் பொறுப்பு நிலைக்கும் ஒப்பந்த மீறலுக்கான பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடுகள் (Difference between tortious liability and contractual liability)

அறிஞர் ஆன்சன் (Anson) சுருக்கமாக வரையறுத்துள்ளவாறு, ஒப்பந்தம் என்பது "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் / தரப்பினர்களுக்கு இடையேயான சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடிய ஓர் உடன்படிக்கை" ஆகும். ஒப்பந்தத்தின்மூலமாக, தரப்பினர்கள் தங்களுக்கு இடையே சட்டப்படி நடைமுறைப்படுத்ததக்கூடிய உரிமைகள் மற்றும் கடமைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஒப்பந்தத்தின் ஒரு தரப்பு, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எதனையேனும் மீறுவதையே ஒப்பந்த மீறுகை என்றும், இதனால் அத்தரப்பு பொறுப்பேற்கும் நிலையே ஒப்பந்த மீறுகைக்கான பொறுப்பு

நிலை எனவும் குறிப்பிடப்படுகிறது. இங்கு ஒப்பந்த பொறுப்பு நிலையுடன் நேரடித்தொடர்பு கொண்ட ஒப்பந்த உறவு அல்லது ஒப்பந்த சார்புறவு (Privity of contract) என்ற சட்ட சொற்றொடரின் பொருளை அறிந்து கொள்வது அவசியமாகும். ஒப்பந்த உறவு தரப்பினர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தத்தில் இருந்து எழுகிறது. ஒப்பந்த மீறுகை தொடர்பான வழக்கில், அடிப்படையில் தரப்பினர்களுக்கு இடையே ஒப்பந்த உறவு இருந்தால் மட்டுமே வழக்கிட முடியும். எடுத்துக்காட்டாக, 'A' என்னும் வியாபாரி, 'B' என்கிற அரிசி ஆலை உரிமையாளரிடம் மூட்டை ஒன்று ரூபாய் 2000/- என ஆலை உரிமையாளர் நிர்ணயிக்கும் ஒரு குறிப்பிட்ட ரக அரிசியை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டு, தனக்கு 50 மூட்டை வேண்டும் என்றும் 50 மூட்டைக்கான தொகையை (ரூபாய் ஒரு இலட்சம்), 'B'-யின் வங்கிக்கணக்கில் செலுத்திய தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அரிசி மூட்டைகளை தனக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் செல்லத்தக்க ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டதாகக் கொள்வோம். 'A', 50 மூட்டைக்கான தொகையை 'B'-ன் வங்கிக் கணக்கில் செலுத்தி பத்து நாட்கள் முடிந்த பின்னரும், 'B' அரிசி மூட்டைகளை அனுப்பாமல் இருந்தால், 'A' என்பவர் 'B'-ன்மீது வழக்கிட்டு இழப்பீடு பெற முடியும். இங்கு 'A' மற்றும் 'B' ஆகிய இருவரும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்மூலமான உறவு, 'A' தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக வழக்கு தொடர்ந்து இழப்பீடு பெறும் உரிமையை சட்டம் உறுதி செய்கிறது. 'A' தனக்கு ஏற்பட்ட இழப்பை 'B'-க்கு எதிராக மட்டுமே செயல்படுத்த முடியுமே தவிர, ஒப்பந்தத்தில் தரப்பினராக இல்லாத வேறு எவருக்கு எதிராகவும் செயல்படுத்த முடியாது. எனவே ஓர் ஒப்பந்தத்தில் இருந்து எழும் உரிமை 'நபர் சுட்டிய உரிமை' (right in personam) ஆகும் என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் மேற்குறிப்பிட்டுள்ள எடுத்துக்காட்டில், 'A'-க்கு ஏற்பட்ட இழப்பின் அளவு (ரூபாய் ஒரு இலட்சம்) முன்பே அறியப்பட்டது என்பதால், நீதிமன்றம் அவருக்கு அறுதியிட்ட இழப்பீடு வழங்கும். இனி தீங்கியல் பொறுப்பு நிலைக்கும், ஒப்பந்த மீறுகைக்கான பொறுப்புநிலைக்கு இடையேயான வேறுபாடுகளைக் காண்போம். [இதன்பின்னர் வினா-எண்-7-க்கான விடையின் பகுதி - அ(i)ல் காண்க].

9. **'தீங்கு' என்பதனை வரையறுத்து அதன் மூலக்கூறுகளை விவரிக்க. தீங்கியல் பொறுப்படைவை ஒப்பந்த பொறுப்படைவிலிருந்து வேறுபடுத்தவும். (Define 'Tort' and explain its ingredients. Distinguish between tortious liability and contractual liability) - Nov-2018(v).**

✦ **'தீங்கு' என்பதனை வரையறு. தீங்கியல் பொறுப்படைவினை ஒப்பந்த பொறுப்படைவிலிருந்து வேறுபடுத்திக்காட்டவும். (Define 'tort'. Distinguish between tortious liability and contractual liability) - Nov-2018.**

(அ) 'தீங்கு' - வரையறு ('Tort'-Definition):

(வினா-எண்-2-க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க).

(ஆ) தீங்கின் மூலக்கூறுகள் அல்லது அடிப்படைக் கூறுகள் (Essential ingredients of tort):

(வினா-எண்-3-க்கான விடையில் காண்க).

(இ) தீங்கியல் பொறுப்படைவிற்கும் ஒப்பந்த பொறுப்படைவிற்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between tortious liability and contractual liability):

(வினா-எண்-7-க்கான விடையின் குறுந்தலைப்பு அ (i)-ல் காண்க).

10. "ஓர் தீங்கியல் தவறு என்பது ஒப்பந்த சார்பற்றது, உரிமையியல் வழக்கிட்டு நிவாரணம் பெறக்கூடியது" - விளக்குக.("A tort is a wrong, independent of contract giving rise to a civil remedy for which compensation is recoverable" - Explain) - May-2014(v).

விடைச்சுருக்கம்: (1) தீங்கியல் தவறு - (2) ஒப்பந்த சார்பற்றது - (3) உரிமையியல் வழக்கு - (4) இழப்பீடு - (5) முடிவுரை

'தீங்கு' என்பதற்கான மேற்கண்ட வரையறை (1) தீங்கியல் தவறு, (2) ஒப்பந்த சார்பற்றது. (3) உரிமையியல் வழக்கு மற்றும் (4) இழப்பீடு எனும் நான்கு கூறுகளைக் கொண்டுள்ளது. இவற்றினை பற்றிக் கண்டு இவ்வரையறையின் தகுதி பற்றி இறுதியில் காண்போம்.

(1) தீங்கியல் தவறு (Tortious wrong):

ஓர் தவறு, தீங்கியல் தவறாக இருப்பதற்கு, இயற்றாச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபரின் உரிமைக்கு எதிரான செயலாக இருக்க வேண்டும். இதனை வேறுவிதமாக குறிப்பிடுவதெனில், சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமையை மீறிய செயலாக இருக்க வேண்டும். உரிமையும் கடமையும் உடனிணைந்து இருப்பவை ஆகும். எனவே ஒரு நபர் சட்டக் கடமையை மீறுவது என்பது மற்றொரு நபரின் சட்டப்படியான உரிமையை மீறுவது என்று பொருள்படும். இருப்பினும், வெறுமனே ஒழுக்கம் அல்லது சமயம் சார்ந்த (moral or religious) கடமை மீறுகை தீங்கு ஆகாது; மாறாக சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கடமை மீறுகையாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'A' என்பவரது இருசக்கர மோட்டார் வாகனம் பழுதடைந்ததால், அவரது மகனை அண்டை வீட்டுக்காரரான 'B' தனது இருசக்கர மோட்டார் வாகனத்தில் ஏற்றி கூட்டிச் சென்றார். சில நாட்கள் கழித்து 'B'-ன் மோட்டார் வாகனம் பழுதடைந்த காரணத்தினால், 'A'-ன் வாகனத்தில் தனது மகனை பள்ளிக்கு கூட்டிச் செல்லுமாறு 'B' வேண்டுகிறார். 'A' அதற்கு உடன்பட மறுக்கிறார். இங்கு 'B', 'A'-ன்மீது வழக்கு தொடரமுடியாது. ஏனெனில் பதிலுதவி செய்தல் என்பது ஓர் ஒழுக்கநெறி சார்ந்த கடமையேதவிர, சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டது அல்ல.

சட்டத்தினால் விதிக்கப்படாத ஓர் சமயக் கடமையை மீறினாலும்கூட வழக்கு தொடர முடியாது. இது தொடர்பாக **Dhadphalo Vs Gurav, (1881) 8 Bom 122.**, என்ற வழக்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழக்கில், கோவில் பணியாளரான 'D', கடவுள் சிலைக்கு (விக்கிரகம்) கொடுக்கும் (படைக்கும்) உணவைப் பெறுவதற்கான உரிமையைப் பெற்றிருந்தார். பிரதிவாதியான 'G' கடவுள் சிலைக்கு உணவைக் கொடுக்கும் கடப்பாடு கொண்டிருந்தும், கொடுக்கவில்லை. எனவே 'D' (வாதி), 'G'-க்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். 'G'-கடவுள் சிலைக்கு உணவை படைக்காததால் 'D'-க்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றாலும்கூட, 'G' உணவைப் படைக்க சட்டக்கடப்பாடு ஏதும் கொண்டிருக்கவில்லை என்றும், இது ஓர் சமயக் கடமையின் மீறுகை என்பதால் வாதி வழக்கை நிலைநிறுத்தும் தகுதியைக் கொண்டிருக்கவில்லை என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே தீங்கியல் வழக்கு தொடர, தீங்கியல் தவறு ஒன்று செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும்.

(2) ஒப்பந்த சார்பற்றது (Independent of contract)

தீங்கு, ஒப்பந்த சார்பற்றது என்பதன் உட்பொருள், இவையிரண்டும் வெவ்வேறானவை என்பதாகும். இரண்டுமே உரிமையியல் தன்மையை (civil nature) கொண்டிருந்தாலும்கூட, இரண்டின் சட்ட நிலைகளும் வெவ்வேறானவை. சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனி நபர்களின் குடிமையியல் உரிமைகள் மீறப்படுவதினின்று தீங்கியல் பொறுப்புநிலை எழுகிறது. தனிநபர்கள் ஒவ்வொருவரும் மற்றவருடன் / மற்றவர்களுடன் தன்னுடைய உடல், நற்பெயர், குடும்ப உறவுகள், அசையும் மற்றும் அசையா சொத்துகள் போன்றவை குறித்த குடிமையியல் உரிமைகளை மீறக்கூடாது என்று ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்வதில்லை. ஏனெனில் இயற்றாச் சட்டம் (அல்லது தீங்கியல் சட்டம்) நபர்களின் இத்தகைய உரிமைகளை முன்னரே அங்கீகரித்து நிகழ்பொழுது காலத்திலும் (at present) நடைமுறைப்படுத்தி வருகிறது. மாறாக, ஒப்பந்தம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்/ தரப்பினர்கள் தாங்களாக முன்வந்து தங்களுக்கு இடையே பொருந்தக்கூடிய உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயிக்கக்கூடிய ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய உடன்படிக்கை ஒப்பந்தச் சட்டம், 1872-ன் பிரிவு-10- ன் கீழான அனைத்து தகுதிகளையும் நிறைவேற்றும்போது, ஓர் செல்லத்தக்க ஒப்பந்தமாகிறது. ஒப்பந்தத்தின்வாயிலாக நபர்களுக்கு இடையே ஒப்பந்த உறவு (privity of contract) எழுகிறது. ஒப்பந்த உறவு இருந்தால் மட்டுமே ஒப்பந்த மீறுகைக்கான வழக்கு தொடர முடியும். இவற்றினின்று, தீங்கியலில் நபர்களுக்கு கிடைக்கும் உரிமை 'மன்று சுட்டிய உரிமை' (Right in rem - அதாவது பொதுமுக உரிமை. இது மக்கள் அனைவருக்கு எதிராகவும் செயல்படுத்தும் உரிமை) என்பதையும், ஒப்பந்தங்களில் நபர்களுக்கு கிடைக்கும் உரிமை 'நபர் சுட்டிய உரிமை' (Right in personam - அதாவது குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக மட்டுமே செயல்படுத்தக்கூடிய உரிமை) மட்டுமே என்பதையும் புரிந்து

கொள்ளலாம். எனவே தீங்கியல் தவறு ஒப்பந்த சார்பற்றது எனக் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் சரியே.

(3) உரிமையியல் வழக்கு (Civil Suit):

உரிமையியல் சட்டத்தின் ஓர் பகுதியே தீங்கியல் சட்டமாகும். உரிமையியல் தன்மை கொண்ட வழக்குகள் அனைத்தும் உரிமையியல் வழக்குகளே. எனவே இயற்றாச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குடிமையியல் உரிமை மீறுகைக்கான வழக்கு ஓர் உரிமையியல் வழக்காகும்.

(4) இழப்பீடு (Compensation):

பிரதிவாதியின் செயலுக்கு எதிராக முறையீடு செய்யும் அச்செயல், வாதிக்கு சட்டப்படியான பரிகாரம் (legal remedy) அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது தீங்கியலில் வழக்கு தொடருவதற்கு ஓர் இன்றியமையாத கூறாகும். வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், ஓர் தறான செயலுக்கு எதிராக சட்டப்படியான நிவாரணம் ஏதேனும் இருக்க வேண்டும். எனவே அத்தகைய தவறான செயல் உரிமையியல் வழக்கின்மூலம் நிவாரணம்/பரிகாரம் பெறத்தக்க தவறுகளின் இனங்களில் (category of wrongs) உள்ளடங்குவதாக இருக்க வேண்டும். தீங்கிற்கான முதன்மை தீர்வு இழப்பீடேயாகும்.

முடிவுரை:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 'தீங்கு' என்பதற்கான வரையறை, தீங்கு என்பதன் இன்றியமையாக் கூறுகளை கொண்டிருந்தாலும் பின்வரும் இரு குறைகள் உள்ளது.

முதலாவதாக, ஓர் தீங்கியல் தவறு ஒப்பந்த சார்பற்றது என்பது உண்மையே. இருப்பினும் அது பொறுப்புரிமை மீறல் ஒப்படைவுக் கடமை மீறுகை, ஒப்பந்தப் போல்வு கடப்பாடு போன்ற பிற உரிமையியல் தவறுகளின் சார்பற்றது என்பது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறிருப்பினும், பொறுப்புரிமை, ஒப்படைவு, ஒப்பந்த போல்வு போன்றவை அடிப்படையில் ஒப்பந்தத்தின் இனங்களே என்பதன் அடிப்படையில் இதனை ஓர் குறையாகக் குறிப்பிட முடியாது என்பது உண்மையே; ஆனால், இவைகளைச் சாராத பிற தகைமை நெறிக் கடப்பாடுகள் பற்றிக் குறிப்பிடாதது ஓர் குறையே. இரண்டாவதாக, தீங்கினை பிற உரிமையியல் தவறுகளினின்று வேறுபடுத்திக்காட்டக்கூடிய 'அறுதியிடப்படாத இழப்பீடு' எனும் முக்கிய கூறு விடுபட்டுள்ளது. 'தீங்கு' என்பதன் கூறுகளை ஓரளவு முழுமையாகக் கொண்டுள்ள அறிஞர். அண்டர்ஹில்-ன் (Underhill) வரையறையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

"ஓர் தீங்கு என்பதை அறுதியிடப்படாத இழப்பீட்டிற்காக, இயற்றாச் சட்டத்தின் கீழான தீர்வினைப் பெறுவதற்கான மற்றும் முழுமையாக ஒப்பந்த மீறுகையாக அல்லது பொறுப்புரிமை மீறுகையாக அல்லது வெறுமனே பிற தகைமை நெறிக் கடப்பாடாக அல்லாத ஓர் உரிமையில் தீங்கு' என வரையறுக்க முடியும்.

செயல்படுத்தக்கூடிய நபர் சுட்டிய உரிமையாக (right in personam) மட்டுமே இருக்கும்.

12. "இன்றைய நிலையில் தீங்கியல் பொறுப்புநிலைக்கு தவறுகை இன்றியமையாத மூலமாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை" இக்கூற்றை திறனாய்வு செய்க. ('Fault has never been and is not today an essential in tortious liability' - Critically examine this statement) - Nov-2017.

✦ **தவறுமேல்தான் பொறுப்பு நிலை எப்பொழுதுமே அமைய வேண்டும் என்ற கருத்தை திறனாய்வு செய்க. (Critically examine the view that the liability should always be based on fault) - Nov-2014(v).**

SN - 13 ரைலாண்ட்ஸ் எதிர் பிளச்சர் / Rylands Vs. Fletcher - Nov-2016

விடைச்சுருக்கம்: (அ) தீங்கியல் பொறுப்பு நிலைத் தொடர்பான சல்மாண்ட்-ன் கருத்து - (ஆ) தீங்கியல் பொறுப்பு நிலையின் நிபந்தனையாக தவறு - (இ) தவறில்லா பொறுப்பு நிலை - (ஈ) அண்மைக்காலப்போக்கு - (உ) திறனாய்வு

(அ) தீங்கியல் பொறுப்புநிலைத் தொடர்பான சல்மாண்ட்-ன் கருத்து (Salmond's view on tortious liability)

பொறுப்புநிலை எப்போதும் தவறு என்பதன் அடிப்படையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே அறிஞர் சால்மண்ட்-ன் கருத்தாகும். ஒரு நபர் அறிந்திருந்தே அல்லது குற்றமுறு கவனமின்மையுடன் (culpable negligence) செய்யும் தவறான செயலின் பொருட்டு மட்டுமே பொறுப்பேற்கப்படச் செய்ய வேண்டும். தீங்கு ஏற்படுத்திய செயல் ஓர் தற்செயலான அல்லது எதிர்பாராத செயலின் விளைவாக இருக்கும்போது ஓர் நபரை, தீங்குற்ற நபருக்கு குறிப்பிட்ட தொகையை இழப்பீடாக அளிக்கச் செய்வதில் எந்தவொரு நியாயமும் இல்லை. வாதிக்கு இழப்பீடு அளிக்கக்கோரும் தீர்ப்பாணையின் (decree) நோக்கம் வெறுமனே தீங்குற்ற நபருக்கு இழப்பீடு வழங்குவது மட்டுமல்ல மாறாக அது பிரதிவாதியை தண்டிப்பதுமாகும். குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஓர் குறிப்பிட்ட குற்றமனம் (mensrea) கொண்டிருந்தால் மட்டுமே தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனும் குற்றவியல் கொள்கை உரிமையியல் பொறுப்பு நிலைக்கும் பொருந்தச் செய்யப்பட வேண்டும் என்று சால்மண்ட் கருதுகிறார்.

Rylands Vs Fletcher, 1868 LR3HL 380., என்ற வழக்கின் விதி, தவறின் அடிப்படையிலான பொறுப்பு நிலைக்கு எதிரானதாகும். இவ்வழக்கில் ரைலாண்ட்ஸ் (பிரதிவாதி), தான் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் நீராலைக்கான நீர்த்தேக்கம் கட்டுவதற்காக தகுதிபெற்ற தன்விருப்ப ஒப்பந்ததாரர்களை (independent contractors) பணியமர்த்தினார். அந்நிலத்தில் முன்பொரு காலத்தில் நிலக்கரிச்

சுரங்கத்தொழில் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மூடப்பட்ட விபரம் பிரதிவாதிக்கு தெரியாது. நீர்த்தேக்கம் கட்டும் வேலையின்போது, ஒப்பந்ததாரர்களின் பணியாளர்கள் அவ்விடத்தில் சுரங்கத்தினுள் ஆட்கள் நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் மற்றும் நிலக்கரியை மேலே எடுத்துவருவதற்கான வட்டவடிவிலான பழைய இரும்பு உருளைகள் மற்றும் சுரங்கப் பாதைகளை (series of old coal shafts) கண்டனர். அவை பக்கத்தில் இருந்த ஃப்ளட்சரின் சுரங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவைகள் முழுவதுமாக மண் அடைத்திருந்ததாக தெரிந்ததால் அதனை முறையாக அடைக்கவில்லை. நீர்தேக்கத்தில் நீர் நிரப்பப்பட்டவுடன், அவை நிலத்ததடியிலிருந்த சுரங்க வழியின் அடைப்புகளை உடைத்து வெளியேறி ஃப்ளட்சரின் (வாதியின்) நிலக்கரிச் சுரங்கம் முழுவதையும் நிரப்பியது. இதனால் வாதியின் சுரங்கத்தொழில் பாதிக்கப்பட்டதோடு பெரும் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது. உண்மையில் பிரதிவாதிக்கு, தான் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் முன்னர் ஒரு காலத்தில் சுரங்கத்தொழில் மேற்கொண்டிருந்தது பற்றியோ அல்லது நீர்த்தேக்கம் கட்டும்பொழுது அங்கு சுரங்க வழிப்பாதைகள் இருந்தது பற்றியோ தெரியாது. மேலும் பிரதிவாதி தரப்பில் எந்தவொரு கவனமின்மைத் தீங்கும் புரியப்படவில்லை. இருப்பினும் இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், நீதிபதி பிளாக் பெர்ன் வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தார். மேல்முறையீட்டில் பிரபுக்கள் அவையும் இத்தீர்ப்பை உறுதி செய்தது.

மேற்குறிப்பிட்ட பிரபுக்கள் சபையின் முடிவை சல்மாண்ட் ஆதரிக்கவில்லை. இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில், "உரிமையியல் பொறுப்பு நிலையில் ஓர் எளிமையான, சீரான மற்றும் அறிவார்ந்த முறை ஏற்படுவதை தீங்கியல் சட்டத்தின் எந்தவொரு வழக்கின் முடிவும், இந்த அளவிற்கு (ரைலாண்ட்ஸ் வழக்கின் முடிவு) தடுப்பதாக இல்லை" ("No decision in the law of torts has gone more to prevent the establishment of a simple, uniform and intelligible system of a civil responsibility") எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நபரின் குற்ற எண்ணத்துடனான செயலுக்கு மட்டுமே பொறுப்பேற்கப்படச் செய்ய வேண்டும் எனும் கொள்கை, ஒழுக்க அடிப்படையில் அமைந்ததாகும். ஏனெனில் இக்கொள்கையை பொருந்தச் செய்வதன் மூலம் குற்ற எண்ணம் கொண்டிராத அப்பாவிகள் தண்டிக்கப்பட முடியாது. இதற்கு மாறாக ஒரு நபரின் மனநிலையை பொருட்படுத்தாமல் (ரைலாண்ட்ஸ் வழக்கின் முடிவைப் போன்று) அவரை பொறுப்பு நிலைக்கு உட்படுத்துவது ஒழுக்கநெறி அடிப்படையைச் சார்ந்ததல்ல (ammoral) என்பதே சால்மண்ட்-ன் கருத்தாகும்.

(ஆ) தீங்கியல் பொறுப்புநிலையின் நிபந்தனையாக தவறு (Fault as a condition of tortious liability)

தீங்கியல் பொறுப்பு நிலைக்கு தவறு இன்றியமையாத கூறாக எப்போதும் இருந்ததில்லை இன்று வரை இருக்கவில்லை. இருப்பினும், தீங்கியல் சட்டத்தின் பல பிரிவுகளில் எடுத்துக்காட்டாக, தாக்க முனைதல், தாக்குதல், முறையற்ற

சிறைவைப்பு, ஏமாற்றுதல், தீய நோக்குடைய குற்றவழக்கீடு மற்றும் சதி போன்ற தீங்குகளில் பொறுப்புநிலையை தீர்மானிக்க மேற்குறிப்பிட்ட தீங்குகள் புரிந்த நபர்களின் மனநிலை தொடர்புடையதாகிறது. மேலும் ஓர் குறிப்பிட்ட தவறான செயல், அறிந்திருந்தே அல்லது கருதியே செய்யப்பட்டதா அல்லது தீங்கெண்ணத்துடன் செய்யப்பட்டதா என்பதையும் நோக்க வேண்டியுள்ளது. சில நேரங்களில், பிரதிவாதியின் நடத்தையை ஒரு சமநிலை அறிவு கொண்ட மனிதனின் நடத்தையுடன் ஒப்பிட்டு, அச்சமநிலை அறிவு கொண்ட மனிதனிடம் எதிர்பார்க்கும் அத்தகைய நடத்தை தரத்திற்கும் கீழானதாக பிரதிவாதியின் நடத்தை இருந்தால் மட்டுமே பொறுப்பு நிலைக்கு உட்படுத்தப்படுகிறார். கவனமாக இருக்கக்கோரும் சூழ்நிலையில், ஒரு நபர் கவனமாக இருக்க வேண்டிய கடமையிலிருந்து தவறினால் அவர் கவனமின்மை எனும் தீங்கிற்கு பொறுப்பாவார். மாறாக, அந்நபரிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய அத்தகைய அளவிலான கவனத்தை செலுத்தியிருந்தால், வாதிக்கு நேரிடும் இழப்பிற்கு பொறுப்பேற்கத் தேவையில்லை.

மனநிலைக்கூறு (mental element) வேறு வகையிலும்கூட தொடர்பு கொண்டதாக ஆகலாம். பிரதிவாதியின் செயல், தவிர்க்க முடியாத விபத்தின் காரணமாக நிகழ்ந்திருப்பின் அவர் பொறுப்பாக மாட்டார். ஒரு நபர் தனது நிலத்திற்கு கீழே மின்சார கம்பி (electric wire) உள்ளது என்று நம்புவதற்கு காரணம் இல்லாத நிலையில், நிலத்தை தோண்டும்போது, மின்சார கம்பிக்கு ஏற்பட்ட சேதத்திற்கு பொறுப்பாகமாட்டார். இதேபோன்று 'அவசியம்' (necessity) என்ற எதிர்வாதத்தையும் பயன்படுத்தமுடியும். எடுத்துக்காட்டாக, பிரதிவாதியின் செயல் தவறான எண்ணத்தினால் தூண்டப்படாமல் ஆனால் ஓர் பெரும் கெடுதியை ('greater evil) தடுக்க வேண்டும் எனும் சூழ்நிலையால் உந்தப்பட்டு அறிந்திருந்தே சிறிய ஊறினை (smaller harm) புரியும்போது, அவசியம் என்ற எதிர்வாதத்தை பயன்படுத்தலாம்.

(இ) தவறில்லா பொறுப்புநிலை (no-faultliability) அல்லது தவறு இன்றியும் பொறுப்பேற்படும் நிலை (Liability without fault)

தீங்கியலின், சிலக் குறிப்பிட்ட தீங்குகளுக்கு, தீங்கிழைத்தவரின் மனநிலை தொடர்பற்றது என்பதுடன் பிரதிவாதி, தீங்கெண்ணம் கொண்டிராமல் இருந்தாலும் அல்லது கவனமாக இருந்தாலும்கூட பொறுப்பாகுவார். இத்தகைய வழக்குகளில், பிரதிவாதியின் அறியாமை (innocence) அல்லது நேர்மையான தவறு (honest mistake) ஆகியவை எதிர்வாதமாகாது. இனமாற்றம் அல்லது கையாடல் (conversion) இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். **Consolidated Co. Vs. Curtis, (1892) 1 QB 495.**, என்ற வழக்கில், ஏல விற்பனையாளர், வாடிக்கையாளர் ஏல விற்பனை செய்வதற்காக கொடுத்த பொருளை, அவருக்கு சொந்தமான பொருளே என்ற நல்லெண்ணத்துடன் ஏல விற்பனை செய்த பின்னர், அப்பொருளின் உண்மையான உரிமையாளர் தொடர்ந்த வழக்கில், ஏல விற்பனையாளர் இனமாற்றம் என்ற தீங்கினுக்கு பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவதூறு வழக்கிலும்கூட, பிரதிவாதி அவதூறு இழைக்கக்கருதினார் என்பதற்காக பொறுப்பாகுவதில்லை, மாறாக அவரின் செயல் அவதூறாக இருப்பதாலே பொறுப்பாகிறார் **[Cassidy Vs Daily Mirror Newspaper Ltd, (1929) 2 KB 331].** பகரப்பொறுப்புரிமை வழக்குகளிலும் தவறு ஏதும் செய்யாத நபர் பொறுப்பேற்க நேரிடுகிறது. ரைலாண்ட்ஸ் எதிர் ஃபிளச்சர் வழக்கில் வகுத்த கடும் பொறுப்புநிலை விதி (Rule of strict liability) பொருந்தும் வழக்குகளில், பிரதிவாதி கவனமின்மையாக இல்லாமல் இருந்தாலும் பொறுப்பாவார்.

(ஈ) அண்மைக்கால போக்கு (The recent trend)

அண்மைக்காலங்களில், தீங்கியல் பொறுப்புநிலை அதனை தாங்கும் தகுதி படைத்தவர்கள்மீது அல்லது இழப்பை பொதுமக்கள் மீது ஏற்கச் செய்யும் தகுதி கொண்டவர்கள்மீது மாற்றப்படுகிறது. நீதிப்பெருமகனார் டென்னிங் (Lord Justice Denning), 'சட்டமன்றங்கள் மற்றும் நீதித்துறைகளின் அண்மைக்கால வளர்ச்சி, தீங்கியல் பொறுப்புநிலை, குற்றத்தன்மையை அடிப்படைக்கூறாக பெரும்பாலும் கொண்டிருக்கவில்லை மாறாக எவர்மீது பொறுப்புநிலை விழ வேண்டும்? என்பதையே காட்டுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் இயற்றப்பட்டுள்ள மரண விபத்துகள் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். மேற்குறிப்பிட்ட சட்டங்களில், தவறு செய்தவர் யார் என்ற கேள்வியை ஆராயாமல் இழப்பீடு வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் இழப்பை, காப்பீட்டின் (insurance) மூலமாக பகிரும் முறை பின்பற்றப்படுகிறது. 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனங்கள் சட்டம், ஒவ்வொரு மோட்டார் வாகனமும் காப்பீடு செய்யப்படுவதை கட்டாயமாக்குகிறது. 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில், 2019-ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி, பிரிவு-164, தவறில்லா பொறுப்பு நிலை குறித்துக் குறிப்பிடுகிறது. இப்பிரிவின்படி, வாகன விபத்தினால் இறந்த நபர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சமும், கொடுங்காயமுற்றவர்களுக்கு ரூபாய் இரண்டரை லட்சம் வரையிலும் தவறில்லா பொறுப்பு நிலையின்கீழ் வாகனத்தின் உரிமையாளர் அல்லது காப்பீட்டாளர் வழங்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இத்தகைய வழக்குகளில் பாதிக்கப்பட்டவரின் தன்பாற் கவனமின்மையும்கூட (contributory negligence) ஓர் எதிர்வாதமாக அனுமதிக்கப்படுவதில்லை. இந்திய உச்சநீதிமன்றம் **M.C.Mehta Vs Union of India, AIR 1987 SC 1086.,** என்ற வழக்கில் உருவாக்கிய முழுப்பொறுப்புநிலைக்கு (Absolute liability) எவ்வித விலக்குகளும் இல்லை என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

(உ) திறனாய்வு (Criticism)

தீங்கியல் என்பது, தனிப்பட்ட நபர்களின் பல்வேறு நலன்கள், உரிமைகளையும் மற்றும் பல்வேறு நடத்தையையும் உள்ளடக்குவதால், அனைத்து நேர்வுகளுக்கும் பொருந்துமாறு, இழப்பீடாக செலுத்த வேண்டிய தொகையை தீர்மானிப்பதற்கு என எந்தவொரு வழி நடத்தும் கொள்கையையும்

(guiding principle) வகுப்பது என்பது எளிதானதன்று. எனவேதான் தீங்கியலில் தவறு இருந்தால்தான் பொறுப்பேற்கும் நிலைகளும் மற்றும் தவறின்றியும் பொறுப்பேற்கும் நிலைகளும் உள்ளது. இத்தகைய நிலையில், தீங்கியல் பொறுப்புநிலையில் ஓர் பொதுவான காரணியை அடையாளம் காண்பதற்கு, தவறு என்பதன் அடிப்படையில் அல்லாத, முன்னேறிவரும் சமுதாயத்தின் தேவைகளை எதிர்கொள்வதற்கு நீதிமன்றங்கள் மற்றும் சட்டமன்றம், உரிமை மற்றும் கடமை தொடர்பான புதிய கருத்துருக்களை அங்கீகரிப்பதற்கு, நேர்விற்கேற்ப பொருந்தக்கூடிய அல்லது நெகிழ்வமைத்தன்மை (flexible) கொண்ட பொதுநலக் கொள்கையே (Public policy) அத்தகைய காரணியாகும் என்பது தெரியவருகிறது. இதன் அடிப்படையிலேயே சமூக நீதியை (socia; justice) அல்லது இதனை ஒத்தபிற கருத்துகளின் அடிப்படையிலான பொதுநலக் கொள்கை, தவறு என்பதை பொருட்படுத்தாது, வாதிக்கு ஏற்பட்ட இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும் என்பதைக் கோரும்போது, சட்டம், கடும்பொறுப்பு அல்லது முழுப்பொறுப்பு நிலைக்கும், இத்தகைய கருத்துகள் ஏதுமில்லாதபோது, பிரதிவாதியால் தவிர்க்கப்படமுடியாத ஓர் செயலின் விளைவினால் ஏற்பட்ட இழப்பிற்கு அவரை பொறுப்பாக்கக்கூடாது என பொதுநலக்கொள்கை கோரும்போது, சட்டம், தவறு என்ற கொள்கையின் அடிப்படையிலான பொறுப்புநிலைக்கும் வழிவகை செய்கிறது.

மெக்மில்லன் பிரபு (Lord Mac Millan), **Donoghue Vs Stevenson, (1932) AC 562 (619) HL.,** என்ற வழக்கில் "'சட்டப் பொறுப்புநிலை' (legal responsibility) எனும் கருத்துருவாக்கல், மாறிவரும் சமூகப் பொருளாதார நிலைகள் மற்றும் தர அளவுகளுக்கு ஏற்ப வளர்ச்சி அடையலாம். அடிப்படையில் நீதிமன்றத்தின் தீர்ப்புரை, மாறி வரும் வாழ்க்கைச் சூழலைப் பின்பற்றி அதற்கேற்றதாக இருக்க வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டுள்ளார். எனவே தவறுமேல்தான் பொறுப்புநிலை **எப்பொழுதுமே** அமைய வேண்டும் எனும் கருத்து ஏற்கும்படியாக இல்லை. அதே நேரத்தில், இன்றைய நிலையில், நடைமுறையில் உள்ள நலம் பயக்கும் (beneficial) தொழிலாளர் சட்டங்கள், நீதிமன்றங்களால் உருவாக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறையில் செயல்படுத்திவரும் பகரப்பொறுப்புநிலை, கடும் பொறுப்புநிலை, முழுப்பொறுப்புநிலை ஆகியவற்றின் பின்னணியில் நோக்கும்போது, 'தீங்கியல் பொறுப்புநிலைக்கு தவறு இன்றியமையாத மூலமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை' எனும் கூற்று வலுப்பெற்று வருகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

13. "உள்நோக்கம் தீங்கியல் சட்டத்திற்கு தொடர்பற்றது" - இக்கூற்றை ஆராய்க. ("Motive is irrelevant in the law of tort" - Analyse this Statement) - May-2017.

'உள்நோக்கம்'- விளக்கம் ('Motive' - Explanation of)

நோக்கம், கருத்து அல்லது எண்ணம் (intention) என்பது உடனடி நோக்கம்

அல்லது உடனடி எண்ணம் (immediate intention) மற்றும் அறுதியான நோக்கம், அறுதியான எண்ணம் அல்லது மறைந்திருக்கும் நோக்கம் அல்லது இரகசிய எண்ணம் (ulterior intention) என இருவகைப்படும். இவற்றுள் இரண்டாவதாக குறிப்பிட்ட அறுதியான நோக்கம் அல்லது அறுதியான எண்ணமே உள்நோக்கம் அல்லது குறிநோக்கம் (motive) என்பதாகும். ஓர் செயலைச் செய்தவரின் நடத்தையின் மூலமாக அவரது உடனடி நோக்கத்தை அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறு ஒரு நபர் என்ன பேசினார் என்பதன் அடிப்படையில் அல்லாமல் என்ன செய்தார் என்பதன் அடிப்படையில் அவரது நோக்கம் மதிப்பிடப்படுகிறது. ஓர் நபரின் செயல் மெய்ப்பிக்கக்கூடியது என்பதன் அடிப்படையில் சட்டம் இம்முறையை பின்பற்றுகிறது. உள்நோக்கம் ஒரு நபரை செயல்பட வைக்கிறது அல்லது அந்நபரின் செயலை இயக்குகிறது. இது கோபத்தை தூண்டுவதுடன் அவரது நோக்கத்தை நிறைவேற்றும் வழியை நோக்கித் தள்ளுகிறது. மேலும் அது உத்தேசித்திருக்கிற செயலைச் செய்வதற்கான காரணத்தை அளிக்கிறது. எடுத்துக்காட்டு (Illustration): 'Y' என்ற கசாப்புக்காரருக்குச் (butcher) சொந்தமான மாடுகளை வெட்டுமிடத்திற்கு (slaughter house) கொண்டு செல்லும்போது, 'X' என்பவர் தனது பலத்தை பயன்படுத்தி அவைகளை எடுத்துச் செல்கிறார். பின்னர் அவைகளை சுதந்திரமாகச் செல்ல விட்டுவிடுகிறார். இதேபோன்று, 'X', 'Y' யிடமிருந்து ரொட்டித்துண்டை பறித்துச் சென்று அதை 24 மணிநேரமாக பட்டினியில் இருக்கும் 'Z'-க்கு கொடுக்கிறார். இவ்விரண்டு நேர்வுகளிலும் 'X'-ன் நடத்தை பழிசுமத்தத் தக்கதேயாகும். இங்கு 'X'-ன் உள்நோக்கம் நல்லதாக இருந்தாலும்கூட அது தவறு என்பதாகவே அமையும். மற்றொருவரின் சொத்தை அவரது விருப்பத்திற்கு மாறாக எடுத்துச்செல்வது மற்றும் தனதாக்கிக் கொள்வது, சொத்திற்கு எதிரான ஓர் தீங்காகும். இவ்விரண்டு நேர்வுகளிலும் 'X'-ன் நடத்தை தெளிவாக அதாவது பலத்தை பயன்படுத்தி பிறரின் சொத்தை தனதாக்கிக் கொள்வது என்பது தெரிகிறது. ஆகவே 'Y' முறையீடு (complain) செய்தால், 'X' சட்டப்படி பொறுப்புநிலைக்கு உள்ளாக்குவார். கடவுளின் ஆதரவு அல்லது கருணையைப் பெறுவதற்காக அல்லது 'Z'-ன் பட்டினியைப் போக்குவதற்காக செய்த 'X'-ன் இச்செயல்களை சட்டம் ஏற்காது. 'X'-ஏன் இவ்வாறு செயல்பட்டார் என்பதற்கான காரணமே அவருடைய செயலுக்கான உள்நோக்கமாகும். (ரொட்டித்துண்டை பறிப்பது அல்லது திருடுவது உடனடி நோக்கமாகும். பசியைப் போக்குவது அறுதியான நோக்கமாகும். இந்த அறுதியான நோக்கமே உள்நோக்கம் அல்லது குறிநோக்கமாகும்).

நல்ல உள்நோக்கம் என்பது மெய்ப்பிக்கப்படமுடியாதது என்பதால் அது எதிர்வாதமாகாது. அதே நேரத்தில் ஓர் செயல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருப்பின் அது தீய உள்நோக்கம் கொண்டு செய்யப்பட்டிருந்தாலும்கூட தண்டிக்கப்படமுடியாது.

தீர்வுற்ற வழக்குகள் (Case laws):

1. South Wales Miner's Federation Vs Glamorgan Coal. Co., (1905) AC 239., எனும் வழக்கு ஓர் தவறான செயல் அதன் நல்ல உள்நோக்கத்தின்

காரணமாக சட்டப்படியான செயலாக மாறிவிடாது என்பதை விளக்குகிறது. இவ்வழக்கில் நிலக்கரி சுரங்கங்களின் உரிமையாளர்கள் வாதிகளும், சுரங்க தொழிற்சங்கத்தின் நிருவாகிகள் பிரதிவாதிகளும் ஆவர். தொழிற்சங்க நிருவாகிகள், சிலக் குறிப்பிட்ட நாட்களில் விடுப்பு எடுத்துக்கொள்ளுமாறு தொழிலாளர்களுக்கு ஆணையிட்டனர். தொழிலாளிகள் விடுப்பு எடுத்ததன் காரணமாக நிலக்கரி உற்பத்தி குறைந்தது. நிலக்கரியின் விற்பனை குறைவினாலும், உற்பத்தி செய்யும் நிலக்கரியின் தேக்கநிலை காரணமாக, விலையை குறைத்து விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்ததாலும், அதனால் தொழிலாளர்களுக்கு குறித்த காலத்தில் ஊதியம் வழங்குவதில் சுரங்க உரிமையாளர்களுக்கு சிரமம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் விடுப்பு எடுத்துக் கொள்வதன் மூலமாக உற்பத்தியை குறைத்து தேவையை அதிகரித்து சுரங்கத்தொழிலை இலாபகரமாக நடத்த வேண்டும் என்கிற நோக்கத்துடனேயே தொழிற்சங்க நிருவாகிகள் அத்தகைய ஆணையிட்டனர். ஆனால் சுரங்க உரிமையாளர்கள் (வாதிகள்) தொழிலாளர்களை விடுப்பு எடுத்துக்கொள்ளக் கோரியதன் மூலமாக அவர்களை பணி ஒப்பந்த மீறுகை புரியத் தொழிற்சங்க நிருவாகிகள் தூண்டினார்கள் என்பதன் பேரில் வழக்கு தொடர்ந்தனர். பிரபுக்கள் சபை, பிரதிவாதிகள் (தொழிற்சங்க நிருவாகிகள்) பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

2. Wilkinson Vs Downtown., (1897) 2 QB 57., என்ற வழக்கில், பிரதிவாதி, திருமணமான பெண்ணான வாதியிடம், அவளுடைய கணவர் பயங்கரமான விபத்தில் சிக்கி, அவரின் இரு கால்களும் முறிந்துவிட்டதாக விளையாட்டாக பொய்யுரைத்தார். இத்தகவலை வாதி உண்மையென நம்பியதன் காரணமாக அருக்கு கடுமையான மன அதிர்ச்சி ஏற்பட்டது. அவரின் உடல்நலம் குன்றி தலைமுடி வெளுத்ததுடன் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது இதன்பொருட்டு மருத்துவ சிகிச்சைக்காக அவளின் கணவர் பெருந்தொகை செலவழிக்க நேர்ந்தது. இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், தான் விளையாட்டாக பொய்யுரைத்தது இத்தகைய கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை என்றும் எனவே தனது செயல், வாதிக்கு இத்தகைய விளைவை ஏற்படுத்தவேண்டும் என்கிற நோக்கம் ஏதுமில்லாதது என்றும் பிரதிவாதி வாதிட்டார். நீதிமன்றம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை ஏற்க மறுத்து, ஒவ்வொருவரும் தமது செயலின் நேரடியான மற்றும் நிகழத்தக்க மற்றும் அவசியமான விளைவுகளை அறிந்தே செய்வதாக அனுமானிக்கப்பட வேண்டும் எனும் கொள்கையின் அடிப்படையில் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்று தீர்ப்பளித்தது.

3. Vishnu Vasudeo Joshi Vs. Smith Pearse, AIR 1949 Nag 362., இவ்வழக்கில், கல்லூரி ஒன்றில் மின்சாரப் பணியாளராக (electrician) வேலை செய்து வந்த வாதி, கல்லூரி முதல்வரால் (பிரதிவாதி) தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். வாதி பணிப்பொறுப்பை ஒப்படைக்கும்போது, பிரதிவாதி அவரின் விலா எலும்புகளின்மீது உதைத்தார். இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில்,

முறையற்ற உள்நோக்கம் (improper motive) கொண்டிருந்ததற்கான ஆதாரம் ஏதும் இல்லாதபோது தன்மீது பொறுப்புநிலை எழாது என்று பிரதிவாதி எதிர்வாதம் புரிந்தார். சாதாரணமாக நோக்கப்படுவது யாதெனில், ஓர் செயல் தன்னிலையிலேயே (itself) சட்டத்திற்கு புறம்பானதா என்பதே ஒழிய, அச்செயலை செய்யத்தூண்டிய உள்நோக்கம் மிகக்குறைந்த முக்கியத்துவத்தையே பெறும் என்றும் எனவே பிரதிவாதி பொறுப்பாகுவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேற்கண்ட வழக்குகளில் இருந்து ஓர் செயலைச் செய்யும் நபரின் உள்நோக்கம் முக்கியத்துவம் அற்றது; அச்செயல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருப்பின், அது எத்தகைய கெடுதியான அல்லது தீங்கான உள்நோக்கம் கொண்டதாக இருந்தாலும்கூட அச்செயலைச் செய்ய அவருக்கு உரிமை உண்டு என்பதையும் அதேநேரத்தில் அச்செயல் சட்டத்திற்கு புறம்பாக இருப்பின், அவரின் உள்நோக்கம் நல்லதாக அல்லது சிறப்பானதாக இருந்தாலும்கூட, அச்செயலைச் செய்வதற்கு உரிமை ஏதும் கிடையாது என்பதையும் அறிந்து கொள்ளலாம். இருப்பினும் பின்வரும் வழக்குகளில் உள்நோக்கம் தொடர்புடையதாகும்:

(அ) தீய நோக்குடைய குற்ற வழக்கு (malicious prosecution);

(ஆ) அவதூறு (defamation);

(i) நிலை வடிவ அவதூறு; (ii) வாய்மொழி அவதூறு;

(இ) பொருள்கள் பற்றிய அவதூறு;

(ஈ) பிற தீங்கிழைக்கும் பொய்மைகள் (other malicious falsehood);

(உ) சதி;

(ஊ) தொல்லை

தீங்கியலில் பெரும்பாலான வழக்குகளில் உள்நோக்கம் அல்லது குறிநோக்கம் தொடர்பற்றதாக அல்லது குறைந்த அளவு முக்கியத்துவம் கொண்டதாகவும், வேறு சில குறிப்பிட்ட வகையான தீங்கியல் வழக்குகளில் தொடர்புடையதாகவும் உள்ளது. எனவே 'உள்நோக்கம் தீங்கியலுக்கு தொடர்பற்றது' என ஒட்டுமொத்தமாக குறிப்பிடுவது ஏற்கத்தக்கதாக இருக்க முடியாது.

14. தீங்கியலில் தீங்கெண்ணம் இயைபுடையதல்ல. தீர்வுவழிச் சட்டங்களுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் விவரிக்கவும். (Malice is irrelevant in law of torts. Discuss with caselaws and illustrations) - Nov-2018

✦ **தீங்கு ஒன்று அமைவதற்கு தீங்கெண்ணம் ஓர் இன்றியமையாத கூறாகுமா? விவாதிக்கவும். (Is malice and essential ingredient to constitute tort? - Discuss).**

SN - 14 வெளிப்படையான தீங்கெண்ணம் / Express Malice Nov-2018 (v).

விடைச்சுருக்கம்: (அ) பொருள் மற்றும் வரையறை - (ஆ) தீங்கெண்ணத்தின் வகைகள் - ஆ(i) சட்டத் தீங்கெண்ணம் - ஆ (ii) வெளிப்படையான தீங்கெண்ணம் - (இ) வழக்குத்தீர்வுகள் - (ஈ) தீங்கெண்ணம் தொடர்புடையதாகும் சிறப்பு நேர்வுகள்

(அ) பொருள் மற்றும் வரையறை (Meaning and Definition)

'Malice' என்ற ஆங்கிலச் சொல் 'malita' எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இது மற்றொருவருக்கு ஊறு ஏற்படுத்துவதற்காக முன்னரே வகுக்கப்பட்ட திட்டமாகும் (formed design). இது நுட்பமான உணர்வில் 'முன்னெண்ணம் கொண்டது' (malice presence or (aforethought) எனக் குறிப்பிடப்படும். "தீங்கெண்ணத்தின் பொருள் மற்றும் அது குறிப்பது என்னவெனில் மற்றொருவருக்கு தீங்கு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யும் ஓர் தவறான செயலாகும்" ("malice means and implies an intention to do an act which is wrongful to the detriment of another") என்று தீங்கெண்ணத்தை நீதிப்பிரபு போவன் (Bowen, L.J), **Mogul Steamship co. Vs McGregor. Gow & Co., 1892 AC 25.,** என்ற வழக்கில் வரையறுத்துள்ளார்.

(ஆ) தீங்கெண்ணத்தின் வகைகள் (Types of malice)

பொதுவாக ஏற்றுக்கொண்ட பொருளில் தீங்கெண்ணம் என்பது ஓர் நபருக்கு எதிராக கொண்டுள்ள தீயநோக்கம் அல்லது கெட்ட எண்ணத்தைக் குறிக்கும்; ஆனால் சட்ட உணர்வில் இது, எவ்வித நியாயமான காரணமின்றி, செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் செய்யப்படும் தவறான செயலாகும். தீங்கெண்ணம் வெளிப்படையான தீங்கெண்ணம், சட்டத் தீங்கெண்ணம் என இருவகைப்படும். தீங்கெண்ணம் அல்லது தீய நோக்கு என்பது இரண்டு வேறுபட்ட உணர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது;

(i) இது சட்ட உணர்வில், எவ்வித நியாயமான காரணமும் இன்றி, வேண்டுமென்றே அல்லது கருதியே செய்யப்பட்ட செயலை (wilful act) குறிக்கிறது.

(ii) இதன் குறுகிய மற்றும் பரவலாக அறியப்பட்ட உணர்வில், இது தீய உள்நோக்கத்தை (evil motive) குறிக்கிறது.

ஆ(i) சட்டத் தீங்கெண்ணம் (Malice in law): இது கொள்நிலைத் தீங்கெண்ணம் அல்லது உட்கிடையான தீங்கெண்ணம் (implied malice) என்றும் அழைக்கப்படுகிறது. ஓர் வழக்கின் சூழ்நிலையில் இருந்து, தீயநோக்கம் அல்லது தீயஎண்ணம் உள்ளதை அனுமானிப்பது உட்கிடையான தீங்கெண்ணம் எனப்படுகிறது. சாதாரணமாக சட்டத்தீங்கெண்ணம் என்பது, ஓர் சட்டவிரோதச் செயல் குறித்த வழக்கில் அனுமானிக்கப்படுகின்ற ஓர் தவறான நோக்கத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, அவதூறுக்கான வழக்கொன்றில், சொல்லப்பட்ட கூற்று, பொய்யாகவும் தீங்கெண்ணத்துடனும் வெளியீடு செய்யப்பட்டதாக

குறிப்பிடப்படலாம். இங்கு இது சாதாரணமாக பொய்யாகவும் மற்றும் சட்டப்படியான காரணம் ஏதுமின்றி செய்யப்பட்டது என்று பொருளாகும். எனவேதான் **Stockley Vs Hornidge, (1837) 8 C & P11.**, என்ற வழக்கில் சட்டத் தீங்கெண்ணம் என்பது, பொதுவாக பேச்சுவழக்கில் குறிப்பிடக்கூடிய கோப உணர்வு அல்லது பழிதீர்க்கும் உள்நோக்கத்தினால் தூண்டப்படும் ஓர் செயல் அல்லாமல், நியாயமான மற்றும் நம்பக்கூடிய காரணம் ஏதுமின்றி தவறாக செய்யப்பட்ட ஓர் செயலைக் குறிக்கும் என்று கூறப்பட்டது.

ஆ(ii) வெளிப்படையான தீங்கெண்ணம் (Express malice): இது உளதான தீங்கெண்ணம் (malice in fact) அல்லது உண்மையில் தீங்கெண்ணம் (actual malice) எனவும் குறிப்பிடப்படுகிறது. ஓர் தவறான செயலை பிரதிவாதி பகைமை உணர்வுடன் (feeling of spite), பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்துடன் (vengeance) அல்லது கெட்ட எண்ணத்துடன் (ill-will) செய்தால் அச்செயல் தீங்கெண்ணத்துடன் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. உள்நோக்கம் என்பது நடத்தைக்கான காரணத்தின் அறுதி நோக்கமாகும். இது நோக்கம் அல்லது எண்ணத்துடன் (intention) வேறுபட்டது. ஏனெனில், நோக்கம் என்பது தன்னிலையிலேயே ஓர் தவறான செயலுடன் தொடர்பு கொண்டது. திருட்டிற்கான உள்நோக்கம் (motive) தனது குழந்தைகளுக்கு உணவு வாங்குவதற்காக அல்லது ஏழைக்கு உதவுவதற்காகக்கூட இருக்கலாம். ஓர் நபரின் உள்நோக்கம், தீங்கியலில் அவரின் பொறுப்புநிலையை தீர்மானிக்க தொடர்பற்றதாகும் என்பது பொதுவான ஓர் விதியாகும். ஓர் தவறான செயல் வெறுமனே நல்ல உள்நோக்கம் கொண்டது என்பதனாலேயே சட்டத்திற்கு உட்பட்ட செயலாகிவிடாது. இதேபோல், சட்டத்திற்குட்பட்ட ஓர் செயல் அதன் தீய உள்நோக்கம் அல்லது வெளிப்படையான தீங்கெண்ணத்தின் காரணமாக தவறான செயலாக ஆகிவிடாது.

(இ) வழக்குத்தீர்வுகள் (Case laws)

South Wales Miner's Federation Vs Glamorgan Coal. Co., (1905) AC 239., பக்கம் எண். 42-ல் காண்க.

Mayor of Bradford Corporation Vs Pickels, (1895) AC 595., என்ற வழக்கு, சட்டத்திற்குட்பட்ட ஓர் செயல் தீய உள்நோக்கம் (தீங்கெண்ணம்) கொண்டிருந்ததாலேயே, அது சட்டத்திற்கு புறம்பான செயலாக மாறிவிடாது என்பதை விளக்குகிறது. இவ்வழக்கில், பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலத்தில் பள்ளம் தோண்டியதன் விளைவாக, அருகிலிருந்த, நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் நகராட்சியின் (வாதியின்) நீர்த்தேக்கத்திற்கு செல்லும் நீரூற்று தடைபட்டது. வாதியின் இடத்திலிருந்த நீர் குறைந்ததுடன் அதன் நிறமும் மாறி மாசடைந்தது. தனது நிலத்தை தான் குறிப்பிடும் விலைக்கு வாதியை (நகராட்சியை) வாங்கும்படி வற்புறுத்துவதே பிரதிவாதியின் நோக்கமாகும். இவ்வழக்கில் தீங்கெண்ணத்தின் காரணமாகவே இழப்பு ஏற்படுத்தப்பட்டது என்றாலும்கூட, பிரதிவாதி, தனக்கு சொந்தமான இடத்தை சட்டத்திற்குட்பட்டு பயன்படுத்தினார். பிரபுக்கள் சபை, வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதி

பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது. "இத்தகைய வழக்குகளில் உள்நோக்கம் தொடர்பற்றது. நோக்க வேண்டியது செயலே அன்றி செயலுக்கான உள்நோக்கமன்று. ஓர் குறிப்பிட்ட செயல் வெறுமனே இழப்பினுக்கு மட்டுமே வழிவகுத்தால், அச்செயலின் உள்நோக்கம் எத்தகைய கண்டிக்கத்தக்கதாயினும்கூட, அது அந்நபரை பொறுப்புநிலைக்கு உள்ளாக்குவதற்கான அவசிய காரணியாக ஆகிவிடாது" என்று மெக்நாட்டன் பெருமகனார் (Lord Macnaugton) இவ்வழக்கில் குறிப்பிட்டார்.

Balak Glass Emporium Vs United India Insurance Co. Ltd., AIR 1993 Ker 342., என்ற வழக்கில், கட்டிடத்தின் மேற்பகுதியிலிருந்த பிரதிவாதியின் கடையிலிருந்து வெளியேறிய நீர், கீழ்ப்பகுதியிலிருந்த வாதியின் இடத்தினுள் நுழைந்து தேங்கியதால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. மேற்பகுதியில் பிரதிவாதியின் கடையினுள் இருந்த நீர் வெளிக்குழாய் (tap) திறந்து விடப்பட்டிருந்ததும் மற்றும் நீர்த்தேக்கத்தொட்டியின் (tank) நீர் வெளியேறும் வழி (outlet) மூடப்பட்டிருந்ததும் மெய்ப்பிக்கப்பட்டது. நீதிமன்றம், பிரதிவாதி தீங்கெண்ணத்துடன் செயல்பட்டிருப்பதால் வாதியின் இழப்புக்கு பொறுப்பாகுவார் என்று தீர்ப்பளித்தது.

(ஈ) தீங்கெண்ணம் தொடர்புடையதாகும் சிறப்பு நேர்வுகள் (Special cases where malice is relevant)

(a) அவதூறாக சொல்லப்படுகின்ற சொற்களை வெளியிட வரம்புக்கு உட்பட்ட சிறப்புரிமை (qualified privilege) கொண்டிருக்கும் நபர், தீங்கெண்ணத்துடன் அவற்றை வெளியிட்டார் என்பதை மெய்ப்பிக்கும்போது அவரது சிறப்புரிமை முடிவுக்கு வந்துவிடும்; (அதாவது அவதூறுத் தீங்குக்கு பொறுப்பாவார்).

(b) தீய நோக்குடைய குற்ற வழக்கு;

(c) தீங்கான பொய்மை (injurious falsehood): பொருள்கள் பற்றிய அவதூறு உள்ளிட்டவை;

(d) தொல்லை;

(e) சதி;

(f) மற்றொருவரின் சட்டப்படியான செயலில் ஒருவர் சட்டத்திற்கு முரணாக குறுக்கிடுதல்.

தீங்கெண்ணம் இழப்பீட்டின் அளவை அதிகரிக்கலாம்.

மேற்கண்டவற்றினின்று, தீங்கெண்ணம் பொதுவாக தீங்கியலுடன் தொடர்பு கொண்டிராவிட்டாலும், சிலக் குறிப்பிட்ட தீங்குகளுக்கு தொடர்புடையதாக உள்ளது. எனவே ஒட்டுமொத்தமாக தீங்கெண்ணம் தீங்கியலுக்கு தொடர்பற்றது எனும் கூற்று முழுமையாகப் பொருந்தாது.

15. தீங்கியல் சட்டத்தின் அடிப்படையான மற்றும் பொதுவான கோட்பாடுகள் யாவை? (What are the basic and general principles of law of Torts?) - May-2019(v).

விடைச்சுருக்கம்: (அ) தீங்கியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கை - (ஆ) தீங்கியல் சட்டத்தின் பொதுவான கொள்கைகள்

(அ) தீங்கியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கை (Fundamental principle of Law of Torts):

சட்டம், ஒவ்வொரு தனிப்பட்ட நபர்கள் மீதும், மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட உரிமைகளை மதிக்கும் கடமையை சுமத்தியுள்ளது. எனவே எவரொருவரும், மற்றொருவர் தன் சட்ட உரிமைகளை துய்ப்பதில் இடையூறு விளைவிக்கும்போது, அவர் தீங்கு ஒன்றைப்புரிந்தவர் ஆகிறார். தீங்கியல் சட்டத்தின் அடிப்படை நோக்கம், சட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய எவ்வித காரணமோ, நியாயமோ இன்றி வாதியின் உரிமையில் பிரதிவாதி குறுக்கிடுவதை தடுப்பதாகும். 'சொல்லாலும் செயலாலும் பிறருக்கு ஊறுவிளைவிக்காதே' 'alterum non leadere' என்பதே தீங்கியல் சட்டத்தின் பின்னணியில் உள்ள அடிப்படைக் கொள்கையாகும். இவ்வாறு நபர், சொத்து மற்றும் புகழ் ஆகியவை குறித்து சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட உரிமைகளை அமைதியான மற்றும் கண்ணியமான முறையில் துய்ப்பதை அனுமதிப்பதே தீங்கியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

(ஆ) தீங்கியல் சட்டத்தின் பொதுவான கொள்கைகள் (General principles of Law of Torts):

தீங்கியல் சட்டம் பின்வரும் பொதுவான கொள்கைகளைக் கொண்டதாகும்.

(1) தீங்கில்லா சேதம் மற்றும் சேதமில்லாத் தீங்குக் கொள்கை (Principle of Damnum sine injuria and Injuria sine damnum):

தீங்கில்லா சேதம்: பிரதிவாதியின் செயலால் வாதியின் சட்ட உரிமை மீறப்படாமல் இருப்பின், வாதிக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டாலும்கூட, பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என்பதே தீங்கில்லா சேதம் என்ற சட்ட முதுமொழியின் சாரம் ஆகும். தீங்கியலில் எவரையேனும் ஒருவரை பொறுப்புநிலைக்கு உட்படுத்த வாதி, தனது சட்ட உரிமைக்கு ஊறு ஏற்பட்டிருப்பதை மெய்பிக்க வேண்டும்.

சேதமில்லாத் தீங்கு: பிரதிவாதியின் செயலால் வாதிக்கு உண்மையில் இழப்பு / சேதம் ஏதும் ஏற்படாமல் இருந்தாலும்கூட, வாதியின் சட்ட உரிமை மீறப்பட்டிருந்தால் பிரதிவாதி பொறுப்பாவார் என்பதே சேதமில்லாத்தீங்கு என்ற சட்ட முதுமொழியின் சாரம் ஆகும். சேதமில்லாத்தீங்கில், வாதி, தனது சட்ட உரிமைக்கு ஊறு ஏற்பட்டதால், தனக்கு உண்மையில் ஏற்பட்ட இழப்பு எதனையும் மெய்பிக்காமலேயே வழக்கிட்டு வெல்ல முடியும்.

(2) பகரப் பொறுப்புக் கொள்கை (Principle of vicarious liability): ஒருவர் தனது சொந்த செயல் மற்றும் செயல் தவிர்ப்புக்கு மட்டுமே பொறுப்பாகுவார்

என்பது ஓர் பொதுவான விதியாகும். ஆனால் சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில் ஒரு நபர் மற்றவர்கள் செய்த செயலுக்கு பொறுப்பேற்க நேரிடும். இதுவே பகரப்பொறுப்பு என அழைக்கப்படுகிறது. பணியாளர்கள் பணியின்போது செய்த செயல்களுக்கு பணி வழங்குநர் பொறுப்பாகுவது, முகவரின் (agent) செயல்களுக்கு முதல்வர் பொறுப்பாகுவது, கூட்டாண்மையர் (partner) ஒருவரின் தீங்கான செயலுக்கு மற்ற கூட்டாளிகளுடன் அவரும் சேர்ந்து பொறுப்பேற்பது போன்றவை பகரப்பொறுப்பு நிலைக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

(3) இசைந்தேற்பது தீங்காகாது எனும் கொள்கை (Principle of volenti non fit injuria): இந்த இலத்தீன் சட்டமுதுமொழிக்கு தமிழில் 'வலிந்து ஏற்றுக்கொண்ட ஒருவருக்கு தீங்கும் ஏதும் செய்யப்படவில்லை' ('to one who volunteers, no harm is done') எனக் குறிப்பிடலாம். ஒருவர், ஒரு செயலில் உள்ளடங்கியுள்ள அபாயங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றை அறிந்திருந்தும், அதனை எதிர்கொள்ள தாமாக விரும்பி முன்வந்து சம்மதம் தெரிவித்த பின்பு, அச்செயலினால் ஏற்பட்ட ஊறினுக்காக இழப்பீடு கோரமுடியாது. ஒரு நபர் தன்னிச்சையாக தனது உரிமைகளை கைவிட்டப் பின்னர், தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக வழக்கிடமுடியாது. தீங்கியலில் பிரதிவாதியை பொறுப்பு நிலையிலிருந்து முழுமையாக விடுவிக்க இசைந்தேற்பது தீங்காகாது என்பது ஓர் எதிர்வாதமாக பயன்படுத்தப்படுகிறது.

(4) கவனமின்மைக் கோட்பாடு (Principle of negligence): எவரேனும் ஒருவர் குறித்து கவனமுடன் செயல்பட வேண்டிய கடமை கொண்டிருக்கும் நபர், அக்கடமையை மீறும் வகையில் செயல்பட்டு அதன்விளைவாக முறையீட்டாளருக்கு (complainant) சட்ட சேதம் ஏற்படுமாயின் அந்நபர் கவனமின்மை எனும் தீங்கு புரிந்தவராகிறார். இதனை சுருக்கமாக குறிப்பிடுவது எனில், ஒரு நபர், மற்றொரு நபரின் பொறுப்பற்ற செயலால் இழப்பிற்கு ஆளாகும்போது கவனமின்மை எனும் தீங்கு புரிந்ததாகிறது. வாதிக்கு ஏற்பட்ட இழப்பு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கவனமின்மை செயலின் கூட்டுவிளைவாக இருப்பின் அது கூட்டுக் கவனமின்மை எனப்படும். கூட்டுக்கவனமின்மைத் தீங்கு புரிந்தவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாதிக்கு பொறுப்பாவார்கள்.

(5) தனிநபர் பாதுகாப்புக் கொள்கைகள் அல்லது ஆளுரு பாதுகாப்புக் கொள்கைகள் (Principles of personal security): தனிநபர் பாதுகாப்புக் கொள்கைகள் பின்வருமாறு:

(i) தாக்க முனைதல் (Assault): பிரதிவாதி தன்னை உடனடியாக தாக்கப்போகிறான் என்ற அச்சத்தை வாதியின் மனதில் ஏற்படுத்தும் பிரதிவாதியின் செயலே தாக்க முனைதல் எனப்படுகிறது. தாக்க முனைதலில் உடலளவிலான தொடுதல் (physical contact) இல்லாது இருக்கும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

(ii) தாக்குதல் (Battery): ஒரு நபரின் விருப்பத்திற்கு எதிராக அவருக்கு

காயம் அல்லது வலியை உண்டாக்கக்கூடிய அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய சட்ட விரோதத் தொடுதலே (unlawful touching) தாக்குதல் எனப்படும். தாக்குதல் என்பது பலம் அல்லது வலிமையை (force), தீங்கு விளைவிக்கத்தக்க வகையில் மற்றொருவரின் உடல்மீது பிரயோகிப்பதாகும். தாக்க முனைதலை முழுமை பெறச் செய்வதே தாக்குதலாகும்.

(iii) முறையற்ற சிறைவைப்பு (False imprisonment): ஒரு நபரின் விருப்பமின்றி, சட்டத்திற்கு புறம்பாக மற்றும் சட்ட அதிகாரம் ஏதுமின்றி அவரின் எங்கும் செல்லும் சுதந்திரத்தை தடை செய்வதே முறையற்ற சிறைவைப்பாகும். சட்டப்பிடியாணை (legal warrant) மற்றும் சட்ட அதிகாரம்இன்றி ஒரு நபரைக் கைது செய்வதும் முறையற்ற சிறைவைப்பு என்பதாகும்.

(6) தொல்லைக் குறித்த கொள்கை (Principle of nuisance): ஒரு நபரின் நிலத்தின்மீது அல்லது நிலம் தொடர்பான தனது உரிமைகளை துய்ப்பதில் சட்டவிரோதமாக குறுக்கீடு செய்வதே தொல்லை எனப்படுவதாகும். தொல்லை, பொதுத்தொல்லை, தனித்தொல்லை என இருவகைப்படும்.

(7) சொத்து தொடர்பான அத்துமீறல் கொள்கை (Principle of trespass to property): சொத்து தொடர்பான அத்துமீறல் என்பது, ஒரு நபர் மற்றொருவரின் நிலத்தை நியாயமற்ற வகையில் ஆக்கிரமிப்பு செய்வதைக் குறிக்கும். ஒரு நபர், அனுமதியின்றி மற்றொருவரின் நிலத்தினுள் நேரடியாக நுழைந்தால் அல்லது தொடர்ந்து இருந்தால் அல்லது நிலத்தின்மீது ஏதேனும் பொருளை வைத்தால் அவர் நிலச்சொத்தில் அத்துமீறல் தீங்கு (trespass to land) புரிந்தவராகிறார். ஓர் அத்துமீறல் செயல் வழக்கு தொடரத்தக்கதாக இருப்பதற்கு, எந்த நிலத்தில் அத்துமீறல் புரியப்பட்டதோ, அந்நிலம் வாதியின் நேரடி உடைமையில் இருப்பது கட்டாயமாகும்.

(8) நற்பெயர் மற்றும் தனிமைக்குறித்த கொள்கைகள் (Principles of reputation and privacy): நற்பெயர் (புகழ்) மற்றும் தனிமைக்குறித்த கொள்கைகள் பின்வருமாறு:

அவதூறு (Defamation): சட்டப்படி நியாயமான காரணம் ஏதுமின்றி எவரேனும் ஒருவரைப்பற்றி சமுதாயத்தில் உறுப்பினர்களாக உள்ள நற்சிந்தனையாளர்களின் (நல்லவர்களின்) பார்வையில் அவரின் புகழை கீழ்மைப்படுத்தத்தக்க வகையில் பொய்யான மற்றும் அவதூறான அறிக்கையை வெளியீடு செய்வதே அவதூறு என்பதாகும். அவதூறு, நிலைவடிவ அவதூறு அல்லது வாய்மொழி அவதூறு என இருவகைப்படும் **(i) நிலைவடிவ அவதூறு (Libel):** நிலைவடிவ அவதூறு என்பது, சட்டப்படியான நியாயமான காரணம் ஏதுமின்றி, ஒரு நபரின் நற்பெயருக்கு ஊறுவிளைவிக்கத்தக்க வகையில் பொய்யான, அவதூறான கூற்று ஒன்றினை தாளில் எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட வடிவில் அல்லது கேலிச்சித்திரம் (cartoon) அல்லது ஓவியம் போன்றவடிவில் வெளியீடு செய்வதைக் குறிக்கும். இது தன்னிலையிலேயே வழக்கு தொடரத்தக்க எழுத்துவடிவிலான தீங்காகும். **(ii) வாய்மொழி அவதூறு**

(slander): இது வாய்மொழி வார்த்தைகள் அல்லது சைகைகள் போன்ற நிலையற்ற அல்லது தற்காலிக வடிவத்தில், ஒருவரின் புகழுக்கு ஊறுவிளைவிப்பதைக் குறிக்கும்.

(9) கடும் பொறுப்பு மற்றும் முழுப்பொறுப்புக் கொள்கைகள் (Principles of strict liability and Absolute liability):

(i) கடும் பொறுப்பு நிலைக் கொள்கை (Principle of strict liability): சிலவகையான தீங்குகளில், ஒரு நபர் தவறு ஏதும் செய்யாமல் இருந்தாலும் அல்லது அவர் தரப்பில் கவனமின்மை இல்லாமல் இருந்தாலும் அல்லது அத்தகைய தவறு செய்ய வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் இருந்தாலும் அல்லது அத்தகைய தவறு நிகழாமல் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் பொறுப்பிற்கு உள்ளாக்கப்படுவார். தீங்கியலின் இத்தகைய பொறுப்பு நிலையே கடும்பொறுப்பு நிலை என்பதாகும். கடும்பொறுப்புநிலை முதன்முதலாக ரைலாண்ட்ஸ் வழக்கு விதியில் உருவாக்கப்பட்டது. இது தவறில்லா பொறுப்புநிலைக் கொள்கை (no fault theory) அடிப்படையில் அமைந்ததாகும். இருப்பினும் கடும் பொறுப்பு நிலைக் கொள்கைக்கு பின்வரும் விலக்குகள் உண்டு. அவை : (a) வாதியின் தவறு, (ii) தெய்வச் செயல், (iii) வாதியின் சம்மதம், (iv) சட்ட அதிகாரம், (v) மூன்றாம் நபரின் செயல் போன்றவைகள் ஆகும்.

(ii) முழுப்பொறுப்பு நிலைக்கொள்கை (Principle of Absolute liability): இந்திய உச்சநீதிமன்றம், M.C.Mehta Vs Union of india., என்ற வழக்கில் முழுப் பொறுப்பு நிலைக் கொள்கையை வகுத்தது. அபாயகரமான பொருளை தயாரிக்கும் அல்லது தயாரிப்பின்போது பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தினால் பாதிக்கப்படும் அனைவருக்கும் முழுமையான இழப்பீடு அளிக்கும் கடமையை இக்கொள்கை எடுத்துரைக்கிறது. கடும் பொறுப்பு நிலையைப் போன்றே முழுப்பொறுப்பு நிலையும் தவறில்லா பொறுப்புநிலைக் கொள்கையின் அடிப்படையைச் சார்ந்ததே என்றாலும் முழுப்பொறுப்பு நிலைக்கு விதிவிலக்குகள் ஏதுமில்லை என்பது உற்றுநோக்கத்தக்கதாகும்.

SHORT NOTES

15. தீங்கியல் சட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்கள் /Purpose and functions of Law of Tort

தீங்கியல் சட்டத்தின் நோக்கம் (Purpose of Law of Tort): மற்றொரு நபரின் செயலின் விளைவாக, ஊறு அல்லது இழப்பிற்கு உள்ளாகும் எந்தவொரு நபரும், உரிமையியல் வழக்கின்மூலமாக இழப்பீடு கோரும் சட்டத்தின் முறையே தீங்கியல் சட்டமாகும். எனவே தீங்கியல் சட்டம் என்பது, தவறான செயலைச் செய்த நபரை, அவரின் செயலால் சேதம்/இழப்பு ஏற்பட்ட நபருக்கு வற்புறுத்தி இழப்பீடு அளிக்கச்

செய்வதற்காக உருவானசட்டமாகும். இவ்வாறு ஒரு நபரின் உடல், சொத்து, நற்பெயர் (புகழ்) அல்லது மற்றவை தொடர்பாக பிறர் சேதம்/இழப்பு ஏற்படுத்துவதை தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதே தீங்கியல் சட்டமாகும். 'எவரொருவரும் சொல்லாலும் செயலாலும் எவரொருவருக்கும் ஊறுவிளைவிக்கலாகாது' என்பதே தீங்கியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இவ்வாறு, மக்கள் தங்களின் உரிமையியல் உரிமை தொடர்பாக கொண்டுள்ள சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ள உரிமைகளை அமைதியான மற்றும் கண்ணியமான முறையில் துய்ப்பதற்கு (enjoy) அனுமதிப்பதே தீங்கியல் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தீங்கியல் சட்டத்தின் செயல்கள் (Functional Law of Torts):

தீங்கியல் சட்டத்தின் செயல் என்னவெனில், எப்பொழுது ஒரு நபருக்கு ஏற்பட்ட தீங்கிற்கு பரிகாரம் வழங்குவது, எப்பொழுது வழங்கப்படக்கூடாது என்பதை தீர்மானிப்பதாகும். இவ்வாறு தீங்கியல் சட்டம், நபர்களின் செயல்பாடுகள், மற்றவர்களின் நலனுக்கு அச்சுறுத்தலாக உள்ள அத்தகைய சூழ்நிலைகளுடன் தொடர்புகொண்டதாகும். தீங்கியல் சட்டம், ஓர் சமுதாயத்தில் வாழும் நபர்களின் அதிகரித்துக் கொண்டே வருகின்ற செயல்களினால் விளைகின்ற இழப்புகளினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதன் மூலமாக 'இழப்புகளை சரிசெய்யும்' (adjusting loses) அத்தகைய செயலைச் செய்கிறது. மேலும் சிலவகையான தவறு செய்தவரை தண்டிப்பதைவிட, தனிப்பட்ட நபரின் நலனை பாதுகாப்பதே தீங்கியல் சட்டத்தின் செயல்பாடுகளாகும். தீங்கியல் சட்டம் பாதுகாக்கும் நலன்கள் பின்வருமாறு:

(i) தனிப்பட்ட மற்றும் சொத்தியல் நலன்கள் (Personal and proprietory interests): உடலளவிலான ஊறு ஏற்படுத்துவதனின்று நபர்களை பாதுகாத்தல், எங்கும் சென்றுவரும் தன்னுரிமை சுதந்திரத்தின்மீது கட்டுப்பாடு விதிப்பது குறிப்பாக நிலம் மற்றும் அசைவியல் பொருள்கள் (chattels) தொடர்பாக இடையூறு ஏற்படுத்தாதிருக்கும் உரிமை ஆகியவை தீங்கியல் சட்டத்தின் மிக முக்கியமான செயல்களாகும்;

(ii) புகழ் (reputation): நிலைவடிவ அவதூறு (libel) மற்றும் நிலையாவடிவ அவதூறு அல்லது வாய்மொழி அவதூறு (slander);

(iii) பொருளாதார நலன் (economic interes): சதி, ஒப்பந்தத்தில் குறுக்கிடுதல், வணிகப்போலி (Passing-off), தீங்கான பொய்மை மற்றும் ஏமாற்றுதல்;

(iv) குடும்ப உறவுகளில் உள்ள நலன்கள் (Interests in family relations);

(v) நீதிமுறை நடவடிக்கைகளில் குறுக்கிடுதல் (Interference with judicial process): தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல், நீதிமுறை நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துதல்;

(vi) பல்வகை நலன்கள் (miscellaneous interests): வாக்களிக்கும் உரிமையில் குறுக்கிடுதல் மற்றும் விடுதியில் தங்குவதற்கான உரிமை உள்ளிட்டவைகள் எஞ்சிய குழுவில் அடங்கும்.

16. தீங்கு / injuria

'injuria' என்ற இலத்தீன் சொல்லுக்கு நேரடி தமிழ்ச்சொல் 'தீங்கு' என்பதாகும். இருப்பினும் பொதுவானப் பொருளில் பயன்படுத்தப்படும் தீங்கு என்பதற்கும், தீங்கியலில் பயன்படுத்தப்படும் தீங்கு என்பதற்கும் வேறுபாடு உள்ளது. தீங்கியலில் தீங்கு என்பது, ஒரு நபரின் சட்டப்படியான உரிமை மீறப்படுவதை (infringement of legal right) குறிக்கும். அதாவது சட்ட உரிமைக்கு தீங்கு ஏற்படுவதாக பொருள்படும். ஏதேனுமொரு தீங்கினால் பாதிக்கப்பட்ட வாதி, தனது சட்ட உரிமை மீறப்பட்டுள்ளது அல்லது தனது சட்ட உரிமைக்கு ஊறு ஏற்பட்டுள்ளது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறு மெய்ப்பிப்பின், உண்மையில் அவருக்கு ஏற்பட்ட இழப்பை மெய்ப்பிக்கத்தேவையில்லை. வாதியின் சட்ட உரிமைக்கு தீங்கு ஏற்பட்டிருந்து அதனால் அவருக்கு எவ்வித இழப்பு / சேதம் ஏற்படாமல் இருந்தாலும்கூட, நீதிமன்றம் இழப்பீடு வழங்கும். இதனையே 'சேதமில்லாத்தீங்கு' (injuria sine damnum) எனும் இலத்தீன் சட்டமுதுமொழி குறிப்பிடுகிறது. Ashby Vs White, (1703) 2 Ld. Raym. 938., என்ற வழக்கில், வாதிக்கு உண்மையில் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றாலும்கூட, அவரின் சட்ட உரிமைக்கு தீங்கு ஏற்படுத்தப்பட்டதற்காக நீதிமன்றம் இழப்பீடு வழங்கியது.

சில நேர்வுகளில், ஒரு நபருக்கு உண்மையில் இழப்பு/சேதம் ஏற்பட்டிருந்தாலும்கூட, அவரின் சட்ட உரிமை மீறப்படாமல் இருப்பின் அல்லது அவரின் சட்ட உரிமைக்கு தீங்கு ஏதும் ஏற்படாதிருப்பின், அந்நபர் தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக வழக்கு தொடர முடியாது. இதனையே 'தீங்கில்லா சேதம்' எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக 'A' மளிகை வியாபாரம் செய்யும் கடை அமைந்துள்ள பகுதியில் 'B'-யும் மளிகை வியாபாரம் தொடங்கியதால் 'A'-ன் வியாபாரம் குறைந்து நட்டம் ஏற்பட்டதாகக் கொள்வோம். இங்கு 'A'-க்கு உண்மையில் நட்டம் ஏற்பட்டாலும்கூட அவர் 'B'-க்கு எதிராக வழக்கு தொடரமுடியாது. ஏனெனில் 'A'-ன் சட்ட உரிமையான தொழில் செய்யும் உரிமையில் 'B' குறுக்கீடு ஏதும் செய்யவில்லை, மாறாக தொழில் செய்வதற்கான தனக்குள்ள சட்ட உரிமையை செயல்படுத்தியுள்ளார். இவற்றினின்று, தீங்கியலில் வழக்கு தொடரும் வாதி, தனது சட்ட உரிமைக்கு ஊறு ஏற்பட்டுள்ளது என்பதை மெய்ப்பித்தால் மட்டுமே வழக்கில் வெற்றிபெற முடியும் என்பதை புரிந்து கொள்ளலாம்.

17. இழப்பீடுகள் கோரும் தீர்ப்பாயம் / Claims Tribunal., - Nov-2019

மோட்டார் வாகன விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலவு குறைவான மற்றும் விரைவான தீர்வழியை அளிப்பதற்காக மோட்டார் வாகன

விபத்துகள் கோருரிமை தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 165 முதல் 175 வரையிலான பிரிவுகள், இழப்பீடுகள் கோரும் தீர்ப்பாயங்களை ஏற்படுத்தல், தீர்ப்பாயங்களின் முன்னிலையில் வரும் வழக்குகள் தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள் மற்றும் இழப்பீட்டிற்கான தீர்வளிப்பை (award) வழங்குதல் குறித்த பொருள்களைக் கொண்டுள்ளது.

இழப்பீடுகள் கோரும் தீர்ப்பாயங்களை ஏற்படுத்தல் (Setting up of claims tribunal): மாநில அரசு, அரசிதழ் அறிவிக்கையின் (official gazette) வாயிலாக, அறிவிக்கையில் குறிப்பிடப்படும் பகுதி குறித்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட தீர்ப்பாயங்களை ஏற்படுத்தலாம். [பிரிவு-165(1)]. ஏதேனும் ஒரு பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அவைகளுக்கு இடையேயான பணிப்பகிர்வை, மாநில அரசு ஓர் பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் மூலமாக முறைப்படுத்தலாம் - பிரிவு-165(4).

தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் (Members of the tribunal): தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, மாநில அரசு, தான் தகுதியானது எனக் கருதும் அத்தகைய எண்ணிக்கையில் இருக்கும். மேலும் மாநில அரசு, ஒரு தீர்ப்பாயத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை நியமித்தால், அவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்கும். தீர்ப்பாயத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு ஒரு நபர்-

(i) உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்து வருகிறவர் அல்லது (ii) மாவட்ட நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்து வருகிறவர் அல்லது (iii) உயர்நீதிமன்ற நீதிபதியாக அல்லது மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கான தகுதியைக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும் - பிரிவு-165(3).

தீர்ப்பாயத்தினால் முடிவு செய்யப்படும் பொருண்மைகள் (Matters of adjudication by claim tribunal): இழப்பீடுகள் கோரும் தீர்ப்பாயம், மோட்டார் வாகனத்தை பயன்படுத்தியதின்று எழும் விபத்துகளால் உள்ளாகும் நபர்களின் இறப்பு அல்லது உடலளவில் ஏற்படும் காயங்கள் அல்லது விபத்தினால் மூன்றாம் தரப்பினரின் சொத்துக்கு ஏதேனும் ஏற்பட்ட சேதம் போன்ற பொருண்மைகளை முடிவு செய்யும். இச்சட்டத்தின் பிரிவு-2(28)-ன்படி, மோட்டார் வாகனம் என்பது எந்தவொரு இயந்திரத்தாலும் உந்தப்படும் (mechanically propelled) வாகனத்தைக் குறிக்கும்.

இழப்பீட்டிற்கான விண்ணப்பம் (Application for compensation): இழப்பீட்டிற்கான விண்ணப்பத்தை-

(i) காயமுற்ற நபர்; (ii) சேதமடைந்த சொத்தின் உரிமையாளர்; அல்லது (iii) விபத்தினால் இறப்பு ஏற்பட்டிருப்பின், இறந்தவரின் அனைத்து அல்லது

எவரேனும் ஒரு சட்டமுறைப்பிரதிநிதி; அல்லது (iv) காயமுற்ற நபர் அல்லது இறந்துபோனவரின் அனைத்து அல்லது எவரேனும் ஒரு சட்டமுறைப் பிரதிநிதியின் உரிய அதிகாரம் பெற்றவரால் அளிக்கப்படலாம். இழப்பீட்டிற்கான விண்ணப்பத்தில் அனைத்து சட்டமுறைப் பிரதிநிதிகளும் சேராமல் இருப்பின், சட்டமுறைப் பிரதிநிதிகள் அனைவரின் சார்பாகவும் அல்லது ஆதாயத்திற்காகவும் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யலாம். மேலும் அத்தகைய விண்ணப்பத்தில் சேராத சட்டமுறைப் பிரதிநிதிகளை விண்ணப்பத்தில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட வேண்டும்.

இழப்பீட்டிற்கான விண்ணப்பத்தை, விபத்து நடந்த இடம் குறித்து ஆள்வரை கொண்டுள்ள தீர்ப்பாயத்தில் அல்லது விண்ணப்பதாரர்கள் சாதாரணமாக வசித்து வரும் அல்லது தொழில் மேற்கொள்ளும் இடம் குறித்து அல்லது பிரதிவாதி வசித்து வரும் இடம் குறித்து ஆள்வரை கொண்டுள்ள தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் - பிரிவு-166. இச்சட்டத்தின் பிரிவு-167-ன்படி, ஒரு நபரின் இறப்பு அல்லது உடலளவிலான ஊறுகள் தொடர்பாக, மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழும் மற்றும் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழும் இழப்பீடு கோரத்தக்கதாக இருப்பின், இழப்பீடு கோரத்தகுதி பெற்றுள்ள நபர் ஏதேனுமொரு சட்டத்தின்கீழான தீர்வழியை மட்டுமே தேர்வு செய்ய முடியும்.

நடைமுறை (Procedure): இச்சட்டத்தின் பிரிவு-169 மற்றும் 170 ஆகியவை, தீர்ப்பாயத்தின் நடைமுறையை எடுத்துரைக்கின்றன. எனவே தீர்ப்பாயம் பிரிவு-168-ன்கீழ் இழப்பீட்டிற்கான தீர்வளிப்பை அளிப்பதற்கு முன்னர், தரப்பினர்களின் தரப்பில் கூறப்படுவதை கேட்பதற்கு முறையான வாய்ப்பளித்தும் மற்றும் கோரிக்கை தொடர்பான விசாரணையை மேற்கொள்ளவும் வேண்டும். தீர்ப்பாயம் தான் தகுந்தது எனக் கருதும்போது சுருக்குமுறை விசாரணையையும் இது தொடர்பாக குறிப்பிடப்படும் விதிகளுக்கு உட்பட்டு பின்பற்றலாம்.

தீர்ப்பாயம், உறுதிமொழியின்பேரில் சான்று பெறுவது, ஆவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்களை வெளிக்கொணர்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் மற்றும் குறிப்பிடப்படும் இதர நோக்கங்களுக்காக, குற்றவியல் விசாரணைமுறைச்சட்டத்தின் பிரிவு-195-ன் அனைத்து நோக்கங்களுக்காகவும் ஓர் உரிமையியல் நீதிமன்றமாக கருதப்பட வேண்டும் - பிரிவு-169(2). மேலும் இழப்பீட்டுக் கோரிக்கையை முடிவு செய்யும் நோக்கத்திற்காக, விசாரணைக்கு தொடர்புடைய பொருள் குறித்து உதவிட, தீர்ப்பாயம் அப்பொருள் குறித்து சிறப்பு அறிவாண்மை கொண்ட (special knowledge) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை தேர்வு செய்யலாம் - பிரிவு-169(3).

18. ஓரலகு பொறுப்படைவு கருத்தியல் / Unity theory of Liability - Nov-2019

பொதுவாக எந்தவொரு வழக்கிலும் பாதிக்கப்பட்ட நபர், எதிர்மனுதாரரின் செயலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே நீதிமன்றம் தான் கோரும் பரிகாரத்தை வழங்குமாறும் மனுவை தாக்கல் செய்வார். மனுதாரரின் மனுவைப் பெற்ற நீதிமன்றம் அது தொடர்பான எதிர்மனுதாரரின் கருத்தை கேட்பதற்கு முறையான வாய்ப்புகள் அளித்து மற்றும் அவர் தரப்பு நியாயத்தை மெய்ப்பிப்பதற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள், சான்றுப் பொருள்கள் (எவையேனும் சமர்ப்பிப்பின்) சாட்சிகள் ஆகியவற்றை பரிசீலித்து, தொடர்புடைய சட்டத்தைப் பொருந்தச் செய்து அதன்பின்னர் தீர்ப்புரை வழங்கும். இங்கு நீதிமன்றம் இருதரப்பினருக்கும் முறையான வாய்ப்பினை அளிக்கிறது. இத்தகைய பொதுவான நடைமுறைக்கு மாறாக, சிலக்குறிப்பிட்ட வழக்குகளில் அதாவது சிலக்குறிப்பிட்ட விலக்குகளுக்கு உட்பட்டு கடும் பொறுப்பு நிலையிலும் மற்றும் குறிப்பாக முழுப்பொறுப்பு நிலைக் குறித்த தீங்கியல் வழக்குகளில், எதிர்மனுதாரருக்கு அவர் தரப்பு கேட்கப்படுவதற்கு வாய்ப்பு ஏதும் அளிக்கப்படுவதில்லை. அதாவது எதிர்மனுதாரர் தன் தரப்பில் தவறு அல்லது கவனக்குறைவு ஏதுமில்லை என்று வாதிடுவதை நீதிமன்றம் அனுமதிப்பதில்லை. வழக்கின் ஓர் தரப்பினரான மனுதாரர் தமக்கு ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பு பிரதிவாதியால் ஏற்பட்டது என்பதை மெய்ப்பித்தாலே போதுமானது என்பதால் இது ஓரலகு பொறுப்படைவு கருத்தியல் அல்லது பிழையில்லா அல்லது தவறில்லா பொறுப்புநிலை எனக் குறிப்பிடப்படுகிறது.

1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில், 2019-ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி, பிரிவு-164, தவறில்லா பொறுப்புநிலை குறித்துக் குறிப்பிடுகிறது. இப்பிரிவின்படி, வாகன விபத்தினால் இறந்த நபர்களுக்கு ரூபாய் 5 இலட்சமும், கொடுங் காயமுற்றவர்களுக்கு ரூபாய் 2,50,000/- மும் தவறில்லா பொறுப்பு நிலையின்கீழ் வாகனத்தின் உரிமையாளர் அல்லது காப்பீட்டாளர் வழங்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இறப்பு அல்லது கொடுங்காயத்திற்கு வாகன ஓட்டுநரின் தரப்பில் எவ்வித தவறோ அல்லது கவனக்குறைவோ இல்லாமல் இருந்தாலும் தவறில்லா பொறுப்புநிலையின்கீழ் மேற்குறிப்பிட்ட தொகையை இழப்பீடாக வழங்க வானத்தின் உரிமையாளர் அல்லது காப்பீட்டாளர் கடமை கொண்டுள்ளார்.

2019-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்கு முன்பு, மோட்டார் வாகனங்கள் திருத்தச் சட்டத்தின் பிரிவு-140, தவறில்லா பொறுப்பு நிலைக் குறித்த வாசகத்தைக் கொண்டிருந்தது. மேலும் அப்பிரிவு, கொடுங்காயம் அடைந்தோர்க்கு ரூபாய் 25,000/- மும், இறந்தவர்களுக்கு ரூபாய் 50,000/- மும் வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தது.

அலகு - II

பொதுவான எதிர்வாதங்கள்
General Defences

PART - A/B

16. 'இசைந்தேற்பது தீங்கல்ல' என்ற சட்ட முதுமொழியினை தொடர்புடைய வழக்குகளுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் விவரிக்க. ('Explain the maxim 'volenti non-fit injuria' with relevant cases and illustrations) - May-2018.

✦ இசைந்தேற்பது தீங்காகாது என்பதை விவரிக்க. முக்கிய வழக்குகளுடன் இதற்கான வரம்புகளை எடுத்துகூறுக. Discuss 'volenti non-fit injuria'. State the limitations with leading cases) - May-2014(v).

✦ 'தாமாக முன்வந்து தீங்கை ஏற்கும் சூழலில் சட்டத்தீங்கு இழைக்கப்படுவதில்லை. ஆகவே அங்கு சட்ட நடவடிக்கைக்கு இடமில்லை' - எடுத்துரைக்கவும். ('Harm suffered voluntarily does not constitute legal injury and is not actionable' Elucidate) - May-2013.

SN - 19 'இசைந்தேற்பது தீங்காது' (அல்லது) இசைந்தேற்பது தீங்காதல் இல்லை / Volenti non fit injuria - May-2016, May-2015, Nov-2013(v).

SN - 20 மீட்பு வழக்குகள் (அல்லது) மீட்சி வழக்குகள் / Rescue cases, May-2017(v), May-2017, Nov-2014(v).

விடைச்சுருக்கம்: (அ) 'இசைந்தேற்பது தீங்காது' என்பதன் பொருள் - அ (i) இரண்டு வகை பொருந்தும் தன்மை - (ஆ) இசைவு எனும் எதிர்வாதத்திற்கான நிபந்தனைகள் - (இ) இசைந்தேற்பது தீங்காகாது எனும் முது மொழிக்கான விலக்குகள்

(அ) 'இசைந்தேற்பது தீங்காகாது' என்பதன் பொருள் (Meaning of 'volenti non fit injuria')

'ஓர் மனிதன் ஒன்றினுக்கு இசைவு (சம்மதம்) அளித்த பின்னர், ஊறு ஏற்பட்டுவிட்டதாக முறையிட முடியாது' என்பதே இம்மூதுரையின் (maxim) பொருளாகும். வெளிப்படையாக அல்லது உட்கிடையாக சம்மதம் தெரிவித்த எந்தவொரு செயலுக்காக எந்தவொரு நபரும் தீங்கியல் சட்டத்தின்கீழ் வழக்கிட முடியாது என்பதே இதன் உண்மையான பொருளாகும். ஒரு நபர் ஓர் உடன்படிக்கையின்கீழ் வெளிப்படையாக அல்லது உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள தொடர்புடைய பொருளின் அடிப்படையில், மற்றொரு நபரின்

செயலினால் ஏற்படும் உள்ளார்ந்த அபாயத்தை அறிந்திருந்தே சம்மதம் தெரிவித்திருந்தால், பின்னர் அச்செயலின் விளைவாக ஏற்பட்ட எந்தவொரு ஊறினுக்காகவும் இழப்பீடு கோரி முறையீடு (complaint) செய்வது அனுமதிக்கப்படமாட்டாது.

அ(i) இரண்டுவகை பொருந்தும் தன்மை (Two fold application): இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதம் இரண்டு வகையான நேர்வுகளுக்குப் பொருந்தும்.

முதலாவதாக, அறிந்திருந்தே செய்யப்படும் செயல்களால் (intentional acts) விளையும் ஊறுகளுக்கு சம்மதம் தெரிவிப்பதைக் குறிக்கும். நிலத்தினுள் நுழைவதற்கு இசைவளித்தல், அறுவை சிகிச்சைக்கு இசைவளித்தல், அவதூறான அறிக்கையை வெளியீடு செய்வதற்கு இசைவளித்தல் போன்றவைகள் இவ்வகையினுள் அடங்கும். மேற்குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் இசைவு அளிக்காமல் இருந்திருப்பின் முறையே அத்துமீறல், முறையற்ற சிறைவைப்பு மற்றும் அவதூறு என்னும் தீங்கு புரிந்ததாக வழக்கு தொடர முடியும் என்பதே இங்கு கவனிக்கத்தக்கதாகும். மேலும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள், அவ்விளையாட்டின்போது இயல்பாக ஏற்படும் காயங்களுக்கு இசைவு தந்துள்ளதாகவே தீங்கியல் சட்டம் கருதுகிறது. இருப்பினும், ஒரு விளையாட்டு வீரர் மற்றொரு வீரருக்கு காயத்தை ஏற்படுத்தவேண்டுமென்றே தாக்கியிருந்தால், அவர் இத்தகைய எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது. பொதுவாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் அவ்விளையாட்டின்போது காயங்கள் ஏற்படலாம் என்பதை அறிந்திருந்தே பங்கேற்கின்றனர். எனவே சில சட்ட எழுத்தாளர்கள், இத்தகைய நேர்வுகளில் இசைந்தேற்பது தீங்காகாது எனும் சட்ட முதுமொழிக்குப் பதிலாக 'தாமே ஏற்றுக் கொண்ட அபாயம் (voluntary assumption of risk) தீங்காகாது எனும் கூற்றை பயன்படுத்துகின்றனர்.

இரண்டாவதாக, விபத்தினால் ஏற்படும் காயங்களுக்கும் இந்த எதிர்வாதம் பொருந்தும். ஒரு நபர் விபத்தினால் காயம் ஏற்படக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ள இசைவு அளித்த பின்னர் விபத்தை ஏற்படுத்தியவரின் கவனமின்மையால் தனக்கு ஊறு ஏற்பட்டுவிட்டது என வழக்கிடமுடியாது. விளையாட்டுப் போட்டிகளை காணவரும் பார்வையாளர்கள், அவ்விளையாட்டின்போது சாதாரணமாக நிகழ்கின்ற அல்லது நிகழ்வதற்கு வாய்ப்புள்ள ஆபத்தை அறிந்திருந்தே கூடுகின்றனர். எனவே அவ்விளையாட்டின்போது ஏற்படுகின்ற ஆபத்தினால் ஏற்பட்ட ஊறுகளுக்காக வழக்கிட முடியாது. **Hall Vs Brooklands Auto Racing Club, [1933] 1 KB 205.**, என்ற வழக்கில் வாதி, கார் பந்தயத்தைக் காண்பதற்காக, அனுமதிச் சீட்டுப் பெற்று, பிரதிவாதிக்கு சொந்தமான பந்தயத் தடத்திற்கு (race track) சென்றார். பந்தயத்தின்போது இரண்டு பந்தயக்கார்கள் ஒன்றோடொன்று மோதியதில், ஒரு கார் உயரே எழும்பி பார்வையாளர்கள்மீது விழுந்தது. இதனால் போட்டியைக் காணவந்த வாதி படுகாயமடைந்தார். கார் பந்தயங்களின்போது, இத்தகைய

விபத்துகள் இயல்பாக ஏற்படும் என்பதை முன்னறிந்தே அதனைக் காண வந்ததால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. கார் பந்தயத்தைக் காண்பதற்காக வாதி, பணம் செலுத்தி அனுமதிச்சீட்டு பெற்ற அக்கணமே, கார் பந்தயத்தின்போது இயல்பாக ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வதற்கு உட்கிடையாக இசைவு அளித்துவிட்டதாக நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது.

(ஆ) இசைவு எனும் எதிர்வாதத்திற்கான அடிப்படை நிபந்தனைகள் (Essential conditions of the defence of consent)

தீங்கியல் வழக்கு ஒன்றில், இசைந்து ஏற்பது தீங்காகாது எனும் எதிர்வாதத்தை பயன்படுத்தி வெற்றி பெறுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

(1) தன்னிச்சையான இசைவு (Free Consent): பிரதிவாதியால் செய்யப்பட்ட செயலுக்கு, வாதி அளித்த சம்மதம் தன்னிச்சையானதாக இருக்க வேண்டும். இசைவு, மோசடி செய்தோ, வற்புறுத்தலின்பேரிலோ அல்லது ஏதேனும் தவறுதலான கருத்தின் அடிப்படையிலோ (under some mistaken impression) பெறப்பட்டிருக்கக்கூடாது. மேலும், இந்த எதிர்வாதத்தை பயன்படுத்துவதற்கு, பிரதிவாதியால் செய்யப்பட்ட அக்குறிப்பிட்ட செயல் பொருட்டே வாதி சம்மதித்திருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும். எனவே வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நபர், வளாகத்தினுள் நுழைந்ததுமே அவர்மீது அத்துமீறல் என்பதன் பேரில் வழக்கிட முடியாது. மாறாக, இசைவு அளிக்கப்படாத இடத்தினுள் அவர் நுழைந்தால் மட்டுமே அத்துமீறல் தீங்கிற்கு உள்ளாகுவார்.

மோசடியாக பெறப்பட்ட சம்மதம் தன்னிச்சையான சம்மதமாகாது. **R Vs Williams, (1923) 1 KB 340.,** என்ற வழக்கில், இசை பயிற்றுவிக்கும் ஆசிரியர் 16 வயதான மாணவியிடம், அவரின் குரல் வளத்தை மேம்படுத்துவதற்கு சிகிச்சையளிப்பதாகக் கூறி அவரின் சம்மதத்தை பெற்று உடலுறவு கொண்டார். உண்மையில் தான் அளித்த சம்மதம் அறுவை சிகிச்சையின்மூலம் குரல் வளத்தை மேம்படுத்துவதற்காகவே என்று அம்மாணவி முழுமையாக நம்பினாள். ஏமாற்றி, மோசடியாக சம்மதம் பெற்று உடலுறவு கொண்ட ஆசிரியர், கற்பழிப்பு குற்றம் புரிந்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒரு நபர் வற்புறுத்தலின் பேரில் மற்றும் தேர்வுரிமையை (choice) செயல்படுத்தும் வாய்ப்பு ஏதுமின்றி பெறப்படும் இசைவு தன்னிச்சையான இசைவாகாது. எசமான் – வேலையாளுக்கு இடையேயான உறவு இத்தகையதே. 'ஒரு நபர் சந்தர்ப்ப சூழ்நிலைகளை நன்கு புரிந்து கொண்டு, எவ்வித நிபந்தனைகள் மற்றும் தடைகளும் இன்றி, தேர்வு செய்வதற்கான நிலையிலிருந்து அளிப்பது மட்டுமே உண்மையான இசைவு ஆகும். **[Bowater Vs Rowley Regis Corporation, (1944) KB 476].**

(2) இசைவு தருவது சட்டவிரோத செயலுக்காக இருக்கக்கூடாது (Consent must not be illegal): எச்செயலுக்காக இசைவு

அளிக்கப்பட்டுள்ளதோ, அச்செயல் தன்னிலையிலேயே ஓர் சட்டவிரோதச் செயலாக (itself be illegal) இருக்கக்கூடாது. விளையாட்டு, பந்தயம் அல்லது அறுவை சிகிச்சைக்காக அளிக்கப்பட்டுள்ள சம்மதம், தீங்கியல் பொறுப்பு நிலைக்கு அப்பாற்பட்ட சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ள ஒன்றாக இருக்கக்கூடாது. இசைந்தேற்பது தீங்காது எனும் சட்ட முதுமொழி, பொதுநலக் கொள்கைக்கு (public policy) முரணான செயலுக்கு பொருந்தாது.

(3) அறிந்திருத்தல் (Knowledge): அபாயம் அல்லது ஆபத்தைப் பற்றி (danger or risk) அறிந்திருப்பது என்பதும், அபாயம் அல்லது ஆபத்தை ஏற்றுக் கொள்ள சம்மதிப்பது என்பதும் ஒன்றேயல்ல. எனவே 'அறிந்திருந்தார்' எனும் எதிர்வாதத்தை பிரதிவாதி பயன்படுத்துவதற்கு கீழ்க்காணும் இரு கூறுகளை மெய்ப்பிப்பது அவசியமானதாகும்;

(i) வாதி, அபாயம் பற்றி அறிந்திருந்தார்; மற்றும்;

(ii) அபாயம் பற்றி அறிந்திருந்தும், அதனால் ஏற்படும் கெடுதியை (harm) ஏற்றுக் கொள்ள சம்மதித்தார்.

வெறுமனே அபாயம் பற்றி அறிந்திருந்தாலே, அது சம்மதம் அளித்ததாக ஆகாது. இங்கு எழும் கேள்வி, அபாயம் பற்றி முன்னரே அறிந்திருந்தாரா என்பதல்ல, மாறாக; உண்மையில் அதனால் ஏற்படும் கெடுதியை ஏற்றுக்கொள்ள சம்மதித்தாரா என்பதேயாகும். **Bowater Vs Rowley Regis Corporation, (1944) KB 476.,** என்ற வழக்கில், குதிரை வண்டி ஓட்டுனரான வாதியை, கட்டுப்படுத்த முடியாத திடீரென்று ஓடக்கூடிய முரட்டுக் குதிரையை வண்டியில் பூட்டி ஓட்டுமாறு, பிரதிவாதியின் மேற்பார்வையாளர் கோரினார். குதிரையின் முரட்டுத்தன்மை பற்றி இருவருக்கும் தெரியும். முதலில் எதிர்ப்பு தெரிவித்த வாதி, இறுதியில் மேற்பார்வையாளரின் கட்டளைக்குப் பணிந்து அதனை ஓட்டிச் சென்றார். வழியில் திடீரென்று குதிரை முரட்டுத்தனமாக வண்டியிலிருந்து அறுத்துக்கொண்டு ஓடியதில் வாதி கீழே விழுந்து காயமுற்றார். இவ்வழக்கில் வாதி அபாயம் பற்றி அறிந்திருந்தும் இயல்பான மற்றும் தன்னிச்சையான சம்மதம் அளிக்கவில்லை என்றும் எனவே 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் எதிர்வாதம் இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றும், வாதி இழப்பீடு பெறத் தகுதியுண்டு என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ) இசைந்தேற்பது தீங்காகாது முதுமொழிக்கான விலக்குகள் / வரம்புகள் (Exceptions / Limitations to the Maxim):

இம்முதுமொழியை பொருந்தச் செய்வதற்கு சிலக் குறிப்பிட்ட விலக்குகள் மற்றும் வரம்புகள் உள்ளது. அவை பின்வருமாறு:

(i) சட்டமுரணான சம்மதம் (illegal concent): எந்தவொரு சட்டவிரோதச் செயலை செய்வதற்காக அளிக்கும் சம்மதமும் அச்செயலை சட்டபூர்வமாக்காது (no consent can legalise an unlawful act). கூரிய வாட்களுடன் இருவர் சண்டையிடுவதை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இங்கு, இருவரும் சம்மதித்திருந்தாலும்கூட, அவர்களின் செயல் சட்ட விரோதமானதாகும். **R Vs. Donovan (1934) 2 KB 498.,** என்ற வழக்கில், எந்தவொரு நபரும், ஓர் குற்றம்

புரிவதற்கு மற்றொரு நபருக்கு அனுமதியளிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டது.

(ii) சட்டமுறைக் கடமையை மீறுதல் (Breach of statutory duty): இசைந்தேற்பது தீங்காகாது என்ற எதிர்வாதத்தினைச் சார்ந்து தன்னுடைய செயலை நியாயப்படுத்த விழையும் வாதியின் அச்செயலையே, பிரதிவாதி தடுப்பதற்கு சட்டமுறைக்கடமை கொண்டிருக்கும் அத்தகைய நேர்வுகளுக்கு இம்முதுமொழி பொருந்தாது. எனவே பணியாளர் ஒருவர் பணியின்போது ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில், குறிப்பிட்ட ஓர் பாதுகாப்பு நடவடிக்கை செய்யப்பட வேண்டும் என்று சட்டத்தின்மூலம் விதிக்கப்பட்ட கடமையை மீறியுள்ள பணி வழங்குநர், இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது **[Wheeler Vs Mertor Board Mills Ltd., (1933) 2 KB 669].**

(iii) கவனமின்மை (negligence): 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் எதிர்வாதம் கவனமின்மை குறித்த வழக்குகளுக்குப் பொருந்தாது. இருப்பினும் கவனமின்மை குறித்த வழக்கில், இம்முதுமொழியின் அடிப்படையிலான எதிர்வாதம் உள்ளடங்குவதற்கு, அது உட்கிடையான உடன்படிக்கையின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். ஆனால், வாதிக்கு வேறுவழி அல்லது தேர்வுரிமை இல்லாத (no choice) போதிலும் அல்லது வாதியால் தேர்வு செய்ய இயலாத அத்தகைய நிலையில் தகவல் அளிப்பதிலும் உட்கிடையான உடன்படிக்கை ஏதுமிருக்க முடியாது **[Burnelt Vs British Waterways Board, (1973) 2 All ER 631 (CA)].**

வாதி தன்னுரிமையாக மற்றும் தன்னிச்சையாக தான் உட்கிடையாக சம்மதித்துள்ள செயலினால் உள்ளாகக்கூடிய அபாயத்தின் தன்மை மற்றும் எல்லையைப் பற்றி முழுமையாக அறிந்திருந்து மற்றும் ஊறு தொடர்பான எந்தவொரு உரிமைக் கோரிக்கையையும் கைவிட்டிருக்கும் அத்தகைய வழக்குகளுக்கு மட்டுமே இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதம் பொருந்தும். வாகன ஓட்டுநர், பயணியை ஏற்றும்போதே, பயணி தன்னுடன் பயணிப்பதில் உள்ள அபாயத்தை அறிந்திருந்து, தமது சொந்த பாதுகாப்பிற்கு தாமே பொறுப்பாக வேண்டும் என்கிற அறிவிப்பு அளித்த பல வழக்குகள் உள்ளன. இத்தகைய சூழல்களில், வாகன ஓட்டுநர் அளிக்கும் அறிவிப்பிற்கு பயணி கட்டுப்பட்டவர் என்பதுடன் எந்தவொரு உரிமைக் கோரிக்கையும் எழுப்ப முடியாது.

Smith Vs Baker, 1891 AC 325., என்ற வழக்கில், வாதி, பிரதிவாதிக்குச் சொந்தமான கற்சுரங்கத்தில் வேலை செய்து வந்தார். வெட்டியெடுக்கப்பட்ட கற்கள், பாரந்தூக்கி எந்திரத்தின் (crane) மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கற்குவாரியில் வேலை செய்யும் தொழிலாளர்களின் தலைக்கு மேலாகவே பாரந்தூக்கிகள் மூலம் கற்கள் எடுத்துசெல்லப்பட்டது. பிரதிவாதியின் கவனமற்ற தொழில் நடத்தும் முறையால் தனக்கு எப்போது வேண்டுமானாலும் ஆபத்து ஏற்படலாம் என்பதை அறிந்திருந்தே வாதி அவ்விடத்தில் பல மாதங்களாக வேலை செய்து வந்தார். ஒருமுறை வாதியின்

தலைக்குமேல் கற்களை எடுத்துச் சென்ற பாரந்தூக்கியிலிருந்து ஒரு கல் வாதியின் தலைமேல் விழுந்ததில், வாதி படுகாயமுற்றார். வாதி, பொதுவாக தான் செய்யும் வேலையில் உள்ள அபாயத்தை முன்னரே அறிந்திருந்தாலும், விபத்து ஏற்பட்ட அக்குறிப்பிட்ட வேளையில், பிரதிவாதி, வாதியை எச்சரிக்கத் தவறிவிட்டார் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் எதிர்வாதம் இவ்வழக்கிற்கு பொருந்தாது என்று தீர்ப்பளித்தது.

Smith Vs Baker வழக்கின் கொள்கை, **Dann Vs Hamilton, (1939) 1 KB 509.**, என்ற வழக்கிலும் உறுதி செய்யப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்புரையில், 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் எதிர்வாதம் பொருந்தாது, ஏனெனில் கார் ஓட்டுநரின் மது மயக்க நிலையின் அளவு (degree of intoxication), அவருடன் பயணிப்பது வெளிப்படையாக தெரியக்கூடிய அபாயத்திற்கான சம்மதமாக கருதப்படக்கூடிய அளவிற்கு இல்லை என்று குறிப்பிடப்பட்டது. இவ்வழக்கில் கார் ஓட்டுநர் (ஹெமில்டன்) மது மயக்கத்தில் உள்ளார் என்பதை அறிந்திருந்தே வாதி (டேன்) அக்காரில் பயணம் செய்தார். ஓட்டுநரின் கவனக்குறைவால், கார் ஒரு விளக்குக் கம்பத்தில் மோதியதில், ஓட்டுநர் நிகழ்விடத்திலேயே மரணமடைந்தார். வாதிக்கு கடுமையான உடற்காயங்கள் ஏற்பட்டது. வாதி தீங்கீடுக் கோரி வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதி தரப்பில், கார் ஓட்டுநர் மது அருந்தியிருப்பது பற்றி நன்கு அறிந்திருந்தே அக்காரில் பயணித்ததால், இசைந்தேற்பது தீங்காகாது என வாதிடப்பட்டது. நீதிமன்றம் வாதி அபாயம் பற்றி அறிந்திருந்தாலும் அபாயத்தை ஏற்றுக்கொள்ள தனது சம்மதத்தை அளித்ததாகக் கூறமுடியாது என்பதைக் குறிப்பிட்டு வாதியின் கோரிக்கையை அனுமதித்தது. இவ்வழக்கின் தீர்ப்பு கடும் கண்டத்திற்கு உள்ளாகியது. ஓட்டுநர் மது அருந்தியுள்ளார் என்பதை அறிந்திருந்தே வாதி அவருடன் பயணித்ததால் வாதி, உட்கிடையாக சம்மதித்துள்ளதாகவே கருதப்பட வேண்டும், மேலும் வாதி தன் உடல்நல பாதுகாப்பை அலட்சியப்படுத்தி மது அருந்தியுள்ள ஓட்டுநருடன் பயணித்ததால் தன்பால் கவனமில்லாதவராகவே (contributory negligence) கருதப்பட வேண்டும். இவ்வழக்கில் இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதம் நிராகரிக்கப்பட்டிருந்தாலும்கூட, தற்கவனமின்மை எனும் எதிர்வாதம் அனுமதிக்கப்பட்டிருக்கும். ஆனால் பிரதிவாதி தரப்பில், தற்கவனமின்மை எனும் எதிர்வாதம் முன்வைக்கப்படவில்லை.

T.C. Balkrishnan Menon Vs. T.R. Subramania, AIR 1968 Ker. 151., என்ற வழக்கில் கேரள உயர்நீதிமன்றம், கவனமின்மை தொடர்பான வழக்குகளில் 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் எதிர்வாதம் தொடர்பான ஓர் தெளிவான நிலைப்பாட்டினை எடுத்துரைத்தது. இவ்வழக்கின் பொருண்மைகள் பின்வருமாறு:

இலட்சக்கணக்கான மக்கள் கூடும் திருச்சூர் 'பூரம்' பண்டிகையின்போது அனைத்துவிதமான வெடிகளும் பயன்படுத்தப்படுவது வழக்கம். பிரதிவாதியின் பணியாளர்கள் தேங்காய் ஓட்டினுள் வெடிமருந்து பொருள்களை நிரப்பி வெடிக்கச் செய்தது. மேலே செல்வதற்கு பதிலாக,

கிடைமட்டமாக (horizantally) கூட்டத்தினுள் சென்று வெடித்ததில் வாதி காயமுற்றார். வாதிக்கு ஏற்பட்ட காயம், பிரதிவாதியின் பணியாளர்களின் கவனமின்மையால் ஏற்பட்டது என்பது மெய்ப்பிக்கப்பட்டது. பண்டிகையின்போது வெடிகள் வெடிக்கப்படுவதில் உள்ள அபாயத்தை வாதி முழுமையாக அறிந்திருந்தும் மற்றும் தன்னிச்சையின்பேரில் தாமாகவே அதனைக் காண வந்ததாலும், இசைந்தேற்பது தீங்காகாது என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. விழாவைக் காணவந்த இலட்சக்கணக்கான மக்களை, தாங்களாக ஆபத்தை ஏற்றுக் கொள்ள வந்தவர்களாகக் கூற முடியாது என்பதன் அடிப்படையில் பிரதிவாதிகள் தரப்பு வாதத்தை நிராகரித்த நீதிமன்றம், பிரதிவாதிகளின் பணியாளர்கள் வெடிமருந்துகளை கவனமுடன் கையாண்டிருந்தால் இவ்விபத்து நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்பதைக் குறிப்பிட்டது. மேலும் இவ்வழக்கு பணியாளர்களின் ஒட்டுமொத்த கவனமின்மை குறித்த ஓர் வழக்கு என்றும் எனவே பணியாளர்களின் தீங்கியல் பொறுப்பு நிலைச் செயலுக்காக பிரதிவாதி இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார் என்பதையும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(iv) இசைவு மற்றும் அறிந்திருத்தல் (Consent and knowledge): வாதி அபாயம் உள்ளடங்கியுள்ளதை அறிந்திருந்தும் அதனை ஏற்றுக் கொள்ள சம்மதித்திருக்கும் சூழ்நிலைகளுக்கு இந்த எதிர்வாதம் பொருந்தாது. **South Indian Industrial Ltd. Vs Alamalu Ammal, (1932) 17 LW 495.,** என்ற வழக்கில், பணி வழங்குநர், வார்ப்பு இரும்பை (cast iron) உடைப்பதற்கு, வார்ப்பிரும்பு துண்டுகள் மீது அதிக எடை கொண்ட இரும்பை மிக உயரத்திலிருந்து விழச்செய்யும் முறையை பின்பற்றினார். இந்நடைமுறையின் விளைவாக இரும்புத்துண்டு ஒன்று பறந்து பணியாள்மீது வேகமாக மோதியதில், பணியாள் உயிரிழக்க நேரிட்டது. நீதிமன்றம் இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதத்தை பிரதிவாதி பயன்படுத்தமுடியாது என்றும் இம்முதுமொழியை பயன்படுத்தி வெற்றி பெறுவதற்கு "ஊறினுக்கு உள்ளான நபர் அபாயத்தை அறிந்திருந்து, அதனை சரியாக முடிவு செய்து மற்றும் தாமாகவே அத்தயை ஆபத்தை எதிர்கொண்டிருக்கவும் வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டது. மேலும் வாதி, அபாயம் பற்றி அறிந்திருந்தால் மட்டும் போதாது. ஒரு மனிதன் தம்மால் சரியான முடிவு செய்ய முடியாத அளவுக்கான அபாயத்தை தாமாகவே முன்வந்து ஏற்றுக் கொள்ள முடியாது. 90 அடிகளுக்குமேல் இரும்புத்துண்டு பறந்து செல்லும் என்பதை எதிர்பார்க்கவில்லை மற்றும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது என்று பிரதிவாதியே வாதிடும்போது, உயிரிழந்த தொழிலாளி அதனை எதிர்பார்த்திருக்க முடியும் என வாதிட முடியாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம் பிரதிவாதி இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டுள்ளார் என்று தீர்ப்பளித்தது.

(v) மீட்சி வழக்குகள் அல்லது மீட்பு வழக்குகள் (Rescue cases): 'இசைந்தேற்பது தீங்காகாது' எனும் கோட்பாடு மீட்சி வழக்குகளுக்குப் பொருந்தாது. சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில் மீட்சி வழக்கு என்பது, பிரதிவாதியின் தவறான செயலால் உடனடியாக ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து

எவரையேனும் மீட்பதற்காக, வாதி தாமாகவே அத்தகைய அபாயத்தை எதிர்கொண்டால், அவருக்கெதிராக இசைந்தேற்பது தீங்காகாது என்கிற எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாத வழக்குகளைக் குறிக்கும்.

மீட்சி வழக்குகளின் அதிகார எல்லையை சரியாக எடுத்துரைத்த புகழ்பெற்ற வழக்கு Haynes Vs Harwood (19355) 1 K.B. 146., எனும் வழக்காகும். இவ்வழக்கில், மக்கள் கூட்டம் மிகுந்திருந்த தெருவொன்றில், பிரதிவாதியின் பணியாள், வண்டியையும் குதிரைகளையும் கவனிப்பார் யாருமின்றி விட்டுச் சென்றார். சிறுவன் ஒருவன் குதிரைகளின்மீது கல் எறியவே அவை மிரண்டு தறிகெட்டு ஓடின. காவல் நிலையத்தினுள் பணியிலிருந்த காவலர் ஒருவர் (வாதி) தெரு வழியே மிரண்டு ஓடும் குதிரைகளைக் கண்டார். குதிரைகளை தடுத்து நிறுத்தாவிடில் தெருவில் சென்று கொண்டிருக்கும் ஒரு பெண் மற்றும் குழந்தைகளுக்கு பேராபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து, தனக்கு ஏற்படும் ஆபத்தினை பொருட்படுத்தாமல் விரைந்து சென்று தடுத்து நிறுத்தினார். இருப்பினும் குதிரைகளை தடுத்து நிறுத்தும் முயற்சியின்போது கடுமையான உடற்காயங்கள் ஏற்பட்டது. பிரதிவாதிகளின் தரப்பில் வைக்கப்பட்ட இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. மீட்சி வழக்குகளுக்கு இம்முதுமொழி பொருந்தாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை தடுப்பதற்காக எவரேனும் ஒருவர் குதிரைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை பிரதிவாதி எதிர்பார்த்திருப்பார் அல்லது எதிர்பார்த்திருக்க வேண்டும். வாதியின் செயல் மற்றும் அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள், பிரதிவாதியின் கவனமற்ற செயலின் நேரடி விளைவுகளே ஆகும் என்பதையும் குறிப்பிட்டது. மேலும் மீட்சி வழக்குகளில் வாதி, ஒழுக்கக்கடமை உணர்வுகளினால் உந்தப்பட்டு ஆபத்தை அறிந்திருந்தே செயல்பட்டாரா அல்லது இயல்பான உந்துதலின்பேரில் செயல்பட்டாரா அல்லது செய்யப்பட்ட செயலுக்கு மாற்றாக வேறுவழி ஏதேனும் உள்ளதா என்பவைகள் பொருட்படுத்தப்படமாட்டாது என்பதையும் குறிப்பிட்டு பிரதிவாதிகள் இழப்பீடு வழங்க ஆணையிட்டது.

Baker Vs T.E.Hopkins, (1959) 3 All ER 255., என்ற வழக்கில் விஷவாயு நிரம்பிய கிணற்றுக்குள் சிக்கிய இரண்டு தொழிலாளர்களை மீட்பதற்காக மருத்துவர் வரவழைக்கப்பட்டார். கிணற்றினுள் விஷவாயு இருப்பதையும் அதனால் விளையும் ஆபத்து குறித்தும் பிரதிவாதிகள் தரப்பில் மருத்துவருக்கு தெளிவாக கூறப்பட்டிருந்தது. மருத்துவர் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில், கிணற்றினுள் இறங்குவதில் உள்ள அபாயத்தை நன்கு அறிந்திருந்தும், இடுப்பில் கயிறு கட்டிக்கொண்டு கிணற்றினுள் இறங்கினார். தொழிலாளர்களை காப்பாற்றும் முயற்சியின்போது அவரும் விஷவாயுவை சுவாசித்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மருத்துவரின் மனைவி இழப்பீடு கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதிகள் தரப்பில் 'இசைந்தேற்பது தீங்காகாது' என்று வாதிப்பட்டது. பிரதிவாதிகளின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம், உயிரிழந்த

மருத்துவரின் செயல், பிரதிவாதிகளின் தவறினால் ஏற்படக்கூடிய இயல்பான மற்றும் நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளே என்பதையும் தீர்ப்பில் குறிப்பிட்டது.

Chadwick Vs British Railway's Board, (1967) 1 WLR 912., என்ற வழக்கில் பிரதிவாதிகளின் கவனமின்மையால் பெரும் ரயில் விபத்து ஏற்பட்டது. விபத்து நிகழ்ந்த இடத்தின் அருகே வசித்து வந்த வாதி மீட்பு பணியை மேற்கொள்ளச் சென்றார். மீட்புப் பணியின்போது, இறந்த உடல்கள் மற்றும் காயமுற்றவர்களின் அழுகை மற்றும் கூக்குரலினால் பெற்ற அனுபவம் அவரை மன அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பிரதிவாதிகளான இரயில்வே நிறுமத்தின் கவனமின்மையான செயலே வாதியின் மன அதிர்ச்சிக்கு காரணமாகும் என்பதால், பிரதிவாதிகள் இழப்பீடு செலுத்தும் பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

17. எந்த சூழ்நிலைகளில் மற்றும் எந்த எல்லை வரை தீங்கியல் சட்டத்தில் தவிர்க்க முடியாத விபத்து என்ற எதிர்வாதத்தை வாதிடலாம்? (In what circumstances and to which extent can an inevitable accident be pleaded as valid defence in the law of torts?) - Nov-2015

SN - 21 **தவிர்க்க முடியாத விபத்து / Inevitable accident, Nov-2017, May-2016(v).**

விடைச்சுருக்கம்: (அ) 'தவிர்க்க முடியாத விபத்து' பொருள் மற்றும் விதி – (ஆ) எதிர்வாதத்தின் எல்லை அல்லது வரம்பு.

(அ) 'தவிர்க்க முடியாத விபத்து' - பொருள் மற்றும் விதி ('Inevitable accident' - Meaning and Rule)

பொருள் (Meaning): ஓர் தவிர்க்க முடியாத விபத்து என்பது, வழக்கமான கவனம் (ordinary care), முன்னெச்சரிக்கை (caution) மற்றும் திறமையை செயல்படுத்தி இருந்தாலும்கூட தவிர்த்திருக்கமுடியாத அத்தகைய விபத்தைக் குறிக்கும். மேலும் தவிர்க்க முடியாத விபத்து மற்றும் உடலளவில் தவிர்த்திருக்க முடியாத (physically unavoidable) விபத்தாகும். இது இருதரப்பினரில் (எதிர்வாதி. வாதி) எவரேனும் ஒருவரால் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய விபத்துகளுக்குப் பொருந்தாது 'நைட்ரோ கிளிசரின் வழக்கு' ('Nitroglycerine case') எனப் பரவலலாக அறியப்பட்டதும் புகழ்பெற்றதுமான **Parrot Vs Wells Fargo & Co, 82 U.S (15 Wall) 524 (1872).,** என்ற அமெரிக்க வழக்கில் முதன்முதலாக தவிர்க்க இயலா விபத்து எனும் எதிர்வாதம் அங்கீகரிக்கப்பட்டதோடு சட்ட விதியும் விளக்கப்பட்டது. இவ்வழக்கில் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச்செல்லும் பிரதிவாதிகள் நிறுவனத்திடம், ஓர் மரப்பெட்டி, மற்றோர் இடத்தில் சேர்ப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டது. அம்மரப்பெட்டியினுள் 'நைட்ரோ

கிளிசரின்' எனும் வெடிமருந்து இருந்ததுப் பற்றிய தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மரப்பெட்டியில் இருந்து திரவம் ஒழுகிக் கொண்டிருந்ததால், பிரதிவாதி, இடைப்பட்ட வழியில் இருந்த தங்கள் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றனர். பிரதிவாதிகளின் அலுவலகம் வாதிக்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதியில் இருந்தது. அவ்விடத்தில் பிரதிவாதியின் பணியாளர் ஒருவர் அப்பெட்டியை திறக்க முயன்றபோது, 'நைட்ரோ கிளிசரின்' வெடித்ததில் அவ்விடத்தில் இருந்தவர்கள் இறந்ததுடன் கட்டிடத்திற்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. கட்டிடம் முழுமைக்கும் ஏற்பட்ட சேதத்திற்காக, பிரதிவாதிகள்மீது வாதி வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதிகள், தாங்கள் வாடகைக்கு பெற்றிருந்த இடத்திற்கான சேதத்திற்கு மட்டும் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் ஆனால் கட்டிடத்தின் பிற பகுதிகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு பொறுப்பேற்க முடியாது எனவும் வாதிட்டனர். முதலில் பிரதிவாதிகள் பெட்டியை பெற்றுக் கொண்டபோது, நியாயமாக சந்தேகிப்பதற்கான காரணம் ஏதுமில்லாத நிலையில், பெட்டியினுள் என்னவிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக திறந்து பார்க்க வேண்டிய கடமையை கொண்டிருக்கவில்லை என்றும் இருப்பினும் உண்மையில் பிரதிவாதிகள் கவனமின்றி செயல்பட்டார்கள் எனக்கூற முடியாது என்பதால், விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு பொறுப்பாகமாட்டார்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சட்டவிதி (Rule): இவ்வழக்கின் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்ட சட்ட விதியின் சுருக்கம் பின்வருமாறு:

"எவரொருவரும் சட்டப்படியான வணிகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதான தவிர்க்க முடியாத விபத்தின் விளைவாக ஏற்படும் தீங்குகளுக்கு பொறுப்பாகமாட்டார்கள். கவனமின்மை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்கு தொடரும் தரப்பினரே அதனை மெய்ப்பிக்க வேண்டும். பிரதிவாதி தனது செயலால் (by his act) அல்லது செயல் தவிர்க்கையால் (by his omission) சட்டத்தால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை மீறியதாலேயே முறையீடு செய்திருக்கக்கூடிய தீங்கு ஏற்பட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டும்".

'தவிர்க்க முடியாத விபத்து' குறித்த புகழ்பெற்ற ஆங்கில வழக்கு **Holmes Vs Mather, 1875 LR 10 Ex 261.,** ஆகும். இவ்வழக்கில், குதிரைகளைப் பராமரிப்பவரான (groom) பிரதிவாதியின் கட்டுப்பாட்டிலிருந்து திடீரென்று விடுபட்ட இரு குதிரைகள், எதிர்ப்புறத்தில் இருந்த கடையினுள் நுழைவதை தடுக்க முயன்றபோது, ஒரு குதிரை, சாலையில் சென்று கொண்டிருந்த வாதியைத் தாக்கி கீழே தள்ளியது. வாதிக்கு ஏற்பட்ட காயம் தவிர்க்க முடியாத விபத்தினால் ஏற்பட்டது என்பதால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் நீதிபதி பிராம்வெல் (Bramwell,J) "வாழ்க்கை விவகாரங்களை முறையாக நடத்திச் செல்வதற்கான மனித குலத்தின் வசதிக்காக, மக்கள் சாலைகளில் செல்லும்போது, மற்றவர்களால் முறையான கவனம் செலுத்தப்பட்டாலும்கூட, தவிர்க்க முடியாமல் போகிற இன்னல்களை

எதிர்பார்க்கத்தான் வேண்டும் அல்லது பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தில், நபர்கள் மீதான அத்துமீறல் வழக்குகளில் (trespass to the person) தவிர்க்க முடியாத விபத்து ஓர் சிறப்பான எதிர்வாதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. **Stanley Vs Powell, (1891) 1 QB 86.,** என்ற வழக்கை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவ்வழக்கில், பிரதிவாதி துப்பாக்கியால் ஓர் பறவையை (pheasant) நோக்கி சுடும்போது, எதிர்பாராதவிதமாக வாதியை சுட்டுவிட்டார். நீதிமன்றம் வாதிக்கு ஏற்பட்ட காயம், பிரதிவாதியின் கவனமின்மையால் ஏற்பட்டதல்ல என்பதால், தவிர்க்க இயலா விபத்து எனும் சிறப்பான எதிர்வாதத்தை பிரதிவாதி பெற்றிருப்பதாக குறிப்பிட்டது.

Ryan Vs Youngs, (1938) 1 All ER 522., என்ற வழக்கில் ஓட்டுநர், மோட்டார் வாகனத்தை ஓட்டிச்சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் இந்துவிட்டதன் காரணமாக ஏற்பட்ட விபத்து தவிர்க்கமுடியாத விபத்து என்றும் எனவே பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் **Robert Vs Ramsbottom., (1980) I All ER QB 7.,** என்ற வழக்கில் விபத்து நிகழ்வதற்கு சற்று முன்னர் ஏற்பட்ட நெஞ்சுவலியால் சுயநினைவு மோசமான பின்னரும் வாகனத்தை ஓட்டிச் சென்று ஏற்படுத்திய விபத்திற்கு, நெஞ்சுவலியால் ஏற்பட்ட தவிர்க்கமுடியாத விபத்து எனும் வாதத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்து பிரதிவாதி (ஓட்டுநர்) பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

இந்தியாவிலும், தவிர்க்க முடியாத விபத்து எனும் எதிர்வாதத்தை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. **Padmavati Vs Dugganaika, (1975) 1 Karn LJ 93.,** என்ற வழக்கில், ஓட்டுநருக்கு அறிமுகமற்ற இரு நபர்கள் 'ஜீப்'ல் (Jeep) இலவசமாக பயணிப்பதற்கு (lift) ஏறிக் கொண்டனர். அதன் பின்னரான சற்று நேரத்தில், 'ஜீப்'பின் முன்புற வலதுசக்கரம் சுழலும் அச்சில் (axle) இருந்த மரையாணி (bolt) கழன்றதன் காரணமாக சக்கரம் பறந்து சென்றதுடன், ஜீப்-பும் தலைகீழாக கவிழ்ந்தது. இவ்விபத்தில் அறிமுகமற்ற இருவரில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. நீதிமன்றம் இது முற்றிலும் ஓர் எதிர்பாராத விபத்துதான் என்றும், ஜீப்பில் இருந்த பழுது வெளிப்படையாகத் தெரியக்கூடிய ஒன்று என்பதற்கும் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியிலான சோதனையின்போது (Periodical checkup) கண்டுபிடித்திருக்கக்கூடிய பழுது என்பதற்கும் சான்றுகள் ஏதும் இல்லாததால் பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்று தீர்ப்பளித்தது.

(ஆ) எதிர்வாதத்தின் எல்லை அல்லது வரம்பு (Limits of Defence):

பொதுவாக, ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர் வழக்கில் உருவாக்கப்பட்ட கடும் பொறுப்பு நிலையின்கீழ் (strict liability) ஆளுமை செய்யக்கூடிய வழக்குகளுக்கு தவிர்க்க முடியாத விபத்து எனும் எதிர்வாதம் பொருந்தாது. இருப்பினும் பிரதிவாதி, தன் தரப்பில் முன்வைக்கும் தவிர்க்க முடியாத விபத்துக்கு தெய்வச் செயல் (Act of

God) அல்லது இயற்கை பேராற்றல் காரணமாக இருந்தால் மட்டுமே, இந்த எதிர்வாதம் பொருந்தும். இந்திய உச்சநீதிமன்றம், M.C. Mehta Vs Union of India, வழக்கில் உருவாக்கிய முழுப்பொறுப்பு நிலைக்கு, தவிர்க்க முடியாத விபத்து உள்ளிட்ட எந்தவொரு வாதமும் பொருந்தாது. மேலும், பிரதிவாதியின் கவனமின்மையால் ஏற்படும் விபத்துகளுக்கும் மற்றும் சாதாரணமாக முன்னறிந்து செயல்பட்டிருந்தால் தடுத்திருக்கக்கூடிய ஆனாலும் பிரதிவாதி அத்தகைய முன்னரே செய்ய வேண்டிய செயலைச் செய்யத் தவறியதால் ஏற்படும் வழக்குகளுக்கும் இந்த எதிர்வாதம் பொருந்தாது. பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

Harnam Singh Vs. Aar Pee Auto Aid, 1986 ACJ 396., என்ற வழக்கில், பிரதிவாதி தன்னுடைய வாகனத்திற்கு பழைய மற்றும் தேய்ந்து போன (Old and worn out) டயர்களை பொருத்தி மிக வேகமாக ஓட்டிச் சென்றபோது 'டயர்' வெடித்து விபத்து ஏற்பட்டது. நீதிமன்றம், பிரதிவாதி கவனமின்மைத் தீங்கிற்கு பொறுப்பாவார் என்றும், இவ்வழக்கில் 'டயர்' திடீரென்று வெடித்தது தவிர்க்க முடியாத விபத்து என்பதனுள் அடங்காது என்றும் தீர்ப்பளித்தது.

இந்திய உச்சநீதிமன்றம் **S.Vedantacharya Vs Highways Department of South Arcot, 1987 ACJ 783.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் தரப்பில் கவனமின்மை ஏதும் இல்லாமல் இருந்தால் மட்டுமே, ஓர் விபத்து, தவிர்க்க முடியாத விபத்து என்ற நிலையைப் பெறும் என்பதைக் குறிப்பிட்டது. இவ்வழக்கின் பொருண்மைகள் பின்வருமாறு:

14.11.1960 தேதியன்று ஓர் பேருந்து சிறு பாலத்தை (Culvert) கடக்கும்போது, பாலம் பிளந்து சிற்றாறில் மூழ்கியதன் விளைவாக, பேருந்தில் பயணம் செய்த நபரொருவர் இறந்தார். பிரதிவாதிக்கு (நெடுஞ்சாலைத்துறைக்கு) எதிராக கவனமின்மை பற்றிய அனுமானம் (Presumption of negligence) எழுப்பப்பட்டது. பிரதிவாதி, விபத்திற்கு முந்தைய 15 நாட்களாக பலத்த மழை பொழிந்ததாகவும், குறிப்பாக விபத்திற்கு முந்தைய தினம் 6 அங்குல மழை பொழிந்ததால் அருகிலிருந்த ஏரியில் உடைப்பு ஏற்பட்டு அதனால் பாலத்திற்குள் மழைநீர் மிகவேகமாக நுழைந்ததால் பாலம் இடிந்துவிட்டது என்பதன் அடிப்படையில் இது ஓர் தவிர்க்க முடியாத விபத்தாகும் என்று வாதிட்டனர். விபத்து நிகழ்வதற்கு முந்தைய நாள் பாலம் உறுதியாக இருந்ததாக அளித்த பொறியாளர்களின் அறிக்கையின் அடிப்படையில், இது ஓர் தவிர்க்க முடியாத விபத்து என்று சென்னை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் உச்சநீதிமன்றம், எதிர்பார்த்திருக்கக்கூடிய கனமழை மற்றும் வெள்ளத்திற்கு எதிராக சிறுபாலம் மற்றும் பாலத்தை (culvert and bridge) உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளாதது கவனமின்மையே ஆகும் என்பதன் அடிப்படையில், உயர்நீதிமன்றத்தின் முடிவை மாற்றியகற்றியது (reversed). மேலும், பலத்த மழை மற்றும் வெள்ளத்தினால் தாம் விபத்து ஏற்பட்டது என்று வெறுமனே கூறுவதனாலேயே நெடுஞ்சாலைத்துறையை பொறுப்பில் இருந்து

விலக்கிவிட முடியாது. அத்தகைய மழை மற்றும் வெள்ளத்தை முன்னமே எதிர்பார்த்து அதற்கேற்ப அவசியமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தும்கூட விபத்து நிகழ்ந்துவிட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். நெடுஞ்சாலைத்துறை அத்தகைய எதிர்நோக்கு நடவடிக்கைகள் மேற்கொண்டதை மெய்ப்பிக்கத் தவறியதால், இது ஓர் தவிர்க்க முடியாத விபத்து குறித்த வழக்கு ஆகாது என்பதன் அடிப்படையில் பொறுப்பாக வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

18. **முழுமையான சட்ட அதிகாரமைவு மற்றும் நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகார அமைவு இவற்றை வேறுபடுத்தி விளக்குக. (Distinguish and explain Absolute Statutory authority and Conditional Statutory authority) - Nov-2011.**

SN - 22 சட்ட அதிகாரம் / Stautory Authority., Nov-2015, Nov-2018.

விடைச்சுருக்கம்: (அ) சட்ட அதிகாரம் – (ஆ) முழுமையான மற்றும் நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகாரம்

(அ) சட்ட அதிகாரம் (Statutory Authority):

சட்ட அதிகாரம் என்பது சட்ட அதிகாரமைவு, சட்ட ஆற்றலமைவு, செய்சட்ட ஆள்வைச் செயல்கள் எனப் பல்வேறு முறைகளில் குறிப்பிடப்படுகிறது. சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் செயலை செய்ததின் பேரில் ஏற்படும் தீங்குகளுக்காக தீங்குற்றவர் வழக்கு தொடர முடியாது. இங்கு சட்ட அதிகாரம் என்பது ஓர் முழுமையான எதிர்வாதமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்மூலம் செய்யப்பட்ட செயலினால் தீங்குற்றவர்கள், அச்சட்டத்தின்கீழ் இழப்பீடு பெறுவதற்கு ஏதேனும் வழிவகை செய்யப்பட்டிருந்தால் இழப்பீடு கோரி மட்டுமே வழக்கிடமுடியும். குறிப்பாக, சட்ட அதிகாரத்தின்கீழ் செய்யப்பட்ட நேரடியான செயலுக்கு மட்டுமின்றி அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது என்பது உற்றுநோக்கத்தக்கதாகும்.

Vaughan Vs Taff Valde Rail. Co., [1860] 5 Hand N 679., என்ற வழக்கில் ரயில்களை இயக்குவதற்கு சட்டபூர்வமான அதிகாரத்தைப் பெற்றிருந்த, பிரதிவாதியின் ரயில் 'என்ஜினில்' (engine) இருந்து வெளிப்பட்ட தீப்பொறியினால், ரயில் பாதையை ஒட்டியிருந்த வாதியின் காடு முழுதும் தீப்பற்றி எரிந்துவிட்டது. பிரதிவாதி, ரயில் என்ஜினில் இருந்து தீப்பொறி வெளிப்படுவதை தடுப்பதில் முறையான கவனம் கொண்டிருந்ததாலும் மற்றும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட செயலை மட்டுமே செய்துள்ளதாலும் பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட செயலாக இருந்தாலும் அச்செயல் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இவற்றினின்று,

சட்ட அதிகாரத்தின்படியான செயல்களாக இருந்தாலும்கூட, கவனமின்றி செய்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்பேற்க நேரிடும் என்பதை அறிந்து கொள்ளலாம். **Smith Vs. London and South Western Railway Co., (1870) L.R 6 C.P. 14.,** என்ற வழக்கு இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் இரயில்களை இயக்குவதற்கு சட்டபூர்வ அதிகாரத்தைப் பெற்றிருந்த இரயில்வே நிறுவனத்தின் பணியாளர்கள், இருப்புப்பாதையின் ஓரத்திலிருந்த புல் மற்றும் புதர்களை வெட்டி அவற்றை அப்புறப்படுத்தாமல் அவ்விடத்திலேயே விட்டுச் சென்றனர். இரயில் என்ஜினில் இருந்து வெளிப்பட்ட தீப்பொறியினால் புற்புதர்களில் தீ மூண்டது. அப்போது வீசிய பலத்த காற்றினால் கொண்டு செல்லப்பட்ட தீப்பொறிகள் 200 கெஜம் (Yard) தொலைவிலிருந்த வாதியின் குடிசையை முழுமையாக பற்றி அழித்தது. இரயில்வே நிறுவனத்தின் கவனமின்மையால் தீவிபத்து ஏற்பட்டிருப்பதால் இரயில்வே நிறுவனம் பொறுப்பாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஆ) முழுமையான மற்றும் நிபந்தனைக்குட்பட்ட அதிகாரம் அல்லது வரம்பற்ற மற்றும் வரம்புக்குட்பட்ட அதிகாரம் (Absolute and conditional Authority):

சட்ட அதிகாரம், முழுமையான சட்ட அதிகாரம் மற்றும் நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகாரம் என இருவகைப்படும்.

(i) முழுமையான அல்லது வரம்பற்ற சட்ட அதிகாரம் (Absolute Statutory Authority): முழுமையான சட்ட அதிகாரம், நேரடியான செயலுக்கு மட்டுமின்றி, அதனால் ஏற்படக்கூடிய தொல்லை அல்லது பிற தீங்குகளின் விளைவுகளுக்கும் சட்டப்பாதுகாப்பு அளிக்கிறது. முழுமையான சட்ட அதிகாரத்தின்கீழான செயல்களினின்று பொறுப்புநிலை எழுவதில்லை.

Mohammed Moideen Sait Vs Madras Corporation, (1901) ILR 25 Mad 118., என்ற வழக்கில், சென்னை நகராட்சி சட்டம், நகராட்சி ஆணையர்கள் போதுமான எண்ணிக்கையில் மற்றும் தகுந்த இடங்களில் இடுகாடுகளுக்கான (burial ground) வசதியை அவை ஊராட்சி எல்லைக்குள் அல்லது எல்லைக்கு வெளியே இருந்தாலும்கூட ஏற்படுத்திடக் கோரியிருந்தது. மேலும் இந்நோக்கத்திற்காக ஆணையர்களுக்கு நிலங்களை கையகப்படுத்தும் அதிகாரத்தை வழங்கியதுடன் பாதிக்கப்படுவோர் இழப்பீடு பெறவும் சட்டத்தில்வகை செய்யப்பட்டிருந்தது. ஆணையரின் செயல் தனக்கு தொல்லை விளைவிப்பதாக வாதி தொடர்ந்த வழக்கில், சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கண்டிப்பான தொனி (imperative language) ஆணையர்கள் கட்டாயமாக நிலத்தை கையகப்படுத்துவதற்கான அதிகாரத்தை வழங்கியிருப்பதால் வாதிக்கு ஏற்படும் தொல்லைக்கு பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ii) நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகாரம் அல்லது வரம்புக்குட்பட்ட சட்ட அதிகாரம் (Conditional Statutory Authority): நிபந்தனைக்குட்பட்ட சட்ட அதிகாரம் என்பது, அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயல், தொல்லை அல்லது பிற

தீங்குகள் ஏற்படாவண்ணம் செயல்படுத்தும் அத்தகைய சட்ட அதிகாரத்தைக் குறிக்கும். இத்தகைய நிபந்தனைகள் வெளிப்படையானதாகவோ அல்லது உட்கிடையானதாகவோ இருக்கலாம். **Metropolitan Asylum District Vs. Hill, (1881) 6 A.C. 193.,** என்ற வழக்கில், பெரியம்மை நோய் சிகிச்சைக்காக, மருத்துவமனை ஒன்றை கட்டவும், அதை நிருவகிக்கவும் பிரதிவாதிகளுக்கு சட்டம் அனுமதி அளித்திருந்தது. பிரதிவாதிகள் குடியிருப்பு பகுதியில் அதாவது அப்பகுதியில் வாழும் மக்கள் நோய் கிருமியால் பாதிக்கப்படும் அபாயம் உள்ள இடத்தில் மருத்துவமனையை கட்டினர். இது தொடர்பாக எழுந்த வழக்கில், பிரதிவாதிகளுக்கு சட்டத்தின்மூலமாக வழங்கப்பட்ட அதிகாரம் பிறருக்கு தொல்லை ஏற்படுத்தாது செயல்படுத்தும் நிபந்தனைக்குட்பட்ட அதிகாரம் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், பிரதிவாதிகள் மருத்துவமனையை அகற்றுவதற்கு உறுத்துக்கட்டளை (injunction) பிறப்பித்தது.

19. தீங்கியல் பொறுப்படைவிற்கு எதிரான பொது எதிர்வாதங்களை விவரிக்கவும். (Explain the General defences to an action of Tort) - Nov-2018.

✦ **அனைத்து தீங்கிற்கும் பொருந்தக்கூடிய ஐந்து பொது எதிர்வாதங்களை எடுத்தியம்புக.(Enumerate atleast five general defences which are applicable to all torts) - May-2017 (v), Nov-12(v).**

SN - 23 பொதுவான எதிர்வாதங்கள் / **General defences - May-2014(v).**

SN - 24 தெய்வச் செயல் அல்லது இயற்கை இடர் / **Act of God or Vis. Major., Nov-2018(v), Nov-2018, May-2018(v)**

SN - 25 அரசின் செயல் / **Act of State, Nov-2015(v), Nov-2017(v).**

பொதுவான எதிர்வாதங்கள் (General defences):

தீங்கியல் சட்டத்தில், குறிப்பிட்ட தீங்குகளுக்கு என சிலக்குறிப்பிட்ட சிறப்பான எதிர்வாதங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் இத்தகைய சிறப்பான எதிர்வாதங்களை மெய்ப்பிப்பதன் மூலம் தீங்கியல் பொறுப்புடைமையில் இருந்து விடுபடலாம். எடுத்துக்காட்டாக, அவதூறு எனும் தீங்கிற்கான வழக்கில், சிறப்புரிமை (privilege) அல்லது நேரிய கருத்துரை (fair comment) ஆகிய எதிர்வாதங்களை பிரதிவாதி தரப்பில் மெய்ப்பிப்பதன் மூலம் தீங்கியல் பொறுப்புநிலையில் இருந்து விடுபடமுடியும். இருப்பினும் சிலக்குறிப்பிட்ட பொதுவான எதிர்வாதங்கள் அனைத்துவகை தீங்குகளுக்கும் பொருந்தும்; அவை;

(1) இசைந்து ஏற்பது தீங்காகாது (volenti non fit injuria);
(2) தெய்வச்செயல் அல்லது இயற்கை இடர் (Act of God or Vis Major);
(3) தவிர்க்க முடியாத விபத்து (Inevitable accident);

(4) தவறு (Mistake);
(5) தேவை அல்லது அவசியம் (Necessity);
(6) சட்ட அதிகாரம் (Statutory authority);
(7) அரசின் செயல் அல்லது இறைமைச் செயல் (Act of state);
(8) நீதிமுறைச் செயல்கள் (Judicial acts);
(9) நீதிமுறை போலமைச் செயல்கள் (Quasi-judicial acts);
(10) பெற்றோரது அதிகாரம் (Parental authority).

இனி மேற்குறிப்பிட்டவைகள் குறித்து பின்வருமாறு காண்போம்:

(1) இசைந்தேற்பது தீங்காகாது (volenti nonfit injuria): (வினா-எண் 16-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க. பக்கம் எண் 57).

(2) தெய்வச் செயல் அல்லது இயற்கை இடர் அல்லது இயற்கை பேராற்றல் (Act of God or Vis Major):

வரையறை: Nugent Vs Smith, (1876) 1 CPD 423., என்ற வழக்கில் வரையறுத்துள்ளவாறு, 'தெய்வச் செயல் (அல்லது இயற்கை இடர்) என்பது, எத்தகைய ஆற்றல், திறமையினாலும் முன்னறிய முடியாத அல்லது முன்னறிந்திருந்தாலும், மனிதனின் மிகுந்த கவனம் மற்றும் திறமையினாலும் கட்டுப்படுத்த முடியாத, இயற்கையின் நேரடியான, திடீரென மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கப்பட முடியாததுமான அத்தகைய இயற்கையின் செயலைக் குறிக்கும்." சட்ட அறிஞர் பொல்லாக் (Pollack), "எதிர்பார்த்திருக்கவே முடியாத இயற்கை சக்திகளின் ஓர் செயலே தெய்வச் செயல்", என தெய்வச் செயலை வரையறுத்துள்ளார். இவற்றினின்று, மனித சக்தியுடன் தொடர்புற்ற இயற்கை ஆற்றல்களினால் ஏற்படும் சேதங்கள் அல்லது விபத்துகளே தெய்வச் செயல்கள் என சுருக்கமாகக் குறிப்பிடலாம். தெய்வச்செயல் எனும் சட்ட விதிகளை செயல்படுத்துவதற்கு ஓர் நிகழ்வு, அபூர்வமான அல்லது தனித்தன்மையானதாக அதாவது முதன்முறையாக நிகழ்ந்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை, மாறாக; அந்நிகழ்வு அசாதாரணமானதாக மற்றும் சாதாரணமாக எதிர்பார்த்திருக்க முடியாததாக இருந்தாலே போதுமானது **[Nitro Phosphate & C.Manure Co. Vs. London & St. K.D.Co., (1878) 9 Ch.D. 503]**

தெய்வச்செயல் எனும் எதிர்வாதத்தை பயன்படுத்துவதற்கு கீழ்க்காணும் இரண்டு அடிப்படைக் கூறுகள் அவசியமானதாகும்;

(i) மனிதக்குறுக்கீடு ஏதுமற்ற இயற்கை சக்திகளின் செயல் (அசாதாரண கனமழை, கடும்புயல், சூறைக்காற்று, கடலின் ஏற்றமும் வற்றலும், நிலநடுக்கம், எரிமலை சீற்றம், அசாதாரண பனிப்பொழிவு போன்றவைகள்) இருக்க வேண்டும்; மற்றும்;

(ii) நிகழ்வு அசாதாரணமானதாகவும் மற்றும் எதிர்பார்த்திருக்க முடியாத மற்றும் அதனுக்கு எதிராக காத்துக் கொள்ள முடியாத ஒன்றாகவும் இருக்க வேண்டும்.

Nichols Vs Marshland, 1875 LR 10 Ex 225., என்ற வழக்கில் தெய்வச்செயல் எனும் எதிர்வாதத்தின் எல்லை நன்கு விளக்கப்பட்டது. இவ்வழக்கில் பிரதிவாதி தன்னுடைய நிலத்தில் சில செயற்கைக் குளங்களை முறையாக தடுப்புச் சுவர்கள் அமைத்துக் கட்டிருயிந்தார். இருப்பினும் மனித நினைவில் கண்டிராத, அசாதாரண கனமழையின் காரணமாக, பெருவெள்ளம் ஏற்பட்டு, குளங்களின் தடுப்புச்சுவர்கள் உடைந்து, வாதிக்கு சொந்தமான நான்கு பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டது. வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு தெய்வச் செயலே காரணம் என்பதனால் பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Ramalinga Nadar Vs Narayana Reddiar, AIR 1971, Ker 197., என்ற வழக்கில், பிரதிவாதியின் லாரியில் கொண்டு செல்லப்பட்ட பொருள்களை ஓர் கலகக்கும்பல் திருடிவிட்டது. மனிதக்குறுக்கீடு (human intervention) இருப்பதால் அது தெய்வச்செயல் ஆகாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Kallulal Vs. Hemchand., AIR 1958 M.P. 48., என்ற வழக்கில், 2.66 அங்குலம் (ஏறக்குறைய 65 மி.மீ) மழை ஒரே நாளில் பொழிந்ததன் காரணமாக, சுற்றுச்சுவர் (compound wall) இடிந்து விழுந்தது. இதன் காரணமாக வாதியின் இரு குழந்தைகள் இறக்க நேரிட்டது. பிரதிவாதி, தெய்வச் செயல் எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், மழைக்காலத்தில் 2.66 அங்குல மழைப்பொழிவு அசாதாரணமானதல்ல மாறாக எதிர்பார்த்திருக்கக்கூடிய மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை தடுத்திருக்கக்கூடியதே என்பதையும் குறிப்பிட்டது.

(3) தவிர்க்க முடியாத விபத்து (Inevitable accident): (வினா-எண் 17-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'வில் காண்க. பக்கம் எண் 65).

(4) தவறு (Mistake): தவறு என்பது புரிந்து கொள்வதில் தவறுவதை அல்லது தவறான புரிதல் அல்லது உணர்தலைக் குறிக்கும். தவறுகளில், (i) சட்டத்தவறு மற்றும் (ii) பொருண்மைத்தவறு என இருவகை உண்டு. சட்டத்தவறு என்பது சட்டம் சார்ந்த அதாவது சட்டத்தின் பொதுவான விதியை தவறாகக் கொள்ளுதலையும், பொருண்மைத் தவறு என்பது, பொருள், நிகழ்மை அல்லது சங்கதி சார்ந்த தவறுகளையும் குறிக்கும்.

பொதுவாக உரிமையியல் பொறுப்புடைமையில் (civil liability) சட்டத்தவறு, ஓர் எதிர்வாதம் ஆகாது. ஏனெனில் சட்டம் பற்றிய அறியாமையை மன்னிக்க இயலாது (ignorentia juris non excusat) எனும் விதி, சட்டத்தின்பிற பிரிவுகளுக்கு பொருந்துவது போன்றே தீங்கியலுக்கும் சமமாகப் பொருந்தும். எடுத்துக்காட்டாக, **Crabtree Vs Dawson, (1904) 119 Key 148.,** என்ற வழக்கில் பிரதிவாதி, தனக்கு சட்டப்படி அதிகாரம் உள்ளது என்று உண்மையாக நம்பிக்கைக் கொண்டு, தனக்கு அதிகாரம் இல்லாத செயலை, அத்தகைய தனது தவறான நம்பிக்கையின்பேரில் செய்ததற்கு பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில் சட்டத்தவறு அது நேர்மையான அல்லது உண்மையான

நம்பிக்கையின்பேரில் செய்திருந்தாலும் மன்னிக்கப்பட முடியாதது என்று நீதிமன்றம் தனது தீர்ப்பிற்கான காரணத்தையும் குறிப்பிட்டது.

சாதாரணமாக, பொருண்மைத்தவறும் தீங்கியல் பொறுப்புநிலைக்கு ஓர் எதிர்வாதம் ஆகாது. பிரதிவாதியின் தவறு உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் இருந்தாலும்கூட தீங்கியல் பொறுப்புக்கு ஆளாகுவார். ஒரு வழக்கில் பிரதிவாதி ஓநாய்களை வேட்டையாடும்போது, ஓநாயை ஒத்திருந்த வாதியின் நாயை சுட்டுக் கொன்றதற்கு பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **[Ransom Vs Kitner, (1888) 31 All App 241].**

Consolidated Co Vs Curtis, (1892) 1 QB 495., என்ற வழக்கில், ஏல விற்பனையாளரான பிரதிவாதியிடம், அவரது வாடிக்கையாளர் ஏலத்தின்மூலம் விற்குமாறு ஒரு பொருளை கொடுத்தார். அப்பொருள் தனது வாடிக்கையாளருடையது என்று உண்மையாக நம்பி அதனை விற்று, விற்பனைத்தொகை முழுவதையும் வாடிக்கையாளரிடமே கொடுத்துவிட்டார். அப்பொருளின் உண்மையான உரிமையாளர் (வாதி) தொடர்ந்த வழக்கில் பிரதிவாதி (ஏல விற்பனையாளர்) பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தீங்கியல் சட்டத்தில் பொருண்மைத் தவறு ஓர் எதிர்வாதமாக அங்கீகரிக்கப்படாது என்பதை மேலே கண்டோம். இருப்பினும் குற்றவியல் சட்டத்தில் பொருண்மைத்தவறு ஓர் எதிர்வாதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 76 மற்றும் 79 பொருண்மைத் தவறை அங்கீகரித்துள்ளது.

(5) அவசியம் அல்லது தேவை (Necessity): ஓர் பெரும் தீங்கு (greater evil), ஆபத்து அல்லது சேதத்தை தடுக்கும் அவசியத்தின்பொருட்டு அல்லது தேவையின் பொருட்டு, ஒரு நபர் செய்யும் செயலின் விளைவுகளினால் ஏற்படும் தீங்குகளுக்கு அவரை பொறுப்பு நிலைக்கு உட்படுத்த முடியாது. இருப்பினும் 'அவசியம்' என்ற எதிர்வாதத்தை பயன்படுத்துவதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்;

(i) ஓர் அவசியம் என்பது இருக்க வேண்டும்; அதாவது ஒரு நபரை வற்புறுத்தி செயல்பட வைக்கும் அத்தகைய சூழ்நிலை இருக்க வேண்டும்;

(ii) அந்நிலை, அந்நபரை உடனடியாக செயல்பட வற்புறுத்துவதாக இருக்க வேண்டும்;

(iii) அந்நபர் செயல்படுவதற்கு முன், ஓர் தனிப்பட்ட நபரின் நலன் மற்றும் சமுதாய நலன் ஆகிய இரண்டினில் ஒன்றை தேர்வு செய்தாக வேண்டிய நிலை இருக்க வேண்டும்;

(iv) நல்லெண்ணத்துடன், நேர்மையாகவும் மற்றும் நியாயமாகவும் அந்நபர் செயல்பட்டிருக்க வேண்டும்;

(v) அவசரநிலை முடிந்தவுடன் அவர் தனது செயலை நிறுத்தியிருக்க வேண்டும்.

ஒரு வீட்டில் பற்றிய தீ அருகிலுள்ள வீடுகளுக்கு பரவுவதை தடுப்பதற்காக அவ்வீட்டை இடித்துத் தள்ளியது **[Saltere Case (1605) 12 Rep 120)**, புயலில் சிக்குண்ட கப்பலையும் மற்றும் கப்பலில் உள்ள நபர்களையும் காப்பாற்றுவதன் பொருட்டு கப்பலின் எடையை குறைப்பதற்காக, அக்கப்பலில் இருந்த பொருள்களை கடலில் வீசி எறிந்தது **[Mouse's Case (1609) 12 Rep. 63]**, தீயினால் பெருஞ்சேதமுற்ற கட்டிடம் நெடுஞ்சாலையினுள் விழுந்து விழுவதை தடுப்பதற்காக அதனை முழுமையாக இடித்தது **[Dawson Vs White, 1827 M & M 56]** போன்றவை அவசியத்தின் காரணமாக செய்யப்பட்ட செயல்களாக நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன. மேலும் **Aldworth Vs Stewart, (1866) 4 F&P 957.**, என்ற வழக்கில் கப்பலினுள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை பராமரித்திட, கப்பல் தலைவர் வன்தாக்கினை (force) பயன்படுத்தியதும் அவசியம் என்ற எதிர்வாதத்தின்கீழ் நியாயப்படுத்தப்பட்டது.

Leigh Vs Gladstone, [1909] 26 T.L.R. 139., என்ற வழக்கில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த லீ என்ற பெண் கைதியின் உயிரைப் பாதுகாப்பதற்காக வலுக்கட்டாயமாக உணவூட்டப்பட்டது. தன்னுடலை தாக்கியதாக (battery) பெண்கைதி (லீ) தொடர்ந்த வழக்கில் 'அவசியம்' என்கிற எதிர்வாதம் ஏற்கப்பட்டது. இருப்பினும், குறுக்கீடு நியாயமான அவசியமாக இருக்க வேண்டும். இல்லையேல் பிரதிவாதி பொறுப்புநிலைக்கு உள்ளாகுவார்.

Carter Vs Thomas, [1891] Q.B. 673., என்ற வழக்கு இதற்கு சரியான எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் தீயை அணைக்கும் நல்லெண்ணத்துடன் பிரதிவாதி, வாதியின் கட்டிடத்தினுள் நுழைந்தார். அங்கு ஏற்கனவே தீயணைப்பு வீரர்கள் பணியிலிருந்ததால், பிரதிவாதி அத்துமீறல் தீங்குக்கு பொறுப்பாக்கப்பட்டார்.

(6) சட்ட அதிகாரம் (Statutory Authority): (வினா-எண் 18-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

(7) அரசின் செயல் அல்லது இறைச்செயல் (Act of State): நாகரீக வளர்ச்சியடைந்த அனைத்து நாடுகளும், சிலக்குறிப்பிட்ட அதிகாரங்களை தனக்கெனக் கொண்டுள்ளன. இத்தகைய அதிகாரங்கள், உள்நாட்டு சட்ட எல்லைக்கு அப்பாற்பட்டவை ஆகும் (outside the province of municipal law). ஓர் நாடு தனது இறையாண்மை அதிகாரத்தை செயல்படுத்துவதே அரசின் செயல் அல்லது இறைமைச் செயல் எனக் குறிப்பிடப்படுகிறது. தீங்கியல் சட்டத்தில் அரசின் செயல் என்பது, அரசினால் அல்லது அரசு அதிகாரத்தின்கீழ் ஓர் அயல்நாட்டிற்கு அல்லது அயல்நாட்டு குடிமக்களுக்கு தீங்கு விளைவிப்பதற்கு ஓர் எதிர்வாதமாக அமைவதை குறிப்பிடுகிறது. அரசின் செயல் என்பதில் உள்ள ஓர் விநோதம் என்னவெனில், ஓர் நாட்டின் அரசு, தனது இறைமை அதிகாரத்தின்மூலம் மற்றொரு நாடு அல்லது மற்றொரு நாட்டின் குடிமக்களுக்கு விளைவித்த தீங்கிற்கு எதிராக தனது சொந்த நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் வழக்கு தொடரமுடியாது என்பதாகும். எடுத்துக்காட்டாக, ஓர் அரசு தனது படைவலிமையை பயன்படுத்தி

மற்றொரு நாட்டின் நிலப்பரப்பை இணைத்து கொண்டால் (annexation) அல்லது கைப்பற்றினால் (seizure) அச்செயலுக்காக அந்நாட்டின் நீதிமன்றங்களில் வழக்கு தொடர முடியாது.

Secretary of State for India Vs. Kamatche Boye Saheba, (1859) 13 MOO PC 22., என்ற வழக்கில், சுதந்திர நாடுகள் ஒவ்வொன்றும் மற்றொரு நாடுகளுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உள்நாட்டு நீதிமன்றங்களில் நிருவகிக்கும் சட்டத்தினால் அல்லாமல் பிற சட்டங்களினால் ஆளுமை செய்யப்படும் என்றும், உள்நாட்டு நீதிமன்றங்கள் அத்தகைய நடவடிக்கைகளில் சரியானது எது என்பதை முடிவு செய்வதற்கான நடைமுறைகளையோ அல்லது அந்நீதிமன்றம் தீர்மானிக்கும் முடிவுகளை செயல்படுத்துவதற்கான அதிகாரத்தையோ பெற்றிருக்கவில்லை என்பதையும் கிங்ஸ்டவுன் பிரபு (Lord Kingsdown) குறிப்பிட்டுள்ளார். பிறிதொரு வழக்கில் **(R Vs Bottril, 1947 KB 41)** ஓர் அரசின் போர் பிரகடன அறிவிப்பு, சமாதான அறிவிப்பு அல்லது பொருளாதாரத் தடை விதிப்பு, முற்றுகை, அமைதி அல்லது வணிகத்திற்கான உடன்படிக்கை, அயல்நாட்டின் நிலப்பரப்பை கைப்பற்றுதல் உள்ளிட்ட செயல்களினால் விளைந்த தீங்குகள் குறித்த வழக்குகளை விசாரிக்க உள்நாட்டு நீதிமன்றங்கள் அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடப்பட்டது.

மேற்குறிப்பிட்டவைகள் எவ்வாறு இருப்பினும், அரசின் செயல்களானது உள்நாட்டு சட்ட எல்லைக்கு உட்பட்டதாக இருப்பின் அவற்றை அரசின் செயல் எனக்கூற முடியாது. **Jehangir Vs Secretary of State, (1904) 6 LR 131 (DB).,** என்ற வழக்கில், அரசின் சார்பாக எழுப்பப்பட்ட வாதங்களில், அரசுப் பணியாளரை நியமிப்பதும் அல்லது வேலையிலிருந்து நீக்குவதும் அரசின் செயல் என்பதால் நீதிமன்றம் அரசை விசாரிக்க ஆள்வரை கொண்டிருக்கவில்லை என்பதும் ஒன்றாகும். அரசின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதியரசர் பேட்டி (Justice Batty), 'அரசின் செயல்' என்பதை பின்வருமாறு வரையறுத்தார்: அரசின் செயல் என்பது அமைதிக்காலங்களில், தன் சொந்த நிலப்பரப்பினுள் (நாட்டினுள்) சொந்த மக்களுக்கு எதிரான இறைமைச் செயலுக்கு (sovereign action) பொருந்தாது. இக்கூற்று பொதுவாக, அமைதிக்காலமாக இருந்தாலும்கூட, அயல்நாட்டு குடிமக்களுக்கு எதிரான இறைமைச் செயலுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இதேபோன்று **P.V.Rao Vs. Khushal Das S. Advani., AIR 1949 Bom 277.,** என்ற வழக்கில் தலைமை நீதியரசர் சாக்ளா (Chagla C.J) அரசின் செயல் என்பது, ஓர் நாட்டின் நிலப்பரப்பிற்கு அப்பாற்பட்டு செய்யப்படும் அத்தகைய செயல்களாகும் என்றும், இது ஓர் நாட்டின் குடிமக்கள் பொறுத்து அணுகாது என்றும் மாறாக, உள்நாட்டு சட்டப்பாதுகாப்பை பெற முடியாத அயல்நாட்டினர் குறித்த செயல்கள் என்பதையும் எடுத்துரைத்துள்ளார்.

(8) நீதிமுறைச் செயல்கள் (Judicial Acts): ஓர் நீதிபதி அல்லது நீதிமுறை அலுவலர் (Judicial Officer) தன் அதிகாரவரம்பிற்குள் (jurisdiction) தனது நீதித்துறை பதவியை செயல்படுத்தும்போது, செய்யப்பட்ட செயல்கள்

அல்லது பேசப்பட்ட சொற்களுக்காக எந்தவொரு வழக்கும் தொடர முடியாது. நீதித்துறைக்கு பொறுப்படைவில் இருந்து தனி விலக்குரிமை அளிக்கும் இத்தகைய விதி, நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் சுதந்திரமாகவும் மற்றும் தங்களின் செயல் விளைவுகளுக்கு அச்சப்படாமல் பணியாற்ற வேண்டும் என்கிற பொதுநல ஆதாயத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். ஆங்கில சட்டத்தின் இவ்விதி, 1850-ஆம் ஆண்டின் நீதித்துறை அதிகாரிகள் பாதுகாப்புச் சட்டத்தின் (Judicial Officers Protection Act, 1850) மூலமாக இந்தியாவிலுள்ள நீதித்துறை அதிகாரிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-1, நீதிபதி, நடுவர் (magistrate), ஆட்சியர் அல்லது நீதிமுறையில் செயல்படும் (acting judicially) பிற நபர் எவரொருவரும், தன்னுடைய நீதிமுறைக் கடமையை நிறைவேற்றும் போது செய்யப்பட்ட எந்தவொரு செயலுக்காகவும் அல்லது செய்யப்பட வேண்டும் என்ற ஆணை இடப்பட்டதற்காகவும், அத்தகைய செயல் அல்லது இடப்பட்ட ஆணை தன்னுடைய அதிகாரஎல்லைக்கு உட்பட்டதாக இருந்தாலும் அல்லது இல்லாமல் இருந்தாலும்கூட, ஆனால் அவர் அந்த நேரத்தில் நேர்மையான எண்ணத்தின் அடிப்படையில் அத்தகைய செயலை செய்வதற்கு அல்லது ஆணை இடுவதற்கு அதிகாரவரம்பு பெற்றுள்ளதாக நம்பினால், அதன்பொருட்டு எந்தவொரு உரிமையியல் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியாது என்பதைக் குறிப்பிடுகிறது.

மேற்குறிப்பிட்ட சட்டப்பாதுகாப்பு, நேர்மையற்ற மற்றும் தீய நோக்குடைய ஓர் நீதிபதிக்கு உதவக்கூடிய ஓர் முறை என்பதாக பொருள் கொள்ளக்கூடாது. எனவேதான் **Girjashankar Vs Gopalji., ILR (1906) 30 Bom 241.,** என்ற வழக்கில் நீதிபதியின் செயல் தீய நோக்குடனும் மற்றும் கேள்விக்குரியதாகவும் இருப்பின் அவரின் நடத்தை நன்கு விசாரிக்கப்படும் மற்றும் தண்டிக்கப்படுவார் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. இவ்வழக்கில், ஓர் நீதிபதி, மாவட்டத்திலிருந்து பணிமாறுதல் ஆணை பெறப்பட்ட பின்னர் எழுதிய தீர்ப்புரை, அவருக்குப் பின்வந்த நீதிபதியால் சொல்லப்பட்டது. இத்தீர்ப்பு சட்டவிரோதமானது எனத்தொடரப்பட்ட வழக்கில் 1882-ஆம் ஆண்டின் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு-199 [தற்போதைய 1976-ஆம் ஆண்டின் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை 20 விதி-2 (Order XX Rule-2)] இதற்கு முழுமையான விடையாகும் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. (ஒரு நீதிபதி, அவருக்கு முன்பிருந்த நீதிபதியால் எழுதப்பட்ட ஆனால் சொல்லப்படாத தீர்ப்பு ஒன்றைச் சொல்வதற்கு கட்டளை-20, விதி-2, வெளிப்படையாக அதிகாரம் அளிக்கிறது.-ஆ-ர்).

மேற்கண்டவற்றில் இருந்து, 1850-ஆம் ஆண்டின் நீதித்துறை அதிகாரிகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழான சட்டப்பாதுகாப்பைப் பெற்றிட பின்வரும் இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்;

(i) முறையீடு செய்யப்பட்டிருக்கும் செயல் (act complained of) தன்னுடைய நீதித்துறை கடமையை நிறைவேற்றும்போது செய்யப்பட்ட செயல் அல்லது இடப்பட்ட ஆணையாகும்.

(ii) அது (செய்யப்பட்ட செயல் அல்லது இடப்பட்ட ஆணை) தன்னுடைய அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாகும்; அவ்வாறு இல்லையேல், அந்நேரத்தில் நல்லெண்ணத்துடன் அச்செயலைச் செய்வதற்கு அல்லது ஆணை இடுவதற்கு உண்மையில் அதிகாரவரம்பு கொண்டுள்ளதாக நம்பியிருந்தார்.

(9) நீதிமுறை போலமைச் செயல்கள் (Quasi-judicial Acts): நீதிமுறைச் செயல்களைப் போல் அமைந்த செயல்களே நீதிமுறை போலமைச் செயல்களாகும். ஓர் முடிவு (decision) நீதிமுறை போலமையின் முடிவாக இருப்பதற்கு அது, நீதிமன்றம் என்று முறையாக குறிப்பிடுவதாக அல்லாத ஓர் குழு அல்லது அமைப்பில் (body) இருந்து எழுவதாக இருக்க வேண்டும். எனவே இச்சொல் பொதுவாக சுயவிருப்பை (discretion) உள்ளடக்கிய ஆனால் நீதிமுறை விசாரணையை பின்பற்றும் முடிவுகளை குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. நீதிமுறை போலமைச் செயல்கள் அனைத்தும் இயற்கை நீதிக்கொள்கைகளை பின்பற்றும் கடப்பாட்டிற்கு உட்பட்டதாகும்.

இயற்கை நீதிக் கொள்கைகள் (Principles of natural justice): இயற்கை நீதிக்கொள்கை, (i) மறுபுறம் கேட்டு நீதி வழங்குக (audi alteram partem - i.e., hear the otherside); மற்றும் (ii) எவரொருவரும் தமது வழக்கில் தாமே நீதிபதியாக இருக்க முடியாது - (nemo debt esse judex in propria causa, i.e., no one ought to be a Judge in his own cause) எனும் நன்கு அறியப்பட்ட இரண்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்விதி, சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பாயங்களின் நடைமுறைக்கு மட்டுமின்றி தனிநபர்களை உரிமையியல் விளைவுகளுக்கு உட்படுத்தும் பொருண்மைகளை முடிவு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தீர்ப்பாயம் அல்லது நபர்கள் அடங்கிய குழுவிற்கும் பொருந்தும். மேற்குறிப்பிட்டுள்ள இயற்கை நீதியின் இரண்டு கொள்கைகளும் புகழ்பெற்ற ஆங்கில வழக்குகளில் பலமுறை உறுதி செய்யப்பட்டுள்ளது. எ-டு: Dawkins Vs Antrobus, (1881) 17 Ch.D 615(CA), Maclean Vs. Worker's Union 1929 All ER 468, Fisher Vs Keane, (1878) 11 Ch.D 353.

இந்திய உச்சநீதிமன்றமும் இக்கொள்கைகளை பல வழக்குகளில் உறுதி செய்துள்ளது. (எ-டு. S.R. Venkataraman Vs Union of India, AIR 1979 SC 49, Govt. Branch Press Vs D.B.Belliappa, AIR 1979 SC 429). இயற்கை நீதி நடைமுறைத் தன்மையை மட்டுமே கொண்டது என்பதுடன் ஓர் முடிவு எட்டப்படுவதற்கு முன் பின்பற்றப்பட வேண்டியதாகும். மேலும், இயற்கை நீதிக்கொள்கைகள் சட்டத்தின் சேர்க்கையாக அல்லது சட்டத்துடன் சேர்ந்ததே தவிர, சட்டத்திற்கு மாற்றாக இருக்காது. தற்போது இக்கொள்கைகள் முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்ட தன்னுரிமை கொள்கைக்கு (concept of ordered liberty) மிகவும் அடிப்படையானதாக கருதப்படுகிறது. எனவே ஒவ்வொரு முடிவு செய்யும் பணியிலும் (decision making function), அது நீதித்துறை அல்லது நீதிமுறை போலமை அல்லது நிருவாகத்துறையாக இருந்தாலும் முழுமையாகப் பொருந்தும்.

Swadeshi Cotton Mills Vs Union of India, (1981) 1 SCC 664., என்ற வழக்கில், இயற்கை நீதிக் கொள்கைகளை பின்பற்றுவது குறித்து சட்டத்தில் ஏதும் கூறப்படாமல் இருந்தாலும்கூட, உட்கிடையாக அவற்றை பின்பற்றக் கோருவதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீதியரசர் சின்னப்பரெட்டி தெளிவுபடுத்தியுள்ளார்.

(10) பெற்றோர் மற்றும் பெற்றோர் நிலையில் உள்ளோர் அதிகாரம் (Parental and Quasi-Parental Authority): பெற்றோர் தங்களின் குழந்தைகளுக்கான இயற்கை காப்பாளர் (natural guardians) என்பதால், அவர்களின்மீது அதிகாரம் செலுத்தும் நிலையில் உள்ளனர். பெற்றோர் மற்றும் குழந்தைக்கு இடையிலான இத்தகைய இயற்கையான உறவில் இருந்து பல்வேறு சட்டக்கடமைகள் மற்றும் உரிமைகள் எழுகிறது. பெற்றோர் தமது குழந்தையை பராமரிக்கும் கடமையையும் மற்றும் குழந்தையை பேணவும், கட்டுப்படுத்தவும், சரிநிலைப்படுத்தவும் மற்றும் தண்டிக்கவும் உரிமைகள் கொண்டுள்ளனர். இது தொடர்பாக பெற்றோர் இருவரும் சமமான சட்ட உரிமைகள் கொண்டிருந்தாலும் குழந்தையின் நலனே மிகவும் முக்கியமானதாகும். எனவே குழந்தையை தண்டிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவோர், அத்தகைய அதிகாரத்தை நல்லெண்ணம் மற்றும் திருத்தும் எண்ணத்துடனும் நியாயமாகவும் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் பொறுப்பேற்க நேரிடும். இதேபோன்று பெற்றோரின் நிலையில் உள்ளவர்களும் குழந்தையிடம் உள்ள தீயகுணத்தை அல்லது செயலை சரிபடுத்துவதற்காக மிதமாக தண்டிக்கவும் செய்யலாம். நியாயமான காரணத்தின்பேரில் பள்ளியில் இருந்து நீக்கவும் செய்யலாம்.

Fitzgerald Vs Northcote, (1865) 4 F&F 656., என்ற வழக்கில், மாணவர்களை தண்டிக்கும் ஆசிரியரின் அதிகாரம், பெற்றோர் அளிக்கும் அளிப்படைவுனின்று (delegation) எழுகிறது மற்றும் அத்தகைய அதிகாரம், பள்ளிக்கு வெளியிலும் மட்டுமல்லாது வீட்டிலிருந்து பள்ளிக்கு வருதல் மற்றும் பள்ளியிலிருந்து வீட்டுக்கு செல்வது வரை நீடிக்கும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

இந்தியாவில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், குழந்தையின் ஒழுக்கத்தை சரிப்படுத்துவதற்காக மிதமாக கண்டிப்பதற்கு உரிமை கொண்டுள்ளனர். **P.Sankunni Vs Swaminatha., AIR 1922 Mad 200.,** என்ற வழக்கில், ஒழுக்கக்கேடு அல்லது வெளிப்படையான கீழ்ப்படியாமை தவிர வேறு எவற்றிற்காகவும் உடலளவிலான தண்டனை அளிக்கக்கூடாது என்றும் மேலும் அத்தகைய அதிகாரம் குழந்தையின் வலியை தாங்கும் திறனுக்கு மிஞ்சியதாக இருக்கக்கூடாது என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

Ryan Vs Fildes, [1938] 3 All ER 517., என்ற வழக்கில், மாணவனின் செவியில் ஆசிரியை அறைந்ததால், கேட்புத்திறன் இழந்த மாணவனுக்கு, பள்ளியின் மேலாளர்கள் இழப்பு வழங்க பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்றும், வழங்கப்படும் இழப்பீட்டுத்தொகையை, சட்டசீர்திருத்தம் (திருமணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டம், 1935-ன்கீழ் ஆசிரியையிடம் இருந்து ஈட்டுறுதி (indemnity) பெற மேலாளர்களுக்கு உரிமை உண்டு என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

SHORT NOTES

26. தற்காப்பு உரிமை / Right of Private defence. Nov-2013, May-2015 (v).

தற்காப்பு உரிமை என்பதும் தீங்கியல் பொறுப்பு நிலையில் இருந்து விடுபடுவதற்கு பிரதிவாதிக்கு உள்ள பொதுவான ஓர் எதிர்வாதமாகும். தாக்குதலை தாக்குதலால் எதிர்கொள்வது மனித உள்ளுணர்வாகும் மற்றும் இத்தகைய இயற்கையான உள்ளுணர்வு நீதிமன்றங்களாலும் மற்றும் சட்டத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டத்தின் 96 முதல் 106 வரையிலான பிரிவுகள் தற்காப்பு உரிமைகள் தொடர்பான பொருண்மைகளைக் கொண்டுள்ளது. எனவே ஒவ்வொரு நபரும் தனது உடல், சொத்து அல்லது உடைமையை சட்டத்திற்கு முரணான தீங்கிலிருந்து தற்காத்துக் கொள்ளும் உரிமையை கொண்டுள்ளனர். ஆனால் தற்காப்பு உரிமையை செயல்படுத்தும்போது தாக்குதல் அல்லது பயன்படுத்தும் பலம், அக்குறிப்பிட்ட வெளிப்படையான அவசர சூழ்நிலைக்கு தகுந்த அளவில் இருக்க வேண்டும். தற்காப்பு உரிமையை (1) நபரின் பாதுகாப்பு மற்றும் (2) சொத்தின் பாதுகாப்பு எனும் இரண்டு தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்.

(1) நபரின் பாதுகாப்பு (Defence of person): ஒவ்வொரு நபரும், சட்டவிரோத தாக்குதலுக்கு எதிராக தற்காத்துக் கொள்வதற்கு நியாயமான அளவில் பலத்தை பயன்படுத்தலாம். நியாயமான அளவு என்பது ஒவ்வொரு பொருண்மை மற்றும் சூழ்நிலையைச் சார்ந்ததாகும். எவ்வாறிருப்பினும் தாக்குதலை அல்லது பலத்தை பயன்படுத்தியிருப்பது;

(அ) வெளிப்படையான அல்லது சூழ்நிலைக்கு ஏற்ற அளவில் இல்லாமல் இருந்தால்; அல்லது;

(ஆ) பலத்தை அல்லது தாக்குதலை பயன்படுத்தும் அவசியம் இல்லாமல் இருந்தால், அது நியாயமான அளவு ஆகாது. எடுத்துக்காட்டாக, 'A', 'B'-ஐ கையால் தாக்கியதற்காக, 'B', கத்தியால் 'A'-ன் கையை துண்டாக்கியதை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் 'B' பயன்படுத்திய தாக்குதல் அக்கெடுதியின் தன்மையை தவிர்ப்பதற்கான அளவைவிட மிக அதிகமானதாகும். ஒருவர் சாதாரண தாக்குதலுக்கு எதிராக, மரணத்தை ஏற்படுத்தியதை அல்லது கொடுங்காயம் ஏற்படுத்தியிருப்பதை, அத்தாக்குதலை வேறுமுறையில் தடுக்க முடியாது என்றிருந்தாலும்கூட, அவற்றிற்கெதிராக தன்னை சட்டப்படி காத்துக்கொள்ள முடியாது. இருப்பினும், ஒருவேளை 'B' பயங்கர ஆயுதங்களுடன் 'A'-ஐ தாக்கினால், 'A'-யும் பயங்கர ஆயுதம் அல்லது தன் உயிரை காத்துக் கொள்வதற்கான எந்தவொரு ஆயுதத்தைப் பயன்படுத்தினாலும் அது நியாயப்படுத்தப்படும். ஏனெனில் இங்கு 'A' பயன்படுத்திய ஆயுதத்தாக்குதல், தவிர்க்க நினைக்கும் கெடுதியின் தன்மைக்கு ஏற்ற அளவானதேயாகும். ஆனால், 'B'-ஐ, 'A' கழியால் (stick) தாக்கிவிட்டு திரும்பிச் சென்று கொண்டிருக்கும்போது, 'B', 'A'-ஐ கழி கொண்டு தாக்கியதை, தன்னை தற்காத்துக் கொள்ள தாக்கியதாக

நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் 'A'-ன் தாக்குதல் முடிந்த அக்கணமே 'B' தன்னை தற்காத்துக் கொள்ளும் அவசியமும் முடிந்துவிட்டது.

Morris Vs Nugent, (1836) 7 C&D 572., என்ற வழக்கில், பிரதிவாதி, வாதியின் வீட்டைக் கடந்து செல்லும்போது, வாதியின் நாய் வெளியே ஓடிவந்து பிரதிவாதியின்நீண்ட காலுறையை கடித்துவிட்டது. பிரதிவாதி திரும்பிப் பார்த்து தனது துப்பாக்கியை உயர்த்தவே நாய் ஓடியது. ஆனாலும் பிரதிவாதி ஓடிக்கொண்டிருந்த நாயை சுட்டார். நீதிமன்றம், பிரதிவாதி தன் செயலை நியாயப்படுத்த முடியாது என்றும், நாய் கடிக்கும்போது சுட்டிருந்தால் மட்டுமே தனது செயலை நியாயப்படுத்தமுடியும் என்றும் தீர்ப்பளித்தது.

நபரின் பாதுகாப்பு உரிமை என்பது ஒருவரின் வாழ்க்கைத் துணை மற்றும் குடும்பத்தையும் மட்டுமின்றி பணி வழங்குநர் தன் பணியாளரால் காக்கப்படுவதற்கும், பணியாளர் தன் பணி வழங்குநரால் காக்கப்படுவதற்கும் நீட்டிக்கப்பட்ட உரிமையாக சட்ட அறிஞர்கள் பொல்லாக், வின்ஃபீல்ட் மற்றும் கிளர்க் மற்றும் லிண்ட்செல் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

(2) சொத்தின் பாதுகாப்பு (Defence of property): ஒவ்வொரு நபரும் தனது அசையும் மற்றும் அசையா சொத்தினை பாதுகாப்பதற்காக நியாயமான பலத்தை பயன்படுத்த உரிமை கொண்டுள்ளனர். இருப்பினும் ஒரு நபர் தனது சொத்தினை பாதுகாப்பதற்காக நியாயமற்ற அளவிலான தாக்குதலை அல்லது நியாயமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வாரேயானால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்பாகுவார். **Bird Vs Halbrook, (1828) 4 Bing 628.,** வழக்கு இதற்கு ஓர் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் பிரதிவாதி, தனது தோட்டத்தில் மலரும் பூக்கள் திருடப்பட்டு வந்ததால், திருட்டைத் தடுப்பதற்காக ஒரு விசைத்துப்பாக்கியை (spring gun) தோட்டத்தில் மறைத்து வைத்திருந்தார். வாதி (சிறுவன்) அத்தோட்டத்தில் நுழைந்த தனது கோழியை தேடிப் பிடிப்பதற்காக சுவர் ஏறிக் குதித்தான். தேடும்போது விசைத்துப்பாக்கியை மிதித்ததால் அது வெடித்து பலத்த காயமுற்றான். நீதிமன்றம், வாதி, பிரதிவாதியின் நிலத்தில் அத்துமீறி நுழையாமல் இருந்திருந்தால் காயமுற்றிருக்கமாட்டார் என்றாலும் கூட, பிரதிவாதி தனது சொத்தினை பாதுகாக்கும் தற்காப்பு உரிமையின் எல்லையைமீறி செயல்பட்டதால் பொறுப்பாகுவார் என்று தீர்ப்பளித்தது.

27. நீதிபதிகள் (பாதுகாப்புச்) சட்டம், 1985 / Judges (Protection) Act, 1985., Nov-2017.

நீதிபதிகள் (பாதுகாப்புச்) சட்டம், 1985, நான்கு பிரிவுகளை மட்டுமே கொண்ட ஓர் சட்டமாகும். இச்சட்டம் நீதிபதிகள் மற்றும் நீதிமுறையில் செயலாற்றும் (acting judicially) பிறருக்கும் கூடுதல் பாதுகாப்பை அளித்திடவும் மற்றும் இது தொடர்பான பொருள்களை கையாள்வதற்கும் இயற்றப்படுவதாக இச்சட்ட முகப்புரை தெரிவிக்கிறது. இச்சட்டம், ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்பதை பிரிவு-1(2) குறிப்பிடுகிறது.

நீதிபதி (Judge): இச்சட்டத்தின் பிரிவு-2, 'நீதிபதி' என்ற சொல்லை வரையறுத்துள்ளது. இப்பிரிவின்படி 'நீதிபதி' என்பவர், அலுவல் முறையில் ஓர் நீதிபதியாக சுட்டி அமர்த்தப்பட்ட ஒவ்வொரு நபரை மட்டுமின்றி, பின்வரும் அதாவது-

(a) எந்தவொரு சட்டமுறை நடவடிக்கையிலும் ஓர் அறுதியான அல்லது எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படாமல் இருப்பின் அறுதியானதாக இருக்கக்கூடிய அல்லது வேறுபிற அதிகாரியினால் உறுதி செய்யப்படின் அறுதியானதாக இருக்கக்கூடிய தீர்ப்புரையை வழங்குவதற்காக சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவர்; அல்லது;

(b) மேற்குறிப்பிட்டுள்ள தீர்ப்புரையை வழங்குவதற்காக சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபர்கள் அடங்கிய அமைப்பில் (body of persons) ஒருவராக இருப்பவர் – ஆகிய ஒவ்வொரு நபரையும் குறிக்கும்.

நீதிபதிகளுக்கான கூடுதல் பாதுகாப்பு (Additional protection to Judges): இச்சட்டத்தின் பிரிவு-3, நீதிபதிகளுக்கான கூடுதல் பாதுகாப்பு குறித்த பின்வரும் பொருள்களைக் குறிப்பிடுகிறது:

(1) நடைமுறையில் உள்ள பிற சட்டங்களில் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும் மற்றும் பின்வரும் உட்பிரிவு (2)-ன் வகையங்களுக்கு உட்பட்டு, ஓர் நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்தவர், தனது அலுவல் முறையிலான அல்லது நீதிமுறைக் கடமை அல்லது பணியை நிறைவேற்றும்போது புரியப்பட்ட செயல்கள் அல்லது செய்யப்பட்ட ஏதேனுமொன்றின் காரணத்திற்காக அல்லது பேசப்பட்ட சொற்களுக்கு எதிராக, எந்தவொரு நீதிமன்றமும் எந்தவொரு உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது தொடரவோ கூடாது.

(2) மேற்குறிப்பிட்ட எதுவும், நடைமுறையில் உள்ள எந்தவொருச் சட்டத்தின்கீழும், மைய அரசு, மாநில அரசு, இந்திய உச்சநீதிமன்றம் அல்லது எந்தவொரு உயர்நீதிமன்றம் அல்லது பிற எந்தவொரு அதிகாரக்குழுவும், ஓர் நீதிபதியாக இருப்பவர் அல்லது நீதிபதியாக இருந்தவருக்கு எதிராக உரிமையியல், குற்றவியல் அல்லது துறை நடவடிக்கையின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு கொண்டுள்ள அதிகாரத்தை எந்தவொரு முறையிலும் பாதிக்காது.

இச்சட்டத்தின் பிரிவு-4, இச்சட்டத்தின் வகையங்கள், நீதிபதிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக நடைமுறையில் உள்ள பிற சட்ட வகையங்களுக்கு கூடுதலாக இருக்குமே தவிர, அவைகளை பலவீனப்படுத்துவதாக ஆகாது என்பதைக் குறிப்பிடுகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-124(4), மற்றும் உறுப்பு - 217(b) ஆகியவை முறையே ஓர் உச்சநீதமன்ற நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதியை பதவியிலிருந்து நீக்குவதற்கான நடைமுறையைக் குறிப்பிடுகிறது. நீதிபதிகளின் மீதான சாட்டுரைகளை (allegations) விசாரிப்பது தொடர்பான நடைமுறைகளை நீதிபதிகள் (விசாரணைச்) சட்டம், 1968, குறிப்பிடுகிறது.

அலகு - III

தரப்பினர்கள் மற்றும் அவர்களின் தகுதிகள்
Parties and their Capacity

PART - A/B

20. தீங்கியல் சட்டத்தில் அரசு ஊழியர்களின் செயலுக்கு ஒரு அரசின் பொறுப்புநிலையைப் பற்றி விளக்கவும். (Discuss the liability of State for the acts of its servants in Torts) - Nov-2018 (v).

✦ **அரசின் பணியாளர்களால் ஏற்படுத்தப்படும் தீங்கிற்கு அரசின் பொறுப்புநிலையை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும். (Explain the liability of State for its employees torts with decided cases) - May-2018(v).**

✦ **தீங்கியலில் அரசுப் பணியாளர்கள் செய்யும் செயல்களுக்கு அரசின் பொறுப்படைவினை விவாதிக்க. (Discuss the liability of the State for the acts of its servants in Torts) - Nov-2013(v), May-2012.**

SN - 28 தீங்கிற்கான அரசின் பொறுப்புநிலை / Govt's Liability for Torts, May-2017(v), May-2014.

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை – (ஆ) தீங்கிற்கான அரசு / அரசின் பணியாளர்களின் பொறுப்புநிலை – (இ) வழக்குத் தீர்வுகள் – (ஈ) முடிவுரை

(அ) முன்னுரை (Introduction)

இந்திய தீங்கியல் சட்டம், இங்கிலாந்து நாட்டு தீங்கியல் சட்ட வரலாற்றுப் பின்னணியில் உருவானதாகும். இங்கிலாந்தில் "அரசர் தவறு செய்யார் எனவே தவறான ஓர் செயலைச் செய்வதற்கு அதிகாரம் வழங்கமாட்டார்" ('King can do no wrong hence he cannot authorise a wrong') என்ற முதுமொழியின் அடிப்படையில் அரசர்கள் தங்கள்மீது வழக்கு தொடரப்பட முடியாத விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தனர். அரசர், தன் கடமைகள் மற்றும் செயல்களை தன் பணியாளர்கள்மூலம் செயல்படுத்தி வந்ததால் அவை அரசால் நேரடியாக செய்யப்பட்டது போன்று கருதப்பட்டது. இதன் விளைவாக அரசுப் பணியாளர்கள் செய்யும் தீங்கிற்காக வழக்கிடமுடியாத நிலையிருந்தது. இந்நிலை, 1947 ஆம் ஆண்டு முடியரசு நடவடிக்கைகள் சட்டம் (The Crown Proceedings Act, 1947) இயற்றப்படும்வரை நீடித்தது. முடியரசு நடவடிக்கைகள் சட்டம், சட்ட வயதடைந்த, ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு தகுதி கொண்ட, ஓர் தனிநபர், தான் செய்த தீங்கிற்கு எவ்வாறு பொறுப்பாகுவாரோ

அதேபோன்று தீங்கியலின் அனைத்து பொறுப்புநிலைக்கும் அரசை உட்படுத்தியது.

பண்டைய இந்தியாவில் 'சட்ட நடைமுறைக்கு விலக்கு பெற்றவர் எவரொருவரும் இல்லை' எனும் எதிர்க்கப்படமுடியாத கோட்பாடு இந்து சட்டவியலில் பின்பற்றப்பட்டது. தவறு செய்தவர் அரசராக, அரசின் உறவினராக, ஓர் நீதிபதியாக அல்லது சாதாரண குடிமகனாக இருந்தாலும் அனைவரும் சாதாரண நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவும், சமமான தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டனர். ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோரைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் ஆட்சியே ஓங்கிய அதிகாரம் பெற்றிருந்தது. மத்தியக்கால இந்திய வரலாற்றில், அரசு அலுவலர்கள் தங்களின் தவறுகைக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாகும் நிலை நடைமுறையில் இருந்தது. ஆள்பவர் மற்றும் ஆளப்படுவோருக்கு இடையே சட்ட சமத்துவம் (legal equality) இருந்ததற்கும், மக்கள் சாதாரண நீதிமன்றத்தில் அரசின்மீது வழக்கு தொடர்ந்ததற்கும் சான்று உள்ளது. முகலாயர் ஆட்சியில், முகலாய மன்னர் இறைவனின் சேவகராகவும், அனைவரையும்போல இறைவனின் சட்டத்தை பின்பற்றுவதற்கு பொறுப்பு கொண்டுள்ளதாகவும் கருதப்பட்டார்.

(ஆ) தீங்கிற்கான அரசு / அரசுப் பணியாளர்களின் பொறுப்புநிலை (Liability of State / State employees in tort)

தீங்கிற்கான அரசின் பொறுப்புநிலைக் குறித்து தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் ஆணிவேர், 1858-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் (Govt. of India Act, 1858) பிரிவு-65 ஆகும். இப்பிரிவு, 'அனைத்து நபர்களும் அரசியல் குழுக்களும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக எவ்வாறு வழக்கு தொட முடியுமோ அதேபோன்று வழக்குகளை தொடுக்கவும் சட்டப்படியான மற்றும் தகைமை நெறியின் அடிப்படையிலான தீர்வழிகள் மற்றும் நடவடிக்கைகளை, இந்திய அரசிற்கான செயலருக்கு (Secretary of state) எதிராகவும் பெறவும் மேற்கொள்ளவும் முடியும்' என்பதைக் குறிப்பிடுகிறது. விடுதலைக்குப் பின்னர் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-300(1) பின்வருமாறு:

"இந்த அரசமைப்புச் சட்டத்தின்மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் பாராளுமன்றத்தினால் இயற்றப்படுகின்ற அல்லது மாநில சட்டமன்றத்தினால் இயற்றப்படுகின்ற சட்டத்தின் எந்தவொரு வகையங்களுக்கும் உட்பட்டு, இந்திய அரசு, இந்திய ஒன்றியம் என்பதன் பெயரில் வழக்கு தொடரவும் அல்லது தொடுக்கப்படவும் மற்றும் மாநில அரசு அம்மாநிலத்தின் பெயரில் வழக்கு தொடரவும் அல்லது தொடுக்கப்படவும், இந்த அரசமைப்புச் சட்டம் இயற்றப்படாமல் இருந்திருப்பின், இந்திய காலனி அரசு மற்றும் தொடர்புடைய மாகாணங்கள் மற்றும் தொடர்புடைய மாநிலங்கள் முறையேயான விவகாரங்கள் தொடர்பான வழக்குகள் எவ்வாறு தொடரப்பட்டிருக்குமோ அல்லது தொடுக்கப்பட்டிருக்க முடியுமோ அதேபோன்று தொடரலாம் அல்லது தொடுக்கப்படலாம்."

மேற்குறிப்பிட்ட உறுப்பு பின்வரும் இரு முக்கியப் பொருள்களைக் குறிப்பிடுகிறது. முதலாவதாக, மைய மாநில அரசுகள் இந்த உறுப்பின்கீழ்

வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்மூலம் இயற்றப்படும் சட்டங்களுக்கு உட்பட்டு மற்றவர்கள் மீது வழக்கு தொடரவும், மற்றவர்கள் அரசுக்கு எதிராக வழக்கு தொடரவும் அதிகாரம் அளிக்கிறது. இரண்டாவதாக, மைய மாநில அரசுகள், இந்த உறுப்பின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை செயல்படுத்தாமல் அதாவது சட்டம் எதனையும் இயற்றாமல் இருப்பின், அரசமைப்புச் சட்டம் இயற்றப்படாமல் இருந்திருப்பின், இந்திய காலனி அரசு மற்றும் மாகாண அரசு அல்லது மாநில அரசுகள் எவ்வாறு வழக்கு தொடருமோ அல்லது பிறர் இவைகளுக்கு எதிராக வழக்கு தொடரமுடியுமோ அதேபோன்று நிலை பொருந்தும்.

உறுப்பு -300-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நாளது தேதிவரையில் அதாவது 70-ஆண்டுகள் முடிந்த பின்னரும் மைய மாநில அரசுகள் செயல்படுத்தாமல் அதாவது தீங்கியலில் அரசின் பொறுப்புநிலையை தீர்மானிப்பது தொடர்பான சட்டம் இயற்றப்படாதது வருந்தத்தக்கதே. இதன்விளைவு, என்னவெனில், தீங்கியலில் அரசின் பொறுப்புநிலைக்குறித்து, அரசமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த இந்திய அரசுச் சட்டம், 1935- ன் பிரிவு 176-ஐ பின்பற்ற வேண்டியுள்ளது. தீங்கியல் தொடர்பான அரசுகளின் பொறுப்புநிலைக் குறித்து சட்டம் ஏதும் இயற்றப்படாத காரணத்தினால், இந்திய நீதிமன்றங்கள், தீங்கியல் சட்ட வளர்ச்சியை வெளிப்படுத்த புதிய சோதனைகள் மற்றும் வேறுபடுத்தல்களின் மூலமாக முயற்சிகளை மேற்கொண்டது. இதன்விளைவாக பெரும் நீதிமுறைக் குழப்பம் (judical confusion) ஏற்பட்டுள்ளது. பின்வரும் வழக்குகளின் மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

(இ) வழக்குத்தீர்வுகள் (Caselaws)

Peninsular & Oriental Steam Navigation Co. Vs. Secretary of State., (1861) 5 Bom HCR App 1., என்ற வழக்கில் வாதியின் பணியாளர் கல்கத்தா செல்வதற்காக குதிரை வண்டிமூலமாக, அரசு சொத்தான கிடர்பூர் கப்பல் கட்டுமிடத்தை கடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது கப்பல் கட்டுமிடத்தில் பணியிலிருந்த சில தொழிலாளர்கள் நீராவிக் கப்பலின் பழுதுநீக்கும் நோக்கத்திற்காக 300 பவுண்ட் எடையும் 8 லிருந்து 9 அடி நீளமும் இரண்டு அடி உயரமும் கொண்ட இயந்திர பாகத்தை எடுத்துக்கொண்டு சாலையின் மையப்பகுதியில் வந்தபோது, குதிரைவண்டி நெருங்கி வந்ததால், குதிரை வண்டிக்காரனும், வண்டியில் இருந்தவரும் தொழிலாளர்களை நோக்கி சப்தமிட்டனர். அந்த இக்கட்டான நேரத்தில் செய்வதறியாது, இயந்திர பாகத்தை முன்னால் தூக்கிச் சென்று கொண்டிருந்த தொழிலாளர்கள் முன்னே செல்லவும், பின்னால் தூக்கிச் சென்றவர்கள் பின்னால் இழுக்கவும் முயன்றனர். குதிரைவண்டி மிகவும் நெருங்கி வந்துவிட்டதால் இயந்திரபாகத்தை சாலையில் போட்டுவிட்டு இருபுறமும் ஓடினர். இயந்திரபாகம் சாலையில் மிகுந்த சப்தத்துடன் விழுந்ததால் குதிரை மிரண்டு பாய்ந்து இயந்திர பாகத்தின்மீது மோதியதில் பலத்த காயமடைந்தது. வாதி, தொழிலாளர்களின் கவனமின்மையால் ஏற்பட்ட

இழப்பிற்காக அவர்களை பணியமர்த்திய இந்திய அரசிற்கான செயலர் குழுவிற்கு (Secretary of State for India - in council) எதிராக இழப்பீடு (ரூபாய் 350/-) கோரி வழக்கு தொடர்ந்தார். கல்கத்தா உச்சநீதிமன்றம், 'அரசு சேவையில் இருக்கும் பணியாளர்களின் கவனமின்மையால் ஏற்படும் இழப்புகளுக்கு அதனை ஒத்த கவனமின்மைக்கு சாதாரண பணிவழங்குநர் பொறுப்பாகுவது போல் இந்திய அரசிற்கான செயலர் – குழுவும் பொறுப்பாகும் எனும் சட்டக் கொள்கையை எடுத்துரைத்தது. மேலும் இவ்வழக்கில் அரசின் இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மைப் பணிகள் அல்லாதவற்றிற்கு இடையேயான வேறுபாட்டினையும், இறையாண்மைப் பணிகள் அல்லாதவற்றை அரசுப் பணியாளர்கள் மேற்கொள்ளும்போது செய்யப்படுகின்ற தீங்குகளுக்கு மட்டுமே அரசு பொறுப்பாகும் என்பதையும் தலைமை நீதியரசர் பீகாக் (Chief Justice Peacock) தெளிவுபடுத்தினார்.

Nobin Chunder Dey Vs Secretary of State, ILR (1875) 1 Cal 11., என்ற வழக்கில், தீர்வை (வரி) விதிக்கத்தக்க மது வகைகள் மற்றும் மருந்துப்பொருள்களின் விற்பனைக்கான உரிமம் மறுக்கப்பட்டதால், வியாபாரத்தை முழுமையாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டதன் அடிப்படையில் வாதி இழப்பீடு கோரி, இந்திய அரசுக்கான செயலர் குழுவிற்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். கல்கத்தா நீதிமன்றம், உரிமம் வழங்குவது அல்லது மறுப்பது என்பது அரசின் தீங்கியல் பொறுப்புநிலைக்கு அப்பாற்பட்ட இறையாண்மைப் பணி என்பதன் அடிப்படையில் வாதியின் கோரிக்கையை தள்ளுபடி செய்தது.

Secretary of State Vs Hari Bhanji, ILR (1882) 5 Mad 273., என்ற வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம், இறைமைப் பணிகள் மற்றும் இறைமைப் பணி அல்லாதவற்றிற்கு இடையேயான வேறுபாட்டினை மறுத்து, உள்நாட்டு சட்ட (municpal law) அனுமதியின்கீழ் ஒரு செயல் செய்யப்பட்டிருந்து மற்றும் அச்சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்துவதாகவும், உண்மையில், தனிப்பட்ட நபர்களால் செய்யப்பட்டிருக்க முடியாத இறைமைப் பணியை செயல்படுத்துவதாக இருந்தாலும்கூட அதன் நியாயத்தன்மையை நீக்கிவிடாது என்பதைக் குறிப்பிட்டது.

State of Rajasthan Vs Vidhyawati, AIR 1962 SC 935., பிரதிவாதியான அரசினால் பணியமர்த்தப்பட்டிருந்த 'ஜீப்' ஓட்டுநர், சாலையில் சென்று கொண்டிருந்த வாதியின் கணவர்மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், அவர் இறக்க நேர்ந்தது. விபத்து ஏற்படுத்திய 'ஜீப்' மாவட்ட ஆட்சித்தலைவரின் பயன்பாட்டிற்காக பராமரிக்கப்பட்டு வந்ததாகும். 'ஜீப்' ஓட்டுநர், 'ஜீப்'-பில் இருந்த பழுதுகள் சரிசெய்யப்பட்ட பின்னர் பணிமனையில் இருந்து ஆட்சியரின் மாளிகைக்கு 'ஜீப்'-பை ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது இவ்விபத்து நிகழ்ந்தது. இறந்துபோனவரின் மனைவி வித்யாவதி மற்றும் இளவயது மகள் இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், கீழமை நீதிமன்றம் அரசை கடப்பாட்டிலிருந்து முழுமையாக விடுவித்தது. உயர்நீதிமன்றம், அரசு இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளது என்றும் மற்றும் கீழ்க்கண்டவற்றையும் குறிப்பிட்டது;

"எங்களது கருத்தில், அரசு தனது குடிமைப் பணிகளுக்கான ஓட்டுநர்களை பணி அமர்த்துவதாலும், கார்களை (cars) வழங்குவதாலும் மேம்பட்ட உயர்வான நிலையில் இல்லை. அரசினால் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்கள், இராணுவ நோக்கத்திற்காக வாகனத்தை ஓட்டினார்களா அல்லது பொதுமக்கள் சேவைக்காக வாகனத்தை ஓட்டினார்களா என்பதை ஆய்வு செய்வதற்காக நாங்கள் இங்கு இருக்கவில்லை"

உயர்நீதிமன்றத்தின் மேற்குறிப்பிட்ட சொற்களைக் குறிப்பிட்ட உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம் (ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயம்) ஒருமனதாக உயர்நீதிமன்றத்தின் கருத்தை சரியான சட்டநிலை அறிக்கையாகவும் ஏற்றுக்கொண்டது. Peninsular & Oriental வழக்கை வழிகாட்டு அதிகாரமாகக் கொண்டு, இறைமைப் பணிகள் மற்றும் இறைமைப்பணிகள் அல்லாதவற்றிற்கு இடையேயான வேறுபாடு தொடர்பாக, அவ்வழக்கில் கூறப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டிய தலைமைநீதியரசர் சின்ஹா, அரசின் பொறுப்புநிலையை உறுதி செய்தார். 1947-ஆம் ஆண்டு முடியரசு நடவடிக்கைகள் சட்டத்தினால் மாற்றம் செய்யப்பட்ட இயற்றாச் சட்டத்தின் 'இறையாண்மை விலக்குரிமை விதி' (rule of sovereign immunity) இந்தியாவிற்கு பொருந்தாது என்பதுடன், நவீன மக்கள் நலன் பேணும் அரசில், அரசுப் பணிகளை இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மை அல்லாத பணிகள் என்று வேறுபடுத்துவது காலத்திற்கு ஒவ்வாதது என்பதையும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

அரசின் தீங்கியல் பொறுப்புநிலை தொடர்பான இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மை அல்லாத பணிகளுக்கு இடையேயான வகைப்படுத்தலின் நீக்கத்திற்கு ஆதரவான நிலை மேற்குறிப்பிட்டுள்ள வழக்கில் அறுதியாக முடிவு செய்யப்பட்டுவிட்டது என்று தோன்றியபோது, உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம் **Kasturi Lal Vs State of U.P., AIR 1965 SC 1039.**, என்ற வழக்கில் மீண்டும் Peninsular வழக்கில் குறிப்பிட்டிருந்த இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மை அல்லாத பணிகள் எனும் வகைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கில், மீரட் காவல்துறையினர், கஸ்தூரிலாலிடம் இருந்த தங்கம் மற்றும் வெள்ளிக்கட்டிகளை (bullions) திருடப்பட்டவை என்ற சந்தேகத்தின்பேரில் அவரைக் கைது செய்து, அவரிடமிருந்த தங்கம் மற்றும் வெள்ளிக்கட்டிகளை பறிமுதல் செய்து அதனை தலைமைக் காவலரின் பொறுப்பில் ஒப்படைத்தனர். விசாரணையின் முடிவில் கஸ்தூரிலால் குற்றமற்றவர் என்பது அறியப்பட்டதால் அவரை விடுதலை செய்தனர். கஸ்தூரிலால் பறிமுதல் செய்யப்பட்ட தனது சொத்தினை அளிக்கக்கோரி பலமுறை கேட்டதில், பறிக்கப்பட்ட வெள்ளிக்கட்டியை மட்டுமே காவல்துறை அளித்தது. கஸ்தூரிலால் தனது சொத்தான தங்கக்கட்டி அல்லது அதன் மதிப்பிற்கு சமமான தொகை வழங்கக்கோரி வழக்குதொடர்ந்தார். தங்கம் மற்றும் வெள்ளிக்கட்டிகளை தலைமைக்காவலரின் பொறுப்பில் அளிக்கப்பட்டதாகவும், அவர் தங்கக்கட்டிகளை எடுத்துக்கொண்டு (கையாடல்) பாக்கிஸ்தானுக்கு ஓடிவிட்டதாகவும் அரசுத்தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. காவல்துறை அதிகாரிகள் தரப்பில் ஒட்டுமொத்த

கவனமின்மை உள்ளதைக் குறிப்பிட்ட நீதிமன்றம் இருப்பினும், தற்போது ஒரு நபரைக் கைது செய்வது, சோதனையிடுவது மற்றும்அவரிடமிருக்கும் சொத்தை பறிமுதல் செய்வது போன்ற அதிகாரங்களை குறிப்பிட்ட அலுவலர்களுக்கு சட்டப்படி வழங்கியிருப்பதால், இவற்றினை முறையாக இறையாண்மை அதிகாரம் கொண்ட பணிகளாக வகைப்படுத்தமுடியும். எனவே அரசின் இறையாண்மைப் பணியை செய்யும்போது அரசு ஊழியர் புரியும் தீங்குகளுக்கு அரசை பொறுப்பு நிலைக்கு உட்படுத்தமுடியாது என்பதைக் குறிப்பிட்டு, கஸ்தூரிலாலின் இழப்பீட்டு கோரிக்கையை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இவ்வழக்கில், கஸ்தூரிலால் போன்ற தனிப்பட்டநபர்களுக்கு ஏற்படும் இழப்புகளைப் போக்கிட பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றங்கள், இங்கிலாந்தில் அரசின் பணியாளர்கள் புரியும் தீங்குகளுக்கு அரசைப் பொறுப்பேற்கச் செய்யும் 1947-ஆம் ஆண்டு முடியரசு நடவடிக்கைகள் சட்டத்திற்கு ஒத்த ஓர் சட்டத்தை இயற்றுவது அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது. எவ்வாறிருப்பினும், உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம் வித்யாவதி வழக்கில் முடிவு செய்திருந்த நிலை, கஸ்தூரிலால் வழக்கில் மற்றொரு அரசமைப்பு ஆயத்தினால் மாற்றப்பட்டது என்பதே இங்கு கவனிக்கத்தக்க அம்சமாகும்.

கஸ்தூரிலால் வழக்கின் தீர்ப்பு, பல மட்டங்களில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. குறிப்பாக அரசமைப்புச் சட்ட வல்லுனர் H.M.சீர்வாய் அவர்கள் பல காரணங்களின் அடிப்படையில் கஸ்தூரிலால் வழக்கின் தீர்ப்பு தவறிழைத்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்தில் **Basava K.S. Patil Vs. State of Mysore., (1977) 4 SCC 358.,** என்ற வழக்கை குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாகிறது. நகைகளை கண்டுபிடித்த காவல்துறையினர், அதனை காவல் காப்பறையில் (police guardroom) வைத்திருந்தபோது மீண்டும் களவாடப்பட்டுவிட்டது. கஸ்தூரிலால் வழக்கின் பின்னணியைக் கொண்ட இவ்வழக்கின் சூழ்நிலையை எதிர்கொள்ள நீதிமன்றம் குற்றவிசாரணைமுறைச் சட்டம், 1973-ன் பிரிவு-482-ஐ பயன்படுத்தி தீர்வு கண்டது. [கு.விமு. சட்டத்தின் பிரிவு-482, நீதியின் நோக்கத்தை பாதுகாப்பதற்கான உயர்நீதிமன்றத்தின் உயர் அதிகாரங்கள் (inherent powers) பற்றிக் குறிப்பிடுகிறது].

N.Nagendra Rao & Co Vs. State of A.P., AIR 1994 SC 2663., என்ற வழக்கில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன்கீழான அதிகாரத்தை அரசு அலுவலர்கள் கவனமின்றி செயல்படுத்தியதால் வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு ஆந்திர மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று ,உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கின் தீர்ப்பை பகுப்பாய்வு செய்த, **அரசமைப்புச் சட்டத்தின் செயல்நிலைக் குறித்த மறு ஆய்விற்கான தேசிய ஆணையம் (The National Commission for review of working of Constition - NCRWC),** தீர்ப்பில் மற்றவைகளுக்கு இடையே உள்ளடங்கியிருந்த பின்வரும் முக்கிய சாராம்சங்களை குறிப்பிட்டது;

(i) நவீன காலத்திய உணர்வில், இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மை அல்லாத பணிகளுக்கு இடையேயான வேறுபாடு நடைமுறையில் இல்லை;

(ii) வெளிப்புற இறையாண்மை (external sovereignty) பணிகளுக்கு எடுத்துக்காட்டாக, பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள் உள்ளிட்டவை போன்ற மற்றும் அரசியல் தன்மைகொண்ட பணிகள் குறித்து அரசுக்கு பொறுப்புரிமை எழாது;

(iii) மேற்குறிப்பிட்ட அரசியல் தன்மையுடன் அரசின் விலக்குரிமை நின்றுவிடும்;

(iv) இறையாண்மைப் பணி மற்றும் இறையாண்மை அல்லாத பணிகளுக்கு இடையேயான பிரிக்கும்கோடு பெரும்பாலும் மறைந்துவிட்டது. எனவே நீதி நிருவாகம், சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பு, குற்றத்தை ஒடுக்குதல் உள்ளிட்ட அரசமைப்புச் சட்டத்தின்படியான அரசின் முதன்மையான மற்றும் மாற்றளிப்பு செய்யமுடியாத பணிகள் தவிர, மற்றப் பணிகளுக்கு அரசு எவ்வித விலக்குரிமையும் கோரமுடியாது.

(ஈ) முடிவுரை (Conclusion)

இந்தியத் தீங்கியல் சட்டம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டின் தீங்கியல் சட்டத்தின் அடிப்படையைக் கொண்டது என்பதை ஏற்கனவே கண்டுள்ளோம். இங்கிலாந்தில் அரசுப் பணியாளர்கள் பணியின்போது செய்யும் தீங்குகளுக்கு அரசு பொறுப்பேற்பது குறித்து, 1947-ஆம் ஆண்டு முடியரசு நடவடிக்கைகள் சட்டத்தின்மூலமாக ஓர் உறுதியான நிலைப்பாடு எடுக்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் இது தொடர்பாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், சட்டத்தின் சரியானநிலை இன்றுவரை உறுதிசெய்யப்படாமல் உள்ளது. இந்தியாவில் 1955-ஆம் ஆண்டில் விடுதலைக்குப் பின்னரான முதல் தேசிய சட்ட ஆணையம், செடல்வட் (setalvad) தலைமையில் அமைக்கப்பட்டது. 16.9.1958 தேதியன்று ஆணையம் அளித்த அறிக்கையில், அரசின் பொறுப்பு நிலையை தீர்மானிக்கும் பழைய வேறுபடுத்தல்கள் அதாவது இறையாண்மைப் பணிகள் மற்றும் இறையாண்மை அல்லாத பணிகள் என்பதை இனிமேலும் பயன்படுத்தக்கூடாது என்பதைக் குறிப்பிட்டிருந்தது. ஆனால் நீதிமன்றங்கள் இதற்கு செவிசாய்க்காதது துரதிருஷ்டமே. அரசின் பொறுப்புநிலைக் குறித்த வரையறை மற்றும் எல்லையை திருத்துவதற்காக 1965-ஆம் ஆண்டில் அரசு ஓர் வரைவினை (Bill) அறிமுகப்படுத்தியது. ஆனால் இவ்வரைவு காலக்கழிவானது (lapsed). எனவே மீண்டும் 1967-ஆம் ஆண்டில் மறு அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வரைவு பாராளுமன்றத்தின் இணைக்குழுவிற்கு குறித்தனுப்பப்பட்டதோடு நின்றுவிட்டது. எவ்வாறிருப்பினும், 1994 ஆம் ஆண்டில், உச்சநீதிமன்றம் வழங்கிய நாகேந்திரராவ் வழக்கின் தீர்ப்புரை பழைய நிலையை ஒழித்து ஓர் புதிய சட்டநிலைக்கு வழிவகுத்தாலும்கூட, சட்டமுறைப்படி அறுதியான நிலைப்பாடு எடுக்கப்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது. ஏனெனில் கஸ்தூரிலால் வழக்கில்

உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம் (ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயம்) தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால் நாகேந்திரராவ் வழக்கில் உச்சநீதிமன்றத்தின் இருநபராயம் தீர்ப்பு வழங்கியுள்ளதால், கஸ்தூரிலால் வழக்கின் தீர்ப்பை மறுத்தழிக்காது (not overruled).

மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், அரசின் பணியாளர்கள் தங்கள் பணியின்போது புரியும் தீங்குகள் தொடர்பான அரசின் பொறுப்புநிலை இன்றுவரை சட்டமுறைப்படி அறுதி செய்யப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். இத்தகைய அவலநிலையை பின்வரும் இரண்டுவழிகளில் ஏதேனுமொன்றின் மூலமாக நீக்கப்படமுடியும். முதலாவதாக, இங்கிலாந்தில் இயற்றப்பட்ட 1947ஆம் ஆண்டின் முடியரசு நடவடிக்கைகள் சட்டத்தை ஒத்த ஓர் சட்டத்தை இந்தியப்பாராளுமன்றம் இயற்றவேண்டும்; அல்லது; இரண்டாவதாக, அரசுப் பணியாளர்கள் செய்யும் தீங்குகள் தொடர்பான அரசின் பொறுப்புநிலைக் குறித்து உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதியரசர்கள் கொண்ட ஆயம், கஸ்தூரிலால் வழக்கின் தீர்ப்புரையை மறுத்தழிக்க வேண்டும். இவற்றுள் முதலாவதாக குறிப்பிட்டுள்ள வழி உடனடியாக செய்யப்பட முடியும். ஆனால் இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள வழி, அரசுப் பணியாளர்கள் தங்கள் பணியின்போது ஏதேனும் தீங்கு புரிந்து, அது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு மேல்முறையீட்டில் உச்சநீதிமன்றத்திற்கு சென்றால் மட்டுமே சாத்தியமாகும்.

21. தீங்கியல் சட்டத்தில் எந்தவொரு நபர்மீதும் வழக்கிட முடியும் என்ற விதியின் பல்வேறு விதிவிலக்குகளை விவாதிக்க. (Discuss the various exceptions to the rule that every one can be sued in Tort) - Nov-2014.

விடைச்சுருக்கம்: (1) இறையாண்மை - (2) கூட்டுரு - (3) தொழிற்சங்கங்கள் - (4) இளவர்கள் - (5) பித்துநிலையர் - (6) மணமான பெண்கள்

எவர் மீதெல்லாம் வழக்கிட முடியாது (Who cannot be sued):

தீங்கியல் சட்டத்தில் தீங்கிழைத்தவர் அனைவர்மீதும் வழக்கிட முடியும் என்பது ஓர் பொதுவான விதியாகும். இருப்பினும் தீங்கியல் சட்டம் பின்வரும் குறிப்பிட்ட இயற்கை நபர்கள் சட்டப்புனைவு நபர்களுக்கு எதிராக வழக்கு தொடருவதை அனுமதிப்பதில்லை:

(1) இறையாண்மை;
  (a) அயல்நாட்டு இறையாண்மை;
  (b) அரசுமுறைச் செயல்கள்;
  (c) தூதுவர்கள்.
(2) கூட்டுரு;
(3) தொழிற்சங்கங்கள்;

(4) இளவர்கள்;

(5) பித்துநிலையர் அல்லது மனநோயாளிகள்;

(6) மணமான் பெண்கள்

இனி மேற்குறிப்பிட்ட இயற்கை நபர்கள் மற்றும் சட்டப்புனைவு நபர்களுக்கு எதிராக வழக்கிடமுடியாத நிலையைப் பற்றிக் காண்போம்.

(1) இறையாண்மை (Sovereign):

இங்கிலாந்தில் 1947-க்கு முன்பிருந்த 'அரசர் தவறு செய்யமாட்டார்' ('King can do no wrong') எனும் 'பிரபுத்துவ சமுதாயக் கொள்கை' எதிர்க்கப்படமுடியாமல் இருந்தது. இதற்கு காரணம், சட்டத்தை உருவாக்கியவரை எவ்வாறு அவருடைய நீதிமன்றம் மற்றும் பணியாளர்கள் தீர்ப்பிடமுடியும் என்பதாகும். எனவே அரசரின் செயல்களுக்காகவும், அவரது ஆணையின்படி செயல்படும் அவரின் பணியாளர்களின் செயல்களுக்காகவும் வழக்கிட முடியாது எனும் நிலை இருந்தது. மத்தியக் காலத்தில் (Medieval period - அதாவது கி.பி.8-ஆம் நூற்றாண்டிலிருந்து 14-ஆம் நூற்றாண்டு வரையிலான காலம்) தோன்றிய இக்கருத்துரு, ஆட்சி செய்வோருக்கு கடவுள் தற்காலிக அதிகாரமும், ஆன்மீக அதிகாரம் மத குருமார்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதுகிறது. இது பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் இடையேயான அதிகாரப் போட்டிக்கு காரணமாகியது. அரசரின் அதிகாரம், ஆளப்படுபவர்களின் ஒப்புதலை சார்ந்துள்ளது என்பதையும் மற்றும் அரசன் கடவுளுக்கும் நாட்டின் சட்டத்திற்கும் உட்பட்டவன் என்பதையும் பாராளுமன்றம் உறுதி செய்தது.

1947-ஆம் ஆண்டுக்குப் பின்னர், இங்கிலாந்தின் இத்தகைய மரபுவழிச் சட்டம், 1947-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட முடியரசு நடவடிக்கைகள் சட்டம், பிரிவு-2-ன் மூலமாக பெருமளவில் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது அரசரும் சாதாரண குடிமகனைப்போல, வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ள சட்டக்கடமை மீறலுக்கு பகரப்பொறுப்பிற்கும் (vicarious liability) மற்றும் ஈட்டுறுதி சட்டத்திற்கும் (law of idemnity) மற்றும் கூட்டாக தீங்கிழைத்ததோருக்கு இடையே பகிரும் பொறுப்பிற்கும் உட்பட்டவராவார்.

1(a) அயல்நாட்டு இறையாண்மை (Foreign Sovereign): அயல்நாட்டு இறையாண்மை என்பது முழுமையாக சுதந்திரம் பெற்ற ஒவ்வொரு நாடுகளும், மற்ற நாடுகளின் சுதந்திரத்தையும் பன்னாட்டு ஒத்துழைப்பை மதிப்பதுமாகும். இது ஒரு நாடு மற்றொரு நாட்டின் ஆட்சியாளர், ஆட்சியாளர் செய்த செயல்கள், ஆட்சியரின் அதிகார ஒப்படைவு பெற்ற அரசு அலுவலர்கள், தூதுவர்கள் போன்றோர் செய்த செயலுக்கு எதிராக தன் நாட்டு அதிகார வரம்பிலிருந்து விலக்கு அளிக்கும் கொள்கையைக் குறிக்கும்.

Compania Naviera Vasgongado Vs S.S.Christina, 1938 AC 485., என்ற வழக்கில் சம்மர் பிரபு (Lord Summer), ஓர் அயல்நாட்டு இறையாண்மை, இந்நாட்டின் நீதிமன்றங்களில் ஓர் இடைத்தரப்பினராக சேர்க்க முடியாது என்ற கொள்கை நன்கு நிலை நிறுத்தப்பட்ட ஒன்றாகும். இருப்பினும்

அயல்நாட்டு இறையாண்மை அதிகாரம் பெற்றுள்ள நபர், மறுப்பு ஏதுமின்றி, வாதியாக அல்லது பிரதிவாதியாக ஆஜரானால் மட்டுமே நீதிமன்றம் அதிகாரவரம்பு பெறும் என்று குறிப்பிட்டார்.

Mighell Vs Sultan of Johore, (1894) 1 QB 149 (CA)., என்ற வழக்கில் முடிவு செய்துள்ளவாறு, இறையாண்மை அதிகாரம் முடிவுக்கு வந்த பின்னர் அல்லது அவர் அதை துறந்த பின்னர் விலக்குரிமை முழுதாக முடிவுக்கு வந்துவிடும்.

இந்தியாவில், உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு-86-ன்படி, மைய அரசுச் செயலரின் எழுத்துமூலமான இசைவுச் சான்றிதழைப் பெற்றப் பின்னரே அயல்நாட்டு இறையாண்மை அதிகாரம் பெற்றவர்கள் மீது வழக்குத்தொடரமுடியும். இருப்பினும் பிரிவு-86(1), ஒரு நபர், எந்த அயல்நாட்டு அரசு மூலமாக அசையாச் சொத்து ஒன்றை வைத்திருக்கிறாரோ, அந்த அயல்நாட்டு அரசுக்கு எதிராக, அந்த அசையாச் சொத்தின் குத்தகைதாரர் என்ற முறையில், மைய அரசின் ஒப்புதலின்றி நேரடியாக வழக்கு தொடரலாம் என்பதைக் குறிப்பிடுகிறது. உச்சநீதிமன்றம், 1966-ஆம் ஆண்டு **Mirza Ali Akbar Vs United Arab Republic, AIR 1966 SC 230.,** என்ற வழக்கில், இப்பிரிவை அனைத்துமுறையிலான அரசுகளுக்கும் பொருந்தச் செய்தது. இருப்பினும் ஆட்சியாளர்களுக்கான விலக்குரிமை அசாதாரண நேர்வுகளுக்காக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

1(b) அரசுமுறைச் செயல்கள் (Act of State): (பக்கம் 75-ல் காண்க).

1(c) தூதுவர்கள் (Ambassadors): தூதுவர் என்பவர் அயல்நாட்டு அரசின் பிரதிநிதி ஆவார். வழக்கு தொடரப்படுவதில் இருந்து விலக்களிக்கும் சிறப்புரிமை தூதுவரின் தனிப்பட்ட நபரத்துவத்திற்கு மட்டுமின்றி, வணிகப் பரிவர்த்தனைகள், அவரின் குடும்பம், அவரின் குழுச்செயலர் மற்றும் பிற செயலர்கள், பணியாட்கள், போக்குவரத்திற்கான வாகனங்கள் மற்றும் அவர் வசித்துவரும் வீடு ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துரு ஓர் புனைவின் அடிப்படையிலானதாகும். ஓர் தூதுவர் என்பவர், தான் சார்ந்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் குறு இறையாண்மை அரசு (mini-sovereign state) அதிகாரம் பெற்றிருப்பவர் ஆவார். இத்தகைய நபர், அவருக்கெதிரான வழக்கில் தன்னுடைய உரிமையை துறக்க முடியாது (cannot waive). இருப்பினும் இத்தகைய சிறப்புரிமை, சட்டநடைமுறைக் குறித்த (legal process) பொறுப்புநிலையிலிருந்து விலக்களிக்கிறதே தவிரு. சட்டத்தின்கீழான பொறுப்பு நிலைக்கல்ல (not liability under the law).

இந்தியாவில், தூதுவர்களுக்கு அல்லது பொதுவள நாட்டின் ஓர் உயர் ஆணையருக்கு (High Commissioner of a common wealth country) அல்லது அவரின் பணியாளர்களில் எவரொருவரின்மீதும், மைய அரசுச் செயலரின் எழுத்துமூலமான ஒப்புதல் சான்றிதழ் இன்றி வழக்குத்தொடர முடியாது. **[Bidhubhushan Prasad Vs. Royal Nepal Film Corpn Ltd., AIR 1983**

(NOC) 75 Cal]. அயல்நாட்டு ஆட்சியர்கள், தூதுவர்களுக்கு எதிரான உரிமையியல் வழக்குகள் தொடருவதற்கு சில நிபந்தனைகளை உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு-86(2) குறிப்பிட்டுள்ளது. உச்சநீதிமன்றம் **Harbhans Singh Dhalla Vs Union of India, AIR 1987 SC 9.,** என்ற வழக்கில் அரசுக்கான விலக்குரிமை தொடர்பான நவீன காலத்துபோக்கை (modern trend) கவனத்தில் கொண்டு அயல்நாட்டு அரசு மற்றும் அதன் அதிகார ஒப்பளிப்பு பெற்ற தூதுவர்கள் போன்றோருக்கு எதிராக வழக்கிடுவதற்கு பிரிவு-86(2)-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படின் அனுமதி வழங்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டது.

(2) கூட்டுரு (Corporation) (பக்கம் 96-ல் காண்க)

(3) தொழிற்சங்கங்கள் (Trade Unions):

இந்தியாவில் 1926-ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டம், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு சில விலக்குரிமைகளை வழங்கியுள்ளது. குறிப்பாக, இச்சட்டத்தின் பிரிவு-18(2), பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு, தொழிற்தகராறினைக் கருத்தினில் கொண்டு செய்யப்பட்ட செயல்கள் தொடர்பாக எழும் தீங்கியல் நடவடிக்கைகளில் இருந்து விலக்கு அளிக்கிறது.

(4) இளவர்கள் (Minors): (பக்கம் 98-ல் காண்க)

(5) பித்துநிலையர் அல்லது மனநோயாளிகள் (Lunatics or Insane Persons): (பக்கம்....ல் காண்க)

(5) மணமான பெண்கள் (Married Women): (பக்கம் 102-ல் காண்க)

22. "தீங்கிழைத்தவர் அனைவர் மீதும் வழக்கிடலாம், தீங்குற்றவர் அனைவரும் வழக்கிடலாம்" இக்கூற்றை ஆராந்து அதன் விதிவிலக்குகளை கூறுக. ("All persons are entitled to sue and be sued in tort" - Examine the Statement and state its exceptions). - May-2013(v).

விடைச்சுருக்கம்: (அ) எவர்மீதெல்லாம் வழக்கிட முடியாது - (ஆ) எவரெல்லாம் வழக்கு தொடர முடியாது

தீங்கிழைத்தவர் அனைவர்மீதும் வழக்கிடலாம், தீங்குற்றவர் அனைவரும் வழக்கிடலாம் என்பது ஓர் பொதுவான விதியாகும். இருப்பினும் சமுதாயத்தில் உள்ள அசாதாரண உறுப்பினர்களுக்கு ஆதரவான அல்லது எதிரான சில விலக்குகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வினாவிற்கான விடையை பின்வரும் இருதலைப்புகளின்கீழ் காண்போம்:

(அ) எவர் மீதெல்லாம் வழக்கிட முடியாது; மற்றும்;

(ஆ) எவர் மீதெல்லாம் வழக்கிடமுடியாது.

(அ) எவர் மீதெல்லாம் வழக்கிட முடியாது (Who cannot be sued): (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க.)

(ஆ) எவரெல்லாம் வழக்கிட முடியாது (Who cannot sue):

கீழ்க்கண்ட இயற்கை நபர்கள் / சட்டப்புனைவு நபர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கிற்கான வழக்கிட முடியாது;

(1) தீர்ப்புக் குற்றவாளி;

(2) அயல்நாட்டுப் பகைவர்கள்;

(3) நொடிப்பு நிலையர்;

(4) கூட்டுரு;

(5) இளவர்கள்;

(6) பித்துநிலையர்;

(7) மணமான பெண்கள்.

ஆ(1) தீர்ப்புக் குற்றவாளி (Convict): இங்கிலாந்தில் ஒரு நபர் கொடுங்குற்றம் (felony) அல்லது இராஜ துரோக குற்றச்சாட்டின் (treason) பேரில், நீதிமன்றத்தால் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு, மரணதண்டனை அல்லது கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர், அவரது தண்டனைக்காலத்தின்போது மற்றும் தண்டனைக்காலம் முடிந்திராதபோது தன்னுடைய சொத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட தீங்குகளுக்காக வழக்கிட முடியாத நிலை இருந்தது. ஏனெனில், 1870 ஆம் ஆண்டின் பறிமுதல் சட்டத்தின்படி (Forfeiture Act, 1870) அவரது சொத்துகள் சொத்தாட்சியரிடம் சேர்ந்தடைந்துவிடும். ஆனால் இத்தகைய தகுதியின்மை தற்போது 1948-ஆம் ஆண்டு குற்றவியல் நீதிச்சட்டத்தின் (Criminal Justice Act, 1948) மூலமாக நீக்கப்பட்டுவிட்டது. இங்கிலாந்தில் தற்போது ஓர் தீர்ப்புக் குற்றவாளி, சிறைத்தண்டனையில் இருந்தாலும், வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அவரின் உரிமை பறிக்கப்படாதவரையில் அனைத்து உரிமைகளையும் கொண்டிருப்பார் என்று **Raymond Vs Honey, (1982) 11 All ER 756.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

இந்தியாவில் 1921-ஆம் ஆண்டு வரையில் சிலக்குறிப்பிட்ட குற்றங்களுக்காக சொத்தை பறிமுதல் செய்யும் நடைமுறை இருந்தது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-121-ல் குறிப்பிடப்பட்டுள்ள, இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுத்தல் அல்லது போர் தொடுக்க முயலுதல் அல்லது போர் தொடுப்பதற்கு உடந்தையாய் இருத்தல் போன்ற குற்றங்களுக்கு இத்தகைய தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 126, 127 மற்றும் 169-ன் கீழான குற்றங்களைத்தவிர பிற குற்றங்களுக்கு இத்தண்டனையை நடைமுறைப்படுத்துவது ஒழிக்கப்பட்டுவிட்டது. எனவே ஓர் தீர்ப்புக்குற்றவாளி தன்னுடைய உடலுக்கும் சொத்திற்கும் எதிராகச் செய்யப்படுகின்ற தீங்குகளுக்கு எதிராக வழக்கு தொடரமுடியும் என்பதே தற்போதைய நிலையாகும்.

ஆ(2) அயல்நாட்டு பகைவர்கள் (Allien enemies): அயல்நாட்டுப் பகைவர் என்பது, எதிரி நாட்டினத்தைச் சார்ந்த அல்லது எதிரி நாட்டின் நிலப்பரப்பினுள் வசித்து வருகின்ற அல்லது தொழில் செய்து வருகின்ற,

எந்தவொரு நாட்டினத்தைச் சார்ந்தவரையும் குறிக்கும். அயல்நாட்டுப் பகைவர் ஒருவர் தன் சொந்த உரிமையின் அடிப்படையில் வழக்கிட முடியாது. இங்கிலாந்தில் அயல்நாட்டுப் பகைவர் ஒருவர், அரசரின் வெளிப்படையான உரிமத்தின்கீழ் அன்றி ஆங்கில நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது. ஆங்கிலப் பேரரசினுள், வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அரசரின் உரிமம் பெற்று வசித்து வரும் அயல்நாட்டுப் பகைவர், தற்காலிகமாக அவர் எதிரி எனும் நிலையிலிருந்து விடுபடுகிறார் மற்றும் நீதிமன்றங்களில் வழக்கிடமுடியும் என **Johnstone Vs Pedlar, (1921) 2 AC 262.,** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டது.

இந்தியாவில் 1908-ஆம் ஆண்டின் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் 83 முதல் 87-A மற்றும் 87-B ஆகிய பிரிவுகள், அயல்நாட்டைச் சார்ந்தவர்கள் வழக்கு தொடருவது தொடர்பான பொருள்களைக் குறிப்பிடுகின்றன. பிரிவு-83 எந்த அயல்நாடு இந்தியா மீது போர் தொடுத்துள்ளதோ, அந்த அயல்நாட்டில் குடியிருந்து, மைய அரசினால் அதற்கென உரிமம் வழங்கப்படாமல் அந்நாட்டில் தொழில் நடத்தி வரும் ஒவ்வொரு நபரும், அயல்நாட்டில் குடியிருந்து வருகிற ஓர் அயல்நாட்டுப் பகைவராக கருதப்படுதல் வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது.

உண்மையான சோதனை (real test), எதிரி நாட்டில் வசிப்பிடம் கொண்டிருப்பதே அன்றி, நாட்டினம் மற்றும் தேசப்பற்று உணர்வுகள் போன்றவை அல்ல என்ற கொள்கையின் அடிப்படையில், எதிரி நாட்டின் ஆக்கிரமிப்பில் உள்ள ஒரு நாட்டில், ஒரு நபர் வசித்து வந்தால், அவருக்கும் அயல்நாட்டுப் பகைவருக்கு உள்ள தகுதியின்மை சேர்ந்துவிடும் என்று **Manasseh Film Co. Vs. Gemini Picture Circuit, AIR 1944 Mad 239.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆ(3) நொடிப்பு நிலையர் (Insolvent): எவரொருவரின் தொகை செலுத்த வேண்டிய கடப்பாடுகள் அவரின் சொத்துக்களின் மதிப்பைவிட அதிகமாக உள்ளதோ அத்தகைய நபரே நொடிப்புநிலையர் என்பவராவார். நொடிப்புநிலையர் குறித்த இந்திய தீங்கியல் சட்டம், ஆங்கிலச் சட்டத்தை ஒத்ததாகும். நொடிப்புநிலையரின் சொத்து முழுமையும் வழக்கு சொத்து பேணுநரிடம் (receiver) சேர்ந்தடைந்து இருக்கும். நொடிப்பு நிலையினருக்கு எதிராக ஓர் தீங்கு செய்யப்பட்டிருந்து, அது முழுமையாக அவரது சொத்து தொடர்பானதாக இருப்பின் அது தொடர்பான வழக்கிடும் உரிமை சொத்து பேணுநருக்கு மட்டுமேயுண்டு. ஆனால் நொடிப்பு நிலையினரின் புகழுக்கு அல்லது அவரது உடலுக்கு எதிராக (எ-டு: அவதூறு, தாக்க முனைதல், தாக்குதல் போன்றவை) தீங்கு செய்யப்படின் அவரே வழக்கு தொடர உரிமை கொண்டுள்ளார். மேலும் இத்தகைய வழக்குகளில் இழப்பீடாக பெறும் தொகையில் சொத்து பேணுநர் எவ்வித இடைநிறுத்தமும் செய்ய முடியாது. நொடிப்புநிலையினரின் தனிப்பட்ட நபருக்கு மற்றும் அவரின் சொத்து ஆகிய இரண்டின் தொடர்பாக வழக்கிடும் உரிமை எழும்போது, அது நபர் தொடர்பாக மற்றும் சொத்து தொடர்பாக என இரண்டாக பிரிக்கப்பட்டு, நபர் தொடர்பாக நொடிப்பு நிலையர் வழக்கிடும் உரிமையையும்,

சொத்து தொடர்பாக, சொத்து பேணுநர் வழக்கிடும் உரிமையையும் கொண்டுள்ளனர் **[Beckam Vs. Drake, (1849) 2 HC 579]**. மேலும் இத்தகைய வழக்குகளில் வழக்குமூலம், நொடிப்புநிலையர் மற்றும் சொத்து பேணுநருக்கு இடையே இரண்டாகப் பிரிக்கப்படவும் அல்லது இருவரும் சேர்ந்து ஒரே வழக்காக தொடர்ந்து, இழப்பீடு இரண்டு தனித்தனி தலைப்புகளின்கீழ் தீர்மானிக்கப்படவும் செய்யலாம் **[Wilson Vs United Countries Bank, (1920) AC 102]**.

ஆ(4) கூட்டுரு (Corporation): (அடுத்துவரும் குறுவினாவில் காண்க).

ஆ(5) இளவர்கள் (Minors): (பக்கம் 98-ல் காண்க).

ஆ(6) மணமான பெண்கள் (Married Women): (பக்கம் 102-ல் காண்க).

SHORT NOTES

29. கூட்டு நிறுவனத்தின் தீங்கியல் பொறுப்புநிலை / Tortious liability of Corporation - May-2010 (அல்லது) கூட்டுரு / Corporation

சட்டப்புனைவு (legal fiction) அடிப்படையில் கூட்டுரு என்பது ஓர் சட்ட நபராகும். கூட்டுரு என்பது ஒரு நகராட்சி மன்றமாக, நிறுவனமாக அல்லது சட்டமன்றம் இயற்றிய சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஓர் பல்கலைக்கழகமாகவும் இருக்கலாம். கூட்டுருக்குள் இடையே இருக்கக்கூடிய பொதுவான கூறுகள் என்னவெனில், அதன்பெயர், நிரந்தரத்தன்மை மற்றும் வழக்கு தொடரவும், பிறர் அதன்மீது வழக்கு தொடரப்படுவதுமாகும்.

கூட்டுருவினால் வழக்குகள் தொடுக்கப்படுதல் (Suits by corporation): வாழுகின்ற நபர்களுக்கு எதிராக மட்டுமே வழக்கிடக்கூடிய அத்தகைய தவறுகளுக்காக கூட்டுருவின்மீது வழக்கிடமுடியாது. (எ-டு: தாக்குதல் மற்றும் முறையற்ற சிறைவைப்பு). கூட்டுரு தனது பங்குதாரர்கள் அல்லது பணியாளர்கள் புரிந்த தீங்கிற்காக வழக்கிட முடியாது. இருப்பினும் அத்தகைய தீங்கு, கூட்டுருவின் ஆளுமை அல்லது வியாபாரம் அல்லது சொத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் வழக்கிடமுடியும். ஓர் கூட்டுரு தீங்கெண்ணத்துடன் செய்யப்பட்ட ஓர் கலைப்பு (winding up) மனுவிற்காக வழக்கிடமுடியும் என்று **Quarts Hill Gold Mining Co Vs Eyre, (1883) 11 QBD 674.**, என்ற வழக்கில் கூறப்பட்டது. மேலும் ஓர் கூட்டுரு நொடிப்புநிலையில் உள்ளது அல்லது நேர்மையற்ற அல்லது தகுதியற்ற மேலாண்மை என்பது போன்ற சாட்டுரைகளுக்காக வழக்கிட முடியும். ஊழல் புரிந்தது என்பதற்கு எதிராக கூட்டுரு, நிலைவடிவ அவதூறு வழக்கு ஒன்றினை தொடரமுடியாது ஏனெனில், தனிப்பட்ட நபர்கள் மட்டுமே அத்ததகைய குற்றத்திற்கு பொறுப்பாக முடியும் என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் அண்மைக்காலத்தில் இக்கருத்து தவறானது என்பதுடன் கூட்டுருவின் ஆளுமைத்திறனை அல்லது புகழை அல்லது வியாபாரத்தை அல்லது சொத்துகளை பாதிக்கச் செய்வதற்கு எதிராக அவதூறு

வழக்கு தொடரமுடியும் என பல்வேறு வழக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. **எ-டு: Bognor Regis UDC Vs. Campion, (1972) 2 QB 169, Church of Scientology Vs Anderson, (1980) WAR 71.,**

கூட்டுருவிற்கு எதிராக வழக்கு தொடரப்படுதல் (Suits against Corporations): பணியின்போது முகவர்கள் அல்லது பணியாளர்கள் புரியும் தீங்குகளுக்கு முறையே முதல்வர் அல்லது பணி வழங்குநர் எந்த அளவிற்கு பொறுப்புக்கு உள்ளாகுவார்களோ அதேபோன்று, கூட்டுருவின் அதிகாரஎல்லைக்கு உட்பட்ட செயல்களை அதன் முகவர் அல்லது பணியாளர்கள் செய்யும்போது புரியப்படும் தீங்குகளுக்கு சந்தேகமின்றி கூட்டுரு பொறுப்பாகும். இவ்வாறு கூட்டுரு தாக்கமுனைதல், முறையற்ற சிறைவைப்பு, அத்துமீறல், இனமாற்றம் (conversion) அவதூறு அல்லது கவனமின்மைக்குப் பொறுப்பாகலாம். **Mercy Docks Trustees Vs Gibbs, (1866) LR1 HL 93.,** என்ற வழக்கில், தீங்கெண்ணம் அல்லது மோசடிக்காக கூட்டுருவை பொறுப்புக்கு உட்படுத்தமுடியாது ஏனெனில், இத்தகைய தவறுக்கான செயலுக்கு ஆதரவாக, உள்நோக்கம் அத்தவறு புரிந்தவரின் மனதை (mind) தூண்டியது என்பது மெய்ப்பிக்கப்படவேண்டும். ஒரு கூட்டுருக்கு மனது இல்லை என்பதால் இத்தகைய தீங்குகளுக்கு பொறுப்பாக்க முடியாது என்று இவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் தற்போது கூட்டுரு, தீங்கெண்ணம் மற்றும் மோசடி போன்ற தவறுகளுக்கும் கூட பொறுப்பாகும் என்பது நன்குநிலை பெற்றுவிட்டது. எனவே ஒரு கூட்டுரு, தீங்கெண்ணத்ததுடனான குற்ற வழக்கீடு, ஏமாற்றுதல் போன்றவற்றிற்கும்கூட வழக்கிட முடியும் எனப் பல்வேறு வழக்குகளில் கூறப்பட்டுள்ளது. **[எ-டு: Barwick Vs English Joint Stock Bank, (1867) LR 2 Ex. 259, Ahmedabad Municpality Vs Panubhai, (1934) 37 Bom LR 468].**

கூட்டுருவின் அதிகாரவரம்பிற்குமீறி (ultra vires) அதன் பணியாளர்கள் செய்த தீங்கியல் செயலுக்கு கூட்டுரு பொறுப்பாகுமா என்ற கேள்வி தொடர்பாக வேறுபட்ட கருத்துகள் இருந்தது. **Poulton Vs London and S.W.Rly. Co, (1867) LR 2 QB 534.,** என்ற வழக்கில், பிரதிவாதி நிறுவனத்தினால் பணியமர்த்தப்பட்டிருந்த 'ஸ்டேஷன் மாஸ்டர்' குதிரையை ஏற்றி வந்ததற்கான கட்டணத்தை வாதி செலுத்த மறுத்ததால், வாதியை கைது செய்தார். பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின்கீழ், பயணக்கட்டணத்தை செலுத்தாத பயணியை கைது செய்வதற்கான அதிகாரத்தை பிரதிவாதி நிறுவனம் பெற்றிருந்தது. ஆனால் சரக்கு கட்டணத்தை செலுத்தாத நபரை கைது செய்யும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், பிரதிவாதி நிறுவனம் பொறுப்பாகாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், சரக்கு கட்டணம் செலுத்தாத நபரை கைது செய்யும் அதிகாரத்தை பிரதிவாதி நிறுவனமே கொண்டிராதபோது, அது 'ஸ்டேஷன் மாஸ்டருக்கு' அத்தகைய அதிகாரத்தை வழங்கியிருக்க முடியாது. எனவே சட்டவிரோத கைதுக்காக வாதி 'ஸ்டேஷன் மாஸ்டருக்கு' எதிராக மட்டுமே இழப்பீடு கோர முடியுமே தவிர பிரதிவாதி நிறுவனத்துக்கு எதிராக கோரமுடியாது என்று தீர்ப்பளித்தது.

Campbell Vs Paddington Corporation, (1911) 1 KB 869., என்ற வழக்கில், நகராட்சி மன்றக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், நெடுஞ்சாலையில் கட்டப்பட்ட மேடை பொதுத்தொல்லையை ஏற்படுத்தியதுடன், வாதிக்கு ஏற்பட்ட தனித்தொல்லையால் தனிப்பட்ட இழப்பும் ஏற்பட்டது. பிரதிவாதியான நகர்மன்றக் குழுவிற்கு எதிராக இழப்பீடு கோரி வாதி தொடர்ந்த வழக்கில், நகரமன்றக்குழு அத்தகைய செயலைச் செய்ய அதிகாரம் அளித்ததால் இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நகரமன்றக்குழு அத்தகைய மேடை அமைப்பதற்கு சட்டப்படி அதிகாரம் கொண்டிருக்கவில்லை என்பதால் அதன்மீது வழக்குதொடரமுடியாது எனில், எந்தவொரு கூட்டுருவின் மீதும் எந்தவொரு தீங்கிற்காகவும் வழக்கிட முடியாது. நகரமன்றம், அதன்குழுவின்மூலமாக மட்டுமே செயல்படமுடியும் என்பதோடு குழுவின் தீர்மானம் நகரமன்றத்தின் அதிகாரபூர்வமான செயலாகும். பிரதிவாதிகளின் எதிர்வாதத்தை ஏற்றுக்கொண்டால் எந்தவொரு நிறுவனமும் அதன் அமைப்பு முறையேடின்படி (Memorandum of Association) செய்வதற்கு அதிகாரம் பெற்றிராத செயலைச் செய்வதற்கு, இயக்குநர்கள் தீர்மானத்தை நிறைவேற்றி செய்திருந்தாலும்கூட வழக்குதொடர முடியாததாகிவிடும் என்று தனது தீர்ப்பிற்கு அடிப்படையான காரணத்தையும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

30. தீங்கியலில் இளவரின் பொறுப்புநிலை / Minor's Liability in Tort.

வழக்கு தொடருவதற்கான இளவரின் தகுதி (Minor's Capacity to Sue): இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872-ன் பிரிவு -11-ன்படி, இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியற்றவர் என்பதால், ஒப்பந்த மீறுகைக்காக இளவரின்மீது வழக்கிட முடியாது. இளவர்நிலை என்பதே பொறுப்பு நிலையிலிருந்து விலக்களிப்பதற்கான காரணமாகாது அல்லது தவறு செய்வதற்கு உரிமம் அளித்ததாகாது. இளவருக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பை ஓர் கவசமாக (Shield) பயன்படுத்த வேண்டுமேதவிர ஓர் உடைவாளாக (sword) அல்ல என்று **Jennings Vs. Rundall, (1799) 8 TR 355.,** என்ற வழக்கில் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது உற்றுநோக்கத்தக்கதாகும்.

ஓர் இளவர் சட்ட வயதடைந்த நபரைப் போன்றே தீங்கியலில் வழக்கு தொடர முடியும். இருப்பினும் இளவர் நேரடியாக தன் பெயரில் வழக்கிட முடியாது, மாறாக; அடுத்த நண்பர் அல்லது வழக்குத்துணையர் (Next friend) மூலமாக வழக்கிட வேண்டும் என்கிற நடைமுறை வேறுபாடு மட்டுமே உள்ளது. வழக்குத் துணைவர் என்பது தந்தையாகவோ அல்லது தாயாகவோ இருக்கலாம்.

தீங்கியலில் இளவரின் பொறுப்புநிலை (Minor's liability in Tort): தீங்கியல் சட்டம், வயது அடிப்படையில் எந்தவொரு வேறுபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. எனவே **O'Brien Vs Mc namee, (1953) Ir. R. 86.,** என்ற வழக்கில், சட்ட வயதடைந்த நபர்கள்மீது வழக்கிடுவது போன்றே ஏழு வயதான சிறுவன்மீது அத்துமீறல் தீங்கிற்காக வழக்குதொடர முடியும் என்று

குறிப்பிடப்பட்டது. இருப்பினும் தீங்கானது ஏமாற்றுதல், தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல் அல்லது சதி போன்று அத்தகைய சிறப்பான மனநிலைக்கூறு அவசியமாக இருக்கும்போது அத்தகைய தீங்குகளை செய்வதற்கு போதுமான முதிர்ச்சி பெற்றிருந்ததை மெய்ப்பித்தாலேயொழிய பொறுப்புநிலைக்கு உட்படுத்த முடியாது. **Walmsley Vs. Humenick, (1954) 3 D.L.R. 232.,** என்ற வழக்கில் பிரிட்டிஷ் கொலம்பிய உச்சநீதிமன்றம் பிரதிவாதியான ஐந்துவயதுச் சிறுவனை கவனமின்மைத் தீங்கிற்காக பொறுப்பாக்கக்கூடிய அத்தகைய மனவளர்ச்சி நிலையை எட்டவில்லை என்பதால் பொறுப்புநிலைக்கு உட்படுத்த முடியாது என்று தீர்ப்பளித்தது.

தீங்கியல் பொறுப்புநிலையில் சட்ட வயது அடைந்தவருக்கும் இளவருக்கும் இடையே வேறுபாடு ஏதுமில்லை என்பதைக் கண்டோம். இருப்பினும் தீங்கானது ஒப்பந்த சார்பற்றதாக இருப்பது அவசியம். **Jennings Vs. Rundall, (1799) 8 Term Rep. 355.,** என்ற வழக்கில், இளவரான பிரதிவாதி, சவாரி செய்வதற்காக வாதியிடமிருந்து பெண்குதிரை ஒன்றை வாடகைக்குப் பெற்றார். பயணத்தின்போது குதிரை சோர்வடைந்து விபத்துக்குள்ளானது. இது தொடர்பாக வாதி இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், வழக்கு ஒப்பந்த மீறுகையை அடிப்படையாகக் கொண்டது என்றும் எனவே அதனை தீங்கிற்கான வழக்காக மாற்றமுடியாது என்றும், ஒருவர் ஒப்பந்த மீறுகைக்காக தீங்கியலில் வழக்கிடமுடியாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், இதனை அனுமதித்தால் தீங்கியலில் இருந்து விலக்களிக்கும் சிறப்புரிமையை பொருளற்றதாக்கி பலவீனப்படுத்திவிடும் என்றும் குறிப்பிட்டது. ஆனால் **Burnard Vs Haggis, (1863) 14 CBNS 45.,** என்ற வழக்கில், பெண் குதிரையை வாடகைக்குப் பெற்ற பிரதிவாதியான 19 வயதான இளவரிடம் (இங்கிலாந்தில் 1969-ஆம் ஆண்டு குடும்ப சீர்திருத்தங்கள் சட்டம் இயற்றப்படும்வரை இளவர் என்பது 21 வயதுக்கு உட்பட்டவராக இருந்தது). அக்குதிரை தாண்டுவதற்கு தகுதியற்றது என்பது வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் பிரதிவாதி அக்குதிரையை முள்வேலி ஒன்றை தாண்டச் செய்தபோது, முள்வேலியின்மீது குதிரை விழுந்ததால் ஏற்பட்ட பலத்த காயங்களினால் இறந்தது. நீதிமன்றம் பிரதிவாதியின் செயல், வாதியின் அனுமதியின்றி லாயத்திலிருந்து குதிரையை கொண்டு சென்றதற்கு ஒப்பாகும் எனக்குறிப்பிட்டு, இளவரின் பொறுப்புநிலையை உறுதி செய்தது.

பெற்றோரின் பொறுப்புநிலை (Liability of Parent) : Vellapandi Vs. Manicka Thai, (1970) ACJ 65 (Mad)., என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல, இளவர் செய்த தீங்கிற்கு பெற்றோர் அல்லது காப்பாளர் பொறுப்பாக மாட்டார். இருப்பினும் இப்பொது விதிக்கு இரண்டு விலக்குகள் உள்ளது. முதலாவதாக, பெற்றோரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட இளவர், பணியின்போது புரியும் தீங்கிற்கு தந்தை அல்லது தாய் பகரப்பொறுப்பு (Vicarious liability) கொண்டுள்ளார். **Gibson Vs. O'Keeney, (1925) NI 66.,** என்ற வழக்கில் தந்தை வியாபார நோக்கத்திற்காக, தனது இளவர் மகனிடம் தனது குதிரை வண்டியை கொடுத்து அனுப்பியிருந்தார். மகன் கவனமின்றி வண்டியை ஓட்டி விபத்தை

ஏற்படுத்தியதால் வாதிக்கு ஏற்பட்ட ஊறினுக்கு தந்தை பகரப்பொறுப்பு கொண்டுள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இரண்டாவதாக, இளவரால் செய்யப்பட்ட தீங்கு, பெற்றோர் இளவரின்மீது செலுத்த வேண்டிய கவனத்தை லெுத்தத் தவறியதால் ஏற்பட்டதாக இருப்பின் பெற்றோர் (தந்தை அல்லது தாய்) பொறுப்பாகுவர். **Bebee Vs Sales, (1916) 32 TLR 413.,** என்ற வழக்கில் தந்தை தனது 15 வயது மகனிடம் காற்று விசைத் துப்பாக்கியை (Airgun) முன்னரே ஒரு முறை பக்கத்து வீட்டு சன்னல் கண்ணாடியை உடைத்த பின்னரும் அதனை வைத்திருக்க அனுமதித்திருந்தார். பின்னர் அவன் மற்றொரு சிறுவனின் கண்ணை காயப்படுத்திய தீங்கிற்கு அவனின் தந்தை பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Newton Vs. Edgerley, (1959) 1 WLR 1031., என்ற வழக்கில், 12 வயதான தன்மகனிடம், அவனின் தந்தை துப்பாக்கி ஒன்றை கொடுத்திருந்தார். ரவைக்குண்டுகள் நிரப்பப்பட்டிருந்த அத்துப்பாக்கியை மற்றொரு சிறுவன் பிடுங்க முயற்சிக்கும்போது அத்துப்பாக்கி வெடித்ததில் வாதிக்கு காயமேற்பட்டது. சிறுவனின் தந்தை, எப்போதும் மற்ற சிறுவர்கள் இருக்கும்போது துப்பாக்கியைப் பயன்படுத்தக்கூடாது என்று அறிவுறுத்தியிருந்தார். இவ்வழக்கில் தலைமை நீதிபதி பார்க்கர் (Parkar CJ), சிறுவனின் தந்தை முதலில் சிறுவன் துப்பாக்கி வைத்திருக்க அனுமதித்திருக்கக்கூடாது அல்லது அதனை கவனமாக பயன்படுத்துவது குறித்த அறிவுறுத்தல்களை கொடுத்திருக்க வேண்டும் என்பதைக்குறிப்பிட்டு, சிறுவனின் தந்தை இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார் என்று தீர்ப்பளித்தார்.

31. பித்துநிலையரின் வழக்கிடும் தகுதி / Capacity of the lunatic to sue., May-2012 (அல்லது) பித்துநிலையர் / Lunatic (அல்லது) மனநோயாளி / Insane

தீங்கியல் சட்டம் இளவர் மற்றும் பித்துநிலையர் அல்லது மனநோயாளியை சமமாக பாவிக்கிறது. எனவே தீங்கியல் சட்டத்தின்கீழ் இளவர்மீது வழக்கு தொடருவதற்கு பொருந்தும் அதே விதிகள் பித்துநிலையருக்கும் பொருந்தும்.

பித்துநிலை / மனநோய் என்பது குற்றச்சட்டத்தில் ஓர் விதிவிலக்காக இருப்பினும் (காண்க: இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-84) உரிமையியல் பொறுப்புநிலைக்கு (civil liability) ஓர் எதிர்வாதமாகாது. தீங்கியலில் பொறுப்புநிலையை தீர்மானிப்பதில் குறிப்பிட்ட எண்ணம் ஓர் அவசியக் காரணியாக இருக்கும் தீங்குகளைத்தவிர ஏனையவற்றில், வெறுமனே மனநிலை தகுதியின்மை (mental disability) என்பது ஓர் செல்லத்தக்க வாதமாகாது. எஷர் பிரபு (Lord Esher M.R), **Hanbury Vs. Hanbury, (1892) 8 TLR 559.,** என்ற வழக்கில், பித்துநிலையரின் மனநோய் அவரது செயலின்தன்மை மற்றும் விளைவுகளை புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு இருந்தாலே தவிர மற்ற நேர்வுகளில் பொறுப்பாவார் என்பதைக் குறிப்பிட்டார். **Morris Vs. Marsden, (1952) 1 TLR 947.,** என்ற ஆங்கில வழக்கில், மனநோய் மருத்துவமனையில் ஓர் நோயாளியாக சேர்க்கப்பட்டிருந்த பிரதிவாதி, அவரை மனநோயாளியாக

ஏற்றுக்கொள்ளும் ஆணை (reception order) செல்லத்தக்கதல்ல என கண்டுபிடிக்கப்பட்ட பின்பு மருத்துவமனையிலிருந்து வெளியேறினார். சில நாட்களுக்குப்பின் அவர் வாதியைத் தாக்கியதில் வாதிக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. வாதி தனது காயத்திற்காக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்ததில், பிரதிவாதி பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஸ்காட்லாந்து சட்டத்தின்கீழ் தீங்கெண்ணத்தை மெய்ப்பிக்க வேண்டிய அவசியமற்ற அவதூறு போன்ற வழக்குகளில் பித்துநிலையர் என்பது ஓர் எதிர்வாதமாகலாம். ஆனால் கவனமின்மைத் தவறுகளுக்கு ஓர் எதிர்வாதமாகாது. அமெரிக்காவில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளும்கூட, பித்துநிலையர்கள் தங்களின் தவறான செயல்களுக்கு பொறுப்பாவார்கள் என்பதையே காட்டுகிறது. **Williams Vs. Hays, (1894) 143 NYR 442.,** என்ற வழக்கில் கப்பலின் இரு கூட்டுரிமையரில் ஒருவரான பிரதிவாதி, தனது பித்துநிலை காரணமாக, கவனமின்றி கப்பலை சேதப்படுத்தினார். நீதிமன்றம், பிரதிவாதி மற்றொரு கூட்டுரிமையருக்கு இழப்பீடு அளிக்க பொறுப்பு கொண்டுள்ளார் என்று தீர்ப்பளித்தது.

இந்தியாவில், தீங்கியல் சட்டத்தில் பித்துநிலை எதிர்வாதம் குறித்து முதலில் முடிவு செய்யப்பட்ட வழக்கு **Ranganagulu Vs Mullackal Devaswam, AIR 1974 Ker 25.,** என்ற வழக்காகும். இவ்வழக்கில், இந்து மதத்தைச் சார்ந்த ரங்கநாகலு என்பவர் தேவஸ்தான விதிகளுக்கு முரணாக மேல்சட்டை மற்றும் காலில் ஷு-க்களுடன் (shoes), முல்லக்கல் கோவிலினுள் சென்று அங்கிருந்த கடவுளின் சிலையையும் உடைத்தார். அவரைப்பிடித்த காவல்துறை, அவர் பித்துநிலையராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மருத்துவரிடம் கொண்டு சென்றதில், மருத்துவர் பிரதிவாதி ஓர் பித்துநிலையர் என்பதை உறுதி செய்து சான்றிதழ் அளித்தார். குற்றவியல் நீதிமன்றம் அவர் பித்துநிலையர் என்பதன் அடிப்படையில் விடுவித்தது. எனவே முல்லக்கல் கோவில்குழு, சிலையை உடைத்ததற்கும், கோவிலை புனிதப்படுத்தியதற்குமான செலவுத்தொகைக்காக இழப்பீடுகோரி உரிமையியல் நடவடிக்கை மேற்கொண்டது. பிரதிவாதிகள் தரப்பில் பித்துநிலை எதிர்வாதமாக வைத்தது. வாதிகள் தரப்பில் திருவாங்கூர் - கொச்சின் ஆலய நுழைவு சட்டத்தின்கீழ் இழப்பீடு செலுத்துவது முழுப்பொறுப்புநிலை (absolute liability) என்று வாதிட்டது. நீதிமன்றம் பிரதிவாதி இழப்பீடாக ரூபாய் 1500/- செலுத்த வேண்டும் என்று ஆணையிட்டது.

தீங்கியலில் பித்துநிலை என்பது தன்னிலையிலேயே ஓர் எதிர்வாதமாகாது ஆனால் தீங்கான உள்நோக்கம் அதாவது ஓர் குறிப்பிட்ட தீங்கிற்கு ஓர் குறிப்பிட்ட மனநிலை அவசியமாக இருக்கும்போது, அத்தகைய மனநிலை இல்லை என்பதை மெய்ப்பிக்க பித்துநிலை ஓர் சிறந்த எதிர்வாதமாகும். இதேபோன்று, பிரதிவாதியின் செயல் தன்னிச்சையாக இல்லாமல் ஆனால் தானே தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு செய்த செயலாக இருந்தாலும் பொறுப்பாகமாட்டார். ஆனால் அவர் தன்னுடைய செயலின்தன்மை மற்றும் குணத்தை அறிந்திருந்தால், அவர் செய்தது தவறு என்று அறியாது செய்தார் என்பது ஓர் எதிர்வாதமாகாது.

32. தீங்கியலில் கணவன் மற்றும் மனைவியின் தகுதிநிலை / Husband and Wife capacity for tort., Nov-2017 (அ) மணமான பெண்ணின் வழக்கிடும் தகுதி / Capacity of a married woman to sue, Nov-2016 (அ) திருமணமான பெண்கள் / Married Women, Nov-2014(v).

மணமான பெண்கள் அல்லது மணமான பெண்ணின் வழக்கிடும் தகுதி (Married women or capacity of a married woman to sue:) தொடக்ககால ஆங்கிலச் சட்டத்தின்கீழ் இளவர்களைப் போன்றே பெண்களும் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் தகுதியைப் பெற்றிருக்கவில்லை. இயற்றாச் சட்டத்தின்கீழ், திருமணத்திற்குப்பின் மனைவியின் சட்ட நபரத்துவம் (legal personality) கணவனின் சட்ட நபரத்துவத்துடன் முழுமையாக இணைந்து விட்டதாகவும் மற்றும் அவர்களிருவரும் ஒரே சதை (flesh) மற்றும் ரத்தத்தால் உருவானவர்களாகவும் கருதப்பட்டது. எனவேதான் வாழ்க்கைத்துணைகள், ஒருவருக்கெதிராக மற்றொருவர் வழக்கிடமுடியாது எனும் விதி தோன்றலாயிற்று. குறிப்பாக ஒருவர் மற்றொருவருக்கு எதிராகப் புரியும் தீங்குகளுக்கு இவ்விதி பொருந்தச் செய்யப்பட்டது. இது ஒன்றிய விதியின் (rule of unity) நேரடி விளைவாகும். திருமண முறிவுக்குப் (விவாகரத்து) பின்னரும்கூட, தம்பதியரில் எவரொருவரும் மற்றொருவருக்கு எதிராக, திருமணம் நடப்பில் இருந்தபோது (அதாவது விவாகரத்துக்கு முன்) செய்யப்பட்ட தீங்குகளுக்காக வழக்கு தொடர முடியாத நிலை இருந்தது. திருமணத்திற்குப் பின், பெண்கள் முழுமையாக கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகச் செய்த இயற்றாச் சட்டத்தின் இவ்விதி, பெண்களுக்கு பெரும் இன்னல்களை ஏற்படுத்தியது. திருமணத்தின்போது, பெண்களுக்கு அவர்களின் பெற்றோர் மூலம் வழங்கப்பட்ட சொத்துக்கள், ஊதாரித்தனமான கணவன்களின் கைகளுக்குப் போய் சேர்ந்தது. இத்தகைய தீமைகளைக் களைந்திட **1882 ஆம் ஆண்டில் மணமான பெண்களின் சொத்து சட்டம் (Married Women's Property Act, 1882)** எனும் மிக முக்கிய சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-15, ஒவ்வொரு பெண்ணும், அவர் இச்சட்ட வெளியீட்டிற்கு முன்னரோ அல்லது பின்னரோ திருமணம் செய்திருந்தாலும்கூட, தன் கணவர் உட்பட அனைத்து நபர்களுக்கும் எதிராக சொத்தினை சொந்தமாகக் கொண்டிருப்பதற்கும் மற்றும் திருமணமாகாமல் இருந்திருந்தால் எவ்வாறு தன் சொத்தை பாதுகாப்பதற்கான உரிமையியல் தீர்வழிகளை கொண்டிருப்பாரோ அதேபோன்று கொண்டிருப்பர் என்பதையும் குறிப்பிடுகிறது. இருப்பினும் இவ்வுரிமை மேற்குறிப்பிட்ட 'கணவன் அல்லது மனைவி எவரொருவரும் தீங்கிற்காக தங்களில் ஒருவர் மற்றொருவர் மீது வழக்கிடும் உரிமை பெற்றிருக்கவில்லை' எனும் விதிக்கு உட்பட்டது.

தீங்கியலில் கணவன் மற்றும் மனைவியின் தகுதிநிலை (Husband and wife capacity for tort): 1935-ஆம் ஆண்டு சட்டத்திருத்த (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டமும் [The Law Reform (Married

Women and Tort feasors) Act, 1935], வாழ்க்கைத் துணைகளுக்கு இடையேயான பொறுப்பில்லா - நிலை விதியை (rule of non-liability) பாதுகாக்கிறது. இச்சட்டத்தின் பிரிவு-1, திருமணமான பெண்களுக்கு ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகுதியை வழங்கினாலும் கணவன் மனைவிக்கு இடையே தீங்கியல் நடவடிக்கை குறித்த 1882 ஆம் ஆண்டு மணமான பெண்களின் சொத்து சட்டத்தின் பிரிவு-12-க்கு உட்பட்டதாகும். இச்சட்டங்கள் மணமான பெண்கள் சொத்தினை தங்கள் பெயரில் தனியே சொந்தமாகக் கொண்டிருப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் (வழக்குகள்) மேற்கொள்வதற்கும் வழிவகுத்தது. இவ்வாறு தங்களின் பெற்றோரிடம் இருந்து இறங்குரிமையாகப் பெற்ற அல்லது வேறுமுறையில் பெற்ற தங்களின் தனிப்பட்ட சொத்துகளை பாதுகாப்பது குறித்த ஒப்பந்த தகுதியைப் பெற்றனர்.

தீங்கியலைப் பொறுத்தவரையில் மணமானப்பெண் நடைமுறை தகுதிநிலை கொண்டிராத காரணத்தினால் கணவனின் பெயருடன் சேர்த்து மட்டுமே வழக்கு தொடரவும், பிறர் அவர்மீது வழக்கு தொடரவும் முடியும். ஆனால் 1882-ஆம் ஆண்டு மணமான பெண்கள் சொத்து சட்டத்தின்கீழ், மணமான பெண்கள் தங்களின் தனிப்பட்ட சொத்தை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கணவனின் பெயரை சேர்க்காமலேயே மேற்கொள்ள முடியும். இருப்பினும் மற்ற அனைத்தையும் பொறுத்து, வாழ்க்கைத் துணைகளுக்கு இடையேயான வழக்குகள் அனுமதிக்கப்படாது என்கிற பழைய விதியே தொடர்ந்தது. இவ்வாறு, மணமானப் பெண் தன் தனிப்பட்ட சொத்தின் பாதுகாப்பிற்காக ஒப்பந்தவியல் சட்டத்தில் கணவனுக்கு எதிராக வழக்கு தொடர முடியும் என்றாலும்கூட, தன் கணவர் தனக்கிழைத்த எந்தவொரு தீங்கிற்காகவும் அவர்மீது வழக்கு தொடர முடியாது. இது, உரிமையியல் பொறுப்பு நிலையின்றி ஓர் கணவனுக்கு 'மனைவியின் காலை முறி ஆனால் கடியாரத்தை உடைக்காதே' ('break her leg but not her watch') என்பதான வினோத நிலைக்கு வழிவகுத்தது. **Newton Vs Hardy (1933) 149 LT 165.,** என்ற வழக்கு ஆங்கிலச் சட்டத்தின் வினோத நிலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் 'A' -ன் மனைவி, 'B' -என்பவரை மயக்கி கூட்டிச் சென்றதாக, 'B'-ன் மனைவி 'A' -ன் மனைவிமீது வழக்கு தொடர்ந்தார். சட்ட நடைமுறையின்படி மணமான பெண்ணுக்கு எதிராக வழக்கு தொடரப்படும்போது கணவனின் பெயருடன் சேர்த்துத்தான் வழக்கிட வேண்டும் என்பதால், 'A' -ஐ உடன் பிரதிவாதியாக (co-defendant) வழக்கில் சேர்த்தார். (இதனால் 'A'-ன் மனைவி, 'B'-ஐ மயக்கி கூட்டிச் சென்றதற்காக 'A' பொறுப்பாக்கப்பட்டு அதற்காக 'B'-ன் மனைவிக்கு இழப்பீடு செலுத்தும் பரிதாபநிலை உருவானது). இவ்வழக்கின் விசாரணை நீதிபதி ஸ்விஃப்ட் (Judge Swift). ஓர் பெண்மீது மற்றொரு பெண்ணின் கணவரை மயக்கியதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவர் அதை உண்மையில் செய்திருந்தால், ஓர் மனைவி தனது கணவனுக்கு உச்சபட்சமாக செய்யக்கூடிய தவறை செய்துள்ளார். அவர் அனைத்து உணர்வுகளிலுமான கண்ணியம் மற்றும் திருமண உறவை அவமானப்படுத்தியுள்ளார். அவள் தனது கணவனின் திருமண

உறவை சிதைத்துள்ளார், இருப்பினும் ஆங்கிலச் சட்டத்தின்படி அவளின் கணவன் அதற்கு இழப்பீடு கொடுக்கத்தான் வேண்டும் என்று குறிப்பிட்டார். நல்லவேளையாக இவ்வழக்கில் 'A'-ன் மனைவி 'B'-ஐ மயக்கி கூட்டிச் சென்றது மெய்ப்பிக்கப்படாததால் தள்ளுபடி செய்யப்பட்டது.

1935-ஆம் ஆண்டு சட்டசீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டம், இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்த மேற்குறிப்பிட்ட நகைப்பிற்குரிய விதியை ஒழித்தது. இச்சட்டம், ஓர் கணவர், கணவராக இருப்பதால் மட்டுமே, அவரின் மனைவி திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ செய்த எந்தவொரு தீங்கிற்கும் பொறுப்பாகமாட்டார் என்றும் இருப்பினும் உண்மையில் அவர் மனைவியுடன் சேர்ந்து தீங்கிழைத்திருந்தால் கூட்டுத் தீங்கிழைத்தற்கு பொறுப்பாவார் என்பதையும் குறிப்பிட்டது. எவ்வாறிருப்பினும் நாம் ஏற்கனவே கண்டுள்ளவாறு வாழ்க்கைத்துணைகள் ஒருவர் மற்றொருவருக்கு எதிராக தீங்கியலில் வழக்கிடமுடியாது என்ற இயற்றாச் சட்டவிதி ஒழிக்கப்படாமலே இருந்தது. இறுதியாக, **1962-ஆம் ஆண்டு சட்சீர்திருத்தம் (கணவன் மற்றும் மனைவி) சட்டம்**, மேற்குறிப்பிட்ட இயற்றாச் சட்டவிதியை ஒழித்தது.

இந்தியாவில், இந்து, முஸ்லீம், சீக்கிய மற்றும் ஜெயின் சமயத்தைச் சார்ந்த பெண்களுக்கு இத்தகைய தகுதியின்மை ஏதுமில்லை. தங்களின் தனிப்பட்ட நபர் மற்றும் சொத்துரிமை தொடர்பான அனைத்து குறித்தும் தங்களின் சொந்தப்பெயரில் வழக்கிடவும், பிறர் அவர்களின்மீது வழக்கு தொடரவும் தங்களின் இனமுறைச் சட்டத்தின்கீழ் முடியும். ஆனால் ஆங்கில இயற்றாச் சட்டத்தைப் பின்பற்றும் கிறித்தவர்கள் மற்றும் பிறருக்கு, ஆங்கிலச் சட்டத்தின்படியான, 1874- ஆம் ஆண்டின் மணமான பெண்கள் சொத்து சட்டம் பொருந்தும். இருப்பினும் இச்சட்டம், கணவன், மனைவி, ஒருவர் மற்றொருவருக்கு எதிராக வழக்குத்தொடரும் உரிமை தொடர்பான ஆங்கிலச் சட்டநிலையில் மாற்றம் செய்தது. இச்சட்டத்தின் பிரிவு-7, மணமானப் பெண், தனது அனைத்து முறையிலான சொத்தையும் திரும்பப் பெறுவதற்காக, நடைமுறையில் உள்ள 1865-ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் தனது சொந்தப்பெயரில் வழக்கு தொடரலாம் அல்லது இச்சட்டத்தில் தனது தனிப்பட்ட சொத்தின் பாதுகாப்பிற்காக, அனைத்து நபர்களுக்கும் எதிராக தனது சொந்தப்பெயரில் குற்றவியல் மற்றும் உரிமையியல் தீர்வழிகளை, மணமாகாமல் இருந்திருந்தால் பெறக்கூடிய அதே தீர்வழிகளைப் பெறுவார் மற்றும் அத்தகைய வழக்குகளில் அத்தகைய சொத்து குறித்த நடைமுறைகள் மற்றும் ஆணைகளுக்கும் மணமாகாமல் இருந்திருப்பின் எவ்வாறு பொறுப்பிற்கு உள்ளாகுவாரோ அதேபோன்று உள்ளாகுவார் என்பதைக் குறிப்பிடுகிறது.

33. கருவில் இருக்கும் குழந்தை - May - 2017 (v) அல்லது கருப்பை குழந்தை / Child in the Womb or en ventre sa mere- Nov-2012.

இந்தியாவில் இந்து மற்றும் மருமக்கள் தாயம் (பெண் வழி இறங்கு வாரிசு

முறை) சட்டங்களில், கருவில் இருக்கும் குழந்தை, குடும்பச் சொத்தில் ஓர் பாகம் பெறுவதற்கான உரிமையை கொண்டுள்ளது. இத்தகைய சட்டங்களில் குடும்ப பாகப்பிரிவினையின்போது கருவில் இருக்கும் குழந்தைக்கு ஓர் பாகம் ஒதுக்கப்படாவிடில், அக்காரணத்தின் அடிப்படையிலேயே அது ரத்து செய்யப்படும். இதேபோன்று சொத்துரிமைச் சட்டத்திலும் கருவில் இருக்கும் குழந்தைகளின் உரிமைகள் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பொறுப்புரிமை சட்டத்தின் (Trust Act) கீழ், எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைகளின் ஆதாயத்திற்கு என செல்லத்தக்க பொறுப்புரிமை அமைப்புகளை ஏற்படுத்த முடியும். குற்றவியல் சட்டத்திலும் கருவிலிருக்கும் குழந்தை தொடர்பான வகையங்கள் இடம் பெற்றுள்ளது. கருவிலிருக்கும் குழந்தைக்கு மரணத்தை ஏற்படுத்துவோருக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-316-ன்படி சிறைத்தண்டனைக்கு உள்ளாகுவர். மேலும், இ.த.ச. பிரிவு-312 மற்றும் பிரிவு-313-ஆவது பிரிவுகளின்கீழ் கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைப்பு தண்டனைக்குரிய குற்றங்களாகும். இங்கிலாந்து குற்றவியல் சட்டத்தில், கருவிலிருக்கும் குழந்தைக்கு மரணத்தை ஏற்படுத்துவோர் மனிதக்கொலை (man slaughter) குற்றத்திற்கு உள்ளாகுவர்.

கருவிலிருக்கும் குழந்தைக்கு ஆதரவாக, சட்டத்தின் மேற்குறிப்பிட்ட துறைகள் வகையங்களைக் கொண்டிருந்தாலும் தீங்கியல் சட்டத்தில் நன்கு அங்கீகரிக்கப்படவில்லை. **Walker Vs G.N.Rly of Ireland, (1891) 28 LR IA 69.,** என்ற வழக்கில், கருவுற்றிருந்த பெண்மணி பயணம் செய்த ரயில், இரயில்வே நிறுவனத்தின் கவனமின்மையால் விபத்திற்கு உள்ளானது. இவ்விபத்திற்கு பின் பிறந்த குழந்தை முடமாகவும் உருக்குலைந்தும் (crippled and deformed) பிறந்தது. வழக்குத்துணைவரின் (next friend) மூலம் வாதி (குழந்தை) வழக்கு தொடர்ந்ததில், நீதிமன்றம் பின்வரும் இரண்டு காரணங்களின் அடிப்படையில் பிரதிவாதி (ரயில்வே நிறுவனம்) பொறுப்பாகாது என தீர்ப்பளித்தது. முதலாவதாக, பிரதிவாதி உட்கிடையாக ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாக கருதப்படுவதற்கு அப்போது உண்மையில் சட்டமுறை நபர் (legal person) இருக்கவில்லை. இரண்டாவதாக, உரிமை கோரிக்கையை மெய்ப்பிப்பதற்கு அவசியமான மருத்துவச் சான்றுகள் உறுதியற்றதாக உள்ளது. **Dulieu Vs White, (1901) 2 KB 669.,** என்ற வழக்கில், கட்டிடத்தின் மேற்புறத்தில் இருந்த கணவனின் கடைக்குச் சென்றிருந்த கருவுற்றிருந்த பெண், அக்கடையின் முன்பகுதியில் நின்று கொண்டிருந்தார். கீழே சாலையில் பிரதிவாதி, இரு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியை கவனமின்றி ஓட்டியதைக் கண்ட அதிர்ச்சியின் காரணமாக குழந்தை பிறந்தது. குழந்தை பிறவிமந்தராக (idiot) பிறந்ததற்கு காரணம், பிரதிவாதியின் கவனமின்மையே என்பதன் அடிப்படையில் குழந்தையின் தாய் இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். குழந்தையின் தாய், குழந்தையின் சார்பாக சிறப்புரிமைக் கோரிக்கை (special claim) எதுவும் கோரப்படாததால் நீதிமன்றம் குழந்தைக்கு இழப்பீட்டுத்தொகை எதுவும் வழங்கவில்லை.

மேற்குறிப்பிட்ட வழக்குகள், பிரிட்டனில் கருவிலிருக்கும் குழந்தையின் தீங்கியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாததற்கான எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் கனடா நாட்டு உச்சநீதிமன்றம், கருவிலிருக்கும் குழந்தைக்கு செய்யப்பட்ட தீங்கிற்காக, குழந்தையின் சார்பாக எழுப்பிய கோருரிமையை (claim) அங்கீகரித்துள்ளது. **Montreal Tramways Co Vs Leveille, (1933) 4 DLR 337.,** என்ற வழக்கில் கருவுற்றிருந்த பெண் 'டிராம்' வண்டியிலிருந்து (tramcar) இறங்கும்போது, ஓட்டுநரின் கவனமின்மையால் காயமுற்றார். இந்நிகழ்விற்கு பின்னரான இரண்டு மாதத்தில் வளைந்த பாதத்துடன் (distorted feet) குழந்தை பிறந்தது. குழந்தையின் சார்பாக இழப்பீடு கோரி வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம், குழந்தைக்கு வழக்கிடும் உரிமை மறுக்கப்பட்டால் எவ்வித தவறும் செய்யாத அக்குழந்தை மற்றொருவரின் தவறுக்காக எவ்வித இழப்பீடுமின்றி, ஊனம் மற்றும் அசௌகரியத்துடன் வாழ்நாள் முழுதும் கடுஞ்சுமையை தாங்கிக் கொண்டு வாழ்ந்ததாக வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு இழப்பீட்டுக் கோரிக்கையை அனுமதித்தது. அமெரிக்காவிலும், இங்கிலாந்தில் இருந்த நிலையே பின்பற்றப்பட்டது. **Steamor Vs. Clive, (1942) 26 A 489.,** என்ற வழக்கில் குழந்தையின்தாய் கருவுற்றிருந்ததை புதிய சதை வளர்ச்சியால் தோன்றிய கட்டி (tumour) என்று மருத்துவர் தவறாக அறிகுறியை நிர்ணயித்து (incorrectly diagnosed) தவறான சிகிச்சையளித்தார். இதன் காரணமாக செவித்திறன், பேச்சுத்திறன் மற்றும் பார்வைத்திறன் இன்றி (deaf, dumb and blind) குழந்தை பிறந்தது. குழந்தையின் சார்பாக, மருத்துவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், பிரதிவாதி (மருத்துவர்) பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிரிட்டனில், 1976-ஆம் ஆண்டில் பிறவிக் குறைபாடுகள் (உரிமையியல் பொறுப்புடைமைச்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-1, ஓர் நபர் குழந்தையின் பெற்றோருக்கு உரிய கடமையை மீறியதன் காரணமாக, அக்குழந்தை ஊனமாக, இயல்பான நிலைக்கு மாறாக (abnormal) அல்லது ஆரோக்கியமற்று பிறந்தால் அவருக்கெதிராக வழக்கு தொடரப்படலாம் என்பதைக் குறிப்பிடுகிறது. இந்தியாவில் இப்பொருள் தொடர்பான சட்டம் ஏதுமில்லாததால், இந்திய நீதிமன்றங்கள் மேற்குறிப்பிட்ட ஆங்கிலச் சட்டத்தை வழிகாட்டியாகக் கொள்கின்றன. இந்திய உச்சநீதிமன்றம் **Union Carbide Corpn. Vs Union of India, AIR 1992 SC 248.,** என்ற வழக்கில், போபால் விஷவாயுக் கசிவின்போது கருவுற்றிருந்த பெண்ணுக்கு, அந்நிகழ்விற்குப் பின்னர் பெண் குழந்தை பிறந்தது. நான்கு மாதத்திற்குப்பின் இறந்துபோன அக்குழந்தைக்கு விஷவாயுத் தாக்குதலின் அறிகுறி இருந்தது தெரியவந்தது. தாய் கருவுற்றிருந்தபோது சுவாசித்த விஷவாயுவே இதற்கு காரணமாகும். உச்சநீதிமன்றம் ரூபாய் ஒன்றரை இலட்சம் இழப்பீடு வழங்குமாறு தீர்ப்பளித்தது.

அலகு - IV

பணித்தலைவர்கள் மற்றும் பணியாளர்கள்
Masters and Servants

PART - A/B

23. பகரப்பொறுப்பை நியாயப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய அனைத்து காரணங்களையும் விளக்குக. (Explain all the grounds used for justification of the rule vicarious liability) - Nov-2016.

✦ "பொதுவாக ஒருவர் தாம் செய்யும் செயல்களுக்கு மட்டுமே பொறுப்பாளியாவார். ஆனால் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் மற்றவர்களின் செயல்களுக்காக சட்டம் அவர்மீது குற்றமற்றவராக இருப்பினும் பகரப் பொறுப்பினை சுமத்துகிறது". இக்கூற்றினை விளக்குக. ("In general a person is responsible only for his acts, but there are exceptional cases in which law imposes on him vicarious liability for acts of others however blameless himself". - Explain the statement) - Nov-2013.

SN - 34 பிறர்வழி செய்தலும் தானே செய்ததாகும் (அல்லது) பிறர்வழி வினையும் தன்வினையாகும் / Qui facit per allium facit per se., Nov-2015, Nov-2014 (v), May-2013.

விடைச்சுருக்கம்: (அ) பகரப் பொறுப்பு - பொருள் - (ஆ) பகரப் பொறுப்பு நிலையை நியாயப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய காரணங்கள் - ஆ (i) பகரப் பொறுப்பு நிலைக் கொள்கைகளின் அடிப்படையில் நியாயப்படுத்தல் - ஆ (ii) பிறக் காரணங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தல்.

(அ) பகரப் பொறுப்பு - பொருள் (Vicarious liability - Meaning):

'A' என்பவர், 'B' என்பவரின் நடத்தை அல்லது செயல்களுக்காக 'C' என்பவருக்கு பொறுப்பாகும் நிலையே பகரப்பொறுப்பு என அழைக்கப்படுகிறது. பொதுவாக ஒருவர் செய்யும் தவறான செயல்களுக்கு அவரே பொறுப்பாவார். 'இதனையே தவறு அதனைச் செய்தவரையே கட்டுப்படுத்தும்' ('culpatenet suos auotore' - i.e., faults binds its own author) எனும் விதி குறிப்பிடுகிறது. இருப்பினும் தீங்கியல் சட்டம், சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் மற்றவர் புரியும் தவறுகளுக்கு ஒருவரின்மீது பொறுப்பு நிலையை சுமத்துகிறது. இதுவே பகரப்பொறுப்பு எனப்படுவதாகும். இங்கு தீங்கு புரிந்தவருக்கும், அத்தீங்கிற்கு பொறுப்பாகும் மற்றொரு நபருக்கும் இடையேயான ஓர் சட்டஉறவு

பகரப்பொறுப்புக்கு அடிப்படையாக அமைகிறது. இத்தகைய உறவு எசமான் - வேலையாள் (Master-Servant), பணித்தலைவர் - பணியாள் (Employer-Servant), முதல்வர் - முகவர் (Principal - Agent), வாணிபக் கூட்டாளிகள் (Partners) போன்ற உறவுமுறையிலானதாக இருக்கலாம். ஏனெனில் பகரப்பொறுப்பு இத்தகைய உறவுகளின் அடிப்படையிலேயே எழுகிறது. 'Vicar' என்றச் சொல், மற்றொருவரின் பணியை மேற்கொள்பவரை அதாவது 'பதிலாளை' (substitute) குறிக்கும். எனவே vicarious liability என்பது ஒரு நபர் (எசமான் அல்லது பணித்தலைவர் அல்லது முதல்வர்) மற்றொருவரின் (வேலையாள் அல்லது பணியாள் அல்லது முகவர்) தவறான செயலுக்கு பொறுப்பாவதைக் குறிக்கும். நீதிபதி ஹோல்ட் (Holt, J), **Hern Vs Nichols, (1700) 1 Salk 289.,** என்ற வழக்கில் வேலையாளின் தவறான செயலால் எவரேனும் ஒருவர் கண்டிப்பாக இழப்பிற்கு ஆளாக நேரிடுவதை நோக்கும்போது, அத்தகைய முன்பின் அறியாதவரைவிட அதாவது, பாதிக்கப்பட்டவரைவிட, வேலையாளின்மீது நம்பிக்கை வைத்து பணியமர்த்தியவரே பொறுப்பாக வேண்டும் என்று பகரப் பொறுப்பை ஏற்கத்தக்கவகையில் நியாயப்படுத்தினார். பகரப்பொறுப்பு நிலை என்பது, பணியாளர் மற்றும் பணித்தலைவரை கூட்டாகவும் தனித்தனியாகவும் (jointly and severally) பொறுப்பு நிலைக்கு உட்படுத்துவதாகும்.

(ஆ) பகரப் பொறுப்பு நிலையை நியாயப்படுத்த பயன்படுத்தக்கூடிய காரணங்கள் (The grounds used for justification of the rule of vicarious liability):

பகரப் பொறுப்புநிலை விதியை நியாயப்படுத்துவதற்கான காரணங்களை பின்வரும் இருதலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்:

(1) பகரப்பொறுப்பு நிலைக் கொள்கைகளின் அடிப்படையிலான நியாயப்படுத்தல்; மற்றும்;

(2) பிறக் காரணங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தல்.

ஆ(1) பகரப் பொறுப்புநிலைக் கொள்கைகளின் அடிப்படையில் நியாயப்படுத்தல் (Justification on the principles of vicarious liability): பகரப்பொறுப்பு நிலையை பின்வரும் இரு முக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் நியாயப்படுத்த முடியும்.

ஆ(1) (a) 'மேலவர் பொறுப்பாகுக' (Respondent Superior): 'மேலவர் பொறுப்பாகுக' என்பது முதல்வர் தன்னுடைய முகவரின் செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் 'Let the principle be liable' என்கிற விதியின் அடிப்படையில் உருவானதாகும். இவ்விதி, **Lickbarrow Vs. Manson, (1794) 5TR 583.,** என்ற வழக்கில் நீதிபதி அஷ்ஹர்ஸ்ட் (Ashhurst, J)-ன் பின்வரும் கருத்தில் இருந்து வெளிப்பட்டது:

... "எப்பொழுதெல்லாம், ஒன்று அல்லது இரண்டு அப்பாவிகள் மூன்றாம் நபரின் செயல்களால் பாதிக்கப்படுகிறார்களோ, அப்பொழுதெல்லாம்,

இழப்பை ஏற்படுத்திய அத்தகைய நபருக்கு அதிகாரமளித்த நபரே கண்டிப்பாக அதனை (இழப்பை) அனுபவிக்க வேண்டும்".

Bush Vs. Steinman, (1799) 1 B&P 404., என்ற வழக்கில் மேற்குறிப்பிட்ட கொள்கையை பொருந்தச் செய்த நீதிமன்றம், குறிப்பிட்ட வேலையை செய்வதற்காக ஒரு நபரை பணியமர்த்தியவர், அந்நபர் அக்குறிப்பிட்ட பணியைச் செய்யும்போது புரியும் எந்தவொரு தீங்கிற்கும் பொறுப்பாகுவார் என்பதைக் குறிப்பிட்டது. மேற்குறிப்பிட்டவாறு உருவாக்கப்பட்ட இக்கொள்கையை **Jones & Co. Vs Warring and Gillow, [1926] A.C. 670.,** என்ற வழக்கில், நீதிப்பிரபு கேவ் (Cave), தன்னுடைய தீர்ப்பில் ஏற்பு செய்தார்.

ஆங்கில நீதிமன்றங்கள் 'மேலவர் பொறுப்பாகுக' என்னும் கொள்கையை விரிவுபடுத்தும் எண்ணம் கொண்டிருந்தன. எனவே பணிவழங்குநரை பொறுப்புநிலைக்கு உட்படுத்த, உண்மையில் அவர் அத்தகைய அதிகாரம் அளிக்காமல் இருந்திருந்தாலும் அல்லது பணியாளரின் செயல் அல்லது கவனமின்மை பற்றி அறியாமல் இருந்திருந்தாலும்கூட அச்செயல் பணியாளரின் பணியின்போது செய்யப்பட்டிருந்தால், பணி வழங்குநரின் உட்கிடையான கட்டளையின் (implied command) பேரில் செய்யப்பட்டதாக நீதிமன்றங்கள் குறிப்பிட்டன. காலப்போக்கில், பணிவழங்குநரின் உட்கிடையான கட்டளை, 'குறிப்பிட்ட கட்டளை' (particular command) என்பதாகியது. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 'பணியின் போதான' (Course of employment) என்ற கொள்கை தோன்றலாயிற்று. இக்கொள்கை பணியாளர்களாக சட்டம் குறிப்பிடுவோரின் தவறுகளுக்கு எல்லாம் பணிவழங்குநரை பொறுப்புநிலைக்கு உட்படுத்தியதால், பணிவழங்குநரின் பொறுப்புநிலையை விரிவடையச் செய்தது.

ஆ(1) (b) பிறர் வழிச் செய்தலும் தானே செய்ததாகும் (Qui facit per allium facit per se): இம் முதுமொழி, 'எவரொருவர் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்கு மற்றொருவரை பணியமர்த்துகிறாரோ, அச்செயலை அவரே செய்தவராவார்' ('he who employs another to do something, does it himself') என்பதை விளக்குகிறது. இக்கோட்பாட்டின் வளர்ச்சியை ஆராய்கையில், பிறவற்றை ஒப்பிடுகையில் இது ஆங்கிலச் சட்டத்தில் அண்மைக்காலத்தில் தோன்றிய ஒன்று எனக்கூறலாம். இது பணிவழங்குநரின் தொழிலில் அல்லது தொழில் தொடர்பாக பணியாளர்களால் செய்யப்படும் அனைத்து செயல்களும், பணி வழங்குநரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின்பேரில் செய்யப்பட்டது எனும் சட்ட அனுமானத்திலிருந்து (legal presumption) தோன்றியதாகும்.

செல்ம்ஸ்ஃபோர்டு பிரபு (Lord Chelmsford) குறிப்பிட்டுள்ளவாறு, பணிவழங்குநரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாள், பணி வழங்குநரின் பணியைச் செய்யும்போது கவனமின்மையால் அல்லது திறமைக்குறைவினால் மூன்றாம் நபருக்கு ஏற்படுத்தும் எந்தவொரு தீங்கு அல்லது இழப்பிற்கும் பணிவழங்குநரே பொறுப்பாவார் என்பது சட்டத்தில் நீண்ட காலத்திற்கு முன்பே

நன்கு நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. இதற்கு காரணம், பணியாள் தனது பணியின்போது செய்யும் ஒவ்வொரு செயலும் தனது பணிவழங்குநரின் ஆணையினால் செய்யப்பட்டதாகவும் மற்றும் அது பணிவழங்குநரின் சொந்தச் செயலால் விளைந்ததாகவும் கருதப்படுவதாகும்.

Morgans Vs Launchburry & Others., (1972) All ER 606., என்ற வழக்கில், பிரபுக்கள் சபையின் விஸ்கவுண்ட் டில்ஹர்ன் பிரபு (Lord Viscount Dilherne), என்னுடைய பார்வையில் 'பிறர்வழிச் செய்தலும் தானே செய்ததாகும்' எனும் சொற்றொடர் மிகச் சரியாக பகரப்பொறுப்பு கொள்கையின் அடிப்படையை வெளிப்படுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்முதுமொழி, கூட்டாண்மையர்களுக்கும் பொருந்தும். ஒவ்வொரு கூட்டாண்மையரும். வணிகத்தின் மேலாண்மையில் உள்ள மற்றொரு கூட்டாண்மையரின் தவறினால் ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பாவார்கள். மேலும் ஒரு ஒப்பந்தம், முதல்வரினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் மூலமாக நிறைவேற்றப்பட்டிருந்தால், அதன் மீறுகைக்காக வழக்கிடவும், வழக்கிடப்படுவதற்குமான (to sue or be sued) சரியான தரப்பு முதல்வரே ஆவார். ஏனெனில் முகவர் என்பவர் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கான ஓர் கருவியாக இருப்பவர் மட்டுமே ஆவார்.

ஆ(2) பிறக் காரணங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தல் (Justification on other grounds): பகரப் பொறுப்பு நிலைக்கோட்பாடு பின்வரும் காரணங்களின் அடிப்படையிலும் நியாயப்படுத்தப்படுகிறது:

(a) சூழ்நிலை அவசியம் மற்றும் பொதுநலக் கொள்கை (Expediency and Public Policy): அண்மைக்காலங்களில், பகரப் பொறுப்பு நிலைக் கோட்பாடு, அதனுள் பொதிந்துள்ள சூழ்நிலை அவசியம் மற்றும் பொதுநலக் கொள்கையின் கருத்துருவினால் (idea) அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. பொது ஆதாயத்தை நியாயமானமுறையில் பகிர்ந்தளிப்பதற்கு ஓர் பலனுள்ள வழியாக பகரப்பொறுப்புநிலை உதவுகிறது. இது தொடர்பாக சட்ட அறிஞர் பொல்லாக், "எனது வேலையாட்கள் அல்லது முகவர்களின் தவறுகளுக்கு நான் பொறுப்பாவது, அவர் என்னால் அதிகாரம் அளிக்கப்பட்டவர் என்பதாலோ அல்லது தனிப்பட்ட முறையில் என்னை பிரதிநிதித்துவப்படுத்துவதாலோ அல்ல; மாறாக, அவர் என்னுடைய விவகாரங்களை கையாள்வதாலும் மற்றும் என்னுடைய விவகாரங்கள் பிறரின் பாதுகாப்பிற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு நடத்தப்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்கு நான் கட்டுப்பட்டுள்ளதாலும் நான் பொறுப்பாகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

(b) சமுதாய வசதி மற்றும் நீதி (Social convenience and justice): பியர் பிரபு (Lord Piere), **Imperial Chemical Industries Ltd Vs Shatwell, (1965) AC 656.,** என்ற வழக்கில் 'பகரப்பொறுப்பு கோட்பாடு எந்தவொரு தெளிவான காரண அடிப்படையிலான அல்லது சட்டக் கொள்கையினின்று வளர்ச்சியடையவில்லை மாறாக, சமுதாய வசதி மற்றும்

முரட்டுத்தனமான நீதி (social convenience and rough justice) என்பதனின்று வளர்ச்சியடைந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

(c) சமுதாயக் கடமை (Social duty): ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய விவகாரங்களை தாமாகவோ அல்லது முகவர் அல்லது வேலையாளின் மூலமாகவோ மேலாண்மை செய்யும்போது, பிறருக்கு ஊறு ஏற்படுத்தாமல் அதனை செய்ய வேண்டும்; இல்லையேல், அதனால் ஏற்படும் இழப்பிற்கு கண்டிப்பாக அவரே பொறுப்பேற்க வேண்டும் என்கிற சமுதாயக்கடமையின் அடிப்படையில் அமைந்த சிறந்த கொள்கையே பகரப்பொறுப்பு கோட்பாடாகும்" என்று மசாசூஸெட்ஸ் உச்சநீதிமன்ற நீதிபதி ஷா (Chief Justice Shaw of the Massachusetts Supreme Court) **Farewell Vs Boston and Worcester Rly. Co. (1842) 4 Met Calf 49.,** என்ற வழக்கில் கூறியுள்ளார்.

(d) தகைமை நெறி (Equity): புரூஹம் பிரபு (Lord Brougham), **Duncan Vs Finlater, (1839) 6 Cl. & F. 894.,** என்ற வழக்கில், பகரப் பொறுப்பு கோட்பாடு தகைமை நெறியின் அடிப்படையில் அமைந்தது என்பதை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பணியாள் என்னுடைய வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றுவதோடு அல்லாமல் என்னுடைய ஆதாயத்திற்காகவும் பணியாற்றுவதால், அப்பணியின் போதான விளைவுகளுக்கும் நான் பொறுப்பேற்க வேண்டும்: இதே கருத்தை நீதிப்பிரபு டென்னிங் (Denning L.J) **Broom Vs. Morgan (1953) 1 QB 597.,** என்ற வழக்கில் மீண்டும் குறிப்பிட்டுள்ளார்; அதாவது பணியாள் கவனமாக வேலையை செய்து முடித்தால் ஆதாயம் பெறும் பணி வழங்குநர், அவர் கவனமின்மையால் செய்யப்பட்டதற்கும் கண்டிப்பாக பொறுப்பேற்க வேண்டும்.

பொதுவாக, பணியாளரால் ஆதாயம் பெறும் பணிவழங்குநர், பணியாளர் பணியின்போது செய்யும் தவறுகளுக்கும் பொறுப்பேற்பது நியாயத்தின்பாற்பட்டதாகும். ஏனெனில்;

(i) செயலை முதலில் தொடங்குபவர் பணி வழங்குநரே, அதாவது, தன் வேலைக்காக பணியாளரை தேர்வு செய்கிறார். ஒருவேளை அவர் சரியான நபரை தேர்ந்தெடுத்திருப்பின் தவறு நிகழாமல் இருந்திருக்கலாம்;

(ii) பணியாளர் பணி செய்யும் முறையை பணி வழங்குநரே தீர்மானிக்கிறார்;

(iii) பணியாளர் இழப்பீடு செலுத்தும் பொருளாதாரத் தகுதியை பெற்றிருக்கவில்லை.

(iv) பணி வழங்குநர், தனது மேம்பட்ட பொருளாதார வசதியின் காரணமாக இழப்பீடு வழங்குவது என்பது அவருக்கு சிரமமாக இருக்காது. குறிப்பாக காப்பீடு (insurance) போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை

எளிதில் மேற்கொள்ள முடியும். இது மட்டுமின்றி, செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப, தனது உற்பத்திப் பொருள் அல்லது வழங்கும் சேவையின் விலையைக் கூட்டி, அதனை சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

(v) இறுதியாக, பாதிக்கப்படுபவருக்கு கணிசமான இழப்பீட்டுத்தொகை விரைவில் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

24. பகரப்பொறுப்பின் மூலக்கூறுகளை கூறி விளக்குக. (State and explain the essentials of vicarious liability) - May-2018

SN - 35 பணியமர்த்தியவரின் பொறுப்புநிலை / Employer's liability - Nov-2017.

விடைச்சுருக்கம்: (அ) பகரப் பொறுப்பு - (ஆ) பகரப் பொறுப்பின் மூலக்கூறுகள்

(அ) பகரப் பொறுப்பு - பொருள் (Vicarious liability):

(முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

(ஆ) பகரப்பொறுப்பின் மூலக்கூறுகள் (Essentials of Vicarious liability):

பகரப்பொறுப்பு கோட்பாட்டின் அடிப்படையில், பிரதிவாதிக்கு (பணித்தலைவர்) எதிராக இழப்பீடு கோரும் வாதி (பணியாளரின் தீங்கினால் பாதிக்கப்பட்டவர்), தன்னுடைய வழக்கில் வெற்றி பெறுவதற்கு இரண்டு முக்கியக்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும். முதலாவதாக, உண்மையில் தவறிழைத்த நபருக்கும் பிரதிவாதிக்கும் இடையே பணித்தலைவர் மற்றும் பணியாள் உறவு இருந்தது. இரண்டாவதாக, பணியாள் செய்த தவறு, பணித்தலைவரின் பணியைச் செய்யும்போது புரியப்பட்டது. இவ்விரண்டு கூறுகளே பகரப்பொறுப்பின் மூலக்கூறுகளாகும். இந்த இரண்டு கூறுகளையும் பின்வருமாறு காண்போம்.

ஆ(1) பணியாளர் என்பவர் யார்? (Who is servant): பணியாள் என்பவர் தனது பணித்தலைவரின் நேரடியான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின்கீழ் பணிபுரிபவராவார். பணியின்போது பணித்தலைவர் அளித்துள்ள நியாயமான ஆணைகளைப் பின்பற்ற பணியாளர் கட்டுப்பட்டுள்ளார். பணித்தலைவரால் பணியில் அமர்த்தப்பட்டு, பணித்தலைவரின் விவகாரங்கள் தொடர்பாக சிலக்குறிப்பிட்ட பணிகளைச் செய்பவரே பணியாள் ஆவார். பணியாளருக்கும் தன்விருப்ப ஒப்பந்ததாரருக்கும் (independent contractor) இடையே வேறுபாடு உள்ளது. பணியாள் மற்றும் தன்விருப்ப ஒப்பந்தகாரர் ஆகிய இருவரும் மற்றொருவரின் பணியை செய்வதற்காக நியமிக்கப்படுபவர்களே. ஆனால் பணியாள், பணித்தலைவரின் நேரடி கட்டுப்பாடு (control), வழிகாட்டல் (direction) மற்றும் பணித்தலைவர் குறிப்பிடும் முறையின் (manner) கீழ் பணிபுரிபவராவார். ஆனால் தன்விருப்ப

ஒப்பந்ததாரர் பணித்தலைவரின் கட்டுப்பாடு அல்லது குறுக்கீடின்றி பணிபுரிபவராவார். பணித்தலைவர் பணியாளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் பணி ஒப்பந்தமாகும் (contract of employment). ஆனால் தன்விருப்ப ஒப்பந்ததாரருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் பணிக்கான ஒப்பந்தமாகும் (contract for employment). பணித்தலைவர், பணியாளர் பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பொறுப்பாவார். ஆனால் தன்விருப்ப ஒப்பந்ததாரர் பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பணித்தலைவர் பொறுப்பாகமாட்டார் என்பது ஓர் பொதுவான விதியாகும். எனவே பணியாளர், பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பணித்தலைவரை பொறுப்புநிலைக்கு உட்படுத்த, பணித்தலைவர் மற்றும் பணியாளருக்கு இடையேயான உறவை மெய்ப்பிக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. இது தொடர்பாக தொடக்கத்திலிருந்தே நீதிமன்றங்கள் பின்வரும் சோதனைகளை தீர்ப்புரைகளில் குறிப்பிட்டு வந்துள்ளன.

ஆ(1) (a) மரபுவழிக் கருத்து அல்லது பணிக்கட்டுப்பாட்டுச் சோதனை (Traditional view or control test): பணித்தலைவர் மற்றும் பணியாளருக்கு இடையேயான உறவை தீர்மானிப்பதற்கு, பணியாளர் என்னச் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்துவதுடன் மட்டுமின்றி அதனை எந்த முறையில் செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பணித்தலைவர் கொண்டுள்ளாரா என்பதை நோக்க வேண்டும். இத்தகைய அதிகாரத்தை பணித்தலைவர் கொண்டிருப்பின் அவர்களுக்கு இடையே பணித்தலைவர் - பணியாளர் உறவுமுறை உள்ளது **[Performing Right Society Ltd Vs Mitchell, (1924) 1 KB 762].**

ஆ(1) (b) ஒருங்கமைவு சோதனை (Integration test): இது, நிறுவனத்துவ சோதனை (organisation test) என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. இம்முறையில், பணியாளரால் செய்யப்பட்ட பணி, அப்பணியாளரின் சேவையைப் பெற்ற நபரின் வணிக நடவடிக்கையின் ஓர் உள்ளடங்கிய பகுதியா அல்லது வெறுமனே அதற்கு உடந்தையாக இருப்பவரா என்பதை நீதிமன்றம் ஆய்வு செய்யும். இதனை வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், பணியாளர்கள் நிறுவனத்தில் எவ்வாறு ஒருங்கிணைந்துள்ளார்கள் என்பதை நீதிமன்றம் ஆய்வு செய்து, ஒருங்கிணைவில் பணியாளரின் பங்கின் அளவிற்கு, அவர் ஓர் பணியாளர் என்பதற்கான வாய்ப்பின் அளவு இருக்கும்.

Stevenson, Jordan & Harrisons Ltd Vs. MacDonald and Evans, (1952) 1 TLR 101., என்ற வழக்கில், பணியாளர் செய்யும் செயலின்மீது, பணித்தலைவர் முழுமையான கட்டுப்பாடு கொண்டிராமல் இருந்தாலும்கூட, ஓர் நபர், நிறுவனத்தில் அல்லது வணிகத்தில் உள்ள மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து இருப்பின் அவர் ஓர் பணியாளர் ஆவார் என்று டென்னிங் பிரபு இவ்வழக்கில் முடிவு செய்தார்.

Whittaker Vs. Minister of Pensions and National Insurance, (1966) 3 All ER 531., என்ற வழக்கில் 'சர்க்கஸ்'ல் உயரத்தில் இரண்டு கயிறுகளால் தொங்கவிடப்பட்டிருக்கும் குறுக்கு கட்டைகளில் உடற்பயிற்சி

வித்தைகள் செய்யும் பெண் (trapeze artist), நிகழ்ச்சி அறிவிப்பாளர் பணியையும் செய்து வந்தார். அவர் உயரத்தில் உடற்பயிற்சி வித்தைகள் செய்யும்போது தவறி விழுந்ததால் ஏற்பட்ட பலத்த காயங்களுக்காக தொழிற்தீங்கு ஆதாயம் (Industry injury benefit) கோரினார். உடற்பயிற்சி வித்தைகள் செய்யும்போது, 'சர்க்கஸ்' நிருவாகம் அப்பெண்ணின்மீது எவ்வித கட்டுப்பாடுகளும் கொண்டிராமல் இருந்தாலும்கூட, அது மற்றவர்களின் கடமைகளுடன் ஒருங்கிணைந்து உள்ளதால் அவர் 'சர்க்கஸ்' நிறுவனத்தின் பணியாளர் ஆவார் என்றும் எனவே இழப்பீடு பெறத்தகுதி கொண்டுள்ளார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(1) (c) பல்வகைச் சோதனைகள் (Multiple test): இது பொருளாதார மெய்நிலைச் சோதனை (economic reality test) என்றும் அழைக்கப்படுகிறது. தற்காலங்களில், பணித்தலைவர் மற்றும் பணியாளருக்கு இடையேயான உறவினைத் தீர்மானிப்பதற்கு, பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டிய சூழ்நிலைகளில் இச்சோதனைமுறை பொருந்தச் செய்யப்படுகிறது. இத்தகைய சோதனைகளில், ஊதியம் பெறும்முறை, ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராக இருத்தல், விடுமுறை ஊதியம், உடல்நலக் குறைவிற்கான அல்லது வேலைக்கு வராமைக்கான ஊதியம், போட்டி நிறுவனங்களுக்காக வேலை செய்வதன்மீதான தடை, ஒழுங்குமுறை விதிகளின்கீழ் பணித்தலைவரால் கட்டுப்படுத்தப்படல், பணியில் அமர்த்தவும், பணியிலிருந்து நீக்குவதற்குமான பணித்தலைவரின் அதிகாரம், வீட்டில் அல்லாமல் பணித்தலைவரின் வளாகத்தில் (premises) பணிசெய்தல் உள்ளிட்டவைகள் அடங்கும்.

Ready Mixed Concrete Vs Minister of Pensions and National Insurance., (1968) 1 All ER 433., என்ற வழக்கு பல்வகைச் சோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் Ready Mixed நிறுவனம், ஒவ்வொரு ஓட்டுநரும் கண்டிப்பாக தங்களுக்கான சொந்த வண்டியை வாங்க வேண்டும் மற்றும் அவ்வண்டியில் நிறுவனத்திற்கான வண்ணப்பூச்சு செய்யப்பட வேண்டும் என்றும், ஓட்டுநர்கள் நிறுவனத்தின் சீருடையை கண்டிப்பாக அணிவதுடன், நிறுவனத்தின் வேலைக்கு தேவைப்படும்போது தயார் நிலையில் வண்டியுடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்திருந்தது. ஓட்டுநர்களின் சம்பளம் நிறுவனத்திற்கான வண்டி ஓட்டப்பட்ட தொலைவிற்கு ஒரு மைலுக்கு (mile) என்று நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் செலுத்தப்பட்டது. நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட பல்வகைச் சோதனைகளைக் குறிப்பிட்டு வாகன ஓட்டுநர்கள் நிறுவனத்தின் பணியாளர்கள் அல்ல மாறாக, அவர்கள் தங்களின் சொந்த நிதிவருநிலை அபாயத்தை ஏற்று (financial risk) செயல்படுவதால் தன்விருப்ப ஒப்பந்ததாரர்களே என்று தீர்ப்பளித்தது.

ஆ(2) பணியாளர் செய்த தவறு, பணியின்போது செய்யப்பட்டது (The tort committed by the servant in the course of the employment (அல்லது) பணியமர்த்தியவரின் பொறுப்புநிலை எழும் சூழல்கள் (Circumstances in which an employer's liability arises): பகரப்

பொறுப்பின் இரண்டாவது மூலக்கூறு, பணியாளர் செய்த தவறு, பணித்தலைவரின் பணியைச் செய்யும்போது புரியப்பட்டது என்பதாகும். பணித்தலைவரின் பொறுப்புநிலை பின்வரும் சூழல்களில் எழுகிறது.

(1) பணியாளர்கள் பணியின்போது செய்த செயல்கள் அனைத்திற்கும் பணித்தலைவர் பொறுப்பாவார். ஓர் செயல் பின்வரும் இரு சூழ்நிலைகளில் பணியின்போது செய்யப்பட்டதாகக் கருதப்படும்;

(a) பணித்தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் தவறான செயல்; அல்லது;

(b) பணித்தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தவறான செயல் மற்றும் அதிகாரம் அளிக்கப்படாதமுறையில் (wrongful and unauthorised manner) செய்யப்பட்டது. ஓர் குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு பணித்தலைவர் அதிகாரம் அளித்திருந்தாலும் அல்லது அளிக்காமல் இருந்தாலும் அல்லது அச்செயல் பணித்தலைவரின் ஆதாயத்திற்காக செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அவ்வாறு இல்லாமல் இருந்தாலும் அல்லது அச்செயல் கவனமின்மையுடன் அல்லது வேண்டுமென்றே செய்திருந்தாலும்கூட, அச்செயல் பணியாளரின் பணி எல்லைக்கு உட்பட்டதாக (scope of the servant's employment) இருப்பின் பணித்தலைவர் பொறுப்பாவார். இருப்பினும், ஓர் செயல் பணியாளரின் பணி எல்லையைத் தாண்டியதாக இருப்பின், அச்செயல் பணித்தலைவரால் வெளிப்படையாக அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பின் அல்லது அச்செயல் செய்யப்பட்ட பின்பு, பணித்தலைவரால் பின்னேற்பு செய்யப்பட்டாலேயொழிய (ratified), பணித்தலைவர் பொறுப்பாக மாட்டார்.

(2) பணியாளர் பணியின்போது செய்யும் மோசடிச் செயலுக்கு, அச்செயல் பணித்தலைவரின் ஆதாயத்திற்காக என்றிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட பணித்தலைவர் பொறுப்பாவார்.

(3) பணியாளர் பணியின்போது கவனமின்மையால் செய்த தவறுகளுக்கும் பணித்தலைவர் பொறுப்பாவார்.

(4) பணியாளர் பணியின்போது, தன்னுடைய கடமையை செய்யாமல், அத்தகைய கடமையை கவனமின்றி பிறர் செய்வதற்கு அதிகாரமளிப்பின், பணியாளரின் கவனமின்மைக்காக பணித்தலைவர் பொறுப்பாகுவார்.

(5) பணியாளர் பணியின்போது கருதியே அல்லது அறிந்திருந்தே செய்யப்படும் தவறுகளுக்கு பணித்தலைவர் பொறுப்பாவார்.

பணியாளரின் மேற்குறிப்பிட்ட மோசடியானச் செயல், கவனமின்மை, தவறு, தன்னுடைய கடமையை பிறருக்கு ஒப்படைவு செய்தல் (delegation) மற்றும் அறிந்தே செய்யப்படும் தவறான செயல் போன்றவற்றிற்கு பணித்தலைவரை பொறுப்பாக்குவதற்கு அடிப்படையான காரணம், இத்தகைய செயல்கள், பணியாளரின் பணியின்போதான மற்றும் பணி எல்லைக்குட்பட்ட செயல்கள் என்பதாகும்.

25. தீங்கியல் சட்டத்தில் தனது பணியாள்களது செயல்களுக்கு பணிவழங்குநரின் பொறுப்படைவை விளக்குக. (Discuss the liability of master for the acts of his servants in Torts) - Nov-2018.

விடைச்சுருக்கம்: (அ) பணியாளர்களின் தவறான செயலுக்கு பணி வழங்குநர் பொறுப்பாகும் சூழ்நிலைகள் - (ஆ) பணியாளர்களின் தவறான செயலுக்கு பணி வழங்குநர் பொறுப்பாகாத சூழ்நிலைகள்

பொதுவாக, தீங்கியல் சட்டத்தில், பணியாளர்கள் பணியின்போது செய்யப்படும் செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகுவதே பகரப்பொறுப்பு கோட்பாடு எனப்படுகிறது. இருப்பினும் ஒட்டுமொத்தமாக பணியாளர்கள் பணியின்போது செய்யப்படும் அனைத்து செயல்களுக்கும் பணிவழங்குநர் பொறுப்பாவார் என்று கூறிவிட முடியாது. பணியாளர் பணியின்போது செய்யும் சிலக்குறிப்பிட்ட செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார். எனவே இவ்வினாவிற்கு விடையளிக்கும் நோக்கத்திற்காக, பணியாளர்களது செயல்களுக்காக பணிவழங்குநர் கொண்டுள்ள பொறுப்புடைமையை கீழ்க்காணும் இரு தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்.

(அ) பணியாளர்களின் தவறான செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகாகும் சூழ்நிலைகள்;

(ஆ) பணியாளர்களின் தவறான செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகாத சூழ்நிலைகள்.

இனி மேற்குறிப்பிட்டுள்ளவைகள் பற்றி சுருக்கமாகக் காண்போம்.

(அ) பணியாளர்களின் தவறான செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகும் சூழ்நிலைகள் (Circumstances in which the master becomes liable for the wrongful acts of his servants): பணியாளர்கள் பணியின்போது செய்யும் பின்வரும் செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாவார்.

(1) ஓர் செயலின் இயல்பான விளைவுகள் (Natural consequence of an act): பணியாளரால் செய்யப்பட்ட தவறு, தனது பணிவழங்குநரின் குறிப்பிட்ட ஆணையை இயல்பான கவனத்துடன் செய்யப்பட்டிருந்து அதன் நேரடியான அல்லது இயல்பான விளைவுகளினால் ஏற்பட்டதாக இருக்கலாம். ஓர் தவறான செயல் பணிவழங்குநரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின்கீழ் செய்யப்படின், அதனால் ஏற்படும் எந்தவொரு தீங்கிற்கும் பணிவழங்குநரே பொறுப்பாவார். பணிவழங்குநர் தனது பணியாளரை, மற்றொரு நபரின் நிலத்தினுள் அத்துமீறி நுழைவதற்கு அல்லது மற்றொருவரின் வீட்டுக்கதவு முன்பு குப்பையைக் கொட்டி தொல்லை ஏற்படுத்துவதற்கு அதிகாரம் அளிப்பின், அவரே இழப்பீடு செலுத்தும் பொறுப்பிற்கு உள்ளாகுவார்.

Gregory Vs Piper, (1829) 9 B&C 591., என்ற வழக்கில் பிரதிவாதியும் வாதியும் அருகருகே வசிப்பவர்கள். அவர்களுக்கு இடையே வழிவசதி

உரிமை (right of way) தொடர்பான சச்சரவு இருந்தது. வாதி. வழித்தட வசதியை பயன்படுத்துவதை தடுப்பதற்காக, வாதியின் சுவற்றை தொடாதவாறு வழித்தடத்தில் குப்பையை கொட்டுமாறு பிரதிவாதி தன்னுடைய பணியாளருக்கு ஆணையிட்டிருந்தார். பணியாளும் கவனமுடன் அதனைச் செய்துவந்தார். ஆனால் குவிந்திருந்த குப்பை நாளடைவில் இறுகி, அதன் ஒருபகுதி சரிந்து ஒரு நாள் வாதியின் சுவற்றை தொட்டது. வாதி, பிரதிவாதிக்கு எதிராக அத்துமீறல் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், பணிவழங்குநரின் குறிப்பிட்ட ஆணையை ஓர் சமநிலை அறிவு பொருந்திய மனித கவனத்திற்கு ஏற்ப செய்யப்பட்ட செயலின் விளைவாகவே தவறு நேர்ந்தது என்றும் எனவே பிரதிவாதி பொறுப்பாவார் என்றும் தீர்ப்பளித்தது.

(2) பணியாளரின் கவனமின்மை (Negligence of servant): தவறு, பணியாளரின் கவனக்குறைவு அல்லது அவர் பணியமர்த்தப்பட்டிருந்த வேலை அல்லது வியாபாரம் தொடர்புடைய செயலை செய்யும்போது கவனமின்றி இருந்ததாலும் இருக்கலாம். சில நேரங்களில், பணியாளர் பணி வழங்குநரால் குறிப்பிடப்பட்ட கடமைகளை செய்யும்போது, தனது சொந்த வசதிக்காகவும் சில வேலைகளை செய்யலாம். எவ்வாறிருப்பினும் இத்தகைய செயல்கள் பணியின்போது செய்யப்படுவதால் இவைகளினால் ஏற்படும் தீங்குகளுக்கு பணிவழங்குநர் பொறுப்பாவார்.

Limpus Vs London General Omnibus & Co., (1862) 1 H&C 526., என்ற வழக்கில், பேருந்து நிறுவனத்தின் உரிமையாளர், தனது ஓட்டுநர்களுக்கு மற்ற பேருந்துகளுக்கு போட்டியாக ஓட்டுவதோ அல்லது வழிமறித்து ஓட்டுவதோ கூடாது எனும் அறிவுறுத்தல்களை காகிதத்தில் அச்சடித்துக் கொடுத்திருந்தார். இருப்பினும் அவருடைய ஓட்டுநர்களில் ஒருவர் தவறான முறையில் மற்றொரு பேருந்தை முந்திச் சென்றபோது விபத்து ஏற்பட்டது. நீதிமன்றம், ஓட்டுநர் பணியின்போது செய்த செயலுக்கு பேருந்து நிறுவன உரிமையாளர் பொறுப்பாவார் என்றும் காகிதத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருந்த தடை விதிக்கும் செயல்கள், செயலைச் செய்வதற்கான முறை (mode) மட்டுமே என்று தீர்ப்பளித்தது.

Century Insurance Co. Vs Northern Ireland Road Transport Board, (1942) AC 509., என்ற இவ்வழக்கில், பெட்ரோல் 'டேங்க்' லாரியின் ஓட்டுநரான 'A' என்பவர் 'B'-ன் பணியாளர் ஆவார். வண்டியின் 'டேங்க்'-ல் இருந்த பெட்ரோலை, பெட்ரோல் நிலையத்தின் நிலத்தடி தொட்டியில் (underground tank) நிரப்பிக் கொண்டிருந்தபோது, தீக்குச்சியால் 'சிகரெட்டை' பற்ற வைத்து அதனை அணைக்காமலேயே கீழே வீசி எறிந்ததால் தீப்பற்றியதன் காரணமாக 'C'-ன் சொத்திற்கு இழப்பு ஏற்பட்டது. நீதிமன்றம் 'A' கவனமற்ற முறையில் செயல்பட்டிருந்தாலும்கூட, அவர் பணியின்போது செய்திருப்பதால் 'B' பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

(3) பணியாளரின் தவறு (Mistake of servant): பணியாளரின் தவறு, சட்டப்படியான அதிகாரத்தை மீறி செய்யப்பட்டதாகவோ அல்லது சட்டப்படியான

அதிகாரத்தை தவறாக செயல்படுத்தியதாகவோ இருக்கலாம். ஆனால் இரண்டு நிகழ்மைகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும். முதலாவதாக, பணியாளர் உண்மையில் தனக்கு அதிகாரமளிக்கப்பட்ட செயலை பணிவழங்குநர் சார்பாக செய்வதற்கு எண்ணியிருந்ததை மெய்ப்பிக்க வேண்டும். இரண்டாவதாக, செய்யப்பட்ட செயல் முறையாக செய்யப்பட்டிருந்தால் அது சட்டப்படியானதாக இருந்திருக்கும்.

Bayley Vs Manchester, Sheffield and Lincolnshire Rly. (1873) LR8 CP 148., என்ற வழக்கில், பிரதிவாதியான ரயில்வே நிறுவனம், தனது காவலர்களில் ஒருவருக்கு, பயணிகள் வசதிக்காக, அவர்கள் சரியான ரயில் வண்டியில் ஏறுகிறார்களா என்பதை கண்காணிக்கும் பணியில் அமர்த்தியிருந்தது. வாதி சரியான ரயில் பெட்டியில் அமர்ந்திருந்தும், அவர் தவறான வண்டியில் ஏறிவிட்டதாக, காவலர் தவறாக எண்ணி அவரை பலவந்தமாக ரயில்பெட்டியிலிருந்து கீழே தள்ளியதில் வாதிக்கு காயமேற்பட்டது. நீதிமன்றம், காவலர் செய்யக்கூடாத கடமையை செய்திருந்தாலும், பணியின்போது செய்திருப்பதாலும் மற்றும் எவ்வித விருப்பு வெறுப்பின்றி பணியின்பொருட்டு செய்திருப்பதாலும் பிரதிவாதியான ரயில்வே நிறுவனம் பொறுப்பாகும் என்று தீர்ப்பளித்தது.

Poland Vs Parr & Sons, (1927) 1 KB 236., இவ்வழக்கில், சரக்கு லாரி ஓட்டுநர் தனது பணியை முடித்து வண்டியை ஒப்படைத்துவிட்டு வீட்டிற்குச் செல்லும்போது நியாயமான காரணத்தின் அடிப்படையில் சிறுவன் ஒருவன் தனது பணிவழங்குநரின் சொத்தை திருடுவதாக தவறாக சந்தேகித்து அறைந்ததில் சிறுவன் காயமுற்றான். நீதிமன்றம், லாரி ஓட்டுநரின் செயல் தவறுதலானதாகவும் மற்றும் அவர் பயன்படுத்திய பலம் (force) அதிகமானதாகவும், சிறுவனை அறைந்ததற்குப் பதிலாக தள்ளிவிட்டிருக்கலாம் என்றாலும்கூட, தனக்கு அளிக்கப்பட்டுள்ள செயலைச் செய்வதற்கு அவசியமான அதிகாரத்தை மட்டுமே மீறியுள்ளார். லாரி ஓட்டுநர் செயல்படுத்திய அதிகாரமீறல், பணிவழங்குநரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயல்களின் எல்லையில் இருந்து விலக்குவதற்கு போதுமானதாக இல்லை என்பதால் பணிவழங்குநர் பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

(4) பணியாளரின் வேண்டுமென்றே செய்யப்படும் தவறு (wilful wrong of servant): பணிவழங்குநர், பணியை ஓர் குறிப்பிட்ட முறையில் செய்ய வேண்டும் என்று வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அறிவுறுத்தியிருந்து, பணியாளர் அதனை வேண்டுமென்றே மீறியிருந்தாலும்கூட, பணிவழங்குநர் பொறுப்பாவார். பணியாளரின் ஏதேனுமொரு செயல், அவரின் அலட்சியமான நடத்தையை அறியக்கூடியதாக இருந்தாலும், பணிவழங்குநரின் நலனைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டிருந்தால் பணிவழங்குநர் பொறுப்புக்கு உள்ளாவார். சில நேரங்களில் பணியாளர் சிலக்குறிப்பிட்ட செயல்களை செய்வதற்கு பணிவழங்குநர் வெளிப்படையாக தடை விதித்திருந்தாலும் அத்தகைய தடையை மீறி செய்யப்படும் ஒவ்வொரு செயல்களும் பணி எல்லைக்கு

அப்பாற்பட்டது என்று பொருளாகாது. தடை விதித்திருப்பதை ஒரு எதிர்வாதமாக அனுமதித்தால், ஒவ்வொரு பணிவழங்குநரும், பணியாளர் தீங்கு ஏதும் புரியக்கூடாது எனத்தாம் வெளிப்படையாக தடை விதித்திருப்பதாக வாதிட்டு பொறுப்பு நிலையிலிருந்து தப்பிவிடுவர்.

Limpus Vs London General Omnibus & Co. (1856) 1 H&C 526., (பக்கம் 117-ல் காண்க).

Canadian Pacific Railway Co Vs. Lockhart, (1942) AC 591., என்ற வழக்கில், பிரதிவாதிகள் தங்களது பணியாளர்கள், நிறுவனத்தின் வியாபார நோக்கத்திற்காக காரை (car) பயன்படுத்தும்போது, காப்பீடு (insurance) செய்யப்படாத கார்களை ஓட்டக்கூடாது எனத் தடை விதித்திருந்தனர். இத்தகைய அறிவுறுத்தலை மீறி ஒரு பணியாள் நிறுவனத்தின் நோக்கத்திற்காக, கவனமின்றி காப்பீடு செய்யப்படாத காரை ஓட்டிச்சென்று வாதிக்கு காயம் ஏற்படுத்தினார். பிரதிவாதிகள் விதித்திருந்த தடை, பணியாளர்கள் தங்களின் பணியை செய்வதன் மீதான கட்டுப்பாடு அல்லது எந்தமுறையில் பணி செய்ய வேண்டும் என்பதை மட்டுமே குறிப்பிடுகிறது என்றும் அதன் மீறுகை, பணிவழங்குநர் மூன்றாம் நபருக்கு பொறுப்பேற்பதை விலக்கவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

(5) பணியாளரின் மோசடி (Fraud of servant): மோசடியாக செய்யப்பட்ட பணியாளர்களின் தவறான செயல்களுக்கும் பணி வழங்குநர் பொறுப்பாகுவார். நேர்மையாக செயல்படுவதற்காக பணியமர்த்திய பணியாளர் மோசடி செய்தாலும், பணிவழங்குநர் பொறுப்பாவார். மோசடி, பணியாளரின் சொந்த ஆதாயத்திற்காக செய்யப்பட்டது என்பது பொருட்படுத்தப்படமாட்டாது. இதன் பின்னணியில் உள்ள கொள்கை என்னவெனில், பணியாளரின் மோசடி காரணமாக, மற்றவர்களை தன்னுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மறைமுகமாக பணிவழங்குநர் அழைப்பு விடுப்பதாக கருதப்படுவதாகும். எனவே வெளிப்படையான அல்லது உட்கிடையான அழைப்பு இல்லாமல் இருப்பின், அச்செயல் பணியாளரின் தன்விருப்பச் செயலாகவும் மற்றும் அவரின் பணிஎல்லைக்கு அப்பாற்பட்டதாகவும் கருதப்படும்.

Barwick Vs Joint Stock Bank, (1866) LR 2 Ex 259., என்ற வழக்கில், கிளை மேலாளர், தனது கட்டுப்பாட்டின்கீழ் வியாபாரம் தொடர்பாக, வாதியிடம் மோசடியாக தரித்துக்கூறியதற்காக (fraudulent misrepresentation) பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் மோசடி தொடர்பான வழக்கிற்கும் பிற தவறுகள் தொடர்பான வழக்கிற்கும் இடையே அறிவார்ந்த வேறுபடுத்தல் (sensible distinction) செய்யமுடியாது, ஏனெனில் பணிவழங்குநரின் வெளிப்படையான ஆணை மெய்ப்பிக்கப்படாமல் இருந்தாலும்கூட, பணியாளர் தனது பணியின்போது புரியும் ஒவ்வொரு தவறுகளுக்கும் பணிவழங்குநர் பொறுப்பாவார் என்பது பொதுவான விதியாகும் என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

Lloyd Vs Grace Smith & Co., (1912) AC 716., என்ற வழக்கில் சட்ட ஆலோசனைகள் வழங்கும் வழக்குரைஞர்கள் நிறுவனம் (பிரதிவாதி), நீண்ட

அனுபவம் மற்றும் நற்புகழ் பெற்ற நிறுவனமாகும். வாதியான சாவித்திரி எனும் விதவைப் பெண்மணி, தனக்கு சொந்தமான இரு குடிசைகளின் இருந்து பெரும் வருமானம் திருப்தியளிக்காததால் ஆலோசனை பெறுவதற்காக பிரதிவாதிகள் நிறுவனத்திற்குச் சென்றார். அங்கு பிரதிவாதிகளின் வியாபாரம் தொடர்பான உரிமைமாற்று ஆவணங்களை வரைவு செய்யும் மேலாண் எழுத்தரை (managing clerk) சந்தித்தார். மேலாண் எழுத்தர் குடிசைகளை விற்றுவிடும்படி ஆலோசனை வழங்கியதோடு, அவற்றைச் செய்வதற்காக எளக்கூறி மோசடியாக தூண்டி சிலத்தாள்களில் வாதியின் கையொப்பத்தையும் பெற்றார். வாதி, தாள்களில் எழுதப்பட்டிருந்ததை படிக்கவில்லை. அதன் பின்னரே தான் கையெழுத்திட்ட தாள்கள், மேலாண் எழுத்தரின் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கொடை ஆவணங்கள் (gift deeds) என்பதை அறிந்தார். மேலாண் எழுத்தர் அச்சொத்துகளை தனது சொந்த ஆதாயத்திற்காக விற்றுவிட்டார். நீதிமன்றம், மேலாண் எழுத்தர் தனது முதல்வருக்கு (principle) தெரியாமல் முழுமையாக தனது தனிப்பட்ட சொந்த ஆதாயத்திற்காக செயல்பட்டுள்ளார் என்றும் இத்தகைய மோசடியை தனது பணியில் பணியின்போது செய்துள்ளார் என்றும் இருப்பினும் அவர் தனது வெளிப்படையான அல்லது வெளிப்படையாகத் தோன்றுகின்ற அதிகாரத்தின்பேரில் செய்துள்ளதால், பிரதிவாதிகள் நிறுவனம் எழுத்தரின் மோசடிக்கு பொறுப்பாகும் என்று தீர்ப்பளித்தது.

(6) பணியாளரின் குற்றச்செயல் (Criminal act of the Servant): பணி வழங்குநரின் பகரப்பொறுப்பு, பணியாளரின் செயல் தீங்கெண்ணத்துடன் அல்லது ஓர் குற்றமாக அமையும் செயலுக்கும்கூட நீட்டிக்கப்படும். குற்றவியல் நடைமுறைகளில் பகரப்பொறுப்பு என்று ஒன்று இல்லாமல் இருந்தாலும்கூட பணியாளர், பணியின்போது குற்றச்செயல் புரிந்தால் பணிவழங்குநர் உரிமையியல் நடவடிக்கையில் பொறுப்பாகுவார். இவ்விதி வேறுமாதிரியாக இருப்பின், பணிவழங்குநரின் பொறுப்புநிலை முறையற்ற விதத்தில் சுருக்கப்பட்டுவிடும். ஏனெனில் பல்வேறு தீங்கியல் செயல்களும்கூட குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பணியாளர்களால் புரியப்படும் திருட்டின் விளைவான பொருள்களின் இழப்பு, தாக்க முனைதல், அவதூறு உள்ளிட்டவற்றிற்கும் பணிவழங்குநர் பொறுப்பாவார்.

Uxbridge Building Society Vs. Polland, (1939) 2 All ER 443., என்ற வழக்கில், வழக்குரைஞரின் எழுத்தர் ஒரு கற்பனையான சொத்து அடமான ஆவணத்தை தயார் செய்து முன்பணமாக 500 பவுண்டுகளைப் பெற்றார். நீதிமன்றம் வழக்குரைஞர் பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

Roop Lal Vs Union of India, AIR 1972 J&K 22., என்ற வழக்கில், இராணுவ வீரர்கள், வாதிக்குச் சொந்தமான விறகுக் கட்டைகளை, குளிரை விரட்டவும் மற்றும் எரிபொருளுக்காகவும் இராணுவ வாகனங்களில் கொண்டு சென்றனர். வாதி, இந்திய அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், இராணுவ வீரர்கள் பணியின்போது செய்த செயலுக்கு இந்திய அரசு பொறுப்பாகும் என்று தீர்ப்பளித்தது.

(ஆ) பணியாளர்களின் தவறான செயல்களுக்கு பணிவழங்குர் பொறுப்பாகாத சூழ்நிலைகள் (Circumstances in which the master is not liable): (அடுத்துவரும் வினாவிற்கான விடையின குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க).

26. பணியாள் என்பதை வரையறு. பணியாளின் செயலுக்கு பணித்தலைவர் எப்பொழுது பொறுப்பாக மாட்டார் என்பதை விவாதிக்கவும். (Define a servant and discuss when the master would not be liable for the acts of his servant) - Nov-2014

விடைச்சுருக்கம்: (அ) பணியாள் - (ஆ) பணியாளின் செயலுக்கு பணித்தலைவர் பொறுப்பாகாத சூழ்நிலைகள்

(அ) பணியாளர் - வரையறை (Servant - Definition): (வினா எண் 24-க்கான விடையின் குறுந்தலைப்பு ஆ (1)-ல் காண்க. பக்கம் எண் 112)

(ஆ) பணியாளின் செயலுக்கு பணித்தலைவர் பொறுப்பாகாத சூழ்நிலைகள் (Circumstances under which the master is not liable for the act of his servant) அல்லது பகரப்பொறுப்பு நிலைக்கான எதிர்வாதங்கள் (Defences against vicarious liability):

சாதாரணமாக, பணியாள் பணியின்போது செய்யும் தவறான செயல்களுக்கு அல்லது தீங்குகளுக்கு பணிவழங்குநர் பொறுப்பாவார். இருப்பினும் பின்வரும் அரிதான சூழ்நிலைகளில், பணியாளர் பணியின்போது செய்யப்படும் தீங்குகளுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார். எனவே இவற்றினை பகரப்பொறுப்பு நிலைக்கு எதிரான எதிர்வாதங்களாகக் குறிப்பிடலாம்.

(1) வற்புறுத்தும் சூழ்நிலையின்கீழ் பணியமர்த்தப்படுதல் (Appointment under compulsion): பணிவழங்குநர், தேர்வு செய்வதற்கு வாய்ப்பற்ற, ஆனால் ஒரு குறிப்பிட்ட நபரை தேர்வு செய்தாக வேண்டிய வற்புறுத்தும் அல்லது அவசிய சூழ்நிலையில் அவரை பணி அமர்த்துவாராயின், அத்தகைய பணியாளரின் கவனமின்மை செயலுக்காக, அது பணியின்போதாக இருந்தாலும்கூட பொறுப்பாகமாட்டார். எ-டு: ஓர் விமான ஓட்டியை கட்டாயமாக பணியமர்த்த வேண்டியிருந்தால், அவ்விமான ஓட்டி பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பணி வழங்குநர் பொறுப்பாகமாட்டார். **[The Mercedes De Larrinaga (1904) at P 125].**

(2) பணி எல்லையைத் தாண்டிய செயல்கள் (Acts outside the scope of employment): பணியாள், பணி எல்லையைத் தாண்டி அல்லது பணி எல்லைக்கு அப்பாற்பட்டு செய்யப்படும் செயல்களுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார். ஒவ்வொரு பணியாளரும் தங்களின் பணியைச் செய்வதற்கு அவசியமாக தேவைப்படும் அதிகாரங்களை பணிவழங்குநர் உட்கிடையாக வழங்கியுள்ளதாக சட்டம் கருதுகிறது. இதுவே பணி எல்லை என்பதாகும்.

பணியாளர் தனது பணியின்போது பணி எல்லைக்குட்பட்டு செய்யப்படும் தவறுகளுக்கு பணிவழங்குநரே பொறுப்பேற்க வேண்டும். ஆனால் பணி எல்லையின் வரம்புமீறி, பணியாளர் செய்யும் தவறுகளுக்கு பணிவழங்குநர் பொறுப்புநிலைக் கொண்டிருக்கவில்லை.

Keppel Bus Co. Ltd Vs. Sa'ad Bin Ahmad, (1974) 2 All ER 700 (PC)., என்ற வழக்கில் பேருந்தில் பயணம் செய்த வயதான பெண்மணியிடம் கடுமையாக நடந்து கொண்ட நடத்துனரை எதிர்த்து வினா எழுப்பிய சக பயணியான வாதிக்கும் நடத்துநருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. நடத்துநர் தம்மை இழிவான சொற்களால் ஏசுவதை நிறுத்துமாறு கூறிவிட்டு அமர்ந்த வாதியை, நடத்துநர், பயணச்சீட்டை துளையிடும் தனது சாதனத்தைக் (ticket punch) கொண்டு அவரின் கண்களைத் தாக்கியதில், வாதியின் கண்ணாடி உடைந்ததுடன் கண்பார்வையும் பறிபோனது. வாதி இழப்பீடு கோரி, பகரப்பொறுப்புக் கொள்கையின் அடிப்படையில் பேருந்து நிறுவனத்தின்மீது வழக்கிட்டார். 'பிரிவி கவுன்சில்' (Privy council), பயணிகள் மத்தியில் ஒழுங்கினைப் பராமரிப்பதை நடத்துநரின் கடமைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டாலும்கூட, பயணிகள் மத்தியில் ஒழுங்கின்மை அல்லது கூச்சல் இருந்ததற்கான அல்லது பணிவழங்குநர்களின் சார்பாக வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின்பேரில் பலவந்தமான நடவடிக்கை எடுத்ததை நியாயப்படுத்தக்கூடிய அளவிற்கான பிற அவசர சூழ்நிலைகள் இருந்ததற்கு சான்று ஏதுமில்லை. எனவே நடத்துநர் தனிப்பட்ட நிலையில் பொறுப்பு கொண்டுள்ளார் என்றாலும்கூட, பணிவழங்குநரான பேருந்து நிறுவனம் பொறுப்பாகாது என்று தீர்ப்பளித்தது.

(3) தடை விதிக்கப்பட்டுள்ள மற்றும் பணி எல்லையைத் தாண்டிய செயல்கள் (Acts which are prohibited and also outside the scope of employment): பணியாளரின் செயல், பணிவழங்குநரால் வெளிப்படையாக தடை விதிக்கப்பட்டிருக்கும் அத்தகைய தடையை மீறியதாகவும் மற்றும் பணி எல்லைக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்தால் பணி வழங்குநர் பொறுப்பாகமாட்டார்.

Twin Vs Beans Express Ltd. (1946) 1 All ER 203., என்ற வழக்கில், வங்கியின் பயன்பாட்டிற்காக 'A' வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தும் 'வேன்' ஒன்றை (commercial van) அளித்திருந்தார். அவற்றுள் ஒன்று, அதிகாரம் பெற்றிராத நபர்கள் எவரையும் வண்டியில் ஏற்றிச் செல்வதற்கு (lift) அனுமதிக்கப்படவில்லை என்றும் மற்றொன்று அதிகாரபூர்வமற்ற நபர்களை வண்டியில் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று ஓட்டுநபருக்கு வெளிப்படையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மற்றும் எந்தவொரு சூழ்நிலையிலும் அதிகாரபூர்வமற்ற நபர்களுக்கு ஏற்படும் இழப்பிற்கு 'A' பொறுப்பாகமாட்டார் என்பதையும் குறிப்பிட்டிருந்தது. இவற்றினைமீறி, ஓட்டுநர் அதிகாரபூர்வமற்ற நபர் ஒருவரை வண்டியில் ஏற்றிச் சென்றபோது, ஓட்டுநரின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டு அந்நபர் உயிரிழந்தார். நீதிமன்றம்,

ஓட்டுநரின் செயல் அலுவலரின் பணிஎல்லைக்கு அப்பாற்பட்ட செயல் என்பதால் 'A' பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது.

(4) பணிக்கு முற்றிலும் தொடர்பற்ற செயல்கள் (Acts completely unconnected with employment): பணியின்போது பணிக்கு தொடர்பற்ற செயல்களை பணியாளர் செய்வதால் ஏற்படும் தீங்குகளுக்கு பணிவழங்குநர் பொறுப்பாவாரா என்ற கேள்விக்கு பலவழக்குகளில் பொறுப்பாவார் என நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. இருப்பினும் இதற்கு ஓர் எல்லை உண்டு. Keppel Bus Co வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். Keppel Bus Co வழக்கில் நடத்துநர் தனது பணித்தொடர்பாக பணிவழங்குநர் அளித்துள்ள அதிகாரத்தின் எல்லையை மீறியதால் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, நடத்துநரின் செயல் பணித்தொடர்பானதாகும். பணிக்கு முற்றிலும் தொடர்பற்ற தவறான செயலுக்கு, அச்செயல் பணியின்போது செய்யப்பட்டிருந்தாலும்கூட, பணிவழங்குநரை பொறுப்புக் உட்பத்துவது சில நேரங்களில் தவறான செயல் புரிவதற்கு தூண்டுவதாகிவிடும். சட்டவியல் பேராசிரியர் P.H. நிவார்க் (P.H.Newark), இது தொடர்பாக பின்வரும் எடுத்துக்காட்டினை குறிப்பிட்டுள்ளார். புரட்சிப்படையில் ஓர் உறுப்பினராக இருக்கும் பணியாளர், பணிவழங்குநரின் பொருள்களை அவர் குறிப்பிட்ட நபரிடம் அளிப்பதற்காகச் செல்லும் பயணத்தின்போது, புரட்சிப்படையில் உள்ள தனது கூட்டாளிகளிடம் கொடுப்பதற்காக வெடி குண்டுகளையும் எடுத்துச் செல்லும்போது வெடிகுண்டு வெடித்து வாதிக்கு காயம் ஏற்பட்டால் கண்டிப்பாக பணிவழங்குநர் பொறுப்பாக மாட்டார்.

Phillips Vs Western Union Telegraph Co. (1917) 217 M 676., என்ற அமெரிக்க வழக்கு, பணிக்கு முற்றிலும் தொடர்பற்ற செயல்களை பணியாளர் செய்வதால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார் என்பதற்கான குறிப்பிடத்தக்க வழக்காகும். இவ்வழக்கில் பிரதிவாதியின் தகவலை கொண்டுபோய் சேர்க்கும் பணியாளர் சிறுவன் (messenger boy), செய்தித்தாள் விற்பவரைக் கடந்து செல்லும்போது, ஒரு செய்தித்தாளை எடுத்துக்கொண்டு ஓடினான். தன்னைப் பிடிப்பதற்காக எவரேனும் வருகிறார்களா எனப்பின்புறம் பார்த்தவாறு ஓடிக்கொண்டிருக்கும்போது ஓர் பெண்மீது (வாதி) மோதியதில் அவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. இங்கு பணியாள், பணிவழங்குநர் தகவல் சேர்க்கக்கூறிய நபர் வசிக்கும் இடத்தை நோக்கி ஓடினாலும்கூட, தனது தனிப்பட்ட செயலின் விளைவிலிருந்து தப்பிக்கவே ஓடினான். நீதிமன்றம், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது.

(5) பணிவழி விலகல் வழக்குகள் (Deviation cases): பணியாளர் குதிரைவண்டி அல்லது மோட்டார் வண்டி ஓட்டுநராக இருந்து, தனது சொந்த வேலைக்காக, பணி வழங்குநரின் வணிக நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக செல்ல வேண்டிய வழியைவிட்டு விலகிச் செல்லும்போது விபத்து ஏற்பட்டால், வழிவிலகிச் சென்றதை பணியாளரின் ஓர் தனிப்பட்ட பயணமாகக் கருதமுடியுமா

என்ற கேள்வி, விலகிச் சென்ற அளவைப் பொறுத்து அமையும். பணி வழங்குநரின் வியாபார நோக்கத்திற்காகச் செல்லும்போது அவரின் உட்கிடையான கட்டளைக்கு எதிராக வேறுவழியில் சென்றாலும் அவர் பணிவழங்குநரை பொறுப்பாக்க முடியும். ஆனால் பணிவழங்குநரின் வியாபார நோக்கத்திற்காக இல்லாமல் தன்னுடைய சொந்த விருப்பத்திற்காக என்றால் பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார்.

Mitchell Vs. Crassweller, (1853) 13 CB 237., என்ற வழக்கில், பிரதிவாதியின் பணியாளரான குதிரைவண்டியோட்டி, வேலை முடிந்ததும் வண்டி மற்றும் குதிரையை பிரதிவாதியின் லாயத்திற்கு கொண்டு செல்லும் தனது கடமையை செய்யாமல், தனது தனிப்பட்ட தேவைக்கான பயணத்திற்காக ஓட்டிச் சென்றார். திரும்பிவரும்போது தனது கவனக்குறைவினால் வாதிக்கு காயத்தை ஏற்படுத்தினார். நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது.

(6) பொதுப்பணி கோட்பாடு (Doctrine of Common employment): ஒரு பணியாளரின் கவனக்குறைவு காரணமாக, உடன் பணியாற்றும் மற்றொரு பணியாளருக்கு ஊறு ஏற்படின், கவனமின்றி செயல்பட்ட பணியாளரின் செயலுக்கு பணிவழங்குநர் பொறுப்பாகமாட்டார். இதுவே பொதுப்பணி கோட்பாடாகும். இருப்பினும் இக்கோட்பாடு இந்தியாவில் 1938-ஆம் ஆண்டின் பணியாண்மையர் பொறுப்புடைமைச் சட்டத்தின் (Employers Liability Act, 1938) மூலமாகவும், பிரிட்டனில், 1948-ஆம் ஆண்டின் சட்டச் சீர்திருத்தம் (தனிப்பட்ட நபர் ஊறுகள்) சட்டத்தின் [Law Reform (Personal Injuries) Act, 1948] மூலமாகவும் ஒழிக்கப்பட்டுவிட்டது.

(7) பணியாளரை இரவல் கொடுத்தல் (Lending of Servant): பணித்தலைவர் தனது பணியாள் ஒருவரை தற்காலிகமாக மற்றொரு நபருக்கு இரவல் கொடுத்தால், இரவல் கொடுத்த பின்னரும் அப்பணியாளை கட்டுப்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் அதிகாரத்தை தன்வசம் கொண்டிருந்தால் மட்டுமே, அப்பணியாள் பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பொறுப்பாவார்.

Mersey Docks and Harbour Board Vs Coggins and Griffiths (Liverpool) Ltd., (1947) AC 1., என்ற வழக்கில் ஓர் துறைமுகக் கழகம், கணிசமான எண்ணிக்கையில் நகரக்கூடிய பாரந்தூக்கிகளை (mobile cranes) சொந்தமாகக் கொண்டிருந்ததுடன், அவற்றை இயக்குவதற்கு நன்கு பயிற்சி பெற்ற ஓட்டுநர்களையும் பணியில் அமர்த்தியிருந்தது. துறைமுகக் கழகம், கப்பலில் சரக்குகளை ஏற்றுவதற்காக ஒரு நிறுவனத்திற்கு பாரந்தூக்கியை ஓட்டுநர் ஒருவருடன் வாடகைக்கு விட்டது. ஓட்டுநரை பணி நீக்கும் அதிகாரத்தை தொடர்ந்து துறைமுகக் கழகமே கொண்டிருந்தது. இருப்பினும் எந்த சரக்கு பெட்டியை கப்பலில் ஏற்ற வேண்டும் என்பது பொறுத்து நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டார். ஓட்டுநர் சரக்குகளை கப்பலில் ஏற்றும்போது, பாரந்தூக்கியை கவனக்குறைவாக கையாண்டதில் 'X' என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. நீதிமன்றம், ஓட்டுநரின் கவனக்குறைவிற்கு துறைமுகக் கழகமே பொறுப்பேற்க வேண்டும் என்றுக் குறிப்பிட்டது.

SHORT NOTES

36. உயிர் போக்கிடத்தக்க விபத்துகள் சட்டம் (அல்லது) அபாயகரமான விபத்துகள் சட்டம், 1885 / Fatal Accidents Act, 1885., Nov-2017, Nov-2019.

சட்டப் பின்னணி: இங்கிலாந்தில் தீங்கியல் அல்லது உரிமையியல் தவறுகளுக்குப் பொருந்தக்கூடிய இயற்றாச் சட்டத்தின்கீழ், பணியாளர் இறப்பின் காரணமாக, அவரின் பிரதிநிதிகளுக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் பணி அளவிலான இழப்பிற்கு தீர்வழி கோருவது தடை செய்யப்பட்டிருந்தது. சிறு காயங்களுக்கு சம்பந்தப்பட்ட நபர் வழக்கிடமுடியும். இவ்விதிக்கு பின்வரும் இரு கொள்கைகள் காரணமாகும். முதலாவது கொள்கை 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' (Actio personalis moritur cum persona - i.e., 'a personal action dies with a person') என்கிற முதுமொழியின் அடிப்படையிலும், இரண்டாவது கொள்கை 'எந்தவொரு மனிதனும் மற்றொருவரின் வாழ்க்கையில் எந்தவொரு நலனும் கொண்டிருக்கவில்லை' ('no man had any interest in the life of another') என்கிற அடிப்படையிலும் அமைந்ததாகும். முதலாவது கொள்கை, இறந்த நபர் குறித்து வழக்கு தொடரும் அனைத்தையும் இழக்கச் செய்தது. இரண்டாவது கொள்கை, இறந்த நபரின் சட்டமுறை வாரிசுகள் தங்களின் சொந்த உரிமைகளுக்காக வழக்கிடுவதை தடுக்கிறது. ஒரு நபரின் இறப்பு, தீங்கியலில் இழப்பீடு கோருவதற்கு வழக்குமூலமாக அமையாது. இயற்றாச் சட்டத்தின்கீழ் ஒரு நபரைக் கொல்வது, அந்நபரை காயப்படுத்துவது அல்லது முடமாக்கச் செய்வதைவிட மலிவானது என்பதாக இருந்தது. இதற்கு காரணம் ஒருபுறம், காயமுற்ற நபர் உயிருடன் இருந்திருந்தால் வழக்கு தொடர்ந்திருக்கக்கூடிய எந்தவொரு உரிமையும் அவரது இறப்புடன் முடிந்துவிடுகிறது. மறுபுறம், மற்றொரு நபரின் இறப்பிற்காக, தவறான செயலினால் மரணத்தை ஏற்படுத்திய நபருக்கு எதிராக, தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக இழப்பீடு கோரும் அளவிற்கு, எந்தவொரு நபரும் மற்றொருவரின் வாழ்க்கையில் உரிமை கொண்டிருக்கவில்லை. இயற்றாச் சட்டவிதியின் இப்பகுதி கீழ்க்காணும் வழக்கில் எல்லன்போரோ (Lord Ellenborough) வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் உருவானது.

Baker Vs Bolten (1808) 1 Camp 493., என்ற இவ்வழக்கில், வாதியும் அவரது மனைவியும் பிரதிவாதிக்குச் சொந்தமான, பொதுமக்களை ஏற்றிச் சென்று குறிப்பிட்ட இடங்களில் நின்றுச் செல்லும் குதிரை வண்டியின் (stage-coach) மேற்புறம் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தனர். பிரதிவாதிகளின் கவனக்குறைவின் காரணமாக, தலைகீழாக வண்டி கவிழ்ந்ததில், வாதிக்கு உடலின் பல இடங்களில ஊமைக்காயங்கள் ஏற்பட்டதுடன் அவரது மனைவிக்கு மிகப் பலத்த காயங்கள் ஏற்பட்டு ஒரு மாதத்திற்குப் பின் இறந்தவிட்டார். வாதி, தனக்கு ஏற்பட்ட காயங்களுக்காகவும், மனைவியின் இறப்பின் காரணமாக தமக்கு ஏற்பட்ட மனநிலைத் துன்பம், அன்பு, பாசம் மற்றும் அவரின் அருகாமை இழப்பிற்காகவும், இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். உரிமையியல் நீதிமன்றத்தில், மனித இறப்பை

(death of human being) ஒரு தீங்காக முறையீடு செய்ய முடியாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும் இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய எல்லைபோரோ பிரபு, வாதி தனக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கு இழப்பீடு பெற முடியும் என்றும், அவரது மனைவியின் அன்பு, பாசம் மற்றும் அருகாமை இழப்பிற்காக, அவர் உயிரோடு இருந்த காலம்வரை மட்டும் பெறமுடியுமே தவிர, அவரது இறப்பிற்கு பின்னரான காலத்திற்கு பெற முடியாது என்று தீர்ப்புரையில் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட Baker Vs Bolton வழக்குவிதி, ஒப்பந்த மீறுகை (அது தீங்கியலுக்கு உட்பட்ட நடவடிக்கைக்கு பொருந்துவதாக இருந்தாலும்) மற்றும் நேர்மையற்ற முறையில் ஒருவர் தம்மை வளப்படுத்திக் கொள்ளல் (unjust enrichment) ஆகியவற்றை வழக்கு மூலமாகக் கொண்ட (cause of action) வழக்குகளுக்குப் பொருந்தாது.

மரண விபத்துகள் சட்டம், 1855: நான்கு பிரிவுகளை மட்டுமே கொண்ட இச்சட்டம், அடிப்படையில் 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' என்கிற விதிக்கு விலக்கு (exception) அளிப்பதற்காக இயற்றப்பட்டதாகும். வழக்கிடத்தக்க தீங்கினால் மரணத்தை ஏற்படுத்தியதன் காரணமாக இழப்பிற்கு உள்ளாகிய குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது. தவறான செயலின் காரணமாக அல்லது கவனமின்மை காரணமாக மரணத்தை ஏற்படுத்திய நபரின் செயலின் விளைவாக அக்குடும்பத்தினர் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக இச்சட்ட வகையங்களின்கீழ் வழக்கிட்டு இழப்பீடு பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளனர்.

இச்சட்டம், ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்பதை இச்சட்டத்தின் பிரிவு-1, தெரிவிக்கிறது. இச்சட்டத்தின் பிரிவு-1-A, மூன்று பத்திகளில் மூன்று பொருள்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் முதலாவது பத்தி, தவறான செயல் (wrongful act), கவனமின்மை அல்லது தவறுதலின் (default) விளைவாக மரணத்தை ஏற்படுத்தும் போதெல்லாம், காயமுற்ற நபர், அதன் பின்னர் இறக்காமல் இருந்திருப்பின், காயம் தொடர்பாக அதனை ஏற்படுத்தியதற்கு பொறுப்பாகும் நபருக்கு எதிராக, எங்ஙனம் வழக்கு தொடர்ந்து இழப்பீடு பெறுவதற்கு தகுதி பெற்றிருப்பாரோ, அதேபோன்று காயமுற்றநபர் இறந்தது பொருட்படுத்தப்படாமல், மரணத்தை ஏற்படுத்திய நபருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை அல்லது தொடரப்படும் இழப்பீட்டிற்கான வழக்கிற்கு பொறுப்பாகுவார் எனும் புதிய உரிமையை அளிக்கிறது. இது, 'ஆளைப்பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' எனும் பாதுகாப்பை நீக்குகின்ற விளைவை ஏற்படுத்துகிறது. இப்பிரிவின் இரண்டாவது பத்தி, முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கை அல்லது வழக்கும் இறந்துபோனவரின் மனைவி (அ) கணவன், பெற்றோர் மற்றும் குழந்தை (இருப்பின்) ஆகியோர் நலனுக்காக இருக்க வேண்டும் என்றும் அத்தகைய வழக்கு இறந்துபோனவரின் பிரதிநிதி, சொத்து பேணுநர் அல்லது நிறைவேற்றாளரின் பெயரில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது பத்தி, இத்தகைய ஒவ்வொரு வழக்கிலும், பிரதிவாதியிடமிருந்து பெறப்பட்ட மற்றும் பெறப்படாமல் உள்ள இழப்பீட்டுத்

தொகையில் வழக்குச் செலவு மற்றும் பிற செலவுகளை நீதிமன்றம் பிடித்தம் செய்த பின்னர் எவருக்கெல்லாம் எவ்வாறு அளிக்க வேண்டும் என்ற விவரங்களையும் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதை கூறுகிறது.

விலக்கு வாசகத்தன்மை (proviso) கொண்ட இச்சட்டத்தின் பிரிவு-2, முறையீடு செய்யப்படும் பொருள் குறித்து ஒரு நடவடிக்கை அல்லது ஒரு வழக்கிற்கு மேல் மேற்கொள்ளக்கூடாது என்பதை குறிப்பிடுகிறது. மேலும் இத்தகைய நடவடிக்கை அல்லது வழக்கில் மரணம் அடைந்த நபரின் சொத்துக்கு பணஅளவில் ஏற்பட்ட இழப்பிற்காக, சொத்து பேணுநர், நிறைவேற்றாளர் அல்லது பிரதிநிதியின் பாத்தியதையை சேர்க்க கோரவும், அது பெறப்பட்டவுடன் மரணம் அடைந்த நபரின் சொத்துகளின் ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும் என்பதையும் இப்பிரிவு குறிப்பிடுகிறது.

இச்சட்டத்தின் பிரிவு-3, மேற்குறிப்பிட்டவாறு தொடரப்படும் வழக்கில், வாதியின் வழக்குரையில் குறிப்பிடப்பட வேண்டிய முழுமையான தகவல்கள், வழக்கு எவரின்/எவர்களின் சார்பாக தாக்கல் செய்யப்படுகிறது என்ற விவரம் மற்றும் இழப்பீடு கோருவதற்கான உரிமையின்தன்மை போன்ற பொருள்களைக் கொண்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு-4, பொருள் விளக்க வாசகமாகும் (interpretation clause) இப்பிரிவு, இச்சட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் 'நபர்', 'பெற்றோர்' மற்றும் 'குழந்தை' என்ற பதங்களுக்கான விளக்கத்தைக் கொண்டுள்ளது.

37. பொதுவான தொழில் கோட்பாடு (அ) 'பொதுப்பணி' கோட்பாடு / Doctrine of common employment - May-2016, Nov-2018 (v) Common Employment - (அ) பொதுப்பணியமைவு / Common Employment - May-2018(v).

'பொதுப்பணி' கோட்பாடு – விளக்கம்: ஆங்கில இயற்றாச் சட்டத்தின் ஓர் விநோதக் கோட்பாடான 'பொதுப்பணி' கோட்பாடு என்பது உண்மையில், பணியாளர் பணியின்போது புரியும் தீங்குகளுக்கு பணித்தலைவர் பொறுப்பாகுவார் எனும் பகரப்பொறுப்புநிலைக் கோட்பாட்டிற்கான ஓர் விதிவிலக்காகும். இக்கோட்பாட்டின்படி, ஒரு பணியாள் பணியின்போது, உடன் பணியாளரின் கவனமின்மை அல்லது தவறு காரணமாக ஏதேனும் காயங்களுக்கு உள்ளாகினால், பணித்தலைவர் பொறுப்பாகமாட்டார். ஒரு பணியாள் பணியில் சேரும்போதே அப்பணியில் உள்ள அச்சுறுத்தல்கள், அபாயங்களை அறிந்திருந்தே அதனை எதிர்கொள்ள சம்மதித்து பணித்தலைவருடன் பணி ஒப்பந்தம் செய்து கொள்வதால் 'இசைந்தேற்பது தீங்காகாது' (volenti non fit injuria) என்கிற அடிப்படையையும் இக்கோட்பாடு தன்னுள் கொண்டுள்ளதாக கருதப்பட்டது. பொதுப்பணி என்ற எதிர்வாதம் பொருந்துவதற்கு பின்வரும் இருகூறுகள் இன்றியமையாததாகும்:

(i) தவறிழைத்தவர் மற்றும் ஊறுக்கு உள்ளான நபர் ஆகிய இருவரும் கண்டிப்பாக உடன் பணியாளர்களாக இருக்க வேண்டும்; மற்றும்;

(ii) விபத்து ஏற்பட்ட நேரத்தில், அவர்கள் பொதுவான வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

Priestley Vs Fowler, (1837) 3 MW 1., என்ற வழக்கில், பிரதிவாதியான பணித்தலைவர் தம்மை மற்றொரு பணியாளரால் ஓட்டப்படும் பாதுகாப்பற்ற நிலையிலிருந்த மற்றும் அளவுக்கு அதிகமாக சுமை ஏற்றப்பட்டிருந்த வண்டியில் செல்லுமாறு ஆணையிட்டதாகவும், அதிக எடையினால் வண்டி முறிந்ததில் தனது தொடை எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும் எனவே, பிரதிவாதியான பணித்தலைவர் தனக்கு இழப்பீடு வழங்கிடுமாறு ஆணையிடக்கோரி, வாதி வழக்கு தொடர்ந்தார். அபிங்கர் பிரபு (Lord Abinger), வாதி, பணியில் உள்ள அபாயங்களை அறிந்து கொண்டே பணியை ஏற்றுக் கொண்டதாகவும், இத்தகைய அபாயங்கள் உடன் பணியாளர்களின் தவறுகளை உள்ளடக்குவதாகக் கருதப்பட வேண்டும் என்றும் எனவே பணித்தலைவர் பொறுப்பாகமாட்டார் என்றும் தீர்ப்பளித்தார்.

பொதுப்பணிக் கோட்பாடு பல்வேறு வழக்குகளில், உட்கிடையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததாக நீதிமன்றங்கள் குறிப்பிட்டன. எ-டு: **Bartonshill Coal Co. Vs. Reid, (1858) 3 Macq 266.** பணித்தலைவருக்கு ஆதரவான இக்கோட்பாடு நாளடைவில் பல மட்டங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. குறிப்பாக ஆங்கில சட்டமன்றத்தால் 1880-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டம், இக்கோட்பாட்டிற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இச்சட்டம் பொதுப்பணிக் கோட்பாட்டின் பொருந்துகைக்கு பல்வேறு விதிவிலக்குகளைக் குறிப்பிட்டது. பொதுப்பணிக் கோட்பாட்டின் எல்லையை நீதிமன்றங்களும் சுருக்கத் தொடங்கின. **Groves Vs Winborne, (1898) 2QB 402.,** என்ற வழக்கில், பணித்தலைவரின் மீது சட்டப்படியாக விதிக்கப்பட்டுள்ள கடமை மீறுகை உள்ளடக்கிய வழக்குகளுக்கு பொதுப்பணி கோட்பாடு பொருந்தாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 1897-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம் (workmen's compensation Act, 1897), இக்கோட்பாட்டின் எல்லையை மேலும் சுருக்கியது. இறுதியாக, 1948-ஆம் ஆண்டின் சட்ட சீர்திருத்தம் (தனிப்பட்ட நபர் ஊறுகள்) சட்டம், பொதுப்பணிக் கோட்பாட்டை முற்றிலுமாக ஒழித்தது.

இந்தியாவில், 1938-ஆம் ஆண்டின் பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டம் (Employers Liability Act, 1938) இயற்றப்படும் வரையில், பொதுப்பணிக் கோட்பாடு தொடர்பாக பெரும் குழப்பம் நிலவியது. இதற்கு காரணம், பொதுப்பணிக் கோட்பாட்டை பொருந்தச் செய்வது தொடர்பாக பல்வேறு உயர்நீதிமன்றங்களுக்கு இடையே இருந்த வேறுபட்ட கருத்துகளாகும். சில உயர்நீதிமன்றங்கள், இக்கோட்பாட்டின் மீது எந்தவொரு கட்டுப்பாட்டையும் விதிக்காமல் நேரடியாகப் பொருந்தச் செய்தன. சில உயர்நீதிமன்றங்கள், இங்கிலாந்தில் 1880-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு பின்னரான நிலையை கருத்தினில் கொண்டு தீர்ப்பளித்தன. பின்வரும் இரு வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

Elizabeth C. Blanchetta Vs Secretary of State for India, (1912) 9 ALJ 173., என்ற வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் பொதுப்பணிக்

கோட்பாட்டை நேரடியாகப் பொருந்தச் செய்தது. பணித்தலைவர் ஒருவரின்கீழ் பணிபுரியும் ஒரு பணியாளர், அதே பணித்தலைவரின்கீழ் பணிபுரியும் மற்றொரு பணியாளரின் கவனமின்மையால் ஏற்பட்ட ஊறினுக்காக பணித்தலைவருக்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடர முடியாது என்று தீர்ப்பளித்தது. இதற்கு மாறான ஒரு நிலையை நாக்பூர் உயர்நீதிமன்றம் **Secretary of State Vs Rukminibai., AIR 1937 Nag 354.,** வழக்கில் மேற்கொண்டது. இவ்வழக்கில் தலைமை நீதிபதி ஸ்டோன் (Stone C.J), இங்கிலாந்தில், 1880-ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த பொதுப்பணிக் கோட்பாட்டின் பொருந்தும்தன்மை இந்தியாவிற்குப் பொருந்தாது என்றும், இன்றைய நிலைக்கான நீதி, தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்றுக்கு (justice, equity and good conscience) இணக்கமாக ஆய்வு செய்கையில், இங்கிலாந்தில் இன்று இருக்கும் (to-day) சட்ட நிலையை கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர, நேற்றிருந்த (yesterday) சட்டநிலையை கருத்தில் கொள்ளக்கூடாது என்றும், தற்போது பொதுப்பணிக் கோட்பாடு இயற்றாச் சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதால் பொருந்தாது எனக்கூறவில்லை மாறாக, பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டத்தின் எல்லைக்கு உட்பட்டிருப்பதால் பொருந்தாது எனக் கருதுகிறேன் என விரிவாக எடுத்துரைத்தார். ஆயத்தின் மற்றொரு நீதிபதி நீயோகி (Neyogi, J) பொதுப்பணி குறித்த விதி, தற்போது சட்டத்தினால் ரத்து செய்துவிட்டப் பின்பு, இங்கிலாந்தின் இயற்றாச் சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தத்தக்க சட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதமுடியாது என்பதைக் குறிப்பிட்டார். இவ்வழக்கில் பொதுப்பணிக் கோட்பாடு இந்தியாவிற்குப் பொருந்தாது என தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்குப் பின்னர் எழுந்த **Tand Brockle Bank Ltd Vs Noor Ahmode, AIR 1940 PC 225.,** என்ற வழக்கில் Rukminibai வழக்கின் தீர்பை சரி என்றோ அல்லது தவறு என்றோ 'பிரிவு கவுன்சில்' ஏதும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். இருப்பினும், கீழ்க்கண்ட வழக்கில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது. **Governor General in Council Vs Constance Zena Wells, AIR 1950 PC 22.,** இவ்வழக்கில் பிரதிவாதிகளின் ரயில்வே நிறுவனத்தில் 'என்ஜினில்' நெருப்பு அணையாமல் நிலக்கரி இட்டு கவனித்துக்கொள்ளும் (fireman) பணிபுரிந்து வந்த வாதியின் கணவர், உடன் பணிபுரிந்த ஓட்டுநரின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தில் மரணம் அடைந்தார். இந்தியாவில் 1938-ஆம் ஆண்டின் பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டத்தின் பிரிவு-3(d)-ன்கீழ் பொதுப்பணிக் கோட்பாட்டின் எல்லை சுருக்கப்பட்டிருந்தாலும்கூட, இந்தியாவில் பொதுப்பணிக் கோட்பாடு பொருந்தும் என்றும், பொதுப்பணிக் கோட்பாடு என்ற எதிர்வாதத்தை பிரதிவாதி பயன்படுத்த தடையில்லை என்பதைக் குறிப்பிட்டு, வாதியின் இழப்பீட்டிற்கான மனுவை 'பிரிவி கவுன்சில்' தள்ளுபடி செய்தது. மேற்குறிப்பிட்ட வழக்கில் அளித்த தீர்ப்பின் காரணமாக ஏற்பட்ட சிக்கலைப் போக்குவதற்காக, 1951-ஆம் ஆண்டு, பணியாண்மையர்கள் பொறுப்புடைமைச் சட்டம், 1938-ன் பிரிவு-3-ல் திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தத்தின் மூலமாக இந்தியாவில் பொதுப்பணிக் கோட்பாடு எனும் எதிர்வாதம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

அலகு - V

கூட்டாக தீங்கிழைத்தோர்
Joint Tortfeasors

PART - A/B

27. கூட்டாகத் தீங்கிழைத்தோர் என்பவர் யாவர்? கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலையை விளக்கி, தனித்து தீங்கிழைத்தோரை வேறுபடுத்தவும். (Who are joint tortfeasors? Explain the joint tortfeasors liability and make differentiation with independent tortfeasor) - Nov-2017(v).

SN - 38 கூட்டாக தீங்கிழைப்பவர்கள் அல்லது கூட்டுத் தீங்கர் / Joint Tortfeasors., Nov-2013(v), May-2014, May-2018.

விடைச்சுருக்கம்: (அ) கூட்டாக தீங்கிழைத்தோர் – (ஆ) தனித்து தீங்கிழைத்தோர் – (இ) கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலை – (இ) (1) கூட்டுப் பொறுப்பு நிலை எழும் சூழல்கள் – (இ) (2) பொறுப்பு நிலையின் தன்மை – (இ) (3) இந்தியாவில் உள்ள நிலை – (ஈ) கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கும் தனித்து தீங்கிழைத்தோருக்கும் இடையேயான வேறுபாடு.

(அ) கூட்டாகத் தீங்கிழைத்தோர் (Joint Tortfeasors):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பொதுவான நோக்கத்துடன் ஒன்றிணைந்து செயல்பட்டு வாதிக்குத் தீங்கு ஒன்றைப் புரிந்திருந்தால் அவர்கள் கூட்டுத்தீங்கிழைத்தவராவர். கூட்டுத்தீங்கில், கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் அனைவரும் ஒரே தீங்கான செயலைச் செய்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் கூட்டாகச் செய்த செயல்களின் விளைவாக வாதிக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் என்று கூறப்படுவதற்கு, தீங்கும் ஏற்படும் இழப்பும் இணைய வேண்டும், வேறு முறையில் குறிப்பிடுவது எனில், ஒரே நோக்கத்திற்காக மனதளவில் ஒன்றுபட்டிருக்க வேண்டும் (mentally combine together for the same purpose) இதன் அடிப்படையில், குறிப்பிட்ட எண்ணம் அல்லது உள்நோக்கம், அத்தீங்கில் பங்கு பெற்ற ஒவ்வொருவருக்கும் இருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய பொதுவான எண்ணம் அல்லது உள்நோக்கம் அவர்களுக்கிடையே இல்லாமல் இருப்பின், அவர்கள் தனித்துத் தீங்கிழைத்தவர்களே தவிர கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் ஆகார். கூட்டாகத் தீங்கிழைத்தவர் என்று கூறப்படுவதற்கு, தீங்கிழைத்தவர் என்று சொல்லப்படுகின்ற ஒரு நபரின் செயலுக்கும் மற்றொரு தீங்கிழைத்தவரின் செயலுக்கும் இடையே ஏதேனும் தொடர்பு இருக்க வேண்டும். நீதிப்பிரபு சர்ஜன்ட் (Sargent, L.J),

குறிப்பிட்டுள்ளவாறு, இழப்பை ஏற்படுத்திய செயல் வெறுமனே தனித்தனியான செயல்களின் மொத்த விளைவினால் ஏற்பட்டதாக அல்லாமல் ஒன்றுபட்ட செயல் / செயல்களினால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும். **Petrie Vs. Lament, (1841) Car & Mar 93.,** என்ற வழக்கில், ஓர் தவறான செயலைச் செய்வதற்கு உதவி செய்யும் அல்லது ஆலோசனை வழங்கும் அல்லது ஆணையிடும் அல்லது இணைந்து கொள்ளும் அனைத்து நபர்களும் கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் என்று குறிப்பிடப்பட்டது.

(ஆ) தனித்த தீங்கிழைத்தோர் (Independent Tortfeasor):

ஒரு நபருக்கு எதிராக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, தனித்தனியே செய்யப்பட்ட செயலின் மொத்த விளைவாக ஒரே தீங்கு ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய நபர்களையே சட்டம் தனித்து தீங்கிழைத்தோர் எனக் குறிப்பிடுகிறது. எ-டு: எதிரெதிர் திசையில் மோட்டார் காரை ஓட்டி வருபவர்களின் கவனக்குறைவினால் வாகனங்கள் ஒன்றோடொன்று மோதியதில் நடைபாதையில் சென்று கொண்டிருந்தவர் இரண்டு கார்களுக்கு இடையில் நசுக்கப்படுதல் – தனித்த தீங்கிழைப்பவர் தொடர்பாக **Thompson Vs London County Council, (1899) 1 QB 840.,** என்ற வழக்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வழக்கில், 'A' என்பவர் குழிதோண்டி கவனக்குறைவாக அதை மூடாமல் விட்டதாலும், 'B' என்பவர் கவனக்குறைவாக தண்ணீர்குழாயை சரியாக அடைக்காததாலும், குழியில் நிரம்பிய நீர் வாதியின் வீட்டினுள் புகுந்ததில் வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. நீதிப்பிரபு காலின்ஸ் (Collins, L.J) A,B ஆகிய இருவரும் கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் ஆகமாட்டார்கள், ஏனெனில் அவர்களின் செயலின் விளைவினால் ஏற்பட்ட இழப்பு ஒன்றேயானதாக இருந்தாலும்கூட, அவர்களின் செயல்கள் தனித்தனியேயானதாக இருப்பதால் அவைகளை ஒரே செயலாக இணைக்க முடியாது என்பதைக் குறிப்பிட்டார்.

(இ) கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலை (Liability of Joint tortfeasors):

இ(1) கூட்டுப்பொறுப்புநிலை எழும் சூழ்நிலைகள் (Circumstances under which liability arise): பொதுவாக, கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்புநிலை பின்வரும் சூழல்களில் எழுகிறது.

(i) முகமை (Agency): எவரேனும் ஒருவர் தம் சார்பாக செயல்படுவதற்கென ஒரு நபரை நியமித்திருந்து அத்தகைய நபரால் ஏதேனும் தீங்கு புரியப்பட்டிருந்தால், அவரை நியமித்தவரும் (முதல்வர்), தீங்கு புரிந்தவர் (முகவர்) ஆகிய இருவரும் கூட்டாக தீங்கிழைத்தவர்களாகக் கருதப்பட்டு, அவர்களிருவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் அத்தீங்கிற்கு பொறுப்பாக்கப்படுவர்.

(ii) பகரப்பொறுப்புநிலை (Vicarious liability): ஓர் தனித்த உறவு முறையின்கீழ் (special relationship), ஓர் நபர் மற்றொரு நபர் புரியும் தீங்கிற்கு பொறுப்பாக நேரும்போது, அவர்களிருவரும் கூட்டாக தீங்கிழைத்தவராகவும்

கூட்டுப் பொறுப்பினையும் கொண்டிருப்பர். இவ்வாறு பணியாள் பணியின்போது செய்யப்படும் தீங்கிற்கு, பணியாளரோடு சேர்த்து பணித்தலைவரையும் பொறுப்புநிலைக்கு உட்படுத்த முடியும்.

(iii) கூட்டுச்செயல் அல்லது பொதுவான செயல் (Joint or common action): இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், ஓர் பொதுவான செயலுக்காக ஒன்றிணைந்து அப்பொதுவானச் செயலை நிறைவேற்றும்போது புரியும் எந்தவொரு தீங்கிற்கும் அவர்கள் அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாகுவர்.

இ(2) பொறுப்புநிலையின் தன்மை (Nature of liability): கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் வாதிக்கு ஏற்படுத்திய இழப்பிற்கு கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் (jointly and serveally) பொறுப்புக் கொண்டுள்ளனர். இயற்றாச் சட்டத்தில், கூட்டாகத் தீங்கிழைத்தவர்களின் பொறுப்புநிலை தொடர்பாக இரண்டு விதிகள் பின்பற்றப்பட்டன. இவ்விதிகள் பின்வரும் இருவழக்குகளின் தீர்ப்புகளில் இருந்து உருவானதாகும்.

முதலாவது விதி Brinsmead Vs Harrison, (1871) 2 R 7 C.P. 547., என்ற வழக்கின் தீர்ப்பிலிருந்து உருவான விதியாகும். இவ்வழக்கில் தன்னுடைய 'பியானோவை' (piano) ஹேரிசன் சேதப்படுத்தியதற்காக இழப்பீடு வழங்கக்கோரி பிரின்ஸ்மெட் என்பவர் வழக்கு தொடர்ந்தார். ஹேரிசன் தாமும் 'T' என்பவரும் கூட்டாக சேர்ந்து அத்தவறை செய்ததாகவும், பிரின்ஸ்மெட் ஏற்கனவே 'T'-க்கு எதிராக தீர்ப்புரை (Judgment) பெற்றுள்ளதாகவும் எதிர்வாதம் புரிந்தார். பிரின்ஸ்மெட், தான் 'T'-க்கு எதிராக தீர்ப்புரை பெற்றிருந்தும், 'T'-யிடமிருந்து தொகை எதனையும் பெற முடியாததால், அதே தீங்கில் கூட்டுப்பங்கேற்ற மற்றொருவருக்கு எதிராக மற்றொரு வழக்குத்தொடர தான் தகுதி பெற்றுள்ளதாக வாதிட்டார். நீதிபதி பிளாக்பெர்ன், பிரின்ஸ்மெட், 'T'-க்கு எதிராகப் பெற்றிருக்கும் தீர்ப்புரை மற்றொரு தீங்கிழைத்தவருக்கு எதிராகத் தொடரப்படும் வழக்கிற்கு தடையாகும் என்றும், கூட்டாகத் தீங்கிழைத்தோர்களுக்கு எதிரான வழக்குமூலம் (cause of action) ஒன்றே என்பதால் அடுத்தடுத்து வழக்குகள் தொடருவது (successive actions) அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் குறிப்பிட்டு பிரின்ஸ்மெட்-ன் மனுவை தள்ளுபடி செய்தார். மேலும் "**கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒருவருக்கு எதிராகப் பெறப்பட்ட தீர்ப்பாணையின்மூலம் இழப்பு முழுமையாக ஈடு செய்யாவிட்டாலும்கூட, தீங்கிழைத்த மற்ற அனைவரையும் விடுவித்ததாகும்.** வாதி அவர்களிடம் இழப்பீடு கோரி மீண்டும் வழக்கிட இயலாது" என்பதையும் குறிப்பிட்டார். நீதிபதி பிளாக்பெர்ன் குறிப்பிட்ட இத்தடை 'நாட்டின் நலனுக்காக வழக்குகள் முடிவுக்கு வருதல் வேண்டும்' (interest republicae ut sit finis litium - i.e., it concerns the state that the lawsuit be not protracted) என்கிற கொள்கையின் அடிப்படையைச் சார்ந்ததாகும்.

இரண்டாவது விதி, Merry Weather Vs Nixon., 1799 TR 88., என்ற வழக்கின் தீர்ப்பிலிருந்து உருவானதாகும். இவ்வழக்கில், ஸ்டார்க்கி

(Starkey) என்பவரின் ஆலையில் இருந்த இயந்திரத்தை மெர்ரிவெதர் மற்றும் நிக்சன் ஆகிய இருவரும் சேர்ந்து சேதப்படுத்திவிட்டனர். ஸ்டார்க்கி அவர்கள் இருவரையும் கூட்டாகச் சேர்த்து வழக்கு தொடர்ந்து இழப்பீடாக 840 பவுண்டுகளுக்கு தீர்ப்பாணைப் பெற்றார். தீர்ப்பாணையின் அடிப்படையில் மெர்ரிவெதருக்கு எதிராக மட்டும் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்து அவரிடமிருந்து முழுத்தொகையையும் அதாவது 840 பவுண்டுகளும் பெற்றுவிட்டார். ஸ்டார்க்கியின் இழப்பிற்கு மெர்ரிவெதர் மற்றும் நிக்சன் ஆகிய இருவருமே காரணம் என்பதால், மெர்ரிவெதர் தாம் செலுத்திய தொகையில் பாதியை அதாவது 420 பவுண்டுகளை பங்களிப்பாக தனக்கு கொடுக்க வேண்டும் என்று நிக்சனுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், **'மோசடி, அல்லது வேண்டுமென்றே தீங்கிழைத்ததற்காக, நீதிமன்றம் செலுத்தக்கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை முழுதுமாக செலுத்திய நபர் எவரொருவரும் உடன் தீங்கிழைத்தவரிடம் இருந்து பங்களிப்பைத் திரும்பப் பெறவோ அல்லது ஈட்டுறுதியை கோரவோ (contribution or indemnity) முடியாது'** என்பதைக் குறிப்பிட்டு மெர்ரிவெதரின் மனுவை தள்ளுபடி செய்தது.

மேற்குறிப்பிட்ட விதிகள், 1935-ஆம் ஆண்டின் சட்டச் சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) [Law Reform (Married Women and Tortfeasors) Act, 1935 மற்றும் 1978 ஆம் ஆண்டின் உரிமையியல் பொறுப்புடைமை (பங்களிப்பு) சட்டம் [Civil Liability (Contribution) Act, 1978] ஆகியவற்றின்மூலம் நீக்கப்பட்டுவிட்டன.

இ(3) இந்தியாவில் உள்ள நிலை (Position in India): இந்தியாவில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஓர் பொதுவான சேதம் அல்லது இழப்பிற்கு பொறுப்பாகும்போது (அவர்கள் கூட்டாக சேர்ந்து செயல்பட்டிருந்தாலும் அல்லது தனித்தனியாக செயல்பட்டிருந்தாலும்கூட) அவர்கள் ஒருங்கிணைந்து தீங்கிழைத்தோர் (composite tortfeasors) என அழைக்கப்படுகிறார்கள். இந்தியாவில் கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பான சட்டம் ஏதுமில்லை. எனவே இந்திய நீதிமன்றங்கள் கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பாக, பிரின்ஸ்மெட் மற்றும் மெர்ரிவெதர் வழக்குகளின் விதிகள் மற்றும் 1935-ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்த நிலையைப் பின்பற்றுவதா அல்லது 1935-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்திற்கு பின்னர் நடைமுறையில் உள்ள நிலையை பின்பற்றுவதா என்ற கேள்வி எழுந்தது. 1942-ஆம் ஆண்டுவரையில், இந்திய நீதிமன்றங்கள் பிரின்ஸ்மெட் மற்றும் மெர்ரிவெதர் வழக்குகளில் வகுக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றியது. ஆனால் சில வழக்குகளில் அதன் பொருந்துகை குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டது. எவ்வாறு இருப்பினும், 1942-ஆம் ஆண்டுக்குப்பின், இந்திய நீதிமன்றங்கள், பிரின்ஸ்மெட் மற்றும் மெர்ரிவெதர் வழக்குகளில் ஏற்படுத்தப்பட்ட விதிகள், நீதி, தகைமை நெறி மற்றும் நன்மனச்சான்றுக்கு ஏற்ப இல்லை என்பதால், இந்தியாவில் அதனைப் பின்பற்ற மறுத்துவிட்டன. **(Vedachala Vs Rangaragu, AIR 1960 Mad 457.,** என்ற வழக்கு மட்டும் இதற்கு விதிவிலக்காகும். இவ்வழக்கில், இங்கிலாந்தில் 1935- ஆம்

ஆண்டுக்கு முன்பிருந்த இயற்றாச்சட்டம் பின்பற்றப்பட்டது). இது தொடர்பாக **Kushal Rao Vs. Baburam Ganapat Rao, AIR 1942 Nag 52.,** என்ற வழக்கில், கூட்டுத் தீங்கிழைத்தோரின் பொறுப்புநிலைக்குறித்த விவாதத்தின்போது, மெர்ரிவெதர் வழக்கின் விதி, நீதி, தகைமைநெறி மற்றும் நன்மனச்சான்றுக்கு முரணாக இருப்பதால் இந்தியாவில் பின்பற்றக்கூடாது என்று நாக்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்டோன் குறிப்பிட்டார்.

Dharni Dhar Vs Chandra Shokhar, AIR 1951 All 774., என்ற வழக்கில், கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பான மெர்ரிவெதர் வழக்கின்விதி, இங்கிலாந்தில், 1935-ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பின்னர், இயற்றாச் சட்டத்தின் ஓர் பகுதியாக இல்லாத காரணத்தினால் இந்தியாவில் எழும் வழக்குகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடப்பட்டது.

Nawal Kishore Vs Rameshwar, AIR 1955 All 585., என்ற வழக்கில் நீதிபதி அகர்வால் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். இந்நாட்டில் (இந்தியாவில்) தீங்கியல் குறித்த இயற்றுச் சட்டம் ஏதுமில்லை. இந்நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் சட்டத்தில் உள்ளடக்கப்படாத பொருண்மைகள் குறித்த, நீதி, தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்றின் அடிப்படையில் செயல்படும் மற்றும் நீதி, தகைமைநெறி மற்றும் மனச்சான்று எதனைக் குறிப்பிடுகிறது என்பதை நோக்குவதற்காக ஆங்கிலச் சட்டத்தின்கீழ் நிலைபெற்றிருக்கும் கொள்கைகளை பின்பற்றும். இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள ஏதேனும் நுட்பமான விதி அல்லது இயற்றப்பட்ட சட்டம், இத்தகைய கொள்கைகளின் அடிப்படையில் இல்லாமல் இருப்பதாக, வழக்கினை முடிவு செய்யும் நீதிபதிக்கு தோன்றினால் அதனைப் பின்பற்ற வேண்டியதில்லை என்பதைக் குறிப்பிட்டார்.

இந்திய உச்சநீதிமன்றம், **Khushro S.Gandhi Vs Guzdar, AIR 1970 SC 1468.,** என்ற வழக்கில் கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பான ஆங்கில இயற்றாச் சட்டத்தைப் பின்பற்ற மறுத்துவிட்டது. மேற்கண்ட வழக்குகளின் முடிவுகளில் இருந்து, இந்திய நீதிமன்றங்களின் அண்மைக்காலப்போக்கு, ஆங்கில இயற்றாச் சட்டத்தைப் பின்பற்றுவது என்பது, அது இந்தியச் சூழல்களுக்கு பொருந்தக்கூடிய நீதி, தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்றுக்கு ஏற்ப இருந்தால் மட்டுமே பின்பற்றும் என்பது தெரியவருகிறது.

(ஈ) கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கும் தனித்து தீங்கிழைத்தோருக்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between joint tortfeasors and independent tortfeasors):

கூட்டாகத் தீங்கிழைப்பதில், வாதிக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றாகச் சேர்ந்து செய்யப்படும் செயல்களினால் ஏற்படுகிறது. தனித்து தீங்கிழைப்பதில் வாதிக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தனித்தனியே செய்யும் செயல்களின் மொத்த விளைவால் ஏற்படுகிறது. கூட்டாகத் தீங்கிழைப்பதில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு நபர்களுக்கும் இடையே நெருங்கிய

தொடர்பு மற்றும் பொதுவான எண்ணம் கண்டிப்பாக இருக்கும். தனித்து தீங்கிழைப்பதில் இவ்விரு கூறுகளும் இருக்காது. கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து ஒரேத்தன்மையான தீங்கினை விளைவிப்பதால் ஒரேயோரு வழக்குமூலம் (cause of action) மட்டுமே எழும். தனித்த தீங்கிழைப்பதில் ஒவ்வொரு நபர்களின் தனித்தனியான செயல்களின் மொத்த விளைவினால் வாதிக்கு ஏற்படும் தீங்கு ஒன்றே என்றாலும்கூட, நபர்களிடையே தொடர்பு மற்றும் பொதுவான எண்ணம் இல்லாததால், ஒவ்வொருவரின் தனித்தனியான செயலும் வழக்குமூலங்களாக அமையும். கூட்டாகத் தீங்கிழைத்தவர்களின் பொறுப்புநிலை கூட்டாகவும் தனித்தனியாகவும் இருக்கும். தனித்து தீங்கிழைப்பவர்களின் பொறுப்புநிலை தனித்தனியாக மட்டுமே இருக்கும்.

மேற்குறிப்பிட்ட வேறுபாடுகள் எவ்வாறிருப்பினும், இங்கிலாந்தில் 1935 மற்றும் 1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டங்கள், கூட்டாகத் தீங்கிழைப்பவர்களை தனித்து தீங்கிழைப்பவர்களுக்கு ஒத்தநிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு எதிராக முன்னரே மேற்கொண்ட நடவடிக்கை, எஞ்சியிருப்பவர்களுக்கு எதிராகத் தொடரப்படும் வழக்கிற்கு தடையாக இருக்காது.

கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவரின் விடுவிப்பு இதற்கு முரணாக வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி அனைவரின் விடுவிப்பிற்கும் வழிவகுக்கும். ஆனால் தனித்து தீங்கிழைப்பவர்கள் குறித்தநிலை அவ்வாறு இல்லை.

28. கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் யாவர்? அவர்களின் பொறுப்புநிலை தன்மையை விவாதிக்க. மெர்ரிவெதர் எதிர் நிக்சன் என்ற வழக்கில் கூறப்பட்ட விதியையும் அதற்கான விதிவிலக்குகளையும் கூறி விவாதிக்க. (Who are joint tortfeasors? Discuss the nature of their liability. State and discuss the rule in Merryweather Vs. Nixor, giving the exceptions to the rule). May-2012.

விடைச்சுருக்கம்: (அ) கூட்டாக தீங்கிழைப்பவர்கள் – (ஆ) கூட்டாகத் தீங்கிழைப்போரின் பொறுப்புநிலையின் தன்மை – (இ) மெர்ரிவெதர் வழக்கின்விதி மற்றும் அதற்கான விதிவிலக்குகள்.

(அ) கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் (Joint Tortfeasors): (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

(ஆ) கூட்டாகத் தீங்கிழைப்போரின் பொறுப்புநிலையின் தன்மை (Nature of joint tortfeasors liability): (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு இ(2)-ல் காண்க).

(இ) மெர்ரிவெதர் வழக்கின் விதி மற்றும் அதற்கான விதிவிலக்குகள் (Rule in Merryweather case and exceptions to the rule):

இ(1) மெர்ரிவெதர் வழக்கின் விதி (Rule in Merryweather case): கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பாக மெர்ரிவெதர் வழக்கில் வகுக்கப்பட்ட விதி பின்வருமாறு:

"மோசடி அல்லது வேண்டுமென்றே தீங்கிழைத்ததற்காக நீதிமன்றம் செலுத்தக்கோரிய இழப்பீட்டுத்தொகையை முழுதுமாக செலுத்திய நபர் எவரொருவரும், உடன்-தீங்கிழைத்தவரிடம் இருந்து பங்களிப்பைப்பெறவோ அல்லது ஈட்டுறுதியையோ பெற முடியாது"

மேற்குறிப்பிட்ட விதியை வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையே நபர்களால் செய்யப்பட்ட சேதத்திற்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகையில் பங்களிப்பு கோரவோ அல்லது அவர்களில் இழப்பீட்டுத் தொகையை முழுவதுமாக செலுத்திய நபர் ஒருவர் தனக்கு ஏற்பட்ட இழப்பை அக்கூட்டுத்தீங்கில் பங்குபெற்ற பிறநபர்களிடம்இருந்து பங்களிப்பு பெறுவதற்காக அல்லது ஈட்டுறுதி பெறுவதற்காக எந்தவொரு வழக்கையும் தொடரமுடியாது என்பதாகும்.

இ(2) மெர்ரிவெதர் வழக்கின் விதிக்கு எதிரான விலக்குகள் (Exceptions to the rule in Merryweather case):

(1) பிரிட்டனில் 1911-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கடலாண்மை வழக்காறுகள் சட்டம், ஓர் கப்பலில் பயணம் செய்தவர்களின் உயிரிழப்பு அல்லது தனிப்பட்ட ஊறுகள் அக்கப்பலின் தவறு காரணமாக அல்லது மற்றொரு கப்பலின் தவறு காரணமாக என்றிருந்து, ஒரு கப்பலின் உரிமையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட இழப்பீட்டுத்தொகை, அக்கப்பல் செய்த தவறின் விகிதத்திற்கும் அதிகமாகப் பெறப்பட்டிருந்தால், அக்கப்பலின் உரிமையாளர்கள் தாங்கள் செலுத்திய கூடுதல் தொகையை திரும்பப்பெறுவதற்காக, மற்றொரு கப்பலின் உரிமையாளர்கள்மீது வழக்கிட்டுப் பெறலாம்.

(2) இங்கிலாந்தின் நிறுவனங்கள் சட்டம், 1929-ன் பிரிவு-37(3)-ன்படி, திட்ட அறிவிப்பில் (prospectus) தவறான அறிக்கைகள் கொடுத்ததற்காக பொறுப்புநிலைக்கு உள்ளாகும் நிறுவனத்தின் இயக்குநர், தான் செலுத்திய தொகைக்காக, அத்தொகையை செலுத்தும் பொறுப்புநிலைக்கு உள்ளாகி இருந்திருக்கக்கூடிய எந்தவொரு நபரிடமிருந்தும் பங்களிப்பைக் கோரமுடியும்.

(3) இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932-ன் பிரிவுகள் 13(e) மற்றும் 13 (f)-ன்படி, ஒரு கூட்டாளி செலுத்திய தொகைக்காக அல்லது உள்ளாகிய பொறுப்புகளுக்கான ஈட்டுறுதியை நிறுமத்திடமிருந்து பெற உரிமை கொண்டுள்ளார். மேலும், ஒரு கூட்டாளி, கூட்டாண்மை நிறுமத்தின் தொழிலை நடத்தும்போது, அறிந்திருந்தே கவனக்குறைவுடன் செயல்பட்டதால் நிறுமத்திற்கு ஏற்படுத்திய இழப்பிற்காக, நிறுமத்திற்கு ஈட்டுறுதி அளிக்கவும் பொறுப்பு கொண்டுள்ளார்.

(4) பகரப்பொறுப்பு வழக்குகளில், தவறு செய்யாத ஒருவர், மற்றொருவர் செய்த தவறுக்காக இழப்பீடு செலுத்தப்பட நேர்ந்தால், அவர் எவரின் தவறுக்காக

இழப்பீடு செலுத்தினாரோ அவரிடமிருந்து ஈட்டுறுதி கோரமுடியும். எனவே பணியாளர் பணியின்போது செய்த தவறுக்காக பணித்தலைவர் இழப்பீடு செலுத்தினால், அவர் பணியாளரிடம் ஈட்டுறுதிக் கோர முடியும். பகரப்பொறுப்புநிலை உறவுகள் எழும் அனைத்திற்கும் இது பொருந்தும்.

29. கூட்டாகத் தீங்கிழைத்தோர் என்பவர் யார்? அவர்களது பொறுப்புநிலை 1935-லிருந்து எவ்வாறு மாற்றப்பட்டுள்ளது? (Who are Joint Tortfeasors? How their liability is altered from 1935?) - May-2019(v).

விடைச்சுருக்கம்: (அ) கூட்டாக தீங்கிழைத்தோர் - (ஆ) 1935- ஆம் ஆண்டுக்குப் பின்னரான மாற்றம்.

(அ) கூட்டாகத் தீங்கிழைத்தோர் (Joint Tortfeasors)

(வினா-எண் 27-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

(ஆ) 1935-ஆம் ஆண்டுக்குப் பின்னரான நிலை (Changes after the year 1935): கூட்டாகத் தீங்கிழைத்தோர் பொறுப்பு நிலை தொடர்பாக பிரின்ஸ்மெட் எதிர் ஹேரிசன் மற்றும் மெர்ரிவெதர் எதிர் நிக்சன் வழக்குகளின்மூலம் ஏற்படுத்தப்பட்ட இயற்றாச் சட்ட விதிகள், நீதி, தகைமைநெறி மற்றும் நன்மனச்சான்று கொள்கைக்கு முரணாக இருந்தது. எனவே, இவ்விரண்டு வழக்குகளில் வகுக்கப்பட்ட விதிகள், 1935-ஆம் ஆண்டின் சட்டச் சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டம் மற்றும் 1978-ஆம் ஆண்டின் உரிமையியல் பொறுப்புடைமை (பங்களிப்புச்) சட்டம் ஆகியவற்றின் மூலமாக நீக்கப்பட்டன. இதனை பின்வருமாறு காண்போம்.

ஆ(1) பிரின்ஸ்மெட் எதிர் ஹேரிசன் 'வழக்கு விதி' ஒழிப்பு (Abolition of 'Rule in Brinsmead Vs Harrison'): பிரின்ஸ்மெட் வழக்கில், கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவர்மீது மட்டும் வழக்கிட்டுப் பெறப்பட்ட தீர்ப்பாணையின்மூலம், முழு இழப்பும் ஈடு செய்யப்படாமல் இருந்தாலும்கூட, தீங்கிழைத்தோர் பிறர் அவைரும் பொறுப்புநிலையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக கருதப்பட்டது. மேற்கொண்டு வாதி, தீங்கிழைத்த பிறருக்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கிட இயலாது எனும் விதி ஏற்படுத்தப்பட்டது. கூட்டாகத்தீங்கிழைத்தோரைப் பொறுத்தவரை அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புநிலைக் கொண்டிருக்கும்போது, அவர்களில் ஒருவருக்கு எதிராகப் பெற்ற தீர்ப்புரை, மற்றப் பிறரைப் பொறுத்த தனித்தனியான தீர்வுகளுக்கு எதிராக இருக்கும் என்பது வெளிப்படையாக கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புநிலை என்ற கருத்துருவிற்கு (concept) முரண்பட்டதாகும். இவ்விதி மேற்குறிப்பிட்ட 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 6(1) (a)-ன் மூலமாகவும் அதன்பின்னர் 1978-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு-3-ன் மூலமாகவும் நீக்கப்பட்டது.

1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு-6(1)(a), கூட்டாகத் தீங்கிழைத்தோரில், ஒருவர் அல்லது சிலருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை,

தீங்கிழைத்தோர் பிறருக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு தடையாக இருக்காது என்பதைக் குறிப்பிடுகிறது. 1978-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு-3, எந்தவொரு கடன் அல்லது இழப்பு தொடர்பாக பொறுப்புநிலைக் கொண்டுள்ள எந்தவொரு நபருக்கு எதிராகவும் பெறப்பட்ட தீர்ப்புரை, அத்தகைய கடன் அல்லது இழப்பு தொடர்பாக அந்நபருடன் கூட்டாக பொறுப்புநிலைக் கொண்டுள்ள பிறநபர்களுக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு அல்லது 'வழக்கின் தொடர்ந்திருக்கும் நிலைக்கு' தடையாக இருக்காது என்பதைக் குறிப்பிடுகிறது.

1935-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு-6(1)(a), பிரின்ஸ்மெட் வழக்கின் விதியை ரத்து செய்த பின்னரும், 1978-ஆம் ஆண்டு சட்டத்தில் மீண்டும் அதனைக் குறிப்பிட்டு ரத்து செய்யப்பட்டது. குறிப்பாக, 1978-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு-3- ல் குறிப்பிடப்பட்டுள்ள 'வழக்கின் தொடர்ந்திருக்கும் நிலைக்கு (continuance of an action) தடையாக இருக்காது' என்ற சொற்கள் உற்று நோக்கத்தக்கதாகும். ஏனெனில் கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பான வழக்கில் வழக்குமூலம் ஒன்றே என்பதால், ஒருமுறை வழக்கிடுவதன்மூலம் வழக்குமூலம் முடிவுற்றதாக கூறப்பட்டது. இதனைக் களையவே மேற்குறிப்பிட்ட சொற்கள் பயன்படுத்தப்பட்டது. '

ஆ(2) 'மெர்ரிவெதர் எதிர் நிக்சன் வழக்குவிதி' ஒழிப்பு (Abolition of 'Rule in Merryweather Vs Nixon'): கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையே பங்களிப்பு கோர முடியாது எனும் மெர்ரிவெதர் எதிர் நிக்சன் வழக்கின்விதி, 1935 ஆம் ஆண்டு சட்டச்சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டத்தின்மூலம் நீக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-6(1), கூட்டாகத் தீங்கிழைத்தோரில் தன்னுடைய பங்கிற்கும் மேலாக இழப்பீட்டுத் தொகையை செலுத்திய நபர், மற்ற உடன் தீங்கிழைத்தோர்களிடம் இருந்து பங்களிப்பு கோருவதை அனுமதிக்கிறது.

முடிவுரை (Conclusion): கூட்டாகத் தீங்கிழைத்தோர் தொடர்பான 1935 ஆம் ஆண்டின் சட்டச் சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டம் மற்றும் 1978-ஆம் ஆண்டின் உரிமையியல் பொறுப்படைவு (பங்களிப்புச்) சட்டம் ஆகிய இரண்டும் சேர்ந்து, கூட்டாகத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலையை, தனித்து தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலைக்கு சமமான நிலையை உருவாக்கியது என்றே கூறலாம்.

30. கூட்டாகவும் தனித்தனியாகவும் தீங்கிழைப்பவர்களை வகைப்படுத்திக் கூறுக. ஒவ்வொரு தீங்கிழைப்பவரும் என்னென்ன சூழ்நிலைகளில் பிறருக்கு எதிராக ஈட்டுறுதியும் பங்களிப்பும் கோரலாம்? (Classify joint and several tortfeasors. Under what circumstances can each tortfeasors claim indemnity and contribution from the other tortfeasors?) - Nov-2014(v).

விடைச்சுருக்கம்: (அ) கூட்டாக தீங்கிழைப்போர் - (ஆ) தனித்து தீங்கிழைப்போர் - (இ) கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையேயான பங்களிப்பு - (ஈ) கூட்டாகத் தீங்கிழைததோருக்கு இடையேயான ஈட்டுறுதி

(அ) கூட்டாகத் தீங்கிழைப்போர் (Joint Tortfeasors): (வினா. எண் 27-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க)

(ஆ) தனித்து தீங்கிழைப்போர் (Independent or several Tortfeasors): (வினா. எண் 27-க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க)

(இ) கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையேயான பங்களிப்பு (Contribution between joint tortfeasors):

கூட்டாகத் தீங்கிழைத்தோர் வாதிக்கு இழப்பீடு செலுத்த கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் பொறுப்பு கொண்டுள்ளனர். எனவே வாதி விருப்பப்படின், இழப்பீட்டுத்தொகை முழுவதையும் கூட்டாகத் தீங்கிழைத்தோரில் எவரேனும் ஒருவரை மட்டும் செலுத்தக்கோரும் உரிமையைக் கொண்டுள்ளார். இங்கு பொதுவாக எழும் கேள்வி என்னவெனில், கூட்டாகத் தீங்கிழைத்த பலரில் ஒருவர் மட்டும், பொறுப்புநிலையில் தான் கொண்டுள்ள பங்கு மட்டுமின்றி, பிறர் கொண்டுள்ள பொறுப்புநிலைப் பங்கு முழுவதையும் செலுத்தச் செய்யும்போது, தன்னுடன் சேர்ந்து பொறுப்புநிலைக் கொண்டிருக்கும் தீங்கிழைத்த மற்ற நபர்களை அவர்களின் பங்கை தனக்கு செலுத்துமாறு கோரமுடியுமா என்பதாகும். எடுத்துக்காட்டாக, 'X' என்பவருக்கு எதிராகப் புரிந்த தீங்கிற்கு 'A' மற்றும் 'B' ஆகிய இருவரும் சமமான பொறுப்புநிலை கொண்டிருந்து, இழப்பீட்டுத் தொகை ரூபாய் 1,000/- ஐ முழுமையாக 'A'-வை மட்டும் செலுத்தப்படச் செய்தால், 'A', 'B' -ன்மீது வழக்கிட்டு - 'B'-ன் பொறுப்பு நிலைப் பங்கான ரூபாய் 500/- ஐ திரும்பப்பெற முடியுமா? இக்கேள்விக்கு அவ்வாறு பெற முடியாது என Merryweather Vs Nixon (1799) 8 TR 186., என்ற வழக்கில் கூறப்பட்டது. இவ்வழக்கில் கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையே பங்களிப்பு கோர முடியாது எனக் குறிப்பிடப்பட்டது.

கூட்டாகத் தீங்கிழைத்தோரில் பங்களிப்பைக் கோரும் ஒருவர், பிற தீங்கிழைத்தோருடன் உட்கிடையான ஒப்பந்தம் ஒன்றை செய்துக் கொண்டிருப்பதாகவும் மற்றும் தவறானமுறையில் பெற்ற ஆதாயத்திலிருந்து பங்கு கோருவதோ அல்லது இழப்பை ஈடுசெய்யக் கோருவதோ அநீதியானது என்று மெர்ரிவெதர் வழக்கின் விதி கருதுகிறது. இவ்விதி 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் நீக்கப்படும்வரையில் அதாவது 136 ஆண்டுகள்வரை பின்பற்றப்பட்டது. கூட்டாகத் தீங்கிழைத்ததற்கான சுமை ஒருசிலர் மீது மட்டுமே சுமத்தப்படவும், வாதி கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவர் அல்லது ஒருசிலர்மீது மட்டும் வழக்கிட்டு இழப்பீட்டுத்தொகை முழுமையும் பெற முடிவதால் உடன் தீங்கிழைத்தபிறர் ஒட்டுமொத்தமாக தங்களின் பொறுப்புநிலையில் இருந்து தப்பிப்பதற்கு உதவுவதால் இவ்விதி அநீதியானது என கடும் விமர்சனங்களுக்கு உள்ளானது. **Palmer Vs Wick & P.S.Shipping Co (1894) AC 318.**, என்ற

வழக்கில் இவ்விதி மற்ற நாட்டின் சட்டவியலுக்கு நீட்டிப்பதை நியாயப்படுத்தும் அளவிற்கு, நீதி அல்லது தகைமைநெறி அல்லது பொதுநலக்கொள்கை ஆகிய எந்தவொரு கொள்கையின் அடிப்படையைக் கொண்டதாகவும் எனக்குத் தோன்றவில்லை என ஹெர்ஷெல் பிரபு (Lord Herschell) குறிப்பிட்டார்.

கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையே பங்களிப்பு கோர இயலாது எனும் மெர்ரிவெதர் வழக்கின் விதி, 1935-ஆம் ஆண்டு சட்டச் சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைப்போர்) சட்டத்தின்மூலம் நீக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-6(1), கூட்டாகத் தீங்கிழைத்தோரில் தன்னுடைய பங்கிற்கும் மேலாக இழப்பீட்டுத்தொகையை செலுத்திய நபர், பிற உடன் தீங்கிழைத்தோரிடம் இருந்து பங்களிப்பு கோருவதை அனுமதிக்கிறது. இருப்பினும் வாதிக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பாக பொறுப்பு கொண்டுள்ள தீங்கிழைத்தோரிடம் இருந்து மட்டுமே பங்களிப்பு கோர முடியும் என்பது கவனிக்கத்தக்கதாகும். எனவே 'X' மற்றும் 'Y' ஆகிய இருவரும் கூட்டாக சேர்ந்து 'A'-க்கு எதிராக தீங்கு ஒன்றை புரிந்திருந்து, 'X' மற்றும் 'Y' ஆகிய இருவரும் 'A'-க்கு பொறுப்பாக வேண்டிய சூழ்நிலை இருப்பின், 'A'-க்கு ஏற்பட்ட இழப்பை 'X' மட்டுமே முழுமையாக செலுத்தும்படி செய்யப்பட்டால், 'X', 'Y'-யிடம் பங்களிப்பு கோர முடியும். இதே எடுத்துக்காட்டில் ஒருவேளை ஏதேனும் சிலக்காரணங்களின் அடிப்படையில் 'Y'-ஐ, 'A'-ன் இழப்பிற்கு பொறுப்பேற்கச் செய்ய முடியாமல் இருப்பின், 'X', 'Y'-யிடமிருந்து பங்களிப்பு எதனையும் கோர முடியாது. **Drinkwater Vs Kimber, (1952) 2 QB 261.**, என்ற வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில், ஓர் பெண், தனது கணவர் மற்றும் ஓர் மூன்றாம் நபரின் கூட்டுக் கவனக்குறைவின் காரணமாக காயமுற்றார். அப்பெண், மூன்றாம் நபரின்மீது வழக்கிட்டு இழப்பீட்டுத்தொகை முழுவதையும் பெற்றார். நடைமுறையில் இருந்த சட்டத்தின்படி, ஓர் கணவர் தன் மனைவிக்கு இழைத்த தனிப்பட்ட ஊறுகளுக்காக, அவனை பொறுப்பாக்க முடியாது என்பதால் மூன்றாம் நபர் அப்பெண்ணின் கணவனிடம் இருந்து பங்களிப்பு எதனையும் பெறமுடியவில்லை.

கூட்டாகத் தீங்கிழைத்தோர் ஒருவர் பங்களிப்பாக செலுத்தவேண்டிய தொகை, இழப்பை ஏற்படுத்தியதில் கொண்டிருந்த அவரின் பொறுப்பைச் சார்ந்து அமையும். மேற்குறிப்பிட்ட 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு-6(2), எந்தவொரு நபரிடமிருந்தும் திரும்பப்பெறும் பங்களிப்புத்தொகை, இழப்பை ஏற்படுத்தியதில் நபர் கொண்டிருந்த அளவை கவனத்தில் கொண்டு நியாயமானது மற்றும் தகைமை நெறியிலானது என நீதிமன்றம் முடிவு செய்யும் அத்தகையதாக இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக, கூட்டாகத் தீங்கிழைத்த 'A' மற்றும் 'B' என்னும் இருவரில், இருவரும் தவறுக்கு சமபொறுப்பு கொண்டிருந்து, இழப்பீட்டுத்தொகை முழுவதையும் 'A'-யினால் செலுத்தப்படச் செய்திருப்பின், 'A', B-யிடம் இருந்து அவரின் பங்களிப்பான 50% தொகையை பெற முடியும். ஆனால் தவறான செயலைப் புரிந்ததில் அவர்களின் பொறுப்பு சமமாக இல்லாமல் இருப்பின், அதாவது, அத்தவறில் 'A'-ன் பங்கு 75% என்றும் 'B'-யின் பங்கு 25%

என்றும் வைத்துக்கொண்டால், 'A', 25% பங்களிப்பினை மட்டுமே 'B'-யிடம் இருந்து கோரமுடியும்.

(ஈ) கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு இடையேயான ஈட்டுறுதி அல்லது இழப்பை ஈடுசெய்தல் (Indemnity between joint tortfeasors):

கூட்டாகத் தீங்கிழைத்தோர், தீங்குற்ற தரப்புக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்பதையும், சில நேரங்களில் வாதி தனக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும் அவர்களில் ஒருவரிடம் மட்டுமே பெறலாம் என்பதையும் மேலே கண்டோம். ஒரு சில சூழ்நிலைகளில், கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒருவர் மட்டுமே முழுத்தொகை செலுத்த நேரிடும் அத்தகைய நபர், குற்றம் ஏதும் செய்யாதவராக அதாவது கூட்டாகத் தீங்கிழைத்த மற்ற சிலரே அத்தவறான செயலுக்கு முழுமையான காரணமாகவும்கூட இருக்கலாம். இத்தகைய நிலையில், கூட்டாக தீங்கிழைத்தவர்கள், இழப்பீட்டுத்தொகையை செலுத்திய நபருக்கு முழுமையாக ஈடுசெய்ய வேண்டும். 1935-ஆம் ஆண்டு சட்டச்சீர்திருத்தச் சட்டத்திற்கு முன்னரே மெர்ரிவெதர் வழக்கு விதிக்கு, விதிவிலக்குகள் அங்கீகரிக்கப்பட்டது. சூழ்நிலை அவசியம் ஏற்படும்போது, கூட்டுத் தீங்கிழைத்தோரில் ஒருவர், மற்றொரு கூட்டுத்தீங்கிழைத்தவரிடம் இருந்து ஈட்டுறுதியை கோரமுடியும். **Adamson Vs Jarvis, (1827) 4 Bimg 66.,** என்ற வழக்கில், கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவர் மற்றொருவரிடம் இருந்து ஈட்டுறுதியைக் கோரமுடியும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. இவ்வழக்கில் ஏல விற்பனை நடத்தும் வாதி, பிரதிவாதி தன்னிடம் ஏல விற்பனை செய்யும்படி அளித்த சிலக் குறிப்பிட்ட பொருள்களை, நல்லெண்ணத்துடன் அவர் சார்பாக விற்றுவிட்டார். ஆனால் பிரதிவாதி அப்பொருட்களின்மீது எவ்வித உரிமையும் கொண்டிருக்கவில்லை. அப்பொருட்களின் உண்மையான உரிமையாளர் வழக்கிட்டு ஏல விற்பனையாளரிடம் இருந்து இழப்பீட்டுத்தொகை முழுவதையும் பெற்றார். நீதிமன்றம் பிரதிவாதியால் ஏல விற்பனையாளருக்கு ஏற்பட்ட இழப்பிற்கு, ஏல விற்பனையாளர் அவரிடம் இழப்பினை ஈடுசெய்யக் கோருவதற்கு உரிமை கொண்டுள்ளார் என்று தீர்ப்பளித்தது. குற்றமற்ற தரப்பினரே ஈட்டுறுதியைக் கோர முடியும் என்பதே இவ்வழக்கில் பின்பற்றப்பட்ட நிலையாகும். **W.H. Smith & Son Vs Clinton & Harris, (1908) 99 L.T. 840.,** என்ற வழக்கில், ஓர் தவறான செயலை அறிந்திருந்தே செய்யும் அல்லது அச்செயலை செய்வதற்கு அதிகாரமளிக்கும் நபர் ஈட்டுறுதிக்கோரும் உரிமையை பெற்றிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டது.

பகரப்பொறுப்பு வழக்குகளில், தவறு செய்யாத ஒருவர், மற்றொருவர் செய்த தவறுக்காக இழப்பீடு செலுத்தப்பட நேரிட்டால், அவர் எவரின் தவறுக்காக இழப்பீடு செலுத்தினாரோ அவரிடமிருந்து ஈட்டுறுதியைக் கோரமுடியும். கூட்டாண்மை நிறுமத்திலுள்ள கூட்டாளிகளின் பொறுப்புநிலையின் தன்மையும் இதனை ஒத்ததேயாகும். இந்தியக்கூட்டாண்மைச் சட்டம், 1932, இத்தகைய வகையங்களைக் கொண்டுள்ளது. ஒரு கூட்டாளி செலுத்திய தொகைக்காக அல்லது உள்ளாகிய

பொறுப்புகளுக்கான ஈட்டுறுதியை நிறுமத்திடமிருந்து பெற உரிமை கொண்டுள்ளார். மேலும் ஒரு கூட்டாளி, கூட்டாண்மை நிறுமத்தின் தொழிலை நடத்தும்போது அறிந்திருந்தே கவனக்குறைவுடன் செயல்பட்டதால் நிறுமத்திற்கு ஏற்படுத்திய இழப்பிற்கு, நிறுமத்திற்கு ஈட்டுறுதி அளிக்கவும் பொறுப்பு கொண்டுள்ளார் [பிரிவுகள் - 13(e) மற்றும் 13(f)].

அலகு - VI

தீர்வழிகள் (Remedies)

PART - A/B

31. 'தீங்கியல் சட்டத்தில் தீர்வழிகள் இருவகைப்படும் - நீதித்துறை வழியன மற்றும் நீதித்துறை புறத்தன' - இருதீர்வழிகளையும் விரிவாக விவாதிக்கவும். ('Remedies in tort are of two kinds - Judicial and Extra judicial' - Discuss the two remedies in detail) - Nov-2017, May-2019.

✦ 'நீதித்துறையகத்தன, புறத்தன என தீங்கியலில் இரு தீர்வழிகள் உள்ளன' அவ்விரு தீர்வழிகள் குறித்து விரிவாக விவாதிக்கவும். ('Remedies in tort are of two kinds - Judicial and Extra judicial' - Discuss the two remedies in detail) - Nov-2012 (v), May-2016 (v).

SN - 39 நீதிமுறை நிவாரணங்கள் அல்லது நீதித்துறையகத் தீர்வழிகள் / Judicial Remedies., May-2012, Nov-2012.

SN - 40 இழப்பீடுகளின் வகைகள் / Kinds of damages - Nov-2015

SN - 41 உண்மையான தீங்கீடு/ Real damages, May-2012.

SN - 42 அற்பத்தீங்கு / Contemptuous damages, May-2013

SN - 43 நீதிமன்றத்திற்கு வெளியேயான தீர்வழிகள் அல்லது புறநீதிமன்ற தீர்வழிகள் / Extra-judicial remedies., Nov-2016(v), May-2018 (v).

விடைச்சுருக்கம்: (அ) நீதிமுறைத்தீர்வழிகள் - ஆ(i) இழப்பீடு - அ(2) உறுத்துக்கட்டளை - அ(3) குறிப்பிட்ட சொத்தை மீட்டடைவித்தல் - (ஆ) நீதிமன்றத்திற்கு வெளியே பெறக்கூடிய தீர்வழிகள் - ஆ (1) சுயஉதவி (அ) தற்காப்பு - ஆ (2) நிலத்தில் மீண்டும் நுழைதல் - ஆ (3) பொருள்களை மீட்டல் - ஆ (4) தொல்லையை அகற்றுதல்

தவறுகள் நிவாரணம் அளிக்கப்படாமல் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதை சட்டவிதிக் கோருகிறது. தவறு செய்யும் அனைத்து நபர்களும், உரிமையியல் சட்டத்தை மீறியதற்காக இழப்பீடு கோரி தொடரப்படும் வழக்கிற்கும் அல்லது குற்றத்தண்டனைக்கும் பொறுப்பாவார்கள். தீங்கியல் சட்டம் நன்கு அறியப்பட்ட 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' (ubi jus ibi remedium) எனும் முதுமொழியை அடிப்படையாகக் கொண்டதாகும். தீர்வழியின் வாயிலாக உரிமை மீறுகை தடுக்கப்படுகிறது, குறை நீக்கப்படுகிறது அல்லது ஈடுசெய்யப்படுகிறது. தீங்கியல் சட்டத்தின்கீழான தீர்வழிகள் இரண்டு வகைப்படும். அவை நீதித்துறை அல்லது நீதிமுறைத் தீர்வழிகள் மற்றும் நீதிமன்றத்திற்கு வெளியே அல்லது நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு பெறும் தீர்வழிகள் என்பனவாகும்.

(அ) நீதித்துறை தீர்வழிகள் அல்லது நீதிமுறைத் தீர்வழிகள் (Judicial remedies): பிரதிவாதி இழைத்த தீங்குக்காக, வாதி அவருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கிட்டு பெறும் தீர்வுகளே நீத்துறைத் தீர்வழிகளாகும். இவ்வகையின்கீழ் வாதிக்கு பின்வரும் தீர்வழிகள் கிடைக்கும்;

(1) இழப்பீடு அல்லது தீங்கீடு;

(2) உறுத்துக்கட்டளை; மற்றும்;

(3) குறிப்பிட்ட சொத்தை மீட்டடைவித்தல்.

(1) இழப்பீடு (Damages): 'Damage' என்றச்சொல், சேதம் அல்லது இழப்பு என்பதைக் குறிக்கும். பிரதிவாதியின் தவறானச் செயலால் வாதிக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்படும்போது, பிரதிவாதியிடமிருந்து இழப்பீடு (damages) பெறுவதற்கு அவர் உரிமை கொண்டுள்ளார். இழப்பீடு என்பது, ஓர் நபர் சட்டக் கடமையை மீறியதால் அல்லது தீங்கு புரிந்ததால், மற்றொரு நபருக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறினை பணஅளவில் ஈடு செய்வதைக் குறிக்கும். தீங்கியல் சட்டத்தின்கீழான இழப்பீடு என்பது அறுதியிடப்படாத இழப்பீட்டைக் குறிக்கும். **Smith Vs London and South Western Rly. Co., (1870) 6 CP 14.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு, இழப்பீடு இருவித நோக்கங்களை நிறைவேற்றுகிறது. முதலாவதாக, தீங்குற்ற நபருக்கு மனநிறைவை அளிக்கிறது. இரண்டாவதாக, தீங்கிழைத்த நபருக்கு தண்டனை அளிப்பதன் வாயிலாக, எதிர்காலத்தில் அத்தகைய செயலை செய்வதனின்று தடுக்கிறது.

அ(1) (a) இழப்பீட்டின் வகைகள் (Kinds of damages): தீங்கியல் சட்டத்தின்மிக முக்கியமான தீர்வழி இழப்பீடு ஆகும். இழப்பீடு அல்லது தீங்கீடு பின்வரும் வகைகளில் ஏதேனுமொன்றாக இருக்கும்;

(i) பெயரளவிலான இழப்பீடு;

(ii) உண்மையான இழப்பீடு;

(iii) அற்ப இழப்பீடு;

(iv) எச்சரிக்கை இழப்பீடு;

(v) இழப்பை ஈடு செய்யும் இழப்பீடு;

(vi) கூடுதலாக்கப்பட்ட இழப்பீடு; மற்றும்;

(vii) எதிர்கால மற்றும் தொடர்ந்திருப்பதற்கான இழப்பீடு.

1(a)(i) பெயரளவிலான இழப்பீடு (Nominal damage): நீதிமன்றம் வாதிக்கு வழங்கும் பெயரளவு இழப்பீடு என்பது, இழப்பை ஈடுசெய்வதற்காக அல்லாமல், பிரதிவாதியால் மீறப்பட்ட வாதியின் சட்ட உரிமையை அங்கீகரிக்கும் ஓர் முறையாக வழங்கப்படுவதாகும். எ-டு: அத்துமீறல், தாக்கமுனைதல், வசதியுரிமை மீறல் போன்றவைகள். பெயரளவு இழப்பீடு என்று அழைக்கப்படுவதற்கான காரணம், சாதாரணமாக இவ்வகையின்கீழ் வழங்கப்படும் இழப்பீடு, வழக்குச்செலவு, வழக்குதொடுப்பதில் உள்ள தொந்தரவு போன்றவற்றிற்கும்கூட தொடர்பற்று மிகக்குறைவாக (எ-டு: ஒரு ரூபாய்) வழங்கப்படுவதாகும். உண்மையில் வாதிக்கு குறிப்பிடத்தக்க இழப்பு ஏதும்

ஏற்படாமல் இருந்தாலும்கூட, ஆனால் பிரதிவாதியால் மீறப்பட்டுள்ள வாதியின் உரிமை தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதொன்றாக, அதாவது உண்மையில் ஏற்பட்டுள்ள இழப்பை மெய்ப்பிக்காமலேயே வழக்கிடத்தக்க ஓர் தீங்காக இருப்பதாகும். **Ashby Vs White, (1703) 2 Ld. Raym 938.,** என்ற வழக்கில் வாதி வாக்களிக்க விரும்பிய வேட்பாளர், அவரது வாக்கு இல்லாமலேயே தேர்தலில் வெற்றி பெற்றதால், அவருக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றாலும்கூட, அவரின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதால் நீதிமன்றம் பெயரளவு இழப்பீடு வழங்கியது.

1(a) (ii) உண்மையான இழப்பீடு (Real damages): இது, இயல்பான (ordinary) அல்லது கணிசமான (substantial) இழப்பீடு என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட இழப்பிற்கு நியாயமான அளவில் இழப்பீடு வழங்குவதே உண்மையான இழப்பீடு என்பதாகும். இருப்பினும் வாதி உண்மையான இழப்பீடாகப் பெறுவது இழப்பீடே அன்றி மீட்டடைவிப்பு (restitution) அல்ல. அதாவது, அத்தகைய இழப்பீடு வாதியை பழைய நிலைக்கு கொணரும் அவசியத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதாகாது. உண்மையான இழப்பீடு என்பது, வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட இழப்பை கவனத்தில் கொண்டு நியாயமானது மற்றும் போதுமானது என்பதை தீர்மானித்து வழங்கப்படுவதே தவிர, சாதாரணமாக வாதியின் சட்ட உரிமை மீறப்பட்டுள்ளது என்பதை அங்கீகரிப்பதல்ல. இது வாதி உள்ளாகிய இழப்பிற்கு, வழங்கப்படும் தொகை நேர்மையானது மற்றும் தகைமை நெறியிலானது என்பதன் அடிப்படையிலான தீர்வளிப்பாகும். இழப்பீடாக அளிக்கப்பட வேண்டிய தொகையை நிர்ணயிக்கும்போது கூடுமானவரையில் தீங்குற்ற வாதியை பழைய நிலைக்கு கொணருவதற்கு, அதாவது எத்தகைய தவறுக்காக இழப்பீடு வழங்கப்படுகிறதோ, அத்தகைய தவறினால் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் என்ன நிலையில் இருந்திருப்பாரோ அத்தகைய நிலைக்கு கொணர்வதற்கு தேவைப்படும் தொகையை முடிவு செய்ய வேண்டும் என்பதாகும். எ-டு: 'A' ரூபாய் 5,00,000/- மதிப்புள்ள 'B' -ன் மாருதி 'காரை' (car) கவனக்குறைவாக ஓட்டி விபத்து ஏற்படுத்தியதில், அது முற்றிலுமாக பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டால், 'B' அதேபோன்ற மற்றும் அதேமாதிரி (model) காரை வாங்குவதற்காக, 'A' ரூபாய் 5,00,000/- ஐ அல்லது அதன் தேய்மான மதிப்பு (value of depreciation) நீங்கலான தொகையை இழப்பீடாக செலுத்துமாறு நீதிமன்றம் ஆணையிடும்.

G.Sreedharamurthy Vs Bellary Municpal Council, AIR 1982 Kant 287., என்ற வழக்கில் பெல்லாரி நகராட்சிமன்றம், தீங்கெண்ணத்துடன், வருமானவரி மற்றும் சொத்துவரி செலுத்திவரும் ஓர் வழக்குரைஞருக்கு பற்றுகை கட்டளைக்கான (distraint warrant) அறிவிப்பை அளித்து, அவரின் புத்தகங்கள் மற்றும் இதர பொருள்களை பறிமுதல் செய்தது. இது தொடர்பாக எழுந்த வழக்கில், இழப்பீடு குறித்த சான்றுகள் ஏதும் சமர்ப்பிக்கப்படாதிருந்தும்கூட, கணிசமான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1(a)(iii) அற்ப இழப்பீடு (Contemptuous damages): வாதியின் சட்ட உரிமைக்குறித்து நீதிமன்றம் மிகவும் தாழ்ந்த அல்லது இழிவான கருத்தினைக் கொண்டிருக்கும்போது (low opinion) அல்லது நீதிமன்றத்தின் முன்பு அத்தகைய வழக்கு கொண்டு வந்திருக்கக்கூடாது எனக்கருதும்போது மிகவும் அற்பமான அல்லது சொற்பமான அதாவது ஒரு ரூபாய் அல்லது பென்னியை [Penny-பென்னி என்பது ஆங்கில நாணயமான ஒரு ஷில்லிங் (Shilling) என்பதில் $\frac{1}{12}$ அதாவது 12 பென்னி கொண்டது ஒரு ஷில்லிங் ஆகும்] இழப்பீடாக வழங்கும். வாதி சட்டப்படி உரிமைக்கோரிக்கையைக் கொண்டிருந்தும் அதனை ஒழுக்க அடிப்படையில் நியாயப்படுத்தும் தகுதியைக் கொண்டிராதபோது, நீதிமன்றம் அற்ப இழப்பீட்டினை வழங்கும். எடுத்துக்காட்டாக, 'A' என்பவர், 'B' என்பவர் தன்னை தாக்க முனைந்ததற்காக வழக்கிடுவதாகக் கொள்வோம். விசாரணையின்போது, 'A' குறிப்பிட்டுக்கூறிய ஏதேனும் தகாத சொற்களால் தூண்டப்பட்டதன் காரணமாகவே 'B' தாக்க முனைந்ததாக நீதிமன்றத்திற்கு தெரியவரும்போது, 'A'-க்கு அற்ப இழப்பீட்டினை மட்டுமே நீதிமன்றம் வழங்கும். ஏனெனில், பிரதிவாதியின் தவறான செயலுக்கு இழப்பீடு கோரும் வாதியும் தவறு செய்திருப்பதால் அல்லது நேர்மையற்று நடந்திருப்பதால் நீதிமன்றம் அற்ப இழப்பீட்டினை வழங்குகிறது. அற்ப இழப்பீடு பெயரளவு இழப்பீட்டிலிருந்து வேறுபட்டது. பெயரளவு இழப்பீட்டில் வாதிக்கு உண்மையில் இழப்பு ஏதும் ஏற்படுவதில்லை; ஆனால் அற்ப இழப்பீட்டில் வாதிக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருந்தாலும் தனது நடத்தையால் முழுமையான இழப்பீடு பெறும் தகுதியை அவர் இழந்துவிடுகிறார். அற்ப இழப்பீட்டில், வாதிக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பிற்கு அவரின் சொந்த கவனமின்மையே அதாவது தன்பாற்கவனமின்மையே (contributory negligence) காரணமாகும்.

1(a) (iv) எச்சரிக்கை இழப்பீடு (Exemplary damages): இது, தண்டிக்கும் இழப்பீடு (Punitive damages) என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. எச்சரிக்கை இழப்பீடு என்பது, வாதிக்கு ஏற்பட்ட இழப்பின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலான தொகை வழங்கப்படும் இழப்பீடாகும். தவறான செயல் மற்றும் அது செய்யப்படும் சூழ்நிலைகளின் காரணமாக கூடுதலாக்கப்பட்டு மிகப்பெரும் தீங்கை ஏற்படுத்துவதால் எச்சரிக்கை இழப்பீடு வழங்கப்படுகிறது. எச்சரிக்கை இழப்பீடு வழங்குவதன் நோக்கம், அதேபோன்ற செயலை பிறர் செய்வதனின்று தடுப்பதாகும். எச்சரிக்கை இழப்பீடு வழங்குவது வாதிக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்காக அல்ல மாறாக பிரதிவாதியை தண்டிக்கும் ஓர்முறை என்றே பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. ஓர் தீங்கான உள்நோக்கம், தன்னை உயர்வாகக் கருதிக்கொள்ளும் நடத்தை, அறிந்திருந்தே மோசடி செய்து மற்றொருவரின் மகளைக் கடத்துவது, வன்மம் அல்லது பகைமையினால் தூண்டப்பட்டு பெரும் அவதூறு பரப்புதல் போன்றவை எச்சரிக்கை இழப்பீடு வழங்குவதற்கான எடுத்துக்காட்டுகளாகும். இந்திய உச்சநீதிமன்றம் **Bhim Singh Vs State of J&K, AIR 1986 SC 494.,** என்ற வழக்கில், சட்டமன்ற உறுப்பினரான பீம்சிங் என்பவரை சட்டமன்றக்கூட்டத்தில் பங்கேற்பதை தடுப்பதற்காக கைதி செய்து காவலில்

வைக்கப்பட்டதை, எச்சரிக்கை இழப்பீடு வழங்குவதற்கு பொருத்தமான வழக்கு எனக்கருதி ரூபாய் 50,000/- ஐ அவருக்கு இழப்பீடாக வழங்க ஆணையிட்டது.

1(a)(v) இழப்பை ஈடுசெய்யும் இழப்பீடு அல்லது சரிநிகர் இழப்பீடு (Compensatory damages): தீங்கியலின் பெரும்பாலான வழக்குகளில் வழங்கப்படும் இழப்பீடு, இழப்பை ஈடுசெய்யும் அல்லது சரிநிகர் இழப்பீடாகும். உண்மையான இழப்பீடு, தீங்குற்ற தரப்பினர் அடையும் இழப்பினை நியாயமாக ஈடுசெய்வதை அனுமதிக்கும் பணஅளவிலான இழப்பீடாகும். தீங்கியலில் தகைமை நெறி நீதிமன்றங்கள் 'இழப்பீடு' என்பதற்கு ஆதரவாகவே இருக்குமேயன்றி 'இழக்கச்செய்தலுக்கு' ஆதரவாக இருக்காது. வீடுநில உடைமை தொடர்பான மெய்யான சொத்துகளில் (real property-அதாவது அசையா சொத்து) நபர்கள் கொண்டிருக்கும் உரிமைக்கு ஊறு ஏற்படும் வழக்குகளில், இழப்பீட்டுப் பரிகாரம் அளிப்பதன் நோக்கம் இழப்பை ஈடு செய்வதாகும். அசையாச் சொத்தின்மீது எவர் நலன் கொண்டுள்ளாரோ அத்தகைய நபர், மற்றொருவரின் தீங்கான செயலினால் அடையும் இழப்பிற்கு, அத்தகைய இழப்பினை ஈடுசெய்யும் இழப்பீட்டினைப் பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளனர். இக்கொள்கை பொதுவாக இழப்பீடு குறித்த பின்வரும் இரண்டுவிதிகளைப் பின்பற்றும்;

முதலாவதாக, தீங்குற்ற தரப்பு, தீங்கிழைக்கப்படுவதற்கு முன்பிருந்த மெய்நிலைச் சொத்தின் மதிப்பிற்கும், தீங்கிழைக்கப்பட்டதற்கு பின்னரான சொத்து மதிப்பிற்கும் இடையேயான மதிப்பின் தொகையை இழப்பீடாக திரும்ப பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளனர் (Rule of diminnution of value - மதிப்பு குறைவு விதி).

இரண்டாவதாக, தீங்குற்ற தரப்பு மெய்நிலை சொத்தை பழைய நிலைக்கு அதாவது தீங்கிழைப்பதற்கு முன்பிருந்த நிலைக்கு திரும்பக் கொணருவதற்கு தேவைப்படும் செலவை, திரும்பபெறுவதற்கு தகுதி கொண்டுள்ளனர் (Rule of restitution - பழைய நிலைக்கு கொணரும் விதி).

1(a) (vi) கூடுதலாக்கப்பட்ட இழப்பீடு (Aggravated damages): பிறருடைய உரிமையை எதிர்க்கிற அல்லது தாக்குகிற முறையில் (aggressive manner) தீங்கொன்று செய்யப்பட்டிருக்கும்போது நீதிமன்றம் கூடுதலாக்கப்பட்ட இழப்பீட்டினை வழங்கும். இத்தகைய வழக்குகளில் வாதிக்கு ஏற்பட்ட இழப்பைவிடக்கூடுதலான தொகையை நீதிமன்றம் இழப்பீடாக வழங்கும். தீங்கியலில் அவமதித்தல், சொத்துரிமை பற்றிய அவதூறு போன்ற வழக்குகளில் இத்தகைய கூடுதலாக்கப்பட்ட இழப்பீடு வழங்கப்படலாம். நீதிப்பிரபு பர்சன் (Person, LJ), **Mc Carey Vs Associate Newspaper Ltd, (1964) AC 1129.,** என்ற வழக்கில் கூடுதலாக்கப்பட்ட இழப்பீடு வழங்கும் சூழ்நிலைகளின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவை; வாதிக்கு உண்மையில் பணஅளவில் ஏற்பட்ட இழப்பு அல்லது தவறின் விளைவாக ஏற்பட்ட சமூக ஆதாயக்குறைவு (social disadvantage) மட்டுமின்றி, பிரதிவாதியால் பேசப்பட்ட அவதூறான சொற்களால் வாதியின் உணர்வுகளுக்கு

இயல்பாக ஏற்பட்ட ஊறு, துன்பம் மற்றும் வாதியின் பெருமை அல்லது தன்னம்பிக்கைக்கு ஏற்பட்ட மனவலி மற்றும் பாதிப்பு உள்ளிட்ட கூறுகளும் ஆகும் என்பதைக் குறிப்பிட்டார். கூடுதலாக்கப்பட்ட இழப்பீட்டிற்கும், எச்சரிக்கை இழப்பீட்டிற்கும் நுட்பமான வேறுபாடு உள்ளது. கூடுதலாக்கப்பட்ட இழப்பீடு, தீங்கின் காரணமாக வாதிக்கு ஏற்படும் மோசமான விளைவுகளில் உள்ளடங்கும் காரணிகளை கவனத்தில் கொண்டு வழங்கப்படுவது; ஆனால் எச்சரிக்கை இழப்பீடு, பிரதிவாதியை தண்டிக்கும் நோக்கில் வழங்கப்படுவதாகும்.

1(a)(vii) எதிர்கால மற்றும் தொடர்ந்திருக்கும் இழப்பீடு (Prospective and continuing damages): எதிர்கால இழப்பீடு என்பது, பிரதிவாதியின் தவறான செயலால் இயல்பாக நேரிட்ட விளைவுகளுக்கான இழப்பீடாக மட்டுமின்றி, வழக்கினை முடிவு செய்யும்போது உண்மையில் ஏற்பட்டிராத விளைவுகளுக்கும் சேர்த்து வழங்கப்படும் இழப்பீட்டினைக் குறிக்கும். தற்போதைய இழப்பிற்காக மட்டும் இழப்பீடு வழங்காமல், எதிர்காலத்தில் உறுதியாக ஏற்படக்கூடிய இழப்புகளுக்கும் சேர்த்து இழப்பீடு வழங்கப்படுவதாகும். **Bhagwandas Vs. Mohd. Arif, (1987) 2 LT 137.**, என்ற வழக்கில், விபத்தின் காரணமாக கால்கள் துண்டாக்கப்பட்ட சிறுவனுக்கு மருத்துவச் செலவு, எதிர்கால வாழ்க்கை ஆதாரத்திற்கான செலவுகள், ஒவ்வொரு வருடத்திற்குமான பராமரிப்புச் செலவுகள் வேலைவாய்ப்பின் தகுதியின்மை ஆகியவற்றின் அடிப்படையிலான இழப்பீட்டை நீதிமன்றம் வழங்கியது.

(2) உறுத்துக்கட்டளை (Injuntion): உறுத்துக்கட்டளை என்பது ஒரு செயலைச் செய்வதிலிருந்து தடுக்கவோ அல்லது குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வதற்கோ வழக்கின் ஒரு தரப்பினருக்கு ஆணையிடும், நீதிவழி முறையாகும். பணஅளவிலான இழப்பீடு போதுமற்றதாக அல்லது மொத்தத்தில் பலனற்ற தீர்வழியாக இருக்கும் அத்தகைய சூழ்நிலைகளில் நீதிமன்றத்தால் வழங்கப்படும் குறித்தவகை நிவாரணத்தின் ஓர் முறையே (a form of specific relief) உறுத்துக்கட்டளையாகும். உறுத்துக்கட்டளை நிவாரணம் வழங்குவது நீதிமன்றத்தின் சுயவிருப்பு அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். உறுத்துக்கட்டளை கால அடிப்படையில், தற்காலிக உறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை என்றும் செயல்தன்மை அடிப்படையில், செயலுறுத்துத்கட்டளை மற்றும் தடையுறுத்துக்கட்டளை என்றும் பிரிக்கப்படுகிறது.

2(a) தற்காலிக உறுத்துக்கட்டளை (Temporary Injunction): ஓர் குறிப்பிட்ட செயலைச் செய்வதிலிருந்து தற்காலிகமாக தடுப்பதற்காக, வழக்கு இறுதியாக முடியும்வரையிலோ அல்லது நீதிமன்றம் மேற்கொண்டு இது தொடர்பாக ஆணையிடும்வரை தொடர்ந்திருக்குமாறோ பிறப்பிக்கப்படுவதே தற்காலிக உறுத்துக்கட்டளையாகும். நீதிமன்றம் தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கும்போது பின்வரும் கூறுகளை கவனத்தில் கொள்ளும்;

முதலாவதாக, தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டி விண்ணப்பித்திருக்கும் வாதி, தன்னுடைய வழக்கிற்கு உறுத்துக்கட்டளை வழங்க

வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நீதிமன்றம் உளநிறைவு அடையும் வகையில் முதற்தோற்றத்திலேயே (prima facie) மெய்ப்பிக்க வேண்டும்.

இரண்டாவதாக, வாதி, தனக்கு தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கப்படாவிடில், ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கு (irreparable loss) உள்ளாக நேரிடும் என்றும், அத்தகைய இழப்பிலிருந்து பிற தீர்வழிகளின் மூலம் காத்துக்கொள்ள முடியாது என்பதையும் நீதிமன்றம் உளநிறைவு அடையும் வகையில் எடுத்துரைக்க வேண்டும்.

மூன்றாவதாக, வசதி வாய்ப்புகளின் நிலை (balance of convenience) வாதிக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இதன்பொருள், நீதிமன்றம் உறுத்துக்கட்டளை வழங்காதிருப்பின், வாதிக்கு ஏற்படும் வசதிக்குறைவுகளானது, அதனை வழங்கினால் பிரதிவாதிக்கு ஏற்படும் வசதிக்குறைவுகளைவிட அதிகமாக இருக்க வேண்டும். அதாவது, வாதிக்கு உறுத்துக்கட்டளை வழங்காவிடில், அதிகமான வசதிக்குறைவுகள் ஏற்படும் என்பதை வாதியே மெய்ப்பிக்க வேண்டும்.

2(a)(i) நிரந்தர உறுத்துக்கட்டளை (Permanent Injunction): நீதிமன்றம் ஓர் வழக்கின் இருதரப்பு வாதங்களைக் கேட்டபின்னர், அவ்வழக்கின் தகுதிக்கூறுகளை (merits of the case) ஆராய்ந்தறிந்து, வாதிக்கு ஆதரவாக அல்லது பிரதிவாதி ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதினின்று நிரந்தரமாக தடுக்கப்படுவதே நிரந்தர உறுத்துக்கட்டளையாகும். இவ்வகையான உறுத்துக்கட்டளை, இருதரப்பினரின் வாதுரைகள் (pleadings), வாதங்களை கேட்டறிந்து முழுமையாக ஆய்வு செய்த பின்னரே இடப்படுவதால் இது இறுதியான உறுத்துக்கட்டளை என்றும் கூறப்படுவதுண்டு. எ-டு: 'A' என்பவரின் நிலத்தின்மீது ஓர்வழித்தட உரிமையை ஏற்படுத்த கிராம மக்கள் முயற்சிப்பதை தடுப்பதற்கு 'A' நிரந்தர உறுத்துக்கட்டளையைப் பெறமுடியும். நிரந்தர உறுத்துக்கட்டளை எத்தகைய சூழ்நிலைகளில் பிறப்பிக்கப்படலாம் என்பதை 1963-ஆம் ஆண்டு குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் பிரிவு-38, குறிப்பிடுகிறது.

2(b) செயலுறுத்துக்கட்டளை (Mandatory injunction): பெயருக்கேற்ப, இது ஓர் செயலைச் செய்ய வற்புறுத்தும் நீதிமன்றத்தின் கட்டளையாகும். ஓர் செயலுறுத்துக்கட்டளை என்பது பிரதிவாதியை ஏதேனும் நேர்மறையான செயலைச் (positive act) செய்து பொருள்கள் அல்லது நிலையை வாதி முறையீடு செய்யப்பட்டபோது இருந்த பழைய நிலைக்கு திரும்பக் கொணருவதற்காக இடப்படும் நீதிமன்றத்தின் ஆணையாகும். வேறுவிதமாகக் குறிப்பிடுவதெனில், செயலுறுத்துக்கட்டளை என்பது, செய்த செயலைச் செய்யாமல் இருப்பது குறித்தோ அல்லது குறிப்பிட்ட செயலைச் செய்யக்கோரி, அச்செயலின் மூலமாக முன்பிருந்த நிலையை திரும்பக் கொணருவது குறித்தோ இடப்படும் கட்டளையாகும். இது எதிர்காலத்தில் செய்யவிருக்கும் தவறான செயல்களை செய்வதினின்று தடுப்பதாக மட்டுமின்றி, மேற்கொண்டு கூடுமானவரை முன்பிருந்த நிலைக்கு திரும்பக் கொணரக்கோரும் நீதிமன்றத்தின் ஓர் ஆணையாகும். **Krehal Vs Burrel, (1877) Chd 551.**, என்ற வழக்கில் வாதி

தனது கடைக்குச் செல்வதற்கு தடப்பாத்திய உரிமை கொண்டிருந்த இடத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டுவதை பலமுறை எச்சரித்ததையும் மீறி கட்டிய கட்டிடத்தை, நீதிமன்றம், அது அதிக செலவு செய்து கட்டப்பட்டிருந்தாலும்கூட அதனை அகற்றுவதற்கு செயலுறுத்துக்கட்டளையை பிறப்பித்தது.

2(b) (i) தடையுறுத்தும் கட்டளை (Prohibitory injunction): தடையுறுத்துக்கட்டளை என்பது, பிரதிவாதி செய்யும் தவறான செயலை செய்யவிடாமல் தடுக்கக்கூடிய நீதிமன்றத்தின் ஆணையாகும். எனவே தடையுறுத்துக் கட்டளை, வாதியின் சட்டப்படியான உரிமையில் குறுக்கீடு செய்கின்ற மற்றும் சட்டப்படியான அல்லது தகைநெறியிலான கடப்பாட்டை அல்லது கடமையை மீறுகின்ற செயலை பிரதிவாதி செய்வதனின்று தடுப்பதாகும். சுற்றுச்சூழல் மாசுக்கேட்டிற்கு எதிரான உறுத்துக்கட்டளை, அத்துமீறலுக்கு எதிரான உறுத்துக்கட்டளை, தனது சொந்த தேவைக்காக கூட்டாண்மை நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தும் கூட்டாளிக்கு எதிரான உறுத்துக்கட்டளை போன்றவற்றை தடையுறுத்துக்கட்டளைக்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

(3) குறிப்பிட்ட சொத்தை மீட்டடைவித்தல் (Specific Restitution of Property): பிரதிவாதியின் தவறான செயலினால் தனது சொத்தை (அது அசையும் சொத்தாக அல்லது அசையாச் சொத்தாக இருந்தாலும்) இழந்த நபர், அச்சொத்திற்கு சமமான தொகையை இழப்பீடாகக் கோரவோ அல்லது அதே சொத்தையோ கோரமுடியும். இழந்த அதே சொத்தை திரும்பப்பெறும் தீர்வழியே குறிப்பிட்ட சொத்தை மீட்டடைவித்தல் என்பதாகும். இத்தீர்வழி, கோரப்படும் சொத்து அழிக்கப்படாமல் மற்றும் கண்டுபிடிக்க முடிந்தால் மட்டுமே வழங்கப்படமுடியும். எ-டு: 'A'-ன் மோட்டார் சைக்கிளை அவரது நண்பர் 'B' எடுத்துச் சென்ற 'C' என்பவரிடம் அடகு வைத்துவிடுகிறார். 'A'-ன் மோட்டார் சைக்கிள் 'C'-ன் உடைமையில் உள்ளது. நீதிமன்றம் 'B'-ஐ மோட்டார் சைக்கிளை 'C'-யிடம் இருந்துமீட்டு அதனை 'A'-யிடம் மீண்டும் ஒப்படைக்கக் கோரி ஆணையிடுகிறது. இதுவே குறிப்பிட்ட சொத்தை மீட்டடைவித்தல் என்பதாகும். குறித்தவகை மீட்டடைப்பு தீர்வழி நீதிமன்றத்தின் சுயவிருப்புத்தன்மை கொண்டதாகும்.

இந்தியாவில் குறித்தவகை மீட்டடைவிப்பு குறித்து, 1963-ஆம் ஆண்டின் குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் 5 முதல் 8 வரையிலான பிரிவுகளும் மற்றும் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908-ன் கட்டளை XXI-ன் கீழான விதிகள் 35 மற்றும் 36-ம் மற்றும் கட்டளை -XX-ன் முதலாவது விதியும் குறிப்பிடுகின்றன.

(ஆ) நீதிமன்றத்திற்கு வெளியே பெறக்கூடிய தீர்வழிகள் (Extra judicial remedies): நீதிமன்றத்திற்கு வெளியே பெறக்கூடிய தீர்வழிகள் என்பது, தீங்குற்ற தரப்பு, நீதிமன்றத்திற்குச் செல்லாமல் அத்தீங்கிற்கு எதிரான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதை குறிக்கும். நீதிமன்றத்திற்கு வெளியே பெறக்கூடிய தீர்வழி முறைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) சுயஉதவி அல்லது தற்காப்பு;

(2) நிலத்தில் மீண்டும் நுழைதல்;

(3) பொருள்களை மீட்டல்;

(4) தொல்லையை அகற்றுதல்; மற்றும்;

(5) இழப்பு ஏற்படுத்தியதைக் கைப்பற்றுதல்.

இனி மேற்குறிப்பிட்டுள்ளவைகள் பற்றி சுருக்கமாகக் காண்போம்.

ஆ(1) சுயஉதவி அல்லது தற்காப்பு (Self help or self-defence): ஒவ்வொரு நபரும் தன்னையும் தனது சொத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும் மற்றும் இந்நோக்கத்திற்காக நியாயமான பலத்தை பயன்படுத்தவும் உரிமை கொண்டுள்ளனர். இதுவே தற்காப்பு நடவடிக்கை என்பதாகும். தன்னைத் தாக்க வரும் நபர்களிடமிருந்தும் அல்லது தனது சொத்துக்கு தீங்கிழைக்க முயலும் எவரையும் தடுத்து தன்னை அல்லது தனது சொத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல் தீங்காகாது. இருப்பினும் சுயஉதவி அல்லது தற்காப்பு உரிமை குறித்து இரண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, பயன்படுத்தும் பலம் (force) அவசியமற்றதாக இருக்கக்கூடாது. இரண்டாவதாக, பயன்படுத்தும் பலம் சூழ்நிலைக்கு அவசியமான அளவை மிஞ்சக்கூடாது. **Lane Vs Halloway, (1968) 1 QB 379.,** என்ற வழக்கில் சாதாரண கோபமூட்டியதற்காக, ஒருவர் பலத்தை பயன்படுத்தவோ மற்றும் தாக்கவோகூடாது என்று கூறப்பட்டது.

ஆ(2) நிலத்தில் மீண்டும் நுழைதல் (Re-entry on land): தனது நிலம் அல்லது சொத்திலிருந்து தவறான முறையில் வெளியேற்றப்பட்ட நபர், பலத்தை பயன்படுத்தாமல் அமைதியான முறையில் மீண்டும் நுழைய முடிந்தால் அவ்வாறு நுழையலாம். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-105-ன்படி, நபர்கள் தங்களின் தனிப்பட்ட சொத்துக்களை தற்காத்து கொள்வதற்கு உரிமை கொண்டுள்ளனர். இருப்பினும், அத்துமீறியவர் தன்னுடைய அத்துமீறலை முழுமையாக முடித்தபின்பு, நிலத்தில் மீண்டும் நுழைவதை அனுமதிக்கவில்லை. இத்தகைய நிலையில் நில உரிமையாளர் நிலத்தினுள் மீண்டும் நுழைவதற்கு பலத்தைப் பயன்படுத்தினால், அவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-99-ன்கீழ் பொறுப்பாகுவார் (பிரிவு-99, எத்தகைய செயல்கள் தொடர்பாக தற்காப்பை பயன்படுத்தமுடியாது என்பதைக் குறிப்பிடுகிறது) மேலும், நில உரிமையாளர், தாக்கமுனைதல், தாக்குதல், கலகம் விளைவித்தல் போன்ற குற்றவியல் குற்றங்களுக்கும் பொறுப்பாக நேரிடலாம். எனவே அத்துமீறியவரை வெளியேற்ற முறையான நடவடிக்கை என்னவெனில் குறித்தவகை நிவாரணச் சட்டத்தின்கீழ் உடைமையைப் பெறுவதற்கான வழக்கு தொடருவதேயாகும்.

ஆ(3) பொருள்களை மீட்டல் (Re-caption of goods): ஒரு நபர் தனக்குச் சொந்தமான பொருள்களை, தவறான முறையில் எடுத்துக் கொண்டிருப்பவரிடம் இருந்து சமாதான முறையிலோ அல்லது சூழ்நிலைக்கு அவசியமான நியாயமான பலத்தை பயன்படுத்தியோ அவைகளை மீட்கலாம்.

இவ்வாறு பொருள்களை மீட்பது, உரிமையியல் தவறாகவோ அல்லது ஓர் குற்றவியல் குற்றமாகவோ ஆகாது. பொருள்களை தவறான முறையில் எடுத்துச் சென்றவர் அதனை தன்னுடைய இடத்தில் வைத்திருந்தாலும், பொருள்களின் உரிமையாளர் அவற்றை மீட்பதற்காக அவரின் நிலத்தினுள் நுழைந்தாலும் அது அத்துமீறல் ஆகாது. மேலும், மூன்றாம் நபரொருவரின் செயலின் மூலமாக, ஒருவரின் பொருள்கள் மற்றொருவரின் நிலத்தில் வைக்கப்பட்டாலும், அந்த நிலத்தில் நுழைந்தும் தன்னுடைய பொருட்களை மீட்கலாம். இருப்பினும் பொருள்களின் உரிமையாளர் தனது சொந்தக் கவனக்குறைவின் காரணமாக வேறொருவரின் நிலத்தினுள் தனது பொருட்களை விட்டுச் சென்றால் அதனை மீட்க அந்நிலத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெற்றப் பின்னரே நுழைய முடியும். ஒரு நபர் மற்றொருவரின் பொருள்களை எடுத்துக்கொண்டு அவற்றை தன்னுடைய நிலத்தில் வைத்திருந்தால், அவர், அப்பொருள்களின் உரிமையாளர் அவற்றை மீட்கும் நோக்கத்திற்காக தனது நிலத்தினுள் நுழைய உட்கிடையாக உரிமம் அளித்ததற்கு ஒப்பாகும்.

ஆ(4) தொல்லையை அகற்றுதல் (Abatement of nuisance): தனித்தொல்லையால் பாதிக்கப்படும் எவரொருவரும் அதனை அகற்ற அல்லது நீக்க தகுதி கொண்டுள்ளனர் என்பது ஓர் பொதுவான விதியாகும். ஒரு நபர், பக்கத்து வீட்டுக்காரர் குவித்து வைத்திருக்கும் குப்பையிலிருந்து எழும் துர்நாற்றத்தை போக்குவதற்கு அவரின் நிலத்தினுள் நுழைந்து அவற்றை அகற்றலாம்.பக்கத்து நிலத்தில் வளர்ந்திருக்கும் மரத்தின்கிளை ஒன்று, எல்லை தாண்டி தனது நிலத்திற்குள் நீண்டு வளர்ந்திருந்தால், நீட்டித்திருக்கும் பகுதியை வெட்டலாம். ஆனால் கிளையை வெட்டிய நபர், அக்கிளையை தான் வைத்துக் கொள்ளாமல் மற்றும் அக்கிளையில் ஏதேனும் காய், கனி இருப்பின் அவற்றையும் எடுத்துக் கொள்ளாமல், அம்மரத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் இனமாற்றம் (conversion) என்ற தீங்கிற்கு பொறுப்பாகுவார். தொல்லையை அகற்றுவது பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது:

(i) தொல்லையை அகற்ற இருவழிகள் இருக்கும்போது, குறைந்த அளவு ஊறு விளைவிக்கும் முறையையே பின்பற்ற வேண்டும்;

(ii) தொல்லை அகற்றும் உரிமையை அமைதியான முறையில் செயல்படுத்த வேண்டும் மற்றும் அறிவிப்பு வழங்க வேண்டிய நேர்வுகளில், அறிவிப்பு வழங்கிய பின்னரே தொல்லையை அகற்ற வேண்டும். தொல்லையை அகற்றும் உரிமையானது இழப்பீடு பெறுவதற்கு மாற்றானதொரு தீர்வழி முறையாகும். எனவே தொல்லையை அகற்றும் உரிமையை செயல்படுத்தினால், இழப்பீடு எதனையும் கோர முடியாது.

(iii) உறுத்துக்கட்டளை பிறப்பிக்க முடியாத அத்தகைய பொருண்மைகள் குறித்து, தொல்லை அகற்றும் உரிமை ஏதுமில்லை.

(iv) நெடுஞ்சாலையில் உள்ள தொல்லையை அகற்றும் உரிமை, அவ்விடத்தில் பழுதுபார்த்தல் அல்லது பாலம் போன்ற கட்டுமானங்கள் எதனையும் கட்டுவதற்கு நீட்டிக்கப்படவில்லை.

ஆ(5) இழப்பு ஏற்படுத்தியதைக் கைப்பற்றுதல் (Distress damage feasant): ஒருவர், தனது நிலத்தில் மற்றொருவரின் கால்நடை அல்லது அசைவியல் பொருட்கள் அழிவைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டால் அவற்றினை கைப்பற்றி வைத்துக்கொண்டு, அவை விளைவித்த சேதத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும்வரை அவற்றை விடுவிக்க மறுக்கும் அத்தகைய உரிமையே இழப்பை ஏற்படுத்தியதைக் கைப்பற்றுதல் என்பதாகும். இத்தகைய உரிமையை கால்நடைகளுக்கு எதிராக மட்டுமின்றி பிற உயிருள்ளவற்றிற்கும் மற்றும் உயிரற்ற அசைவியல் பொருட்களுக்கு எதிராகவும்கூட பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, **Ambergate Vs Midland Rly., (1853) 2 Ex B 793.,** என்ற வழக்கில், ஒரு ரயில்வே கம்பெனியின் இருப்புப்பாதையை தவறான முறையில் சேதப்படுத்திய ரயில்வே இன்ஜினை அக்கம்பெனி கைப்பற்றவும் மற்றும் தங்கள் பொறுப்பில் வைத்திருக்கவும் தகுதி கொண்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டது. நிலத்தை உடைமையில் கொண்டிருக்கும் எவரும் எந்நேரத்திலும் சேதம் விளைவித்ததை கைப்பற்றுகை செய்யலாம் ஆனால் இழப்பை ஏற்படுத்தியதற்கான தொகையை பகலில் மட்டுமே கேட்கமுடியும். மேலும் கால்நடை உள்ளிட்ட உயிரினங்களை அழிவு ஏற்படுத்தியதற்காக கைப்பற்றுகை செய்து வைத்திருப்போர் அவைகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் கொடுக்க வேண்டும். அழிவு ஏற்படுத்தியதைக் கைப்பற்றுதல் மற்றும் வைத்திருத்தல் பொருள் தொடர்பான ஓர் குறிப்பிடத்தக்க வழக்கு **Sorrel Vs Paget, (1949) 2 All ER 609.,** என்ற வழக்காகும். இவ்வழக்கில் வாதியின் கன்று ஈனாத பசு ஒன்று இரவு நேரத்தில் பிரதிவாதியின் பண்ணையில் நுழைந்தது. வாதியின் நலனுக்காகவும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவும் பிரதிவாதி அதனைக் கைப்பற்றி பாதுகாப்பாக தனது இடத்தில் வைத்திருந்தார். வாதியின் பணியாட்கள் இளம்பசுவை ஒப்படைக்குமாறு பிரதிவாதியிடம் கேட்டனர். பிரதிவாதி, பசுவைக் காப்பாற்றியதற்காக இரண்டு 'பவுண்டுகளும்' (pounds) அதற்கு உணவு (தீனி) மற்றும் தண்ணீர் கொடுத்து பராமரித்து வந்ததற்காக நாளொன்றுக்கு ஒரு 'ஷில்லிங்' (Shilling) வீதம் கொடுக்க வேண்டும் என பசுவை விடுவிப்பதற்கு நிபந்தனை விதித்தார். வாதி, பிரதிவாதி கேட்ட தொகையையோ அல்லது தாமாக கணக்கிட்டு ஒரு குறிப்பிட்ட தொகையையோ கொடுக்கவில்லை. அதன்பின்னர் பிரதிவாதி தொடர்ந்து அப்பசுவை நன்முறையில் பராமரித்து வந்தும், சிலநாட்களுக்குப் பின்னர் அது இறந்துவிட்டது. வாதி, தனது பொருளை பிரதிவாதி இனமாற்றம் செய்ததற்காக இழப்பீடு வழங்கக்கோரி வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், வாதி கட்டுப்படுத்தத் தவறிய பசு அலைந்து திரிந்து பிரதிவாதியின் பண்ணையில் நுழைந்திருப்பதையும், பிரதிவாதிக்கு ஏற்பட்ட இழப்பையும் அறிந்துகொண்டது. வாதி, தனது பசுவை விடுவிப்பதற்கு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளாததால் அவர் பிரதிவாதியிடம் இருந்து இழப்பீடு கோரும் தகுதி எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை தள்ளுபடி செய்தது.

இங்கிலாந்தில், இயற்றாச் சட்டத்தின்கீழான இழப்பை ஏற்படுத்தியதைக் கைப்பற்றும் உரிமை, **1971-ஆம் ஆண்டின் கால்நடைகள் அத்துமீறல் சட்டத்தின்** பிரிவு - 7(1)-ன்மூலமாக ஒழிக்கப்பட்டது. இருப்பினும் இதற்குமாற்றான உரிமைகள் வழங்கப்பட்டது. குறிப்பாக, பிரிவு-7(4), அத்துமீறிய கால்நடையை விற்பதற்கும், விற்றத் தொகையிலிருந்து அக்கால்நடையை பராமரித்ததால் உள்ளாகிய செலவுகளை எடுத்துக்கொள்வதற்கும் [பிரிவு-7(5)] வழிவகை செய்துள்ளது. இந்தியாவில் **1871 ஆம் ஆண்டு கால்நடை அத்துமீறல் சட்டம்**, அத்துமீறி நுழைந்து அழிவை ஏற்படுத்தும் கால்நடைகளை கைப்பற்றவும், வைத்திருக்கவும் உரிமை அளிக்கவில்லை. இச்சட்டத்தின் பிரிவு-10-ன்படி, நில உடைமையாளர்களை 24 மணிநேரத்திற்குள், இச்சட்டத்தின்பிரிவு-4-ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள கால்நடைப்பட்டியில் சேர்க்க வேண்டும். எவரின் கால்நடை கைப்பற்றப்பட்டு பட்டியில் சேர்க்கப்பட்டதோ அத்தகைய நபர், கால்நடை பட்டி பொறுப்பு அலுவலர், விலங்குகளின் வகை, அவற்றைப் பராமரிப்பதற்கான கட்டணம் அடங்கியுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அபராதம் விதிப்பதை பிரிவு-12, குறிப்பிடுகிறது. மேலும் அத்துமீறிய கால்நடை பயிர் அல்லது பிறவற்றுக்குச் செய்த அழிப்பிற்காக நில உடைமையாளர் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இழப்பீடு பெறுவதை இச்சட்டம் தடுக்கவில்லை என்பதை பிரிவு-29, குறிப்பிடுகிறது. ஆக மொத்தத்தில் இந்தியச் சட்டம், கால்நடைகள் அத்துமீறி நிலத்தினுள் நுழைந்துச் செய்யும் அழிவுச் செயல்கள் தொடர்பாக, நில உடைமையாளர்களின் நலனுக்கு, ஆங்கிலச் சட்டத்தைப் போன்று பலனுள்ள தீர்வழியை அளிக்கவில்லை என்றே குறிப்பிடலாம்.

32. தீங்கியல் சட்டத்தின்கீழ் வழங்கப்பெறும் நீதித்துறை வழிதீர்வுகளை விளக்குக. (What are the judicial remedies available under the law of Tort?) - Nov-2018

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ' முழுமையிலும் காண்க)

SHORT NOTES

44. பொதுவான இழப்பீடுகள் / General damages - Nov-2017, May-2018 (v).

இழப்பீடு தொடர்பான மரபு முறையிலான பரந்த வகைப்பாட்டின்படி, இழப்பீடுகள் பொதுவான இழப்பீடுகள் மற்றும் குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பீடுகள் என இருவகைப்படும். பிரதிவாதியின் செயலின் காரணமான இயல்பான விளைவுகளை நீதிமன்றம் தானே அனுமானித்துக் கொள்ளும் அத்தகைய இழப்பீடே பொதுவான இழப்பீடு என்பதாகும். பொதுவான இழப்பீடு அளிக்கும் வழக்குகளில், முறையீடு செய்யப்பட்டுள்ள கவனமின்மையில்

இருந்து அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நீதிமன்றமே அனுமானித்துக் கொள்ளும். இத்தகைய இழப்புகள் மெய்ப்பிக்கப்படவேண்டும் என்றாலும்கூட அவற்றை உரிமைக்கோரிக்கையின் விபர அறிக்கையில் விளக்கவோ அல்லது சான்றுகளின்மூலம் மெய்ப்பிக்கவோ தேவையில்லை. பொதுவான இழப்பீடு பணம்சாராத அதாவது வலியும் துன்புறுத்தலும் (pain and suffering) எதிர்நோக்கும் வாழ்நாள் இழப்பு (loss of expectation of life), வசதியிழப்பு, காயம் போன்றவற்றை உள்ளடக்கும். எடுத்துக்காட்டாக, முறையற்ற சிறைவைப்புக்கான வழக்கில், வாதிக்கு ஏற்பட்ட அசௌகரியம், கண்ணியக்குறைவு, துன்பம் ஆகியவற்றை நீதிமன்றமே அனுமானித்துக்கொள்ளும் மற்றும் உண்மையில் அவ்வாறு கண்ணியக்குறைவு அல்லது துன்பம் வாதிக்கு ஏற்படவில்லை என்று பிரதிவாதி கூறினாலும் நீதிமன்றம் அதனைப் பொருட்படுத்தாது. பொதுவான இழப்பீட்டில், நீதிமன்றம் ஒட்டுமொத்தமாக ஒரு தொகையையோ (lumpsum) அல்லது வாதிக்கு ஏற்பட்ட இழப்புகளின் இனங்களுக்கேற்ப தனித்தனியாக பிரித்தோ அளிக்கலாம்.

வாதியின் மன உணர்வுகளுக்கு ஏற்படும் ஊறுகள் (injury to feelings), வாதியின் உடல்நலக்குறைவு, மற்றொரு நபரின் உயிரிழப்பு, ஏதேனும் சங்க உறுப்பினர் பதவியிழப்பு அல்லது சமய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சபையின் உறுப்பினர் பதவியிழப்பு போன்றவைகளை பொதுவான இழப்பீட்டிற்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

45. குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பீடுகள் / Specific or special damages

இழப்பீடு தொடர்பாக மரபு முறையிலான பரந்த வகைப்பாட்டின்படி, இழப்பீடுகள், பொதுவான இழப்பீடுகள் மற்றும் குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பீடுகள் என இருவகையாக வகைப்படுத்தப்படுகிறது. பொதுவான இழப்பீடு வழங்கும் வழக்குகளில், பிரதிவாதியின் செயலினின்று எழும் இயல்பான விளைவுகளை நீதிமன்றமே அனுமானித்துக் கொள்ளும்; ஆனால், குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பீட்டில், விசாரணையின்போது மெய்ப்பிக்கப்பட வேண்டுமே தவிர நீதிமன்றம் தாமாக எதனையும் அனுமானிக்காது. ஏனெனில் வாதிக்கு ஏற்பட்ட தனிமுறையிலான இழப்பை நீதிமன்றம் அனுமானிக்க இயலாது. எனவே வாதி தனக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பட்டுள்ள இழப்புகளை வெளிப்படையாக வாதுரையில் தெளிவாக குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் மட்டுமே, வாதியின் உரிமைக் கோரிக்கையின் தன்மை பற்றி பிரதிவாதி முழுமையாக அறிந்து கொள்ள முடியும்; இல்லையேல் வாதி தனக்கு ஏற்பட்டுள்ள இழப்புதொடர்பான சான்றுகள் அளிப்பது அனுமதிக்கப்படமாட்டாது. தனிமுறையிலான இழப்பீடு என்பது, பணஅளவில் ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடுசெய்வதற்கான தொகையை குறிப்பிடுவதைக் குறிக்கும். இது, வாதிக்கு விசாரணைத் தேதியன்றுவரை ஏற்பட்டுள்ள வருமான இழப்பு, வழக்கிற்கான செலவுகள், ஓய்வூதிய உரிமை இழப்பு, திருமணம் செய்து

கொள்ளும் வாய்ப்பு குறைதல் போன்றவற்றை உள்ளடக்கும். இவற்றினின்று தனிமுறையிலான இழப்பீடானது பொதுவான இழப்பீட்டிற்கும் அப்பாற்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

Manjappa Mooly Vs Rama Bhandary, AIR 1968 Mys 202., என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு, தனிமுறையிலான இழப்பீடு மூன்றுவிதமான பொருள்களைக் குறிக்கிறது. முதலாவதாக, வழக்கின் தனிமுறையிலான சூழ்நிலைகளில் இருந்து எழும் உண்மையான இழப்பைக் (actual damage) குறிக்கிறது. இது பொதுவான இழப்பீட்டுடன் கூடுதலாகச் சேர்ந்ததாகும். இரண்டாவதாக, இது கூடுதலாகியுள்ள உண்மையான மற்றும் தற்காலிக இழப்பைக் (actual and temporal loss) குறிக்கிறது. இது, குறிப்பிட்ட இழப்பீடு எனவும் அழைக்கப்படுகிறது. இதன் மூன்றாவது பொருளில், வாதியால் கூறப்பட வேண்டிய மற்றும் மெய்ப்பிக்கப்பட வேண்டிய உண்மையான மற்றும் குறிப்பிட்ட இழப்பைக் (actual and particular) குறிக்கிறது.

தனிமுறையிலான இழப்பீட்டிற்கு, கணவரின் அருகாமை இழப்பு, திருமண இழப்பு, விருந்தோம்பல் அல்லது உபசரணை இழப்பு, வேலையிழப்பு, குறிப்பிட்ட வாடிக்கையாளர்களை இழந்ததால் ஏற்படும் இழப்பு போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

அலகு - VII

சேதத்தின் சேய்மை (Remoteness of damage)

PART - A/B

33. இழப்பீட்டின் சேய்மை சம்பந்தமான கருத்துரைகளைக் கூறுக. (Write about the theories of remoteness of damage) - Nov-2019 (v) (அல்லது)

✦ சேதத்தின் சேய்மை பற்றிய கருத்துரைகளை முக்கிய வழக்குகளுடன் கூறவும் (Write about the theories of remoteness of damage referring to leading decided case law) - May-2019 (v) (அல்லது)

✦ ஊறின் சேய்மையை முடிவு செய்ய கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு சோதனைகளை விளக்குக. வழிகாட்டுத்தீர்ப்புகளைக் குறிப்பிடுக. (Explain the various tests to be followed to determine the remoteness of damage. Refer to leading cases) - Nov-2018 (v) (அல்லது)

✦ சேதத்தின் சேய்மையை முடிவு செய்வதற்குதவும் விதிகளை விளக்குக. ஸ்காட் எதிர் ஷெப்பர்ட் மற்றும் வாகன் மௌண்ட் வழக்குகளையும் குறிப்பிடுக. (Explain the rules governing the determination of remoteness of damage. Refer to Scot Vs Shepherd and Wagon Mound Cases) - Nov-2017 (அல்லது)

✦ ஊறின் சேய்மையை முடிவு செய்வதற்கு உதவும் விதிகளை விளக்குக. ரீபாலிமிஸ் மற்றும் வேகன் மௌண்ட் வழக்குகளை குறிப்பிடுக. (Explain the rules that govern the determination of the remoteness of damage. Refer to Re-polimis and Wagon Mound Cases) - May - 2015.

SN - 46 சேதத்தின் சேய்மை / Remoteness of damage, Nov-2011.

SN - 47 ஸ்காட் எதிர் ஷெப்பர்ட் / Scot Vs Shepherd - May-2012.

SN - 48 வேகன் மவுண்டு – I / Wagon Mound - I., May-2016, Nov-2016.

SN - 49 முன்னறிய முடியும் சோதனை / Test of foreseeability, May-2016.

விடைச்சுருக்கம்: (அ) சேதத்தின் சேய்மை - ஆ சேதத்தின் சேய்மையை முடிவு செய்வதற்குதவும் சோதனைகள் - ஆ(1) காரண காரியத் தொடர்பு சோதனை - ஆ(2) இயல்பானதும் மற்றும் நிகழக்கூடியதுமான சோதனை அல்லது நியாயமாக முன்னறியத்தக்க சோதனை - (ஆ) (3) நேரடி விளைவுச் சோதனை

(அ) சேதத்தின் சேய்மை (Remoteness of damage):

ஒரு நபர் தனது கவனக்குறைவான செயலினால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் அவரே பொறுப்பேற்க வேண்டும் என்பதை இயற்கை நீதி கோருகிறது. ஆனால் இத்தகைய முறையிலான நீதி, மனித செயல்பாடுகளுக்கு தடையாக அமைந்துவிடும். எனவேதான், ஒரு மனிதனின் தவறான செயலினால் ஏற்படுகின்ற அனைத்து எல்லையற்ற (ad infinitum) விளைவுகளுக்கும் பொறுப்பேற்கப்படச் செய்யக்கூடாது எனும் சட்டவிதிகள் உருவாகின. எடுத்துக்காட்டாக, 'A' என்ற கப்பல் தலைவரின் கவனக்குறைவு காரணமாக, அது 'B' என்ற கப்பலின்மீது மோதி அதை மூழ்கடித்துவிட்டதன் விளைவாக 'B' கப்பலின் உரிமையாளர் நொடிப்புநிலைக்கு உள்ளாகிறார். 'B' கப்பலின் பணியாட்களில் ஒருவரின் உயிரிழப்பும் எஞ்சிய பணியாளர்களுக்கு பலத்த காயங்களும் பணியிழப்பும் ஏற்படுகிறது. கப்பலில் ஏற்றப்பட்ட சரக்குகள் தண்ணீரில் மூழ்கியதால், சரக்குகளை குறித்த நேரத்தில் பெற முடியாததால் சில வணிகர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. அவர்கள் சரக்குகளை அனுப்பும் நிறுவனத்துடன் தாங்கள் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்கின்றனர். நிறுவனத்திற்கு பொருள் இழப்பும் வாடிக்கையாளர் இழப்பும் ஏற்பட்டதால், நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பலரை ஆட்குறைப்பு செய்கிறது. 'A' என்ற கப்பல் தலைவரின் கவனக்குறைவான செயலைத் தொடர்ந்து இத்தகைய தொடர் விளைவுகள் ஏற்பட்டுள்ளது. பிரதிவாதியான 'A'-வை இத்தகைய அனைத்து விளைவுகளுக்கும் பொறுப்பேற்கச் செய்தால் மனிதர்கள் தங்களின் செயல்கள் எதனையும் செய்யமுடியாத நிலை உருவாகும். மேற்குறிப்பிட்டுள்ள விளைவுகளில் சிலமட்டுமே பிரதிவாதியின் கவனக்குறைவினால் ஏற்பட்டவை. பிற விளைவுகள் ஏற்படுவதற்கு அவரின் கவனக் குறைவான செயல் வாய்ப்பளிப்பதாக இருந்தது என்றாலும், அவரின் நடத்தையால் ஏற்பட்டது எனக் கூற முடியாது. ஏனெனில் அவைகள் 'A' -ன் செயலுக்கு மிகவும் தொடர்பற்ற அல்லது சேய்மையான விளைவுகளேயாகும். ஓர் கவனமற்ற அல்லது தீங்கான செயலைத் தொடர்ந்து நிகழ்கின்ற அனைத்து விளைவுகளுக்கும் ஒருவரை பொறுப்பாக்க முடியாது. ஏனெனில் ஒரு செயலின் விளைவுகள் முற்றுப்பெறாமல் நீண்டு கொண்டே செல்லலாம். எனவே பிரதிவாதியின் செயலினால் ஏற்படும் தொடர் விளைவுகளுக்கு அவரை பொறுப்பேற்கச் செய்வது ஓர் குறிப்பிட்ட எல்லையுடன் முடிவடைய வேண்டும். இதனையே "சட்டத்தில் நெருங்கிய தொடர்புடைய காரணங்களே அன்றி தொலைதூரக் காரணங்கள் இழப்புக்கான முகாந்திரமாகாது" (injure non remota causa sed proxima spectatur - i.e., 'in

law the immediate or proximate and not the remote cause of any event is regarded') எனும் முதுமொழி குறிப்பிடுகிறது. இம்முதுமொழி உருவானதன் அடிப்படைக்காரணம், சட்டம், ஓர் தவறான செயலைத் தொடர்ந்து எழும் அனைத்து விளைவுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாது, அது சில விளைவுகளை பொறுப்புநிலை எல்லைக்கு அப்பாற்பட்டதாக கருதுவதாகும். ஏனெனில் காரணங்களுக்கான காரணங்களையும் அல்லது விளைவுகளுக்கான விளைவுகளையும் ஆராய்வது எல்லையற்ற நிலைக்கே வழிவகுக்கும் என்பதாகும். எனவே சேதத்திற்கு மிகவும் தொடர்பற்ற அல்லது சேய்மையான விளைவுகளுக்கு பிரதிவாதி பொறுப்பாகத் தேவையில்லை என்பதைக் ஏற்றுக் கொண்டாலும், சேய்மையான விளைவுகள் என்பது எவற்றைக் குறிக்கும் அதனை எவ்வாறு கண்டறிவது என்னும் கேள்விகள் இயல்பாகவே எழுகிறது. ஏனெனில் சேதத்திற்கு சேய்மையானது என்பதை மெய்ப்பிப்பதில் ஒரு நபருக்கு பின்வரும் இரு பிரச்சனைகள் உள்ளது:

(i) பிரதிவாதியின் கடமை மீறுகைக்கும் மற்றும் வாதிக்கு ஏற்பட்ட ஊறினுக்கும் இடையே காரணம் மற்றும் விளைவு (cause and effect) எனும் உறவு உள்ளதா? ஆம் எனில், பிரதிவாதி பொறுப்பாகுவார். இல்லையெனில் அவர் பொறுப்பாகமாட்டார். ஏனெனில் உண்மையில் இழப்பிற்கு காரணமாகாத தனது நடத்தை ஒன்றினுக்கு அவர் பொறுப்பாகமாட்டார்;

(ii) பொறுப்புநிலை விதிப்பதை நியாயப்படுத்துவதற்கு ஒருவர், போதுமான முக்கியத்துவம் பெற்ற காரணிகளை தேர்வு செய்வதுடன், விளைவுகளின் எல்லையை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அதாவது விளைவுகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட விளைவுகளினால் இழப்பிற்கு உள்ளாகும் நபர் தாமே அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது பிற ஆதாரங்களின்மூலம் அவற்றை ஈடு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) சேதத்தின் சேய்மையை முடிவு செய்வதற்குதவும் சோதனைகள் (Tests which helps to determine the remoteness of damage): சேதத்தின் சேய்மையை தீர்மானிப்பதற்கு தொடக்கத்தில் இருந்தே பல்வேறு சோதனை முறைகள் முயற்சிக்கப்பட்டது. அவற்றை பின்வருமாறு காண்போம்.

ஆ(1) காரண-காரியத்தொடர்பு சோதனைகள் (Tests of casual relation): நீதிமன்றங்கள் நீண்டகாலமாக தம்முன்னிலையில் காரண-காரியத் தொடர்பாக எழும் சிக்கல்களை தீர்வு செய்வதற்கென ஓர் நடைமுறைப்படுத்தத்தக்க சோதனையை உருவாக்க கடுமையாக முயற்சித்து வந்துள்ளன. இருப்பினும் இத்தகைய சூழ்நிலைகளில் எழுகின்ற பிரச்சனைகள் வெவ்வேறானதாகவும் எல்லையற்றதாகவும் இருப்பதால் ஒரு குறிப்பிட்ட சோதனைமுறை மட்டுமே தீர்வு செய்வதற்கு போதுமற்றதாக இருந்தது. விளைவினை ஏற்படுத்திய காரணத்தை கண்டறிவதில் உள்ள சிக்கல் என்னவெனில், அதற்கான பொறுப்பு நிலையை எவர்மீது சுமத்துவது என்பதாகும். பல்வேறுபட்ட பொருண்மைகளில் இருந்து எழுகின்ற இழப்பீடு செலுத்துவதற்கு பொறுப்பு கொண்டுள்ள தரப்பினர்களை ஒரே

அளவுகோல் வைத்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்?. இத்தகைய சிக்கல்களை தீர்மானிப்பதற்கான ஒரே வழி, ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில், பிரதிவாதியின் கவனக்குறைவான நடத்தை வாதியின் ஊறுக்கு காரணமாகுமா அல்லது இல்லையா என்பதை கண்டறிவதாகும். காரண-காரியத் தொடர்பை கண்டறிவதற்கு ஓர் பொதுவான கொள்கையை வகுப்பதற்கு பதிலாக இம்முறையே எளிமையானதாகும். இம்முறையின்கீழ் காரணம் மற்றும் விளைவுகளை காண்பதற்கு நீதிமன்றங்கள் பல இலத்தீன் சொற்றொடர்கள் மற்றும் பெயரெச்சங்களைப் பயன்படுத்தின. தகுதியான காரணங்களை கண்டுபிடிப்பதற்காக, 'நேரடியான' (direct), 'நெருங்கிய' (effective), 'உடனடியான' (immediate), 'இடைநிகழ்வான' (intervening) மற்றும் 'தொடர்பற்ற' (remote) போன்ற சொற்களைப் பயன்படுத்தின. இதே போன்று விளைவுகளைக் குறிப்பிடுவதற்கு 'இயல்பான' (natural), நிகழத்தக்க (probable) 'நேரடியான' மற்றும் 'சேய்மையான' எனும் சொற்களைப் பயன்படுத்தின.

மேற்குறிப்பிட்டவைகள் மட்டுமின்றி, நீதிமன்றங்கள் 'causa causans' (உடனடிக் காரணம்), 'causa sine qua non' (தவிர்க்க முடியாத காரணம்) மற்றும் 'nova causa interveniens' (இடையுறு புது நிகழ்வு) எனும் இலத்தீன் சொற்றொடர்களையும் விளைவுகளின் தொடர்ச்சி தொடர்பாக, சங்கிலிகள் (chains), ஆறுகள், ஆற்றலைக் கடத்தும் பற்சக்கரங்கள் (transmission gears) போன்ற உருவகங்களையும் பயன்படுத்தின. இவற்றின் விளைவு குழப்பத்தையும் தீர்ப்புவழிச் சட்டத்தில் (case-law) முரண்பாடுகள் ஏற்படுவதற்கும் வழிவகுத்தது. மேலும் கவனமின்மையின் பொறுப்புநிலை குறித்த பிரச்சனையை நீதிமன்றங்கள், கடமை, மீறுகை மற்றும் காரணத்தொடர்பு எனும் மூன்று எழுவினாக்களாக (issues) பிரித்து, ஒவ்வொரு எழுவினாவிற்கும் சோதனைகள் மற்றும் விதிகளை உருவாக்க முயன்றது. இவை மூன்றும் ஒரே எழுவினாவின் பகுதிகள் என்பதால் இவற்றினை எளிதில் பிரிக்க இயலவில்லை. எனவே இத்தகைய முயற்சி வெற்றியடையவில்லை. இவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் சட்டநிலை குழப்பத்திற்கும், நீதிபதிகள் மற்றும் சட்டநூல் ஆசிரியர்களின் கண்டனத்திற்கும் வழிவகுத்தது.

ஆ(2) இயல்பானதும் மற்றும் நிகழக்கூடியதுமான விளைவுகள் சோதனை அல்லது நியாயமாக முன்னறியத்தக்க சோதனை (The Test of Natural and Probable Consequence or Test of Reasonable Foreseeability): ஓர் தவறான செயலினால் ஏற்படும் விளைவுகளை, ஓர் சமநிலை அறிவு கொண்ட மனிதரால் முன்னறியக்கூடியதாக இருப்பின் அவை சேதத்திற்கு சேய்மையான விளைவுகளாக இருக்காது, மாறாக ஓர் சமநிலை அறிவுகொண்ட மனிதரால் எதிர்பார்த்திருக்க முடியாத விளைவுகளாக இருப்பின் அவை மிகவும் சேய்மையான விளைவுகளாகும் என்பதே இச்சோதனை முறையின் அடிப்படையாகும். இச்சோதனை, பிரதிவாதியை ஒரு சமநிலை அறிவுகொண்ட நபருக்கு நிகரான அறிவு கொண்டுள்ளவராக பாவிக்கிறது. பிரதிவாதி வேண்டுமென்றே ஏற்படுத்திய இழப்பிற்கும் மற்றும் அவர் உண்மையில்

கருதியிராத அவரின் தவறான செயலின் இயல்பான மற்றும் நிகழத்தக்கதுமான விளைவுகளுக்கும் பொறுப்பாளியாவார். இவற்றினின்று, ஒருவர் கருதியிராத விளைவுகளுக்கும் மற்றும் அவரின் செயலால் நிகழ்ந்திருக்க முடியாத விளைவுகளுக்கும் பொறுப்பாகமாட்டார் என்று இச்சோதனை முறை குறிப்பிடுவதை அறிந்து கொள்ளலாம்.

Scott Vs Shepherd, (1773) 2 WB 892., என்ற வழக்கு நியாயமாக முன்னறியத்தக்க சோதனை அல்லது இயல்பானதும் நிகழத்தக்கதுமான விளைவுகள் சோதனைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில் பிரதிவாதியான ஷெப்பர்ட் விஷமத்தனமாக வாணவெடி (இராக்கெட் பட்டாசு) ஒன்றை கொளுத்தி சந்தைக்குள் எறிந்தார். அது ரொட்டி வியாபாரம் செய்யும் ஏட்ஸ் (Yates) என்பவரின் கடைமீது விழுந்தது. வில்லிஸ் என்பவர் தனக்கும் ஏட்ஸ்-க்கும் ஊறு ஏற்படுவதை தடுப்பதற்காக அதனை எடுத்து எறிந்ததில் அது ரியால் என்பவரின் கடையின்மீது விழுந்தது. ரியாலும் அதனை எடுத்து எறிய அது வாதியின் (ஸ்காட்) மீது விழுந்து வெடித்ததில் அவரின் பார்வை பறிபோனது. நீதிமன்றம், வாணவெடியை முதலில் கொளுத்தி எறிந்த பிரதிவாதி, எவரையேனும் அல்லது மற்றவரை பயமுறுத்த வேண்டும் என்ற நிச்சயமான எண்ணத்தைக் கொண்டிருந்தார் என்றும் ஆனால் அதே நேரத்தில் வாதிக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்றோ குறிப்பாக அவரின் பார்வையை இழக்கச் செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் இருப்பினும் முட்டாள்களும் விஷமத்தனமான நபர்களும் தங்களின் தவறான செயல்களினால் ஏற்படும் விளைவுகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்பதை சட்டம் வலியுறுத்துவதால் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. இவ்வாறு இடையில் குறுக்கிடும் நபர் (ஏட்ஸ், வில்லிஸ் மற்றும் ரியால் போன்ற நபர்கள்) தனது செயலுக்கு முழுமையாக பொறுப்பாகாத போதும் மற்றும் பிரதிவாதி தனது பொறுப்பற்ற செயலின் விளைவுகளை முன்னறிந்திருக்க வேண்டிய நேர்வுகளிலும், காரணத் தொடர்பின் சங்கிலி துண்டாகுவதில்லை என்பதால் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்பதே இவ்வழக்கின் சாராம்சமாகும்.

மேற்குறிப்பிட்ட வழக்கின் கருத்துரையை **Righy Vs Hewitt, (1850) 5 Ex 240** மற்றும் **Greenland Vs Chaplin, (1850) 5 Ex 243.,** என்ற வழக்குகளில் தலைமை நீதிபதி பொல்லாக் ஆதரித்தார். ஒரு நபர்தான் கருதியே அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்திய இழப்பிற்கு அல்லது அவர் கருதியிராதபோதும், தன் செயலினால் ஏற்பட்ட இயல்பான மற்றும் நிகழத்தக்க விளைவுகளுக்கு மட்டுமே பொறுப்பாகுவார் என்றும் இத்தகைய விதியே நியாயமாக முன்னறியத்தக்க சோதனைமுறை என்பதையும் குறிப்பிட்டார். நீதிப்பிரபு டென்னிங் **King Vs Philips, (1953) All ER 617.,** என்ற வழக்கில், மன அதிர்ச்சிக்கான பொறுப்புநிலையை தீர்மானிப்பதற்கான சோதனை, அதிர்ச்சியினால் ஏற்படக்கூடிய ஊறினை முன்னறியத்தக்கதேயாகும் என்றும் முன்னறியத்தக்கது என்பது ஓர் பயனுள்ள சோதனை முறையாகிவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

ஆ(3) நேரடி விளைவுச் சோதனை (Test of Directness): 1870 ஆம் ஆண்டில் **Smith Vs London and South Western Railway Co (1870) LR 6 CP 14.,** என்ற வழக்கில் நியாயமாக முன்னறியத்தக்க சோதனை என்பது நிராகரிக்கப்பட்டு நேரடி விளைவுச் சோதனை என்பது பயன்படுத்தப்பட்டது. இச்சோதனை, ஒரு நபர், தான் செய்த தவறனானச் செயலின் நேரடி விளைவுகள் அனைத்திற்கும் அதாவது அத்தகைய விளைவுகள் முன்னறியத்தக்கதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட பொறுப்பாகுவார்; ஏனெனில் ஓர் தவறான செயலின் நேரடி விளைவுகள் சேய்மையானதாக இருக்காது என்பதைக் குறிப்பிடுகிறது. இவ்வழக்கில் இரயில்வே நிறுவன ஊழியர்கள், வறண்ட காலத்தில், இரயில் பாதைகளின் ஓரத்தில் வளர்ந்திருந்த புற்புதர்களை வெட்டி அவற்றை முறையாக அப்புறப்படுத்தாமல் கவனக்குறைவாக இரயில்பாதையின் ஓரங்களில் குவித்து வைத்து சென்றுவிட்டனர். இரயில் 'என்ஜினில்' இருந்து வெளிப்பட்ட தீப்பொறி புற்புதர்களை பற்றியதுடன் பலமாக வீசிய காற்றின்மூலம் அவை கொண்டு செல்லப்பட்டதில் வாதியின் குடிசை முழுதுமாக எரிந்துபோனது. பிரதிவாதிகள், ரயில் என்ஜினில் இருந்து வெளிப்பட்ட தீப்பொறி 600 அடிகள் தொலைவிலுள்ள குடிசையைப்பற்றி அழித்துவிடும் என்பதை முன்னரே அறிய முடியாமலிருந்தாலும்கூட குடிசை எரிந்து போனது பிரதிவாதிகளின் கவனக்குறைவின் நேரடி விளைவாகவே என்பதால் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. கவனக்குறைவிற்கு நேரடிச்சான்று இல்லாமல் இருப்பினும் ஓர் சமநிலை அறிவு பொருந்திய மனிதன் நியாயமாக எதிர்பார்த்திருக்க முடியுமா என்ற கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது; ஆனால் கவனக்குறைவிற்கு சான்று உள்ளபோது விளைவுகள் முன்னறியத்தக்கதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட அந்நபர் பொறுப்பாகுவார் என்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி B.சாணல் (Channel B) குறிப்பிட்டார்.

நேரடி விளைவுச் சோதனை **Re Polemis and Furness Withy & Co. Ltd., (1921) 3 KB 560.,** என்ற வழக்கில் உச்சநிலை பெற்றது. இவ்வழக்கில், பிரதிவாதிகள் பெட்ரோல் மற்றும் பென்சீன் தகர பீப்பாய்கள் உள்ளிட்ட சரக்குகளை ஏற்றிச் செல்வதற்காக வாதியின் நீராவிக் கப்பலை வாடகைக்குப் பெற்றனர். பயணத்தின்போது பெட்ரோல் தகர பீப்பாய்கள் சிலவற்றில் இருந்து கசிவு ஏற்பட்டு சரக்கறை முழுதும் நிறைந்திருந்தது. கப்பல் மொராக்கோ நாட்டின் கேசபிளான்க்கா (casablanca) துறைமுகத்தினுள் சென்ற பின்னர், பிரதிவாதியின் பணியாளர்கள் கப்பலில் இருந்த சரக்குகளை இடம் மாற்ற வேண்டியிருந்தது. பெட்ரோல் மற்றும் பென்சீன் தகர பீப்பாய்களை சரக்கறையில் இருந்து மேலே கொணருவதற்கு ஓர் தளமாக பயன்படுத்தும் மரப்பலகையின்மீது பணியாளர் ஒருவர் கவனக்குறைவாக மோதியதில், பலகை சரக்கறையில் இருந்த ஏதேனும் ஒன்றின் மீது மோதி விழுந்ததால் ஏற்பட்ட தீப்பொறி அங்கு பரவி நிறைந்திருந்த பெட்ரோல் ஆவியின் காரணமாக தீப்பற்றியதில் கப்பல் முழுதுமாக எரிந்து போனது. மேல்முறையீட்டு நீதிமன்றம் கவனக்குறைவாக செயல்பட்டவர் அதன் நேரடி விளைவுகள் அனைத்திற்கும், அவர் அத்தகைய விளைவுகளை நியாயமாக

எதிர்பார்த்திருக்க முடியாது என்றாலும்கூட பொறுப்பாகுவார் என்பதால் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது. செயல் கவனக்குறைவானது மற்றும் அதனால் ஏற்பட்ட சேதத்திற்கான காரணத்தை கவனக்குறைவான செயலை பின்பற்றி நேரடியாக காரணக்கூடியதாக (directly traceable to the negligent act) இருக்கும்வரையில், அதன் விளைவுகள் எதிர்பார்க்கப்பட முடியாத ஒன்று அல்லது ஏற்பட்ட சேதம் உண்மையில் எதிர்பார்த்திருக்க முடியாத அளவானது என்பது பொருட்படுத்தப்பட மாட்டாது என்று நீதிப்பிரபு ஸ்கரட்டன் (Scrutton LJ) இவ்வழக்கில் குறிப்பிட்டார்.

பிரபுக்கள் அவை ரீ போல்மிஸ் வழக்கின் விதியை ஆய்வு செய்யும் வாய்ப்பை **Owners of Liesbosh Dredger Vs Owners of Steamship Edison, 1933 AC 448.,** என்ற வழக்கில் பெற்றது. இவ்வழக்கில், எடிசன் கப்பலை பிரதிவாதிகள் கவனக்குறைவாக இயக்கியதன் காரணமாக, வாதிகளின் தூர்வாரும் இயந்திரம் (dredger) கடலில் மூழ்கியது. வாதிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் தூர்வாரும் வேலையை முடித்துவிடுவதாக மூன்றாம் நபரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர். வாதிகள் ஏழ்மை நிலையில் இருந்தால் உடனடியாக மாற்று தூர்வாரும் இயந்திரம் ஒன்றை வாங்க முடியவில்லை. எனவே மிக அதிக வாடகை கொடுத்து வேறொரு தூர்வாரும் இயந்திரத்தைப் பயன்படுத்தினர். இதன் காரணமாக வாதிகள் (i) தூர்வாரும் இயந்திரத்திற்கான விலை மற்றும் (ii) தூர்வாரும் இயந்திரம் மூழ்கிய நாளிலிருந்து, மாற்றாக வேறொரு புதிய இயந்திரத்தை வாங்கி பயன்படுத்தும்வரை அதிக வாடகை செலுத்தியதால் ஏற்பட்ட இழப்பு உட்பட அனைத்து இழப்புகளுக்காகவும் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர். நீதிமன்றம், தூர்வாரும் இயந்திரம் மூழ்கடிக்கப்பட்ட தினத்தன்றைய அதன் சந்தை விலை மற்றும்தூர்வாரும் இயந்திரம் மூழ்கடிக்கப்பட்ட தேதியிலிருந்து மற்றொரு தூர்வாரும் இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து வேலைக்கு பயன்படுத்திய தேதிக்கு இடைப்பட்ட காலத்திற்கு, வாதிகள் மூன்றாம் நபரிடம் செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாததால் ஏற்பட்ட இழப்பு ஆகியவற்றை அனுமதித்தது. ஆனால் புதிய தூர்வாரும் இயந்திரம் வாங்கப்பட்டு அதைப் பயன்படுத்தக்கூடிய தினத்திற்குப் பின் எந்தவொரு இழப்பீடும் கோர முடியாது என்றும், வாதிகள் தங்களின் ஏழ்மை நிலையினால் புதிய தூர்வாரும் இயந்திரம் வாங்க இயலாததால் ஏற்பட்ட அதிகப்படியான இழப்பு, பிரதிவாதியின் செயலுக்கு மிகவும் தொடர்பற்றது (சேய்மையானது) என்றும் தீர்ப்பளித்தது.

பிரபுக்கள் அவை, ரீபோல்மிஸ் வழக்கில் பொருள் விளக்கம் அளித்திருந்த 'நேரடிக்காரணம்' (direct cause) என்பதன் எல்லையை கட்டுப்படுத்த முயன்றது. 'முதலாவது வேகன் மௌண்ட் வழக்கு' எனப்புகழ் பெற்ற பின்வரும் வழக்கில், பிரிவி கவுன்சில், நேரடி விளைவுச் சோதனை தவறானது என்று நிராகரித்து நியாயமாக முன்னறியத்தக்க சோதனையை சிறந்த சோதனையாகும் என்றும் குறிப்பிட்டது.

Overseas Tank Ship (U.K) Ltd. Vs Morts Dock and Engineering Co. Ltd. (Wagon Mound Case No.1)., (1961) All ER 404 (P.C)., என்ற

வழக்கில், எரி எண்ணெயால் இயக்கப்படும் 'வேகன் மவுண்ட்' என்ற கப்பலை வாடகைக்கு எடுத்திருந்த பிரதிவாதிகள், சிட்னி துறைமுகத்தில் எரி எண்ணெயை நிரப்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் கப்பலிலிருந்து 600 அடி தூரத்தில் வாதிகளுக்குச் சொந்தமான கப்பல் பழுதுபார்க்கும் மேடை இருந்தது. பிரதிவாதிகளின் பணியாளர்களின் கவனக்குறைவினால் அதிகளவிலான எண்ணெய் கடலில் சிந்தியது. நீர்ப்பரப்பின் மேற்பகுதியில் பரவிய எண்ணெய் காற்று மற்றும் அலைகளினால் அடித்து செல்லப்பட்டு கப்பல் பழுதுபார்க்கும் மேடையின் கீழ்ப்பகுதிவரை பரவியது. பிரதிவாதிகளின் கப்பல் துறைமுகத்தை விட்டுச்சென்ற 60 மணிநேரங்கள் கழித்து, வாதிகளின் கப்பல் பழுதுபார்க்கும் மேடையில் பற்ற வைப்பு வேலை (Welding work) செய்யும்போது வெளிப்பட்ட தீப்பொறி, பழுதுபார்க்கும் மேடைக்குகீழே நீரில் மிதந்து கொண்டிருந்த கந்தல் துணியில் விழுந்து பற்றியது. அது கடலின் மேற்பரப்பில் பரவியிருந்த எண்ணெயிலும் பற்றி வேகமாக பரவியதில் வாதிகளின் கப்பல் மேடை மற்றும் சாதனங்களுக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது. விசாரணை நீதிமன்றம் நேரடி விளைவுச் சோதனையைப் பயன்படுத்தி பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது. நியூ சௌத் வேல்ஸ் உச்சநீதிமன்றமும் 'வோல்மிஸ்' விதியைப் பின்பற்றி நீர்ப்பரப்பில் பரவியிருந்த எண்ணெய் தீப்பற்றி இழப்பை ஏற்படுத்தும் என்பது முன்னறியத்தக்கதல்ல என்றாலும்கூட அது ஓர் எதிர்வாதமாகாது என்றும், தெருவில் சென்று கொண்டிருக்கும் ஒரு சாதாரண நபரிடம் சூழ்நிலையைப் பற்றி விளக்கமாக குறிப்பிடாமல், வாதியின் கப்பல் பழுதுபார்க்கும் மேடை தீப்பற்றியதற்கான காரணத்தைக்கூறும்படி கேட்டால், அவர் தயக்கமின்றி பிரதிவாதிகளின் பணியாளர்கள் எண்ணெயை சிந்தவிட்டதையே குறிப்பிடுவார் என்றும் குறிப்பிட்டு பிரதிவாதிகளின் பொறுப்பு நிலையை உறுதிசெய்தது. இறுதியாக இவ்வழக்கு பிரிவுகவுன்சில் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. பிரிவு கவுன்சில் தற்போதைய நிலையில் 'வோல்மிஸ்' வழக்கு சட்டத்தின் சரியான நிலையை எடுத்துரைப்பதாக இல்லை என்பதை குறிப்பிட்டது. பிரதிவாதிகளின் கவனமின்மையே வாதிகளின் இழப்பிற்கான நேரடிக் காரணமாக இருந்தாலும் கூட, அத்தகைய இழப்பு, ஓர் சமநிலை அறிவுகொண்ட மனிதரால் முன்னறியத்தக்கதாக இல்லாததால் பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்று குறிப்பிட்டது. மேலும் "ஒரு நிகழ்வு நடந்து முடிந்த பின்னர் முட்டாளும்கூட தெளிவு பெற்று அறிவாளியாவான். ஆனால் பொறுப்பு நிலையை ஓர் சமநிலை அறிவு கொண்ட மனிதனின் முன்னறிவை வைத்து மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டுமே அன்றி, நிகழ்வுக்குப் பின் தெளிவு பெறும் முட்டாளின் பின்னறிவை வைத்து அல்ல" ("After the event even a fool is wise. But it is not the hindsight of a fool, it is the foresight of a reasonable man which alone can determine responsibility...") என்று குறிப்பிட்டது.

Overseas Tankship (U.K) Ltd. Vs The Miller Steamship Co. Ltd (Wagon Mound Case No.2), (1966) All ER 709 (PC)., என்ற வழக்கில் 'வேகன் மவுண்ட்' வழக்கு எண்-1-ன் பிரதிவாதிகளே இவ்வழக்கின் பிரதிவாதிகள்

ஆவர். பிரதிவாதிகளின் 'ஓவர்சீஸ் டேங்க் ஷிப்' நிறுவனம் 'வேகன் மவுண்ட்' என்னும் கப்பலை வாடகைக்கு எடுத்து, சிட்னி துறைமுகத்தில் எரி எண்ணெயை நிரப்பிக் கொண்டிருந்தது. வேகன் மவுண்ட் கப்பல் பொறியாளர்களின் கவனக்குறைவினால் அதிகளவிலான எண்ணெய் சிந்தப்பட்டது. சில மணி நேரங்கள் கழித்து நீரின் மேற்பரப்பில் மிதந்த எண்ணெய் காற்று மற்றும் அலைகளால் அடித்து செல்லப்பட்டு அங்கு பழுதுபார்ப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த 'மில்லர் ஸ்டீம் ஷிப்' கம்பெனிக்குச் சொந்தமான இரு கப்பல்களை சூழ்ந்து பரவியது. கப்பல் தளமேடையில் செய்து கொண்டிருந்த பற்ற வைப்பு (welding) செயலினின்று வெளிப்பட்டதீப்பொறி தண்ணீரில் பரவியிருந்த எண்ணெயுடன் சேர்ந்து எரிந்ததில் 'மில்லர் ஸ்டீம் ஷிப்' கம்பெனியின் இரண்டு கப்பல்களும் முற்றிலுமாக எரிந்து போனது. நியூ சௌத் வேல்ஸ் உச்சநீதிமன்ற நீதிபதி வால்ஷ் (Walsh J), நீர்ப்பரப்பின்மீது பரவியுள்ள எண்ணெய் தீப்பற்றுவது மிகவும் அரிதான சூழ்நிலைகளில் மட்டுமே நிகழக்கூடியது என்பதால் பிரதிவாதிகள் கவனமின்மைக்கு பொறுப்பாகமாட்டார்கள் என்றும் அதே சமயத்தில் மிக அதிகளவிலான எண்ணெயை கடலில் சிந்தவிட்டது பொதுத் தொல்லையாகும் என்றும் எனவே பொதுத்தொல்லை ஏற்படுத்தியதற்கு பிரதிவாதிகள் இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்றும் தீர்ப்பளித்தது.

மேல்முறையீட்டில் பிரிவி கவுன்சில் நீதிமன்றம், நீர்ப்பரப்பின் மீது பரவியிருந்த எண்ணெய் தீப்பற்றும் அபாயம் கொண்டது என்பது முன்னறியத்தக்கதே என்பதால் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்று தீர்ப்பளித்தது. மேலும், ஓர் சமநிலை அறிவு கொண்ட மனிதனின் எண்ணத்தில் அவ்வாறு நிகழலாம் என்றும் தோன்றக்கூடிய மற்றும் நெருங்கிய தொடர்பற்றது என ஒதுக்கிவிட முடியாத நிலையே உண்மையில் அபாயம் ஏற்படக்கூடிய நிலையாகும். அத்தகைய அபாயத்தை நீக்குவதில் சிரமங்கள் ஏதுமில்லாதிருந்தால், ஆதாயக்குறைவு இல்லாமல் இருந்தால் மற்றும் அதிக செலவு செய்யும் தேவை இல்லாமல் இருந்தால் கண்டிப்பாக அந்த அபாயத்தை புறக்கணித்திருக்க மாட்டார். பிரிவி கவுன்சில், தீயினால் ஏற்பட்ட சேதம் முன்னறியத்தக்கதே என்ற முடிவுக்கு வந்ததற்கு பின்வரும் கருத்துகளை கவனத்தில் கொண்டது:

(1) மிகவும் தொடர்பற்றிருந்தாலும்கூட, தீப்பற்றுவதற்கான அபாயம் இருந்தது;

(2) நீர்ப்பரப்பில் உள்ள எண்ணெய் தீப்பற்றினால் அங்கிருக்கும் கப்பல்கள் மற்றும் சொத்துகளுக்கு பெருமளவு இழப்பு ஏற்படலாம் என்கிற மிகப்பெரும் அபாயம் இருந்தது;

(3) பிரதிவாதியால் நியமிக்கப்பட்டிருந்த தகுதிபெற்ற முதன்மை பொறியாளர், அபாயத்தின் கடுமையை அறிந்திருந்திருக்க வேண்டும்;

(4) அபாயத்தை நீக்குகின்ற செயலைச் செய்வதில் எந்தவொரு சிரமமோ, ஆதாயக்குறைவோ அல்லது அச்சுறுத்தலோ இல்லை;

(5) தொடக்கத்திலிருந்தே எண்ணெயை கசியவிட்டது ஓர் குற்றமாகும் மற்றும் பிரதிவாதிகளுக்கு பணஅளவில் இழப்பை ஏற்படுத்தியதாகும்; மற்றும்;

(6) முதன்மைப் பொறியாளர் நிலையில் இருக்கும் ஓர் சமநிலை அறிவு கொண்ட நபர் அபாயத்தை உணர்ந்திருக்க வேண்டும் மற்றும் முன்னரே அறிந்திருந்து அதனை தடுத்திருக்க வேண்டும்.

வேகன் மவுண்ட் - 2 வழக்கு முடிவின் விளைவு முன்னறியத்தக்க சோதனையை விளக்குவதும் மற்றும் உறுதி செய்வதுமாகும். முன்னறியத்தக்க சோதனை குறித்து இவ்வழக்கில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, மிகவும் தொடர்பற்றது என்று ஒதுக்கிவிடக்கூடியவை தவிர, கடமை மீறுகையின் விளைவாக நிகழலாம் என்று முன்னறியக்கூடிய ஏனைய அனைத்து சேதங்களுக்கும் தீங்கிழைத்தவர் பொறுப்பாகுவார். முன்னறியத்தக்க சோதனையை கவனமின்மை தீங்கிற்கு மட்டுமின்றி தொல்லை குறித்த தீங்கிற்கும் பொருந்தும் என்பதையும் வேகன் மவுண்ட்-2 வது வழக்கு நிறுவியுள்ளது. மேலும் வேகன் மவுண்ட்-1 வழக்கு, சேதத்தின் சேய்மைச் சோதனையை (அதாவது முன்னறியத்தக்க இழப்பிற்கு மட்டுமேயான பொறுப்புநிலையை) குறிப்பிட்டது. ஆனால் வேகன் மவுண்ட்-2, வழக்கு, கவனத்துடன் இருக்க வேண்டிய கடமையை (duty of care) குறித்ததாகும். சேதத்தின் அளவு பெருமளவிலானதாக இருக்கும்போது மிகவும் தொடர்பற்ற ஓர் வாய்ப்பும்கூட கவனத்துடன் இருக்க வேண்டிய கடமையை தூண்டுவதற்கு போதுமானதாகும் என்பதையும் எடுத்துரைத்துள்ளது.

34. "எதிர்வாதியைத் தவிர மற்ற நபர் 'இடையில் குறுக்கிடும் புதிய செயல் செய்ததனால் இழப்பீடு மிக சேய்மையாக ஆகலாம்" - வழக்குகளுடன் விளக்குக. ("Damages may become too remote owing to the 'novus actus interveniens' of some person other than the defendant himself". Explain the case laws), Nov-2010.

SN - 50 புதிய செயல்களின் இடையீடு (அல்லது) இடையுறு புதுநிகழ்வு / Remoteness of damage, Nov-2018, Nov-2018(v), Nov-2019 (v).

விடைச்சுருக்கம்: (அ) புதிய செயல்களின் இடையீடு - விளக்கம்
(ஆ) வழக்குத்தீர்வுகள்

(அ) புதிய செயல்களின் இடையீடு - விளக்கம் (Novus Actus interveniens - Explanation of):

பொதுவாக ஒரு நபர் தான் செய்த தவறான செயலினால் மற்றொருவருக்கு ஏற்பட்ட நேரடியான, இயல்பான மற்றும் முன்னறியத்தக்க விளைவுகளுக்கு மட்டுமே பொறுப்பாவார். அவ்வாறில்லாமல், ஒரு நபரின் தவறான செயலுக்கும் அச்செயலினால் எவரேனும் ஒருவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கும் மிகவும் தொடர்பில்லாமல் இருப்பின், தவறான செயலைச் செய்தவர் பொறுப்பாக

மாட்டார். அதாவது ஒரு நபரின் செயலுக்கும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் இடையேயான காரணத்தொடர்பு எனும் சங்கிலிப்பிணைப்பு துண்டாகாமல் இருக்க வேண்டும். இவ்வாறு செயலுக்கும் விளைவுகளுக்கும் இடையேயான சங்கிலிப்பிணைப்பு துண்டாகாமல் இருக்கும்வரை, ஏற்பட்ட விளைவுகள் செய்யப்பட்ட செயலுக்கு சேய்மையானது எனக்கூற முடியாது. காரணத்தொடர்பு சங்கிலி எப்போது துண்டிக்கப்படுகிறது மற்றும் எப்போது துண்டிக்கப்படுவதில்லை என்பதை பின்வரும் எடுத்துக்காட்டுகள்மூலம் காண்போம்.

எடுத்துக்காட்டு – 1: 'A' என்பவர் வாழைப்பழம் ஒன்றை சாப்பிட்டுவிட்டு அதன் தோலை பக்கத்தில் இருக்கும் குப்பைத்தொட்டியில் போடாமல் கவனக்குறைவாக அதற்கு பக்கத்தில் வீசிவிடுகிறார். 'B' என்பவர் அதனை எடுத்து நடைபாதையில் போடுகிறார். நடைபாதையில் வேகமாக நடந்து வந்த 'C' என்பவர் பழத்தோலின்மீது கால்வைத்து விழுந்ததில் அவரது வலது கணுக்கால் எலும்பில் முறிவு ஏற்படுகிறது. இங்கு 'B'-ன் செயலுக்கு வாய்ப்பினை அளித்தது 'A'-ன் செயலே என்றாலும்கூட, 'B'-ன் தனிப்பட்ட செயலே, 'C'-ன் எலும்பு முறிவுக்கு காரணமாகிறது. எனவே 'A' தான் செய்த முறையற்ற செயலுக்கு பொறுப்பாகமாட்டார். ஏனெனில் 'B' இடையில் செய்த புதிய செயலே 'C'-ன் ஊறுக்கு காரணமாகும்.

எடுத்துக்காட்டு – 2: மக்கள் கூட்டம் நிறைந்துள்ள இடத்தில் 'A' என்பவர் வாணவெடி ஒன்றை கொளுத்தி எறிந்தார். அது 'B'-க்கு அருகில் விழ, 'B' அதனை எடுத்து எறிய அது 'C' என்பவருக்கு அருகில் விழ 'C' – தன்னை தற்காத்துக் கொள்வதற்காக அவரும் அதை எடுத்து எறிய அது 'X' என்பவர் மீது விழுந்து வெடித்ததில் அவரின் பார்வை பறிபோகிறது. (ஸ்காட் எதிர் ஷெப்பர்ட் வழக்கின் சாரம்). இங்கு 'C' என்பவர் 'X' மீது வாணவெடியை எறிந்ததால்தான் 'X'-ன் பார்வை பறிபோனது. இருப்பினும், 'A' முதலில் செய்த செயல் அதாவது வாணவெடியின் திரியை (thread) கொளுத்தி கூட்டத்தில் எறிந்தபோதே, அது வெடித்தால் எவரேனும் ஒருவருக்கு கண்டிப்பாக ஊறுவிளைவிக்கும் என்பது நியாயமாக முன்னறியத்தக்கதே. எனவே 'B' மற்றும் 'C' ஆகியோரின் இடைப்பட்ட செயல்கள் அதனை துண்டிப்பதாக இல்லை. வேறுமுனையில் குறிப்பிடுவது எனில் 'B' மற்றும் 'C'-ன் செயல்கள் இடையில் குறுக்கிட்ட புதிய செயலாகாது; மாறாக, 'A' செய்த செயலின் தொடர்ச்சியான விளைவே 'X'-ன் ஊறுக்கு நெருங்கிய காரணமாகும்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் இருந்து, பிரதிவாதியின் தவறான செயலில் இருந்து தொடங்குகிற காரணத்தொடர்பு எனும் சங்கிலி இடையில் நிகழும் புதிய செயலால் துண்டிக்கப்படின், வாதிக்கு ஏற்பட்ட சேதம் சேய்மையாகிவிடும் என்பதால், பிரதிவாதிக்கு எதிராக இழப்பீடு கோருவதற்கு வாதி தகுதி பெற மாட்டார் என்பதை புரிந்து கொள்ளலாம். இடையில் குறுக்கிடும் புதிய செயல் காரணத்தொடர்பை துண்டித்ததா அல்லது இல்லையா என்பதைக் காண்பதற்கு பின்வரும் இரண்டுவிதமான சோதனைகள் பயன்படுத்தப்படுகிறது:

(1) நிகழ்தகவு சோதனை (Probability Test): இச்சோதனையின்படி, பிரதிவாதியின் தீங்கான செயலினின்று ஏற்படும் விளைவுகள் நிகழக்கூடியதாக

அல்லது முன்னறியத்தக்கதாக இருப்பின் பிரதிவாதி பொறுப்பாகுவார். அதே நேரத்தில் பிரதிவாதியின் தீங்கான செயலினின்று ஏற்படும் விளைவுகள் நிகழ்வதற்கு வாய்ப்பில்லாமல் அல்லது முன்னறியத்தக்கதாக இல்லாமல் இருப்பின் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார்.

(2) தனியே பிரித்துக் காணும் சோதனை (Isolation Test): இச்சோதனையின்படி, தவறானச் செயலை, தன்னிச்சையாகக் குறுக்கிடும் மூன்றாம் நபரால் செய்யப்பட்ட செயலிலிருந்து தனியே பிரிக்கப்பட முடிந்தால், தவறான செயலுக்கும் அதன் விளைவுகளுக்கும் இடையேயான காரணத்தொடர்பின் வாய்ப்பு துண்டிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும் என்பதுடன் தன்னிச்சையான மூன்றாம் நபரின் செயலுக்குப் பின்னர் எழும் விளைவுகளுக்கான பொறுப்புநிலை முடிவுக்கு வந்துவிடுவதால், சட்டம் நோக்கும் காரணத் தொடர்பிற்கான வாய்ப்பு துண்டிக்கப்படுகிறது. எனவே அதன்பின்னரான விளைவுகளுக்கு தவறிழைத்தவர் பொறுப்பாகமாட்டார். அதாவது இடையில் குறுக்கிட்ட மூன்றாம் நபரின் தன்னிச்சையான செயல், தவறானச் செயலைச் செய்தவரை பொறுப்பு நிலையிலிருந்து விடுவித்துவிடுகிறது. இதுவே இடையில் குறுக்கிடும் புதிய செயல் என்பதாகும்.

(ஆ) வழக்குத்தீர்வுகள் (Case laws):

ஓர் விபத்திற்கு, இடையில் குறுக்கிடும் மூன்றாம் நபரின் செயல் பகுதி காரணமாக (partly caused) இருந்தால், பிரதிவாதியின் கவனமின்மையே அவ்விபத்திற்கு வலிய காரணமாக இருந்தாலேயொழிய அவர் பொறுப்பாகமாட்டார். **Clark Vs Chambers, (1878) 3 QB 32.,** என்ற வழக்கில், பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக நெடுஞ்சாலையில் கூரான இரும்புமுனைகள் (iron spiked) கொண்ட நீண்ட கழியை குறுக்காக வைத்து தடங்கலை ஏற்படுத்தியிருந்தனர். நெடுஞ்சாலையை கடக்க விரும்பிய வேறொரு நபர், அக்கழியை அவ்விடத்தில் இருந்து அகற்றி அதனை கவனக்குறைவாக நடைபாதையில் செங்குத்தாக நிறுத்தி வைத்துவிட்டுச் சென்றார். வாதி இரவில் நடந்து சென்றபோது அக்கழியின் கூரான முள் அவரின் கண்ணில் பட்டு காயமுற்றார். நீதிமன்றம் வாதிக்கு ஏற்பட்ட விளைவிற்கு பிரதிவாதியின் செயல் சேய்மையானது எனக்கூறமுடியாது என்பதால் பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

பிரதிவாதியின் தவறான செயலன் விளைவாக, ஆபத்தில் சிக்கிக் கொண்ட வாதி, அத்தகைய ஆபத்தில் இருந்து மீள்வதற்காக அல்லது தப்பிப்பதற்காக, அப்போதுள்ள சூழ்நிலையில் நியாயமாக மேற்கொள்ளும் எந்தவொரு செயலும், பிரதிவாதியின் தவறான செயலின் தொடர்ச்சியை துண்டிப்பதாகவோ அல்லது வாதி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக செய்யும் செயல் இடையுறு புது நிகழ்வான செயலாகவோ ஆகாது.

London and another Vs Pacific Steam Navigation Co. Ltd, (1943) 1 All ER 211 (CA)., என்ற வழக்கில், ஒரோபிசா (oropesa) மற்றும்

'மான்செஸ்டர் ரெஜிமெண்ட்' என்ற இரு கப்பல்கள் நடுக்கடலில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதில் மான்செஸ்டர் ரெஜிமெண்ட் கப்பலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. அக்கப்பல் தலைவர், கப்பலை இயக்கும் குழுவிலுள்ள பெரும்பாலான பணியாட்களை உயிர்காக்கும் படகை பயன்படுத்துமாறு ஆணையிட்டார். பணியாளர்களும் உயிர்காக்கும் படகைப் பயனபடுத்தி பத்திரமாக ஒரோபிசா கப்பலைச் சென்றடைந்தனர். சற்று நேரம் கழித்து கப்பல் தலைவர் மான்செஸ்டர் கப்பலை ஒரோபிசா கப்பலின்மூலம் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்லப்படுவதற்கு (tow) அல்லது கப்பல் மூழ்காமல் காப்பாற்றப்படுவதற்கான உதவியைக் கோருவதற்கு எவ்வாறிருப்பினும் கப்பல் உரிமையாளருக்கு தகவல் தெரிவித்து ஆலோசனை பெறுவதற்காக ஒரோபிசா கப்பல் தலைவரை வலியுறுத்தும் நோக்கத்திற்காக, எஞ்சியிருந்த கப்பல் பணியாளர்களுடன் மற்றொரு உயிர்காக்கும் படகில் ஏறிச் சென்றனர். மோசமான வானிலை காரணமாக படகு கவிழ்ந்ததில் பணியாளர்களில் ஒன்பது பேர் இறந்தனர். இறந்த கப்பல் பணியாளர்களில் ஒருவரின் சட்டமுறைச் சார்பாளர்கள் இழப்பீட்டிற்காக வழக்கு தொடுத்தார். கப்பல் தலைவர் பணியாட்களுடன் ஒரோபிசா கப்பலுக்கு செல்ல முயற்சித்த செயல், காரணத்தொடர்பை துண்டிக்கும் இடையுறு புது நிகழ்வாகும் என்பதாலும், இறந்து போனவர் கப்பல் மோதியதால் இறக்கவில்லை என்பதாலும் பிரதிவாதிகள் இழப்பீடு செலுத்தும் பொறுப்பை கொண்டிருக்கவில்லை என வாதிடப்பட்டது. பிரதிவாதிகளின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம், கப்பல் தலைவரின் செயல், ஒரோபிசா கப்பலின் கவனக்குறைவான செயலால் ஏற்படுத்தப்பட்ட அவசரச் சூழ்நிலையின் இயல்பான விளைவுகளே என்றும் அது காரணத்தொடர்பை துண்டிக்கவில்லை என்றும், ஒரோபிசா கப்பலின் கவனக்குறைவான செயலின் நேரடி விளைவே கப்பல் பணியாளர்களின் இறப்பிற்கு காரணம் என்பதையும் குறிப்பிட்டு, பிரதிவாதிகள் இழப்பீடு செலுத்துவதற்கு பொறுப்பாவார்கள் என்றும் தீர்ப்பளித்தது.

மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம் **Chaurasiya & Co. Vs Smt. Pramila Rao, (1974) ACJ 481 (MP).**, என்ற வழக்கில் மேற்குறிப்பிட்ட வழக்கைப் பின்பற்றியது. இவ்வழக்கில் பேருந்து ஓட்டுநர், பேருந்தை கவனக்குறைவாக மழை வெள்ளத்தால் மூழ்கியிருந்த மேடான பகுதிக்கு ஓட்டிச் சென்றார். நீரில் மூழ்கியிருந்த மூன்றில் ஒரு பங்கு தூரத்தைக் கடந்த பேருந்து, பின்னர் வழுக்கிச் சென்று தண்ணீரில் இருந்த கற்களுக்கு இடையே ஒரு சக்கரம் சிக்கிக் கொண்டதால் நின்றுவிட்டது. பயணிகளில் ஒருவர் மூழ்கியிருந்த தண்ணீரில் நடந்து சென்று கடந்தார். எஞ்சியிருந்த பயணிகள் தொடர்ந்து பேருந்தினுள் இருந்தனர். நேரம் செல்லச் செல்ல நீர்மட்டம் உயர்ந்ததால் பயணிகள் பேருந்தின் மேற்புறக்கூரை மீது ஏறி நின்றனர். நீரின் மட்டம் மேலும் உயர்ந்து அதன் கூடுதல் ஆற்றலினால் பேருந்து அடித்துச் செல்லப்பட்டதில் பயணிகள் நீரில் மூழ்கி இறந்தனர். இறந்த பயணிகளில் ஒருவரின் சட்ட வாரிசு இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில் பேருந்து உரிமையாளர் (பிரதிவாதி) தரப்பில் பயணி (இறந்துபோன பயணி) தொடர்ந்து பேருந்தினுள் இருந்திருக்கக்கூடாது மாறாக நீரில் மூழ்கியிருந்த பகுதியை நடந்து

சென்று கடந்திருக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது. பேருந்தினுள் இருந்தவர்களுக்கு மூழ்கியுள்ள பகுதியை நடந்து சென்று கடப்பது மற்றும் நீர்மட்டம் வடிந்துவிடும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து பேருந்தினுள் இருப்பது எனும் இருநிலைகள் மட்டுமே அவர்களுக்கு முன்பாக இருந்தது. இரண்டிலுமே பெரும் அபாயம் உள்ளடங்கி இருந்ததால், அப்போதிருந்த சூழ்நிலையில் இரண்டுமே நியாயமற்றது எனக் கூற முடியாது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், பேருந்தினுள் இருந்தவர்கள், தாங்களாகவே முடிவெடுத்து தொடர்ந்து பேருந்தினுள் இருந்ததே அவர்களின் இறப்பிற்கு காரணமே தவிர பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமல்ல என்ற எதிர்வாதத்தை தள்ளுபடி செய்து பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. மேலும் கவனக்குறைவான செயலினால் ஏற்படுத்தப்பட்ட குழப்பமான நிலையில், பாதிக்கப்பட்ட நபர்கள் செய்யும் ஒரு நியாயமான செயல் காரணத்தொடர்பை துண்டிக்கும் ஓர் இடையுறு புதுநிகழ்வு ஆகாது என்பதும் இவ்வழக்கில் எடுத்துரைக்கப்பட்டது.

Corr Vs IBC Vehicle, (2008) All ER 943., என்ற வழக்கில், வாதி, பிரதிவாதியின் நிறுவனத்தில் பராமரிப்பு பொறியாளராக பணிபுரிந்து வந்தார். பிரதிவாதியின் கடமை மீறுகை காரணமாக 1996 ஜூன் மாதத்தில் நிகழ்ந்த விபத்தில் வாதியின் வலதுபக்க உடலில் மிகக்கடுமையான ஊறுகள் ஏற்பட்டது. இதன்பொருட்டு வாதி நீண்ட மற்றும் துன்பம் மிகுந்த மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருந்தது. அறுவை சிகிச்சைக்குப்பின் அவரின் தோற்றம் விகாரமாகவும், தொடர் தடுமாற்றம், கடுமையான தலைவலி மற்றும் உறக்கம் இல்லாமல் இருந்தார். மேலும் விபத்தின் காரணமாக வாதி மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளானர். நாட்கள் செல்லச்செல்ல அவரின் மனஅழுத்தம் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்கு வளர்ந்தது. வாதியின் உடல்நிலையை பரிசோதித்த மனநல மருத்துவர் ஒருவர், வாதி மிகுந்த கவலை மற்றும் மனஅழுத்தம் கொண்டிருப்பதை அறிந்தார். 2002 ஆம் ஆண்டு மே மாதத்தில் மிகுந்த மனஅழுத்தத்தின் காரணமாக வாதி தற்கொலை செய்து கொண்டார். வாதி 1999-ஆம் ஆண்டில் தனக்கு ஏற்பட்ட உடலளவிலும் மற்றும் மனஅளவிலும் ஏற்பட்ட ஊறுகளுக்காக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்திருந்தார். வாதியின் இறப்பிற்குப் பின்னர் அவரின் மனைவியின் பெயருக்கு இழப்பீட்டுக் கோரிக்கை மாற்றப்பட்டதுடன், வாதியின் சொத்துக்கு ஏற்பட்ட இழப்பும் மனுவில் சேர்க்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில், வாதியின் தற்கொலை இடையில் குறுக்கிட்ட புதிய செயல் என்று வாதிடப்பட்டது. பிரதிவாதியின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம், பிரதிவாதி பொறுப்பாகுவார் என்பதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டது:

(1) வாதி, இறந்த நேரத்தில் நடந்து கொண்ட நடத்தைக்கு பிரதிவாதியின் கடமை மீறுயைால் வாதிக்கு ஏற்பட்ட ஊறுகளே காரணமாகும். இல்லாவிடில் அவர் அவ்விதம் நடந்து கொண்டிருக்கமாட்டார். அவர் தன் உயிரை தாமே இழக்கத்துணிந்த செயல், பிரதிவாதி வாதியின் பால் கொண்டிருக்க வேண்டிய கடமை எல்லைக்கு அப்பாற்பட்டதாகக் கூறமுடியாது.

(2) ஓர் சமநிலை அறிவு பொருந்திய பணி வழங்குநர், வாதிக்கு ஏற்பட்ட கடுமையான மன அழுத்தத்தை மட்டுமின்றி அத்தகைய மன அழுத்தம் அவரின் தற்கொலையில் முடிவதற்கான வாய்ப்புள்ளதை முன்னறிந்திருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளதையும் அறிந்திருப்பார்.

(3) இடையுறு புதுநிகழ்வு எனும் கொள்கையில் உள்ளடங்கிய நெறி நியாயமான காரணத்தொடர்பு துண்டிக்கப்படுவது குறித்ததாகும். ஓர் தீங்கிழைத்தவரை அவரின் கடமை மீறுகையால் அல்லாத வேறொரு தனிப்பட்ட இடையில் குறுக்கிட்ட செயலால் ஏற்பட்ட சேதத்திற்கு பொறுப்பாக்குவது நியாயமானதன்று. ஆனால் கடுமையான மன அழுத்தத்தால் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி காரணத்துடன் கூடிய தெளிவாக முடிவெடுக்கும் தகுதியை இழந்து தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கான நோய்க்கு பிரதிவாதியின் செயலே காரணமாகிய இவ்வழக்கிற்கு அது பொருந்தாது.

(4) தன் உயிரை தானே போக்கிக் கொண்ட இறந்துபோனவரின் நடத்தை, பிரதிவாதியின் கடமை மீறுகையால் தூண்டப்பட்ட நடத்தையே என்பதை ஏற்றுக் கொண்டவுடன் அது நியாயமற்றது எனக் கூற முடியாது.

(5) தற்கொலை செய்து கொண்டதற்கு பிரதிவாதியின் கடமை மீறுகையால் தூண்டப்பட்ட மனநிலையே காரணமாகும் என்பதால் இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதத்தை வைப்பதற்கான ஓர் தன்னிச்சையான செயலாகாது.

மேற்குறிப்பிட்ட வழக்கிற்கு மாறாக, வாதியின் செயல் நியாயமற்றதாக இருந்தால், அத்தகைய நியாயமற்ற செயலினால் ஏற்பட்ட இரண்டாவது விபத்து அல்லது நிகழ்வினால் மேற்கொண்டு அடையும் ஊறுகளுக்கு பிரதிவாதியின் தவறானச் செயலை காரணமாகக் கூற முடியாது. ஏனெனில், வாதியின் நியாயமற்ற இரண்டாவது செயல் பிரதிவாதியின் செயல் மற்றும் அதன் விளைவின் காரணத்தொடர்பை துண்டிக்கும் இடையுறு புது நிகழ்வாகிவிடுகிறது.

Mckew Vs Holland & Hannen & Cubbits (Scotland) Ltd (1969) 3 All ER 1621., என்ற வழக்கை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவ்வழக்கில் பிரதிவாதியின் தவறான செயலால் வாதிக்கு பணியின்போது அற்ப ஊறுகள் ஏற்பட்டது. அவரின் முதுகுப்புறம் மற்றும் இடுப்புப் பகுதியில் தசைப்பிடிப்பும் மற்றும் சில நேரங்களில் இடதுகால் உணர்ச்சியற்றும் (மரத்துப்போதல்) போனது. ஆனால் இத்தகைய ஊறுகள் ஓரிரு வாரங்களில் சரியாகிவிடக்கூடியதாக இருந்தது. இடைப்பட்ட காலத்தில் வாதி, தன் குடும்ப உறுப்பினர்களுடன் வாடகைக்கான வீடு ஒன்றை பார்வையிடச் சென்றார். மாடிப்பகுதியில் இருந்த குடியிருப்பிற்குச் செல்வதற்கு இரண்டு சுவர்களுக்கு இடையே கைப்பிடி இல்லாத செங்குத்தான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தது. வாதி படியேறிச் சென்று குடியிருப்பைப் பார்வையிட்டபின் தனது மகளுடன் கீழே செல்வதற்காக படிகளில் இறங்கும்போது அவரின் கால்கள் உணர்ச்சியற்று மரத்துப்போனது. கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்காக குதித்ததால் அவரின்

வலது கணுக்கால் மற்றும் இடதுகால் எலும்பில் முறிவு ஏற்பட்டது. அவர் ஒரு நிமிடம் சிந்தித்திருந்தால் படியில் உட்கார்ந்திருந்து மீண்டும் காலில் உணர்ச்சி திரும்பியவுடன் அல்லது குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் பாதுகாப்பாக இறங்கியிருக்க முடியும். நீதிமன்றத்தில் வாதி தனக்கு ஏற்பட்ட இரண்டாவது விபத்து முன்னறியத்தக்கதாக இருந்ததால் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்று வாதிட்டார். வாதியின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம் வாதியின் நியாயமற்ற நடத்தை இடையுறு புது நிகழ்வாகும் என்பதால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் எனத் தீர்ப்பளித்தது.

மீட்சி வழக்குகள் (Rescue cases): பிரதிவாதியின் தவறான செயலைத் தொடர்ந்து அதனால் ஏற்படும் விளைவைத் தடுப்பதற்காக ஒரு நபரால் செய்யப்படும் நியாயமான செயல் காரணத்தொடர்பை துண்டிக்கும் இடையுறு புதுநிகழ்வு ஆகாது என்ற கொள்கையை மீட்சி வழக்குகள் எடுத்துரைக்கின்றன. எனவே மீட்பு நடவடிக்கை மேற்கொண்டவர், மீட்பு நடவடிக்கையினால் தமக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கு இழப்பீடு கோர முடியும்.

குழந்தைகளின் குறும்புத்தனமான செயலினால் மிகப்பெரும் ஆபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் அல்லது அத்தகைய நிலை உள்ளபோது குழந்தைகளை அனுமதிக்கும் எவரொருவரும், அவர் அத்தகைய செயலைச் செய்யவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் பொறுப்புநிலையில் இருந்து தப்பிக்க முடியாது. **Haynes Vs Harwood, (1935) 1 KB 146.**, வழக்கு இதற்கு பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டாகும் (பார்க்க பக்கம் எண் 64).

அலகு - VIII

ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்கிடல் (Successive Actions on the same Facts)

PART - A/B

35. ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்பட முடியுமா? ஆம் எனில் அத்தகைய நேர்வுகளை விளக்குக.(Whether successive actions be initiated on the same facts? If yes, explain such circumstances).

விடைச்சுருக்கம்: (அ) ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்கிடல் - (அ) விலக்குகள் - ஆ(1) இரு வேறுபட்ட உரிமைகள் மீறப்படுதல் - ஆ(2) தீங்கு தொடர்ந்திருக்கும்போது அடுத்தடுத்து வழக்குகள் தொடருதல் - ஆ (3) தனிமுறையிலான இழப்பின் சான்றுறுதியின் பேரில் மட்டுமே வழக்கிடத்தக்க தீங்குகள்.

(அ) ஒரே பொருண்மைகளின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்கிடல் (Successive actions on the same facts):

சாதாரணமாக ஒரே வழக்கு மூலத்தின் (cause of action) அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட முடியாது. எனவே ஒரே வழக்குமூலத்தின் விளைவாக ஏற்பட்ட அனைத்து சேதங்களுக்கும் கண்டிப்பாக ஒரே வழக்கில் பரிகாரம் பெறப்பட வேண்டும். இதனையே 'நாட்டின் நலனுக்காக வழக்குகள் முடிவுக்கு வருதல் வேண்டும்' (Interest republicae sit finish litium - ie., In the interest of State, there should be an end of law suits) எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகிறது. மேலும் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908-ன் கட்டளை-2, விதி-2, தொடரப்படும் வழக்கில் உரிமைக்கோரிக்கை முழுதும் உள்ளடக்கப்பட வேண்டும் (suit to include whole claim) என்பதைக் குறிப்பிடுகிறது. எனவே வாதி தனக்கு ஏற்பட்ட தீங்கிற்கும், அத்தீங்கினால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் மொத்தமாக முதன்முறை தொடரும் வழக்கிலேயே இழப்பீடு கோர வேண்டும் என்பதே பொதுவான விதியாகும். **Fetter Vs Beat, (1701) 1 Ld Raymond 339.,** என்ற வழக்கில், பிரதிவாதி தன்னுடலை தாக்கிய காயங்களுக்காக, வாதி அவருக்கெதிராக வழக்கு தொடர்ந்து பதினோரு பவுண்டுகளை (£11) இழப்பீடாகப் பெற்றார். அதன்பின்னர் கடுமையான உள்காயங்கள் இருப்பது அறியப்பட்டு, மண்டை ஓட்டின் ஒரு பகுதி அறுவை சிகிச்சையின்மூலம் அகற்றப்பட வேண்டியதாயிற்று. எனவே வாதி தனக்கு ஏற்பட்ட அதிகப்படியான ஊறுகளுக்காக இழப்பீடு கோரி எட்டு ஆண்டுகள் கழித்து இரண்டாவது வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் அதனை ஓர் புதிய வழக்கு (novel action) என்று குறிப்பிட்டு தள்ளுபடி செய்தது.

(ஆ) விலக்குகள் (Exceptions):

ஒரே பொருண்மைகள் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடரமுடியாது என்ற பொதுவான விதி பின்வரும் விலக்குகளுக்கு உட்பட்டது. அதாவது பின்வரும் மூன்றுவிதமான நேர்வுகளில் ஒரே பொருண்மைகள் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர முடியும்.

ஆ(1) இரு வேறுபட்ட உரிமைகள் மீறப்படுதல் (Where two distincct rights are violated): பிரதிவாதியின் செயலால் வாதியின் இருவேறான உரிமைகளுக்கு சேதம் ஏற்பட்டால் அவர் ஒவ்வொரு உரிமைக்கு எதிரான சேதத்திற்கும் தனித்தனியே வழக்கு தொடரலாம். **Brunsden Vs. Humphrey, (1884) 14 QB 141.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் கவனக்குறைவான செயலின் விளைவாக, வாடகைக்கார் ஓட்டுனரான வாதியின் உடலுக்கு ஊறு ஏற்பட்டதுடன் வண்டிக்கும் சேதம் ஏற்பட்டது. அவர் வண்டிக்கு (கார்) ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டினைப் பெற்றப் பின்னர், தனது உடலில் ஏற்பட்ட காயங்களுக்காக பிரதிவாதிக்கு எதிராக இரண்டாவது வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், வாதியின் இரண்டாவது வழக்கை அனுமதித்து இழப்பீடு வழங்க ஆணையிட்டது. நீதிப்பிரபு பவுடன் (Bowden LJ) ஒரு வழக்கு, சொத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்காகவும் மற்றொரு வழக்கு நபருக்கு ஏற்பட்ட ஊறுகளுக்காகவும் என்றிருப்பதால் இரண்டிற்கும் இடையே பெருமளவு வேறுபாடு உள்ளது என்பதைக் குறிப்பிட்டார். மேலும் இரண்டு வழக்குகளுக்கும் வழக்குமூலம் ஒன்றேதானா என்பதை தீர்மானிப்பதற்கான சோதனை, முதலில் தொடர்ந்த வழக்கை மெய்ப்பிப்பதற்கான சான்றே இரண்டாவதாக தொடரப்பட்ட வழக்கை மெய்ப்பிப்பதற்கு போதுமானதா? என்பதாகும். ஆம் எனில் வழக்குமூலம் ஒன்றே என்றாகும்; அவ்வாறு இல்லையெனில் வாதிக்கு இரண்டு வழக்குமூலங்கள் உள்ளதை அறிந்து கொள்ளலாம் என்பதையும் குறிப்பிட்டார்.

ஆ(2) தீங்கு தொடர்ந்திருக்கும்போது ஒவ்வொரு புதிய தீங்கிற்காகவும் அடுத்தடுத்து வழக்குகள் தொடருதல் (Where injury continuing, successive actions for every fresh injury): Darley Main Colliery Vs Mitchell, (1886) 11 AC 127., என்ற வழக்கில், மிட்செல் தனது நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருந்தார். அந்நிலத்தில் குத்தகைதாரர்கள் நிலக்கரி வெட்டி எடுப்பதற்காக தோண்டியபொழுது முதலில் ஏற்பட்ட நிலச்சரிவுக்காக 1863-ஆம் ஆண்டில் மிட்செல்லுக்கு இழப்பீடு அளித்திருந்தனர். மிட்செல் நிலத்தில் மீண்டும் 1882-ஆம் ஆண்டில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதற்கு உடனடிக்காரணம், பக்கத்து நிலச் சொந்தக்காரர் தன்னுடை நிலத்திலுள்ள நிலக்கரியை வெட்டி எடுப்பதற்காக நிலத்தை தோண்டியதாகும். இருப்பினும், மிட்செல் நிலத்தை குத்தகைப் பெற்றிருந்தவர்கள் முதன்முறையின்போது, நிலச்சரிவு ஏற்படாமல் தாங்கியிருக்கக்கூடிய அளவிற்கான நிலத்தைக்கூட விட்டுவைக்காமல், நிலத்தின் விளிம்புவரை தோண்டி அதிகஅளவிலான நிலக்கரியை வெட்டி எடுத்ததே மீண்டும் நிலச்சரிவு ஏற்படக் காரணமானது. கூடுதல் நிலச்சரிவுக்காக மிட்செல் இழப்பீடு கோரி

இரண்டாம்முறை வழக்கு தொடர்ந்தார். பிரபுக்கள் அவை, முதன்முறை நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்ட நிகழ்விலிருந்து எழுந்த இரண்டாவது சேதம் புதிது என்பதால் மிட்செல் கூடுதல் நிலச்சரிவிற்கும் இழப்பீடு பெறத் தகுதி பெற்றுள்ளார் எனத் தீர்ப்பளித்தது. இக்கொள்கையின் இயல்பான அனுமானம் என்னவெனில், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால இழப்புகளுக்காகவும் மற்றும் மேற்கொண்டு ஊறு தொடர்ந்திருப்பதற்குமான இழப்பீட்டினை பெற முடியாது என்பதாகும். இக்கருத்து **West Leigh Colliery Vs. Tunnicliffe and Hampson Ltd., 1908 AC 27.,** என்ற வழக்கில் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வழக்கில் நிலக்கரி வெட்டி எடுப்பதால் ஏற்படும் நிலச்சரிவுகளுக்கான சேதத்தை தீர்மானிக்கும்போது, எதிர்காலத்தில் நிலச்சரிவு ஏற்படும் அந்நிலத்தின் தன்மையின் அடிப்படையில் அச்சொத்தின் சந்தை மதிப்பு குறைவதை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை; ஆனால் நிலமேற்பரப்பின் உரிமையாளர் எதிர்காலத்தில் அத்தகைய சேதம் (நிலச்சரிவு) ஏற்படும்வரை கண்டிப்பாக பொறுத்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இவ்வழகில் நிலச்சரிவினால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடாக 1300 பவுண்டுகள் வழங்கவும் மற்றும் எதிர்காலத்தில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயத்திற்காக 13200 பவுண்டுகள் வழங்கக்கோரியும் வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம், நிலச்சரிவினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை அனுமதித்தும், எதிர்காலத்தில் நிலச்சரிவு ஏற்படலாம் என்ற அபாயத்திற்காக கோரப்பட்ட உரிமைக் கோரிக்கையை தள்ளுபடி செய்தும் ஆணையிட்டது.

ஆ(3) தனிமுறையிலான இழப்பின் சான்றுறுதியின் பேரில் மட்டுமே வழக்கிடத்தக்க தீங்குகள் (Tort which is actionable only on proof of special damage): தனிமுறையிலான இழப்பின் சான்றுறுதியின் (proof) பேரில் மட்டுமே வழக்கிடத்தக்க தீங்குகளைப் பொறுத்தவரையில், வழக்கிற்குப்பின் ஏற்படும் தனிமுறையிலான இழப்பிற்காக அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்படலாம். சிலக்குறிப்பிட்ட வழக்குகளில் அடுத்தடுத்த நடவடிக்கைகள் மற்றும் சேதத்தின் சேய்மை ஆகிய இரண்டும் உள்ளடங்கும் சிக்கலான நேர்வுகள் எழலாம். **Baker Vs Willoughby, (1969) 3 All ER 1528 (HL).,** என்ற வழக்கில் பிரதிவாதி, 1964-ஆம் ஆண்டு தனது காரை கவனக்குறைவாக ஓட்டி வாதியின்மீது மோதி கீழே தள்ளியதில், வாதியின் இடது காலில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. 1967-ஆம் ஆண்டில் வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பு, ஆயுதமேந்திய கொள்ளையின்போது அதே இடதுகாலில் கொள்ளையர்களில் ஒருவன் துப்பாக்கியால் சுட்டதால், முட்டிக்கு மேற்புறம் வரையிலான பகுதி அறுவை சிகிச்சையின்மூலம் வெட்டியெறிய வேண்டியதாயிற்று. பிரதிவாதி, வாதிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறுகளுக்காக தனது கவனக்குறைவான செயலை காரணம் காட்டக்கூடாது என்றும் தனது தீங்கான செயல், கொள்ளைக்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதை தொடர்ந்து காலை வெட்டியெடுத்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டதன் மூலம் நீங்கிவிட்டது என்று வாதிட்டார். பிரதிவாதியின் வாதத்தை தள்ளுபடி செய்த விசாரணை நீதிமன்றம், வாதியின் கடந்தகால மற்றும் எதிர்கால

இழப்புகளை, தொடர் பலவீனம், இடது கணுக்கால் வலி மற்றும் அது பின்னர் எலும்பு மூட்டழற்சியாக மாறும் வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீட்டை அனுமதித்தது. ஆனால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதிவாதியின் வாதம் வெற்றிபெற்றது. இறுதியாக, பிரபுக்கள் அவை, விசாரணை நீதிமன்றத்தின் முடிவை உறுதி செய்தது. நீதிப்பிரபு ரீட் (Lord Reid), 'வாதிக்கு விசாரணைத் தேதிக்கு முன்னர் ஏற்பட்ட இரண்டாவது ஊறு, பிரதிவாதி பொறுப்பாகும் ஊறின் தகுதியிழப்புகளில் (disability) இருந்து குறைத்திருந்தாலோ அல்லது வாதி அத்தகைய தகுதியிழப்பினால் அவதியுறும் காலத்தை குறைத்திருந்தாலோ அவர் குறைந்தளவு இழப்பீடு செலுத்துவதற்கு பொறுப்பாகியிருப்பார். ஆனால் இரண்டாவதாக ஏற்பட்ட ஊறு, பிரதிவாதியால் இழைக்கப்பட்ட ஊறுகளால் ஏற்பட்ட தகுதியிழப்புகளுக்கு வெறுமனே ஓர் உடன்நிகழ்ந்த காரணமாக இருப்பதால் எனது பார்வையில் அது இழப்பீட்டின் அளவை குறைக்காது' என்று குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட 'Baker' வழக்கு மறுத்தழிக்கப்படாவிட்டாலும்கூட, **Joblin Vs Associated Dairies Ltd, (1981) 2 All ER 742 (HL).,** என்ற வழக்கில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இவ்வழக்கில், பிரதிவாதிகளின் சட்டப்படியான கடமை மீறுகையால் வாதியின் பின்புறத்தில் ஏற்பட்ட ஊறு, வேலை செய்வதற்கான அவரின் தகுதியை 50% அளவிற்கு குறைத்தது. வாதியின் வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, பின்புறத்தில் ஏற்பட்ட ஊறுக்கு தொடர்பற்ற முதுகெலும்பு தொடர்பான நோயால் வாதி பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அந்நோய் வேலை செய்வதற்கான வாதியின் தகுதியை முற்றிலுமாக இழக்கச் செய்தது. பிரபுக்கள் அவை, வாதியின் வேலை செய்யும் தகுதியை முற்றிலுமாக இழக்கச் செய்த முதுகெலும்பு நோயின் தாக்குதலுக்கு பின்னர் ஏற்பட்ட வாதியின் சம்பாதிக்கும்திறன் இழப்பிற்கு பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் இழப்பீட்டை தீர்மானிக்கவும், வாதிக்கு உரிய ஆனால் தகுதிக்கு மீறிய இழப்பீடு வழக்குவதை தவிர்க்கவும், நீதிமன்றம் வாழ்க்கைச்சூழலில் ஏற்படும் மாற்றங்கள் (vicissitudes of life) எனும் கொள்கையை பொருந்தச் செய்தது. வழக்கு விசாரணையின்போதே உண்மையில் அறிந்திருந்த இடையில் ஏற்பட்ட நோய் குறித்த வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் மாற்றத்தை நீதிமன்றம் தீவிரமாக சிந்திக்க வேண்டியதில்லை என்பதையும் வெளிப்படுத்தியது. 'Baker' வழக்கில் வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த கொள்கையை பொருந்தச் செய்ய தவறியதும் மற்றும் குற்ற ஊறுகள் இழப்பீட்டுத் திட்டத்தின் (Criminal Injuries Compensation Scheme) கீழான இழப்பீட்டினை கவனிக்கத் தவறியதும் இவ்வழக்கில் விமர்சிக்கப்பட்டது. இவ்விரண்டு வழக்குகளுக்கு இடையேயான வேறுபாடு என்னவெனில், 'Baker' வழக்கில் முதலாவது மற்றும் இரண்டாவது ஊறுகள் தீங்கான செயலின் விளைவுகளாகும் ஆனால் 'Joblin' வழக்கில் ஏற்பட்ட இரண்டாவது ஊறு இடையில் ஏற்பட்ட நோயின் விளைவாகும்.

அலகு - IX

குறித்தவகை தீங்குகள் (Specific Torts)

IX(a) உடலுரிமை மற்றும் நற்பெயருரிமைக்கு விளைவிக்கும் தீங்குகள் (Wrongs to persons and reputation)

PART - A/B

36. 'தாக்க முனைவு' மற்றும் 'தாக்குதல்' ஆகியவற்றின் மூலக்கூறுகளைப் பற்றி விளக்குக. (Explain the essentials of 'Assault' and 'Battery') - Nov-2018 (அல்லது)

✦ தகுந்த தீர்ப்புவழிச் சட்டங்களுடன் 'தாக்க முனைவு' மற்றும் 'தாக்குதலுக்கான' மூலக்கூறுகளை விளக்கவும். (Explain the ingredients of 'assault' and 'battery' citing relevant caselaws) - Nov-2018(v), May-2016.

SN - 51 தாக்க முனைதல் / Assault, Nov-2014, May-2015(v)

SN - 52 தாக்குதல் / Assault, Nov-2014, May-2018 (v)

விடைச்சுருக்கம்: (அ) தாக்க முனைதல் - வரையறை அ (1) தாக்க முனைதல் என்பதன் மூலக்கூறுகள் - அ (2) வழக்குத்தீர்வுகள் (ஆ) தாக்குதல் - வரையறை - ஆ(2) தாக்குதல் என்பதன் மூலக்கூறுகள் - ஆ (3) வழக்குத்தீர்வுகள்

(அ) தாக்கமுனைதல் - வரையறை (Assault - Definition):

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு - 351, தாக்க முனைதல் என்பதை பின்வருமாறு வரையறுக்கிறது; "எவரொருவரும் தனது எந்தவொரு செய்கை அல்லது தனது தயாரிப்பு செயல் எதனொன்றும், அருகில் இருக்கும் எவரொருவருக்கும் தம்மீது வன்முறையை பயன்படுத்தப் போகிறார் எனும் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருந்தே அல்லது அவ்வாறு அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அத்தகைய செய்கை அல்லது தயாரிப்புச் செயலைச் செய்யும்போது தாக்கமுனைதல் எனும் குற்றத்தை செய்ததாகச் சொல்லப்படுகிறார்."

மேற்கண்ட பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கம், வெறும் சொற்கள் மட்டுமே தாக்கமுனைதல் ஆகாது என்பதையும், ஆனால் ஒருவர் பயன்படுத்தும் சொற்கள் அவரது செய்கை அல்லது தயாரிப்புச் செயலுக்கு அத்தகைய தாக்க முனையும் பொருளை வெளிப்படுத்துவதாக இருப்பின் அது தாக்க முனைதல் என்பதாகிவிடும் என்பதையும் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டு : நான் உன்னை

அடிக்கப் போகிறேன் என்று 'Z' என்பவரிடம் சொல்லிக் கொண்டே 'A' என்பவர் ஒரு கழியை (stick) எடுக்கிறார். இங்கு 'A' வெறுமனே பயன்படுத்திய சொற்கள் தாக்கமுனைதல் குற்றமாகாது என்றாலும்கூட சொற்களால் விளக்கப்பட்ட செய்கை தாக்கமுனைதல் குற்றம் புரிந்ததாகும்.

தாக்க முனைதல் என்ற தீங்கின் சாரம் (essence) என்னவெனில், 'ஓர் சமநிலை அறிவு பொருந்திய மனிதனுக்கு நிகழ்பொழுதில் (in present அதாவது அக்கணத்தில்) தான் தாக்குதலுக்கு உள்ளாகலாம் எனும் அச்சத்தை விளைவிப்பதற்கு தகுதியான எந்தவொரு செயலும்' என்று சர்ஃபிரடெரிக் பொல்லாக் குறிப்பிடுகிறார்.

அறிஞர் ஸ்டீபன்ஸ் - ஐ பொறுத்தவரை தாக்க முனைதல் என்பது;

(a) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு நபர் மற்றொரு நபரின்மீது உண்மையில் எவ்வித மிகக்குறைந்த பலத்தை (force) சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்த முயல்வது;

(b) செய்கையைப் பயன்படுத்தி மற்றொருவரை நோக்கி செய்யும் செயல், செய்கையை பயன்படுத்திய நபர் உண்மையில் அத்தகைய பலத்தை தனது உடலின்மீது பயன்படுத்துவார் என்று மேற்குறிப்பிட்ட நபர் நம்புவதற்கான வாய்பு;

(c) மற்றொருவரின் உரிமையை இழக்கச் செய்யும் செயல்; எவருக்கெதிராக தாக்க முனைதல் செய்யப்படுகிறதோ அத்தகைய நபரின் சம்மதம் இன்றியோ அல்லது மோசடியாக பெறப்பட்ட சம்மதத்துடனோ ஆக இரண்டில் எதுவொன்றும் தாக்க முனைதலாகும்.

பம்பாய் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்னொல்ட் (Arnould CJ), **A.C.Cama Vs H.F. Morgan, (1864) 1 BHC 205.**, என்ற வழக்கில், அச்சுறுத்தப்படும் நபரின் பயத்தை தூண்டும் வகையில் செய்யப்படுகின்ற எந்தவொரு செய்கையும், அச்சுறுத்துபவர் உடனடியாக வன்முறையை பயன்படுத்தப்போகிறார் எனும் பயத்தை அச்சுறுத்தப்படும் நபருக்கு ஏற்படுத்துமாறு அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தில் பயன்படுத்தியுள்ளவாறு அச்சுறுத்தப்படும் நபரின் எண்ணத்தில் 'குற்றமுறு வன்முறையை' (criminal force) அச்சுறுத்துபவர் பயன்படுத்தப்போகிறார் என்ற எண்ணத்தையும் அத்துடன் அத்தகைய எண்ணத்தை அக்கணத்தில் நிறைவேற்றுவதற்கான தகுதியையும் அச்சுறுத்துபவர் கொண்டிருப்பின் அது சட்டப்படி தாக்க முனைதலாகும் என்று குறிப்பிட்டார்.

"தன்மீது தாக்குதல் நடத்துவார் என்று வாதிக்கு உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பிரதிவாதியின் செயலே தாக்க முனைதலாகும்" என்று பேராசிரியர் வின்ஃபீல்ட் குறிப்பிடுகிறார். இவ்வாறு இத்தீங்கினால் தடை செய்யப்படும் செயலானது வாதியின் மனதில் நியாயமான பயத்தை அதாவது வன்முறைச் செயல் உடனடியாக நிகழவிருக்கிறது என்ற அச்சத்தை ஏற்படுத்தும் சட்டத்திற்கு புறம்பான ஓர் செயலாகும்.

அ(1) தாக்க முனைதல் என்பதன் மூலக்கூறுகள் (Essentials of Assault): தாக்க முனைதலின் மூலக்கூறுகள் அல்லது முக்கியக்கூறுகள் பின்வருமாறு;

(i) ஒருவர் மற்றொரு நபருக்கு உடலளவில் ஊறு ஏற்படுத்தும் முயற்சி அல்லது அச்சுறுத்தல் என்பது இருக்க வேண்டும்;

(ii) பலத்தைப் பயன்படுத்தும், அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சில முன் தயாரிப்பு அல்லது செய்கை இருக்க வேண்டும்;

(iii) பலத்தை பயன்படுத்தக்கூடும் என்கிற நியாயமான அச்சம் இருக்க வேண்டும்: மற்றும்;

(iv) பிரதிவாதி தன்னுடைய அச்சுறுத்தலை நடைமுறைப்படுத்தும் தகுதி கொண்டுள்ளார் என்று வாதி உண்மையாக நம்பியிருக்க வேண்டும்;

அ(2) வழக்குத்தீர்வுகள் (case laws): Stephen Vs Myers (1830) 4 C&P 349., என்ற வழக்கில் வாதியான (ஸ்டீபன்ஸ்) ஆலய பங்குக்குழு தலைவரின் தலைமையில் பங்குக்குழுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பங்குக் குழுவின் உறுப்பினரான பிரதிவாதியும் (மையர்ஸ்) அக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்ட விவாதத்தின்போது பிரதிவாதி கோபமடைந்ததால் கூச்சலிட்டு கூட்ட நடவடிகைக்கு இடையூறு விளைவித்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் பெரும்பாலோர் பிரதிவாதியை வெளியேற்றும் தீர்மானத்தை நிறைவேற்றினர். அதனால் மேலும் கோபமடைந்த பிரதிவாதி, வாதியை நாற்காலியில் இருந்து தூக்கி எறியாமல் நான் வெளியேறமாட்டேன் எனக்கூறிக்கொண்டு மடக்கிய கையுடன் வாதியை நோக்கிச் சென்றார். ஆனால் வாதியின் அருகே அமர்ந்திருந்த ஆலயக் காப்பாளரால் தடுக்கப்பட்டார். நீதிமன்றம், பிரதிவாதி தாக்க முனைதலுக்கு பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

Birbal Khalifa Vs. Emperor, (1903) ILR Cal. 97., என்ற வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர், தீயக்குணம் கொண்டவர் என்பதாக காவலரால் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவர் வீட்டில் உள்ளாரா என்பதை அறிவதற்காக சார்பு ஆய்வாளர் ஒருவர் அவரது வீட்டிற்குச் சென்றார். அவர் குற்றம்சாட்டப்பட்டவரைக் கூப்பிட அவரும் வீட்டினுள் இருந்து வெளியே வந்தார். அதன்பின்னர் சார்பு ஆய்வாளர் அவரின் கட்டைவிரல் கீறல் பெற விரும்புவதை தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்டவர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன் அவரை நோக்கி கையை நீட்டியபின் வீட்டிற்குள் சென்று ஓர் 'லத்தியை' (lathi) எடுத்துவந்து எவரேனும் கட்டைவிரல் பதிவைக்கேட்டால் அவரின் தலையை முறித்துவிடுவேன் என்று கூறினார். குற்றம்சாட்டப்பட்டவரின் அச்சுறுத்தல் ஓர் நிபந்தனையானது என்பதால் தாக்க முனைதலாகாது என்பதை நீதிமன்றம் விளக்கியது.

Lane Vs Hollowway, (1967) 3 All ER 129., என்ற வழக்கில், நகர்ந்து கொண்டிருந்த இரயிலில் இருந்து ஒருவர், ரயில்வே மேடையில் (Platform) நின்று கொண்டிருந்த ஒருவரை நோக்கி கைமுட்டியை மடக்கிக் காண்பித்தார். பிரதிவாதி தன்னுடைய நோக்கத்தை அக்கணத்தில் நிறைவேற்றும் தகுதியை கொண்டுள்ளார் என வாதி நியாயமாக நம்பியிராததால் அது தாக்க

முனைதலாகாது மற்றும் சொற்கள் அவை இழிவுபடுத்துவதாக அல்லது அச்சுறுத்துவதாக இருந்தாலும்கூட அவை உடனடி வன்முறை பயத்தை ஏற்படுத்தாதவரை தாக்க முனைதலாகாது என்று இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டது.

Baviseti Venkata Surya Rao Vs Nandipati Muthayya, AIR 1964 AP 382., என்ற வழக்கில் விவசாயியான வாதி, நிலவருவாய் வரியை செலுத்தாமல் பாக்கி வைத்திருந்தார். கிராம முன்சீப் நிலவருவாய் வசூலிக்க அவரின் வீட்டிற்குச் சென்றபோது, விவசாயி தான் நிலவரி நிலுவைத்தொகையை செலுத்தமுடியாத நிலையில் இருப்பதை தெரிவித்தார். நிலவருவாய் வசூலிப்பதற்கான கடைசித்தேதி என்பதால், வாதி நிலுவைத்தொகை செலுத்தாவிடில் அவரின் 'அசையும் சொத்துகள்' பற்றுகைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கும் என்பதை முன்சீஃப் தெரிவித்தார். வீடு பூட்டப்பட்டிருந்தால் அசையும் சொத்து எதனையும் பற்றுகைக்கு உட்படுத்த முடியாததால் கிராம முன்சீஃப், விவசாயியின் தங்கக் காதணியை பற்றுகைக்கு உட்படுத்திவிடுவதாக அச்சுறுத்தினார். மேலும் இதன்பொருட்டு தங்கநகை வேலை செய்பவர் வரவழைக்கப்பட்டார். இருப்பினும் அக்குறிப்பிட்ட நேரத்தில் வேறு ஒருவர் நிலவருவாய் பாக்கியை செலுத்தியதால் விவசாயி விடுவிக்கப்பட்டார். வாதி (விவசாயி) உடனடி வன்முறை பயத்திற்கு உட்படுத்தப்பட்டார் எனக் கூற முடியாததால், பிரதிவாதியின் செயல் தாக்க முனைதலாகாது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

(ஆ) தாக்குதல் (Battery):

தாக்குதல் என்பது உண்மையில் அடிப்பது அல்லது அறைவதையும் அல்லது அநாகரிகமற்ற, கோபத்துடன், பழிவாங்குகிற அல்லது அவமானப்படுத்தும் விதங்களில் தொடுவதையும் குறிக்கும். ஒரு நபரை அடிப்பது அல்லது அவரை அல்லது அவரது ஆடைகளை அல்லது அவர் வைத்திருக்கிற அல்லது அவர் கொண்டு செல்கிற எதனையும் அச்சுறுத்தும் வகையில் தொடுவது தாக்குதல் என்பதாகும். இரு ஒரு நபர் மற்றொரு நபரின் சம்மதம் இன்றி அல்லது சம்மதம் பெறப்பட்டிருப்பின் சட்டத்திற்குப் புறம்பாக பெற்று அவருக்கெதிராக தனது உடல்பலத்தை பயனபடுத்துவதாகும். ஆக தாக்க முனைதல் தீங்கினை செயல்படுத்துவதே தாக்குதல் ஆகும். இருப்பினும் ஒரு நபர் தனது பலத்தை பயன்படுத்தியது தவறுதலாக, எதிர்பாராததாக அல்லது வெறுமனே கவனக்குறைவினால் எழுந்ததாக என்றிருப்பின் அது தாக்குதல் ஆகாது. சுருங்கக்கூறின், சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி ஒரு நபர் மற்றொரு நபருக்கு எதிராக அவரின் சம்மதமின்றி பலத்தை பயன்படுத்துவது, அதன்தன்மை மிகக்குறைந்ததாக இருந்தாலும் அச்செயல் தாக்குதல் என்ற தீங்கினுள் அடங்கும். எனவே கோபத்துடன் ஒரு நபர் மற்றொருவரை தொடுவதும்கூட தாக்குதல் ஆகும். தாக்குதல் என்ற தீங்கிற்கு கண்டிப்பாக அங்கு உடலைத் தொடுதல் எனும் கூறு இருக்க வேண்டும்.

Cole Vs Turner, 1794 Mod 149., என்ற வழக்கில் தலைமை நீதிபதி ஹோல்ட் (Holt CJ), தாக்குதல் என்பதாகும் செயல்கள் எவை, தாக்குதல்

என்பதாகாத செயல்கள் எவை என்பதை விளக்குவதற்கு பின்வரும் எடுத்துக்காட்டைக் குறிப்பிட்டார்; முதலாவதாக, கோபத்துடன் ஒரு மனிதரைத் தொட்டாலும் அது தாக்குதலாகும். இரண்டாவதாக ஓர் குறுகிய பாதையை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கடக்கும்போது, மற்றொருவருக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணமின்றி அல்லது வன்முறை ஏதுமின்றி கடக்கும்போது லேசாக தொடுவது தாக்குதல் ஆகாது. மூன்றாவதாக, அவர்களில் எவரேனும் ஒருவர் தாம் பாதையைக் கடப்பதற்காக முறையற்ற விதத்தில் மூர்க்கத்தனமாக மற்றொருவருக்கு எதிராக வன்முறை அல்லது பலத்தை பயன்படுத்தினால் அது தாக்குதலாகும்.

ஒரு நபர் சாதாரணமாக மற்றொருவரின் கவனத்தை தம்பக்கம் ஈர்ப்பதற்காக தொடுவது தாக்குதல் ஆகாது என்று **Coward Vs Baddely, 1859 (5) H&N 478.**, என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆ(1) தாக்குதல்-வரையறை (Battery-Definition of): இயற்றாச் சட்டத்தில் (common law), தாக்குதல் என்பது சம்மதம் தெரிவித்திராத ஒரு நபருக்கு அல்லது அந்நபருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஏதேனுமொன்றிற்கு (எ-டு: தொப்பி, பணப்பை) கெடுதியை அல்லது ஊறு ஏற்படுத்தும் தொடுதலைக் குறிக்கும் தீங்காகும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-350-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள 'குற்றமுறு வன்முறை' என்பது 'தாக்குதல்' என்பதற்கு ஒப்பானதாகும். பிரிவு -350, குற்றமுறு வன்முறையை (தாக்குதலை) பின்வருமாறு வரையறுக்கிறது.

"குற்றம் எதனையேனும் செய்வதற்காக அல்லது எவர்மீது பலம் அல்லது வன்முறை (force) பயன்படுத்தப்படுகிறதோ அவருக்கு ஊறு, அச்சம் அல்லது தொந்தரவை அத்தகைய வனமுறையைப் பயன்படுத்துவதன்மூலம் தாம் விளைவிக்கக்கூடும் என்பதை அறிந்திருந்தே அவரின் சம்மதமின்றி வன்முறையை உட்கருத்தோடு பயன்படுத்தும் ஒருவர், அந்நபர்மீது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுவார்." - மேலும் இப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள 'வன்முறை' (force) என்ற பதத்தை பிரிவு-349, வரையறுக்கிறது. இப்பிரிவு, 'எந்தவொரு பொருளையும் இயங்கச் செய்வதன்மூலம் அல்லது அதன் இயக்கத்தை மாற்றுவதன்மூலம் அல்லது இயக்கத்தை நிறுத்துவதன்மூலம் அதனை மற்றொருவரின் உடல் அல்லது அவர் அணிந்திருக்கும் ஆடை அல்லது அவர் வைத்திருக்கும் பொருள் எதனொன்றின்மீதும் தொடும்படிச் செய்வதன் வாயிலாக அவரின் தொடு உணர்வை (sense of feeling) பாதிக்கச் செய்யும்போது அவர் பலம் அல்லது வன்முறையை பயன்படுத்தியதாக சொல்லப்படும்' என்பதைக் குறிப்பிடுகிறது.

சால்மண்ட் மற்றும் ஹியூஸ்டன், 'உட்கருத்துடன் எந்தவொரு பொருளையும் மற்றொருவர்மீது தொடும்படிச் செய்வது தாக்குதல் என்பதனை ஏற்படுத்துவதற்கு போதுமான பலத்தை பயன்படுத்தியதாகும்' என்று குறிப்பிடுகின்றனர்.

மேற்குறிப்பிட்டவைகளில் இருந்து, 'தாக்குதல்' என்பதை 'சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி, உட்கருத்துடன் மற்றொருவர்மீது பலம் அல்லது வன்முறையை பயன்படுத்துவது' என்று சுருக்கமாக வரையறுக்கலாம்.

ஆ(2) தாக்குதல் என்பதன் மூலக்கூறுகள் (Essentials of Battery): பிரதிவாதி தம்மை தாக்கியதற்காக இழப்பீடு கோரி வழக்கிடும் வாதி, பின்வரும் இருகூறுகளை மெய்ப்பிக்க வேண்டும்;

(i) வன்முறை அல்லது பலம் பயன்படுத்தப்பட்டது; மற்றும்;

(ii) உள்நோக்கத்துடன் அல்லது அறிந்திருந்தே வன்முறை பயன்படுத்தப்பட்டது. இவ்விரு காரணிகள் பற்றி சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

ஆ(2) (i) வன்முறை அல்லது பலத்தை பயன்படுத்தல் (The use of force): ஓர் செயல் தாக்குதல் என்பதாக கூறப்படுவதற்கு வன்முறை பயன்படுத்தப்பட்டது என்பதை மெய்ப்பிப்பது அவசியமாகும். தாக்குதல் தீங்கை ஏற்படுத்தியவர் மற்றொருவரின் உடலைத் தொடவில்லை என்பதோ அல்லது ஏற்படுத்தப்பட்ட ஊறு மிகவும் அற்பமானது என்பதோ எத்தகைய வேறுபாட்டையும் ஏற்படுத்தாது. எனவே கோபத்துடன் ஒரு நபரைத் தொடுவது, கல்லை ஒருவரின்மீது எறிவது, முகத்தில் உமிழ்வது, ஒரு நபர் நாற்காலியில் அமரும் நேரத்தில் அதை தள்ளிவிட்டு தரையில் விழச் செய்வது போன்ற செயல்கள் தாக்குதல் என்ற தீங்கு புரிந்ததாகிவிடும். இருப்பினும் ஒரு நபரை நட்புடன் முதுகில் இலேசாக தட்டுவது தாக்குதலாகாது. ஆனால் அதே செயலை பகைமை உணர்வுடன் செய்யப்படும்போது தாக்குதல் என்பதாகிவிடும். **Innes Vs Wylie, (1844) IC & K 257.,** என்ற வழக்கில் 'X' என்பவர் மன்றத்தினுள் (club) நுழைவதை சட்டத்திற்கு புறம்பாக காவலர் ஒருவர் தடுத்தார். ஆனால் அவர் X-ஐ தொடவோ அல்லது மிரட்டவோ செய்யவில்லை. வாதியின் வருகையை ஒரு சுவர் அல்லது கதவு வைத்து தடுக்கப்படுவது போன்று காவலர் முற்றிலும் செயலற்று நின்றிருந்ததால் அவர் தாக்க முனைதல் அல்லது தாக்குதல் தீங்கு ஏதும் செய்யவில்லை என்று நீதிமன்றம் எடுத்துரைத்தது.

ஆ(2) (ii) உள்நோக்கத்துடன் வன்முறையை பயன்படுத்துதல் (Use of force with intention): வன்முறை பலத்தைப் பயன்படுத்தியிருப்பது உள்நோக்கத்துடனும் மற்றும் சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றியும் பயன்படுத்தப்பட்டது என்பதும் தாக்குதல் தீங்கின் மிக முக்கியக்கூறாகும். இதனின்று ஓர்நல்ல நோக்கத்துடனும், சட்டப்படி நியாயப்படுத்தும் காரணத்துடனும் ஒரு நபர் மற்றொரு நபரைத் தொடுவது, பலவந்தப்படுத்துவது தாக்குதலாகாது என்பதை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் நபரை காப்பாற்றுவதற்காக பலத்தை பயன்படுத்தி மேலே இழுத்தல், சாகும்வரை பட்டினிப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கும் சிறைக்கைதிக்கு பலவந்தமாக உணவூட்டுதல், மயக்க நிலையில் இருக்கும் நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்கு தகுதிவாய்ந்த மருத்துவர் அறுவை சிகிச்சை மேற்கொள்வது போன்ற மீட்சி நடவடிக்கைகள் தாக்குதல்கள் ஆகாது.

ஆ(3) வழக்குத்தீர்வுகள் (Caselaws): Hurst Vs Picture Theatres Ltd., (1915) 1 KB 1., இவ்வழக்கில், வாதி திரைப்படத்தைக் காண்பதற்கான அனுமதிச்சீட்டை (ticket) வாங்கி இருக்கையில் அமர்ந்திருந்தார். திரையரங்கின் மேலாளர் வாதி அனுமதிச்சீட்டு வாங்காமல் அமர்ந்திருக்கிறார் என்று தவறாக நினைத்து பணியாள் ஒருவரிடம் வாதியை வெளியேற்றுமாறு உத்தரவிட்டதன் பேரில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். வாதி வழக்கு தொடர்ந்ததன் பேரில், பிரதிவாதி தாக்குதல் தீங்கு செய்துள்ளார் என்பதால் இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Pratap Daji Vs B.B & C.I.R (1875) 1 Bom 52., என்ற வழக்கில் பிரதிவாதியின் இரயில் பெட்டியில் ஏறிய வாதி, அசட்டையினால் பயணச்சீட்டை வாங்க மறந்துவிட்டார். இடைப்பட்ட இரயில் நிலையம் ஒன்றில் பயணச்சீட்டு வாங்குவதற்காக கேட்டபோது அது மறுக்கப்பட்டது. அதன்பின்னர் மற்றொரு இடத்தில், அவரிடம் பயணச்சீட்டு இல்லாததால் இரயில் பெட்டியிலிருந்து வெளியேறும்படி பிரதிவாதி நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் கூறினார். வாதி வெளியேற மறுக்கவே பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். தம்மை பலவந்தமாக வெளியேற்றியதற்காக வாதி பிரதிவாதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். பயணச்சீட்டு இல்லாமல் இரயிலில் பயணம் செய்ததால், வாதி ஓர் அத்துமீறியவர் என்பதால் பிரதிவாதியின் பணியாளர் பயன்படுத்திய வன்முறை நியாயப்படுத்தத்தக்கதே என்றும் எனவே பிரதிவாதி நிறுவனம் தாக்குதல் தீங்கிற்கு பொறுப்பாகாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

P.Kader Vs K.A.Alagarswami, AIR 1965 Mad 438., என்ற வழக்கில், மருத்துவ பரிசோதனைக்காக, விசாரணைக் கைதியை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்ற காவல் அலுவலர், அவரின் கைகளுக்கு விலங்கிட்டு அத்துடன் சங்கிலியை இணைத்து ஓர் அபாயகரமான விலங்கினைப் போல் அறையின் சன்னலில் பிணைத்தது தாக்குதலாகும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

37. தாக்க முனைதலையும் தாக்குதலையும் வேறுபடுத்திக் காட்டவும். (Distinguish between assault and battery) - May-2019

SN - 53 **தாக்க முனைதலும் தாக்குதலும் / Assault and battery, May-2016 (v), May-2017.**

விடைச்சுருக்கம்: (அ) தாக்க முனைதலும் தாக்குதலும் – (ஆ) தாக்கமுனைதல் மற்றும் தாக்குதலுக்கு இடையேயான வேறுபாடுகள்.

(அ) தாக்கமுனைதலும் தாக்குதலும் (Assault and Battery):

தம்மீது தாக்குதல் நடத்தப்போகிறார் என்று வாதிக்கு உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பிரதிவாதியின் செயலே தாக்க முனைதலாகும் என்று பேராசிரியர் வின்ஃபீல்ட் தாக்க முனைதலை வரையறுக்கிறார். தாக்கமுனைதல் தீங்கினை செயல்படுத்தும்போது அது தாக்குதல் என்ற தீங்காக ஆகிவிடுகிறது.

சட்டத்திற்கு புறம்பாக ஒரு நபரை அடிப்பது அல்லது அவரின் சம்மதமின்றி தொடுவது தாக்குதலாகும். ஒரு நபரை அடிப்பதற்காக கழியை உயர்த்துவது தாக்க முனைதலாகும். கழி, அந்நபரின் மேல்பட்டவுடன் அது தாக்குதல் என்பதாகிவிடுகிறது. கழியை உயர்த்துவது, தாக்க முனைதலின் முக்கிய கூறாகும்; ஆனால் கழியினால் அடிப்பது தாக்க முனைதல் ஆகாது, மாறாக அது தாக்குதல் ஆகும். பலத்தை பயன்படுத்துவது தாக்குதல் எனும் தீங்கின் முக்கியக்கூறாகும். தாக்குதல் என்பதனுள் தாக்க முனைதலும் அடங்கியுள்ளதாக பலர் கருத்து தெரிவித்துள்ளனர்; ஆனால் இக்கருத்து அனைத்து நேர்வுகளுக்கும் பொருந்தாது. பிரதிவாதி தன்னை தாக்கப்போகிறார் எனும் நியாயமான அச்சம் வாதிக்கு இருப்பது என்பது தாக்க முனைதல் தீங்கின் மிகவும் அவசியமான ஓர் கூறாகும். எனவே எப்பொழுதெல்லாம் வாதியின் எண்ணத்தில், பிரதிவாதி தம்மை தாக்குவார் என்ற அச்ச உணர்வு தாக்குதலில் முடிகிறதோ, அப்பொழுதெல்லாம் தாக்குதல் என்பதனுள் தாக்கமுனைதலும் உள்ளடங்கும் என்பது உண்மையே. ஆனால் வாதிக்கு அத்தகைய அச்சத்தை ஏற்படுத்தாமல் அல்லது பிரதிவாதி தம்மீது பலத்தைப் பயன்படுத்தப்போகிறார் என்று முன்னறிய முடியாதவாறு பிரதிவாதி தாக்கும்போது, அத்தகைய தாக்குதலினுள் தாக்க முனைதல் என்ற கூறு உள்ளடங்கி இருக்காது. எடுத்துக்காட்டாக, பிரதிவாதி, வாதியின் பின்புறமாக இருந்து தாக்குவதாகக் கொள்வோம். இங்கு பிரதிவாதி தம்மை தாக்கப் போகிறார் எனும் அச்ச உணர்வு வாதிக்கு இருக்க முடியாது. எனவே இதனின்று, தாக்க முனைதல் என்ற கூறு இல்லாமலும் கூட தாக்குதல் தீங்கு செய்யப்படலாம் என்பது வெளிப்படை.

(ஆ) தாக்க முனைதலுக்கும் தாக்குதலுக்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between Assault and Battery): தாக்க முனைதலுக்கும் தாக்குதலுக்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

(1) ஒருவரின் செயல், உண்மையில் அவர் பலத்தை பயன்படுத்தாமல் இருந்தாலும்கூட, மற்றொருவருக்கு சட்டத்திற்கு புறம்பாக தம்மீது பலத்தை பயன்படுத்தப்போகிறார் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் அவரின் செயல் தாக்கமுனைதல் என்ற தீங்காக அமையும்

ஒருவர் மற்றொருவர்மீது சட்டத்திற்கு புறம்பாக பலத்தை பயன்படுத்துவது தாக்குதல் எனும் தீங்காக அமையும்.

(2) தாக்க முனைதல் என்பது, உடனடியாக ஓர் தாக்குதல் நிகழ்த்தும் எண்ணத்தையும் அத்துடன் அத்தகைய எண்ணத்தை செயல்படுத்தும் தகுதியையும் காட்டுகின்ற ஓர் வெளிப்படையான செயலாகும்.

தாக்குதல் என்பதனுள், ஓர் நபர் சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி மற்றொருவர்மீது பலத்தைப் பயன்படுத்தும் எண்ணம் கொண்டிருப்பது அவசியமாகும்.

(3) தாக்க முனைதலில் உடல்பலத்தை பயன்படுத்துவது அல்லது உண்மையாகவே தொடுதல் (actual contact) இருக்க வேண்டும் என்பது

38.

SN - 54

வினா
மற்று
முக்கி
வைப்

(அ) முன
(Meaning

ஒரு
ஏதுமின்றி
குறைவான
முறையற்
வெளிப்பட
கட்டுப்படுத்
வரையறுக்
எவ்வளவு
செய்வது"
சிறைவை

முன
'false' மற்
வழிவகுப்ப
பொருளை
'imprison
பொருளில்
விரோதமா
'imprisonr
restraint)
பொருளிலு
கட்டுப்படுத்
அல்லது ச
வேறுமுன
இயல்பான
விரோதமா

(ஆ) முன
ingredien
ஒன்று அ

38. முறையின்றி சிறையில் அடைத்தல் பற்றி ஓர் குறிப்பு வரைக. (Write a note on false imprisonment) - Nov-2019.

SN - 54 முறையின்றி சிறை வைத்தல் / False imprisonment - May-2018(v).

விடைச்சுருக்கம்: (அ) முறையற்ற சிறை வைப்பு என்பதன் பொருள் மற்றும் வரையறை - (ஆ) முறையற்ற சிறை வைப்பு என்பதன் முக்கியக் கூறுகள் - (இ) தீர்வழிகள் - (ஈ) முறையற்ற சிறை வைப்புக்கான எதிர்வாதங்கள்.

(அ) முறையற்ற சிறைவைப்பு என்பதன் பொருள் மற்றும் வரையறை (Meaning and Definition of False imprisonment):

ஒரு மனிதனின் சுதந்திரத்தை, சட்டப்படி நியாயப்படுத்தத்தக்க காரணம் ஏதுமின்றி, மற்றொருவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அது எவ்வளவு குறைவானதாக இருந்தாலும் முழுமையாக தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவதே முறையற்ற சிறைவைப்பு என்பதாகும். "சட்டத்தால் அளிக்கப்பட்ட வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரம் ஏதுமின்றி உடலளவில் கட்டுப்படுத்துவது" என்று பேராசிரியர் வின்ஃபீல்ட் முறையற்ற சிறை வைத்தலை வரையறுக்கிறார். "சட்டக்காரணம் ஏதுமின்றி, எந்தவொரு கால அளவிற்கும் அது எவ்வளவு குறைவானதாக இருந்தாலும் முழுமையாக சுதந்திரத்தை இழக்கச் செய்வது" என்று லிண்ட்செல் மற்றும் கிளார்க் (Lindsell and Clerk) முறையற்ற சிறைவைப்பை வரையறுக்கின்றனர்.

முறையற்ற சிறைவைப்பு அதாவது 'false imprisonment' என்பதில் உள்ள 'false' மற்றும் 'imprisonment' ஆகிய இரு சொற்களும் தவறான புரிதலுக்கு வழிவகுப்பதாக உள்ளது. ஏனெனில் இச்சொற்கள் பரவலாக மக்கள் பயன்படுத்தும் பொருளைக் குறிப்பதற்கு ஒத்ததாக ஆகாது. 'false' என்பது 'பொய்யான' என்றும் 'imprisonment' என்பது 'சிறையில் அடைத்தல்' என்றும் பரவலாக குறிக்கும் பொருளில் இங்கு பயன்படுத்தப்படவில்லை. மாறாக, 'false' என்பது 'சட்ட விரோதமான' (unlawful) அல்லது 'தவறான' (wrongful) என்ற பொருளிலும், 'imprisonment' என்பது 'மனித சுதந்திரத்தை முழுமையாக கட்டுப்படுத்தல்' (total restraint) அல்லது 'முழுமையாக அடைத்தல்' (total confinement) என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் முழுமையாக தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் அல்லது முழுமையாக அடைத்தல் என்பது திறந்தவெளியில் அல்லது சாலையில் அல்லது வீட்டிலும் என்பதாகவும்கூட இருக்கலாம். இதனை வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், எங்கும் செல்லக்கூடிய ஒரு நபரின் இயல்பான உரிமையை கட்டுப்படுத்தும் அனைத்துவித தவறான அல்லது சட்ட விரோதமான கட்டுப்படுத்துதல்களும் முறையற்ற சிறைவைப்பாகும்.

(ஆ) முறையற்ற சிறைவைப்பு என்பதன் முக்கியக்கூறுகள் (Essential ingredients of false imprisonment): முறையற்ற சிறைவைப்பு என்ற தீங்காக ஒன்று அமைவதற்கு பின்வரும் இரு நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்;

(1) முழுமையான தடை என்பது இருக்க வேண்டும்; மற்றும்;

(2) தடையை நியாயப்படுத்தும் சட்டக்காரணம் ஏதுமில்லாமல் இருக்க வேண்டும்.

ஆ(1) முழுமையான தடை என்பது இருக்க வேண்டும் (There should be total restraint on the liberty of a person): ஒரு நபரின் எங்கும் செல்லும் சுதந்திரத்தை முழுமையாக தடை செய்வதே முறையற்ற சிறைவைப்பாகும். எனவே ஒரு குறிப்பிட்ட திசையில் செல்வதை மட்டும் தடுப்பது முறையற்ற சிறை வைத்தல் ஆகாது. ஒரு நபரை குறிபபிட்ட சுற்றெல்லைக்கு மேல் செல்வதை தடுப்பதே முறையற்ற சிறைவைப்பாகும். ஒரு நபரை குறிப்பிட்ட திசையை நோக்கி செல்வதை மட்டும் தடுப்பது, ஆனால் திரும்பிச் செல்வதை அனுமதிப்பது முறையற்ற சிறை வைத்தல் ஆகாது.

Bird vs. Jones, (1845) 7 QB 742., என்ற வழக்கில், பிரதிவாதி, ஹாமெர் ஸ்மித் பாலத்தின் (Hammer Smith Bride) மீதான பொது நடைபாதையின் ஒரு பகுதியை அடைத்து, அங்கு இருக்கைகள் அமைத்து, ஆற்றில் நடக்கும் படகுப் போட்டியை காண்பதற்கு கட்டணம் வசூலித்தார். அவ்வழியே வந்த வாதி, கட்டணம் செலுத்தாமல் பொதுநடைபாதையை கடக்க தனக்கு உரிமை உள்ளது என்பதை வலியுறுத்தியதுடன் அடைப்பு வேலியின்மீது ஏறினார். பிரதிவாதி அவரை தடுத்ததுடன் வாதி விருப்பப்பட்டால், வண்டிகள் செல்லும் பாதை வழியே திரும்பிச் சென்று பாலத்தின் மறுபுறத்திற்குச் செல்லலாம் என்றும் கூறினார். வாதி, பிரதிவாதி கூறியதை கேட்க மறுத்து பாலத்தின்மீது அடைக்கப்பட்டிருந்த அடைப்புக்குள் அரை மணிநேரம் இருந்தார். பிரதிவாதி தம்மை முறையின்றி சிறைப்படுத்தியதாக வாதி வழக்குத் தொடர்ந்தார். வாதியின் இயக்கம் (movement) அனைத்து திசைகளிலும் தடுக்கப்படவில்லை என்றும், அவர் வந்த வழியே திரும்பிச் செல்லவும் அல்லது பாலத்தைக் கடந்து வெளியேறுவதற்கான வழிகளும் இருந்ததால் பிரதிவாதி முறையற்ற சிறை வைப்புத் தீங்கிற்கு பொறுப்பாக மாட்டார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒரு நபர் முழுமையாக தடுக்கப்பட்டிருந்தது மிகக்குறுகிய காலம் மட்டுமே என்றிருந்தாலும்கூட அது முறையற்ற சிறைவைப்பு என்பதாகவே ஆகும். **Mee Vs. Cruikshank, (1902) 86 L.T. 708.,** என்ற வழக்கில் சிறைக்கைதி ஒருவரை நீதிமன்றம் விடுவித்த பின்னர், மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சில நிமிடங்கள் வைக்கப்பட்டார். சிறைக்காவலர்கள் அவரிடம் சில கேள்விகள் கேட்டனர். அதன் காரணமாக அவர் சில நிமிடங்கள் சிறைச்சாலையினுள் இருக்க நேர்ந்தது. நீதிமன்றம் சிறைக்காவலர்கள் அவரை முறையின்றி சிறைப்படுத்தியதாகக் குறிப்பிட்டது.

ஆ(1)(a) தப்பிச் செல்வதற்கான வழி (Means of escape): வாதிக்கு தப்பிச் செல்வதற்கான வழி இருப்பின், அவரை முழுமையாக தடுக்கப்பட்டதாக கூற முடியாது என்பதுடன் அது முறையற்ற சிறை வைத்ததாகவும் ஆகாது. இருப்பினும், அத்தகைய வழி ஒன்று இருப்பது, அடைத்து வைத்திருக்கும்

நபர் அறிந்திருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும், அத்தகைய வழி, அடைக்கப்பட்ட இடத்திலிருந்து உடலுக்கு காயங்கள் ஏதும் ஏற்படாமல் சிரமமின்றி வெளியேறுவதற்கான வழியாகவும் இருக்க வேண்டும். மிகவும் உயரமான சன்னலில் இருந்து குதித்து மட்டுமே தப்பிக்க முடியும் என்பதாக வழி இருப்பின், தப்பித்து செல்பவருக்கு காயங்கள் ஏற்படும் அல்லது தப்பித்து வெளியேறிச் செல்வதற்கான வழி இருந்தும், தப்பித்து செல்பவருக்கு வன்முறை அச்சுறுத்தல் உள்ள அத்தகைய வழிகள் இருந்தாலும்கூட அது முறையற்ற சிறை வைப்பாகும்.

ஆ(1)(b) வாதி தாம் சிறைப்படுத்தப்பட்டிருப்பதை அறிந்திருத்தல் (Knowledge of plaintiff): முறையற்ற சிறைவைப்பு எனும் தீங்கு ஒன்று அமைவதற்கு, வாதி தனது சுதந்திரம் தடுக்கப்பட்டுள்ளது என்று அறிந்திருப்பது ஓர் முக்கிய கூறாகுமா என்பது குறித்து சட்ட அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. **Herring Vs Boyle, 149 ER 1126.,** என்ற வழக்கில் ஒருவர் தமது சுதந்திரம் தடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியாமல் இருப்பின் அது முறையற்ற சிறைவைப்பு ஆகாது எனக் கூறப்பட்டது. ஆனால் **Meering Vs Graham White Aviation Co., (1919) 122 LT 44.,** என்ற வழக்கில் ஒருவர் தமது சுதந்திரம் தடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியாமல் இருந்தாலும்கூட அது முறையற்ற சிறை வைத்தலே ஆகும் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. Meering வழக்கின் முடிவே காரணத்தின் அடிப்படையில் சரியானதாகத் தோன்றுகிறது.

ஆ(1) தடையை நியாயப்படுத்தும் சட்டக்காரணம் ஏதுமில்லாமல் இருக்க வேண்டும் (It should be without any lawful justification): முறையற்ற சிறைவைப்பு என்ற தீங்காக அமைவதற்கு சட்டவிரோதமாக அல்லது சட்டப்படி நியாயப்படுத்தக்கூடிய காரணம் ஏதுமின்றி ஒரு நபரின் சுதந்திரம் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். **Rudulsah Vs State of Bihar, AIR 1983 SC 1086.,** என்ற வழக்கில் மனுதாரரை நீதிமன்றம் 1968 ஆம் ஆண்டில் விடுவித்தது. ஆனால் மாநில அரசு, 1982 -ஆம் ஆண்டில் அதாவது 14 வருடங்களுக்குப் பின்னரே சிறையிலிருந்து விடுவித்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்ததை நியாயப்படுத்த, மனுதாரரின் மனநிலைக் கோளாறு காரணமாக மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக காவலில் வைக்கப்பட்டிருந்ததாக மாநில அரசு வாதிட்டது. அரசின் வாதத்தை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், மாநில அரசு இடைக்கால நிவாரணமாக ரூபாய். 35,000/- ஐ வழங்கவும் மற்றும் மனுதாரர் மேற்கொண்டு இழப்பீட்டிற்காக வழக்கு தொடருவதை அனுமதித்தும் ஆணையிட்டது.

Garikipatti Vs Araza Biksham, AIR 1979 AP 31., என்ற வழக்கில், பிரதிவாதிகள் தங்களது சொத்தில் தீப்பற்ற வைத்தது வாதிகள் தாம் என்ற பொய்யான அறிக்கையை காவலரிடம் அளித்தனர். காவலர்களால் கைது செய்யப்பட்ட வாதிகள், பின்னர் குற்றச்சாட்டு பொய்யானது எனத் தெரியவந்ததால் விடுவிக்கப்பட்டனர். பிரதிவாதிகள் எவ்வித நியாயமான காரணமின்றி அளித்த முறையீட்டின் விளைவாகவே வாதிகள் கைது செய்யப்பட்டனர் என்பதால், பிரதிவாதிகள் முறையற்ற சிறைவைத்தலுக்கு பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ) தீர்வழிகள் (Remedies):

முறையற்ற சிறைவைத்தலினால் பாதிக்கப்பட்ட நபர் (1) இழப்பீட்டிற்கான வழக்கிடுதல் (2) சுய-உதவி அல்லது தற்காப்புரிமை மற்றும் (3) ஆட்கொணர்வு நீதிப்பேராணை ஆகிய தீர்வழிகளை நாடலாம்.

(ஈ) முறையற்ற சிறை வைத்தலுக்கான எதிர்வாதங்கள் (Defences): முறையற்ற சிறைவைத்தலுக்கு பின்வரும் எதிர்வாதங்களை பயன்படுத்தலாம்:

(1) சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகளின்போது உள்ள நியாயமான மற்றும் நேர்மையான நம்பிக்கையின் பேரில், அதாவது அத்தகைய நம்பிக்கை உண்மையாக இருப்பின், முறையற்ற சிறைவைத்தலை நியாயப்படுத்துவதற்கு ஓர் வலிமையான எதிர்வாதமாக அமையக்கூடிய நேர்வுகள்.

(2) எந்தவொரு நபரும் தற்காப்புரிமையை செயல்படுத்தும்போது, மற்றொருவரை அடைத்து வைப்பது முறையற்ற சிறைவைத்தல் ஆகாது.

(3) எதிர்தரப்பின் சம்மதம்

(4) நடைமுறையில் உள்ள சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் எந்தவொரு அலுவலரும் சட்டப்படியான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மற்றொருவரை சிறைப்படுத்துவது, முறையற்ற சிறைவைத்தல் ஆகாது.

(5) தவிர்க்க முடியாத விபத்தின் காரணமாக எவரேனும் ஒருவர் அடைக்கப்பட்டால் அது முறையற்ற சிறைவைப்பு ஆகாது.

(6) இளவர்கள், பித்துநிலையினரின் நலனுக்காக சிலக்குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதை அவர்களின் பெற்றோர் அல்லது காப்பாளர்களால் தடுத்து வைப்பது முறையற்ற சிறை வைத்தல் ஆகாது.

(7) அமைதியை பராமரிக்கும் சமுதாய நலனுக்காக, சிலக் குறிப்பிட்ட அலுவலர்கள், சிலக்குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சமுதாய அமைதிக்கு ஏற்படும் ஆபத்தை தடுப்பதற்காக, மக்களில் சிலக்குறிப்பிட்ட பிரிவினரை காவலில் வைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளனர். இத்தகைய அலுவலர்களின் செயல் முறையற்ற சிறை வைத்தலாகாது.

39. எந்த சூழ்நிலைகளில் ஒரு நபர் மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு இழப்பீடு பெற முடியும்? (Under what circumstances can a person recover damages for mental and nervous shock?) - May-2014 (v)

SN - 55 நரம்பு மண்டல அதிர்ச்சி / Nervous shock - Nov-2018(v).

விடைச்சுருக்கம்: (அ) மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சி – (ஆ) மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு இழப்பீடு பெறும் சூழ்நிலைகள்

(அ) மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சி (Mental and nervous shock):

உடலின் நரம்பு மண்டலம் மற்றும் மூளை அமைப்புகளுக்கு அதிர்ச்சி ஏற்படுவதே மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சியாகும். இது கழி, கத்தி அல்லது

துப்பாக்கியைக் கொண்டு உடலில் ஏற்படுத்தும் காயங்கள் அல்ல, மாறாக, ஒரு நபர் கண்களால் காணும் காட்சியாலும் அல்லது காதுகளால் கேட்கப்படும் செய்தி அல்லது சப்தத்தினாலும் உள்ளாகும் மன அதிர்ச்சியாகும். ஓர் உடலளவிலான ஊறு என்பது, வெளிப்படையாக கண்களால் காணக்கூடிய ஊறாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. எடுத்துக்காட்டாக சட்ட விரோத அச்சுறுத்தல்களினால் அதிர்ச்சியை விளைவித்து, அது வாதி தன்னுடைய அன்றாட பணியை மேற்கொள்ள முடியாமல் செய்திருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில், மன அதிர்ச்சியினால் வாதிக்கு ஏற்பட்ட ஊறினுக்கு இழப்பீடு அளிப்பதே சட்டத்திற்குட்பட்ட நீதியாகும்.

மூளை, உடலின் பணியை முறைப்படுத்துகிறது. மூளையின் பின்பகுதியில் இருந்து அதாவது முகுளத்திலிருந்து (medula oblongatta) எழுகின்ற முதுகுத்தண்டுவடத்திலிருந்து (spinal chord) தோன்றுகின்ற நரம்புகள் உடலின் பல்வேறு பாகங்களுக்குச் செல்கிறது. மனிதனுக்கு உள்ள ஐம்புலன்களின் மூலமாக (கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல்) அவன் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை அல்லது சூழலை அறிந்து கொள்கிறான். ஒரு நபர், நம்ப முடியாத அல்லது பயங்கரமான அல்லது தனக்கு அல்லது தனக்கு மிகவும் வேண்டியவருக்கு உடனடியாக நிகழக்கூடிய ஓர் பேராபத்தைக் கண்டவுடன் அல்லது உணர்ந்தவுடன் அவர் மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். நரம்பியல் மற்றும் மன அதிர்ச்சி தொடர்பான தீங்கியல் சட்டத்தின் இப்பிரிவு அண்மைக்காலத்தில் தோன்றியதாகும். பிரதிவாதியின் கவனக்குறைவினால் விளைந்த மனநிலைப் பாதிப்பு அல்லது உணர்வுகளுக்கு ஏற்படும் அதிர்ச்சியானது வாதிக்கு வெளிப்படையான உடலளவிலான காயங்களை ஏற்படுத்தாதவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளபடமுடிாத நிலை முன்பு இருந்தது. இவ்வுண்மையை, பிரிவி கவுன்சில் 1888-ம் ஆண்டில் முடிவு செய்த **Victorian Railway Commissioners Vs Coultas, (1888) LR 13 AC 322.**, என்ற வழக்கிலிருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வழக்கில் நேரடித் தொடுதல் (direct contact) இல்லாமல், கண்களால் காண்பது அல்லது காதுகளால் கேட்பதன் விளைவாக உள்ளாகிய அதிர்ச்சியினால் ஏற்பட்ட ஊறினை நீதிமன்றம் அங்கீகரிக்க மறுத்துவிட்டது. எவ்வாறிருப்பினும் இக்கருத்து பின்னர் நிராகரிக்கப்பட்டு, மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சி அங்கீகரிக்கப்பட்டது. இது தொடர்பாக மெக்மில்லன் பிரபு, **Bourhill Vs Young, (1943) AC 92.**, என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிட்டார்;

"உண்மையான மோதலின் விளைவாக, உடலளவிலான ஊறுகளை மட்டுமே சட்டம் புலன் கொள்ள வேண்டும் (should take cognizance) எனும் ஒழுக்கமற்ற கருத்து (crude view) நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது; மற்றும், நேரடித் தொடுதல் இன்றி, கண்களால் கண்ட அல்லது காதுகளால் கேட்கப்பட்டவற்றின் மூலமாக அடைந்த அதிர்ச்சியினால் ஏற்பட்ட ஊறுகளுக்கும் வழக்கிட முடியும் என்பது தற்போது நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது"

ஒரு நபரின் ஒழுக்க மற்றும் அறிவு சம்பந்தமான உணர்வுகளுக்கு அதிர்ச்சி ஏற்படுவதே மன அதிர்ச்சியாகும். நரம்பியல் அதிர்ச்சியின் ஒரு வகையே மன அதிர்ச்சியாகும்.

(ஆ) மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு இழப்பீடு பெறும் சூழ்நிலைகள் (circumstances in which damages can be recovered for mental and nervous shock): பின்வரும் சூழ்நிலைகளில் மன மற்றும் நரம்பியல் அதிர்ச்சிக்கு இழப்பீடு பெற முடியும்;

(1) வேண்டுமென்றே செய்த தீங்கான செயலினால் ஏற்படும் மன அதிர்ச்சி;

(2) கவனமின்மையால் ஏற்படும் மன அதிர்ச்சி; மற்றும்;

(3) மற்றொரு நபருக்கு ஏற்பட்ட காயம் அல்லது காயமேற்படக்கூடும் எனும் அச்சத்தினால் ஏற்படும் மன அதிர்ச்சி.

ஆ(1) வேண்டுமென்றே செய்த தீங்கான செயலினால் ஏற்படும் மன அதிர்ச்சி (Nervous shock caused by intentional wrong doing): Wilkinson Vs Downtown, (1897) LR 2 QB 57., என்ற வழக்கில், பிரதிவாதி, வாதியிடம் அவளின் கணவர் பயங்கரமான விபத்தில் சிக்கியதால் அவரின் இரு கால்களும் முறிந்துவிட்டதாக விளையாட்டாக பொய்யுரைத்தார். பிரதிவாதி கூறிய பொய்யான தகவலை உண்மையென நம்பிய வாதிக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டதுடன் அவரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. நீதிமன்றம், வாதிக்கு இழப்பீடு செலுத்த பிரதிவாதி பொறுப்பு கொண்டுள்ளார் என்று தீர்ப்பளித்தது. பிரதிவாதி, வாதிக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அதாவது வாதி கொண்டிருக்கும் அவரின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான சட்ட உரிமைக்கு (her legal right to be personal safety) ஊறு ஏற்படுத்த வேண்டும் என்றே அச்செயலைச் செய்ததுடன் உண்மையாகவே அவரின் உடலுக்கும் ஊறு விளைவித்துள்ளார். எவ்வித நியாயமான காரணமும் இன்றி வாதிக்கு ஊறு ஏற்படுத்தும் எண்ணத்தைக் கொண்டிருந்தார் என்று பிரதிவாதியின் செயலுக்கு காரணம் கூற முடியும் என்பதால் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தனது முடிவிற்கான காரணத்தைக் குறிப்பிட்டது.

பிரதிவாதி வேண்டுமென்றே செய்யும் செயல் மூன்றாம் நபருக்கு எதிரானதாக இருந்தாலும் அதன் விளைவாக அருகேயிருந்த வாதிக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டால் பிரதிவாதி பொறுப்பாகுவார். இது தொடர்பாக **Malcolm and another Vs Broad Hurst, (1970) 3 All ER 508.,** என்ற வழக்கில் பின்வரும் இரண்டு எடுத்துக்காட்டுகள் குறிப்பிடப்பட்டது:

எ-டு:1: 'A' என்பவர், 'B' என்பவரை, கருவுற்றிருக்கும் அவரின் மனைவி 'C'-ன் முன்பாக மிகவும் உரத்த குரலுடன் ஏசிக்கொண்டே கடுமையாக தாக்குகிறார். அதனால் 'C'-க்கு மன அதிர்ச்சி ஏற்பட்டதுடன் கருச்சிதைவும் ஏற்படுகிறது. 'C'-க்கு ஏற்பட்ட தீங்கிற்கு 'A' பொறுப்பாகுவார்.

எ-டு:2: மருத்துவமனையினுள் நுழைந்த 'A' அங்கு சிகிச்சை பெற்றுவரும் 'B'-க்கு எதிராக கொண்டிருந்த பகைமை காரணமாக கோபத்துடன்

ஏசிக்கொண்டு அவரை கொன்றுவிடுவதாக அச்சுறுத்துகிறார். உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளோர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் மருத்துவமனையின் அப்பகுதியில் 'A' விடுத்த அச்சுறுத்தல் மற்றும் நடத்தையின் காரணமாக 'C' என்பவர் மன அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். 'C'-க்கு ஏற்பட்ட தீங்கிற்கு 'A' பொறுப்பாவார்.

மேற்கண்ட இரு எடுத்துக்காட்டுகளிலும் 'C'-ன் மென்மையான (முதல் எடுத்துக்காட்டு) அல்லது உயிருக்கு ஆபத்தான நிலையை (இரண்டாவது எடுத்துக்காட்டு) பற்றி 'A' அறிந்திராமல் இருந்தாலும்கூட, அவரின் நடத்தை மிகவும் நியாயமற்றதாக இருப்பதால் அதன் விளைவுகளுக்குப் பொறுப்பாகிறார்.

ஆ(2) கவனமின்மையால் ஏற்படும் மன அதிர்ச்சி (Nervous shock caused by negligence): கவனமின்மையால் ஏற்பட்ட மன அதிர்ச்சிக்காக வழக்கிடும் இத்தகைய நடவடிக்கைகளில் வாதி பின்வரும் மூன்று பொருண்மைகளை மெய்ப்பிக்க வேண்டும்:

(i) முறையீடு செய்யப்பட்டுள்ள ஊறினை தடுப்பதற்காக, பிரதிவாதி, வாதியின் பொருட்டு முறையான கவனம் செலுத்தும் கடமையைக் கொண்டுள்ளார்;

(ii) அத்தகைய கடமையை பிரதிவாதி மீறியுள்ளார்; மற்றும்;

(iii) முறையீடு செய்யப்பட்டுள்ள ஊறினுக்கும் கடமை மீறுகைக்கும் இடையே காரண காரியத் தொடர்புள்ளது.

A கவனக்குறைவாக B என்பவருக்கு உடலளவிலான ஊறு ஏற்படுத்தும் அச்சத்தை விளைவித்தால், உண்மையில் B-க்கு காயம் ஏதும் ஏற்படாவிட்டாலும் கூட, B-க்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி மற்றும் உடல்நலக் குறைவுக்காக, A-க்கு எதிராக வழக்கு தொடரலாம் என்பது தற்போது நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது. **Dulieu Vs White, (1901) 2 KB 699.,** என்ற வழக்கில் பிரதிவாதியின் வேலையாட்கள் கவனமின்றி குதிரை வண்டியை கடைக்குள் ஓட்டினர். அருகிலிருந்த கருவுற்றிருந்த வாதிக்கு உடலளவில் ஊறு ஏதும் ஏற்படாவிட்டாலும்கூட மன அதிர்ச்சியடைந்ததன் விளைவாக பிறவி மந்தத்துடனான குழந்தை பிறந்தது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில், வாதிக்கு உடலளவில் உடனடி ஊறு ஏதும் ஏற்படாததால், கவனக்குறைவுக்காக வழக்கிட முடியாது என்றும், சட்டப்படி வாதிக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சிக்கும், கவனக்குறைவான பிரதிவாதியின் பணியாளர்களுடைய செயலுக்கும் இடையே மிகவும் தொடர்பற்றிருப்பதாக (too remote) வாதிடப்பட்டது. நீதிமன்றம் பிரதிவாதிகள் தரப்பு வாதத்தை தள்ளுபடி செய்து பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் நீதிபதி கென்னடி, "மன அதிர்ச்சியானது, **தனக்கு தனிப்பட்டமுறையில்** உடனடியாக உடலளவிலான ஊறு ஏற்படப்போகிறது எனும் நியாயமான அச்சத்தினின்று எழுந்ததாக இருக்க வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டார்.

Hansbrook Vs Strokes Brothers, (1925) 1 KB 141., என்ற வழக்கில், ஒரு பெண் மேடான மற்றும் குறுகலான சாலையின் உச்சியில் தனது

குழந்தைகளை பள்ளிக்குச் செல்வதற்காக விட்டுவிட்டு கீழிறங்கி வந்து கொண்டிருந்தார். அப்போது பிரதிவாதியின் லாரி, ஓட்டுநர் இன்றி இறங்கி வந்து கொண்டிருந்தது. அப்பெண் தனது குழந்தைகளின் பாதுகாப்பை நினைத்து மிகவும் அஞ்சியதன் விளைவாக ஏற்பட்ட மன அதிர்ச்சியினால் இறந்தார். பெண்ணின் கணவர் (வாதி) இழப்பீடு கோரி பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதியின் பணியாளரான லாரி ஓட்டுநர், லாரியை கவனிப்பதற்கென எவரையும் நிறுத்தாமல் அதன் 'என்ஜின்' ஓட்டத்தை நிறுத்தாமல் கவனமின்றி விட்டுச்சென்றது மெய்ப்பிக்கப்பட்டது. நியாயமான அச்சத்தின் காரணமாகவோ அல்லது தனது குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தின் விளைவாகவே தனது மனைவிக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டது என வாதி வாதிட்டார். பிரதிவாதிகள் தரப்பில், வாதியின் மனைவிக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி, அவருக்கு தனிப்பட்ட முறையில் உடலளவிலான ஊறு ஏற்படப்போகிறது என்ற அச்சத்தினால் அல்லாமல் தனது குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தின் விளைவாக ஏற்பட்டதால் வாதிக்கு வழக்குமூலம் ஏதுமில்லை (Dulieu வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில்) என வாதிட்டனர். விசாரணை நீதிமன்றம் பிரதிவாதியின் வாதத்தை தள்ளுபடி செய்து, இழப்பீடு வழங்க ஆணையிட்டது. பிரதிவாதிகள் விசாரணை நீதிமன்றத்தின் முடிவுக்கு எதிராக மேல்முறையீடு செய்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒருமனதாக விசாரணை நீதிமன்றத்தின் முடிவை உறுதி செய்தது. நீதிப்பிரபு அட்கின், 'மன அதிர்ச்சியானது ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் உடனடியாக ஊறு ஏற்படப்போகிறது என்ற நியாயமான அச்சத்தினின்று எழுந்ததாக இருக்க வேண்டும்' என்று Dulieu வழக்கில் நீதிபதி கென்னடி குறிப்பிட்டுள்ள சுயமாக விதித்துக் கொண்ட கட்டுப்பாட்டிற்கு (self-imposed restriction) ஆதரவான கொள்கை எதனையும் என்னால் காணமுடியவில்லை என்பதைக் குறிப்பிட்டார். இவ்வழக்கின்மூலம் Dulieu வழக்கில் மன அதிர்ச்சிக்கு நிபந்தனையாக குறிப்பிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காரணம் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆ(3) மற்றொரு நபருக்கு ஏற்பட்ட காயம் அல்லது காயமேற்படக்கூடும் எனும் அச்சத்தினால் ஏற்படும் மன அதிர்ச்சி (Nervous shock due to injury or fear of injury to another person): 'A' தனது கவனக்குறைவின் காரணமாக 'B' என்பவருக்கு உடலளவிலான காயம் அல்லது காயமேற்படக்கூடிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறான். 'C' என்பவர் அதனைப் பார்த்ததாலோ அல்லது உடலில் ஏற்பட்ட காயத்தினால் அல்லது காயமேற்படலாம் என்ற அச்சத்தினால் 'B' எழுப்பிய அலறினால் 'C'-க்கு மன அதிர்ச்சியும் உடல்நலக்குறைவும் ஏற்படுகிறது. இங்கு 'C', 'A'-க்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு நாம் ஏற்கனவே கண்டுள்ள, (i) பிரதிவாதி, வாதியின்பொருட்டு 'முறையான கவனம்' (reasonable care) செலுத்தும் கடமையைக் கொண்டிருப்பது, (ii) பிரதிவாதி அத்தகைய கடமையை மீறியிருப்பது மற்றும் (iii) வாதிக்கு ஏற்பட்ட ஊறினுக்கும் பிரதிவாதியின் கடமை மீறுகைக்கும் இடையே காரண காரியத்தொடர்புள்ளது என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

முறையான அல்லது நியாயமான கவனம் என்பது ஓர் சமநிலை அறிவு பொருந்திய மனிதன் காட்டும் கவனம் மற்றும் முன்னறிதலாகும். எனவே வாதி வழக்கில் வெற்றிபெற, தனக்கு ஏற்பட்ட ஊறு, ஓர் சமநிலை அறிவு பொருந்திய மனிதனால் முன்னறியக்கூடிய அத்தகைய விளைவை பிரதிவாதியும் முன்னறிந்திருக்கத் தக்கதே என்பதை மெய்ப்பிக்க வேண்டும். இக்கொள்கை பின்வரும் இருவழக்குகளில் பின்பற்றப்பட்டது.

Bourhill Vs Young, (1943) AC 92., என்ற வழக்கில், மோட்டார் சைக்கிளை மிக வேகமாக ஓட்டிவந்த ஒருவர் கவனமின்றி மோட்டார் கார் ஒன்றின்மீது மோதியதால் அவ்விடத்திலேயே மரணமடைந்தார். விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து சுமார் 45 கஜம் (சுமார் 135 அடி) தொலைவிலிருந்த மீன் விற்கும் பெண்ணான வாதி, விபத்தினால் ஏற்பட்ட பலத்த சப்தத்தைக் கேட்டாள். வாதி விபத்தை தன் கண்களால் பார்க்கவில்லை என்றாலும்கூட, பெரும் சப்தத்தைக் கேட்டதால் மன அதிர்ச்சியடைந்ததன் விளைவாக உடல்நலம் குன்றி தனது தொழிலையும் சில நாட்கள் செய்ய முடியாதிருந்தார். விபத்து நிகழ்ந்தபோது எட்டு மாதக் கருவுற்றவளாக இருந்த வாதிக்கு அதன் பின்னர் ஒரு மாதம் கழித்து பிறந்த குழந்தை, இறந்தே பிறந்தது. வாதி இழப்பீடு கோரி, இறந்து போனவரின் (மோட்டார் சைக்கிளை கவனமின்றி ஓட்டிய விபத்தில் இறந்தவர்) சட்ட இறங்குரிமையருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். இறந்து போனவரின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என்பதால், அவரின் சொத்திலிருந்து இழப்பீடு பெறுவதற்கு தனக்கு தகுதியுள்ளது என வாதிட்டார். விசாரணை நீதிமன்றம், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் வாதியின்பால் கொண்டிருக்கும் கடமை மீறுகை குற்றம் எதனையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டதை மேல்முறையீட்டில் அமர்வு நீதிமன்றத்தின் பெரும்பான்மை முடிவும் உறுதி செய்தது. இருப்பினும் வாதி, பிரபுக்கள் அவையில் மேன்முறையீடு செய்தார். பிரபுக்கள் அவையும் வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை தள்ளுபடி செய்தது. பிரபுக்கள் அவை தனது முடிவிற்கு மற்றவைகளுக்கு இடையே பின்வரும் இரு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டது.

(i) பிரதிவாதி, வாதியின் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டிருந்து, அத்தகைய கடமையை அவர் மீறியதால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். இவ்வழக்கில் வாதி விபத்துக்கு உள்ளாகவில்லை மற்றும் விபத்தை கண்களால் பார்க்கவில்லை என்பதால் இறந்தவர் வாதியின் பொருட்டு கடமை எதனையும் கொண்டிருக்கவில்லை.

(ii) வாதி, விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து தொலைவில் இருந்ததால், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் நியாயமாக எதிர்பார்த்திருக்கக்கூடிய அபாயகரமான இடப்பரப்பு எல்லையினுள் இல்லை.

King Vs Philips, (1953) 1 QB 429., என்ற வழக்கில் பிரதிவாதிக்கு சொந்தமான வாடகைக்காரை அதன் ஓட்டுநர் மெதுவாக பின்னோக்கி ஓட்டும்போது, மூன்று சக்கர சைக்கிளை ஓட்டி வந்த சிறுவனின் (கிங்) மீது

மோதியதில் சிறுவனுக்கு இலேசான காயங்களும் அவனது மூன்று சக்கர சைக்கிளுக்கு சேதமும் ஏற்பட்டது. சிறுவன் கீழே விழும்போது எழுப்பிய அலறல் சப்தத்தை சுமார் 220 அடி தொலைவிலிருந்த வீட்டிலிருந்த கேட்ட அவனது தாய், சன்னல் வழியே எட்டிப்பார்த்தபோது, வாடகைக்காரின் அடியிலிருந்த மூன்று சக்கர சைக்கிளை மட்டும் பார்த்தாளே தவிர சிறுவனைப் பார்க்கமுடியவில்லை. தனது குழந்தைக்கு என்ன நேர்ந்ததோ என்கிற அச்சத்தினால் மன அதிர்ச்சி அடைந்தாள். சிறுவன் தன் தாயின் மூலமாகவும் மற்றும் அவனின் தாய் தனக்காகவும் இழப்பீடு கோரி தனித்தனியே வழக்கிட்டனர். விசாரணை நீதிமன்றம் சிறுவனின் மூன்று சக்கர சைக்கிளுக்கான இழப்பீட்டை அனுமதித்தது; ஆனால் சிறுவனின் தாய் குறித்து பிரதிவாதி எவ்வித பொறுப்பு நிலையையும் கொண்டிராததால் அவருடைய இழப்பீட்டுக் கோரிக்கையை நிராகரித்தது. விசாரணை நீதிமன்றத்தின் முடிவுக்கு எதிராக சிறுவனின் தாய் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம், Bourhill வழக்கில் பிரபுக்கள் சபை அளித்து தீர்ப்பினைப் பின்பற்றி, வாதி விபத்தினால் ஏற்படக்கூடிய அபாயம் உள்ள எல்லைக்குள் இல்லாததால், வாதியின் இழப்பீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

40. நபருக்கு எதிரான அத்துமீறல் பற்றி நீவிர் அறிவது யாது? நபருக்கு எதிரான அத்துமீறலின் வகைகளை எடுத்தியம்புக. (What do you mean by Trespass to Person? Elucidate its various kinds) - May-2015

SN - 56 நபருக்கு எதிரான அத்துமீறல் / Trespass to person.

SN - 57 முடமாக்குதல் அல்லது ஊனமாக்குதல் / Mayhem

விடைச்சுருக்கம்: (அ) நபருக்கு எதிரான அத்துமீறல் – அ(1) தாக்க முனைதல் - அ (2) தாக்குதல் - அ (3) முடமாக்குதல் - அ (4) முறையற்ற சிறைவைப்பு

(அ) நபருக்கு எதிரான அத்துமீறல் (Trespass to person):

தனிநபர் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தைப் பாதிக்கச் செய்யும் தவறுகளையே அல்லது தீங்குகளையே பெரும்பாலும் நபருக்கு எதிரான அத்துமீறல் எனக் குறிப்பிடப்படுகிறது. வரலாற்றுப் பொருண்மைகளின் அடிப்படையில், நபருக்கு எதிரான அத்துமீறல் உட்கருத்துடனோ அல்லது கவனக்குறைவாகவோ செய்யப்படலாம். இருப்பினும் அண்மைக்கால வளர்ச்சியைப் பார்க்கையில் கவனக்குறைவினால் ஏற்படும் நபருக்கு எதிரான அத்துமீறல் தொடர்பான ஊறானது கல்வி நோக்கத்திற்காக மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது என்பதால், உட்கருத்துடன் அல்லது வேண்டுமென்றே நபருக்கு எதிராகச் செய்யப்படும் அத்துமீறலை பின்வரும் நான்கு வகைகளாகக் குறிப்பிடலாம்:

(1) தாக்கமுனைதல்;

(2) தாக்குதல்;

(3) முடமாக்குதல் அல்லது ஊனப்படுத்துதல்; மற்றும்

(4) முறையற்ற சிறைவைப்பு

அ(1) தாக்க முனைதல் (Assault): [வினா எண் 36-க்கான விடையில் குறுந்தலைப்பு 'அ'-ல் காண்க].

அ(2) தாக்குதல் (Battery): [வினா எண் 36-க்கான விடையில் குறுந்தலைப்பு 'ஆ'-ல் காண்க].

அ(3) முடமாக்குதல் அல்லது ஊனப்படுத்துதல் (Mayhem): ஒரு நபருக்கு மரணத்தை ஏற்படுத்தாத உடலளவிலான ஊறுகளில் மிகக் கடுமையானதே முடமாக்குதல் அல்லது ஊனப்படுத்தலாகும். 'Mayhem' என்றச் சொல்லுக்கு 'உறுப்பின் பிறழ்வு' அல்லது 'உறுப்பின் மாற்றம்' (mutation of a limb) என்று பொருளாகும்.

வரையறை (Definition): மற்றொருவரின் சண்டையிடும் தகுதியை அல்லது தற்காத்துக் கொள்ளும் தகுதியை குறைக்கக்கூடிய வகையில் அவரின் உடல் உறுப்புகளை பயன்படுத்துவதை இழக்கச் செய்யும் வன்முறைச் செயலே ஊனப்படுத்துவதாகும்' என்று வரையறுக்கலாம்.

ஓர் நபர் சண்டையின்போது தன்னை முறையாக காத்துக் கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய எந்தவொரு உடலுறுப்பின் பயனையும் இழக்கச் செய்கின்ற உடலளவிலான காயமே ஊனப்படுத்துதல் என்பதாகும். எ-டு: மண்டையை உடைத்தல், உடலின் எந்தவொரு பகுதியிலுள்ள எலும்பை முறித்தல், பார்வை இழக்கச் செய்தல், முன் பற்களை உடைத்தல், உடலின் எந்தவொரு உறுப்பையும் துண்டித்தல் உள்ளிட்டவை. ஆனால் காது அல்லது மூக்கை வெட்டுவது, பின் பற்களை உடைப்பது போன்றவை இயற்றாச் சட்டத்தின்படி முடமாக்குவது ஆகாது, இவைகள் ஒரு நபரின் வலிமையை பலவீனப்படுத்துவதாக இல்லாமல் தோற்றத்தைக் குலைப்பதாக மட்டும் இருப்பதே இதற்கு காரணமாகும்.

முடமாக்குவது தாக்குதலின் மற்றொரு வடிவமாகும் மற்றும் இது தாக்குதலுக்கான அனைத்துக் கூறுகளையும் கொண்டது. தாக்குதலுக்கும் முடமாக்குதலுக்கும் இடையேயான ஒரே வேறுபாடு காயத்தின் அடிப்படையைச் சார்ந்ததாகும். உடலளவிலான காயம் ஒருவரின் சண்டையிடும் தகுதியை அல்லது தற்காத்துக் கொள்ளும் தகுதியை குறைப்பதாக அல்லது பலவீனப்படுத்துவதாக இருப்பின் அது முடமாக்குவதாகும். ஏனைய அனைத்து காயங்கள் அல்லது தொடுதல் தாக்குதலாகும்.

Hurst Vs Pictures Theatres Ltd., (1915) 1 KB 1., என்ற வழக்கில், ஓர் நபர் சண்டையிடுவதற்காக பயன்படுத்தக்கூடிய அவரின் உடல் உறுப்பு எவற்றையேனும் (any organ) அல்லது சண்டையிடுவதற்கு பயன்படும் எந்தவொரு உணர்வுத் திறனையும் (any sense) இழக்கச் செய்யும் அல்லது

பொதுவாக அவரை நிரந்தரமாக பலவீனப்படுத்தும் அத்தகைய உடலளவிலான காயமே முடமாக்குதல் என்றும் ஆனால் இது வெறுமனே உருக்குலைக்கும் உடலளவிலான காயத்தைக் குறிக்காது என்றும் நீதிமன்றம் விளக்கியது.

அ(4) முறையற்ற சிறைவைப்பு (False imprisonment): [வினா எண் 38-க்கான விலையில் குறுந்தலைப்பு 'அ'-ல் காண்க].

மேற்குறிப்பிட்டுள்ளவைகள் தவிர, இந்திய உச்சநீதிமன்றம், **Visakha Vs State of Rajasthan, AIR 1997 SC 3011.**, என்ற வழக்கில், பெண்களுக்கு பணியிடத்தில் பாலியல் தொந்தரவு செய்வதையும் நபருக்கு எதிரான அத்துமீறலாகக் குறிப்பிட்டு, பணியிடங்களின்மீது பொறுப்பு கொண்டோர் மேற்கொள்ள வேண்டிய மற்றும் செயல்முறைப்படுத்த வேண்டிய வழிகாட்டுதல்களைக் குறிப்பிட்டது.

அவதூறு (Defamation)

41. அவதூறுக்கான முக்கிய உட்கூறுகளை விவரிக்கவும். (Describe the essential ingredients of defamation) - Nov-2017 (v)

✦ **அவதூறுத் தீங்கு என்பது யாது? அதன் முக்கியக் கூறுகளை வெளிக் கொணர்க. (What is the tort of Defamation?) - Nov-2016.**

SN - 58 **அவதூறு / Defamation**

விடைச்சுருக்கம்: (அ) அவதூறு - அ (i) வரையறை - (ஆ) அவதூறுக்கான முக்கியக்கூறுகள் - ஆ (i) கூற்று பொய்யானதாகவும் அவதூறானதாகவும் இருக்க வேண்டும் - ஆ (ii) அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும் - ஆ (iii) வாதியைக் குறிப்பிடுவதாக கூற்று இருக்க வேண்டும்.

(அ) அவதூறு (Defamation):

புகழ் அல்லது நற்பெயர் அல்லது நன்மதிப்பு என்பது ஒருவர் தன்னைப்பற்றி தானே கொண்டுள்ள கருத்து ஆகாது; மாறாக, பிறர் அவரைப்பற்றி கொண்டுள்ள கருத்தாகும். குறிப்பாக, சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களில் நற்சிந்தனைக் கொண்டோர் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்தை (அபிப்ராயத்தை) அடிப்படையாகக் கொண்டதாகும். அவதூறுச் சட்டம், பிரதிவாதியின் பொய்களினால் சமுதாயத்திலுள்ள பிறர் வாதியுடன் கொண்டுள்ள உறவை எவ்விதத்திலும் எதிர்மறையாக பாதித்துவிடக்கூடாது என்பதன் அடிப்படையில் வாதியின் நலனை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டதாகும். ஏனெனில் அத்தகைய பொய்கள் வாதியின் தற்போதைய வேலையை இழக்கச்

செய்யலாம், மீண்டும் ஓர் வேலை கிடைப்பதை தடுப்பதாகச் செய்யலாம். திருமண வாய்ப்பை தடுக்கலாம், நண்பர்கள், வியாபாரம், வாடிக்கையாளர்கள் அல்லது அவரது மனநிறைவான உணர்வை இழக்கச் செய்யலாம். எனவே ஒவ்வொரு நபரும், தமது புகழ் அல்லது நற்பெயரை பராமரிக்கவும் மற்றும் பாதுகாக்கவும் அத்துடன் எவரொருவரும் தமது புகழுக்கு களங்கம் விளைவிக்காது இருக்கும் உரிமையையும் கொண்டுள்ளனர். இது ஓர் உள்ளார்ந்த தனிநபர் உரிமையாகும் (inherent personal right) அதாவது உலகிலுள்ள அனைவருக்கு எதிராகவும் செயல்படுத்தத்தக்க ஓர் பொதுமுக உரிமையாகும். மேலும் ஒருவரின் புகழ் என்பது. எவரொருவரும் குறுக்கிடுவதை அனுமதிக்க முடியாத அவரின் தனிப்பட்ட ஓர் சொத்துரிமையாகும்.

அவதூறு என்பது ஒரு நபரின் நற்பெயரை களங்கப்படுத்துவதாகும். எவரொருவரும் மற்றொரு நபரின் புகழ் அல்லது நற்பெயருக்கு ஊறு விளைவிக்கும்போது அல்லது அவரது நற்பெயரை கெடுக்கும் வகையில் பொய்யான அறிக்கையை வெளியிடும்போது அவதூறு என்ற தீங்கு புரிந்தவராகிறார். அவதூறு தனிப்பட்ட ஒரு நபரை மட்டுமே பாதிக்கக்கூடிய தீங்கு அல்ல; மாறாக, களங்கம் விளைவித்ததாக சொல்லப்படுகின்ற நபரின் நற்பெயர், அவரது மனைவி, மகன்கள், மகள்கள் மற்றும் சார்ந்திருப்போர் (dependents) கொண்டுள்ள நற்பெயருடன் நேரடித்தொடர்பு கொண்டிருப்பின் அவர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஊறினையும் உள்ளடக்கும். எடுத்துக்காட்டாக, 'X' என்பவர், 'B'-ன் மனைவி பொறுப்பற்று திரிபவள் (vagabond) அல்லது 'ஒழுக்கம் கெட்டவள்' என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டால் 'B' பாதிக்கப்படுவார். ஏனெனில் அத்தகைய அறிக்கை சமுதாயத்தின் பார்வையில் மற்றும் அவர் பணி செய்யும் இடத்தில் உள்ள உடன் பணியாளர்கள் மத்தியில் அவரின் மதிப்பை குறைத்துவிடும். இத்தகைய அறிக்கை அல்லது சொற்களே அவதூறானது என்று அழைக்கப்படுகிறது. அவதூறானது உரிமையியல் சட்டத்தில் தீங்காகவும், குற்ற சட்டத்தில் குற்றமாகவும் கருதப்படுவதாகும். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு- 499, 'அவதூறு' எனும் குற்றத்திற்கான வரையறையையும், பிரிவு-500, அவதூறுக் குற்றத்திற்கான தண்டனையையும் கொண்டுள்ளது.

அ(i) வரையறை (Definition): "பொதுவாக, சமுதாய உறுப்பினர்களில் உள்ள நற்சிந்தனையாளர்களின் மதிப்பீட்டில் ஓர் நபரை கீழானவராக அல்லது அந்நபரை புறக்கணிக்க அல்லது தவிர்க்கச் செய்யும் வகையில் வெளியிடப்படும் கூற்றே அவதூறு ஆகும்" எனப் பேராசிரியர் வின்ஃபீல்ட் அவதூறுத் தீங்கை வரையறுக்கிறார்.

பார்க் பி. (Park B.) என்பாரின் சொற்களின்படி, அவதூறு என்பது "ஓர் நபரின் நற்பெயருக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு மற்றொரு நபர் எவ்வித நியாயமான அல்லது சட்டப்படியான காரணம் எதுவுமின்றி அவரை வெறுக்கும்படியாக, இகழும்படியாக அல்லது ஏளனப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தும் ஓர் வெளியீடாகும்".

"மற்றொருவர் குறித்து எவ்வித நியாயமான அல்லது பொறுத்துக் கொள்ளத்தக்க காரணமும் இன்றி பொய்யான மற்றும் அவதூறானக் கூற்றை வெளியிடுவதன்மூலம் ஒருவருக்கு ஊறுவிளைவிக்கச் செய்வது அவதூறாகும்" என அண்டர்ஹில் (underhill) அவதூறை வரையறுக்கிறார்.

Dixon Vs Holden, (1869) LR 7 Eq 488., என்ற வழக்கில் 'ஒரு மனிதனின் புகழ் அவனது சொத்தாகும் மற்றும் பிற மற்ற சொத்துகளைவிட மிகவும் மதிப்புடையதாகும். எனவே 'B' என்பவரின் புகழுக்கு ஊறு விளைவிக்கும் நபர் ஒருவர் 'B'-ன் பணத்தைக் களவாடும் ஓர் திருடனைக் காட்டிலும் மிகப்பெரும் ஊறு ஏற்படுத்துகிறார். எளிமையாகக் குறிப்பிடுவதெனில், ஓர் நபர் தனது நற்பெயரை இழப்பின் அனைத்தையும் இழந்தவராகிறார். நற்பெயரை இழப்பதால் ஓர் மனிதன் சமுதாயத்தில் தனது முகத்தை அல்லது அடையாளத்தை இழக்கிறான்; அவனால் வெளியில் செல்ல முடியாது; அவன், தான் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்கிறான் மற்றும் சமுதாயத்தின் ஏளனப் பார்வைக்கான பொருளாகிவிடுகிறான்' என்று குறிப்பிடப்பட்டது.

(ஆ) அவதூறுக்கான முக்கியக்கூறுகள் (Essentials of Defamation): அவதூறுத்தீங்கின் முக்கியக்கூறுகள் பின்வருமாறு:

(i) கூற்று பொய்யானதாகவும் மற்றும் அவதூறானதாகவும் இருக்க வேண்டும்;

(ii) அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்;

(iii) வாதியைக் குறிப்பிடுவதாக அக்கூற்று இருக்க வேண்டும்.

ஆ(i) கூற்று பொய்யானதாகவும் மற்றும் அவதூறானதாகவும் இருக்க வேண்டும் (The Statement must be false and defamatory): ஓர் நபரின் கூற்று அவதூறானதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கும் சோதனை என்னவெனில், சமுதாய உறுப்பினர்களில் உள்ள நற்சிந்தனையாளர்களின் மதிப்பீட்டில் அக்கூற்று வாதியின் மதிப்பை தாழ்த்துவதாக, குறைப்பதாக அல்லது சிறுமைப்படுத்துவதாக உள்ளதா அல்லது இல்லையா என்பதாகும். இச்சோதனையைப் பொருந்தச் செய்யும்போது, கூற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்கு சாதாரண நபர்கள் அளிக்கும் இயல்பான மற்றும் சாதாரண பொருளை (natural and ordinary meaning) அளிப்பதற்கு உரிய கவனம் காட்டப்பட வேண்டும். ஏனெனில் ஓர் சாதாரண மனிதன் முதலில் படிக்கும்போது பெறும் அபிப்பிராயம் அல்லாமல் அதன்பின்னர் அக்கூற்றின் பொருளை பிரித்து ஆராய்வது அல்லது பகுப்பாய்வு செய்வது முக்கியத்துவம் பெறாது. இவ்வாறு ஓர் அவதூறுக் கூற்றானது ஒரு நபரை மற்றவர்கள் வெறுப்பதற்கு, இகழ்வதற்கு காரணமாகக் கூடிய வகையிலும் மற்றும் அந்நபரின் தொழில் அல்லது வணிகத்திற்கு ஊறு ஏற்படுத்துவதாகவும் இருக்கும். இத்தகைய கூற்று, அவரின் அருகாமையில் உள்ளவர்கள் அவரை புறக்கணிக்கும் அல்லது தவிர்க்கும் மனநிலையை ஏற்படுத்தும். சமுதாய உறுப்பினர்களில் உள்ள நற்சிந்தனையாளர்கள் யார் என்பது குறித்த கேள்விக்கு பேராசிரியர் வின்ஃபீல்ட் சமநிலை அறிவு கொண்ட நபர் என்று பதிலளிக்கிறார். சமநிலை அறிவு கொண்ட

நபர் என்பவர், நேர்மையான எண்ணம் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும் என்பதை வின்ஃபீல்ட் வலியுறுத்துகிறார். இவ்வாறு பொருந்தச் செய்யப்படும் தரம் பொதுவாக சமுதாயத்தில் நேர்மையான எண்ணம் கொண்ட நபர்களின் மதிப்பீட்டில், அத்தகைய கூற்று, ஓர் நபரை தாழ்வாக கருதச் செய்கிறதா என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக இருக்க வேண்டும் என்பதை வின்ஃபீல்ட் குறிப்பிடுகிறார்.

ஓர் நபரைக் குறித்த அவதூறானது உண்மையாக இல்லாவிடில் அது பொய்யானதாகக் கருதப்படும். ஓர் நபரைக் குறித்து கூறப்பட்ட கூற்று ஒன்று பொய்யானதாக இருப்பின், அது தீய எண்ணத்துடன் கூறப்பட்டதாக அனுமானிக்கப்படும் என்று **Ogilvie Vs The Punjab Akhabarat & Press & Co., (1929) ILR 11 Lah 45.,** என்ற வழக்கில் கூறப்பட்டது. தீங்கெண்ணத்துடன் வெளியிடப்பட்ட கூற்று என்பதற்கு நியாயமான காரணங்கள் ஏதுமின்றி அத்தகைய கூற்று வெளியிடப்பட்டது என்று பொருளாகும். இங்கு உள் நோக்கம் என்பது தொடர்பற்றது என்பதுடன், இழப்பீட்டினைத் தீர்மானிப்பதில் தீங்கெண்ணம் ஓர் மிக முக்கிய கூறாகும். எனவே ஓர் கூற்று பொய்யானதாக இருந்து ஆனால் அதே நேரத்தில் அவதூறாக இல்லாமல் இருந்தால் அது அவதூறு தீங்கு ஆகாது.

South Indian Co. Vs. Ramakrishna (1890) ILR 13 Mad 34., என்ற வழக்கில் பயணச்சீட்டுகளை பரிசோதனை செய்வதற்காக இரயில்வே காப்பாளர். இரயில் பெட்டிக்குள் சென்றார். பயணச்சீட்டுகளை சரிபார்த்துக் கொண்டிருக்கும்போது, மற்றவர்கள் முன்னிலையில் வாதியை நோக்கி 'நீங்கள் தவறான பயணச்சீட்டுடன் பயணிப்பதாக நான் சந்தேகப்படுகிறேன்' என்று கூறினார். அவரின் அத்தகைய கூற்று பொய்யானதாகும். ஏனெனில் வாதியின் பயணச்சீட்டு முறைப்படியே இருந்தது. வாதி அவதூறுத் தீங்கிற்காக, இரயில்வே நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். ஆனால் நீதிமன்றம், இரயில்வே காப்பாளரின் கூற்று நல்லெண்ணத்தின் அடிப்படையிலானது என்பதால் அவதூறாகாது என்று தீர்ப்பளித்தது.

Sim Vs Stretch, (1936) 2 All ER 1237 (HL)., என்ற வழக்கில், வாதியின் வீட்டு வேலைக்காரி, வாதியின் வீட்டில் வேலை செய்வதை விட்டு பிரதிவாதி வீட்டில் வேலைக்கு சேர்ந்தாள். பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய தந்திச் செய்தியில் 'எடித் (வேலைக்காரியின் பெயர்) இன்றிலிருந்து அவளின் வேலையை எங்கள் வீட்டில் தொடங்கிவிட்டாள்; தயவு செய்து அவளின் உடைமைகள் மற்றும் நீங்கள் கடனாக வாங்கிய தொகை மற்றும் அவளின் கூலியை அனுப்பவும்' என்று குறிப்பிட்டிருந்தார். இத்தகைய சொற்கள் உட்கிடையாக, வீட்டு வேலைக்காரியிடம் கடன்பெறும் அளவிற்கு வாதி மிகுந்த பண நெருக்கடியில் இருப்பதாக குறிப்பிடுவதால் அவதூறுத்தன்மை கொண்டுள்ளது என்பதன் அடிப்படையில் வாதி இழப்பீடு கோரி வழக்குத்தொடர்ந்தார். நீதிமன்றம், இத்தகைய சொற்கள் நியாயமாக அவதூறானக்கூற்று என்ற தகுதியைப் பெறாது என்பதைக் குறிப்பிட்டு வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை நிராகரித்தது.

Ramdhara Vs Phulwatibai, (1970) Cr LJ 286 (M.P.)., என்ற வழக்கில் 45 வயது விதவையான வாதி, அவளின் மருமகளுடைய தாய்மாமனின் வைப்பாட்டியாக (Keep) உள்ளார் என்று பிரதிவாதி பழி சுமத்தினார். பிரதிவாதியின் சாட்டுரை அவதூறு ஆகும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஆ(ii) அவதூறுக் கூற்று வெளியிடப்பட்டிருக்க வேண்டும் (It must be published): அவதூறுத்தீங்காக அமைவதன் இரண்டாவது முக்கியக்கூறு, அவதூறானக் கூற்றை வெளியிட்டிருப்பதாகும். அவதூறுக்கூற்று வெளியிடப்படாமல் இருப்பின் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார். இங்கு இயல்பாக எழும் கேள்வி என்னவெனில் வெளியிடுதல் என்றால் என்ன என்பதாகும். வெளியிடுதல் என்பது, அவதூறுக்கு உள்ளான நபர் அல்லாமல் குறைந்தபட்சம் வேறு ஒரு நபருக்கு அச்சொற்களை தெரிவிப்பதாகும். அவதூறான சொற்களை வாதியிடம் மட்டுமே தெரிவித்திருந்தால் அது வெளியிடப்பட்டது என்பதாகாது என்பதால் இழப்பீட்டிற்கான வழக்கு தொடரமுடியாது. அவதூறான பொருண்மையை (defamatory matter) கடிதம், கையேடு, அட்டை, புத்தகம், கேலிச்சித்திரம், தொலைக்காட்சி, புகைப்படம், ஒலிப்பதிவு நாடா போன்ற தொடர்புச் சாதனங்களின் மூலமும் தெரியப்படுத்தலாம். அவதூறான சொற்களை தந்திச் செய்தி அல்லது அஞ்சல் அட்டையின் மூலமாக வாதிக்கு அனுப்புவது அவதூறாகும்; ஏனெனில் அது வாதியின் கைகளுக்கு சென்று சேருவதற்கு முன்னர், இடைநிலையில் பலர் அதனைப் படிக்க முடியும் என்பதால் அது வெளியிடப்பட்டது என்ற பொருளுக்குள் அடங்கும்.

Huth Vs Huth, (1915) 3 KB 32., என்ற வழக்கில், பிரதிவாதி, வாதியைப் பற்றி அவதூறாக எழுதிய கடிதத்தை ஒட்டப்படாத உறையினுள் வைத்து வாதிக்கு அனுப்பினார். மற்றவர்களின் விவகாரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வமுடைய, வாதியின் வீட்டு சமையல்காரர் அந்த உறையிலிருந்த கடிதத்தை எடுத்து படித்துவிட்டார். சாதாரணமாக, வாதியின் வீட்டில், வாதிக்கு வரும் கடிதங்களை அவரிடம் அளிப்பதற்கு முன் அவரது சமையல்காரரோ அல்லது அவரது வீட்டிலுள்ள மற்றவர்களோ பிரித்து படிப்பார்கள் என்பதை பிரதிவாதி அறிந்திருந்தார் என்பதற்கு சான்றுகள் ஏதுமில்லாததால் அது வெளியிடப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Mahendra Ram Vs. Harnandan, AIR 1956 Pat 445., என்ற வழக்கில் பிரதிவாதி கடிதம் மூலமாக வாதியைப் பற்றிய அவதூறான விஷயங்களை உருது மொழியில் எழுதி வாதிக்கு அனுப்பினார். வாதிக்கு உருதுமொழி தெரியாது என்பதால் மூன்றாம் நபர் ஒருவர் வாதிக்கு அக்கடிதத்தை படித்துக் காண்பித்தார். பிரதிவாதி கடிதம் எழுதும் நேரத்தில், வாதிக்கு உருது மொழி தெரியாது என்றும் அதனை மூன்றாம் நபர் ஒருவர் வாதிக்கு படித்துக் காட்டும் அவசியம் ஏற்படும் என்றும் அறிந்திருந்தால் மட்டுமே பிரதிவாதி பொறுப்பாவார் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

S.N.M. Abidi Vs. Prafulla Kumar Mohanta, AIR 2002 Gau 75 (DB)., என்ற வழக்கில், புகழ்பெற்ற 'இல்லஸ்டிரேட்ட் வீக்லி' என்ற வார இதழின்

கட்டுரை ஒன்றில் முன்னாள் முதல்வர் மொகன்டா, மனித மற்றும் ஆட்பலத்தை தவறாகப் பயன்படுத்தியதாக கூறப்பட்டிருந்தது. நீதிமன்றம் அச்சாட்டுரை பொய்யானது, அடிப்படையற்றது என்பதை விசாரித்து அறிந்து, பிரதிவாதியின் சாட்டுரை வாதியின் புகழுக்கு களங்கம் விளைவித்துள்ளதாகக் குறிப்பிட்டு வாதிக்கு இழப்பீடாக ரூபாய் ஐந்து இலட்சத்தை வழங்க ஆணையிட்டது.

ஆ(iii) வாதியைக் குறிப்பிடுவதாக கூற்று இருக்க வேண்டும் (It must refer to the plaintiff): அவதூறு என்பதை வாதி மெய்ப்பிக்க, வெளியிடப்பட்ட கூற்று அவதூறானது என்பதை மெய்ப்பித்தால் மட்டும் போதாது; அத்துடன் அது தன்னைக் குறிப்பிட்டு கூறப்பட்டது என்பதையும் மெய்ப்பிக்க வேண்டும். மேலும் வாதியின் பெயரைக் குறிப்பிட்டு அவதூறு இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. அவதூறுக் கூற்று வாதியின் முதல் எழுத்துக்களை (initial letters) அல்லது முதல் பெயரை மட்டும் அல்லது பெயரின் கடைசி எழுத்துக்களை குறிப்பிட்டிருந்தாலே போதுமானது. சமுதாய உறுப்பினர்களில் உள்ள நற்சிந்தனையாளர்கள் அக்கூற்று வாதியைக் குறிப்பிடுகிறது என எண்ணினாலே அது அவதூறினை மெய்ப்பிக்க போதுமானது என்பதுடன் பிரதிவாதி பொறுப்பாவார். அவதூறான கூற்றைக் கேட்பவர் அல்லது படிப்பவர், அது வாதியைத்தான் குறிப்பிடுகிறது என நியாயமாக நம்புவதற்கு தகுந்த விவரிப்பு உள்ள சூழ்நிலையே வாதியை குறிப்பிடுவதற்கு போதுமானது என **David Syme Vs Canavan, (1918) 25 CLR 234.**, என்ற வழக்கில் கூறப்பட்டது.

E. Hulton & Co. Vs Jones, (1910) AC 20., என்ற வழக்கில், 'சண்டே க்ரானிக்கல்' (Sunday Chronicle) என்ற செய்தித்தாளின் உரிமையாளர்கள் (பிரதிவாதிகள்) பிரான்ஸ் நாட்டில் 'டியெப்பி' (Dieppe) நகரில் நடந்த 'மோட்டார் வண்டி திருவிழா' பற்றிய நகைச்சுவை கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தனர். அக்கட்டுரையில் இலண்டனின் பெக்லாம் (Pecklam) ஊரிலுள்ள தேவாலய காப்பாளர் ஆர்ட்டிமிஸ் ஜோன்ஸ் என்ற பெயரில் ஒருவர் இருப்பதாக கற்பனையாக சித்தரித்து எழுதப்பட்டிருந்தது. ஜோன்ஸ் மதிக்கத்தக்க தேவாலய காப்பாளராக பெக்லாம் ஊரிலும், டியெப்பி நகரில் ஒரு பரத்தையுடனும் ஆக இரட்டை வாழ்க்கை வாழ்வதாகவும், அவருடைய மனைவியாக இல்லாத ஒரு பெண்ணுடன் கேளிக்கை விடுதிகளில் அவரைக் காண முடியும் என்றும் அக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. உண்மையாகவே ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் (வாதி) என்ற பெயரில் வழக்குரைஞர் ஒருவர் இலண்டனில் இருந்தார். அவர் அவ்வப்பொழுது 'சண்டே க்ரானிக்கல்' செய்தித்தாளில் கட்டுரை எழுதி வருபவராவார். அவருடைய நண்பர்கள் அக்கட்டுரை அவரைப் பற்றிக் குறிப்பிட்டதாகவே எண்ணியதால் அவரின் புகழுக்கு களங்கம் ஏற்பட்டது. ஜோன்ஸ் செய்தித்தாளின் உரிமையாளர்களுக்கு எதிராக இழப்பீடு கோரி வழக்குத் தொடர்ந்தார். பிரதிவாதிகளின் கட்டுரை ஓர் கற்பனைப் பாத்திரம் பற்றியதாக இருந்தாலும்கூட, வாதியை அறிந்துள்ள நபர்கள், அக்கற்பனைப் பாத்திரம் வாதியைப் பற்றிக் குறிப்பிடுவதாக நம்பினார்கள் என்று கூறுவதற்கு

இடமிருப்பதால் பிரதிவாதிகள் நிலை வடிவ அவதூறுக்குப் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவதூறானது ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை (class) குறிப்பதாக இருந்தால், எந்தவொரு தனிநபரும், அக்குறிப்பு தனிப்பட்ட முறையில் தனக்குப் பொருந்தும் என்பதை மெய்ப்பித்தால் மட்டுமே வழக்கு தொடரமுடியும். எனவே ஓர் நபர் அனைத்து வழக்குரைஞர்களும் நேர்மையற்றவர்கள் என்றோ அல்லது மருத்துவர்கள் அனைவரும் பணம் ஈட்டுவதையே குறிக்கோளாக கொண்டவர்கள் என்றோ எழுதினால் எந்தவொரு வழக்குரைஞரும் அல்லது மருத்துவரும் அக்கூற்றில் ஏதேனுமொன்று தனிப்பட்ட முறையில் தன்னை மட்டுமே குறிப்பிடுகிறது என்பதை மெய்ப்பித்தாலேயொழிய மற்ற நேர்வுகளில் வழக்கிட முடியாது. இருப்பினும் ஓர் அறிக்கை பொதுவாக ஓர் வகுப்பினரைக் குறிப்பிடுவதாக இருந்தாலும், அது வாதியை மட்டுமே குறிப்பிடுகிறது என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதை வாதி மெய்ப்பிப்பின் அவர் வழக்கில் வெற்றி பெறுவார்.

Le Fanu Vs Malcolmson, (1848) 1 HLC 637., என்ற வழக்கில், அயர்லாந்தில் உள்ள சில தொழிற்சாலைகளில், தொழிலாளர்களை கொடுமைப்படுத்தும் நடைமுறை பின்பற்றப்படுவதாக பிரதிவாதி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார். அக்கட்டுரையை முழுமையாக படிப்பதன் மூலமும், அக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்த 'வாட்டர்ஃபோர்டு' (waterford) என்ற குறிப்புரையில் இருந்தும், அக்கட்டுரை வாதியின் 'வாட்டர்ஃபோர்டு' தொழிற்சாலைக் குறித்தே எழுதப்பட்டிருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட்டதால் வாதி அவதூறுக்கான வழக்கில் வெற்றி பெற்றார்.

42. நிலையுறு அவதூறு என்பது யாது? நிலையுறு அவதூறுக்கான வழக்கில் வெற்றி பெற வாதி மெய்ப்பிக்க வேண்டிய மூலங்கள் யாவை? (What is libel? What essentials must be proved by the plaintiff to succeed in an action for libel?) - May-2018.

SN - 59 நிலை வடிவ அவதூறு / Libel

விடைச்சுருக்கம்: (அ) நிலை வடிவ அவதூறு - (ஆ) நிலை வடிவ அவதூறுக்கான வழக்கில் வாதி மெய்ப்பிக்க வேண்டிய மூலங்கள்

(அ) நிலை வடிவ அவதூறு (Libel):

அவதூறுத் தீங்கை வரலாற்றுக் காரணங்களின் அடிப்படையில், ஆங்கிலச் சட்டம் நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு அல்லது வாய்மொழி அவதூறு என இருவகையாகப் பிரிக்கிறது. நிலை வடிவ அவதூறு என்பது கண்ணுக்குப் புலப்படுகின்ற மற்றும் நிரந்தர வடிவம் கொண்டது. எழுத்து, அச்சு,

கேலிச்சித்திரம், கொடும்பாவி, உருவச்சிலை, திரைப்படம் போன்றவற்றை நிலை வடிவ அவதூறுக்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். இதற்கு மாறாக, நிலையா வடிவ அவதூறு அல்லது வாய்மொழி அவதூறு என்பது கண்ணால் காணக்கூடிய அல்லது காதால் கேட்கக்கூடிய ஆனால் குறைவான நேரம் மட்டுமே அல்லது தோன்றியதும் மறைகிற வடிவத்தில் வெளியிடப்படுவதாகும். பேச்சு, செய்கைகள், கண் சிமிட்டல், தலையை அசைத்தல், சப்தம் எழுப்புதல் போன்றவற்றை நிலையா வடிவ அவதூறுக்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

வரையறை (Definition): பிஷப் (Bishop) நிலை வடிவ அவதூறை பின்வருமாறு வரையறுத்துள்ளார்:

"அமைதிக்கு இடையூறு ஏற்படுத்துவதற்காக, பொது ஒழுக்கத்தை களங்கப்படுத்துவதற்காக அல்லது செய்யப்பட்டால் குற்றஞ்சுமத்தக்கூடிய எந்தவொரு செயலை செய்வதற்கும் வழிவகுப்பதை திட்டமிட்டு எழுத்துமூலமாக வெளியிடப்படும் எந்தவொரு கூற்றும்".

நிலை வடிவ அவதூறை அதன் பரந்த மற்றும் விரிவான பொருளில் எடுத்துக்கொள்ளும்போது ஓர் ஒழுக்கக்கேடான அல்லது சட்டவிரோத தன்மை கொண்ட எழுத்துக்கள், படங்களை குறிப்பாக பொது அமைதிக்கு எதிரான குற்றங்களாகக் கருதப்படுவனவற்றைக் குறிக்கும். அவை எந்தவொரு நபர் குறித்தும் அச்சு, எழுத்து, அடையாளங்கள் மூலமாகவோ அல்லது படங்களின் மூலமாகவோ அவரின் கோபத்தை தூண்டுவதற்காக அல்லது பொதுமக்களின் வெறுப்பு, இகழ்ச்சி அல்லது ஏளனத்திற்கு அவரை உட்படுத்த வேண்டும் என்ற தீங்கெண்ணத்துடன் வெளிப்படுத்தும் அவதூறாகும் என்று பிளாக்ஸ்டன் (Blackstone) குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) நிலை வடிவ அவதூறுக்கான வழக்கில் வாதி மெய்ப்பிக்கப்பட வேண்டிய மூலங்கள் (Essentials to be proved by the plaintiff in an action for libel): [இந்தியாவில் நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு ஆகிய இரண்டுமே சமமாக கருதப்படுகிறது. இரண்டுமே தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும் மற்றும் இரண்டுமே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றமாக கருதப்படுவதாகும். எனவே நிலை வடிவ அவதூறுக்கான வழக்கில் வாதி மெய்ப்பிக்கப்பட வேண்டிய மூலங்கள் என்பதும் அவதூறுக்கான வழக்கில் வாதி வெற்றி பெறுவதற்கு மெய்ப்பிக்கப்பட வேண்டிய மூலங்கள் என்பதும் ஒரே பொருளைக் குறிப்பிடுகின்றன. எனவே இத்தலைப்பின்கீழ் முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு ('ஆ') முழுமையும் குறிப்பிடவும்].

43. 'அவதூறு வெளியிடுபவர்களின் உட்கருத்து பொறுத்து பொறுப்பு அமைவதில்லை, மாறாக, அவதூறினைப் பொறுத்தே அமைகிறது' - நீதிபதி ரசூல் - ஆராய்க. ('Liability for libel does not depend

on the intention of the defamer, but on the fact of defamation' - Russel J. - Examine) - May-2012 (v), Nov-2014.

- **'நிலை வடிவ அவதூறின் பொறுப்படைவு அவதூறு இழைத்தவரின் எண்ண அடிப்படையில் அல்லாது அவதூறின் அடிப்படையில் அமைவதாகும்' - வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்கவும். ('The liability for libel does not depend on the intention of the defamer, but on the facts of defamation' - Discuss referring to cases) - Nov - 2013 (v).**

விடைச்சுருக்கம்: (அ) உட்கருத்து இல்லாத அவதூறு - அ (1) வாதியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் என்ற உட்கருத்து இல்லாத கூற்றுகள் - அ (2) வாழுகின்ற நபரைப் பற்றி உண்மையாக வெளியிடப்பட்ட கூற்றுகள் - (ஆ) அவதூறுச் சட்டம், 1952.

(அ) உட்கருத்து இல்லாத அவதூறு (Unintentional defamation):

ஓர் அவதூறுக்கான வழக்கில் முறையீடு செய்யப்பட்டுள்ள சொற்கள் அல்லது கூற்றுகள் வாதிக்கு அவதூறு விளைவிப்பதாக உள்ளதா அல்லது இல்லையா என்பது புறநிலைச்சோதனையின் (Objective test) மூலம் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது முடிவு செய்பவரின் அகநிலைச் சாராது (Subjective - அதாவது முடிவு செய்பவரின் எண்ணப்படி அல்லாமல்), சமுதாயத்தில் உள்ள நற்சிந்தனையளர்களின் மதிப்பீட்டில் வாதியை புறக்கணிக்க அல்லது தவிர்க்கச் செய்கிறதா அல்லது அவரை வெறுப்பு, ஏளனம் அல்லது இகழ்ச்சிக்கு வெளிப்படுத்துவதாக உள்ளதா? என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. சொற்களுக்கான பொருளை உறுதி செய்யும்போது, பிரதிவாதி அச்சொற்களுக்கு என்ன பொருளை கொண்டிருந்தார் அல்லது கருதியிருந்தார் என்பது முக்கியத் தகுதியாகாது; மாறாக, அக்கூற்று எவருக்காக வெளியிடப்பட்டதோ அவரைச் சுற்றியுள்ள சூழலில் உள்ள நபர்கள் நியாயமாக அதனைப் புரிந்துகொள்ளும் பொருளே முக்கியத்துவம் பெறும். சுருக்கமாகக் கூறுவதெனில், கேட்பவர்கள் அல்லது படிப்பவர்கள் மனதில் அச்சொற்கள் அல்லது கூற்று என்ன விளைவை ஏற்படுத்தியது என்பதை மட்டுமே நீதிமன்றம் கருத்தில் கொள்ளுமே தவிர அதனைப் பேசியவர் அல்லது எழுதியவர் அச்சொற்கள் அல்லது கூற்றுக்கு என்னப் பொருளை (meaning) நினைத்திருந்தார் என்பதை அல்ல. உண்மையில் இத்தகைய புறநிலைச் சோதனை, அச்சடிப்பவர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் எப்போது வேண்டுமானாலும் அவதூறுத் தீங்கிற்கு உள்ளாகக்கூடிய அபாயநிலைக்கு உட்படுத்தியது. இத்தகையோர் அவதூறுத் தீங்கிற்கு உள்ளாகக்கூடிய அவதூறானக் கூற்றை (1) வாதியைப் பற்றி குறிப்பிட வேண்டும் என்ற உட்கருத்து இல்லாத கூற்றுகள் மற்றும் (2) வாழுகின்ற ஓர் நபரைப் பற்றி உண்மையாக வெளியிடப்பட்ட கூற்றுகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

அ(1) வாதியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் என்ற உட்கருத்து இல்லாத கூற்றுகள் (Statements not intended to refer to the plaintiff): சில நேரங்களில் ஓர் கற்பனையான பாத்திரத்தைக் குறிப்பிடும் உட்கருத்துடன் குறிப்பிடப்படும் கூற்றுகள், உண்மையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் நபர் குறித்த அவதூறாக மாறிவிடுவதுண்டு. **E.Hulton & Co. Vs Jones, 1910 AC 20.,** என்ற வழக்கு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். (காண்க பக்கம் எண் 202)

அ(2) வாழுகின்ற ஓர் நபரைப் பற்றி உண்மையாக வெளியிடப்பட்ட கூற்றுகள் (Statements made of an existing person): இத்தலைப்பின்கீழ் எழும் இரண்டு விதமான சூழல்களைக் காண்போம்.

முதலாவதாக, வாழுகின்ற ஓர் நபரைப்பற்றி உண்மையாக வெளியிடப்பட்ட கூற்றுகள் மற்றொரு வாழுகின்ற நபருக்கு எதிராக அவதூறுத் தீங்கு புரிந்ததாக ஆகிவிடும்.

Newstead Vs London Express Newspapers Ltd., (1940) 1 KB 377., என்ற வழக்கில், பிரதிவாதிகள் தங்களின் செய்தித்தாளில் 'கேம்பர்வெல்'-ல் (camberwell) வசிக்கும் 39 வயதான ஹெரால்ட் நியுஸ்டெட் (Harold Newstead) இரு துணை மணம் (bigamy) புரிந்ததற்காக 9 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார் என்ற செய்தியை வெளியிட்டிருந்தது. இச்செய்தி கேம்பர்வெல்லில் ஒரு மதுக்கடையில் பணிபுரிந்து வந்த ஹெரால்ட் நியுஸ்டெட் என்பவரைப் பற்றிய உண்மையான செய்தியே ஆகும். ஆனால் கேம்பர்வெல் சாலையில், முடிதிருத்தும் தொழிலில் தனது தந்தைக்கு உதவியாளராகப் பணிபுரிந்து வந்த சுமார் 30 வயதுடைய ஹெரால்ட் சிசில் நியுஸ்டெட் (Harold Cecil Newstead) என்பவர் பிரதிவாதிகளுக்கு எதிராக அவதூறு வழக்கை தொடர்ந்தார். 'A'-ஐப் பொறுத்து உண்மையாக இருக்கும் சொற்கள், 'B'-ஐப் பொறுத்து அவதூறாக இருக்க முடியாது என பிரதிவாதிகள் தரப்பில் எழுப்பிய வாதத்தை நீதிமன்றம் ஏற்க மறுத்து பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது. சூழ்நிலையைப் பற்றி அறிந்த பிற நபர்கள், வெளியிடப்பட்ட சொற்கள் 'B'-ஐ அவதூறாக குறிப்பிட்டுள்ளதாக நியாயமாக நம்பினார்களா அல்லது இல்லையா என்ற சோதனையே முக்கியத்துவம் பெறும் என்பதை நீதிமன்றம் இவ்வழக்கில் குறிப்பிட்டது. மேலும் பிரதிவாதிகளின் உட்கருத்து (intention) பற்றிய கேள்வி தொடர்பாக, 'இத்தகைய வழக்குகளில் எவரைக் குறித்து என்பதல்ல (not who is meant) மாறாக எவர் அடிபட்டார்? (Who is hit? அதாவது வெளியிடப்பட்ட சொற்களால் எவர் பாதிக்கப்பட்டார்) என்பதே முக்கியத்துவம் பெறும் என்பதையும் நீதிமன்றம் விளக்கியது.

இரண்டாவதாக, வாழுகின்ற ஓர் நபரைக் குறிப்பிட வேண்டும் என்ற எண்ணத்தில் வெளியிடப்பட்ட சொற்களை சாதாரணமாக படிக்கும்போது அவதூறற்றதாக இருந்தாலும்கூட, குறிப்பிடக்கருதிய நபரைப் பற்றியோ அல்லது பிறரைப் பற்றியோ, அச்சொற்களை எழுதியவர் அல்லது வெளியீட்டாளர் அறிந்திராத பொருண்மைகளின் காரணமாக அச்சொற்கள் அல்லது கூற்று அவதூறாகிவிடலாம். பின்வரும் வழக்கு இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

Cassidy Vs Daily Mirror Newspapers Ltd., (1929) 2 KB 331., என்ற இவ்வழக்கில் பிரதிவாதிகள், "பந்தயக் குதிரைகளின் உரிமையாளரான திரு.காரிகனுக்கும் செல்வி 'X' என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாகியுள்ளது" - என்ற செய்தியை புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தனர். உண்மையில் மேற்குறிப்பிட்ட காரிகன் என்பவரே புகைப்படத்துடன் அச்செய்தியை வெளியிட பிரதிவாதிகளுக்கு அதிகாரம் அளித்திருந்தார். ஆனால் காரிகனுக்கு ஏற்கனவே சட்டப்படியான மனைவி (வாதி) இருப்பதை பிரதிவாதிகள் அறிந்திருக்கவில்லை. வாதி, பிரதிவாதிகள் வெளியிட்ட செய்தி மறைமுகமாக தான் காரிகனின் மனைவியல்ல என்பதாகவும், திருமணம் செய்து கொள்ளாமலேயே காரிகனுடன் வாழும் ஒழுக்கக்கேடான பெண் என்று குறிப்பதாகவும் உள்ளதால் பிரதிவாதிகள் தனக்கு எதிராக மறைமுக அவதூறு புரிந்துள்ளதாக வழக்கிட்டார். வாதியின் நண்பர்கள் சிலர். பிரதிவாதிகளின் வெளியீட்டின் காரணமாக தாங்கள் வாதியைக் குறித்து தவறான கருத்து கொண்டதாக சாட்சியம் அளித்தனர். பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தனிப்பட்ட நபர்களின் உரிமைகளைவிட மேம்பட்ட அதிகாரம் ஏதும் கொண்டிராத செய்தித்தாள்களின் உரிமையாளர்கள், பொதுமக்களிடம் தங்களின் செய்தித்தாளை கவரும்படி செய்வதற்காக தாங்கள் பெறும் செய்திகளின் உண்மைத்தன்மையைப் பற்றி முறையாக விசாரிக்காமல் மற்றவர்களைப் பற்றி அவதூறாக வெளியிட்டால், அதன் பின்னரான விசாரணையில் அத்தகைய கூற்றுகள் உண்மையல்ல எனத் தெரியவந்தால் அதன் விளைவுகளுக்கு கண்டிப்பாக பொறுப்பேற்க வேண்டும் என்றும் நீதிபதிகள் இவ்வழக்கில் குறிப்பிட்டனர். குறிப்பாக நீதிப்பிரபு ரஸ்ஸல் (Russel L.J), "அவதூறு வெளியிடுபவர்கள் உட்கருத்துப்பொறுத்து, பொறுப்பு அமைவதில்லை; மாறாக, உண்மையில் அவதூறினைப் பொறுத்தே அமைகிறது" என்பதை இவ்வழக்கில் குறிப்பிட்டார்.

(ஆ) அவதூறுச் சட்டம், 1952 (Defamation Act, 1952)

மேற்குறிப்பிட்ட வழக்குகள், உண்மையில் ஓர் குறிப்பிட்ட நபருக்கு அவதூறு இழைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏதும் கொண்டிராத, தவறேதும் செய்திராத புத்தகம் மற்றும் செய்தித்தாள்களின் பதிப்பாளர்கள் மற்றும் புனைக்கதை (fiction) எழுதுபவர்களை கடுமையாக பாதிக்கச் செய்வதை கண்ணுற்ற ஆங்கில பாராளுமன்றம், அவதூறுச் சட்டம், 1952-ஐ இயற்றியது. இச்சட்ட வகையங்கள் சிலக்குறிப்பிட்ட சூழ்நிலைகளில், அவதூறு இழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிராத அல்லது கவனக் குறைவாக தவறாக வெளியிட்டவர்களை பொறுப்புடைமையில் இருந்து தற்காத்துக் கொள்ளும் விளைவை அளிக்கிறது.

இந்தியாவிலும் நல்லெண்ணத்துடன் வெளியிடும் பதிப்பாளர்களை பாதுகாப்பதற்கு ஆங்கில அவதூறுச் சட்டம், 1952-ஐ ஒத்த சட்டம் இயற்றப்படுவது அவசியமாகும். E.Hulton & Co Ltd., Vs Jones, 1910 AC 20., வழக்கின் விதி இந்தியாவில் **Naganatha Vs Subramania, (1917) 32 MLJ 392.,** என்ற

வழக்கிலும் **Ogilive Vs. Punjab Akhbarat & Press Co. Ltd., (1929) ILR 11 Lah 45.,** என்ற வழக்கிலும் பின்பற்றப்பட்டது. ஆனால் சென்னை உயர்நீதிமன்றம் **T.V.Ramasubba Iyer Vs A.M.Ahmed Mohideen, (1972) 1 MLJ 508.,** என்ற வழக்கில், இந்திய நீதிமன்றங்கள், இங்கிலாந்திலேயே E.Hulton Vs Jones வழக்கிற்கு எதிராக எழுந்த விமர்சனங்களையும் அதற்குப்பின்னர் அங்கு இயற்றப்பட்ட அவதூறுச் சட்டம், 1952-ஐயும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு, E.Hulton Vs Jones வழக்கு விதி இந்தியாவிற்குப் பொருந்தாது என்பதைக் குறிப்பிட்டது. இவ்வழக்கில் கீழமை நீதிமன்றம், E.Hulton Vs Jones வழக்கின் விதியைப் பின்பற்றி அளித்த தீர்ப்பை, ஆங்கில அவதூறுச் சட்டம், 1952-ன் பிரிவு-4-ஐ பொருந்தச் செய்து முடிவை மாற்றியது.

44. அவதூறுக்கான எதிர்வாதங்கள் யாவை? (What are the defences available to defamation?) - May-2019 (v).

✦ **அவதூறுக்கான வழக்குகளை சட்டரீதியாக எதிர்கொள்ளலாம். இக்கூற்று உண்மையெனில் முன்தீர்ப்புகளுடன் உறுதிபடுத்துக. (The tort of defamation could be legally defended. If true substantiate with case laws) - May-2013.**

✦ **நல்லெண்ண மற்றும் நேரிய விமர்சனம் என்பது பற்றி குறிப்பு தருக. (Write a note on fair and bonafide comment) - May-2019.**

SN - 60 **நேரிய விமர்சனம் / Fair Comment, May-2014 (v), May-2015**

SN - 61 **முழுமையன சிறப்புரிமை அல்லது வரம்பில்லாச் சிறப்புரிமை / Absolute Privilege - Nov-2019, May-2017**

SN - 62 **வரம்பில்லா மற்றும் வரம்புடைய சிறப்புரிமை / Absolute and qualified privilege - Nov-2017, Nov-2011(v).**

விடைச்சுருக்கம்: (அ) அவதூறுக்கான வழக்கிற்கு எதிரான எதிர்வாதங்கள் - (1) உண்மையென நியாயப்படுத்துதல் (2) நல்லெண்ண மற்றும் நேரிய விமர்சனம் - (3) சிறப்புரிமை - 3 (i) வரம்பற்ற சிறப்புரிமை - 3 (ii) வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை

(அ) அவதூறுக்கான வழக்கிற்கு எதிரான எதிர்வாதங்கள் (Defences against an action for defamation):

ஓர் அவதூறுக்கான வழக்கில் பிரதிவாதி சிலக்குறிப்பிட்ட எதிர்வாதங்களை நீதிமன்றத்தில் முன் வைப்பதை சட்டம் அங்கீகரித்துள்ளது. எனவே பிரதிவாதி நீதிமன்றம் உளநிறைவு அடையுமாறு இத்தகைய எதிர்வாதங்களை வெற்றிகரமாக முன்வைத்தால் அவதூறுத் தீங்கிலிருந்து விடுபடலாம். தீங்கியல் சட்டத்தில்

அனைத்துவகை தீங்குகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான எதிர்வாதங்களுடன், அவதூறுக்கான வழக்கில் பிரதிவாதி பிரத்யேகமான அல்லது தனிமுறையிலான பின்வரும் எதிர்வாதங்களை எழுப்பி சட்டரீதியாக எதிர்கொள்ளலாம்.

(1) உண்மையென நியாயப்படுத்துதல்;

(2) நல்லெண்ண மற்றும் நேரிய விமர்சனம் அல்லது நேரிய கருத்துரை; மற்றும்;

(3) சிறப்புரிமை, சிறப்புரிமை (i) வரம்பற்ற சிறப்புரிமை மற்றும் (ii) வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை என இருவகைப்படும்.

அ(i) உண்மையென நியாயப்படுத்துதல் (Justification by truth): உரிமையியல் அவதூறுச் சட்டத்தில் (அதாவது தீங்கியலில்) உண்மை என்பது ஓர் முழுமையான எதிர்வாதமாகும். ஆனால் குற்றவியல் சட்டத்தில் உண்மை என்பது பொது நன்மைக்காக அல்லது பொது ஆதாயத்திற்காக வெளியிடப்பட்டிருந்தால் மட்டுமே எதிர்வாதமாகும். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-499-ன் முதல் விலக்கு வாசகம், எந்தவொரு நபர் சம்பந்தப்பட்டதாகவும், உண்மையாகவும் இருக்கும் ஒன்றை பொதுநன்மைக்காக வெளியிடப்பட வேண்டி இருந்தால் அது அவதூறு ஆகாது என்பதைக் குறிப்பிடுகிறது. பிரதிவாதி வெளியிட்ட கூற்று பொய்யானது எனும் அனுமானத்தை தவறு என மெய்ப்பிப்பதற்கு, உண்மை ஓர் முழுமையான எதிர்வாதமாகும்.

ஓர் நபர் தான் கொண்டிராத குணம் அல்லது பண்பு (character) குறித்து ஊறு ஏற்பட்டதாகக்கூறி இழப்பீடு பெறுவதை அனுமதிக்காது என்று கூற முடியும்; ஆனால் வெளியிடப்பட்ட செய்தி பொய்யாக இருப்பின், அச்செய்தி உண்மையாக இருக்கும் என்று பிரதிவாதி நேர்மையாகவும் நியாயமாகவும் நம்பினார் என்பது அதனை நியாயப்படுத்தியதாக ஆகாது. தாம் வெளியிட்ட செய்தி முழுமையும் மற்றும் அதன் முக்கிய பகுதிகள் ஒவ்வொன்றும் உண்மை என்பதை மெய்ப்பிக்கும் சுமை பிரதிவாதியையேச் சாரும். எனவே ''B' என்பவர் (வாதி) திருட்டுக் குற்றத்தினால் தண்டிக்கப்பட்டதாக 'A' என்னிடம் கூறினார்' என்று பிரதிவாதி எழுதினால், 'A' தம்மிடம் அவ்வாறு கூறியதை நேர்மையாக நம்பி அதனையே மீண்டும் குறிப்பிட்டதாக கூறுவது எதிர்வாதமாகாது; மாறாக, உண்மையில் 'B' திருட்டுக்குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார் என்ற உண்மையையும் பிரதிவாதி மெய்ப்பிக்க வேண்டும். **[McPherson Vs Daniels., (1829) 10 B&C 263].** இருப்பினும் பிரதிவாதி, வாதியைக் குறித்து பல சாட்டுரைகளை சுமத்தியிருந்து, அவற்றுள் சில சாட்டுரைகள் மட்டுமே மெய்ப்பிக்கப்பட்டும் மற்றும் மெய்ப்பிக்கப்படாத எஞ்சிய சாட்டுரைகள் வாதியின் நற்பெயருக்கு பெருமளவில் ஊறு எதனையும் ஏற்படுத்தாமல் இருக்கும் அத்தகைய நேர்வுகளில் உண்மையென மெய்ப்பிக்கும் எதிர்வாதத்தை பயன்படுத்தமுடியும். (ஆங்கில அவதூறுச் சட்டம், 1952, பிரிவு-5). இதனை ஒத்த நிலையே இந்தியாவிலும் பின்பற்றப்படுகிறது.

Alexander Vs North Eastern Railway, (1865) 6 B&S 340., என்ற வழக்கில் இரயில்வே நிறுவனம் (பிரதிவாதிகள்) தங்களின் நிலையத்தில் (station) வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் வாதி, பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணம் செய்ததற்காக, ஒரு பவுண்டு அபராதம் அல்லது அதனை செலுத்த தவறினால் அதற்கு மாற்றாக மூன்று வாரங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தனர். பிரதிவாதிகள் வாதியைப்பற்றி வெளியிட்ட தகவல் உண்மையே. ஆனால் ஒரு பவுண்டு அபராதம் செலுத்தத்தவறினால் இரண்டு வார சிறைத்தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக வாதி தொடர்ந்த அவதூறுக்கான வழக்கில், பிரதிவாதிகள் அறிவிப்பில் பெருமளவு உண்மை இருப்பதன் அடிப்படையில் பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Radheshyam Tiwari Vs. Eknath, AIR 1985 Bom. 285., என்ற வழக்கில், ஓர் செய்தித்தாளின் பதிப்பாளர், அச்சிடுபவர் மற்றும் வெளியீட்டாளரான பிரதிவாதி, தன்னுடைய செய்தித்தாளில் வட்டார வளர்ச்சி அலுவலரான வாதிக்கு எதிராக சில கட்டுரைகளை வெளியிட்டிருந்தார். அவற்றில் வாதி போலியான சான்றிதழ்களை வழங்குவதாகவும், கையூட்டு (bribe) பெறுவதாகவும் மற்றும் பல விஷயங்களில் நேர்மையற்ற நடைமுறையை பின்பற்றுபவர் என்றும் குறிப்பிட்டிருந்தார். பிரதிவாதி தமக்கு அவதூறு புரிந்துள்ளதாக வாதி தொடர்ந்த வழக்கில், செய்தித்தாளில் வாதிக்கு எதிராக வெளியிட்ட பொருண்மைகள் உண்மையனவை என்று பிரதிவாதியினால் மெய்ப்பிக்க முடியவில்லை. நீதிமன்றம், பிரதிவாதி அவதூறுத்தீங்கு புரிந்ததற்கு பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

அ(2) நல்லெண்ண மற்றும் நேரிய கருத்துரை அல்லது நேரிய விமர்சனம் (Fair and bonafide comment): அவதூறு வழக்கிற்கான இரண்டாவது எதிர்வாதம் நேர்மையான மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலான விமர்சனம் அல்லது கருத்துரை என்பதாகும். நல்லெண்ண மற்றும் நேரிய கருத்துரை என்பதன் முக்கியக்கூறுகள் பின்வருமாறு:

(i) கருத்துரையாக அல்லது விமர்சனமாக இருக்க வேண்டும் (It must be a comment): கருத்துரை என்பது சிலக் குறிப்பிட்ட செய்தி அல்லது பொருண்மைகள் குறித்த கருத்தை (அபிப்பிராயத்தை) வெளிப்படுத்துவதாகும். பொருண்மைகள் அல்லது செய்தி கண்டிப்பாக உண்மையானவையாக இருக்க வேண்டும்; அவ்வாறு இல்லையெனில் அதன் மீதான கருத்துரை ஓர் சரியான எதிர்வாத எல்லைக்குள் வராது. கருத்துரையை குறிப்பிடுவதற்கு முன்பாக பொருண்மைகளை குறிப்பிட வேண்டும். ஏனெனில் பொருண்மைகளைச் சார்ந்தே கருத்துரை எப்போதும் இருக்கும். நேர்மையான மற்றும் நல்லெண்ணத்துடனான கருத்துரை என்ற வாதத்தை தீர்மானிப்பதற்கு, கூறப்பட்டுள்ள பொருண்மைகள் மற்றும் கருத்துரை வேறுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'A' என்பவர் குளிக்கமாட்டார். அழுக்கான ஆடைகளை உடுத்துபவர் மற்றும் தினசரி காலையில் பல் துலக்கமாட்டார். எனவே அவர் ஓர்

'அழுக்குப் பிடித்த நபர்' இங்கு கடைசியாக குறிப்பிட்டுள்ள சொற்கள், முன்னர் குறிப்பிட்டுள்ள பொருண்மைகளின் அடிப்படையில் அமைந்த ஓர் கருத்துரையாகும்.

(ii) கருத்துரை நேர்மையனதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும் (Comment must be fair and honest): மேற்கண்ட எடுத்துக்காட்டில் குறிப்பிட்டுள்ள 'A'-ஐ 'அழுக்குப் பிடித்த நபர்' என்று குறிப்பிடப்பட்ட கருத்துரை பொருண்மைகளின் அடிப்படையில் உள்ளதால் அது ஓர் நேரிய கருத்துரை என்பதைக் கண்டோம். இதற்கு மாறாக, 'A'-ஓர் நேர்மையற்ற நபர் என்று குறிப்பிடப்படின், அது ஓர் தொடர்புடைய கருத்துரையாகாது. ஏனெனில் உண்மையற்ற அல்லது பொய்யான பொருண்மைகளின் அடிப்படையில் அமைந்த கருத்துரை நேர்மையானதாக இருக்காது. **Merrivale Vs Carson., (1887) 20 QBD 275.,** என்ற வழக்கில், ஓர் நாடகத்தைப் பற்றிய விமர்சனத்தில், பிறன்மனை புணர்தல் (adultery) குறித்த நிகழ்வை அந்நாடகம் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டு ஒழுக்கக்கேடானதாக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டது. உண்மையில், அந்நாடகம் அத்தகைய காட்சி எதனையும் கொண்டிராததால், நேரிய கருத்துரை எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. இதேபோன்று பிரதிவாதியால் வெளியிடப்பட்ட கூற்று தீங்கெண்ணம் கொண்டதாக அல்லது தீயநோக்கம் கொண்டதாக இருக்கக்கூடாது அவ்வாறு இருப்பின் நேரிய கருத்துரை என்ற எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது.

Thomad Vs Bradbury, Agnew & Co. Ltd., (1906) 2 KB 627., என்ற வழக்கில், பிரதிவாதியின் தரப்பில் தீங்கெண்ணம் இருந்ததன் காரணமாக, அக்கருத்துரை திரித்துக்கூறப்பட்ட ஒன்றாகவும், அது நேர்மையான கருத்துரையாக இருக்காது என்றும் எனவே அவர் நேரிய கருத்துரை என்ற எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

(iii) பொதுமக்கள் நலன் அல்லது பொதுநலன் (Public interest): பொதுநலன் என்பது சட்டப்படி பொதுமக்கள் நலன் கொண்ட மற்றும் சட்டப்படி பொதுமக்கள் அக்கறை கொண்டுள்ள அத்தகைய பொருண்மைகளை உள்ளடக்கியதாகும். பொதுநலன் சார்ந்த பொருண்மைகள் குறித்த நேரிய கருத்துரை என்பது நிலை வடிவ அவதூறாகாது. வெளியிடப்பட்ட கருத்துரை பொதுநலன் சார்ந்த ஒன்று என்பது ஓர் பலனுள்ள எதிர்வாதமாகும்.

அ(3) சிறப்புரிமை (Privilege): சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில், சிலக் குறிப்பிட்ட நபர்கள், மற்றவர்கள் குறித்து வெளியிடும் அவதூறானக்கூற்று அல்லது சொற்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது. சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில் சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில் கூறப்படும் கூற்றுகள் அவை அவதூறானதாக இருந்தாலும்கூட அவற்றை ஓர் தீங்காக சட்டம் கருதுவதில்லை. இதனையே நாம் சிறப்புரிமை என அழைக்கிறோம். சட்டம், சிலக்குறிப்பிட்ட நபர்கள் அல்லது குழு நடவடிக்கைகளை மிக

முக்கியமானதாகக் கருதுவதே இதற்கு காரணமாகும். இத்தகைய நேர்வுகளில், சட்டம், தனி மனிதனின் புகழ் அல்லது மதிப்பைவிட பேச்சுரிமை அல்லது கருத்துரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. சிறப்புரிமை (i) முழுமையான அல்லது வரம்பற்ற சிறப்புரிமை மற்றும் (ii) வரையுடை அல்லது வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை என இருவகைப்படும்.

3(i) முழுமையான அல்லது வரம்பற்ற சிறப்புரிமை (Absolute privilege): சிலக் கூற்றுகள், அவை பொய்யானதாக, அவதூறானதாக மற்றும் தீங்கெண்ணம் கொண்டதாக இருந்தாலும்கூட அவற்றிற்கு எதிராக வழக்கு எதனையும் தொடரமுடியாது. சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில் அதாவது பாராளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற பொதுநலன் நடவடிக்கைகள், தனிநபர் நலன்களைவிட ஓங்கிய அதிகாரம் கொண்டதாக அல்லது முக்கியத்துவம் கொண்டதாக சட்டம் கருதுகிறது. வரம்பற்ற சிறப்புரிமையை பின்வரும் நான்கு தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்:

(a) பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகள் (Parliamentary and State Legislative Proceedings): பாராளுமன்றத்தின் இரு அவைகளின் நான்கு சுவற்றுக்குள், உறுப்பினர்கள் பேசும் எதுவும், அது உண்மையானதா அல்லது உண்மையற்றதா என்பதை அறிந்திராமல் பேசியிருந்தாலும் மற்றும் அத்தகைய கூற்று ஓர் மூன்றாம் நபரின் நலனுக்கு ஊறு ஏற்படுத்தினாலும்கூட, அது தொடர்பாக உறுப்பினர்கள் எவரொருவரின் மீதும் உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்கு தொடரமுடியாது. ஆனால் உறுப்பினர்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள இச்சிறப்புரிமை, அவைக்கு வெளியே பேசும் பேச்சுகளுக்கு நீட்டிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 105(2), இரு அவைகளின் உறுப்பினர்களால் பேசப்பட்ட கூற்றுகள் மற்றும் பாராளுமன்றத்தின் எந்தவொரு அவையின் (மக்கள் அவை அல்லது மாநிலங்கள் அவை) அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை, தாள், வாக்குகள் அல்லது நடவடிக்கைகள் எதனொன்றைக் குறித்தும் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது என்பதைக் குறிப்பிடுகிறது. மாநில சட்டமன்றங்களுக்கு இதனையொத்த சிறப்புரிமையை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 194(2) வழங்கியுள்ளது.

(b) நீதிமுறை நடவடிக்கைகள் (Judicial Proceedings): நீதிமுறை நடவடிக்கையின்போது கூறப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதுவும் அது உண்மையற்றதாக அல்லது தீங்கெண்ணத்துடன் கூறப்பட்டிருந்தாலும் அல்லது எழுதப்பட்டிருந்தாலும்கூட முழுமையான சிறப்புரிமை பெறும். கூறியவர் அல்லது எழுதியவர் – நீதிபதி, வழக்குரைஞர், தரப்பினர்கள் அல்லது சாட்சிகள் என்பது பொருட்படுத்தப்படமாட்டாது. இருப்பினும் வழக்குரைஞர், சாட்சிகள், தரப்பினரால் பேசப்பட்ட சொற்கள் நீதிமுறை நடவடிக்கையில் உள்ள கருப்பொருளுடன் (subject matter) தொடர்பற்று இருப்பின் அவருக்கு வரம்பற்ற இச்சிறப்புரிமை கிட்டாது. **Jagan Mohan Vs Kalipad Ghosh, AIR 1922 Pat 104.,** என்ற வழக்கில், பிரதிவாதியான வழக்குரைஞர், நீதிமன்றத்தில் வாதிடுகையில் வாதிக்கு

எதிராக வசைமொழியை பயன்படுத்தியதுடன் வாதியின் பேரில் கொண்டிருந்த தனிப்பட்ட வெறுப்பு மற்றும் தீங்கெண்ணத்தின் காரணமாக, பொது மக்களின் மதிப்பீட்டில் அவரை தாழ்த்துவதற்காக, எவ்வித நியாயமான காரணமும் இன்றி வாதியை பொய்யர் மற்றும் மோசக்காரர் என்றும் குறிப்பிட்டார். பிரதிவாதி நீதிமுறை நடவடிக்கையின்போது அவ்வாறு குறிப்பிட்டதால் அவை வரம்பற்ற சிறப்புரிமை பெறும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் **Jiwan Mal Vs Lachman Das, (1929) Lah, 486.,** என்ற வழக்கில், சாட்சியால் பேசப்பட்ட சொற்கள் விசாரணையில் இருந்த கருப்பொருளுக்கு சிறிதும் தொடர்பற்று இருந்ததால் அது வரம்பற்ற சிறப்புரிமை பெறாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. ஓர் அவதூறுக்கான உரிமையியல் நடவடிக்கையில், தரப்பினர்களால் வாதுரைகளில் (pleadings) குறிப்பிடப்படும் சொற்கள், நீதிமுறை நடவடிக்கையில் உள்ள கருப்பொருள் குறித்ததாகவும் மற்றும் அந்நடவடிக்கைக்கு அவசியமானது என நம்புவதாக இருப்பின் அவை வரம்பற்ற சிறப்புரிமை பெறும்.

(c) இராணுவம் மற்றும் கப்பற்படை நடவடிக்கைகள் (Military and Naval Proceedings): இராணுவம் அல்லது கப்பற்படை அதிகாரத்தின்கீழ் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும், இராணுவ அல்லது கப்பற்படை அலுவல் கடமையின்போது செய்யப்பட்ட அறிக்கைகளும் மற்றும் இராணுவ நீதிமன்றத்தின் முன்னிலையில் கூறப்பட்ட சொற்கள் அவை உண்மையற்றதாக அல்லது தீங்கெண்ணத்துடன் கூறப்பட்டிருந்தாலும்கூட வரம்பற்ற சிறப்புரிமை பெறும்.

(d) அரசு நடைமுறைகள் (State Proceedings): அரசாங்க விவகாரம் தொடர்பாக ஒரு அமைச்சர் மற்றொரு அமைச்சருக்கு அனுப்பும் தகவல்கள், அத்தகைய தகவல் தீங்கெண்ணத்துடன் அனுப்பப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் வரம்பற்ற சிறப்புரிமையைப் பெறும். இதேபோன்று ஒரு அரசாங்க அலுவலர் மற்றொரு அரசாங்க அலுவலருக்கு அலுவலகக் கடமையின்போது பேசப்பட்ட சொற்கள் பொதுநலக் கொள்கையின் காரணமாக முழுமையான சிறப்புரிமைபெறும். இங்கு அரசாங்க விவகாரங்கள் என்பது பொது விவகாரங்கள் (Public matters) குறிப்பாக, நீதிமுறை நிருவாகம் குறித்த பொருள்களையும், அரசாங்க அலுவலர் என்பது காவல் அலுவலரையும் உள்ளடக்கும்.

V.Narayana Vs E.Subbanna, AIR 1975 Karn. 162., என்ற வழக்கில், காவலரிடம் அளித்த முறையீட்டில் (complaint) குறிப்பிட்டுள்ள கூற்றுகள் முழுமையான சிறப்புரிமை பெறும் என்பதால், பிரதிவாதி, காவலரிடத்தில் அளித்த முறையீட்டில் வாதிக்கு எதிராக கொள்ளைக் குற்றம் (robbery) புரிந்ததாக பொய்யாக குற்றம் சுமத்தியிருந்ததால், வாதியின் புகழுக்கு அவதூறு விளைவித்தார் என்பதற்கு பொறுப்பாளியாக்க முடியாது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

3 (ii) வரையுடை சிறப்புரிமை அல்லது வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை (Qualified Privilege): வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை எனும் ஆதாயத்தை பயன்படுத்துவதற்கு முதலாவதாக, தீங்கெண்ணத்துடன் கூற்று

வெளியிடப்படவில்லை என்பதையும்; இரண்டாவதாக, அக்கூற்றை வெளியிடுவதற்கான சூழல் இருந்தது என்பதையும் கண்டிப்பாக மெய்ப்பிக்க வேண்டும். பொதுவாக, இத்தகைய சிறப்புரிமையை;

- கடமையை ஆற்றும்போது அல்லது; ஓர் நலனை பாதுகாப்பதற்காக வெளியிடப்படும் கூற்றுகளுக்கும்; அல்லது;
- பாராளுமன்ற, நீதிமுறை அல்லது பிற அரசாங்க நடவடிக்கைகளை அறிக்கை வடிவில் வெளியிடும்போது; அல்லது;
- ஒருவரின் தனிப்பட்ட நலன் அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காக; அல்லது;
- பொது குறைகளை தீர்வு செய்யும் (redress of public grievances) அதிகாரிகளிடம் வெளியிடும்போதும் பயன்படுத்தமுடியும்.

எடுத்துக்காட்டு: 'X' எனும் ஓர் கடை உரிமையாளர், தன் வியாபாரத்தை மேலாண்மை செய்யும் 'Y' என்பவரிடம் 'P' என்பவர் பணம் கொடுத்தாலொழிய அவருக்கு எந்தப் பொருளையும் விற்பனை செய்யாதே, ஏனெனில் அவர் நேர்மையானவர் என நான் நினைக்கவில்லை' என்று கூறுகிறார். இங்கு 'X' தன் சொந்த நலனைப் பாதுகாப்பதற்காக நல்லெண்ணத்துடன் 'P'-ன் குணத்தைப் பற்றிக் கூறியிருப்பதால் அவதூறுத்தீங்கு புரிந்தவர் ஆகார்.

R.K.Karanjia Vs Thackersey, AIR 1970 Bom 424., என்ற வழக்கில், 'பிளிட்ஸ்' (Blitz) எனும் ஆங்கில வார இதழ், தாக்கர்சே குடும்பத்தைப் பற்றி (House of Thakersey) கடுமையாக விமர்சித்து கட்டுரை ஒன்று வெளியிட்டிருந்தது. அக்கட்டுரையின் நோக்கம், வாதி எவ்வாறு தன்னுடைய சமூக நிலையை பயன்படுத்தி, வரி ஏய்ப்பு செய்து கேள்விக்குரிய முறையில் பெரும் செல்வத்தைக் குவித்தார் என்பதைக் குறிப்பிடுவதாகும். வாதி, துணி நூல் கட்டுப்பாடு வாரியத்தின் (Textile Control Board) தலைவராகவும் இருந்தார். இது தொடர்பாக வாதி தொடர்ந்த அவதூறுக்கான வழக்கில், பிரதிவாதி வெளியிட்ட கட்டுரை சிறப்புரிமைக் கொண்ட சூழலில் வெளியிடப்படவில்லை என்பதால் பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், பிரதிவாதி பொது நலனுக்காக அக்கட்டுரையை வெளியிடவில்லை, மாறாக வாதியைப் பற்றி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருந்ததாக குறிப்பிட்ட நீதிமன்றம் வாதிக்கு இழப்பீடாக ரூபாய் 3 இலட்சத்தை வழங்குமாறு பிரதிவாதிக்கு ஆணையிட்டது. இருப்பினும் பாம்பே உயர்நீதிமன்றம் இழப்பீட்டுத்தொகையை ரூபாய் 1½ இலட்சமாக குறைத்து வழங்க ஆணையிட்டது.

தீங்கெண்ணம், அதாவது மறைமுக/நேர்மையற்ற அல்லது தீய உள்நோக்கம், வரம்பிற்குட்பட்ட சிறப்புரிமை எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாததாகச் செய்கிறது. பிரதிவாதியின் கூற்றில் தீங்கெண்ணம் உள்ளது என்பதை வாதி பலவழிகளில் மெய்ப்பிக்க முடியும். எடுத்துக்காட்டாக,

(i) எழுத்தாளர் தன்னுடைய சாட்டுரைகளில் உள்ள உண்மைத்தன்மை குறித்து அவரே உண்மையில் நியாயமாக நம்பியிருக்கவில்லை அல்லது அது பொய்யானது என்று நம்பினார்; (ii) கோபம், வெறுப்பு அல்லது தவறான உள்நோக்கத்தின் காரணமாக, பொறுப்பற்ற முறையில் வெளியிடப்பட்டக்கூற்று; (iii) பிரதிவாதி, உண்மையா அல்லது இல்லையா என்பதை அறியாமல், அசட்டுத்துணிவுடன் பிறரின்மீது அவதூறு கூறுபவர் - போன்றவற்றை மெய்ப்பிப்பதன்மூலம் தீங்கெண்ணம் கொண்டிருந்ததை மெய்ப்பிக்கலாம்.

Clark Vs. Malyneux, (1877) 2 QBD 237., என்ற வழக்கில், பிரதிவாதியால் வெளியிடப்பட்ட கூற்று கோபத்தின் காரணமாக, அல்லது வேறு ஏதேனும் தவறான உள்நோக்கம் அல்லது அசட்டுத்துணிவுடன் இருக்குமானால், அவர் அத்தகைய சூழ்நிலையை, நியாயப்படுத்தும் காரணத்திற்காக அல்லாமல் அவர் தனது தனிப்பட்ட கோபத்தை அல்லது பிற மறைமுகமான நோக்கத்தை திருப்தி செய்து கொள்வதற்காக பயன்படுத்திக் கொண்டார் என்பதை அனுமானிக்க முடியும் என்று நீதிமன்றம் இவ்வழக்கில் குறிப்பிட்டது.

45. 'அவதூறுத் தீங்கு ஒருவரது புகழினைக் காக்கும். அதன் எதிர்வாதங்கள் பேச்சுரிமையைக் காக்கின்றன' -விளக்குக. ('Defamation as a tort protects the right of reputation of an individual, while the defence to an act of defamation are to protect the freedom of speech' - Explain) - Nov-2012(v), May-2015 (v).

விடைச்சுருக்கம்: (அ) புகழுக்கான உரிமையும் அவதூறுத் தீங்கும் - (ஆ) பேச்சுரிமை - (இ) அவதூறுக்கான எதிர்வாதங்களும் பேச்சுரிமையும்

(அ) புகழுக்கான உரிமையும் அவதூறுத் தீங்கும் (Right of reputation and tort of defamation):

ஓர் நபர் சமுதாயத்தில் பெற்றுள்ள புகழ் அல்லது மதிப்பு, அவரின் உழைப்பு, நற்செயல் மற்றும் தனிப்பட்ட திறமைகளின் அடிப்படையில் பெறப்பட்டதாகும். பொதுவாக, நாகரீக வளர்ச்சி அடைந்துள்ள ஓர் சமுதாயத்தில், எவரொருவரும் மற்றொருவர் கொண்டுள்ள புகழை களங்கப்படுத்தவோ அல்லது நன்மதிப்பை சீர்குலைக்கவோ கூடாது என்கிற கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-21-ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 'வாழ்வுரிமை' (Right to life) என்பது மனித மாண்புடன் தகுதியான முறையில் முழுமையாக வாழ்வதற்கான குறைந்தபட்ச அனைத்து தன்மைகளையும் கொண்ட வாழ்க்கை என்று பொருளாகும் என்று உச்சநீதிமன்றம் **Samatha Vs State of A.P. (1997) 8 SCC 191** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளது உற்று நோக்கத்தக்கதாகும். மேலும்

புகழுக்கான உரிமை, 1966 ஆம் ஆண்டின் குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு உடன்படிக்கையில் (International Covenant on Civil and Political Rights, 1966) அங்கீகரிக்கப்பட்ட ஓர் உரிமையாகும். ஒருவரின் புகழுக்கு அவதூறு விளைவிப்பதை ஓர் தீங்காக தீங்கியல் சட்டம் குறிப்பிடுகிறது. தீங்கியல் சட்டத்தின்கீழ் அவதூறு என்பது, ஒருவரது புகழை பாதிக்கச் செய்யும் வகையில் அவரைப் பற்றி பொய்யான தகவல் ஒன்றை சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் எதுவுமின்றி வெளியிடுவதாகும். இத்தகைய அவதூறு வெளியிடப்பட்டதன் காரணமாக, சமுதாயத்தில் உள்ள நற்சிந்தனையாளர்களின் மதிப்பீட்டில் அவர் தாழ்ந்து போவதுடன், அவர்களின் வெறுப்பு, ஏளனத்திற்கு உள்ளாகிறார். தீங்கியல் சட்டம், அவதூறுக் கூற்றை வெளியிட்ட நபர் அதனை சட்டப்படி நியாயப்படுத்தத் தவறும்போது அவரை இழப்பீடு வழங்கச் செய்கிறது. இவ்வாறாக, சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் எதுவுமின்றி ஒருவர் மற்றொருவரின் புகழுக்கு அவதூறு விளைவித்தால் இழப்பீடு வழங்கும் பொறுப்பு நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதை உணர்த்துவதன் வாயிலாக தீங்கியல் சட்டம் ஒருவரது புகழினைக் காக்கிறது.

(ஆ) பேச்சுரிமை (Freedom of speech):

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 19(a), அனைத்து குடிமக்களுக்கும் பேச்சுரிமை மற்றும் வெளிப்படுத்தும் உரிமையை வழங்கியுள்ளது. இருப்பினும், இவ்வுரிமை, மற்ற அடிப்படை உரிமைகள் போன்று, நியாயமான கட்டுப்பாடுகளுக்கு (reasonable restrictions) உட்பட்டது. உறுப்பு 19(2), பேச்சுரிமை மற்றும் வெளிப்படுத்தும் உரிமையின்மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் மற்றவரின் புகழுக்கு அவதூறு விளைவிப்பதையும் குறிப்பிட்டுள்ளது. எனவே பேச்சுரிமை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழான நியாயமான கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஓர் அடிப்படை உரிமையே ஆகும். தீங்கியல் சட்டத்தில் முன்பு (இங்கிலாந்தில்) பேச்சுரிமை மற்றும் வெளிப்படுத்தும் உரிமையைவிட தனிநபரின் புகழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. **E.Hulton & Co. Vs Jones, 1910 AC 20, Cassidy Vs Daily Newspapers Ltd, (1929) 2 KB 331., Newstead Vs London Express Newspapers Ltd., (1940) 1 KB 377.,** போன்ற வழக்குகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். இதன் காரணமாக எழுத்தாளர்கள், செய்தித்தாள் பதிப்பாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். இதன் வெளிப்பாடே ஆங்கில அவதூறுச் சட்டம், 1952 மற்றும் 1996 சட்டங்களாகும்.

(இ) அவதூறுக்கான எதிர்வாதங்களும் பேச்சுரிமையும் (Defences for Defamation and Freedom of Speech):

தீங்கியல் சட்டம் அவதூறுக்கான சிலக் குறிப்பிட்ட எதிர்வாதங்களை அங்கீகரித்துள்ளது. இத்தகைய எதிர்வாதங்கள், சிலக் குறிப்பிட்ட நபர்கள், குறிப்பிட்ட நேர்வுகளில் ஒருவரின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள முடியாமல் செய்கின்றன. தீங்கியல் சட்டம் அங்கீகரித்துள்ள எதிர்வாதங்கள் பின்வருமாறு:

(1) உண்மையென மெய்ப்பித்தல்;

(2) நல்லெண்ண மற்றும் நேரிய கருத்துரை; மற்றும்;

(3) சிறப்புரிமை.

[மேற்குறிப்பிட்டுள்ள எதிர்வாதங்களை, முந்தைய வினாவிற்கான விடையில் குறிப்பிட்டுள்ளதை சுருக்கமாக இங்கு குறிப்பிடவும்].

மேற்குறிப்பிட்டுள்ள எதிர்வாதங்களை வெற்றிகரமாக பயன்படுத்தி பிரதிவாதி அவதூறுத் தீங்கிற்கான பொறுப்படைவில் இருந்து விடுபடலாம் அல்லது இதனை வேறுமுறையில் குறிப்பிடுவது எனில் தனது பேச்சுரிமையை காத்துக் கொள்ளலாம். இவற்றிலிருந்து 'அவதூறுத் தீங்கு ஒரு நபரின் புகழைக் காக்கும், அதன் எதிர்வாதங்கள் பேச்சுரிமையைக் காக்கின்றன' எனும் கூற்று உண்மையே என்பது தெரியவருகிறது.

46. மறைமுக அவதூறு என்றால் என்ன? விளக்கவும். (What is Innuendo? Explain)

SN - 63 **மறைமுக அவதூறு / Innuendo., May-2013, Nov-2016, May-2017.**

விடைச்சுருக்கம்: (அ) மறைமுக அவதூறு - விளக்கம் - (ஆ) மறைமுக அவதூறின் உட்கூறுகள் - (இ) வழக்குத் தீர்வுகள்

(அ) மறைமுக அவதூறு - விளக்கம் (Innuendo - Explanation):

மறைமுக அவதூறு என்பது, வெளியிடப்பட்ட கூற்றை முதலில் படிக்கையில் அவதூறாக ஏதும் இல்லாததாக தோன்றினாலும், அவற்றின் சில உட்பொருள் அல்லது இரண்டாவது பொருள் காரணமாக (because of some latent or secondary meaning) அவதூறாகக் கருதப்படும். வெளியிடப்பட்ட கூற்றின் இயல்பான மற்றும் சாதாரணப்பொருள் அவதூறாக இல்லாமல் இருந்து, ஆனால் வாதி அது குறித்து அவதூறு வழக்கு தொடர விரும்பினால், வாதியே அவதூறாகச் செய்யும் அதன் உட்பொருள் அல்லது மறைந்துள்ள பொருளை அதாவது மறைமுக அவதூறை மெய்ப்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, "திருமதி. 'Y' ஒரு குழந்தையை பெற்றெடுத்துள்ளார்' என்று 'X' செய்தி வெளியிடுவதாகக் கொள்வோம். இங்கு 'X' வெளியிட்ட செய்தி, அதன் இயல்பான பொருளில் அவதூறு எதனையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் சில சூழ்நிலைகளில் இது அவதூறு ஆகலாம். அதாவது திருமதி 'Y' தனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தாம் திருமணம் நடைபெற்றது என்று வாதிடலாம். அவர் தன்னுடைய வழக்குரையில் இத்தகைய குறிப்பிட்ட அல்லது கூடுதல் சூழ்நிலைகளை குறிப்பிடுவதே மறைமுக அவதூறு எனப்படுகிறது. (இங்கு 'Y' தனது வழக்குரையில் இரண்டு மாதங்களுக்கு முன்தாம் தனக்கு திருமணம் நடைபெற்றது என்பதையும், பிரதிவாதி வெளியிட்ட செய்தியால், தாம் திருமணத்திற்கு முன்பே உடலுறவு கொண்ட ஒழுக்கமற்றவள் என்று

பொருள்படுமாறு உள்ளதையும், எனவே இது மறைமுகமாக தனது நடத்தையைக் குறித்த அவதூறானக் கூற்று என்பதையும் குறிப்பிடுவார்). இவ்வாறு முதலில் படிக்கும்போது சாதாரணமாகத் தோன்றும் பிரதிவாதியின்கூற்று, அதன்சூழல் மற்றும் உள்ளுரைப் பொருளைக் கொண்டு பார்க்கும்போது, அது அவதூறாக இருப்பதே மறைமுக அவதூறு எனப்படுகிறது. சில சமயங்களில் ஒரு நபர் மற்றொரு நபரைக் குறித்து குறிப்பிடும் சொற்கள், அதற்கு நேரெதிரான பொருளைக் குறிப்பதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, 'X' என்பவர் 'Y'-ன் திருட்டுக் குணத்தை மறைமுகமாக குறிப்பிடுவதற்காக, 'Y' மிகவும் நேர்மையானவர் அவர் என் கைக்கடியாரத்தை திருடவில்லை' என்று குறிப்பிட்டால் அது மறைமுக அவதூறாகும்.

மறைமுக அவதூறு என்பது பேசப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட சொற்கள் அதன் சாதாரணப் பொருளில் அவதூறாக இல்லாமல் இருந்தாலும்கூட, வழக்கின் சூழ்நிலையில் உண்மையில் அவை அவதூறான பொருள் கொண்டது என்பதைக் குறிப்பிடுகின்ற விளக்க அறிக்கையாகும். ஓர் மறைமுக அவதூறின் நோக்கம், வாதி சொற்களுக்கு பொருள் கொடுப்பதன் மூலமாக அவற்றிலுள்ள அவதூறான பொருளை வரையறுப்பது மற்றும் அவை எவ்வாறு அத்தகைய பொருளை குறிப்பிடுவதாக உள்ளன என்பதையும் அவை எவ்வாறு வாதியைக் குறித்து குறிப்பிடுகிறது என்பதை மெய்ப்பிப்பதுமாகும்.

அவதூறுக் கூற்றுகள் மூன்று வகைப்படும். அவை (i) முதற்-தோற்றத்திலேயே அல்லது முதலில் படிக்கையிலேயே புரிந்து கொள்கிற அவதூறான சொற்கள்; (ii) அவதூறு இல்லாததாகவும் அல்லது அவதூறு கொண்டுள்ளதாகவும் அதாவது இரண்டு விதங்களில் பொருள் கொள்ளக்கூடிய சொற்கள்; மற்றும் (iii) முதலில் படிக்கையிலேயே அவதூறு இல்லாததாக புரிந்து கொள்ளக்கூடிய சொற்கள். இவற்றுள் முதலாவதாக குறிப்பிட்டுள்ள முதலில் படிக்கையிலேயே புரிந்து கொள்கிற அவதூறான சொற்களை பொறுத்தவரையில், வாதி, அவை வெளியிடப்பட்டதை மட்டும் மெய்ப்பித்தாலே போதுமானது. ஏனெனில் அவை தன்னிலையிலேயே (itself) அவதூறினைக் கொண்டிருப்பதால் வேறு எதனையும் மெய்ப்பிக்கத் தேவையில்லை. பிரதிவாதியே அதற்கு சரியான விளக்கமும் மற்றும் அது அங்கீகரிக்கப்பட்டுள்ள எதிர்வாதங்களின் அடிப்படையில் அமைந்தது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவதூறுத் தீங்கிற்கு பொறுப்பாக நேரிடும். அதாவது முதல்வகைக் கூற்றுகளைப் பொறுத்தவரையில் பிரதிவாதியே மெய்ப்பிக்கும் சுமையை (burden of proof) கொண்டுள்ளார்.

இரண்டாவது வகையைப் பொறுத்தவரை, பயன்படுத்தப்பட்ட மொழி ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை குறிக்கக்கூடியதாகும் (ambiguous). அதாவது ஒரு பொருளில் அவதூறற்றதாகவும் மற்றொரு பொருளில் அவதூறானதாகவும் பொருள் கொள்ளத்தக்கதாகும். மூன்றாவது வகை அதாவது, முதலில் படிக்கையிலேயே அவதூறற்றதாக தோன்றக்கூடிய கூற்றுகளைப் பொறுத்தவரையில் வாதியே தன்னுடைய வழக்குரையில் அக்கூற்றிற்கு தான்

அளிக்கும் அவதூறானப் பொருளை வெளிப்படையாக மற்றும் விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். இத்தகைய விளக்கமான அறிக்கையே மறைமுக அவதூறு என அழைக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது வகை வழக்குகளைப் பொறுத்தவரை, வாதிகளே இவ்வகையில் உள்ளடங்கியுள்ள மறைமுக அவதூறுகளை நீதிமன்றத்திற்கு மெய்ப்பிக்க வேண்டும்; அதாவது இவ்வகைகளில் வாதிகளே மெய்ப்பிக்கும் சுமையைக் கொண்டுள்ளனர்.

(ஆ) மறைமுக அவதூறின் உட்கூறுகள் (Ingredients of Innuendo):

மறைமுக அவதூறின் முக்கிய உட்கூறுகள் பின்வருமாறு:

(i) பிரதிவாதியால் பயன்படுத்தப்பட்ட சொற்கள் அதன் இயல்பான, வெளிப்படையான மற்றும் முதன்மைப் பொருளில் அவதூறற்றதாக தோன்றினாலும் அதன் இரண்டாவது பொருளில் அல்லது மறைந்துள்ள பொருளில் வாதியின் நற்பெயரை களங்கப்படுத்துவதாக இருந்தால், அவை அவதூறானதாகக் கூறப்படும்.

(ii) பிரதிவாதியால் வெளியிடப்பட்ட சொற்களில் உள்ள உட்பொருள் அவதூறானது என்பதையும் அது தன்னையே குறிப்பிடுகிறது என்பதையும் வாதியே மெய்ப்பிக்கும் சுமையைக் கொண்டுள்ளார்.

(iii) ஓர் மறைமுக அவதூறு என்பது உறுதியாக சொல்லப்படுகின்ற விளக்கமாகும் மற்றும் அது வாதியின் நடத்தை அல்லது குணத்தை இழிவு படுத்தத்தக்க உட்பொருள் அல்லது இரண்டாவது பொருளைக் கொண்டிருக்கும்போது ஓர் அவதூறான கூற்றாகிவிடும்.

(iv) மறைமுக அவதூறு எனக் கூறுவதற்கு வெறுமனே பொருள் விளக்கம் (intepretation) அளித்தால் மட்டுமே போதாது; அத்துடன் அதற்கு ஆதரவான அல்லது உறுதி செய்யும் வெளிப்புற பொருண்மைகளையும் (extrinsic facts or matters) குறிப்பிட வேண்டும்.

(இ) வழக்குத் தீர்வுகள் (Case laws):

Morrison Vs. Rithihie & Co., (1902) 4F 654., என்ற வழக்கில், பிரதிவாதிகள் நல்லெண்ணத்துடன், வாதி இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளதாக ஓர் செய்தியை வெளியிட்டிருந்தனர். அதன் முதல் நோக்கில் அச்செய்தி எவ்வித அவதூறையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் வாதிக்கு அச்செய்தி வெளியிட்டதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தாம் திருமணம் நடந்திருந்தது என்பதால் அச்சொற்களில் உள்ள மறைமுக அவதூறுக்காக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதிகள் உண்மையை அறிந்திராமல் வெளியிட்டிருந்தாலும்கூட பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Cassidy Vs Daily Mirror Newspaper Ltd., (1929) 2 KB 33., (பக்கம் 207-ல் காண்க).

Tolby Vs J.S. Fry & Sons Ltd., (1981) AC 333 (HL)., என்ற வழக்கில், வாதி, தொழில் முறையல்லாத புகழ்பெற்ற ஓர் கோல்ஃப் (golf) விளையாட்டு

வீராவார். 'சாக்லேட்' உற்பத்தி செய்யும் பிரதிவாதிகள் வாதியின் கேலிச்சித்திரம் ஒன்றை பயன்படுத்தி தங்களின் உற்பத்திப்பொருளை ('சாக்லேட்') விளம்பரம் செய்திருந்தனர். பிரதிவாதிகள் வாதியின் கேலிச்சித்திரத்தை விளம்பரமாக பயன்படுத்துவதற்கு, வாதியின் ஒப்புதலோ அல்லது ஒப்பந்தமோ செய்திருக்கவில்லை. வாதி, தன்னுடைய புகழ் மற்றும் நம்பகத்தன்மைக்கு பிரதிவாதிகள் ஊறு ஏற்படுத்தியதற்காக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், பிரதிவாதிகளின் செயல், வாதி தன்னுடைய சமூக நிலையை (status) அதாவது ஓர் புகழ்பெற்ற கோல்ஃப் விளையாட்டு வீரர் என்பதை தவறாகப் பயன்படுத்துபவர் என்கிற மறைமுகப் பொருளை உணர்த்துவதாக உள்ளதால் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

D.P.Choudhery Vs Kumari Manjulata, AIR 1977 Raj 170., என்ற வழக்கில் வாதி, புகழ்பெற்ற குடும்பத்தைச் சார்ந்த 17 வயதான கல்லூரி மாணவியாவார். உள்ளூர் செய்தித்தாளின் முதன்மைப் பதிப்பாளரான பிரதிவாதி, 'வாதி நேற்றிரவு தன்னுடைய கல்லூரியில் நடக்கும் இரவு வகுப்பிற்கு செல்வதாகக் கூறிவிட்டு ஒரு பையனுடன் ஓடி விட்டாள்' என்று தனது செய்தித்தாளில் செய்தி வெளியிட்டார். நீதிமன்றம், செய்தி உண்மையற்றது மற்றும் கவனக்குறைவானது மற்றும் பொறுப்பற்ற முறையில் வெளியிடப்பட்டதை விசாரணை மூலம் அறிந்தது. மேலும் பிரதிவாதி வெளியிட்ட செய்தியின் காரணமாக வாதியை அறிந்தவர்கள் மத்தியில் அவர் ஏளனத்திற்கு உள்ளானதையும் அறிந்து பிரதிவாதி ரூபாய் 10,000/- ஐ வாதிக்கு இழப்பீடாக வழங்க ஆணையிட்டது. இவ்வழக்கில் பிரதிவாதி, வாதியைப் பற்றிய செய்தியை காவலரிடம் இருந்து பெற்றுள்ளதை கவனத்தில் கொண்ட நீதிமன்றம், அதன் சரிநிலைத்தன்மையை விசாரிக்காமல் வெளியிட்டதைக் கண்டித்தது. வாதி குறித்து தாம் தீங்கெண்ணம் ஏதும் கொண்டிருக்கவில்லை என்று பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதுபோன்ற வழக்கில் பிரதிவாதி எவருக்கு அவதூறை ஏற்படுத்தினாரோ அவர் பொருட்டு இம்மியளவு தீங்கெண்ணம் கொண்டிராது இருந்தாலும்கூட பொறுப்பாவார் என்பதையும் நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டது.

SHORT NOTES

64. வாய்மொழி அவதூறு அல்லது நிலையா வடிவ அவதூறு / Slander

வாய்மொழி அவதூறு (Slander): அவதூறு எழுத்துக்களின் மூலமாகவோ (அதாவது நிலை வடிவ அவதூறு) அல்லது பேச்சின் மூலமாகவோ (அதாவது வாய்மொழி அவதூறு) செய்யப்படலாம். ஆங்கில இயற்றாச் சட்டத்தின் தொடக்க காலத்தில் 'ஸ்லாண்டர்' (Slander) என்றச் சொல் அனைத்து வகை அவதூறுகளுக்கும் பொருந்தும் ஓர் பொதுவானச் சொல்லாக பயன்படுத்தப்பட்டது. படிப்படியாக, இயற்றாச் சட்டம் 'slander' என்றச் சொல்லின் பொருளை

வாய்மொழி அவதூறு அல்லது நிலையா வடிவ அவதூறை மட்டும் குறிப்பதாக கட்டுப்படுத்தியது. வாய்மொழி அவதூறு என்பது பேசப்படும் சொற்கள் அல்லது காதுகளுக்கு கேட்குமாறு எழுப்பும் சப்தங்கள் அல்லது பார்வைக்கு தெரியுமாறு செய்யப்படும் செய்கைகள் (தலையாட்டுதல், கண் சிமிட்டுதல், உடல் அசைவுகள்) உள்ளிட்ட நிலையற்ற அல்லது தோன்றியதும் மறையக்கூடிய வடிவில் வெளிப்படுத்தும் அவதூறாகும்.

வாய்மொழி அவதூறின் முக்கியக் கூறுகள் (Essentials of Slander): வாய்மொழி அவதூறின் முக்கியக்கூறுகள் பின்வருமாறு:

(i) முறையீடு செய்யப்பட்டுள்ள பொருண்மை அவதூறானதாக இருக்க வேண்டும்;

(ii) அது கண்டிப்பாக பொய்யானதாகவும் மற்றும் சிறப்புரிமை பெறாததாகவும் அல்லது நேரிய மற்றும் நல்லெண்ணத்துடனான கருத்துரையாக இல்லாமலும் இருக்க வேண்டும்;

(iii) அது வாதியைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்;

(iv) அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும்;

(v) அது பிரதிவாதியால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்;

(vi) வாதிக்கு தனிமுறையிலான சேதம் (special damage) ஏற்பட்டிருக்க வேண்டும். (விதிவிலக்கான அதாவது தன்னிலையிலேயே வழக்கிடத்தக்க நான்கு சூழல்கள் தவிர்த்து)

தன்னிலையிலேயே வழக்கிடத்தக்க வாய்மொழி அவதூறுகள் (Slander which are actionable per se): பொதுவாக, வாய்மொழி அவதூறு தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதல்ல; ஆனால் பின்வரும் அசாதாரண நேர்வுகளில் வாய்மொழி அவதூறுக்காக தனிமுறையிலான சேதத்தை மெய்ப்பிக்காமல் தன்னிலையிலேயே வழக்கிட முடியும்:

(1) வாதி ஓர் குற்றச்செயல் புரிந்துள்ளதாகக் கூறுதல்; அவ்வாறு கூறுவது, ஏதேனும் ஓர் குற்றத்தை அதாவது, அக்குற்றம் மெய்ப்பிக்கப்படின் வாதி, தண்டிக்கப்படுவதற்கு ஆளாகக்கூடிய அத்தகைய குற்றத்தை செய்ததாக நேரடியாக குற்றம் சாட்டப்பட்டிருக்க வேண்டும்;

(2) சமூகத்திற்கு தகுதியற்றவராகச் செய்யும் ஓர் தொற்றுநோயால் வாதி பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுதல்; எ-டு: தொழுநோய், பால்வினை நோய் உள்ளிட்டவை.

(3) வாதியின் தொழில், வியாபாரம் அல்லது பதவிக்கு எதிராக கூறுதல்; எ-டு: ஓர் வணிகருக்கு எதிராக நொடிப்பு நிலை அடைந்ததாக, ஓர் வழக்குரைஞருக்கு எதிராக அறிவுக் குறைவானவர் என்று, ஓர் அறுவை சிகிச்சை மருத்துவருக்கு எதிராக தகுதியற்றவர் எனக் கூறுதல்.

(4) ஓர் பெண்ணின் கற்பு நிலைக்கு எதிராகக் கூறுதல்.

மேற்குறிப்பிட்டுள்ள நான்கு விதமான நேர்வுகளில் கூறப்படும் அவதூறு. வாய்மொழி அவதூறாக இருந்தாலும்கூட வாதி தனக்கு உண்மையாக இழப்பு ஏற்பட்டது என்பதை மெய்ப்பிக்கத் தேவையில்லை.

65. நிலை வடிவ அவதூறுக்கும் நிலையா வடிவ அவதூறுக்கும் அல்லது வாய்மொழி அவதூறுக்கும் இடையேயான வேறுபாடுகள் / Distinction between Libel and Slander

நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு (Libel and Slander): அவதூறுத் தீங்கு, நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு என இருவகைப்படும். நிலை வடிவ அவதூறு என்பது கண்களால் காணக்கூடியவாறு நிலையான வடிவத்தில் இருக்கும். எ-டு: எழுத்து, படம், அச்சு, கேலிச்சித்திரம், கொடும்பாவி, உருவச்சிலை உள்ளிட்டவை. நிலையா வடிவ அவதூறு என்பது கண்களால் காணக்கூடியதாகவோ அல்லது காதுகளால் கேட்கக்கூடியதாக இருந்தாலும் நிலையான வடிவில் இல்லாமல் அதாவது தோன்றியதும் மறையக்கூடியதாகும்.

எ-டு: பேசப்படும் சொற்கள், செய்கைகள், சப்தம் எழுப்புதல் உள்ளிட்டவை. இன்றைய சூழலில், ஓர் குறிப்பிட்ட அவதூறான கூற்று நிலை வடிவ அவதூறா அல்லது நிலையா வடிவ அவதூறா என்ற சந்தேகம் சில சமயங்களில் எழுவதுண்டு. எடுத்துக்காட்டாக, அவதூறானக் கூற்றை இசைத்தட்டில் பதிவு செய்வது, கண்களால் காணக்கூடியதாக இல்லாமல் காதுகளால் கேட்கக்கூடியதாக இருந்தாலும் நிலையான வடிவத்தில் இருப்பதால் நிலை வடிவ அவதூறேயாகும். நிலை வடிவ அவதூறு தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும். ஆனால் நிலையா வடிவ அவதூறில் தனிமுறையிலான இழப்பை மெய்ப்பித்தால் மட்டுமே வழக்கிட முடியும். இருப்பினும் இதற்கு நான்கு விதி விலக்குகள் உள்ளன. அதாவது நிலையா வடி அவதூறாக இருந்தாலும் தனி முறையிலான இழப்பை மெய்பிக்காமலேயே இவற்றைக் குறித்து வழக்கிட முடியும். அவை, (1) வாதி குற்றச் செயல் ஒன்றை புரிந்துள்ளதாகக் கூறுதல்; (2) வாதிக்கு தொற்றுநோய் இருப்பதாகக் கூறுதல்; (3) ஒரு நபரை, அவர் சார்ந்திருக்கும் வேலை, தொழிலைச் செய்வதற்கு தகுதியற்றவர், திறமையற்றவர், நேர்மையற்றவர் எனக் கூறுதல்; மற்றும் (4) ஓர் பெண்ணை கற்பு நெறி தவறியவள், ஒழுக்கம் கெட்டவள் எனக் கூறுதல்.

மேற்குறிப்பிட்டுள்ளவை ஆங்கிலச் சட்டத்தின் நிலையாகும். இந்தியச் சட்டத்தில், நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு ஆகிய இரண்டுமே தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும் அதாவது தனிமுறையிலான இழப்பை மெய்ப்பிக்காமலேயே வழக்கிட முடியும்.

நிலை வடிவ அவதூறுக்கும் நிலையா வடிவ அவதூறுக்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between Libel and slander):

(1) தன்மை (Nature): நிலை வடிவ அவதூறில், அவதூறானப் பொருண்மை ஏதேனும் சில நிலையான வடிவத்தில் இருக்கும். எ-டு: எழுதப்பட்ட கட்டுரைகள், அச்சு, படம், கேலிச்சித்திரம், கொடும்பாவி உள்ளிட்டவை. இது கண்களுக்குப் புலப்படக்கூடியவை.

நிலையா வடிவ அவதூறில் அவதூறானப் பொருண்மை சில நிலையற்ற அல்லது தோன்றியதும் மறையக்கூடிய வடிவத்தில் இருக்கும். எ-டு: பேசப்படும் சொற்கள், செய்கைகள், உடல் அசைவுகள் உள்ளிட்டவை.

(2) ஆங்கிலச் சட்டத்தில் உள்ள நிலை (Position in English Law): நிலை வடிவ அவதூறு ஓர் குற்றமாகவும் அதே நேரத்தில் உரிமையியல் தவறாகவும் (Civil wrong - அதாவது தீங்காகவும்) கருதப்படுகிறது.

நிலையா வடிவ அவதூறு உரிமையியல் தீங்காக மட்டுமே கருதப்படுகிறது.

(3) தனிமுறையிலான இழப்பை மெய்ப்பித்தல் (Proof of special damage): நிலை வடிவ அவதூறு தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும். நிலையா வடிவ அவதூறில் சிலக் குறிப்பிட்ட விதி விலக்கான நேர்வுகளில் தவிர மற்ற அனைத்து நேர்வுகளிலும் தனிமுறையிலான இழப்பை மெய்ப்பித்தால் மட்டுமே வழக்கிட முடியும்.

(4) அறியாமை (Innocence): நிலை வடிவ அவதூறில், பேசுபவர் அறியாமல் பேசுவதாக இல்லாமல்கூட இருக்கலாம். நிலையா வடிவ அவதூறில் பேசுபவர் அறியாமல் பேசமாட்டார்.

(5) அமைதிக்குலைவு (Breach of Peace): நிலை வடிவ அவதூறு அமைதிக் குலைவிற்கு வழிவகுக்கும்.

நிலையா வடிவ அவதூறின் விளைவு மிகக் கடுமையானதாக இருக்காது.

(6) காலவரையறை (Period of limitation): ஆங்கில கால வரையறைச் சட்டத்தின்படி, நிலை வடிவ அவதூறுக்காக ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் வழக்கு தொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆங்கில காலவரையறைச் சட்டத்தின்படி, நிலையா வடிவ அவதூறுக்காக இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் வழக்கு தொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள வேறுபாடுகள் ஆங்கில சட்ட நிலையைப் பொறுத்ததாகும். இந்தியாவில் நிலை வடிவ அவதூறு மற்றும் நிலையா வடிவ அவதூறு ஆகிய இரண்டும் சமமாகவே பாவிக்கப்படுகிறது. மேலும் இரண்டுமே தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும் என்பதுடன் இரண்டுமே இந்திய குற்றச்சட்டத்தின்படி குற்றமாக கருதப்படுவதாகும்.

அலகு -IX (b)

நிலம் சொத்து மற்றும் அசைவியல் பொருட்கள் குறித்த தீங்குகள் (Wrongs to Property Land and Chattels)

PART - A/B

47. "ஒரு சொத்தின் மீதான எல்லை மீறல் எவ்வளவு மிகச் சிறியதாக இருந்தாலும் அத்துமீறல் ஆகும்"- விமர்சிக்கவும். ("Every invasion of property, be it ever so minute, is a trespass" - Comment) - Nov-2015.

SN - 66 தொடர்ந்திருக்கும் அத்துமீறல் அல்லது தொடர் அத்துமீறல் / Continuing trespass

விடைச்சுருக்கம்: (அ) சொத்தின்மீதான எல்லை மீறல் அல்லது நிலத்திடல் அத்துமீறல் - அ (i) உடைமை - (ஆ) சொத்தின் மீதான எல்லை மீறல் அல்லது நிலத்திடல் அத்துமீறல் தீங்கு புரியப்படும் முறைகள்

(அ) சொத்தின்மீதான எல்லைமீறல் அல்லது நிலத்திடல் அத்துமீறல் (Invasion of property or trespass to land):

'Trespass' என்ற சொல்லின் வரலாற்றுப்படி, இது 'எல்லையைக் கடந்து' (passing-beyond), 'அத்துமீறல்' (transgression) அல்லது 'தவறு' (wrong) என்பதைக் குறிப்பதாகும். நவீன காலத்தில் இது, சொத்துக்கு எதிரான ஊறு; அதாவது, அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள் மற்றும் நபருக்கு எதிரான ஊறுகள் (தாக்க முனைதல், தாக்குதல் மற்றும் முறையற்ற சிறைவைப்பு) ஆகியவற்றுடன் சேர்த்து அறியப்படுகிறது.

நிலத்திடல் அத்துமீறல் என்பது, ஒருவர் நிலத்தின்மீது கொண்டுள்ள உடைமையில், எவ்வித நியாயமான காரணமும் இன்றி மற்றொருவர் குறுக்கிடுவதாகும். ஆங்கிலச் சட்டத்தின்படி, ஒரு சொத்தின் மீதான எல்லைமீறல் எவ்வளவு மிகச்சிறியதாக இருந்தாலும் அத்துமீறலாகும் **[Entick Vs Carrington, (1765) 19 St Tr 1066].** எடுத்துக்காட்டாக, ஒருவருக்குச் சொந்தமான கட்டிடத்தின் வெளிப்புற சுற்றுச்சுவரின்மீது கை வைப்பது, துணியை உலர்த்துவது, சிறிய ஆணி அடிப்பது போன்ற செயல்கள் அத்துமீறலாகும். சொத்தின்மீதான அத்துமீறல் அல்லது நிலத்திடல் அத்துமீறல் என்பது நேரடியாகவோ அல்லது கொள்நிலையானதாகவோ (constructive) இருக்கலாம். மற்றொருவரின் நிலத்தினில் நியாயமற்ற குறுக்கீடு செய்தால் அத்துமீறல் தீங்கிற்கு பொறுப்பாக நேரிடும். நியாயமற்ற குறுக்கீடு செய்தவர் அறியாமல் செய்தாரா அல்லது அறிந்தே செய்தாரா என்பது பொருட்படுத்தப்பட மாட்டாது. சட்டப்படி நியாயப்படுத்தும்

காரணம் எதுவுமின்றி மிகச்சிறிய அளவில் குறுக்கிட்டிருந்தாலும், அது தனிமுறையிலான சேதத்தை மெய்ப்பிக்காமலேயே வழக்கிடத்தக்க ஓர் தீங்காகும்.

Ellis Vs Loftus Iron Co., 1874 LR 10 CP 10., என்ற வழக்கில் 'சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் எதுவுமின்றி மற்றொருவரின் நிலத்தில் ஒரு அடி எடுத்து வைத்தாலும்கூட, சட்டம் அதனை அரை மைல் தூரம் நடந்து சென்றாகக் கருதும்' என்று இவ்வழக்கில் கூறப்பட்டது. சொத்தின்மீது எல்லைமீறல் புரிபவருக்கு எதிராக அச்சொத்தை உடைமையில் கொண்டிருப்பவரே வழக்கிட முடியும். சொத்தின் உரிமையாளராகவே இருந்தாலும்கூட அவர் அச்சொத்தின் உடைமையில் இல்லாவிடில், அத்துமீறலுக்கு எதிராக வழக்கிட முடியாது. எனவே அத்துமீறல் என்பது சொத்துரிமை (ownership) அல்லாது உடைமை (possession) உரிமைக்கு எதிராக செய்யப்படும் தீங்கு என்பதால் உடைமை என்றக் காரணி அத்துமீறல் குறித்து முக்கியத்துவம் பெறுகிறது. ஆகவே 'உடைமை' என்றச் சொல்லின் பொருளை அறிந்து கொள்வது இங்கு அவசியமாகிறது.

அ(i) உடைமை (Possession): உடைமை என்பது சொத்துரிமையின் வெளிப்புற அடையாளமாகும். உடைமை என்பது, உடைமை செயல் (corpus possidendi) மற்றும் உடைமை எண்ணம் (animus possidendi) என்ற இரு அடிப்படைக் கூறுகளைக் கொண்டது. இவற்றுள் ஏதேனும் ஒன்று இருந்து மற்றொன்று இல்லையேல் அது உடைமை ஆகாது. உடைமையின் செயல் உடைமையின் புறநிலை உறுப்பு (objective element) அல்லது உடற்சார்ந்த கூறு (physical element) ஆகும். உடைமைத்தொடர்பாக உடல்வலிமை அல்லது உடல் ரீதியிலான தொடர்பு இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் மட்டுமே மற்றவர்கள் அப்பொருள் (இங்கு நிலம்) குறித்து இடையூறு விளைவிக்கக்கூடாது என்கிற நியாயமான எண்ணத்திற்கு உட்படுவர். இங்கு மனிதனின் உடல்வலிமைமூலம் அல்லது உடல்ரீதியாக அந்நிலத்துடன் கொண்டிருக்கும் தொடர்பையே உடைமையின் செயல் எனக் குறிப்பிடப்படுகிறது. உடைமை எண்ணம் என்பது, உடைமையின் அகநிலை உறுப்பு (subjective element) அல்லது மனநிலை சார்ந்த உறுப்பாகும் (mental element). ஒரு நபர் நிலத்தை தன்வசம் கொண்டிருந்தால் மட்டுமே போதாது; மாறாக, அதனை மற்றவர்களிடம் இருந்து விலக்கி, தனிமுறையில் பயன்படுத்தும், துய்க்கும் எண்ணத்தையும் கொண்டிருக்கவேண்டும். இது மற்றவர்களை தன் உடைமை உரிமைக்கு இடையூறு செய்யாவண்ணம் விலக்கும் எண்ணத்தைக் குறிப்பிடுகிறது. உடைமையின் இவ்விரண்டு காரணிகளே உடைமை உரிமையை முழுமையாக்குகிறது.

உடைமை, நிகழ்மை நிலை உடைமை (defacto possession ie., possession in fact) மற்றும் சட்ட நிலை உடைமை (dejure possession ie., possession in law) என இருவகைப்படும். எசமானரின் சார்பாக நிலத்தைக் கொண்டிருக்கும் பணியாளரின் உடைமை, நிகழ்நிலை உடைமையாகும்; ஆனால் எசமானரின் உடைமை சட்டநிலை உடைமையாகும். இவைகளுக்கு இடையேயான வேறுபாடு, உடைமையைக் கொண்டிருக்கும் நபரின் மனநிலையைச்

சார்ந்ததாகும். பணியாளின் எண்ணம், எசமானரின் சார்பாக நிலத்தின் உடைமையைக் கொண்டிருப்பதும், வேறு எவரும் நிலத்தின் உடைமையில் குறுக்கிடாதவாறு பாதுகாப்பதும் மற்றும் உடைமையில் குறுக்கிடுபவர்மீது வழக்குத் தொடருவதும் ஆகும். எசமானரின் எண்ணம், நிலத்தின் உடைமையில் பிறர் குறுக்கிடுவதை விலக்குவதும் மற்றும் அச்செயல் தம் சார்பாக செய்யப்படுவதுமாகும். இதேபோன்று உடைமைக்கான உரிமைக்கும் (right to possession) மற்றும் உடைமையைப் பெறும் உரிமைக்கும் (right of possession) இடையே வேறுபாடு உள்ளது. எடுத்துக்காட்டாக ஓர் நிலக்கிழார் (landlord) தனது ஐந்து ஏக்கர் வேளாண் நிலத்தை விவசாயி ஒருவருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதாகக் கொள்வோம். இங்கு விவசாயி பெறும் உடைமை ஐந்து ஆண்டுகளுக்கான உடைமை உரிமை மட்டுமேயாகும்; மாறாக, நிலக்கிழாருக்கு உடைமையைப் பெறும் உரிமையை அதாவது, ஐந்து ஆண்டு குத்தகைக் காலம் முடிந்தபின்னர் உடைமையைப் பெறும் அத்தகைய உரிமையைக் கொண்டிருப்பார். எவ்வாறிருப்பினும், குத்தகைக் காலமான ஐந்து ஆண்டுகளில் அந்நிலத்தில் எவரேனும் அத்துமீறி நுழைந்தால் உடைமைக்கான உரிமையைக் கொண்டிருக்கும் விவசாயி மட்டுமே அத்துமீறலுக்கான வழக்கிட முடியுமே தவிர, உடைமையைப் பெறும் உரிமையைக் கொண்டிருக்கும் நிலக்கிழார் வழக்கு தொடர முடியாது. இவ்வாறு அத்துமீறல் தீங்கில் உடைமை முக்கிய பங்கு வகிக்கிறது.

(ஆ) சொத்தின் எல்லைமீறல் அல்லது நிலத்திடல் அத்துமீறல் புரியப்படும் முறைகள் (Ways of invasion of property or ways of trespass to land):

ஒரு சொத்தின்மீதான எல்லைமீறல் அல்லது அத்துமீறல் என்பதாகுவதற்கு 'நுழைதல்' (entry) முதன் முக்கியக்கூறாகும். நுழைதல் நேரடியானதாகவோ அல்லது கொள்நிலையனதாகவோ (அதாவது நபர் நுழையாமல் பொருள் எதனையேனும் மற்றொருவரின் நிலத்தினில் வைப்பது அல்லது ஒருவரின் விலங்குகள் நுழைவதையும், நபர் நுழைந்ததாகவே கொள்ள வேண்டும் என்கிற நிலை) இருக்கலாம். இதன் அடிப்படையில் அத்துமீறல் பின்வரும் முறைகளில் மற்றும் வகைகளில் புரியப்படலாம்.

ஆ(1) தவறான முறையின் மூலம் அத்துமீறி நுழைதல் (Trespass by wrongful entry): பொதுவாக அத்துமீறல் பெரும்பாலும் புரியப்படும் முறை, வாதியின் உடைமையில் உள்ள நிலத்தினுள் பிரதிவாதி முறையற்ற அல்லது தவறான முறையில் நுழைவதாகும். அத்துமீறல் மிகச்சிறிய அளவாக அதாவது மற்றொருவர் நிலத்தில் ஒரு அடி எடுத்து வைப்பது, சுற்றுச்சுவரின்மீது உட்காருவது, சன்னல், கதவு வழியாக கை நீட்டுவது போன்றவையும்கூட அத்துமீறலேயகும். ஏனெனில், ஒவ்வொரு மனிதனின் நிலமும், சொத்தும் மற்றவர்களின் நிலம், சொத்திலிருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளதாக சட்டம் கருதுகிறது. இரு நபர்களின் சொத்துக்கள் மற்றும் நிலங்களுக்கு இடையே சுற்றுச்சுவர், வேலி அல்லது தடுப்புகள் போன்றவை இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட கண்களுக்குத் தெரியாத ஓர் எல்லை இருப்பதாக சட்டம் கருதுகிறது. **Wetripp Vs**

Bedlock, (1938) 2 All ER 779., என்ற வழக்கில், மற்றொருவரின் கட்டிடத்தின்மீது ஆதாரமாக ஏணியை சாய்த்து வைப்பதும் ஓர் அத்துமீறலே எனக் குறிப்பிடப்பட்டது. மேலும், மேல் நிலத்தை (surface soil) சொந்தமாகக் கொண்டிருப்பவரே அடி நிலத்திற்கும் (sub-soil) சொந்தக்காரர் ஆவார். எனவே அடிநிலத்தினுள், அது எத்தகைய ஆழத்தில் இருந்தாலும், நுழைவதும்கூட வழக்கிடத்தக்க ஓர் அத்துமீறலேயாகும். மற்றொருவருக்குச் சொந்தமான சுவற்றில் ஆணி அடிப்பதும் ஓர் அத்துமீறலே என்று **Lawrence Vs Obee, (1815) 1 Stark 22.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆ(2) நிலத்தில் தொடர்ந்திருத்தலின் மூலமான அத்துமீறல் (Trespass by remaining on land): மற்றொருவரின் உடைமையில் உள்ள நிலத்தினுள் சட்டப்படியாக நுழைந்த நபர், அவரின் சட்டப்படியான நுழைதலின் நோக்கம் அல்லது உரிமை முடிவுற்ற பின்னரும், அந்நிலத்தை விட்டு வெளியேறாமல் தொடர்ந்து அந்நிலத்தில் இருந்தால் அது அத்துமீறலாகும். இவ்வாறு, உடைமையில் இருப்பவரின் அனுமதியுடன் உள்ளே நுழையும் நபர், உடைமையில் இருப்பவரின் வேண்டுகோளுக்குப் பின்னரும் வெளியேறத் தவறுவாராயின் அத்துமீறலுக்குப் பொறுப்பாவார். குத்தகை உரிமம் பெற்றவரின் உரிமத்தை முடிவுக்கு கொண்டு வந்த பின் (termination) அல்லது குத்தகைக்காலம் முடிவுற்றப்பின், உரிமம் பெற்றவர் (குத்தகை பெற்றவர்) நிலத்தை விட்டு வெளியேறாமல் இருப்பின் உரிமம் அளித்தவர் அவருக்கு எதிராக அத்துமீறல் வழக்கு தொடர முடியும் என்று **Minister of Health Vs Bellotti, (1944) KB 298.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆ(3) பொருள்களை நிலத்தில் வைப்பதன் மூலமான அத்துமீறல் (Trespass by placing things on the earth): மற்றொருவரின் எல்லையை மீறாமலேயே எந்தவொரு பருப்பொருளையும் (physical object) அல்லது அசைவியல் பொருளையும் (chattel), அவரின் எல்லையை கடக்குமாறு அல்லது தொடுமாறுச் செய்வது, வைப்பதும் அத்துமீறலேயாகும். எடுத்துக்காட்டாக மற்றொருவரின் சுவற்றில் ஆணி அடிப்பது, சுவரைத் தொடுமாறு குப்பைக் கூளங்களை குவிப்பது, நிலத்திற்கு மேல் துப்பாக்கிக் குண்டு செல்லுமாறு சுடுவது, தண்ணீரை ஊற்றுவதும்கூட அத்துமீறலாகும். **South Port Corpn. Vs ESSO Petroleum, (1954) 2 QB 182.,** என்ற வழக்கில், கடல் அலைகள் மற்றும் காற்று போன்ற இயற்கை ஆற்றல்களின் மூலம் எண்ணெயை வாதியின் நிலத்திற்கு சென்று சேருமாறு பரவவிடுவதும் அத்துமீறல் தீங்கு புரிந்ததாகும் என்று குறிப்பிடப்பட்டது. மேலும் மற்றொருவரின் நிலத்தில் புகுமாறு, பரவுமாறு செய்யப்படும் பொருள் தொட்டுணர முடியாததாக (intangible) வாயு அல்லது கண்களுக்குப் புலப்படாத ஆவி, புகை போன்றவையாக இருந்தாலும்கூட அத்துமீறல் என்பதாக அமையும் என்று நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஆ(4) விலங்குகளின் மூலமான அத்துமீறல் (Trespass by animals): மனிதர்களுக்குச் சொந்தமான கால்நடைகள், உணவிற்காக வளர்க்கப்படும்

கோழி, வாத்து போன்ற பறவைகள் மற்றவர்களது நிலத்தில் அத்துமீறி நுழைவது. அவைகளின் உரிமையாளர்கள் அத்துமீறி நுழைவதற்கு சமமாகும். எனவே அத்தகைய நபர்கள் அத்துமீறலுக்கும் மற்றும் அவைகள் ஏற்படுத்திய இழப்பிற்கும் பொறுப்பாவார்கள். இருப்பினும், அத்தகைய விலங்கு அல்லது பறவைகளின் உரிமையாளர், எவரின் நிலத்தில் தனது விலங்கு அல்லது பறவை அத்துமீறி நுழைந்ததோ, அத்தகைய நபர் தனது நிலத்தை முறையாக வேலியிட்டு பாதுகாக்கும் கடமை கொண்டுள்ளார் என்பதையும் அத்தகைய கடமையை நிறைவேற்ற தவறிவிட்டார் என்பதையும் மெய்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் பொறுப்பாவார். **Ellis Vs Loftus Iron & Co., (1874) LR 10 CP 10.,** என்ற வழக்கில் பிரதிவாதிகளின் குதிரை, வேலியின் உட்புறமாக இருந்த வாதியின் பெண் குதிரையை உதைத்தும் கடித்தும் காயமேற்படுத்தியது. நீதிமன்றம், பிரதிவாதிகள் அத்துமீறல் தீங்கிற்கு பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

ஆ(5) அடிமுதல் அத்துமீறல் (Trespass ab initio): ஒரு நபர், மற்றொருவரது நிலம் அல்லது கட்டிடத்தினுள் நுழைவதற்கு சட்டப்படியான உரிமையைக் கொண்டிருந்து, உள்ளே நுழைந்த பின் சட்டவிரோதச் செயல் ஏதேனும் செய்வாராயின், அவர் அந்நிலம் அல்லது கட்டிடத்தினுள் நுழைந்த ஆரம்பம் முதலே அத்துமீறல் புரிந்தவராவார். [மேலும் விளக்கமாக காண்பதற்கு வினா. எண் 50-க்கான விடையில் காண்க].

ஆ(6) தொடர்ந்திருக்கும் அத்துமீறல் (Continuing trespass): ஒருவர், மற்றொருவரின் நிலத்தில் அல்லது கட்டிடத்தில் அத்துமீறி நுழைந்து, அங்கேயே தொடர்ந்து இருக்கும்வரை, தொடர்ந்து அத்துமீறிக் கொண்டிருப்பவராகவே கருதப்படுவார். மற்றொருவரின் நிலத்தில் அல்லது கட்டிடத்தில் அனுமதியின்றி ஏதேனும் பொருளை வைப்பதும் அத்துமீறிய செயலாகும் என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம். அத்தகைய அத்துமீறி வைக்கப்பட்ட பொருள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படும் வரை அத்துமீறல் தொடர்ந்திருப்பதாகவே கருதப்படும். மேலும் அப்பொருள் அங்கிருந்து அகற்றப்படும் வரையிலான ஒவ்வொரு நாளும் அத்துமீறல் புரியப்படுவதாகவே சட்டம் கருதும். எனவே வாதிக்கு அப்பொருள் அங்கிருந்து அகற்றப்படும்வரை ஒவ்வொரு நாளும் வழக்குமூலம் (cause of action) தொடர்ந்து கொண்டே இருக்கும். **Hudson Vs Nicholson, (1839) 5 M&W 437.,** என்ற வழக்கில் பிரதிவாதி நியாயமற்ற முறையில் தனது வீட்டைத் தாங்கி நிற்பதற்கு ஆதரவாக (to support) நீளமான மரத்துண்டுகளை அருகிலுள்ள நிலத்தில் ஊன்றி, அண்டை நிலத்து உரிமையாளருக்கு இடையூறு விளைவித்தார். அதன்பின்னர் அந்நிலத்தை வாதி விலைக்கு வாங்கினார். வாதி, பிரதிவாதிக்கு எதிராக தொடர்ந்த அத்துமீறல் வழக்கில், பிரதிவாதி தொடர்ந்து மரத்துண்டுகளை அங்கு வைத்திருப்பதால் பொறுப்பாவார் என்றும், நிலத்தை மாற்றளிப்பு பெற்றவரும்கூட தொடர்ந்திருக்கும் அத்துமீறலுக்காக வழக்கிட முடியும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(7) நெடுஞ்சாலைகளில் அத்துமீறல் (Trespass on highways): நபர் ஒருவரின் நிலம், நெடுஞ்சாலையைத் தாண்டி பரந்திருப்பின், அந்நிலத்தின்

மேற்பரப்பை அவர் சொந்தமாகக் ஃகொண்டிருப்பதாக அனுமானிக்கப்படும். இருப்பினும் அந்நிலத்தை ஒருவர் நியாயமற்ற மற்றும் காரணமற்ற முறையில் பயன்படுத்தும்போது மட்டுமே வழக்கிட முடியும். இத்தகைய வழக்குகளில், பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு உள்ளதை வாதியே மெய்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி டிப்ளாக், **Fowler Vs Lanning, (1959) 1 QB 426.**, என்ற வழக்கில் குறிப்பிட்டார். **Harrison Vs Duke of Rutland, (1893) 1 QB 142.**, என்ற வழக்கில், பொதுமக்கள் நெடுஞ்சாலையை கடந்து செல்லும் உரிமையைக் கொண்டுள்ளனர் என்றும் அதனை நியாயமாகப் பயன்படுத்தும்வரை அது அத்துமீறலாகாது என்றும் ஆனால் அதனை நியாயமற்ற முறையில் பயன்படுத்துபவர் அத்துமீறலுக்கு உள்ளாகுவர் என்றும் குறிப்பிடப்பட்டது. **Olga Tellis Vs Bombay Municipal Corporation, (1985) 3 SCC 545.**, என்ற வழக்கில், பொதுசாலைகள், பொதுமக்களின் போக்குவரத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது என்றும் அதனை தனிப்பட்ட நபர்கள் உறைவிடமாகப் பயன்படுத்த முடியாது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

ஆ(8) காற்று வெளியில் அத்துமீறல் (Trespass in airspace): நிலப்பரப்பின் மீதான காற்று வெளித்தொடர்பான அத்துமீறல், 'நிலப்பரப்பு எவருடையதோ, அதன்மீதான மேற்பரப்பும் அவருடையதே' ('whose is the soil his is also that which is above it') எனும் மூதுரையின் அடிப்படையில் ஆளுமை செய்யப்படுகிறது. இருப்பினும், இம்மூதுரை, நிலப்பரப்பின் மீதான முடிவற்ற பரப்பு முழுமையின் மீதும் (infinite space) உரிமை கொண்டிருப்பதை குறிப்பதாகாது. இது தனிநபர் உரிமைக்கு பயன்படுத்தத்தக்க அத்தகைய காற்று வெளிப் பரப்பை மட்டுமே குறிக்கும். காற்று வெளிப்பரப்பின் மீதான அத்துமீறல் ஆகாய ஊர்திகளின் மூலமாகவோ அல்லது வேறு முறைகளிலோ செய்யப்படலாம். **Gifford Vs Dent, 1926 WN 336.**, என்ற வழக்கில், கட்டிடத்தின் மேல் தளத்தில் இருந்த வாடகைதாரர், வளாகத்தின் தன்னுடைய பகுதியின்மீது அலங்கார அடையாளம் (ornamental sign) ஒன்றை பொருத்தினார். அது மற்றொரு வாடகைதாரரின் முன்முற்றத்தில் (fore court) நீட்டிக் கொண்டிருந்தது. நீதிமன்றம் அதனை ஓர் அத்துமீறலுக்கான வழக்காகும் என்பதைக் குறிப்பிட்டது.

ஆகாய ஊர்திகளின் அத்துமீறல் குறித்து இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளது. இங்கிலாந்தில், 1949-ஆம் ஆண்டின் குடிமையியல் வான்வழிப் பயணச் சட்டம் (Civil Aviation Act, 1949), பிரிவு-40, எந்தவொரு சொத்தின் மீதும் நியாயமான உயரத்தில் பறக்கும் வானூர்தி குறித்து அத்துமீறலுக்காகவோ அல்லது தொல்லைக்காகவோ வழக்கிட முடியாது என்பதைக் குறிப்பிடுகிறது. இந்தியாவில், வானூர்திச் சட்டம், 1934 (Aircraft Act, 1934) அத்துடனான வானூர்தி திருத்தச் சட்டம், 1960, ஒரு நபர் வேண்டுமென்றே எந்தவொரு நபருக்கும் அல்லது அவரது சொத்துக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் வகையில் வானூர்தி இயக்குவதை ஓர் தண்டனைக்குரிய குற்றமாகக் குறிப்பிடுகிறது. ஆனால் இது ஆங்கிலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று தீங்கியல் பொறுப்புடைமைக் குறித்த வகையங்கள் எதனையும்

கொண்டிருக்கவில்லை. எனவே தற்போது நில உரிமையாளர்களின் காற்று வெளிப்பரப்பிற்கான உரிமை, நிலத்தின் பயன்பாடு மற்றும் துய்த்தலுக்கு அவசியமான அத்தகைய உயரத்திற்கு மட்டுமே நீட்டிக்கப்படும் என்பது நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

48. நிலத்திடல் அத்துமீறல் என்ற தீங்கை அதற்குண்டான எதிர்வாதங்களுடன் விளக்குக. (Explain the tort of trespass to land with defences to it) - May-2019, May-2012.

விடைச்சுருக்கம்: (அ) நிலத்திடல் அத்துமீறல் - (ஆ) நிலத்திடல் அத்துமீறல் தீங்கிற்கான எதிர்வாதங்கள் - (1) நீளுடைமை - (2) ஒப்புதல் - (3) சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரம் - (4) அவசியத்தின் காரணமான செயல் - (5) வசதியுரிமை

(அ) நிலத்திடல் அத்துமீறல் (Trespass to land):

['நிலத்திடல் அத்துமீறல்' என்பதும் 'சொத்தின் மீதான எல்லைமீறல்' என்பதும் ஒரே பொருளைக் குறிப்பிடுவனவாகும். எனவே இங்கு முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு (அ)-வில் உள்ளதைக் குறிப்பிடவும்].

(ஆ) நிலத்திடல் அத்துமீறல் தீங்கிற்கான எதிர்வாதங்கள் (Defences to the tort of trespass to land):

நிலத்திடல் அத்துமீறல் தீங்கிற்காக பிரதிவாதி பின்வரும் எதிர்வாதங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்வாதங்களை சிறப்பாக முன்வைத்து அத்துமீறல் தீங்கிலிருந்து விடுபடலாம்.

(1) நீளுடைமை அல்லது நீண்டகால அனுபோக உரிமை (Prescription): நீளுடைமை என்பது சட்டத்தால் குறிப்பிடப்பட்ட காலம் மற்றும் பயன்பாட்டின் மூலமாக பெறப்படும் உரிமை மூலமாகும். சொத்தினை சொந்தமாகப் பெறும் முறைகளில் இதுவும் ஒன்றாகும். நீண்டகாலம் அமைதியான முறையில் தொடர்ச்சியாக ஓர் சொத்தை துய்ப்பது (enjoyment) பிரதிவாதிக்கு நீண்டகால அனுபோக உரிமையை அளிக்கிறது. எந்தவொரு நபரும் ஆரம்பத்தில் ஓர் சொத்தின் உடைமையை தவறாகப் பெற்றிருந்தாலும், அதனை அமைதியான முறையில் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் துய்த்த பின்னர் நீண்டகால அனுபோக உரிமை தனக்கிருப்பதாக வாதிடலாம். இங்கு அமைதியான முறையில் துய்ப்பது என்பது, அச்சொத்தின் உண்மையான உரிமையாளரின் எதிர்ப்பின்றி துய்ப்பதைக் குறிக்கும். நீளுடைமையை மெய்ப்பிக்கும் சுமை பிரதிவாதியையேச் சாரும்.

(2) ஒப்புதல் (அனுமதி மற்றும் உரிமம்) [Consent (Leave and Licence)]: ஓர் நிலத்தினில் நுழைவதற்கான ஒப்புதலே உரிமம் என அழைக்கப்படுகிறது. உரிமம் என்பது ஓர் உடன்படிக்கையாகும். எனவே இத்தகைய உடன்படிக்கையை செய்து கொண்டுள்ள உரிமம் பெற்ற நபர், உரிமம்

அளித்தவரின் நிலத்தினுள் நுழைவது சட்டப்படியானதே ஆகும். எ-டு: நிலத்தின் உரிமையாளர், நிலத்திலுள்ள மரங்களை வெட்டுவதற்கு அளிக்கும் உரிமம், நிலத்திலுள்ள குளத்தில் மீன் பிடிப்பதற்காக அளிக்கும் உரிமம் போன்றவைகள். ஓர் உரிமம், ஒரு செயல் செய்வதை அதாவது, உரிமம் பெறாமல் அத்தகைய செயலைச் செய்வது சட்டவிரோத செயலாகக்கூடிய செயலை சட்டப்படியான செயலாகச் செய்கிறது. உரிமம் பெற்றவர் சிலக் குறிப்பிட்ட செயல்களைச் செய்யும்போது அதனை தவறானச் செயல்களாகக் கருதி, அத்தகைய உரிமத்தை தன்னிச்சையாக இடைநிறுத்தம் செய்யக்கூடிய உரிமையை உரிமம் அளித்தவர் கொண்டுள்ளார். எ-டு: நிலத்திலுள்ள சிலக் குறிப்பிட்ட மரங்களை வெட்டுவதற்காக உரிமம் பெற்றவர், அந்நிலத்தில் வேட்டையாடுதல், பொறுப்பற்ற முறையில் பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்துதல், உரிமம் வழங்கப்படாத செயல்களைச் செய்தல். உரிமம் என்பது வெளிப்படையானதாகவோ அல்லது உட்கிடையானதாகவோ இருக்கலாம். வீட்டிற்குள் விருந்தினர்கள் வருகை புரிதல், திரைப்படத்தைக் காண்பதற்காக அனுமதிச்சீட்டை கட்டணம் செலுத்தி வாங்குதல் போன்றவை வெளிப்படையான உரிமத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும். கடையினுள் வாடிக்கையாளர்கள் நுழைதல், வாதியின் நிலத்தை வழக்கமாக ஓர் குறுக்கு வழியாக பயன்படுத்துதல் போன்றவை உட்கிடையான உரிமத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும். **Hurst Vs Picture Theatres Ltd., (1915) 1 KB 1.,** என்ற வழக்கில் உரிய கட்டணத்தை செலுத்தி அனுமதிச்சீட்டைப் பெற்று திரைப்படத்தை காண்பதற்காக அமர்ந்திருந்த வாதியை, அவர் அனுமதிச் சீட்டு பெறாமல் அமர்ந்திருக்கிறார் என்கிற தவறான எண்ணத்தின் அடிப்படையில் பிரதிவாதியால் திரையரங்கில் இருந்து வெளியேற்றப்பட்டார். நீதிமன்றம், வாதிக்கு கணிசமான இழப்பீட்டை செலுத்துவதற்கு பிரதிவாதி பொறுப்பு கொண்டுள்ளார் என்று தீர்ப்பளித்தது.

(3) சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரம் (Authority conferred by law): ஒருவருக்கு மற்றொரு நபரின் நிலத்தினுள் நுழைவதற்கான உரிமை சட்டத்தால் வழங்ப்பட்டிருக்கும்போது, அத்தகைய உரிமையை செயல்படுத்துவதற்காக நிலத்தினுள் நுழையும் நபருக்கு அது அத்துமீறலுக்கான வழக்கில் ஓர் முழுமையான எதிர்வாதமாகும். இத்தகைய உரிமைகளுக்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

(i) சட்ட நடைமுறையை நிறைவேற்றல் (Execution of legal process): நபர்களை கைது செய்வதற்கான கைது ஆணையை (arrest warrant) நிறைவேற்றுபவர், சோதனை ஆணையை (search warrant) நிறைவேற்றுபவர், பற்றுகைத் தீர்ப்பாணையை (attached decree) நிறைவேற்றுபவர் போன்றோர் மற்றவர்களின் நிலத்தினுள் நுழைந்து மேற்குறிப்பிட்ட ஆணை அல்லது தீர்ப்பாணையை நிறைவேற்றுதல்.

(ii) குற்றத்தை தடுத்தல் (Prevention of crime): அமைதிக்குலைவை (breach of peace) தடுப்பதற்காக ஓர் காவல் அலுவலர்

மற்றொருவரின் வளாகத்தினுள் நுழையலாம். இருப்பினும், சட்ட நடைமுறையை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள அலுவலர், சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறாமலிருப்பதும் மற்றும் சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை கண்டிப்பாக பின்பற்றுவதும் அவசியமாகும்.

(iii) பொருள்களை மீண்டும் எடுத்தல் (Retaking of goods): 'A' என்பவர் தனக்கு சொந்தமான நிலத்தில் 'B'-யின் பொருள்களை/பொருளை வைத்தால், 'B' அவரின் ('A'-ன்) நிலத்தில் நுழைந்து அதனை மீண்டும் எடுத்துக் கொள்ளலாம் அல்லது எவரேனும் மூன்றாவது நபர் 'B'-யின் பொருளை 'A'-ன் நிலத்தில் வைத்தால் 'B' அந்நிலத்தினுள் நுழைந்து பொருளை மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

(4) அவசியத்தின் காரணமான செயல் (Act of necessity): மற்றொருவரின் நிலத்தினுள் நுழைந்தது அவசியத்தின் காரணமாக என்பதன் அடிப்படையில் நியாயப்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, தீப்பற்றி எரிவதை அணைப்பதற்காகவும் மற்றும் அத்தீ பக்கத்திலுள்ள தனது வீட்டிற்கு பரவாமல் தடுப்பதற்காகவும் 'A' என்பவர் 'B' என்பவரின் நிலத்தினுள் அவரது அனுமதியின்றி நுழையலாம். இங்கு 'A' அத்துமீறியவர் ஆகார். இதேபோன்று நெடுஞ்சாலையில் பயணிக்கும் ஒருவர், திடீரென அல்லது தற்காலிகமாக ஏற்பட்ட ஒரு காரணத்தினால், அச்சாலையில் தடுப்புகள் வைத்து தடுக்கப்பட்டிருப்பின், அச்சாலையை ஒட்டியுள்ள ஒருவரின் நிலத்தைக் கடந்து செல்வது அத்துமீறலாகாது.

(5) வசதியுரிமை (Easement): எழுதப்பட்ட ஆவணத்தின் மூலமாக அல்லது நீண்டகால அனுபோக உரிமையின் மூலமாக வாதியின் நிலத்தை வழித்தடமாகப் பயன்படுத்துவதற்கு உரிமையைப் பெற்றிருக்கும் பிரதிவாதி, அதனை அத்துமீறலுக்கான எதிர்வாதமாக பயன்படுத்தலாம். இருப்பினும் வாதியின் நிலத்தின்மீது தனக்கிருக்கும் உரிமையை பிரதிவாதியே மெய்ப்பிக்க வேண்டும்.

---

49. "ஒரு சொத்தின் மீதான எல்லைமீறல் எவ்வளவு மிகச் சிறியதாக இருந்தாலும் அத்துமீறல் ஆகும்"-விமர்சிக்க. தீங்குற்ற நபருக்கான தீர்வழிகள் யாவை? ("Every invasion of property, be it ever so minute, is a trespass" - Comment. What are the remedies to the affected person?) - Nov-2016.

SN - 67 சேதம் விளைவித்ததைக் கைப்பற்றுதல் அல்லது அத்துமீறியவற்றைக் கைப்பற்றுதல் / Distress damage feasant

விடைச்சுருக்கம்: (அ) சொத்தின்மீதான எல்லைமீறல் - (ஆ) தீங்குற்ற நபருக்கான தீர்வழிகள்

(அ) சொத்தின்மீதான எல்லைமீறல் (Invasion of property):

(வினா எண் 47-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க. பக்கம் எண் 224)

(ஆ) தீங்குற்ற நபருக்கான தீர்வுகள் (Remedies to the affected persons):

சொத்தின்மீதான எல்லைமீறல் தீங்கிற்கு பொதுவாக (i) எல்லை மீறியவருக்கு எதிராக நீதமன்றத்தில் வழக்கு தொடருவது; (ii) சொத்தினைக் காத்துக் கொள்ளல்; மற்றும் (iii) எல்லை மீறியவரை வெளியேற்றுதல் போன்ற தீர்வழிகளை நாடலாம். இவைகள் தவிர பின்வருபவைகளும் சொத்தின்மீதான எல்லை மீறலுக்குள்ள தீர்வழியாகும்.

(1) மீண்டும் நுழைவதற்கான உரிமை (Right to re-entry): சொத்தின் உடைமையைப் பெறுவதற்கு தகுதியான நபர், அமைதியான முறையில் மீண்டும் நுழையலாம். மீண்டும் நுழையலாம் என்பது மீண்டும் உடைமையைப் பெறலாம் என்பதைக் குறிக்கும். அத்துமீறியவரை வெளியேற்றுவது, அத்தகைய உரிமை கொண்ட நபரால் செய்யப்படும்போது தவறான செயலாகாது. **Hemmings Vs Stoke Pages Golf Club, (1920) 1 KB 720.,** என்ற வழக்கில், வாதி, பிரதிவாதிக்குச் சொந்தமான குடிசையின் வாடகைதாரர் ஆவார். பிரதிவாதி பணியிலிருந்து பணி முடிப்புச் செய்யப்பட்டதால் (termination), வாதியின் உடைமையில் இருந்த தன்னுடைய குடிசையின் உடைமையை மீண்டும் பெற விரும்பினார். அந்நோக்கத்திற்காக வாதிக்கு ஒரு அறிவிப்பும் அளித்திருந்தார். ஆனால் வாதி குடிசையை காலி செய்ய மறுத்தார். அதன் பின்னர் பிரதிவாதி குடிசையினுள் நுழைந்து நியாயமான பலத்தை பயன்படுத்தி அங்கிருந்த தட்டுமுட்டு சாமான்களை அப்புறப்படுத்தி வாதியையும் வெளியேற்றினார். வாதி, பிரதிவாதிக்கு எதிராக தாக்க முனைதல், தாக்குதல் மற்றும் அத்துமீறல் புரிந்ததாக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதி மீண்டும் நுழையும் அவரின் உரிமையை செயல்படுத்தியதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(2) வெளியேற்றப்பட்டதற்காக வழக்கு தொடுத்தல் அல்லது நிலத்தின் உடைமையை மீட்டல் (Action for ejectment or Recovery of land): 1963-ஆம் ஆண்டின் குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் பிரிவு-6-ன்படி, உடைமையில் இருக்கும் ஒருவரை நிலத்தைவிட்டு வெளியேற்றினால், அவரோ அல்லது அவர் மூலமாக உரிமை கொண்டிருப்பவர்களோ, நீதிமன்றத்தில் வழக்கிட்டு உடைமையை மீண்டும் பெறலாம். இப்பிரிவின்கீழ் ஒருவர் வழக்கு தொடர இரண்டு பொருண்மைகளை மெய்ப்பிக்க வேண்டும். முதலாவதாக, அவர் குறிப்பிட்ட அசையாச் சொத்தின் உடைமையில் இருந்திருக்க வேண்டும். இரண்டாவதாக, சட்ட நடைமுறை எதனையும் பின்பற்றாமல் பிரதிவாதியால் வெளியேற்றப் பட்டிருக்க வேண்டும். இத்துடன் வெளியேற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் வழக்கு தொடர வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இதுபோன்ற வழக்குகளில், வாதியைவிட மூன்றாம் நபர் ஒருவர் அந்நிலம் குறித்து மேலான உரிமைமூலம் (title) கொண்டுள்ளார் என்று பிரதிவாதி வாதிட முடியாது. இது ஓர் விரைவான

தீர்வழியாகும். இத்தகைய வழக்குகளில் வாதி, உரிமைமூலம் எதனையும் மெய்ப்பிக்காமலேயே உடைமையைப் பெற முடியும். ஆனால் இப்பிரிவு, சட்டப்படி உடைமையில் இருந்த (lawful possession) நபர்களுக்கு மட்டுமே நிவாரணம் அளிக்கக்கூடியது.

(3) இடைக்கால பலன்களுக்கான வழக்கு (Action for mesne profits): தவறான முறையில் அல்லது சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்ட நபருக்குள்ள மற்றொரு தீர்வழி, இடைக்காலப் பலன்களுக்கான வழக்கு தொடருவதாகும். இடைக்காலப் பலன்கள் என்பது அத்துமீறியவர் தவறான முறையில் நிலத்தின் உடைமையை எடுத்துக் கொண்டதில் இருந்து பெறப்பட்ட ஆதாயத்தை மட்டுமின்றி, வாதி மீண்டும் நிலத்தின் உடைமையைப் பெறுவதாக தொடர்ந்த வழக்குச் செலவையும் குறிக்கும். இடைக்கால பலன்களுக்கான உரிமை கோரும் வழக்கு, நிலத்தின் உடைமையை மீண்டும் அளிக்கக் கோரும் வழக்குடன் சேர்த்தோ அல்லது தனியாகவோ தாக்கல் செய்யலாம். இடைக்கால பலன்களுக்காக தொடரப்படும் வழக்கில், பிரதிவாதி, நிலத்தில் பயிர் எதனையும் செய்யவில்லை எனவே வருமானம் ஏதும் ஈட்டவில்லை என்று வாதிட முடியாது.

(4) சேதம் விளைவித்ததை கைப்பற்றுதல் அல்லது அத்துமிறியவற்றைக் கைப்பற்றுதல் அல்லது இடர் ஏற்படுத்தியவற்றைக் கவர்தல் (Distress damage feasant): ஒருவரின் உடைமையில் உள்ள நிலத்தில் மற்றொருவரின் கால்நடை அல்லது பொருள்கள் ஏதேனும் இடையூறு ஏற்படுத்தினால் அல்லது சேதம் ஏற்படுத்தினால், சட்ட நடைமுறை எதனையும் பின்பற்றாமல் அவற்றை பிடித்து வைக்கவும் அல்லது கைப்பற்றுதலும் செய்யலாம். மேலும் அதனை ஓர் அடகுப்பொருளாக அதாவது, அத்தகைய கால்நடை அல்லது பொருள் ஏற்படுத்திய சேதத்திற்கான இழப்பீடு செலுத்தப்படும் வரை அதனை ஓர் பிணையாக (security) தன்வசம் கொண்டிருக்கும் தீர்வழியே சேதம் விளைவித்ததைக் கைப்பற்றுதல் என்பதாகும். உயிருள்ள அல்லது உயிரற்ற எதுவும் முறையற்ற விதத்தில் மற்றொருவரின் நிலத்தில் புகுந்து அல்லது வைக்கப்பட்டிருந்து சேதத்தை விளைவிப்பின், அத்தகைய சேதத்திற்காக அதனை கைப்பற்றுகை செய்யலாம். இவற்றினின்று சேதம் விளைவித்ததை கைப்பற்றுதல் என்பது ஆடு, மாடு, குதிரை போன்ற உயிருள்ளவையாகவும், கால்பந்து, மட்டைப்பந்து போன்ற உயிரற்றவையாகவும் இருக்கலாம் என்பதை அறிந்து கொள்ளலாம். **Ambergated Railway Co., Vs Midland Railway., (1853) 2 E&B 793.,** என்ற வழக்கில், சட்டப்படியான சான்றிதழ் பெறாமல் இருப்புப்பாதையை பயன்படுத்தி சேதம் விளைவித்த இரயில்வே நிறுவனத்தின் இரயில் என்ஜின் கைப்பற்றப்பட்டது. இத்தகைய உரிமை, நில உரிமையாளருக்கு அல்லது சட்டப்படியாக நிலத்தை உடைமையில் கொண்டிருப்பவருக்கு, மற்றொருவரின் விலங்குகள் அல்லது பொருட்களால் ஏற்படுத்தப்பட்ட சேதம் ஈடு செய்யப்படும்வரை அவற்றை பிணையாக வைத்திருப்பதை நியாயப்படுத்தும் கொள்கையின் அடிப்படையில் அமைந்ததாகும். சேதம் விளைவித்ததை அல்லது அத்துமீறியவற்றை கைப்பற்றும் உரிமை என்பது நிலத்திற்கு விளைவித்த

சேதத்திற்கு மட்டுமின்றி, நிலத்தில் உள்ள அசைவியல் பொருட்களுக்கு (chattels) ஏற்படுத்திய சேதத்திற்கும் பொருந்தும்.

Boden Vs Roscol, (1894) 1 QB 608., என்ற வழக்கில் வாதியின் நிலத்தினுள் அத்துமீறிப் புகுந்த சிறுகுதிரை (pony) அவரின் பெண் குதிரையை உதைத்து காயப்படுத்தியதால் வாதி அதனை கைப்பற்றி வைத்தார். நீதிமன்றம் வாதிக்கு ஏற்பட்ட இழப்பீடு செலுத்தப்படும்வரை, அவருக்கு அக்குதிரையை பிடித்து வைத்திருக்க உரிமையுண்டு என்று தீர்ப்பளித்தது. நிலத்தின் உடைமையாளர் அத்துமீறியவற்றை அல்லது சேதம் ஏற்படுத்தியவற்றை அவை உயிருள்ளவையாக அல்லது உயிரற்ற பொருள்களாக இருந்தாலும் அவற்றினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை பெறும் வரையில் அதனை கைப்பற்றி வைத்திருக்க உரிமை கொண்டுள்ளார் என்பதை முன்னரே கண்டுள்ளோம். இருப்பினும் இத்தகைய உரிமை, அதனை விற்கக்கூடிய உரிமை எதனையும் உள்ளடக்காது. மேலும் விலங்குகள் அல்லது பொருட்களை அவை சேதம் ஏற்படுத்திய நேரத்தில் கைப்பற்றப்பட வேண்டும். முந்தைய நாள் ஏற்படுத்திய சேதத்திற்காக அவற்றை அடுத்த நாளில் கைப்பற்றுதல் செய்வது சட்டவிரோதமானது ஆகும். தற்போது இங்கிலாந்தில், விலங்குகள் சட்டம், 1971-ன்மூலம் சேதம் விளைவித்த விலங்குகளைக் கைப்பற்றும் தீர்வழி ஒழிக்கப்பட்டுவிட்டது.

50. அடிமுதல் அத்துமீறல் என்பதனை விவரிக்கவும். (Explain trespass ab initio)-May-2019.

SN - 68 அடிமுதல் அத்துமீறல் அல்லது ஆரம்பம் முதலே அத்துமீறல் / Trespass ab initio - May-2019(v), May-2018, Nov-2017

விடைச்சுருக்கம்: (அ) அடிமுதல் அத்துமீறல் - (ஆ) அடிமுதல் அத்துமீறல் விதிக்கான விலக்குகள்

(அ) அடிமுதல் அத்துமீறல் (Trespass abinitio):

ஒரு கட்டிடத்தினுள் அல்லது நிலத்தினுள் நுழைவதற்கு சட்டப்படியான அதிகாரம் அல்லது உரிமம் வழங்கப்பட்டிருக்கும் ஒரு நபர், உள்ளே நுழைந்த பின்பு அவருக்கு அளிக்கப்பட்டிருந்த சட்டப்படியான அதிகாரம் அல்லது உரிமத்தை தவறாகப் பயன்படுத்தினால் அல்லது சட்டவிரோதச் செயலைச் செய்தால் அவர் அக்கட்டிடத்தினுள் அடியெடுத்து வைத்த நொடியிலிருந்து அத்துமீறியவராகக் கருதப்படுவார். இதுவே அடிமுதல் அத்துமீறல் அல்லது ஆரம்பம் முதலே அத்துமீறல் எனப்படுகிறது. இங்கு உள்ளே நுழையும் நபர் தவறானச் செயலை செய்யும்வரை அல்லது அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தும்வரை அது அத்துமீறலாகாது. ஆனால் முறையற்ற அல்லது தவறானச் செயலைச் செய்தவுடன் அவர் கொண்டிருந்த சட்டப்படியான அதிகாரம் முடிவுக்கு வந்துவிடுகிறது என்பதுடன், அத்தகைய அதிகாரத்தை அவர் எப்போதும்

கொண்டிருக்கவில்லை என்பதாகக் கருதப்படுகிறது. மேலும் அவர் அக்கட்டிடத்தினுள் அல்லது நிலத்தினுள் நுழையும்போதே அத்தகைய முறையற்ற அல்லது சட்ட விரோதச் செயலை செய்வதற்காகவே நுழைந்ததாகவும் கருதப்படும்.

அடிமுதல் அத்துமீறலில், பிரதிவாதி தான் செய்த தவறானச் செயலுக்கு பொறுப்பாவதுடன், தவறானச் செயலைச் செய்தவுடன் அவர் அக்கட்டிடத்தினுள் அத்துமீறி நுழைந்ததாகவும் மற்றும் அவர் கொண்டிருந்த சட்டப்படியான அதிகாரம் முன்மேவுத் தன்மையுடன் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் (cancelled retrospectively - அதாவது அக்கட்டிடத்திற்குள் நுழையு முன்னரே அவரது அதிகாரம் ரத்து செய்யப்பட்டு விட்டதாகவும்) கருதப்படும்.

(ஆ) அடிமுதல் அத்துமீறல் விதிக்கான விலக்குகள் (Exceptions to the rule of the trespass ab initio) அல்லது அடிமுதல் அத்துமீறல் கோட்பாட்டினை பொருந்தச் செய்வதன் மீதான கட்டுப்பாடுகள் (Limitations to the application of the doctrine of trespass ab initio):

(1) சட்ட அதிகாரத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நுழைவுகளுக்கு மட்டுமே அடிமுதல் அத்துமீறல் கோட்பாடு பொருந்தும். கட்டிட உரிமையாளரின் சம்மதத்துடன் அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஒருவர் (பிரதிவாதி) நுழைந்திருக்கும்போது இக்கோட்பாடு பொருந்தாது என்பது மட்டுமின்றி அவரின் முறையற்றச் செயல் அவரின் நுழைவை சட்ட விரோதமானதாகச் செய்யாது. இத்தகைய நேர்வுகளில், பிரதிவாதிச் செய்த தவறானச் செயலினால் வாதி தனக்கு ஏற்பட்ட இழப்பினைத் திரும்ப பெற முடியுமே தவிர, அவரின் நுழைவிற்காக அல்ல. ஏனெனில் பிரதிவாதி உள்ளே நுழைவதற்கு வாதி முன்னரே சம்மதித்துள்ளார் அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் அனுமதித்துள்ளார்.

(2) அடிமுதல் அத்துமீறல் என்ற விதி, பிரதிவாதி ஏதேனும் செய்யக்கூடாததை செய்யும்போது மட்டுமே பொருந்தும். இது வெறுமனே செயல் தவிர்ப்புக்கு அல்லது செய்யத்தக்க செய்யாமைக்குப் பொருந்தாது. **'ஆறு தச்சர்கள் வழக்கு'** எனப் புகழ்பெற்ற **Vaux Vs Newsman, (1610) 8 Co Rep 146 a.,** என்ற வழக்கில், ஓர் உணவு விடுதிக்குள் சென்ற தாமஸ் நியுஸ்மேன் மற்றும் அவருடன் வந்த ஐந்து தச்சர்கள் (ஆக மொத்தம் ஆறு தச்சர்கள்) 8 பென்ஸ் (pence) மதிப்புள்ள சுமார் 1.14 லிட்டர் ஒயின் (a quart) மற்றும் ரொட்டியை வாங்கி அதனை உண்டு குடித்து முடித்த பின்னர் அதற்குண்டான பணத்தை செலுத்தினர். இரண்டாவது முறையும் அதே மதிப்பிற்கான ஒயின் மற்றும் ரொட்டியை வரவழைத்தனர். அதனை உண்டுக்குடித்த பின்னர், உணவு விடுதியின் உரிமையாளரான வாதி (ஜான் வாக்ஸ்) அதற்குண்டான 8 பென்ஸைக் கேட்டபோது அதனை தர மறுத்தனர். இதன் காரணமாக பிரதிவாதிகளுக்கு (ஆறு தச்சர்கள்) எதிராக அடிமுதல் அத்துமீறல் புரிந்ததாக வாதி வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கில் எழுந்த கேள்வி பணம் தர மறுத்த பிரதிவாதிகளின் செயல், உணவு விடுதிக்குள் அவர்கள் நுழைந்த முதல் செயலை சட்ட விரோதமானதாகச் செய்யுமா? (அதாவது அடிமுதல் அத்துமீறலாகுமா?) என்பதாகும். பிரதிவாதிகள் பணம் செலுத்த தவறியது வெறுமனே ஓர் செயல் தவிர்ப்புச் செயல் (non-feasance)

அதாவது செய்ய வேண்டியதை செய்ய மறுப்பது என்பதால் அவர்கள் அடிமுதல் அத்துமீறியவர்கள் அல்லர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில், அடிமுதல் அத்துமீறல் தொடர்பாக பின்வரும் மூன்று முக்கிய கருத்துகளை நீதிமன்றம் குறிப்பிட்டது:

(i) ஒரு நபர் சட்டத்தால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தும்போது அடிமுதல் அத்துமீறியவர் ஆகிறார்;

(ii) ஓர் அத்துமீறலுக்கான வழக்கில், சட்டப்படியான அதிகாரம் உள்ளது என வாதிடப்படும்போது, சட்டப்படியான அதிகாரம் பின்னர் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பது பதிலாக அமையும்;

(iii) வெறுமனே செய்யத்தக்க செய்யாமை, ஓர் நபரை அடி முதல் அத்துமீறியவராகச் செய்யும் அளவிற்கு தவறானதாகாது.

(3) அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதுடன் தொடர்பு கொண்டிராத ஓர் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் ஆரம்பத்தில் நுழைந்ததை நியாயப்படுத்துகின்ற அத்தகைய நேர்வுகளுக்கு அடிமுதல் அத்துமீறல் கோட்பாடு பொருந்தாது. **Elias Vs. Pasmore, (1934) 2 KB 164.,** என்ற வழக்கில், காவல் அலுவலர்களான பிரதிவாதிகள் ஒரு நபரைக் கைது செய்வதற்காக வாதியின் வளாகத்தினுள் நுழைந்தனர். அவ்வளாகத்தினுள் இருந்த ஆவணங்களையும் எடுத்துச் சென்றனர். எடுத்துச் சென்ற ஆவணங்களில் சில கைது செய்யப்பட்ட நபர் தொடர்பான வழக்கில் சான்றுகளாக பயன்படுத்தத்-தக்கவைகளாகவும் மற்றும் வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் சிலவும் இருந்தது. வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் பின்னர் மீண்டும் வாதியிடம் அளிக்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தொடர்ந்த அத்துமீறலுக்கான வழக்கில், கைது செய்வதற்காக காவலர்கள் நுழைந்தது ஓர் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையிலானது என்பதால் அது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியது என்பதுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்றும் ஆனால் கைப்பற்றப்பட்டு திரும்ப அளிக்கப்பட்ட ஆவணங்கள் பொறுத்து மட்டுமே பிரதிவாதிகள் அடிமுதல் அத்துமீறல் தீங்கிற்கு பொறுப்பாவார்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Brojendra Kishore Roy Choudhuri Vs M.A.Luffeman, (1908) 12 CWN 982., என்ற வழக்கில், ஓர் காவல் அலுவலர் சட்டப்படியான தேடுதல் நடத்தும்போது, வளாகத்திலுள்ள எவரையேனும் தாக்க முனைந்ததன் காரணமாக, அது சட்டவிரோதமாக நுழைந்ததாகாது என்று குறிப்பிடப்பட்டது.

அடி முதல் அத்துமீறலாக கருதப்படுவதற்கு வெறுமனே செயல் தவிர்ப்பு அல்லது செய்யத்தக்க செய்யாமை மட்டுமே இருந்தால் போதுமானதல்ல, மாறாக, பிரதிவாதி ஏதேனும் தவறானச் செயலை செய்திருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் ஒவ்வொரு தவறானச் செயலும், சட்டப்படியான நுழைதலை அடி முதல் அத்துமீறலாகச் செய்யாது, அத்துடன் பிரதிவாதி அவ்வளாகத்தினுள் வந்திருப்பதை முழுமையாக நியாயப்படுத்தமுடியாத அத்தகையனவாக இருக்க வேண்டும். நவீன காலங்களில், அடிமுதல் அத்துமீறல் எனும் கோட்பாடு மிகக் குறைந்த பொருந்தும் தன்மையை கொண்டதாக மட்டுமே உள்ளது.

SHORT NOTES

69. மூன்றாம் நபர் உரிமை அல்லது மூன்றாமர் உரிமை / Jus tertii

அத்துமீறியவருக்கு எதிராக வழக்கிட ஓர் நிலத்தின் அல்லது சொத்தின் உடைமையில் இருப்பவருக்கே உரிமையுள்ளது. எனவே அத்துமீறல் தீங்கிற்காக உடைமையில் இருக்கும் 'A' என்பவர் (வாதி) தொடரப்படும் வழக்கில் 'B' எனும் அத்துமீறியவர் (பிரதிவாதி), அந்நிலத்தின் உண்மையான உரிமையாளர் 'A' அல்ல என்றும் 'C' எனும் மூன்றாம் நபரே அந்நிலத்தின் உண்மையான உரிமையாளர் என்கிற எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது. இங்கு உண்மையில் 'C' அந்நிலத்தின் உண்மைான உரிமையாளராக இருந்தாலும்கூட, 'B' எனும் அத்துமீறிய நபர் (பிரதிவாதி) 'மூன்றாம் நபர் உரிமை' (jus tertii, i.e., Title of third person) என்கிற எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது. ஏனெனில் ஓர் சொத்தை குத்தகை அல்லது வாடகைக்கு எழுத்துமூலமான ஆவணத்தின்கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு பெற்றவர், குத்தகை அல்லது வாடகைக்காலத்தில் அச்சொத்தினின்று எழும் ஆதாயத்தை எங்ஙனம் பயன்படுத்திக்கொள்ள உரிமை கொண்டுள்ளாரோ அதேபோன்று குத்தகைக் காலம் வரையில் அதனை முறையாக அதாவது, அச்சொத்து தனக்கு சொந்தமான சொத்தாக இருந்தால் எவ்வாறு பராமரிப்பாரோ அதே போன்று பராமரிக்கவும் கடமை கொண்டுள்ளார். எனவே அச்சொத்து அல்லது நிலம் குறித்து எவரேனும் அத்துமீறல் புரிந்தால் உடைமையில் இருக்கும் நபரே அதற்கெதிராக வழக்கு தொடர தகுதி பெற்றவராவார். இத்தகைய நேர்வுகளில், அத்தமீறியவர், உடைமையில் இருப்பவரிடம், அவர் நில உரிமையாளர் அல்ல மூன்றாம் நபர் தாம் உண்மையில் உரிமையாளர் என்ற எதிர்வாதத்தை பயன்படுத்த சட்டம் அனுமதிக்காது. ஆனால் அத்துமீறி நுழைந்த பிரதிவாதி வெளியேற்றுகைக்கான நடவடிக்கையில் மூன்றாம் நபர் உரிமை எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியும் என்று நியாயமாக அனுமானிக்கலாம். அதாவது பிரதிவாதி, வாதிக்கு எதிராக மூன்றாம் நபர் உரிமை கொண்டுள்ளதால் வாதி உடைமையைக் கோர முடியாது என்ற எதிர்வாதத்தை வைக்க முடியும். மேற்கொண்டு விளக்கமாகக் குறிப்பிடுவது எனில், பிரதிவாதி இங்கு வாதியின் உடைமையைக் குறித்து கேள்வி எழுப்புகிறார். **Asher Vs Whitlock (1865) LR 1 GB 1.,** என்ற வழக்கில், வெளியேற்றுகை நடவடிக்கையில் பிரதிவாதி மூன்றாம் நபர் உரிமை என்கிற எதிர் வாதத்தை பயன்படுத்த முடியும் என்பதை உணர்த்துகிறது. இருப்பினும், வாதி ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்த ஆவணத்தின்கீழ் ஒரு குத்தகைதாரராகவோ அல்லது வாடகைதாரராகவோ இருப்பின் அவரது உடைமை சட்டப்படியானது என்பதால், பிரதிவாதி இத்தகைய எதிர்வாதத்தை எழுப்ப முடியாது.

'மூன்றாம் நபர் உரிமை' எனும் எதிர்வாதம் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில், தலைமை நீதிபதி மேன்ஸ்ஃபீல்ட் (Lord Mansfield (J), **Roe d haldane Vs Harvey, (1769) 4 Burr 2487.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு, அத்துமீறலுக்காக தொடரப்படும் வழக்கின்

வழக்குமூலம் உடைமைக்கு எதிரான தீங்கு தொடர்பானது என்பதும். வெளியேற்றுகை நடவடிக்கைக்கான வழக்கின் வழக்குமூலம் உரிமை மூலத்திற்கான (title) அல்லது சொத்துரிமைக்கு எதிரான தீங்கு தொடர்பானது என்பதுமாகும். எனவே வெளியேற்றுகைக்கான வழக்கில் 'வாதி தன்னுடைய சொந்த உரிமை மூலத்தின் வலிமையின் அடிப்படையில் மட்டுமே உடைமையை திரும்பப் பெற முடியுமே தவிர, பிரதிவாதியின் பலவீனமான உரிமைக்குறைவின் அடிப்படையில் அல்ல' ('The plaintiff can recover only by the strength of his own title and not by the weakness of the defendant's).

அலகு - IX (c)

கவனமின்மை (Negligence)

PART - A/B

51. கவனமின்மையை விளக்கவும். தீங்கியல் சட்டத்தின்கீழ் கவனமின்மையின் இன்றியமையான கூறுகள் யாவை? (Explain Negligence. What are the essentials of negligence under the law of Torts?) - Nov-2010, May-2011, May-2015

✦ **"கவனமின்மை என்பது கவனத்துடன் இருக்க வேண்டிய சட்டக்கடமையை மீறுவதால் எதிர்வாதி விரும்பியிராத போதிலும் வாதிக்கு ஏற்படக்கூடிய சேதம் ஆகும்"- விளக்குக. ("Negligence is the breach of legal duty to take care which results in damage undesired by the defendant to the plaintiff"-Explain).**

SN - 70 **கடமை மீறுகை / Breach of Duty**

விடைச்சுருக்கம்: (அ) 'கவனமின்மை' என்பதன் பொருள் - அ (i) கவனமின்மை என்பதன் வரையறை - (ஆ) தீங்கியல் சட்டத்தின்கீழ் கவனமின்மையின் இன்றியமையாக் கூறுகள் - ஆ (1) வாதியின் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமை - ஆ (2) கடமை மீறுகை - ஆ (3) இழப்பு

(அ) 'கவனமின்மை' என்பதன் பொருள் (Negligence - Meaning of):

அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் 'கவனமின்மை' என்றச் சொல் 'அலட்சியம்' (carlessness) அல்லது 'முன்யோசனையற்ற' (thoughtless) அல்லது 'அஜாக்கிரதை' என்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது. ஆனால் தீங்கியல் சட்டப்பொருள் விளக்கத்தின்படி, இச்சொல் இரண்டுவிதமான பொருளைக் குறிக்கிறது. முதலாவதாக, சில தீங்குகள் செய்யப்படும் முறைகளில் ஒன்றிலிருந்து

அனுமானிக்கக்கூடிய ஓர் மனநிலைக் காரணியைக் (mental element) குறித்தும் அல்லது இரண்டாவதாக, கவனமுடன் இருக்க வேண்டிய சட்டக் கடமையைக் கொண்டுள்ள பிரதிவாதி, அதை மீறியதால் அவரே விரும்பியிராத, வாதிக்கு இழப்பு விளைவிக்கும் ஓர் தனிப்பட்ட தீங்கு என்ற பொருளையும் குறிக்கிறது.

அ(i) கவனமின்மைத் தொடர்பான கொள்கைகள் (Theories of negligence): சட்ட அறிஞர்களில் சிலர் கவனமின்மை என்பது மனதின் நிலை (State of mind) எனவும், சிலர் நடத்தையின் ஓர் வகை (type of conduct) எனவும் குறிப்பிடுகின்றனர். இவ்விரண்டு வேறுபட்ட கருத்துகள், கவனமின்மை தொடர்பான (i) அகநிலைக் கொள்கை மற்றும் (ii) புறநிலைக் கொள்கை எனும் இரு எதிரெதிர் கொள்கைகள் உருவாகுவதற்கு வழிவகுத்தது. அகநிலைக் கொள்கையின் (subjective theory) ஆதரவாளர்கள், கவனமின்மை என்பது ஓர் நபர், தனது நடத்தை மற்றும் அதன் விளைவு குறித்து முறையற்ற அசட்டையான (undue indifference) மனநிலையைக் கொண்டிருப்பது எனக் குறிப்பிடுகின்றனர். சால்மண்ட் இக்கொள்கையின் முக்கிய ஆதரவாளர் ஆவார். புறநிலைக் கொள்கையின் (objective theory) ஆதரவாளர்கள், கவனமின்மை மனதின் நிலை அல்ல; மாறாக, ஒரு குறிப்பிட்ட வகையான நடத்தையை புறநிலையில் நின்று (அதாவது வெளியிலிருந்து) முடிவு செய்வதாகும் எனக் குறிப்பிடுகின்றனர். பொல்லாக் இக்கொள்கையின் முக்கிய விரிவுரையாளர்களில் ஒருவராவார். 'கவனமின்மை என்பது ஓர் சமநிலை அறிவு கொண்ட நபர், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கவனமாக இருக்க வேண்டிய கடமையின் மீறுகை' என பொல்லாக் கவனமின்மையை வரையறுக்கிறார். மேலும் கவனமின்மை என்பது 'கவனம்' என்பதற்கு முரணானது என்றும், எவரொருவரும் 'கவனம்' என்பதை மனதின் நிலையாக குறிப்பிடமாட்டார்கள் என்றும் பொல்லாக் குறிப்பிடுகிறார். கவனமின்மை என்பது ஓர் நடத்தையைக் குறித்து குறிப்பிடுவதே தவிர மனநிலைக் குறித்தது அல்ல. இழப்பை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்ட அத்தகைய நடத்தையே கவனமின்மை ஆகும். கவனமின்மையைக் குறித்த புறநிலைப்பொருளே (Objective meaning), கவனமின்மையை ஓர் தனியேயான அல்லது குறிப்பிட்ட தீங்காக பாவிக்கிறது. எனவே ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு சமநிலை அறிவு கொண்ட நபரின் நடத்தையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் கவனமின்மைக் குறித்த புறநிலைக் கொள்கையின் கருத்தியலே ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

அ(ii) வரையறை (Definition): "கவனமுடன் இருக்க வேண்டிய சட்டக் கடமை மீறுகையால், வாதிக்கு இழப்பை ஏற்படுத்தும், பிரதிவாதியால் விரும்பியிராத ஓர் தீங்கே கவனமின்மை" என்று பேராசிரியர் வின்ஃபீல்ட் கவனமின்மைத் தீங்கை வரையறுக்கிறார். கவனமின்மை என்பது "சாதாரணமாக மனித விவகாரங்கள் (human affairs) தொடர்பான நடத்தையை முறைப்படுத்துகின்ற கருத்துகளின் அடிப்படையில், ஓர் சமநிலை அறிவு கொண்ட மனிதன் ஏதேனும் செய்திருக்கக்கூடிய செயலை செய்யாமல் விடுவதும் அல்லது ஓர் சமநிலை அறிவு கொண்ட மனிதன் செய்யாமல் இருக்கக்கூடிய செயலைச் செய்வதுமாகும்" என்று

ஆண்டர்சன் **Blyth Vs Birmingham, (1856) 11 Exch. 781.,** என்ற வழக்கில் கவனமின்மையை வரையறுத்துள்ளார். "கவனமின்மை என்பது அதன் கண்டிப்பான சட்டப் பொருளில் (in its strict legal sense), செய்யக்கூடிய செயலைத் தவிர்ப்பது அல்லது செய்யக்கூடாத செயலைச் செய்யும் அலட்சியத்திற்கும் மேலான நடத்தையாகும் (more than careless conduct); இது கடமை என்னும் சிக்கலான கருத்தமைவையும் (complex concept) மற்றும் எவருக்கு எதிராக அக்கடமையைக் கொண்டுள்ளாரோ, அதன் மீறுகையால் ஏற்படும் இழப்பு குறித்தும் முறையாகக் குறிப்பிடுகிறது" என்று ரைட் பிரபு (Lord Wright) **Lochgelly Iron and Coal Co., Vs M.Mullen., (1934) AC 1.,** என்ற வழக்கில் கவனமின்மையை வரையறுத்துள்ளார். கவனமின்மை குறித்த இத்தகைய அகநிலைக் கொள்கையை மிகவும் புகழ்பெற்ற வழக்கான **Donoghue Vs Stevenson, 1932 AC 562.,** வழக்கிலும் பிரபுக்கள் அவை ஏற்றுக் கொண்டது.

(ஆ) கவனமின்மையின் முக்கிய அல்லது இன்றியமையாக் கூறுகள் (Essential or Important elements of negligence):

மேற்குறிப்பிட்ட வரையறைகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளில் இருந்து மட்டுமின்றி, பேராசிரியர் வின்ஃபீல்ட், ஓர் கவனமின்மைத் தீங்கிற்கான வழக்கில் வாதி மெய்ப்பிக்க வேண்டிய பொருண்மைகளாகக் குறிப்பிட்டிருக்கும் பின்வரும் கூறுகளே, கவனமின்மையின் இன்றியமையாத அல்லது முக்கியக் கூறுகளாகும்:

(1) பிரதிவாதி, வாதியின் பால் கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டிருக்க வேண்டும்;

(2) பிரதிவாதி அத்தகைய கடமையை மீறியிருக்க வேண்டும்; மற்றும்;

(3) பிரதிவாதியின் சட்டக் கடமை மீறுகையின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இனி கவனமின்மையின் மேற்குறிப்பிட்ட இன்றியமையாக்கூறு ஒவ்வொன்றைப் பற்றியும் பின்வருமாறு காண்போம்.

ஆ(1) வாதியின் பால் கவனமுடன் இருக்க வேண்டிய கடமை (Duty of care to the plaintiff): கவனமுடன் இருக்க வேண்டிய கடமையை மெய்ப்பிப்பதற்கான அவசியக் கூறுகள் பின்வருமாறு:

(a) கடமை என்பது ஓர் சட்டக்கடமையை குறிக்கும்;

(b) ஊறின் முன்னறியத்தக்க நிலை;

(c) ஊறு முன்னறிய முடியாததாக இருப்பின், பிரதிவாதி பொறுப்பு கொண்டிருக்கமாட்டார்;

(d) நெருங்கிய உறவுத் தொடர்பு; மற்றும்;

(e) கடமை, வாதியின் பொருட்டாக இருக்க வேண்டும்.

ஆ(1) (a): கடமை என்பது ஓர் சட்டக் கடமையைக் குறிக்கும் (Duty means a legal duty): கடமை என்பது வெறுமனே ஒழுக்கக் கடமையாக அல்லது சமயக் கடமையாக இல்லாமல் ஓர் சட்டக் கடமையாக இருக்க வேண்டும். பிரதிவாதி

தன் பொருட்டு ஓர் குறிப்பிட்ட சட்டக்கடமை (specific legal duty) கொண்டிருப்பதையும், அவர் அதை மீறியிருப்பதையும் வாதியே மெய்ப்பிக்க வேண்டும். இத்தகைய கடமை நடைமுறையில் உள்ளதை வரையறுப்பதற்கென பொதுவான விதிகள் ஏதுமில்லை. இது ஒவ்வொரு வழக்கினைச் சார்ந்த பொருண்மைத் தொடர்பான வினாவாகும் (question of fact). **Donoghue Vs. Stevenson, (1932) AC 562.,** என்ற வழக்கில், 'ஜின்ஜர் பீரில்' (ginger beer) இருந்த அழுகிய நத்தையின் உடற்பாகங்கள், 'பாட்டிலின்' (bottle) வெளிப்புறத்தில் இருந்து பார்வைக்கு தெரியாததால், அதனைக் குடிக்க நேர்ந்த வாதி, தனது உடல்நலன் மோசமாகப் பாதிக்கப்பட்டதால், இழப்பீடு கோரி, அதன் தயாரிப்பாளரான பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதி, வாதி பொருட்டு தாம் கவனமாக இருக்க வேண்டிய கடமை எதனையும் கொண்டிருக்கவில்லை என வாதிட்டார். பிரபுக்கள் அவை, பிரதிவாதி வாதியின் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமை கொண்டுள்ளார் என்பதை திட்டவட்டமாக குறிப்பிட்டதுடன், பொருள்களை தயாரிப்பவர்கள், அதே வடிவில் அதாவது இடையில் எவ்வித பரிசோதனைக்கும் அது உட்படுத்தப்படமாட்டாது என்பதை அறிந்திருந்தே, அதனை இறுதியான நுகர்வோருக்கு (ultimate consumer) சேர்ப்பிப்பவர்கள், நுகர்பவர்களின் உயிர் மற்றும் உடைமை குறித்து உரிய மற்றும் நியாயமான கவனம் செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்பதைக் குறிப்பிட்டது.

ஆ (1) (b) ஊறின் முன்னறியத் தக்கநிலை (Forseeability of injury): வாதிக்கு ஊறு ஏற்படுத்துமா எனும் முன்னறியத்தக்க நிலை, பிரதிவாதி, வாதியின் பொருட்டு கவனமுடன் இருக்கும் கடமையைக் கொண்டுள்ளாரா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்கிறது. ஓர் செயலைச் செய்யும்போது அல்லது ஓர் செயலைச் செய்யாமல் இருக்கும்போது, அதனால் வாதிக்கு ஊறு ஏற்படும் என்று நியாயமாக பிரதிவாதியால் முன்னறியக் கூடியதாக இருக்கும்போது, வாதிக்கு அத்தகைய ஊறு ஏற்படாமல் தடுக்கக்கூடிய கடமையை பிரதிவாதி கொண்டுள்ளார்; தவறும்பட்சத்தில், வாதிக்கு ஏற்படும் ஊறினுக்கு அவர் பொறுப்பாவார். **Bourhill Vs Young, (1943) AC 92.,** என்ற வழக்கில் மிக வேகமாகவும் கவனக்குறைவாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து மோட்டார் காரின்மீது மோதியதில் உயிரிழந்தவர். அவ்விபத்தைக் காணும் கர்ப்பிணிப் பெண் (வாதி) ஒருவருக்கு மன அதிர்ச்சி ஏற்படும் என்பதையோ மற்றும் அதன் விளைவாக அவருக்கு குழந்தை இறந்தே பிறக்கும் என்பதையோ முன்னறிந்திருக்க முடியாது. எனவே மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் கர்ப்பிணிப் பெண் குறித்து கவனமுடன் இருக்க வேண்டிய கடமையை கொண்டிருக்கவில்லை என்பதால் இறந்து போனவரின் சட்ட வாரிசுகள் கர்ப்பிணிப் பெண்ணுக்கு (வாதிக்கு) ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் இவ்வழக்கில் தீர்ப்பளித்தது. **Municipal Corporation of Delhi Vs Subhagwanti, AIR 1966 SC 1750.,** என்ற வழக்கில், டெல்லி மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த மணிக்கூண்டு கட்டிடம் இடிந்து விழுந்ததில் பலர் உயிரிழந்தனர். அக்கட்டிடம் 80 வருடங்களுக்கு

முன்னர் கட்டப்பட்டது. 40-45 ஆண்டுகள் வரை மட்டுமே நிலைத்தன்மை கொண்டிருக்கக்கூடிய அக்கட்டிடத்தை, குறிப்பிட்ட இடைவெளிகளில் ஆய்வு செய்வது, அவ்வப்போது அவசியமான பராமரிப்பு வேலைகளைச் செய்ய மாநகராட்சி தவறிவிட்டது. கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விழுந்து சாலையில் செல்வோரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பது முன்னறியக்கூடியதாக இருந்ததால் டெல்லி மாநகராட்சி இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளது என நீதிமன்றம் இவ்வழக்கில் தீர்ப்பளித்தது.

ஆ(1)(c) ஊறு முன்னறிய முடியாததாக இருப்பின் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் (No foreseability, no liability of the defendant): வாதிக்கு ஏற்படும் ஊறு முன்னறியத்தக்கதாக இல்லாமல் இருப்பின், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார். **Cates Vs Mongini Bros., (1917) 19 Bom LR 778.,** என்ற வழக்கில், உணவு விடுதிக்குள் சென்ற பெண்ணின் மீது (வாதி), மேற்கூரையில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறி (ceiling fan) கீழே விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது. மின்சார விசிறியின் உட்புறக் கோளாறு ஓர் சமநிலை அறிவு கொண்ட நபரால் கண்டுபிடிக்க முடியாதவாறு இருந்ததால் பிரதிவாதிகள் கவனமின்மைத் தீங்கு புரிந்ததற்கு பொறுப்பாகமாட்டார்கள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(1)(d) நெருங்கிய உறவுத்தொடர்பு (Proximity in relationship): கவனமின்மையை மெய்ப்பிக்க, ஊறு முன்னறியத்தக்கது என்பதை மெய்ப்பித்தால் மட்டும் போதாது. அத்துடன், ஊறு ஏற்படுவதற்கு நியாயமான வாய்ப்பு உள்ளதையும் மெய்ப்பிக்க வேண்டும். நியாயமாக முன்னறியத்தக்கது என்பது நெருங்கிய தொடர்பற்ற சாத்தியக்கூறுகளை குறிக்காது. தரப்பினர்களுக்கு இடையே நெருங்கிய உறவு இருப்பது அவசியம். இதற்கான சோதனை ஓர் சம அறிவு பொருந்திய மனிதனின் பார்வையில் இருந்து நோக்குவதாகும். பிரதிவாதியின் கடமை, தன்னுடைய செயலால் நியாயமாக வாதிக்கு ஏற்படக்கூடிய அத்தகைய விளைவுகளில் இருந்து பாதுகாப்பதே தவிர கற்பனையான விளைவுகளில் இருந்து அல்ல. வாய்ப்பானது, ஓர் சமநிலை அறிவு கொண்ட நபரின் எண்ணத்தில் எப்போதும் தோன்றியிராததாக இருப்பின், மிகவும் உச்சபட்ச முன்னெச்சரிக்கை கொண்டிராதது கவனமின்மை என்பதாகாது.

Fardon Vs Harcourt Ravington, (1932) 146 LT 391., என்ற வழக்கில், பிரதிவாதி மற்றும் அவரின் மனைவி தாங்கள் பயணித்த மோட்டார் காரை சாலையின் ஓரத்தில் நிறுத்தி, தங்களின் செல்லப்பிராணியான நாயை காரினுள் விட்டுவிட்டு, காரின் கண்ணாடிகளை இறக்கி, கதவுகளை பூட்டிவிட்டு பொருள்களை வாங்க கடைக்குள் சென்றனர். அவர்கள் உடனே திரும்பி வராததால், பொறுமையிழந்த நாய், காரினுள் இருந்து வெளியே குதித்ததில், காரின் கண்ணாடி உடைந்து, அக்கண்ணாடியிலிருந்து சிதறிய சிறு துண்டு, சாலையில் சென்று கொண்டிருந்த வாதிக்கு காயத்தை ஏற்படுத்தியது. கவனமின்மை தீங்கிற்காக பிரதிவாதிக்கு எதிராக.வாதி இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், மக்கள் நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளில் இருந்து மட்டுமே மற்றவர்களைப் பாதுகாக்கும்

பொறுப்பு கொண்டுள்ளார்கள் என்றும், நியாயமாக எதிர்பார்த்திருக்க முடியாத விளைவுகளுக்கு பொறுப்பாகமாட்டார்கள் என்பதால், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ (1) (e) கடமை வாதியின் பொருட்டாக இருக்க வேண்டும் (Duty must be towards the plaintiff): வாதியைக் குறித்து கவனமுடன் இருக்க வேண்டிய ஓர் கடமையை பிரதிவாதி கொண்டிருந்தார் என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டும். இல்லையேல், பிரதிவாதியின் செயலால் வாதிக்கு ஊறு ஏற்பட்டிருந்தாலும்கூட, வழக்கு தொடர முடியாது. **Dickson Vs Reuter's Telegraph Co., (1877) 3 CPD1.,** என்ற வழக்கில், 'B'-யிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டிய தந்திச் செய்தி (telegram) தவறுதலாக 'C'-யிடம் சேர்ப்பிக்கப்பட்டது. 'C', தந்திச் செய்தியில் இருந்தவாறு பொருள்களை 'A'-க்கு அனுப்பினார். 'A', தாம் பொருள்களை அனுப்பக்கோரி, 'B'-க்கு தந்திச் செய்தியை அனுப்பியதால், 'C' அனுப்பிய பொருள்களை ஏற்றுக்கொள்ள முடியாது என மறுத்துவிட்டார். தந்திச் செய்தி நிறுவனத்திற்கு எதிராக 'C' தொடர்ந்த வழக்கில், நிறுவனம் 'C'-ஐப் பொறுத்து கவனமுடன் இருக்க வேண்டிய கடமை எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதால், 'C'-க்கு வழக்கிடுவதற்கான வழக்குமூலம் ஏதுமில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(2) கடமை மீறுகை (Breach of duty): பிரதிவாதி தன் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளார் என்பதை வாதி மெய்ப்பித்த பின்னர், கவனமின்மைக்காக இழப்பீடு கோரி தொடர்ந்துள்ள வழக்கில் வெற்றி பெறுவதற்கு, அக்கடமையை பிரதிவாதி மீறிவிட்டார் என்பதை அடுத்ததாக மெய்ப்பிக்க வேண்டும். இதனைத் தீர்மானிப்பதற்கான சோதனை, மீண்டும் ஒரு சமநிலை அறிவு கொண்ட அல்லது அறிவார்ந்த நபரின் நிலையில் இருந்து நோக்குவதாகும். இச்சோதனையின்போது கவனத்தின் அளவு (amount of care), திறமை (skill), சிரத்தை (diligence) உள்ளிட்ட காரணிகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அறிவார்ந்த நபர் என்பது, ஒருவர் தான் செய்யும் வேலையில் தனித்திறமை (special skill) பெற்றுள்ள அத்தகைய நபரைக் குறிக்கும். கவனக்குறைவு எனக் கூறப்படுவதை தவிர்ப்பதற்காக, ஒரு நபர், குறிப்பிட்ட சூழ்நிலையில் பயன்படுத்தப்பட வேண்டிய கவனத்தின் அளவு, அவற்றில் வெளிப்படையாக எதிர்நோக்கக்கூடிய இழப்பின் அபாயத்திற்கேற்ப மாறுபடும். எதிர்நோக்கக்கூடிய அபாயம் அதிகமாக இருக்கும்போது ஒரு நபர் மிக அதிக கவனம் செலுத்தவும், அது குறைவாக இருக்கும்போது குறைவான கவனம் செலுத்தப்படவும் வேண்டும். ஓர் செயலில் உள்ள எதிர்நோக்கக்கூடிய இழப்பின் அபாயம் மற்றும் அதனை கவனத்தில் கொள்ளப்படாததால் ஏற்படும் விளைவு ஆகியவற்றுக்கு இடையே ஓர் முறையான சமநிலைப்படுத்தல் அவசியம் என **Daborn Vs Bath Tramways, (1946) 2 All ER 333.,** என்ற வழக்கில் கூறப்பட்டது. எவ்வாறிருப்பினும், கவனத்தின் தரத்தை (standard of card) தீர்மானிக்கும்போது பின்வரும் கூறுகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை சட்டம் கோருகிறது.

ஆ(2)(i) நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவம் (The importance of the object to be attained): சட்டம், சாத்தியப்படக்கூடிய அதிகபட்ச கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதைக் கோரவில்லை மாறாக, சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஓர் சமநிலை அறிவு கொண்ட நபர் காட்டக்கூடிய அத்தகைய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பொதுமக்கள் நலனுக்காக பல்வேறுபட்ட செயல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்காக சட்டம், சிலக்குறிப்பிட்ட அளவு எதிர்நோக்கு அபாயத்தினை செயல்படுத்துவதற்கான வாய்ப்பினை அனுமதிக்கிறது.

Latimer Vs A.E.C. Ltd., (1953) AC 643., என்ற வழக்கில், மிகக் கடுமையான மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக, தொழிற்சாலையினுள் புகுந்த தண்ணீரில், எண்ணெய் பொருட்கள் சிலவும் கலந்துவிட்டது. மழைநீர் வடிந்த பின்னர், நீரில் கரைந்திருந்த எண்ணெய் படலத்தின் காரணமாக, தொழிற்சாலையின் தரைப்பரப்பு வழுக்கக்கூடியதாக இருந்தது. எனவே தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மரத்தூளை தரைப்பகுதி முழுதும் பரப்பச் செய்தனர். இருப்பினும், மரத்தூளால் பரப்பப்படாத எண்ணெய் படிந்த தரைப்பகுதிகளும் ஒருசில இடங்களில் இருந்தது. வாதி, அத்தகையதொரு தரைப்பரப்பின்மீது நடக்கும்போது வழுக்கி விழுந்ததில் காயமேற்பட்டது. வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொழிற்சாலை மூடப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிட்டார். நீதிமன்றம், தொழிற்சாலை மூடப்படுவதை நியாயப்படுத்தும் அளவிற்கு எதிர்நோக்கு அபாயம், மிகப்பெரிய அளவில் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, பிரதிவாதிகள் நியாயமான முறையில் செயல்பட்டுள்ளதால் அவர்கள் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு பொறுப்பாகமாட்டார்கள் என்று தீர்ப்பளித்தது.

ஆ(2) (ii) எதிர்நோக்கக்கூடிய அபாயத்தின் அளவு (The magnitude of risk): கவனத்துடன் இருக்கக்கூடிய அளவு, ஏற்படக்கூடிய தீங்கு மற்றும் காயத்தின் கடுமைக்கு ஏற்ப வேறுபட்ட அளவாக இருக்கும். தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கியைக் கையாளும் ஒருவர், சாதாரணமாக கழியை (stick) எடுத்துச்செல்லும் நபரைவிட மிக அதிக அளவு கவனம் காட்டப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மோட்டார் வாகனத்தை ஓட்டுபவர், பள்ளிக்கூடம் அமைந்துள்ள பகுதியைக் கடந்து செல்லும்போது அல்லது ஓர் பார்வைத்திறன் இழந்த நபரை காணும்போது மிகுந்த கவனம் செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார். **Glasgow Corporation Vs Taylor, (1922) 1 AC 44.,** என்ற வழக்கில், பிரதிவாதியான மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த பூங்கா ஒன்றில் நச்சுத்தன்மை கொண்ட, பெர்ரி பழங்கள் பழுத்திருந்தது. பார்வைக்கு 'செர்ரி' பழங்களைப் போன்றே இருந்ததால், அது குழந்தைகளுக்கு பறித்து உண்ணும் ஆர்வத்தை தூண்டுவதாக இருந்தது. 7 வயதுக் குழந்தை ஒன்று அதைப்பறித்து உண்டதால் உயிரிழந்தது. 'பெர்ரி' பழுத்திருந்த புதர், முறையாக

வேலியிடப்படாமலும் மற்றும் அப்பழங்களின் நச்சுத்தன்மை குறித்து அப்பகுதிக்கு அருகில் அறிவிப்பு எதுவும் ஒட்டப்படாமலும் இருந்தது. பிரதிவாதிகள் முறையாக கவனம் செலுத்தவில்லை என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம் எனவே பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

ஆ(2)(iii) மறுபயன் தொகை (Amount of consideration): கவனத்தின் அளவு, பிரதிவாதியால் வழங்கப்படும் சேவையின் வகை மற்றும் அதன்பொருட்டு வாதியிடமிருந்து பெறப்படும் மறுபயன் தொகையையும்கூட சார்ந்திருக்கும் **Klaus Mittelbachert Vs East India Hotels, AIR 1997 Delhi 201.,** என்ற வழக்கில், வாதி நீச்சல்குளத்தில் இருந்த விசைப்பலகையில் (Spring board) இருந்து தலைகீழாகப் பாய்ந்தபோது (dive) நீச்சல் குளத்தில் நிரப்பப்பட்டிருந்த நீரின் ஆழம் குறைவாக இருந்ததால், அவரின் தலைப்பகுதி நேரடியாக நீச்சல் குளத்தின் தரைப்பகுதியில் மோதியதால் ஏற்பட்ட காயங்களின் விளைவாக அவரது இயக்கம் முடங்கியதுடன் (paralysis) மிகுந்த வலியால் அவதிப்பட்டு, விபத்து ஏற்பட்ட 13 வருடங்களுக்குப் பின்னர் உயிரிழந்தார். தன்னுடைய சேவைக்கு அதிக கட்டணம் வசூலிக்கும் ஐந்து நட்சத்திர ஓட்டல், தன்னுடைய விருந்தினர்களுக்கு அளிக்கப்படும் சேவை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக மிக அதிக அளவு கவனம் காட்டும் கடமையைக் கொண்டுள்ளது என்றும், சேவை அமைப்பில் உள்ள விருந்தினர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தவல்ல எந்தவொரு வெளியில் தெரியாத குறைபாடுகளும் கவனமுடன் இருக்க வேண்டிய கடமை மீறுகையாகவும் அதன் விளைவுகளுக்கு கடும் பொறுப்புநிலை (Strict liability) பொருந்தும் என்பதையும் குறிப்பிட்ட நீதிமன்றம், பிரதிவாதிகளான உணவுவிடுதியின் உரிமையாளர்கள் ரூபாய் 50 இலட்சத்தை இழப்பீடாக செலுத்த ஆணையிட்டது.

ஆ(3) இழப்பு (Damages): பிரதிவாதியின் கடமை மீறுகையின் காரணமாக, வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதும் அவசியமாகும். வாதியே தனக்கு ஏற்பட்ட இழப்பு, பிரதிவாதியின் கவனக்குறைவின் நேரடி விளைவால் ஏற்பட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். பிரதிவாதியின் கவனக்குறைவிற்கு சேய்மையான அல்லது பிரதிவாதியின் கவனக்குறைவுடன் தொடர்பற்ற சேதங்களுக்கு வாதி இழப்பீடு பெற முடியாது. சேதம் என்பது, உடல், நற்பெயர், சொத்து, பொருளாதார இழப்பு, மனவலி அல்லது நரம்பு மண்டல அதிர்ச்சி போன்ற ஏதேனுமொன்றாக இருக்கலாம்.

52. டொனாக் எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கின் பொருண்மையையும் வழக்குத் தீர்ப்பால் உருவாக்கப்பட்ட விதியையும் ஆராய்க. (Examine the facts and the principle evolved in Donoghue Vs Stevenson) - Nov-2019

SN - 71 **டோனாகு எதிர் ஸ்டீவன்சன் / Donoghue Vs Stevenson - May-2019, Nov-2016.**

SN - 72 டோனாகு எதிர் ஸ்டீவன்சன் விதி / Rule in Donoghue Vs Stevenson - May-2018.

விடைச்சுருக்கம்: (அ) வழக்கின் பொருண்மைகள் - அ (1) வாதியின் வழக்குரை - அ (2) பிரதிவாதியின் எதிருரை - அ (3) சட்டப் பின்னணி - அ (4) வழக்கின் படிநிலைகள் - (ஆ) பிரபுக்கள் அவையின் முடிவு - ஆ (1) வழக்குத்தீர்ப்பால் உருவாக்கப்பட்ட விதிகள்

(அ) வழக்கின் பொருண்மைகள் (Facts of the case):

1928-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி ஞாயிறு மாலையில், டோனாகு மற்றும் அவரின் பெண் நண்பர் இருவரும், ஸ்காட்லாந்தின் 'பைஸ்லே' (paisley) எனும் சிற்றூரில், சாராயக் கலப்பில்லாத பானங்கள் (non-alcoholic drinks) விற்கும் 'வெல்மெடோ' காப்பி விடுதியினுள் (wellmeadow cafe) நுழைந்தனர். அங்கு டோனாகுவின் நண்பர் அவருக்கு ஐஸ்கட்டியுடன் பேரிச்சாறும் (pearl) டோனாகிற்கு 'ஜின்ஜர் பீரும்' (ginger beer) வழங்கக்கோரினார். விடுதியின் உரிமையாளர் ஒரு கண்ணாடி தம்ளரில் (tumbler) ஜின்ஜர் பாட்டிலில் (bottle) இருந்து 'பீரை' ஊற்றினார். 'ஜின்ஜர் பாட்டிலை'ச் சுற்றி டி.ஸ்டீவன்சன். கிளன்லேன், பைஸ்லே (D.Stevenson, Glenlane, paisley) என்ற முகப்புச் சீட்டு (label) ஒட்டப்பட்டிருந்தது. ஜின்ஜர் பாட்டில் இருண்ட கண்ணாடியுடனும் உலோகத்தினாலான மூடி (cap) கொண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. டோனாகுவின் நண்பர் இரண்டாவது முறையாக மீதமிருந்த ஜின்ஜர் பீரை தம்ளரில் நிரப்பும்போது பாட்டிலின் கீழ்ப்பகுதியிலிருந்து அழுகிக் கிடந்த நத்தையின் உடற்பகுதிகள் மிதந்து வெளியில் வந்தது.

அ(1) வாதியின் வழக்குரை (Plaint): டோனாகு தாக்கல் செய்திருந்த வழக்குரையில், 26.08.1928-ஆம் தேதியன்று பிரதிவாதியால் தயாரிக்கப்பட்ட ஜின்ஜர் பீர் பாட்டிலில் இருந்த 'பீரை' ஒரு தம்ளரில் ஊற்றிக்குடித்த பின்பு, இரண்டாவது முறையாக குடிப்பதற்காக மீண்டும் தம்ளரில் ஊற்றும்போது, 'பீரு'டன் மிதந்து வந்த இறந்த நத்தையின் அழுகிய உடற்பாகங்களைக் கண்டவுடன் தனது உடல் நலம் மோசமாகப் பாதிக்கப்பட்டு, அடிவயிற்றில் வலி ஏற்பட்டதாகவும் மற்றும் செப்டம்பர் - 16-ம் தேதியன்று அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன்பின்னர் தனது வயிறு மற்றும் குடல்வீக்கம் (gastro-enteritis) ஏற்பட்டிருப்பது பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டிருந்தார். தனது உடல்நிலை மோசமானதற்கும், உடல்வலியால் அவதிப்பட்டதற்கும் மற்றும் சிகிச்சைக்கான செலவிற்கு உள்ளானதற்கும் பிரதிவாதியின் கவனக்குறைவே காரணம் என்பதால், பிரதிவாதி தனக்கு 500 பவுண்டுகளை (£500) இழப்பீடாக வழங்க உத்தரவிடக் கோரி நீதிமன்றத்திடம் வேண்டியிருந்தார்.

அ(2) பிரதிவாதியின் எதிருரை (Written statement): ஸ்டீவன்சன் தன்னுடைய எதிருரையில் குறிப்பிட்டிருந்த விவரங்கள் பின்வருமாறு:

(i) தனது தயாரிப்பு ஜின்ஜர் நிரப்பப்பட்ட பாட்டில்கள் எதனொன்றிலும் நுத்தை இருக்கவில்லை;

(ii) கூறப்பட்டுள்ள ஊறுகள் பெருமளவு மிகைப்படுத்தப்பட்டுள்ளது; மனுதாரருக்கு ஏற்பட்ட ஏதேனும் உடல்நலக் குறைவிற்கு அந்நேரத்தில் இருந்த அவரின் மோசமான ஆரோக்கிய நிலையே காரணமாகும்;

(iii) மனுதாரரின் உரிமைக் கோரிக்கை சட்ட அடிப்படை எதனையும் கொண்டிருக்கவிலலை;

(iv) வழக்கில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் நிலை நிறுத்த முடியாதது (could not be substantiated);

(v) மனுதாரருக்கு எந்த ஊறினையும் ஏற்படுத்தவில்லை; மற்றும்;

(vi) மனுதாரர் கோரியுள்ள தொகை மிகவும் அதிகமானது.

குறிப்பாக, பிரதிவாதி தரப்பில் பின்வரும் இரண்டு எதிர்வாதங்கள் நீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்டது.

முதலாவதாக, பிரதிவாதி வாதியின் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமை எதனையும் கொண்டிருக்கவில்லை; மற்றும்;

இரண்டாவதாக, வாதி, பிரதிவாதிக்கு இடையே ஒப்பந்தம் ஏதுமில்லை என்பதால் அவரின் நடவடிக்கை நிலைக்கத்தக்கதல்ல.

அ(3) சட்டப் பின்னணி (Legal background): (இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதிருந்த சட்ட நிலையை அறிந்து கொள்வது, இவ்வழக்கின் பொருட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்). சாதாரணமாக, தயாரிப்புக் குறைபாடுகளின் விளைவாக ஏற்படும் தீங்குகளுக்கு, விற்பவர் மற்றும் நுகர்பவருக்கு இடையேயான விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இழப்பீடு கோரப்படும். ஆனால் டோனாகு ஜின்ஜர் பீர் விற்பனை செய்தவருடன் எந்தவொரு ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அவர் கடை உரிமையாளரிடம் இருந்து (விற்றவர்) ஜின்ஜர் பீரை வாங்கவில்லை. அவரது நண்பர் அதனை வழங்கக் கோரி ஏவியதன் (placed the order) மூலமாக, அவரது நண்பருக்கும் விற்பனையாளருக்கும் இடையே ஓர் உட்கிடையான ஒப்பந்தம் இருப்பதாகக் கொண்டாலும்கூட, அவருக்கு (டோனாகுவின் நண்பருக்கு) எவ்வித ஊறும் நேரவில்லை. மேலும் டோனாகு மற்றும் அவரின் நண்பர் இருவருமே ஜின்ஜர் பீரின் தயாரிப்பாளர் ஸ்டீவன்சனுடன் (பிரதிவாதி) எந்தவொரு ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கவில்லை. எனவேதான் டோனாகு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அல்லாமல் கவனமின்மைத் தீங்கு என்பதன்கீழ் வழக்குத்தொடர வேண்டியிருந்தது.

அ(4) வழக்கின் படிநிலைகள் (Stages of the case): இவ்வழக்கு முதலில் ஸ்காட்லாந்து நீதிமன்றங்களில் நடைபெற்றது. தொடக்கத்தில் அமர்வு நீதமன்றத்தின் வெளிப்புறமன்றத்தில் (outer house of the court of session) டோனாகிற்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்டீவன்சன்

அமர்வு நீதிமன்றத்தின் உட்புறமன்றததில் (Inner house of the Court of Session) மேல்முறையீடு செய்து வெற்றிபெற்றார். அதன் பின்னரே பிரிட்டனில் உரிமையியல் வழக்கு தொடர்பான உச்சநிலை அதிகாரம் கொண்ட பிரபுக்கள் அவையில் டோனாகு இரண்டாவது மேல்முறையீடு செய்தார்.

(ஆ) பிரபுக்கள் அவையின் முடிவு (Decision of House of Lords):

பெருமகனார்கள் 'பக்மாஸ்டர்', 'அட்கின்', 'டாம்லின்', 'தங்கர்டான்' மற்றும் 'மெக்மில்லன்' (Lords Buck master, Atkin, Tomlin, Thankerton & MacMillan) முன்னிலையில் வந்த இவ்வழக்கின் தீர்ப்பு 26.05.1932 தேதியன்று வழங்கப்பட்டது. இவ்வழக்கின் பெரும்பான்மை தீர்ப்புரையை (majority judgment) 'அட்கின்' பெருமகனார் வழங்கினார் (பெருமகனார்கள் 'தங்கர்டன்' மற்றும் 'மெக்மில்லன்' மற்ற இருவர் ஆவர்). பெருமகனார்கள் 'பக்மாஸ்டர்' மற்றும் 'டாம்லின்' இவ்வழக்கின் மாறுபட்ட தீர்ப்புரையை (dissenting judgment) வழங்கியிருந்தனர்.

பிரபுக்கள் அவையின் பெரும்பான்மை மகனார்கள், பிரதிவாதி ஸ்டீவன்சன் தரப்பில் வைக்கப்பட்ட இரண்டு எதிர்வாதங்களை தள்ளுபடி செய்து மற்றும் வாதியின் பொருட்டு பிரதிவாதி செலுத்த வேண்டிய கவனத்தை செலுத்த தவறியதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தனர்.

ஆ(1) வழக்குத்தீர்ப்பில் உருவாக்கப்பட்ட விதிகள் (Rules laid down in this case): இவ்வழக்கில் அட்கின் பெருமகனார் தனது தீர்ப்பில் பின்வரும் இரு முக்கிய விதிகள் அல்லது கொள்கைகளை உருவாக்கினார்:

(a) கருத்தியலான கடமை அல்லது கருத்தமைவு கடமை; மற்றும்;

(b) அயலவர் கொள்கை.

ஆ(1) (a) கருத்தியலான கடமை அல்லது கருத்தமைவு கடமை (Notional duty): இவ்வழக்கில் அட்கின் பெருமகனார் அவர்கள் கடமையைத் தீர்மானிப்பதற்காக வகுத்த விதியே கருத்தமைவு கடமை அல்லது கருத்தியலான கடமை எனப்படுகிறது. இது தொடர்பாக அவர் குறிப்பிட்டதாவது;

"பொதுவாக கவனமின்மைக்கான பொறுப்புநிலை, ஒழுக்கத் தவறான செயலைச் செய்ததற்காக, குற்றமிழைத்தவர் இழப்பீடு செலுத்த வேண்டிய பொது உணர்வை அடிப்படையாகக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒழுக்கநெறி கண்டிக்கும் செயல்கள் (acts) அல்லது செயல் தவிர்ப்புகளினால் (omissions) தீங்குற்ற ஒவ்வொருவருக்கும் நடைமுறையில் பரிகாரம் பெறத்தக்க உரிமை அளித்திருப்பதாகக் கருதமுடியாது. இவ்வாறாக முறையீட்டாளர்கள் (complainants) மற்றும் அவர்களின் தீர்வுக்கான எல்லையை எந்த அளவிற்குள் கட்டுப்படுத்துவது என்பதில் இருந்து சட்டத்தின் விதிகள் எழுகின்றன. 'நீ உன் அயலாரை அன்பு செய்ய வேண்டும்' எனும் விதி (ஒழுக்க விதி), சட்டத்தில், 'நீ உன் அயலாருக்கு ஊறு ஏற்படுத்தக்கூடாது' என்பதாக ஆகிறது. .... அயலாருக்கு ஊறு நேரிடலாம் என நியாயமாக முன்னறியத்தக்க உனது அத்தகைய செயல்கள் அல்லது செயல் தவிர்க்கைகளை, தவிர்ப்பதற்காக

நீ நியாயமான கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.... சட்டத்தில் அயலார் என்பது மிக நெருங்கிய மற்றும் எனது செயலால் பாதிக்கக்கூடிய அதாவது வினாவிற்குரிய செயல்கள் அல்லது செயல் தவிர்க்கைகளின் பக்கமாக எனது மனதை திருப்பும்போது, அவ்வாறு பாதிக்கப்படுவர் எவர் என்று நியாயமாக எதிர்பார்த்திருக்கப்படக்கூடிய அத்தகைய நபர்கள் ஆவர்."

கருத்தியலான கடமை குறித்த மேற்கண்டவாறான அட்கின் பெருமகனாரின் கொள்கையை சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில், ஒருவர் தம் செயலினால் அல்லது செயல் தவிர்க்கையால் அயலாருக்கு ஊறு நேரக் கூடும் என்பதை முன்னறிய முடியுமானால் அத்தகைய ஊறு ஏற்படுவதை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும். இங்கு அயலார் என்பது, ஒருவரது செயலால் நேரடியாகவும், மிக நெருங்கிய முறையிலும் பாதிக்கப்படுபவர்கள் ஆவர். எனவே ஒருவர் ஊறு விளைவிக்கும் செயலை மனதில் நினைக்கும்போதே, அதனால் பாதிக்கப்படவிருப்பவர்களை கவனத்தில் கொண்டு அதனைச் செய்யாமல் தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதுவே கருத்தியலான கடமை என அழைக்கப்படுகிறது.

ஆ(1) (b) அயலவர் கொள்கை (Neighbour principle): கருத்தியல் கடமைக் கொள்கையை வகுத்த பின்பு, எந்த சூழ்நிலைகளில் ஓர் பொருளின் தயாரிப்பாளர், நுகர்வோர் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளார் என்பதை அட்கின் பெருமகனார் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"தாம் உற்பத்தி செய்த பொருள் நுகர்வோரைச் சென்றடைவதற்கு முன்னர், இடைநிலையில் சோதனை செய்வதற்கு நியாயமான வாய்ப்பின்றி, எவ்வித மாற்றமும் இன்றி அதே வடிவத்தில் சென்றடையக் கருதும் தயாரிப்பாளர், அப்பொருளின் தயாரிப்பில் அல்லது விற்பனைக்கு அளிப்பதில் நியாயமான கவனம் காட்டத் தவறினால், அப்பொருளை நுகர்பவரின் உயிருக்கு அல்லது சொத்திற்கு ஊறு ஏற்படும் என்பதையும் அறிந்திருக்கும் அத்தயாரிப்பாளர், நுகர்வோர் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளார்."

பொருள்களை உற்பத்தி செய்பவரைப் பொறுத்தவரை அயலார் என்பது அத்தயாரிப்பு பொருளை இறுதியாக நுகர்பவரைக் குறிக்கும். பொருளின் தயாரிப்பாளர் அதனைத் தயாரிக்கும்பொழுது அல்லது விற்பனைக்கு அளிக்கும்போது குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் என்று தயாரிப்பதோ அல்லது விற்பனைக்கு அளிப்பதோ இல்லை; மாறாக, அப்பொருளை நுகர்பவர் அனைவர் பொருட்டும் அவர் கவனமுடன் இருக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளார். இவ்வாறாக இவ்வழக்கில், பிரதிவாதியின் தரப்பில் ஒப்பந்தக் கடமை ஏதும் இல்லாமல் இருந்தாலும்கூட, வாதியின் பொருட்டு கவனமுடன் அதாவது 'ஜின்ஜர் பாட்டிலில்' கெடுதலான எதுவும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்யும் கடமையைக் கொண்டுள்ளார். இத்தகைய கடமையை மீறியதால் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

டோனாகு வழக்கின் நெறிமுறை (ruling), பொருள்களை தயரிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளோர், தங்களின் பொருள்களை நுகர்பவர்கள் குறித்து கவனமுடன் இருக்க வேண்டிய கடமையை வலியுறுத்துகிறது.

53. 'டோனாகு எதிர் ஸ்டீவன்சன்' என்ற வழக்கில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளைப் பற்றி விளக்குக. [Explain the principle laid down in Donoghue Vs Stevenson) - Nov-2018 (v).

(முந்தைய வினாபிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ(1)'-ன்கீழ் காண்க).

54. கவனமின்மையினை வரையறு. டோனாகு எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கில் பெருமகனார் அட்கின் அவர்களால் ஆக்கப்பட்ட நெறிமுறைகள் யாவை? (Define Negligence. What are the principles laid down by Lord Atkins in the case of Donoghue Vs Stevenson?) - May-2018 (v).

விடைச்சுருக்கம்: (அ) 'கவனமின்மை'- வரையறை (ஆ) டோனாகு எதிர் ஸ்டீவன்சன் வழக்கில் அட்கின் பெருமகனாரால் ஆக்கப்பட்ட நெறிமுறைகள்.

(அ) 'கவனமின்மை' - வரையறை ('Negligence'-Definition of): (வினா எண் 51-க்கு உரிய விடையின் குறுந்தலைப்பு 'அ(ii)'-ல் காண்க).

(ஆ) டோனாகு எதிர் ஸ்டீவன்சன் வழக்கில் அட்கின் பெருமகனாரால் ஆக்கப்பட்ட நெறிமுறைகள் (Principles laid down by Lord Atkins in the case of Donoghue Vs Stevenson): (வினா எண் 52- க்கு உரிய விடையின் குறுந்தலைப்பு ஆ (1)-ல் காண்க).

55. டோனாகு எதிர் ஸ்டீவன்சன் என்ற வழக்கில் அட்கின் பெருமகனார் வழங்கியிருக்கும் 'கருத்தமைவு கடமையையும்', 'அயலவர் கொள்கையையும்' திறனாய்வு செய்க. (Critically examine the 'notional duty' and 'neighbour principle' enunciated by Lord Atkins in Donoghue Vs Stevenson) - May-2013 (v).

விடைச்சுருக்கம்: (அ) கருத்தமைவு கடமை - (ஆ) அயலவர் கொள்கை - (இ) திறனாய்வு - (ஈ) முடிவுரை

(அ) 'கருத்தியலான கடமை' ('Notional duty') (வினா எண் 52-க்கு உரிய விடையின் குறுந்தலைப்பு ஆ(1)(a)-ல் காண்க.

(ஆ) 'அயலவர் கொள்கை' (Neighbour principle): (வினா எண் 52-க்கு உரிய விடையின் குறுந்தலைப்பு ஆ (1)(b)-ல் காண்க).

(இ) திறனாய்வு (Criticism):

அட்கின் பெருமகனார் இவ்வழக்கில் வகுத்த கருத்தமைவு கடமை மற்றும் அயலவர் கொள்கையை முறையாக ஆய்வு செய்வதற்கு, இவ்வழக்கிற்கு முன்னர் நடைமுறையில் இருந்த சட்ட நிலையை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இவ்வழக்கிற்கு முன்னர், நபர்களுக்கு இடையே ஒப்பந்தம் ஏதும் இல்லாதபோது அரிதான சூழ்நிலைகள் தவிர, மற்ற பிற அனைத்து சூழ்நிலைகளிலும், ஒருவரின் கவனமின்மையால், மூன்றாம் நபருக்கு ஏற்படும் ஊறிற்காக இழப்பீடு கோர முடியாது என்பதே நடைமுறையில் இருந்தது. பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

Heaven Vs Pender, (1883) 11 QBD 503., என்ற வழக்கில்,.... "சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில், நபர்களுக்கு இடையே ஒப்பந்தம் ஏதும் இல்லாமல் இருந்தாலும்கூட, ஒருவர் மற்றொருவர் பொருட்டு ஓர் கடமையைக் கொண்டிருக்கலாம். ஒரு நபர் மற்றொரு நபருக்கு அருகில் அல்லது மற்றொரு நபரின் சொத்துக்கு அருகில் இருக்கும்போது, அந்நபருக்கு தனிப்பட்ட ஊறு விளைவிக்கும் அல்லது அவரின் சொத்துக்கு இழப்பு ஏற்படும் எந்தவொரு செயலையும் செய்யாது இருக்கும் கடமையைக் கொண்டுள்ளார்" என எஷர் பிரபு (Lord Esher) குறிப்பிட்டார். இருப்பினும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்த மற்ற இரண்டு நீதிபதிகள் (பெரும்பான்மை) எஷர் பிரபுவின் இத்தகைய அணுகுமுறையை நிராகரித்ததால், எஷர் பிரபுவின் கொள்கை சட்ட அங்கீகாரம் (legal recognition) பெறவில்லை. **Le Lievre Vs Gould, (1893) 1 QBD 491.,** என்ற வழக்கில் எஷர் பிரபு மீண்டும் தனது கொள்கையை அறிமுகப்படுத்த முயன்றும் வெற்றி பெற முடியவில்லை. இவ்வழக்கில், ஒப்பந்தம் இல்லாமலும்கூட கடமை எழலாம் என்பதை இறைவனே ஏற்படுத்தியுள்ளார் என்றும் அத்தகைய கடமை, தரப்பினர்களுக்கு இடையேயான நெருங்கியத் தன்மையினின்று எழுகிறது என்றும் தீர்ப்பின் புறவுரையில் (obiter dicta - அதாவது முடிவுக்கு தேவையற்ற கருத்து) குறிப்பிட்டிருந்தார்.

டோனாகு வழக்கிற்கு சற்று முன்னரான காலத்தில் அமர்வு நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்பட்ட **Mullen Vs AG Barr & Co. Ltd., 1929 SC (Scotland Cases) 461.,** என்ற வழக்கில், பொருள்களை உற்பத்தி செய்வோர் அதனை இறுதியாக நுகர்பவர்கள் பொருட்டு கவனமுடன் இருக்க வேண்டிய கடமை (duty of care) பின்வரும் இரண்டு விதமான சூழ்நிலைகளில் மட்டுமே உள்ளதாக குறிப்பிடப்பட்டது. முதலாவதாக, தரப்பினர்கள் இடையே ஒப்பந்த உறவு இருக்கும் அத்தகைய சூழ்நிலைகள்; இரண்டாவதாக, உற்பத்திப் பொருளின் அபாயம் பற்றி அறிந்திருந்தும் அவ்விவரத்தை வேண்டுமென்றே அல்லது கருதியே நுகர்வோருக்கு அளிக்காமல் இருத்தல் (இது மோசடி என்பதன் பேரில் வழக்கு தொடரத்தக்கதாகும்) அல்லது வெடிமருந்துகள் போன்று சிலக்குறிப்பிட்ட

உள்ளார்ந்த அபாயகரமான பொருட்கள் பற்றிய எச்சரிக்கை வாசகம் இடம் பெறாத தயாரிப்புகள். எவ்வாறிருப்பினும், உற்பத்திப்பொருள் குறித்த பொறுப்பு நிலையை முடிவு செய்வதற்கான வழக்குகளில் கவனமின்மையை கண்டுபிடிக்கக்கூடிய இவ்விரு சூழ்நிலைகளையும் டோனாகு வழக்கிற்கு பொருந்தச் செய்ய முடியாது. எனெனில், 'ஜின்ஜர் பீர்' உள்ளார்ந்த அபாயம் ஏதும் கொண்டிராதது என்பதுடன் ஸ்டீவன்சன் 'ஜின்ஜர் பீரில்' இருந்த அபாயம் பற்றி அறிந்திருந்தே ஏதும் திரித்துக் கூறவில்லை.

தீங்கியல் தொடர்பான வழக்கு ஒவ்வொன்றிலும், வாதியின் சட்டப்படியான உரிமையியல் உரிமை பிரதிவாதியால் மீறப்பட்டதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். இதனையே வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், பிரதிவாதிக்கு வாதியின் பால் கடமை ஏதேனும் உள்ளதா அல்லது இல்லையா என்பது தீர்மானிக்கப்படவேண்டும். ஏதேனும் இயற்றுச் சட்டம் (legislation) அல்லது முன்தீர்ப்பு நெறியின் (precedent) வாயிலாக கடமை உள்ளது என்பது நன்கு நிலை நிறுத்தப்பட்டிருந்தால், நீதிபதியின் பணி எளிதாகிவிடும். ஆனால் வினாவிற்குரிய கடமை குறித்து முன்தீர்ப்பு நெறியாக பின்பற்றுவதற்கான அல்லது அக்குறிப்பிட்ட கருத்து (point) குறித்து வழக்குகள் ஏதுமில்லாத நிலையில் நீதிபதியின் பணி சற்று கடினமாகிவிடும். இத்தகைய பின்னணியில் அட்கின் பெருமகனார் வகுத்த கருத்தமைவு கடமை மற்றும் அயலவர் கொள்கையை நோக்கும்போது, இது தீங்கியல் சட்ட வளர்ச்சியில் ஓர் மைல் கல் என்பது தெரிய வருகிறது. கருத்தமைவுக் கடமையின் நீட்சியே (extension) அயலவர் கொள்கையாகும்.

(ஈ) முடிவுரை (Consulsion):

'சமூகப் பொறியியலே' (Social Engineering) தீங்கியல் சட்டத்தின் முதன்மை நோக்கமாகும் என்று பேராசிரியர் வில்லியம் எல். பிராசர் (Prof. William L.Prosser) குறிப்பிடுகிறார். [பொறியாளர்கள் ஓர் முறையான அல்லது தாங்கள் விரும்புகின்ற வடிவத்தைப் பெறுவதற்காக, இரும்பு, கம்பி போன்றவைகளை இணைத்து (welding), முனைகளில் இருக்கும் தேவையற்ற பிசுறுகளை நீக்கி (grinding) உருவாக்குவதுபோல, சமுதாயத்தில் உள்ள மக்களிடையே சீரான நடத்தையை பராமரிப்பதற்காக, தனிப்பட்ட நபர்களின் வேறுபட்ட உரிமைகள் மற்றும் நடத்தைகளை தீங்கியல் சட்டம் முறைப்படுத்துவதால், பேராசிரியர் வில்லியம்ஸ் எல்.பிராசர் இவ்வாறு குறிப்பிடுகிறார்]. தனிப்பட்ட நபர்களின் பல்வேறு வகையான உரிமைகள், பல்வேறு வகையான நடத்தைகள் உள்ளடக்கிய சமுதாய வாழ்க்கையில், எப்போது இழப்பீடு செலுத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு பொதுவான ஓர் வழிகாட்டுக் கொள்கையை (single guiding principle) வகுப்பது என்பது எளிதானதன்று. அவ்வாறு ஏதேனும் ஒன்று இருக்குமானால், அது கண்டிப்பாக **சமுதாயத்தினால் நியாயமற்றது (socially unreasonable)** எனும் நடத்தையின் அடிப்படையில் அமைந்த பொறுப்பு நிலையாகவே இருக்க முடியும் என்று பேராசிரியர் வில்லியம்ஸ் எல்.பிராசர் குறிப்பிடுகிறார். அட்கின் பெருமகனார் வகுத்த கருத்தமைவு கடமை மற்றும்

அயலவர் கொள்கைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படும் தீங்கியல் பொறுப்பு நிலையும், சமுதாயத்தினால் நியாயமற்றது எனும் நடத்தையின் அடிப்படையில் அமைந்த பொறுப்பு நிலையே ஆகும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, இவ்வழக்கில் அட்கின் பெருமகனார் வகுத்துள்ள இக்கொள்கைகள் தீங்கியல் சட்டத்தின் முதன்மை நோக்கத்தை நிறைவேற்றுவதாக உள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

56. 'செயலே செப்பும் பொருளே புகலும்' என்று கோட்பாட்டை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்க. (Discuss the doctrine of 'Res ipsa loquiter' in the light of decided cases) - Nov-2014(v).

SN - 73 செயலே செப்பும் பொருளே புகலும் அல்லது தன்னிலை இயம்பும் நிகழ்வு / Res ipsa loquiter., May-2019, May-2017(v), May-2016, May-2013 (v).

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை - (ஆ) 'செயலே செப்பும் பொருளே புகலும்' - விளக்கம் - (இ) கோட்பாட்டினை பொருந்தச் செய்வதற்கான முக்கியக்கூறுகள் - (ஈ) கோட்பாட்டிற்கான கட்டுப்பாடுகள்

(அ) முன்னுரை (Introduction):

பிரதிவாதியின் கவனக்குறைவை வாதியே மெய்ப்பிக்க வேண்டும் என்பது ஓர் பொதுவான விதியாகும். பிரதிவாதியின் கவனமின்மைக் குறித்து குறைந்தபட்சம் முதற்தோற்ற வழக்கிருப்பதைக் காட்டும் ஆரம்பச்சுமை முற்றிலுமாக வாதியையேச் சாரும். ஆனால் அத்தகைய கடமையை வாதி நிறைவேற்றியவுடன், அத்தகையநிகழ்வு, ஓர் தவிர்க்க முடியாத விபத்து அல்லது வாதியின் தரப்பிலான தற்கவனமின்மையால் நிகழ்ந்தது என்பதை பிரதிவாதியே மெய்ப்பிக்க வேண்டும். பிரதிவாதியின் தரப்பிலான கவனமின்மையை வாதியால் மெய்ப்பிக்க முடியாமல் இருப்பின், பிரதிவாதியை பொறுப்பாக்க முடியாது. இவ்வாறு, வாதி தனக்கு முதற்தோற்ற வழக்குள்ளது என்பதை மெய்ப்பிக்காதபோது மற்றும் பிரதிவாதியின் கவனக்குறைவிற்கான சான்று ஏதுமில்லாதபோது வாதியின் வழக்கு கண்டிப்பாக தோல்வியுறும்.

(ஆ) 'செயலே செப்பும் பொருளே புகலும்' எனும் கோட்பாட்டின் விளக்கம் (Explanation of the doctrine 'res ipsa loquiter'):

பொதுவாக வாதியே பிரதிவாதியின் தரப்பிலான கவனமின்மையை மெய்ப்பிக்கும் சுமையைக் கொண்டுள்ளார். இப்பொதுவான விதிக்கு ஓர் விலக்கே (exception) செயலே செப்பும் பொருளே புகலும் எனும் கோட்பாடாகும். சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் வாதி பிரதிவாதியின் கவனமின்மையை மெய்ப்பிக்கத் தேவையில்லை. ஏனெனில் இத்தகைய நேர்வுகளில் பிரதிவாதியின்

அயலவர் கொள்கைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படும் தீங்கியல் பொறுப்பு நிலையும், சமுதாயத்தினால் நியாயமற்றது எனும் நடத்தையின் அடிப்படையில் அமைந்த பொறுப்பு நிலையே ஆகும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, இவ்வழக்கில் அட்கின் பெருமகனார் வகுத்துள்ள இக்கொள்கைகள் தீங்கியல் சட்டத்தின் முதன்மை நோக்கத்தை நிறைவேற்றுவதாக உள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

56. 'செயலே செப்பும் பொருளே புகலும்' என்று கோட்பாட்டை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்க. (Discuss the doctrine of 'Res ipsa loquiter' in the light of decided cases) - Nov-2014(v).

SN - 73 செயலே செப்பும் பொருளே புகலும் அல்லது தன்னிலை இயம்பும் நிகழ்வு / Res ipsa loquiter., May-2019, May-2017(v), May-2016, May-2013 (v).

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை - (ஆ) 'செயலே செப்பும் பொருளே புகலும்' - விளக்கம் - (இ) கோட்பாட்டினை பொருந்தச் செய்வதற்கான முக்கியக்கூறுகள் - (ஈ) கோட்பாட்டிற்கான கட்டுப்பாடுகள்

(அ) முன்னுரை (Introduction):

பிரதிவாதியின் கவனக்குறைவை வாதியே மெய்ப்பிக்க வேண்டும் என்பது ஓர் பொதுவான விதியாகும். பிரதிவாதியின் கவனமின்மைக் குறித்து குறைந்தபட்சம் முதற்தோற்ற வழக்கிருப்பதைக் காட்டும் ஆரம்பச்சுமை முற்றிலுமாக வாதியையேச் சாரும். ஆனால் அத்தகைய கடமையை வாதி நிறைவேற்றியவுடன், அத்தகையநிகழ்வு, ஓர் தவிர்க்க முடியாத விபத்து அல்லது வாதியின் தரப்பிலான தற்கவனமின்மையால் நிகழ்ந்தது என்பதை பிரதிவாதியே மெய்ப்பிக்க வேண்டும். பிரதிவாதியின் தரப்பிலான கவனமின்மையை வாதியால் மெய்ப்பிக்க முடியாமல் இருப்பின், பிரதிவாதியை பொறுப்பாக்க முடியாது. இவ்வாறு, வாதி தனக்கு முதற்தோற்ற வழக்குள்ளது என்பதை மெய்ப்பிக்காதபோது மற்றும் பிரதிவாதியின் கவனக்குறைவிற்கான சான்று ஏதுமில்லாதபோது வாதியின் வழக்கு கண்டிப்பாக தோல்வியுறும்.

(ஆ) 'செயலே செப்பும் பொருளே புகலும்' எனும் கோட்பாட்டின் விளக்கம் (Explanation of the doctrine 'res ipsa loquiter'):

பொதுவாக வாதியே பிரதிவாதியின் தரப்பிலான கவனமின்மையை மெய்ப்பிக்கும் சுமையைக் கொண்டுள்ளார். இப்பொதுவான விதிக்கு ஓர் விலக்கே (exception) செயலே செப்பும் பொருளே புகலும் எனும் கோட்பாடாகும். சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் வாதி பிரதிவாதியின் கவனமின்மையை மெய்ப்பிக்கத் தேவையில்லை. ஏனெனில் இத்தகைய நேர்வுகளில் பிரதிவாதியின்

கவனக்குறைவு பொருண்மைகளில் இருந்தே அனுமானிக்கப்படுகிறது. அதாவது, வாதி விபத்து நிகழ்ந்ததை மட்டும் மெய்ப்பித்தால் போதுமானது; சட்டம், அவ்விபத்து நிகழ்ந்த விதத்தில் இருந்தே பிரதிவாதியே கவனக்குறைவாக செயல்பட்டுள்ளார் என்பதை அனுமானித்துக் கொள்கிறது. கவனமின்மைக் குறித்த நேரடிச்சான்று அனைத்து நேர்வுகளிலும் அவசியமானதன்று மற்றும் அதனை வழக்கின் சூழ்நிலைகளில் இருந்தே பெறப்பட முடியும். 'செயலே செப்பும் பொருளே புகலும்' (res ipsa loquiter, i.e., 'the thing speaks for itself') என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப கவனமின்மை அனுமானிக்கப்படுகிறது. ஓர் விபத்து ஒன்று நிகழ்ந்திருக்கும்போது பிரதிவாதியின் கவனமின்மையை சட்டமே அனுமானிக்கிறது. இவ்வாறு சேதத்தை ஏற்படுத்திய பொருளைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அக்குறிப்பிட்ட நேரத்தில், பிரதிவாதி அல்லது அவரின் பணியாட்களின்கீழான முழுமையான கட்டுப்பாட்டிலும் மற்றும் பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு இல்லாமல் சாதாரணமாக அத்தகைய நிகழ்வு நடந்திருக்க முடியாது என்றிருக்கும்போதும் இக்கோட்பாடு பொருந்தும். இத்தகைய நேர்வுகளில் மெய்ப்பிக்கும் சுமை வாதியிடமிருந்து பிரதிவாதிக்கு மாறிவிடுகிறது. செயலே செப்பும் பொருளே புகலும் என்ற கொள்கை **Scott Vs London and St.Catherine Docks Co., (1865) 3 H&C 596.,** என்ற வழக்கில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில், "விபத்திற்கு காரணமான பொருள் பிரதிவாதி அல்லது அவரின் பணியாளர்களின் மேலாண்மையின்கீழ் உள்ளபோது மற்றும் அதனை மேலாண்மை செய்தோர் முறையாக பயன்படுத்தியிருந்தால் விபத்து நிகழ்ந்திருக்காது என்பதற்கு நியாயமான சான்று பெறப்படுவதாக இருக்கும்போது, பிரதிவாதிகளினால் தகுந்த விளக்கம் அளிக்கத்தவறும்போது அவ்விபத்து பிரதிவாதிகளின் கவனக்குறைவு காரணமாக நிகழ்ந்துள்ளது என அனுமானிக்கப்படும்" என்று கூறப்பட்டது. இவ்வழக்கில் பாரந்தூக்கியிலிருந்து ஆறு சர்க்கரை மூட்டைகள், துறைமுக மேடையிலிருந்த பிரதிவாதியின் கிடங்கின் முன் சென்று கொண்டிருந்த சுங்கத்துறை அலுவலர் (வாதி) மீது விழுந்தது. இது கவனமின்மைக்கான நியாயமான சான்றாகும் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

(இ) கோட்பாட்டினை பொருந்தச் செய்வதற்கான அவசியக்கூறுகள் (Essential requisites for the application of the doctrine):

செயலே செப்பும் பொருளே புகலும் எனும் கோட்பாட்டை பொருந்தச் செய்வதற்கு பின்வரும் மூன்று கூறுகள் இருப்பது அவசியமாகும்:

(1) விபத்திற்கு காரணமாக அமைந்த பொருள் பிரதிவாதி அல்லது அவருடைய பணியாளின் தனிமுறையிலான (exclusive) மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் இருந்திருக்க வேண்டும்;

(2) அப்பொருள் பிரதிவாதியின் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் இருந்தபோது நடந்த விபத்தானது, சாதாரணமாக கவனமின்மை தவிர வேறு காரணங்களினால் நிகழ்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கும்படியானதாக இருக்க வேண்டும்; மற்றும்;

(3) பிரதிவாதியால் தகுந்த விளக்கம் அளிக்க முடியாமல் இருக்க வேண்டும்.

இ(1) பிரதிவாதியின் தனிமுறையிலான மேலாண்மை மற்றும் கட்டுப்பாடு (Exclusive management and control of defendant): தீங்கு நிகழ்ந்ததற்கான அல்லது விபத்து நிகழ்ந்ததற்கு காரணமான பொருள் பிரதிவாதியின் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே இக்கோட்பாடு பொருந்தும். ஏனெனில் விபத்திற்கு காரணம் அவரின் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள பொருளை முறையான கவனத்துடன் அவர் கையாளவில்லை என்ற நியாயமான அனுமானத்திற்கு இது அடிப்படையாக அமைகிறது. **State of Punjab Vs Mst. Champa, AIR 1977 Punj 373.,** என்ற வழக்கில், தரையில் விழுந்திருந்த மின்னோட்டம் பாய்ந்து கொண்டிருந்த மின் கம்பியை (wire) கடைக்காரர் ஒருவர் அதனைக் கடந்து செல்லும்போது ஏற்பட்ட தொடர்பினால் (contact) மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அவரின் தாய் மின்சாரவாரியத்திற்கு எதிராக தொடர்ந்த வழக்கில், மின்கம்பங்கள் மற்றும் அதனின்று செல்லும் மின்கம்பிகள் ஆகியவற்றின் தனிமுறையிலான மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டை பிரதிவாதிகளான மாநில மின்சார வாரியமே கொண்டிருப்பதால் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Municipal Corporation of Delhi Vs Subhagwanti, AIR 1966 SC 1750.,** என்ற வழக்கில், டெல்லியிலிருந்த மணிக்கூண்டு கட்டிடம் இடிந்து விழுந்து சுபக்வாந்தியின் கணவர் உட்பட குறிப்பிட்ட சில நபர்கள் உயிரிழந்தனர். செயலே செப்பும் பொருளே புகலும் கோட்பாடு இவ்வழக்கிற்கு பொருந்தும் என்பதை உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. இடிந்து விழுந்த கட்டிடம் டெல்லி மாநகராட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததும், 40-ல் இருந்து 45 ஆண்டுகள் வரை நிலைததன்மை கொண்டிருக்கக் கூடிய கட்டிடத்தை, எவ்வித பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் 80 ஆண்டுகள் வரை அனுமதித்தது கவனக்குறைவே என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

இ(2) விபத்தானது, கவனமின்மை இல்லாமல் நிகழ்ந்திருக்க முடியாது என்பதாக இருக்க வேண்டும் (Accident must be such as would not happen without negligence): ஓர் நிகழ்வை அல்லது விபத்தை பார்த்த மாத்திரத்தில், பிரதிவாதியின் கவனக்குறைவு இல்லாமல் அந்நிகழ்வு அல்லது விபத்து சாதாரணமாக ஏற்பட்டிருக்க முடியாது என்று அனுமானிக்கக்கூடியதாக உள்ள அத்தகைய நேர்வுகளுக்கு மட்டுமே இக்கோட்பாடு பொருந்தும். **Skinner Vs London, Britain and South Coast Rly, (1850) 5 Ex 787.,** என்ற வழக்கில் ஒரே நிறுவனத்தைச் சார்ந்த இரண்டு இரயில்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. இதன் காரணமாக அவற்றுள் ஒன்றில் பயணித்த வாதிக்கு காயங்கள் ஏற்பட்டது. பிரதிவாதியின் கவனமின்மைக்கு முதற் தோற்ற சான்றுள்ளதால் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Permeshwari Das Vs Soman Devi., AIR 1960 Punj 392., என்ற வழக்கில், பொருள்களை ஏற்றிச் செல்லும் தனியார் மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானது. வண்டியின் 'ஸ்டீரிங் வீலை'யும் (Steering wheel) மோட்டார் வாகனத்தின் சக்கரங்களையும் இணைக்கும் கம்பியின் (tie rod) குறைபாடே அவ்விபத்திற்கு காரணமாகும். செயலே செப்பும் பொருளே புகலும் கோட்பாடு இவ்வழக்கிற்கு முழுமையாகப் பொருந்தும் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், விபத்து, ஓர் தவிர்க்க முடியாத விபத்து என்பதை மெய்ப்பிக்கும் சுமை மோட்டார் வாகனத்தின் உரிமையாளரையேச் சாரும் என்பதையும் குறிப்பிட்டது. **P.A.Narayanan Vs Union of India, (1998) 3 SCC 6.,** என்ற வழக்கில், முதல் வகுப்பில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டைப் பெற்று மகளிருக்கான முதல் வகுப்புப் பெட்டியில் பெண் ஒருவர் அமர்ந்திருந்தார். இரயில் நகரத் தொடங்கியதும், நான்கு நபர்கள் அப்பெட்டியினுள் நுழைந்து அப்பெண் அணிந்திருந்த நகைகளை பறித்துக்கொண்டனர். அப்பெண் அபாயச் சங்கிலியை பிடித்து இழுத்தபோது எச்சரிக்கை மணி ஒலித்தும்கூட, ரயில்வே காப்பாளரோ அல்லது ஓட்டுநரோ இரயிலை நிறுத்தவில்லை. குற்றவாளிகள் அப்பெண்ணை காயப்படுத்தியதுடன் வன்புணர்ச்சி (rape) செய்ததன் விளைவாக அவர் உயிரிழந்தார். இரயில்வே பணியாளர்களின் கவனக்குறைவான செயல், செயலே செப்பும் பொருளே புகலும் கோட்பாட்டிற்கு உட்பட்டது என்றும், உயிரிழந்த பெண் அபாயச் சங்கிலியை இழுத்த போதே இரயில் வண்டியை நிறுத்தியிருந்தால் வன்புணர்ச்சி நிகழ்வும் அதனைத் தொடர்ந்த அவரின் உயிரிழப்பும் ஏற்பட்டிருக்காது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும் மைய அரசு உயிரிழந்தவரின் கணவருக்கு ரூபாய் இரண்டு லட்சத்தை இழப்பீடாக செலுத்த வேண்டும் என்பதையும் தீர்ப்பில் குறிப்பிட்டது.

இ(3) பிரதிவாதியால் தகுந்த விளக்கம் அளிக்க முடியாமல் இருக்க வேண்டும் (No proper explanation by the defendant): கவனமின்மை தன் தரப்பில் உள்ளதாக அனுமானிக்கப்படுவதை தவறென மெய்ப்பிக்கும் வகையில் பிரதிவாதி விபத்து நிகழ்ந்ததை விளக்குவாரேயானால் இக்கோட்பாட்டை பொருந்தச் செய்ய முடியாது. மேலும் தன் தரப்பில் கவனமின்மை இல்லாமல் இருந்தாலும்கூட விபத்து நிகழ்ந்திருக்கும் என்பதை முறையாக விளக்கினாலும் இக்கோட்பாட்டை பொருந்தச் செய்ய முடியாது. இவற்றினின்று விபத்திற்கு பிரதிவாதியால் தகுந்த விளக்கம் அளிக்க முடியாத அத்தகைய நேர்வுகளுக்கு மட்டுமே செயலே செப்பும் பொருளே புகலும் எனும் கோட்பாடு பொருந்தும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

Union of India Vs Rajendra Mills, AIR 1971 Mad 53., என்ற வழக்கில், எதிர்நோக்கு அபாயம் இரயில்வே துறையைச் சார்ந்தது (Railway risk) என்பதன்கீழ் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்காக இரயில்வே துறையினரால் பெறப்பட்ட பொருள்கள் தீயினால் சேதமுற்றது. இரயில்வே நிருவாகம் கூடுமான கவனம் செலுத்தப்பட்டது என்பதை

மெய்ப்பிக்க முடியவில்லை. நீதிமன்றம் செயலே செப்பும் பொருளே புகலும் கோட்பாடு பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டது. **Collector of Ghanjan Vs Chandrama Das, AIR 1975 Ori. 205.,** என்ற வழக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட 'பால்கனியை தாங்கி நிற்கும் தூண்களிலான முன்தாழ்வாரப் பகுதி விழுந்ததில், சைக்கிளை நிறுத்திக் கொண்டிருந்த நோயாளியின்மீது விழுந்ததில் அவர் உயிரிழந்தார். புதிதாகக் கட்டப்பட்ட தாழ்வாரம் எப்படி விழுந்தது என்பதை முறையாக விளக்குவதற்கு அரசு தவறியதால், உயிரிழந்தோரைச் சார்ந்திருந்தோருக்கு அரசு பொறுப்பு கொண்டுள்ளது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) 'செயலே செப்பும் பொருளே புகலும்' கோட்பாட்டிற்கான கட்டுப்பாடுகள் (Limitations to the doctrine res ipsa loquitor): செயலே செப்பும் பொருளே புகலும் கோட்பாடு பின்வரும் கட்டுப்பாடுகள் அல்லது வரம்புகளுக்கு உட்பட்டது:

(1) இக்கோட்பாடு, அனைத்து விபத்துகள் அல்லது தீங்குகளுக்கும் பொருந்தாது. தீங்கு அல்லது விபத்து ஏற்படுத்திய பொருள் பிரதிவாதியின் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ளபோதும் மற்றும் அதனை மேலாண்மை செய்வோர் முறையாக கவனம் செலுத்தியிருந்தால் அத்தகைய தீங்கு அல்லது விபத்து ஏற்பட்டிருக்காது என்பது போன்ற நேர்வுகளுக்கு மட்டுமே பொருந்தும்.

(2) இக்கோட்பாடு கவனமின்மை குறித்த ஓர் சட்ட அனுமானத்தை (legal presumption) ஏற்படுத்தாது. இது பிரதிவாதியால் தவறென மெய்ப்பிக்கக்கூடிய கவனமின்மைக் குறித்த சட்ட அனுமானமே தவிர, தவறென மெய்ப்பிக்கப்பட முடியாத (irrebuttable) அல்லது அறுதியான (conclusive) அனுமானம் அல்ல.

(3) இக்கோட்பாட்டின்படி, வாதி முதலில் தீங்கு அல்லது விபத்து ஏற்பட்டிருப்பதை மெய்ப்பித்தால் போதுமானது. வாதி விபத்தை மெய்ப்பித்தால், அவர் கவனமின்மைக் குறித்து தக்க சான்று அளித்துள்ளதாகக் கருதப்படும். மேலும் அதன்மூலம் அவரின் மெய்ப்பிக்கும் சுமையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் மற்றும் நீதிமன்றம் விபத்து மெய்ப்பிக்கப்பட்டவுடன், பிரதிவாதி அதனை தவறென மெய்ப்பிப்பதற்கான சான்று அளிக்காமல் இருப்பின், மேற்கொண்டு கூடுதல் சான்று ஏதுமில்லாமல் அல்லது கவனமின்மைக்கான சான்றுறுதி (proof) இல்லாமலேயே வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கும். எனவே இக்கோட்பாடு, கவனமின்மையை மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து முழுமையாக விடுவித்துவிடாது.

(4) இக்கோட்பாட்டின்கீழ் பிரதிவாதி தன் தரப்பில் கவனக்குறைவு ஏதுமில்லாமலேயே விபத்து நடந்திருக்கலாம் என்பதைக்காட்ட முடிந்தால், பின்னர் வாதியே பிரதிவாதியின் கவனமின்மையை மெய்ப்பிக்க வேண்டும்.

(5) ஓர் விபத்து அல்லது நிகழ்வு குறித்து வேறுபட்ட அனுமானங்கள் பெறப்படுவதற்கு வாய்ப்புள்ள அத்தகைய நேர்வுகளுக்கு இக்கோட்பாடு

பொருந்தாது. இதேபோன்று சூழ்நிலைகள் விபத்து தொடர்பான தெளிவான நிலையை அடையாளம் காட்டாதபோது, ஆனால் குறிப்பிட்ட வேறு காரணங்களால் விபத்து ஏற்பட்டிருப்பதற்கு வாய்ப்புள்ள அத்தகைய நேர்வுகளில் இக்கோட்பாடு பொருந்தாது.

57. கவனமின்மை என்றால் என்ன? தன்பாற் கவனமின்மையைப் பற்றி விவாதிக்கவும். (Define negligence. Discuss about contributory negligence) - May-2018

SN - 74 தன்பாற் கவனமின்மை அல்லது தற்கவனமின்மை / Contributory negligence. Nov-2017 (v), Nov-2018 (v), May-2019 (v).

விடைச்சுருக்கம்: (அ) கவனமின்மை - (ஆ) தற்கவனமின்மை – (இ) தற்கவனமின்மை கோட்பாட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் – இ (1) இறுதி வாய்ப்புக்கோட்பாடு – இ (2) இழப்பீடு பகிர்வுக் கோட்பாடு

(அ) 'கவனமின்மை'- வரையறை (Negligence Definition of): (பக்கம் 240-ல் காண்க).

(ஆ) தன்பாற் கவனமின்மை அல்லது தற்கவனமின்மை (Contributory negligence)

பொதுவாக, பிரதிவாதியின் கவனமின்மையால் வாதிக்கு ஏற்படும் ஊறுகளுக்கு, சட்டம், பிரதிவாதியை பொறுப்பேற்கச் செய்கிறது. ஆனால் சில நேரங்களில் வாதிக்கு ஏற்பட்ட ஊறு பிரதிவாதியின் கவனமின்மையால் ஏற்பட்டதென்று கூறமுடியாது; மாறாக, வாதியின் கவனமின்மையும் சேர்ந்ததால் அவருக்கு ஊறு ஏற்பட்டிருக்கலாம். ஆக, பிரதிவாதியின் தரப்பில் கவனமின்மை இருந்தது என்றாலும்கூட, வாதி உரிய கவனத்துடன் செயல்பட்டிருந்தால் அவருக்கு ஊறு ஏற்பட்டிருக்காது என்பதை நோக்கும்போது, வாதியும் தன்னைக் காத்துக் கொள்ளத் தவறியதே அவருக்கு ஏற்பட்ட ஊறுக்கு காரணமாகிறது. ஒவ்வொரு நபரும் தம்மைக் காத்துக் கொள்ள உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கிறது. எனவே பிரதிவாதியின் தரப்பில் கவனமின்மை இருந்தாலும்கூட, வாதி உரிய கவனம் செலுத்தியிருந்தால் தன்னை தற்காத்துக் கொண்டிருக்க முடியும் என்று கூறக்கூடிய நேர்வுகளில், உட்கிடையாக வாதி உரிய கவனம் செலுத்த தவறிவிட்டார் என்று பொருளாகிறது. தன்னை பாதுகாத்துக் கொள்வதில் உரிய கவனம் செலுத்தாத வாதியின் கவனமின்மையே தற்கவனமின்மை அல்லது தன்பாற் கவனமின்மை எனப்படுகிறது. கவனமின்மைத் தீங்கிற்காக பிரதிவாதிக்கு எதிராக இழப்பீடு கோரி வாதி தொடரும் வழக்கொன்றில், வாதி உரிய கவனம் செலுத்தி அவரை தற்காத்துக்கொள்ள தவறிவிட்டார் என்பதை பிரதிவாதி மெய்ப்பித்தால், தீங்கியல் சட்டத்தின்கீழ் அவர் பொறுப்பு நிலையில் இருந்து

விடுபடுவார். எனவே வாதியின் தற்கவனமின்மை பிரதிவாதிக்கு ஓர் பலனுள்ள எதிர்வாதமாகும்.

தற்கவனமின்மை என்பது, பிரதிவாதியின் கவனமின்மையில் இருந்து எழும் விளைவினைத் தடுப்பதற்கு, வாதிக்கு உரிய வழி மற்றும் வாய்ப்பு இருந்தும் அதனைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தத் தவறுவதைக் குறிக்கும். உண்மையில் இது பிரதிவாதியின் கவனமின்மையின் விளைவைத் தவிர்த்திருக்கக்கூடிய அத்தகைய சாதாரண கவனம், சிரத்தை மற்றும் திறமையை வாதி செயல்படுத்தாமல் இருப்பதாகும். எனவே தற்கவனமின்மையில் உண்மையில் இருதரப்பின் (அதாவது வாதி மற்றும் பிரதிவாதி) பேரிலும் கவனமின்மை இருக்கும். ஹால்ஸ்புரி பிரபு (Lord Halsbury) குறிப்பிட்டிருப்பது போல, தற்கவனமின்மை விதி, "இரு தரப்பும், தவறுக்கு சமமாக பொறுப்பாகும்போது, எவரொருவரும் மற்றொருவரை பொறுப்பாகுவார் எனக்கூற முடியாது" (in pari delicto potior est conditio defendantis - i.e., where both parties are equally to blame, neither can hold the other liable) எனும் மூதுரையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஆங்கிலச் சட்டத்தில் தற்கவனமின்மை என்னும் விதி முதன்முதலாக 1809 ஆம் ஆண்டில் **Butterfield Vs Forrester, (1809) 11 East 60.,** என்ற வழக்கில் வெளிப்படுத்தப்பட்டது. இவ்வழக்கில், பிரதிவாதி தன் வீட்டில் பழுதுபார்க்கும் வேலை செய்யும் நோக்கத்திற்காக, தவறுதலாக நெடுஞ்சாலையின் ஓர் பகுதியை கம்பம் (pole) வைத்து குறுக்கே தடுத்திருந்தார். மாலை நேரத்தில், குதிரைமீது வேகமாக வந்து கொண்டிருந்த வாதி அக்கம்பத்தினால் தடுக்கப்பட்டதில், குதிரையிலிருந்து தூக்கியெறியப்பட்டு கீழே விழுந்ததில் பலத்த காயமுற்றார். உண்மையில் அப்போதிருந்த வெளிச்சத்தில் 100 கெஜ (100 yards) தூரத்தில் இருந்தே சாலையின் குறுக்கே கம்பம் இருப்பது தெளிவாகத் தெரியக்கூடியதாக இருந்தது. நீதிமன்றம், வாதி உரிய கவனம் செலுத்தியிருந்தால் விபத்தை தவிர்த்திருக்க முடியும் என்றும் எனவே பிரதிவாதிக்கு எதிராக வாதி வழக்குமூலம் (cause of action) ஏதும் கொண்டிருக்கவில்லை என்றும் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தலைமை நீதிபதி எல்லன்பரோ (Ellenborough CJ) "ஒரு நபர் தன் தரப்பில் சாதாரண கவனத்தை பயன்படுத்தாமல் தவறு செய்துவிட்டு அதனை மற்றொருவரின் தவறாக தள்ளிவிட முடியாது" என்று குறிப்பிட்டார்.

(இ) தற்கவனமின்மை கோட்பாட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் (Changes made in the doctrine of contributory negligence):

தன்பாற் கவனமின்மை கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தியதில் உணரப்பட்ட குறைகள் இறுதிவாய்ப்பு விதி உருவாகுவதற்கும், இறுதி வாய்ப்பு விதியின் நடைமுறை அனுபவம் இழப்பீட்டு விகிதப்பகிர்வுக்கும் வழிவகுத்தது. இவ்வாறு தன்பாற் கவனமின்மைக் கோட்பாட்டில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டது.

இ(1) இறுதி வாய்ப்பு விதி (Last opportunity rule): (அடுத்து வரும் வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் உள்ளதை சுருக்கமாகக் குறிப்பிடவும்).

இ(2) இழப்பீட்டின் விகிதப் பகிர்வு (Apportionment of damages): அடுத்து வரும் வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'இ'-ன்கீழ் உள்ளதை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

58. இறுதி வாய்ப்பு கருத்தமைவினை சுட்டிக்காட்டி தன்பாற் கவனமின்மை என்னும் விதியினை தெளிவுபடுத்துக. (Elucidate the concept of contributory negligence with reference to last opportunity rule) - May-2019, Nov-2014 (அல்லது)

✦ **இறுதி வாய்ப்பு விதியுடன் தன்பாற் கவனமின்மை என்னும் கருத்தை தெளிவாக்குக. (Elucidate the concept of contributory negligence with special reference to 'Last opportunity Rule') - Nov-2015 (v), Nov-2013 (v). (அல்லது)**

SN - 75 இறுதி வாய்ப்பு கோட்பாடு / Doctrine of Last opportunity May - 2012, Nov-2012.

விடைச்சுருக்கம்: (அ) இறுதி வாய்ப்பு விதி - (ஆ) சட்ட சீர்திருத்தச் (தற்கவனமின்மை) சட்டம், 1945 - (இ) இழப்பீட்டின் விகிதப்பகிர்வு – (ஈ) முடிவுரை

(அ) இறுதி வாய்ப்பு விதி (Last opportunity rule): அல்லது இறுதி வாய்ப்பு கோட்பாடு (Doctrine of last opportunity):

Butterfield Vs Forrester என்ற வழக்கில் (காண்க பக்கம் எண் 260) வகுக்கப்பட்ட தற்கவனமின்மை எனும் விதி, ஊறினால் அல்லது விபத்தினால் பாதிக்கப்பட்ட வாதி இழப்பீடு பெறுவதில் பெரும் தடையை ஏற்படுத்தியது. 'ஒரு நபர் தன் தரப்பில் சாதாரண கவனத்தை பயன்படுத்தாமல் தவறு செய்துவிட்டு, அதனை மற்றொருவரின் தவறாக தள்ளிவிட முடியாது' என இவ்வழக்கில் நீதிபதி எல்லன்பரோ வகுத்த தற்கவனமின்மை விதி, ஊறுக்கு உள்ளான வாதி வழக்கில் தோல்வியுறும் நிலைக்கு வழிவகுத்தது. எனவே இத்தகைய நிலையைத் தவிர்த்திட நீதிமன்றங்கள் வகுத்த விதியே இறுதி வாய்ப்பு விதியாகும். இவ்விதியின்படி, வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இரு தரப்பினரின் கவனக்குறைவு ஓர் விபத்து ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும்போது, அத்தகைய விபத்து ஏற்படாமல் தவிர்ப்பதற்கு இறுதி வாய்ப்பு எவருக்கு இருந்ததோ, அவரே அவ்விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும். அதாவது, பிரதிவாதியின் கவனக்குறைவின் காரணமாக ஓர் விபத்து ஏற்படக்கூடிய நிலையின்போது, வாதி அவ்விபத்தை தவிர்ப்பதற்கான இறுதிவாய்ப்பை பெற்றிருந்து, அவ்விபத்தை

தவிர்ப்பதற்கு சாதாரண கவனத்தைக் காட்டத் தவறியிருந்தால், அவ்விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதியை பொறுப்பேற்கச் செய்ய முடியாது. இதேபோன்று வாதியின் கவனக்குறைவின் காரணமாக ஏற்படவிருந்த விபத்தைத் தடுப்பதற்கு பிரதிவாதி இறுதி வாய்ப்பை பெற்றிருந்து, அவ்விபத்தை தவிர்ப்பதற்கு சாதாரண கவனம் காட்டத் தவறியிருந்தால், அவ்விபத்தினால் ஏற்பட்ட இழப்புகள் அனைத்திற்கும் பிரதிவாதியே பொறுப்பாவார். **Davies Vs Mann, (1882) 10 M&W 546.**, என்ற வழக்கில், வாதி தன்னுடைய கழுதையின் முன்னங்கால்கள் இரண்டையும் கட்டி குறுகலான நெடுஞ்சாலையில் விட்டுவிட்டார். அக்குறுகலான சாலையில் மிக வேகமாக குதிரை வண்டியை ஓட்டிச்சென்ற பிரதிவாதி அக்கழுதையின் மேல் மோதி அதனைக் கொன்றுவிட்டார். நீதிமன்றம், பிரதிவாதி பொறுப்பாவார் ஏனெனில் சாதாரண கவனத்தை செயல்படுத்தி விபத்தை தவிர்த்திருக்கக்கூடிய இறுதி வாய்ப்பை அவரே பெற்றிருந்தார் அதாவது, விபத்தைத் தவிர்த்திருக்கக்கூடிய அத்தகைய வேகத்தில் சென்றிருக்கலாம் என்பதைக் குறிப்பிட்டது. மேலும் இவ்வழக்கில் நீதிபதி பார்க் குறிப்பிட்டது பின்வருமாறு;

"வாதி முறையின்றி கழுதையை நெடுஞ்சாலையில் விட்டுச் சென்றிருந்தாலும், பிரதிவாதி சாலையில் விபத்து ஏற்படுத்தாத வேகத்தில் குதிரையை செலுத்தும் கடமையைக் கொண்டுள்ளார். இத்தகைய கடமை இல்லையெனில், நெடுஞ்சாலையில் இருக்கும் பொருள்களின்மீதும், நெடுஞ்சாலையின் ஓரத்தில் தூங்கிக் கொண்டிருப்பவர்கள்மீதும்கூட வண்டியை ஏற்றிய நபர் அல்லது சாலை விதிக்கு முரணாக தவறான பக்கத்தில் சென்று கொண்டிருக்கும் வண்டியின்மீது மோத வேண்டும் என்று வேண்டுமென்றே வண்டியை செலுத்தும் நபர் அதனை நியாயப்படுத்தக்கூடும்".

Radley Vs L & N.W.Rly, (1876) AC 759., என்ற வழக்கில், நிலக்கரி சுரங்க உரிமையாளர்களான வாதிகளுக்குச் சொந்தமான எட்டடி உயரப் பாலம் ஒன்றும் இருந்தது. அப்பாலத்தின் உட்புறத்தில் போடப்பட்டிருந்த இருப்புப்பாதையின் வழியே பிரதிவாதிகள் சரக்கு ரயில் பெட்டிகளின்மூலம் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியை எடுத்துச் செல்வது வழக்கம். ஒரு நாள், வாதிகளின் பணியாட்கள், சரக்குப் பெட்டியின்மீது மற்றொரு சரக்குப் பெட்டியை ஏற்றினர். இதனால் சரக்குப் பெட்டி இரண்டும் சேர்ந்து, 11 அடி உயரம் இருந்ததன் காரணமாக ரயில் பாலத்தினை கடக்க முடியவில்லை. மேற்கொண்டு இரயில் செல்ல முடியாமல் தடுக்கும் காரணத்தை அறிந்து கொள்ள முற்படாத பிரதிவாதிகள், என்ஜினின் உந்து திறனை அதிகப்படுத்தியும் நகராமல் இருக்கவே, மற்ற வண்டிகளின் துணை கொண்டு அதை முன்னுக்குத் தள்ள முயன்றனர். இதன் காரணமாக பாலம் இடிந்து விழுந்தது. அதிக உயரத்திற்கு சுமையை ஏற்றியதன் காரணமாக வாதிகளின் தரப்பில் கவனக்குறைவு இருந்தாலும்கூட, பிரதிவாதிகள் சாதாரண கவனத்துடன் செயல்பட்டிருந்தால் விபத்தை தவிர்த்திருக்க முடியும் என்றும், பிரதிவாதிகளே விபத்தை தடுப்பதற்கான இறுதி வாய்ப்பைக் கொண்டிருந்ததால் பொறுப்பாவார்கள் என்றும் பிரபுக்கள் அவை தீர்ப்பளித்தது.

British Columbia Electric co., Vs Laoch, (1916) 1 AC 719., என்ற வழக்கில் பிரபுக்கள் அவை, இறுதி வாய்ப்பு விதியின் எல்லையை 'கொள்நிலை இறுதி வாய்பபிற்கும்' (constructive last opportunity) நீட்டித்தது. இவ்வழக்கில் 'ஹால்' (Hall) என்பவர் 'ஸேண்ட்ஸ்' (sands) என்பவரைதன் குதிரை வண்டியில் கூட்டிச் சென்றார். அவர்கள் 'டிராம்' வண்டிச்செல்லும் இருப்புப்பாதைக் கடவை (level crossing) கடக்க வேண்டியிருந்தபோது, டிராம் வண்டி ஏதேனும் வருகிறதா என்பதை கவனிப்பதில் கவனம் காட்டாமல் வண்டியை ஓட்டினர். அந்நேரத்தில் வேகமாக வந்து கொண்டிருந்த டிராம் வண்டி ஓட்டுநர் சுமார் 400 அடிகளுக்கு முன்னரே குதிரை வண்டியை கவனித்துவிட்டார். உடனடியாக வண்டியை நிறுத்தும் விசையை (brake) பயன்படுத்தினார். இருப்பினும் வண்டியை நிறுத்தும் விசையின் பழுது காரணமாக, வண்டியை நிறுத்த முடியவில்லை. குதிரைகள் மற்றும் ஆட்களின்மீது மோதி இருப்புப்பாதைக் கடவைத் தாண்டிச் சென்ற பின்னரே டிராம் வண்டியை நிறுத்த முடிந்தது. இது தொடர்பாக இறந்து போனவரின் வாரிசுகள் தொடர்ந்த வழக்கில், டிராம் வண்டி மிக வேகமாகச் சென்றது என்பதும், வண்டியை நிறுத்தும் விசை பழுதுபடாமல் இருந்திருந்தால், டிராம் வண்டி இருப்புப்பாதைக் கடவை கடப்பதற்கு முன்பாகவே நிறுத்தப்பட்டிருக்கும் என்பதும், மறுபுறம் இருப்புப்பாதைக் கடவை கடப்பதற்கு முன், டிராம் வண்டி ஏதேனும் வருகிறதா என்பதைக்கூட கவனிக்காமல் குதிரை வண்டியை ஓட்டியதால், ஸேண்ட்ஸ் (sands) கவனமின்மைத் தீங்கு புரிந்துள்ளதையும் நீதிமன்றம் அறிந்தது. பிரதிவாதிகள், வாதிகளின் தரப்பில் தற்கவனமின்மை உள்ளதைக் குறிப்பிட்டு தங்களின் எதிர்வாதத்தை முன்வைத்தனர். பிரபுக்கள் அவை, விபத்தை தடுப்பதற்கான இறுதி வாய்ப்பை பிரதிவாதிகளே கொண்டிருந்ததால் பொறுப்பாவார்கள் எனத் தீர்ப்பளித்தது.

கொள்நிலை இறுதி வாய்ப்பு என்பது, 'வழக்குத் தரப்பினர்களில் (வாதி, பிரதிவாதி) விபத்தைத் தவிர்ப்பதற்கான இறுதி வாய்ப்பை கொண்டிருக்கக் கூடியவர் கவனக்குறைவாக இல்லாது இருந்திருப்பாரேயானால்' என்பது கருத்தில் கொள்ளப்பட்டு, அவ்விபத்திற்கு அவரையே பொறுப்பேற்கச் செய்வதாகும். மேற்கண்ட வழக்கில் சாதாரணமாக குதிரை வண்டியை ஓட்டுபவர்கள் இருப்புப்பாதையைக் கடக்குமுன்னர், இருப்புப்பாதையின் இருபுறமும் பார்க்கும் அத்தகைய கவனத்தை செலுத்தியிருந்தால் விபத்து நிகழ்ந்திருக்காது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் கவனக்குறைவு இல்லாமல் இருந்திருந்தால், விபத்தை தவிர்க்கக்கூடிய இறுதிவாய்ப்பு அவர்களுக்கே இருந்திருக்கும் எனில் (பிரதிவாதிகள் டிராம் வண்டி புறப்படும்போதே அதன் சீரான தன்மையை குறிப்பாக வண்டியை நிறுத்தும் விசை முறையாக உள்ளதா என்பதை சோதித்திருந்தால் விபத்தை தவிர்க்கும் இறுதி வாய்ப்பை முறையாக செயல்படுத்தியிருக்க முடியும்), உண்மையிலேயே இறுதி வாய்ப்பு அவருக்கு இருந்ததாகவே கருதிக் கொண்டு (constructive) நீதிமன்றம் பிரதிவாதிகளை பொறுப்பாளிகளாக்கியது.

(ஆ) சட்ட சீர்திருத்த (தற்கவனமின்மைச்) சட்டம், 1945 [Law Reform (Contributory Negligence) Act, 1945]:

மேற்கண்ட வழக்குகளில் இருந்து, விபத்தை தவிர்ப்பதற்கான இறுதி வாய்ப்பு பிரதிவாதிக்கு இருப்பின், வாதியின் தரப்பில் கவனக்குறைவு இருந்தாலும்கூட, பிரதிவாதியே பொறுப்பாவார் என்பது தெளிவாகிறது. ஆனால் விபத்தை தவிர்ப்பதற்கான இறுதி வாய்ப்பு வாதிக்கு இருப்பின், பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு இருந்தாலும்கூட அவரை பொறுப்பு நிலைக்கு உட்படுத்த முடியாது. மேற்கண்ட இறுதி வாய்ப்பு விதி, வெளிப்படையாக சரியானதாகத் தோன்றினாலும் நடைமுறையில் திருப்திகரமாக இல்லை என்பதே உண்மையாகும். ஏனெனில் ஒவ்வொரு வழக்கிலும், வழக்கின் ஒரு தரப்பினர் கவனக்குறைவாக இருந்தாலும்கூட மற்றொரு தரப்பினர்மீது ஒன்று முழுமையாக பொறுப்பு நிலையை சுமத்துகிறது அல்லது முழுமையாக பொறுப்பு நிலை இல்லை என்பதைக் குறிப்பிடுகிறது. இத்தகைய நிலையைப் போக்கிட பிரிட்டிஷ் பாராளுமன்றம் சட்ட சீர்திருத்த (தற்கவனமின்மைச்) சட்டம், 1945-ஐ இயற்றியது. இச்சட்டம், கவனக்குறைவு இரு தரப்பினர் மீதும் உள்ளபோது இழப்பீடு அவரவர்களின் தவறுக்கு ஏற்ப பகிரப்படுவதற்கு வழி செய்கிறது. இச்சட்டத்தின் பிரிவு-1, "எந்தவொரு நபருக்கும் ஏற்பட்ட இழப்பின் பகுதிக்கு (part) அவரின் சொந்த தவறும் மற்றொரு பகுதிக்கு பிறநபர்/நபர்களின் தவறு காரணமாகவும் இருப்பின், இழப்பிற்கு உள்ளான நபரும் தவறு செய்துள்ளார் என்ற காரணத்தின் அடிப்படையில் அவரின் உரிமைக் கோரிக்கையை தோல்வியுறச் செய்யக்கூடாது; மாறாக, அவ்விழப்பு தொடர்பாக அவரால் பெறப்படக்கூடிய இழப்பீடு, இழப்பீட்டிற்கான பொறுப்பு நிலையில் உள்ள அவரின் பங்கை கருத்தில் கொண்டு நீதிமன்றம் நேரியதானது மற்றும் தகைமை நெறியிலானது எனக்கருதும் அத்தகைய அளவு குறைக்கப்படும்" என்பதைக் குறிப்பிடுகிறது.

(இ) இழப்பீட்டின் விகிதப்பகிர்வு (Apportionment of damages):

சட்ட சீர்திருத்த (தற்கவனமின்மைச்) சட்டத்தின்படி ஒரு நபருக்கு பகுதி அவரின் சொந்த தவறின் விளைவாகவும், மற்றொரு பகுதி, மற்றொருவரின் தவறின் விளைவாகவும் இழப்பு ஏற்பட்டிருப்பின், அவர் தவறு புரிந்துள்ளார் என்பதன் காரணமாக மட்டுமே மற்றொருவரிடம் இருந்து இழப்பீடு பெற முடியாதநிலை ஏற்படாது; மாறாக, அவ்விழப்பு ஏற்படக் காரணமாக இருந்த அவரது பங்கின் அளவுக்கேற்ப அவர் பெறக்கூடிய இழப்பீட்டுத்தொகை குறைக்கப்படும். எடுத்துக்காட்டாக, வாதியும் பிரதிவாதியும் சம அளவில் தவறு புரிந்திருந்தால், வாதி பெறக்கூடிய இழப்பீட்டுத்தொகை 50% ஆகக் குறைக்கப்படும். ஆங்கிலச் சட்டத்தில் இழப்பீடு பகிர்வு கோட்பாடு ஒன்றும் புதிதல்ல. 1911-ஆம் ஆண்டு கடலாண்மை மரபுச் சட்டம் (Maritime Convention Act, 1911), இழப்பீடு பகிர்வு குறித்த வகையங்களைக் கொண்டிருந்தது. இச்சட்டம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின் தவறுதல்களால் ஓர் விபத்து ஏற்படின், அதனால் ஏற்படும் இழப்பிற்கு, ஒவ்வொரு கப்பலும் எந்த அளவுக்கு காரணமாக

இருந்ததோ அந்த அளவிற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. எனவே இழப்பீட்டின் பகிர்வு என்பதை சுருக்கமாக, வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவரும், ஏற்பட்ட இழப்பிற்கு அவரவர்களின் கவனமின்மையின் அளவிற்கேற்ப அல்லது கவனமின்மையின் பகுதிக்கு ஏற்ப பகிர்ந்து கொள்வது எனக் குறிப்பிடலாம்.

Davies Vs Swan Motor Co., (1949) 1 All ER 620 (CA)., என்ற வழக்கில் ஒரு மோட்டார் நிறுவனத்தின் பேருந்து ஒன்றும், மாநகராட்சிக்கு சொந்தமான லாரியும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது. இதன் விளைவாக, லாரியின் மாறு பக்கத்தில் (off side) இணைக்கப்பட்டிருந்த படியில், போக்குவரத்து விதிகளுக்கு முரணாக பயணம்செய்த மாநகராட்சி பணியாளர் பலத்த காயமுற்றதன் காரணமாக உயிரிழந்தார். உயிரிழந்தவரின் மனைவி (விதவை) இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், மாநகராட்சிக்கு சொந்தமான லாரியின் ஓட்டுநரும் ஓர் தரப்பாக சேர்க்கப்பட்டார். நீதிமன்றம், உயிரிழந்தவரின் தற்கவனமின்மை காரணமாக, இழப்பீட்டுக் கோரிக்கை தள்ளுபடி செய்யப்படமாட்டாது; மாறாக, அதன்பொருட்டு இழப்பீட்டுத் தொகை ஐந்தில் ஒரு பங்கு குறைக்கப்படும் என்றும், மூன்றில் இரண்டு பங்கு பேருந்தின் உரிமையாளரான மோட்டார் நிறுவனமும் மூன்றில் ஒரு பங்கு லாரியின் ஓட்டுநரும் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

O'Connel Vs Jackson, (1972) 1 QB 270., என்ற வழக்கில், பிரதிவாதியே, தன்னுடைய மோட்டார் கார், வாதியின் மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட இரு சக்கர வண்டியுடன் (moped) மோதியதற்கு முழுமையான காரணமாவார்; இருப்பினும் வாதியின் தற்கவனமின்மையே (அதாவது தலைக்கவசம் அணியாதது) அவருக்கு கூடுதல் காயங்கள் மற்றும் இழப்பிற்கு ஒரு காரணமாகவும் இருந்தது. நெடுஞ்சாலை விதிகளின்படி வாதி தலைக்கவசம் அணிந்திருந்தால், அவருக்கு ஏற்பட்ட காயத்தின் கடுமை குறைந்திருக்கும் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், இழப்பீட்டுத் தொகையில் 15% குறைத்து வழங்க ஆணையிட்டது.

இந்தியாவில் பிரிட்டனில் இயற்றப்பட்ட சட்ட சீர்திருத்த (தற்கவனமின்மைச்) சட்டம், 1945-க்கு ஒத்த மையச் சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. எனவே இந்திய நீதிபதிகள் இங்கிலாந்தின் இயற்றாச் சட்டத்தையே அதாவது இறுதி வாய்ப்பு விதியையே பின்பற்ற கடப்பாடு கொண்டுள்ளனர். கேரள மாநில சட்டமன்றம், 1976-ஆம் ஆண்டில் கேரள தீங்கியல் (பல்வகை வகையங்கள்) சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தின் பிரிவு-8, பிரிட்டனில் இயற்றப்பட்ட சட்ட சீர்திருத்தம் (தற்கவனமின்மை) சட்டம், 1945-ன் பிரிவு-1-ல் குறிப்பிட்டுள்ள வகையத்தை அதாவது தற்கவனமின்மையில் இழப்பீட்டின் பகிர்வு வகையத்தை சேர்த்தது. இருப்பினும் கேரளாவைத் தவிர்த்த இதர இந்திய உயர்நீதிமன்றங்கள், இயற்றாச் சட்ட விதியை பின்பற்றும் போக்கைவிட்டு, சட்ட சீர்திருத்த (தற்கவனமின்மைச்) சட்டம், 1945-யே பின்பற்றுகின்றன. பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

Vidya Devi Vs M.P. State Road Transport Corpn. AIR 1975 MP 99., என்ற வழக்கில் மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் கவனக்குறைவாக பேருந்தின்மீது மோதிய விபத்தில் உயிரிழந்தார். பேருந்து ஓட்டுநரும் மோதலைத் தவிர்ப்பதில் கவனக்குறைவாக இருந்தது தெரியவந்தது. மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம் மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் (உயிரிழந்தவர்) மற்றும் பேருந்து ஓட்டுநருக்கு இடையேயான தவறின் விகிதம் முறையே மூன்றில் இரண்டு பாகம் மற்றும் மூன்றில் ஒரு பாகம் எனத் தீர்மானித்து, மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் கவனக்குறைவாக இல்லாமல் இருந்திருந்தால் (அதாவது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே விபத்து நிகழ்ந்திருந்து உயிரிழந்திருந்தால்) பெறுவதற்கு தகுதி கொண்டுள்ள இழப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகையை அவரின் மனைவிக்கு செலுத்த ஆணையிட்டது. குஜராத் உயர்நீதிமன்றம் **Rehana Vs Ahmedabad Municipal Transport Service, AIR 1976 Guj. 37.,** என்ற வழக்கில் சைக்கிளை ஓட்டியவரின் தவறு 25% என்றும் பேருந்து ஓட்டுநரின் தவறு 75% என்றும் தீர்மானித்து அதற்கேற்ப இழப்பீட்டுத் தொகையைக் குறைத்தது. **Oriental Fire & Genl. Ins. Co., Vs Manjit Kau, AIR 1981 P&H 60.,** என்ற வழக்கில் சாலையின் இடது பக்கமாக சென்று கொண்டிருந்த மோட்டார் காரின்மீது அசட்டுத் துணிவுடனும் மற்றும் கவனக்குறைவுடனும் மோதி உயிரிழந்த 'ஸ்கூட்டர்' வண்டியை ஓட்டியவரின் தரப்பில் 100% கவனக்குறைவு இருந்ததால் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் இழப்பீடு ஏதும் வழங்கவில்லை.

மேற்கண்ட வழக்குகளில் இருந்து, இந்திய உயர்நீதிமன்றங்கள் இயற்றாச் சட்ட விதியான இறுதி வாய்ப்பு விதி, நீதிக்கு முரணாக இருப்பதன் காரணமாகவும், பிரிட்டனில் இயற்றப்பட்டது போன்ற சட்ட சீர்திருத்தம் (தற்கவனமின்மைச்) சட்டம், 1945-க்கு ஒத்த மையச் சட்டம் இந்தியாவில் இல்லாததன் காரணமாகவும், பிரிட்டனில் இயற்றப்பட்ட சட்டம் நீதி மற்றும் தகைமை நெறிக்கு உட்பட்டிருந்ததாலும் அதனையே பொருந்தச் செய்தன. எவ்வாறிருப்பினும், இந்தியப் பாராளுமன்றம் 1988-ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்கள் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தில், 2019-ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி, வாகன விபத்தினால் இறந்த நபர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சமும், கொடுங்காயமுற்றவர்களுக்கு ரூபாய் இரண்டரை லட்சமும் வழங்க வகை செய்யப்பட்டது. இத்தொகைகள் விபத்தில் உயிரிழந்தவர் அல்லது பாதிக்கப்பட்டவர் தரப்பில் தற்கவனமின்மை இருந்தாலும் பிழையில்லா நிலைக் கடப்பாட்டின்கீழ் (no fault liability) வழங்கப்படும்.

(ஈ) முடிவுரை (Conclusion):

தற்கவனமின்மையின் விளக்கமான விதிகளைப் பொறுத்தவரை, ஆங்கில சட்ட அறிஞர்கள் இடையே இன்றுவரை ஓர் விவாதப் பொருளாக இருப்பது என்னவெனில், இறுதி வாய்ப்பு விதி, தொடர்ந்து ஓர்சட்டமாக உள்ளதா அல்லது இல்லையா என்பதாகும். குறிப்பாக, 1945-ஆம் ஆண்டு சட்டத்திற்குப்பின் இறுதி

வாய்ப்பு விதியின் செல்லுந்தன்மை பற்றி இத்தகைய விவாதம் எழுந்துள்ளது. 1945-ஆம் ஆண்டுச் சட்டம், இறுதி வாய்ப்பு விதியைக் குறிப்பிட்டு நீக்கவில்லை (not specifically abrogated) மற்றும் ஓர் நபர் அறிந்திருந்தே அபாயத்தை வரவழைத்துக் கொள்ளும் அத்தகைய நேர்வுகளுக்கு சந்தேகமின்றி இவ்விதி பொருந்தும். எடுத்துக்காட்டாக, 'A' ஓர் வாழைப்பழத் தோலை நடைபாதையில் வீசுவதாகக் கொள்வோம். வாழைப்பழத்தோலைப் பார்க்காத அந்நடைபாதையைக் கடந்து செல்லும் நபர்கள் அனைவரையும் பொறுத்தவரையில் 'A'-ன் செயல் கவனக்குறைவானதாகும். ஆனால் 'A' வாழைப்பழத்தோலை நடைபாதையில் வீசியதைப் பார்த்த பின்னரும் அதன்மீது காலை வைப்பது தன்னை களிப்புறச் செய்யும் என்பதற்காக அதன்மீது கால் வைக்கும் 'B'-ஐக் குறித்தும் 'A' கவனக்குறைவாக இருந்தாரா? இவ்வினாவிற்கான விடை, 'A', 'B'-ஐப் பொறுத்து கவனக்குறைவாக இல்லை என்பதாகும். ஏனெனில் 'B' அறிந்திருந்தே அதாவது வாழைப்பழத்தோலின்மீது கால் வைத்தால் வழுக்கி விழக்கூடும் என்கிற அபாயத்தை அறிந்திருந்தே அதனை வரவழைத்துக் கொள்வார் என்று 'A' நியாயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார். வேறுவிதமாகக் குறிப்பிடுவதெனில், 'B' வேண்டுமென்றே தனக்கு ஊறுவிளைவித்துக் கொள்ளாமல் இருப்பதை நோக்கக்கூடிய கவனமுடன் இருக்க வேண்டிய கடமை எதனையும் 'A' கொண்டிருக்கவில்லை. எனவே 'B' அபாயத்தை முழுமையாக அறிந்து கொண்டுள்ள நேர்வுகளில் 'B'-க்கு ஏற்படும் ஊறுகளுக்கு 'A' பொறுப்பாகமாட்டார். மேற்குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இறுதிவாய்ப்பு விதி இன்றுவரை அது தற்கவனமின்மை சட்டத்தின் கீழாக இருப்பினும்கூட ஓர் சட்டமாகவே உள்ளது என்பதையும், தரப்பினரின் தவறான நடத்தைக்கு ஏற்ற விகிதத்தில் பொறுப்பு நிலையை பகிர்ந்திட நீதிபதிகள் முழுமையான அதிகாரத்துடன் சேர்ந்தடைந்து கொண்டுள்ளார்கள் எனக் கூற முடியும்.

59. தன்பாற் கவனமின்மை என்றால் என்ன? தன்பாற் கவனமின்மையைக் கட்டுப்படுத்தும் பொது விதிகள் குழந்தைகளுக்குப் பொருந்துமா? (What is contributory negligence? Are the general rules governing contributory negligence applicable in case of children?) - May-2014

விடைச்சுருக்கம்: (அ) தன்பாற் கவனமின்மை - (ஆ) தன்பாற் கவனமின்மையை ஆளுமை செய்யும் பொது விதிகள் குழந்தைகளுக்குப் பொருந்தும் தன்மை

(அ) தன்பாற் கவனமின்மை (Contributory negligence):(வினா எண் 57-க்கு உரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க).

(ஆ) தன்பாற் கவனமின்மையை ஆளுமை செய்யும் பொது விதிகள் குழந்தைகளுக்குப் பொருந்தும் தன்மை (Applicability of the general rules governing contributory negligence to children)

கவனமின்மை என்பது மனதின்நிலை (state of mind) என்பதாலும், குழந்தைகள் வயது வந்த பெரியவர்களைப்போன்று உடனடியாக முடிவு செய்யக்கூடிய அறிவு வளர்ச்சியை பெற்றிராததாலும், குழந்தை தரப்பிலும் கவனமின்மை உள்ளது என்பது எதிர்வாதமாகாது. எனவே தற்கவனமின்மை விதியை குழந்தைகள் தொடர்பான வழக்கில் நேரடியாக அதாவது வயதுவந்த பெரியவர்களுக்கு பொருந்தச் செய்வது போன்று பொருந்தச் செய்ய முடியாது. தற்கவனமின்மை என்ற எதிர்வாதத்தை சட்ட வயதை அடைந்தவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதைவிட குழந்தைகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதில் மிகுந்த சிரமங்கள் உள்ளது. வாதி, ஒரு குழந்தையாக இருக்கும்போது, அக்குழந்தையின் அனுபவமின்மை மற்றும் முடிவு செய்யும் தகுதியின்மை போன்ற காரணிகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். மேலும் குழந்தையின் வயது. மனவளர்ச்சியை கருத்தில் கொண்டு, அக்குழந்தை தன்னை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தகுதியைக் கொண்டுள்ளதா என்பதன் அடிப்படையிலேயே அக்குழந்தை தன்பால் கவனமின்றி இருந்ததா என்பதை முடிவு செய்ய முடியும். குழந்தைகளின் தற்கவனமின்மை தொடர்பான பல முக்கிய வழக்குகளிலும் இவ்வாறே தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

Lynch Vs Nurdin, (1841) 1 QB 29., என்ற வழக்கில் பிரதிவாதி, கவனக்குறைவாக தனது குதிரை வண்டியை கவனிப்பார் யாருமின்றி தெருவில் விட்டுச் சென்றார். ஏழு வயதான வாதி வண்டியில் ஏறும்போது மற்றொரு சிறுவன் கடிவாளத்தை இழுத்ததால், குதிரை நகரத்தொடங்கியதன் காரணமாக வாதி கீழே விழுந்து காயமுற்றான். நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. **Harrold Vs Watney, (1896) 2 QB 320.,** என்ற வழக்கில், நெடுஞ்சாலையை ஒட்டிய சுற்றுச்சுவர் சூழ்ந்த நிலம் பிரதிவாதியின் உடைமையில் இருந்தது. சுற்றுச்சுவர் மிகவும் மோசமாக விழுந்து விடக்கூடிய அபாய நிலையில் இருந்தது. நான்கு வயதுச் சிறுவனான வாதி, சுற்றுச் சுவருக்கு அந்தப்பக்கம் உள்ளதைக் காணும் ஆர்வத்துடன் அதன்மீது ஏறியபோது, சுற்றுச் சுவரோடு சேர்ந்து கீழே விழுந்ததால் காயமுற்றான். சிறுவன் (வாதி) பிரதிவாதியிடமிருந்து இழப்பீடு பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளான் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வாதி, ஓர் குழந்தையாக இருக்கும்போது அதன் அனுபவமின்மை மற்றும் முடிவு செய்யும் தகுதியின்மையை கருத்தினில் கொள்ளப்பட வேண்டும். **Glasgow Corporation Vs Taylor, (1922) 1 AC 44.,** என்ற வழக்கில் பலர் வந்து செல்லக்கூடிய இடத்தில், குழந்தைகள் கண்டிப்பாக விலகி இருக்க வேண்டிய ஏதேனும் ஓர் பொருள், குழந்தைகள் அதனைத் தொட அல்லது எடுக்கச் செய்யும் ஆர்வத்தை தூண்டக்கூடிய ஓர் 'பொறி'யாகவும் (trap) கூட அமைந்து விடலாம். தன்பாற் கவனமின்மைக்கு தகுதி பெறாத குழந்தைகள் பொருட்டு அவ்விடத்தின் உரிமையாளர், அவ்விடத்திற்கு வரும் குழந்தைகள் மற்றும் குழந்தைகளைக் கவரக்கூடிய அப்பொருளின் அபாயத்தன்மையை நியாயமாக எதிர்பார்த்து அதற்கேற்ப பாதுகாப்புகளை செய்திருக்க வேண்டும். இல்லையேல் அப்பொருள்

குறித்த குழந்தைகளின் செயல் மற்றும் அக்குழந்தைக்கு ஏற்படும் ஊறுகளுக்கு முழுப்பொறுப்பு ஏற்க நேரிடும் என்று பிரபுக்கள் அவை இவ்வழக்கில் விளக்கியது.

Yachuk Vs Oiliver Blais Co Ltd., (1949) 2 All ER 150 PC., என்ற வழக்கில், பிரதிவாதியின் பணியாள், 7 மற்றும் 9 வயதுடைய இரண்டு சிறுவர்களுக்கு குறைந்த அளவு பெட்ரோலை விற்றார். பெட்ரோல் தங்களின் தாயாரின் மோட்டார்காருக்காக தேவைப்படுவதாக பொய்யுரைத்து அதனைப் பெற்றனர். அவர்கள் தாங்கள் கண்ட திரைப்படத்தில் இடம் பெற்ற சிவப்பு இந்தியர் காட்சி போன்று நடிக்கும் விளையாட்டிற்கு பெட்ரோலைப் பயன்படுத்தினர். அதன் விளைவாக ஒரு சிறுவனுக்கு தீக்காயங்கள் ஏற்பட்டது. காயமுற்ற சிறுவன் சார்பாக தொடரப்பட்ட வழக்கில், பிரதிவாதிகள், தற்கவனமின்மை எனும் எதிர்வாதத்தை முன் வைத்தனர். இவ்வழக்கை விசாரித்த கனடா நாட்டு விசாரணை நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம், சிறுவர்களுக்கு எளிதில் தீப்பற்றக்கூடிய பெட்ரோலை விற்பனை செய்த பிரதிவாதி தரப்பு கவனமின்மையே சிறுவனின் தீக்காயங்களுக்கு காரணமாகும் என்று குறிப்பிட்டிருந்தன. இறுதியாக இங்கிலாந்தின் பிரிவி கவுன்சில், பெட்ரோலின் அபாயம் கொண்ட அதன் பண்பைப் பற்றி சிறுவர்கள் உணர்ந்திருந்தனர் என்பதற்கு சாட்சியம் ஏதும் இல்லாததால் பிரதிவாதியே இழப்பீட்டுத் தொகை முழுமைக்கும் பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

இந்திய நீதிமன்றங்களிலும் குழந்தைகளின் தற்கவனமின்மைத் தொடர்பான ஆங்கில இயற்றாச் சட்டத்தின் நிலையையே பின்பற்றி வந்துள்ளது. பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

M&SM Rly Co. Ltd. Vs Jayammal, (1924) 48 Mad 417., என்ற வழக்கில் ஏழு வயது சிறுமி ஒருவள், ஒரு நேரத்தில் ஒரே நபர் மட்டுமே செல்லக்கூடிய இரும்புப்பட்டையிலான சுழல் கதவு வழியில் (wicket gate) நுழைந்து இருப்புப்பாதையைக் கடக்கும்போது இரயில்வண்டி மோதியதால் பலத்த காயமுற்றாள். அச்சிறுமி இருப்புப்பாதையைக் கடக்கும்போது இரயில் வருவதை கவனிக்கத் தவறியதே இவ்விபத்திற்கான காரணமாகும். சிறுமி, ஆபத்தை உணரக்கூடிய வயதையும் மனவளர்ச்சியையும் கொண்டிருந்ததால் தற்கவனமின்மை தவறு புரிந்துள்ளார் என்றும் எனவே பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Motias Costa Vs Roque A. Jacinto, AIR 1976 Goa 1.,** என்ற வழக்கில், ஆறு வயதுக் குழந்தை, சாலையின் மறுபக்கத்திலுள்ள பள்ளிக்குச் செல்வதற்காக சாலையின் குறுக்கே கடந்து செல்லும்போது, மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் மோதியதால் கீழே விழுந்ததில் பலத்த காயங்களுக்கு உள்ளானது. பிரதிவாதியான மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், தன்பாற் கவனமின்மை எனும் எதிர்வாதம் பிரதிவாதிகள் சார்பில் எழுப்பப்பட்டது. பிரதிவாதியின் வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம், பிரதிவாதி, குழந்தைகள் அந்த நேரத்தில் அந்த இடத்தில் சாலையைக் கடப்பார்கள் என்று ஓர் சமநிலை அறிவு கொண்ட நபர் எதிர்பார்த்திருக்கக்கூடிய அத்தகைய கவனத்தை செலுத்த

தவறியுள்ளார் என்றும், குழந்தைகளின் தரப்பில் தற்கவனமின்மை உள்ளதாக ஓர் வழக்கு இருக்க முடியாது ஏனெனில் வயது வந்த பெரியவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதில் காட்டும் அத்தகைய கவனத்தை குழந்தைகளிடம் எதிர்பார்க்க முடியாது என்பதால் அவர்களுக்கு எதிராக தற்கவனமின்மை என்னும் வாதத்தை பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் இவ்வழக்கில் குறிப்பிட்டது. **Alka Vs Union of India, AIR 1993 Del 267.,** என்ற வழக்கில், பிரதிவாதிகள் சாலையை ஒட்டிய ஓர் அறையில் 'எலக்ட்ரிக் பம்ப் மோட்டார்' ஒன்றை பொருத்தியிருந்தனர். அதனை கவனிப்பதற்கு ஆட்கள் எவரொருவரையும் நிறுத்தாததுடன், அறையையும் எவரொருவரும் வந்து செல்லுமாறு பூட்டப்படாமலும் வைத்திருந்தனர். அப்பகுதியில் வசித்து வந்த ஆறு வயதுச் சிறுமி (வாதி) அத்துமீறி அவ்விடத்தினுள் நுழைந்து ஆபத்தை அறியாமல் இயங்கிக் கொண்டிருந்த மோட்டாரினுள் கையை வைத்தது. அதன் விளைவினால் வலது கையில் இரண்டு விரல்கள் துண்டானதுடன் உடலிலும் காயங்கள் ஏற்பட்டது. பிரதிவாதிகள், தங்களின் ஒட்டுமொத்தக் கவனக்குறைவிற்காக ரூபாய் 1,50,000/-ஐ இழப்பீடாக செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

SHORT NOTES

76. கூட்டுக்கவனமின்மை / Composite negligence

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கவனக்குறைவின் கூட்டு விளைவாக வாதிக்கு ஏற்படும் இழப்பே கூட்டுக்கவனமின்மை எனவும், அத்தகைய இழப்பை ஏற்படுத்தும் நபர்களையே கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தில் கூட்டுக் கவனமின்மைத் தீங்கு புரிந்தவர்களை, கூட்டாகத் தீங்கிழைத்தோர் மற்றும் தனித்து தீங்கிழைத்தோர் என இருவகையாகப் பிரிக்கப்பட்டனர். இவ்விருவகைத் தீங்கிழைத்தோரின் பொறுப்பு நிலைக் குறித்து வேறுபட்ட விதிகள் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும், சட்டச் சீர்திருத்தம் (மணமான பெண்கள் மற்றும் தீங்கிழைத்தோர்) சட்டம், 1935 [Law Reform (Married Women & Tort feasors) Act, 1935] மற்றும் உரிமையியல் பொறுப்புடைமை (பகிர்வுச்) சட்டம், 1978 [Civil Liability (Contribution) Act, 1978] ஆகிய இரு சட்டங்களும், கூட்டாகத் தீங்கிழைத்தவர்களை தனித்து தீங்கிழைத்தோருக்கு சமமான நிலைக்கு கொணர்ந்தன. இந்தியாவில் கூட்டாகத் தீங்கிழைத்தோர் மற்றும் தனித்து தீங்கிழைத்தோருக்கு இடையேயான வேறுபாடு மிகுந்த தொடர்பு கொண்டிருக்கவில்லை. இந்தியாவில் கூட்டுக் கவனமின்மை என்பது இவ்விரண்டு வகைகளையும் உள்ளடக்கிய நோர்வுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுக் கவனமின்மையில் பொறுப்பு நிலையின் தன்மை (Nature of liability in composite negligence): கூட்டுக் கவனமின்மையில் தீங்கிழைத்தோர்களின் பொறுப்புநிலை கூட்டானதும் மற்றும் தனித்தனியானதுமாகும். (joint and several). எவரொருவரும் இழப்பீட்டினைப் பகிரக் கோருவதோ மற்றும் தன்னுடைய தவறின் அடிப்படையைச் சார்ந்து மட்டுமே

பொறுப்புநிலை இருக்க வேண்டும் எனக்கூறுவதோ அனுமதிக்கப்படமாட்டாது. கூட்டாகத் தீங்கிழைத்தோருக்கு எதிரான தீர்ப்புரை, விகிதப் பகிர்வின்றி ஓர் ஒட்டுமொத்த தொகையாகவே இருக்கும். வாதி தன்னுடைய உரிமையை முழுவதுமாக பிரதிவாதி ஒருவருக்கு எதிராக மட்டுமே செயல்முறைப்படுத்தவும் சுயவிருப்பு கொண்டுள்ளார். இருப்பினும், தன்னுடைய பங்கிற்கும் அதிகமான தொகையை இழப்பீடாக செலுத்திய பிரதிவாதி ஒருவர், மற்ற பிரதிவாதிகளிடம் இருந்து பங்குத்தொகை கோர முடியும்.

Hira Devi Vs Bhabakant Das, AIR 1977 Gau. 31., என்ற வழக்கில், மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பேருந்தின் ஓட்டுநர் மற்றும் மோட்டார் கார் ஒன்றின் ஓட்டுநரின் கவனமின்மைக் காரணமாக ஏற்பட்ட விபத்தில், மற்றொரு காரில் பயணம் செய்த ஒருவரும், அக்காரில் பயணம் செய்த சில நபர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டது. தீர்ப்பாயம், இழப்பீட்டுத் தொகையை பேருந்து மற்றும் மோட்டார் கார் உரிமையளர்களுக்கு இடையே இழப்பீட்டுத் தொகையை விகிதப் பகிர்வு செய்திருந்தது. கௌஹாத்தி உயர்நீதிமன்றம், இழப்பீட்டுத் தொகையை தீங்கிழைத்த இருவருக்கு இடையே விகிதப்பகிர்வு செய்ததில் தீர்ப்பாயம் தவறு செய்துவிட்டது என்பதைக் குறிப்பிட்டது. இது ஓர் கூட்டாகத் தீங்கிழைத்தோர் குறித்த வழக்கு என்றும் மோட்டார் கார் உரிமையாளரின் பொறுப்பு நிலை மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டது. உரிமைக் கோருபவர்கள், இழப்பீட்டின் முழுத்தொகையையும் பேருந்தின் உரிமையாளரிடம் அதாவது மாநில போக்குவரத்துக் கழகத்திடம் இருந்து பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளார்கள் என்றும், இது, மாநில போக்குவரத்துக் கழகம், மற்றொரு தீங்கிழைத்தவரான மோட்டார் காரின் உரிமையாளரிடம் இழப்பீட்டின் பகிர்வுத் தொகையை கோரும் உரிமையை பாதிக்காது என்றும் தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டது.

தன்பாற் கவனமின்மைக்கும் கூட்டுக் கவனமின்மைக்கும் இடையேயான வேறுபாடு (Distinction between contributory negligence and composite negligence): தன்பாற் கவனமின்மைக்கும் கூட்டுக் கவனமின்மைக்கும் இடையே இரண்டு முக்கிய வேறுபாடுகள் உள்ளது.

முதலாவதாக, இரு தரப்பிலும் அதாவது வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருதரப்பிலும் கவனமின்மை இருப்பின் அது ஓர் தன்பாற் கவனமின்மை குறித்த வழக்காகும். ஓர் நபர், தன் தரப்பில் கவனக்குறைவாக இல்லாமல் இருந்து, ஆனால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கவனக்குறைவின் கூட்டு விளைவாக ஊறினுக்கு உள்ளாகுவது கூட்டுக் கவனமின்மை குறித்த வழக்காகும். இரண்டாவதாக, தவற்கவனமின்மை ஓர் எதிர்வாதமாகக் கருதப்படுவதாகும். ஆனால் கூட்டுக்கவனமின்மை ஓர் எதிர்வாதமாகாது. தன்பாற் கவனமின்மையில் நீதிமன்றம் தரப்பினர்களின் 'தவறின்' அளவை நோக்குகிறது மற்றும் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே அவர்களின் தவறின் அளவுக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகையை விகிதப்பகிர்வு செய்கிறது. கூட்டுக் கவனமின்மையில், இரண்டு

அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிவாதிகளின் பொறுப்புநிலை கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் இருப்பதால் நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு இடையே இழப்பீட்டுத் தொகையின் விகிதப்பகிர்வை முடிவு செய்வதில்லை. இதன் விளைவாக அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிரான இழப்பீட்டுத் தொகையை விகிதப் பகிர்வு ஏதும் செய்யாமல் ஒரே தீர்ப்பாணையில் (decree) பிறப்பிக்கிறது.

77. கவனமின்மையில் நிரூபிக்கும் சுமை / Burden of Proof in negligence - Nov-2017

கவனமின்மைக்கான வழக்கின் பொதுவான விதி என்னவெனில், கவனமின்மை குறித்து முறையீடு செய்பவரே அதாவது வாதியே அதனை மெய்ப்பிக்கும் அல்லது நிரூபிக்கும் சுமையைக் கொண்டுள்ளார் என்பதாகும். பிரதிவாதி பொறுப்பு நிலைக்கு உள்ளாகும் அத்தகைய செயல் அல்லது விடுகையால் (act or omission) தீங்குற்ற வாதியே அதனை மெய்ப்பிக்க வேண்டும். மேலும் பிரதிவாதியின் செயல் அல்லது விடுகையே வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நெருங்கிய காரணமாகும் என்பதையும் வாதி மெய்ப்பிக்க வேண்டும். சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில், கவனமுடன் இருக்க வேண்டிய கடமை மீறப்பட்டுள்ளது என்பதையும் மற்றும் முறையீடு செய்யப்பட்டுள்ள ஊறுக்கும் அத்தகைய கடமை மீறுகைக்கும் காரணக் காரியத் தொடர்புள்ளது (casual connection) என்பதையும் வாதியே மெய்ப்பிக்க வேண்டும். இவ்விரு கூறுகளையும் அவர் (வாதி) மெய்ப்பிக்கத் தவறினால் அவரின் வழக்கு தோல்வியுறும். பிரதிவாதியின் கவனமின்மையின் காரணமாகவே தாம் அத்தகைய முறையில் தீங்கிற்கு உள்ளானதை மெய்ப்பிப்பதோடு மட்டுமின்றி பிரதிவாதியின் தரப்பில் உரிய கவனம் காட்டப்படவில்லை என்பதற்கான பொருண்மைகளையும் வாதி மெய்ப்பிக்க வேண்டும். நீதிபதியின் கடமை, முதலாவதாக, பிரதிவாதியின் ஒப்புதல் உட்பட, வாதியின் சார்பில் முன்னிடப்பட்ட சான்று, ஒரு சமநிலை அறிவு பொருந்திய மனிதனின் பார்வையில் (பிரதிவாதியின் சார்பில் முன்னிடப்பட்ட எந்தவொரு சான்றினையும் கருத்தினில் கொள்ளாமல்) பிரதிவாதியின் கவனமின்மையே விபத்திற்கான காரணம் என்ற முடிவுக்கு வருவாரா, என்பதை முடிவு செய்வதாகும். **K.C.Kumaran Vs Vallabhadas Vasanji, AIR 1969 Ker 9.**, என்ற வழக்கில், பிரதிவாதிக்கு எதிரான கவனமின்மை குறித்த முதற்பார்வையிலான வழக்குள்ளது (prima facie case of negligence) என்பதை தொடக்கத்திலேயே மெய்ப்பிக்க வேண்டிய பெருஞ்சுமை வாதியையேச் சாரும் மற்றும் வாதி இத்தகைய கடமையை நிறைவேற்றியவுடன், பிரதிவாதியே தனபாற் கவனமின்மை அல்லது அந்நிகழ்வு தவிர்க்க இயலா விபத்தின் விளைவாகும் என்பதை மெய்ப்பிக்க வேண்டும் என இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டது.

பிரதிவாதியின் கவனமின்மையை மெய்ப்பிக்கும் சுமை வாதியையே சாரும் எனும் விதி பின்வரும் விலக்குகளுக்கு (exceptions) உட்பட்டது:

(1) தரப்பினர்களுக்கு இடையே ஓர் ஒப்பந்தம் அல்லது கவனமுடன் இருப்பதான தனிப்பட்ட உறுதியேற்பு (personal undertaking) இருக்கும்

அத்தகைய நேர்வுகளில் நட்டம் அல்லது இழப்பிற்கு தன்னுடைய கவனமின்மை காரணமல்ல என்பதை பிரதிவாதியே மெய்ப்பிக்கும் சுமையை கொண்டுள்ளார்.

(2) மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகள் அல்லது ஏற்பு செய்யப்பட்டவைகள் (admitted), பிரதிவாதியின் தரப்பில் உள்ள கவனமின்மைக்கு முதல் நோக்கிலேயே சான்றாக அமையும்போது, வாதி வெறுமனே விபத்தை மெய்ப்பித்தாலே அவர் மெய்ப்பிக்கும் சுமையை நிறைவேற்றியதாகும்; ஆனால் பிரதிவாதியின் கவனமின்மையால்தான் தனக்கு இழப்பு ஏற்பட்டது என்பதை மெய்ப்பிப்பதற்காக அது எவ்வாறு ஏற்பட்டது என்பதை வாதி மெய்ப்பிக்கத் தேவையில்லை. பிரதிவாதியே அந்நிகழ்வு தன்னுடைய கவனமின்மையால் நிகழவில்லை என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

கவனமின்மைக்கான எதிர்வாதங்கள் (Defences for negligence): பெரும்பாலான எதிர்வாதங்கள், தீங்கியல் பொறுப்புடைமையை பொதுவாக எதிர்க்கும் அத்தகைய நிலைகளைச் சார்ந்திருக்கும். இசைந்தேற்பது தீங்காகாது, தற்காப்பு, சட்ட அதிகாரம், அரசு முறைச் செயல், சேதத்தின் சேய்மை போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இவைகள் தவிர, கவனமின்மைக்கான வழக்கில் பிரதிவாதி சிறப்பாக, தன்பாற் கவனமின்மை, கடவுளின் செயல் அல்லது இயற்கை பேராற்றல், தவிர்க்க இயலா விபத்து போன்ற எதிர்வாதங்களையும் நேர்விற்கேற்ப பயன்படுத்தலாம்.

78. இரு அபாயங்களில் ஒன்றை தேர்வு செய்தாக வேண்டிய நிலை எனும் கோட்பாடு / Doctrine of Alternative danger (அல்லது) கவனமின்மையால் உண்டாகும் இரண்டக நிலை / Dilemma produced by negligence.

பொதுவாக, வாதி தன்னை கவனமுடன் தற்காத்துக் கொள்ளும் கடமையைக் கொண்டுள்ளார். இருப்பினும், பிரதிவாதி தன்னுடைய தவறான செயலால் வாதியை அபாயகரமான நிலைக்கு உட்படுத்தும்போது, வாதி, அபாயகரமான அத்தகைய சூழ்நிலையில் நியாயமான முறையில் அபாயத்திலிருந்து தப்பியதற்காக தம்முன் உள்ள இரு அபாயங்களில் ஒன்றை பின்பற்றியதால் ஏற்படும் ஊறுகள் பொறுத்து பிரதிவாதி தற்கவனமின்மை எனும் எதிர்வாதத்தை பயன்படுத்தமுடியாது. ஏனெனில் பிரதிவாதியின் தவறான செயலே அல்லது கவனமின்மையே வாதியை அத்தகைய அபாயகரமான நிலைக்கு தள்ளியது. ஒரு சில நேர்வுகளில், வாதி எந்தவொரு செயலையும் செய்யாமல் இருந்திருந்தாலே எவ்வித ஊறுக்கும் உள்ளாகாமல் இருந்திருக்கலாம் என்றாலும்கூட, பிரதிவாதி இத்தகைய வாதத்தை எழுப்புவதற்கு தகுதி கொண்டிருக்க மாட்டார். பிரதிவாதியின் தீங்கான செயலால் அபாயத்தில் சிக்குண்ட வாதி அத்தகைய இக்கட்டான நேரத்தில் அதாவது மிகக்குறைந்த அவகாசம் உள்ள நிலையில், எதிர்நோக்கும் ஆபத்தின் காரணமாக, தெளிவாக முடிவெடுக்கும் தகுதியை அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. எனவே வாதி அத்தகைய இக்கட்டான நிலையில் இருந்து விடுபடுவதற்காக மேற்கொண்ட செயல் தவறாக இருந்தாலும்கூட, அதனால் ஏற்படும் ஊறுகளுக்கும் பிரதிவாதியே

பொறுப்பாகுவார். இக்கோட்பாடு தொடர்பான முக்கிய வழக்கு **Jones Vs Boyce, (1816) 1 Stark 493.,** ஆகும். இவ்வழக்கில் குதிரைகள் பூட்டப்பட்ட பிரதிவாதிக்குச் சொந்தமான வண்டியில் வாதி பயணம் செய்தார். பிரதிவாதி வண்டியை முறையாகப் பராமரிக்கவில்லை. வண்டி மலையின் மேலிருந்து கீழ்ப்பகுதிக்கு வந்து கொண்டிருந்தபோது குதிரைகளின் கடிவாளத்தை இணைக்கும் வளையம் (coupling reign) உடைந்ததால் மிரண்ட குதிரைகள் தாறுமாறாக ஓடின. கடிவாளத்தின் இணைப்பு வளையம் உடைந்ததன் காரணமாக, பிரதிவாதி, வண்டியை சாலையின் ஓரமாக ஓட்ட வேண்டியதாயிற்று. தாறுமாறாக ஓடிய குதிரைகள் சாலையின் ஓரத்திலிருந்த கம்பத்தில் மோதி தலைகீழாக விழவிருந்த நேரத்தில் வண்டியின் பின்பக்கத்தில் அமர்ந்திருந்த வாதி, தான் ஆபத்தில் சிக்கிக் கொண்டதை உணர்ந்து, அதை உடனடியாக தவிர்ப்பதற்காக வண்டியிலிருந்து குதித்ததால் காயமுற்றார். ஆனால் அதன்பின்னர் வண்டி கவிழாமல் நின்றுவிட்டது. வாதி வண்டியிலேயே அமர்ந்திருந்தால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்காது. இது தொடர்பாக எழுந்த வழக்கில் எல்லன்பரோ பிரபு (Lord Ellenborough), வாதி வழக்கை நிலைநிறுத்திட வண்டியிலிருந்து தூக்கியெறியப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. பிரதிவாதியின் தவறான செயலால், வண்டியிலிருந்து குதிப்பது அல்லது வண்டியிலேயே தொடர்ந்து இருப்பது எனும் இரு ஆபத்தான வழியினுள் ஒன்றை செய்தாக வேண்டிய அத்தகைய நிலைக்கு வாதியைத் தள்ளிய பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தார்.

இக்கோட்பாடு, பிரதிவாதியின் தவறான செயலால் ஆபத்தில் சிக்குண்ட வாதி, அத்தகைய ஆபத்திலிருந்து தப்பிப்பதற்காக தன் முன்னிலையில் உள்ள இரு அபாயங்களில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யும் அத்தகைய நேர்வுகளுக்கு மட்டுமே பொருந்தும். எனவே வாதியின் உயிருக்கு அல்லது உடைமைக்கு அச்சுறுத்தல் இல்லாத நேர்வுகளுக்கு இக்கோட்பாடு பொருந்தாது. **Adams Vs L&Y Rly Co., (1869) LR 4 CP 739.,** என்ற வழக்கில் இரயில் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த வாதி, பெட்டியின் கதவு திரும்பத் திரும்ப திறந்து கொள்வதைக் கண்டு, அது அவரை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்றாலும்கூட, அதனை மூடுவதற்காக முயற்சித்த போது தவறி கீழே விழுந்து காயமுற்றார். வாதி இழப்பீடு பெற தகுதி கொண்டிருக்கவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Shyam Sunder Vs State of Rajasthan, AIR 1974 SC 890., என்ற வழக்கில், பிரதிவாதிகளான இராஜஸ்தான் மாநில பொதுப்பணித்துறைகுச் சொந்தமான லாரி ஒன்று, நான்கு மைல் தூரம் கூட சென்றிருக்காத போது தீப்பற்றியதால், வண்டியில் இருந்த நவ்நீத்லால் என்பவர் தீயிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வெளியே குதித்தபோது, சாலையின் ஓரத்தில் இருந்த கல்லின்மீது பலமாக மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அலகு -IX (d)

தொல்லை (Nuisance)

PART - A/B

60. 'தொல்லை' என்பதன் பொருள் மற்றும் வரையறையைக் குறிப்பிடுக. தொல்லையை அத்துமீறலிலிருந்து வேறுபடுத்துக. (Mention the meaning and definition of 'nuisance'. Distinguish nuisance from trespass).

விடைச்சுருக்கம்: (அ) 'தொல்லை' என்பதன் பொருள் - (ஆ) 'தொல்லை' என்பதன் வரையறை - (இ) தொல்லைக்கும் அத்துமீறலுக்கும் இடையேயான வேறுபாடுகள்

(அ) 'தொல்லை' என்பதன் பொருள் (Meaning of 'nuisance')

'nuire' என்ற பிரெஞ்சு சொல்லில் இருந்தும் 'nocere' அல்லது 'nocumentum' என்ற இலத்தீன் சொல்லில் இருந்தும் பெறப்பட்ட 'nuisance' என்ற ஆங்கிலச் சொல் சட்ட உணர்வில் 'தொந்தரவு' (annoyance) அல்லது 'கெடுதி' அல்லது 'தீங்கு' (harm) என்பதைக் குறிக்கும். எனவே தொல்லை என்றச் சொல்லின் நேரடிப் பொருள் தொந்தரவு என்பதாகும். அடிப்படையில், வாழ்க்கை அல்லது சொத்தை துய்ப்பதில் கெடுதி, அசௌகரியம், சேதம் அல்லது இடையூறு ஏற்படுத்தும் செயல்களே தொல்லை எனப்படுவதாகும். சாதாரணமாக இது இடையூறுகளைக் (disturbances) குறிக்கும். தீங்கியலில் தொல்லை என்பது, ஊறு அல்லது இழப்பை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய இடம் அல்லது பொருளையும் அல்லது பார்த்தல், முகர்தல் அல்லது கேட்கும் உணர்விற்கு ஆபத்தை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தவல்லதையும் அல்லது உயிருக்கு, உடல்நலனிற்கு அல்லது சொத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தவல்ல எந்தவொரு செயலையும், விடுகையையும் (any act, omission) உள்ளடக்கும். பக்கத்தில் வசிப்பவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வானொலி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒலி அளவை மிகவும் கூட்டிக் கேட்பது, ஒருவருக்கு சொந்தமான மரத்தின் வேர்கள் அல்லது கிளைகள் மற்றொரு நபரின் நிலத்தினுள் அல்லது நிலத்தின் மேல் பரவுதல், தொழிற்சாலையில் இருந்து உடலுக்கு ஊறு விளைவிக்கும் வாயுக்கள் அருகில் பரவுதல் அல்லது மாசுக்கேட்டினை ஏற்படுத்துதல் போன்றவைகளை தொல்லைக்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

(ஆ) 'தொல்லை' என்பதன் வரையறை (Definition of 'nuisance'):

சட்ட அறிஞர் பிளாக்ஸ்டன் (Blackstone), "தீங்கு, அசௌகரியம் அல்லது இழப்பை ஏற்படுத்தும் ஏதேனுமொன்று" என தொல்லையை வரையறுக்கிறார்.

அறிஞர் சால்மண்ட், "ஒரு நபர் நிலத்தை அல்லது அதன்மீது அல்லது அதனுடன் தொடர்பு கொண்ட ஏதேனும் உரிமையை பயன்படுத்துவதில் அல்லது துய்ப்பதில் சட்டவிரோதமாக இடையூறு விளைவிப்பது" என்று தொல்லையை வரையறுக்கிறார். மேலும், தொல்லைத்தீங்கு என்பது, ஒரு நபர் தன்னுடைய நிலத்திலிருந்து அல்லது வேறு எங்கேனும் இருந்து, சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி தீங்கான அல்லது தீங்கு விளைவிக்கும் பொருளை (deleterious thing) வாதியின் உடைமையில் உள்ள நிலத்தினுள் புகுமாறுச் செய்வது அல்லது அனுமதிப்பதை உள்ளடக்கும் என்றும் இதற்கு எடுத்துக்காட்டுகளாக நீர், புகை, நாற்றம், வாயு, இரைச்சல், வெப்பம், அதிர்வு, மின்சாரம், நோய்க்கிருமிகள், விலங்குகள் உள்ளிட்டவற்றையும் குறிப்பிடுகிறார்.

"நிலத்தை ஒருவர் பயன்படுத்துவதில் அல்லது அதனைத் துய்ப்பதில் அல்லது அதன்மீதான அல்லது அதனுடன் தொடர்புடைய உரிமைகளில் சட்டவிரோதமாக குறுக்கிடுவது" எனப் பேராசிரியர் வின்ஃபீல்ட் தொல்லையை வரையறுக்கிறார். ஒரு நபரின் வசதி, உடல் நலன் அல்லது பாதுகாப்பு தொடர்பாக குறுக்கிடும் செயல்கள் தொல்லைக்கு எடுத்துக்காட்டுகளாகும் என்றும் வின்ஃபீல்ட் குறிப்பிடுகிறார்.

தொல்லை என்பது மிகச் சரியான (exact) ஓர் வரையறைக்கு உட்பட்டதன்று என்பதை சட்ட அறிஞர்கள் சல்மாண்ட் மற்றும் வின்ஃபீல்ட் ஆகிய இருவரும் குறிப்பிடுகின்றனர். அறிஞர் பொல்லாக், "ஒரு நபர் தன்னுடைய சொத்தை துய்ப்பதில் அல்லது சில நேரங்களில் பொதுவான உரிமையை துய்ப்பதில், சட்ட விரோதமாக அவருக்கு இடையூறு ஏற்படுத்தும் தவறான செயலே தொல்லை" எனத் தொல்லையை வரையறுத்துள்ளார்.

(இ) தொல்லைக்கும் அத்துமீறலுக்கும் இடையேயான வேறுபாடுகள் (Difference between nuisance and trespass):

மற்றவர்களின் உரிமையை காரணமற்ற முறையில் பாதிக்கச் செய்கின்ற, உயிர் மற்றும் உடல் நலனிற்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய, உணர்வுகளுக்கு ஊறு ஏற்படுத்துகின்ற, நாகரீக விதியை மீறுகின்ற அல்லது சொத்தை வசதியாகவும் நியாயமாகவும் பயன்படுத்துவதில் தடை ஏற்படுத்துகின்ற எந்தவொரு செயலும் தொல்லை என்பதாகும். ஒருவர் நிலத்தின்மீது கொண்டுள்ள உடைமையில் சட்டவிரோதமாக, எவ்வித நியாயமான காரணமும் இன்றி, மற்றொருவர் குறுக்கிடுவது அத்துமீறலாகும். தொல்லை மற்றும் அத்துமீறல் ஆகிய இரண்டுமே, ஒரு நபர் தனது நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதன்மீதான அல்லது அதனுடன் தொடர்பு கொண்டுள்ள உரிமையியல் சட்டவிரோதமாக குறுக்கீடும் தீங்கு தொடர்பானதாகும். இரண்டிலும் வாதி தன்னுடைய உடைமையை மெய்ப்பிக்க வேண்டும். இவ்வாறு தொல்லை மற்றும் அத்துமீறல் ஆகிய இவ்விரண்டு தீங்குகளுக்கு இடையே ஒருசில ஒத்தத் தன்மைகள் இருந்தாலும்கூட, இவைகளுக்கு இடையே பின்வரும் முக்கிய வேறுபாடுகள் உள்ளது.

	தொல்லை	அத்துமீறல்
1.	உடைமையுடன் அவசியத்தொடர்பு கொண்டுள்ள ஏதேனும் ஓர் உரிமைக்கு ஊறு விளைவிப்பது.	நேரடியாக உடைமைக்கு எதிராக ஊறு விளைவிப்பது.
2.	தொல்லைக்கான வழக்கிடுவதற்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.	அத்துமீறல் தன்னிலையிலேயே (per se) வழக்கிடத்தக்கது
3.	மற்றொருவரின் நிலத்தில் நியாயமின்றி குறுக்கிடுவதை உள்ளடக்கும்.	எவ்வித ஊறு ஏற்படுத்தாமல் இருந்தாலும்கூட அதிகாரபூர்வமற்று அல்லது அனுமதியின்றி மற்றொருவரின் நிலத்தினுள் நுழைவது
4.	வாதியின் சொத்தில் மறைமுகமாக குறுக்கிடுவது	வாதியின் சொத்தில் நேரடியாக குறுக்கிடுவது
5.	வாயு, இரைச்சல், நாற்றம், அதிர்வுகள், மின்சாரம் போன்ற ஏதேனும் தொட்டுணர முடியாத பொருட்களின் மூலமும் தொல்லையை ஏற்படுத்த முடியும்.	அத்துமீறலில், எப்போதும் தொட்டுணரக்கூடிய பொருட்களின் மூலமாக மட்டுமே குறுக்கிடமுடியும்.
6.	இது, வாதி, நிலம் அல்லது சொத்தை பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் இடையூறு விளைவிப்பதைக் குறிக்கும்.	இது, வாதியின் உடைமையில் உள்ள நிலத்தில் அல்லது வாதிக்குச் சொந்தமான சொத்தில் குறுக்கிடுவதைக் குறிக்கும்.

61. பொதுத் தொல்லையையும் தனித்தொல்லையையும் வேறுபடுத்துக. தொல்லை நடவடிக்கைக்கு எதிரான எதிர்வாதங்கள் யாவை? (Distinguish between public nuisance and Private nuisance. What are the defences available against an action for nuisance?) - Nov-2012, May-2014.

SN - 79 தனித்தொல்லை / Private nuisance, May-2012(v).

SN - 80 பொதுத்தொல்லை / Public nuisance.

SN - 81 தனித்தொல்லை மற்றும் பொதுத்தொல்லை / Private and Public nuisance, Nov-2013, May-2015, Nov-2018(v).

SN - 82 தொல்லைக்கான எதிர்வாதங்கள் / Defences to nuisance

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை - (ஆ) தொல்லையின் வகைகள் - ஆ (1) பொதுத்தொல்லை - ஆ (2) தனித்தொல்லை - (இ) பொதுத்தொல்லைக்கும் தனித்தொல்லைக்கும் இடையேயான வேறுபாடுகள் - (ஈ) எதிர்வாதங்கள் - ஈ(1) செல்லத்தக்க எதிர்வாதங்கள் - ஈ(2) செல்லத்தகாத எதிர்வாதங்கள்.

(அ) முன்னுரை (Introduction): பொதுவாக தொல்லை என்பது:-

(i) பொதுமக்கள் அனைவருக்கும் உள்ள பொதுவான உரிமைகளை செயல்படுத்துவதில் வசதிக்குறைவு (அசௌகரியம்) அல்லது இழப்பை ஏற்படுத்துகின்ற, சட்டத்தினால் நியாயப்படுத்த முடியாத செயல்கள்;

(ii) நிலத்தை உடைமையில் கொண்டிருக்கும் நபர், அந்நிலத்தைப் பயன்படுத்துவது அல்லது அதனின்று எழுகின்ற ஆதாயத்தை துய்ப்பது தொடர்பான உரிமைகளில் மற்றொருவர் குறுக்கிடுவது; மற்றும்;

(iii) சட்டத்தினால் தொல்லை என விளம்பப்பட்ட செயல்கள் அல்லது விடுகைகள் - ஆகியவற்றை உள்ளடக்கும். தொல்லை எனும் கருத்துரு (idea) நுட்பமான வரையறைக்கு உட்பட்டதல்ல. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் **William Case (1595) 5 Co Rep 73 a.,** என்ற வழக்கில், ஓர் பொதுமுக உரிமையின் (public right) மீறுகையினால், ஓர் தனிப்பட்ட நபரின் உரிமை மீறப்படின், அத்தனிப்பட்ட நபர் வழக்கிட முடியும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் இருந்தே தீங்கியல் பொறுப்புநிலைக் கொண்ட பொதுத்தொல்லை மற்றும் தனித்தொல்லை எனும் இருவகையான நடத்தைகள் எழுந்தன. இவ்விரு வகையான நடத்தைகளுக்கும் (தீங்குகளுக்கும்) இடையேயான ஒரே ஒற்றுமை வசதிக்குறைவை (inconvenience) ஏற்படுத்துவதே தவிர மற்றபடி வேறுபட்ட வகைகளிலான உரிமைகளை மீறும் இவ்விரண்டிற்கும் இடையே வேறு ஒற்றுமை அல்லது பொதுவானத்தன்மை ஏதுமில்லை.

(ஆ) தொல்லையின் வகைகள் (Kinds of nuisance):

தொல்லை, (1) பொதுத்தொல்லை மற்றும் (2) தனித்தொல்லை என இருவகைப்படும்.

ஆ(1) பொதுத்தொல்லை (Public nuisance): பொதுத்தொல்லை ஓர் குற்றமாகும். இந்திய தண்டனைச் சட்டம், 1860-ன் பிரிவு-268, பொதுத்தொல்லையை வரையறுத்துள்ளது. இதன்படி, "பொதுமக்களுக்கு அல்லது அருகிலுள்ள சொத்தில் வசிக்கும் மக்களுக்கு பொதுவான ஊறு, அபாயம் அல்லது தொந்தரவு எதனையும் ஏற்படுத்துகின்ற அல்லது பொது உரிமை எதனையும் பயன்படுத்தும் வாய்ப்பை பெறக்கூடிய நபர்கள் எவருக்கேனும், ஊறு, அபாயம் அல்லது தொந்தரவு ஏற்படக்கூடிய எந்தவொரு செயலைச் செய்யும் அல்லது சட்ட விரோத விடுகை (illegal omission) குற்றம் எதனையும் செய்யும் ஒருவர் பொதுத் தொல்லை குற்றம் செய்தவராவார்."

பொதுத்தொல்லை என்பது பொதுமக்கள் அனைவருக்கும் அல்லது குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களுக்கு உள்ள அவர்களின் பொதுவான உரிமைகளை பாதிக்கும் செயலாகும். 'கிளார்க்' மற்றும் 'லிண்ட்செல்' (Clark and Lindsell) வரையறுத்துள்ளவாறு, "பொதுமக்களின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் ஓர் நபருக்குள்ள உரிமையை செயல்படுத்துவதில் அல்லது அத்தகைய உரிமையை துய்ப்பதில் குறுக்கிடுவதாக அல்லது இடையூறு விளைவிப்பதாக அல்லது தொந்தரவு செய்வதாக ஓர் செயல் அல்லது விடுகை இருப்பின் அது ஓர் பொதுத்தொல்லையாகும்." இவ்வாறு பொதுத்தொல்லை என்பது, சமுதாய உறுப்பினர்கள் துய்க்கும் உரிமையில் குறுக்கிடுவதைக் குறிக்கும். இவைகள் பொதுவாக, மக்களின் உடல்நலன் பாதுகாப்பு, வசதி ஆகியவற்றில் இடையூறு விளைவிக்கின்ற அல்லது பொது ஒழுக்கத்தை தாழச் செய்கின்ற (degrade public morals) அத்தகைய செயல்களைக் குறிக்கும். அளவுக்கு மீறிய இரைச்சல்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய வெடிமருந்துகளை அதிக அளவில் வைத்திருத்தல், நெடுஞ்சாலையில் பள்ளம் தோண்டுதல், தகுதியற்ற உணவுகளை விற்பனை செய்தல், போக்குவரத்திற்கு இடைஞ்சலாக நெடுஞ்சாலையில் தடையை ஏற்படுத்தல், விபச்சார விடுதியை நடத்துதல் ஆகியவற்றை பொதுத்தொல்லைக்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

ஆ(2) தனித்தொல்லை (Private nuisance): குறிப்பிட்ட நபருக்கு தனிமுறையிலான (exclusively) கெடுதியை ஏற்படுத்தும் செயலே தனித்தொல்லையாகும். மற்றொரு நபரின் நிலம் அல்லது சொத்திற்கு அல்லது அதனின்று எழுகின்ற நலன்களைப் பயன்படுத்துவதில் அல்லது துய்ப்பதில் பெருமளவு இடையூறு விளைவிக்கும் ஒருவரின் செயல் அல்லது விடுகையே தனித்தொல்லை என்பதாகும். தனித்தொல்லை பின்வரும் இருவகைப்படும்:

(i) பக்கத்து நிலச் சொத்தின் வசதி உரிமைகளுக்கு முறையற்ற வகையில் ஊறு விளைவித்தல் – எ-டு: ஒளி, காற்றைத் தடுத்தல்; மற்றும்

(ii) தீங்கு விளைவிக்கும் பொருள்களை முறையின்றி அடுத்தவர் நிலத்தினுள் செல்ல விடுதல் அல்லது புகச் செய்தல் – எ-டு: நீர், புகை, நாற்றம், கழிவுநீர், இரைச்சல். வெப்பம், மின்சாரம், நோய்க்கிருமிகள் போன்றவற்றை அடுத்தவர் நிலத்தினுள் செல்ல விடுதல்.

தனித்தொல்லை ஓர் உரிமையியல் தவறாகும். தவறு செய்தவரை தண்டிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுக்காது; மாறாக, பாதிக்கப்பட்ட தரப்பினரே பிரதிவாதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர வேண்டும். பிரதிவாதியின் அவசியமற்ற அல்லது தேவையற்ற இடையூறின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அத்தகைய இடையூறு முறையற்றது அல்லது நியாயமற்றது எனக் கூறப்படுவதாக இருக்க வேண்டும். முறையற்ற அல்லது நியாயமற்ற இடையூறு என்பது சமுதாய பயன்பாட்டின் எல்லையையும் மிஞ்சிய இடையூறின் அளவைக் குறிக்கும். இடையூறு தொடர்ச்சியானதாக அல்லது மீண்டும் மீண்டுமானதாக (repititive) இருக்க வேண்டும்.

(இ) பொதுத் தொல்லைக்கும் தனித்தொல்லைக்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between Public nuisance and Private nuisance):

பொதுத் தொல்லைக்கும் தனித்தொல்லைக்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

	பொதுத்தொல்லை	தனித்தொல்லை
1.	இது பொதுமக்களுக்கு அல்லது குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்களுக்கான உரிமையை பொதுவாக பாதிப்பது	இது குறிப்பிட்ட நபர் அல்லது நபர்களை மட்டும் பாதிப்பது
2.	இது அசையா சொத்தின் உடைமை அல்லது உரிமை மூலத்துடன் எவ்வகையிலும் தொடர்பு கொண்டிருக்காது.	நிலம், வாடகையிடம், மரபு வழி சொத்தின் பயன்பாடு அல்லது அதனின்று எழும் ஆதாயம் அல்லது வசதிக்கு இடையூறு விளைவிப்பது என்பதால் சொத்தின் உடைமை, உரிமைமூலத்துடன் தொடர்புகொண்டது.
3.	சமுதாயத்தில் உள்ள மக்களைத் தாண்டி, தனக்கு குறிப்பிட்ட ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டிருப்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டும்.	வாதி தனக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறினுக்காக இழப்பீடு பெறுவதற்கு அல்லது உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரலாம்.
4.	காலக்கழிவு அதாவது நீண்ட கால அனுபோக உரிமை பொதுத் தொல்லையை சட்டபூர்வமாக்காது.	சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் காலக்கழிவு அதாவது நீண்டகால அனுபோக உடைமை தனித்தொல்லையை சட்டபூர்வமானதாகச் செய்யலாம்.
5.	தனிப்பட்ட நபரால் அகற்றப்பட முடியாது.	தனிப்பட்ட நபரால் அகற்றப்படலாம்.
6.	குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்கு தொடர வழிவகுக்கலாம்.	உரிமையியல் வழக்கு மட்டுமே தொடரப்பட முடியும்.
7.	தண்டனை அளிக்கப்படலாம்	வாதிக்கு இழப்பீடு மட்டுமே வழங்கப்படும்.
8.	பிரதிவாதியின் குறுக்கீட்டை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அரசுதரப்பையேச் சாரும்	நிலத்தின் மீதான வசதியை துய்ப்பதில் பிரதிவாதி குறுக்கிடுவதை வாதியே மெய்ப்பிக்க வேண்டும்.

(ஈ) எதிர்வாதங்கள் (Defences):

தொல்லைக்கான வழக்கில் எண்ணற்ற எதிர்வாதங்கள் எழுப்பப்பட்டு வந்துள்ளது. நீதமன்றங்கள் இவற்றுள் சிலவற்றை செல்லத்தக்க அல்லது பலனுள்ள எதிர்வாதங்கள் என்று அங்கீகரித்தும், பிற சில எதிர்வாதங்களை நிராகரித்தும் உள்ளன. செல்லத்தக்க மற்றும் செல்லத்தகாத எதிர்வாதங்களை பின்வருமாறு காண்போம்.

ஈ(1) செல்லத்தக்க அல்லது பலனுள்ள எதிர்வாதங்கள் (Valid or effectual defences):

ஈ(1) (a) நீண்டகால அனுபோக உரிமை அல்லது நீளுடைமை (Prescription): நீண்டகால அனுபோக உரிமை என்பதன்பேரில் ஓர் தனித்தொல்லை சட்டபூர்வமானதாக்கப்பட முடியும். தனித்தொல்லையை தொடர்ந்து செய்வதற்கான உரிமையை நீளுடைமையின் அடிப்படையில் ஓர் வசதியுரிமையாக பெறப்பட முடியும் என்பதை இந்திய வசதியுரிமைச் சட்டத்தின் பிரிவு - 15-ம் மற்றும் காலவரையறைச் சட்டத்தின் பிரிவு-25-ம் குறிப்பிடுகின்றன. (ஆனால் பொதுத் தொல்லைக்கு நீளுடைமை எனும் எதிர்வாதம் பொருந்தாது). ஓர் உடன்படிக்கையில் ஏற்றுக் கொண்டுள்ள நிபந்தனைகள் மூலம் பெற்ற அனுமதியும், தனித்தொல்லைக்கான வழக்கில் ஓர் செல்லத்தக்க எதிர்வாதமாக அமையும். வசதியுரிமையாக, ஓர் தனித்தொல்லை புரிவதற்கான உரிமையைப் பெற்றிட, அச்செயல் வெளிப்படையாகவும், எதிர்ப்பின்றியும் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக துய்க்கப்பட்டு வந்திருக்கப்பட வேண்டும். இருபது ஆண்டுகள் முடிந்ததும் அது ஓர் சட்டபூர்வ உரிமையாகிவிடும். அதாவது, தொடக்கத்தில் இருந்தே அத்தகைய வசதியை துய்ப்பதற்கு ஒடுங்கு நிலச் சொத்தின் உரிமையாளர் (owner of servient land) அனுமதியளித்ததாக ஆகிவிடும். ஆனால் தொல்லை ஏற்படுத்துவதாக முறையீடு செய்யப்படும் செயல் தொடங்கப்படும் வரையில் இருபது வருடக்காலம் என்பது தொடங்காது. இது தொடர்பான குறிப்பிடத்தக்க வழக்கு **Sturges Vs. Bridgeman, (1879) 11 Ch D., 852.**, என்ற வழக்காகும்.

இவ்வழக்கில் பிரதிவாதியான மிட்டாய் தயாரிப்பாளர், தன்னுடைய வீட்டின் பின்புறத்தில் உள்ள சமையலறையில், மிட்டாய் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களை துகள்களாக அரைக்கும் மற்றும் இடிக்கும் வேலையை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்து வந்தார். பிரதிவாதியின் செயலால் ஏற்பட்ட இரைச்சல் மற்றும் அதிர்வுகள் பக்கத்து வீட்டில் வசித்து வந்த மருத்துவரான வாதிக்கு தொல்லையாக இருக்கவில்லை. வாதி, தன் வீட்டின் பின்பக்கமிருந்த தோட்டத்தில் ஓர் ஆலோசனை அறையை (Consulting room) கட்டினார். அதன் பின்னரே முதன்முறையாக, பிரதிவாதியின் மிட்டாய் தயாரிப்பு வேலையினின்று எழுந்த இரைச்சல் மற்றும் அதிர்வுகளை உணர்ந்தவுடன் அது தனது தொழிலுக்கு பெரும் இடையூறு விளைவிப்பதாக இருந்ததால் அதனைத் தடுப்பதற்காக, பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டி வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதி தனக்கு நீளுடை உரிமை உள்ளதை எதிர்வாதமாகப் பயன்படுத்தினார். நீதிமன்றம் வாதி, தன்னுடைய வீட்டின் பின்புறம் ஆலோசனை அறை ஏற்படுத்திய

பின்னரே தொல்லை தொடங்கியது என்பதால், பிரதிவாதியின் நீளுடைமை கோரிக்கையை தள்ளுபடி செய்து, அவருக்கெதிராக உறுத்துக்கட்டளையை பிறப்பித்தது.

ஈ(1) (b) சட்டமுறை அதிகாரம் (Stautory authority): சட்டமுறை அதிகரத்தின்கீழ் செய்யப்பட்ட ஓர் செயல் தொல்லை என்பதற்கு எதிரான ஓர் முழுமையான எதிர்வாதமாகும். தொல்லையானது, சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் செயலின் அவசிய விளைவாக இருப்பின், அதன்பொருட்டு தீங்கியலில் பொறுப்புநிலை எழாது. இருப்புப்பாதையில் (rail) தொடர் வண்டிகளை (train) இயக்குவதற்கு சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ள இரயில்வே நிறுவனம், உரிய கவனத்தை செலுத்தியிருந்தும் 'என்ஜினில்' இருந்து வெளிப்பட்ட தீப்பொறி, இருப்புப்பாதையை ஒட்டியிருந்த பிரதிவாதியின் சொத்து தீப்பற்றி அழிந்து போனதற்கு பொறுப்பாகாது என **Vaughan Vs Taff Vale Rail Co., (1860) 5 H&N 679.,** என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஈ(1)(c) நிலத்தை சட்டப்படியாக பயன்படுத்தல் (Lawful use of land): பிரதிவாதி தன்னுடைய நிலத்தை சட்டத்திற்கு உட்பட்ட முறையில் பயன்படுத்துவது தொல்லை என்பதாகாது.

ஈ(1)(d) சொத்தை நியாயமான முறையில் பயன்படுத்தல் (Reasonable use of property): பிரதிவாதி, தனது சொத்தின் அமைவிடத்தை (locality) கருத்தில் கொண்டு செய்யப்படும் செயல்கள் அல்லது செயல் தவிர்ப்புகளும் தொல்லைக்கு எதிரான ஓர் பலனுள்ள எதிர்வாதமாக அமையும்.

மேற்குறிப்பிட்டவைகள் தவிர, கடவுளின் செயல், தவிர்க்க இயலா விபத்தும்கூட தொல்லைக்கு எதிரான வழக்கில் செல்லத்தக்க எதிர்வாதங்களாகும்.

ஈ(2) செல்லத்தகாத அல்லது பலனற்ற எதிர்வாதங்கள் (Invalid or ineffectual defences):

ஈ(2)(i) மற்றவர்களின் செயல்களால் ஏற்படும் தொல்லை (Nuisance due to acts of others): சில நேரங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே செய்யப்படும் செயல்கள், அதாவது அவர்களில் ஒருவர் மட்டுமே அத்தகையச் செயலைச் செய்திருந்தால் தொல்லை என்பதாகாத அத்தகைய செயலும்கூட, தொல்லை என்பதாக அமையலாம். அவர்களில் எவரேனும் ஒருவருக்கு எதிராகவும்கூட தொல்லை புரிந்ததாக வழக்கு தொடரமுடியும். அத்தகைய நேர்வுகளில், எவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதோ அந்நபர் (பிரதிவாதி), மற்றவர்களும் தான் செய்தது போன்ற அதே செயலைச் செய்ததன் விளைவாகவே தொல்லை ஏற்பட்டது என்று வாதிடுவது ஓர் எதிர்வாதமாகாது. **Thorpe Vs Burmfit, (1873) L.R. 8.Ch. 650.,** என்ற வழக்கில், நூற்றுக்கணக்கான மக்கள், ஒற்றைச் சக்கர தள்ளுவண்டியை ஒரே இடத்தில் நிறுத்தியதால் ஏற்பட்ட தொல்லைக்காக, அவர்களில் ஒருவர் வண்டியை நிறுத்தியிருந்தால் தொல்லை ஏற்பட்டிருக்காத அச்செயலுக்காக, நூற்றுக்கும் மேற்பட்ட அத்தகையோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட முடியும் என்றும், அவர்களில் எவரொருவரும், தன்னுடைய ஒருவரின் செயலால் மட்டுமே

முறையீட்டாளருக்கு இழப்பு ஏற்பட்டிருக்க முடியாது என்ற எதிர்வாதத்தை பயன்படுத்துவது அனுமதிக்க முடியாது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஈ(2)(ii) பொதுநலன் (Public good): ஓர் தனிப்பட்ட நபருக்கு தொல்லையாக அமையும் ஓர் செயல், பொதுவாக, பொதுமக்களுக்கு ஆதாயமளிக்கக்கூடியது என வாதிடுவது ஓர்எதிர்வாதமாகாது. இதனை ஓர் எதிர்வாதமாக அனுமதித்தால், தனிப்பட்ட நபர்களின் உரிமைகளில் சட்டத்திற்கு முரணாக குறுக்கிடும் பொதுப் பயனுடைப் பணி மேற்கொள்ளும் நிறுவனங்கள் (Public utility undertaking) எதனையும் பொறுப்பு நிலைக்கு உட்படுத்த முடியாமல் போய்விடும். **Shelfer Vs City of London Electric Lighting Co., (1895) 1 Ch. 287.,** என்ற வழக்கில் பிரதிவாதிகள் மின் நிலையம் (Power station) ஒன்றைக் கட்டும்போது ஏற்பட்ட கடுமையான அதிர்வுகளின் காரணமாக அருகிலிருந்த வாதியின் வீட்டிற்கு சேதம் ஏற்பட்டது. பிரதிவாதிகளின் செயலை தடுத்து நிறுத்த உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டி வாதி வழக்கு தொடர்ந்தார். மின்நிலையம் கட்டப்படாவிடில், மின் இணைப்பின்றி இலண்டன் மாநகரம் முழுமையும் ஒளிபெறும் ஆதாயம் இழக்கப்படுவதற்கு வழிவக்குக்கும் என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. நீதிமன்றம் பிரதிவாதிகளின் வாதத்தை தள்ளுபடி செய்து அவர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பித்தது.

ஈ (2)(iii) நியாயமான கவனம் (Reasonable care): பொதுவாக, தொல்லையைத் தடுப்பதற்கு நியாயமான கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது ஓர் எதிர்வாதம் ஆகாது. **Rapier Vs London Tramways Co., (1893) 2 Ch 588.,** என்ற வழக்கில், பிரதிவாதிகள் டிராம் வண்டியை இழுக்கும் இருநூறு குதிரைகளை பராமரிப்பதற்காக குதிரை இலாயங்களை கட்டியிருந்தனர். குதிரை இலாயங்களில் இருந்து வெளிப்பட்ட நாற்றம் வாதிக்கு தொல்லையை விளைவித்தது. இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், பிரதிவாதிகள் தொல்லையைத் தடுப்பதற்காக தாங்கள் அதிகபட்ச கவனம் எடுத்துக் கொண்டதாக வாதிட்டதை நீதிமன்றம் ஏற்க மறுத்து, பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

ஈ(2)(iv) வாதியே தொல்லையின் அருகில் வந்தார் (Plaintiff coming to nuisance): முறையீடு செய்யப்பட்டுள்ள தொல்லை ஏற்படுத்துவதாகக் கூறப்படும் இடத்திற்கு வாதியே வந்தார் என்பது ஓர் எதிர்வாதமாகாது.

Ellostion Vs Feetham, (1835) 2 Bing N.C 134., என்ற வழக்கில், ஓர் நபர் ஏற்கனவே தொல்லை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இடத்தின் அருகே உள்ள நிலத்தை விலைக்கு வாங்க மாட்டார் என்று எதிர்பார்க்க முடியாது என்றும், வாதி அவ்விடத்திற்கு செல்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, கூறப்படும் தொல்லை தொடர்ந்திருந்தது என்பது ஓர் எதிர்வாதமாகாது என்றும் இது போன்ற வழக்குகளில் இசைந்தேற்பது தீங்காகாது எனும் மூதுரையை பொருந்தச் செய்ய முடியாது என்றும் நீதிமன்றம் விளக்கியது.

62. 'தொல்லையின்' முக்கியக் கூறுகளை ஆராய்க. (Examine the essentials of 'nuisance').

விடைச்சுருக்கம்: (அ) தொல்லை தீங்கின் முக்கியக் கூறுகள் -அ (1) நியாயமற்ற குறுக்கீடு - அ (2) நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் குறுக்கிடுதல் - அ (3) இழப்பு

(அ) 'தொல்லை' தீங்கின் முக்கியக் கூறுகள் (Essential elements of the tort of nuisance):

தீங்கியல் சட்டத்தின்கீழ் ஓர் செயல் தொல்லை என்பதாக அமைவதற்கு பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்;

(1) நியாயமற்ற குறுக்கீடு;

(2) நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் குறுக்கிடுதல்; மற்றும்;

(3) இழப்பு.

இனி, மேற்குறிப்பிட்டுள்ள கூறுகளின் முக்கியத்துவம் குறித்து காண்போம்.

அ(1) நியாயமற்ற குறுக்கீடு (Unreasonable interference): குறுக்கீடு என்பது, வாதியின் சொத்திற்கு சேதம் விளைவிப்பதாகவோ அல்லது வாதி அச்சொத்தை அனுபவிப்பதில் தனிப்பட்ட அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவோ இருக்கலாம். ஒவ்வொரு குறுக்கீடும் தொல்லை என்பதாகாது. தொல்லை என்பதாக அமைவதற்கு, குறுக்கீடு நியாயமற்றதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் சாதாரண அளவிலான இரைச்சல், அதிர்வுகள் மற்றும் நாற்றம் உள்ளிட்ட அசௌகரியங்களை பொறுத்துக் கொண்டால் மட்டுமே, சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களின் சொந்த உரிமைகளை துய்க்க முடியும். நெடுஞ்சாலையை ஒட்டிய தனது இடத்தில் வீட்டைக் கட்டி குடியேறியவர், நெடுஞ்சாலைப் போக்குவரத்தின் காரணமாக இரைச்சல், அதிர்வுகள் உள்ளிட்ட வசதிக்குறைவுகளுக்காக வழக்கிட முடியாது. இதேபோன்று பக்கத்து வீட்டுக்காரர் இசையைக் கேட்பதால் ஏற்படும் கவனச் சிதறல்கள் தனது படிப்பிற்கு இடையூறு ஏற்படுத்துகிறது என ஒருவர் வழக்கிட முடியாது. குறுக்கீடானது நியாயமற்றதாக இல்லாதவரை வழக்கெதுவும் தொடரப்பட முடியாது. எனவே ஓர் சொத்தின் உடைமையில் இருப்பவர், அவர் எதை விரும்புகிறாறோ அதைச் செய்வதற்கான உரிமைக்கும் மற்றும் அவரின் பக்கத்து வீட்டுக்காரரின் உரிமையில் குறுக்கிடப்படாமல் இருப்பதற்கும் இடையே ஓர் சமநிலை பராமரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். எத்தகைய குறுக்கீடுகள் அல்லது இடையூறுகள் நியாயமற்றது என்பது வேறுபட்ட இடங்களுக்கேற்ப வேறுபடும். ரைட் பிரபு (Lord Wright), **Sadleigh Denfield Vs O'Callaghan, (1940) AC 880.**, என்ற வழக்கில், "தொல்லை என்பதன் நோக்கத்திற்காக, நியாயமானது என்பது, ஓர் குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் நபர்களின் சாதாரண வழக்காறுகளுக்கு ஏற்ப

(according to the ordinary usages) நோக்கப்பட வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டார். ஓர் நியாயமற்ற செயல்பாடு, தொல்லையாக மாறாமல் இருப்பதற்காக போதிய கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதன் அடிப்படையில் நியாயப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

Radhey Shyam Vs Gur Prasad, AIR 1978 All 86., என்ற வழக்கில், பிரதிவாதிகள், மாவு அரைக்கும் இயந்திரத்தை தங்களின் கட்டிடத்தில் நிறுவுவதற்கு எதிராக வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளைக் கோரி வழக்கு தொடர்ந்தனர். இவ்வழக்கில், ஒரே கட்டிடத்தின் முதல் தளத்தில் வாதிகளும், தரைத்தளத்தில் பிரதிவாதிகளும் வசித்து வந்தனர். பிரதிவாதிகள் நிறுவவிருக்கும் மாவு அரைக்கும் இயந்திரங்கள், ஏற்கனவே இரைச்சல் அதிகமாக உள்ள அப்பகுதியில் மேலும் மிகுந்த அளவு இரைச்சல் மற்றும் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்றும், அதனால் தங்களின் உடல்நலன் கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன் அமைதியையும் இழக்க நேரிடும் என்றும் வாதிகள் தங்களின் மனுவில் குறிப்பிட்டிருந்தனர். வாதிகளின் உடல் அளவிலான வசதிகளுக்கும், உடல் நலனிற்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் பிரதிவாதிகளின் செயல் தொல்லை என்பதாக அமையும் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பெறுவதற்கும் தகுதி கொண்டுள்ளனர் என்று தீர்ப்பளித்தது.

தொல்லை, உண்மையில் ஏற்படுத்தப்படு முன்னரே தடுக்கப்பட முடியுமா எனும் வினாவிற்கு முடியும் என **Shanmugavel Chettiar Vs Sri Ramkumar Ginning Firm, AIR 1987 Mad 28.,** என்ற வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் விடையளித்துள்ளது. இவ்வழக்கில் வாதியின் நிறுவனம், ஊராட்சி ஒன்றியத்திடம் உரிமத்தைப் பெற்று, பஞ்சு அரைவை தொழிற்சாலை (ginning factory) ஒன்றைக் கட்டியது. வாதிகள் பெருமளவு தொகையை முதலீடு செய்திருந்ததுடன், அத்தொழிற்சாலையின் பணியைத் துவக்குவதற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இந்நிலையில், அத்தொழிற்சாலையை ஒட்டியுள்ள இடத்தில் செங்கல் சூளை அமைப்பதற்கான உரிமத்தை பிரதிவாதிகளுக்கு ஊராட்சிமன்றம் வழங்கியது. பிரதிவாதிகள் செங்கல் சூளை அமைப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரி வாதிகள் வழக்கு தொடர்ந்தனர். செங்கல் சூளை அமைக்கப்பட்டால், அதனின்று எழும் புகைத்துகள்கள், தொழிற்சாலையிலுள்ள பஞ்சின் தரத்தை பாதிக்கும் என்றும், காற்று அதிகமாக வீசும் பருவத்தில், செங்கல் சூளையினின்று வெளிப்படும் தீப்பொறிகளால் தொழிற்சாலையின் பஞ்சு கிடங்கு தீப்பற்றவும் நேரிடும் என்பதையும் வாதிகள் தங்களது மனுவில் குறிப்பிட்டிருந்தனர். நீதிமன்றம் செங்கல் சூளை அவ்விடத்தில் அமைப்பது வழக்கிடத்தக்க தொல்லைக்கு வழிவகுக்கும் என்பதைக் குறிப்பிட்டு, எனவே வாதிகள் செங்கல் சூளை அமைப்பதை எதிர்ப்பதற்கு உரிமை கொண்டுள்ளார்கள் என்பதையும், பிரதிவாதிகள் ஊராட்சி மன்றத்திடம் பெற்ற உரிமம், ஏற்படவிருக்கும் தொல்லையை அகற்றுவதற்காக, வாதிகள் உறுத்துக்கட்டளை பெறும் உரிமையை தடுக்காது என்றும் தீர்ப்பளித்தது.

அ(1) (a) அசாதாரண உணர்வுடைய நபர் மற்றும் அசாதாரண தன்மை கொண்ட சொத்து (Abnormal senstitive person or property): சாதாரணமாக நியாயமான செயலாக கருதப்படுகின்ற ஒன்று, ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து அசாதாரண உணர்வுடைய வாதியைப் பொறுத்து நியாயமற்ற செயலாகிவிடாது. ஏதேனும் சப்தங்கள் வாதியை மட்டும் அதாவது, அவரின் உணர்வு மிகுதியின் காரணமாக, அவரின் உறக்கம் அல்லது பணியைப் பாதிப்பதாகவும், ஆனால் மற்ற நபர்களுக்கு தொந்தரவு ஏதும் அளிப்பதாக இல்லாமல் இருப்பின், அதனால் வாதிக்கு பெருமளவு இழப்பு ஏற்பட்டாலும்கூட அது தொல்லை என்பதாகாது. **Heath Vs Mayor of Brighton (1908) 24 TLR 414.,** என்ற வழக்கில் வாதிகளான தேவாலயத்தின் பொறுப்பணர்கள் (trustees) மற்றும் அதனைச் சார்ந்திருந்தவர்களுக்கு பிரதிவாதிகளின் மின்நிலையத்திலிருந்து வரும் மிகக்குறைவான ஓர் தொடர் ஓசையினால் (a buzzing noise) தொந்தரவுக்கு உள்ளாகினர். இது தொடர்பாக தடையுத்தரவு வழங்கக் கோரி வாதிகள் தொடர்ந்த வழக்கில், வாதிகளைத் தவிர தேவாலயத்திற்கு வரும் மற்ற நபர்களுக்கு அவ்வோசை தொந்தரவு அளிப்பதாகவோ அல்லது அவர்களின் கவனத்தை திசை திருப்புவதாகவோ இல்லை எனும் காரணத்தின் அடிப்படையில் நீதிமன்றம் உறுத்துக்கட்டளை வழங்க மறுத்துவிட்டது. இவ்விதி எளிதில் பாதிக்கத்தக்க சொத்துகளுக்கும் (sensitive property) பொருந்தும். **Robinson Vs Kilvert, (1889) 41 Ch. E 88.,** என்ற வழக்கில், வீட்டின் நிலவறையில் பிரதிவாதி காகித அட்டைப்பெட்டிகள் தயாரிக்கும் தொழிலைத் தொடங்கினார். வீட்டின் மேற்பகுதி வாதியின் உடைமையில் இருந்தது. வாதி மெல்லிய பழுப்புநிறத்தாள்களின் விற்பனைக்கான கிடங்காக அவ்விடத்தை பயன்படுத்தி வந்தார். பிரதிவாதி அட்டைப்பெட்டிகளைத் தயாரிப்பதற்காக வெப்பமூட்டினார். அது வாதியின் தரைப்பகுதி வெப்பத்தை அதிகப்படுத்தியதால் அங்கிருந்த மெல்லிய பழுப்புத்தாள்களின் விலைமதிப்பைக் குறைத்துவிட்டது. உண்மையில் அவ்வெப்பம், அங்கு வேலை செய்து கொண்டிருந்த வாதியின் பணியாட்களுக்கு எவ்வித வசதிக்குறைவையும் ஏற்படுத்தவில்லை என்பதுடன் பொதுவாகப் பயன்படுத்தும் தாள்களை எந்தவிதத்திலும் பாதித்திருக்காது. இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், நீதிமன்றம், "அசாதாரண மென்தன்மை (exceptionally delicate) கொண்ட தொழிலை மேற்கொள்ளும் ஒரு நபர், அண்டையிலுள்ளவர் தன்னுடைய சொத்தில் சட்டப்படி செய்யும் ஏதேனும் ஒன்றால் தனக்கு ஊறு ஏற்பட்டுவிட்டதாக முறையீடு செய்ய முடியாது" என்று குறிப்பிட்டது.

அ(1) (b) தீங்கெண்ணம் (Malice): தொல்லைத் தீங்கில், தீங்கெண்ணம் தொடர்புடையதா? இதற்கு, சாதாரணமாக சட்டத்திற்கு உட்பட்ட பிரதிவாதியின் செயல், தீங்கெண்ணத்துடன் செய்யப்பட்டிருப்பின் அது தொல்லையாக மாறலாம் என்பதே விடையாகும். இது தொடர்பாக **Christie Vs Davey, (1893) 1 Ch 316.,** என்ற வழக்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழக்கில் வாதியும் பிரதிவாதியும் அருகருகே வசிப்பவர்கள். இருவரின் வீடுகளையும ஓர் தடுப்புச்சுவர் மட்டுமே பிரித்திருந்தது. வாதியும் மற்றும் அவரின் குடும்பத்தினரும் இசையில் மிகுந்த

நாட்டம் கொண்டவர்கள். அவர்கள் நேரம் காலமின்றி இசைக்கருவிகளை வாசிப்பதும் மற்றும் பாடுவதும் கணிசமான இரைச்சலை ஏற்படுத்துவதாகவே இருந்தது. வாதி மற்றும் அவரின் குடும்பத்தினரின் செயல்கள், பிரதிவாதிக்கு தாங்க முடியாத தொந்தரவாக இருந்தால், தீங்கெண்ணத்துடன் பதில் நடவடிக்கையாக தடுப்புச்சுவரில் ஓங்கி உதைத்தும், பாத்திரங்களைத் தட்டி ஓசை எழுப்பியும், வீறிட்டு அலறியும் விசில் அடித்தும் இடையூறு விளைவித்தார். நீதிமன்றம், பிரதிவாதி வேண்டுமென்றே தீங்கெண்ணத்துடன் வாதிக்கு தொந்தரவு ஏற்படுத்த வேண்டும் என்றே செயல்பட்டிருப்பதால் தொல்லை தீங்கிற்கு பொறுப்பாவார் என்பதைக் குறிப்பிட்டு உறுத்துக்கட்டளை பிறப்பித்தது. (இவ்வழக்கில் பிரதிவாதி தீங்கெண்ணம் கொண்டிராமல் இருந்திருந்தால் தீர்ப்பு முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும் என்பதையும் நீதிமன்றம் மறைமுகமாகக் குறிப்பிட்டது).

Hollywood Silver Fox Farm Ltd Vs Emmett, (1936) 2 KB 468., என்ற வழக்கில் வாதி தன்னுடைய நிலத்தில் 'சில்வர் ஃபாக்ஸ்' எனும் நரிகளை (இவ்வகை நரிகளின் உடல் பகுதி கருப்பு, சாம்பல் கலந்த நீலத்துடன் பரவலாக உடல் முழுதும் வெள்ளைக் கலப்புடனும் குறிப்பாக வால் பகுதியின் நுனி வெண்மையாகவும் இருக்கும்) இனப்பெருக்கம் செய்யும் தொழில் நடத்தி வந்தார். இவைகளில் பெண் நரிகள் இனப்பெருக்க காலத்தில் மிகவும் அச்சத்துடனும் மற்றும் எவரேனும் தொந்தரவு விளைவித்தால் ஆண் நரியுடன் சேராமலும் மற்றும் தன் குட்டிகளையே கொல்லவும் செய்யும், வாதியின் நிலத்தை ஒட்டியிருந்த நிலத்தின் உரிமையாளரான பிரதிவாதி, தன் நிலத்தின் எல்லையில் இருந்து, ஆனால் வாதியின் பெண் நரிகள் இனப்பெருக்கம் செய்வதற்காக அடைக்கப்பட்டுள்ள பட்டியின் (Pen) கூடுமான அருகிலிருந்து தீங்கெண்ணத்துடன் தன்னுடைய நிலத்தில் தொடர்ச்சியாக துப்பாக்கியால் சுட்டு சப்தம் எழுப்பினார். பிரதிவாதியின் செயலால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. பிரதிவாதி, வாதிக்கு இழப்பீடு செலுத்தவும் மேற்கொண்டு அதுபோன்ற செயல்களை செய்வதற்கு எதிராக நீதிமன்றம் உறுத்துக்கட்டளையும் பிறப்பித்தது. இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிப்பிரபு மெக்நாட்டன் (Mac naghten L.J.,), தொல்லைத் தீங்கில் பொறுப்பு நிலையை முடிவு செய்ய பிரதிவாதிகளின் உள்நோக்கம் தொடர்புடையதே என்பதைக் குறிப்பிட்டார்.

அ(2) நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் குறுக்கிடுதல் (Interference is with the use or enjoyment of land): குறுக்கீடு அல்லது இடையூறு என்பது (a) சொத்திற்கு ஊறு விளைவிப்பதாகவோ அல்லது (b) நிலத்தின் உடைமையில் இருப்பவரின் வசதி அல்லது உடல் நலனிற்கு ஊறு விளைவிப்பதாகவோ இருக்கலாம்.

அ(2)(a) சொத்திற்கு ஊறு விளைவித்தல் (Injury to property): அதிகாரபூர்வமற்று குறுக்கீடு செய்வதன் விளைவாக சொத்து அல்லது சொத்தியல் உரிமைகளுக்கு ஊறு ஏற்படின் அது வழக்கிடத்தக்க தொல்லையாகும். இடையூறு விளைவிப்பது என்பது, மரத்தின் கிளைகள் வாதியின் நிலத்தின்மீது

நீட்டித்திருப்பதற்கு அனுமதிப்பது அல்லது புகை, வாயு, நுண்துகள், மின்சாரம், கழிவுநீர், நோய்க்கிருமிகள் போன்ற ஊறுவிளைவிக்கத்தக்க பொருள்களை வாதியின் நிலத்தினுள் புகுவதை அனுமதித்தல் அல்லது புகச் செய்தல் போன்ற ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். **St. Helen's Smelting Co., Vs Tipping (1865) 11 HL Cas 642.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் தொழிற்சாலையில் இருந்து வெளிப்பட்ட புகை, வாதியின் மரம் மற்றும் செடிகளை சேதப்படுத்தியது. நீதிமன்றம், அத்தகைய சேதங்கள் வாதியின் சொத்திற்கு ஏற்படுத்திய ஊறாகும் என்பதால் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. வாதிக்குச் சொந்தமான அல்லது வாதியின் உடைமையில் உள்ள சொத்திற்கு ஊறு ஏதும் ஏற்படாமல் இருந்தாலும்கூட, ஆனால் வாதி ஏதேனும் உரிமை கொண்டுள்ள அல்லது அது தொடர்பான உரிமைக்கு இடையூறு விளைவித்தாலும்கூட தொல்லை என்பதன்கீழ் வழக்கிட முடியும்.

Pakkle Vs Aiyasamy Ganapathi., AIR 1969 Mad 351., என்ற வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில், பிரதிவாதி, ஏரியில் உப்புப்பாத்தி (salt pans) அமைப்பதற்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரி கிராமத்திலிருந்த நபர்கள் பிரதிநிதித்துவ தகுதியின் (representative capacity) அடிப்படையில் வழக்கு தொடர்ந்தனர். ஏரியில் உப்புப்பாத்திகள் அமைத்தால், அத்தண்ணீர் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயனற்றதாகிவிடும் என்றும் வாதிகள் தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டது. மறுபுறம், பிரதிவாதி, ஏரி அரசின் சொத்து என்பதால், வாதிகள் சொத்தியல் உரிமைகள் ஏதும் கொண்டிருக்கவில்லை என்றும், அரசு மட்டுமே தங்களின் செயல் எதனையும் தடுக்கமுடியும் என்று வாதிட்டார். ஏரி அரசுக்கு சொந்தமாக இருந்தாலும்கூட, கிராமமக்கள் ஏரியின் தண்ணீரை குடிப்பதற்கு, குளிப்பதற்கு மற்றும் கால்நடைகளை குளிப்பாட்டுவதற்கும் பயன்படுத்த நினைவிகழ்ந்த உரிமையை (immemorial right) கொண்டுள்ளதை அறிந்த நீதிமன்றம், பிரதிவாதியின் வாதங்களை தள்ளுபடி செய்து, வாதிக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை பிறப்பித்தது. மேலும் பிரதிவாதியின் செயல் தொல்லை என்பதாகும் என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், கிராம மக்கள் ஏரியின் தண்ணீரை பயன்படுத்துவது தொடர்பான உரிமையில் இடையூறு விளைவிப்பது, அது வாதிகளுக்கு சொந்தமில்லாத சொத்தில் செய்யப்பட்டாலும்கூட, கிராம மக்கள் அதன்மீது பொதுவான உரிமை கொண்டுள்ளது மெய்ப்பிக்கப்பட்ட உடன் அது அவர்களுக்கு வழக்கு தொடருவதற்கான வழக்குமூலத்தை அளிக்கும் என்றும் விளக்கமளித்தது.

அ(2) (b) நிலத்தின் உடைமையில் இருப்பவரின் வசதி அல்லது உடல்நலனிற்கு ஊறுவிளைவித்தல் (Injury to comfort or health): வளாகத்தை வசதியாக பயன்படுத்துவதில் பெருமளவு இடையூறு விளைவிப்பது ஓர் வழக்கிடத்தக்க தொல்லையாகும். இருப்பினும் வெறுமனே கற்பனையான அல்லது அற்பமான வசதிக்குறைவு என்பது தொல்லை வழக்கிற்கான வழக்குமூலம்

ஆகாது. இத்தகைய நேர்வுகளில் "அற்பச் செயல்களில் சட்டம் அக்கறை கொள்வதில்லை" (De minimus non curat lex- i.e., 'the law does not take account of very trifling matters) எனும்விதி பொருந்தும். எனவே **Bland Vs Yates, (1914) 58 Sal. 612.,** என்ற வழக்கில், குறுக்கீடானது வீட்டின் அல்லது சொத்தின் உடைமையில் வசிப்பவர்களுக்கு பெரும் வசதிக்குறைவை ஏற்படுத்துவதாக அதாவது... நியாயமான ஆங்கில ஆண்கள் பெண்கள் மத்தியில், நடைமுறையில் உள்ள கருத்தியலுக்கு ஏற்ப பெரும் வசதிக்குறைவை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் **Polsue and Alfierry Ltd Vs Rushmere, (1907) AC 21.,** என்ற வழக்கில் வசதியின் தரம் (Standard of comfort) என்பது நேரத்திற்கு நேரம் மற்றும் இடத்திற்கிடம் மாறுபடும் என்று குறிப்பிடப்பட்டது. **Crump Vs Lambert, (1867) LR 3 Eq. 409.,** என்ற வழக்கில் புகை, இரைச்சல், ஆவி (vapour) நாற்றம் போன்றவை உடலுக்கு ஊறு விளைவிக்காமல் இருப்பினும்கூட தொல்லை என்பதாகும் எனக் குறிப்பிடப்பட்டது.

அ(3) இழப்பு (Damage): தொல்லையின் மூன்றாவது முக்கியக்கூறு வாதிக்கு உண்மையில் இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில் தொல்லை என்பது அத்துமீறல் தீங்கு போன்று தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதல்ல. பொதுத்தொல்லையைப் பொறுத்தவரை வாதி, தனக்கு தனிமுறையிலான இழப்பு ஏற்பட்டுள்ளதை மெய்ப்பித்தால் மட்டுமே தீங்கியலில் வழக்கு தொடர முடியும். தனித்தொல்லையில் இழப்பு அல்லது ஊறு என்பது ஓர் முக்கியக்கூறாக இருந்தாலும், பெரும்பாலும் சட்டமே அதனை அனுமானித்துக் கொள்ளும். **Fay Vs Prentice, (1854) 1 C.B. 828.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் வீட்டின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த பிதுக்கம் (cornice) வாதியின் தோட்டத்தின்மீது நீட்டிக் கொண்டிருந்தது. அவ்வாறு சாதாரணமாக நீட்டிக் கொண்டிருப்பதே, மழைநீர் வாதியின் தோட்டத்தில் விழுந்து சேதப்படுத்தும் என்கிற அனுமானத்தை எழுப்புவதால் வாதி அதனை மெய்பிக்கத் தேவையில்லை என்றும் மற்றும் அது கண்டிப்பாக தொல்லை என்பதாகும் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

63. "உங்களை அடுத்திருப்பவரின் சொத்திற்கு தீங்கு ஏற்படா வண்ணமே உங்கள் சொத்தினை அனுபவிக்கலாம்"- விவாதிக்க. ("So use you own property as not to injure the property of your neighbour"-Discuss).

விடைச்சுருக்கம்: (அ) வினாவிற்கான விளக்கம் – (ஆ) சொத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் குறுக்கிடுதல்

(அ) வினாவிற்கான விளக்கம் (Explanation):

"உங்களை அடுத்திருப்பவரின் சொத்திற்கு தீங்கு ஏற்படா வண்ணமே உங்கள் சொத்தினை அனுபவிக்கலாம்" ('sic utere tuo ut alienum non laedas')

எனும் இலத்தீன் முதுமொழியை வழக்கமாகக் கொண்டு தொல்லையை ஓர் கடமை மீறுயைாக குறிப்பிடப்படுகிறது. தொல்லையைக் குறித்து நீண்ட காலமாக மிகவும் விருப்பமான மேற்கோளாகவும் இம்முதுமொழி குறிப்பிடப்படுகிறது. ஆனால் இதனை கடமைக்கான ஓர் வரையறையாக கருதமுடியாது. தலைமை நீதிபதி ஏர்ல் (Erl C.J), **Bonomi Vs Backhouse, (1858) EB & E 643.,** என்ற வழக்கில், இம்முதுமொழி வெறுமனே சொற்களின் மிகையான பயன்படுத்தலே ஆகும் (veriage), சட்டம் அனுமதித்தால் ஓர் தரப்பு மற்றொரு தரப்பின் சொத்திற்கு இழப்பை ஏற்படுத்தலாம். சட்டம் தடுக்கும்பொழுது அவரால் அதனைச் செய்ய முடியாது. எனவே சட்டம் எதைக் குறிப்பிடுகிறது என்பதை முடிவு செய்யும் வரையில் இம்மொதுமொழியை எப்போதும் பொருந்தச் செய்ய முடியாது என்பதைக் குறிப்பிட்டார். **Sedleigh Denfield Vs O'Callaghan, (1940) AC 903.,** என்ற வழக்கில் ரைட் பிரபு (Lord Wright), இம்முதுமொழி பெரும்பாலான பிற முதுமொழிகளைப் போன்று உறுதித்தன்மை குறைவு மட்டுமின்றி நுட்பமாகவும் இல்லை (This like most maxims, is not only lacking in definiteness but is also inaccurate) எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் மற்றொருவரின் சட்ட உரிமையை மீறாமல் தனது சட்ட உரிமையை பயன்படுத்துபவர், தவறு செய்தவராகமாட்டார். வேறு முறையில் குறிப்பிடுவதெனில் ஓர் தொல்லையானது ஊறு மற்றும் இழப்பு ஆகிய இரண்டும் ஏற்படுத்தினால் மட்டுமே வழக்கிடத்தக்கதாகும். ஊறு என்பது சொத்திற்கு ஊறு விளைவிப்பதாகவோ அல்லது சொத்தின் உடைமையில் இருப்பவரின் வசதி அல்லது உடல் நலனிற்கு ஊறு விளைவிப்பதாகவோ இருக்கலாம்.

(ஆ) சொத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனின்று எழும் ஆதாயங்களை துய்ப்பதில் குறுக்கிடுதல் (Interference is with the use of enjoyment of property): (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு அ(2) முழுமையும் குறிப்பிடவும்).

64. பொதுத் தொல்லையைப் பொறுத்து எப்பொழுது ஒரு தனி நபர் நடவடிக்கை எடுக்கும் உரிமையைக் கோர இயலும்? (When can an individual have a right of action in respect of a public nuisance?) Nov-2019.

SN - 83 ரோஸ் எதிர் மைல்ஸ் / Rose Vs Miles., May-2019(v).

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை – (ஆ)பொதுத் தொல்லையைப் பொறுத்து ஒரு தனி நபர் நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலைகள் – ஆ (1) குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பு – ஆ(2) ஊறு பெருமளவிலானதாக இருக்க வேண்டும் – ஆ(3)ஊறு நேரடியானதாக இருக்க வேண்டும்.

(அ) முன்னுரை (Introduction):

பொதுத்தொல்லை ஓர் குற்றமாகும்; ஆனால் தனித்தொல்லை ஓர் உரிமையியல் தவறாகும். பொதுத்தொல்லை என்பது, பொதுமக்களின் பொதுவான உரிமைகளில் இடையூறு விளைவிக்கும் மற்றும் தண்டிக்கத்தக்க ஓர் குற்றமும் ஆகும். பொது வழித்தடத்தில் தடை ஏற்படுத்துவது, பள்ளம் தோண்டுவது அல்லது ஓர் கட்டுமானம் அமைப்பது போன்றவை பொதுத்தொல்லைக்கான எடுத்துக்காட்டுகளாகும். பொதுத்தொல்லை எண்ணற்ற நபர்களுக்கு வசதிக் குறைவை அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தினாலும், அதன்பொருட்டு எவரொருவரும் உரிமையியல் நடவடிக்கை மேற்கொள்வது அனுமதிக்கப்பட மாட்டாது. இல்லையேல் பொதுத்தொல்லை ஒன்றைக் குறித்து எண்ணற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்படும். இவ்வாறு பல்வேறு வழக்குகள் தொடரப்படுவதை தவிர்ப்பதற்காகவே சட்டம், பொதுத்தொல்லையை குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டிக்கக்கூடிய ஓர் குற்றமாக சேர்த்துள்ளது.

(ஆ) பொதுத் தொல்லையைப் பொறுத்து ஒரு தனிநபர் நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலைகள் (Circumstances under which a private individual bring action in respect of public nuisance):

பொதுவாக, பொதுத்தொல்லைக் குறித்து தனிப்பட்ட நபர்கள் வழக்கு தொடர அனுமதிக்கப்படமாட்டாது என்பதை மேலே கண்டோம். இருப்பினும் பின்வரும் கூறுகளை மெய்ப்பிக்கும்போது, ஓர் தனிப்பட்ட நபர், பொதுத்தொல்லையால் தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக வழக்குதொடர முடியும்:

(1) குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பு;

(2) ஊறு அல்லது இழப்பு பெருமளவிலானதாக இருக்க வேண்டும்; மற்றும்;

(3) ஊறு அல்லது இழப்பு நேரடியானதாக இருக்க வேண்டும்.

ஆ(1) குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பு (Specific damage): குறிப்பிட்ட அல்லது தனிமுறையிலான இழப்பு என்பது, ஓர் பொதுத் தொல்லையின் காரணமாக, பொது மக்களில் பிறர் எவருக்கும் ஏற்பட்டிராத தனிமுறையிலான ஊறு அல்லது இழப்பு தனக்கு ஏற்பட்டுள்ளது என்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு நபர் நெடுஞ்சாலையின் குறுக்கே பள்ளம் தோண்டினால், மற்றொரு நபர் தான் வழக்கமாக உரிமை கொண்டுள்ள முறையில் நெடுஞ்சாலையை கடப்பதற்கு தடையாக உள்ளது என்பதன் அடிப்படையில் மட்டுமே பள்ளம் தோண்டியவருக்கு எதிராக வழக்கிட முடியாது. ஏனெனில் அத்தகைய அசௌகரியம் அல்லது வசதிக்குறைவு, அச்சாலையைக் கடப்பவர்கள் அனைவருக்கும் சமமானதே. ஆனால், அப்பள்ளத்தைக் கடக்கும்போது கீழே விழுந்து கை, கால்களில் முறிவு ஏற்பட்டால் அல்லது தன் வசம் வைத்திருந்த பொருள்கள் வீணாகிப் போனால், அப்பொதுத் தொல்லையின் காரணமாக அவருக்கு தனி முறையிலான இழப்பு ஏற்பட்டுள்ளதால் அவர் வழக்கு தொடர முடியும். **Soltau Vs Deheld, (1851) 2 Sim RS 133.,** என்ற வழக்கில், வாதி, ரோமன் கத்தோலிக்க தேவாலயத்திற்கு ஒட்டிய அடுத்துள்ள வீட்டில் வசித்து

வந்தார். தேவாலயத்தின் மணி இரவு பகல் பாராமல் எல்லா நேரங்களிலும் அடிக்கப்பட்டது. தேவாலயத்தின் அருகிலுள்ள பகுதியில் வாழும் மக்களுக்கு மணியோசை தொந்தரவு அளிப்பதாக இருந்தது. ஆனால் தேவாலயத்தின் அடுத்துள்ள கதவு எண் கொண்ட வீட்டில் வசிக்கும் வாதிக்கு மிகவும் அதிகபட்ச தொந்தரவை ஏற்படுத்தியதால், தேவாலயத்தின் பாதிரியாருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், இது ஓர் பொதுத்தொல்லை என்றும், வாதியால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவில் ஓசை இருந்ததால், ஓர் பொதுத்தொல்லை தொடர்பாக, தனிப்பட்ட நபர் வழக்கு தொடருவதற்கான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் வாதியைப் பொறுத்தவரை இது ஓர் தனித்தொல்லை என்றும், வாதி உறுத்துக்கட்டளைப் பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளார் என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டது.

Dr. Ram Raj Singh Vs Babulal, AIR 1982 All 285., என்ற வழக்கில், மருத்துவராகிய வாதியின் வளாகத்தை ஒட்டிய இடத்தில், பிரதிவாதி செங்கல் அரைக்கும் இயந்திரத்தை நிறுவியிருந்தார். செங்கல் அரைக்கும் இயந்திரத்திலிருந்து வெளிப்பட்ட தூசு, சுற்றுப்புறம் முழுமையும் மாசுபடுத்தியது. செங்கல் தூசு, மருத்துவரின் ஆலோசனை அறைக்குள்ளும் பரவியதால் மருத்துவருக்கும் மற்றும் அவரிடம் சிகிச்சை அல்லது ஆலோசனை பெறவந்த நோயாளிகளுக்கும் உடலளவிலும் மற்றும் அவர்களின் ஆடைமீது படிந்து கடுமையான அசௌகரியத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக வாதி, பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரி தொடர்ந்த வழக்கில், நீதிமன்றம் வாதிக்கு தனி முறையிலான ஊறு ஏற்பட்டுள்ளது மெய்ப்பிக்கப்பட்டது என்பதால் அவர் பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக் கட்டளை கோர தகுதி கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டு உறுத்துக்கட்டளையை பிறப்பித்தது.

ஆ(2) இழப்பு பெருமளவிலானதாக இருக்க வேண்டும் (Injury must be substantial): ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பானது அற்பமானதாக இல்லாமல் பெருமளவிலானதாக அல்லது கணிசமானதாக இருக்க வேண்டும். எனவே பொதுத் தொல்லையினால் ஏற்பட்ட இழப்பிற்காக ஒரு நபர் வழக்கு தொடருவதற்கு தகுதி பெற்றிட, அத்தகைய இழப்பு குறிப்பிட்டதாகவும் (Particular) நேரடியானதாகவும் (direct) மற்றும் பெருமளவிலானதாகவும் (substantial) இருக்க வேண்டும். இத்தகைய விதியின் நோக்கம் வேறுபட்ட வழக்குகள் தொடுக்கப்படுவதை தவிர்ப்பதாகும்.

Rose Vs Miles, (1815) 4 M&S 101., என்ற வழக்கில், பிரதிவாதி தனது படகை, சிறிய துறைமுகத்தின் பொதுக் கால்வாயின் குறுக்கே நங்கூரமிட்டு நிறுத்தியிருந்தார். இதனால் அக்கால்வாயின் வழியே சரக்குகள் ஏற்றப்பட்டு வந்த வாதியின் படகுகளுக்கு மேலே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. எனவே வாதி, படகுகளில் இருந்த சரக்குகளை இறக்கி, அவைகளை தரை வழியே எடுத்துச் செல்ல நேர்ந்ததால் பெரும் செலவுகளுக்கு உள்ளானார். நீதிமன்றம் வாதியின் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக, அவருக்கு தனிமுறையிலான இழப்பு ஏற்பட்டுள்ளது

என்பதால், பிரதிவாதியின் செயல் வாதியைப் பொறுத்தவரை ஓர் தனித்தொல்லையாகும் என்றும் எனவே பிரதிவாதி வாதிக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு பொறுப்பாவார் என்றும் தீர்ப்பளித்தது.

ஆ(3) ஊறு நேரடியானதாக இருக்க வேண்டும் (Injury must be direct): நேரடி இழப்பு என்பது பொதுவாக, பொதுமக்களில் அனைவருக்கும் வசதிக் குறைவு ஏற்படலாம் என்றாலும்கூட, குறிப்பாக வாதிக்கு ஊறு ஏற்படலாம் மற்றும் கூடுதலான பாதிப்பிற்கு உள்ளாகலாம் என்று பிரதிவாதியால் நியாயமாக முன்னறியத்தக்கதைக் குறிக்கும். எனவே பிரதிவாதியால் ஓர் வழி தடுக்கப்பட்டிருந்து, மற்றோர் வழி திறந்திருப்பின், பிரதிவாதியால் எற்படுத்தப்பட்ட தடை, வாதிக்கு, பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடரும் தகுதியை அளிக்காது.

Winter bottom Vs. Lord Derby, (1857) L.R.2 Exch. 316., என்ற வழக்கில், பிரதிவாதியின் முகவர்கள், பொது நடைப்பாதையை தடுத்திருந்தனர். இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், சில நேரங்களில் வேறொரு வழியில் செல்ல வேண்டியிருப்பதாகவும், சில நேரங்களில் தடையை அப்புறப்படுத்தப் படுவதற்காக செலவுக்கு உள்ளாக வேண்டியிருப்பதாகவும் மனுவில் குறிப்பிட்டிருந்தார். நீதிமன்றம், பொதுமக்களில் பிறர் பாதிக்கப்பட்டது போன்றே வாதியும் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதால் வாதிக்கு கூடுதலான பாதிப்பு ஏதுமில்லை எனக் குறிப்பிட்டு அவரின் இழப்பீட்டுக் கோரிக்கையை தள்ளுபடி செய்தது.

65. தொல்லைத் தீங்கிற்காக வழக்கிடும் தகுதி கொண்ட நபர்கள் யாவர்? தொல்லைத் தீங்கிற்காக எவர்மீது வழக்கிட முடியும்? (Who are the persons entitle to sue in the tort of negligence? Who can be sued?)

SN - 84 **'தொல்லை' தீங்கிற்காக வழக்கிடும் தகுதியுடைய நபர் யார்? / Who can sue for nuisance., Nov-2011.**

விடைச்சுருக்கம்: (அ) தொல்லைத் தீங்கிற்காக வழக்கிடும் தகுதி கொண்ட நபர்கள் - அ (a) பொதுத்தொல்லை - (ஆ) தொல்லைத் தீங்கிற்காக எவர்மீது வழக்கிட முடியும்?

(அ) தொல்லைத் தீங்கிற்காக வழக்கிடும் தகுதி கொண்ட நபர்கள் (Persons entitled to sue in the tort of negligence):

பின்வரும் நபர்கள் தொல்லைத் தீங்கிற்காக வழக்கிடும் தகுதியைக் கொண்டுள்ளனர்:

(1) சொத்தின் உரிமையாளர் (The owner): உடைமையில் இருக்கும் சொத்தின் உரிமையாளர் தனித் தொல்லைக்காக வழக்கு தொடர எப்போதும் உரிமை கொண்டுள்ளார். ஆனால் சொத்தின் உடைமையில் இல்லாத சொத்தின் உரிமையாளர் (non-occupying owner), அச்சொத்தின் உடைமையில் இருக்கும் நபருக்கு (occupier) எதிராக தனிப்பட்ட முறையில் ஊறு ஏற்படுத்தும்

தொல்லைக்காக வழக்கிட முடியாது என்று **S.Alwar Chetty Vs Madras Electric Corpn. Ltd., AIR 1932 Mad 779.,** என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இதே வழக்கில் தன்னுடைய இடத்தில் வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கு பெருமளவு தொல்லை ஏற்படுத்துவதாகவும், அது சொத்தின் வாடகைக்கு விடும் மதிப்பிற்கு நட்டம் விளைவிக்கத்தக்கதாக (detrimental to the letting value of the property) இருப்பின், உடைமையில் இல்லாத சொத்தின் உரிமையாளரும்கூட அத்தொல்லைக்காக வழக்கிட முடியும் என்று விளக்கமளிக்கப்பட்டது.

Ram Prasad Jain Vs Gopi Ram, AIR 1947 Pat 177., என்ற வழக்கில், உடைமையில் இல்லாத சொத்தின் உரிமையாளர், தன்னுடைய சொத்திற்கு உண்மையில் இழப்பை ஏற்படுத்தும் தொல்லைக்காக, எடுத்துக்காட்டாக, சொத்தில் நிறுவப்பட்ட இயந்திரத்தின் அதிர்வுகளால் கட்டிடச் சுவர்களில் விரிசல் ஏற்படுவதாக அல்லது தொல்லையின் பாதிப்பு தொடர்ந்தால், தொல்லையை ஏற்படுத்தும் நபர், அத்தொல்லையை தொடர்ந்து மேற்கொண்டிடும் நீளுடை உரிமை பெற்றுவிடுவார் என்கிற சூழ்நிலைகள் தவிர மற்ற சூழ்நிலைகளில் தொல்லைக்காக வழக்கு தொடர முடியாது எனக் குறிப்பிடப்பட்டது.

(2) சொத்தின் உடைமையில் இருப்பவர் (The occupier): உடைமையில் இருப்பவர் தொல்லைக்காக வழக்கிட முடியும். ஓர் தற்காலிக தொல்லைக்காக உடைமையில் இருப்பவர் மட்டுமே வழக்கு தொடர முடியும். உடைமையில் இருப்பவர் என்பது குத்தகை அல்லது வாடகையில் இருப்பவரைக் குறிக்கும். சொத்தில் எந்தவொரு நலனும் கொண்டிராதவர் அல்லது சொத்தின் உடைமையில் இருப்பதற்கு உரிமை கொண்டிராதவர் தொல்லைக்காக வழக்கிட முடியாது. எனவே ஓர் உரிமம் பெற்றவர், பணியாள் அல்லது தங்கியிருப்பவர், விருந்தாளி ஆகியோர் தொல்லைக்காக வழக்கிட முடியாது. **Malone Vs Laskey., (1907) 2 KB 141.,** என்ற வழக்கில், தொல்லைக்காக வழக்கிடும் உரிமை, உடைமையில் இருப்பவரின் மனைவி, குடும்பம் மற்றும் பணியாளருக்கும்கூட, நீட்டிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டது. சுருக்கமாக குறிப்பிடுவதெனில், தொல்லைக்காக வழக்கிடுவதற்கு, சொத்தின்மீதான சொத்தியல் நலன் (proprietory interest) அல்லது உடைமை நலன் (Possessory interest) இருப்பது அவசியமாகும்.

(3) பின்னடைவு உரிமையாளர்கள் (The reversioners): தொல்லையின் காரணமாக, சொத்திற்கு நிரந்தர ஊறு ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பின், அச்சொத்தின் பின்னடைவு உரிமையாளர் (பின்+அடைவு, அதாவது சொத்தின் தற்போதைய உரிமையாளரின் இறப்பிற்கு பின் அதனை அடைந்து கொள்ளும் உரிமையைக் கொண்டிருப்பவர்) வழக்கு தொடர முடியும்.

(4) வெளிச்சத்திற்கான உரிமை, காற்றுக்கான உரிமை அல்லது வசதிக்கான உரிமை போன்ற நுண்பொருள் மரபுவழி உரிமைகளின் உரிமையாளர் (The owner of an incorporeal hereditaments) தன்னுடைய உரிமைக்கு இடையூறு விளைவிக்கும் தொல்லைக்காக வழக்கிடலாம்.

அ(a) பொதுத் தொல்லை (Public nuisance): பொதுத் தொல்லைக்காக, தனிநபர்கள் எவரும் வழக்கிட முடியாது. இருப்பினும் பின்வரும் இரண்டுவிதமான சூழ்நிலைகளில் குறிப்பிட்ட சில தனிப்பட்ட நபர்கள் பொதுத் தொலைக்காக வழக்கிட முடியும். இந்தியாவில் 1908-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தின் பிரிவு-91-ன்கீழ் மாநில தலைமை வழக்கறிஞர் (Advocate General) அல்லது ஓர் பொதுத்தொல்லையால் தனிப்பட்ட தீங்கு அல்லது இழப்பிற்கு உள்ளாகாத இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று வழக்கிடலாம். இரண்டாவதாக, ஓர் பொதுத்தொல்லையின் விளைவாக, ஓர் நபருக்கு தனிமுறையிலான, கணிசமான மற்றும் நேரடியான (particular, substantial and direct) இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருப்பின் அத்தகைய நபர் நீதிமன்றத்தின் அனுமதியின்றி நேரடியாக வழக்கு தொடரலாம்; அதாவது இத்தகைய நேர்வுகளில் பொதுத்தொல்லையின் காரணமாக சமுதாயத்தில் உள்ள அனைவரும் அல்லது பெரும்பாலான மக்கள் பொதுவாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், தனிமுறையில், பெருமளவில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட நபரைப் பொறுத்தவரையில் அதனைச் சட்டம் ஓர் தனித்தொல்லையாகவே கருதுகிறது. இது தொடர்பாக **Soltau Vs De Held., (1851) 2 Sim RS 133.,** என்ற வழக்கு மிகவும் புகழ்பெற்ற ஓர் வழக்காகும் (காண்க: பக்கம் எண் 291).

(ஆ) தொல்லைத் தீங்கிற்காக எவர்மீது வழக்கிட முடியும்? (Who can be sued in the tort of negligence)

Noble Vs Harrison, (1926) 2 KB 332., என்ற வழக்கில், தொல்லை புரிந்தவர் அல்லது தொல்லை எழுவதை அல்லது ஏற்படுவதை அனுமதித்தவர் மற்றும் தொல்லை இருப்பதை அறிந்த பின்னரும் அல்லது கண்டிப்பாக அறிந்து இருக்கப்பட வேண்டிய பின்னரும் அதனை சரி செய்ய தவறுபவர் (அத்தகைய தொல்லை தன்னுடைய சொந்த செயலினின்று எழாவிட்டாலும் கூட) தொல்லைக்குப் பொறுப்பாவர் எனக் கூறப்பட்டது. சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில், தொல்லையை ஏற்படுத்தியவர், தொடர்ந்து செய்பவர், அதிகாரமளித்தவர் மற்றும் அதனை அறிந்த பின்பும் அல்லது அவர் கண்டிப்பாக அறிந்திருக்கப்பட வேண்டிய பின்னரும் கவனக்குறைவால் தொடர்ந்து அறியாமல் இருப்பவரும், இத்தகையோர் மட்டுமின்றி தொல்லையுடன் கூடிய சொத்தை வாடகைக்கு விட்டவரும் தொல்லைக்கு பொறுப்பாவர். இவற்றினின்று தொல்லைத் தீங்கிற்காக பின்வரும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

(1) தொல்லையை ஏற்படுத்தியவர் (The creator of nuisance): எவரொருவரும் தானோ அல்லது தனது பணியாட்கள் மூலமாக செய்யப்பட்ட தவறான செயலின் மூலமாக ஏற்படுத்திய தொல்லைக்கு எப்போதுமே பொறுப்பாவார்.

Dollman Vs. Hillman, (1941) 1 All ER 355., என்ற வழக்கில் கசாப்பு கடையிலிருந்து வெளிப்பட்ட சிறிய கொழுப்புத் துண்டு ஒன்று நடைபாதையில் விழுந்திருந்தது. அதன்மீது கால் வைத்த வாதி வழுக்கி விழுந்தார். நீதிமன்றம் பிரதிவாதிகளான கசாப்பு கடை உரிமையாளர்கள் பொறுப்பாவார்கள் எனத் தீர்ப்பளித்தது. ஏனெனில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்களே அத்தகைய தொல்லையை ஏற்படுத்தியிருப்பார்கள் என்பதால் பொறுப்பேற்கச் செய்யப்பட்டனர்.

(2) உடைமையில் இருப்பவர் (An occupier): ஓர் சொத்தின் அல்லது கட்டிடத்தின் உடைமையில் இருப்பவர், கட்டிடத்தில் உள்ள பழுதினை நீக்கத் தவறியதால் ஏற்படும் தொல்லைக்கும் மற்றும் அது தொடர்ந்திருப்பதற்கும் பொறுப்பாவார். கட்டிடத்திலுள்ள பணியாளர்கள் அல்லது முகவர்கள், உடைமையில் உள்ளவரின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது விருந்தினர்கள், தன்விருப்ப ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களின் பணியாளர்கள், கட்டிடத்தினுள் சட்டத்திற்குட்பட்டு வருகை புரிந்தோர் போன்றோரால் தொல்லை ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் உடைமையில் இருப்பவரே பொறுப்பாவார்.

Attorney General Vs Stone, (1895) 12 TLR 76., என்ற வழக்கில், நாடோடிக் கூட்டம் ஒன்று தன்னுடைய நிலத்தில் தங்குவதற்கு அல்லது முகாமிடுவதற்கு (to camp) அனுமதித்த நில உரிமையாளர், அக்கூட்டத்தினர் எழுப்பிய இரைச்சல் மற்றும் கட்டிடத்தினுள் குப்பைக் கூளங்களை பரவச் செய்து அருகில் வசிக்கும் மக்களுக்கு தொல்லை ஏற்படுத்தியதற்கு பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முன்னர் உடைமையில் இருந்தவரால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைக்கு, தற்போதைய உடைமையாளர் அதனை அறிந்திருந்தால் அல்லது அத்தகைய தொல்லை இருப்பதை கண்டிப்பாக அறிந்திருக்கப்பட வேண்டும் என்றிருந்தால் மட்டுமே பொறுப்பாவார். பொதுவாக ஓர் அத்துமீறியவரால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைக்கு உடைமையாளர் பொறுப்பாகமாட்டார். ஆனால் (1) கட்டிடத்தில் அத்தகைய தொல்லை இருப்பதை அறிந்திருந்தால் அல்லது (2) அத்தகைய தொல்லையை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர் அத்துமீறியவரால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைக்கும் பொறுப்பாவார்.

(3) நில உரிமையாளர் (Landlord): பொதுவாக நில உரிமையாளர், சொத்தின் உடைமையில் இல்லை எனின், அச்சொத்திலுள்ள தொல்லைக்கு அவர் பொறுப்பாகமாட்டார். இது போன்ற நேர்வுகளில் உடைமையாளர்மீது மட்டுமே வழக்கு தொடரப்பட வேண்டும். இருப்பினும் பின்வரும் சூழ்நிலைகளில் நில உரிமையாளர் பொறுப்பாகுவார் அல்லது தொல்லைக்காக நில உரிமையாளர்மீது வழக்குத் தொடரலாம்.

(a) நில உரிமையாளர் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தனது வாடகைதாரருக்கு தொல்லை ஏற்படுத்துவதற்கு அனுமதித்திருந்தால் அவருக்கு எதிராக வழக்குதொடரலாம். **Harris Vs James,**

(1876) 45 LJ QB 545., என்ற வழக்கில், வெடிமருந்து வைத்து பிளக்கச் செய்யும் செயல்பாடுகளையும் (blasting operations) மற்றும் சுண்ணாம்பு சுடுதலாலும் தொல்லையை ஏற்படுத்திய குத்தகைதாரரின் செயலுக்காக, அத்தகைய நோக்கத்திற்காக நிலத்தை குத்தகைக்கு விட்ட நில உரிமையாளர் பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(b) குத்தகைதாரருக்கு குத்தகைக்கு விடுமுன்னரே அதிலுள்ள தொல்லையை அறிந்திருந்தால் அவர்மீது வழக்கு தொடரலாம்.

(c) நில உரிமையாளர் வாடகைக்கு விடுமுன்னர் கண்டிப்பாக அறிந்திருக்கப்பட்டிருக்க வேண்டும் என்றிருக்கும் நேர்வுகளிலும் அவர்மீது வழக்கு தொடரலாம்.

(d) நில உரிமையாளர் (சொத்துரிமையாளர்) வாடகைதாரருக்கு விட்ட வீட்டின் பழுதுபார்க்கும் கடமையை தானே மேற்கொள்வதாக உறுதியளித்-திருந்தால் கண்டிப்பாக அவரே அதற்கு பொறுப்பாவார். **Payne Vs Rogers, (1794) 2 HBL 350.,** என்ற வழக்கில் வீட்டின் பழுதுபார்க்கும் வேலையை தாம் செய்து கொடுப்பதாக குத்தகை ஆவணத்தில் உறுதிமொழி அளித்திருந்த சொத்து உரிமையாளர் அதனை முறையாக பராமரிக்காமல், வசிப்பதற்கு ஆபத்தான நிலைக்கு தள்ளியதன்மூலம் ஆவணத்தில் ஒப்புக் கொண்டிருந்த கடமையை மீறியதால் பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

SHORT NOTES

85. தொல்லைக்கும் கவனமின்மைக்கும் இடையேயான வேறுபாடுகள் / Difference between nuisance and negligence.

ஒருவர் ஒரு நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அனுபவிப்பதில் அல்லது அதனின்று எழுகின்ற அல்லது அந்நிலத்துடன் தொடர்புடைய உரிமைகளில் குறுக்கிடுவது தொல்லை ஆகும். கவனமின்மை என்பது, கவனமுடன் இருக்க வேண்டும் எனும் சட்டக் கடமையைக் கொண்டுள்ள பிரதிவாதி, கவனமின்றி செயல்பட்டு வாதிக்கு இழப்பை ஏற்படுத்துவதே கவனமின்மையாகும்.

Rapier Vs London Tramways Co., (1893) 2 Ch. 588., என்ற வழக்கில், தொல்லை என்பது கவனமின்மைச் சட்டத்தின் ஓர் பிரிவல்ல (nuisance is no branch of the law of negligence) என்றும் தொல்லையைத் தடுப்பதற்கு அனைத்து நியாயமான கவனமும் எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது ஓர் எதிர்வாதம் ஆகாது என்றும் குறிப்பிடப்பட்டது. மேலும் கவனக்குறைவின் காரணமாகவும் தொல்லை ஒன்று ஏற்படுத்தப்படலாம் என்றாலும்கூட, இவ்விரு தீங்குகள் இரண்டும், ஒவ்வொன்றும் தனித்தனியேயானவைகள் என்பதுடன், இவ்விரண்டையும் மெய்ப்பிப்பதற்கு அவசியமான சான்றுகளும்கூட வெவ்வேறானவை என்றும் இவ்வழக்கில் எடுத்துக் கூறப்பட்டது. தொல்லைக்கும், கவனமின்மைக்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

	தொல்லை	கவனமின்மை
1.	பிரதிவாதி கவனமுடன் இருக்க வேண்டிய சட்டக் கடமையைக் கொண்டுள்ளார் என்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டியதில்லை. பிரதிவாதியின் நடத்தையால் தனக்கு ஊறு ஏற்பட்டுள்ளது என்பதை மெய்ப்பித்தாலே போதுமானது.	பிரதிவாதி கவனமுடன் இருக்க வேண்டிய சட்டக் கடமையை கொண்டுள்ளார் என்பதை வாதி கண்டிப்பாக மெய்பிக்க வேண்டும்.
2.	பிரதிவாதி அனைத்து நியாய முறையிலான கவனத்தை மேற் கொண்டிருந்தாலும்கூட, சில நேர்வுகளில் பொறுப்பு நிலைக்கு உட்படுத்தப்படலாம்.	பிரதிவாதி நியாயமான கவனம் எடுத்துக் கொண்டாரா என்பதே கவனமின்மையில் மிகவும் முக்கியமான வினாவாகும்.
3.	தொல்லை உட்கருத்துடன் ஏற்படுத்தப்படலாம்.	உட்கருத்தின் எதிர்மறையே கவனமின்மையாகும்.
4.	வாதி சொத்தினை துய்ப்பதில் தனக்கு ஏற்பட்ட ஏதேனும் ஊறினையும் மற்றும் அச்சொத்து தொடர்பான தனது சொந்த நலன்களையும் கண்டிப்பாக மெய்ப்பிக்கவேண்டும்	வாதி சொத்தினை துய்ப்பதில் தனக்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டுள்ளதை மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.
5.	வாதியின் இழப்பீடு கோரும் உரிமையைச் சார்ந்த வினாவைத் தவிர்த்த பிற நேர்வுகளில் வாதி இழப்பை மெய்ப்பிக்கத் தேவையில்லை.	இழப்பை மெய்ப்பிப்பது அனைத்து நேர்வுகளிலும் அவசியமானதாகும்.
6.	தற்கவனமின்மை என்பது தொல்லையின் ஓர் முக்கிய காரணியல்ல. இது, வாதிக்கு ஏற்பட்ட ஊறுக்கு அவரின் சொந்த நடத்தையே காரணம் என்பதைக் காட்டுகிறதே தவிர, கவனக்குறைவான நடத்தையை குறிப்பிடுவதில்லை.	தற்கவனமின்மை என்பது கவனமின்மையின் ஓர் வகையாகும்.

86. நெடுஞ்சாலையில் ஏற்படும் தொல்லை/ Nuisance on Highways.

ஓர் தனிப்பட்ட நபர், நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள பழுது சரி செய்யப்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்பது சட்டத்தின் ஓர் பொதுவான கொள்கையாகும். சாலையை பராமரிப்பது அரசுகளின் கடமையாகும். பொது சாலைகள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதன் பேரில் வழக்குகள் தொடுப்பதை அனுமதித்தால் அத்தகைய வழக்கிற்கு ஓர் முடிவே இருக்காது. இது தொடர்பான பொருண்மைகள் தற்போது பெரும்பாலும் இயற்றுச் சட்டத்தின் மூலமாகவே ஆளுமை செய்யப்படுகிறது. ஆங்கில இயற்றாச் சட்டத்தின்கீழ் ஓர் அரசு அதிகாரி (அல்லது அதிகார அமைப்பு) செய்யா பிழைக்கு (non-feasance, அதாவது செய்ய வேண்டியதை செய்யாதிருத்தல்) பொறுப்பாக மாட்டார் என்றாலும்கூட சட்டத்தை மீறிய செயலுக்கு (misfeasance) பொறுப்பாவார். நெடுஞ்சாலையில் உள்ள பழுதினை சரி செய்யாமல் இருப்பது தொடர்பான அரசர் அல்லது அரசின் சிறப்புரிமை 1961-ஆம் ஆண்டின் நெடுஞ்சாலைகள் (பல்வகை வகையங்கள்) சட்டத்தின்மூலம் நீக்கப்பட்டு விட்டது.

நெடுஞ்சாலைகளை பராமரிப்பதற்கும் மற்றும் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் தற்காலிக குறுக்கீடு செய்வதை அனுமதிப்பது முழுமையான அவசியமாகும். இதேபோன்று கடைகள் மற்றும் வீடுகளுக்கு பொருள்கள் விநியோகிக்கப்பட, வாகனங்கள், மனிதர்கள் சாலையோரம் நின்று பொருள்களை அளிப்பதும் அவசியமாகும். எனவேதான் **Harper Vs Haden, 1933 Ch D 298.**, என்ற வழக்கில் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள தனது வீட்டின் பழுதுகளை சரி செய்வதற்காக ஓர் நபர் சாரம் கட்டுதல், கட்டுமானத்திற்கான பொருட்களை குவித்தல் போன்றவற்றின் மூலமாக நெடுஞ்சாலையில் தடை ஏற்படுத்துவதற்கு உரிமை கொண்டுள்ளார் எனக் கூறப்பட்டது.

Ware Vs Garsten Haulage Co. Ltd., (1943) 2 All ER 558., என்ற வழக்கில், பழுதான லாரியை இரவு நேரத்தில் அதன் பின்புற விளக்குகள் எதனையும் ஒளிரச் செய்யாமல் விட்டுச் சென்றது. நெடுஞ்சாலையில் ஏற்படுத்திய அபாயகரமானத் தடை என்பதால் அது தொல்லை ஏற்படுத்திய செயலாகும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. ஆனால் **Parish Vs Judd, (1960) 3 All ER 33.**, என்ற வழக்கில், நெடுஞ்சாலையில் இரவு நேரத்தில், மோட்டார் வாகனத்தில் உள்ள எந்தவொரு விளக்கையும் ஒளிரச் செய்யாமல் விட்டுச் சென்றதாலேயே அது தொல்லை ஏற்படுத்திய செயல் எனக் கூறப்படுவதற்கு போதுமானதல்ல; மேற்கொண்டு அவ்வாகனம் சாலையில் தடை ஏற்படுத்துவதாக மட்டுமின்றி, சாலையைக் கடப்பவர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

தற்போது நெடுஞ்சாலைகளின் நிலைக் குறித்த சட்டத்தைக் காண்பதற்கு (ஆங்கில) நெடுஞ்சாலைகள் சட்டம், 1980-ன் வகையங்களைக் காண வேண்டும்.

நெடுஞ்சாலையை முறையாக பராமரிக்கத் தவறியதன் விளைவாக ஏற்பட்ட இழப்புகளுக்கு நெடுஞ்சாலை அதிகார அமைப்பிற்கு எதிராக வழக்கு தொடர முடியும். **Lavis Vs. Kent C.C, (1992) 90 LGR 25.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு, இவ்வகையம், கவனமின்மைக் குறித்து இயற்றாச் சட்டத்தில் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், போக்குவரத்து அடையாளக் குறியீடுகள் (traffic signs) நிறுவத் தவறியது தொடர்பான முறையீடுகளை உள்ளடக்காது.

நெடுஞ்சாலைகளின்மீது நீண்டிருத்தல் (Projection over Highway): நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நிலம் அல்லது கட்டிடங்களிலிருந்து, மரக்கிளைகள், கடியாரங்கள், அடையாளக் குறியீடு பலகைகள் போன்றவைகள் நெடுஞ்சாலையின்மீது நீட்டிக் கொண்டிருப்பதால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியாது. **Noble Vs Harrison, (1926) 2 KB 332.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் நிலத்திலிருந்த மரத்தின் கிளையை நியாயமான கவனத்துடன் ஆய்வு செய்யும்போது கண்டுபிடிக்கப்பட முடியாத ஓர் உட்புறக் குறைபாடு (latent defect) காரணமாக, திடீரென்று ஓடிந்து விழுந்த மரக்கிளை, வாதியின் வாகனத்தின்மீது விழுந்து ஏற்படுத்திய சேதத்திற்கு பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் **Brown Vs Harrison, (1947) WN 191.,** என்ற வழக்கில், சாதாரண நில உரிமையாளர் எவரொருவரும், சில ஆண்டுகளாகவே மரத்தின் பட்டை மற்றும் இலைகள் உதிர்ந்து மரத்தின் கிளைகள் காய்ந்து வருவதனின்றே அது இறந்து கொண்டிருக்கிறது என்பதையும், அதன் அபாயத்தன்மையையும் கண்டிப்பாக அறிந்திருக்கப்பட வேண்டும் என்பதால், முறையாக அகற்றத் தவறியதன் காரணமாக, அம்மரம் விழுந்து ஏற்படுத்திய சேதத்திற்கு பொறுப்பாவார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

87. தொல்லைக்கான தீர்வழிகள்/ Remedies for nuisance, Nov-2012 (v), Nov-2015, Nov-2018.

தொல்லைக்கு எதிராக (1) தொல்லையை அகற்றுதல்; (2) இழப்பீடு; மற்றும்; (3) உறுத்துக்கட்டளை எனும் மூன்றுவகையான தீர்வழிகள் உண்டு. இவைகளில் இழப்பீடு என்பது ஓர் இயற்றாச் சட்ட நடவடிக்கை என்பதையும், உறுத்துக்கட்டளை ஓர் தகைமை நெறியிலான தீர்வழி என்பதையும், தொல்லையை அகற்றுவது என்பது சட்ட நடைமுறை எதனையும் நாடாமல் பெறக்கூடிய ஓர் தீர்வழி என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

(1) தொல்லையை அகற்றுதல் (Abatement of nuisance): தொல்லையை அகற்றுதல் என்பது தொல்லை தரக்கூடிய பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் அல்லது ஓர் முடிவு காணுதல் என்பதாகும். எனவே நெடுஞ்சாலையை கடந்து செல்வதற்கு தடையை அகற்றுவது அவசியமாக இருக்கும்பட்சத்தில், நெடுஞ்சாலையில் வைக்கப்பட்டுள்ள தடையை எவரொருவரும் அகற்றலாம். ஆனால் தன்னுடைய செல்வதற்கான உரிமையை செயல்படுத்துவதற்கு அவசியமான அளவினுக்கும் அதிகமான ஊறினை கண்டிப்பாகச் செய்யக்கூடாது. **[Colchester Vs Brooke, (1845) 7 QB 339].**

இவ்வாறு தொல்லையை அகற்றுதல் என்பது, ஓர் சுய உதவித் (self-help) தீர்வழியாகும். இருப்பினும் ஓர் தொல்லையை அகற்றுவதற்கு இருவழிகள் இருப்பின், குறைந்தளவு ஊறு விளைவிக்கத்தக்க வழியையே பின்பற்ற வேண்டும்.

தனிப்பட்ட நபர்கள் தொல்லையை அகற்றும் தீர்வழியை செயல்படுத்துவதை பொதுவாக சட்டம் ஆதரிக்காது. இருப்பினும், அமைதியான முறையில், உயிருக்கு உடலுக்கு ஆபத்து ஏதுமின்றி மற்றும் மற்றொருவரின் நிலத்தினுள் நுழையாமல் இதனைப் பயன்படுத்த முடியும். **SK. Batcha Vs Alagappan Servai, (1958) 2 MLJ 157.,** என்ற வழக்கில், தன்னுடைய நிலத்தின்மீது நீட்டிக் கொண்டிருக்கும் பக்கத்து வீட்டுக்காரரின் மரக்கிளையை வெட்டுவதற்கு ஒருவருக்கு உரிமையுண்டு எனக் கூறப்பட்டது. மரக்கிளைகள் நீண்ட காலமாக வாதியின் நிலத்தின்மீது நீட்டிக் கொண்டிருந்தாலும்கூட அதன்பொருட்டு நீளுடைமை உரிமை என்பதன் அடிப்படையில் பிரதிவாதி, வாதியின் நிலத்தின்மீது வசதியுரிமை எதனையும் பெற முடியாது என **K.K.Kulkarni Vs. S.M. Kulkarni, ILR (1925) 27 Bom 663.,** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டது. தொல்லையை அகற்றுதல் குறித்து கவனிக்க வேண்டிய ஓர் முக்கிய அம்சம் என்னவெனில், தொல்லை அகற்றப்பட்டவுடன், தொல்லையை அகற்றியவர் இழப்பீடு கோரி வழக்கு தொடருவதனின்று விலக்கப்படுவதாகும். எனவே தொல்லையை அகற்றுதல் எனும் சிறப்புரிமை, இழப்பீடு கோரும் தீர்வழிக்கு மாற்றானதாகும். பாதிக்கப்பட்ட ஊறுக்கான இழப்பீடு பெறும் உரிமையை இழப்பது என்பதே இத்தகைய உரிமையை செயல்படுத்துவதை பெரிதும் தடுப்பதாக உள்ளது என்பதே கவனிக்கத்தக்கதாகும் **[Baton Case, (1610) 9 Co Rep 53 b].**

(2) இழப்பீடு (Damages): தொல்லையில் உள்ள சிக்கலான விடயம், பிரதிவாதியின் நடத்தை அல்ல, மாறாக, வாதியின் பாதிப்பேயாகும் என்பதால், பிரதிவாதி, தன் பக்கத்து வீட்டுக்காரருக்கு ஊறு ஏற்படுத்தினாரா என்பது முக்கியத்துவம் பெறுகிறது. வாதி, தனக்கு தனிப்பட்ட முறையில் இழப்பு ஏற்பட்டிருப்பதை மெய்ப்பிக்க வேண்டும். வாதியின் உரிமைக்கு ஏற்பட்ட ஊறு, சிறிய அளவினதாகவும், பண அடிப்படையில் மதிப்பிடத்தக்கதாகவும், போதுமான தொகையை செலுத்துவதன்மூலம் இழப்பு ஈடு செய்யப்பட்டுவிடும் என்றிருக்கும் போதும் மற்றும் உறுத்துக்கட்டளை பிறப்பிப்பது, பிரதிவாதியை துன்புறுத்துவதாகவும் இருக்கும்போது, நீதிமன்றம் உறுத்துக்கட்டளையை பிறப்பிக்காமல் இழப்பீடே வழங்கும் என்று **Shelfer Vs City of London Electricity Light Co, (1895) 1 Ch 287 (CA).,** என்ற வழக்கில் விளக்கம் அளிக்கப்பட்டது. தொல்லையின் பொருட்டு கணிசமான இழப்பீடு வழங்கப்பட்ட பின்பு, மீண்டும் தொல்லை தொடர்ந்திருப்பதற்காக புதிய வழக்கு ஒன்று தொடரப்படின், ஓர் எடுத்துக்காட்டாக நிலைப்படுத்துவதற்கு (set an example) எச்சரிக்கை இழப்பீடு வழங்கப்படுவதுடன் தொல்லையை அகற்றவும்

வலியுறுத்தும். **Brijbala Prasad Vs Patna Municpal Corpn AIR 1959 Pat 273.,** என்ற வழக்கில் ஓர் கூட்டுரு (மாநகராட்சி) தனது செயல் அல்லது விடுகையின் காரணமாக ஏற்படுத்தும் தொல்லைக்கான பொறுப்பு நிலையில் இருந்து தப்பிக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டது.

(3) உறுத்துக்கட்டளை (Injunction): மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம் **Dhannalal Vs. Thakur Chittarsingh, AIR 1959 MP 240.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல, தொடர்ச்சியான இரைச்சலின் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற அசௌகரியம், தொந்தரவு மற்றும் பெருமளவிலான உடல்நல ஆதாயக்குறைவை பண அளவில் மட்டுமே சரியாக மதிப்பிட முடியாது. ஓர் மனிதன் தனது வசிப்பிடத்தை வசதியுடன் துய்க்கவும் மற்றும் எந்தவொரு அசாதாரண ஓசையின் இடையூறு ஏதுமின்றி, சாதாரணமாக தன் வீட்டில் உள்ளோருடன் உரையாடவும் தகுதி கொண்டுள்ளார். ஒருவரின் அண்டை வீட்டுக்காரர் சாதாரணமாக வசிப்பிடத்தை வசதியாக துய்ப்பதிலும் மற்றும் வீட்டிலுள்ள மற்றவர்களுடன் உரையாடுவதற்கும் பெரும் இடையூறு விளைவிப்பின், வீட்டின் உரிமையாளர் அல்லது அதன் உடைமையாளர் உறுத்துக்கட்டளை பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளார். தொல்லை என்பது பொருண்மை அல்லது நிகழ்மை குறித்த வினா என்பதால் அதனை மெய்ப்பித்தாலேயொழிய நீதிமன்றம் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கூடாது.

அலகு - IX (e)

கடும் பொறுப்புநிலை மற்றும் முழுப்பொறுப்பு நிலை (Strict Liability and Absolute Liability)

PART - A/B

66. ரைலாண்ட் எதிர் ப்ளட்சர் வழக்கின் விதியைப் பற்றிக்கூறுக. (State the rules involved in Rylands Vs Fletcher) - May-2018. (அல்லது)

✦ 'ஒரு நபர் தம் பயன்களுக்காக தம்முடைய நிலத்தில் ஏதாவது தீங்கிழைக்கக் கூடியதை வைத்திருந்தால் அதனை அவருடைய சொந்த பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்' - கூர்ந்தாராய்க. ('The person who for his own purpose brings on his land and keeps anything likely to do mischief, if it escapes must keep it at his peril' - Discuss).

SN - 88 கடும் பொறுப்பு விதி / Rule of Strict liability அல்லது ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதி / Rule in Rylands Vs Fletcher

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை - (ஆ) வழக்கின் பொருண்மைகள் - (இ) கடும் பொறுப்பு விதி

(அ) முன்னுரை (Introduction):

சில நேரங்களில் பிரதிவாதி தனது செயலால் வாதிக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்று கருதியிராதபோதும்கூட, வாதிக்கு ஏற்பட்ட ஊறுக்கு பொறுப்பாகுவார். இத்தகைய நேர்வுகளில் பிரதிவாதியின் தரப்பில் எந்தவொரு கவனக்குறைவு அல்லது தவறு இல்லை என்றாலும்கூட சட்டம் அவரை பொறுப்புநிலைக்கு உட்படுத்தும். தீங்கியலின் இக்கெள்கையே கடும் பொறுப்பு நிலைக் கோட்பாடு அல்லது தவறில்லா பொறுப்பு நிலைக் கோட்பாடு (liability without fault) என அழைக்கப்படுகிறது. இக்கோட்பாடு ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் நீதிபதி பிளாக்பர்ன் (Blackburn, J) அவர்களால் வகுக்கப்பட்டதாகும்.

(ஆ) வழக்கின் பொருண்மைகள் (Facts):

Rylands Vs Fletcher, 1868 LR3HL 380., என்ற வழக்கின் விதி, தவறின் அடிப்படையிலான பொறுப்பு நிலைக்கு எதிரானதாகும். இவ்வழக்கில் ரைலாண்ட்ஸ் (பிரதிவாதி), தான் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் நீராலைக்கான நீர்த்தேக்கம் கட்டுவதற்காக தகுதிபெற்ற தன்விருப்ப ஒப்பந்ததாரர்களை (independent contractors) பணியமர்த்தினார். அந்நிலத்தில் முன்பொரு காலத்தில் நிலக்கரிச் சுரங்கத்தொழில் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மூடப்பட்ட விபரம் பிரதிவாதிக்கு தெரியாது. நீர்த்தேக்கம் கட்டும் வேலையின்போது, ஒப்பந்ததாரர்களின் பணியாளர்கள் அவ்விடத்தில் சுரங்கத்தினுள் ஆட்கள் நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் மற்றும் நிலக்கரியை மேலே எடுத்துவருவதற்கான வட்டவடிவிலான பழைய இரும்பு உருளைகள் மற்றும் சுரங்கப் பாதைகளை (series of old coal shafts) கண்டனர். அவை பக்கத்தில் இருந்த ஃப்ளட்சரின் சுரங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவைகள் முழுவதுமாக மண் அடைந்திருந்ததாக தெரிந்தால் அதனை முறையாக அடைக்கவில்லை. நீர்தேக்கத்தில் நீர் நிரப்பப்பட்டவுடன், அவை நிலத்ததடியிலிருந்த சுரங்க வழியின் அடைப்புகளை உடைத்து வெளியேறி ஃப்ளட்சரின் (வாதியின்) நிலக்கரிச் சுரங்கம் முழுவதையும் நிரப்பியது. இதனால் வாதியின் சுரங்கத்தொழில் பாதிக்கப்பட்டதோடு பெரும் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது. உண்மையில் பிரதிவாதிக்கு, தான் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் முன்னர் ஒரு காலத்தில் சுரங்கத்தொழில் மேற்கொண்டிருந்தது பற்றியோ அல்லது நீர்த்தேக்கம் கட்டும்பொழுது அங்கு சுரங்க வழிப்பாதைகள் இருந்தது பற்றியோ தெரியாது. மேலும் பிரதிவாதி தரப்பில் எந்தவொரு கவனமின்மைத் தீங்கும் புரியப்படவில்லை. இருப்பினும் இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், நீதிபதி பிளாக் பெர்ன் வகுத்த கடும் பொறுப்பு நிலை என சட்ட வரலாற்றில் நிலைபெற்ற பின்வரும் விதியை மேன்முறையீட்டில் பிரபுக்கள் சபையும் உறுதி செய்தது:

ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் விதி (Rule in Rylands Vs Fletcher): இவ்வழக்கில், பிரதிவாதியின்மீது பொறுப்பு சுமத்தியதற்கு நீதிபதி பிளாக்பர்ன் பின்வரும் காரணத்தைக் குறிப்பிட்டார்:

"வெளியேறும் போது தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள் எதனையும் ஒருவர் தம் சொந்த பயன்களுக்காக தமது நிலத்தில் கொண்டு வந்து வைத்திருந்தால், அதனை அவர்தம் சொந்த பொறுப்பில் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் அதன் வெளியேற்றத்தின் இயல்பான விளைவுகளினால் ஏற்படும் அனைத்து சேதங்களுக்கும் அவர் முதற்பார்வையிலேயே (Prima facie) பொறுப்பேற்க வேண்டும்".

(இ) கடும் பொறுப்பு நிலை விதி (Rule of strict liability):

நீதிபதி பிளாக்பர்ன் வழங்கிய தீர்ப்புரையின் மேற்குறிப்பிட்ட பகுதியே கடும் பொறுப்பு நிலை விதி எனப்படுகிறது. நீதிபதி பிளாக்பர்ன், வேறுபட்ட மற்றும் பெரும்பாலும் அங்குமிங்குமாக பரவியிருந்த (scattered) சட்ட விதிகள் அல்லது தீர்வழிகளை, அனைத்தையும் உள்ளடக்கும் ஓர் பரந்த கொள்கையின்மூலம் ஓர் புதிய சட்டத்தை உருவாக்கினார். இக்கொள்கை தவறில்லா பொறுப்புநிலைக் குறித்த பல்வேறு நேர்வுகளின் ஒருங்கிணைப்பாகும். கடும்பொறுப்பு விதி, (i) கால்நடை அத்துமீறலுக்கான பொறுப்புநிலை (இது ஓர் மிகப்பழமையான விதியாகும்); (ii) அத்துமீறலுக்கான பிரதிவாதியின் பொறுப்பு நிலை; (iii) பொருள்களின் இழப்பு அல்லது காணாமல் போதல் தொடர்பான பொதுப்போக்குவரத்து ஊர்திகள் மற்றும் உணவு விடுதி உரிமையாளர்களின் பொறுப்புநிலை; (iv) பகரப்பொறுப்பு நிலை உள்ளிட்டவற்றின் ஒருங்கிணைப்பே எனக் கூறப்படுவதும் உண்டு. எனவேதான், டீன் விக்மோர் (Dean Wigmore), "சட்டவியல் துறையில் வழியற்று அங்குமிங்கும் அலைந்திருந்த, ஓர் குறிப்பிட்ட இடத்தில் இல்லாத மற்றும் முறையாக பராமரிக்கப்படாத (wandered about, unhoused and unshephered) தவறில்லா பொறுப்பு நிலையின் வேறுபட்ட நேர்வுகளின் சேர்ப்பே கடும் பொறுப்பு நிலை" எனக் குறிப்பிட்டுள்ளார். இப்புதிய விதி, உண்மையில் முந்தைய ஆங்கிலச் சட்டத்தின் பின்வரும் இரு பிரிவுகளில் கணிசமான மேம்பாட்டைச் செய்தது:

(1) உடைமையாளர்களின் நிலத்திலிருந்து வெளியேறிய பொருள்களுக்கான பொறுப்புநிலையை விதிப்பது தொடர்பான பொருண்மைகள்;

(2) அத்தகைய வெளியேற்றம் தொடர்பாக, எத்தகைய நபர்களின் தவறுக்கு, உடைமையாளர் பகரப்பொறுப்பு கொண்டுள்ளார் என்பது குறித்த பொருண்மைகள்.

இவற்றுள் முதலாவதாக, நெருப்பு, கால்நடை அல்லது கட்டுக்கடங்காத மிருகங்களின் பரவுதல் அல்லது தப்பிச் செல்லுதல் குறித்து கிட்டத்தட்ட தெளிவாக உணர்ந்திருந்த பொறுப்பு நிலையை, நீதிமன்றம், பொதுவாக தப்பிச்சென்று அல்லது வெளியேறி தீங்கிழைக்கும் அனைத்திற்கும் நீட்டித்தது.

இரண்டாவதாக, எவருடைய உடைமையில் இருக்கும் நிலத்திலிருந்து பொருள்கள் வெளியேறியதோ அத்தகைய நபர்கள், அடையாளம் தெரியாத

அல்லது முன்பின் தெரியாதவரை (stranger) தவிர, தங்களின் பணியாளின் தவறு மட்டுமின்றி தன்விருப்ப ஒப்பந்ததாரர்களின் தவறுக்கும் பொறுப்பாக்குவது.

இவ்விதியை பொருந்தச் செய்வதற்கு பின்வரும் மூன்று நிபந்தனைகள் அவசியமாகும்:

(i) ஏதேனும் அபாயகரமானப் பொருளை ஓர் நபர் தனது நிலத்தில் கொணர்ந்திருக்க வேண்டும் அல்லது சேகரித்து வைத்திருக்க வேண்டும்;

(ii) தன்னுடைய நிலத்தில் கொணர்ந்திருக்கும் அல்லது வைத்திருக்கும் அப்பொருள் வெளியேறியிருக்க வேண்டும் மற்றும்;

(iii) நிலத்தை இயல்புக்கு மாறான நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்க வேண்டும்.

67. தீங்கியல் சட்டத்தில் கடும் பொறுப்பு விதியினை விளக்குக. அதன் வரையறைகள் யாவை? (Discuss the principles of Strict liability in the law of torts. What are its limitations?) - May-2012 (v).

✦ **கடும் பொறுப்பு விதியினை விளக்குக. இவ்விதியை பொருந்தச் செய்வதற்கான நிபந்தனைகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் குறிப்பிடுக. (Explain the rule of strict liability. Mention the conditions to be fulfilled for the application of this rule along with decided cases).**

SN - 89 வெளியேற்றம் இல்லை என்றால் பொறுப்பும் இல்லை / No escape no liability - May-12.

விடைச்சுருக்கம்: (அ) கடும் பொறுப்பு விதி - (ஆ) வரையறைகள் அல்லது வரம்புகள் அல்லது நிபந்தனைகள் - ஆ (1) அபாயகரமான பொருள் - ஆ (2) வெளியேற்றம் - ஆ (3) நிலத்தை இயல்பிற்கு மாறாக பயன்படுத்துதல்

(அ) கடும் பொறுப்பு விதி (Rule of strict liability):

நீதிபதி பிளாக்பர்ன் **Rylands Vs Fletcher, 1868 LR 3 HL 330.**, என்ற வழக்கில் உருவாக்கிய கடும்பொறுப்பு விதி பின்வருமாறு:

"சட்டத்தின் உண்மையான விதி என்னவெனில், வெளியேறும்போது தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள் எதனையும் ஒருவர் தம் சொந்த பயனுக்காக தனது நிலத்தில் கொண்டுவந்து மற்றும் சேகரித்து வைத்திருப்பாரேயானால், அதனை அவர்தம் சொந்த பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அப்பொருள் அந்நிலத்திலிருந்து வெளியேறிச் செல்வதால் ஏற்படும் இயல்பான விளைவுகள் அனைத்திற்கும் முதற்பார்வையிலேயே பொறுப்பாகுவார்." (... The true rule of law is that the person who, for his own purposes, brings on his land and collects and keeps there anything

to do mischief if it escapes, must keep it at his peril and if he does not do so is prima facie answerable for all the damage which is natural consequences of its escape"). இவ்வழக்கில் நீதிபதி பிளாக்பர்ன் உருவாக்கிய கடும்பொறுப்பு விதியை மேல்முறையீட்டில் பிரபுக்கள் அவையில் இருந்த கேர்ன்ஸ் பிரபு (Lord Cairns) ஏற்றுக் கொண்டாலும், இயற்கைக்கு மாறாக நிலத்தைப் பயன்படுத்தும்போது இவ்விதி பொருந்தச் செய்யப்படவேண்டும் என்கிற கூடுதல் தகுதியையும் குறிப்பிட்டார்.

(ஆ) வரையறைகள் அல்லது நிபந்தனைகள் அல்லது வரம்புகள் அல்லது கட்டுப்பாடுகள் (Limitations or conditions or restrictions):

நீதிபதி பிளாக்பர்ன் உருவாக்கிய கடும் பொறுப்பு விதி மற்றும் அத்துடனான பிரபுக்கள் அவையின் விளக்கத்தின்படி, கடும்பொறுப்பு விதியை பொருந்தச் செய்வதன்மீதான வரையறைகள் அல்லது கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகள் பின்வருமாறு:

(1) ஏதேனும் அபாயகரமான பொருளை ஒரு நபர் தனது நிலத்தில் கொணர்ந்திருக்க வேண்டும் அல்லது சேகரித்து வைத்திருக்க வேண்டும்;

(2) நிலத்தில் கொண்டு வந்து அல்லது சேகரித்து வைத்திருக்கும் அப்பொருள் வெளியேறியிருக்க வேண்டும்; மற்றும்;

(3) இயற்கைக்கு அல்லது இயல்புக்கு மாறான நோக்கத்திற்காக நிலத்தை பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இனி மேற்குறிப்பிட்ட கூறுகளை சுருக்கமாகக் காண்போம்.

ஆ(1) அபாயகரமான பொருள் (Dangerous thing): பிரதிவாதி தன்னுடைய சொத்தினுள் அல்லது நிலத்தினுள் அபாயகரமான பொருள் எதனையேனும் கொண்டுவந்து அல்லது சேகரித்து வைத்திருக்க வேண்டும். இவ்வழக்கு விதியின்படி, அபாயகரமான பொருள் அதாவது தீங்கு விளைவிக்கக்கூடிய பொருளின் வெளியேற்றத்தினின்று பொறுப்புநிலை எழுகிறது. **Hare & Co Vs Mc Alpine., (1923) 1 Ch. 167.,** என்ற வழக்கில், கட்டுமான இடத்தில் கூரான தூண்களை நிலத்தில் அடித்து இறக்கியதால் ஏற்பட்ட அதிர்வுகளின் காரணமாக, சாலையின் மறுபக்கத்தில் இருந்த வாதிகளுக்கு சொந்தமான பழமையான உணவு விடுதி சேதமடைந்தது. ரைலாண்ட்ஸ் வழக்கு விதியின்படி வாதிகள் இழப்பீடு பெறத்தகுதி கொண்டுள்ளார்கள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதுதவிர ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் கடும்பொறுப்பு விதியின்கீழ் நீதிமன்றத்தால் அபாயகரமான பொருள்களாக குறிப்பிட்டுள்ளவைகளில் சில பின்வருமாறு: (i) அதிகளவு தண்ணீர், (ii) மின்சாரம், (iii) வாயு, (iv) அதிர்வுகள், (v) கழிவு நீர், (vi) வெடிமருந்துகள், (vii) நெருப்பு (தீ), (viii) வாண வேடிக்கைகள் (பட்டாசுகள்), (ix) தீங்கான புகைக்கரி, (x) நிலச்சரிவை ஏற்படுத்தும் மண் குவியல்கள் (xi) கால்நடைகளுக்கு ஆபத்தான ஒருவகை ஊசியிலை மரம் (yew trees), (xii) தீயை உண்டாக்கக்கூடிய பொருட்கள், (xiii) கொடிய விலங்குகள், (xiv) குப்பை மற்றும் துர்நாற்றம், (xv) எண்ணெய், (xvi)

பெட்ரோல் கசியும் மோட்டார் கார், (xvii) நிலக்கரிச் சுரங்க கழிவுகள், (xviii) இற்றுப்போன வேலியிலிருந்து விழுந்த துருப்பிடித்த கம்பி, (xix) கொடிக்கம்பம், (xx) அபாயகரமான பூச்சிகள்.

ஆ(2) வெளியேற்றம் (Escape) அல்லது வெளியேற்றம் இல்லையேல் பொறுப்பும் இல்லை (No escape, no liability): கடும் பொறுப்பு விதியை பொருந்தச் செய்ய, பிரதிவாதியின் உடைமை மற்றும் கட்டுப்பாட்டில் இருந்த அபாயகரமானப் பொருள், அவருடைய இடத்திலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். அதாவது, பிரதிவாதியின் இடத்திலிருந்து வெளியேறி மற்றொருவரின் நிலத்தினுள் புகுந்து இழப்பை ஏற்படுத்தி இருக்க வேண்டும். **Crowhurst Vs. Amersham Burial Board, (1878) 4 Ex. D5.,** என்ற வழக்கில், நச்சுத்தன்மை கொண்ட பிரதிவாதியின் நிலத்திலிருந்த மரத்தின் கிளைகள், பக்கத்து வீட்டுக்காரரின் நிலத்தின்மீது படர்ந்து நீட்டிக் கொண்டிருந்தது, தப்பிச் செல்லுதல் (escape) என்பதாக அமையும் என்றும், எனவே பக்கத்து வீட்டுக்காரரின் (வாதி) குதிரை அம்மரத்தின் இலைகளை தின்றதால் உயிரிழந்ததற்கு பிரதிவாதி பொறுப்பாகுவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் வெளியேற்றம் இல்லையேல் பொறுப்பு எழாது. அதாவது, பிரதிவாதியின் எல்லைக்குள் இழப்பு ஏற்படும் நேர்வுகளுக்கு கடும் பொறுப்புநிலை விதி பொருந்தாது. **Read Vs Lyons & Co. (1947) 63 LQR 159.,** என்ற வழக்கை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவ்வழக்கில், வெடிமருந்து ஆய்வாளராக விநியோக அமைச்சகத்தினால் (Ministry of supply) பணியமர்த்தப்பட்டிருந்த பெண்மணி (வாதி) பிரதிவாதிகளால் நடத்தப்படும் வெடிமருந்து தொழிற்சாலையினுள் ஆய்வு செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு தயாரிக்கப்படும் வெடிகுண்டு ஒன்று வெடித்ததன் காரணமாக பலத்த காயமுற்றார். பிரதிவாதியின் கட்டிடத்திலிருந்து அபாயகரமான பொருளின் வெளியேற்றம் இல்லாததாலும், பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு இருந்ததை மெய்ப்பிக்காததாலும், பிரதிவாதி கடும்பொறுப்பு விதியின்கீழ் பொறுப்பாக மாட்டார் என்பதைக் குறிப்பிட்டு வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது.

O'Gorman Vs O'Gorman, (1903) 2 IR 573., என்ற வழக்கில், வாதியும், பிரதிவாதியும் அடுத்தடுத்த பண்ணைகளில் (farm) வசித்து வந்தனர். பிரதிவாதி எண்ணற்ற தேனீப் பெட்டிகளை தன்னுடைய இடத்தில் பராமரித்து வந்தார். அங்கிருக்கும் தேனீக்கள் அடிக்கடி பறந்து சென்று அருகிலுள்ள வாதியின் பண்ணையில் இருப்பவர்களுக்கு பெரும் தொந்தரவை ஏற்படுத்தின. ஒருநாள் பிரதிவாதி தேனீப் பெட்டிகளிலுள்ள தேனை சேகரிப்பதற்காக, வாதிக்கு எச்சரிக்கை ஏதும் விடுக்காமல் புகைமூட்டினார். அந்நேரத்தில், வாதி தன் குதிரையை பழக்கப்படுத்துவதற்காக அடக்கிக் கொண்டிருந்தார். புகைமூட்டத்தால் கோபமுற்ற தேனீக்கள் கூட்டம் பறந்து சென்று வாதி மற்றும் அவரின் குதிரையின்மீது

மொய்த்து கொட்டியதால் மிரண்டுபோன குதிரை, வாதியை, இழுத்துச் சென்று சுவரின்மீது தூக்கி எறிந்ததில் வாதி படுகாயமுற்றார். நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாகுவார் எனத் தீர்ப்பளித்தது.

ஆ(3) நிலத்தை இயல்பிற்கு மாறாக பயன்படுத்துதல் (Non-natural use of land): நிலத்தை இயல்பிற்கு மாறாகப் பயன்படுத்துதல் என்பது, மற்றவர்களுக்கு கூடுதல் அபாயத்தை விளைவிக்கும் ஓர் பொருளை தன்னுடைய நிலத்தில் தனிமுறையில் பயன்படுத்துவது (special use of a thing) என்று பொருள்படும். நிலத்தை இயல்பிற்கு மாறாக பயன்படுத்துவது என்பது கண்டிப்பாக, நிலத்தை சாதாரணமாக பயன்படுத்துவதாக இருக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, குடியிருப்புப் பகுதியில் ஓர் நபர் தன் குடும்பத்தின் சமையல் நோக்கத்திற்காக இரண்டு பெட்ரோல் வாயு உருளைகளை (gas cylinders) வைத்திருப்பது நிலத்தின் இயல்பான பயன்பாடு என்பதனுள் அடங்கும். ஆனால் அவர் 20-25 உருளைகளை வைத்திருப்பது நிலத்தின் இயல்புக்கு மாறாக பயன்படுத்தல் என்பதாகும். சாதாரணமாக வீடு அல்லது அடுக்குமாடி தனிக்குடியிருப்புகளின் (flats) தேவைக்காக தண்ணீரை தொட்டியில் சேமித்து வைத்தல், வீட்டு உபயோகத்திற்கான நெருப்பின் பயன்பாடு, மரங்களை வளர்த்தல், கால்நடைகளை நிலத்தில் மேய விடுதல், வீடு அல்லது கடைக்கான மின் இணைப்பு வேலைகள் போன்றவை நிலத்தை இயல்பாகப் பயன்படுத்துதல் என்பதனுள் அடங்கும். **Rickards Vs Lothian, (1913) AC 263.,** என்ற வழக்கில், நிலத்தை இயல்பிற்கு மாறான நோக்கத்திற்கு பயன்படுத்துதல் என்பதன் பொருள் பின்வருமாறு விளக்கப்பட்டது:

"கண்டிப்பாக ஏதேனும் சிறப்பான அல்லது தனிப்பட்ட பயனுக்காக (special use) கொணரும் அப்பொருள், சாதாரணமாக நிலத்தைப் பயன்படுத்துவதாக இல்லாமல் அல்லது அத்தகைய பயன்பாடு சமுதாயத்தின் பொதுவான நலனுக்கு முறையானது என்பதாகவும் இல்லாமல், மற்றவர்களுக்கு அபாயத்தின் அளவை அதிகரிப்பதான அத்தகைய பயன்படுத்தல்."

Sochack Vs Sas, (1947) 1 All Er 344., என்ற வழக்கில், அறையினுள் வெப்பமூட்டும் அடுப்பை (fire place) பயன்படுத்துவது நிலத்தை இயல்பாக பயன்படுத்துதல் என்பதனுள் அடங்கும் என்றும் மற்றும் அடுப்பிலிருந்த தீப்பொறி, அதனை ஒட்டியுள்ள கட்டிடங்களுக்குப் பரவினால், அதன் பொருட்டான பொறுப்புநிலை கடும் பொறுப்பு விதியின்கீழ் எழாது என்றும் குறிப்பிடப்பட்டது. **Sarju Prasad Vs Mohadeo Prasad, AIR 1932 All 573.,** என்ற வழக்கில், பிரதிவாதிகளுக்குச் சொந்தமான இடத்தில், ஆனால் வாதியின் சுவற்றை ஒட்டி, பள்ளம் தோண்டியதால், வாதி வீட்டின் அடித்தளம் (foundation) மூடப்படாமல் வெளிப்படுத்தப்பட்டது. பிரதிவாதி, மழைக்காலத்தின்போது செய்த அச்செயலால், மழைநீர் பெருமளவில் பள்ளத்தில் தேங்கியது. தேங்கிய மழை நீர் வாதியின் வீட்டு அடித்தளத்திற்குள் கசிந்து உட்புகுந்ததால் அவரின் வீட்டுச்சுவர் மற்றும் தரைப்பகுதிகளுக்கு சேதம் ஏற்பட்டது. இது தொடர்பாக வாதி தொடர்ந்த

வழக்கில், பிரதிவாதி, நிலத்தை இயல்பிற்கு மாறாக பயன்படுத்துவது எனும் ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு கொள்கையின் அடிப்படையில் பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

68. கடும் பொறுப்பு நிலை என்பதை விளக்கி அதன் விதிவிலக்குகளைக் கூறுக. (Explain the concept of strict liability and state the exceptions) - May-2017 (v).

விடைச்சுருக்கம்: (அ) கடும் பொறுப்பு நிலை – (ஆ) விதிவிலக்குகள் – ஆ (1) சட்ட அதிகாரம் – ஆ (2) நிலத்தின் இயல்பான பயன்பாடு – ஆ (3) தெய்வச் செயல் – ஆ (4) மூன்றாம் தரப்பின் தவறான செயல் – ஆ (5) வாதியின் சொந்த தவறு – ஆ (6) வாதியின் இசைவு

(அ) கடும் பொறுப்பு நிலை (Strict liability):

(முந்தைய வினாவிற்காக விடையின் குறுந்தலைப்பு 'அ' மற்றும் 'ஆ'-வில் காண்க)

(ஆ) விதிவிலக்குகள் (Exceptions):

கடும் பொறுப்பு நிலை பின்வரும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டது:

(1) சட்ட அதிகாரம்;
(2) நிலத்தின் இயல்பான பயன்பாடு;
(3) தெய்வச் செயல்;
(4) மூன்றாம் தரப்பின் தவறான செயல்;
(5) வாதியின் சொந்த தவறு; மற்றும்;
(6) வாதியின் இசைவு.

இனி, மேற்குறிப்பிட்டுள்ள விதிவிலக்குகள் பற்றி சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

ஆ(1) சட்ட அதிகாரம் (Statutory Authority): சட்டத்தினால் அதிகாரம் பெற்ற பிரதிவாதி, தன்னுடைய நிலத்தில் அபாயகரமான பொருளை கொண்டு வந்து அல்லது சேகரித்து வைத்திருந்தால், அத்தகைய அபாயகரமானப் பொருள் வெளியேறி வாதிக்கு ஏற்படுத்தும் இழப்புகளுக்கு பொறுப்பாகமாட்டார். ஏனெனில், சட்ட அதிகாரம் பிரதிவாதியை பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கிறது. இருப்பினும், பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு இருந்தது என்று வாதி மெய்ப்பிப்பின், பிரதிவாதியின் சட்ட அதிகாரம் எனும் எதிர்வாதம் தோல்வியுறும். **Green Vs Chelsea Waterwork Co (1894) 70 LT 564.,** வழக்கில், பிரதிவாதிகளின் நிறுவனம் நீர் விநியோகம் செய்யும் சட்டபூர்வ கடமையைக் கொண்டிருந்தது. கம்பெனியின் தரப்பில் கவனக்குறைவு ஏதுமின்றி பிரதான (main) குழாய் வெடித்ததன் காரணமாக, வாதியின் கட்டிடம் தண்ணீரால் சூழப்பட்டது. நிறுவனம் சட்டபூர்வ கடமையை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருந்ததால் பொறுப்பாகாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Madras Railway Company Vs. Zamindar of Carvatenagram, (1874) 1 IA 364., என்ற இந்திய வழக்கு இப்பொருள் தொடர்பான ஓர் முக்கிய வழக்காகும். இவ்வழக்கில் 'கர்வேட் நகரம்' என்ற மலைசூழ்ந்த மாவட்டத்தில் இருந்த இரண்டு குளங்கள் பிரதிவாதியின் நிலத்தில் இருந்தது. பழமையான அந்த குளங்கள் வழக்கமான முறையில் கட்டப்பட்டிருந்தது. அதன் கரைகள் முறையாக பழுதுபார்த்து பராமரிக்கப்பட்டு வந்தது. அக்குளங்கள் அம்மாவட்டத்தின் விவசாயத்திற்கான ஆதாரமாக தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. அசாதாரண மழைப்பொழிவின் காரணமாக பெருக்கெடுத்த வெள்ளம், குளக்கரையில் உடைப்பை ஏற்படுத்தியதால் அங்கிருந்த நீர் வெளியேறி வாதியின் ரயில்வே நிறுவனத்தினுள் புகுந்து பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. வாதியின் ரயில்வே நிறுவனம், ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் கடும் பொறுப்பு விதியை பொருந்தச் செய்ய வேண்டும் என வாதிட்டது. பயன்பாட்டில் இருந்து வரும் ஏரி, குளங்களைப் பராமரிக்கும் கடமையை முதலில் அரசு எடுத்துக்கொண்டது. அதன்பின்னர் நிரந்தர நிலவரித் திட்டத்தின்கீழ் அப்பொறுப்பு ஜமீன்தார்களுக்கு வழங்கப்பட்டது. ஜமீன்தார்கள் அவைகளை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிக்கும் கடமையை மட்டுமே சட்டத்தின்கீழ் பெற்றிருந்தனர். ஜமீன்தாரர் பெருமளவு நீரை அங்கு கொண்டு வந்து சேர்க்கவில்லை என்பதால் ரைலாண்ட்ஸ் வழக்கு விதி இவ்வழக்கிற்கு பொருந்தாது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும், ரைலாண்ட்ஸ் வழக்கு விதியில் குறிப்பிட்டுள்ளது போன்று, பிரதிவாதி, நிலத்தின் இயல்பான முறைக்கு அல்லாத நோக்கத்திற்காக பயன்படுத்தவில்லை என்பதையும் நீதிமன்றம் தனது முடிவுக்கு ஆதரவாக குறிப்பிட்டது.

ஆ (2) நிலத்தின் இயல்பான பயன்பாடு (Natural use of land): நிலத்தின் இயல்பான பயன்பாட்டின் காரணமாக இழப்பு ஏற்பட்டால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார். வேளாண் நிலத்தில் நீர்ப்பாசன நோக்கத்திற்காக வாய்க்கால் வெட்டுதல், அறையில் வெப்பமூட்டுவதற்காக அடுப்பினை பயன்படுத்துதல், வீட்டின் தேவைக்கான நீரை தொட்டிக்கட்டி சேகரித்தல், வீடு அல்லது கடைகளுக்கு மின் இணைப்பு அமைத்தல் போன்றவை நிலத்தின் இயல்பான பயன்படுத்தலுக்கான ஒருசில எடுத்துக்காட்டுகளாகும். ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் நீர்த்தேக்கத்தில் மிக அதிகளவு நீரைத் தேக்கி வைத்திருந்தது. நிலத்தை இயல்பாக பயன்படுத்தியது ஆகாது எனக் குறிப்பிடப்பட்டது. **Ilford U.D.C., Vs Beal, (1925) 1 KB 671.,** என்ற வழக்கில் நிலத்தைச் சுற்றி சுவர் எழுப்புவது நிலத்தை இயல்பான பயன்படுத்தல் ஆகும் எனக் கூறப்பட்டது. **Hillier Vs Air Ministry, (1962) CLY 2084.,** என்ற வழக்கில், நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த உயர் மின்னழுத்த நிலத்தடிக் கம்பியிலிருந்து (high-voltage cable) வெளியேறிய மின்சாரம் பாய்ந்ததால் பசுக்கள் இறந்ததற்கு, கடும் பொறுப்பு விதியின்கீழ் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நிலத்தை இயல்புக்கு மாறாக பயன்படுத்துதல் என்பது இடத்திற்கு இடம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடும். இப்பொருளில் நோக்கும்போது,

இந்தியாவில் நிலத்தின் இயல்புக்கு ஏற்ப பயன்படுத்தல் என்று கருதப்படும் ஒன்று, இங்கிலாந்திலோ அல்லது வேறிடங்களிலோ நிலத்தின் இயல்புக்கு அல்லாத பயன்படுத்தல் என்பதாகலாம். **N.Narayanan Bhattathiripad Vs Travancore. Govt. AIR 1956 Trav. Co. 225.,** என்ற வழக்கை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். இவ்வழக்கில், வாதி, தன்னுடைய நெல் வயல்களில் தேங்கியிருக்கும் அதிகமான தண்ணீரை வெளியேற்றுவதற்கான ஓர் வெளிப்புற வழியாக அருகிலிருந்த ஓடையை பயன்படுத்தி வந்தார். மாநில அரசு, வாதி உள்ளிட்ட ஓடையை ஒட்டியுள்ள நில உரிமையாளர்களின் நீர்ப்பாசன நோக்கத்திற்காக, தண்ணீரை சேமித்து வைப்பதற்காக ஓடையின் குறுக்கே ஓர் அணையைக் கட்டியது. வழக்கத்திற்கு மாறான கடுமையான மழைப்பொழிவின் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் முழுதும், அணையின் மதகுகளின் வழியே வேகமாக உடனடியாக வெளியேற முடியாததன் காரணமாக மேற்பரப்பில் வழிந்தோடிய நீர், வாதியின் நெல் வயல்களுக்குள் புகுந்து நிரம்பியதால் வாதிக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. எனவே வாதி, அரசு அணையைக் கட்டியதால், கடும் பொறுப்பு நிலை விதியின்கீழ் தனக்கு இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்தார். வாதியின் இசைவு மற்றும் தெய்வச் செயல் எனும் இரண்டு எதிர்வாதங்களின் அடிப்படையில் மட்டுமின்றி, கடும் பொறுப்புநிலையைப் பொருந்தச் செய்யும் நிலத்தை இயல்புக்கு மாறாக பயன்படுத்தல் என்ற நிபந்தனை இல்லாதிருப்பதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. வினாவிற்குரிய அணை கட்டப்பட்டதன் நோக்கம், வாதி உள்ளிட்ட பிற நில உரிமையாளர்களின் நீர்ப்பாசன தேவைக்காகவே என்றும், இந்தியச் சட்டம் நீண்ட நெடுங்காலமாக அணையைக் கட்டி நீரைத் தேக்குவது சமுதாய நலனுக்கு அடிப்படையான ஒன்று என்பதுடன் இயல்பான பயன்படுத்தலாக அங்கீகரித்துள்ளது என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டு வாதியின் மனுவை தள்ளுபடி செய்தது.

ஆ(3) தெய்வச் செயல் (Act of God): மனித சக்தியால் தடுத்து நிறுத்த முடியாததும் உணர்ந்து கொள்ள முடியாததுமான இயற்கையின் பேராற்றலினால் விளையும் இழப்புகளுக்கு பிரதிவாதியை பொறுப்பாக்க முடியாத அத்தகைய நிலையே தெய்வச் செயல் என்பதாகும். ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் கடும் பொறுப்பு விதியை உருவாக்கிய நீதிபதி பிளாக்பர்ன், கடும் பொறுப்பு நிலைக்கு தெய்வச் செயல் ஓர் விதிவிலக்காகும் என்பதை வெளிப்படையாக அங்கீகரித்துள்ளார். தெய்வச் செயல் எனும் எதிர்வாதம் தொடர்பான குறிப்பிடத்தக்க வழக்கு **Nichols Vs Marsland, (1876) 2 Ex D1.,** என்ற வழக்காகும் (காண்க பக்கம் எண்73)

ஆ(4) மூன்றாம் தரப்பின் தவறான செயல் (Wrongful act of third party): மூன்றாம் நபரின் தவறானச் செயல் எனும் எதிர்வாதத்தைப் பயன்படுத்த பிரதிவாதி பின்வரும் மூன்று முக்கியக் கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும்;

(i) வெளியேற்றம், மூன்றாம் நபரின் தவறானச் செயலால் நிகழ்ந்தது;

(ii) அந்நபரை (மூன்றாம் நபரை) பொறுத்தமட்டில், பிரதிவாதி கட்டுப்படுத்தும் அதிகாரம் எதனையும் கொண்டிருக்கவில்லை; மற்றும்;

(iii) மூன்றாம் நபரின் குறுக்கீட்டினைத் தவிர்ப்பதற்கு அவசியமான நியாயமான கவனம் மற்றும் எச்சரிக்கையை பிரதிவாதி மேற்கொண்டார்.

Box Vs Jubb, (1879) 4 Ex. D 76., என்ற வழக்கில் பிரதிவாதியின் நீர்த்தொட்டியிலிருந்து நீர் வழிந்தோடியதற்கு அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் செயல் காரணமாக இருந்ததால் பிரதிவாதி பொறுப்பாக மாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதேபோன்று **Rickards Vs Lothian, (1913) AC 263.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் கட்டிடத்திலிருந்த கழிவுநீர்த் தொட்டியின் குழாயை அடையாளம் தெரியாத மூன்றாம் நபர் தீங்கெண்ணத்துடன் அடைத்ததால், வாதியின் கட்டிடத்தினுள் நீர் வழிந்தோடி ஏற்படுத்திய இழப்பிற்கு பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும், பிரதிவாதியால், மூன்றாம் நபரின் செயல் முன்னறியத்தக்கதாகவும், இழப்பை தவிர்க்கக்கூடியதாகவும் இருப்பின், அவர் உரிய கவனத்துடன் செயல்பட்டு ஏற்படவிருக்கும் இழப்பைத் தடுக்க கடமை கொண்டுள்ளார்; தவறும் பட்சத்தில் பொறுப்பாகுவார் என **Northwestern Utilities Ltd., Vs London Guarantee and Accident Co., (1936) AC 108.,** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டது. **Perry Vs Kendricks Transport Ltd., (1956) 1 All ER 154 CA.,** என்ற வழக்கில், இரண்டு இளவர்களின் பொறுப்பற்ற குறுக்கீடு மற்றும் விஷமத்தனமான செயல்களே உண்மையில் வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு காரணமாக இருந்ததால் அவை பிரதிவாதியை பொறுப்பு நிலையிலிருந்து விலக்குவதற்கு போதுமானது எனக் குறிப்பிடப்பட்டது.

ஆ(5) வாதியின் சொந்த தவறு (Plaintiff's own fault): வாதியின் சொந்த தவறினால் பொருள் வெளியேறியிருந்து மற்றும் அதனால் அவருக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டிருப்பின் ரைலாண்ட்ஸ் வழக்கின் விதி பொருந்தாது. இதனை வேறுமுறையில் குறிப்பிடுவது எனில், வாதியின் சொந்த தவறு என்பதை பிரதிவாதி கடும் பொறுப்பு நிலைக்கு ஓர் எதிர்வாதமாக பயன்படுத்த முடியும். **Dunn Vs Birmingham Canal Co., (1872) LR QB 244.,** என்ற வழக்கில், ஓர் நபர் கண்களை திறந்து வைத்துக் கொண்டும், தனது செயலின் விளைவால் ஏற்படக்கூடிய நியாயமான விளைவுகளை முன்னறிந்தும் வேண்டுமென்றே செய்யப்பட்டதால் ஏற்பட்ட எந்தவொரு இழப்பு அல்லது ஊறுகளுக்காகவும், சட்டப்படி எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டிட முடியாது எனக் குறிப்பிடப்பட்டது. **Ponting Vs Noaks, (1894) 2 QB 291.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் நில எல்லைக்குள் இருந்த நச்சு மரத்தின் இலைகளை, வாதியின் குதிரை தலையை நீட்டி முன்பற்களால் இழுத்து கடித்து தின்றதால் உயிரிழந்தது. வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு குதிரை, எல்லைக்கு வெளியே தலையை நீட்டியதும் மற்றும் அபாயகரமான பொருளின் வெளியேற்றம் இல்லாததாலும், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Marlor Vs Bale, (1909) 16 TLR 239., என்ற வழக்கில், இலாயத்தில் முறையாகக் கட்டப்பட்டிருந்த பிரதிவாதியின் சில வரிக்குதிரைகளை வாதி அடித்ததால் கோபமுற்று அது தாக்கியதில் வாதிக்கு காயங்கள் ஏற்பட்டது. நீதிமன்றம், வாதி இழப்பீடு பெறுவதற்கு தகுதி கொண்டிருக்கவில்லை என தீர்ப்பளித்தது.

ஆ(6) வாதியின் இசைவு (Consent of the plaintiff): 'இசைந்தேற்பது தீங்காகாது' என்பது சட்டத்தின் விதியாகும். பிரதிவாதியின் நிலத்தினுள் அபாயகரமான பொருள்கள் சேருவதற்கு வாதி சம்மதம் தெரிவித்திருப்பின், அதன் வெளியேற்றத்தினால் ஏற்படும் இழப்பு அல்லது ஊறுகளுக்காக வழக்கிட முடியாது. எடுத்துக்காட்டாக, அடுக்குமாடிக்கட்டிடத்தின் பல தளங்களில் இருப்பவர்களின் பொதுவான நலனுக்காக நீர்த்தொட்டியில் உள்ள நீர், பிரதிவாதியின் கவனக்குறைவு ஏதுமின்றி வெளியேறினால் அல்லது கசிவு ஏற்பட்டால் அவர் பொறுப்பாகமாட்டார். **Cartstairs Vs Taylor, (1871) LR 6 Ex. 217.,** என்ற வழக்கில் அபாயத்தின் ஆதாரம் (source of danger) வாதி மற்றும் பிரதிவாதியின் பொதுவான நலனுக்கென பராமரிக்கப்படுவதாக (எடுத்துக்காட்டாக, நீர்த்தொட்டி, வாயுக்குழாய் மின்சார இணைப்பு, படிக்கட்டுகள் போன்றவையாக) இருப்பின் கடும் பொறுப்பு விதி பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டது. இருப்பினும், பிரதிவாதி திரைப்படச் சுருள்களை கழுவும் தனது சொந்த ஆதாயத்திற்காக அளவுக்கு அதிகமான தண்ணீரை தனது இடத்தில் கொண்டிருந்தால் இவ்விதிவிலக்கு பொருந்தாது என்பதுடன் அவற்றின் வெளியேற்றத்தினால் ஏற்படும் விளைவுகளுக்கும் பொறுப்பாகுவார் என **Western Engraving Co. Vs Film Laboratories Ltd., (1936) 1 All ER 106.,** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டது.

69. கடும் பொறுப்பு நிலையானது எவ்வாறு தற்போதைய சூழ்நிலைகளை சமாளிக்க முடியாமல் உள்ளது? விளக்கவும். (How the rule of strict liability is unable to meet the present needs? Explain.) - May-2019(v).

கடும் பொறுப்பு நிலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் முழுமையாக வளர்ச்சி அடையாத 19-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகும். எனவே இன்றைய நவீன காலத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள போதுமானதாக இல்லை. இக்கருத்திற்கு கடும்பொறுப்பு நிலையில் உள்ள பின்வரும் குறைவுகளை ஆதரவாக் குறிபபிடலாம்.

(1) கடும் பொறுப்பு நிலையில், பிரதிவாதியின் தரப்பில் தவறு, கவனக்குறைவு ஆகியவை இல்லாமல் இருந்தாலும் அல்லது அவசியமான முன்னெச்சரிக்கை பின்பற்றப்பட்டது என்றாலும்கூட பொறுப்பாகுவார் என்பது இதன் கடுமையை எடுத்துரைப்பதாக இருந்தாலும், இவ்விதிக்கு உள்ள பல விலக்குகள் (exceptions),

இத்தகைய கடும் பொறுப்பு நிலையின் வலிமையைக் குறைப்பதாக அல்லது நீர்த்துபோகச் செய்வதாக அல்லது முழுமையற்றதாகச் செய்கிறது.

(2) ஓர் சட்ட விதியை முறையாகப் பொருந்தச் செய்ய, அது சீராகவும் தெளிவாகவும், நுட்பமாகவும் உறுதித்தன்மை கொண்டதாகவும் இருப்பது அவசியமாகும். ஆனால் கடும்பொறுப்பு நிலையை சுமத்துவதற்கான நிபந்தனைகள் தெளிவற்றும் உறுதித்தன்மை இல்லாமலும் உள்ளது. குறிப்பாக இவ்விதியில் பயன்படுத்தப்பட்டுள்ள 'வெளியேறத்தக்க' (தப்பிச் செல்லத்தக்க) மற்றும் 'ஊறு விளைவிக்கத்தக்க' (likely to escape and do harm) என்ற சொற்றொடரே உண்மையில் பல்வேறு வழக்குகளில் முடிவு செய்வதற்கான நிபந்தனையாக உள்ளது. இருப்பினும் இவ்விதியின் கூடுதல் பகுதியாக இதனைச் சேர்த்தது தேவையற்ற சிரமங்களை புகுத்துவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, பிரதிவாதி தன்னுடைய நிலத்தில் கால்நடையை வளர்ப்பது அல்லது தன்னுடைய கட்டிடத்தில் கழிவுநீர் வெளியேற்று வசதியை கொண்டிருப்பது தன்னுடைய சொத்தை இயல்பாகப் பயன்படுத்துவதாகும். ஆனால் கால்நடை தப்பிச் சென்று அல்லது கழிவுநீர் வெளியேறி பக்கத்திலுள்ள நிலத்தினுள் சென்றால் பிரதிவாதி இவ்விதியின்படி பொறுப்பாகுவார்.

இவ்விதியில் நீதிபதி பிளாக்பர்ன் குறிப்பிட்டுள்ள 'இயல்பான' (natural) என்றச் சொல்லும் மேல்முறையீட்டில் கேர்ன்ஸ் பிரபு கடும் பொறுப்பு நிலைக்கு கூடுதல் தகுதியாக குறிப்பிட்ட 'நிலத்தின் இயல்புக்கு மாறான பயன்பாடு' (non-natural use of land) என்றச் சொற்றொடரும் மேலோட்டமாகவும் தெளிவற்றும் உள்ளது. ஆங்கில நீதிமன்றங்களே இதற்கு மாறுபட்ட அல்லது முரணாகப் பொருளமைவு (construction) செய்துள்ளது. பிராம்வெல் பிரபு, **Nichols Vs Marshland, (1875) LR 10 Ex 260.,** என்ற வழக்கில், சமுதாயத்திற்கு ஆதாயம் அளிக்கும் ஓர் நீர்த்தேக்கத்தை நிலத்தில் கொண்டிருப்பது சொத்தை நியாயமாகப் பயன்படுத்தல் என்பதில் உள்ளடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்திய உச்சநீதிமன்றம் **Punjab Vs Modern Cultivators, AIR 1965 SC 17.,** என்ற வழக்கில், தேசத்தின் உயிர்த்துடிப்பிற்கு அவசியமான கால்வாய் நீர்ப்பாசனமுறை நிலத்தின் சாதாரண பயன்பாட்டுக்கு உட்பட்டதே அன்றி அசாதாரண பயன்பாடு அல்ல என்று குறிப்பிட்டிருப்பது கடும்பொறுப்பு நிலையின் அடிப்படைக்கு மாறானதாகும். ஏனெனில் நிலத்தினை இயல்பாகப் பயன்படுத்தல் என்பது இடத்திற்கு இடம் மாறுபடுவதாகும். பொல்லாக் (Pollock CB), **Ferror Vs Nelson, (1885) 15 QBD 258.,** என்ற வழக்கில், ஒரு நபர் தனது நிலத்தில் குறிப்பிட்ட நியாயமான எண்ணிக்கையில் கொண்டிருக்கும் விளையாட்டு பறவைகள், அவை பக்கத்து நிலத்துக்காரரின் இடத்திற்குச் சென்று அங்கு விளைந்துள்ள சோளத்தை உண்டாலும்கூட, தன்னுடைய நிலத்தை இயல்பான முறையில் பயன்படுத்தியதாகவே ஆகும் என்று கருத்து தெரிவித்துள்ளார். **Stearn Vs Prentice, (1919) 1 KB 394.,** என்ற வழக்கில், உரம் தயாரிப்பதற்காக பிரதிவாதி குவித்து வைத்திருக்கும் எலும்புகள் காரணமாக, எலிகள் அங்கு வருவதாகவும் அவை அங்கிருந்து வெளியேறி தனது நிலத்தினுள் நுழைந்து சோளத்தை உண்டு

இழப்பை ஏற்படுத்துவதாகவும் முறையீடு செய்தார். நீதிமன்றம் எலிகள் ஆபத்தான தன்மையைக் கொண்டவை என்றும், அவை பிரதிவாதியின் நிலத்தினுள் வருவதற்கு பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றும் மேலும், பிரதிவாதி அதிகமான அளவில் எலும்புகளை வைத்திருந்தது மெய்ப்பிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு, பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் என்று தீர்ப்பளித்தது. **Cambridge Water Co. Vs Eastern Countries Leather, (1994) 2 AC 264.,** என்ற வழக்கில், தொழிற்சாலைக் கிராமத்தில் (Industrial village) உள்ள ஓர் தொழிற்சாலையில் நச்சு வேதியியல் பொருள்களை சேகரித்து வைத்திருந்தது நிலத்தின் இயல்பான பயன்பாடு என்பதனுள் அடங்கும் என்று நீதிபதி கென்னடி குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 'இயல்பான', 'நிலத்தின் இயல்புக்கு மாறான பயன்பாடு' என்பனவற்றின் மேலோட்டமான, உறுதியற்ற தன்மைக்கு மேற்குறிப்பிட்டுள்ள ஒருசில வழக்குகளே எடுத்துக்காட்டுகளாகும்.

(3) பொருளின் வெளியேற்றம் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் இழப்பு குறித்த கடும்பொறுப்பு நிலையின் நிபந்தனையும் தற்போதைய சூழ்நிலைகளுக்கு பொருந்தச் செய்ய முடியாததாகும். **Read Vs Lyons & Co. Ltd (1947) AC 156.,** என்ற வழக்கில், வெடிகுண்டு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினுள் ஏற்பட்ட வெடி விபத்தினால் அத்தொழிற்சாலையினுள் இருந்த வாதிக்கு ஏற்பட்ட ஊறுக்கு, இழப்பீடு வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. கடும்பொறுப்பு விதியைப் பொருந்தச் செய்ய அபாயகரமானப் பொருளின் வெளியேற்றம் இருக்க வேண்டும் என்பது இதற்கு காரணமாகக் குறிப்பிடப்பட்டது. இவற்றினின்று பிரதிவாதியின் நிலம் அல்லது கட்டிடத்திலிருந்து அபாயகரமானப் பொருள் வெளியேறாமல் ஆனால் நிலத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் இருப்பவர்களுக்கு (பணியாளர்களுக்கு) ஊறு விளைவித்தால், பிரதிவாதியை கடும் பொறுப்பு நிலையின்கீழ் பொறுப்புக்கு உட்படுத்த முடியாது என்று இதன் உட்கிடைப்பொருள் குறிப்பிடுகிறது. மேலும் கடும் பொறுப்பு நிலை, சொத்துகளுக்கு ஏற்படும் ஊறுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்பதும் நபர்களுக்கு பொருந்தாது என்பதை வழக்குகளின் தீர்வுகள் வெளிப்படுத்துகின்றன. இன்றைய நிலைக்கு இது முற்றிலும் பொருந்தாததாக உள்ளது.

(4) 19-ஆம் நூற்றாண்டில், கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சிலப் பணிகளை மட்டுமே அரசுகள் மேற்கொண்டிருந்தன. குறிப்பாக, அந்நியப் படையெடுப்பை தடுத்தல், உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரித்தல் நிலவரி மற்றும் குறிப்பட்ட சில நடவடிக்கைகள் சார்ந்து வரி வசூலித்தல் உள்ளிட்ட பணிகளை மட்டுமே மேற்கொண்டன. ஆனல் 20-ஆம் நூற்றாண்டில் குறிப்பாக, இரண்டாம் உலகப் போருக்குப்பின், கிட்டத்தட்ட உலகிலுள்ள அனைத்து நாடுகளும் மக்கள் நலம் பேணும் அரசாக (Welfare state) மாறியதாலும் மற்றும் 'தொட்டில் முதல் கல்லறை (சுடுகாடு) வரை' (from cradle to grave) குடிமக்களின் வாழ்க்கைக்கான அவசியமான பணிகளை அதாவது தனியாருக்கு நிகராக அனைத்து

துறைகளிலும் ஈடுபடுவதால், மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் கடமைகளைக் கொண்டுள்ளன. குறிப்பாக, இந்தியக் குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலும் (Preamble) மற்றும் பல்வேறு உறுப்புகளிலும் சமூகப் பொருளாதாரத்தை உறுதி செய்யும் கடமையைக் கொண்டுள்ள இந்தியாவிற்கு கடும் பொறுப்பு நிலை பொருத்தமானதாக இல்லை. கடும் பொறுப்பு நிலைக்கான விதிவிலக்குகள் மற்றும் இவ்விதியின் உறுதியற்ற தன்மை, அரசமைப்புச் சட்டத்தின்கீழான குடிமக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு துணைபுரிவதாக இல்லை. முக்கியமாக, கடும் பொறுப்பு நிலையின்கீழ் வழங்கப்படும் சாதாரண இழப்பீடு இன்றைய சூழலுக்கு மிகவும் பொருத்தமற்றதாக உள்ளது.

(5) வளர்ந்து வரும் நாடான இந்தியா, அபாயம் தரவல்ல பொருள்களை உற்பத்தி செய்தல், கையாளுதல் போன்ற அவசியமான கேடுகளை (necessary evils) மேற்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. நோய்களை குணப்படுத்துவதற்கான மருந்துகளின் தயாரிப்பிற்கும் வேளாண் நோக்கத்திற்கும், பல தொழில்களின் மூலப்பொருள் தேவைக்கும் மற்றும் பிற தேவைகளுக்காகவும் முக்கியமாக பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இவை அவசியமாகின்றன. அதே நேரத்தில், இத்தகைய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிற்சாலையின் அருகில் வசிப்பவர்கள் ஆகியோரின் பாதுகாப்பையும், சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் உறுதி செய்வது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எனவே வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆகிய இவ்விரண்டு காரணிகளையும் சமன் செய்யத்தக்க ஓர் பொறுப்புநிலை, இன்றைய நிலையில் ஓர் தவிர்க்கமுடியாத அவசியமாகிறது. இத்தகைய நிலையை சமாளிக்க கடும்பொறுப்பு நிலை போதுமானதாக இல்லை.

(6) சட்டம், வேகமாக மாறிவரும் சமுதாயத் தேவைகளின் அவசியங்களை நிறைவேற்றுவதாகவும், நாடு அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சிக்கு இணையாகவும் வளரவேண்டும். புதிய சூழ்நிலைகள் எழும்போதும் மற்றும் இத்தகைய புதிய சூழ்நிலைகள் விடுக்கும் சவால்களை எதிர்கொள்வதற்காகவும் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பெருமளவு தொழிற்சாலை மயமான பொருளாதாரத்தில் எழும் புதிய பிரச்சனைகளை அணுகுவதற்கு ஏற்ப நீதிமன்றம் புதிய கொள்கைகளை உருவாக்கவும் புதிய விதிகளை வகுக்கவும் வேண்டும். இத்தகைய காரணங்களின் அடிப்படையில் நோக்கும்போது, கடும் பொறுப்பு நிலை இன்றைய சூழலுக்கு பொருத்தமானதாக இல்லை. எனவேதான் உச்சநீதிமன்றம், **M.C.Mehta Vs Union of India, AIR 1987 SC 1086.**, என்ற வழக்கில் பின்வரும் முழுப்பொறுப்பு நிலை விதியை (Rule of Absolute liability) உருவாக்கியது.

முழுப் பொறுப்பு நிலை விதி (Rule of Absolute liability): (அடுத்து வரும் வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு ஆ (ii)-ல் காண்க).

70. M.C. மேத்தா – எதிர் – யூனியன் ஆஃப் இந்தியா, AIR 1987 SC 1086, வழக்கின் பொருண்மைகளையும் வழக்கில் வகுக்கப்பட்ட விதியையும் விவரிக்க (Describe the facts and the rule laid down in M.C. Mehta Vs Union of India, AIR 1987 SC 1086)

SN - 90 **முழுப்பொறுப்பு நிலை (அ) முழுப் பொறுப்பு நிலை விதி (அ) முழுப்பொறுப்புரிமை / Absolute liability or Rule of Absolute liability - May-2012 (v), Nov-2015 (v).**

விடைச்சுருக்கம்: (அ) சட்டப் பின்னணி – (ஆ) வழக்கின் பொருண்மைகள் – ஆ (i) உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புரை – ஆ (ii) முழுப் பொறுப்பு நிலை விதி – ஆ (iii) முழுப்பொறுப்பு நிலை விதியின் சிறப்பம்சங்கள்.

(அ) சட்டப் பின்னணி (Legal background):

இந்திய சட்ட வரலாற்றில் குறிப்பாக இயற்றாச் சட்ட வரலாற்றில் **M.C.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா, AIR 1987 SC 1086**, வழக்கின் தீர்ப்புரை ஓர் மைல் கல் என்றால் அது மிகையாகாது. ஏனெனில் இவ்வழக்கில்தான் உச்சநீதிமன்றம் முழுப்பொறுப்பு நிலை விதியை உருவாக்கியது. இவ்வழக்கு மற்றும் இவ்வழக்கில் வகுக்கப்பட்ட விதியின் முக்கியத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு, இவ்வழக்கிற்கு முந்தைய சட்ட நிலையை அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி நள்ளிரவு மற்றும் 3-ஆம் தேதியின் தொடக்க நேரத்தில், போபாலில் உள்ள யூனியன் கார்பைட் கார்ப்பரேஷனுக்கு சொந்தமான ஆலையிலிருந்து கசிந்த விஷ வாயுவினால் 3000-க்கும் மேற்பட்டோரின் உயிரிழப்பும் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு பாதிப்பும் ஏற்பட்டது. இதன் காரணமாக போபால் நீதிமன்றத்தில் 3500 வழக்குகளும், UCC-ன் (Union Carbide Corporation) தலைமை அலுவலகம் அமைந்துள்ள நியூயார்க் நகரில் 100 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால் 'மக்கட்கிறை' அல்லது 'நாட்டுப் பெற்றோர்' கோட்பாட்டினை (doctrine of parens patriae) பயன்படுத்தியும், போபால் விஷ வாயுக் கசிவு பேரிடர் (பரிகாரங்களை செயல்படுத்துதல்) சட்டம், 1985-ஐ இயற்றியும், இந்திய அரசு, விஷ வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டோர் சார்பான வழக்கிடும் உரிமையை தன்வசம் எடுத்துக் கொண்டது. அமெரிக்காவில் வழக்கு தொடர்ந்தால் அதிகளவு இழப்பீடு பெறமுடியும் என்பதன் காரணமாகவும் மற்றும் அமெரிக்க டாலர் மதிப்பு இந்திய ரூபாயைக் காட்டிலும் உயர்ந்த பன்னாட்டு மாற்று மதிப்பு கொண்டது என்பதன் அடிப்படையிலும் UCC நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் நியூயார்க் நகரில் வழக்கை தாக்கல் செய்தது. வழக்கிடுவதற்கான அதிகாரவரம்பு (jurisdiction) தொடர்பாக குறிப்பிடும்போது, மேற்குறிப்பிட்ட உண்மையான காரணத்தை குறிப்பிட முடியாது என்பதால், இந்திய நீதிமன்றங்கள்

பாதிக்கப்பட்டவர்களின் நலனை பாதுகாப்பதில் முதிர்ந்த நிலையை அடையவில்லை என்றும் இந்திய தீங்கியல் சட்டம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது என்றும் இந்தியா குறிப்பிட்டது. இந்திய அரசின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொண்ட நியூயார்க் நீதிமன்ற நீதிபதி கீனன் (Justice Keenan), இன்றைய நிலையில் (1986-ஆம் ஆண்டில்) இந்தியா ஓர் உலக சக்தியாக (World power) உள்ளது என்றும் அதன் நீதிமன்றங்கள் நேர்மையான மற்றும் சமமான நீதி வழங்குவதற்கான மெய்ப்பிக்கப்பட்ட தகுதியைக் கொண்டுள்ளன என வெகுவாகப் புகழ்வது போல் குறிப்பிட்டு வழக்கினை நடத்துவதற்கு நியூயார்க் நீதிமன்றம் பொருத்தமானதல்ல (forum non-convenience) என்று கூறி வழக்கினை தள்ளுபடி செய்தார்.

மேற்குறிப்பிட்ட இந்திய அரசின் கருத்து மற்றும் நீதிபதி கீனனின் கருத்து உட்கிடையாக பல பொருள்களைக் குறிப்பிடுகிறது. அமெரிக்க நீதிபதியின் கருத்தில் போபால் விஷவாயுக்கசிவு போன்று சிக்கலான வழக்குகளை விசாரித்திட இந்திய நீதிமன்றங்கள் தகுதி பெற்றுள்ளது என்றும், ஆனால் இந்திய அரசு தனது நாட்டு நீதித்துறை அத்தகைய வளர்ச்சியை அடையவில்லை என்று கருதும் பொருளும் இவற்றுள் ஒன்றாகும். எனவே இந்திய அரசு தனது நாட்டு நீதித்துறை மீது கொண்டுள்ள அவநம்பிக்கையை நீக்குவதற்கும், உலக அளவில் இந்திய நீதித்துறையின் செயல்திறனை மெய்ப்பிப்பதற்கான கடமை, உச்சநீதிமன்றத்துக்குத்தான் உள்ளது. உச்சநீதிமன்றம் தனது பொறுப்பு, கடமை மற்றும் செயல்திறனை செவ்வனே நிறைவேற்றி உலகையே இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த ஓர் புதிய கோட்பாட்டினை வகுத்த வழக்கே, **M.C.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா, AIR 1987 SC 1086** வழக்காகும்.

(ஆ) வழக்கின் பொருண்மைகள் (Facts):

1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 மற்றும் 6-ஆம் தேதிகளில், 'டெல்லி கிளாத் மில்ஸ்'-க்கு (Delhi Cloth Mills - DCM) சொந்தமான மற்றும் டெல்லியில் செயல்பட்டு வந்த ஸ்ரீராம் உணவு மற்றும் தொழிற்சாலையிலிருந்து 'ஒலியம்' (Oleum) வாயுக்கசிவு ஏற்பட்டது. அதன் விளைவாக, வழக்குரைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றவர்கள் பிறரும் பாதிக்கப்பட்டனர். டெல்லி சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம் (The Delhi Legal Aid And Advisory Board) மற்றும் டெல்லி வழக்குரைஞர் சங்கம் ஆகியவை ஒலியம் வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி, அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு- 32-ன்கீழ் உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தனர். போபால் விஷ வாயுக் கசிவிற்குப் பின் ஒரு வருடத்திற்குள் நிகழ்ந்த இரண்டாவது, கொடிய விஷவாயு வழக்கு என்பதை உச்சநீதிமன்றம் கருத்தில் கொண்டது. மேலும் இவ்வழக்கிற்கு ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் வகுக்கப்பட்ட கடும் பொறுப்பு நிலையை பொருந்தச் செய்தால், மக்கள் நெருக்கம் மிகுந்துள்ள பகுதியில் அபாயம் தரவல்ல மற்றும் உள்ளார்ந்து அபாயம் கொண்டுள்ள (hazardous and inherently dangerous) பொருள்களை தயாரிக்கும் அல்லது கையாளும் தொழிற்சாலைகள், கடும் பொறுப்பு நிலைக்கு உள்ள எதிர்வாதங்களை

முன்வைத்து பொறுப்பு நிலையில் இருந்து தப்பிக்கும் வாய்ப்புகளை மனதிற் கொண்டு ஓர் துணிச்சலான முடிவெடுக்க முடிவு செய்தது.

ஆ(i) உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புரை (Judgment of the Supreme Court): உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புரையில் குறிப்பிட்ட முக்கிய வாசகங்கள் பின்வருமாறு:

'சட்டம், வேகமாக மாறிவரும் சமுதாயத் தேவைகளின் அவசியங்களை நிறைவேற்றுவதாகவும், நாடு அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சிக்கு இணையாகவும் வளர வேண்டும். புதிய சூழ்நிலைகள் எழும்போது, அத்தகைய புதிய சூழ்நிலைகள் விடுக்கும் சவால்களை எதிர் கொள்வதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். சட்டம் தொடர்ந்து நிலையாக இருப்பதை அனுமதிக்க முடியாது. பெருமளவு தொழிற்சாலை மயமான பொருளாதாரத்தில் எழும் புதிய பிரச்சனைகளை அணுகுவதற்கு ஏற்ப புதிய கொள்கைகளை உருவாக்கவும், புதிய விதிகளை வகுக்கவும் வேண்டும். உச்சநீதிமன்றம், தனது எண்ணங்களை இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள சட்டம் அல்லது அப்பொருள் தொடர்பாக எந்தவொரு வெளிநாட்டிலும் உள்ள சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுவதை அனுமதிக்காது. வெளிநாட்டு சட்ட அமைப்பு எனும் ஆதாரத்தை பயன்படுத்தும் தேவை இனியும் அவசியமில்லை. தொழிற்சாலைப் பொருளாதாரத்துடன் சேர்ந்துள்ள உள்ளார்ந்த அபாயம் கொண்ட தொழிற்சாலைகளின் காரணமாக எழும் அசாதாரண சூழ்நிலைகள் மற்றும் எதிர்காலத்தில் எழுவதற்கு வாய்ப்புள்ள சூழ்நிலைகள் குறித்து அணுகுவதற்கு ஓர் புதிய பொறுப்புநிலை கொள்கையை உருவாக்கும் அவசியம் எழுந்தால், அது தொடர்பாக இங்கிலாந்தில் ஏதும் செய்யப்படவில்லை என்பதற்காக, அத்தகைய பொறுப்பு நிலைக் கொள்கையை உருவாக்க தயங்க வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை'– என்பதைக் குறிப்பிட்டு பின்வரும் முழுப்பொறுப்பு நிலை விதியை உருவாக்கியது.

ஆ(ii) முழுப் பொறுப்புரிமை விதி (Rule of Absolute liability): தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் உடல்நலன் மற்றும் பாதுகாப்பிற்கு, அபாயகரமான மற்றும் உள்ளார்ந்து அபாயம் கொண்ட தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தாங்கள் மேற்கொண்டுள்ள அபாயத்தன்மை கொண்ட செயலினால் சமுதாயத்திற்கு எந்தவொரு தீங்கும் விளையாது என்பதை உறுதி செய்யும் முழுமையான கடமையை (absolute duty) கொண்டுள்ளன. அபாயகரமான மற்றும் அபாயத்தன்மை கொண்ட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் கண்டிப்பாக உயர் பாதுகாப்பு தரத்துடன் நடத்தப்படுவதற்கான வசதிகளைச் செய்யும் கடப்பாட்டினையும், ஒருவேளை அத்தகைய நடவடிக்கையினால் ஊறு ஏற்படின், அந்நிறுவனம் அனைத்து நியாயமான கவனத்தையும் மேற்கொண்டது மற்றும் அந்நிறுவனத்தின் கவனக்குறைவு ஏதுமில்லை என்பதை பொருட்படுத்தாமல், அத்தகைய தீங்கிற்கு இழப்பீடு செலுத்த முழுமையான பொறுப்பு கொண்டுள்ளது. இத்தகைய பொறுப்பு நிலைக்கு

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் கடும் பொறுப்பு நிலைக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்குகள் எதுவும் பொருந்தாது.

உச்சநீதிமன்றம், பிரதிவாதிகள் ரூபாய் 20 இலட்சம் வழங்கவும் மேலும் இவ்வழக்கில் அமைத்த இரு குழுக்கள் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில் பாதுகாப்பு சாதனங்கள் பொருத்தி தொழிற்சாலையை மீண்டும் இயக்கவும் மற்றும் இது தொடர்பான பிற உத்தரவுகளையும் பிறப்பித்தது.

ஆ(iii) முழுப் பொறுப்பு நிலை விதியின் சிறப்பு அம்சங்கள் (Salient features of the Rule of strict liability): முழுப்பொறுப்பு நிலை விதியின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

(1) இவ்விதி அபாயம் தரவல்ல அல்லது உள்ளார்ந்து அபாயம் கொண்டுள்ள பொருள்கள் தொடர்பான தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும்; அதாவது இத்தகைய எல்லைக்குள் வராத தொழில் நிறுவனங்களுக்கு, ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் வகுக்கப்பட்ட கடும் பொறுப்பு விதி தொடர்ந்து பொருந்தும்.

(2) அபாயகரமானப் பொருள் ஒருவரின் நிலத்திலிருந்து மற்றொருவரின் நிலத்திற்கு வெளியேறியிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதாவது, முழுப்பொறுப்பு நிலை விதி, அபாயம் தரவல்ல பொருள்களின் வெளியேற்றத்தினல் ஊறுகளுக்கு உள்ளான, தொழிற்சாலை அல்லது கட்டிடத்திற்கு வெளியேயுள்ள நபர்களுக்கு மட்டுமின்றி தொழிற்சாலை அல்லது கட்டிடத்தினுள் உள்ள நபர்களுக்கும் பொருந்தும்.

(3) முழுப்பொறுப்பு நிலை விதி எந்த விதிவிலக்குகளுக்கும் உட்பட்டதல்ல.

(4) முழுப்பொறுப்பு விதியின்கீழ் வழங்கப்படும் இழப்பீட்டின் அளவானது, பிரதிவாதியான தொழில் நிறுவனத்தின் பரந்த தகுதியின் அளவு, நிதிநிலைத் தகுதியை (magnitude and financial capability) சார்ந்ததாக இருக்கும்.

[N.B: இவ்வழக்கின் முக்கியத்துவத்தை மாணவ மாணவியர் அறிந்து கொள்வதற்காக குறுந்தலைப்பு (அ)-வில் சட்டப் பின்னணி பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பல்கலைக்கழக தேர்வில் இவ்வினா கேட்கப்படின், இப்பகுதியை மிகவும் சுருக்கமாகக் குறிப்பிடவும் – ஆ-ர்].

71. தற்போதைய காலங்களில் கடும் பொறுப்பைவிட முழுப் பொறுப்பே முக்கியத்துவம் பெறுகிறது. அதற்கான காரணங்களை அண்மைக்கால வழக்குகளுடன் விளக்கவும். (Absolute liability is preferred to strict liability nowadays. Give reasons with latest cases) - May-2016, Nov-2019 (v).

விடைச்சுருக்கம்: (அ) கடும் பொறுப்பு விதியில் உள்ள குறைபாடுகள் – (ஆ) முழுப் பொறுப்பு நிலை விதியில் உள்ள சிறப்புக் கூறுகள் – (இ) அண்மைக்கால வழக்குகள்

(அ) கடும் பொறுப்பு விதியில் உள்ள குறைபாடுகள் (Shortcomings in the rule of Strict liability):

(வினா எண் 69-ல் குறிப்பிட்டுள்ள ஆறு குறைகளை சுருக்கமாகக் குறிப்பிடவும்).

(ஆ) முழுப் பொறுப்பு நிலை விதியில் உள்ள சிறப்புக் கூறுகள் (Salient features of Rule of Absolute liability): (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு - ஆ(iii)-ல் காண்க)

(இ) அண்மைக்கால வழக்குகள் (Recent case laws):

Jay Laxmi Salt Works (P) Ltd., Vs State of Gujarat, (1994) 4 SCC 1., என்ற இவ்வழக்கு கடல் நீரின் உப்புத்தன்மையிலிருந்து பெரும் நிலப்பரப்பை சீர்படுத்துவதற்காக மாநில அரசு அமைத்த கரையைத் தாண்டி நீர் வழிந்ததால் ஏற்பட்ட இழப்பிற்காக தொடரப்பட்டது. உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் 'நிலத்தின் இயல்பான பயன்பாட்டிற்கு அல்லாத நோக்கத்திற்காக' என்ற கடும் பொறுப்பு விதியின்கீழ் அல்லாமல், குறைபாடுள்ள திட்டத்தை வகுத்தல், கரையைக் கட்டியதில் இருந்த குறைபாடுகள்மூலம் அரசுக் கடமையை மீறியது மற்றும் கவனமின்மை என்பதன் அடிப்படையில் முடிவு செய்தது.

Indian Council For Enviro-Legal Action Vs Union of India, AIR 1996 SC 1446., எனும் சுற்றுச்சூழல் மாசுக்கேட்டிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், உச்சநீதிமன்றம் முழுப் பொறுப்பு விதியை பயன்படுத்தியது. இவ்வழக்கில் அதிக நச்சுத்தன்மைக் கொண்ட சேறுகள் (sludges) மற்றும் சுத்திகரிக்கப்படாத நச்சுத்தன்மை கொண்ட தண்ணீரை வேதியியல் தொழிற்சாலைகள் வெளியேற்றியதன் காரணமாக அவை நிலத்தினுள் கசிந்து ஊடுருவி 'பிச்ரி' என்ற கிராமத்தை வெகுவாய் பாதித்தது. கிராமத்திலுள்ள நிலங்கள் முற்றிலுமாக நச்சுத்தன்மை கொண்டதாக மாறியதால், வேளாண் சாகுபடி செய்ய முடியாமலும் மற்றும் நிலத்தடி நீர் எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது. உச்சநீதிமன்றம், முழுப்பொறுப்பு நிலை விதியின்கீழ் தொழிற்சாலைகள் பொறுப்பு கொண்டுள்ளன என்றும் எனவே அவைகளினால் நிலம், நீர் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத்தை சரி செய்வதற்கு தேவைப்படும் தொகையைப் பெற்றிட, தொழிற்சாலைகளை நடத்தும் உரிமையாளர்களின் அனைத்து சொத்துக்களை பற்றுகை (attachment) செய்யவும் உத்தரவிட்டது. இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் மேத்தா வழக்கின் முழுப்பொறுப்பு விதியை அங்கீகரித்து, 'மாசு ஏற்படுத்துவோரே அதனை சரி செய்யும் பொறுப்பு' (Polluter pays) கொண்டுள்ளதை குறிப்பிட்டது.

Klaus Mittelbachert Vs East India Hotels Ltd., AIR 1997 Del 201., என்ற வழக்கில், ஜெர்மன் நாட்டைச் சார்ந்த விமான இணை-ஓட்டியான வாதி, பிரதிவாதியின் ஐந்து நட்சத்திர உணவு விடுதியில் தங்கியிருந்தார். அவர், குளிப்பதற்காக, நீச்சல் குளத்தில் குதித்தபோது, நீச்சல் குளத்தில் தேவைப்படும் அவசியமான அளவு உயரம் வரை தண்ணீர் நிரப்பப்படாததால், அவரின் தலை

நேரடியாக நீச்சல் குளத்தின் தரைப்பகுதியில் மோதியதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு 13 வருடங்கள் கழித்து உயிரிழந்தார். டெல்லி உயர்நீதிமன்றம், குறைபாடான வடிவமைப்பு மற்றும் போதிய உயரத்திற்கு நீர் இல்லாமை ஆகியவற்றின் காரணமாக பிரதிவாதியின் உணவு விடுதி, மனிதர்களுக்கு ஊறு ஏற்படுத்தும் ஓர் பொறி (trap) போன்ற அபாயத்தன்மை கொண்ட கட்டிடமாகும் என்பதால் முழுப்பொறுப்பு விதி பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டு ரூபாய் 50 இலட்சத்தை இழப்பீடாக வழங்க உத்தரவிட்டது.

Association of Victims of Uphaar tragedy Vs. Union of India, (2000) 86 DLT 246., என்ற வழக்கில் குறுக்கு மின்னோட்டப்பாதை (சுற்று) (Short-Circuit) காரணமாக, உபார் திரையரங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் 60 பேரின் உயிரிழப்பும் 150-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு காயங்களும் ஏற்பட்டது. டெல்லி மின்சார வாரியம் முழுப்பொறுப்பு விதியின்கீழ் பொறுப்பாகும் என்று டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

M.P. Electricity Board Vs Shail Kumari, AIR 2002 SC 551., என்ற வழக்கில் ஜோகேந்திர சிங் என்ற தொழிற்சாலைப் பணியாளர் தன்னுடைய பணியை முடித்து இரவு நேரத்தில் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். மழை பொழிந்திருந்ததால் ஆங்காங்கே சாலையின் பகுதிகளில் தண்ணீரில் மூழ்கியிருந்தது. அறுந்து விழுந்திருந்த மின்னோட்டம் (current) பாய்ந்து கொண்டிருந்த மின்கம்பி கீழே இருந்தது வாதிக்கு தெரியவில்லை. அவர் அதனைக் கடந்து செல்லும்போது அக்கம்பியுடன் ஏற்பட்ட தொடர்பினால் (contact) மின்சாரம் அவரது உடலில் பாய்ந்து அவ்விடத்திலேயே உயிரிழந்தார். இது தொடர்பாக அவரது மனைவி இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், மின்சார வாரியம், எவரோ அடையாளம் தெரியாத சிலர், தமது சொத்திற்கு மின்வழிப் பாதையை சட்டத்திற்கு புறம்பாக திருப்பி விட்டுள்ளதாகவும், அவ்வாறு திருப்பி விடப்பட்ட மின்கம்பி அறுந்து விழுந்ததே வாதியின் கணவரின் உயிரிழப்பிற்கு காரணம் என்பதால், ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதிக்கு, விதிவிலக்கான 'அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் செயல்' (act of stranger) இவ்வழக்கிற்கு பொருந்தும் என்றும் வாதிட்டது. உச்சநீதிமன்றம், 'அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் செயல்' என்ற எதிர்வாதத்தை பிரதிவாதி பயன்படுத்த முடியாது ஏனெனில், வாதியின் கணவர் உயிரிழப்பிற்கு காரணமாகக் கூறப்படும் செயலை பிரதிவாதி நியாயமாக எதிர்பார்த்திருக்க வேண்டும் என்பதுடன் எவ்வாறேனும் தடுத்திருக்க வேண்டும் என்றும் வெறுமனே அடையாளம் தெரியாத நபரின் செயல் என்பதால் மட்டுமே பிரதிவாதியை பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்பட முடியாது என்பதைக் குறிப்பிட்டு இழப்பீடாக 4.34 இலட்சம் வழங்க உத்தரவிட்டது. உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் கடும் பொறுப்பு நிலைக்கு ஓர் செல்லத்தக்க எதிர்வாதமான அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் செயல் என்பதை ஏற்க மறுத்தது கவனிக்கத்தக்கதாகும்.

72. கடும் பொறுப்பு நிலைக் கோட்பாட்டினை விளக்கவும். இதனை முழுப்பொறுப்பு நிலைக் கோட்பாட்டோடு வேறுபடுத்தி தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக. (Explain the principle of Strict liability. Differenciate with the principle of Absolute liability with decided case laws) - Nov-2017 (v).

SN - 91 கடும் பொறுப்பு நிலை விதிக்கும் முழுப் பொறுப்பு நிலை விதிக்கும் இடையேயான வேறுபாடுகள் / Difference between Rule of Strict liability and Absolute liability.

விடைச்சுருக்கம்: (அ) கடும் பொறுப்பு நிலைக் கோட்பாடு - (ஆ) கடும் பொறுப்பு நிலைக்கும் முழுப்பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடுகள் (இ) வழக்குத்தீர்வுகள்

(அ) கடும் பொறுப்பு நிலைக் கோட்பாடு (Doctrine of Strict liability): [வினா எண் 67-க்கான விடையின் குறுந்தலைப்பு (அ) மற்றும் (ஆ)-வில் காண்க].

(ஆ) கடும் பொறுப்பு நிலைக்கும் முழுப்பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடுகள் (Difference between Strict liability and Absolute liability): கடும் பொறுப்பு நிலைக்கும் முழுப்பொறுப்பு நிலைக்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

(1) நிபந்தனைகள் (Conditions):

கடும் பொறுப்பு நிலையை பொருந்தச் செய்வதற்கு (i) அபாயகரமான பொருள், (ii) அதன் வெளியேற்றம்; மற்றும் (iii) நிலத்தின் இயல்புக்கு மாறான நோக்கத்திற்கு நிலத்தைப் பயன்படுத்தல் எனும் மூன்றுக் கூறுகள் இருக்க வேண்டும்.

முழுப் பொறுப்பு நிலையும் அபாயகரமானப் பொருள்குறித்து அணுகினாலும்கூட, மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைச் சார்ந்திருக்கவில்லை.

(2) கட்டிடத்திலிருந்து அல்லது நிலத்திலிருந்து அபாயகரமான பொருள் வெளியேறுதல் (Escape of dangerous thing from the premise):

கடும் பொறுப்பு விதியின் பொருந்துகைக்கு அபாயகரமானப் பொருள் நிலத்திலிருந்து அல்லது கட்டிடத்திலிருந்து வெளியேறியிருக்க வேண்டும் என்பதால், அபாயகரமானப் பொருளினால் நிலத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் இருப்பவர்களுக்கு ஏற்படும் ஊறுகள் தொடர்பான வழக்குகளுக்கு இவ்விதி பொருந்தாது. எ-டு: **Read Vs Lyons and Co. Ltd., (1947) AC 156.**

முழுப் பொறுப்பு நிலையில் அபாயகரமானப் பொருளின் வெளியேற்றம் இவ்விதியை பொருந்தச் செய்வதற்கான ஓர் நிபந்தனையாக இல்லை என்பதுடன், இவ்விதி அபாயகரமான பொருளை தயாரிக்கும் அல்லது கையாளும் தொழிற்சாலை அல்லது கட்டிடத்தினுள் இருப்பவர்களுக்கும் மற்றும் வெளியில்

இருப்பவர்களுக்கும் இடையே எந்தவொரு வேறுபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. எ-டு: **Klaus Mittelbachert Vs East India Hotels Ltd., AIR 1997 Del 201.**

(3) பொறுப்பு நிலை (Liability):

கடும் பொறுப்பு விதி, முழுமையான பொறுப்பு நிலையைக் கொண்டதல்ல. இவ்விதிக்கு பல விதிவிலக்குகள் உண்டு. இவ்விதி, பிரதிவாதியின் தரப்பிலுள்ள கவனமின்மையைச் சார்ந்திருக்கவில்லை. அதாவது பிரதிவாதி கவனக்குறைவாக இல்லாவிடினும் அவரை பொறுப்பு நிலைக்கு உட்படுத்துவதால் கடும் பொறுப்பு நிலை விதி என அழைக்கப்படுகிறது.

முழுப்பொறுப்பு விதியில், அபாயகரமானப் பொருளை தயாரிக்கும் அல்லது யைளும் தொழிற்சாலையின் உரிமையாளர், அபாயகரமானப் பொருளால் ஏற்படும் இழப்பிற்கு, அது தெய்வச் செயலாக அல்லது அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் காரணமாக இருந்தாலும்கூட பொறுப்பாகுவார். இவ்விதி கடும் பொறுப்பை மட்டும் அல்லாமல் முழுப்பொறுப்பையும் சுமத்துகிறது. இது எவ்வித விதி விலக்குகளுக்கும் உட்பட்டதல்ல. இது கடும் பொறுப்பினுக்கும் மீறிய கடும் பொறுப்பை சுமத்துவதால் முழுப்பொறுப்பு நிலை விதி என அழைக்கப்படுகிறது.

(4) விதிவிலக்குகள் (Exceptions):

கடும் பொறுப்பு நிலை விதி, தெய்வச் செயல், சட்டபூர்வ அதிகாரம், அடையாளம் தெரியாத மூன்றாம் நபரின் செயல், வாதியின் இசைவு உள்ளிட்ட பல விலக்குகளுக்கு உட்பட்டது.

முழுப்பொறுப்பு நிலை எவ்வித விலக்குகளுக்கும் உட்பட்டதல்ல.

(5) இழப்பீடு (Damages):

கடும் பொறுப்பு விதியின்கீழ் வழங்கப்படும் இழப்பீடு சாதாரண அல்லது இழப்பை ஈடுசெய்யும் இழப்பீடாகும்.

முழுப்பொறுப்பு நிலையின்கீழ் நீதிமன்றம் எச்சரிக்கை இழப்பீடும் வழங்க முடியும். இழப்பீடானது நிறுவனத்தின் பரந்ததன்மை (size) மற்றும் நிதிநிலைத் தகுதியை சார்ந்திருக்கும். பெரிய நிறுவனமாக இருப்பின் இழப்பீட்டுத் தொகையும் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்.

(இ) வழக்குத்தீர்வுகள் (Caselaws):

[முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு (இ)-ல் காண்க].

அபாயகரமான விலங்குகளை வைத்திருப்பதன் மேலான பொறுப்பு நிலை (Liability for keeping dangerous animals)

73. விலங்குகள் இழைத்த ஊறுக்கு அதன் உரிமையாளரின் பொறுப்படைவு நோக்கெல்லையை விவரிக்க. (Explain the scope of the liability of the owner of animals for the damage caused by them) - Nov-2013 (v), May-2016, May-2018 (v)

SN - 92 தெரிவுறு நிலை விதி அல்லது தெளிவுறு நிலை விதி / Scienter rule, May-2013, Nov-2015 (v), May-2016 (v), May-2019 (v).

SN - 93 வீட்டு விலங்குகள் மற்றும் கொடூர விலங்குகள் / Animals mansuetae naturae and ferae naturae Nov-2016 (அல்லது) விலங்குகளின் வகைப்பாடு / Category of animals - May-2019.

SN - 94 மூர்க்க விலங்குகள் / Animals ferae naturae - Nov-2014.

விடைச்சுருக்கம்: (அ) தெரிவுறு விதியின் கீழான பொறுப்பு நிலை – (ஆ) கால்நடைகளின் அத்துமீறலினால் எழும் பொறுப்புநிலை – (இ) தீங்கியல் சட்டத்தின்கீழான பொதுவான் பொறுப்பு நிலை

விலங்குகள் இழைத்த ஊறுக்கான அதன் உரிமையாளர்களின் பொறுப்பு நிலையை பின்வரும்மூன்று தலைப்புகளின்கீழ் குறிப்பிடலாம்:

(அ) தெரிவுறு விதயின்கீழான பொறுப்புநிலை;

(ஆ) கால்நடைகளின் அத்துமீறலினால் எழும் பொறுப்புநிலை, மற்றும்;

(இ) தீங்கியல் சட்டத்தின்கீழான பொதுவான பொறுப்புநிலை

இனி மேற்குறிப்பிட்ட வகைகளின்கீழான பொறுப்பு நிலையைக் காண்போம்.

(அ) தெரிவுறு அல்லது தெளிவுறு நிலை விதியின் கீழான பொறுப்பு நிலை (Liability under scienter rule):

'Scienter' என்ற இலத்தீன் சொல்லுக்கு 'அறிந்திருத்தல்' அல்லது 'தெரிந்திருத்தல்' (knowingly) என்று பொருளாகும். இவ்விதியின்கீழான உரிமையாளரின் பொறுப்பு நிலை, விலங்குகளின் அபாயத்தன்மையை அறிந்திருப்பதன் அடிப்படையைச் சார்ந்ததாகும். உரிமையாளர் (பிரதிவாதி) தான் பராமரித்து வரும் விலங்கு ஊறு ஏற்படுத்தக்கூடிய குணத்தைக் கொண்டது என்பதை அறிந்திருந்தாலோ அல்லது அறிந்திருக்க வேண்டும் என்றிருந்தாலோ அதனை முறையாக கட்டுப்படுத்தாவிடில், அவ்விலங்கு ஏற்படுத்தும் இழப்பு அல்லது ஊறுகளுக்கு பொறுப்பாவார்.

அ(a) விலங்குகளின் வகைப்பாடு (Category of animals): தெரிவுறு விதியின் நோக்கத்திற்காக, விலங்குகள் (i) மூர்க்க அல்லது கொடூர விலங்கு அல்லது

இயல்பாகவே அபாயத்தன்மை கொண்ட விலங்குகள் (animals ferae naturae, i.e., animals dangerous by nature) மற்றும் (ii) சாதுவான அல்லது வீட்டு விலங்குகள் அல்லது தீங்கற்ற விலங்குகள் (animals mansutae naturae, i.e., animals harmless by nature) என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அ(a)(i) மூர்க்க விலங்குகள் அல்லது இயல்பாகவே அபாயத்தன்மை கொண்ட விலங்குகள் (Animals ferae naturae): சிங்கம், புலி, கரடி, யானை, வரிக்குதிரை, குரங்கு போன்ற வன விலங்குகள் பொதுவாக மனித இனத்திற்கு அபாயத்தை ஏற்படுத்துபவைகளாகும். இத்தகைய விலங்குகளின் இயல்பினைப் பற்றி அறிந்திருப்பதால் (scienter) அவ்விலங்கு தப்பிச் சென்று ஏற்படுத்தும் அனைத்து இழப்புகள் மற்றும் ஊறுகளுக்கு அதனை தன் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நபர் பொறுப்பாவார். மேலும் இத்தகைய விலங்குகள் அபாயத்தன்மை கொண்டவை என்பது ஓர் அறுதியான மற்றும் மறுக்க முடியாத அனுமானம் (conclusive and irrebuttable presumption) என்பதால், அதனை கட்டுப்பாட்டில் வைத்துள்ள நபரின் தரப்பில் உள்ள கவனக்குறைவை மெய்ப்பிக்கத் தேவையில்லை. **May Vs Burdett, (1846) 9 QB 101.,** என்ற வழக்கில், பிரதிவாதி பராமரித்து வந்த குரங்கு வாதியைக் கடித்துவிட்டது. இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில், 'மனித இனத்தை தாக்கும் மற்றும் கடிக்கும் வழக்கம் கொண்ட மற்றும் அவ்விலங்கு அக்குணத்தை கொண்டுள்ளதை அறிந்தே அதனை பராமரிக்கும் நபர், அத்தகைய விலங்கினால் தாக்குதலுக்கு உள்ளான எந்தவொரு நபரும் தொடரும் வழக்கில், அவ்விலங்கினைப் பாதுகாப்பதில் அல்லது கவனிப்பதில் அவரின் கவனக்குறைவு அல்லது தவறு பற்றி உறுதியாக ஏதும் கூறப்படாமல் இருந்தாலும்கூட முதற்பார்வையிலேயே பொறுப்பாகுவார்' என முதன்மை நீதிபதி டென்மன் (Denman CJ) குறிப்பிட்டார்.

வினாவிற்குரிய விலங்கு, இயல்பாகவே அபாயத்தன்மையைச் சார்ந்தது என்றிருந்தாலும்கூட, உண்மையில் அது நன்கு பழக்கப்படுத்தப்பட்ட அல்லது 'சர்க்கஸில்' பயிற்சி பெற்றது என்பதாலும் அல்லது அதன் மூர்க்கத்தனத்தின் காரணமாக அல்லாமல் பயத்தின் காரணமாகவே ஓர் தீங்கான செய்லைச் செய்தது என்பதும் ஓர் எதிர்வாதமாகாது. **Behrens Vs Bertram Mills Circus Ltd., (1957) 1 All ER 583.,** என்ற வழக்கில் 'சர்க்கஸ்'-ல் பயிற்சி பெற்ற பிரதிவாதிகளின் யானை ஒன்று, நாய்க்குட்டி குரைத்ததைக் கண்டு பயந்து அதனைத் துரத்தியது. நாய்க்குட்டி சாவடியை (booth) நோக்கி ஓடியதால், அதனை துரத்திச் சென்ற யானை சாவடிக்குள் நுழைந்து அதனை கீழே சாய்த்தது. அச்சாவடிக்குள் இருந்த வாதிக்கு உடலளவில் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும் மன அதிர்ச்சிக்கு உள்ளானதன் காரணமாக ஒரு வாரம் படுக்கையில் இருக்க வேண்டியதாயிற்று. இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், யானை நன்கு பயிற்சி பெற்றது என்றும், மிகவும் சாதுவானது என்றும் பயத்தினால் சாவடியை கீழே சாய்த்ததே தவிர மூர்க்கத்தனத்தினால் அல்ல என்றும் பிரதிவாதிகள்

தரப்பில் வாதிடப்பட்டது. யானை நன்கு பழக்கப்படுத்த ஒன்று என்றாலும் அது மூர்க்க விலங்கு என வகைப்படுத்தப்பட்டிருப்பதால் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அனைத்து சூழ்நிலைகளிலும் யானையை மூர்க்க விலங்குகள் என்ற பட்டியலில் சேர்ப்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தியாவில் பல்வேறு விழாக்களின்போது யானைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆலயங்களில் யானைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சிறப்பாக பராமரிக்கப்படுகிறது. சில வெளிப்படையான முன்னெச்சரிக்கைக்கு உட்பட்டு ஓர் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகிறது. எனவே ஓர் யானை ஏற்படுத்தும் முன்னறியமுடியாத இழப்பிற்கு அதனைப் பராமரிப்போர் பொறுப்பாகாமலும் போகலாம். **Dr. M.Mayi Gowda Vs State of Karnataka, II (1996) CPJ 307 (Karn).**, என்ற வழக்கில், 07.01.1992-ம் தேதியன்று இரவு சுமார் 8 மணியளவில், முறையீட்டாளர் (complainant) மற்றும் அவரின் குடும்பத்தைச் சார்ந்த ஐந்து குழந்தைகள், மைசூர் தசரா காட்சியக மைதானத்தில் யானையின்மீது அமர்ந்து பல சுற்றுகள் சவாரி செய்தனர். பின்னர் யானையின் மீதிருந்து இறங்கும்போது, கூட்ட நெரிசலைக் கண்டு மிரண்ட யானை முன்னோக்கி ஓடியதால் முறையீட்டாளர் தரையில் தூக்கியெறியப்பட்டார். இதன் காரணமாக ஏற்பட்ட பலத்த காயங்களினால் முறையீட்டாளரின் இரு கண்களின் பார்வையும் பறிபோனது. முறையீட்டாளர் ஒரு மருத்துவராவார். அவர் தனது பார்வையிழப்பிற்கு ரூபாய் 9,99,000/-ஐ இழப்பீடாக வழங்கக் கோரி வழக்கு தொடர்ந்தார். முறையீட்டாளர் மற்றும் அவரின் குடும்பத்தைச் சுமந்து சென்ற பெண் யானை 13 வருடங்களாக அத்தகைய சவாரி மற்றும் திருவிழாக்களில் பங்கு பெற்றதாகும். மேலும் அந்த யானை திரைப்படத்தில் நடித்திருப்பதுடன் பல்வேறு சமய விழாக்களிலும், முக்கிய விருந்தினர்களின் வரவேற்பு நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்பட்டதாகும். நீதிமன்றம் சவாரியை ஏற்பாடு செய்த எதிர்மனுதாரரின் தரப்பில் கவனக்குறைவு ஏதுமில்லை என்றும், விபத்திற்கான காரணம் அசாதாரணமான மற்றும் துரதிருஷ்டவசமான யானையின் நடத்தையே என்பதால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றும் தீர்ப்பளித்தது.

அ(a) (ii) சாதுவானத் தன்மை கொண்ட விலங்குகள் அல்லது வீட்டு விலங்குகள் (Animals mansuetae naturae): இவ்வகையில், குதிரை, ஒட்டகம், மாடு, கழுதை, நாய், பூனை, முயல் உள்ளிட்டவைகள் அடங்கும். பொதுவாக இவ்வகை விலங்குகள் மனித இனத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவைகள் அல்ல. இருப்பினும், இவ்வகை விலங்குகளில் ஏதேனுமொன்று மனிதனுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் குணத்தை பெற்றிருக்கலாம். அத்தகைய விலங்கு மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வரையில், அது சாதாரண வீட்டு விலங்கு வகையைச் சார்ந்ததாகவே தொடர்ந்திருக்கும். ஆனால் ஆபத்தை ஏற்படுத்தும் குணத்திற்கான அடையாளத்தை வெளிப்படுத்தியுவுடன் அது வீட்டு விலங்கு என்ற பட்டியலில் இருந்து மூர்க்க விலங்கு எனும் வகையைச் சார்ந்ததாகக்

கருதப்படும் என்பதுடன் அதன் உரிமையாளர் அவ்விலங்கு ஏற்படுத்தும் இழப்பு அல்லது ஊறுகளுக்கு பொறுப்பாவார். எனவே இவ்வகையைச் சார்ந்த விலங்குகள் இழைத்த இழப்புகள் அல்லது ஊறுகளுக்கு பிரதிவாதியை அல்லது அதனை தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் அதன் உரிமையாளரை பொறுப்பேற்கச் செய்வதற்கு பின்வரும் இரண்டு பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்:

(1) வினாவிற்குரிய விலங்கு, அவ்விலங்கு சார்ந்த இனத்தின் பொதுவான இயல்புக்கு மாறாக ஆபத்தை ஏற்படுத்தும் குணத்தைக் கொண்டிருந்தது. மற்றும்;

(2) உண்மையில், அவ்விலங்கு ஆபத்தை ஏற்படுத்தும் குணம் கொண்டிருந்ததை பிரதிவாதியும் அறிந்திருந்தார்.

Buckle Vs Holmes, (1926) 2 KB 125., என்ற வழக்கில், பிரதிவாதியின் பூனை, வாதியின் நிலத்தினுள் நுழைந்து, வாதியின் பதிமூன்று புறாக்களையும் இரண்டு கோழிகளையும் கொன்றது. பூனை அதன் இனத்திற்கே உரிய இயல்பான உணர்வையே பின்பற்றியது என்பதாலும், இயல்புக்கு மாறான அசாதாரண அபாயத்தன்மை ஏதுமில்லாததாலும், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Hudson Vs Roberts, (1851) 6 Ex. 697.**, என்ற வழக்கில், பிரதிவாதியின் எருது, சாலையில் சென்று கொண்டிருந்த வாதி அணிந்திருந்த சிவப்பு நிற கைக்குட்டையைக் கண்டவுடன் மிரண்டு தாக்கியது. முன்பே ஒருமுறை எருது அத்தகைய இயல்பை வெளிப்படுத்தி இருந்ததை பிரதிவாதி அறிந்திருந்தார். எனவே நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. இதேபோன்று, **Read Vs Edwards, (1864) 17 CBNS 245.**, என்ற வழக்கில் பிரதிவாதியின் நாய், வாதியின் கோழிகளை துரத்திச் சென்று கொன்றது. முன்னரே சில நேர்வுகளில் அந்நாய் கோழிகளை துரத்திச்சென்று கொன்றுள்ளதாலும், அதன் அசாதாரண இயல்பைப்பற்றி பிரதிவாதி அறிந்திருந்தார் என்பதன் அடிப்படையிலும் பொறுப்பாகுவார் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Osborne Vs Chocqueel, (1940) 1 KB 687., என்ற வழக்கில், வீட்டு விலங்கு மனித இனத்திற்கு எதிராக ஒருமுறை தனது மூர்க்கத்தனத்தை வெளிப்படுத்தி இருந்தாலும், அது தனது இயல்புக்கு மாறான குணத்தைக் கொண்டிருப்பதைப்பற்றி அதன் உரிமையாளர் அறிந்து கொண்டதற்கு போதுமானதாகும் எனக் கூறப்பட்டது. **Baker Vs Snell, (1908) 2 KB 352.**, என்ற வழக்கில், நாயின் மூர்க்கத்தன்மை பற்றி அதன் உரிமையாளரான பிரதிவாதிக்குத் தெரியும். நாயை பராமரிப்பதற்காக பிரதிவாதியால் நியமிக்கப்பட்டிருந்த பணியாளர், பிரதிவாதியின் பெண் பணியாளரை (வாதி) தாக்கும்படி நாயைத் தூண்டியதால், அது வாதியின்மீது பாய்ந்து கடித்தது. நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாகுவார் எனத் தீர்ப்பளித்தது.

(ஆ) கால்நடை அத்துமீறலினால் எழும் பொறுப்புநிலை (Liability for cattle trespass):

முற்காலத்தில் கால்நடை அத்துமீறி மற்றொருவரின் நிலத்தினுள் சென்றால் அதன்பொருட்டு பாதிக்கப்பட்ட நிலத்தின் உடைமையாளர் அத்துமீறல் நீதிப்பேராணையின்கீழ் வழக்கு தொடர முடியும். முதலில் அத்தகைய நடவடிக்கைகள், கால்நடைகளை பராமரிப்பவர் வேண்டுமென்றே தனது விலங்கின் மூலம் செய்யப்படும் அத்துமீறல்களுக்கு மட்டுமே பொருந்தச் செய்யப்பட்டது. பின்னர் அது தப்பிச் சென்று சேதம் விளைவிக்கும் நேர்வுகளுக்கும் பொருந்தச் செய்யப்பட்டது. அத்தகைய நடவடிக்கைக்கு 'உமக்கு அருகில் இருப்பவருக்கு ஊறு விளைவிக்காத வகையில் உமது சொத்தை பயன்படுத்துவாயாக' (sicutere tuo at alienum non laedum - i.e., so use your own property as not to injure your neighbour) எனும் விதி அடிப்படையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

கால்நடை உரிமையாளர், தன்னுடைய கால்நடை மற்றொருவரின் நிலத்தினுள் அத்துமீறி நுழைவதற்கு தெரிவுறு விதியின் கீழாக மட்டுமில்லாமல், கடும் பொறுப்பு நிலையின் கீழாகவும் பொறுப்பாகலாம். இத்தகைய நேர்வுகளில், கால்நடையின் ஆபத்தை விளைவிக்கும் குணம் பற்றி அதன் உரிமையாளர் அறிந்திருந்தாரா அல்லது இல்லையா என்பதை மெய்ப்பிக்காமல் இருந்தாலும்கூட பொறுப்பாகுவார். பிரதிவாதியின் (உரிமையாளர்) தரப்பில் கவனக்குறைவு இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் அவசியமும் இல்லை. கால்நடை என்பது, எருதுகள், பசுக்கள், ஆடுகள், பன்றிகள், கழுதைகள் மற்றும் கோழிகளை உள்ளடக்கும். ஆனால் நாய்கள் மற்றும் பூனைகள், கால்நடைகள் என்பதனுள் உள்ளடக்கப்படவில்லை என்பதால், நாய்கள் மற்றும் பூனைகள் பொறுத்து கால்நடை அத்துமீறல் என்பது இருக்காது.

கால்நடை அத்துமீறலின் நேரடி விளைவுகளுக்கு அதன் உரிமையாளர் பொறுப்பாவார். **Theyer Vs Purnell, (1918) 2 KB 333.,** என்ற வழக்கில், சொறி பிடித்திருந்த பிரதிவாதியின் ஆடுகள் வாதியின் நிலத்தினுள் அத்துமீறி நுழைந்ததன் காரணமாக, வாதியின் ஆடுகளுக்கும் சொறி பரவியது. இதன் காரணமாக அனைத்து ஆடுகளும் அரசின் காவலில் வைக்கப்பட்டது. தன்னுடைய ஆடுகளுக்கு சொறி பிடித்திருப்பது பற்றி பிரதிவாதி அறிந்திராமல் இருந்தாலும், அவரின் ஆடுகள் அத்துமீறியதன் இயல்பான விளைவாகவே வாதியின் ஆடுகளுக்கும் சொறி பரவியதால், வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கால்நடை அத்துமீறலுக்கு, நிலத்தை உடைமையில் கொண்டிருப்பவர் மட்டுமே வழக்கிட முடியும். உடைமையாளரின் குடும்ப உறுப்பினர், விருந்தாளிகள், பணியாட்கள் உள்ளிட்டோர், கால்நடை அத்துமீறலினால் பாதிக்கப்பட்டால் அவர்கள் தெரிவுறு நிலை விதி அல்லது கவனமின்மை என்பதன்கீழ் வழக்கிட முடியுமே தவிர கால்நடை அத்துமீறல் என்பதன் பேரில் வழக்கிட முடியாது. **Cox Vs Burbidge, (1963) 13 CBNS 430.,** என்ற வழக்கில் நெடுஞ்சாலையில்

சென்று கொண்டிருந்த குழந்தையை (வாதி) அத்துமீறிச் சென்ற பிரதிவாதியின் குதிரை உதைத்து காயப்படுத்தியது. நீதிமன்றம், அந்நெடுஞ்சாலை அமைந்துள்ள நிலத்தின் உரிமையாளரே வழக்கிடமுடியும் என்றும், குழந்தை வெறுமனே நெடுஞ்சாலையை பயன்படுத்தியவர் என்பதால், பிரதிவாதி குதிரையின் மூர்க்க குணம் பற்றி அறிந்திருந்தால் அல்லது அவர் கவனக்குறைவாக இருந்தது மெய்ப்பிக்கப்பட்டாலேயொழிய பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது.

ஆ(1) கால்நடை அத்துமீறல் சட்டம் (Cattle Trespass Act): (காண்க பக்கம் எண் 154)

(இ) தீங்கியல் சட்டத்தின்கீழான பொதுவான பொறுப்பு நிலை (General liability under tort law):

விலங்குகளின் மூலமாக பல்வேறு தீங்குகளைப் புரிய முடியும். கட்டிடத்தில் அதிக எண்ணிக்கையிலான நாய்களை வைத்திருப்பதன் மூலம் அருகில் வசிப்பவர் தனது சொத்தை அமைதியான முறையில் அனுபவிப்பதில் நியாயமற்ற குறுக்கீடு செய்ய முடியும். இதேபோன்று பன்றிகளின் துர்நாற்றம் அல்லது பக்கத்து வீட்டை ஒட்டி குதிரை இலாயம் அமைப்பதன் மூலம் அல்லது விலங்குகளின் மூலமாக வழியுரிமைக்கு இடையூறு விளைவிப்பதன் மூலம் தொந்தரவுகள் ஏற்படுத்த முடியும். வழியில் செல்பவருக்கு எதிராக நாயை ஏவிவிட்டு தாக்க முனைதல் அல்லது தாக்குதல் தீங்கும், நெடுஞ்சாலையில் விலங்குகளை முறையாக கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளாததன்மூலம் கவனமின்மைத் தீங்கும் செய்யப்பட முடியும். எவ்வாறிருப்பினும் இத்தகைய நேர்வுகளில் விலங்குகள் புரிந்த தீங்கை, அதன் உரிமையாளரே நேரடியாக செய்ததாகக் கருதப்பட்டு பொறுப்பு நிலைக்கு உட்படுத்தப்படுவார்.

Searle Vs Wallbank, (1947) 1 All ER 12., என்ற வழக்கில், நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள தனது நிலத்தில் வீட்டு விலங்குகளை பராமரித்து வருபவர்கள், அவ்விலங்குகள் நெடுஞ்சாலையில் திரிவதால், அந்நெடுஞ்சாலையை பயன்படுத்துபவருக்கு ஏற்படும் ஊறுகளுக்கு பொறுப்பாகமாட்டார் எனக் கூறப்பட்டது. இவ்வழக்கில் நெடுஞ்சாலையில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வாதியின்மீது, பிரதிவாதியின் குதிரை, அவரின் கவனக்குறைவு ஏதுமின்றி, நிலத்திலிருந்த வேலியின் குறுகிய இடைவெளியில் இருந்து வெளியேறி வாதியின்மீது மோதிக் கீழே தள்ளிக் காயப்படுத்தியது. நீதிமன்றம், பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் எனத் தீர்ப்பளித்தது. இருப்பினும் இவ்விதி பின்வரும் விலக்குகளுக்கு உட்பட்டது.

முதலாவதாக, நெடுஞ்சாலையில் செல்லும் நபர், தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் ஒரு விலங்கை கொண்டிருப்பின், அதன்மீது நியாயமான கட்டுப்பாடு செலுத்துவதில் கவனக்குறைவாக இருந்தால் பொறுப்புக்கு உள்ளாவார். நெடுஞ்சாலையில் விலங்குகள் திரிவதை தடுக்கும் கடமை இல்லை; ஆனால் அவைகளை நெடுஞ்சாலைக்கு கொணரும்போது அதனைக் கட்டுப்படுத்துவதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

Gomberg Vs Smith, (1963) 1 All ER 725., என்ற வழக்கில் பிரதிவாதி தன்னுடைய நாயை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக, அவரின் பிடியிலிருந்து தப்பித்து வாதியின் வண்டியின்மீது மோதியதில் வண்டிக்கு சேதம் ஏற்பட்டதுடன் வாதிக்கும் காயங்கள் ஏற்பட்டது. நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. இருப்பினும், பிரதிவாதியின் தரப்பில் கவனக்குறைவு ஏதும் இல்லாமலும் மற்றும் அவரால் இயன்ற அளவுக்கு கவனம் செலுத்தியும், அவரின் பிடியிலிருந்து விலங்கு விடுபட்டு சேதம் அல்லது காயம் ஏற்படுத்தினால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார். **Tillet Vs Ward, (1882) 10 QBD 17.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் வேலையாளினால் உரிய கவனத்துடன் நடத்திச் செல்லப்பட்ட எருது, வாதியின் திறந்திருந்த கதவு வழியே உள்ளே நுழைந்துவிட்டது. அதை வெளியே கொணருவதற்குள் கடைக்கு சிறிய அளவில் சேதத்தையும் ஏற்படுத்திவிட்டது. நீதிமன்றம் பிரதிவாதிகள் பொறுப்பாகமாட்டார்கள் எனத் தீர்ப்பளித்தது.

இரண்டாவதாக, தப்பித்துச் சென்ற விலங்கு இழைத்த சேதத்திற்கு தெரிவுறு விதியின்கீழும் பொறுப்புக்கு உள்ளாகலாம். எனவே ஒரு நபர் மூர்க்க விலங்கை அல்லது ஓர் வீட்டு விலங்கை, அது ஊறு ஏற்படுத்தும் குணம் கொண்டுள்ளதை அறிந்திருந்தும், அதனை தன் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், அவ்விலங்கு தப்பிச் சென்று நெடுஞ்சாலையில் ஏற்படுத்தும் சேதங்களுக்கு அவர் பொறுப்பாவார்.

ஆபத்தான கட்டிடங்களால் ஏற்படும் பொறுப்புநிலை (Liability for dangerous Premises)

74. "பார்க்க வருபவர்களின் இயல்பை பொறுத்து நில உடைமையாளரின் பொறுப்பு நிலையானது வேறுபடுகிறது எனக் கூறப்படுகிறது" அவ்வாறு பார்க்க வருபவர்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறார்கள்? அவர்கள் ஒவ்வொருவரும் குறித்த பொறுப்பு நிலை என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.("It is said that the liability of an occupier of premises varies with the character of the visitor". How are the visitors classfied and what is the liabiltiy towards each? Give illustrations) - Nov-2015.

✦ **அழைக்கப்பட்டவர், உரிமம் பெற்றவர் மற்றும் அத்துமீறி நுழைபவர் குறித்து ஓர் இடத்தின் உடைமையாளருக்கு உள்ள கடமைகளை விவாதிக்க. (The occupier of the premises has certain duties towards an invitee, licensee and trespasser. Discuss) - Nov-2014.**

விடைச்சுருக்கம்: (அ) தீங்கியல் சட்டத்தின்கீழ் கட்டிட உடைமையாளர்களின் பொறுப்பு நிலை - அ (1) ஒப்பந்தத்தின்கீழ் நுழையும் நபர்கள் குறித்த பொறுப்பு நிலை - அ (2) அழைக்கப்பட்டவர் குறித்த பொறுப்பு நிலை - அ (3) உரிமம் பெற்றவர் குறித்த பொறுப்பு நிலை - அ (4) அத்துமீறியவர்கள் குறித்த பொறுப்பு நிலை (ஆ) 1957-ஆம் ஆண்டு சட்டத்தின்கீழான பொறுப்பு நிலை

(அ) தீங்கியல் சட்டத்தின்கீழ் கட்டிட உடைமையாளர்களின் பொறுப்பு நிலை (Liability of the occupiers of premises under tort law):

கட்டிடத்தின் உடைமை மற்றும் அதன்மீதான கட்டுப்பாட்டை தன்வசம் கொண்டுள்ள நபரே உடைமையாளர் என்பவராவார். இங்கு கட்டிடம் என்பது நிலம், வீடு ஆகியவற்றுடன் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொருள்களையும், வசதிகளையும் எடுத்துக்காட்டாக படிக்கட்டுகள், தானியியங்கேணிகள் (lifts) வாகன நிறுத்துமிடம் போன்றவற்றையும் சேர்த்தே குறிக்கும். மேலும், இது கட்டுமானங்கள், மேடைகள், கப்பல்கள் ஆகாய ஊர்திகள், தொடர்வண்டிப் பெட்டிகள் (carriages) ஆகியவற்றிற்கும் பொருந்தும். மனிதப் பயன்பாடு மற்றும் உடைமையின் நோக்கத்திற்கான கட்டிடங்கள் அல்லது பிற கட்டுமானங்களின் உடைமையாளர்கள், இத்தகைய கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்களின் பாதுகாப்பான நிலையைக் குறித்து நியாயமான கவனம் காட்டக்கூடிய கடமையைக் கொண்டுள்ளனர். கட்டிடத்தினுள் வருபவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் முறையில் அதனை வைத்திருக்கும் அல்லது பராமரிக்கும் அத்தகைய கட்டிடங்களே ஆபத்தான கட்டிடங்கள் எனப்படுகிறது. இயற்றாச் சட்டம் அல்லது தீங்கியல் சட்டத்தின்கீழ், ஆபத்தான கட்டிடத்தின் உடைமையாளரின் கடமை அல்லது பொறுப்புநிலை, அக்கட்டிடத்தினுள் நுழையும் நபர்கள் பொறுத்து பின்வரும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(1) ஒப்பந்தத்தின்கீழ் நுழையும் நபர்கள் குறித்த பொறுப்பு நிலை;

(2) அழைக்கப்பட்டவர் குறித்த பொறுப்பு நிலை;

(3) உரிமம் பெற்றவர் தொடர்பான பொறுப்பு நிலை; மற்றும்

(4) அத்துமீறியவர் தொடர்பான பொறுப்பு நிலை.

மேற்குறிப்பிட்ட வகையினர் தொடர்பான கடமை இறங்கு வரிசையில் அதாவது ஒப்பந்தத்தின்கீழ் நுழைபவர் குறித்து மிக அதிகமாகவும், அத்துமீறியவர் குறித்த கடமை மிகக்குறைவாகவும் இருக்கும். இனி மேற்குறிப்பிட்ட நான்கு வகையினர் தொடர்பான உடைமையாளரின் பொறுப்பு நிலையை பின்வருமாறு காண்போம்.

அ(1) ஒப்பந்தத்தின்கீழ் நுழையும் நபர்கள் குறித்த பொறுப்புநிலை (Liability towards persons entering under a contract): ஒப்பந்தத்தின்கீழ் நுழையும் நபர்கள் பொறுத்த உடைமையாளரின் பொறுப்பு நிலை, ஒப்பந்தத்தில் உள்ள வெளிப்படையான அல்லது உட்கிடையான நிபந்தனைகளைச் சார்ந்து

இருக்கும். வெளிப்படையான அல்லது உட்கிடையான நிபந்தனைகள் இல்லாதபட்சத்தில் பொதுவான விதி என்னவெனில் அக்கட்டிடம் பாதுகாப்பாக உள்ளதென அதன் உடைமையாளர் உட்கிடையாக உத்தரவாதம் கொடுத்துள்ளார் என்பதாகும். இத்தகைய உத்தரவாதம் ஒப்பந்ததாரருக்கு மட்டுமின்றி அவரின் முகவர் மற்றும் பணியாளர்களுக்கும் பொருந்தும். இருப்பினும், நியாயமான கவனம் மற்றும் திறமையை பயன்படுத்தியும் எவராலும் கண்டுபிடிக்கப்படமுடியாத மறைந்துள்ள குறைபாடுகளுக்கு (ஆபத்துகளுக்கு), பாதுகாப்பு குறித்த முழுமையான உத்தரவாதம் பொருந்தாது. **Maclenan Vs Segar, (1917) 2 KB 325.,** என்ற வழக்கில் வாதியான பெண்மணி, விடுதியில் தங்கியிருந்தபோது தீப்பற்றியது. விடுதியில் அவசர காலத்தில் வெளியேறும் வழி ஏதும் இல்லாததால், வாதி, படுக்கை விரிப்புகளை முடிச்சிட்டு கயிறு போல அதனைப் பயன்படுத்தி கீழிறங்க முயன்றார். கீழிறங்கும்போது மயக்கமுற்றதால், கீழே விழுந்து காயமுற்றார். இருதரப்பின் (நுழைபவர் மற்றும் கட்டிட உடைமையாளர்) நோக்கத்திற்காக, கட்டிடத்தினுள் நுழையவும் பயன்படுத்தவும், சன்மானம் பெற்று கட்டிட உரிமையாளர் ஒப்புக் கொண்டிருக்கும்போது, தரப்பினர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் கட்டிடம் பாதுகாப்பாக உள்ளது என கட்டிட உடைமையாளர் உட்கிடையாக உத்தரவாதம் அளித்துள்ளார் என்பதாகவே பொருள்படும் என்றும் அதனால் பிரதிவாதி பொறுப்பாகுவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Gillmore Vs L.C.C., (1938) 159 LT 615., என்ற வழக்கில் பிரதிவாதிகளால் நடத்தப்படும் உடற்பயிற்சி வகுப்பிற்கு கட்டணம் செலுத்திச் சேர்ந்த வாதி, அக்கட்டிடத்தின் மிகவும் வழவழப்பான தரையில் வழுக்கி விழுந்து காயமுற்றார். வாதியை கட்டிடத்தினுள் அழைத்த நோக்கத்திற்கு ஏற்ற வகையில் கட்டிடம் பாதுகாப்பாக உள்ளது என பிரதிவாதிகள் மறைமுகமாக உத்தரவாதம் அளித்துள்ளார்கள் என்றும் எனவே பிரதிவாதிகள் அத்தகைய உத்தரவாதத்தை மீறியதால் அல்லது நியாயமான கவனம் காட்டத் தவறியதால் வாதிக்கு இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளனர் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிலக் குறிப்பிட்ட ஆங்கில வழக்குகள், வெளிப்படையான ஒப்பந்தம் ஏதும் இல்லாத சூழ்நிலைகளில், ஓர் நிலக்கிழார் தன்னுடைய வாடகைதாரர் குறித்தோ அல்லது கட்டிடத்தில் நுழையும் எந்தவொரு நபர் குறித்தும் கவனம் காட்ட வேண்டிய கடமையைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டிருந்தன. **Bottomley Vs Bannister, (1932) 1 KB 458.,** என்ற வழக்கில் 'A' என்பவர் 'B' என்பவருக்கு ஓர் வீட்டை விற்றார். விற்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் 'A' அவ்வீட்டில் புகை செல்வதற்கு வழியற்ற ஓர் வாயுக்கொதிகலன் (gas boiler) வசதியை ஏற்படுத்தியிருந்தார். கொதிகலனின் குறைபாடு காரணமாக கசிந்த வாயுவின் விளைவாக 'B' மற்றும் 'B'-ன் மனைவி ஆகிய இருவரும் உயிரிழந்தனர். நீதிமன்றம், 'A', 'B'-க்கு பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது. ஆனால் **Otto Vs Bolten and Norris, (1936) 1 All ER 960.,** என்ற வழக்கில், 'A' என்பவர் புதிதாகக் கட்டப்பட்ட ஆனால் மிகவும் கவனக்குறைவாக கட்டப்பட்ட வீட்டை 'B'

என்பவருக்கு விற்றார். படுக்கையறை ஒன்றின் மேல்தளம் இடிந்து விழுந்ததில், அந்த அறையில் படுத்திருந்த 'B' மற்றும் 'C'-க்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. நீதிமன்றம், மறைமுக உத்தரவாதத்தின் அடிப்படையில் 'A', 'B'-க்கு மட்டுமே பொறுப்பாகுவார் என்றும் அவ்வீட்டிற்கு வருகைபுரியும் 'C' போன்ற மூன்றாம் நபர்களுக்கு பொறுப்பாகமாட்டார் என்றும் தீர்ப்பளித்தது. எவ்வாறிருப்பினும் நிலக்கிழார்களுக்கு அளிக்கப்பட்ட இத்தகைய சிறப்புரிமை இதற்கு பிந்தைய வழக்குகள் மூலம் மறுத்தழிக்கப்பட்டது. [எ-டு: Dutton Vs Bognor Regis Urban District Council, (1972) 1 All ER 462]. மேலும் நிலக்கிழாரின் காப்புரிமை (immunity) குறித்த விதி, 1957-ஆம் ஆண்டு உடைமையாளர்கள் பொறுப்புநிலைச் சட்டத்தின்மூலம் மாற்றப்பட்டுவிட்டது.

அ(2) அழைக்கப்பட்டவர் குறித்த பொறுப்பு நிலை (Liability in respect of invitee): 'அழைக்கப்பட்டவர்' என்பது வெறுமனே அனுமதியின் பேரில் அல்லாமல், உடைமையாளரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அழைப்பின்பேரில், உடைமையாளரின் வியாபாரம் சம்பந்தமாக கட்டிடத்தில் நுழைபவரைக் குறிக்கும். கட்டிடத்தினுள் நுழைபவர் மற்றும் உடைமையாளர் ஆகிய இருவரின் நலனும் இருப்பது 'அழைக்கப்பட்டவர்' என்ற தகுதிக்கான முக்கிய நிபந்தனையாகும். கடையினுள் இருக்கும் ஓர் வாடிக்கையாளர், ஓர் ஒப்பந்ததாரர், மற்றொருவரின் கட்டிடத்தினுள் பழுது நீக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாள், பயணச்சீட்டு வாங்குவதற்காக அல்லது பொருள்களைப் பெறுவதற்காக ரயில் நிலையத்திற்குச் செல்லும் நபரொருவர், பக்கத்து வீட்டுக்காரரின் வேண்டுகோளின் பேரில் அவரது நோய்வாய்ப்பட்ட மனைவியை கவனித்துக் கொள்வதற்காகச் செல்லும் ஓர் பெண்மணி, தீயை அணைப்பதற்காக அழைக்கப்பட்ட தீயணைப்பு வீரர் போன்றோர் அழைக்கப்பட்டவர் என்ற பொருளினுள் அடங்குவர் என்று நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன.

உடைமையாளர் தன்னுடைய கட்டிடத்திலுள்ள தான் அறிந்துள்ள அல்லது அறிந்திருக்க வேண்டிய எந்தவொரு அபாயத்தில் இருந்தும் அழைக்கப்பட்டவருக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பினைத் தடுப்பதற்கு நியாயமான கவனத்தைக் காட்டும் பொறுப்பினைக் கொண்டுள்ளார். எனவே அழைக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பிற்கு தனது அறியாமை அல்லது பணியாள் அல்லது தன் விருப்ப ஒப்பந்ததாரரால் ஏற்படுத்தப்பட்ட ஆபத்து என வாதிட்டு பொறுப்பு நிலையிலிருந்து விடுபட முடியாது.

அழைக்கப்பட்டவர் தொடர்பான உடைமையாளரின் கடமையை தெளிவாக எடுத்துரைத்த ஓர் முக்கிய வழக்கு **Indermaur Vs Dames, (1866) LR 1 CP 274.**, என்ற வழக்காகும். இவ்வழக்கில் வாதி, 'X' என்பவரின்கீழ் வேலை செய்யும் ஓர் பயிற்சி பெற்ற வாயு இணைப்புகளை பொருத்துபவராவார் (journey man gas fitter) 'X', வாதியை, பிரதிவாதியின் சர்க்கரை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில் உள்ள சில வாயுக்குழாயின் ஜுவாலை வெளிப்படும் பகுதிகளை (burners) சோதனை செய்வதற்காக அனுப்பினார். வாதி தொழிற்சாலைக்குச் சென்று அத்தகைய பணியில் ஈடுபட்டிருந்தபோது அவரின் தவறு ஏதுமின்றி, பாதுகாப்பு

ஏதும் செய்யப்படாத மேல்தளத்திலிருந்த நீண்ட இரும்பு உருளையினுள் (shaft) விழுந்ததில் பலத்த காயமுற்றார். நீதிமன்றம், வாதி இழப்பீடு பெறத் தகுதி பெற்றுள்ளார் என்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி வில்ஸ் (Wills J), "..... அழைக்கப்பட்ட நபர், தன் சொந்தப் பாதுகாப்பிற்காக தன் தரப்பில் நியாயமான கவனம் செலுத்தவும், அதே நேரத்தில், உடைமையாளர், அவர் அறிந்துள்ள அல்லது அறிந்திருக்க வேண்டிய அசாதாரண அபாயங்களினால் ஏற்படும் இழப்பை தடுக்க அவர் தரப்பில் நியாயமான கவனத்தை செலுத்தியிருப்பார் என்று எதிர்பார்க்கவும் தகுதி கொண்டுள்ளார்"- என்பதைக் குறிப்பிட்டார். **London Graving Dock Co., Vs Horton, (1951) AC 737.,** என்ற வழக்கில் பிரபுக்கள் அவை உடைமையாளரின் பொறுப்பு நிலை எல்லையை விளக்கியது. உடைமையாளர், தன்னுடைய கட்டிடத்திற்கு அழைக்கப்பட்டவர் குறித்து அவருக்கு ஆபத்து ஏதும் ஏற்படாத வகையில் கட்டிடத்தை நியாயமான பாதுகாப்பிற்கு உட்பட்ட முறையில் பராமரிக்க கடமை கொண்டுள்ளார். இருப்பினும் அழைக்கப்பட்டவர் கட்டிடத்தின் பாதுகாப்பற்ற நிலையை முழுமையாக உணர்ந்திருந்தும் அவரின் வேலையை தொடர்ந்தால், அதன்பின்னர் அக்கட்டிடத்தின் பாதுகாப்பற்ற தன்மையால் அவருக்கு நேரிடும் ஊறுகளுக்கு உடைமையாளர் பொறுப்பாகமாட்டார். எனவே அழைக்கப்பட்டவர் கட்டிடத்திலுள்ள பாதுகாப்பற்ற நிலையை முழுதுமாக அறிந்திருந்து அவரின் வேலையை தொடர்ந்தால் அவருக்கு தீர்வழி ஏதுமில்லை – என்று குறிப்பிட்டது.

அ(2) (a) இரயில்வே பயணிகள் குறித்த கடமை (Duty towards railway passengers): இரயில் நிலையத்திற்கு வருகை புரியும் நபர்கள் குறித்த இரயில்வே நிறுவனத்தின் கடமை, வியாபாரத்தின்போது சாதாரணமாக கட்டிடத்திற்குள் நுழையும் நபர்கள் குறித்த உடைமையாளரின் கடமையை ஒத்ததாகும். **Stowell Vs Railway Executive, (1949) 2 All ER 193.,** என்ற வழக்கில் வாதி, இரயிலில் வரும் தனது மகள் மற்றும் மகளின் குடும்பத்தினரைச் சந்திப்பதற்காக பிரதிவாதிகளுக்குச் சொந்தமான இரயில் நிலையத்திற்குச் சென்றார். இரயில், நிலையத்தில் நின்றவுடன் அவர்களைக் காண்பதற்காக, ஒவ்வொரு பெட்டியாக பார்த்துச் செல்லும்போது, நடைமேடையில் பரவியிருந்த எண்ணெய் படலத்தின்மீது கால் வைத்ததில் வழுக்கி விழுந்து காயமுற்றார். நடைமேடையில் எண்ணெய் படலம்இருந்திருக்கக் கூடாது என்றும், பிரதிவாதியின் பணியாளர்கள் முறையாக கவனம் செலுத்தியிருந்தால் அது நீக்கப்பட்டிருக்கவும் அல்லது பயணிகளுக்கு தீங்கற்ற முறையில் பயன்படுத்தச் செய்திருக்கவும் முடியும் என்பதால் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் **Blackman Vs Railway Executive, (1953) 2 All ER 323 CA.,** என்ற வழக்கில், இதேபோன்று நடைமேடையில் பரவியிருந்த எண்ணெய் படலத்தின்மீது கால்வைத்ததால் வழுக்கி விழுந்த வாதிக்கு, பிரதிவாதிகள் தரப்பில் கூடுமான கவனம் செலுத்தப்பட்டது என்பதன் அடிப்படையில் நீதிமன்றம் இழப்பீடு அளிக்க மறுத்துவிட்டது.

R.P.Ghosh (Dr) Vs Bengal and North Western Rly. Co., AIR 1943 Pat 177., என்ற வழக்கில் இரயிலில் நுழைந்து இடம் பிடிப்பதற்காக

கவலையுடன் நடைமேடையில் நடந்து கொண்டிருந்த வாதி, அங்கிருந்த சிறிய பள்ளத்தில் கால் தடுக்கி விழுந்து பலத்த காயமுற்றார். தங்களின் வளாகத்தை பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பு பொருட்டு பிரதிவாதிகள் நியாயமான கவனம் செலுத்தும் கடமையைக் கொண்டுள்ளனர் என்றும் எனவே கடமை தவறுகையால் வாதிக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கு பொறுப்பாவார்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Imaman Vs Union of India, AIR 1976 All 85.,** என்ற வழக்கில், வாதியின் கணவர், இரயிலில் செல்வதற்காக (ஏறுவதற்காக) இருப்புப்பாதையைக் கடக்கும்போது உயிரிழந்தார். நீதிமன்றம், வாதியின் கணவர், ஓர் அழைக்கப்பட்டவர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற தகுதியைக் கொண்டிருந்தார் என்றும் எனவே வாதி இழப்பீடு பெறுவதற்கு தகுதி கொண்டுள்ளார் என்றும் தீர்ப்பளித்தது.

அ(3) உரிமம் பெற்றவர் குறித்த பொறுப்பு நிலை (Liability in respect of Licensee): உரிமம் பெற்றவர் என்பது வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியின் பேரில், உடைமையாளரின் வியாபாரம் அல்லது பிற எந்தவொரு நலனுக்காகவும் இல்லாமல் தன்னுடைய சொந்த நோக்கத்திற்காக கட்டிடத்தினுள் நுழைபவரைக் குறிக்கும். அனுமதி பெற்றவர் என்பது வீட்டிலுள்ள விருந்தாளி, விடுதிகளில் நாட்கணக்கில் தங்கியிருப்பவர்கள், தான் கொண்டுள்ள வணிகப் பொருள்களை விற்பதற்காக கட்டிடத்தினுள் நுழைபவர்கள், பொதுப்பூங்காவிற்கு அல்லது 'சர்க்கஸ்' நிகழ்ச்சிக்கு செல்வோர் போன்றோரை உள்ளடக்கும். உரிமம் பெற்றவர் தொடர்பான உடைமையாளரின் பொறுப்புநிலை பின்வரும் இரண்டு முக்கியக் கூறுகளைச் சார்ந்ததாகும்.

முதலாவதாக, தனக்கு தெரிந்த கட்டிடத்தினுள் மறைந்துள்ள அபாயங்கள் (concealed dangers) அல்லது வெளியில் தெரியாத குறைபாடுகள் (latent defects) ஏதேனும் இருப்பின் அது குறித்து உரிமம் பெற்றிருப்பவருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, உரிமம் பெற்றவருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதான செயலைச் செய்வதோ அல்லது அபாயத்தின் அளவை அதிகப்படுத்துவதாக, இடத்தின் தன்மையை மாற்றுவதோ கூடாது.

Fairman Vs Perpetual Investment Building Society (1923) AC 74., என்ற வழக்கில் வாதி தனது சகோதரியுடன் பிரதிவாதிக்குச் சொந்தமான கட்டிடத்தில் தங்கியிருந்தார். அந்த இடம் வாதியின் சகோதரியுடைய கணவர் பெயரில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. பிரதிவாதி பொதுப்படிக்கட்டுகளின் (common staircase) உடைமையைக் கொண்டிருந்தார். படிக்கட்டின் பயன்பாடு காரணமாக, படி ஒன்றின் சிமெண்ட் பூச்சு பெயர்ந்து பள்ளமாக இருந்தது. வாதி படிக்கட்டில் இறங்கும்போது அவரின் குதிகால் அப்பள்ளத்தில் சிக்கியதால் தடுமாறிக் கீழே விழுந்ததன் காரணமாக காயமுற்றார். வாதி உரிமம் (அனுமதி) பெற்றவர் என்பதால், மறைந்துள்ள அபாயங்களுக்கு மட்டுமே பிரதிவாதியை பொறுப்பாக்க

முடியும் என்றும், படிக்கட்டில் உள்ள குறைபாடு வெளிப்படையாக தெரியக்கூடியதாக இருந்ததால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய ரென்புரி பிரபு (Lord Wrenburry), உடைமையாளர் உரிமம் பெற்றவர் பொருட்டு தான் 'அறிந்த அல்லது அறிந்திருக்க வேண்டிய (knows or ought to know) அபாயங்களுக்கு பொறுப்பாவார் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் இதற்கு பின்னரான வழக்குகளில், ரென்புரி பிரபு பயன்படுத்திய 'அறிந்திருக்க வேண்டிய' என்ற சொற்கள், சொற்பிழையினால் ஏற்பட்டது மட்டுமே என்றும், சட்டப்படி உடைமையாளர் உரிமம் பெற்றவர் பொருட்டு 'அறிந்திருக்க வேண்டிய அபாயங்களுக்கு பொறுப்பாக மாட்டார் என்றும் குறிப்பிட்டது' [எ-டு: Sutcliffe Vs Clients Investments Ltd., (1924) 2 KB 746].

Dunster Vs Abbott, 1954 WLR 58., என்ற வழக்கில் விளம்பரம் செய்வதற்கு ஆதரவு சேகரிப்பவரான (canvasser) வாதி விளம்பரம் செய்யக் கோருவதற்கான ஆணையை (order) பெற்றிடுவதற்காக பிரதிவாதியின் வீட்டிற்கு பகல் நேரத்தில் சென்றார். பிரதிவாதி அப்போது வீட்டில் இல்லாததால் அவரின் மனைவி பிறகு வரும்படி கூறினார். வாதி, சூரியன் மறைவிற்குப் பின்னர் மீண்டும் சென்று பிரதிவாதியை சந்தித்தபோது, அவர் விளம்பரம் செய்யும் பணியைத் தர மறுத்துவிட்டார். வாதி கட்டிடத்தை விட்டு வெளியேறும்போது, கழிவுநீர் வாய்க்கால் மீதிருந்த சிறு பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தபோது, கால் இடறி, கழிவுநீர் வாய்க்கால் பள்ளத்தில் விழுந்ததால் காயமுற்றார். வாதி தனது வியாபார நலனுக்காக பிரதிவாதியின் வீட்டிற்குச் சென்றாரே தவிர, பிரதிவாதியின் வியாபார நலனுக்காக செல்லவில்லை என்பதால் அவர் உரிமம் பெற்றவர் மட்டுமே என்றும், பிரதிவாதியை பொறுப்பு நிலைக்கு உட்படுத்துவதற்கு அவரின் இடத்தில் அசாதாரண அல்லது மறைந்துள்ள அபாயம் எதுவுமில்லை என்பதைக் குறிப்பிட்டு வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அ(4) அத்துமீறியவர்கள் குறித்த உடைமையாளரின் பொறுப்புநிலை (Liability of occupier towards trespassers): உரிமையாளரின் கவனம் காட்ட வேண்டிய கடமையின் படிநிலையில் (hierarchy) கீழான நிலையில் இருப்பவரே அத்துமீறியவர் ஆவார். ஓர் கட்டிடத்திற்குள் அழைப்பு அல்லது உரிமம் ஏதுமின்றி நுழைபவரே அத்துமீறியவர் என்பவராவார். அத்துமீறியவர் கட்டிடத்தினுள் இருப்பது உடைமையாளருக்கு தெரியாது. தெரிந்திருப்பின் அவரைஉள்ளே அனுமதித்திருக்க மாட்டார். அத்துமீறியவர் பொருட்டு உடைமையாளர் கவனம் காட்டவோ அல்லது மறைந்திருக்கும் அபாயத்திலிருந்து பாதுகாக்கவோ எத்தகைய கடமையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அத்துமீறியவர் எவ்வித அபாயத்தையும் எதிர்கொள்ளத்துணிந்து தாமாகவே (at his own risk) கட்டிடத்தினுள் நுழைகிறார். இருப்பினும் அத்துமீறியவருக்கு ஊறு ஏற்படும்படியாக வேண்டுமென்றே ஒரு செயலைச் செய்யக்கூடாது என்கிற கடமை உடைமையாளருக்கு உண்டு.

பின்வரும் வழக்குகளில் அத்துமீறியவர் இழப்பீடு பெறத்தகுதி கொண்டிருக்கவில்லை எனக் கூறப்பட்டது. விளக்கு வெளிச்சம் ஏதுமற்ற இரவு நேரத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அல்லாத ஓர் தனியாருக்குச் சொந்தமான சாலையில் தன்னுடைய குதிரையை பணியாள் ஓட்டிவரும்போது, கழிவுநீர் செல்வதற்காக வெட்டப்பட்டிருந்த கால்வாயில் அத்துமீறியவர் விழுந்ததால் ஏற்பட்ட காயம் **[Murley Vs Groove (1882) 46 JJ 360]**; இருள் படர்ந்த நேரத்தில் நெடுஞ்சாலையிலிருந்து இறங்கி, அதை ஒட்டியுள்ள பிரதிவாதியான இரயில்வே நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தில் அங்குமிங்கும் செல்லும்போது நீர்த்தேக்கத்தில் தவறி விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள் **[Hard Castle Vs South Yorkshire Rly., (1859) 28 LJ Ex 139]**; காவலர் ஒருவர் சந்தேகிக்கப்பட்ட ஓர் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காக இரவு நேரத்தில் பிரதிவாதியின் கட்டிடத்தினுள் நுழைந்தவர் (இத்தகைய சூழ்நிலைகளில் அவர் ஓர் அத்துமீறியவர் ஆவார்) வேலியிடப்படாத வாள் குழியில் (sawpit) விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள் **[G.C. Rly Vs Bates, (1921) 3 KB 578]**.

V.Krishna Naidu Vs Union of India, AIR 1976 Mad. 95., என்ற வழக்கில், வாடகைக்கார் ஓட்டுநர் ஆளில்லா இருப்புப்பாதைக் கடவின் (gate) அருகில் வந்தபோது, இருப்புப்பாதைக் கடவின் இருபுறமும், பொதுமக்களை எச்சரிக்கும் ஒலிச்சத்தம் மற்றும் சிவப்பு விளக்கின் ஒளிர்வு போன்ற எச்சரிக்கைக்குப்பின் இரும்பு வாயில் (gate) மூடப்படும் நேரத்தில் உட்புகுந்ததால் அவர் அத்துமீறியவர் என்பதால் இழப்பீடு பெறுவதற்கு தகுதி பெற்றிருக்கவில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஆ) 1957-ஆம் ஆண்டு உடைமையாளர்கள் பொறுப்பு நிலைச்சட்டத்தின் கீழான உடைமையாளரின் பொறுப்புநிலை (Liability of the occupier under the occupiers Liability Act, 1957):

கட்டிடத்தினுள் நுழைபவர்கள் குறித்த வகைப்பாடு மற்றும் அவர்கள் பொறுத்து வேறுபடும் உடைமையாளரின் கடமையானது நடைமுறையில் செயற்கையான அல்லது நடைமுறைக்கு ஒவ்வாத வேறுபாடுகள் மற்றும் முரணான விளைவுகளுக்கு காரணமாகியது. சட்டத்தின் இத்தகைய நிலையின்மீது கொண்டிருந்த அதிருப்தி, 1957-ஆம் ஆண்டின் உடைமையாளர்கள் பொறுப்புநிலைச் சட்டம் இயற்றப்படுவதற்கு காரணமாகியது. இச்சட்டம், அத்துமீறியவர் தவிர்த்து பார்க்க வருபவர்கள் அல்லது வருகை புரிபவர்கள் அனைவர் பொறுத்தும் 'பொதுவான கவனம் காட்டும் கடமையை' (common duty of care) அறிமுகப்படுத்தியது. மேலும் இச்சட்டம், அழைக்கப்பட்டவர் மற்றும் உரிமம் பெற்றவர் ஆகியோருக்கு இடையேயிருந்த வேறுபாட்டை ஒழித்தது. தற்போது கட்டிட உரிமையாளர் தன் கட்டிடத்திற்குள் நுழையும் பார்வையாளர்கள் (அத்துமீறியவர் தவிர) பொறுத்து பொதுவான கவனம் காட்டும் கடமை ஒன்றை மட்டுமே கொண்டுள்ளார்.

ஆபத்தான பொருள்களால் ஏற்படும் பொறுப்பு (Liability for Dangerous Chattels)

75. ஆபத்தான பொருட்கள் என்பது யாது? ஆபத்தான பொருட்களின் உரிமையாளர்களின் பொறுப்பு நிலையை விவரிக்க. (What are dangerous chattels? Describe the liability of the owners of dangerous chattels).

SN - 95 ஆபத்தான பொருட்கள் / Dangerous Chattels - May-2013 அல்லது ஆபத்தான பொருட்கள் / Dangerous things - Nov-2015 (v), May-2018.

விடைச்சுருக்கம்: (அ) ஆபத்தான பொருட்கள் - (ஆ) ஆபத்தான பொருட்களின் உரிமையாளர்களுக்கான பொறுப்பு நிலை - ஆ (1) நேரடியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்பு நிலை - ஆ (2) இறுதியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்பு நிலை

(அ) ஆபத்தான அல்லது அபாயகரமான பொருட்கள் (Dangerous Chattels or dangerous things):

'Chattel' என்றச் சொல்லுக்கு 'அசைவியல் பொருள்' என்பதே சரியான மற்றும் சமமான பொருளைக் குறிக்கும் சொல்லாகும். 'Chattel' என்றச் சொல் 'goods' என்றச் சொல்லையும் விடப் பரந்ததாகும். ஆங்கிலச் சட்டத்தில் அசைவியல் பொருட்கள் என்பது வில்லங்கம் ஏதுமற்ற நிலம், சொத்தையும் மற்றும் அதன் பகுதியாக உள்ளதையும் தவிர்த்த அனைத்தையும் குறிக்கும். இது உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளை ஒட்டு மொத்தமாக உள்ளடக்கிய சொல்லாகும்.மேலும் விளக்கமாகக் குறிப்பிடுவதெனில், இது, எடை நிறுத்தத்தக்க, அளவினை அளக்கத்தக்க அல்லது எண்ணத்தக்க அசையும் பொருட்கள் எதனையும் உள்ளடக்கிய பொதுவானச் சொல்லாகும். விலங்குகள், வீட்டு உபயோகப் பொருட்கள், உணவு தானியங்கள், பணம், ஆபரணங்கள், துணிகள் உள்ளிட்ட, பொருளின் உரிமையாளரால் எடுத்துச் செல்லப்படுகிற, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகரச் செய்கின்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் சொல்லே அசைவியல் பொருட்கள் என்பதாகும்.

பெரும்பாலான பொருள்கள், எடுத்துக்காட்டாக ஒரு தடி (கழி), விழக்கூடிய நிலையில் இருக்கும் வீட்டின் மேற்புறக்கூரை ஓடுகள், இரவு நேரத்தில், வெளிச்சம் இல்லாத இடத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கற்கள் போன்றவை, கவனக்குறைவாகப் பயன்படுத்தும்போது அது ஆபத்திற்கான ஆதாரங்களாக ஆகிவிடுகிறது. மறுபுறம், கையாளுவதில் கவனக்குறைவாக இருப்பதற்கும் அப்பாற்பட்டு, இயல்பாகவே அபாயத்தன்மை கொண்ட, ஆபத்தான அல்லது அபாயகரமான பொருள்கள் என்றச் சொல் சரியாகப் பொருந்தக்கூடிய நெருப்பு, துப்பாக்கி, வெடிமருந்துப்பொருள், மின்சாரம், வாயு போன்ற பொருள்களும் உள்ளன. இத்தகைய பொருள்கள் முந்தைய வகையிலிருந்து இரண்டு

விதங்களில் வேறுபட்டது. முதலாவதாக, இவை எப்போதும் ஆபத்தானவை என்பதால், இவற்றை ஓரிடத்தில் சேகரித்து வைத்திருக்கும்போதும் அல்லது கையாளும்போதும் அதிகபட்ச கவனத்தைப் பின்பற்றுவது என்போதும் அவசியமாகும். இரண்டாவதாக இவை அடிப்படையில் இயல்பாகவே இத்தகைய அபாயத்தன்மையை தன்னுள் கொண்டுள்ளதே தவிர வெளிப்புறச் சூழல்களில் இருந்து அல்ல. அசைவியல் பொருட்களின் இவ்விரண்டு வகைகளுக்கு இடையேயான வேறுபாட்டை ரைட் பிரபு, **Wray Vs Essex C.C., (1936) 3 All ER 97.**, என்ற வழக்கில் தெளிவாக பின்வருமாறு விளக்கியுள்ளார்.

'இயல்பாகவே ஆபத்தான பொருள்கள் அல்லது சில நேரங்களில் குறிப்பிடுவது போல உள்ளார்ந்து அபாயம் கொண்டுள்ள (inherently dangerous) பொருட்களைப் பொறுத்தவரையில், அது ஓர் தனித்த மற்றும் இயல்பான இடத்தை கவனமின்மைச் சட்டத்தில் பெற்றதாகும். ஆபத்தான பொருள்கள் குறித்து அணுகும்போது, அவற்றை அப்படியே இருந்தவாறு விட்டுச்சென்றால் எந்தவொரு நேரத்திலும் இழப்பை ஏற்படுத்தும். தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கி இத்தகைய பொருள்களில் ஒன்றாகும். சிலக்குறிப்பிட்ட முறையில் கையாளும்-போது தானாகவே வெடிக்கக்கூடிய நிலையில் தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கி ஒன்றை விட்டுச்செல்லும்போது, எவரேனும் ஒருவர் அதனைக் கையாளும்போது ஆபத்தை எதிர்நோக்குவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்பது வெளிப்படையானதே. எத்தகைய பொருள்கள் உள்ளார்ந்த அபாயம் கொண்டவை, எவை அத்தகைய அபாயத்தை கொண்டிருக்கவில்லை என்பதை நுட்பமாக ஓர் பொதுவான வரையறைக்குள் உட்படுத்துவது இயலாது; இருப்பினும் குறிப்பிட்ட பொருள்கள் குறித்து மிகவும் கவனமுடன் இருக்க வேண்டிய எல்லையை நிர்ணயிக்க முடியும். உறையற்ற உடைவாள் (naked sword), தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கி அல்லது வெடிபொருட்கள் போன்றவை வெளிப்படையாக உள்ளார்ந்த அபாயம் கொண்ட பொருட்களாகும்; அதாவது, கடுமையான எதிர்விளைவுகளுக்கு துணிந்து மட்டுமே கையாளத்தக்கதாகும். மறுபுறம், சாதாரண பயன்பாட்டில் இருக்கும் பொருட்களைப் பொறுத்தவரையில், கவனக்குறைவு இருந்தால் அல்லது ஏதேனும் துரதிருஷ்ட வசத்தினால் அல்லது விபத்தின் காரணமாக மட்டுமே ஆபத்தின் ஆதாரமாக இருக்கக்கூடிய ஆனால் அடிப்படையில் அப்பொருளின் இயல்பானத்தன்மையில் ஆபத்திற்கு ஆதாரமாகாத பொருள்களும் உள்ளன'.

மேற்குறிப்பிட்ட வழக்கில் ஆசிரியர் ஒருவர். 'ஆயில் கேனை' (Oil can) எடுத்துவருவதற்காக 12 வயது மாணவனை அனுப்பினார். அவன் அதை எடுத்துக்கொண்டு வருயில் ஒரு மூலையில் இருந்து திரும்பும்போது மற்றொரு சிறுவன் திடீரென முன்பக்கம் வந்ததால் 'ஆயில் கேனின்' நீண்ட குழாய் அவனின் கண்மீதுபட்டு காயமுற்றான். 'ஆயில் கேன்' உள்ளார்ந்து அபாயம் கொண்ட ஓர் பொருளல்ல என்பதால் சிறுவனை அனுப்பிய ஆசிரியர் (பிரதிவாதி) கவனமின்மைத் தீங்கு ஏதும் புரியவில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(ஆ) ஆபத்தான அசைவியல் பொருட்களின் உரிமையளர்களுக்கான பொறுப்பு நிலை (Liability of owners of dangerous chattels):

ஆபத்தான அல்லது அபாயகரமான பொருட்களின் உரிமையாளர்-களுக்கான பொறுப்பு நிலையை (1) நேரடியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்புரிமை மற்றும் (2) இறுதியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்பு நிலை எனும் இரு தலைப்பின்கீழ் குறிப்பிடலாம்.

ஆ(1) நேரடியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்பு நிலை (Liability towards immediate transferee): ஆபத்தான பொருட்களை ஒருவர் மற்றொருவருக்கு ஒப்பந்தத்தின்கீழோ அல்லது கொடையாகவோ (gift) அல்லது மறுபயனற்ற அல்லது இலவசமாக இரவல் அளிப்பதன் (gratious lending) மூலமாகவோ அளிக்கலாம். ஓர் ஒப்பந்தத்தின்கீழ் அசைவியல் பொருட்கள் உரிமைமாற்றம் செய்யப்படும்போது அல்லது அளிக்கப்படும்போது, தரப்பினர்களின் பொறுப்புநிலை, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும். ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பொருள்களுக்கான விற்பனை ஒப்பந்தத்தில் (contract of sale of goods) சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில், வாங்குபவருக்கு தேவைப்படும் நோக்கத்திற்கு நியாயமாக பொருந்தக்கூடிய வகையில் பொருள்கள் உள்ளது என்பதான ஓர் உட்கிடையான நிபந்தனை உண்டு. பொருள்களில் ஊறுவிளை-விக்கத்தக்க உட்பொருள் (ingredients) இருந்து வாங்குபவருக்கு இழப்பை ஏற்படுத்தினால், அதற்கு விற்பனை செய்தவர் பொறுப்பாவார். எவ்வாறிருப்பினும், தரப்பினர்கள், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமல் இருந்தால் எழும் பொறுப்பு நிலையை தவிர்ப்பதற்காக, அதனை ஒப்பந்தத்தில் வெளிப்படையாகக் குறிப்பிட்டு, அத்தகைய பொறுப்பு நிலையில் இருந்து தற்காத்துக் கொள்ள இயல்பாகவே உரிமை கொண்டுள்ளனர்.

Ward Vs Hobbs, (1878) 4 AC 13., என்ற வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில், பிரதிவாதி சில பன்றிகளை வாதிக்கு விற்றார். அப்பன்றிகள் 'டைஃபாய்ட்' காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தது பிரதிவாதிக்கு தெரியும். பிரதிவாதி அதனை வாதிக்கு வெளிப்படுத்தவில்லை. ஒப்பந்தத்தில் பன்றிகளில் உள்ள 'அனைத்து குறைபாடுகளுடன் சேர்த்து' (with all faults) விற்பதாக என்று குறிப்பிட்டிருந்தது. பிரதிவாதியின் பன்றிகள் மற்றும் டைஃபாயிட் கிருமித் தொற்றினால் பரவிய நோயினால் வாதியின் பன்றிகளில் சிலவும் இறந்துவிட்டன. வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என பிரபுக்கள் அவை தீர்ப்பளித்தது.

Hyman Vs Nye, (1881) 6 QBD 685., என்ற வழக்கில் வாதி, ஓர் குறிப்பிட்ட பயணத்திற்காக, வண்டி மற்றும் குதிரைகளை பிரதிவாதியிடமிருந்து வாடகைக்குப் பெற்றார். வண்டியிலிருந்த குறைபாடுள்ள 'போல்ட்'-ன் (bolt) காரணமாக வண்டி கவிழ்ந்ததால் வாதி காயமுற்றார். எந்த நோக்கத்திற்காக வாதி, குதிரை மற்றும்

வண்டியைப் பெற்றாரோ அந்த நோக்கத்திற்கு அது தகுதி பெற்றிராததால் பிரதிவாதி பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கொடையாக அல்லது மறுபயனற்ற இரவலாக அசைவியல் பொருள்களை அளிக்கும்போது அப்பொருளினால் கொடையாகப் பெற்றவர் அல்லது இரவலாகப் பெற்றவருக்கு ஏற்படும் தீங்குகளுக்கு கொடையளித்தவர் அல்லது இரவல் அளித்தவர் தரப்பில் அறிந்திருந்தே அல்லது ஒட்டுமொத்த கவனக்குறைவு இருந்தாலேயொழிய பொறுப்பாகமாட்டார். **Coughlin Vs Gillison, (1899) 1 QB 145.,** என்ற வழக்கில், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய 'என்ஜின்' (portable engine) ஒன்றை பிரதிவாதிகள், வாதிக்கு மறுபயனற்ற இரவலாக அளித்தனர். வாதி அதனைப் பயன்படுத்தும்போது அது வெடித்ததால் பலத்த காயமுற்றார். பிரதிவாதிகளின் தரப்பில் கவனக்குறைவு என்பதற்கோ அல்லது என்ஜினில் இருந்த குறைபாட்டை அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றுகள் ஏதுமில்லாததால் அவர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அசைவியல் பொருட்களின் ஒப்பந்தம் அல்லது கொடை பொறுத்த கேள்விகளுக்கு அப்பாற்பட்டு, பொதுவாக ஓர் பொருளை விற்பவர், அப்பொருளில் உள்ள ஏதேனும் தான் அறிந்துள்ள அபாயத்தை அல்லது வாங்குபவர் அதனை அறிந்திருப்பார் என்று நியாயமாக எதிர்பார்க்க முடியாத அத்தகைய அபாயம் குறித்து எச்சரிக்கும் கடமையைக் கொண்டுள்ளார். தவறும்பட்சத்தில், வாங்குபவருக்கு அதனால் ஏற்படும் தீங்குகளுக்கு பொறுப்பாவார். **Clarke Vs Army and Navy Co.Op. Society Ltd., (1903) 1 KB 155.,** என்ற வழக்கில் விற்பனையாளர்கள் (பிரதிவாதிகள்) தொற்றுத்தடுப்பு மருந்துப்பொடி (disinfectant powder) அடைக்கப்பட்ட தகர டின் ஒன்றை வாதிக்கு விற்றனர். வாதி, தகர டின்னின் மூடியை வெளியே எடுக்கும்போது அதன் குறைபாடு காரணமாக மருந்துப்பொடிகள் தெறித்ததால் அவரது கண்களுக்கு ஊறு ஏற்பட்டது. பிரதிவாதிகள் தகர டின்னின் மூடியை எடுப்பதில் உள்ள அபாயம் பற்றி, அம்மருந்தை முன்னரே வாங்கியவர்கள் மூலம் அறிந்திருப்பார் என்பதாலும், வாதிக்கு அது குறித்து எச்சரிக்கத் தவறியதாலும் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(2) இறுதியாக உரிமை மாற்றம் பெற்றவர்கள் தொடர்பான பொறுப்பு நிலை (Liability towards the ultimate transferees): ஓர் ஆபத்தான அல்லது அபாயகரமான பொருளை 'X' என்பவர் 'Y'-க்கு விற்பதாகவும் 'Y' அதனை 'Z'-க்கு விற்பதாகவும் கொள்வோம். 'Z' அதனைப் பயன்படுத்தும்போது தீங்கிற்கு உள்ளானால், அவர் எந்த அளவிற்கு இதன்பொருட்டு 'X'-ஐ பொறுப்பேற்கச் செய்ய முடியும்? என்ற கேள்வி இயல்பாகவே எழும். இது தொடர்பான 'X'-ன் பொறுப்புநிலை பின்வரும் இரண்டுவிதமான சூழ்நிலைகளில் கவனத்தில் கொள்ளப்படும்:

ஆ(2)(i) மோசடிக்கான பொறுப்பு நிலை (Liability for fraud): ஒரு நபர் மற்றொரு நபரிடம் பொய்யுரைப்பதன் வாயிலாக அவரை தவறாக வழிநடத்தச் செய்து அதன்மூலம் அவருக்கு ஊறு அல்லது இழப்பை விளைவிக்கச் செய்வதே மோசடி எனும் தீங்காகும். இங்கு பொய்யானக் கூற்றை ஏமாற்றப்படும் நபரிடம் நேரடியாக கூறியிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. எடுத்துக்காட்டாக, 'A' என்பவர் தான் கூறும் பொய்யானக்கூற்றின் அடிப்படையில் 'B'-யோ அல்லது 'C'-யோ செயல்படுவர் என்று எண்ணுவதற்கு நியாயமான காரணம் உள்ளபோது, 'B'-யிடம் பொய்யுரைத்து, 'C' அதனை நம்பி செயல்பட்டு அதனால் தீங்குற்ற, 'C'-க்கு ஏற்பட்ட தீங்கிற்கு, 'A' நேரடியாக 'C'-யிடம் பொய்யுரைக்காமல் இருந்தாலும்கூட பொறுப்பாவார். இதனை **Langridge Vs Levy, (1837) 2 M&W 519.,** என்ற வழக்கின் மூலமாக புரிந்து கொள்ளலாம். இவ்வழக்கில் பிரதிவாதி, வாதி பயன்படுத்துவதற்காக, அவரின் தந்தையிடம் ஒரு துப்பாக்கியை விற்றார். மேலும் அத்துப்பாக்கி ஓர் புகழ் பெற்ற தயாரிப்பாளரால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மிகவும் பாதுகாப்பானது என்றும் பொய்யுரைத்தார். வாதி அதனைப் பயன்படுத்தும்போது, துப்பாக்கி தயாரிப்பின் குறைபாடு காரணமாக, அவரது கையில் காயங்கள் ஏற்பட்டது. பிரதிவாதி, வாதியின் தந்தையிடம் பொய்யுரைத்திருந்தாலும், அக்கூற்றின்படி வாதி நடக்க வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டது என்பதால் பிரதிவாதி பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆ(2) (ii) கவனமின்மைக்கான பொறுப்பு நிலை (Liability for negligence): கவனக்குறைவாக மாற்றளிப்பு செய்பவர் அதை இறுதியாக மாற்றளிப்பு பெறும் அல்லது விலைக்கு வாங்கும் நபர் குறித்த பொறுப்பு நிலையின் நோக்கத்திற்காக, ஆபத்தான அல்லது அபாயகரமான பொருள்களை பின்வரும் மூன்று தலைப்புகளின்கீழ் குறிப்பிடலாம்.

(a) இயல்பாகவே ஆபத்தான பொருள்கள் (Things dangerous per se): பொருள்களில் சில இயல்பாகவே ஆபத்தானவைகள் என்றும், சில, குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்ப அபாயத்தன்மை கொண்ட பொருள்கள் என்றும் கருதப்படுகிறது. இயல்பாகவே ஆபத்தான பொருட்கள் குறித்து அவற்றைக் கையாளும் அல்லது அதனுடன் தொடர்பு கொள்ளும் பிறரைக் காப்பாற்றும் பிரத்யேக கடமை அதனை விற்பவர், எடுத்து வரக் கோருபவர், பொருத்துபவர் போன்றோருக்கு உண்டு. **Dixon Vs Bell, (1816) 5 M&S 198.,** என்ற வழக்கில் பிரதிவாதி தனது பணியாளான சுமார் 14 வயது சிறுமியிடம், அவரின் நண்பர் வீட்டிற்குச் சென்று தனது துப்பாக்கியை எடுத்துவருமாறு அனுப்பினார். குறிப்பாக, தனது நண்பரை துப்பாக்கியிலுள்ள வெடிமருந்துகளை நீக்கிவிட்டு கொடுக்குமாறு தான் கூறியதாகவும் சிறுமியிடம் கூறி அனுப்பியிருந்தார். தனது நண்பர் தான் கூறியுள்ளவாறே செய்வார் என்று பிரதிவாதி எண்ணினார். சிறுமி துப்பாக்கியை வாங்கியபின், வீட்டிற்கு வரும் வழியில் விளையாட்டாக ஒரு குழந்தையை நோக்கி சுட்டதில், அத்துப்பாக்கியில் இருந்த வெடிமருந்துகள் முழுமையாக நீக்கப்படாததால் எஞ்சியிருந்த வெடிமருந்தின் காரணமாக வெடித்ததில் குழந்தை படுகாயமுற்றது. நீதிமன்றம்

பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. **Thomas Vs Winchester, (1852) 6 N.Y.R.397.,** என்ற வழக்கில், மருந்துகளின் மொத்த விற்பனையாளர், சில்லறை மருந்து கடை விற்பனையாளருக்கு ஆபத்து ஏதுமற்ற 'டேன்டிலியன்' (dandelion) சாறு என்பதாகக் குறிப்பிட்டு ஒரு புட்டியை விநியோகம் செய்தார். அந்தப் புட்டியில் 'டேன்டிலியன்' என்று முகப்புச்சீட்டு (label) ஒட்டப்பட்டிருந்தது உண்மையே. ஆனால் மொத்த விற்பனையாளரின் உதவியாள் கவனக்குறைவாக, 'பெல்லடோனா' (belladona) என்ற நஞ்சுப்பொருள் அடங்கிய புட்டியின்மீது 'டேன்டிலியன்' என்ற முகப்புச்சீட்டை ஒட்டியிருந்தது மொத்த விற்பனையாளருக்கு தெரியாது. சில்லறை விற்பனையாளர், கிராமப்புற மருத்துவர் ஒருவருக்கு அதனை விற்பனை செய்ய, மருத்துவரிடம் அதை வாங்கி அருந்திய வாதி கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டார். வாதியின் உடல்நலக் குறைவிற்கு அவரின்பால் காட்ட வேண்டிய முன்னெச்சரிக்கைக் கடமையை பிரதிவாதி பின்பற்றாததே காரணம் என்பதால் பொறுப்பாவார் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பொருள்களில் ஆபத்தான பொருள் என்று ஓர் பிரிவு இல்லை, மாறாக கூடுதல் கவனம் செலுத்தக்கூடிய சில பொருள்கள், குறைவான கவனம் செலுத்தக்கூடிய சில பொருள்கள் என்று மட்டுமே உள்ளது என அரசு தலைமை வழக்கறிஞர் ஹார்ட்லி ஷேவ்ராஸ் (Hartley shawross) Read Vs Lyons, (1947) AC 156., என்ற வழக்கில் குறிப்பிட்டிருப்பதே, இது தொடர்பான சட்டத்தின் சரியான நிலையாக தாம் கருதுவதாக நீதிப்பிரபு சிங்கிள்டன் (Singleton LJ), Beckett Vs Newalls Insulation Co., (1953) 1 W.L.R.8., என்ற வழக்கில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

(b) இயல்பாகவே ஆபத்தானதாக அல்லாத ஆனால் மாற்றளிப்பு செய்பவர் ஆபத்தானது என்பதை அறிந்திருக்கும் பொருள்கள் (Things not dangerous perse but actually dangerous and known to be so by the transferor): விற்பனை செய்பவர், விற்கப்படும் பொருளில் உள்ள அபாயத்தை அறிந்திருந்தால் அதனை வாங்குபவர் அப்பொருளில் உள்ள அத்தகைய ஆபத்தை தவிர்ப்பதற்கு அவசியமான முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றிடுவதற்காக, அப்பொருளில் உள்ள ஆபத்தை குறித்து எச்சரிப்பதற்கு கடமை கொண்டுள்ளார். இத்தகைய எச்சரிக்கை அளிக்கத் தவறினால் மாற்றளிப்பவர் (விற்பவர்) அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்பாவார். மேலும், விற்பவர் பொருளில் உள்ள, தான் அறிந்த ஆபத்தைக் குறித்து எச்சரிக்கும் கடமை, தன்னிடமிருந்து நேரடியாகப் பொருளை வாங்குபவருக்கு மட்டுமின்றி, அப்பொருளினால் ஆபத்திற்கு உள்ளாகும் வாய்ப்புள்ள அனைவர் பொருட்டும் கொண்டுள்ளார். **Farrant Vs Barness, (1861) 11 KB (N.S) 553.,** என்ற வழக்கில் பிரதிவாதி நைட்ரிக் அமிலம் நிரப்பப்பட்ட நீண்ட வட்டவடிவிலான நெகிழிக் (plastic) குடுவையை, பொருள்களை எடுத்துச் செல்பவரிடம் அளித்தார்; ஆனால் குடுவையினுள் நைட்ரிக் அமிலம் இருப்பதைப் பற்றியோ அல்லது அதன் ஆபத்தான தன்மையைப் பற்றி எச்சரிக்கையோ செய்யவில்லை. எடுத்துச் செல்பவரின் பணியாளரான வாதி அதனை தனது

தோளின்மீது சுமந்து செல்கையில் அது வெடித்ததால் அவருக்கு கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டது. நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

மாற்றளிப்பு செய்பவர் (விற்பவர்) தன்னிடம் நேரடியாக மாற்றளிப்பு பெறுபவரிடம் (வாங்குபவரிடம்) அப்பொருளின் தன்மை குறித்து உரிய முறையில் எச்சரிக்கை அளிப்பாராயின் அவரின் பொறுப்பு நிலை முடிவுக்கு வந்துவிடும். **Holmes Vs Ashford, (1950) 2 All ER 76.,** என்ற வழக்கில், தலைமுடிச்சாயம் தயாரிப்பாளர் அதில் மறைந்துள்ள அபாயத்தன்மையைப் பற்றி எச்சரித்து, அதனைப் பயன்படுத்துவதற்கு முன்னர் ஓர் சோதனை செய்து கொள்வதற்கு பரிந்துரைத்திருந்தார். பிரதிவாதி குறிப்பிட்டிருந்த சோதனையை செய்யாமல், வாதி அதனைப் பயன்படுத்தியதால் தோல் அழற்சியினால் (dermatitis) பாதிக்கப்பட்டார். பிரதிவாதி தலைமுடிச் சாயத்தில் மறைந்துள்ள அபாயத்தைப் பற்றி வாதிக்கு போதுமானமுறையில் எச்சரித்து இருந்ததால், வாதிக்கு ஏற்பட்ட தீங்கிற்கு பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(c) இயல்பாகவே ஆபத்தானதாக இல்லாததும் அல்லது மாற்றளிப்பு செய்பவருக்கு ஆபத்தானது என்று அறிந்திராததும் ஆனால் உண்மையில் ஆபத்தானதாகவும் உள்ள பொருள்கள் (Things neither dangerous per se, nor known to be dangerous by the transferor but dangerous in fact): இயல்பாகவே ஆபத்தானதாக இல்லாத அதே நேரத்தில் அப்பொருளில் உள்ள ஆபத்தைப் பற்றி அறிந்திராத 'X' எனும் ஓர் விற்பனையாளர், அதை 'Y' என்பவருக்கு விற்பனை செய்திருந்து, 'Y' அப்பொருளை 'Z'-க்கு விற்பனை செய்து, 'Z' அதனைப் பயன்படுத்தும்போது ஏதேனும் தீங்கிற்கு உள்ளாரானால், 'X' மற்றும் 'Z'-க்கு இடையே நேரடியாக ஒப்பந்தம் இருந்தாலே தவிர, 'X' என்பவர் 'Z'-க்கு பொறுப்பாகமாட்டார். அதாவது 'X' மற்றும் 'Z'-க்கு இடையே ஒப்பந்த உறவு ஏதுமில்லை என்பதால் 'Z' தனக்கு ஏற்பட்ட தீங்கிற்கு 'X'-ஐ பொறுப்பாக்க முடியாது. 1932-ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த இந்நிலை ஒப்பந்த உறவு என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. **Donoghue Vs Stevenson, (1932) AC 562.,** என்ற வழக்கு தீர்ப்பின்மூலம் ஒப்பந்த உறவு கோட்பாடு எனும் தவறான வாதம் தகர்க்கப்பட்டது. இவ்வழக்கில், ஒரு பொருளை உற்பத்தி செய்பவர், அதை இறுதியாக நுகர்பவருடன் ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டிராமல் இருந்தாலும், அப்பொருளின் உற்பத்தியில் உள்ளடங்கிய கவனமின்மைக்கு பொறுப்பாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே தற்போதைய நிலையில், மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் 'Z' என்பவர் 'X'- ஐ பொறுப்பேற்கச் செய்ய முடியும்.

மேற்குறிப்பிட்ட Donoghue Vs Stevenson வழக்கின்கீழான பொறுப்பு நிலை, பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கு மட்டுமின்றி, பழுது நீக்குபவர்கள் (repairers), பாகங்களை ஒருங்கிணைப்பவர்கள் (assemblers), கட்டிடங்களைக் கட்டுபவர்கள், விநியேகிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. **Brown Vs Cotterill, (1934) 51 T.L.R 21.,** என்ற வழக்கில்

குழந்தை (வாதி) தன்னுடைய பாட்டியின் கல்லறையில் மலர்களை ஒழுங்குபடுத்தி வைப்பதில் உதவி செய்து கொண்டிருந்தபோது, அருகிலுள்ள கல்லறை கவனமின்றி கட்டப்பட்டிருந்ததன் விளைவாக சாய்ந்து விழுந்ததில் காயமுற்றாள். பிரதிவாதிகள் டோனாகு வழக்கு விதியின்படி பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Andrews Vs Hopkins, (1957) 1 QB 229.,** என்ற வழக்கில், பயன்படுத்தப்பட்ட மோட்டார் கார் ஒன்றினை (second hand car), பிரதிவாதிகள் ஓர் நிதி நிறுவனத்துக்கு விற்பனை செய்தனர். நிதி நிறுவனம் அக்காரை, தவணைமுறை விற்பனை (hire-purchase) அடிப்படையில் வாதிக்கு மாற்றளிப்பு செய்தது. மோட்டார் காரில் இருந்த பழுது காரணமாக, வாதிக்கு விபத்து ஏற்பட்டது. பிரதிவாதிகள் முறையாக கவனம் செலுத்தியிருந்தால் காரில் இருந்த குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். பிரதிவாதிகள் காரை ஆய்வு செய்யவோ அல்லது அவர்கள் அவசியமான பரிசோதனைகள் ஏதும் செய்யவில்லை என்பது குறித்து வாதிக்கு எச்சரிக்கை விடுக்கவோ தவறியதால் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

76. ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் விதி எவ்வாறு தப்பி வெளியேறும் கொடிய விலங்குகளுக்கும் ஆபத்தான செயல்பாடுகளுக்கும் பொருந்துகிறது என்பதனை விளக்குக. (To what extent the rule in Rylands Vs Fletcher is applicable to escape of dangerous animals and dangerous operations?) - May-2013 (v).

விடைச்சுருக்கம்: (அ) ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதி – (ஆ) தப்பிச் செல்லும் கொடிய விலங்குகளுக்கு கடும் பொறுப்பு விதியின் பொருந்துகை – (இ) அபாயகரமான செயல்பாடுகளுக்கு கடும் பொறுப்பு விதியின் பொருந்துகை

(அ) ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதி (Rule in Rylands Vs Fletcher):

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் உருவாக்கப்பட்ட விதி கடும் பொறுப்பு விதி என அழைக்கப்படுகிறது. இவ்விதியின்படி, பிரதிவாதி தவறு செய்யாமல் இருந்தாலும், அவரின் தரப்பில் கவனக்குறைவு ஏதுமில்லாமல் இருந்தாலும் பொறுப்பு நிலைக்கு உட்படுத்தப்படுவார். இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பிளாக்பர்ன், 'நிலத்தைப் பயன்படுத்தும் ஒருவர், அந்நிலத்தில் இயற்கையாக அல்லாத அபாயகரமான பொருட்கள் எவற்றையேனும் தனது சொந்தப் பயனுக்காக கொண்டு வந்து அல்லது சேகரித்து வைத்திருப்பார் எனில், அப்பொருட்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறினால் பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடும் என்றிருப்பின், அதனை அவர் தனது சொந்த பொறுப்பிலேயே வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அப்பொருளின் வெளியேற்றத்தினால் ஏற்படும் இயல்பான விளைவுகள் அனைத்திற்கும் அவரே

பொறுப்பேற்க வேண்டும்'-என்பதைக் குறிப்பிட்டார். நீதிமன்றங்கள் இக்கடும் பொறுப்புநிலை விதியின் எல்லையை பரந்த அளவில் விரிவுபடுத்தியுள்ளன. இனி, இவ்விதி தப்பி வெளியேறும் கொடிய விலங்குகளுக்கும், ஆபத்தான செயல்பாடுகளுக்கும் எந்தளவிற்குப் பொருந்தும் என்பதை பின்வருமாறு காண்போம்.

(ஆ) தப்பிச் செல்லும் கொடிய விலங்குகளுக்கு கடும் பொறுப்பு விதியின் பொருந்துகை (Applicability of rule of strict liability to escape of dangerous animals):

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதி அல்லது கடும் பொறுப்பு விதி, 1868-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆங்கில இயற்றாச் சட்டத்தின்கீழ் கொடிய விலங்குகளைப் பொறுத்த வரையிலான பொறுப்பு நிலை தற்போது ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் கடும் பொறுப்பு விதியின் பரந்த எல்லைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தப்பி வெளியேறும் கொடிய விலங்கின் உரிமையாளர் அல்லது அதனை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருக்கும் நபருக்கு எதிராக ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதியை பொருந்தச் செய்வதற்கு அவர்

(i) ஓர் கொடிய விலங்கை தனது நிலத்தில் கொணர்ந்திருக்க வேண்டும்;

(ii) அவ்விலங்கு அவ்விடத்திலிருந்து தப்பி வெளியேறியிருக்க வேண்டும்.

இவ்விரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போது, அவ்விலங்கினால் ஏற்படும் அனைத்து இயல்பான விளைவுகளுக்கும் அதன் உரிமையாளர் அல்லது அதனை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருப்பவர் பொறுப்பாவார். மேலும் அவர் தன் தரப்பில் தவறு அல்லது கவனக்குறைவு ஏதுமில்லை என்று வாதிடுவது அனுமதிக்கப்படாது.

May Vs Burdett, (1846) 9 QB 101., என்ற வழக்கில், பிரதிவாதியின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் இருந்த குரங்கு அவரின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பி வெளியேறி வாதியைக் கடித்ததற்கு பிரதிவாதி பொறுப்பாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய முதன்மை நீதிபதி டென்மன், மனித இனத்தை தாக்கும் அல்லது கடிக்கும் குணத்தைக் கொண்ட விலங்கு என்பதை அறிந்திருந்தே ஓர் விலங்கை பராமரிப்பவர் அல்லது அதனை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நபர், அத்தகைய விலங்கினால் ஏற்படும் விளைவுகளுக்கு, அவரின் கவனக்குறைவு அல்லது தவறு மெய்ப்பிக்கப்படாமல் இருந்தாலும் முதற்பார்வையிலேயே பொறுப்பாகுவார் என்றுக் குறிப்பிட்டார்.

கொடிய விலங்குகளைப் பராமரிப்பவர்கள் அல்லது அதனை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டிருப்பவர்கள், அவ்விலங்குகள் தப்பிச் சென்று ஏற்படுத்தும் தீங்குகளுக்கு கடும் பொறுப்பு விதியின்கீழான பொறுப்பு நிலை பொருந்தும் என்று நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகளில் குறிப்பிட்டுள்ளன. தெரிவுறு விதியின்கீழ்

வகைப்படுத்தப்பட்டுள்ள கொடிய விலங்குகளைப் பொறுத்தவரை அதனை பராமரிப்பவர் மற்றும் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள், அத்தகைய விலங்குகளின் அபாயத்தன்மையை அறிந்திருந்தே தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளனர் என்னும் மறுக்க முடியா அனுமானத்தை சட்டம் குறிப்பிடுகிறது. குறிப்பாக, ஓர் விலங்கு, கொடிய விலங்கு வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் உண்மையில் அது நன்கு பழக்கப்படுத்தப்பட்ட ஒன்று என்று வாதிடுவதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் கடும் பொறுப்பு நிலைக்கு இது ஓர் எதிர்வாதமாகாது. **Behrens Vs Bertram Mills Circus Ltd., (1957) 1 All ER 583.,** வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். (காண்க பக்கம் எண் 326).

இங்கிலாந்தில் விலங்குகள் குறித்த இயற்றாச் சட்டத்தின் விதிகள், 1971- ஆம் ஆண்டு விலங்குகள் சட்டத்தின்கீழ் ரத்து செய்யப்பட்டுவிட்டன. இருப்பினும் கொடிய விலங்குகள் அல்லது மனித இனத்திற்கு ஊறு விளைவிக்கும் குணத்தைக் கொண்டுள்ள வீட்டு விலங்குகளினால் ஏற்படுத்தப்படும் தீங்குகளுக்கு, அதன் உரிமையாளர் அல்லது அதனை தனது பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நபரின்மீது இச்சட்டம், ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் உருவாக்கப்பட்ட கடும் பொறுப்பு நிலையை சுமத்துகிறது.

(இ) அபாயகரமான செயல்பாடுகளுக்கு கடும் பொறுப்பு விதியின் பொருந்துகை (Applicability of the rule of strict liability in respect of dangerous operations):

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கில் உருவாக்கப்பட்ட கடும் பொறுப்பு விதியை நீதிமன்றங்கள் பல்வேறு அபாயகரமான செயல்பாடுகளுக்கும் நீட்டித்துள்ளது. **Rainham Chemical Works Ltd., VS Belvedre Fish Guano Co., (1921) 2 AC 465.,** என்ற வழக்கில் அரசின் வெடிமருந்து தேவையின் நோக்கத்திற்காக, ஓர் நிறுவனம் வெடிமருந்து தயாரிப்பில் ஈடுபட்டிருந்தது. வெடிமருந்து தயாரிப்பதற்கான மூலப்பொருளான 'நைட்ரேட் ஆஃப் சோடா' (nitrate of soda) மற்றும் 'டை நைட் ரோஃபினல்' (dinitrophenol) ஆகிய இரண்டையும் அருகருகே அந்நிறுவனம் சேமித்து வைத்திருந்தது. அந்நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த மூலப்பொருட்கள் பயங்கர சப்தத்துடன் வெடித்ததில் உயிரிழப்பும் மற்றும் அருகிலிருந்த சொத்திற்கு பலத்த சேதமும் ஏற்பட்டது. நீதிமன்றம் ரைலாண்ட் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் விதி பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டது. இதே போன்று **Hoare & Co., McAlpine, (1923) 1 Ch. 167.,** என்ற வழக்கில், பிரதிவாதிகள் தங்களின் இடத்தில் கட்டிடம் கட்டுவதற்காக அதிக எண்ணிக்கையிலான நீண்ட எடை அதிகமுள்ள தூண்களை நிலத்தில் அடித்து இறக்கியபோது ஏற்பட்ட கடுமையான நில அதிர்வுகளினால் வாதிக்குச் சொந்தமான புகழ்பெற்ற பழைய கட்டிடத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக, அக்கட்டிடம், ஓர் ஆபத்தான கட்டிடமாக அறிவிப்பு அளிக்கப்பட்டதால், அறிவிப்பில்

குறிப்பிடப்பட்டிருந்த ஆணைக்கு இணங்க, கட்டிடத்தின் பெரும்பகுதியை வாதி இடிக்க வேண்டியதாயிற்று. நில அதிர்வுகள், பிரதிவாதிகளின் நிலத்தை தாண்டி (வெளியேறி) வாதியின் இடத்திற்குச் சென்று அவருக்கு இழப்பை ஏற்படுத்தியதால் கடும்பொறுப்பு விதியின்கீழ் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

West Vs Bristol Tramways Co., (1908) 2 KB 14., என்ற வழக்கில், டிராம்வே நிறுவனம் பயன்படுத்திய 'கிரியோசோட்' (creosote) மேற்பூச்சு பூசப்பட்ட கட்டைகளில் இருந்து வெளியேறிய புகை, சாலையை ஒட்டியிருந்த வாதியின் வளாகத்திலிருந்த செடிகளை சேதப்படுத்தியதற்கு ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதியின்கீழ் பிரதிவாதிகள் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Powell Vs Fall, (1880) 5 QBD 597., என்ற வழக்கில், ஒரு நபர், மிக அதிகளவு எடையுள்ள பொருளை இழுப்பதற்கான 'என்ஜினை' (traction engine) பயன்படுத்தும்போது, அதனின்று தீப்பொறி வெளியேறாமல் இருப்பதற்கு அனைத்து முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டாலும்கூட, அதனின்று வெளிப்பட்ட தீப்பொறி, மற்றொரு நபரின் வைக்கோற்போரை அழித்தால் கடும்பொறுப்பு விதியின்கீழ் பொறுப்பாகுவார் எனக் கூறப்பட்டது. பிரதிவாதியால் தனது கட்டிடத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கும் தீப்பற்றக்கூடிய அபாயகரமானப் பொருள், அவர் தனது நிலத்தை ஏதேனும் இயல்புக்கு மாறாகப் பயன்படுத்தும் போதாக இருக்க வேண்டும் என்று **Mason Vs Levy Auto parts, (1967) 2 All ER 62.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

தன்னுடைய நிலத்தில் சேமித்து வைத்திருந்த மின்சாரம் வெளியேறி ஓர் நபருக்கு அல்லது அவர் தனது சொத்தை சாதாரணமாகப் பயன்படுத்துவதற்கு தீங்கு விளைவித்தால், அத்தகைய நில உரிமையாளருக்கு ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் கடும் பொறுப்பு விதி பொருந்தும் என்றும் ஆனால், மிகக்குறைவான மின் கசிவினால் (வெளியேற்றத்தினால்) பாதிக்கப்படுமாறு தயாரிக்கப்பட்ட அசாதாரண விற்பனை சாதனத்திற்கு (peculiar trade apparatus) ஏற்பட்ட சேதத்திற்கு இவ்விதி பொருந்தாது என **Eastern and South African Telegraph Co. Vs Cape Town Tramways Co., (1902) AC 381.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கின் விதி, பல இந்திய வழக்குகளுக்கும் பொருந்தச் செய்யப்பட்டுள்ளது. **M.Madappa Vs K.Kariappa, AIR (1964) Mys 80.,** என்ற வழக்கில், பிரதிவாதி தன்னுடைய நிலத்தில் தீ மூட்டினார். அவ்வாறு தீ மூட்டும்போது, அருகிலுள்ள நிலங்களுக்கு தீ பரவாமல் இருப்பதற்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதனையும் பின்பற்றவில்லை. நீதிமன்றம், பிரதிவாதி ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளட்சர் வழக்கு விதியின்கீழ் பொறுப்பாவார் எனத் தீர்ப்பளித்தது. **Ramnath Vs Kalanath, ILR 1950 Nag**

509., என்ற வழக்கில், நில உரிமையாளர் ஒருவர், தன்னுடைய நிலத்தில் இயற்கையாக நிரம்பியுள்ள தண்ணீரால் ஏற்படும் சேதங்களில் இருந்து பாதுகாக்க, தன்னுடைய துரதிருஷ்டவசமான நிலையை மற்றொருவருக்கு மாற்றக்கூடிய வகையில், மற்றொருவரின் சொத்தினுள் அதனை திருப்பிவிட (வெளியேற்ற) எவ்வித உரிமையும் கொண்டிருக்கவில்லை என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

SHORT NOTES

96. போபால் விஷவாயு விபத்து / Bhopal Gas Leak Tragedy (அல்லது) போபால் விஷவாயு வழக்கு / Bhopal Gas Leak Case

வழக்கின் பொருண்மைகள் (Facts):

(PART A, வினா எண் 70-க்கான விடையின் 2-ம் பத்தியில் காண்க. பக்கம் எண் 317).

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு (Supreme Court's Judgment):

1986-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் போபாலில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடரப்பட்டது. இடைக்கால நிவாரணமாக ரூபாய் 3,900 கோடி கோரப்பட்டது. மாவட்ட நீதிபதி கோரப்பட்ட தொகையில் 1/10-க்கும் குறைவாக ரூபாய் 350 கோடியை இடைக்கால நிவாரணமாக அறிவித்தார். மேல்முறையீட்டில் இத்தொகை மேலும் குறைக்கப்பட்டு ரூபாய் 250 கோடியானது. இரு தரப்பினரும் மீண்டும் மேல்முறையீடு செய்தன. விபத்து நடந்து ஐந்து வருடங்கள் கடந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை என்று ஆதங்கத்திலும், யூனியன் கார்பைடு நிறுவனத்தின் எதிர்ப்புப்போக்கும், உச்சநீதிமன்றத்தை விரைவான ஓர் இறுதி முடிவு எடுக்கத் தூண்டியது. உச்சநீதிமன்றம் 14.02.1989 தேதியன்று தனது இறுதி தீர்ப்பாக 470 மில்லியன் டாலர்களை (இந்திய மதிப்பில் சுமார் 750 கோடி) பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாகவும் இறுதியாகவும் அளிக்கும்படி ஆணையிட்டது. மேற்குறிப்பிட்ட தொகையை 31.03.1990 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்பதையும் குறிப்பிட்டது. மேலும் இழப்பீட்டுக் கோரிக்கைகளை முடிவு செய்வதற்காக 40 ஆணையர்கள் மற்றும் அவசியமான பணியாளர்களை நியமிக்குமாறு அரசுக்கு ஆணையிட்டது.

மேற்கண்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவும் எதிர்ப்பும் இருந்த நிலையில், இத்தீர்ப்புக்குறித்து அரசமைப்புச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின்கீழ் வினாக்கள் எழுப்பப்பட்டது. உச்சநீதிமன்றம் **Union Carbide Corporation Vs Union of India, AIR 1992 SC 248.,** என்ற வழக்கில் மேற்குறிப்பிட்ட தீர்ப்பின் செல்லுந்தன்மையை உறுதி செய்தது.

97. போபால் வளிகசிவு பேரழிவு சட்டம், 1985 / The Bhopal Gas Leak Disaster Act, 1985 - Nov-2019 (அல்லது) போபால் விஷவாயுக் கசிவு பேரிடர் (பரிகாரங்களை செயற்படுத்தல்) சட்டம், 1985 / Bhopal Gas Leak Disaster (Processing of Claims) Act, 1985

இந்தியப் பாராளுமன்றம், போபால் விஷவாயுப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட நபர்களின் இழப்பீட்டுக் கோரிக்கைகளை விரைவாகவும், பலனுள்ள முறையிலும் மற்றும் தகைமை நெறிப்படி அணுகுவதற்கும் மற்றும் அது தொடர்பான பொருள்களுக்காகவும் மைய அரசுக்கு சிலக் குறிப்பிட்ட அதிகாரங்கள் வழங்குவதற்காக, போபால் வாயுக் கசிவு பேரிடர் (பரிகாரங்களை செயற்படுத்துதல்) சட்டம், 1985-ஐ இயற்றியது. இச்சட்டம், 12 பிரிவுகளைக் கொண்டதாகும். இச்சட்டத்தின் பிரிவு-3, போபால் விஷவாயு வெளியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இழப்பீட்டிற்கான உரிமை கோரத்தக்க ஒவ்வொரு நபரின் சார்பாகவும் பிரதிநிதித்துவம் செய்யவும், அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான தனிமுறையிலான அதிகாரத்தை மைய அரசுக்கு வழங்குகிறது. இருப்பினும் ஒரு நபர் தனது தனிப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கை அல்லது அது தொடர்பான வழக்கின்பொருட்டு தனது சொந்த செலவில் தான் விருப்பப்படும் வழக்குரைஞரை நியமித்துக் கொள்வதை பிரிவு-3, தடுக்காது என்பதை பிரிவு-4, வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. மைய அரசு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அளித்து அவர்களின் வருகையை வலியுறுத்தவும்; ஆவணங்களை வெளிக் கொணரவும் மற்றும் முன்னிலையிடக் கோரவும்; உறுதிமொழியின் பேரில் சான்றுகளைப் பெறவும்; நீதிமன்றம் எவற்றிலும் அல்லது அரசு அலுவலகங்கள் எதனிலும் உள்ள பதிவுகள் அல்லது நகல்களைக் கோரிப் பெறவும்; சாட்சிகளை விசாரிக்க அல்லது ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு ஆணையங்களை பிறப்பிக்கவும்; மற்றும் இச்சட்டத்தின்கீழான பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்பதை பிரிவு-5, குறிப்பிடுகிறது. போபால் விஷவாயு வெளியேற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் நலனுக்கான ஆணையர்கள் மற்றும் அலுவலர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தை மைய அரசுக்கு பிரிவு-6, வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரிவு-9, இழப்பீட்டுக் கோரிக்கைகளை பதிவு செய்வதற்கும் மற்றும் அவற்றை செயற்முறைப்படுத்துவதற்கும் அவசியமான ஓர் திட்டத்தை வகுக்கவும், அத்திட்டத்தின் மேலாண்மைக்கு தேவையான செலவுகளுக்காக ஓர் நிதியத்தை (fund) உருவாக்கவும் மைய அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது. இச்சட்டத்தின் வகையங்கள் (provisions) மற்றும் இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்படும் எந்தவொரு திட்டமும், நடைமுறையில் உள்ள சட்டம் எதனிற்கும் முரண்பட்டிருந்தாலும்கூட, இச்சட்டமே ஓங்கிய அதிகாரம் கொண்டிருக்கும் என்பதை பிரிவு-11, வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது.

மேற்குறிப்பிட்ட போபால் வாயுக் கசிவு பேரிடர் (பரிகாரங்களை செயற்படுத்துதல்) சட்டம், 1985, யூனியன் கார்பைடு நிறுவனத்திற்கு எதிராக, பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது உயிரிழந்தவர்களின் வாரிசுகள் தனிப்பட்ட முறையில் வழக்கிடும் சட்ட உரிமையை மீறுவதாகவும் எனவே இச்சட்டம் இயற்கை நீதிக் கொள்கைகள் மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-14-ன் கீழான சட்டத்தின்முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்குமான, சட்டங்களின் சமமான பாதுகாப்பிற்கு (Equality before the law and Equal Protection of laws) முரணாக உள்ளது என்றும் **Charan Lal Sahu Vs Union of India, (1990) 1 SCC 613.,** என்ற வழக்கில் எதிர்க்கப்பட்டது. இவ்வாதங்களை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், போபால் விஷவாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டோரின் நலன்களை காக்கவே இச்சட்டம் இயற்றப்பட்டது என்றும், ஒவ்வொரு குடிமகனின் உரிமைகளையும், சிறப்புகளையும் பாதுகாப்பது அரசின் கடமை என்றும் இவைகள் மீறப்படும்போது அவைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களின் பெற்றோராக இருந்து (Parents Patriae, i.e., Parents of the country) அரசு செய்ய வேண்டிய கடமையினைக் கொண்டுள்ளது என்றும் இதுவே 'மக்கட்கிறை' கோட்பாடு என்றும் விளக்கம் அளித்தது.

98. ஆபத்தான கால்நடைகள் / Dangerous Chattels., May-2014, May-2015.

'Chattel' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சமமான பொருளைக் குறிக்கும் தமிழ்ச்சொல் 'அசைவியல் பொருள்' என்பதாகும். ஆங்கிலச் சட்டத்தில் 'அசைவியல் பொருள்' என்பது பொதுவாகக் குறிப்பிடும் 'பொருள்கள்' (goods) என்பதையும்விடப் பரந்ததாகும். இது வில்லங்கமற்ற சொத்து மற்றும் அதன்பகுதியாக உள்ள குளம், ஏரி, மரங்கள் (வெட்டப்படுவதற்கு முன்) தவிர்த்த அனைத்தையும் உள்ளடக்கிய சொல்லாகும். குறிப்பாக ஓர் தனிப்பட்ட நபரால் எடுத்துச் செல்லப்படுகிற, கொண்டு செல்லப்படுகிற அல்லது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகரச் செய்கிற உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தையும் குறிக்கும். எனவே ஓர் தனிப்பட்ட நபர் பராமரிக்கும் அல்லது தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருக்கும் நாய், பூனை, கோழி, ஆடு, பசு, எருது, குதிரை, கழுதை ஆகியவை அசைவியல் பொருள் என்பதனுள் அடங்கும். இருப்பினும் வினாவில் கால்நடைகள் என்று குறிப்பிட்டிருப்பதால் இது, ஆடு, பசு, எருது, குதிரை, கழுதை ஆகியவற்றைக் குறிக்கும். 'Chattel' என்பதனுள் 'Cattle' என்பதும் அடங்கும் என்பதே இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய பொருண்மையாகும்.

தெரிவுறு விதியின் (Scienter rule) நோக்கத்திற்காக விலங்குகள், (i) கொடிய அல்லது மூர்க்க விலங்குகள் (Animal ferae naturae) மற்றும் (ii) சாதுவான அல்லது வீட்டுவிலங்குகள் (Animals mansutae naturae) என இரண்டு

வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இங்கு ஆபத்தான கால்நடைகள் என்பது, தனிப்பட்ட நபர்கள் உரிமை கொண்டுள்ள அல்லது தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள ஆடு, பசு, எருது, குதிரை, கழுதை போன்றவைகளை ஆனால் முக்கியமாக, அவற்றின் இயல்புக்கு மாறாக, மனிதர்களுக்கு ஊறு அல்லது இழப்பை ஏற்படுத்தும் குணத்தைக் கொண்டிருக்கும் அத்தகைய கால்நடைகளைக் குறிக்கும். தெரிவுறு விதியின்கீழ் ஆபத்தான கால்நடைகள் ஏற்படுத்திய ஊறுகளுக்கு அதன் உரிமையாளரை பொறுப்பேற்கச் செய்ய பின்வரும் இரண்டு நிபந்தனைகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்;

முதலாவதாக, அக்கால்நடை, அது சார்ந்த இனத்தின் பொதுவான இயல்புக்கு மாறாக, மனித இனத்திற்கு ஊறு ஏற்படுத்தும் குணத்தைக் கொண்டிருந்தது. இரண்டாவதாக, அக்கால்நடை, உண்மையில் அத்தகைய குணம் கொண்டிருந்ததை அதன் உரிமையாளர் அறிந்திருந்தார்.

Hudson Vs Roberts, (1851) 6 Ex. 697., என்ற வழக்கில் பிரதிவாதியின் எருது, சாலையில் சென்று கொண்டிருந்த, வாதி அணிந்திருந்த சிவப்பு நிறக் கைக்குட்டையைக் கண்டவுடன் சினமுற்று தாக்கி காயப்படுத்தியது. முன்பே ஒருமுறை அந்த எருது அத்தகைய இயல்பை வெளிப்படுத்தியிருந்தது பிரதிவாதிக்கு தெரியும். எனவே நீதிமன்றம் பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

99. உடைமையாளர்கள் பொறுப்பு நிலைச் சட்டம், 1957 / Occupiers Liability Act, 1957

இங்கிலாந்தில், 1952 ஆம் ஆண்டு, சட்டச்சீர்த்திருத்தகுழு (Law Reform Committee) அளித்த பரிந்துரையின் பேரில், உடைமையாளர்கள் பொறுப்புநிலைச் சட்டம் 1957-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு, 1958-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டம் எட்டுப்பிரிவுகளைக் கொண்டதாகும். இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், கட்டிடத்திற்குள் வருபவர்களின் பிரிவிற்கேற்ப (class), உடைமையாளரின் பொறுப்புநிலை வேறுபட்டிருந்தது. அத்தகைய நபர்கள் பின்வரும் நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டிருந்தனர்.

முதலாவதாக, ஒப்பந்தத்தின்கீழ் நுழைபவர்கள்; இரண்டாவதாக அழைக்கப்பட்டவர்கள் (இவர்கள் ஒப்பந்தம் ஏதுமின்றி உடைமையாளரின் வியாபார நலனுக்காக அல்லது இருதரப்பினரின் நலனுக்காக நுழைபவர்கள்); மூன்றாவதாக உரிமம் பெற்றவர்கள் (இவர்கள் உடைமையாளரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியைப் பெற்று தங்களின் சொந்த நலனுக்காக நுழைபவர்கள்); மற்றும்; நான்காவதாக அத்துமீறியவர்கள் (இவர்கள் பொறுத்து உடைமையாளர்கள் வேண்டுமென்றே ஊறு விளைவிக்காதிருக்கும் கடமையை மட்டுமே கொண்டிருந்தனர்)

1957-ஆம் ஆண்டுச் சட்டம், மேற்குறிப்பிட்ட இயற்றாச் சட்டத்தின்கீழான நுழைபவர்களின் வகைப்பாட்டினை, சட்டப்படி வருகை புரிபவர்கள் (lawful visitors) மற்றும் அத்துமீறியவர்கள் என இரண்டு பிரிவினராக குறைத்தது. உடைமையாளரின் கடமை தொடர்பான இயற்றாச் சட்ட விதிகளுக்கு மாற்றாக, இச்சட்டத்தின்கீழான விதிகளின் படியே முறைப்படுத்தப்படும் என்பதை இச்சட்டத்தின் பிரிவு - 1(1), குறிப்பிடுகிறது. இச்சட்டத்தின்கீழ் 'வருகை புரிபவர்' (visitor) என்பது, சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள உரிமையை செயல்படுத்தும் நோக்கங்கள் எதன் பொருட்டும் நுழைபவரையும் உள்ளடக்கும். மேலும் இத்தகைய நோக்கத்திற்காக, உண்மையில் அவர்கள் உடைமையாளரின் அனுமதியைப் பெற்றிருந்தாலும் அல்லது பெறாதிருந்தாலும்கூட, அனுமதி அளிக்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது [பிரிவு-2(6)]. எனவே ஓர் நீதிமன்ற அலுவலர் மற்றும் நீதிமன்றத்தின் ஆணையை அல்லது பிடியாணையை நிறைவேற்றுவதற்காக நுழையும் காவலரும் உடைமையாளரின் அனுமதி பெற்று நுழைபவர்களாகவே கருதப்பட வேண்டும். இச்சட்டத்தின் பிரிவு-2(1), கட்டிடத்தின் உடைமையாளர், தன்னுடைய கட்டிடத்தில் சட்டப்படி நுழையும் அனைவர் பொருட்டும் 'பொதுவான கவனம் செலுத்தும் கடமையை' (common duty of care) கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிடுகிறது. இருப்பினும் உடைமையாளர் இத்தகைய கடமையை ஒப்பந்தம் அல்லது வேறுமுறைகளில் நீட்டிக்கவும், கட்டுப்படுத்திக் கொள்ளவும், மாற்றவும், விலக்கவும் தன்னுரிமை கொண்டுள்ளார்.

'பொதுவான கவனம் செலுத்தும் கடமை' என்பதை இச்சட்டத்தின் பிரிவு-2(2) வரையறுக்கிறது. இதன்படி, அனைத்து நேர்வுகளிலும், கட்டிடத்தினுள் நுழைபவர்கள் எந்த நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்டார்களோ அல்லது அழைக்கப்பட்டார்களோ அத்தகைய நோக்கத்திற்காக அக்கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு ஏற்ற பாதுகாப்புடன் உள்ளதா என்பதை நியாயமாக நோக்கும் அத்தகைய கவனத்தை செலுத்தும் கடமையைக் குறிக்கும். இச்சட்டத்தின் பிரிவு-3, ஒப்பந்தத்தின் விளைவாக மூன்றாம் தரப்பினர் குறித்த உடைமையாளரின் பொறுப்புநிலையையும், பிரிவு-5, ஒப்பந்தத்தின் உட்கிடையான நிபந்தனைகளையும் குறிப்பிடுகிறது. இச்சட்டம் அரசையும் கட்டுப்படுத்தும் என்பதையும் இருப்பினும், இது, 1947-ஆம் ஆண்டு, அரசு நடவடிக்கைகள் சட்டத்தின்கீழ் (The Crown Proceedings Act, 1947) கொண்டுள்ள தீங்கியல் பொறுப்பு நிலையையும்விட கூடுதலானதாக இருக்காது என்பதையும் குறிப்பிடுகிறது.

1984-ஆம் ஆண்டு உடைமையாளர்கள் பொறுப்புநிலைச் சட்டம், வருகை புரிபவர்கள் அல்லாத பிற நபர்கள் (அத்துமீறியவர்கள்) தொடர்பான உடைமையாளரின் கடமைகள் குறித்த விதிகளைக் குறிப்பிடுகின்றன. இவைகள், உடைமையாளர் அறிந்துள்ள அல்லது இருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள அத்தகைய ஆபத்துகளினால் ஏற்படும் ஊறுகளுக்கு எதிராக பாதுகாப்பது தொடர்பானதாகும்.

100. குழந்தைகள் தொடர்பான பொறுப்புநிலை / Liability towards Children, (அல்லது) சிறு குழந்தைகள் மீதான கடமை (Nov-2010) (அல்லது) குழந்தைகளது கடமை (May-2011) / Duty to Children.

ஓர் கட்டிடத்தினுள் நுழையும் அழைக்கப்பட்டவர்கள், அனுமதி பெற்றுள்ளவர்கள் மற்றும் அத்துமீறியவர்கள் போன்று குழந்தைகளை ஓர் தனிப்பட்ட பிரிவினராக சட்டம் குறிப்பிடவில்லை. அவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒன்றின் கீழானவர்களாகவும், பொறுப்புநிலை அதற்கேற்பவும் நிர்ணயிக்கப்படும். ஆனால் குழந்தைகள் பொறுத்த உடைமையாளரின் பொறுப்பு நிலையை தீர்மானிக்கும்போது, நீதிமன்றங்கள், குழந்தைகளின் முதிர்ச்சியுறா நிலை மற்றும் கவர்ச்சியினால் ஈர்க்கப்படும் அவர்களின் குணத்தையும் கருத்தில் கொள்ளும். சட்ட வயதடைந்த பெரியவர்களுக்கு நியாயமான பாதுகாப்பானதாக இருக்கும் ஏதேனுமொன்று சிறார்களுக்கு பாதுகாப்பானதாக இல்லாமல் போகலாம். குழந்தைகள் இருப்பதை அறிந்த அல்லது அறிந்திருக்க வேண்டிய உடைமையாளர் அவர்கள் குறித்து கவனம் காட்டும் கடமையைக் கொண்டுள்ளார்; மேலும், தனது கட்டுப்பாட்டில் உள்ள அல்லது தான் அறிந்துள்ள, குழந்தைகளை கவர்ந்திழுக்கும் அல்லது ஈர்க்கும் ஏதேனும் சில பொருளில் உள்ள அபாயத்தன்மையை புரிந்து கொள்ள இயலாத குழந்தைகளின் வருகையையும் எதிர்பார்த்து அவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் அல்லது வேறுபிற முறைகளில் எச்சரிக்கை செய்வதன் மூலமாக அத்தகைய அபாயத்திலிருந்து அவர்களுக்கு ஊறு ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கவும் வேண்டும்.

குழந்தைகளை கவரக்கூடிய அல்லது அவர்களுக்கு ஊறு ஏற்படுத்தத்தக்க அமைப்பு (பொறி) எதனையும் உரிய எச்சரிக்கை அளிக்கப்படாமல் வைத்திருப்பதோ, செயல்படுத்துவதோ அல்லது நிலத்தின் இயல்பை அவர்களுக்கு ஊறு ஏற்படுத்துமாறு மாற்றவோ கூடாது. **Glasgow Corpn. Vs Taylor, (1922) 1 AC 44 (HL).,** என்ற வழக்கில், 'பெர்ரி' புதர்ச்செடியில் இருந்த கண்களைக் கவரும் சிவப்பு நிற நஞ்சுக் கனிகள் 'செர்ரி' பழங்களைப் போன்றே இருந்தது. அதனைப் பறித்து உண்ட ஏழு வயதுக்குழந்தை மாண்டது. 'பெர்சி'ச் செடி வேலியிடப்படாமலும் மற்றும் அதனருகே எச்சரிக்கை அளிக்கும் அறிவிப்புகளோ ஏதுமில்லாததால் நீதிமன்றம் பிரதிவாதியான நகராட்சி நிருவாகம் பொறுப்பாகும் என்று தீர்ப்பளித்தது. குழந்தை 'பெர்ரி' பழங்களைப் பறிப்பதற்கு எவ்வித உரிமையும் கொண்டிருக்கவில்லை என்றாலும்கூட, நகராட்சி நிருவாகம், உரிய பாதுகாப்பு அல்லது எச்சரிக்கை ஏதும் செய்யாமல் அதனைப் பறித்து உண்ணத் தூண்டுவதற்கும் உரிமை கொண்டிருக்கவில்லை என இவ்வழக்கில் நீதிமன்றம் குறிப்பிட்டது.

Mourton Vs Poulter, (1930) 2 KB 183., என்ற வழக்கில், மிகப்பரந்த மரத்தின்கீழ் குழந்தைகள் வழக்கம்போல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

பிரதிவாதிகள் அந்த மரத்தை வெட்டிக் கொண்டிருந்தார்கள். அது முழுதாக கீழே விழக்கூடிய கடைசி நொடியில்கூட குழந்தைகளை எச்சரிக்கவில்லை. மரம் கீழே சாய்ந்து விழுந்ததில் பத்து வயதுச் சிறுவன் ஒருவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக எழுந்த வழக்கில், பிரதிவாதிகள் நிலத்தின் தன்மையை மாற்றும்போது, அதனால் ஊறு ஏற்படக்கூடிய வாதிக்கு, அவர் அத்துமீறி நுழைந்தவராக இருந்தாலும்கூட எச்சரிக்கை செய்யும் கடமையைக் கொண்டுள்ளார்கள் என்றும் எனவே அத்தகையக் கடமையை பிரதிவாதிகள் மீறியிருப்பதால் பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் நில உரிமையாளர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவ்விடத்திற்கு வருமாறு அழைக்காமல் அல்லது அனுமதிக்காமல் இருக்கும்பட்சத்தில், குழந்தைகளுக்காக தன்னுடைய நிலத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவோ அல்லது மறைந்துள்ள அபாயங்களில் இருந்து பாதுகாக்கவோ பொதுவான கடமை எதனையும் கொண்டிருக்கவில்லை என்று **United Zinc & Chemical Co Vs Van Britt., 258 US 268 (1922).**, என்ற வழக்கில் கூறப்பட்டது.

சிலக் குறிப்பிட்ட வழக்குகளில் பூங்காவிற்கு வரும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் அனுமதி, அவர்கள் பெரியவர்களின் துணையுடன் வரவேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டது என உடைமையாளர்களால் வாதிடப்பட்டது. எடுத்துக்காட்டாக, **Bates Vs Stone Parish Council, (1954) 3 All ER 38 CA.**, என்ற வழக்கில் 3½ வயதுக் குழந்தை ஒன்று சிறுவர்களுக்கான விளையாட்டுத்திடலில் இருந்த சறுக்கல் (chute) அமைப்பிலிருந்து கீழே விழுந்ததில் ஒரு கண்ணின் பார்வையை நிரந்தரமாக இழந்தது. பிரதிவாதிகள் அக்குழந்தை பெரியவர்களின் துணையின்றி மற்றொரு ஆறுவயது குழந்தையுடன் வந்திருந்ததால் தங்களை பொறுப்பாக்க முடியாது என வாதிட்டனர். குழந்தைகள், அவர்கள் வயது குறைவாக இருந்தாலும் பூங்காவினுள் அனுமதிக்கப்பட்டபோது கட்டுப்பாடு எதையும் விதிக்கவில்லை என்பதால் அவர்கள் உரிய அனுமதியுடன் நுழைந்தவர்களே தவிர அத்துமீறியவர்கள் அல்ல என்றும், எனவே அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் கடமை பிரதிவாதிகளுக்கு உண்டு என்றும், குழந்தை சறுக்கலில் ஏறும்போதே அது அபாயத்தன்மை கொண்டதை பிரதிவாதிகள் அறிந்திருந்ததால் பொறுப்பாவார்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **Herrington Vs British Railway Board, (1972) AC 904.**, என்ற வழக்கில், மோரிஸ் பிரபு, வருகை புரிந்திருப்பது ஓர் குழந்தை எனின், குழந்தைகள் பெரியவர்களைவிட மிகக்குறைவான கவனம் கொண்டவர்கள் என்பதால் உடைமையாளர் அதனை மனதிற்கொண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். குழந்தைகள் அங்குமிங்கும் அலைவதும் மற்றும் எதனையும் ஆராயும் குணம் கொண்டிருப்பதும் சாதாரணமாக அனைவரும் அறிந்ததே என்றும் குறிப்பிட்டார்.

அலகு -IX (f)

சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்துதல் - தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளைப் பாதிக்கும் தீங்குகள் - பொருட்களின் மீதான அத்துமீறல் (Abuse of legal procedure - Torts affecting business and contractual relations - Trespass to goods)

PART - A/B

77. 'சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்துதல்' பற்றி ஓர் கட்டுரை வரைக.(Write an essay about 'Abuse of Legal Procedure')

SN - 101 சட்ட நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்துதல் / Malicious legal process, Nov-2011 (அல்லது) சட்ட நெறிமுறைகளை தவறாகப் பயன்படுத்துதல் / Abuse of legal procedure, Nov-2012

SN - 102 வழக்கு பராமரிப்பும் பங்குவிழை வழக்குதவியும் / Maintenance and Champerty

விடைச்சுருக்கம்: (அ) சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்தல் - (ஆ) தீய நோக்குடைய குற்றவியல் வழக்குகள் - (இ) தீய நோக்குடைய உரிமையியல் வழக்குகள் - (ஈ)வழக்கு பராமரிப்பும் பங்கு விழை வழக்குதவியும்

(அ) சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்தல் (Abuse of Legal Procedure):

சட்ட நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்துதல் என்பது, பிரதிவாதிக்கு எதிராக ஓர் நேர்மையற்ற ஆதாயத்தைப் பெறும் தீங்கெண்ணத்துடன், சட்ட நடைமுறையை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைக் குறிக்கும். பொதுவாக இச்சொல், நீதிமன்றத்தின் சில நடைமுறைகளை தீங்கெண்ணத்துடன் தவறாகப் பயன்படுத்தி மற்றொரு நபருக்கு ஊறு ஏற்படுத்துவதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. தீங்கெண்ணத்துடன் மற்றும் நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் எதுவுமின்றி சட்ட நடைமுறையை செயல்படுத்த வைப்பதும் ஓர் தவறான செயலாகும். இத்தகைய தவறான செயலினால் மற்றொருவரின் சொத்து அல்லது நபரத்துவத்திற்கு (person) ஊறு ஏற்படின், அது ஓர் வழக்கிடத்தக்க தீங்காகிவிடும். சட்டத்தின் சரியான அல்லது முறையான

நடைமுறையை, பலவந்தமாக பறித்தல் அல்லது துன்புறுத்தல் போன்ற நோக்கத்திற்கு துணை புரிவதாக பயன்படுத்தும்போதும் அல்லது மன அழுத்தத்திற்கு உள்ளாக்குவதன் மூலம் முறையற்ற நோக்கத்தை சாதித்துக் கொள்ளும்போதும் சட்டநடைமுறை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. சட்டத்தை இவ்வாறு தவறாகப் பயன்படுத்தும்போது, அது ஓர் தீங்காகிறது.

ஓர் மறைமுக நோக்கம் கொண்ட மற்றும் சட்டம், நிவாரணம் வழங்கக் கருதாத ஒன்றிற்காக வழக்கு தொடரப்படும்போதும் சட்ட நடைமுறை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. நீதிமன்ற நடைமுறையின் எல்லைக்கு உட்பட்டிராத ஓர் நோக்கத்தை செயல்படுத்துவதற்காக, வாதி வழக்கை நடத்திச் செல்கிறார் என்பது மெய்ப்பிக்கப்படும்போது, வாதிக்கு எதிராக நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்தினார் என்ற தீங்கிற்காக வழக்கிட முடியும். சட்ட நடைமுறையை முறையற்ற நோக்கத்திற்காக பயன்படுத்துவதே இத்தீங்கின் சாரமாகும். வழக்கின் மூலமாக முறையற்ற விதத்தில் ஆதாயம் பெறும் நம்பிக்கை மட்டும் போதாது மாறாக, ஏதேனும் ஓர் வெளிப்படையான செயல் இருக்க வேண்டும்.

Filmistan Distributors (India) (P) Ltd. Vs. Hansaben Baldevdas Sivalal, AIR 1986 Guj. 35., என்ற வழக்கில் இழப்பினின்று தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக எனும் வெளிப்படையான காரணத்தைக்கூறி இடைக்கால உறுத்துக்கட்டளையைப் பெற்ற பிரதிவாதிகள் அதனை வாதிக்கு இழப்பு ஏற்படுத்துவதற்காக தவறாகப் பயன்படுத்தியது, சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்திய தீங்கு புரிந்ததாகும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

சட்ட நடைமுறை தவறாகப் பயன்படுத்தப்பட்டதை மெய்ப்பிக்க பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்:

(i) பிரதிவாதியால் வழக்கு தொடரப்பட்டது;

(ii) பிரதிவாதி, நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் ஏதுமின்றி வழக்கு தொடர்ந்தார்;

(iii) பிரதிவாதி தீங்கெண்ணத்துடன் செயல்பட்டார்;

(iv) பிரதிவாதி தொடர்ந்த வழக்கு தோல்வியில் முடிந்தது; மற்றும்;

(v) தன்மீது தொடரப்பட்ட சட்ட நடைமுறைக்கு அடிப்படை ஏதுமில்லை என்பதுடன் தனது நற்பெயர் அல்லது சொத்துகளுக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்ற மறைமுக நோக்கத்திற்காக, சட்ட நடைமுறை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டது.

(ஆ) தீய நோக்குடைய குற்றவியல் வழக்கு (Malicious Prosecution):

(அடுத்து வரும் வினாவிற்கான விடையில் காண்க).

(இ) தீய நோக்குடைய உரிமையியல் வழக்கு (Malicious Civil Proceedings):

தீய நோக்குடைய குற்ற வழக்கு தொடர்ந்ததற்கு நடவடிக்கை மேற்கொள்வது போல, தீய நோக்குடைய உரிமையியல் வழக்கு தொடர்ந்ததற்கு,

அது தீங்கெண்ணத்துடனும் மற்றும் எவ்வித நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் இன்றி தொடரப்பட்டிருந்தாலும்கூட, அதன்பொருட்டு வழக்கு தொடர முடியாது என்பது ஓர் பொதுவான விதியாகும். **(Darbhangi Thakur Vs Mahabir Prasad, AIR 1917 Pat 460).** ஏனெனில், பொதுவாக எந்தவொரு உரிமையியல் வழக்கிலும், தோல்வியுற்ற வாதியே வழக்குச் செலவுகளை ஏற்பதால், அதுவே பொய்யான வழக்குகள் தொடருவதை தடுப்பதற்கு போதுமான ஓர் அச்சுறுத்தும் காரணியாகக் கருதப்படுகிறது. இருப்பினும் அசாதாரண வழக்குகளில், பிரதிவாதிக்கு வழக்குச்செலவு போதுமான இழப்பீடாக இல்லாதபோது, அவர் தம்மீது தீய நோக்குடைய உரிமையியல் வழக்கு தொடர்ந்ததன்பொருட்டு உள்ளாகிய இழப்பிற்காக வழக்கு தொடருவது அனுமதிக்கப்படுகிறது. தீய நோக்குடைய நொடிப்பு நிலை வழக்கு நடவடிக்கைகள் (Malicious insolvency proceedings), தீய நோக்குடைய நிறுவனக்கலைப்பு வழக்கு நடவடிக்கைகள் (Malicious liquidation proceedings), தீய நோக்குடைய வழக்கின் விளைவாக கைது அல்லது பிரதிவாதியின் சொத்துகளுக்கு எதிரான நிறைவேற்றுகை (execution) அல்லது பற்றுகை (attachment) நடவடிக்கைகள் போன்றவை இத்தகைய அசாதாரண வழக்குகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

தீய நோக்குடைய உரிமையியல் வழக்கு தொடர்ந்ததை அல்லது உரிமையியல் நடவடிக்கையை தவறாகப் பயன்படுத்தியதை மெய்ப்பிப்பதற்கு வாதி பலக்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும். முக்கியமாக தீங்கெண்ணம் இருந்ததை மெய்ப்பிக்க வேண்டும். இரண்டாவதாக, பிரதிவாதி நியாயமான மற்றும் சாத்தியமான காரணமின்றி வழக்கு தொடர்ந்தைக் கண்டிப்பாக குறிப்பிடுவதுடன் மெய்ப்பிக்கவும் வேண்டும் மற்றும் தனக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு, தனக்கு சாதகமாக முடிவுற்றதையும் மெய்ப்பிக்க வேண்மும். மூன்றாவதாக, அத்தகைய உரிமையியல் நடவடிக்கை தன்னுடைய சுதந்திரம் அல்லது சொத்துகளில் குறுக்கீடு செய்தது என்பதையும் அல்லது தனது புகழுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது அல்லது ஏற்படுத்தக்கூடும் என்பதையும் மெய்ப்பிக்க வேண்டும்.

(ஈ) வழக்கு பராமரிப்பு மற்றும் பங்குவிழை வழக்குதவி (Maintenance and Champerty):

ஈ(1) வழக்கு பராமரிப்பு (Maintenance): வழக்கு பராமரிப்பு என்பது, சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி, உரிமையியல் வழக்கு நடவடிக்கையில், தரப்பினர் ஒருவருக்கு, வழக்கில் தொடர்பற்ற ஒரு நபர் பணரீதியிலோ அல்லது வேறுவகையில் உதவி செய்வதைக் குறிக்கும். இது, சட்டப்படி எவ்வித நலனும் தொடர்பும் கொண்டிராத ஒரு நபர், மற்றொரு நபருக்கு பணஅளவில் அல்லது வேறுவகையில் உதவி செய்வதன் மூலமாக, மற்றொரு நபரை வழக்கிடச் செய்வதற்கு அல்லது அதனை வளர்த்துவதற்கு (to prolong) அல்லது வழக்கு நடவடிக்கையில் இருந்து பிரதிவாதி தற்காத்துக் கொள்வதற்கு செய்து கொள்கின்ற ஓர் உடன்பாடாகும். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில், மேற்குறிப்பிட்ட மூன்றாம் நபர், வழக்கின் தரப்பினர் (வாதி

அல்லது பிரதிவாதி) எவரொருவரும் உதவிடுமாறு வேண்டாமலேயே, வலியச் சென்று அவர்களுக்கு இடையேயான வழக்கில் குறுக்கிடுவதாகும். வழக்கு பராமரிப்பு, தீங்கு, குற்றம் ஆகிய இரண்டுமாகும்.

ஈ(2) பங்கு விழை வழக்குதவி (Champerty): பங்கு விழை வழக்குதவி என்பதும் வழக்கு பராமரிப்பின் ஓர் வகையேயாகும். வழக்கினை தொடருவதற்கு அல்லது மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவதற்கு அல்லது பிரதிவாதிக்கு உதவி செய்யும் மூன்றாம் நபர், அவ்வழக்கின் மூலம் பெறப்படும் ஆதாயத்தில் ஒரு பகுதியை பெற விழைவதற்கான ஓர் உடன்பாட்டினை செய்து கொள்வதாகும். இது பொதுவாக, சொத்தை திரும்பப் பெறுவதற்கான வழக்கு ஒன்றில், அச்சொத்தை திரும்ப பெறுவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பண அளவில் அல்லது வேறு வகையில் உதவி செய்து, அவ்வழக்கு வெற்றி பெற்றால் அதற்கு ஊதியமாக அச்சொத்தின் குறிப்பிடப்படும் பகுதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் பேரத்தை (bargaining) உள்ளடக்கியதாக இருக்கும்.

வழக்கு பராமரிப்பு மற்றும் பங்குவிழை வழக்குதவி ஆகிய இரண்டிலும், ஓர் உரிமையியல் வழக்கு நடவடிக்கையில், அவ்வழக்கில் தொடர்பு ஏதும் கொண்டிராத மூன்றாம் நபர் ஒருவர் குறுக்கிடுவதைக் குறிப்பிட்டாலும்கூட, இவையிரண்டிற்கும் இடையே ஓர் நுட்பமான வேறுபாடு உள்ளது. அதாவது வழக்கு பராமரிப்பில் வழக்கு தொடரப்படுவதற்கு அல்லது தொடர்ந்து நடத்தப்படுவதற்காக உதவி செய்யப்படுகிறது. பங்குவிழை வழக்குதவியில், அவ்வழக்கின்மூலம் பெறும் ஆதாயத்தில் பங்குபெற விழைவதற்காக உதவி செய்யப்படுகிறது.

Wiggins Vs Lavy, (1928) 44 T.L.R. 721., என்ற வழக்கில், வறிய நிலையில் இருக்கும் கட்சிக்காரர்களுக்கு, முறையான வழக்குமூலம் (Proper cause of action) உள்ளபோது வழக்குரைஞர்கள் தொழில்முறையிலான சட்ட உதவி செய்வது அனுமதிக்கப்படலாம் எனக்கூறப்பட்டது. **Neville Vs London Express Newspapers Ltd., (1919) AC 368.,** என்ற வழக்கில், நெவில்லி என்பவர் பொதுமக்களில் பலரை மோசடி செய்து பெருந்தொகையைப் பெற்றார். மோசடியின் மூலமாக பணத்தை இழந்த மக்கள் மீண்டும் தங்களின் பணத்தைப் பெற்றிடுவதற்கு பிரதிவாதிகள் உதவினர், நெவில்லி, பிரதிவாதிகள் வழக்கு பராமரிப்பு உதவி புரிந்ததற்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். வாதிக்கு (நெவில்லிக்கு) தனிமுறையிலான இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும், அவரின் சட்டப்படியான பொறுப்புநிலையை நிறைவேற்றிட மட்டுமே வற்புறுத்தப்பட்டார் என்பதால் பிரதிவாதிகள் வழக்கு பராமரிப்பு தீங்கிற்கு பொறுப்பாகமாட்டார்கள் என்றும் பிரபுக்கள் அவை தீர்ப்பளித்தது.

வழக்கு பராமரிப்பு மற்றும் பங்குவிழை வழக்குதவிக்கு எண்ணற்ற விதிவிலக்குகளை அங்கீகரித்ததன் விளைவாக முக்கியத்துவம் எதனையும் கொண்டிராததால், இங்கிலாந்தில் இயற்றப்பட்ட, 1967-ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்தின் பிரிவு – 14-ன்கீழ் ஒழிக்கப்பட்டுவிட்டது.

ஈ(3) இந்தியாவில் உள்ள நிலை (Position in India): இந்தியாவில், வழக்கு பராமரிப்பு மற்றும் பங்குவிழை வழக்குதவி குறித்த ஆங்கிலச் சட்டங்களைப் போன்ற தனித்த அல்லது குறிப்பிட்ட சட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. இருப்பினும், பிரிவி கவுன்சில், **Ram Coomar Coondoo Vs. Chunder Canto Mookherjee, (1876) 4 I.A. 23.,** என்ற வழக்கில், ஓர் வழக்கை தொடருவதற்காக பண உதவி அளிப்பதற்கும் மற்றும் அதற்கு மறுபயனாக வழக்கிடைச் சொத்து திரும்பப் பெறப்படின் அவற்றின் ஒரு பகுதியை பெற்றுக் கொள்வதற்காக ஓர் நேர்மையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படின், அது தன்னிலையிலேயே பொதுநலக் கொள்கைக்கு முரணானதாக கருதப்படக்கூடாது; மற்றும் சில வழக்குகளில் ஓர் வழக்கிடைச் சொத்தின்மீது தகுந்த மற்றும் முறையான உரிமைமூலம் மட்டுமே கொண்டுள்ள வேறு எந்தவொரு வழிகளும் (வசதிகளும்) இல்லாத ஒருவர் பொருட்டு, அவரின் உரிமை மற்றும் நீதியினை நிலைநாட்டுவதற்கும் மற்றும் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் அவசியத்திற்காகவும், நீதிமன்ற நடவடிக்கை மேற்கொண்டு அச்சொத்தை பெறுவதற்கு உதவி செய்யப்பட வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்டது. **Raja Venkata Subbarayyamma Garu Vs. Sri Poosapathy Venkatapathi Raju, AIR 1924 PC 162.,** என்ற வழக்கில், அச்சுறுத்திப் பறிப்பதாக இல்லாதபோதும், மனசாட்சிக்கு விரோதமானதாக இல்லாதபோதும், வழக்கு பராமரிப்பு மற்றும் பங்குவிழை வழக்குதவி செய்வது சட்டவிரோதமானது ஆகாது என பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. மேலும் இவ்வழக்கில் தீர்ப்பளித்த அட்கின் பிரபு, இந்தியாவில் வழக்கு பராமரிப்பும் மற்றும் பங்குவிழை வழக்குதவியும் சட்டமுரணானது அல்ல என்று குறிப்பிட்டார்.

78. சட்ட இயலான நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறப்படும் கோரிக்கையில் தீய நோக்குடைய குற்ற வழக்கை மெய்ப்பிப்பதற்கு உள்ள இன்றியமையாத கூறுகளை விவாதிக்க. (Discuss the essentials to prove malicious prosecution in a claim for abuse of legal procedure)

SN - 103 தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் அல்லது தீங்கெண்ண வழக்கீடு / Malicious Prosecution, May-2016, May-2017, May-2018.

விடைச்சுருக்கம்: (அ) தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் - (ஆ) முக்கிய நிபந்தனைகள் - ஆ (1) பிரதிவாதியால் குற்ற வழக்கு தொடரப்பட்டது - ஆ (2) வழக்கு வாதிக்கு சாதகமாக முடிந்தது - ஆ (3) நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் இன்றி வழக்கு தொடரப்பட்டது - ஆ (5) வாதிக்கு இழப்பு ஏற்பட்டது.

(அ) தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் (Malicious Prosecution):

தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் என்பதை எளிமையாக, ஒரு நபர் தீய நோக்கத்துடன், நியாயமான மற்றும் சாத்தியமான காரணம் எதுவுமின்றி, மற்றொருவருக்கு எதிராக ஓர் குற்ற வழக்கு தொடருவது என்று வரையறுக்கலாம். இத்தகைய வழக்கு எவருக்கு எதிராக தொடரப்பட்டதோ அத்தகைய நபருக்கு உண்மையில் இழப்பு ஏற்படும்போது அது ஓர் வழக்கு தொடரத்தக்க தீங்காகிறது. குற்றம் புரிந்தவரை எந்தவொரு நபரும் அவருக்கு எதிராக வழக்கு தொடருவதன்மூலம் சட்டத்தின்முன் நிறுத்துவதை, சட்டம் அங்கீகரிக்கிறது. ஆனால் இத்தகைய அதிகாரத்தை எவரேனும் சிலர், முறையற்ற நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தி சட்டத்தை செயல்படுத்தச் செய்வதை, சட்டம் ஊக்குவிக்காது. அப்பாவி நிரபராதிகளுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்துவது தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக முதலாம் எலிசபெத் மகாராணியின் ஆட்சிக்காலத்தில், தீயநோக்குடன் குற்றவழக்கு தொடர்ந்தவருக்கு எதிராக வழக்கு தொடருவது பயன்பாட்டிற்கு வந்தது. தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் எனும் தீங்கு, இரண்டு எதிரெதிர் கொள்கைகளை இணக்கப்படுத்தும் ஒன்றாகும். அதாவது, குற்றம் புரிந்தவர்களை சட்டத்தின்முன் நிறுத்த வைக்கும் ஒவ்வொரு நபருக்கான உரிமை மற்றும் நிரபராதிகளுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்ற அவசியம். தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கு தொடருதல் எனும் தீங்கிற்கான நடவடிக்கை, சட்டம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்தியதற்கும் மற்றும் முறையற்ற நோக்கங்களுக்காக நீதிமுறை இயந்திரம் பயன்படுத்தப்படுவதை ஊக்கமளிக்கக்கூடாது என்பதையும் நிலைநிறுத்தும் அடிப்படையைக் கொண்டதாகும்.

ஒவ்வொரு நேர்மையான குடிமகனும், தங்களுக்கு எதிரான நியாயமற்ற குற்றச்சாட்டுகளுக்காக தேவையின்றி நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்படுவதினின்று பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை விரும்புவர். ஏனெனில், அவர் இறுதியில் அத்தகைய குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலைப் பெற்றாலும்கூட, அவருக்கு கவலை, சலிப்பு, தொந்தரவு, அசௌகரியம் மற்றும் செலவுகள் என மனதளவில் கவலையும், உடலளவில் அசதியும் மற்றும் பொருளளவில் இழப்பும் ஏற்படும். இத்தகைய நேர்வுகளில் நேர்மையற்ற முறையில் அவருக்கு எதிராக சட்டத்தை செயல்படுத்தச் செய்த நபருக்கு எதிராக இழப்பீடு செலுத்த ஆணையிடுவதன் மூலமாக சட்டம் இத்தகைய செயல்களை ஊக்குவிக்காமல் தண்டிக்கும் சரியான மற்றும் நேர்மையான நடவடிக்கையை மேற்கொள்கிறது. இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் எளிதாக விளக்கலாம். 'A' என்பவர், தீங்கெண்ணத்துடன், நியாயமான மற்றும் தகுந்த காரணங்கள் ஏதுமில்லாமல், 'B'-யின்மீது திருட்டுக்குற்றம் ஒன்றிற்காக வழக்கு தொடருகிறார் என்றும், ஆனால் நீதிமன்றம் 'B' நிரபராதி என்று குற்ற விடுதலை செய்கிறது என்றும் கொள்வோம். இங்கு, 'B', 'A' தனது நற்பெயரை தாழச் செய்ததற்கும் மற்றும் திருட்டுக் குற்றத்திலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காக தனக்கு ஏற்பட்ட

செலவுகளுக்காகவும், 'A'-க்கு எதிராக ஏதேனும் பரிகாரம் கொண்டுள்ளாரா? எனும் கேள்விக்கு, தீங்கியல் சட்டத்தின்கீழ் 'B', 'A'-க்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவர் தீங்கெண்ணத்துடன் தம்மீது குற்ற வழக்கிட்டார் என்பதை மெய்ப்பித்தால் இழப்பீடு பெற முடியும் என்பதே விடையாகும்.

(ஆ) முக்கிய நிபந்தனைகள் (Essential Conditions):

பிரதிவாதி தன்மீது தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிட்டதற்காக இழப்பீடு கோரி வழக்கு தொடரும் வாதி, பின்வரும் முக்கிய நிபந்தனைகளை மெய்ப்பிக்க வேண்டும்;

(1) பிரதிவாதி தம்மீது குற்ற வழக்கிட்டார்;

(2) அவ்வழக்கு தனக்கு சாதகமாக முடிந்தது;

(3) அவ்வழக்கு நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் ஏதுமின்றி தொடரப்பட்டது;

(4) பிரதிவாதி தீங்கெண்ணத்துடன் வழக்கிட்டார்; மற்றும்;

(5) வழக்கு தொடரப்பட்டதன் விளைவாக இழப்பு ஏற்பட்டது.

இனி மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் பின்வருமாறு காண்போம்.

ஆ(1) பிரதிவாதியால் தன்மீது குற்றவழக்கு தொடரப்பட்டது (That he was prosecuted by the defendant): பிரதிவாதியால் தன்மீது குற்றவழக்கு தொடரப்பட்டது எனும் கூறு (i) குற்ற வழக்கு ஒன்று தொடரப்பட்டது மற்றும் (ii) அத்தகைய வழக்கு பிரதிவாதியால் தொடரப்பட்டது எனும் இரு உட்கூறுகளை தன்னுள் கொண்டுள்ளது.

ஓர் நீதிமுறை அலுவலர் அல்லது தீர்ப்பாயத்தின் முன்பு குற்றச்சாட்டுரைக்கும்போது குற்ற வழக்கு தொடரப்படுகிறது. காவல்துறை அலுவலர்கள் முன்னிலையிலான நடவடிக்கைகள் வழக்கு தொடருவதற்கு முந்தைய நடவடிக்கைகளாகும். **Nagendranath Ray Vs Basanta Das Bairagya, ILR (1929) 47 Cal. 25.,** என்ற வழக்கில், பிரதிவாதியின் வீட்டில் திருட்டு நடந்த பின்னர், அவர் அத்திருட்டு வாதியினால் புரியப்பட்டிருக்கலாம் என்று தான் சந்தேகிப்பதாக காவலர்களிடம் தெரிவித்தார். அதன் பின்னர் வாதி, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். ஆனால் காவல் அலுவலரின் இறுதி அறிக்கையில், அத்திருட்டு தொடர்பாக வாதியை சம்பந்தப்படுத்த எந்தவொரு சான்றும் இல்லை என்று குறிப்பிட்டிருந்ததால், அவரை குற்றவியல் நடுவர் விடுவித்தார். இதன் அடிப்படையில் வாதி, பிரதிவாதிக்கு எதிராக, தீய நோக்குடைய குற்ற வழக்கு தொடர்ந்ததற்காக வழக்கிட்டார். நீதிமன்றம், வாதியின்மீது குற்றவழக்கு ஏதும் தொடரப்படவில்லை என்றும் வெறுமனே காவல்துறையின் நடவடிக்கைகள் ஓர் வழக்கு தொடர்ந்ததாக ஆகாது என்பதால், வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதைக் குறிப்பிட்டது. 'வழக்கு தொடருவது என்பது, சட்டத்தைச் செயல்படுத்தச் செய்வதாகும் மற்றும் வினாவிற்குரிய பொருண்மை

தொடர்பாக நீதிமுறை அதிகாரம் கொண்டுள்ள எவரேனும் நபரிடம் ஓர் புகார் செய்யும்போது மட்டுமே சட்டத்தை செயல்படுத்துவதாக ஆகிறது' என்று **Mohammed Amin Vs Jogindra Kumar, AIR 1947 PC 108.,** என்ற வழக்கில் கருத்துரைக்கப்பட்டது.

வழக்கு தொடரப்படுவது என்பது எப்போது தொடங்குகிறது என்ற கேள்விக்கு, ஓர் நபர், ஓர் முறையீட்டிற்காக பதில் கூறுவதற்கு வரவேண்டும் என்று அழைப்பாணையின் மூலமாக அழைக்கப்படுவதற்கு முன்னர்வரை வழக்கு தொடரப்பட்டதாகக் கருதப்படமாட்டாது என்று **Yates Vs The Queen, (1885) 14 QBD 648.,** என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளதை இந்திய நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகளில் பின்பற்றியுள்ளன. **Sheikh Meeram Sahib Vs Ratnavelu Mudali, ILR (1912) 37 Mad 181.,** என்ற வழக்கில், அவதூறு குறித்த புகாரைப் பெற்ற பின்னர் நடுவர் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு அழைப்பாணையை அனுப்பாமல், அறிவிப்பு மட்டுமே அளித்து, இரு தரப்பினரின் கேட்பினுக்கு (hearing) பின்னர் புகாரை தள்ளுபடி செய்ததில் வழக்கு தொடருதல் ஏதும் தொடங்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

பிரதிவாதி தனக்கு எதிராக குற்ற வழக்கு தொடர்ந்ததை வாதியே மெய்ப்பிக்க வேண்டும். சட்டத்தை செயல்படுத்தச் செய்வதற்கு முக்கிய காரணமாக இருப்பவரே வழக்கு தொடருபவர் ஆவார். ஒரு நபர் தான் புகாரை அளிக்காமல், தன்னுடைய முகவர் அல்லது வழக்குரைஞர் மூலமாக அளித்தால் அந்நபரே வழக்கு தொடருபவர் ஆவார். எனவே காவல் துறையினரால் தொடரப்பட்ட வழக்கு, ஓர் தனிப்பட்ட நபரின் கோரிக்கை அல்லது அறிக்கையின் அடிப்படையில் இருப்பின், அத்தனிப்பட்ட நபரே வழக்கு தொடருபவர் ஆவார். பிரதிவாதி சாதாரணமாக நேர்மையான எண்ணத்தில் வாதியின்மீது கொண்டுள்ள சந்தேகத்தை காவலரிடம் தெரிவிக்க, காவல்துறை மேற்கொண்டு விசாரணை ஏதும் மேற்கொள்ளாமல் வாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால், பிரதிவாதி வழக்கு தொடர்ந்தவராகமாட்டார். ஆனால் பிரதிவாதி, தான் கூறும் தகவல் பொய் என்று அறிந்தே காவல்துறையிடம் தெரிவித்து, காவல்துறை மேற்கொண்டு விசாரணை எதுவும் நடத்தாமல் அது குறித்து வழக்கு தொடர்ந்தால், பிரதிவாதியே வழக்கு தொடர்ந்தவர் ஆவார். ஏனெனில் வழக்குத்தொடர தூண்டுவது என்பது, நேர்மையான சந்தேகத்தின்பேரில் தகவல் தெரிவிப்பது என்பதிலிருந்து வேறுபட்டது. ஒரு நபர் வழக்கில் சாட்சி அளிப்பதால் மட்டுமே அவரை வழக்கு தொடர்ந்தவர் எனக் கூற முடியாது. இவ்வாறு பிரதிவாதியை வழக்கு தொடர்ந்தவர் என்று தீர்மானிப்பது ஒவ்வொரு வழக்கின் பொருண்மையைச் சார்ந்ததாகும்.

ஆ(2) வழக்கு வாதிக்கு சாதகமாக முடிந்தது (Termination of proceedings in plaintiff's favour): பிரதிவாதி, தம்மீது தீய நோக்குடைய குற்றவழக்கு தொடர்ந்தார் என்பதன் காரணமாக இழப்பீடு கோரி பிரதிவாதிக்கு எதிராக வாதி வழக்கு தொடருவதற்கு ஓர் முக்கிய மற்றும் இன்றியமையாத நிபந்தனை என்னவெனில், அவ்வழக்கு வாதிக்கு சாதகமாக முடிந்திருக்க

வேண்டும் என்பதாகும். நீதிமன்றம் வாதிக்கு குற்றத்தீர்ப்பு (conviction) வழங்கியிருந்தால், வாதி, பிரதிவாதிக்கு எதிராக இத்தகைய வழக்கு தொடரமுடியாது. வாதிக்கு ஆதரவாக வழக்கு முடிந்தது என்பது, நீதிமன்றம் அவர் நிரபராதி என்று முடிவு செய்திருப்பதை மட்டும் குறிக்காது, மாறாக; இது நீதிமன்றம் வாதியை சட்டநடைமுறை நுட்பக் குறைபாடு காரணமாக விடுவித்திருப்பது மேன்முறையீட்டில், குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனையை இரத்து செய்திருப்பது அல்லது பிரதிவாதியால் தொடரப்பட்ட வழக்கு மேற்கொண்டு நடத்தப்படாமல் அல்லது தொடராமல் இருப்பது அல்லது வாதியின் விடுவிப்பு போன்றவற்றையும் உள்ளடக்கும்.

கீழமை நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பு விதிக்கப்பட்ட ஆனால் மேல்முறையீட்டில் அத்தீர்ப்பு இரத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் வாதி, பிரதிவாதிக்கு எதிராக தீய நோக்குடைய குற்றவழக்கு தொடரப்பட்டதற்காக இழப்பீடு கோரி வழக்கு தொடர முடியாது என **Reynolds Vs Kennedy., (1867) L.R. 2 CP 864.,** என்ற வழக்கில் கூறப்பட்டது. ஏனெனில், கீழமை நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, இதற்கு தடையாக இருக்கும் என்றும், அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய விடுதலைத்தீர்ப்பு எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது எனக்கூறப்பட்டது. ஆனால் இதற்குப் பின்னரான வழக்குகளில், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேற்குறிப்பிட்டுள்ள ஏதேனுமொரு முறையின் அடிப்படையில் வாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியிருப்பின், வாதி, பிரதிவாதிக்கு எதிராக தீய நோக்குடைய குற்ற வழக்கிற்காக இழப்பீடு கோரி வழக்கு தொடரலாம் எனக் கூறியுள்ளன. எ-டு: **Herniman Vs Smith, (1938) AC 305, Berry Vs B.T.C (1962) 2 QB 306.**

ஆ(3) நியாயமான மற்றும் சாத்தியமான காரணமின்மை (Absence of reasonable and probable cause): தீய நோக்குடைய குற்றவழக்கு தொடர்ந்ததற்காக இழப்பீடு கோரி வாதி தொடரும் வழக்கில், தான் குற்றம் புரிந்ததாக பிரதிவாதி நம்புவதற்கு எவ்வித நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் இன்றி தனக்கு எதிராக முந்தைய குற்றவழக்கை தொடர்ந்தார் என்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டும். நியாயமான மற்றும் சாத்தியமான காரணம் என்பது, நியாயமான காரணங்களின் அடிப்படையில், குற்றம் சாட்டுபவர் நேர்மையாக நம்புவதைக் குறிக்கும் என்று **Hicks Vs Faulkner, (1878) 8 QBD 167.,** என்ற வழக்கில் கருத்துரைக்கப்பட்டது. பிரதிவாதி, வாதியின்மீது குற்றவழக்கு தொடருவதற்கு நியாயமான மற்றும் சாத்தியமான காரணம் உள்ளதென்று நம்பினார் என்பது, அவர் அவ்வாறு நம்புவதற்கு, அச்சூழ்நிலையில் நியாயமான காரணம் இருந்தது என்ற பொருளைக் குறிக்கும். மேலும், பிரதிவாதி நம்புவதற்கு அடிப்படையாக இருந்த தகவல்கள் உண்மையானவையா என்பது இங்கு முக்கியத்துவம் பெறாது மாறாக, பிரதிவாதி அத்தகவல்களை நேர்மையான நல்லெண்ணத்துடன் நம்பினாரா என்பதே முக்கியத்துவம் பெறும். எனவே பிரதிவாதி நம்பியது உண்மையில் நடக்காததாக இருந்தாலும்கூட, அவ்வாறு இருந்ததாக நேர்மையான நல்லெண்ணத்தின் அடிப்படையில் நம்பியிருந்தால்

போதும். எவ்வாறிருப்பினும், பிரதிவாதி உண்மையென நம்பிய தகவல்களை, அது உண்மையல்ல என மெய்ப்பிக்க வாதி பொறுப்பு கொண்டுள்ளார்.

Abrath Vs North Eastern Railway Co., (1886) 11 AC 247., என்ற வழக்கில், 'X' என்ற பயணி ஒருவர், இரயில் விபத்து ஒன்றில் தனக்கு காயங்கள் ஏற்பட்டதாகக்கூறி, பிரதிவாதியான இரயில்வே நிறுவனத்திடம் இருந்து பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்றார். அதன்பின்னர், 'X' என்பவருக்கு உண்மையில் இரயில் விபத்தினால் காயமடையவில்லை என்றும் மருத்துவர் (வாதி) அளித்த பொய்யான சான்றிதழின் அடிப்படையில் அவர் இழப்பீடு பெற்றார் என்றும் பிரதிவாதியான இரயில்வே நிறுவனத்திற்கு தகவல் கிடைத்தது. இரயில்வே நிறுவனம் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு மற்றும் வழக்குரைஞரின் ஆலோசனைகளைப் பெற்றதன் அடிப்படையில் மருத்துவர் (வாதி) தங்களை ஏமாற்ற சதி செய்துள்ளதாக குற்ற வழக்கிட்டது. இருப்பினும் வழக்கின் முடிவில் வாதி விடுதலை செய்யப்பட்டார். அதன்பின்னர் வாதி (மருத்துவர்), பிரதிவாதியான இரயில்வே நிறுவனம் தம்மீது தீய நோக்குடைய குற்றவழக்கு தொடர்ந்ததற்காக இழப்பீடு வழங்கக்கோரி வழக்கிட்டார். நீதிமன்றம், இரயில்வே நிறுவனம் தாம் நம்பிய தகவல்களின் உண்மைத்தன்மையை அறிவதற்காக விசாரணை மேற்கொண்டு மற்றும் வழக்குரைஞரின் ஆலோசனையைப் பெற்று செயல்பட்டதால், அவர்கள் தொடர்ந்த வழக்கு தீய நோக்குடைய குற்றவழக்கு அல்ல என்றும் எனவே இழப்பீடு வழங்கும் பொறுப்பு கொண்டிருக்கவில்லை என்றும் தீர்ப்பளித்தது.

ஆ(4) பிரதிவாதியால் தீங்கெண்ணத்துடன் வழக்கு தொடரப்பட்டது (Prosecution by defendant with malice): தன்மீது வழக்கு தொடர்ந்ததன் மூலம் பிரதிவாதி தீங்கெண்ணத்துடன் செயல்பட்டுள்ளார் என்பதையும் வாதி மெய்ப்பிக்க வேண்டும். தீங்கெண்ணம் என்பது ஏதேனும் முறையற்ற அல்லது தவறான உள்நோக்கம் இருப்பதை அதாவது பொருத்தமான அல்லது சட்டப்படியான நோக்கத்திற்கு அல்லாதவற்றிற்காக, சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்தும் நோக்கத்தைக் குறிக்கும் என்று **Jogendra Vs Lingraj, AIR 1970 Ori 91.,** என்ற வழக்கில் கூறப்பட்டது. நியாயமான மற்றும் சாத்தியமான காரணங்கள் இல்லாமல் உள்நோக்கத்தை அனுமானிக்க முடியாது. இது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சுற்றிலைகளில் இருந்து மட்டுமே அனுமானிக்க முடியும். ஏனெனில் ஒரு நபர் தன் மனதினுள் நினைப்பதை நேரடி சான்றுகள் மூலம் மெய்ப்பிக்க முடியாது. 'மனிதன் மனதினுள் நினைப்பதை பேயானும்கூட அறிய முடியாது' (Intention of the man even the devil knowth not) என்றொரு பழமொழியுண்டு. உண்மையில் தீய நோக்குடைய குற்ற வழக்கின் சாரம் தீங்கெண்ணம் அல்லது முறையற்ற உள்நோக்கமாகும். தீய நோக்குடைய குற்ற வழக்கு தொடர்ந்ததற்காக இழப்பீடு கோரி தொடரப்படும் வழக்கின் இரண்டு வேறுபட்ட மற்றும் வாதி கண்டிப்பாக மெய்ப்பிக்க வேண்டிய உட்கூறுகள் 'தீங்கெண்ணம்' மற்றும் 'நியாயமான மற்றும் சாத்தியமான காரணமின்மை'

ஆகும். வேறு முறையில் குறிப்பிடுவது எனில், வாதி, தனக்கு எதிராக பிரதிவாதி தொடர்ந்த குற்றவழக்கு, தீங்கெண்ண உணர்வின் அடிப்படையில் அமைந்ததே தவிர நீதியை நிலை நிறுத்துவதற்காக அல்ல என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

ஆ(5) இழப்பு (Damage): தம்மீது பிரதிவாதி தொடர்ந்த தீய நோக்குடைய குற்ற வழக்கின் காரணமாக இழப்பு ஏற்பட்டுள்ளதை வாதி மெய்ப்பிக்க வேண்டும். இழப்புகளில்

(i) நற்பெயருக்கு இழுக்கு (சேதம்); (ii) உயிர், உடல் அல்லது தன்னுரிமை தொடர்பான இழப்பு ஏற்படுவதற்கான அபாயம் மற்றும் (iii) சொத்துகளுக்கான இழப்பு என மூன்று வகையுண்டு. இவற்றில் ஏதேனும் ஒரு பிரிவின்கீழ் தனக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று வாதி மெய்ப்பிப்பது, அவர் பிரதிவாதிக்கு எதிராக தீய நோக்குடைய குற்ற வழக்கு தொடர்ந்ததற்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்படும் வழக்கிற்கு ஆதரவாக இருக்கும். இவ்வகையின்கீழ் வழங்கப்படும் இழப்பீடு, எவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதோ (வாதி) அத்தகைய நபரின் உணர்வுகளுக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கான (injury to the feelings) கருணைத்தொகை என்பதன் அடிப்படையிலும் மற்றும் வாதி, வழக்கிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காக உள்ளாகிய நியாயமான செலவுகளுக்கு ஈடான தொகை எனும் இரண்டு அடிப்படைகளைச் சார்ந்ததாக இருக்கும். மேலும் Rishab Kumar Vs K.C.Sharma, AIR 1961 MP 329., என்ற வழக்கில், தகுதியான வழக்குகளில் எச்சரிக்கை இழப்பீடும்கூட (exemplary damage) வழங்கப்படமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

79. தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளைப் பாதிக்கும் தீங்குகள் பற்றி பொருத்தமான வழக்குகளுடன் விளக்குக. (Explain with suitable caselaws about the torts affecting business and contractual relations)

SN - 104 ஒப்பந்த மீறுகையைத் தூண்டுதல் / **Inducing Breach of contract.**

SN - 105 ஏமாற்றுதல் / **Deceit** (அல்லது) மோசடி / **Fraud - May-2016, May-2017, May-2018(v), May-2019, Nov-2019(v).**

SN - 106 மிரட்டுதல் அல்லது அச்சுறுத்துதல் / **Intimidation.**

SN - 107 சதி அல்லது கூட்டுச்சதி / **Conspiracy - May-2012, Nov-2015.**

SN - 108 தீங்கிழைக்கும் பொய்மை / **Injurious falsehood - Nov-2017 (v).**

SN - 109 வணிகப்போலி / **Passing off - Nov-2012, May-2016, May-2018.**

விடைச்சுருக்கம்: (அ) முன்னுரை (1) ஒப்பந்த மீறுகையைத் தூண்டுதல் - (2) ஏமாற்றுதல் - (3) மிரட்டுதல் - (4) சதி - (5) தீங்கிழைக்கும் பொய்மை - (6) வணிகப்போலி

(அ) முன்னுரை (Introduction):

ஒவ்வொரு நபரும் சட்டத்திற்குட்பட்டு தாங்கள் விரும்பும் தொழிலை மேற்கொள்ளவும் அதன்பொருட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதை நிறைவேற்ற மற்றும் நிறைவேற்றப்படவும் உரிமை கொண்டுள்ளனர். தனிப்பட்ட நபரின் நலன் மற்றும் சமுதாய நலனுக்கு அடிப்படையான இத்தகைய உரிமைகளை சட்டம் அங்கீகரித்து பாதுகாக்கிறது. எவரொருவரும் நேர்மையற்ற முறையில் தீய நோக்கத்துடன் இத்தகைய உரிமைகளில் குறுக்கீடு செய்வதையோ அல்லது சுய ஆதாயம் பெறுவதையோ சட்டம் அனுமதிக்காது. தொழில் மற்றும் ஒப்பந்த உறவுகளை பாதிக்கச் செய்யும் செயல்களை தீங்கியல் சட்டம் பல்வேறு தீங்குகளாகக் குறிப்பிட்டு அதற்கான நிவாரணங்களை வழங்குவதன்மூலமாக தொழில்புரிவோர் மற்றும் ஒப்பந்த தரப்பினர்களின் நலன்களை பாதுகாக்கிறது. இது தொடர்பாக தீங்கியல் சட்டம் பின்வரும் தீங்குகள் குறித்து அணுகுகிறது.

(1) ஒப்பந்த மீறுகைக்குத் தூண்டுதல் (Inducing breach of contract):

தரப்பினர்களுக்கு இடையே செய்து கொண்டுள்ள ஓர் ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதை அறிந்திருந்தே, ஓர் நபர், சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் எதுவுமின்றி அவர்களில் ஒருவரை அவ்வொப்பந்தத்தை மீறுமாறு அல்லது அவ்வொப்பந்தத்தில் இருந்து விலகுமாறு தூண்டுவதே ஒப்பந்த மீறுகையைத் தூண்டுதல் என்பதாகும். ஒப்பந்த மீறுகையைத் தூண்டுவது ஓர் தீங்காகும். ஒரு நபர், தனக்கு பொருத்தமான மற்றும் ஆதாயம் அளிக்கக்கூடிய ஒப்பந்தத்தை தன் விருப்பம்போல் செய்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். எனவே சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி ஒரு நபர் தனது ஒப்பந்தத்தை நிறைவேற்றும் சட்ட உரிமையில் மற்றொருவர் குறுக்கிடுவது வழக்கிடத்தக்க தீங்காகும்.

Lumley Vs Gye, (1853) 2 E&B 216., என்ற வழக்கில்தான் முதன்முதலாக, ஒப்பந்த மீறுகையைத் தூண்டுவது ஓர் தனித்த தீங்காக அங்கீகரிக்கப்பட்டது. இவ்வழக்கில் புகழ்பெற்ற இசை நாடகப் பாடகரான (Operative singer) ஜோனா வாக்னர் (Johanna Wagner) என்றப் பெண், வேறெங்கும் பாடாமல் வாதியின் கலையரங்கில் மட்டும் ஓர் குறிப்பிட்ட காலம்வரை பாடுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டிருந்தார். பிரதிவாதி, பாடகி வாக்னர் வாதியுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை அறிந்திருந்தே, அவருடைய கலையரங்கில் பாடுவதற்காக வாக்னருக்கு பெருந்தொகையை வழங்கி, அவர் வாதியுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை மீறத் தூண்டினார். வாக்னரும் வாதியுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை மீறியதால் வாதிக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது. வாதி, தனக்கு தனிமுறையிலான இழப்பு ஏற்பட்டதாக பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது. இதன்பின்னரே, ஒப்பந்த மீறுகையைத் தூண்டுவது எனும் விதி, அது தனிப்பட்ட அல்லது பிற அனைத்து வகையான ஒப்பந்தங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

1(a) மூன்று வகைகள் (Three categories): ஒப்பந்த மீறுகையைத் தூண்டுவது பின்வரும் மூன்று முறைகளில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்:

முதலாவதாக, ஒரு நபர் நேரடியாக குறுக்கிட்டு ஒப்பந்த தரப்பினர்களில் ஒருவரை வலியுறுத்துவதன் மூலம் ஒப்பந்த மீறுகைக்குத் தூண்டுவது, நேரடியாகக் குறிக்கிடுதல் என்பது ஒரு நபர் தாமோ அல்லது தனது முகவர் மூலமாகவோ பேசுவது, அல்லது எழுதுவது அல்லது வெளியிடப்பட்ட எழுத்துக்கள் மூலமாக, ஒப்பந்த தரப்பினரில் ஒருவருக்கு தெரிவித்து அவருக்கு அழுத்தத்தை (pressure) அல்லது வலியுறுத்துவதையும் உள்ளடக்கும் **[Greig Vs Insole, (1978) 3 All ER 449].** வலியுறுத்துவது என்பது வெறுமனே ஆலோசனை வழங்குவதினின்று வேறுபட்டதாகும். எவ்வாறு இருப்பினும், மேற்குறிப்பிட்ட எந்தவொருமுறையின் மூலமாக இருந்தாலும் (பேச்சு, வெளியிடப்பட்ட எழுத்துகள்) ஒரு நபர் மற்றொரு நபருடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தை முறிக்கச் செய்யும் விளைவைக் கொண்டிருப்பின் அது வலியுறுத்துவது என்பதாகும்.

இரண்டாவதாக, ஒப்பந்தத்தில் குறுக்கீடு செய்யும் நபர், சட்ட விரோதமான ஓர் செயலை, ஒப்பந்த தரப்பினரில் ஒருவருக்கு அல்லது அவரின் சொத்துகளுக்கு எதிராகச் செய்வதன்மூலம் அவர், மற்றொருவருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் செய்வது. எடுத்துக்காட்டாக, 'A' எனும் நபர், 'B' மற்றும் 'C'-க்கு இடையே ஓர் ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதை அறிந்திருந்தே, 'B', 'C'-யுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாதவாறு, 'B'-ஐ சட்டவிரோதமாக அடைத்து வைப்பது அல்லது 'B', தனது ஒப்பந்த கடமையை நிறைவேற்றுவதற்கு அவசியமான கருவிகளை உடைப்பது அல்லது அழிப்பதைக் குறிப்பிடலாம்.

மூன்றாவதாக, ஒப்பந்தத்தில் குறுக்கிடும் 'A' என்பவர், ஒப்பந்த தரப்பினரான 'B' என்பவர், 'C'-யுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறச் செய்யும் நோக்கத்துடன், மூன்றாம் நபர்ஒருவரை, 'B'-ஒப்பந்தப்படியான அவரின் செயலை செய்வதனின்று தடுக்குமாறு ஏதேனும் சட்டவிரோதச் செயலைச் செய்ய வற்புறுத்துவது.

(1) (b) மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மைகள் (Factors to be proved): நடைமுறையில் உள்ள ஓர் ஒப்பந்தத்தில் குறுக்கிட்டதற்காக வாதி தொடரும் வழக்கில் பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்;

(i) ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் பிரதிவாதி நேரடியாக அல்லது மறைமுகமாக குறுக்கிட்டார்;

(ii) தனக்கும் மற்றொருவருக்கும் இடையே நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தை அறிந்திருந்தே குறுக்கிட்டார்;

(iii) ஒப்பந்தத்தில் குறுக்கீடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் குறுக்கீடு செய்தார்;

(iv) வாதிக்கு தனிப்பட்ட முறையில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கூறுகளை மெய்ப்பிப்பதோடு, நியாயப்படுத்தலின் அடிப்படையில் பிரதிவாதியால் எழுப்பப்பட்ட எதிர்வாதங்களை வாதி வெற்றிகரமாக மறுத்திருக்க வேண்டும்.

2. ஏமாற்றுதல் அல்லது மோசடி (Deceit or Fraud):

ஒருவர் பொய்யான தகவல் ஒன்றை, மற்றொருவர் அதை நம்பி நடக்க வேண்டும் எனும் எண்ணத்துடன் கூறி, அவரும் அதை நம்பி செயல்படுவதன் விளைவாக இழப்பை அடைந்தால், அப்பொய்யான தகவலைகூறிய செயல் ஏமாற்றுதல் எனும் தீங்கு புரிந்ததாகும். ஏமாற்றுதல் அல்லது மோசடி என்பது, ஒரு நபர் சட்டப்படியாக பெறுவதற்கு தகுதி கொண்டுள்ள ஒன்றை நியாயமற்ற முறையில் இழக்கச் செய்வதற்காக வேண்டுமென்றே செய்யப்படுகின்ற மற்றொரு நபரின் செயலைக் குறிக்கும். வாதியை ஏமாற்றி அதன்மூலம் அவரை இழப்பிற்கு உள்ளாக்க வேண்டும் எனும் எண்ணத்துடன் பிரதிவாதியால் அளிக்கப்படும் ஓர் பொய்யான உறுதிமொழி, ஏமாற்றுதல் எனும் தீங்கிற்கான வழக்கிடுவதற்கு காரணமாக அமையும்.

2(a) மெய்ப்பிக்கப்பட வேண்டிய கூறுகள் (Factors to be proved): ஏமாற்றுதல் என்னும் தீங்கிற்காக பிரதிவாதிக்கு எதிராக வாதி தொடரும் வழக்கில் பின்வரும் கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும்:

(i) பிரதிவாதி தன்னிடம் கூறிய கூற்று பொய்யானது;

(ii) அக்கூற்று பொய்யானது என்பதை பிரதிவாதி அறிந்திருந்தே கூறினார்;

(iii) அத்தகைய கூற்று தன்னை ஏமாற்ற வேண்டும் எனும் எண்ணத்துடன் கூறப்பட்டது; மற்றும்;

(iv) பிரதிவாதி கூறிய கூற்றினை நம்பி தான் செயல்பட்டதன் விளைவாக இழப்பு ஏற்பட்டுள்ளது.

(i) பொருண்மையைப் பற்றிய பொய்யானக் கூற்று (False statement of fact): ஏமாற்றுதல் அல்லது மோசடி தீங்கிற்காக பிரதிவாதியை பொறுப்பாக்குவதற்கு, பொருண்மை பற்றிய பொய்யான கூற்று ஒன்றை அவர் வாதியிடம் கூறினார் என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டும். **Edington Vs Fitzmaurice, (1885) 29 Ch.D. 459.,** என்ற வழக்கில், நிறுவனத்தின் இயக்குநர்கள், நிறுவனத்தின் கட்டிடங்களை முழுமையாக கட்டி முடிப்பதற்கும் மற்றும் நிறுவனத்தின் வியாபார மேம்பாட்டிற்கான நோக்கத்திற்காகவும் கடனீட்டு பத்திரங்களை (debentures) விற்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் உண்மையில் கட்டாயமாக செலுத்த வேண்டிய நெருக்கடியான கடன்களை செலுத்துவதற்கு அத்தொகையை பயன்படுத்தினார்கள். பொய்யான தகவலை அளித்ததால் இயக்குநர்கள் மோசடித்தீங்கு புரிந்துள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ii) பொய்யானக் கூற்று என்பதை அறிந்திருத்தல் (Knowledge about the falsity of the statement): ஏமாற்றுதல் தீங்கிற்காக பிரதிவாதியை பொறுப்பாக்குவதற்கு, பிரதிவாதி, பொய்யானக்கூற்று என்பதை அறிந்திருந்தே கூறினார். அல்லது அதன் உண்மைத்தன்மை பற்றி அவரே நம்பியிருக்கவில்லை என்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டும். ஓர் நேர்மையான நபரை மோசடி செய்பவராகக் கருதமுடியாது. எனவே, பிரதிவாதி தான் கூறும் தகவல் உண்மையானது என நேர்மையாக நம்பியிருந்தால் அங்கு ஏமாற்றுதல் என்பது இருக்காது. **Derry Vs Peek, (1889) 14 AC 337.,** என்ற வழக்கில் 'ஏமாற்றுதல்' என்ற வழக்கை நிலை நிறுத்துவதற்கு, மோசடிக்கான சான்றுறுதி (proof) இருக்க வேண்டும் என்றும் ஓர் பொய்யான அறிக்கை (a) அறிந்திருந்தே, அல்லது (b) அதன் உண்மைத்தன்மையின் மீது நம்பிக்கை இல்லாமல், அல்லது (c) அத்தகவல் உண்மையா அல்லது பொய்யா என்பதைப்பற்றி அக்கறையின்றி அல்லது அசட்டு துணிவுடன் கூறப்பட்டது என்பதை மெய்ப்பிப்பதன் மூலமாக மோசடியை மெய்ப்பிக்க முடியும் என்பதையும் ஹெர்ஷெல் பிரபு விளக்கினார்.

(iii) ஏமாற்ற வேண்டும் எனும் எண்ணம் (Intention to deceive): தான் கூறுவதை நம்பி அதன் அடிப்படையில் வாதி செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பிரதிவாதி பொய்யான தகவலைக் கூறியிருக்க வேண்டும். பிரதிவாதி, தான் 'A'-யிடம் கூறும் தகவலை நம்பி 'B' செயல்படலாம் என்பதை அறிந்திருந்தாலோ அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணம் இருந்தாலோ, அவர் 'B'-யிடம் நேரடியாக தகவலைக் கூறாமல் இருந்தாலும்கூட, 'B'-க்கும் பொறுப்பாகுவார். ஆனால் பிரதிவாதி, தாம் கூறிய தகவல் உண்மையானது என நேர்மையாக நம்பி கூறியிருப்பின் அவர் ஏமாற்றுதல் அல்லது மோசடி எனும் தீங்கிற்கு பொறுப்பாகமாட்டார் **[Peek Vs Gurney, (1873) L.R.6 HL 377].**

(iv) இழப்பு (Damage): வெறுமனே ஏமாற்றுவதற்கான முயற்சி மட்டுமே, ஏமாற்றுதல் என்ற தீங்காகாது. பிரதிவாதியின் பொய்யானக் கூற்றை உண்மையென நம்பி செயல்பட்டதால் தனக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதை வாதி மெய்ப்பிக்க வேண்டும் என்று **Dobell Vs Stevens, (1825) 3 B&C 623** என்ற வழக்கில் கூறப்பட்டது.

(3) மிரட்டுதல் அல்லது அச்சுறுத்துதல் (Intimidation):

தற்போது மிரட்டுதல் அல்லது அச்சுறுத்துதல் என்பது ஓர் தீங்காக நிலைபெற்றுவிட்டது. இது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-503-ன்கீழான ஓர் குற்றமுமாகும். மிரட்டுதல் என்பது, ஒரு நபர் மற்றொரு நபருக்கு இழப்பை ஏற்படுத்தும் எண்ணத்துடன், தான் ஒரு சட்டவிரோதச் செயலை அதாவது அவரது உடலுக்கு அல்லது சொத்துகளுக்கு ஊறு அல்லது இழப்பை ஏற்படுத்திவிடுவதாக அவரை அச்சுறுத்தி அல்லது மிரட்டி, அவருக்கு அல்லது மூன்றாம் நபர் ஒருவருக்கு இழப்பை விளைவிக்கக்கூடிய ஓர் செயலைச் செய்யுமாறு அல்லது ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யாதிருக்குமாறு செய்வதைக் குறிக்கும். இதை எளிய முறையில் பின்வரும் எடுத்துக்காட்டுகளின் மூலம் குறிப்பிடலாம்.

எடுத்துக்காட்டு – 1: 'A' எனும் ஒரு மளிகைக்கடைக்காரர், தனது கடைக்கு எதிர்ப்புறம் மளிகைக்கடை நடத்தும் 'B' என்பவரிடம், அவர் வியாபாரம் செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் இல்லையேல் கொலை செய்து விடுவதாக கூறும்போது மிரட்டுதல் எனும் தீங்கு புரிந்தவராகிறார்.

எடுத்துக்காட்டு – 2: 'A' என்பவர் தனது மளிகைக்கடைக்கு எதிர்புறத்தில் மளிகைக்கடை வைத்துள்ள 'B' என்பவரின் வாடிக்கையாளரான 'C' என்பவரிடம் இனி 'B'-யின் கடையில் மளிகைப் பொருட்களை வாங்கினால் கொன்றுவிடுவேன்' எனக் கூறும்போது மிரட்டல் தீங்கு புரிந்தவராகிறார்.

மேற்குறிப்பிட்ட இரண்டு எடுத்துக்காட்டுகளில், முதலாவது எடுத்துக்காட்டில், பிரதிவாதி, வாதிக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக நேரடியாக வாதியை அச்சுறுத்துகிறார். இரண்டாவது எடுத்துக்காட்டில், மற்றொருவரை அச்சுறுத்துவதன் மூலமாக வாதிக்கு இழப்பை ஏற்படுத்துகிறார்.

மிரட்டுதல் அல்லது அச்சுறுத்துதல் தீங்கு தொடர்பான ஓர் முக்கிய வழக்கு **Rooks Vs Barnard, (1964) AC 1129.**, என்ற வழக்காகும். ஏனெனில் மிரட்டுதல் என்பதை ஓர் தனித்தீங்காக இவ்வழக்கில்தான் முதன்முதலாக அங்கீகரிக்கப்பட்டது. இவ்வழக்கில் ரூக்ஸ் (வாதி) என்பவர், B.O.A.C எனும் கூட்டுருவின் (British Overseas Airways Corporation) வடிவமைப்பு அலுவலகத்தில், வரைவாளராக (draughtsman) பணிபுரிந்து வந்தார். அவர் பொறியியல் மற்றும் கப்பல் கட்டும் வரைவாளர் சங்கம் (Association of Engineering and Ship Building) என்ற பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர் என்பதில் இருந்து விலகினார். தொழிற்சங்க நிருவாகிகள் (பிரதிவாதிகள்) வற்புறுத்தியும் அவர் மீண்டும் அத்தொழிற்சங்கத்தில் உறுப்பினர் ஆவதற்கு மறுத்தார். வடிவமைப்பு அலுவலகத்தில் இருந்த அனைத்து பணியாளர்களும் மூன்று நாட்களுக்குள் ரூக்ஸை பணியிலிருந்து நீக்காவிடில் அனைவரும் வேலைநிறுத்தம் மேற்கொள்வது என்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதனை நிருவாகத்திற்கு தெரிவித்தனர். நிருவாகம், உடனடியாக ரூக்ஸை தற்காலிக பணிநிறுத்தம் (suspension) செய்தும் இரண்டு மாதங்கள் கழித்து பணி நீக்கமும் செய்தது. ரூக்ஸின் பணி நீக்கத்திற்கு வேலை நிறுத்தத்திற்கான அச்சுறுத்தலே காரணமாகியது என்பதால் 7,500 பவுண்டுகள் (pounds) இழப்பீடாக அளிக்க வேண்டும் என்றும், உடன்பாட்டிற்கு முரணான வேலைநிறுத்த அச்சுறுத்தல், மிரட்டல் என்ற சட்டவிரோதச் செயலுக்கு வழிவகுப்பதால், அது ஓர் தீங்கியல் நடவடிக்கை எடுக்கத்தக்க செயலாகும் என்றும் பிரபுக்கள் அவை தனது தீர்ப்பில் குறிப்பிட்டது. [குடிமையியல் விமானப்போக்குவரத்து தொழிற்சாலையின் (Civil Air Transport Industry) பணியாண்மையர் மற்றும் பணியாளர்களுக்கு இடையே, எந்தவொரு வேலை நிறுத்தமோ அல்லது கதவடைப்போ செய்யக்கூடாது என்றும் மற்றும் தரப்பினர்களுக்கு இடையே ஏதேனும் தகராறு எழுந்தால் அதனை இசைவுத்தீர்வுக்கு (Arbitration) குறித்தனுப்புதல் செய்யப்பட வேண்டும் என்றும் ஓர் உடன்பாடு தரப்பினர்களுக்கு இடையே நடைமுறையில் இருந்தது என்பது இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்கதாகும்].

3(a) அச்சுறுத்தல் தீங்கின் முக்கியக்கூறுகள் (The essential ingredients of the tort of intimidation): அச்சுறுத்தல் தீங்கின் முக்கியக்கூறுகள் பின்வருமாறு:

(i) பிரதிவாதி, வாதிக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக, அவருக்கு எதிராக ஓர் சட்டவிரோதச் செயலை செய்து விடுவதாக நேரடியாக அச்சுறுத்தியிருக்க வேண்டும் அல்லது வாதிக்கு இழப்பை ஏற்படுத்துமாறான ஓர் செயலைச் செய்வதற்காக மூன்றாம் நபர் ஒருவரை அச்சுறுத்தியிருக்க வேண்டும்;

(ii) அச்சுறுத்தப்பட்ட நபர் (வாதி அல்லது மூன்றாம் நபர்) பிரதிவாதியின் சொல்லுக்கு இணங்க செயல்பட்டிருக்க வேண்டும்; மற்றும்;

(iii) பிரதிவாதியின் சொற்படி செயல்பட்டதன் விளைவாக அல்லது மூன்றாம் நபரின் செயலின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

(4) சதி அல்லது கூட்டுச்சதி (Conspiracy):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், சட்டத்திற்கு புறம்பான செயலைச் செய்வதற்காக அல்லது சட்டத்திற்கு உட்பட்ட செயலை, சட்டத்திற்கு புறம்பான முறையில் செய்வதற்காக ஒன்று சேர்வதே சதி என்பதாகும். "மற்றொரு நபருக்கு ஊறு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து தன்னிலையிலேயே (itself) சட்டத்திற்கு புறம்பான ஓர் செயலை அல்லது செய்யப்பட்டமுறை சட்டத்திற்கு புறம்பானதாகச் செய்யும் எவ்வாறிருப்பினும் அத்தகைய செயலால் மற்றொருவர் இழப்புக்கு உள்ளாகும்போது அவர்கள் சதி என்னும் தீங்கு புரிந்தவர்கள் ஆகிறார்கள்" - என்று பேராசிரியர் வின்ஃபீல்ட் சதித்தீங்கை வரையறுக்கிறார்.

சதி, இயற்றாச் சட்டத்தின்கீழ் தீங்காகவும், குற்றவியல் சட்டத்தின்கீழான ஓர் குற்றமுமாகும். குற்றமுறு சதி (criminal conspiracy) என்பது தீங்கியலின்கீழான சதி என்பதனின்று வேறுபட்டது. குற்றவியல் சட்டத்தின்கீழ் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சட்டத்திற்கு புறம்பான ஓர் செயலை அல்லது சட்டத்திற்குட்பட்ட ஓர் செயலை சட்டத்திற்கு முரணான வகையில் செய்வதற்காக அவர்களுக்கு இடையே வெறுமனே ஓர் உடன்பாடு செய்து கொண்டிருந்தாலே, அது குற்றவியல் வழக்கிடத்தக்கதாகும். அவர்கள் செய்து கொண்ட உடன்பாட்டின்படி செயல்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. ஆனால் சதி எனும் தீங்கு தரப்பினர்களுக்கு இடையே வெறுமனே உடன்பாடு இருந்தால் மட்டுமே அது தீங்கு புரிந்ததாகாது; மாறாக, உண்மையில் வாதிக்கு இழப்பை விளைவித்திருந்தால் மட்டுமே இத்தீங்கு முழுமையாகும்.

4(a) சதித்தீங்கின் முக்கியக்கூறுகள் (Essential ingredients of conspiracy): சதி எனும் தீங்கு பின்வரும் முக்கியக்கூறுகளைக் கொண்டிருக்கும்:

(i) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், மற்றொரு நபருக்கு வேண்டுமென்றே தீங்கிழைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும்;

(ii) அத்தகைய தீங்கிழைக்கும் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும்; மற்றும்;

(iii) அத்தகைய தீங்கின் விளைவாக மற்றொரு நபருக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஒன்று சேர்வது என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஓர் பொதுவான உடன்படிக்கை நிறைவேற்றுவதைக் குறிக்கும். சதிச் செயலானது, சட்டத்திற்கு புறம்பான ஓர் செயலைச் செய்வது அல்லது சட்டப்படியான செயலை, சட்டத்திற்கு முரணான வகையில் செய்யப்படுவதைக் குறிக்கும். சட்டவிரோத நோக்கம் என்பது பரந்தமுறையில் பொருள் கொள்ளப்பட வேண்டும்; அதாவது, (i) ஓர் குற்றம், அல்லது, (ii) சட்டத்தினால் தடை செய்யப்பட்ட செயல், அல்லது, (iii) ஓர் தீங்கு அல்லது ஒப்பந்த மீறல் போன்ற உரிமையியல் வழக்கு தொடருவதற்கு காரணமாக அமையக்கூடியவற்றை இது உள்ளடக்கும். இத்தகைய அனைத்து நேர்வுகளிலும், தீங்கினைப் புரிவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் அல்லது வாதிக்கு ஊறு விளைவிப்பதன் உள்நோக்கம் பொருட்படுத்தப்படமாட்டாது; மாறாக, அத்தகைய ஒன்று சேர்த்தலின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதே முக்கியத்துவம் பெறும். இருப்பினும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றிணைவதன் முதன்மையான நோக்கம் தங்களின் வணிகநலன் பாதுகாப்பு அல்லது மேம்பாட்டிற்காக என்றிருப்பின், அத்தகைய ஒன்றிணைவினால் மற்றொரு நபருக்கு இழப்பு ஏற்பட்டாலும்கூட, அது சதி எனும் தீங்கு புரிந்ததாகாது. அதாவது ஒன்றிணைவின் அல்லது ஒன்று சேர்தலின் நோக்கம் நியாயமான காரணத்திற்காக இருப்பின், அதனால் மற்றொருவருக்கு இழப்பு ஏற்பட்டாலும் அது சட்டத்திற்குட்பட்ட ஒன்றிணைவாகும். இவற்றினின்று தீங்கெண்ணம், சதி எனும் தீங்கின் ஓர் அவசிய உட்கூறு அல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் 'தீங்கில்லா சேதம்' என்ற கொள்கையின்கீழ் இது சதி என்பதாகாது. இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு **Mogul Stemship Co. Vs McGregor, Gow & Co. (1892) AC 25.**, என்ற வழக்காகும். (காண்க : பக்கம் எண் 21)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து, மற்றொரு நபரின் வாடிக்கையாளர் அல்லது பணியாட்கள் ஒப்பந்த முறிவு செய்து கொள்வதை தூண்டி, அதன் விளைவாக அவருக்கு இழப்பை ஏற்படுத்தினால் அது ஓர் வழக்கிடத்தக்க தீங்காகும். **Quinn Vs Leathem, (1901) AC 495.**, என்ற வழக்கில், இறைச்சிக்கடைக்காரரான வாதி, ஒவ்வொரு வாரமும் அதிக அளவிலான இறைச்சி வாங்குவதை வழக்கமாகக் கொண்ட மன்ஸ் (Munce) என்ற வாடிக்கையாளரைப் பெற்றிருந்தார். தொழிற்சங்க பதவியில் இருந்த பிரதிவாதிகள், தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களை மட்டுமே வாதி பணியமர்த்த வேண்டும் என்றும், அவரின் கடையில் வேலை செய்யும் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாத தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். வாதி அதனை

மறுக்கவே, பிரதிவாதிகள், 'மன்ஸ்' என்பவரிடம் சென்று அவர் வாதியிடம் இறைச்சி வாங்குவதை நிறுத்த வேண்டும் என்றும், இல்லையேல் அவரிடம் வேலை செய்யும் தங்களின் தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலை நிறுத்தம் செய்வர் என்றும் மிரட்டியதால், அவர் வாதியிடம் இறைச்சி வாங்குவதை நிறுத்திவிட்டார். வாதிக்கு அதிகளவில் இழப்பு ஏற்பட்டதால், அவர் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். வாடிக்கையாளர் இழப்பின் காரணமாக வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பிரதிவாதிகள் பொறுப்பாகுவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(5) தீங்கிழைக்கும் பொய்மை (Injurious Falsehood):

'தீங்கிழைக்கும் பொய்மை' (Injurious falsehood or Malicious falsehood) என்பது வாதியைப் பற்றிய தீங்கான கூற்றினை மூன்றாம் நபரிடத்தில் தெரிவித்து அதன்மூலமாக வாதிக்கு பண அளவிலான இழப்பு ஏற்படுத்துவதைக் குறிக்கும். "பண அளவிலான இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்துடன், எழுதப்பட்ட எழுத்துகள் அல்லது வாய்மொழியிலான பொய்யுரைகளை வெளியிடுவதன் வாயிலாக, உரிமை கோருபவரின் (வாதி) பொருளாதார உறவுகளில் குறுக்கிடுவது" என அறிஞர் ஃப்ளமிங் தீங்கிழைக்கும் பொய்மையை வரையறுக்கிறார்.

மேற்கண்டவற்றில் இருந்து, தீய நோக்கத்துடன் வாதியின் சொத்துக்களைப் பற்றிய பொய்யான கூற்றினை பிரதிவாதி பிறரிடம்கூறி, அவர்கள் அதனை உண்மையென நம்பி செயல்படுவதன்மூலமாக, வாதிக்கு பணஅளவிலான இழப்பை ஏற்படுத்துவதே தீங்கிழைக்கும் பொய்மை என்பதை அறிந்து கொள்ளலாம். தீங்கிழைக்கும் பொய்மை என்பது தொழிலைப்பற்றிய பொய்மை (Slander of business), சொத்துரிமை அல்லது உரிமைமூலம் பற்றிய பொய்மை (slander of title), பொருள்கள் பற்றிய பொய்மை (slander of goods) மற்றும் வணிகப்போலி (passing off) ஆகிய தனிப்பட்ட தீங்குகளை உள்ளடக்கியதாகும்.

5(a) தீங்கிழைக்கும் பொய்மையின் முக்கியக்கூறுகள் (Essential ingredients of injurious falsehood): தீங்கிழைக்கும் பொய்மையின் முக்கியக்கூறுகள் பின்வருமாறு:

(i) பொய்யானக் கூற்று (False statement): பிரதிவாதி பொய்யானக் கூற்று அல்லது தகவலை கூறியிருக்க வேண்டும்; மேலும் அப்பொய்யானக் கூற்றை வாதியிடம் அல்லாமல் மூன்றாம் நபர் ஒருவரிடம் கூறியிருக்க வேண்டும்.

Ratcliffe Vs Evans, (1892) 2 QB 524., என்ற வழக்கில், பிரதிவாதி தன்னுடைய செய்தித்தாளில், வாதி அவரின் தொழிலை செய்வதனின்று நிறுத்திவிட்டார் என்றும் தற்போது அவரின் நிறுவனம் செயல்பாட்டில் இல்லை என்றும் பொய்யான தகவலை வெளியிட்டிருந்தார். அதன் காரணமாக வாதி வாடிக்கையாளர்களை இழந்ததால் பெருத்த இழப்பிற்கு உள்ளானார். நீதிமன்றம், பிரதிவாதி பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

(ii) தீங்கெண்ணம் (Malice): தீங்கிழைக்கும் பொய்மையின் ஓர் முக்கியக்கூறு, பொய்யானக்கூற்றை தீங்கெண்ணத்துடன் வெளியிடுவதாகும். பிரதிவாதி தான் கூறும் கூற்று பொய்யென அறிந்திருந்தால் அல்லது அதன் உண்மைத்தன்மை பற்றி தானே நம்பியிராமல் இருந்தும் அதனை வெளியிட்டிருந்தால் அல்லது அதன் உண்மைத்தன்மை பற்றி ஆராயாமல் அக்கறையின்றி அசட்டுத் துணிவுடன் வெளியிட்டிருந்தால் அவர் தீங்கெண்ணத்துடன் வெளியிட்டதாகக் கருதப்படும். **Balden Vs Shorter, 1933 Ch. 427.,** என்ற வழக்கில் தீங்கெண்ணம் என்பது அதன் உண்மையானப் பொருளில் ஓர் மறைமுகமான, முறையற்ற தீய எண்ணத்தைக் குறிக்கும் என்றும் மற்றும் வாதிக்கு ஊறு ஏற்படுத்தும் தவறான எண்ணம் இருப்பது கண்டிப்பாக மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

(iii) இழப்பு உண்மையில் ஏற்பட்டிருக்க வேண்டும் (Actual damage): வாதிக்கு உண்மையில் இழப்பு ஏற்படாமல் இருப்பின் அவர் தீங்கிழைக்கும் பொய்மைக்காக வழக்கிட முடியாது. **Malachy Vs Soper, (1836) 3 Bing NC 371.,** என்ற வழக்கில், பிரதிவாதி வெளியிட்டக் கூற்றினால், தான் கொண்டிருந்த சுரங்க நிறுவனத்தின் சிலக்குறிப்பிட்ட பங்குகளின் மதிப்பு குறைந்துவிட்டதாகக்கூறி, வாதி, பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் வாதியின் உறுதிக் கூற்றினுள் (averments) வழக்கை நிலைநிறுத்த (maintaining an action) போதுமானதாக இல்லை எனக் குறிப்பிட்டு தள்ளுபடி செய்தது. ஆனால் தற்போது ஆங்கில அவதூறுச் சட்டம், 1952-ன் பிரிவு-3(1), குறிப்பிட்ட பிரிவின்கீழ் (class) நட்டம் ஏற்பட்டது என்பதை மெய்ப்பிக்க முடியாமல் இருந்தாலும் பொதுவாக இழப்பு ஏற்பட்டுள்ளதை மெய்ப்பித்தாலே போதுமானது என்பதைக் குறிப்பிடுகிறது.

(6) வணிகப்போலி (Passing off):

வணிகப்போலி என்பது தீங்கியல் நடவடிக்கையின் ஓர் வடிவமாகும். இது இயற்றாச் சட்டத்தினை ஆதாரமாகக் கொண்டது. வணிகப் போலியின் முக்கிய நோக்கம், ஓர் தொழிலின் நற்பெயர் மற்றும் புகழினை நேர்மையற்ற போட்டியாளர்கள் ஆக்கிரமிப்பு (உரிமை மீறுகை) செய்வதிலிருந்து பாதுகாப்பதாகும். வணிகப்போலிக்கான நடவடிக்கைகள் 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'எந்தவொரு நபரும் தனது பொருள்களை மற்றொருவரின் பொருள்கள் என்று கூறிட உரிமை பெற்றிருக்கவில்லை' ('Nobody has any right to represent his goods as the goods of somebody else') என்கிற எளிமையான கொள்கையைச் சார்ந்து உருவானதாகும். ஒரு நபர், தன் தயாரிப்பு பொருளை, மக்களிடையே மிகுந்த வரவேற்பையும் ஆதரவையும் பெற்றுள்ள மற்றொருவரின் புகழ்பெற்ற தயாரிப்பு பொருள் என பொய்யுரைத்து அல்லது பிற வழிகளின்மூலம் நம்ப வைத்து விற்பதே வணிகப்போலி என்பதாகும். இச்செயல் புகழ்பெற்ற நிறுவனத்திற்கு பொருளாதார இழப்பு மற்றும் வணிக நற்பெயரை (goodwill) பாதிப்பதுடன் நுகர்வோர்களும் ஏமாற்றப்படுகின்றனர். வணிகப்போலி என்ற தீங்கு பல்வேறு முறைகளில் செய்யப்படலாம். ஓர் பிரதிவாதி-

(i) தன்னுடைய வணிகப் பொருள்கள் வாதியினுடையது என்று நேரடியாக வெளிப்படுத்தும்போது,

(ii) வாதியின் தயாரிப்பு பொருளின் பெயருக்கு 'நெருங்கிய ஒற்றுமை கொண்ட' பெயரை தனது பொருள்களுக்கும் பயன்படுத்துவது, இதன்மூலம் அசட்டையான பொதுமக்களை வாதியின் பொருள் என்று ஏமாற வைத்து தனது பொருள்களை விற்பனை செய்யும்போது,

(iii) வாதி ஏற்கனவே சந்தையில் புகழ்பெற்றுள்ள பொருளுக்கு 'ஒத்த' பெயரை, தனது அதே வகையான பொருளுக்கும் பயன்படுத்தி, வாதியின் பொருளை வாங்குவதாக மக்களைக் கருதவைத்து தனது பொருள்களை விற்பனை செய்யும்போது,

(iv) தனது பொருள்களுக்கு, வாதியின் வணிகக்குறியை பயன்படுத்தி அல்லது ஏமாற்றுவகை ஒற்றுமை (deceptively similar) கொண்ட குறியை பயன்படுத்தி விற்பனை செய்யும் போது,

(v) வாதியின் பொருள் கொண்டுள்ள தோற்றத்திற்கு ஒத்த தோற்றத்தை பயன்படுத்தும்போது,

(vi) ஒரு முறை பயன்படுத்தப்பட்டுவிட்ட வாதியின் பொருளை (secondhand goods), பயன்படுத்தாத புதிய பொருளாகக்கூறி விற்பனை செய்யும்போது, ஆக மேற்குறிப்பிட்டுள்ள முறைகளில் ஏதேனுமொரு முறையை பின்பற்றும்போது வணிகப்போலி தீங்கு புரிந்தவராகிறார்.

6(a) வணிகப்போலி நடவடிக்கையில் நிரூபிக்கப்பட வேண்டியவை (Requirements to be proved in a passing off action): வணிகப்போலி என்பதன் அடிப்படையிலான ஓர் நடவடிக்கையில் வெற்றி பெறுவதற்கு வாதி பின்வரும் குறைந்தபட்ச தேவைகளை மெய்ப்பிக்க வேண்டும் என்று டிப்ளாக் பிரபு, **Erven Warnick Bv Vs J Townend & Sons., (1979) 2 All ER 927.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளார். அவை;

(i) திரித்துக்கூறல் (misrepresentation) இருந்தது;

(ii) வணிகத்தின்போது திரித்துக் கூறப்பட்டது;

(iii) தன்னுடைய எதிர்கால வாடிக்கையாளரிடத்தில் அல்லது தன்னுடைய பொருள்கள் அல்லது சேவையை விரும்பி பயன்படுத்தும் இறுதி வாடிக்யையாளரிடம் திரித்துக்கூறப்பட்டது;

(iv) தனது தொழில் அல்லது தொழில் நற்பெயருக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்ற கணிப்புடன் (அதாவது, அது ஓர் நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய விளைவாக) செய்திருப்பது; மற்றும்;

(v) தனது தொழிலுக்கு அல்லது நற்பெயருக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டுள்ளது அல்லது இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

6(b) தீர்வழிகள் (Remedies): வணிகப்போலி தீங்கிற்கு எதிராக:

(i) உரிமைமீறல் குறி மேற்கொண்டு பயன்படுத்துவதை தடை செய்வதற்கான உறுத்துக்கட்டளை;

(ii) இழப்பீடு அல்லது ஆதாயக்கணக்கு (Accounts of profit) மற்றும்;

(iii) உரிமை மீறுகை முகப்பு சீட்டுகள் (labels) மற்றும் குறிகளை (marks) அழிப்பதற்காக அல்லது நீக்குவதற்காக அளித்திடக்கோரும் நீதிமன்றத்தின் ஆணை ஆகிய தீர்வழிகளைப் பெறலாம்.

80. பொருட்களின்மீதான அத்துமீறல் பற்றிக்கூறுக. (Write about Trespass to goods) - May-2019 (v)

SN - 110 பொருட்களின்மீதான அத்துமீறல் / Trespass to goods.

விடைச்சுருக்கம்: (அ) பொருட்களின்மீதான அத்துமீறல் - அ (i) உடைமைக்கு எதிரான தீங்கு - அ (ii) விதிவிலக்குகள் - (ஆ) எதிர்வாதங்கள் - (இ) தீர்வழிகள்

(அ) பொருட்களின்மீதான அத்துமீறல் (Trespass to goods):

பொருட்களின்மீதான அத்துமீறல் என்பது, வாதியின் உடைமையில் உள்ள பொருள்/பொருள்களின்மீது நேரடியாக மற்றும் முறையற்ற விதத்தில் குறுக்கிடுவதைக் குறிக்கும். உடைமையில் உள்ள பொருட்களின்மீது குறுக்கிடுவது என்பது அதனைக் கைப்பற்றுதல் அல்லது நீக்குதல் அல்லது பொருள்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் செய்யப்படும் நேரடியான செயல்களின்மூலமாக இருக்கலாம். பொருட்களின்மீதான அத்துமீறல் எண்ணற்ற முறைகளில் செய்யப்படலாம். எடுத்துக்காட்டாக, சைக்கிள், மோட்டார் காரில் இருக்கும் 'டயரைக்' கழற்றுவது, வண்டியின் வெளிப்புறத் தகட்டில் கீறல் ஏற்படுத்துவது, பொருள்களுக்கு ஊறு விளைவிப்பது அல்லது அழிப்பது, விலங்குகளை துன்புறுத்துவது அல்லது கொல்வது, அல்லது அதனை உடைமையாளரின் உடைமையில் இருந்து ஓடிடுவதற்காக துரத்துவது அல்லது நஞ்சு கலந்த உணவு அல்லது இறைச்சியைக் கொடுப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம். இருப்பினும் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில், ஏற்படுத்தப்படும் ஊறு அல்லது இழப்பு நேரடியானதாக இருக்க வேண்டுமே தவிர, ஒரு செயலின் விளைவானதாக (consequential) இருக்கக்கூடாது என்பதாகும். **Kirk Vs Gregory, (1876) 1 Ex D 55.,** என்ற வழக்கில் 'X' என்பவர் இறந்தவுடன் அவரின் சகோதரரின் மனைவி, 'X'-ன் இறந்த உடல் கிடத்தப்பட்ட அறையிலிருந்து சிலக் குறிப்பிட்ட ஆபரணங்களை எடுத்து அதனை பாதுகாப்பாக வைக்க வேண்டும் எனும் நியாயமான நோக்கத்துடன் வேறு ஒரு அறையில் வைத்தார். ஆனால் அவர் வைத்த அறையிலிருந்து ஆபரணங்கள் திருடப்பட்டுவிட்டது. இது தொடர்பாக எழுந்த வழக்கில், 'X'-ன் சகோதரரின் மனைவி, அவசியத்தின் காரணமாக ஆபரணங்களை எடுத்து வேறு அறையில் வைத்ததாக வாதிட்டார். அவரின்

வாதத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம், அத்தகைய சூழ்நிலையில் ஆபரணங்களின்மீதான குறுக்கீடு நியாயமற்றது என்றும் எனவே அவர் ஆபரணங்களின்மீதான அத்துமீறல் புரிந்த தீங்கிற்கு பொறுப்பாவார் என்றும் தீர்ப்பளித்தது.

அ(i) உடைமைக்கு எதிரான தீங்கு (Wrong against possession): அத்துமீறல் என்பது உடைமைக்கு எதிரான தீங்காகும். பொருட்களின்மீது அத்துமீறல் புரிந்த சமயத்தில், வாதி அப்பொருளின்மீது நேரடியான அல்லது கொள்நிலையான (constructive) அல்லது சட்டப்படி உடன் உடைமை கொள்ளும் உரிமையை (legal right to the immediate possession) கொண்டிருப்பது அவசியமாகும். மேலும் பொருட்களின்மீதான அத்துமீறல் தீங்கு தன்னிலையிலேயே வழக்கிடத்தக்கதாகும் அதாவது, உண்மையில் இழப்பு ஏற்பட்டுள்ளதை மெய்ப்பிக்காமலேயே வழக்கிடத் தக்கதாகும். பொருள்களுக்கு எதிராக அத்துமீறல் புரிந்தவர், அப்பொருள் மூன்றாம் நபருக்குச் சொந்தமான அல்லது மூன்றாம் நபர் உரிமை கொண்டுள்ள பொருள் (jus tertii) எனும் எதிர்வாதத்தை பயன்படுத்த முடியாது. **Armory Vs delamirie, (1721) 1 Stri 505.,** என்ற வழக்கு இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். புகைக்குழாயை சுத்தம் செய்யும் தொழிலாளியான வாதி, ஓர் ஆபரணத்தைக் கண்டெடுத்தான். அதன் மதிப்பை அறிவதற்காக, பொற்கொல்லனிடம் அதனைக் கொடுத்தான். பொற்கொல்லன் அது தங்க ஆபரணமல்ல எனக்கூறியதுடன் மிகவும் சொற்பமான தொகையைத் தர முன்வந்தாரே தவிர, அதனை திரும்ப வாதியிடம் கொடுக்க மறுத்துவிட்டார். மேலும் அப்பொருள் மூன்றாம் நபருக்கு சொந்தமானது என்பதால் வாதி அதனைக்கோர முடியாது என்றும் கூறினார். நீதிமன்றம், பிரதிவாதி (பொற்கொல்லர்) ஆபரணத்தை தர மறுத்தால் அதன் மதிப்பிற்கு சமமான முழுத்தொகையைப் பெற வாதி தகுதி கொண்டுள்ளான் எனத் தீர்ப்பளித்தது.

அத்துமீறல் செய்து பொருட்களை தன் உடைமையில் கொண்டுள்ள ஓர் அத்துமீறியவர், அதன்மீதான சொத்துரிமையைப் பெற முடியாது. அத்தகைய அவரின் உடைமை, அப்பொருளின் உண்மையான உரிமையாளர், அத்துமீறியவரிடம் இருந்து அதனைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமையைப் பாதிக்காது. பொருட்களின்மீதான கூட்டுரிமையாளர் (joint owner), பொருட்களின்மீதான தனது உரிமையை, உடன் உரிமையாளர் (co-owner) இல்லாமல் செய்யக்கூடிய செயல் எதனையேனும் செய்தால், அவருக்கு எதிராக பொருட்களின்மீதான அத்துமீறல் தீங்கு புரிந்ததாக வழக்கு தொடர முடியும். பொருட்களின்மீதான முறையற்ற பற்றுகையும் (wrongful attachment) ஓர் அத்துமீறல் தீங்காகும்.

அ(ii) விதி விலக்குகள் (Exceptions): பொருட்களை உடைமையில் கொண்டிருந்தவர் மட்டுமே, பொருட்களின்மீதான அத்துமீறலுக்காக வழக்கிட முடியும் என்பதை மேலே கண்டோம். இருப்பினும் இப்பொதுவான விதிக்கு பின்வரும் மூன்று விலக்குகள் உள்ளது:

முதலாவதாக, ஓர் பொறுப்புரிமை அமைப்பிற்கு (Trust) சொந்தமான பொருள்கள், அதன் பொறுப்பாண்மையரின் (Trustee) உடைமையில் இல்லாவிட்டாலும்கூட, அத்தகைய பொருட்களுக்கு எதிராகச் செய்யப்படும் அத்துமீறலுக்காக அவர் வழக்கிட தகுதி கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, இறந்துபோனவரால் உயில்வழி நியமிக்கப்பட்ட ஓர் நிறைவேற்றாளர் (executor) அல்லது இறந்துபோனவரின் சொத்துகளை நிருவாகம் செய்வதற்காக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சொத்தாட்சியர் (administrator), அச்சொத்துகளுக்கு எதிராக செய்யப்படும் அத்துமீறலுக்காக வழக்கிடலாம்.

மூன்றாவதாக, தன்னுடைய சேதமுற்ற அல்லது உடைந்துபோன பொருளை எடுத்துக்கொள்ளும் உரிமை அல்லது தன்னுடைய நிலத்திலிருக்கும் புதையலை எடுத்துக்கொள்வதற்கான உரிமையைப் போன்று, தான் மட்டுமே எடுத்துக்கொள்வதற்கு தன்னுரிமை கொண்டுள்ள பொருட்களின் உடைமையாளர், அதனை அவர் எடுத்துக் கொள்வதற்கு முன் வேறு எவரேனும் எடுத்துக் கொண்டிருந்தால், பொருளின்மீதான உடைமையை அப்போது அவர் கொண்டிராமல் இருந்தாலும், அதனை எடுத்துக்கொண்ட நபருக்கு எதிராக வழக்கிட முடியும்.

(ஆ) எதிர்வாதங்கள் (Defences):

பொருட்களின்மீதான அத்துமீறலானது, சொத்தின் பாதுகாப்பிற்கு அல்லது சட்ட உரிமையை செயல்படுத்துவதற்கு அல்லது சட்ட நடைமுறையின்கீழ் செய்யப்பட்டதாக நியாயப்படுத்தமுடியும். எனவே ஓர் நபர் தனது மகனின் ஆட்டை காப்பாற்றுவதற்காக ஆட்டை தாக்கும் மற்றொருவரின் நாயை துப்பாக்கியால் சுட்டால் அவர் பொருட்களின்மீது அத்துமீறல் தீங்கிற்கு பொறுப்பாகாமலும்கூட இருக்கலாம்; ஆனால், நாயை சுடுவது ஆட்டினைப் பாதுகாக்கும் நியாயமான மற்றும் அவசியமானச் செயலாக இருக்க வேண்டும் **[Creswell Vs Sirl, (1948) 1 KB 241].**

வாதி, சாலையில் ஏதேனும் தடை ஏற்படுத்தி வைத்திருந்தால், எடுத்துக்காட்டாக, சாலையைக் கடப்பதற்கு தடை ஏற்படுத்தும் வகையில் குதிரை வண்டியை நிறுத்தியிருந்தால், பிரதிவாதி, சாலையில் செல்வதற்கான தனது உரிமையை செயல்படுத்த, அக்குதிரை வண்டியை நகர்த்துவது அல்லது அப்புறப்படுத்துவது அத்துமீறல் தீங்கு புரிந்ததாகாது.

சட்டப்படியான கைப்பற்றுகை என்பது ஓர் அங்கீகரிக்கப்பட்ட உரிமை என்பதால், அதனை சட்டப்படியாக செயல்படுத்துவது, அதாவது, சட்டநடைமுறையின்கீழ் பொருளை கைப்பற்றுகை செய்வது அத்துமீறலுக்கான ஓர் எதிர்வாதமாக அமையும்.

தவிர்க்க இயலா விபத்தும்கூட அதாவது, பொருளின்மீதான அத்துமீறலில் உள்நோக்கம் அல்லது கவனமின்மை ஏதுமின்றிருப்பின் அது ஓர் தகுந்த எதிர்வாதமாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, **National Coal Board Vs Evas, (1951) 2 KB 861.,** என்ற வழக்கில், பிரதிவாதியான ஒப்பந்ததாரரின்

பணியாட்கள் நிலத்தைத் தோண்டும்போது, வாதியே அறிந்திராத, வாதியின் முன்னோர்களினால் நிலத்தின்கீழ் பதிக்கப்பட்டிருந்த மின் கம்பிகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு, பிரதிவாதிகளின் தரப்பில் எவ்வித தவறும் இல்லாததால் பொறுப்பாகமாட்டார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ) தீர்வழிகள் (Remedies):

(1) தற்பொருள் மீட்டடைவு நடவடிக்கை (Detinue): இது பிரதிவாதியால் முறையற்று தடுத்து வைத்திருக்கும் பொருளை திரும்ப மீட்பதற்காக வாதி மேற்கொள்ளும் வழக்கு நடவடிக்கையைக் குறிக்கும். பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக வாதியின் பொருளை தடுத்து வைத்திருந்து, வாதி தகுந்த நியாயமான முறையில் அதனை அளித்திடக் கோரியும், பிரதிவாதி மறுக்கும்போது, வாதி, தன்பொருள் மீட்டடைவிற்கான வழக்கு தொடர்ந்து அப்பொருளை திரும்பப் பெற முடியும். இங்கிலாந்தில் 1977 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தீங்குகள் (பொருள்களில் குறுக்கிடுதல்) சட்டத்தின்மூலம் பொருள்களுக்கான தன்பொருள் மீட்டடைவு நடவடிக்கை ஒழிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், பொருளின் மீட்டடைவிற்காக குறிப்பிடப்படும் அனைத்து சூழ்நிலைகளையும் இச்சட்டம் உருமாற்றம் அல்லது கையாடல் தீங்கினுள் உள்ளடக்குகிறது. இச்சட்டத்தின் பிரிவு-3, பிரதிவாதியால் முறையற்ற வகையில் பொருள்கள் தடுத்து வைக்கப்படும்போது, வாதி அப்பொருள்களை அளிக்கக் கோரவும் அல்லது அப்பொருளுக்குச் சமமான மதிப்புடைய தொகையும் மற்றும் பிரதிவாதி அதனை முறையற்று தடுத்து வைத்திருந்ததன் விளைவால் ஏற்பட்ட இழப்பிற்கு சமமான தொகையையும் கோர முடியும் என்பதைக் குறிப்பிடுகிறது.

இந்தியாவில், பொருள்களை தடுத்துவைத்துக் கொள்ளுதல் என்பதை ஓர் தீங்காகக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் அசைவியல் பொருள்களை மீட்பது தொடர்பாக, இதனை ஒத்த நடவடிக்கைகள் மேற்கொள்வதை குறித்தவகை நிவாரணச் சட்டம், 1963 அங்கீகரிக்கிறது. இச்சட்டத்தின் பிரிவுகள் 7 மற்றும் 8, இது தொடர்பான பொருள்களைக் குறிப்பிடுகிறது.

(2) இழப்பீடு (Damages): பொருட்களின்மீதான அத்துமீறல் வழக்குகளில் பொதுவாக பொருள்/பொருள்களின் மதிப்பு அல்லது அவற்றிற்கு எதிராக செய்யபபட்ட ஊறு அல்லது சேதத்திற்கு ஏற்ப இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது. உடனடி நட்டம் அல்லது ஊறு போன்றவற்றினால் தனிமுறையிலான இழப்பு ஏற்படின் அது மிகவும் சேய்மையான காரணமாக இல்லாதபட்சத்தில் அனுமதிக்கப்படலாம்.

Dajiba Anandrav Vs B.B.& C.L. Ry., Co., (1869) 6 BHC (ACJ) 235., என்ற வழக்கில், பிரதிவாதிகள், வாதியின் அனுமதியின்றி அவரது நிலத்தில் தோண்டி அதிகளவிலான கற்களை எடுத்தனர். இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், தோண்டி எடுக்கப்பட்ட பின்னரான கற்களின் மதிப்பிற்கு சமமான தொகையைப் பெற வாதி தகுதி கொண்டுள்ளார் என்றும், கற்களை தோண்டி எடுத்ததற்காக செலவழித்த தொகையைப் பெற பிரதிவாதிகள் தகுதி கொண்டிருக்கவில்லை என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

SHORT NOTES

111. சொத்துரிமை அல்லது உரிமைமூலம் பற்றிய பொய்மை அல்லது சொத்துரிமை அல்லது உரிமைமூலம் பற்றிய அவதூறு / Slander of title

சொத்துரிமை அல்லது உரிமைமூலம் பற்றிய பொய்மை அல்லது அவதூறு (slander of title) என்பதும் பொருள்கள் பற்றிய பொய்மை அல்லது அவதூறு (slander of goods) என்பதும் தீங்கிழைக்கும் பொய்மை என்ற தீங்கின் இரு வேறுபட்ட வடிவங்களே ஆகும். சொத்துரிமை பற்றிய பொய்மை என்பது, வாதியின் அசையும் அல்லது அசையா சொத்தின்மீது அவர் கொண்டிருக்கும் உரிமைமூலத்தைப்பற்றி தீய நோக்கத்துடன் எழுதப்பட்ட எழுத்துக்கள், அச்சடித்தலின்மூலமாக அல்லது பேசப்படும் சொற்களின்மூலமாக பொய்யானக்கூற்றை வெளிப்படுத்தி அதன்மூலம் வாதிக்கு தனிப்பட்ட முறையில் இழப்பு ஏற்படுத்துவதைக் குறிக்கும்.

Garrard Vs Dickenson, (1590) 1 Crow-Eliz-196., என்ற வழக்கில், நிலங்கள் மற்றும் அசைவியல் பொருட்கள் ஏல விற்பனையின்மூலம் விற்கப்பட இருக்கும்போது, ஏலம் நடைபெறும் அறையில் அல்லது வேறிடத்தில், ஒரு நபர் நிலத்தை விற்கவிருப்பவரின் நிலம் அடைமானத்தில் உள்ளது அல்லது அவரின் அசைவியல் பொருட்கள் கள்ளப்பொருட்கள் (stolen property) என வெளிப்படுத்தி இருந்தால் மற்றும் அதனால் ஏல விற்பனைமூலம் வாங்கவிருக்கும் நபர்களை வாங்காமல் நிறுத்தினால் அல்லது அச்சொத்துகளை நியாயமான நிலையைவிட மிகவும் குறைந்த விலைக்கு விற்பதற்கு காரணமானால், அது அவர்மீது வழக்கிட்டு இழப்பீடு பெறுவதற்கு முதற்தோற்ற உரிமை கோரிக்கையை அளிக்கும் எனக் கூறப்பட்டது.

மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மைகள் (Facts to be proved): சொத்துரிமை பற்றிய பொய்மைக்காக வழக்கிடும் வாதி, பின்வரும் மூன்றுகூறுகளை மெய்ப்பிக்க வேண்டும்:

(1) பிரதிவாதியின்கூற்று பொய்யானது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். மாறாக, பிரதிவாதியின்கூற்று உண்மையாக இருப்பின், அதாவது, பிரதிவாதியின் கூற்றுப்படி சொத்துரிமையில் குறைபாடு ஏதேனும் இருப்பின், வாதி அதன்பொருட்டு வழக்கிடமுடியாது. மேலும் பிரதிவாதியின்கூற்று பொய்யானது என்பதை வாதி மெய்ப்பிக்க வேண்டுமே தவிர, பிரதிவாதி தாம் கூறிய கூற்று உண்மையென மெய்ப்பிக்கும் பொறுப்பு கொண்டிருக்கவில்லை.

(2) பிரதிவாதியின்கூற்று தீங்கெண்ணம் கொண்டதாக அதாவது, வாதிக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அல்லது மறைமுகமான அல்லது நேர்மையற்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். பிரதிவாதியின் கூற்று நல்லெண்ணத்தின் அடிப்படையில்

அச்சொத்தின்மீதான தனது சொந்த உரிமையை வலியுறுத்துவதற்காக கூறப்பட்டிருப்பின், வாதி வழக்கிட முடியாது.

(3) பிரதிவாதி வெளியிட்ட தகவலின் காரணமாக வாதிக் கொண்டுள்ள சொத்துரிமைக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டுள்ளதை மெய்ப்பிக்க வேண்டும். சொத்து, நிலவுடைமைச் சொத்தாகவோ அல்லது அசைவியல் சொத்தாகவோ இருக்கலாம். மேலும் அச்சொத்தின்மீது வாதி கொண்டுள்ள உரிமை, உடைமையின் அடிப்படையிலோ அல்லது பின்னடைவு உரிமையாகவோ (reversion) இருக்கலாம்.

தீர்வழி (Remedy): சொத்துரிமை பற்றிய பொய்மைக்கு, வாதி, தனக்கு தனிமுறையிலான இழப்பு (special damage) ஏற்பட்டது என்பதை மெய்ப்பிக்கும் அவசியம் கொண்டிருக்கவில்லை என ஆங்கில அவதூறுச் சட்டம், 1952 குறிப்பிடுகிறது. ஆனால் இந்தியச் சட்டத்தின்கீழ் வாதி தனக்கு தனிமுறையிலான இழப்பு ஏற்பட்டிருப்பதை மெய்ப்பிக்க வேண்டும் என்று **Mohammed Din Vs Sant Ram, (1938) 40 PLR 158.**, என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், சொத்துரிமை பற்றிய பொய்மைக்கு, இழப்பீடு கோரி வழக்கு தொடருவதைவிட, உறுத்துக்கட்டளை மற்றும் உரிமை விளம்புகைத் தீர்ப்பு (declaratory judgment) ஆகியவையே பொருத்தமான தீர்வுகளாகும் என **R.J.Reuter Co. Ltd. Vs. Mulhens, (1954) Ch. 50.**, என்ற வழக்கில் கூறப்பட்டது.

112. பொருள்கள் பற்றிய பொய்மை அல்லது பொருள்கள் பற்றிய அவதூறு / Slander of goods

ஒரு நபருக்கு தனிப்பட்ட முறையில் இழப்பை ஏற்படுத்த வேண்டும் எனும் தீய நோக்கத்துடன், அவரின் பொருட்களைப்பற்றி இழிவாக அல்லது அதன் தரம் அல்லது மதிப்பைக் குறைக்கும் வகையில் வெளிப்படுத்தப்படும் பொய்யானக் கூற்றே பொருள்கள் பற்றிய பொய்மை அல்லது பொருள்கள் பற்றிய அவதூறு எனப்படுவதாகும். இது வணிக அவதூறு (trade libel) எனவும் குறிப்பிடப்படுகிறது. 'பொருள்கள் பற்றிய பொய்மை' எனும் சொற்றொடர் பொருள்கள் அல்லது வணிகப் பொருள்களின் மதிப்பை இழக்கச் செய்யும்போது பயன்படுத்துவதாகும். இத்தகைய மதிப்பை குறைத்தல் என்பது அப்பொருளின் தரத்தையோ அல்லது அதிலுள்ள பிற குறைபாடுகளை குறிப்பிடுவதற்காக கூறப்படுவதாகும். எடுத்துக்காட்டாக, 'A' என்பவரின் பொருள்கள், 'B' என்பவரின் வணிகக்குறி மீறல் தொடர்பான பொருள்கள் என்றும் மற்றும் 'A'-ன் பொருள்களை வாங்க வேண்டாம் என்று எச்சரிப்பதும் பொருள்கள் பற்றிய பொய்மையாகும் **[Wrenn Vs Weild, (1869) LR 4 QB 730].**

ஒரு நபர் தன்னுடைய சொந்த பொருளைப் பற்றி உயர்வாக மற்றும் மிகைப்படுத்திக்கூறுவது அதாவது வாதியின் பொருளைவிட அல்லது சந்தையில் தன்னுடைய பொருளுக்கு நிகரான தரமுடைய பொருள் ஏதுமில்லை என்றும்கூட

பொய்யாகக் கூறலாம். இருப்பினும் இக்கூற்றின் அடிப்படையில் வழக்கு தொடரமுடியாது. ஏனெனில் பொருளை வாங்குபவர்கள் தங்களின் முடிவின்படி வாங்குகிறார்களே தவிர விற்பவரின் சொல்லைக்கேட்டு வாங்குவதில்லை. **White Vs Mellin, (1895) AC 154.,** என்ற வழக்கில், மருந்துக்கடைக்காரரான பிரதிவாதி, வாதியின் உணவுப்புட்டியின்மீது, அவரது அனுமதியின்றி 'குழந்தைகள் மற்றும் நோயாளிகளுக்கு இதுவரை எந்தவொரு தயாரிப்பிலும் அளிக்கப்படாத அளவில் உடல் நலனுக்கு உகந்த மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த தயாரிப்பு' என்று பொதுமக்களுக்கு பரிந்துரைக்கும் வகையில் அதன்மீது ஒட்டப்பட்ட தாளில் குறிப்பிட்டிருந்தார். நீதிமன்றம் பிரதிவாதி அவ்வாறு வெளியிடப்பட்ட தகவலுக்கு பொறுப்பாகமாட்டார் எனத் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் பிரதிவாதி, வாதியின் தயாரிப்பை மதிப்பிழக்கச் செய்யவில்லை. ஒருவேளை வாதியின் உணவுப் புட்டியைக் குறித்து அதன் தரம் மற்றும் மதிப்பைக் குறைக்குமாறு குறிப்பிட்டிருந்தால், அதனால் வாதிக்கு ஏற்படும் இழப்பிற்கு பொறுப்பாகியிருப்பார்.

மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மைகள் (Facts to be proved): பொருட்கள் பற்றிய பொய்மைக்காக வழக்கிடும் வாதி, பின்வருவனவற்றை மெய்ப்பிக்க வேண்டும்:

(i) முறையீடு செய்யப்பட கூற்று தன்னுடைய பொருள்கள் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டது;

(ii) அது பொய்யானக் கூற்றாகும்;

(iii) அத்தகைய கூற்று, தனக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற தீய நோக்குடன் வெளிப்படுத்தப்பட்டது; மற்றும்;

(iv) அதன்பொருட்டு தனக்கு தனிப்பட்ட முறையில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

113. உருமாற்றம் (அ) உருத்திரிபு (அ) கையாடல் / Conversion, May-2016(v).

தீங்கியல் சட்டத்தில் 'உருமாற்றம்' என்றச்சொல் அதன் நேர்ச்சொல் குறிக்கக்கூடிய 'உருவத்தை அல்லது வடிவத்தை மாற்றுதல்' என்ற பொருளில் இருந்து வேறுபட்டதாகும். வாதியால் தொடரப்படும் உருமாற்றம் என்ற தீங்கிற்கான வழக்கில் வாதி, தன்னுடைய பொருளின் உருவத்தை அல்லது வடிவத்தை பிரதிவாதி மாற்றிவிட்டார் என்பதை மெய்ப்பிக்கத் தேவையுமில்லை. அவ்வாறு மெய்ப்பிப்பதன் மூலம் வெற்றியும் பெறமாட்டார். ஏனெனில் தீங்கியல் சட்டத்தின்கீழ் உருமாற்றம் அல்லது கையாடல் என்பது, வாதி தனது பொருள்களை பயன்படுத்துவதை அல்லது உடைமையில் கொண்டிருப்பதை பிரதிவாதி இழக்கச் செய்வதைக் குறிக்கும்.

வரையறை (Definition): 'ஓர் நபர் மற்றொருவரின் பொருளை பார்க்கின்றபோது அல்லது அதனை தன்னுடைய உடைமையில் கொண்டிருக்கும்போது, அப்பொருளின் உண்மையான உரிமையாளரின்

சம்மதமின்றி அதனை தனது சொந்த பயன்பாட்டிற்கென வைத்துக் கொள்வதும் மற்றும் பொருளின் உரிமையாளர் தன்பொருள் மீட்பிற்காகவும் (trover) மற்றும் உருமாற்றத்திற்காகவும் ஓர் வழக்கினைத் தொடருவதே உருமாற்றம்' - என்பதாக டோம்லின் சட்ட அகராதி உருமாற்றத்தை வரையறுத்துள்ளது. பேராசிரியர் வின்ஃபீல்ட், 'ஒரு நபரின் பொருள்கள் தொடர்பான எதனொன்றும் அப்பொருளின்மீது அவர் கொண்டுள்ள உரிமைமூலத்தை (title) நேர்மையற்ற முறையில் மறுப்பதாக அமைவதே உருமாற்றம்'-என வரையறுக்கிறார்.

மேற்குறிப்பிட்ட வரையறைகளில் இருந்து உருமாற்றம் என்பதனை, மற்றொருவரின் பொருளை முறையின்றி தனதாக்கிக் கொள்வது (wrongful appropriation) என்பதை புரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, 'A'-என்பவர் 'B'-யின் தொப்பியை தான் வைத்துக் கொள்வதற்காக திருடுவது உருமாற்றமாகும். 'A' என்பவர் தனது ஆபரணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக 'B'யிடம் கொடுக்கிறார். 'B' அதனை 'A'-ன் சம்மதமின்றி விற்பது அல்லது 'C'-யிடம் அடகு வைப்பது உருமாற்றம் ஆகும். மேலும், பொருளை அதன் உரிமையாளரிடம், அவரே அப்பொருளின் உரிமையாளர் என்பதை அறிந்திருந்தும் அவரிடம் அதைக் கொடுக்க மறுப்பது, மற்றொருவரின் பொருளை தனது நோக்கத்திற்காக பயன்படுத்துவது அல்லது நுகருவது அல்லது அதனை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்வது, அழிப்பது அல்லது அதன் அடையாளத்தை இழக்கச் செய்வது போன்ற பலமுறைகளில் கையாடல் செய்யப்படலாம். ஆனால் இவற்றில் அடங்கியுள்ள முக்கியக்கூறு என்னவெனில், பொருளின் உண்மையான உரிமையாளர் அதனைப் பயன்படுத்தும் அல்லது உடைமையில் கொண்டிருக்கும் உரிமையை இழக்கச் செய்வதாகும். இந்திய உச்சநீதிமன்றம் **L.J. Leach & Co. Ltd. Vs Jardine Skinner & Co., AIR 1957 SC 357** என்ற வழக்கில், பொருளின்மீதான வாதியின் உரிமைமூலம் தெளிவாக மெய்ப்பிக்கப்படாதவரை, உருமாற்றத்திற்கான இழப்பீட்டை பெறமுடியாது என்பதைக் குறிப்பிட்டது.

உருமாற்றத்திற்காக எவர் வழக்கிட முடியும்? (Who can sue for conversion?): அத்துமீறல் போன்று, அடிப்படையில் உருமாற்றமும் உடைமைக் குறித்த தீங்காகும். எனவே உண்மையில் பொருளின் உடைமையைக் கொண்டிருக்கும்நபர், உடனடி உடைமையைப் பெறுவதற்கு உரிமை கொண்ட நபர்களே உருமாற்றத்திற்கான வழக்கிட முடியும். எனவே ஒரு பொருளை உண்மையில் உடைமையில் கொண்டிராதவர் அல்லது உடனடி உடைமைக்கு தகுதி கொண்டிராதவர், உருமாற்றத்திற்கா வழக்கிட முடியாது.

தீர்வழிகள் (Remedies): பிரதிவாதி புரிந்த உருமாற்றத் தீங்கிற்கு எதிராக தொடரும் வழக்கில் பின்வரும் தீர்வழிகள் உண்டு:

(i) மீளப்பெறுதல் (Reception): பொருளின் உடைமையைக் கொண்டிருப்பதற்கு தகுதி பெற்றுள்ள ஆனால் தவறான முறையில் தன்னுடைமையில் இருந்த பொருளை இழந்த நபர், அப்பொருள் எங்கிருந்தாலும் அதனை மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். இது தொடர்பாக அவசியம் ஏற்படின் நியாயமான பலத்தையும் பயன்படுத்தலாம்.

(ii) மீண்டும் ஒப்படைக்கக் கோருவதற்கான அல்லது சொத்தை மீட்டளிக்கக் கோருவதற்கான ஆணை (Order for redelivery or restoration of property): பொருள்களை திரும்ப ஒப்படைக்கக்கோரும் ஆணையிடுவது நீதிமன்றத்தின் சுய விருப்பத்தைச் சார்ந்ததாகும். குறிப்பாக, பிரதிவாதி தன்னுடைய சொந்த உழைப்பின் மூலம் அப்பொருளின் மதிப்பை அதிகரிக்கச் செய்திருந்தால் இத்தகைய ஆணையிட மறுக்கும். இங்கிலாந்தில் தன்பொருள் மீட்டடைவு நடவடிக்கை (detenue) ஒழிக்கப்பட்ட பிறகு நடைமுறைக்கு வந்த தீங்குகள் (பொருள்களில் குறுக்கிடுதல் சட்டம், 1977, வாதியின் உரிமையில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. எனவே, நீதிமன்றம்-

(a) தன் சுய விருப்பின் அடிப்படையில் பொருள்களை அளிக்கக் கோருவதுடன் அதன் விளைவாக ஏற்பட்ட இழப்பீட்டிற்கான தொகையையும் செலுத்தக் கோரலாம். அல்லது; (b) பொருள்களை திரும்ப அளிக்கக்கோரும் ஆணை, ஆனால் இதற்கு மாற்றாக, பிரதிவாதி பொருள்களை திரும்ப அளிக்காமல், பொருளின் மதிப்புக்கான தொகை மற்றும் அத்துடன் இழப்பிற்கான தொகையையும் சேர்த்து செலுத்தக்கோரும் தேர்வுரிமையை செயல்படுத்தலாம். அல்லது; (c) வாதிக்கு ஏற்பட்ட இழப்பை செலுத்தும்படி மட்டும் ஆணையிடலாம்.

(iii) இழப்பீட்டிற்கான வழக்கு (suit for damages): அசைவியல் பொருள்களை திரும்ப அளிக்காவிடில், வாதி பொருளின் மதிப்புக்கான முழுத்தொகையும் மற்றும் இழப்பீடு பெறவும் தகுதி கொண்டுள்ளார். இழப்பீடு ஊறின் வகையைப் பொறுத்து இருக்கும்.

Williams Vs Arthur, (1847) 5 QB 320., என்ற வழக்கில், பிரதிவாதி வாதியின் பொருள்களை திரும்ப அளித்திருந்தாலும், அதன் மதிப்பு குறைந்து போயிருந்தால், வாதி அவரின் பொருளை அளிக்கக்கோரிய தேதிக்கும், பிரதிவாதி அப்பொருளை திரும்ப அளித்த தேதிக்கும் இடையிலான தொகை வேறுபாட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

114. உருமாற்றம் முறைகள்/Conversion methods, May-2012(v).

"அசைவியல் பொருளை பயன்படுத்தவும் உடைமையில் கொண்டிருக்கவும் ஒருவர் கொண்டுள்ள உரிமையில் மற்றொரு நபர் சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் எதுவுமின்றி குறுக்கீடு செய்யும் செயலே 'உருமாற்றம்' என சட்ட அறிஞர் சல்மாண்ட் உருமாற்றத்தை வரையறுக்கிறார். உருமாற்றம் எனும் தீங்கு பின்வரும் ஏதேனுமொரு முறையில் செய்யப்படலாம்:

(1) எடுத்துக்கொள்ளுதல் (Taking): ஒரு நபர், மற்றொருவரின் பொருளை அவரின் அனுமதியின்றி அதன்மீது தனது உரிமையை உறுதிப்படுத்தும் எண்ணத்துடன் எடுத்துக்கொள்ளும்போது, அந்நபர் உருமாற்றம் என்ற தீங்கு புரிந்தவராகிறார். ஏனெனில், அசைவியல் பொருளின் உரிமையாளர் பொதுவாக எல்லா நேரத்திலும் மற்றும் எல்லா இடங்களிலும் அதன்மீது செலுத்தும் அவரின் உரிமைக்கு முரணான செயலாக இது இருப்பதாகும். **Roop Lal Vs Union of India, AIR 1972 J&K 22.,** என்ற வழக்கில், இந்திய இராணுவவீரர்கள்,

ஆற்றோரமாக வெட்டப்பட்டு கிடந்த மரங்களை எரிபொருளாகப் பயன்படுத்த தங்களின் முகாமிற்கு எடுத்துச் சென்றது உருமாற்றம் என்ற தீங்கு புரிந்ததாகும் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

(2) பொருளை மற்றவருக்கு அளித்தல் (Parting with goods): பொருளை ஒப்படைவு செய்தவர் தனக்கு விடுக்கப்பட்ட ஆணைக்கு முரணாக, ஒரு நபர் அதனை மூன்றாம் நபர் வசம் அளித்தால் அது உருமாற்றம் என்பதாகிவிடும். அப்பொருளைப் பெற்ற மூன்றாம் நபரும் கூட்டாகத் தீங்கிழைத்ததற்கு பொறுப்பாவார்.

(3) விற்பனை (Sale): பொருளுக்குரியவரின் முறையான அனுமதியின்றி, அப்பொருளை விற்பவரும் உருமாற்றம் செய்பவராகவே கருதப்படுவார். தவறான முறையிலான பொருள்களின் விற்பனையும் உருமாற்றம் என்பதாகவே அமையும். மேலும் அப்பொருளை வாங்கியவரும் உருமாற்றம் என்ற தீங்கிற்கு பொறுப்பாவார். **Carriet Morn & Co. Vs. Manmutha Nath Mukherji, (1941) (1) ILR Cal. 285.,** என்ற வழக்கில், தேயிலைத் தோட்டத்திற்கான வாதியின் உரிமையை தவறான முறையில் இழக்கச் செய்த 'X' என்பவர், அத்தோட்டத்தில் இருந்த தேயிலைகளைப் பறித்தார். தேயிலைத் தரகர் நிறுவனமான பிரதிவாதிகள், அத்தேயிலையை 'X'-ன் சார்பாக விற்பனை செய்தனர். விற்கப்பட்ட தேயிலைக்கான தொகையை திரும்பப் பெறுவதற்காக வாதி வழக்கிட்டார். நீதிமன்றம் பிரதிவாதிகள் உருமாற்றம் தீங்கிற்கு பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

(4) பொருள்களை தடுத்து வைத்தல் (Detention): ஏற்கனவே வாதியின் பொருளை தன் உடைமையில் கொண்டிருக்கும் பிரதிவாதி, அதனை வாதியிடம் திரும்ப அளிக்காமல் தடுத்து வைத்துக் கொள்வதும் உருமாற்றமாகக் கருதப்படும். ஒப்படைவு பெற்றவர், ஒப்படைவு முடிந்த பின்னரும், ஒப்படைவு செய்தவர் வசம் பொருள்களை திரும்ப அளிக்காவிடில் அவர் உருமாற்றம் தீங்கு புரிந்தவராகுவார்.

(5) அழித்தல் (Destruction): மற்றொருவருக்கு சொந்தமானப் பொருளை அழிக்கும் செயலானது, அதன் உரிமையாளர் அதனை முழுமையாக இழக்கச் செய்யும் விளைவை ஏற்படுத்துவதால் உருமாற்றம் என்பதாகும். **Tiruveria muthu Pillai Vs Municpal Council, Shencotta, AIR 1961 Mad 230.,** என்ற வழக்கில், வாதியின் நாயை, நகராட்சி ஊழியர் சட்ட விரோதமாகக் கொன்றது கையாடல் (உருமாற்றம்) தீங்காகும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

(6) உரிமையை மறுப்பது (Denial of right): பிரதிவாதியின் செயலானது, வாதியின் உரிமைமூலத்தை (title) மறுப்பதாக அமைந்தால், பிரதிவாதி பொருளின்மீதான உடைமையை கொண்டிராமல் இருந்தாலும்கூட, அது உருமாற்றம் என்ற தீங்காகக் கருதப்படும். **Oakley Vs Lyster, (1931) (1) KB 148.,** என்ற வழக்கில், மேல்முறையீட்டாளரால் வாங்கப்பட்ட நிலத்தில், எதிர்மனுதாரர் தனது பொருள்களை வைத்திருந்தார். அக்குறிப்பிட்ட தேதியில்,

எதிர்மனுதாரர் அந்நிலத்தின்மீது கொண்டிருந்த குத்தகையுரிமை முடிவடையாமல் இருந்தபோதும், மேல்முறையீட்டாளர், தான் நிலத்தை விலை கொடுத்து வாங்கியுள்ளதால் அந்நிலத்தின்மீதான அனைத்தும் தனக்கே சொந்தம் எனக்கூறி, எதிர்மனுதாரரின் பொருள்களை விற்பனை செய்யவும் அல்லது அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தவும் அனுமதிக்கவில்லை. மேன்முறையீட்டாளர் உருமாற்றம் தீங்கிற்கு பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(7) முரண்தடை (Estoppel): சில நேரங்களில், ஒரு நபர் உண்மையில் உருமாற்றம் அல்லது கையாடல் தீங்கு புரியப்படாமல் இருந்தாலும்கூட, முரண்தடை என்பதன் அடிப்படையில் உருமாற்றம் புரிந்ததாகக் கருதப்படுவார். முரண்தடை என்பதை மிகச்சுருக்கமாக, முரண்படுதலுக்கு தடை எனக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, பொருளை ஒப்படைவு பெற்ற ஒருவர், ஒப்படைவு செய்தவரின் உரிமைமூலத்தை மறுப்பதும் மற்றும் அவரிடம் ஒப்படைவுப் பொருளை திரும்பத்தர மறுப்பதும் உருமாற்றமாகக் கருதப்படும். ஏனெனில், ஒப்படைவு செய்தவரிடம் இருந்து பொருளைப் பெறும்போது, ஒப்படைவு செய்பவரே அப்பொருளின் உரிமையாளர் என்பதை, ஒப்படைவு பெறுபவர் முன்னரே உட்கிடையாக ஏற்றுக்கொண்டுவிட்டார். எனவே தற்போது, ஒப்படைவு செய்தவர் அப்பொருளின் உரிமையாளர் அல்ல என்பதன் அடிப்படையில் அதை ஒப்படைக்க மறுப்பது முரண்தடையாகும்.

115. பொருளாதாரத் தீங்கு / Economic Tort., May-2014, May-2017 (v), May-2019.

தனி நபர்களின் பொருளாதார நலன்கள் அல்லது சொத்தியல் நலன்களை பாதுகாப்பதே பொருளாதாரத் தீங்கின் முதன் முக்கிய நோக்கமாகும். உலகமயமாக்கலின் (globalisation) எழுச்சி காரணமாக தளர்த்தப்பட்ட தொழிற்சங்க விலக்குரிமைகளின் (Trade Union Immunities) அறுதியான நோக்கம் பணியாண்மையர்கள் (employers) மற்றும் அவர்களின் பொருளாதார நலன்களை பாதுகாப்பதாகும். அறிந்திருந்தே அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் செயல்களினால் தனிநபரின் பொருளாதார நலன்கள் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தில் (market economy) சுதந்திரமான போட்டி இருப்பதன் அவசியம் ஆகிய இரு முரண்பட்ட நலன்களை இணக்கப்படுத்துவது என்பது ஓர் சிக்கலான நடைமுறையாகும். இது தொடர்பாக, ஏமாற்றுதல்/மோசடி, வணிகப்போலி, ஒப்பந்த உறவுகளில் குறுக்கிடுதல், சதி மற்றும் மிரட்டுதல்/அச்சுறுத்துதல் போன்றவை முதன்மையான மற்றும் குறிப்பிடத்தக்க சில பொருளாதாரத் தீங்குகள் ஆகும்.

பெரும்பாலும், இயற்றுச் சட்டம் மற்றும் வழக்காறுகளின் எல்லைக்கு உட்பட்ட இரகசியத்தகவல் (confidential information) அல்லது வணிக இரகசியங்கள் (trade secrets), பதிப்புரிமை, புத்தாக்கம் (Patent) போன்ற அறிவுசார் சொத்துகளின் பாதுகாப்பு மற்றொரு சிக்கலான பகுதியாகும். அறிவுசார்

சொத்துரிமைகளின் இத்தகைய நலன்கள், பொருளாதார நலன்களின் முதன்மை உறவுகளுடன் படர்ந்து பரவியுள்ளது (overlap). நம்பிக்கை மீறுகை (breach of confidence) என்பது தற்போது ஓர் குறிப்பிட்ட தீங்காக எழுச்சி பெற்று வருகிறது. எனவே ஓர் நோயாளி, மருத்துவர் அல்லது மருத்துவமனை தன்னைப் பற்றிய விபரங்களை மூன்றாம் நபரிடம் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமைக்கு தகுதி கொண்டுள்ளார். இதேபோன்று பன்னாட்டு நிறுவனங்கள் (multinational companies), தங்களின் வணிக இரகசியங்கள் அல்லது தொழிற்சார் வடிவமைப்புகள் (Industrial designs) அல்லது புத்தாக்கங்கள் போன்றவற்றின் மீதான பாதுகாப்பிற்கான உரிமைகளையும், ஆசிரியர்கள் (authors) மற்றும் நிகழ்த்துக் கலைஞர்கள் (performers) பதிப்புரிமை பாதுகாப்பிற்கான நலன்களையும் கொண்டுள்ளனர். வேண்டுமென்றே ஊறு விளைவிப்பதற்கு எதிரான பாதுகாப்பை அளிப்பதற்கு, ஏற்கனவே தீங்கியல் சட்டத்தில் தீர்வழிகள் உள்ளன. ஆனால் இத்தகைய தீர்வழிகள், வளர்ந்துவரும் போட்டிமிக்க உலகத்தில் ஓர் எல்லைக்கு உட்பட்ட பாதுகாப்பை மட்டுமே அளிப்பதாக உள்ளன. ஒரு தனிப்பட்ட நபரின் உயிர், உடல் மற்றும் சொத்துகள் தொடர்பான கவனமற்ற குறுக்கீட்டினை, 1932-ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட Donoghue Vs Stevenson வழக்கின்மூலம் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தீங்காக நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது, பொருள்களை உற்பத்தி செய்வோர் மற்றும் தன்னுடைய செயல்பாடுகளினால் மற்றொருவரின் நலனுக்கு ஊறு ஏற்படுத்தக்கூடிய நிலையில் உள்ள அனைவர்மீதும் கவனமுடன் இருக்க வேண்டிய கடமையை சுமத்துகிறது. இவ்வழக்கில் உருவாக்கப்பட்ட, கவனமுடன் இருக்க வேண்டிய கடமை மற்றும் அயலவர் கொள்கை, பல்வேறு சட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. எடுத்துக்காட்டாக, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், மோட்டார் வாகனச் சட்டம், மரண விபத்துக்கள் சட்டம், சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம், பொதுப்பொறுப்புரிமைச் சட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய சட்டங்கள் அனைத்தையும், நபர்களின் பாதுகாப்பு மற்றும் சொத்துகள் குறித்த நலன்களை பாதுகாக்கும் தனிப்பட்ட ஊறுகளுக்கான சட்டம் என்ற இனத்தின்கீழ் வகைப்படுத்த முடியும். தற்போது, பல்வேறு சட்டங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புரைகள், குறைபாடுள்ள மற்றும் அபாயகரமான பொருள்களினால் ஏற்படுத்தப்படும் ஊறுகளுக்கு கடும் பொறுப்பு நிலையை விதிக்கின்றன.

சட்டம், இயல்பான அல்லது சுதந்திரமான மற்றும் நேர்மையான போட்டியை ஊக்குவிக்கிறது. சட்டத்திற்கு புறம்பான முறையில் நேர்மையற்ற போட்டியின் மூலமாக மற்றொருவருக்கு இழப்பை ஏற்படுத்துவது ஓர் தீங்காகும். போட்டியாளர்கள் அல்லது பிறரின் செயல்கள், வெறுமனே மற்றொருவருக்கு இழப்பை ஏற்படுத்துவதால் மட்டுமே ஓர் தீங்காகாது; மாறாக, அத்தகைய இழப்பை ஏற்படுத்தும் செயல், தன்னிலையிலேயே சட்டவிரோதமாக இருக்கும்போது மட்டுமே தீங்கியல் பொறுப்பு நிலைக்கு உள்ளாகுவர். இதன் அடிப்படையிலேயே

ஏமாற்றுதல் அல்லது மோசடி மற்றும் பொய்யுரைத்தல் ஆகிய தீங்குகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஓர் வணிகர், தன் தயாரிப்புப் பொருளை மற்றொருவரின் தயாரிப்பு பொருள் என தவறாக வழி நடத்துவதன்மூலம் அல்லது பிற மோசடியான வணிக நடைமுறையின்மூலம், அந்த மற்றொரு வணிகரின் புகழை தனக்கு ஆதாயமளிக்கும் வகையில் பயன்படுத்துவதை 'வணிகப்போலி' தடுக்கிறது. தீங்கிழைக்கும் பொய்மை, ஓர் நியாயமற்ற போட்டித்தீங்கு என்பதன் அடிப்படையில் நேர்மையற்ற வணிகரை தண்டிக்கிறது. சட்டவிரோதக் குறுக்கீடு தொடர்பான தீங்குகள் என மற்றோர் வகையுண்டு. ஒப்பந்த மீறுகையைத் தூண்டுதல், சதி, மிரட்டுதல் போன்ற தீங்குகள் இவ்வகையினுள் அடங்கும். அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள போட்டிச் சட்டம் (Competition Act), இத்தகைய பிரச்சனைகள் குறித்து அணுகுகிறது.

மேற்கண்டவற்றில் இருந்து பொருளாதாரத்தீங்கு என்பது ஓர் தனிப்பட்ட தீங்கு அல்ல என்றும் இதன் எல்லையினுள் பல்வேறு தீங்குகள் உள்ளடங்கி இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

116. தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் மற்றும் முறையின்றி சிறைப்படுத்தலுக்கு இடையேயான வேறுபாடு / Difference between malicious Prosecution and False imprisonment.

ஒரு நபர் மற்றொருவரின் மீது நியாயமான தகுந்த காரணங்கள் ஏதுமின்றி தீங்கெண்ணத்துடன் தொடரப்படும் குற்றவியல் வழக்கு, தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல் என்பதாகும். இது ஓர் தனிநபர் தன்னுடைய நலனுக்காகவோ அல்லது குற்றம் செய்த நபரை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் என்கிற நீதியின் நலனுக்காகவோ அல்லாமல் தீய நோக்கத்துடன் மற்றொருவர்மீது குற்ற வழக்கிடுவதாகும். சட்டத்திற்கு முரணாக நியாயப்படுத்தும் காரணங்கள் ஏதுமின்றி ஒரு நபரை கைது செய்வது அல்லது அடைத்து வைப்பது அல்லது தடுத்து வைப்பது முறையற்ற சிறைவைத்தல் ஆகும். இவைகள் வேறுபட்ட மூலத்தையும் (origin) மற்றும் வேறுபட்ட நலன்களைக் காப்பதற்குமானவைகள் ஆகும். தீங்கெண்ணத்துடன் வழக்கிடுதல், முற்காலத்திய சதிக்கான நீதிப்பேராணையையும் (writ of conspiracy), முறையற்ற சிறைப்படுத்தல் அத்துமீறலுக்கான நீதிப்பேராணையை (writ of trespass) மூலமாகக் கொண்டவையாகும். இவைகளுக்கு இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

	தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல்	முறையின்றி சிறைப்படுத்தல்
1.	தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடுதலுக்கான நோக்கம் சட்ட நடைமுறை தவறாகப் பயன்படுத்துவதை தடுப்பதாகும்.	முறையற்ற சிறைப்படுத்தல் தீங்கின் நோக்கம் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாப்பதாகும்.

	தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல்	முறையின்றி சிறைப்படுத்தல்
2.	வாதிக்கு எதிராக, குற்றவியல் சட்டத்தை தவறாக செயல்படுத்தச் செய்ததற்காக வழக்கு தொடரப்படுகிறது.	இது வாதியின் தனி நபர் சுதந்திரத்தை தவறான முறையில் தடுக்கச் செய்ததற்காக வழக்கு தொடரப்படுகிறது.
3.	தீங்கெண்ணத்துடன் வழக்கு தொடர்வதன்கீழான கைது அல்லது சிறைப்படுத்தல், நீதிமன்ற ஒப்பளிப்பின் மூலமானது.	முறையற்ற சிறைவைப்பில், வாதியின் தனிநபர் சுதந்திரம் தனிப்பட்ட நபரால் தவறான முறையில் தடுக்கப்படுகிறது.
4.	தீய நோக்குடைய குற்ற வழக்கின் அடிப்படைக்கூறுகள். (i) நியாயமான மற்றும் சாத்தியமான காரணம் ஏதுமின்றி வழக்கு தொடரப்பட்டிருத்தல், (ii) தீங்கெண்ணத்துடன் வழக்கு தொடரப்பட்டது என்பனவாகும்.	முறையற்ற சிறை வைத்தலின் அடிப்படைக்கூறு, சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி, உடலளவில் தடுத்து வைப்பதாகும்.
5.	தீய நோக்குடைய குற்ற வழக்கில் இதிலுள்ள சொல் குறிப்பிடுவது போல தீய நோக்கம் கொண்ட தன்மை உடையதாகும்.	தீங்கெண்ணத்துடனோ அல்லது தீங்கெண்ணம் இன்றியோ முறையற்ற சிறை வைத்தல் செய்யப்பட முடியும்.
6.	வாதியால் முறையீடு செய்யப்பட்ட ஊறு, பிரதிவாதியின் தூண்டுதலின் பேரிலானது என்றாலும்கூட, அது நீதிமன்றத்தின் நடவடிக்கையாகும்.	வாதிக்கு ஏற்பட்ட ஊறு, பிரதிவாதியாலோ அல்லது அவரின் முகவரின் மூலமாகவோ இருக்கலாம்.
7.	தீய நோக்குடைய குற்ற வழக்கு தன்னிலையிலேயே ஓர் தீங்காகாது; ஆனால் இது ஓர் தீய நோக்கத்துடனும் மற்றும் நியாயமான மற்றும் சாத்தியமான காரணம் இல்லாதபோதும் ஓர் தீங்கு ஆகிறது.	முறையற்ற சிறைவைத்தல் தன்னிலையிலேயே ஓர் தீங்காகும்.
8.	தீய நோக்குடைய குற்ற வழக்கிற்கு எதிரான நடவடிக்கையின் சாரம் இழப்பு ஏற்பட்டிருப்பதாகும்; மற்றும் இதனை வாதியே மெய்ப்பிக்க வேண்டும்.	முறையற்ற சிறைவைத்தலுக்கான ஓர் நடவடிக்கையில் இழப்பு என்ற காரணி பொருட்படுத்தப்பட மாட்டாது.

9.	தீய நோக்குடைய குற்ற வழக்கிற்கான ஒரே தீர்வழி இழப்பீடு பெறுவது மட்டுமேயாகும்.	முறையற்ற சிறைவைத்தலுக்காக, இழப்பீடு கோரி வழக்கு தொடர்தல், தற்காப்புரிமை மற்றும் ஆட்கொணர்வு நீதிப்பேராணை போன்ற தீர்வழிகள் உண்டு.

117. வணிகப்போலி மற்றும் ஏமாற்றுதல் / Passing off and deceit

வணிகப்போலி மற்றும் ஏமாற்றுதல் ஆகிய இரண்டு தீங்குகளிலும் ஏமாற்றுதல் அல்லது மோசடி செய்தல் எனும் கூறு பொறுத்து ஒத்தத்தன்மை இருந்தாலும் இவைகளுக்கு இடையே பெருமளவு வேறுபாடு உள்ளது. இவைகளுக்கு இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

	வணிகப்போலி	ஏமாற்றுதல் / மோசடி
1.	வணிகப் போலிக்கான நடவடிக்கையில் வாதி, தான் ஏமாற்றப்பட்டதற்காக அல்லாமல் வேறொருவரை ஏமாற்றியதற்காக வழக்கிடுகிறார்.	ஏமாற்றுதல் தீங்கிற்கான வழக்கில், தவறான தகவலின் மூலம் தம்மை வழி நடத்தச் செய்து ஏமாற்றப்பட்டதற்காக வாதி வழக்கிடுகிறார்.
2.	வணிகப்போலிக்கான நடவடிக்கையில், பிறரை ஏமாற்றுதல் அல்லது குழப்படையச் செய்தல் அல்லது ஏமாறவும் அல்லது குழப்பமடையவும் செய்யக்கூடிய அத்தகைய செயலின்மூலமாக தன்னுடைய வணிக நற்பெயர் அல்லது வணிகத்தின் சொத்தியல் உரிமைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்க வாதி கோருகிறார்.	ஏமாற்றுதல் தீங்கிற்கான வழக்கில், தன்னை ஏமாற்றிய தன் விளைவாக தனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு தீங்கீடு வழங்கக் கோருகிறார்.
3.	பிறர் ஏமாற்றப்படலாம் அல்லது குழப்பமடைய நேரிடலாம் என்று இருந்தாலே போதுமானது; அதாவது உண்மையில் ஏமாற்றம் அல்லது குழப்பம் அடைந்ததை மெய்ப்பிக்க வேண்டியது இல்லை.	வாதி, உண்மையில் ஏமாற்றப்-பட்டிருந்தால் மட்டுமே அது ஏமாற்றுதல் எனும் தீங்காக அமையும். எனவே ஏமாற்றுதல் எனும் தீங்கு முழுமை பெற்றப் பின்னரே வழக்கிட முடியும்.
4.	வணிகப் போலிக்கான நடவடிக்கையில் இழப்பீடு மட்டுமல்லாது உறுத்துக் கட்டளையையும் தீர்வழியாகப் பெறலாம்.	ஏமாற்றுதல் தீங்கிற்காக வழக்கிடும் வாதிக்கு இழப்பீடு மட்டுமே தீர்வழியாகும்.

	வணிகப்போலி	ஏமாற்றுதல் / மோசடி
5.	வணிகப்போலி தீங்கு, வணிகக் குறிகள் சட்டம் மற்றும் பிற சட்டங்களை நிறைவு பெறச் செய்கிறது.	ஏமாற்றுதல் எனும் தீங்கு குற்றவியல் சட்டத்தின்கீழ் ஓர் தனிப்பட்ட குற்றமும் ஆகும்.

118. கையாடலும் வணிகப்போலியும் / Conversion and passing off., Nov-2013 (v), May-2015 (v).

கையாடல் அல்லது உருமாற்றம் என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில், ஒரு நபர் மற்றொருவரின் பொருளை முறையின்றி தனதாக்கிக் கொள்வது எனக் குறிப்பிடலாம். இதேபோன்று வணிகப்போலி என்பதை சுருக்கமாக, ஒரு நபர், தன்னுடைய தயாரிப்புப் பொருளை, மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ள மற்றொருவரின் தயாரிப்பு பொருளாக, ஏதேனுமொரு நேர்மையற்ற முறையின்மூலமாக நம்ப வைத்து, நியாயமற்ற ஆதாயமடைவது எனக் குறிப்பிடலாம். இவ்விரண்டு தீங்குகளிலும், ஒரு நபர், மற்றொரு நபர் நலன் கொண்டுள்ள உரிமையில் நேர்மையற்ற குறுக்கீடு புரிகிறார் என்பதைப் பொறுத்தவரையில் ஒத்ததன்மையைக் கொண்டிருந்தாலும் இவைகளுக்கு இடையே பின்வரும் முக்கிய வேறுபாடுகள் உள்ளது:

(1) கையாடல் என்பது அடிப்படையில் உடைமைக்கு (possession) எதிரான தீங்காகும்.

வணிகப்போலி என்பது சொத்தியல் உரிமைக்கு (Proprietory right) எதிரான தீங்காகும்.

(2) கையாடல் என்பது பொருளை உடைமையில் கொண்டிருக்கும் நபரின் உரிமைகளுக்கு முரணாக அவற்றை முறையற்ற விதத்தில் எடுத்துக்கொள்ளுதல் அல்லது பயன்படுத்தல் அல்லது அழித்தல் அல்லது அதன் மீதான அதிகாரத்தை செலுத்துதல் போன்றவற்றைக் குறிக்கும்.

வணிகப்போலி என்பது, பிரதிவாதி 'பொருள்களை' வாங்குபவர்களை ஏமாற்றும் நோக்கத்துடன், அது மக்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற்றுள்ள வாதியின் பொருள் என்று பொய்யுரைப்பதன்மூலமாக, நம்ப வைப்பதாகும். பொய்யுரைத்தல், மற்றொரு நபரின் தொழிற்குறி அல்லது தொழிற்பெயரை பயன்படுத்தல், மற்றொருவரின் பொருளை ஒத்துள்ள வடிவமைப்பு அல்லது தோற்றத்தைப் பயன்படுத்தல் போன்ற முறைகளில் வணிகப்போலி தீங்கு புரியப்படுகிறது.

(3) கையாடல் தீங்கிற்கு எதிராக நியாயமான பலத்தை பயன்படுத்தி மீண்டும் எடுத்துக் கொள்ளுதல், நீதிமன்றத்தின் ஆணையின்மூலமாக பொருளை திரும்ப ஒப்படைக்கக்கோருதல் மற்றும் இழப்பீட்டிற்கான உரிமையைக் கோருதல் போன்ற

தீர்வழிகளைப் பெறலாம். கையாடல் தீங்கிற்காக வழக்கிடும் வாதி, தனக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதைக் கண்டிப்பாக மெய்ப்பிக்க வேண்டும்.

உறுத்துக்கட்டளை, உரிமைமீறல் பொருட்களை அழிக்கக்கோருதல், இழப்பீடு அல்லது பிரதிவாதி பெற்றுள்ள ஆதாய கணக்கை கோருதல் ஆகிய தீர்வழிகளை வணிகப்போலிக்கான நடவடிக்கையில் பெறலாம்.

(4) கையாடல் அல்லது உருமாற்றம் என்பது பருப்பொருள்கள் (corporeal property) குறித்ததாக இருக்கும்.

வணிகப்போலி என்பது, வணிகக்குறி உரிமை, பதிப்புரிமை, புத்தாக்க உரிமை உள்ளிட்ட நுண்பொருள் சொத்துரிமை (incorporeal right) தொடர்பானதாக இருக்கும்.

அலகு -IX (g)

அயல்நாட்டுத் தீங்குகள் மற்றும் தீங்கென உறுதியாகக் கூறமுடியாத தீங்குகள் (Foreign Torts and Doubtful Torts)

PART - A/B

81. அயலகத் தீங்கை வரையறு. வெளிநாட்டில் நடந்த தீங்கிற்கு இந்தியாவில் எந்தச் சூழ்நிலைகளில் வழக்கிடலாம் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.(Define Foreign torts. Explain and illustrate the circumstances under which an action will lie in India for a tort committed abroad)- May-2016.

SN - 119 அயலகத் தீங்கு அல்லது அயல்நாட்டு தீங்குகள் / Foreign torts, Nov-2014(v), May-2016(v), May-2017.

விடைச்சுருக்கம்: (அ) அயல்நாட்டுத் தீங்குகள் - (ஆ) இங்கிலாந்தில் உள்ள நிலை - (இ) வின்ஃபீல்டின் மூன்று அனுமான விதிகள் - (ஈ) இந்தியாவில் உள்ள நிலை

(அ) அயல்நாட்டுத் தீங்குகள் (Foreign torts):

சாதாரணமாக, அயல்நாட்டில் செய்யப்பட்ட ஓர் தீங்கு அயல்நாட்டுத் தீங்கு எனப்படும். அயல்நாட்டில் இழைக்கப்பட்ட தீங்கு ஒன்றிற்காக, உள்நாட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரமுடியுமா என்பது பற்றிய சிக்கலான வினாக்கள் அவ்வப்போது எழுவதுண்டு. அயல்நாடு என்பது, ஒரு நாட்டின் நீதிமுறை அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட எந்தவொரு அயல்நாட்டையும் குறிக்கும். எனவே தீங்கு என முறையீடு செய்யப்படும் அச்செயல், வழக்கு

தொடரும் நாட்டிற்கு வெளியே செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் அத்தீங்கானது, தனிப்பட்ட நபர் தொடர்பானதாக அல்லது அசைவியல் பொருள்கள் தொடர்பானதாக இருக்கலாம்; ஆனால், நிலத்திடல் அத்துமீறலாக (trespass to land) இருக்கக்கூடாது.

(ஆ) இங்கிலாந்தில் உள்ள நிலை (Position in England):

அயல்நாட்டில் செய்யப்பட்ட ஓர் தீங்கு தொடர்பாக இங்கிலாந்தில் வழக்கிடலாம். இருப்பினும் இது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

முதலாவதாக, அயல்நாட்டில் செய்யப்பட்ட அத்தவறு, இங்கிலாந்தில் செய்யப்பட்டிருந்தால், அது குறித்து இங்கிலாந்தில் ஓர் தீங்காக வழக்கிடக்கூடியதாக இருக்க வேண்டும். பிரதிவாதி, இங்கிலாந்து நாட்டிற்குள் இருக்க வேண்டும். பிரதிவாதி, பிரிட்டன் நாட்டின் எல்லைக்கு வெளியே இருப்பின், சிலக்குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில், இங்கிலாந்து உயர்நீதிமன்றத்தின்மூலம் அவருக்கு எதிராக நீதிப்பேராணை பிறப்பிக்கப்படலாம். சாதாரணமாக, வழக்கின் கருப்பொருள் நிலமாக இருந்து, அது முழுமையாக இங்கிலாந்தில் இருப்பின் அல்லது ஒரு நபர் அயல்நாட்டில் வாழ்வகத்தை (domicile) அல்லது குடியிருப்பவராக இருந்தால் அல்லது அயல்நாட்டு அதிகார எல்லைக்கு உட்பட்ட இடத்தினுள் தொல்லை ஏதேனும் புரிந்திருந்து, அதற்கு எதிராக உறுத்துக்கட்டளை வழங்கக்கோரி வழக்கு தொடர்ந்திருந்தால் அல்லது அயல்நாட்டில் வேறு எவரேனும் ஒருவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஓர் அவசியமான அல்லது முறையான தரப்பாக இருப்பின், நீதிமன்றம் அழைப்பாணை மட்டுமே அளிக்கும். பிரதிவாதி இங்கிலாந்து நாட்டினுள் இருப்பதாக வைத்துக்கொண்டால் அல்லது அவர் வெளிநாட்டில் இருந்தாலும் மேற்குறிப்பிட்ட விலக்குகள் ஏதேனும் ஒன்றின்கீழ் உள்ளடங்கியவராக இருப்பின், அவரோ அல்லது வாதியோ எந்த நாட்டினத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அத்தகைய நடத்தை (தீங்கு) இங்கிலாந்து சட்டப்படி நியாயப்படுத்தப்பட முடியாததாக இருப்பின் இங்கிலாந்தில் வழக்கிட முடியும்.

Chaplin Vs Boys, (1969) 2 All ER 1085 (HL) என்ற வழக்கில், மால்டா (Malta) நாட்டில், பிரதிவாதியின் கவனமின்மைக் காரணமாக ஏற்பட்ட விபத்தில் வாதி காயமுற்றார். வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவருமே பிரிட்டன் நாட்டினத்தைச் சார்ந்தவர்கள். மால்டா நாட்டுச் சட்டத்தின்கீழ், ஆங்கிலச் சட்டத்தில் அனுமதிக்கப்படும் வலி மற்றும் துன்புறுத்தலும் (Pain and suffering) மற்றும் வாழ்க்கை வசதிகளின் இழப்பு (loss of amenities of life) ஆகியவற்றிற்கான இழப்பீட்டை உள்ளடக்காத, வெறுமனே பண அளவில் வாதிக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் செலவுகளுக்கு மட்டுமே இழப்பீடு பெற முடியும். எனவே வாதி, இது தொடர்பாக இங்கிலாந்தில் தொடரப்பட்ட வழக்கில், ஆங்கிலச் சட்டப்படி இழப்பீடு தீர்மானிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும், ஓர் தீங்கியல் வழக்கில், தரப்பினர்கள் எந்த நாட்டினத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க தொடர்பைக் கொண்டுள்ளது; ஏனெனில்,

வழக்குமூலம் தொடர்பாகவும் மற்றும் இழப்பீட்டின் அளவு தொடர்பாகவும் அந்நாட்டுச் சட்டமே பொருந்தச் செய்யப்பட வேண்டும் என்றும் இவ்வழக்கின் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டது.

இரண்டாவதாக, தவறு, எந்த நாட்டில் செய்யப்பட்டதோ, அந்நாட்டுச் சட்டத்தின்படி, நியாயப்படுத்தப்பட முடியாததாக இருக்க வேண்டும். அதாவது 'நியாயப்படுத்தக்கூடியதாக' என்பது சட்டப்படி நியாயப்படுத்துவதைக் குறிக்கும். **Philips Vs Eyre, (1870) LR 6 QB 1.,** என்ற வழக்கில், பிரதிவாதி ஜமைக்கா-வின் ஆளுநராக இருந்தபோது, வாதியை தாக்குதல் மற்றும் முறையின்றி சிறைப்படுத்தல் செய்ததாக வாதி அவர்மீது வழக்கிட்டார். பிரதிவாதி ஜமைக்காவில் ஏற்பட்ட கலகம் ஒன்றை ஒடுக்குவதற்காகவே வாதியை கைது செய்ததாகவும் மேலும், ஜமைக்கா சட்டமன்றம், அந்நிகழ்விற்குப்பின் இயற்றப்பட்ட செயல் ஈட்டுறுதிச் சட்டத்தின் (Act of Indemnity) மூலம், கலகத்தை ஒடுக்குவதற்காக மேற்கொண்ட எந்தவொரு செயல்கள் குறித்தும் உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். அயல்நாட்டில் செய்யப்பட்ட செயல் ஒன்று, அந்நாட்டுச் சட்டத்தின்படி, சட்டத்திற்கு உட்பட்டதாக அல்லது மன்னிக்கத்தக்கதாக அல்லது அச்செயலுக்குப் பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தினால் (ex post facto) சட்டப்படியானதாகச் செய்திருப்பின் அது தொடர்பாக இங்கிலாந்தில் வழக்கிட முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் காலவரையறையைக் குறிப்பிடும் அயல்நாட்டுச்சட்டம் வெறுமனே தீர்வழியை அல்லது கடப்பாட்டினை நிறைவேற்றும் முறையை (procedure for enforcing the obligation) மட்டுமே பாதிப்பதாக இருந்தால், அது இங்கிலாந்தில் வழக்கிடுவதை தடுக்காது என்றும் ஆனால், அயல்நாட்டுச் சட்டம், வழக்கிடும் உரிமையை அறுநிலைச் செய்திருப்பின் (extinguishes the right), அது தடையாக இருக்கும் என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

Scott Vs Seymour, (1862) 1 H & C 219., என்ற வழக்கில், அயல்நாட்டுச் சட்டப்படி, ஓர் செயல் தொடர்பான குற்றவியல் நடவடிக்கை முடியும்வரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்பதை பிரதிவாதி எதிர்வாதமாக பயன்படுத்தமுடியாது; ஏனெனில், அது வெறுமனே நடைமுறை தொடர்பான பொருண்மை மட்டுமே (mere matter of procedure) என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

(இ) பேராசிரியர் வின்ஃபீல்டின் மூன்று அனுமான விதிகள் (Winfield's three rules of presumption):

அயல்நாட்டில் இழைக்கப்பட்ட தீங்குகளுக்காக இங்கிலாந்து நாட்டு நீதிமன்றங்களில் வழக்கிடுவது குறித்த பொருண்மைகள் தொடர்பாக, பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள் முடிவு செய்துள்ளதன் அடிப்படையில், பேராசிரியர் வின்ஃபீல்ட் இப்பொருள் தொடர்பான தனது அனுமானத்தை பின்வரும் மூன்று விதிகளின்கீழ் உள்ளடக்குகிறார்:

(1) பிரதிவாதியால் அயல்நாட்டில் செய்யப்பட்ட செயல், அந்நாட்டு சட்டப்படி நியாயப்படுத்தப்பட முடியாததாக இருந்து அதாவது, அங்கு வழக்கிடக்கூடிய ஓர் தீங்காக இருந்து, இங்கிலாந்து நாட்டுச்சட்டத்தின்கீழ் நியாயப்படுத்தக்கூடியதாக இருந்தால் (அதாவது, அச்செயல், இங்கிலாந்தில் வழக்கிடக்கூடிய ஓர் தீங்காக இல்லாமல் இருப்பின்) அச்செயலுக்காக இங்கிலாந்து நாட்டின் நீதிமன்றங்களில் வழக்கிடமுடியாது. [ஏனெனில் இங்கிலாந்து நாட்டிற்குள் இங்கிலாந்து சட்டம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். இது lex loci (i.e., law of the place) அதாவது 'உள்ளகச் சட்டம்' என்ற விதியின்படி அமைந்ததாகும்].

(2) பிரதிவாதியின் செயல், அயல்நாட்டுச் சட்டத்தின்கீழ் நியாயப்படுத்தக்கூடியதாக இருந்தால், அதாவது ஓர் தீங்கு என்பதாக இல்லாமல் இருந்தால், ஆனால் அச்செயல் இங்கிலாந்து நாட்டுச்சட்டப்படி ஓர் தீங்காக இருந்தாலும், பிரதிவாதிக்கு எதிராக இங்கிலாந்து நீதிமன்றங்களில் வழக்கிட முடியாது. [ஏனெனில் செயல் செய்யப்பட்ட இடமான (lex loci) அயல்நாட்டின் சட்டப்படி அச்செயல் ஓர் தீங்கு அல்ல].

(3) பிரதிவாதியின் செயல், அச்செயல் செய்யப்பட்ட அயல்நாட்டிலும் நியாயப்படுத்த முடியாததாகவும், இங்கிலாந்திலும் நியாயப்படுத்த முடியாததாகவும், அதாவது இவ்விரு நாடுகளிலும் அச்செயல் ஓர் தீங்காக இருப்பின், அச்செயல் குறித்து இங்கிலாந்து நீதிமன்றத்தில் வழக்கிட முடியும்.

(ஈ) இந்தியாவில் உள்ள நிலை (Position in India):

இந்தியத் தீங்கியல் சட்டம் அடிப்படையில் ஆங்கிலத் தீங்கியல் சட்டத்தையே பின்பற்றுகிறது. எனவே அயல்நாட்டில் செய்யப்பட்ட ஓர் தீங்கிற்காக இந்திய நீதிமன்றங்களில் வழக்கிடுவதற்கு, இங்கிலாந்தில் பின்பற்றப்படும். அதே இரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்; அதாவது, ஓர் அயல்நாட்டு தீங்கு குறித்து இந்திய நீதிமன்றங்களில் வழக்கிடுவதற்கு;

(1) அயல்நாட்டில் செய்யப்பட்ட அச்செயல், இந்தியாவில் ஓர் தீங்கு என்பதாக இருக்க வேண்டும்; மற்றும்;

(2) தவறு எங்கு செய்யப்பட்டதோ, அந்நாட்டுச் சட்டத்தின்படி அது நியாயப்படுத்தப்பட முடியாததாக, அதாவது, அச்செயல் செய்யப்பட்ட அயல்நாட்டில் அது ஓர் தீங்காக இருக்க வேண்டும்.

Govindan Nair Vs Achutha Menon, AIR 1915 Mad 1206., என்ற வழக்கில், அயல்நாட்டுத் தீங்கிற்காக இந்தியாவில் வழக்கிடுவதற்கு, அயல்நாட்டில் செய்யப்பட்ட அச்செயல் அந்நாட்டு சட்டத்தின்படி நியாயப்படுத்தமுடியாத ஓர் தீங்காக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

82. தீங்கென உறுதியாகக் கூறமுடியாத தீங்குகள் பற்றி நீவீர் அறிவதென்ன? அது குறித்து விளக்கவும்.(What do you know about doubtful torts? Explain the same).

SN - 120 தீங்கென உறுதியாகக் கூற முடியாத தீங்குகள் அல்லது சந்தேகத்திற்குரிய தீங்குகள் அல்லது ஐயத்தீங்குகள் / Doubtful torts, May-2015(v), Nov-2015, Nov-2018.

விடைச்சுருக்கம்: (அ) சந்தேகத்திற்குரிய தீங்குகள் - அ (1) தனியுரிமை - அ (2) தன்னாட்சிக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் - அ (2) (i) மன்றம் அல்லது சங்கத்தில் உறுப்பினராக இருப்பதற்கான உரிமைகள் - (3) ஒப்பந்தத்தினின்று எழும் தீங்கு - அ (4) தனிமைக்கான உரிமை

(அ) சந்தேகத்திற்குரிய தீங்குகள் (Doubtful torts):

தீங்கியல் சட்டத்தின் எல்லை மற்றும் அது பொருந்தச் செய்யும் பகுதிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. இதன் விளைவாக தீங்கியல் சட்டத்தின் கருப்பொருளும் அதிகரித்து வருகிறது. இது **Chapman Vs Pickersgill, (1762) 2 Wils 146.,** என்ற வழக்கில் கூறப்பட்ட "தீங்குகளின் இனங்கள் எப்போதும் மூடப்படுவதில்லை; தீங்குகள் முடிவற்ற வேறுபட்டவை, அவை வரம்புக்கு உட்பட்டவையோ அல்லது ஓர் எல்லைக்குள் உள்ளடக்கப்பட்டவையோ அல்ல" (categories of torts are never closed; torts are infinitely various, not limited or confined) எனும் புகழ்பெற்ற கூற்றுக்கு ஏற்ப, தொடர்ந்து புதுப்புது தீங்குகளை தன்னுள் சேர்த்துக்கொண்டு வளர்ந்து வருகிறது. புதிதாக அங்கீகரிக்கப்படும் பெரும்பாலான தீங்குகள், தீங்கியல் பொறுப்பு நிலையில் இருந்து எழாமல் ஒப்பந்த மீறலில் இருந்து எழுகிறது. மேலும் தீங்கியலின் மிக முக்கிய தீர்வழியான இழப்பீடுகள் இவ்வகைகளில் கோரப்படுவதில்லை; மாறாக, மீட்டளப்பு (restitution). அகற்றுதல் அல்லது நீக்குதல் (abatement) மற்றும் பிற நீதிமன்ற ஆணைகளையே கோருவதால், இத்தகைய புதியவகை தீங்குகள் உண்மையிலேயே தீங்கியல் சட்டத்தின்கீழான தீங்குகளா எனும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இவைகளே தீங்கென உறுதியாகக்கூற முடியாத தீங்குகள் அல்லது சந்தேகத்திற்குரிய தீங்குகள் அல்லது ஐயப்பாடான தீங்குகள் என அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் பின்வருபவைகள் முக்கியமானவைகள் ஆகும்:-

(1) தனியுரிமை;

(2) தன்னாட்சிக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்;

(2) (i) மன்றம் அல்லது சங்கத்தில் உறுப்பினராக, இருப்பதற்கான உரிமைகள்;

(3) ஓர் ஒப்பந்தத்தினின்று எழும் தீங்கு;

(4) தனித்திருக்கும் உரிமை அல்லது தனிமைக்கான உரிமை.

மேற்குறிப்பிட்ட ஐயப்பாடான தீங்குகள் பற்றி சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

அ(1) தனியுரிமை (Right of franchise): பொதுவாக 'franchise' என்றச்சொல் வாக்களிக்கும் உரிமை என்றப்பொருளில் பரவலாகப்

பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சட்டத்தின் பொருளில், இது சட்டப்படி அல்லது சட்டப்படி அதிகாரம்படைத்த ஒருவரால் அல்லது அமைப்பினால், மற்றொரு நபர் அல்லது நபர்களுக்கு, சிலக்குறிப்பிட்ட செயல்/செயல்களைச் செய்வதற்கு அளிக்கப்படும் தனிமுறையிலாக செயல்படுத்தத்தக்க ஓர் உரிமையாகும். (வாக்களிக்கும் உரிமையும்கூட, இந்தியாவில் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்புச் சட்டத்தின்கீழ் அதிகாரம் கொண்டுள்ள தேர்தல் ஆணையத்தினால் தயாரிக்கப்படும் வாக்காளர் பதிவேட்டில் பெயர் உள்ளவர் மட்டுமே வாக்களிக்க முடியும் என்பதால் தனியுரிமை என்பதாகிறது). இங்கிலாந்தில் நினைவிகழ்ந்த காலத்தில் இருந்தே, அரசரால் மக்களில் சிலருக்கு வழங்கப்பட்ட சிலக்குறிப்பிட்ட உரிமைகளில் இருந்து தோன்றியதே தனியுரிமையாகும். அரசர் தான் பெற்றுள்ள பேரரசின் சிறப்புரிமை (Royal Privilege) மூலம் இத்தகைய தனியுரிமையை மக்களில் சிலருக்கு வழங்கினார். அரசர் மக்களுக்கு வழங்கிய சிறப்புரிமைகளில் பல கால மாற்றத்தினால் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டு விட்டன. சந்தை நடத்தும் உரிமை, சந்தையில் சுங்கக் கட்டணம் வசூலிக்கும் உரிமை, மீன்பிடி உரிமை, வனம், பூங்கா போன்றவற்றை கொண்டிருக்கும் உரிமை உள்ளிட்ட நடைமுறையில் பின்பற்றப்படும் உரிமைகளும் அரசரால் மக்களில் சிலருக்கு தனியுரிமையாக வழங்கப்பட்டதாகும். ஓர் நபருக்கு தனியுரிமை வழங்கப்பட்டிருப்பின் அந்த உரிமையில் பிறர் குறுக்கிட முடியாது. மீறும்பட்சத்தில், தனியுரிமை பெற்றவர் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

Yard Vs Ford, (1670) 2 Wims Saund 172., எனும்ஓர் பழமையான வழக்கில், சந்தை நடத்துவதற்கு தனியுரிமை வழங்கப்பட்ட நபர் நடத்தும் அதேநாளில், அச்சந்தைக்கு ஏழு மைல்களுக்கு உட்பட்ட பகுதியில், மற்றொருவர் போட்டியாக சந்தையை நடத்தினால், அது தனியுரிமை பெற்றவரின் வியாபார நலனில் குறுக்கீடு செய்வதாகும் எனக் கூறப்பட்டது. ஆனால், ஒவ்வொரு வணிகரும், பொருட்கள் விற்கப்படும் பொதுவான முறையின்கீழ் தங்களின் பொருள்களை விற்பதால் ஏற்படும் வியாபாரப் போட்டியின் காரணமாக, அடுத்துள்ள சந்தையில் வாடிக்கையாளர் குறைவது வியாபார குறுக்கீடாகாது என **Mayor of Manchester Vs Lyons, (1883) 22 Ch.D. 289.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

தனியுரிமைக்கும், உரிமம், வசதியுரிமை மற்றும் நீளுடைக்கும் (prescription) இடையேயான அடிப்படை வேறுபாடு என்னவெனில், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு, தனியுரிமை சட்டத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதால் இவ்வுரிமையை தனிநபர்களிடம் இருந்து அல்லது நீளுடைமையின் அடிப்படையில் பெற முடியாது; உரிமம் மற்றும் வசதியுரிமைகளை தனிநபர்களிடம் இருந்து அல்லது நீளுடைமையின் (நீண்டகால உடைமையின்) அடிப்படையில் பெறமுடியும் என்பதாகும்.

அ (2) தன்னாட்சிக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் (Action by Autonomous bodies): இன்றைய நவீன

உலகின் நாடுகள் அனைத்தும், நீதிமுறைபோல்வு அதிகாரங்களை (quasi-judicial powers) கொண்ட மற்றும் சுய ஆளுமை செய்து கொள்ளும் பல தன்னாட்சி அமைப்புகளை (autonomous self-governing bodies) கொண்டுள்ளன. பல்கலைக்கழகங்கள், மருத்துவக்குழு, வழக்குரைஞர்கள் கழகம் (Bar Council), இரயில்வே நிறுவனம், தொழிற்சங்கம் உள்ளிட்ட இத்தகைய தன்னாட்சி குழுக்களின் நடவடிக்கைகளில் எந்த அளவிற்கு உரிமையியல் நீதிமன்றங்கள் குறுக்கீடு செய்ய முடியும் என்பது பரவலாக விவாதிக்கப்பட்டு வரும் ஓர் வினாவாக உள்ளது. இத்தகைய தன்னாட்சி அமைப்புகள், தங்களின் நீதிமுறை போலமை அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும்போது, அதனை ஓர் தீங்காகக் கருதி வழக்கிடமுடியுமா? இக்கேள்விக்கு உறுதியான விடையளிக்க முடியாமல் இருந்தாலும்கூட, ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் சார்ந்து, தன்னாட்சி அதிகாரஅமைப்பு, இயற்கை நீதிக்கொள்கையை பின்பற்றாமல் அளிக்கும் முடிவுகளில் நிச்சயமாகக் குறுக்கிட முடியும் எனக்கூறலாம். ரைட் பிரபு, **General Medical Council Vs Spackman, 1943 AC 627.**, என்ற வழக்கில், உள்ளுறைவுத் தீர்ப்பாயங்களில் (Domestic tribunals) அனைத்து தரப்பினர்களுக்கும் அறிவிப்பு வழங்குதல், அவர்கள் தரப்பு கேட்கப்படுதல் ஆகிய நடைமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

அ(2)(i) மன்றம் அல்லது சங்கத்தில் உறுப்பினராக இருப்பதற்கான உரிமைகள் (Right to the membership of a club or association): ஒரு நபர், மன்றம் அல்லது பிற சங்கங்களில் உறுப்பினராக தொடர்ந்து இருப்பதற்கான உரிமையும் மற்றும் அத்தகைய மன்றம் அல்லது சங்கத்தில் இருந்து முறையற்ற வகையில் வெளியேற்றியதற்காக வழக்கிடும் உரிமையும், அந்நபரிடம் சேர்ந்தடைந்துள்ள சொத்தியல் உரிமையுடன் தொடர்பு கொண்ட ஓர் உரிமையாகக் கருதப்படுகிறது என **Rigby Vs Cannol, (1880) 14 Ch. D 482.**, என்ற வழக்கில் கூறப்பட்டுளளது. எனவே ஓர் மன்றம் அல்லது சங்கம், சொத்துகள் எதனையும் கொண்டிராமல் இருப்பின், இத்தகைய உரிமையைக் கொண்டிருக்க முடியாது. இருப்பினும், வெளியேற்றப்படுதலானது, பொய்யான அல்லது அவதூறான பழி சுமத்தலின்பேரில் அல்லது உடல் பலத்தைப் பயன்படுத்தி அல்லது தீய நோக்குடைய சதிச் செயலின் மூலமாக என்றிருப்பின் வழக்கிடலாம். தீங்கியலில் இத்தகைய வழக்குமூலம் இல்லாத நேர்வுகளில் முறையான தீர்வழி என்னவெனில், வெளியேற்றப்பட்ட நபர் ஒப்பந்த அடிப்படையிலான தனது உரிமையை நடைமுறைப்படுத்துவதற்காக வழக்கிடுவதாகும் **[Abbott Vs Sullivan, (1952) 1 KB 189 (CA)].**

இந்தியாவில் உள்ள இந்து சமய மக்களிடையே, ஓர் சாதியில் உறுப்பினராக இருப்பது ஓர் சமுதாய நிலையாக (status) கருதப்படுகிறது. எனவே ஓர் நபரை அவரின் சாதியில் இருந்து ஓர் முறையற்ற வகையில் தள்ளி வைத்ததற்காக, அச்சாதிக்கென்று சொத்து ஏதும் இல்லாமல் இருப்பினும்கூட

உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கிட முடியும். [எ-டு: **Jagannath Vs Alkali Dassiya, (1893) ILR 21 Cal 463, Nagindas Vs Somnath, (131) ILR 56 Bom 242].** இவ்வாறு சாதியில் இருந்து தள்ளி வைப்பது ஓர் வழக்கிடத்தக்க அவதூறு என்பதாகவும் ஆகலாம் என **Coopoosamy Vs Duraiswami, (1902) ILR 33 Mad 67.,** என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், ஓர் மன்றத்தில் அல்லது சாதி அல்லது பிற சங்கத்தில், உறுப்பினராக உள்ள ஒரு நபரை நல்லெண்ணத்தின் அடிப்படையிலான மற்றும் இயற்கை நீதிக்கொள்கைக்கு இணக்கமான முறையில் மற்றும் அத்தகைய மன்றம், சாதி அல்லது பிற சங்கத்தின் விதிகளுக்கு உட்பட்ட வெளியேற்றத்திற்காக முறையீடு செய்யப்பட முடியாது என **George Bell Vs Royal Western India Turf Club Ltd., (1945) 47 Bom LR 916.,** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டது.

அ(3) ஓர் ஒப்பந்தத்தினின்று எழும் தீங்கு (Tort arising out of contract): சில நேரங்களில் ஒப்பந்தத்தினின்றும் தீங்கு எழலாம். எடுத்துக்காட்டாக 'A' என்பவர் தனது மகன் 'B' என்பவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக 'C' என்ற மருத்துவரிடத்தில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். மருத்துவர் சிகிக்சை அளிக்கும்போது கவனமின்மைத்தீங்கு புரிகிறார். இங்கு ஒப்பந்தம் 'A' மற்றும் 'C'- க்கு இடையே நிறைவேற்றப்பட்டிருப்பதால், 'A', மருத்துவர் 'C'-க்கு எதிராக ஒப்பந்த மீறுகைக்காக வழக்கிட முடியும். அதே நேரத்தில் 'B' என்பவர் 'C'-க்கு எதிராக கவனமின்மைத் தீங்கு புரிந்ததற்காக வழக்கிட முடியும் **[Edward Vs Mallan, (1908) 1 KB 1002].** இங்கு 'A', மற்றும் 'C'-க்கு இடையே ஒப்பந்த உறவு உள்ளது; ஆனால் 'B' மற்றும் 'C'-க்கு இடையே ஒப்பந்த உறவு ஏதுமில்லை. இதனை வேறு முறையில் குறிப்பிடுவது எனில், ஒரே செயலினின்று ஒப்பந்த மீறுகைக்கான பொறுப்பு நிலையும் மற்றும் தீங்கியலுக்கான பொறுப்பு நிலையும் எழுகிறது. மேலும், ஒப்பந்த மீறுகையினின்று எழும் பொறுப்பு நிலையை, தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளும்போதே, ஓர் விலக்கு வாசகத்தை (exemption clause) சேர்ப்பதன்மூலமாக அதனை தவிர்த்துக் கொள்ள முடியும்; ஆனால், தீங்கியல் பொறுப்பு நிலையை இவ்வாறு தவிர்த்துக் கொள்ள முடியாது.

Austin Vs G.W.N. Rly. Co., (1867) 2 QB 442., என்ற வழக்கில், தன் தாயால் கூட்டிச் செல்லப்பட்ட வாதி, இலவசமாக இரயிலில் பயணிக்கும் வயதுக்கும் சற்றுக் கூடுதலான வயதுடைய சிறுமி ஆவார். வாதியின் தாய் அவருக்கு மட்டும் பயணச்சீட்டைப் பெறும்போது, பிரதிவாதிகளான இரயில்வே நிறுவனம், வாதியின் வயதைப்பற்றி எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை. வாதியின் தாயும் பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை. பயணத்தின்போது, பிரதிவாதிகளின் கவனக்குறைவால் வாதிக்கு ஏற்பட்ட ஊறுகளுக்காக இழப்பீடு கோரி, வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். பிரதிவாதிகள், வாதி பயணச்சீட்டு பெற்று பயணிக்காததால் ஏமாற்றுதல் எனும் தீங்கு புரிந்துள்ளார் என்றும் எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் வாதிட்டனர். நீதிமன்றம், பிரதிவாதிகள் பின்வரும் இரண்டு காரணங்களில் ஏதேனும் ஒன்றின்கீழ் அதாவது-

(i) தாய் மற்றும் சிறுமி ஆகிய ஒவ்வொருவர் பொறுத்தும் கொண்டு சேர்ப்பதற்கான முழுமையான ஒப்பந்தத்தின்கீழ் அல்லது; (ii) சிறுமியை ஓர் பயணியாக ஏற்றுக்கொண்டதன் காரணமாக, ஒப்பந்தம் ஏதும் இல்லாமலேயே சிறுமியை பாதுகாப்பாக கொண்டு சேர்க்கும் கடமை கொண்டிருப்பதன்கீழ் பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது. மேலும் ஏமாற்றுதல் அல்லது மோசடி ஏதும் இல்லாத சூழ்நிலையில், வாதி இரயில்வே நிறுவனத்தின் சொத்தைப் பயன்படுத்த நிறுவனத்தின் அழைப்பின் பேரில் வருகை புரிந்தவராகக் கருதப்பட வேண்டும் என்பதையும் நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டது.

அ(4) தனிமைக்கான உரிமை (Right to privacy): (அடுத்து வரும் குறுவினாவில் காண்க).

SHORT NOTES

121. தனிமைக்கான உரிமை அல்லது தனித்திருக்கும் உரிமை / Right to Privacy., Nov-2010, May-2011

ஒரு நபர், தாமும் தன் குடும்பமும் சமுதாயத்தின் குறுக்கீடு ஏதுமின்றி தனித்திருக்கவும் அல்லது தனது சொத்துகளில் பிறர் குறுக்கீடு செய்யாமல் அதனை துய்ப்பதற்கு கொண்டிருக்க விரும்பும் அத்தகைய உரிமையே தனித்திருக்கும் உரிமை என்பதாகும். இவ்வுரிமையின் மையப்பொருள், பிறரின் குறுக்கீடு இல்லாமல் இருப்பதாகும். இந்தியாவில், உள்ளூர் வழக்கம் மற்றும் தனிப்பட்ட அனுமதியின் பேரில் குறிப்பிட்ட ஒரு சில மாநிலங்களில் தனித்திருக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அலகாபாத் உயர்நீதிமன்றம், **Gokal Prasad Vs Radho, (1880) ILR 10 All 358.**, என்ற வழக்கில், வாதியின்வீட்டில் பெண்கள் கூடுவதற்கு மட்டும் என ஒதுக்கி வைத்துள்ள பகுதியை (zenana), பிரதிவாதிகள், மேலிருந்து பார்க்கும் வண்ணம் கட்டப்படுவதை தடை செய்து உறுத்துக்கட்டளையைப் பிறப்பித்தது. இருப்பினும் இவ்வழக்கில், ஒரு குறிப்பிட்ட சமயப்பிரிவைச் சார்ந்த பெண்கள் தங்களை உடல் முழுதும் மறைத்துக்கொள்ளும் உள்ளூர் வழக்காறின் அடிப்படையில் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதே தவிர, பொதுவான அடிப்படையில், தனிமைக்கான உரிமையை அங்கீகரித்து வழங்கப்படவில்லை என்பதை இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி எட்ஜ்-ன் (Edge CJ) சொற்கள் பிரதிபலிக்கிறது.

இந்தியாவில் உள்ளூர் வழக்கம் அல்லது மானியம் அல்லது சிறப்பு முறையிலான அனுமதியின் அடிப்படையில் தனித்திருக்கும் உரிமை பெறப்படலாம். இந்திய வசதியுரிமைகள் சட்டத்தின் பிரிவு-18-ல் குறிப்பிடப்பட்டுள்ள எடுத்துக்காட்டு (b) இத்தகைய உரிமையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும் தனித்திருக்கும் உரிமை நீளுடைமையின் அடிப்படையில் அல்லாமல், வழக்கத்தின் அடிப்படையில் இருந்து எழுவதாகும். கிழக்கித்திய நாடுகளின் வழக்கத்தின் (oriental custom) அடிப்படையில் அமைந்த பெண்களை தனிமைப்படுத்தும் வசதியுரிமை,

இந்தியாவில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இந்திய வசதியுரிமைகள் சட்டத்தை வடிவமைத்த சட்ட ஆணையர்களும் இத்தகைய உரிமையை அங்கீகரித்துள்ளனர். இருப்பினும் இவ்வுரிமையைக் குறித்து, இந்திய உயர்நீதிமன்றங்களுக்கு இடையே ஒத்தக்கருத்து இல்லை.

Manishankar Hargovan Vs Trikam Narsi, (1867) 5 BHC (ACJ) 42., என்ற வழக்கில், குஜராத்தில் உள்ள வழக்காற்றின்படி (Usage), தனித்திருப்பதன்மீதான மீறுகை, ஓர் வழக்கிடத்தக்க தீங்கு என்றும், ஓர் நபர் அண்டை வீட்டில் உள்ள நபர்கள் சாதாரணமாக பார்க்க முடியாதவாறு மறைத்து வைத்திருக்கும். அத்தகைய பகுதிகளை பார்க்கக்கூடிய வண்ணம், பக்கத்து வீட்டிலிருப்பவர், புதிய கதவுகள், சன்னல்கள், வழிகளை அமைப்பதோ அல்லது ஏற்கனவே உள்ள கதவு, சன்னல்களை பெரிதாக்குவதோ, தனித்திருப்பதன்மீதான குறுக்கீடாகும் என்று குறிப்பிடப்பட்டது. வங்காளத்திலும் இத்தகைய உரிமை அங்கீகரிக்கப்பட்டது. தனித்திருக்கும் உரிமை, நீளுடைமை அல்லது மானியம் அல்லது வெளிப்படையான உள்ளூர் வழக்காறின் அடிப்படையில் அமைந்தது என ஒரு வழக்கில் கூறப்பட்டது. மற்றொரு வழக்கில், தனிமைக்கான உரிமை, ஒளி மற்றும் காற்றுக்கான தொன்மை உரிமை (right to ancient light, air) போன்று உள்ளார்ந்த சொத்தியல் உரிமையல்ல என மற்றோர் வழக்கில் கூறப்பட்டது. இதே கருத்தை பாட்னா உயர்நீதிமன்றமும் குறிப்பிட்டுள்ளது. மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம், **Abirchand G.Jain Vs Mahick Ramnarain, 1978 MPLJ 204.,** என்ற வழக்கில் தனித்திருக்கும் உரிமையை ஓர் வசதியுரிமையாக பெறப்பட முடியாது என்றும், ஆனால் உள்ளூர் வழக்கத்தின் அடிப்படையில் பெறப்படலாம் என்றும் அத்தகைய உள்ளூர் வழக்கத்தை கண்டிப்பாக மெய்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் **Komathi Vs Gurunada, (1866) 3 MHC 141.,** என்ற வழக்கில், சன்னலை திறப்பதன்மூலமான தனித்திருப்பதன்மீதான மீறுகையை, ஓர் தீங்காக சட்டம் கருதவில்லை என்றும் அதற்கான தீர்வழியையும் தீங்கியல் சட்டம் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டது. தனித்திருக்கும் உரிமையை வாதி, வழக்கமாக அனுபவித்து வந்தாலேயொழிய அது ஓர் வழக்கிடத்தக்க தவறாக ஆகாது என்று சென்னை உயர்நீதிமன்றம் **S.Ramalingam Pillai Vs Dhanalakshmi Ammal, (1984) 1 MLJ 253.,** என்ற அண்மைக்கால வழக்கில் குறிப்பிட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள நிலை (Position in England): ஆங்கில வழக்குத்தீர்வுகளின் போக்கை நோக்கும்போது, தனித்திருக்கும் உரிமையை தனியே ஓர் தீங்காக அங்கீகரிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. இருப்பினும், ஓர் நபரின் தனிமைக்கான அல்லது சொத்துக்கான எல்லை மீறுகை ஓர் தனித்த வழக்குமூலத்திற்கு வழிவகுப்பதாக அமையலாம். ஓர் நபரின் படம் அல்லது ஓவியம் அல்லது கேலிச்சித்திரம் போன்றவற்றின் வெளியீடு அவதூறாகலாம் **[Tolley Vs Fry & Sons, (1931) AC 333].** ஒரு நபரின் புகைப்படம் அல்லது மெழுகு உருவ

மாதிரிச் சிலையை (Wax work) எந்தவொரு நியாயமான காரணங்களும் இன்றி குற்றவாளிகள், அயோக்கியர்கள் மத்தியில் வைக்கப்பட்டு அதன்மூலமாக மற்றொரு நபரின் புகழுக்கு ஊறு ஏற்படுத்தும் ஓர் எண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருந்தால் அது அவதூறுத் தீங்காகும் என்று **Monson Vs Tussauds Ltd., (1894) 1 QB 671.,** என்ற வழக்கில் கூறப்பட்டது. ஒருவரின் சொத்தினுள் அங்குமிங்கும் சுற்றித்திரியும் செயலின்மூலமாக, மற்றொருவர் தனித்திருப்பது மற்றும் அவரின் வீட்டை தனியே விலக்கி வைத்திருப்பதை மீறுவது ஓர் அத்துமீறல் தீங்காகவோ அல்லது தொல்லை என்பதாகவோ அமையலாம் என்று இங்கிலாந்து நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன. வெளியீடு செய்யக் கருதாத அத்தகைய நபர்களின் கடிதங்கள் அல்லது படைப்புகள் வெளியீடு செய்யப்படுவதை நம்பிக்கை மீறல் அல்லது சொத்துரிமை மீறுகையாகக் குறிப்பிட்டு தடை செய்ய முடியும் என்று பல வழக்குகளில் நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன. இவ்வாறு, இங்கிலாந்தில், தனித்திருக்கும் உரிமையை ஓர் தனிப்பட்ட தீங்காக அங்கீகரிக்கப்படாமல் இருந்தாலும், அத்தகைய மீறுகையின்மூலம் எழுகின்ற அவதூறு, அத்துமீறல், தொல்லை என்பன போன்ற ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள தீங்குகளின் அடிப்படையில் வழக்கிட முடியும். இத்தகைய நிலை அதாவது, தனித்திருக்கும் உரிமையை ஓர் தனிப்பட்ட தீங்காக அங்கீகரிக்கப்படாமல் இருக்கும் நிலை, ஆங்கிலச் சட்டத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதாக உள்ளது என **Kaye Vs Robertson, (1991) FSR 62.,** என்ற வழக்கில் கூறப்பட்டது.

அலகு - X

தீங்கு முடிவடையும் முறைகள் (Discharge of Torts)

PART - A/B

83. தீங்கியல் பொறுப்பில் இருந்து எந்தெந்த வகைகளில் விடுவிக்கப்படலாம் என்பதை விரிவாகக் கூறவும் (Explain elaborately the various modes of discharge of a tort) - Nov-2019.

- **தீங்கு பொறுப்படைவு விடுவிக்கப்படும் பல்வேறு வழிகளை விளக்குக.(Explain various methods of discharge of torts) - Nov-2018 (v).**
- **தீங்குகள் முடிவுக்கு வரும் அனைத்து வழிகளையும் விளக்குக. (Bring about all the ways of discharge of torts) - Nov-2015, Nov-2016.**
- **மற்றொருவரால் செய்யப்பட்ட உரிமையியல் தீங்கிற்கு ஒருவர் தான் பெற்றிருக்கும் வழக்குத் தொடரும் உரிமையை எவ்வழிகளின் மூலமாக விடுவிக்கலாம்? (What are the methods by which right of action vested in a party for tort committed by another may be discharged?) - Nov-2014 (v), May-2016 (v).**

SN - 122 **ஒத்திசைவும் நிறைவு பெறுதலும் அல்லது ஒத்திசைவும் உள நிறைவும் / Accord and Satisfaction, Nov-2015 (v), Nov-2017 (v).**

விடைச்சுருக்கம்: (அ) தீங்கு பொறுப்படைவு முடிவுக்கு வரும்முறைகள் - அ (1) உரிமை விடுப்பு - அ (2) குறிப்பிசைவு - அ (3) ஒத்திசைவும் மன நிறைவும் - அ (4) முன்தீர்ப்பு தடை - அ (5) விடுதலை செய்தல் - அ (6) காலவரையறை - அ (7) வழக்கிடும் உரிமையை மாற்றியளித்தல் - அ (8) தரப்பினர்களின் இறப்பு.

(அ) தீங்கு பொறுப்படைவு முடிவுக்கு வரும் முறைகள் (Modes of extinction of tortious liability) அல்லது தீங்குகள் முடிவுக்கு வரும் வழிகள் (Ways of discharge of torts):

தீங்கு என்பது உரிமையியல் தவறாகும். ஒருவரின் செயலால் அல்லது செய்ய வேண்டிய செயலைச் செய்யத் தவறியதால் அல்லது கவனக்குறைவினால் மற்றொரு நபருக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படலாம். அத்தகைய செயலினால் அல்லது செயல் தவிர்ப்பினால் பாதிப்புற்ற நபர், தீங்கிழைத்த நபருக்கு எதிராக

அறுதியிடப்படாத இழப்பிற்காக வழக்கிட முடியும். இருப்பினும் பிரதிவாதியின் செயலினால் வழக்கு தொடரும் உரிமையைப் பெற்றுள்ள வாதி, பின்வரும் முறைகளின்மூலம் அவ்வுரிமையை விடுவிக்கலாம். இதனை வேறு முறையில் குறிப்பிடுவது எனில், பிரதிவாதி பின்வரும் முறைகளின்கீழ் தீங்கியல் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படலாம் அல்லது விடுபடலாம்.

(1) உரிமை விடுப்பு;

(2) குறிப்பிசைவு;

(3) ஒத்திசைவும் மன நிறைவும்;

(4) முன் தீர்ப்பு தடை;

(5) விடுவித்தல் அல்லது விடுதலை செய்தல்;

(6) காலவரையறை;

(7) வழக்கிடும் உரிமையை மாற்றியளித்தல்; மற்றும்;

(8) தரப்பினரின் இறப்பு

அ(1) உரிமை விடுப்பு (Waiver): ஒரு நபர், நடைமுறையில் தான் கொண்டுள்ள சட்ட உரிமையைப் பற்றி அறிந்திருந்தே, வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அதனை துறப்பது அல்லது விட்டுவிடுவதன்மூலமாக, அத்தகைய சட்ட உரிமையை இழப்பது அல்லது முடிவுக்கு கொண்டு வருவதே உரிமை விடுப்பு அல்லது உரிமை துறப்பு என்பதாகும். எனவே உரிமை விடுப்பு என்பது, ஓர் நபர் தான் கொண்டுள்ள ஓர் சட்ட உரிமையை தாமாகவே மற்றும் அறிந்திருந்தே விட்டு விடுவதைக் குறிக்கும். இங்கு உரிமையை விட்டுவிடுவது என்பது, ஓர் சட்ட உரிமை, ஆதாயம், பாத்தியதைக்கோரல் அல்லது சிறப்புரிமை போன்ற, அதாவது, அத்தகைய உரிமை விடுப்பு செய்யப்படாமல் இருந்தால், அவரால் பெறப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய உரிமைகளைக் குறிக்கும். பொதுவாக, உரிமை விடுப்பு என்பது, தீங்குற்ற நபர் ஒருவருக்கு, தீங்கியல் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோரி வழக்கிடுவதுடன், ஒப்பந்தம் அல்லது ஒப்பந்த போலமை போன்றவற்றின்கீழ் வேறு சில தீர்வழிகளும் இருக்கும்போது, அவர் ஒப்பந்தத்தின்கீழான தீர்வழியை தேர்வு செய்யும்போது, தீங்கியல் சட்டத்தின்கீழான வழக்கிடும் உரிமையை விட்டுவிட்டதாகக் கருதப்படும். அவர் இரண்டின்கீழான அதாவது தீங்கியல் சட்டம் மற்றும் ஒப்பந்த சட்டம் ஆகியவற்றின்கீழான இரண்டு தீர்வழிகளையும் பயன்படுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது. உரிமை விடுப்புக் கோட்பாடு, இருவிதமான கொள்கையின் அடிப்படையில் அமைந்ததாகும். முதலாவதாக, நடவடிக்கைகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தை (multiplicity of proceedings) தடுப்பதாகும். இரண்டாவதாக, ஒரு நபர், ஓர் குறிப்பிட்ட தீர்வழியை விட்டுவிட்டார் என்கிற தனது எண்ணத்தை நியாயமான முறையில் வெளிப்படுத்தி உள்ளபோது, அவருக்கு மீண்டும் அத்தகைய மாற்றுத் தீர்வழிக்கு செல்ல அனுமதிப்பது தகைமை நெறியாகாது.

உரிமை விடுப்பு தீர்வழி, உருமாற்றம், ஏமாற்றுதல், அத்துமீறல் மற்றும் அச்சுறுத்திப் பணம் பறித்தல் தொடர்பான தீங்குகளுக்கு அனுமதிக்கப்படுகிறது.

ஆனால் தாக்க முனைதல் மற்றும் அவதூறு போன்ற சிலக் குறிப்பிட்ட தீங்குகளுக்கு இது பொருந்தாது. **Verchures Creameries Vs Hull and Netherlands S.S.Co., (1921) 2 KB 608.,** என்ற வழக்கில், வாதிகளின் பொருட்களை, அவர்களிடம் அளிக்காமல், பிரதிவாதிகள் அதனை முறையற்ற வகையில் பீலின் (Beilin) என்ற நபர் ஒருவரிடம் அளித்தனர். வாதிகள் பீலின் என்பவருக்கு எதிராக உருமாற்றம் புரிந்த தீங்கிற்காக அல்லாமல், பொருளுக்கான தொகையைப் பெற்றிட வழக்கிட்டனர். வாதிகள், அதற்குப் பின்னர் பிரதிவாதிகளுக்கு எதிராக கடமை மீறுகைக்காக வழக்கிட முடியாது; ஏனெனில், அத்தீங்கிற்கான வழக்கிடும் உரிமையை விட்டுவிட்டனர் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

அ(2) குறிப்பிசைவு (Acquiesence): ஒரு நபர் தனது இசைவை அல்லது சம்மதத்தை குறிப்பால் உணரச் செய்வது குறிப்பிசைவாகும். குறிப்பிசைவு என்பது அமைதியாக இருப்பதில் இருந்து அனுமானிக்கப்படும் ஒப்புதல் ஆகும். இது சொல்லாமலேயே உணர்ந்து கொள்ளக்கூடிய ஊக்கப்படுத்தலாகும் (tacit encouragement). குறிப்பிசைவு என்றச் சொல், ஓர் தரப்பு தமது தகைமை நெறியிலான உரிமையை விட்டுவிடும் எண்ணத்தைக் கொண்டிருக்கும் நடத்தைக்கான சான்றைக் குறிப்பிடுவதற்கும், மற்றும் அத்தகைய எண்ணத்தில் குறுக்கிடும் மற்றொரு தரப்பினர் நடத்தையை நியாயப்படுத்துவதை குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிசைவு ஓர் உட்கிடையான ஒப்பந்தம் போன்றது என்பதுடன், இதன் செல்லுந்தன்மைக்கு, ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான அதிகாரம் தேவைப்படுகிறது.

குறிப்பிசைவு என்பது வெளிப்படையான அல்லது உட்கிடையான நடத்தையில் இருந்து உரிமை மீறப்படுவதற்கான இசைவு அல்லது சம்மதத்தின் மூலமாக, தகைமை நெறி தீர்வழிக்கான உரிமையை இழப்பதைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு நபர் மோசடியின்மூலம் தூண்டப்பட்டு ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார். தான் மோசடியின் மூலமாக தூண்டப்பட்டதை அறிந்த பின்னரும், மட்டுமீறிய காலதாமதம் என்ற குற்றத்திற்கு உள்ளாகும் காலம்வரை வருடக் கணக்கில், அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும் வழக்கு நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமல் இருப்பின், அவர் அவ்வொப்பந்தத்திற்கு குறிப்பிசைவு அல்லது மறைமுக சம்மதம் அளித்துவிட்டதாகும்.

அ(3) ஒத்திசைவும் மனநிறைவும் (Accord and Satisfaction): மற்றொரு நபருக்கு (பிரதிவாதிக்கு) எதிராக வழக்கிடுவதற்கான வழக்குமூலம் பெற்றிருக்கும் ஒரு நபர் (வாதி), வழக்கின்மூலம் தீர்வழி பெறுவதற்கு மாற்றாக, அம்மற்றொரு நபரிடம் (பிரதிவாதி) மதிப்புடை மறுபயன் பெற்றிடுவதற்கு உடன்படலாம். இங்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் தங்களுக்குள் ஓர் உடன்படிக்கையை செய்து கொள்கின்றனர்; அதாவது, வாதி நீதிமன்றத்தில் வழக்கு தொடராமல் பிரதிவாதி அளிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்றுக் கொள்வது என தரப்பினர்களே தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதே

ஒத்திசைவும் (இரு தரப்பினரும் ஒத்துக்கொண்டு இசைவை தெரிவித்தல்) மற்றும் உளநிறைவும் (உள்ளம் அல்லது மனம் நிறைவடைதல்) என்பதாகும். ஒத்திசைவு என்பது ஒப்பந்தத்தையும் மனநிறைவு அல்லது உளநிறைவு என்பது மறுபயனாக ஒரு குறிப்பிட்ட தொகையை பெறுவதையும் குறிக்கும். உளநிறைவு அடைவது என்பது நிறைவேறியதாகவோ (executed) அல்லது நிறைவேற்ற வேண்டியதாகவோ (executory) இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 'நீர் எனக்கு முன்னரே செலுத்தியுள்ள ரூபாய் 500/- ஐ மறுபயனாகப் பெற்றுக் கொண்டு, உம்மை கடப்பாட்டில் (obligation) இருந்து விடுவிக்கிறேன்' என வாதி எழுதிக் கொடுப்பது நிறைவேறிய உளநிறைவையும்; இதற்கு மாறாக, 'நீர் எனக்கு இன்றிலிருந்து அறுபது நாட்களுக்குள் ரூபாய் 500/- செலுத்துவதாக அளித்துள்ள உறுதியுரையின் பேரில் உம்மை கடப்பாட்டில் இருந்து விடுவிக்கிறேன்' என்று எழுதிக் கொடுப்பது நிறைவேற்ற வேண்டிய உளநிறைவையும் குறிக்கும். இவ்வாறு தரப்பினர்களுக்கு இடையே ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டு மறுபயனாக தொகையும் செலுத்தப்பட்டுவிட்ட பின்னர், நீதிமன்றத்தில் வழக்கிடுவதற்கு தரப்பினர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் தடையாக இருக்கும். தரப்பினர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் மறுபயன் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இல்லையேல் அது ஓர் இல்லாநிலை ஒப்பந்தமாகவும் மற்றும் அவ்வொப்பந்தம் நீதிமன்றத்தில் வழக்கிடுவதற்கு தடையாகவும் இருக்காது. மேலும், பிரதிவாதி, தான் உறுதியுரை அளித்துள்ளவாறு குறிப்பிட்ட நாட்களுக்குள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பினை (அதாவது, மேற்கண்ட எடுத்துக்காட்டில், பிரதிவாதி அறுபது நாட்களுக்குள் ரூபாய் 500/-ஐ செலுத்திவிடுகிறேன் என அளித்துள்ளது உறுதியுரை போன்று) நிறைவேற்றாவிடில், வாதி, பிரதிவாதிக்கு எதிராக வழக்கிடுவதற்கு தரப்பினர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் தடையாக இருக்காது.

உளநிறைவு அடையாத ஒத்திசைவு, வழக்கு தொடருவதற்கான உரிமையை தடுக்காது. ஆனால் வாதி உளநிறைவிற்காக ஏற்றுக்கொண்டது பிரதிவாதியின் நிறைவேற்றலை (performance) அல்லாமல் சாதாரண உறுதியுரையை (promise) மட்டுமாக இருப்பின், பிரதிவாதி உறுதியுரை அளித்த தேதியன்றே அசல் வழக்கு மூலம் முடிவுக்கு வந்துவிடும் என **Morris Vs Baron & Co., (1918) AC 1.,** என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

அ(4) முன்தீர்ப்பு தடை (Resjudicata): வாதி, பிரதிவாதிக்கு எதிராக இழப்பீடு கோரி தகுதிவாய்ந்த அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்நீதிமன்றம் இறுதியாக தீர்ப்பு வழங்கிவிட்டால், வாதி வழக்கு தொடருவதற்கு கொண்டிருந்த வழக்குமூலம் முடிவுக்கு வந்துவிடும். ஒருவேளை வாதி வழக்கில் தோற்றால், அவரின் வழக்குமூலம் முடிவுக்கு வந்துவிட்டதன் காரணமாக, பிரதிவாதிக்கு எதிராக மீண்டும் வழக்குத் தொடர முடியாது. ஏனெனில் முந்தைய வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அதற்கு தடையாக இருக்கும். உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908-ன் பிரிவு-11, முன்தீர்ப்புத் தடை கொள்கையை குறிப்பிடுகிறது. இதன்படி, உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பாக,

ஒரு பரிகாரத்தின்பொருட்டு, வாதி, பிரதிவாதிக்கு இடையே வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும்போது மீண்டும் அதே பரிகாரத்திற்காக அதே தரப்பினர்கள் வழக்கிட முடியாது.

முன்தீர்ப்பு தடை இரு முக்கிய நோக்கங்களைக் கொண்டதாகும். முதலாவதாக, வழக்கிற்கு என்றுமே ஒரு முடிவு இருக்க வேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும்; இல்லையேல் வழக்குகள் முடிவுறாது. இரண்டாவதாக, ஒரு நபர், ஒரே காரணத்திற்காக இரண்டு முறை துன்பத்திற்கு ஆளாகக்கூடாது.

அ(5) விடுதலை செய்தல் (Release): உரிமை எதனையும் சரண் செய்வது (surrender) விடுதலை செய்தல் என அழைக்கப்படலாம். ஒரு நபர், மற்றொரு நபருக்கு எதிராக தான் பெற்றிருக்கும் வழக்கிடும் உரிமையை சரண் செய்வது அல்லது கைவிடுவது விடுதலை செய்தல் என்பதாகும். 'Release' என்ற ஆங்கிலச் சொல் 'relaxtio' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். 'relaxitio' என்ற இலத்தீன் சொல்லுக்கு விடுதலை அல்லது கொடை அல்லது வழக்கிடும் உரிமையை துறத்தல் என்று பொருளாகும். ஆங்கிலச் சட்டத்தில் மறுபயன் இன்றி செய்யப்படும் விடுதலை, ஓர் எழுத்துமூலமான ஆவணத்தில் செய்யப்பட்டால் மட்டுமே செல்லுந்தன்மையைப் பெறும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு-63-ன்படி, விடுதலை செய்தலில் மறுபயன் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பதுடன் அது ஓர் முறையான ஆவணத்தின்மூலம் செய்யப்பட வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. இருப்பினும், ஓர் தவறின் காரணமாக அல்லது ஒருவர் தன்னுடைய உரிமைகளைப்பற்றி அறியாமல் செய்யப்படும் விடுதலை அவரைக் கட்டுப்படுத்தாது. வழக்கிடும் உரிமை பெற்றுள்ள ஒரு நபர் எழுதப்பட்ட ஒப்பந்தத்தின்மூலமாக வழக்கிடுவதில்லை எனக் குறிப்பிடுவது ஓர் விடுதலைக்கு சமமானது என்பதால், அது ஓர் தடை என்பதாக எதிர்தரப்பில் வாதிடலாம். இங்கிலாந்தில் கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவரை விடுவிப்பது. எஞ்சியிருக்கும் அனைவரையும் விடுவித்ததாகும். ஆனால் இந்தியாவில், அலகாபாத் உயர்நீதிமன்றம் **Shiv Sagar Vs Matadin, AIR 1949 All 105.,** என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு, இது தரப்பினர்களின் எண்ணத்தைச் சார்ந்தும், தரப்பினர்களின் எண்ணத்தை அவர்கள் அந்நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் இருந்தும் பெறமுடியும்.

அ(6) காலவரையறை (Period of limitation): வழக்கிடும் உரிமையைப் பெற்றுள்ள நபரொருவர், சட்டம் குறித்துரைத்துள்ள காலத்திற்குள் அத்தகைய உரிமையை செயல்படுத்தாமல் அசட்டையாக இருப்பாராயின், அவர் தீர்வழியைப் பெற முடியாது. ஏனெனில், 'சட்டம் விழிப்பாக இருப்பவர்களுக்கு உதவுமேயன்றி, உரிமைகளின்மீது உறங்குபவர்களுக்கு உதவுவதில்லை' (Vigilantibus non dormientibus, jura sub veniunt- i.e., The laws assit those who are vigilant, not those who sleep over their rights).

இந்தியாவில், வழக்குகள் எத்தகைய கால எல்லைக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றிய பொருள்களை, காலவரையறைச் சட்டம், 1963-ன்

வகையங்கள் குறிப்பிடுகிறது. இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலவரையறை முடிந்தபின்னர் தாக்கல் செய்யப்படும் அசல் வழக்குகள் அல்லது மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படும். காலவரையறைச் சட்டத்தில், அங்கீகரிக்கப்பட்டுள்ள தீங்குகள் ஒவ்வொன்று குறித்தும் வழக்கு தொடருவதற்கான காலவரம்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வழக்கிடும் உரிமையைப் பெற்றுள்ள நபர், சட்டம் குறிப்பிட்டுள்ள கால வரம்பிற்குள் வழக்கு தொடராமல் இருப்பின், அவரின் வழக்கிடும் உரிமை முடிவுக்கு வந்துவிடும்; அதாவது, பிரதிவாதி பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிடுகிறார்.

இந்திய காலவரையறைச் சட்டம், 1963-ன் ஏழாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள 72 முதல் 91 வரையிலான உறுப்புகள் தீங்கியல் தொடர்பான வழக்குகளை தாக்கல் செய்யும் காலவரம்பை குறிப்பிடுகின்றன. இவற்றுள் 70 முதல் 81 வரையிலான உறுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தீங்குகளுக்கு ஒரு வருடமும், 82 முதல் 84 வரையிலான உறுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தீங்குகளுக்கு இரண்டு வருடங்களும், 85 முதல் 91 வரையிலான உறுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தீங்குகளுக்கு மூன்று வருடங்களாகவும், காலவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தனியே காலவரையறைக் குறிப்பிடப்படாத தீங்குகள், இச்சட்டத்தின் எஞ்சிய உறுப்பில் அதாவது உறுப்பு-113-ல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில், காலவரையறைச் சட்டம், 1980, தீங்கியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டிய காலவரையறையைக் குறிப்பிடுகிறது.

அ(7) வழக்கிடும் உரிமையை மாற்றியளித்தல் (Assignment of Right to Sue): பொதுநலக் கொள்கையின் அடிப்படையில், தீங்கியலில் வழக்கிடும் உரிமையை மாற்றியளிக்க முடியாது என்பது ஓர் பொதுவான விதியாகும். வழக்கிடும் உரிமையை மாற்றியளிக்க முடியாது எனும் பொது விதிக்கு ஆங்கிலச் சட்டத்தில் சில விலக்குகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை (i) இறப்பு, (ii) நொடிப்பு நிலை (bankruptcy), (iii) மாற்றமர் உரிமை (subrogation) மற்றும் (iv) தீர்ப்புரை.

வழக்கிடும் உரிமையை மாற்றியளித்தல் என்பதை ஓர் எளிய எடுத்துக்காட்டின்மூலம் குறிப்பிடலாம். 'X' என்பவர் 'Y'-ஐ தாக்க முனைந்ததற்காக, 'Y' என்பவர் 'X'-க்கு எதிராக வழக்கு தொடர்ந்து, 'X'-டம் இருந்து இழப்பீடு பெற முடியும். ஆனால், 'Y', தனது வழக்கிடும் உரிமையை, 'Z'-என்பவருக்கு மாற்றியளித்து அவர் இழப்பீடு பெறுவதற்கு அனுமதி அளிக்க முடியாது. ஆனால், இழப்பீட்டிற்கான தீர்ப்பாணையை அது பெறப்படுவதற்கு முன்பாக அல்லது பெற்ற பின்னர் வேறொருவருக்கு மாற்றளிப்பு செய்வது செல்லத்தக்கதாகும். **[Ghulam Mohammed Vs Indarchand, (1871) 7 BLR 318].**

வழக்கிடும் உரிமையை மாற்றளிப்பு பெற்றவர், வழக்கிடும் உரிமையை மாற்றளிப்பு செய்த நபருக்கு எதிராக இழைக்கப்பட்ட தீங்கிற்காக வழக்கிட முடியாது எனும் கொள்கைக்கு இரண்டு விதி விலக்குகள் உள்ளன. அவை (1) அசைவியல் பொருட்களின் விற்பனையுடன், அதற்கு இழைக்கப்பட்ட தீங்கிற்கான வழக்கிடும்

உரிமையும் பொருளை மாற்றளிப்பு பெறுபவரிடம் செல்லும் மற்றும் (2) காப்பீடு நிறுவனம், காப்பீடு செய்தவருக்கு இழப்பீடு செலுத்திய பின்பு, காப்பீடு செய்தவரின் நிலையிலிருந்து அவருக்கு இழைத்த தீங்கிற்காக வழக்கிட உரிமை கொண்டுள்ளது. இத்தகைய விலக்குகள் ஆங்கிலச் சட்டத்தை ஒத்ததாகும்.

அ(8) தரப்பினர்களின் இறப்பு (Death of parties): (அடுத்து வரும் வினாவிற்குரிய விடையில் காண்க).

84. தீங்கிலிருந்து விடுப்பு பெறும் பல்வேறு முறைகளை எடுத்தியம்பி 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' என்ற முதுமொழியை விவாதிக்க. (Enumerate the modes of discharge of torts and discuss the maxim 'Actio personalis moritur cum persona')-May-2017.

SN - 123 ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் / Actio personalis moritur cum persona., May-2013 (v), Nov-2013, May-1017 (v).

விடைச்சுருக்கம்: (அ) தீங்கிலிருந்து விடுவிப்பு பெறும் முறைகள் – (ஆ) ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் – ஆ (i) இறப்பை ஏற்படுத்துவது ஓர் தீங்காகுமா?

(அ) தீங்கிலிருந்து விடுவிப்பு பெறும் முறைகள் (Modes of discharge of torts)

[முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு (அ)-வில் காண்க].

(ஆ) ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் (Actio personalis moritur cum persona)

ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் எனும் விதியின்படி, ஒரு நபர் தனிப்பட்ட முறையில் கொண்டிருக்கும் வழக்கிடும் உரிமை அவரது இறப்புடன் முடிந்து போகும். இதேபோன்று எவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட இருக்கிறதோ அத்தகைய நபரின் (பிரதிவாதி) இறப்பும் வழக்குமூலத்தை முடிவுக்கு கொணரும். இயற்றா சட்டத்தின் இந்த நிலையே 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' எனக் குறிப்பிடுகிறது. இங்கிலாந்தில் **Baker Vs Bolton, (1808) 1 Camp 493.,** என்ற வழக்கில், உரிமையியல் நீதிமன்றத்தில், மனித இறப்பை ஓர் தீங்காக முறையீடு செய்யப்பட முடியாது என்பதை எட்டன்பரோ பிரபு திட்டவட்டமாக குறிப்பிட்டார். இவ்வழக்கில், பிரதிவாதிக்குச் சொந்தமான குதிரை வண்டியில் வாதியும், வாதியின் மனைவியும் பயணம் செய்து கொண்டிருந்தபோது பிரதிவாதியின் கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்தில், வாதிக்கு இலேசான காயமும், வாதியின் மனைவிக்கு பலத்த காயங்களும் ஏற்பட்டது. பலத்த காயங்களின் காரணமாக வாதியின் மனைவி இறந்து போனார். வாதி தொடர்ந்த இழப்பீட்டிற்கான வழக்கில், விபத்து நடந்த நாளில் இருந்து வாதியின் மனைவி

இறந்த நாளுக்கு இடைப்பட்ட காலத்தில், மனைவியின் அருகாமையும், சேவையும் மற்றும் பாசமும் இழந்ததற்கான இழப்பீடு பெறமுடியும் என்றும், ஆனால் வாதியின் மனைவி இறந்ததற்கு பின் ஏற்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட இழப்புகளுக்காக இழப்பீடு பெற முடியாது என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது. 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' எனும் விதி பின்வரும் இரண்டு விலக்குகளுக்கு உட்பட்டது:

(i) ஒப்பந்தத்தின்கீழான வழக்கு நடவடிக்கை (Action under contract): வழக்கின் எந்தவொரு தரப்பினரின் (வாதி அல்லது பிரதிவாதி) இறப்பும், வழக்குமூலத்தை முடிவுறச் செய்கிறது எனும் விதி, ஒப்பந்தத்தின்கீழான வழக்கு தொடருவதற்கு பொருந்தாது. ஒப்பந்த தரப்பினர்களின் சட்டமுறைப் பிரதிநிதிகள், ஒப்பந்தக் கடப்பாட்டினை நடைமுறைப்படுத்தவும் அல்லது சட்டமுறைப் பிரதிநிதிகளுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படவும் முடியும். இருப்பினும் தனிப்பட்ட சேவைக்கான ஒப்பந்தங்கள் (ஓவியம் தீட்டுதல், பாடல் பாடுதல், நடித்தல் போன்று) இறந்து போனவரின் வாரிசுகளைக் கட்டுப்படுத்தாது.

(ii) தீங்கிழைத்தவரின் சொத்துக்கு முறையற்ற ஆதாயம் ஏற்படல் (Unjust enrichment of tortfeasor's estate): ஒரு நபர், தனது இறப்பிற்கு முன்னர், மற்றொருவரின் சொத்தை முறையற்ற வகையில் தனதாக்கிக் கொண்டிருந்தால், அவ்வாறு முறையற்ற வகையில் சேர்த்த சொத்தின் ஆதாயம், இறந்துபோனவரின் சட்டமுறைப் பிரதிநிதிகளுக்கு சென்று சேர்வதை சட்டம் அனுமதிக்காது. அச்சொத்தினைப் பெறுவதற்கு தகுதி கொண்டுள்ள நபர் / நபர்கள், இறந்து போனவரின் வாரிசுகளுக்கு எதிராக வழக்கிட்டு அச்சொத்தை அல்லது அதற்கு சமமான மதிப்புடைய தொகையைப் பெற முடியும்.

Sherrington's Case, (1582) Sav. 40., என்ற வழக்கில், இறந்து போனவர், முறையற்ற வகையில், வாதியின் நிலத்திலிருந்து நூறு சிந்தூர மரங்களையும் (oak trees) இருபது எருதுகளையும் எடுத்துக் கொண்டிருந்தார். நீதிமன்றம், நிறைவேற்றாளர்கள் (இறந்து போனவர் உயிலில் குறிப்பிட்டுள்ளவாறு அவரது சொத்துகளை நிறைவேற்றுபவர்கள்) அதற்கு பொறுப்பாவார்கள் என்று தீர்ப்பளித்தது.

சட்ட சீர்திருத்தம் (Law reform): 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' என்ற முதுமொழியை பொருந்தச் செய்ததன் காரணமாக, வாகன விபத்துகள் மற்றும் இரயில்வே விபத்துகளின் அடிப்படையில் எழுந்த வழக்குகளில், இறந்தவரின் வாரிசுகள், இறப்பிற்கான இழப்பீடு பெற முடியாததால் அநீதி பெருமளவில் அதிகரித்தது. இத்தகைய அவலநிலை தொடர்வதை தடுப்பதற்காக, தீங்கியலில் வழக்குமூலம் தொடர்ந்திருப்பதற்காக, மூன்றாமவரின் காப்பீட்டுறுதி (third party insurance) கட்டாயப்படுத்தப்பட்டதுடன், 1934-ஆம் ஆண்டின் சட்டச்சீர்திருத்தம் (பல்வகை வகையங்கள்) சட்டமும் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் விளைவாக, 'ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்' என்ற சட்டநிலை மாற்றப்பட்டது. இச்சட்டம், தரப்பினர்களின் இறப்பிற்குப் பின்னரும் வழக்குமூலம் தொடர்ந்திருப்பதற்கு வழி செய்தது. எனவே ஒரு நபர் இறந்த

பின்னரும் அவரின் சட்டமுறை வாரிசுகள் வழக்கை தொடர்ந்து நடத்தவும் அல்லது இறந்த நபரின் சட்டமுறை வாரிசுகளுக்கு எதிராக வழக்கு தொடரவும் முடியும் என்ற நிலையை இச்சட்டம் ஏற்படுத்தியது.

Rose Vs Ford, (1937) 3 All ER 359 (HL)., என்ற வழக்கில் 23 வயதான பெண் ஒருவர், பிரதிவாதியின் கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தில் பலத்த காயமுற்றார். விபத்து நடந்த இரண்டு நாட்களுக்குப்பின் அவரின் கால் வெட்டி எடுக்க வேண்டியதாயிற்று. அதற்குப் பின்னரான நான்கு நாட்களில் அவர் உயிரிழந்தார். பிரபுக்கள் அவை, பெண்ணின் தந்தை, வலி மற்றும் துன்புற்றல், கால் இழந்ததன் காரணமாக அவரின் சொத்துகளுக்கு ஏற்பட்ட ஆதாயக் குறைவு மற்றும் எதிர்பார்க்கக்கூடிய ஆயுட்காலக் குறைப்பிற்கும் இழப்பீடு கோர முடியும் என்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தீர்ப்புரை வழங்கிய ரஸ்ஸல் பிரபு (Lord Russell) மற்றும் ரைட் பிரபு (Lord Wright) ஆகியோர் 'ஒரு மனிதன் தனது சொந்த வாழ்வு குறித்த சட்ட உரிமையைக் கொண்டுள்ளான். தீங்கியல் செயலின் மூலம் அவனின் சீரிய உடல் நிலை, வலி மற்றும் துன்புறுதல் மற்றும் ஊனமடைதல் தொடர்பாக மட்டுமின்றி, சாதாரணமாக வாழ்க்கையை தொடர்ந்திருக்கும் எதிர்பார்த்தலையும் கெடுப்பதாக அல்லது மோசமடையச் செய்வதாக இருப்பின் அதுகுறித்து முறையீடு செய்வதற்கான சட்ட நலனுக்கும் தகுதி கொண்டுள்ளான்' என்பதைக் குறிப்பிட்டனர்.

இந்தியாவில் ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் எனும் முதுமொழியின் பொருந்துகைக்கு சிலக் குறிப்பிட்ட விலக்குகள் அங்கீகரிக்கப்பட்டது. இத்தகைய விலக்குகள் சட்டத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். இந்திய இறங்குரிமைச் சட்டம், 1925-ன் பிரிவு-306, ஒரு நபர் இறப்பதற்கு முன்பு வழக்கிடவும், எதிர்த்து வாதிடவும் கொண்டிருந்த உரிமைகள் அவரது இறப்பிற்குப் பின்னும் தொடர்ந்திருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது. ஆனால், இந்திய தண்டனைச் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறான அவதூறு, தாக்கமுனைதல் மற்றும் இறப்பை ஏற்படுத்தும்பிற ஆளுறு ஊறுகள் (personal injuries) பொறுத்தவரையில், தரப்பினரின் எவரேனும் ஒருவரின் இறப்பு வழக்கை முடிவுக்கு கொணர்ந்திடும் என்பதையும் மற்றும் தரப்பினரின் இறப்புக்குப் பின், வழக்கில் கோரப்பட்ட பரிகாரம் அனுபவிக்க முடியாததாக அல்லது கோரப்பட்டிருந்த பரிகாரத்தை வழங்கினாலும் அதனை செயல்படுத்த முடியாதவற்றிற்கும் (nugatory) இது பொருந்தாது என்பதையும் இப்பிரிவு விளக்கமாகக் குறிப்பிடுகிறது.

அவதூறு, தாக்க முனைதல் மற்றும் ஆளுறு ஊறுகள் குறித்த வழக்குமூலங்கள், தரப்பினரில் எவரேனும் ஒருவரின் இறப்பிற்குப் பின் முடிவுக்கு வந்துவிடும் என்பதை முன்னரே கண்டோம். ஆளுறு ஊறுகள் (personal injuries) என்பது உடலளவு ஊறுகளை (physical injuries) மட்டுமே குறிக்கும் என்பதால் தீய நோக்குடைய குற்றவழக்கிடுதல் என்பது ஆளுறு ஊறு என்பதாக இல்லாததால் தரப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரின் சட்டமுறை பிரதிநிதிகளுடன்

தொடர்ந்திருக்கும் என்று கல்கத்தா மற்றும் ரங்கூன் உயர்நீதிமன்றங்கள் குறிப்பிட்டன. ஆனால் சென்னை, பாம்பே, பாட்னா மற்றும் அலகாபாத் உயர்நீதிமன்றங்கள், ஆளுறு ஊறுகள் என்பது சாதாரண உடலளவு ஊறுகளை மட்டுமே குறிக்காது என்றும், எனவே தீயநோக்குடைய குற்றவழக்கு தரப்பினரில் எவரேனும் ஒருவரின் இறப்பிற்குப் பின் அற்றுப் போய்விடும் என்றும் குறிப்பிட்டுள்ளன.

Zargham Abbas Vs Harichand, AIR 1980 All 259., என்ற வழக்கில் தீய நோக்குடைய குற்றவழக்கு தொடர்ந்ததால் ஏற்பட்ட அவதூறுக்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஜர்க்ஹாம் அப்பாஸ் மற்றும் அவரின் மகன் அலி அப்பாஸ் ஆகியோருக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. வழக்கு மேல்முறையீட்டில் இருந்தபோது ஜர்க்ஹாம் அப்பாஸ் இறந்துபோனார். நீதிமன்றம், முதலாம் மேல்முறையீட்டாளர் இறந்ததால் வழக்குமூலம் முடிவுக்கு வந்திருந்தாலும்கூட மேல்முறையீடு மட்டும் அற்றுப்போகுமே (abate) தவிர, கீழமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணையை, அவரின் சொத்துகளைக் கொண்டுள்ள அவரின் வாரிசுக்கு (அலி அப்பாஸ்) எதிராக நிறைவேற்ற முடியும் என்பதைக் குறிப்பிட்டது. இவ்வழக்கில் தந்தை மற்றும் மகன் ஆகிய இருவருக்கும் எதிராக கூட்டாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், ஜர்க்ஹாமின் (முதலாம் மேல்முறையீட்டாளர்) இறப்பு, தீர்ப்பாணைக்கு எதிராக தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கை பாதிக்காது என்றும் குறிப்பிடப்பட்டது.

ஆ(1) இறப்பை ஏற்படுத்துவது ஓர் தீங்காகுமா? (Causing of death, whether a tort?) இங்கிலாந்தில் ஒரு காலத்தில் இறப்பை ஏற்படுத்துவது உரிமையியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படமுடியாது என்று ஒருவர் துணிவுடன் கூறமுடியும். சிறிய காயங்களுக்காக உரிமையியலில் வழக்கு தொடரமுடியும் என்றாலும் இறப்பை ஏற்படுத்தியதற்காக வழக்கு தொடரமுடியாது. இவ்விதி வினோதமாகவும் சிறிதளவும் நியாயமின்றி இருந்தாலும்கூட, ஆங்கிலச் சட்ட வரலாற்றில் ஓர் விபத்து போலத் தோன்றிய இவ்விதி, நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக உறுதியான ஆதரவை பின்வரும் இரண்டு கெடுதலான கருத்துருகளின் (ideas) அடிப்படையில் பின்பற்றப்பட்டது:

முதலாவதாக, ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் என்ற முதுமொழி;

இரண்டாவதாக, எந்தவொரு மனிதனும் மற்றொருவரின் உயிரில் எந்தவொரு நலனும் கொண்டிருக்கவில்லை எனும் கருத்து.

மேற்குறிப்பிட்டவற்றுள் முதலாவதாக குறிப்பிடப்பட்ட முதுமொழி அனைத்துவிதமான ஆளுறு வழக்குகளும் இறந்துபோன நபருடன் முடிவடையச் செய்கிறது. இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள கருத்து, இறந்துபோனவரின் பிரதிநிதிகள் மற்றும் உறவினர்கள் தங்களின் சொந்த உரிமைகளுக்காக வழக்கிடுவதை தடை செய்கிறது. எவ்வாறிருப்பினும், பின்னர் இயற்றப்பட்ட

சட்டத்தின்மூலமாக தற்போது மனித உயிரின் இறப்பு வழக்கு தொடரத்தக்க தீங்காக மாற்றம் செய்யப்பட்டுவிட்டது.

இந்திய தீங்கியல் சட்டம், பிரிட்டன் முறையைப் பின்பற்றினாலும், சமூக பாதுகாப்பு மற்றும் சமூக ஆதாய வகையங்களைப் பொறுத்தவரையில், இந்திய சட்டங்கள் பிரிட்டன் சட்டங்களுடன் இணக்கமாக இல்லை. 1855-ஆம் ஆண்டின் மரண விபத்துகள் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1923, மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 உள்ளிட்ட சட்டங்களை, ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் எனும் முதுமொழிக்கு விதிவிலக்கான சட்டங்களாகக் குறிப்பிடலாம்.

ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் என்கிற முதுமொழியின் ஆற்றல், இயல்விக்கும் சட்டமான (enabling Act) மரண விபத்துகள் சட்டத்தின்மூலம் அகற்றப்பட்டுவிட்டது. எனவே உச்சநீதிமன்றம், **Gujarat SRTC Vs Ramanbhai Prabhatbhai, (1987) 3 SCC 234.**, என்ற வழக்கில், மரண விபத்துகள் அதிகரித்துவரும் நவீன காலச் சூழ்நிலையில் இந்தியாவினுள் இம் முதுமொழி பொருந்தாது என மிகச் சரியாக குறிப்பிட்டது. இந்தியாவில் 1855-ஆம் ஆண்டில் இரண்டு சட்டங்கள் ஒன்றாக இயற்றப்பட்டது; அவை சட்டமுறை சார்பாளர்கள் வழக்குகள் சட்டம் (Legal Representatives Suits Act) மற்றும் மரண விபத்துகள் சட்டம் ஆகும். மரண விபத்துகள் சட்டத்தின் பிரிவு - 1-A, குழந்தைகள் மற்றும் இப்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிற உறவினர்களுக்கு பணஅளவில் ஏற்பட்ட இழப்பிற்காக, இழப்பீடு பெறுவதற்கான உரிமையியல் உரிமையை (civil right) அளிக்கிறது. பிரிவு-2, நிறைவேற்றாளர்கள், சொத்தாட்சியர்கள் மற்றும் இறந்தவரின் சட்டமுறைப் பிரதிநிதிகள், தீங்கிழைத்தவரின் தவறான செயல், அலட்சியம் அல்லது தவறின் காரணமாக, இறந்து போனவரின் சொத்துகளுக்கு பணஅளவில் ஏற்பட்ட இழப்பிற்கான உரிமைக் கோரிக்கையை உட்புகுத்த (insert) அனுமதிக்கிறது.

PART - D

பிரச்சனைகளும் தீர்வுகளும்
Problems and Solutions

சேதமில்லாத் தீங்கு மற்றும் தீங்கில்லா சேதம்

1. 'அ' என்பவரின் சிறிய நிலத்தினை மாநகராட்சி அதிக பணத்திற்கு வாங்க மறுத்தபோது 'அ' தன்னுடைய நிலத்தில் மிக ஆழமான கிணறு தோண்டினார். இதனால் மாநகராட்சி நிலத்தடிநீர் வரவு நின்று போயிற்று. மாநகராட்சி தீங்கீடு கோரி 'அ' மீது வழக்கிட்டது. தீர்மானிக்க.

தீர்வு: மாநகராட்சி வழக்கில் தோல்வியுறும் !.

விளக்கம்: ஒரு நபர் தனது சட்டப்படியான உரிமையை செயல்படுத்தும்போது, மற்றொரு நபருக்கு இழப்பு ஏற்பட்டாலும்கூட, அத்தகைய செயல் தீங்கு என்பதாக அமையாது. இதனையே 'தீங்கில்லா சேதம்' எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகிறது. வினாவில் 'அ' என்பவர் தன்னுடைய நிலத்தில் ஆழமாக கிணறு தோண்டுவதற்கு சட்டப்படி உரிமை கொண்டுள்ளதால் மாநகராட்சிக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு பொறுப்பாகமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Mayor of Bradford Vs Pickles,** (பக்கம் எண் 21-ல் காண்க).

---

2. 'A' என்பவர் சுரங்கமொன்று தோண்டியபோது ஒரு மைல் தொலைவில் அமைந்துள்ள 'B'-யின் கிணற்றுக்குச் செல்லும் தண்ணீரை இடைமறித்தார். இதனால் 'B' பாதிப்படைந்தார். 'A' நஷ்டஈடு கோரினார். தீர்மானிக்க.

தீர்வு: 'B'-ன் நஷ்டஈடு கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படும் !

விளக்கம்: சென்ற வினாவிற்கான விளக்கம் இவ்வினாவிற்கும் பொருந்தும்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Acton Vs Blundell,** (பக்கம் எண் 20-ல் காண்க).

---

3. பல நீராவிக் கப்பல் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தேயிலை சுமக்கும் தொழிலில் குறைந்த அளவு சரக்குக் கட்டணம் பெற்றுக் கொண்டதன்மூலம் அக்பர் நீராவிக் கப்பல் நிறுவனத்தை அத்தொழிலில் இருந்து விரட்டின. இந்நிறுவனங்களின்மீது அக்பர் நீராவிக் கப்பல் நிறுவனம் நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்தது வெற்றி பெறுமா?

தீர்வு: அக்பர் நீராவிக் கப்பல் வழக்கில் வெற்றி பெறாது !

விளக்கம்: ஒன்று சேர்ந்த கப்பல் நிறுவனங்கள், தங்களின் தொழிலை விரிவுபடுத்தவும், இலாபத்தை அனைவரும் பெறவும் சட்டத்திற்கு உட்பட்ட செயலை செய்துள்ளனர். இக்கப்பல்களின் உரிமையாளர்கள், தங்களின் தொழில் செய்யும் உரிமையை செயல்படுத்தியுள்ளனர். எனவே சட்டப்படியான அவர்களின் செயலால் அக்பர் நீராவிக் கப்பல் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பாகமாட்டார்கள்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Mogul Steamship & Co., VS McGregor Gow & Co., (பக்கம் எண் 21-ல் காண்க).

---

4. வாதியானவர் தனது ஓட்டுரிமையை பயன்படுத்துவதில் இருந்து தேர்தல் அலுவலரால் தடுக்கப்படுகிறார். வாதி ஓட்டளிக்க விரும்பிய வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்று விடுகிறார். வாதிக்கு எவ்வித ஊறும் ஏற்படவில்லை. இந்நிலையில் தேர்தல் அலுவலர் இழப்பீடு ஏதும் அளிக்க கடமைப்பட்டவரா?

தீர்வு: வாதிக்கு தேர்தல் அலுவலர் இழப்பீடு அளிக்க கடமைப்பட்டுள்ளார் !

விளக்கம்: ஒரு நபரின் செயலால், மற்றொரு நபருக்கு பண அளவில் இழப்பு ஏற்படாமல் அல்லது உடலளவில் ஊறு ஏற்படாமல் இருந்தாலும்கூட, அச்செயலின் காரணமாக, மேற்குறிப்பிட்ட மற்றொரு நபரின் சட்ட உரிமைக்கு ஊறு விளைவிப்பதாக இருப்பின், அச்செயலைச் செய்த முதலாம் நபர் பொறுப்பாகுவார். சட்டத்தின் இத்தகைய நிலையையே 'சேதமில்லாத் தீங்கு' எனும் சட்ட முதுமொழி குறிப்பிடுகிறது. இம்முதுமொழியின்படி, பிரதிவாதியின் செயல், வாதியின் சட்ட உரிமையை மீறியிருந்தாலே போதுமானது. வாதிக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. மேற்குறிப்பிட்ட காரணத்தின் அடிப்படையில் தேர்தல் அலுவலர் தீங்கீடு அளிக்க கடமைப்பட்டுள்ளார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Ashby Vs White, (பக்கம் எண் 18-ல் காண்க).

உள்நோக்கம், தவறில்லா பொறுப்பு நிலை

5. 'ஆ' என்பவர் வீடு கட்டும்போது, மேல் தளத்திலிருந்து தண்ணீர் வருவதற்கு தேவையான குழாய்கள் பதித்திருந்தார். ஆனால் அவற்றை நீர் வெளியேறும் வழியில் இணைக்கவில்லை. இந்த குழாய்கள் மூலமாக வந்த நீர் நிலவறைக்கு சென்று அங்கு குளம் போல் தேங்கி பக்கத்தில் இருந்த 'அ' என்பவரது வீட்டு நிலவறைக்கு பாய்ந்தது. அந்த நிலவறை சற்று தாழ்ந்து இருந்தது. 'ஆ' என்பவர் 'அ'-விற்கு ஏதேனும் தீங்கிழைத்தாரா? முடிவு செய்யவும்.

தீர்வு: 'ஆ' என்பவர் 'அ'-விற்கு எதிராக தீங்கிழைத்துள்ளார் !

விளக்கம்: தீங்கியலில் பொறுப்பு நிலையை தீர்மானிக்க உள்நோக்கம் அல்லது தீங்கெண்ணம் தொடர்பற்றது என்பது ஓர் பொதுவான விதியாகும். இருப்பினும் இவ்விதி குறிப்பிட்ட சில நேர்வுகளுக்குப் பொருந்தாது. 'ஆ' என்பவர் வீடுகட்டும்போது மேல் தளத்திலிருந்து கீழிறங்கும் நீர்வழியை முறையாக வெளியேற்றும் வழியில் இணைத்திருக்க வேண்டும்; குறிப்பாக 'அ' என்பவரின் வீட்டு நிலவறை தாழ்வாக இருப்பதால் வெளியேறும் நீர் அங்கு பாய்வதற்கு வாய்ப்புள்ளது என்பதை அறிந்திருந்தே அவர் நீர்வழியை இணைக்காதது அவரின் தீங்கெண்ணத்தை வெளிப்படுத்துகிறது. எனவே 'ஆ'-வின் பொறுப்பு நிலையை தீர்மானிக்க அவரின் தீங்கெண்ணம் இங்கு தொடர்புடையதாக ஆகிறது.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Balak Glass Emporeum Vs United India Insurance Co. Ltd** (பக்கம் எண் 47-ல் காண்க).

---

6. **'ஆ' என்கிற ஏலதாரரிடம் 'அ' என்பவர் சில பொருட்களை ஒப்படைத்து ஏலத்தில் விற்கச் சொல்கிறார். 'ஆ'-வும் அப்பொருட்களுக்கு 'அ'-தான் உரிமையாளர் என்று நம்பி 'இ'-க்கு விற்பனை செய்து பொருட்களின் உடைமையையும் ஒப்படைக்கிறார். ஆனால் உண்மையான உரிமையாளரான 'ஈ', 'ஆ'-வின்மீது வழக்கிடுகிறார். 'ஆ'-வின் பொறுப்பு நிலையை முடிவு செய்க.**

தீர்வு: 'ஆ', 'ஈ'-க்கு இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார் !

விளக்கம்: ஏலதாரரான 'ஆ' நல்லெண்ணத்தின் அடிப்படையில், பொருள்களை ஏலத்தில் விற்பதற்காக ஒப்படைத்த 'அ' என்பவரே அப்பொருளின் உரிமையாளர் என எண்ணியிருக்கலாம். இருப்பினும் அதனை உறுதி செய்திருக்க வேண்டும்.'ஆ' அவ்வாறு உறுதி செய்ய தவறியதுடன் அப்பொருள்களை 'இ' என்பவருக்கு விற்பனை செய்ததன்மூலமாக இனமாற்றம் என்ற தீங்கு புரிந்தவராகிறார். இங்கு 'ஆ'-வின் நல்லெண்ணம் தொடர்பற்றதாகும். எனவே 'ஆ'-வின் தரப்பில் தவறு ஏதும் இல்லை என்றாலும் பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Consolidated Co Vs Curtis** (பக்கம் எண் 39-ல் காண்க).

இசைந்தேற்பது தீங்காகாது

7. **வாதி, ஓர் பார்வையாளராக பிரதிவாதியின் மோட்டார் பந்தயத்தைப் பார்வையிட உரிய கட்டணத்தைச் செலுத்திய பின்னர் பந்தய மைதானத்தில் அமர்ந்திருந்தார். விரைந்து செல்லும் ஓர் பந்தயக் காரினால் அவருக்கு ஊறு ஏற்பட்டது. இழப்பீடு கோரி வாதி வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.**

தீர்வு: வாதியின் இழப்பீட்டுக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரிக்கும் !

விளக்கம்: பொதுவாக ஓர் விளையாட்டு அல்லது பந்தயத்தைக் காண்பதற்காக கட்டணம் செலுத்தி உள்ளே நுழைபவர், அவ்விளையாட்டு அல்லது பந்தயத்தின்மூலம் எழும் எதிர்விளைவுகளைப் பற்றி அறிந்திருந்தே நுழைகிறார். மேலும் அவர் அதனைக் காண்பதற்கான கட்டணத்தைச் செலுத்தி அனுமதிச்சீட்டைப் பெறும்போது, அவ்விளையாட்டு அல்லது பந்தயத்தில் இயல்பாக ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வதற்கு உட்கிடையாக ஒப்புதல் அளித்ததாகிறது. எனவே 'இசைந்து ஏற்பது தீங்காகாது' எனும் சட்ட முதுமொழியின்படி வாதி இழப்பீடு கோரத்தகுதி பெற்றிருக்கவில்லை.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Hall Vs Brooklands Auto Racing Club,** (பக்கம் எண் 58-ல் காண்க).

---

8. **'A' என்பவர் ஒரு மகிழுந்தில் பயணித்தார். அதனை 'B' ஓட்டினார். 'B' மது மயக்கத்தில் இருக்கிறார் என்பது 'A'-க்குத் தெரியும். 'B'-யின் மது மயக்கத்தால் மகிழுந்து விபத்துக்குள்ளானது. 'B'-ன்மீது 'A' வழக்கிடுகிறார். 'A'-வெற்றி பெறுவாரா?**

தீர்வு: 'A'-தற்கவனமின்மை தீங்கு புரிந்துள்ளதால் வெற்றி பெறமாட்டார் !

விளக்கம்: ஓட்டுநரான 'B'-மதுமயக்கத்தில் உள்ளதை அறிந்திருந்தே 'A' அவ்வண்டியில் பயணிக்க ஒப்புக் கொண்டுள்ளதால் இசைந்தேற்பது தீங்காகாது எனும் முதுமொழி இங்கு பொருந்தும். மேலும் ஓட்டுநரின் நிலையை அறிந்தே அவருடன் பயணிக்க ஒப்புக்கொண்டதன்மூலமாக 'A' தற்கவனமின்மை தீங்கு புரிந்ததற்கும் ஆளாகுகிறார். ஆனால் மேற்குறிப்பிட்ட பொருண்மைக்கு ஒத்த வழக்கான Dann Vs Hamilton என்ற வழக்கில் இசைந்தேற்பது தீங்காகாது எனும் எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும் இவ்வழக்கில் வாதியின் பேரிலான தற்கவனமின்மை எனும் எதிர்வாதமும் முன்வைக்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும் மேற்குறிப்பிட்ட வழக்கின்தீர்ப்பு பரவலான கண்டனத்திற்கு உள்ளாகியது.

அமெரிக்க சட்ட நிறுவனத்தின் தீங்கியல் சட்டத்தின் மறு அறிக்கை பிரிவு-466 -ன் உட்பிரிவு-(e)-க்கான விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, கார் ஓட்டுநரான பிரதிவாதி மது மயக்கத்தில் இருப்பது, காரின் 'பிரேக்குகள்' (brakes), முகப்பு விளக்குகளின் (head lights) பழுது ஆகியவற்றை அறிந்திருந்தே, வாதி அவ்வண்டியில் பயணித்தால் அவர் தற்கவனமின்மை தீங்கு புரிகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இதுவே சட்டத்தின் சரியான நிலையாக இருக்கும் என்பது இங்கு பணிந்து குறிப்பிடப்படுகிறது.

தவிர்க்க இயலா விபத்து

9. **'அ' வின் கார் சாலையில் வேகமாக செல்லும்போது அதன் அச்சு கம்பி திடீரென முறிந்து வெளியே விழுந்தது. இதனால் வண்டி திசைமாறி சென்று எதிர்திசையில் வந்த ஒரு கார்மீது மோதியது. இதில் தொடர்புடைய நபர்களின் பொறுப்பு நிலையை ஆராய்க.**

தீர்வு: எதிர் திசையில் வந்த காருக்கு ஏற்பட்ட சேதத்திற்கு மற்றும் அக்காரில் நபர்கள் எவரேனும் இருந்திருப்பின் அவர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு 'அ' பொறுப்பாகமாட்டார் !

விளக்கம்: 'அ'-வை பொறுப்பு நிலைக்கு உட்படுத்த, அவர் கவனமின்றி காரை ஓட்டியிருக்க வேண்டும் அல்லது அவர் காரை முறையாக பராமரிக்கவில்லை என்பதை மெய்ப்பிக்க வேண்டும். வினாவில் அச்சுக்கம்பி முறிந்து விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 'அ' கவனக்குறைவாக காரை ஓட்டவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் காரின் அச்சுக் கம்பி முறிவது அசாதாரணமாது என்பதுடன் அதனுள் ஏற்பட்டிருந்த பழுதை (latent defect) வெளியில் இருந்து கண்டுபிடிக்க முடியாது என்பதால் இது ஓர் தவிர்க்க இயலா விபத்தாகும். எனவே 'அ' பொறுப்பாகமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Padmavati Vs Dugganaika, (பக்கம் எண் 67-ல் காண்க).

10. 'அ' மற்றும் 'ஆ' என்பவர்கள் நாய்கள் வளர்த்து வந்தனர். ஒரு நாள் இருவரது நாய்களும் சண்டையிட்டன. 'ஆ' என்பவர் அவற்றை பிரித்து விடுவதற்காக அடித்தார். 'அ' என்பவர் அதனை பார்த்துக் கொண்டிருந்தார். அந்நேர்வில் 'அ'-வின் கண்களில் எதிர்பாராதவிதமாக 'ஆ'-வால் காயம் ஏற்பட்டது. 'அ' என்பவர் 'ஆ' மீது வழக்கு தொடர்வதால் வெற்றி பெறுவாரா?

தீர்வு: 'அ' வெற்றி பெற மாட்டார் !

விளக்கம்: சில நேரங்களில் முறையான கவனம், முன்னெச்சரிக்கை மற்றும் திறமையை செயல்படுத்தினாலும்கூட, தவிர்த்திட முடியாத சில நேர்வுகளில் விபத்து ஏற்படும் நிலையே தவிர்க்க இயலா விபத்து எனப்படுகிறது. வினாவில் நாய்கள் இரண்டும் சண்டையிடுவதை உடனடியாக பிரிக்காவிட்டால், இரண்டு நாய்களுக்கும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றின் உயிருக்கு ஆபத்து அல்லது கொடுங்காயம் ஏற்படலாம். எனவே அதை தடுக்கும் நல்லெண்ணத்துடன் 'ஆ' செயல்பட்டுள்ளார். 'ஆ'-வின் செயல் சுயநலமற்றது என்பதுடன் 'அ'-வுக்கும் ஆதரவான செயலையே செய்துள்ளார். எனவே 'ஆ' நல்லெண்ணத்துடன் செயல்பட்டபோது ஏற்பட்ட தவிர்க்கமுடியாத விபத்தினால் 'அ'-க்கு ஊறு ஏற்பட்டுள்ளதால், 'அ' வழக்கு தொடர்ந்தால் வெற்றி பெறமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Brown Vs Kendall, (1850) 6 Cussing 292., இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதியின் நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. வாதி அதனை தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தபோது, பிரதிவாதி அவைகளைப் பிரிப்பதற்காக கழியினால் (stick) மிதமாக அடித்துக்கொண்டே பின்னோக்கி நகர்ந்தார். மீண்டும் அடிப்பதற்காக கழியை தனது தோளுக்கு மேல் உயர்த்தியபோது, அது எதிர்பாராதவிதமாக வாதியின் கண்ணில்பட்டு காயத்தை ஏற்படுத்தியது. நீதிமன்றம், பிரதிவாதியின் செயல் சட்டப்படி நியாயமானது மற்றும் முறையானது என்றும், வாதிக்கு ஏற்பட்ட ஊறு, தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அவருக்கு ஊறு ஏற்படுத்தும் எண்ணம் கொண்டிராமல் செய்யப்பட்ட செயல் என்பதால் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்று தீர்ப்பளித்தது.

சட்ட அதிகாரம்

11. அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை கூட்டாக வருவாய், காவல் மற்றும் நகர்மன்ற துறையினர் இடித்தனர். அரசுக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு உணவு விடுதிகளின் பெயர்ப்பலகைகள் அழிக்கப்பட்டன. உணவு விடுதிகளின் உரிமையாளர்கள் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்தனர். முடிவு செய்க.

தீர்வு: உணவு விடுதிகளின் உரிமையாளர்கள் வழக்கில் வெற்றி பெறமாட்டார்கள் !

விளக்கம்: [பக்கம் எண் 69, வினா எண் 18-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க].

---

12. 'அ' தன்வீட்டின் முன்பகுதி சாலைப்புறம் நீட்டி இருக்குமாறு கட்டியிருந்தார். மாநகராட்சி எந்த முன்னறிவிப்புமின்றி சாலையில் நீட்டியிருந்த கட்டிடப் பகுதியை இடித்துத் தள்ளியது. தன் கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்காக மாநகராட்சியின்மீது 'அ' வழக்கிடுகிறார். மாநகராட்சியின் பொறுப்பு நிலையை முடிவு செய்க.

தீர்வு: 'அ'-விற்கு ஏற்பட்ட சேதத்திற்கு மாநகராட்சி பொறுப்பாகாது !

விளக்கம்: (முந்தைய வினாவிற்கான விளக்கம் இவ்வினாவிற்கும் பொருந்தும்).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Bhogilal Vs Municipality of Ahmedabad [3 Bom, LR 415]: இவ்வழக்கில் அகமதாபாத் நகராட்சிமன்றம் சட்டத்தின் கீழான தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, சாலைப்புறம் நீட்டிக் கட்டப்பட்டிருந்த வாதியின் வீட்டு முன்பகுதியை இடித்தது. அவ்வாறு இடித்துத் தள்ளும்போது, வாதியின் வீட்டு மேற்கூரைப் பகுதியும் (roof) சேதமடைந்தது. நகராட்சி ஏற்படுத்திய சேதத்திற்கான இழப்பீடு கோரி வாதி வழக்கிட்டார். நீதிமன்றம் வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும்கூட, பிரதிவாதியான நகராட்சி, சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினால் நிறைவேற்றப்பட்ட கடமைக்கு எதிராக வாதி வழக்கு தொடர முடியாது எனக் குறிப்பிட்டு வாதியின் மனுவை தள்ளுபடி செய்தது.

தற்காப்புரிமை

13. வாதி கோழியொன்றினை பின்தொடர்ந்து பிரதிவாதியின் சுவற்றுக்கு மேல் ஏறினார். தோட்டத்தில் அறிவிக்கையின்றி பிரதிவாதி வைத்திருந்த விற்பொறி துப்பாக்கியினால் காயமுற்றார். வாதி இழப்பீடு பெற முடியுமா?

தீர்வு: வாதி இழப்பீடு பெற முடியும் !

விளக்கம்: (குறுவினா 26-க்கான குறுந்தலைப்பு (2)-ல் காண்க. பக்கம் 81).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Bird Vs Hallbrook (பக்கம் எண் 81-ல் காண்க).

கூட்டுருவின் தீங்கியல் பொறுப்புநிலை

14. ஒரு இரயில்வே கம்பெனியின் நிலைய அதிகாரி 'P' என்பவர் தன்னுடைய குதிரைக்கு பயணக்கட்டணம் செலுத்த மறுத்ததால் அவரை செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி வைத்தார். ஆனால் இரயில்வே கம்பெனிக்கு அத்தகைய அதிகாரம் மேற்கூறிய காரணங்களுக்காக வழங்கப்படவில்லை. 'P' இரயில்வே கம்பெனிமீது வழக்கு தொடர்ந்தார். தீர்மானிக்க.

தீர்வு: 'P' என்பவர் இரயில்வே கம்பெனிக்கு எதிராக தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படும் !

விளக்கம்: வினாவில், இரயில்வே கம்பெனிக்கு வழங்கப்படாத அதிகாரத்தை நிலைய அதிகாரி செயல்படுத்தி உள்ளதால், நிலைய அதிகாரி அவரின்

அதிகாரவரம்பிற்கு மீறி செயல்பட்டுள்ளார். எனவே இரயில்வே கம்பெனி, நிலைய அதிகாரியின் அதிகாரவரம்பு மீறிய செயலுக்கு பொறுப்பாகாது. இதற்கு மாறாக, 'P'-என்பவர் நிலைய அதிகாரியின்மீது தனிப்பட்ட முறையில் இழப்பீட்டிற்காக வழக்கிட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Poulton Vs London and S.W.Rly Co. (பக்கம் எண் 97-ல் காண்க).

தீங்கியலில் இளவரின் பொறுப்புநிலை

15. 'அ' என்ற இளவர் ஒரு மணிநேரம் சவாரி செய்வதற்காக 'ஆ'-விடமிருந்து ஓர் பெண் குதிரையை வாடகைக்கு எடுத்து, ஏறத்தாழ நான்கு மணிநேரம் சவாரி செய்து அதற்கு காயம் விளைவிக்கிறார். தீங்கீடு கோரி 'ஆ' என்பவர் 'அ'-வின்மீது வழக்கு தொடுக்கிறார். 'ஆ' வெற்றி பெறுவாரா?

தீர்வு: 'ஆ' வெற்றி பெறமாட்டார் !

விளக்கம்: தீங்கியல் பொறுப்பு நிலையில், சட்ட வயது அடைந்தவருக்கும் இளவருக்கும் இடையே வேறுபாடு ஏதுமில்லை. இருப்பினும் வினாவில் 'அ' என்ற இளவர் குதிரையை 'ஒருமணி நேரம் சவாரி செய்வதற்காக' 'ஆ'-விடம் இருந்து பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனின்று 'அ' மற்றும் 'ஆ'-விற்கு இடையே ஓர் வாடகை ஒப்பந்தம் இருப்பது தெரிய வருகிறது. எனவே 'அ' எனும் இளவர் ஒப்பந்த மீறுகை புரிந்துள்ளார். இளவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இல்லா நிலையது என்பதால் 'ஆ'என்பவர் வழக்கில் வெற்றி பெறமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Jennings Vs Rundal** (பக்கம் எண் 99-ல் காண்க).

16. 'அ' என்னும் இளவர் தன்னுடைய வயதை ஏமாற்றி உரைத்து 'ஆ' என்னும் நபரிடம் இருந்து ரூ.50,000/- பெற்றுக்கொள்கிறார். 'அ' தன்னுடைய ஏமாற்றுச் செயலுக்கு பொறுப்பாவாரா?

தீர்வு: 'அ' என்பவர் ஏமாற்றுச் செயலுக்கு பொறுப்பாகமாட்டார் !

விளக்கம்: ஒப்பந்தச் சட்டப்படி, இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதி கொண்டிருக்கவில்லை. மீறி ஒப்பந்தம் செய்தாலும் அது ஓர் இல்லாநிலை ஒப்பந்தமாகவே அமையும். கடன் பெறுவது என்பது, அடிப்படையில் ஒப்பந்தம் தொடர்பானதாகும். எனவே ஓர் இளவர், தான் சட்ட வயதை அடைந்துவிட்டதாக பொய்யுரைத்து அல்லது ஏமாற்றி கடன் பெற்றிருந்து அதன்பின்னர் அக்கடன் ஒப்பந்தத்தை மீறினாலும், இளவர் என்பதால் தான் செய்து கொண்ட ஒப்பந்தம் தன்னைக் கட்டுப்படுத்தாது என வாதிடலாம்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Johnson Vs Pye, (1665) 1 Sid 258; இவ்வழக்கில் ஓர் இளவர், தான் சட்ட வயதை அடைந்துவிட்டதாக ஏமாற்றி 300 பவுண்டுகளை கடனாக அளிக்கத் தூண்டினார். பிரதிவாதி, வாதியின் பேச்சை நம்பி 300 பவுண்டுகளை கடனாகக் கொடுத்தார். பின்னர் உண்மையை அறிந்த பிரதிவாதி, வாதி தன்னை ஏமாற்றியதற்கான வழக்கு தொடர்ந்தார். இளவர் பொறுப்பாகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பெற்றோரின் பொறுப்பு நிலை

17. தகப்பனார் ஒருவர் தனது 15 வயது மகனுக்கு ஒரு காற்று துப்பாக்கியைக் கொடுத்தார். மகன் அதை வைத்து பக்கத்து வீட்டினரின் சன்னலை உடைத்த பின்னரும் அதனை வைத்திருக்க அனுமதிக்கிறார். துப்பாக்கியால் வேறொரு பையனின் கண்ணையும் காயப்படுத்திவிட்டான். தந்தையின் பொறுப்பு நிலையைக் கூறுக.

தீர்வு: இளவர் செய்த செயலுக்கு அவனின் தந்தை பொறுப்பாகுவார் !

விளக்கம்: இளவர் செய்யும் தீங்குகளுக்கு, இளவரின் தந்தை அல்லது காப்பாளர் பொறுப்பாகமாட்டார்கள் என்பது பொதுவான விதியாகும். இருப்பினும் இப்பொதுவிதிக்கு இரண்டு விலக்குகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, தந்தையால் வேலைக்கு அமர்த்தப்பட்ட இளவர், பணியின்போது புரியும் தீங்கிற்கு அவனின் தந்தை பகரப் பொறுப்பு கொண்டுள்ளார். இரண்டாவதாக, இளவரால் செய்யப்பட்ட தீங்கு, பெற்றோர் இளவரின்மீது செலுத்த வேண்டிய கவனத்தை செலுத்த தவறியதால் ஏற்பட்டதாக இருப்பின் பெற்றோர் (தந்தை) பொறுப்பாகுவார். வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இளவர் செய்த தீங்கு இரண்டாவது விதிவிலக்குடன் ஒத்திருப்பதால் அவனின் தந்தை பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Bebee Vs Sales, (பக்கம் எண் 100-ல் காண்க).

நீதிமுறைச் செயல்

18. குற்றம் சாட்டப்பட்ட ஐந்து நபர்களில் இருவர் உயர்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். உயர்நீதிமன்ற ஆணையைப் பார்க்காமல் குற்றவியல் நடுவர் இந்த ஐந்து நபர்களுக்கும் பிடியாணை வழங்குகிறார். விடுதலை செய்யப்பட்ட இரு நபர்களும் குற்றவியல் நடுவருக்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடருகிறார்கள். நடுவரின் பொறுப்புநிலையை ஆராய்க.

தீர்வு: நடுவர் இழப்பீடு செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார் !

விளக்கம்: குற்றவியல் நடுவர் உயர்நீதிமன்றத்தின் ஆணையை நடைமுறைப்படுத்தும்போது, நீதிமுறையிலான செயலை அல்லாமல் அலுவலக நிருவாகப் பணியை மட்டுமே மேற்கொள்கிறார் என்பதால், 1850-ஆம் ஆண்டின் நீதிமுறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழான பாதுகாப்பை பெற முடியாது. எனவே வினாவில் குறிப்பிட்டுள்ள குற்றவியல் நடுவர் தனது கவனமின்மைச் செயலுக்காக தனிப்பட்ட முறையில் பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: State of UP Vs Tulsi Ram, AIR 1971 All 162 என்ற வழக்கில், குற்றவியல் நடுவர் உயர்நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும்போது, உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நபர்கள் இருவரையும் சேர்த்து கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பித்தார். கைது செய்யப்பட்ட சில மணி நேரங்களுக்குள், குற்றவியல் நடுவர் தவறு ஏற்பட்டிருப்பதை அறிந்து, உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நபர்களை அதாவது வாதிகளை உடனடியாக

விடுவித்தார். வாதிகள் தங்களுக்கு ஏற்பட்ட அவமானம் மற்றும் மன அளவிலான பாதிப்பிற்கு ரூபாய் 2000/-ஐ இழப்பீடாக வழங்கக் கோரி வழக்கிட்டனர். குற்றவியல் நடுவர், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு-485-ன்கீழான உயர்நீதிமன்றத்தின் ஆணைக்குட்பட்ட செயலை நிறைவேற்றும்போது அலுவலக நிருவாகப் பணியை மேற்கொள்கிறாரே தவிர நீதிமுறையிலான பணியை அல்ல என்றும், எனவே நீதிமுறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850, பிரிவு-1-ன்கீழான பாதுகாப்பை பெறமாட்டார் என்பதையும் நீதிமன்றம் குறிப்பிட்டு வாதிகளுக்கு இழப்பீடாக ரூபாய் 500/-ஐ செலுத்துமாறு குற்றவியல் நடுவருக்கு ஆணையிட்டது.

பகரப் பொறுப்பு நிலை

19. பெட்ரோல் லாரி ஒன்றின் ஓட்டுநர் லாரியிலிருந்து பெட்ரோலை கிடங்கிற்கு மாற்றிக் கொண்டிருக்கும்போது கவனக்குறைவாக தீக்குச்சியை கொழுத்தி சிகரெட் பற்ற வைத்துவிட்டு வீசி எறிந்தார். இதனால் தீ விபத்து ஏற்பட்டு, வாதியின் கொட்டகை எரிந்தது. வாதி ஓட்டுநரின் பணித்தலைவரின் மேல் வழக்கு தொடர்ந்தார் – முடிவு செய்க.

தீர்வு: பணித்தலைவர் ஓட்டுநரின் கவனக்குறைவிற்கு பகரப் பொறுப்பு கொண்டுள்ளார் !

விளக்கம்: பகரப்பொறுப்பு கோட்பாட்டின் அடிப்படையில் பணித்தலைவருக்கு எதிராக இழப்பீடு கோரும் வாதி, வழக்கில் வெற்றி பெறுவதற்கு இரண்டு முக்கியக்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும். அதாவது, தவறு செய்த அல்லது கவனக்குறைவாக செயல்பட்ட நபருக்கும், பணித்தலைவருக்கு இடையே பணியாள் மற்றும் பணித்தலைவர் உறவு இருந்தது; மற்றும், பணியாளின் கவனக்குறைவு அல்லது தவறு, பணித்தலைவரின் பணியைச் செய்யும்போது புரியப்பட்டது எனும் இரு கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும். வினாவில் இவ்விரண்டு கூறுகளும் உள்ளடங்கி இருப்பது தெரிய வருகிறது. மேலும் சில நேரங்களில், பணித்தலைவரால் குறிப்பிடப்பட்ட கடமைகளை பணியாள் நிறைவேற்றும்போது, தனது சொந்த வசதிகளுக்காகவும் சில செயல்களைச் செய்யலாம். இத்தகைய செயல்கள் பணியின்போது செய்யப்பட்டால், அவைகளினால் ஏற்படும் தீங்குகளுக்கும் பணித்தலைவர் பொறுப்பாவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Century Insurance Co Vs Northern Ireland Road Transport Board (பக்கம் எண் 117-ல் காண்க).

---

20. 'அ' என்பவர் தனது நிலம் மற்றும் வீட்டை விற்பதற்காக 'ஆ' என்கின்ற நில வியாபாரம் ('ரியல் எஸ்டேட்') நிறுவனத்தை அணுகியுள்ளார். 'இ' என்கின்ற அந்நிறுவனத்தின் மேலாளர் 'அ'விடம் பகரப் பத்திரம் பெற்றுக் கொண்டு 2,00,000/- ரூபாய்க்கு 'அ'-வின் சொத்தை விற்றுவிட்டு, 'அ'-விடம் பணத்தை கொடுக்காமல் அப்பணத்தை கையாடல் செய்கிறார். 'அ' என்பவர் தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக 'ஆ' மீது வழக்கு தொடர்கிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு: 'ஆ' எனும் நில வியாபாரம் செய்யும் நிறுவனம் 'அ'-விற்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு செலுத்த பகரப்பொறுப்பு கொண்டுள்ளது !

விளக்கம்: வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 'இ' எனும் மேலாளர், 'ஆ' எனும் நில வியாபாரம் செய்யும் நிறுவனத்தின் பணியாள் ஆவார். அவர் செய்த கையாடல் செயல் பணியின்போது செய்யப்பட்டதால், அவரின் செயலுக்கு பணித்தலைவரான நில வியாபாரம் செய்யும் நிறுவனம் பகரப்பொறுப்பு கொண்டுள்ளது.

இவ்வினாவின் பொருண்மையை ஒத்த வழக்கு: Lloyd Vs Grace Smith & Co., (பக்கம் எண் 119-ல் காண்க).

---

21. சில இராணுவ வீரர்கள் ஆற்றோரமாக இருந்த விறகுக்கட்டைகளைக் கண்டனர். பின்னர் அதை தங்கள் கூடாரத்திற்கு முன் வெப்பமூட்டுவதற்கும் எரிபொருளுக்கும் பயன்படுத்த எடுத்துச் சென்றனர். அவ்விறகுக் கட்டைகள் வாதிக்குச் சொந்தமானவை. எனவே வாதி இந்திய அரசுமீது வழக்கு தொடர்ந்தார். இந்திய அரசு பொறுப்பேற்க வேண்டுமா?

தீர்வு: இந்திய அரசு பகரப்பொறுப்பு கோட்பாட்டின் அடிப்படையில் பொறுப்பாகும் !

விளக்கம்: (வினா எண் 25-க்கான விடையின் குறுந்தலைப்பு எண்-6-ல் காண்க. பக்கம் எண் 120).

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Rooplal Vs Union of India** (பக்கம் எண் 120-ல் காண்க).

---

22. எதிர்வாதியின் பேருந்து ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவதற்கு நடத்துனரை அனுமதிக்கிறார். அவ்வாறு நடத்துனர் பேருந்தை ஓட்டிச் செல்கையில் வாதி காயமடைகிறார். அச்சமயம் ஓட்டுநரும் நடத்துனரின் அருகில் அமர்ந்திருந்தார். எதிர்வாதிகள் பொறுப்படைவிற்குள் ஆகுவார்களா?

தீர்வு: எதிர்வாதிகள் பொறுப்பாவார்கள் !

விளக்கம்: நடத்துனர் பேருந்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் அனுமதித்தது அவரின் தவறான செயலை அல்லது கவனக்குறைவை வெளிப்படுத்துகிறது. நடத்துனரின் அருகிலேயே அவரும் அமர்ந்திருந்தது அவரின் தவறை அல்லது கவனக்குறைவை நியாயப்படுத்தாது. இருப்பினும் ஓட்டுநரின் இத்தகைய தவறான அல்லது கவனக்குறைவான செயல் அவரின் பணிநேரத்தின்போது செய்யப்பட்டிருப்பதால், பேருந்தின் உரிமையாளர்களான எதிர்வாதிகள் பொறுப்பாவார்கள்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Ricketts Vs Thomas Tilling Ltd (1915) 1 KB 644.,** இவ்வழக்கில் பேருந்து ஓட்டுநரின் அனுமதியைப் பெற்ற நடத்துனர், பேருந்தை அடுத்த சுற்று பயணத்திற்கு வசதியாக அதை திருப்பி நிறுத்த முயன்றபோது, அவரின் கவனக்குறைவு காரணமாக, பேருந்து நடைபாதை திட்டின்மீது ஏறியதால் நபரொருவர் காயமுற்றார். அச்சமயத்தில் ஓட்டுநரும் நடத்துனரின் அருகிலேயே அமர்ந்திருந்தார். நீதிமன்றம், ஓட்டுநர் நடத்துனரை பேருந்து ஓட்டுவதற்கு அனுமதித்த

தவறான செயலின்மூலம் தான் செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள செயலை, அதிகாரமற்ற வகையில் கவனக்குறைவாக செய்துள்ளதால் பணித்தலைவர் பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

கூட்டாக தீங்கிழைத்தோர்

23. வாதி பல்வேறு பிரதிவாதிகளுக்கு எதிராக அவதூறு வழக்கு ஒன்றை தொடுத்தார். பிரதிவாதிகளில் ஒருவர் வாதியிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு சமர்ப்பித்தார். வாதியும் அதை ஏற்றுக் கொண்டார். பிறகு வாதி எஞ்சியுள்ள மற்ற பிரதிவாதிகளின்மீது நீதிமன்ற நடவடிக்கையினைத் தொடர்ந்தார். எஞ்சியுள்ள பிரதிவாதிகள் கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவர் விடுவிக்கப்பட்டு விட்டதனால் எஞ்சியுள்ள பிரதிவாதிகளின்மீது உள்ள வழக்கை தொடர உரிமை அறுநிலை ஆகிவிட்டது என வாதிட்டனர்.

தீர்வு: எஞ்சியுள்ள பிரதிவாதிகளின்மீதான வழக்கிடும் உரிமை அறுநிலை ஆகாது !

விளக்கம்: பலர் ஒன்றாகச் சேர்ந்து இழைக்கும் தீங்கிற்கு அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், கூட்டாகவும் அத்தீங்கினால் ஏற்பட்ட சேதம் அனைத்திற்கும் பொறுப்பாவார்கள். இதன்பொருள் வாதி, தனக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதற்கும் அவர்களில் எவரேனும் ஒருவர்மீது மட்டும் தனியே வழக்கிடவும் அல்லது அவர்கள் அனைவருக்கும் எதிராகப் பெறப்பட்ட தீர்ப்பாணையை அவர்களில் எவரேனும் ஒருவரிடம் இருந்தும்கூட வசூலிக்க முடியும். மேலும் அவர்களில் எவரேனும் ஒருவரை பொறுப்பிலிருந்து விடுவித்தால் எஞ்சியிருக்கும் பிரதிவாதிகளின் பொறுப்பு நிலையும் நீங்கிவிடும். ஆனால் அவர்களில் ஒருவர்மீது வழக்கிடப் போவதில்லை என வெறுமனே உடன்பாடு மட்டும் செய்து கொண்டிருந்தால், எஞ்சியுள்ள பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்குமூலம் தொடர்ந்திருக்கும் என்பதால், அவர்கள்மீது வழக்கிட முடியும்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Khusro Vs N.A. Guzder, AIR 1970 SC 1468; இவ்வழக்கில் வாதிகள் பல்வேறு பிரதிவாதிகளுக்கு எதிராக அவதூறு வழக்கு தொடர்ந்னர். வாதிகள் வழக்குரை தாக்கல் செய்த பின்னர், ஆனால் எதிர்வாதிகள் எதிருரை தாக்கல் செய்வதற்கு முன்பாக, பிரதிவாதிகளில் ஒருவர் நிபந்தனையற்ற மன்னிப்பை சமர்ப்பித்தார். வாதிகள் அதனை ஏற்று, அதனை நீதிமன்றத்திற்கும் தெரிவித்து எஞ்சியுள்ள பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் இழப்பீடு வழங்கக் கோரினார். பிரதிவாதிகள் தங்களின் எதிருரையில், கூட்டாகத் தீங்கிழைத்தோரில் ஒருவரை விடுவிப்பது அனைவரையும் விடுவிப்பதாகும் என்பதால், பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கிடும் உரிமை அறுநிலை அடைந்துவிட்டதாக குறிப்பிட்டிருந்தனர். பிரதிவாதிகள் வாதிகளுக்கு ஏற்படுத்திய சேதத்திற்காக, வாதிகள் அவர்களில் ஒருவருடன் செய்துகொண்ட ஒத்திசைவு, அத்தீங்கிற்கான முழுமையான மனநிறைவு ஆகாது என்பதால் அது எஞ்சியுள்ள பிரதிவாதிகளை விடுவிக்காது என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், எஞ்சியுள்ள பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் தீர்ப்பாணையை பிறப்பித்தது.

24. 'அ'-வின் நாயும், 'ஆ'-வின் நாயும் 'ஓ'-வின் ஆடுகளைத் துன்புறுத்தின. பொறுப்பு நிலையை எவ்வாறு தீர்மானிப்பாய்?

தீர்வு: 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இருவரும் 'ஓ'-விற்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பு கொண்டுள்ளனர் !

விளக்கம்: (பக்கம் எண் 130 வினா எண் 27- க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Arneil Vs Paterson, (1931) AC 560., இவ்வழக்கில் வேறுவேறு நபர்களுக்குச் சொந்தமான இரு நாய்கள் கூட்டாகச் சேர்ந்து வாதியின் ஆட்டு மந்தையினுள் புகுந்து பல ஆடுகளை காயப்படுத்தின. வாதி, நாய்களின் உரிமையாளர்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், ஒரு நாயின் உரிமையாளர், ஆடுகளுக்கு ஏற்பட்ட காயங்களுக்கான இழப்பீட்டின் ஒரு பாதிக்கு (one-half) மட்டுமே தான் பொறுப்பாக முடியும் என வாதிட்டார். இரண்டு நாய்களும் கூட்டாகச் சேர்ந்து தாக்கியதால், ஒவ்வொரு நாயின் உரிமையாளரும் முழுமையான இழப்பிற்கு பொறுப்பாவார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சேதத்தின் சேய்மை (இழப்பீடு)

25. 'அ' மற்றும் 'ஆ' -வின் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 'ஆ' தனது கப்பலை இழந்தார். அந்நிகழ்வில் 'ஆ'-வின் கப்பல் தவறிழைத்தது. அவரது மனைவி நோய்வாய்ப்பட்டார். குழந்தைகள் கல்வி இழந்தனர். இவை அனைத்து இழப்புகளுக்கும் 'அ', 'ஆ'-விடம் இழப்பீடு கோர முடியுமா?

தீர்வு: 'ஆ' என்பவர் அவரது மனைவி நோய்வாய் பட்டதற்கும், குழந்தைகளின் கல்வி இழப்பிற்குமான இழபீட்டைக் கோர முடியாது !

விளக்கம்: [வினா எண் 33-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க. பக்கம் எண் 158].

---

26. ஒரு புகழ்பெற்ற மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் லண்டனின் ஏதேனுமொரு இம்பீரியல் ஹோட்டலில் தங்குவதற்கு உரிமை பெற்றிருந்தார். ஆனால் ஒருமுறை அவ்விடுதி அவருக்கு தங்கும் வசதி அளிக்க முடியாததால் வேறொரு விடுதியில் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் அவ்வீரர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு அவ்வீரர் வழக்கிட முடியுமா?

தீர்வு: வழக்கிட முடியும் !

விளக்கம்: வினாவில் கிரிக்கெட் வீரர் லண்டனில் உள்ள ஏதேனுமொரு இம்பீரியல் ஹோட்டலில் தங்குவதற்கு உரிமை பெற்றிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' எனும் சட்ட முதுமொழியின்படி, அவர் தனது உரிமையை செயல்படுத்தக் கோர முடியும். இருப்பினும், இம்பீரியல் ஹோட்டல் நிருவாகம் அவரின் உரிமையை முழுமையாக மறுக்காமல் மாற்று ஏற்பாடு செய்திருப்பதன்மூலம் அத்தகைய உரிமையை அங்கீகரித்துள்ளது. இங்கு கிரிக்கெட் வீரர் கொண்டிருந்த உரிமை மீறப்பட்டதால் அவருக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை. எனவே நீதிமன்றம் கிரிக்கெட் வீரரின்

உரிமையை அங்கீகரிக்கும் விதமாக பெயரளவு இழப்பீடு மட்டுமே, 'சேதமில்லாத் தீங்கு' கொள்கையின் அடிப்படையில் வழங்கும்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Constantine Vs Imperial London Hotels, 1944 KB 693.**, இவ்வழக்கில் புகழ்பெற்ற மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஒருவர், இம்பீரியல் ஹோட்டலில் தங்குவதற்கு, நிருவாகம் தவறான முறையில் மறுத்துவிட்டது. இருப்பினும் அந்நிருவாகம், அவர் தங்குவதற்கு மற்றொரு ஹோட்டலில் ஏற்பாடு செய்தது. இது தொடர்பாக கிரிக்கெட் வீரர் தொடர்ந்த வழக்கில், அவர் பெயரளவு இழப்பீடு பெறத் தகுதி கொண்டுள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒரே பொருண்மையின் அடிப்படையில் அடுத்தடுத்து வழக்கிடுதல்

27. 'அ' என்பவர் அடித்ததற்காக 'ஆ' என்பவர் 'அ' மீது வழக்கிட்டு தீங்கீடு பெற்றார். எட்டு வருடங்கள் கழித்து 'அ' அடித்ததால் தற்போது 'ஆ' தனது மண்டையோட்டின் ஒரு பகுதியை நீக்க வேண்டியுள்ளதாகவும் அதற்காக தனக்கு இழப்பீடு வேண்டும் என்று கோரி இரண்டாவதாக வழக்கிட்டார்.'ஆ' வெற்றி பெற்று இழப்பீடு பெறுவாரா?

தீர்வு: 'ஆ' வெற்றி பெற மாட்டார் !

(விளக்கம், மற்றும் பொருண்மைக்கேற்ற வழக்கிற்கு வினா-எண் 35-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க. பக்கம் எண் 173)

தாக்க முனைவு மற்றும் தாக்குதல்

28. 'A' என்பவர் விளையாட்டாக 'B' என்பவரின் முகத்தில் ஒரு குவளைத் தண்ணீரை வீசினார். தன்னை தாக்கியதாக 'A' மீது 'B' வழக்கிட்டார். தான் வலிமையை பயன்படுத்தவில்லை என்றும் விளையாட்டாகவே ஊற்றியதாகவும் வழக்கினை 'A' மறுத்தார். தீர்மானிக்கவும்.

தீர்வு: 'B' வழக்கில் தோல்வியுறுவார் !

விளக்கம்: [வினா எண் 36-க்கான விடையின் குறுந்தலைப்பு (அ)-வில் காண்க. பக்கம் எண் 177].

---

29. 'அ' ஒரு துப்பாக்கியை 'ஆ' என்பவரை நோக்கி நீட்டுகிறார். அத்துப்பாக்கியில் குண்டு இல்லை என்பது 'அ' என்பவருக்கு தெரியும். ஆனால் 'ஆ'-வுக்குத் தெரியாது. 'அ' ஏதேனும் தீங்கிழைத்துள்ளாரா?

தீர்வு: 'அ' தாக்கமுனைதல் தீங்கு புரிந்துள்ளார் !

விளக்கம்: (முந்தைய வினாவிற்கான விளக்கம், இவ்வினாவிற்கும் பொருந்தும்).

---

30. வாதி எதிர்வாதியின் இடத்திலிருந்து அகல மறுத்தார். எதிர்வாதி தனது பணியாட்களை அழைத்தார். அப்பணியாட்கள் வாதியை முற்றுகையிட்டு தங்களது சட்டையின் கைப்பகுதியை மேலே சுருட்டி அவர் வெளியே

செல்லாவிட்டால் கழுத்தை ஒடிப்பதாக மிரட்டினார். எதிர்வாதி ஏதேனும் தீங்கிழைத்துள்ளாரா? தங்களது விடைக்கு காரணங்கள் தருக.

தீர்வு: எதிர்வாதி தாக்க முனைதல் தீங்கு புரிந்துள்ளார் !

காரணங்கள்: [வினா-எண் 36-க்கான விடையின் குறுந்தலைப்பு (அ)வில் காண்க. பக்கம் எண் 177].

வினாவின் பொருண்மையை ஒத்த வழக்கு: Read Vs Coker, 138 ER 1437., என்ற வழக்கில், எதிர்வாதி கூறியும், வாதி, எதிர்வாதியின் இடத்திலிருந்து அகல மறுத்தார். எதிர்வாதி தனது பணியாட்களை அழைத்தார். அவர்கள் வாதியை முற்றுகையிட்டு தங்களது சட்டையின் கைப்பகுதியை மேலே சுருட்டி, அவர் வெளியே செல்லாவிட்டால் அவரின் கழுத்தை ஒடிப்பதாக மிரட்டினர். அதன்பின்னர் வாதி வெளியேறிச் சென்று, எதிர்வாதிக்கு எதிராக தாக்க முனைவு செய்ததாக வழக்கிட்டார். நீதிமன்றம், எதிர்வாதியின் பணியாட்கள் உடனடியாக தாக்கவிருக்கும் அச்சுறுத்தலை வாதியின் மனதில் ஏற்படுத்தி உள்ளதாலும் மற்றும் அதனை உடனடியாக செயல்படுத்தும் தகுதியைக் கொண்டிருந்ததாலும், எதிர்வாதி தாக்க முனைதல் தீங்கிற்கு பொறுப்பாவார் என்று தீர்ப்பளித்தது.

---

31. 'அ' ஒரு திரைப்பட அரங்கினுள் அனுமதி சீட்டைப் பெற்றுக் கொண்டு தன் இருக்கையில் அமர்ந்தார். 'அ' பணம் செலுத்தி அனுமதிச்சீட்டு பெறாமல் திரை அரங்கினுள் அமர்ந்திருப்பதாக தவறாக எண்ணி, திரை அரங்கின் மேலாளர் 'ஆ', 'அ'- வை பலவந்தமாக வெளியேற்றுகிறார். 'அ', 'ஆ'- வின்மீது வழக்கு தொடர்கிறார். 'ஆ'- வின் பொறுப்பு நிலையை தீர்மானிக்க.

தீர்வு: 'ஆ' தாக்குதல் தீங்கு புரிந்துள்ளார் !

விளக்கம்: தீங்கியல் சட்டத்தின்படி, தாக்குதல் என்பது, சம்மதம் தெரிவித்திராத ஒரு நபருக்கு அல்லது அந்நபருடன் தொடர்பு கொண்டுள்ள பொருள் ஏதேனும் ஒன்றிற்கு, சட்டப்படி நியாயப்படுத்தும் காரணம் ஏதுமின்றி கெடுதி அல்லது ஊறு ஏற்படுத்துவதைக் குறிக்கும். மேலும் ஒரு செயல் தாக்குதல் என்ற தீங்காக அமைவதற்கு 'பலம்' (force) பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், அத்தகைய பலத்தை வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்க வேண்டும். வினாவில் இவ்விரு கூறுகளும் உள்ளடங்கி இருப்பதால் 'ஆ' தாக்குதல் தீங்கு புரிந்துள்ளார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Hurst Vs Picture Theatres Ltd., (பக்கம் எண் 183-ல் காண்க).

---

32. நுழைவாயில் காவலர் ஒருவர் இருந்ததால் வாதி தன்னால் சங்க வளாகத்தினுள் நுழைய முடியவில்லை என்று புகார் அளித்தார். எதிர்வாதி தீங்கிழைத்தவரா?

தீர்வு: எதிர்வாதி தீங்கு ஏதும் இழைக்கவில்லை !'

விளக்கம்: வினாவில், சங்க வளாகத்தின் நுழைவு வாயிலில் காவலர் இருந்தார் என்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. காவலர் வாதியை வாய்மொழியால் மிரட்டியதாகவோ அல்லது வாதியின் உடலைத் தொட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை.

இதனால் காவலர் தாக்க முனைதல் அல்லது தாக்குதல் தீங்கு ஏதும் புரியவில்லை என்பது தெரியவருகிறது.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Innes Vs Wylie, (பக்கம் எண் 182-ல் காண்க).

முறையற்ற சிறை வைப்பு

33. 'அ' என்ற ஒரு சாட்சியர், ஒரு குறிப்பிட்ட நாளில் காலை 10.30 மணிக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு அன்று மாலை 5.30 மணிவரை காத்திருக்குமாறு கோரப்பட்டார். பின்னர் மறுநாள் வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் காத்திருந்த முழுநேரமும் ஒரு காவலர் அவருக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். இது முறையற்ற சிறை வைப்பு ஆகுமா?

தீர்வு: முறையற்ற சிறை வைப்பு ஆகாது !

விளக்கம்: (வினா எண் 38-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க. பக்கம் எண் 186).

---

34. ஒரு சிறைக்கைதி விடுதலையானதாக அறிவிக்கப்பட்ட பிறகு, சிறையிலுள்ள சிறிய அறைக்கு அழைத்து செல்லப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டு சில நிமிடங்கள் சிறை அதிகாரிகளால் கேள்விகள் கேட்கப்பட்டார். இது எவ்வகைத் தீங்கு என்பதை தீர்மானிக்கவும்.

தீர்வு: வினாவில் சிறை அதிகாரிகள் முறையற்ற சிறைவைத்தல் தீங்கு புரிந்துள்ளனர் !

விளக்கம்: (மேற்குறிப்பிட்டுள்ள வினாவிற்கான விளக்கம் இவ்வினாவிற்கும் பொருந்தும்)

பொருண்மைக்கேற்ற வழக்கு: Mee Vs Cruikshank, பக்கம் எண் 187-ல் காண்க).

---

35. 'அ' என்பவர் காவல்துறையிடம் பொய்யான முறையீடு முன்னிட்டமையால் காவல் துறையினர் 'ஆ' என்பவரைக் கைது செய்கின்றனர். 'அ' ஏதேனும் தீங்கிழைத்துள்ளாரா?

தீர்வு: 'அ' முறையற்ற சிறைவைத்தல் எனும் தீங்கிற்கு பொறுப்பாவார் !

விளக்கம்: (வினா எண். 38 பக்கம் 186-ல் காண்க).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Garikipati Rammayya Vs Araza Biksham, AIR 1979 AP 31., இவ்வழக்கில் எதிர்வாதி, தன்னுடைய சொத்திற்கு தீ மூட்டப்பட்டதற்கு வாதி முக்கிய கருவியாக செயல்பட்டுள்ளார் என்று பொய்யான அறிக்கையை காவலரிடம் அளித்தார். வாதியை கைது செய்த காவல் துறையினர், விசாரணையில் எதிர்வாதியின் அறிக்கை பொய்யானது என்பதை அறிந்து அவரை விடுவித்தனர். வாதி, எதிர்வாதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததில், எவ்வித அடிப்படையும்

இல்லாமல், எதிர்வாதியால் செய்யப்பட்ட முறையீட்டின் விளைவாக வாதி ஈகது செய்யப்பட்டதால், எதிர்வாதி, முறையற்ற சிறை வைத்தலுக்கு பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவதூறு

36. எதிர்வாதி வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய ஒரு கடிதத்தை எழுதி வாதிக்கு அனுப்பினார். ஆனால் அக்கடிதத்தை வாதியின் கணவர் படித்தார். எதிர்வாதியின் பொறுப்புரிமையை விவாதிக்க.

விளக்கம்: அவதூறுத்தீங்கு மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டது; அவை (i) கூற்று அவதூறானதாக இருக்க வேண்டும், (ii) அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும் (iii) அக்கூற்று வாதியைப் பற்றியதாக இருக்க வேண்டும். வினாவில் 'வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதம்' எனக் குறிப்பிட்டிருப்பதன்மூலம், அக்கடிதம் அவதூறானக் கூற்றைக் கொண்டுள்ளதையும் மற்றும் அது வாதியைப் பற்றிய அவதூறாக இருப்பதும் தெரியவருகிறது. இரண்டாவது கூறான 'வெளியீடு' என்பதன் பொருள், அவதூறுக்கு உள்ளாகும் நபர் அல்லாமல் குறைந்தபட்சம் அதனை மற்றொரு நபர் அறியச் செய்வதாகும். எதிர்வாதி, வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதத்தை வாதியின் பெயருக்கு அனுப்பியிருந்தாலும்கூட, அக்கடிதத்தை அவரின் கணவர் படிக்கக்கூடும் என்பதை நியாயமாக முன்னறிந்திருக்க முடியும். இத்தலைய காரணங்களின் அடிப்படையில், எதிர்வாதி அவதூறுத் தீங்கிற்கு பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Theaker Vs Richardson, (1962) 1 All ER 229., இவ்வழக்கில் எதிர்வாதி, வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதம் ஒன்றை எழுதி, அதனை வாதிக்கு அனுப்பினார். ஆனால் அக்கடிதத்தை வாதியின் கணவர் பிரித்துப் படித்தார். எதிர்வாதி, வாதியின் கணவர் அக்கடிதத்தை பிரித்துப் படிக்கக்கூடும் என்பதை நியாயமாக முன்னறிந்திருக்க முடியும் என்பதால், எதிர்வாதி அவதூறுத் தீங்கு புரிந்துள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

---

37. அவதூறாக அச்சிடப்பட்ட ஓர் வெளியீடு எதிர்வாதியின் கவனத்தின்மீது அனுமதியின்றி ஓர் வெளிநபரால் ஒட்டப்பட்டிருந்தது. அதனை அகற்ற வேண்டிய கடமை எதிர்வாதிக்கு ஏதேனும் உண்டா? அவ்வாறு வெளியிட்டமைக்கு எதிர்வாதியும் பொறுப்பாவார் என அனுமானிக்க இயலுமா?

தீர்வு: எதிர்வாதி அவதூறாக அச்சிடப்பட்ட வெளியீட்டை அகற்றுவதற்கு கடமை கொண்டுள்ளார்.

விளக்கம்: வெளிநபரால் ஒட்டப்பட்டிருந்த அவதூறு அடங்கிய வெளியீட்டை அகற்றுவதற்கு கணிசமாக செலவு செய்ய வேண்டியதாகவும், கால அவகாசம் தேவைப்படுவதாக இருந்தாலே ஒழிய, எதிர்வாதி அதனை அகற்ற கடமை கொண்டுள்ளார். இல்லையேல், எதிர்வாதி தனது இடத்தை, வாதியைப் பற்றிய அவதூறான பொருண்மைகளை வெளியீடு செய்வதற்கு இடம் அளித்ததாக ஆகிவிடும் என்பதுடன், அவதூறுக் கூற்றினை வெளியீடு செய்த தரப்பினரில் ஒருவராகக் கருதப்படுவார்.

இல்லாமல், எதிர்வாதியால் செய்யப்பட்ட முறையீட்டின் விளைவாக வாதி கைது செய்யப்பட்டதால், எதிர்வாதி, முறையற்ற சிறை வைத்தலுக்கு பொறுப்பாகுவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவதூறு

36. எதிர்வாதி வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய ஒரு கடிதத்தை எழுதி வாதிக்கு அனுப்பினார். ஆனால் அக்கடிதத்தை வாதியின் கணவர் படித்தார். எதிர்வாதியின் பொறுப்புரிமையை விவாதிக்க.

விளக்கம்: அவதூறுத்தீங்கு மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டது; அவை (i) கூற்று அவதூறானதாக இருக்க வேண்டும், (ii) அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும் (iii) அக்கூற்று வாதியைப் பற்றியதாக இருக்க வேண்டும். வினாவில் 'வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதம்' எனக் குறிப்பிட்டிருப்பதன்மூலம், அக்கடிதம் அவதூறானக் கூற்றைக் கொண்டுள்ளதையும் மற்றும் அது வாதியைப் பற்றிய அவதூறாக இருப்பதும் தெரியவருகிறது. இரண்டாவது கூறான 'வெளியீடு' என்பதன் பொருள், அவதூறுக்கு உள்ளாகும் நபர் அல்லாமல் குறைந்தபட்சம் அதனை மற்றொரு நபர் அறியச் செய்வதாகும். எதிர்வாதி, வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதத்தை வாதியின் பெயருக்கு அனுப்பியிருந்தாலும்கூட, அக்கடிதத்தை அவரின் கணவர் படிக்கக்கூடும் என்பதை நியாயமாக முன்னறிந்திருக்க முடியும். இத்தகைய காரணங்களின் அடிப்படையில், எதிர்வாதி அவதூறுத் தீங்கிற்கு பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Theaker Vs Richardson, (1962) 1 All ER 229., இவ்வழக்கில் எதிர்வாதி, வாதியைக் குறித்து அவதூறு அடங்கிய கடிதம் ஒன்றை எழுதி, அதனை வாதிக்கு அனுப்பினார். ஆனால் அக்கடிதத்தை வாதியின் கணவர் பிரித்துப் படித்தார். எதிர்வாதி, வாதியின் கணவர் அக்கடிதத்தை பிரித்துப் படிக்கக்கூடும் என்பதை நியாயமாக முன்னறிந்திருக்க முடியும் என்பதால், எதிர்வாதி அவதூறுத் தீங்கு புரிந்துள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

37. அவதூறாக அச்சிடப்பட்ட ஓர் வெளியீடு எதிர்வாதியின் சுவற்றின்மீது அனுமதியின்றி ஓர் வெளிநபரால் ஒட்டப்பட்டிருந்தது. அதனை அகற்ற வேண்டிய கடமை எதிர்வாதிக்கு ஏதேனும் உண்டா? அவ்வாறு வெளியிட்டமைக்கு எதிர்வாதியும் பொறுப்பாவார் என அனுமானிக்க இயலுமா?

தீர்வு: எதிர்வாதி அவதூறாக அச்சிடப்பட்ட வெளியீட்டை அகற்றுவதற்கு கடமை கொண்டுள்ளார் !

விளக்கம்: வெளிநபரால் ஒட்டப்பட்டிருந்த அவதூறு அடங்கிய வெளியீட்டை அகற்றுவதற்கு கணிசமாக செலவு செய்ய வேண்டியதாகவும், கால அவகாசம் தேவைப்படுவதாக இருந்தாலே ஒழிய, எதிர்வாதி அதனை அகற்ற கடமை கொண்டுள்ளார். இல்லையேல், எதிர்வாதி தனது இடத்தை, வாதியைப் பற்றிய அவதூறான பொருண்மைகளை வெளியீடு செய்வதற்கு இடம் அளித்ததாக ஆகிவிடும் என்பதுடன், அவதூறுக் கூற்றினை வெளியீடு செய்த தரப்பினில் ஒருவராகக் கருதப்படுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Byrne Vs Deane, (1937) 1 KB 818., இவ்வழக்கில் தட்டச்சு செய்யப்பட்ட அவதூறுக்கூற்று அடங்கிய நகல் ஒன்று பிரதிவாதியின் சுவற்றின்மீது ஒட்டப்பட்டிருந்தால், அதனை அகற்றுவதற்கு கணிசமான செலவு மற்றும் காலதாமதம் உள்ளாகும் என்றிருந்தாலே தவிர, மற்ற நேர்வுகளில் அதனை அகற்றுவதற்கு கடமை கொண்டுள்ளார். இல்லையேல் அத்தகைய வெளியீட்டின் ஓர் தரப்பினராக அவர் கருதப்படுவார் என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

---

38. 'அ', 'ஆ'-வைப் பற்றிய அவதூறான செய்திகளை ஒலி நாடா ஒன்றில் பதிவு செய்திருந்தார். 'ஆ' அது நிலை வடிவ அவதூறென வாதிட்டார். 'அ' அஃது வாய்மொழி அவதூறென வாதிட்டார். அதனை எவ்வாறு முடிவு செய்வீர்கள்?

தீர்வு: ஒலி நாடாவில் பதிவு செய்துள்ள அவதூறுக் கூற்று நிலை வடிவ அவதூறேயாகும் !

விளக்கம்: ஒலி நாடாவில் பதிவு செய்யப்படும் அவதூறுக் கூற்று நிலை வடிவ அவதூறா அல்லது வாய்மொழி அவதூறா என்பதில் முன்பு இரு கருத்துகள் இருந்தது. மேலும் இது தொடர்பாக நீதிமன்றம் முடிவு செய்த தீர்ப்புகளும் இல்லாமல் இருந்தது. ஒலி நாடா நிரந்தர வடிவத்தில் இருப்பதால், பிற அச்சிடப்பட்ட பொருண்மைகளைப்போன்று எவரின் குரலில் பதிவு செய்யப்பட்டதோ, அது பதிவு செய்யப்படும் நேரத்தில் வாய்மொழி அவதூறாக இருந்தாலும்கூட அத்தகைய நபரும், ஒலிநாடாவை தயாரித்தவரும் நிலை வடிவ அவதூறுக்கான பகரப் பொறுப்பைக் கொண்டுள்ளதாக ஒரு சாரார் கருத்து தெரிவித்தனர். மற்றொரு பிரிவினர், அது நிரந்தர வடிவத்தில் இருந்தாலும்கூட அவதூறுக் கூற்றடங்கிய ஒலிநாடாவை, அதற்கான இயந்திரத்தில் பொருத்தி அதனைப் பயன்படுத்தும்வரை அதனை எவருக்கும் சேர்ப்பிக்க முடியாத வாய்மொழி அவதூறை உள்ளார்ந்து கொண்டிருப்பதாக் குறிப்பிட்டனர். இவ்விரண்டு கருத்துகளுக்கு இங்கிலாந்தில் 1952-ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின்மூலம் ஓர் அறுதியான முடிவு எட்டப்பட்டது. இச்சட்டம், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின்மூலம் ஒலி மற்றும் ஒலி மற்றும் ஒளியுடன் பரப்பப்படும் சொற்கள் ஓர் நிரந்தர வடிவத்தில் வெளியீடு செய்யப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டது. எனவே 'ஆ' என்பவரால் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட அவதூறுக் கூற்று ஓர் நிலை வடிவ அவதூறேயாகும்.

---

39. 'அ' என்னும் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்றத்தில் உரை நிகழ்த்தும்போது குடிஞர் ஒருவரை கடத்தல்காரர் எனக் கூறினார். 'அ'-விற்கு எதிராக குடிஞருக்கு உள்ள உரிமையை விவாதிக்கவும்.

முடிவு : குடிஞர் 'அ'-விற்கு எதிராக நடவடிக்கை எதனையும் மேற்கொண்டிட உரிமை கொண்டிருக்கவில்லை.

விளக்கம்: வினா எண் 44-க்கான விடையில் 'பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகள்' எனும் குறுந்தலைப்பின்கீழ் காண்க. பக்கம் எண் 212).

---

40. 'X' என்பவர் திரு.'Z' என்பவர்மீது மிகவும் நேர்மையானவர், அவர் ஒருபோதும் என்னுடைய கை கடிகாரத்தை திருடவில்லை எனக் கூறுகிறார். இந்தக்கூற்று அவதூறு ஆகுமா என தீர்மானிக்கவும்.

தீர்வு: 'X' என்பவர் மறைமுக அவதூறுத் தீங்கு புரிந்துள்ளார் !

விளக்கம்: (குறுவினா எண் 63, பக்கம் எண் 217-ல் காண்க).

கவனமின்மை

41. பிரதிவாதியால் சாலை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த காரினுள் இருந்த சாந்தமான நாயொன்று, வாதி காரைக் கடந்து செல்லும்போது குரைத்தது மற்றும் குதித்தது. இதனால் கார் கண்ணாடி உடைந்ததில் வாதியின் கண்ணில் சிறு கண்ணாடித்துண்டு பாய்ந்தது. அதனை உடனே அகற்றியாக வேண்டும். வாதி சார்பில் வாதிடுக.

சட்டநிலை: வினாவில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக கவனமின்மைத் தீங்கிற்காக மட்டுமே வழக்கிட முடியும். ஓர் நபருக்கு எதிராக கவனமின்மைத் தீங்கு புரிந்துள்ளார் என்பதை மெய்ப்பிப்பதற்கு சட்டம் சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டுள்ளது. அதாவது, பிரதிவாதி, வாதியின் பால் கவனமுடன் இருக்க வேண்டிய சட்டக்கடமையை கொண்டிருக்க வேண்டும். ஊறு முன்னறியத்தக்கதாக இருக்க வேண்டும். ஊறு முன்னறியத்தக்க முடியாததாக இருப்பின் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார். மேலும் முன்னறியத்தக்கது என்பது நியாயமாக முன்னறியத்தக்கதைக் குறிக்குமே தவிர கற்பனையான மற்றும் தொடர்பற்ற விளைவுகளைக் குறிக்காது. வினாவில் எதிர்வாதி கவனக்குறைவு ஏதுமின்றி செயல்பட்டுள்ளது தெரியவருகிறது. காரினுள் உள்ள நாய் கண்ணாடியை உடைத்துக் கொண்டு குதிக்கும் என்பதையோ அல்லது உடைந்த கண்ணாடியின் ஒரு துண்டு சாலையில் செல்பவர் ஒருவரின் கண்ணில் படும் என்பதையோ எவரொருவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இவற்றினை எல்லாம்மீறி வழக்கிட்டாலும், வாதி தவிர்க்க இயலா விபத்து என்னும் எதிர்வாதத்தை வெற்றிக்கரமாக பயன்படுத்த முடியும். சட்டத்தின் இத்தகைய நிலையை வாதியிடம் எடுத்துக் கூறுவேன்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Fardon Vs Harcourt Ravington, (பக்கம் எண் 243-ல் காண்க).

---

42. மாநகராட்சி ஒரு பொது பூங்காவை கண்காணித்து வந்தது. ஒரு ஏழு வயதுச் சிறுவன் அப்பூங்காவில் உள்ள புதர்ச்செடி ஒன்றிலிருந்து கவரக்கூடிய நச்சுப்பழங்களை பறித்துத்தின்று இறந்தான். சிறுவனின் தந்தை தன் குழந்தையின் இறப்பிற்கு மாநகராட்சி மீது வழக்கிட்டார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு: சிறுவனின் தந்தை வெற்றி பெறுவார் !

விளக்கம்: பொதுப்பூங்கா என்பது அனைத்து வயதினரும் வருகை புரியக்கூடிய ஓர் இடமாகும். எனவே மாநகராட்சி அதை உரிய கவனத்துடன் பராமரிக்க வேண்டிய கடமையை கொண்டுள்ளது. குறிப்பாக, புதர்ச்செடியில் இருக்கும் பழம் நச்சுத்தன்மை கொண்டதாக இருப்பதாலும், சிறுவர்கள் அதன் கவர்ச்சியால் ஈர்க்கப்படுவர் என்பது நியாயமாக எதிர்பார்க்கக்கூடியதாக இருப்பதாலும் மாநகராட்சி

கூடுதல் கவனம் காட்டும் கடமையைக் கொண்டுள்ளது. மாநகராட்சி, இத்தகைய கவனம் காட்டும் கடமையில் இருந்து தவறியிருப்பதால் இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளது.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Glasgow Corporation Vs Taylor, (பக்கம் எண் 245-ல் காண்க).

---

43. 'A' என்பவர் தனது குதிரை வண்டியை ஒரு சாலையில் விட்டுச் சென்றார். அதனுடன் சில சிறுவர்கள் விளையாட ஆரம்பித்தனர். இதில் 'B' ஒரு சிறுவன் வண்டியில் ஏறிட வேறொரு சிறுவன் குதிரையை விரட்டி விட்டான். அதனால் வண்டியிலிருந்த 'B'-க்கு காயம் ஏற்பட்டது. இதற்கு 'B' இழப்பீடு கோரினார். 'A'-னுடைய பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு: 'B'-க்கு ஏற்பட்ட காயத்திற்கு 'A' பொறுப்பாவார் !

விளக்கம்: (வினா எண் 59-க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க. பக்கம் எண் 267, 268).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Lynch Vs Nurdin, (பக்கம் எண் 268-ல் காண்க).

---

44. 'Y' சாலையின் குறுக்காக நீண்ட இரும்புக் கம்பி ஒன்றை தவறான முறையில் வைத்து தடை செய்கிறார். 'Z' தனது மகிழுந்தில் மிக வேகமாக வந்து இரும்புக்கம்பியில் மோதி காயமுற்றார். 125 அடி தூரத்தில் வரும்போதே அந்த நீண்ட இரும்புக்கம்பி தெளிவாகத் தெரிந்தது. இந்நேர்வில் 'Y' ஏதேனும் தீங்கிழைத்துள்ளாரா?

தீர்வு: 'Y'-ன் தரப்பில் தவறு இருந்தாலும்கூட 'Z' சிறிது கவனத்தைக் காட்டியிருந்தால், விபத்தை தவிர்த்திருக்க முடியும் என்பதால், 'Z'-க்கு ஏற்பட்ட காயத்திற்கு பொறுப்பாகமாட்டார் !

விளக்கம்: வினாவில் 'Y' சாலையின் குறுக்கே நீண்ட இரும்புக் கம்பியை வைத்து தவறான முறையில் தடையை ஏற்படுத்தி இருந்தாலும், அத்தடை 125 அடி தூரத்தில் வரும்போதே தெளிவாக தெரியுமாறு இருந்ததால், 'Z' சாதாரண கவனத்தை செலுத்தியிருந்தாலும்கூட விபத்தை தவிர்த்திருக்க முடியும். எனவே ஒரு நபர், தன் தரப்பில் சாதாரண கவனத்தை செலுத்தாமல் பிறர்மீது குறை கூறுவதை சட்டம் அனுமதிக்காது.

பொருண்மைக்கேற்ற வழக்கு: (Butterfield Vs Forrester, பக்கம் எண் 260-ல் காண்க).

---

45. 'இராமன்' என்பவர் தன்னுடைய கழுதையின் முன்னங்கால்களை பிணைத்து ஒரு குறுகலான தெருவில் கவனமின்மையுடன் விட்டுச் செல்கிறார். 'நரேஷ்' தன்னுடைய வாகனத்தில் அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் வந்து இராமனின் கழுதையின்மீது மோதிச் செல்கிறார். இராமன் தீர்வழி பெற தகுதி உடையவரா?

தீர்வு: இராமன் இழப்பீடு பெறத் தகுதியுடையவரே !

விளக்கம்: வினாவில் இராமன் அவரின் கழுதையை முன்னங் கால்களை பிணைத்து குறுகலான தெருவில் விட்டுச் சென்றிருப்பது அவரின் கவனக்குறைவை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், குறுகலான சாலையில் வாகனத்தில் வந்த நரேஷ் வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்ததாலேயே கழுதையின்மீது மோதியுள்ளார் என்பது உறுதியாகிறது. குறுகலான சாலை என்பதால், நரேஷ் குறைவான வேகத்தில் கவனமுடன் வாகனத்தை ஓட்டியிருந்தால் கழுதையின்மீது மோதுவதை தவிர்த்திருக்கலாம். எனவே விபத்தை தவிர்ப்பதற்கான இறுதி வாய்ப்பு நரேஷுக்கே இருந்தது என்பதால், அவர் பொறுப்பாவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Davies Vs Mann, (பக்கம் எண் 262-ல் காண்க).

---

46. 'அ' என்பவரின் உடைமையில் இருக்கும் கட்டிடத்தின் சன்னல் வழியாக ஒரு பெரிய கோதுமை மாவு டின் கீழே விழுந்தது. 'ஆ' என்னும் வழிப்போக்கர் இதனால் காயமுற்றார். 'அ'-வின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு: 'ஆ'-விற்கு ஏற்பட்ட காயத்திற்கு 'அ' பொறுப்பாவார் !

விளக்கம்: வினாவில் கோதுமை மாவு டின் 'அ'-வின் உடைமையில் இருக்கும் கட்டிடத்தின் சன்னல் வழியாக விழுந்தது என்பது, 'ஆ'-விற்கு ஏற்பட்ட காயத்திற்கு 'அ' -வின் கவனமின்மையே முதற் தோற்றக் காரணமாக இருப்பது தெரியவருகிறது. ஒருவேளை கோதுமை மாவு டின்னை கீழிறக்குவதற்காக அதனை உருட்டித் தள்ளியிருந்தாலும், சாலையைக் கடப்பவர்களை கவனித்து அவ்வாறு செய்திருக்க வேண்டும். பிறர்மேல் கொண்டிருக்கும் இத்தகைய சட்டக்கடமை மீறப்பட்டிருப்பதால் 'அ' பொறுப்பாகுவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Byrne Vs Boadle, (1863) 2 HVE 722; இவ்வழக்கில், வாதி சட்டப்படியாக சாலையைக் கடந்து பிரதிவாதியின் கடைக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது, இரண்டாவது தளத்தில் இருந்த சன்னல் வழியாக, ஓர் பெரிய கோதுமை மாவு டின் உருண்டு கீழே விழுந்ததில் காயமடைந்தார். வாதிக்கு கோதுமை மாவு டின் உருண்டு விழுந்தது மட்டுமே தெரியும். அதன்பின்னர் ஏற்பட்ட மயக்கத்தினால் மேற்கொண்டு எதனையும் அறிந்திருக்கவில்லை. பிரதிவாதி, கோதுமை மாவு டின்களை இரண்டாவது தளத்திலிருந்த கிடங்கில் வைத்திருந்ததால், செயலே செப்பும் பொருளே புகலும் என்பதன் அடிப்படையில் நீதிமன்றம் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு, முதற் தோற்றத்திலேயே பிரதிவாதியின் கவனமின்மையை வெளிப்படுத்துகிறது என்றும் எனவே அவர் பொறுப்பாகுவார் என்றும் தீர்ப்பளித்தது.

---

47. 'X' என்பவர் 'Y' என்பவரைப் பற்றி கூறுகையில், 'Y'-எய்ட்ஸ் என்னும் உயிரிக்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்' என்று கூறினார். 'X'-ன் பொறுப்பு நிலை யாது?

தீர்வு: 'X' எந்தவொரு பொறுப்பு நிலையும் கொண்டிருக்கவில்லை !

விளக்கம்: 'X' என்பவர் ஓர் மருத்துவராக இருந்தாலும் அல்லது 'Y'-ன் நண்பராக இருந்தாலும், 'Y'-ன் உண்மையான நிலையை எடுத்துக்கூறியதன் மூலம்

தகைமை நெறியின் கீழோ அல்லது கவனமின்மை என்பதன் அடிப்படையிலோ தீங்கு ஏதும் புரியவில்லை. ஒரு நபர் எய்ட்ஸ் நோய்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவராக இருந்தாலும் அல்லது எய்ட்ஸ் நோயாளியின் நண்பராக இருந்தாலும், அவர் பொருட்டு பிறர் எச்சரிக்கையுடன் இருக்கும் பொது நலனுக்காக அதாவது பிறர் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் எனும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவரின் நோயைக் குறித்து வெளிப்படுத்துவது தீங்காகாது. ஆனால், இங்கு 'Y' என்பவர் உண்மையாகவே எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். இல்லையேல் 'Y' என்பவர் 'X'-க்கு எதிராக அவதூறுத் தீங்கு புரிந்ததற்காக வழக்கிட முடியும்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Dr. Tokugha Vs Apollo Hospital Enterprises Ltd., AIR 1999 SC 495., இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரான மருத்துவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் உண்மையை, எதிர்மனுதாரரான அப்போலோ மருத்துவமனை நிருவாகம், மருத்துவரை திருமணம் செய்யவிருந்த பெண்ணிடம் வெளிப்படுத்தியது. இதன்பொருட்டு மருத்துவர், மருத்துவமனை நிருவாகம் தொழில்முறையிலான நடத்தையை மீறிவிட்டது என்றும், தனது திருமணம் நின்று போனதற்கு இழப்பீடு வழங்கக் கோரியும் வழக்கிட்டார். உச்சநீதிமன்றம், தனிமைக்கான உரிமை அல்லது அந்தரங்க உரிமை ஓர் கட்டுப்படுத்தப்படாத முழுமையான உரிமை அல்ல என்றும் இரகசியத்தை பாதுகாப்பதற்கும் சில விதிவிலக்குகள் உள்ளது என்றும் குறிப்பாக, மற்றொருவரின் வாழ்வுரிமையை மீறுவதாக இருக்கும்போது வெளிப்படுத்தியது தீங்காகாது என்று தீர்ப்பளித்தது.

---

48. 'அ' மற்றும் அவரது கணவர் 'ஆ', 'இ' எனும் வழித்தங்கல் மனையில் ஒரு அறையை எடுத்து தங்கினர். 'அ' தனது வைர மோதிரத்தை நகைப்பெட்டியில் வைத்து தனது சூட்கேஸில் வைத்தார். சூட்கேஸை மூடினார் ஆனால் பூட்டவில்லை. அவர்கள் இருவரும் இரவு உணவுக்கு செல்லும்போது 'ஆ' அறையைப் பூட்டி சாவியை எடுத்துச் சென்றார். இரவு உணவிற்குப் பின் அறைக்கு வந்த இருவரும், நடன நிகழ்ச்சிக்கு செல்ல முடிவு செய்து அறையைப் பூட்டி ஓட்டல் அலுவலகத்தில் சாவியை கொடுத்துவிட்டுச் சென்றார்கள். இரவு நேரம் கழித்து வந்த இருவரும் சாவியை அந்த கூடத்தின் பணியாளரிடமிருந்து பெற்றனர். மறுநாள் காலை 'அ' தனது சூட்கேஸை திறந்து அதிலிருந்து நகைப்பெட்டியை திறந்து பார்த்தபோது மோதிரம் இல்லாதிருந்தது. அறையில் இருந்த அறிவிப்பில், வெளியே செல்லும்போது அனைத்து விலைமதிப்புள்ள பொருட்களை வழித்தங்கல் மனை அலுவலகத்தில் ஒப்படைத்து செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. 'அ' என்பவருக்கு தகுந்த அறிவுரை வழங்கவும்.

அறிவுரை: இயற்றாச் சட்டத்தில், விடுதிக் காப்பாளர்கள், விடுதியில் தங்குபவர்களின் பொருள்களுக்கு உரிய முறையில் பாதுகாப்பு அளிக்கும் கடமைகைக் கொண்டுள்ளார்கள் என்பது நன்கு நிலை நிறுத்தப்பட்டதாகும். எ-டு: Rex Vs Evans, (1835) 7 C&P 213. எனவே அறையில் இருந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தவாறு 'அ' தனது வைர மோதிரத்தை விடுதி அலுவலகத்தில் ஒப்படைக்காததன் காரணமாகவே, அச்செயல் 'இ' எனும் விடுதியின் உரிமையாளரை பொறுப்பிலிருந்து விடுவிக்காது. இப்பொருண்மைகளை 'அ' என்பவருக்கு எடுத்துரைத்து, விடுதி உரிமையாளர் மற்றும்

காப்பாளரின் கடமை தவறியமைக்காக அவர்களுக்கெதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடருமாறு அறிவுறுத்துவேன்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Carpenter Vs Haymarket Hotel Ltd., (1931) 1 KB 364., இவ்வழக்கில் வாதியும் அவரது கணவரும் வழித்தங்கல் மனையில் ஓர் அறை எடுத்து தங்கினர். அறையில் இருந்த அறிவிப்பில், அறையில் தங்குவோர் வெளியே செல்லும்போது அனைத்து விலை மதிப்புள்ள பொருள்களையும் அலுவலகத்தில் ஒப்படைத்து இரசீது பெற்றுச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. வாதி தனது வைர மோதிரத்தை நகைப்பெட்டியில் வைத்து அதனை கூட்கேஸில் வைத்தாரே தவிர அதனைப் பூட்டவில்லை. வாதி அவரது கணவருடன் இரவு உணவுக்குச் செல்லும்போது, வாதியின் கணவர் அறையைப் பூட்டி சாவியை எடுத்துச் சென்றார். இரவு உணவிற்குப் பின் நடன நிகழ்ச்சிக்கு செல்வதற்காக அறையைப்பூட்டி சாவியை விடுதியின் அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். இரவு நெடுநேரம் கழித்து, விடுதி அலுவலகத்தில் சாவியைப் பெற்றனர். மறுநாள் காலை, வாதி தனது கூட்கேஸை திறந்து பார்த்தபோது நகைப்பெட்டியில் வைத்திருந்த வைர மோதிரம் இல்லாமல் இருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்தார். இது தொடர்பாக வாதி தொடர்ந்த வழக்கில், அறையினுள் இருந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தவாறு வாதி நடந்து கொள்ளவில்லை என்பது மட்டுமே, விடுதிக்காப்பாளரை பொறுப்பில் இருந்து விடுவிக்காது என்றும் விடுதிக்காப்பாளர் வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பாவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

---

49. தன் கணவன் தனக்கு எதிராக தாம்பத்திய உறவு உரிமைகள் மீட்டளிப்புக்காக தொடுத்துள்ள வழக்கை மறுதலிக்க சத்யா ஒரு வழக்குரைஞரை நியமக்கிறார். வழக்கு கேட்புக்கு எடுத்துக் கொண்ட நாளில் வழக்குரைஞர் நீதிமன்றத்திற்கு வருகை தரவில்லை. இதனால் சத்யா வழக்குரைஞருக்கு எதிராக தீங்கீடு கோரி வழக்குத் தொடர்ந்தார். முடிவு செய்க.

தீர்வு: சத்யா வெற்றி பெற்றார் !

விளக்கம்: இந்தியாவில், 1926-ஆம் ஆண்டின் வழக்கரைஞர்கள் (கட்டணங்கள்) சட்டத்தின் பிரிவு-5, வழக்குரைஞராக செயல்படுபவர்கள் அல்லது வழக்குரைஞராக செயல்பட ஒப்புக்கொண்டவர்கள், வழக்குரைஞர் என்பதால் மட்டுமே, தங்களின் தொழில்முறைக் கடமையை மேற்கொள்வதில் செய்யும் கவனக்குறைவினால் ஏற்படும் ஊறு, இழப்புகளில் இருந்து விலக்கு பெற மாட்டார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது. வழக்கு கேட்புத் தேதியன்று, வழக்குரைஞர் நீதிமன்றத்திற்கு வராதது அவரின் கவனக்குறைவை வெளிப்படுத்துவதால், சத்யாவிற்கு ஏற்பட்ட இழப்பிற்கு வழக்குரைஞர் பொறுப்பாவார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Cook Vs S, (1966) 1 All ER 248; இவ்வழக்கில், வாதியான பெண்மணி, தனது கணவர் தனக்கெதிராக விவாகரத்து வழக்கிட்டதை எதிர்த்து வழக்காட வழக்குரைஞர் ஒருவரை நியமித்திருந்தார். வழக்குரைஞரிடம் அது குறித்து விவரங்களை எடுத்துக்கூறி, தன் தரப்புக்கு ஆதரவாக இருந்த கணவர் எழுதிய கடிதங்கள் உட்பட அனைத்து ஆவணங்களையும் அளித்திருந்தார். வாதி வழக்குரைஞரிடம் அளித்த ஆவணங்கள், அவரின் கணவன்

பிறன் மனை புணர்தல் (adultery) குற்றத்தினை சந்தேகமின்றி மெய்ப்பிக்ககூடியதாக இருந்தது. ஆனால் வழக்கின் கேட்புத் தேதியன்று, வாதியின் வழக்குரைஞர் நீதிமன்றத்திற்கு வராததால், வாதிக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பாணையை பிறப்பித்தது. இது தொடர்பாக, வாதி வழக்குரைஞருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், வாதி தனக்காகவும், அவரின் மகனுக்காகவும் குறிப்பிட்ட வீதத்தில் எதிர்கால பராமரிப்புக்கான ஆணையை பெற்றுத்தர தவறியதற்கான தீங்கீட்டினை பெறுவதை அனுமதித்தது.

---

50. கண்ணன் என்பவர் ஒரு கூந்தல் சாய நீர்மத்தை (hair-dye) ஆபிரஹாம் என்பவருக்கு விற்பனை செய்தார். ஆபிரஹாமின் மனைவி மரியா அதனைப் பயன்படுத்தியதால் தோல் நோய் ஏற்பட்டு அவதியுற்றார். இதற்கு கண்ணன் பொறுப்பாவாரா?

தீர்வு: சாய நீர்மத்தை தயாரித்தவர் பொறுப்பாகுவார் !

விளக்கம்: ஓர் பொருளை உற்பத்தி செய்வோர், அப்பொருள் எந்தவித மாற்றமும் இல்லாமல், இடைநிலை சோதனைக்கு உட்படுத்தப்படாமல் அதே வடிவத்தில் நுகர்பவருக்கு இறுதியாக சென்றடைய வேண்டும் எனக் கருதுபவர், அப்பொருளை தயாரிப்பதில் தக்க கவனம் காட்ட கடமை கொண்டுள்ளார். இல்லையேல் அப்பொருளை இறுதியாக நுகர்பவருக்கு ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் அவரே பொறுப்பாகுவார். தீங்கியல் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோருவதற்கு பொருளை உற்பத்தி செய்தவருக்கு அதை இறுதியாக பயன்படுத்தும் நபருக்கும் இடையே நேரடியான ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல.

பொருண்மைக்கேற்ற வழக்கு: **Donoghue Vs Stevenson** (பக்கம் எண் 242-ல் காண்க).

ஆபத்தான கட்டிடங்களினால் ஏற்படும் பொறுப்புநிலை

51. 'ஆ' என்பவர் தனி ஒப்பந்தக்காரர் ஒருவரை குதிரை ஓட்டப் பந்தயம் பார்ப்பதற்காக உயர்மேடை அமைக்க பணி அமர்த்தினார். 'ஆ' காட்சி நுழைவுக் கட்டணமாக ஒவ்வொருவரிடமும் ரூபாய் 100 வசூலித்தார். நுழைவு அனுமதி சீட்டுப் பெற்று காட்சி மேடைக்குச் சென்ற 'அ' காட்சி மேடை இடிந்ததால் காயமுற்றார். 'அ', 'ஆ'-வின்மீது இழப்பீடு வழக்கு தொடர்கிறார். விவாதி.

தீர்வு: 'அ' வெற்றி பெறுவார் !

விளக்கம்: ஒரு கட்டிடம் அல்லது அரங்கம் அல்லது விளையாட்டைக் காண்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மேடை ஆகியவற்றினுள் அனுமதி பெற்று நுழைவோர் பொறுத்த பொதுவான விதி என்னவெனில் அத்தகைய இடம் பயன்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப கவனமுடனும் திறமையுடனும் கட்டப்பட்டது அல்லது அமைக்கப்பட்டது எனும் உட்கிடையான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதாகும். எனவே வினாவில் குறிப்பிட்டுள்ள 'அ' என்பவர் ஓர் தனி ஒப்பந்ததாரரைக் கொண்டு உயர்மேடை அமைத்துள்ளார் என்பது மட்டுமே அவரை பொறுப்பு நிலையில் இருந்து விடுவிக்காது. மேலும் 'ஆ' என்பவர் தனி ஒப்பந்ததாரை

தேர்வு செய்வதில்கூட தவறு செய்திருக்கலாம் அல்லது கவனக்குறைவாக இருந்திருக்கலாம். 'அ' என்பவர் பந்தயக் காட்சியைக் காண்பதற்காக நூறு ரூபாய் கொடுத்து சீட்டு பெறுவதும், பந்தயத்தைக் காணும் நோக்கத்திற்கு உயர்மேடை பாதுகாப்பானது என 'ஆ' உறுதி அளிப்பதாகவும் ஆக அவர்களுக்கு இடையே ஓர் உட்கிடையான ஒப்பந்தம் இருப்பதாக சட்டம் கருதுகிறது. எனவே மேடை இடிந்து விழுந்ததன் காரணமாக, 'ஆ' என்பவர் ஒப்பந்த மீறுகை புரிந்துள்ளதாக அமைவதால் 'அ'-விற்கு இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Francis Vs cockerell, (1870) LR 5 QB 501; இவ்வழக்கில், வாதி கட்டணத்தைச் செலுத்தி உயர்மேடையினுள் நுழைந்தார். அம்மேடை இடிந்ததால் வாதி காயமுற்றார். பிரதிவாதி, ஓர் தனி ஒப்பந்ததாரரிடம் உயர்மேடை அமைக்கும் பணியை ஒப்படைத்திருந்தார். இது தொடர்பாக வாதி பிரதிவாதிக்கு எதிராக இழப்பீடு கோரி தொடர்ந்த வழக்கில், உயர்மேடை முழுமையான பாதுகாப்புடையது என்பதற்கு எவ்வித உத்தரவாதமோ அல்லது காப்பீடோ அளிக்கப்படவில்லை என்றாலும்கூட, பிரதிவாதியின் தரப்பில் அம்மேடையை அமைப்பதில் உரிய கவனம் காட்டப்பட்டுள்ளது எனும் உட்கிடையான ஒப்புறுதி செய்துள்ளார் (undertaking) என்றும் எனவே பிரதிவாதி பொறுப்பாவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

---

52. எதிர்வாதிகளின் அழைப்பை ஏற்றுக் கொண்டு வாதி கேஸ் பிட்டர், அவர்களது கட்டிடத்தில் கனல் இணைப்புகளை பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டார். அப்போது மேல் தளத்தில் மூடப்படாத பெரிய துவாரம் வழியாக கீழே விழுந்து காயமுற்றார். அவர் தீங்கீடு கேட்டு வழக்கு தொடர்ந்தார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு: வாதி வெற்றி பெறுவார் !

விளக்கம்: (வினா எண் 74-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அழைக்கப்பட்டவர் குறித்த பொறுப்பு நிலை' என்பதன்கீழ் காண்க. பக்கம் எண் 334)

பொருண்மைக்கேற்ற வழக்கு: Indermaur Vs Dames (பக்கம் எண் 334-ல் காண்க)

---

53. புகைவண்டி மூலம் வரும் தன் மகளை சந்திக்கும் பொருட்டு 'அ' என்பவர் புகைவண்டி நிலையத்தினுள் சென்றார். ஒவ்வொரு பெட்டியாக தன் மகளை தேடிக் கொண்டு நடைமேடைமீது நடந்து வரும்பொழுது எண்ணெய் படிந்த தரையின் மேல் கால் வைத்து நிலை தவறி கீழே விழுந்து காயமுற்றார். புகைவண்டி நிர்வாகத்தின்மீது கவனமின்மைக்காக 'அ' வழக்கு தொடர்ந்தார். முடிவு செய்க.

தீர்வு: 'அ' வழக்கில் வெற்றி பெறுவார் !

விளக்கம்: (வினா எண் 74-க்கான விடையில் 'இரயில்வே பயணிகள் குறித்த கடமை' எனும் குறுந்தலைப்பின்கீழ் காண்க. பக்கம் எண் 335).

பொருண்மைக்கேற்ற வழக்கு: Stowell Vs Railway Executive (பக்கம் எண் 335-ல் காண்க).

---

54. 60 வயதான வாதியின் கணவர் இருப்புப்பாதையை கடக்கும் பொழுது வேகமாக சென்ற புகைவண்டி இயந்திரத்தில் அடிபட்டு அதிர்ச்சியால் உடனடியாக இறந்தார். அவர் பருவகால பயணச்சீட்டு உடையவர். அதை புதுப்பிக்கும் பொருட்டு சென்று கொண்டிருந்தார். இரயில்வே துறையின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு: இரயில்வே துறை இழப்பீடு வழங்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கவில்லை !

விளக்கம்: 'வாதி இருப்புப்பாதையை கடக்கும்பொழுது' என வினாவில் குறிப்பிட்டு உள்ளதில் இருந்து, அது ஆளில்லாத ரயில்வே கடவுப்பாதை அல்ல என்பது தெரிய வருகிறது. இரயில்வே நிறுவனத்தின் இருப்புப்பாதையை அதற்கென அமைக்கப்பட்டுள்ள இடத்தில் கடவுப்பாதையின் வழியே கடக்க வேண்டும் இல்லையேல் அத்துமீறல் தீங்கு புரிந்ததாகிவிடும். பயணச்சீட்டை புதுப்பிப்பது என்பது இங்கு முக்கியத்துவம் பெறாது. எனவே வாதி இரயில்வே நிறுவனத்திற்கு எதிராக அத்தமீறலாக அமையாத மாற்று வழியைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஏனெனில் அத்துமீறல் புரிந்தவருக்கு எதிராக இரயில்வேதுறை பொறுப்பு ஏதும் கொண்டிருக்கவில்லை.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Mokshada S.Ghose Vs Union of India, AIR 1971 Cal 480; இவ்வழக்கில் 60 வயதான வாதி, பருவகால பயணச்சீட்டை புதுப்பிப்பதற்காக, கடவுப்பாதை (level crossing) வழியாக செல்லாமல், குறுக்கு வழியில் செல்வதற்காக இருப்புப்பாதையை கடக்கும்பொழுது, வேகமாகச் சென்ற புகைவண்டியால் மோதப்பட்டு கீழே விழுந்து இறந்தார். நீதிமன்றம், வாதி கடவுப்பாதையை பயன்படுத்தாமல், இருப்புப்பாதையைக் கடந்து குறுக்கு வழியில் செல்வதற்கு முயன்றதால் அத்துமீறல் தீங்கு புரிந்துள்ளார் என்றும் எனவே இரயில்வே நிருவாகம் அத்துமீறியவருக்கு எதிராக எவ்வித பொறுப்பு நிலையும் கொண்டிருக்கவில்லை என்றும் தீர்ப்பளித்தது.

தொல்லை

55. சிவா என்பவர் கீழ் தளத்திலிருந்து காகிதப் பெட்டிகளை தயாரித்து வந்தார். சிவாவின் அறைக்கு நேர் மேலே, முதல் தளத்தில் கேசவ் மென்மையான காகிதங்களைப் பேணி வைத்திருந்தார். சிவா தனது தயாரிப்புப் பணியில் தொடர்ந்து வெப்பமூட்டுவதிலும் குளிரூட்டுவதிலும் ஈடுபட்டிருந்தார். அந்த வெப்பத்தினால் கேசவ் என்பவரது காகிதங்கள் சேதமாயின. சிவா மீது கேசவ் வழக்கிடுகிறார். சிவாவின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு: கேவவ்-ற்கு ஏற்பட்ட இழப்பிற்கு சிவா பொறுப்பாகமாட்டார் !

விளக்கம்: ஒவ்வொரு நபரும் சட்டத்திற்குட்பட்ட தொழிலை தங்களின் உடைமையில் இருக்கும் இடத்தில் பிறருக்கு தொல்லை அளிக்காத முறையில் மேற்கொள்ள உரிமை கொண்டுள்ளனர். இத்தகைய உரிமையை ஒருவர் செயல்படுத்தும்போது மற்றொரு நபருக்கு ஏற்படும் அசாதாரண விளைவுகளுக்கு அவர் பொறுப்பாகமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Robinson Vs Kilvert, (பக்கம் எண் 286-ல் காண்க).

56. 'அ' என்பவர் தனது நிலத்தின் சில மரங்களை நட்டார். ஆனால் அவற்றின் வேர்களும் கிளைகளும் 'ஆ' என்ற அண்டை நிலத்தாரின் நிலத்தினுள் நுழைந்தன மற்றும் தொங்கின. 'ஆ'-விற்கு ஏதேனும் தீர்வழி உண்டா?

தீர்வு: 'ஆ' தன் எல்லைக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் மரத்தின் பாகங்களை அகற்றும் தீர்வழியைக் கொண்டுள்ளார் !

விளக்கம்: தனிப்பட்ட நபர்கள் தொல்லையை அகற்றும் தீர்வழியை செயல்படுத்துவதை சட்டம் அனுமதிக்காது. இருப்பினும், அமைதியான முறையில், உடலுக்கு, உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்படாமலும், மற்றொருவரின் நிலத்தினில் நுழையாமலும் தொல்லையை அகற்றுவதை சட்டம் தடுக்காது. இத்தகைய தீர்வழியை இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுத்த முடியும். முதலாவதாக, வெட்டப்பட்ட வேரின் பகுதிகள், கிளைகள் மற்றும் அக்கிளைகளில் இருந்த காய். கனிகளை மரத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் இனமாற்றம் தீங்கு புரிந்ததாகிவிடும். இரண்டாவதாக, ஒரு நபர் தாமே தொல்லையை அகற்றும் செயலில் ஈடுபட்டால், அதன்பின் அத்தொல்லை பொறுத்து வழக்கிட முடியாது. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 'ஆ' தானே தொல்லையை அகற்றும் தீர்வழியை செயல்படுத்தலாம்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: S.K.Batcha Vs Alagappan Servai (பக்கம் எண் 301-ல் காண்க).

ஆபத்தான பொருள்கள்

57. 'X' என்பவர் ஒரு பழுதடைந்த இரும்புத் துப்பாக்கியை 'Y' என்பவருக்கு விற்பனை செய்கிறார். 'Y' என்பவர் பழுதினை அறியாது வாங்கிப் பயன்படுத்தும்போது அது வெடித்துச் சிதறியது. 'X' என்பவர் ஏமாற்றினார் என்று 'Y' தொடர்ந்த வழக்கில் 'X' வெற்றி பெறுவாரா?

தீர்வு: 'X' வெற்றி பெறமாட்டார் !

விளக்கம்: ஆபத்தான அசைவியல் பொருட்களை வைத்திருப்போர், கையாளுவோர், விற்பனை செய்வோர் ஆகியோர், அப்பொருளினால் மற்றவருக்கு ஆபத்து நேராமல் இருப்பதற்கு கடும் பொறுப்பு நிலையை ஒத்த பொறுப்பு நிலையைக் கொண்டுள்ளனர். மேலும் துப்பாக்கி போன்ற ஆபத்தான பொருட்களை விற்பனை செய்வோர் அதில் மறைந்துள்ள பழுது அல்லது ஆபத்து குறித்து எச்சரிக்கை செய்யும் கடமையைக் கொண்டுள்ளனர். ஆனால் வினாவில் குறிப்பிட்டுள்ள 'X' என்னும் நபர், துப்பாக்கியில் பழுது உள்ளது என்பதை அறிந்திருந்தே 'Y'-க்கு விற்பனை செய்துள்ளதால் 'X' ஏமாற்றுதல் தீங்கு புரிந்துள்ளார். எனவே 'X' வழக்கில் வெற்றி பெறமாட்டார்.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Langridge Vs Levy (பக்கம் எண் 343-ல் காண்க).

விலங்குகளை வைத்திருப்பதால் உண்டாகும் பொறுப்பு நிலை

58. ஒரு பார்வையாளரால் அழைத்து வரப்பட்ட ஒரு நாய்குட்டி, குரைத்ததினால் பயந்துபோன, ஒரு சர்க்கஸ்க்காக பழக்கப்படுத்தப்பட்ட யானை அந்நாய்க்குட்டியை துரத்த முனைகையில் ஒரு திரைச்சீலை விடுதியை நோக்கி ஓடி அதனை இடித்துத் தள்ளியது. அத்திரைச்சீலை விடுதியில் இருந்த வாதிக்கு காயம் ஏதும் ஏற்படாத போதிலும், போதுமான அதிர்ச்சியின் விளைவால் ஒரு வாரம் மருத்துவமனையில் தங்க நேர்ந்தது. அவர் இழப்பீடு கோருகிறார். தீர்வு செய்க.

தீர்வு: வாதி வெற்றி பெறுவார் !

விளக்கம்: தெரிவுறு விதியின்கீழ் சிங்கம், புலி, கரடி, யானை உள்ளிட்ட வன விலங்குகள் பொதுவாக மனித இனத்திற்கு அபாயத்தை ஏற்படுத்தும் மூர்க்க விலங்குகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விலங்குகளை வளர்ப்போர் அல்லது தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டிருப்போர் அவைகளினால் ஏற்படும் தீங்குகளுக்கு முழுப்பொறுப்பு கொண்டுள்ளனர். மேலும் இத்தகைய விலங்குகள் நன்கு பழக்கப்படுத்தப்பட்டது. சாதுவானது அல்லது பயத்தின் காரணமாகவே தீங்கான ஓர் செயலைச் செய்தது எனும் எதிர்வாதங்கள் அனுமதிக்கப்படாது.

பொருண்மைக்கேற்ற வழக்கு: Behrens Vs Bertram Mills Circus Ltd. (பார்க்க பக்கம் எண் 326)

---

59. ஒரு சர்க்கஸ் நிறுவனத்தின் சிங்கமானது தப்பிச் சென்று ஓர் ஏழு வயதுடைய சிறுமியை தாக்கிக் காயத்தை உண்டாக்கியது. இதில் சர்க்கஸ் நிறுவனத்தின் பொறுப்பு நிலையை ஆராய்க.

தீர்வு: சர்க்கஸ் நிறுவனம் இழப்பீடு வழங்க பொறுப்பு கொண்டுள்ளது !

விளக்கம்: [வினா எண் 73-க்கான விடையின் குறுந்தலைப்பு (அ)-வில் காண்க. பக்கம் எண் 325].

---

60. எதிர்வாதியின் எருது சிறப்புநிறக் கைக்குட்டை துணியைப் பார்த்து மிரண்டு வாதியைத் தாக்கி காயப்படுத்தியது. இதில் எதிர்வாதி, வாதிக்கு ஏற்பட்ட உடற்காயங்களுக்கு நஷ்டஈடு தருவதற்கு கடமைப்பட்டவரா?

தீர்வு: எதிர்வாதி வாதிக்கு நஷ்டஈடு தருவதற்கு கடன்பட்டுள்ளார் !

விளக்கம்: (வினா எண் 73-க்கான விடையின் குறுந்தலைப்பு 'சாதுவான தன்மை கொண்ட விலங்குகள்' எனும் தலைப்பின்கீழ் காண்க. பக்கம் எண் 327)

பொருண்மைக்கேற்ற வழக்கு: Hudson Vs Roberts, (பக்கம் எண் 328-ல் காண்க).